JL
Rm 211, M92
M92, 22
162040

# THE VIVEKA CHINTAMANI

## A Monthly Tamil Magazine and Popular New Review.

Devoted to the Diffusion of Light and Knowledge and to the "Children's Movement."

**Dealing with the Problems of Child Education, Social Service, Self-culture, and Ethics. Adapted for Use in Homes and Schools and approved as suitable for use in all Elementary and Secondary Schools.**

**God is Love: Knowledge in Power: AUM.**

**"Live and Learn"**—"ஓதுவதொழியேல்."

SATYAMEVA JAYATE.

**(Approved) Vol. XXII. (New Series)**

*(For the Tamil Year Ananda)*

***April 1914–March 1915.***

# விவேகசிந்தாமணி

*அறிவைப் பரவச்செய்வதற்கான மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.*

அறிவுடையாரெல்லாமுடையார் அறிவிலா
ரென்னுடையரேனுமிலர்.—திருக்குறள்.

சற்க கசடறக் கற்பவை சற்றபின்
நிற்க வதற்குத் தக.—திருக்குறள்.

(ஸர்வஸம்மதம்) 22-ம் புத்தகம். (புதுவரிசை)

(ஆநந்த ௵)

1914-௵ ஏப்ரல்௴ முதல்1915-௵ மார்ச்சு௴ வரை.

PUBLISHED BY

**THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,**
**For the Lalita Publishing Co., (Sole Agents and Managers),**
**Lalitalaya, 19, Adam St., Mylapore, Madras, S.**

**1914-1915.**

**Bound Vol. Rs. 5.]** *All Rights Registered.* **[Unbound Vol. Rs. 4.**

The Copyright of every article first published in this volume is vested solely in the Editor and registered in his name.

162040

# TABLE OF CONTENTS.

## Vol XXII. New Series "Approved" (April 1914-March 1915)

### No. 1, For APRIL, 1914.

"OUR PLEDGE AND THE NEW EXPANSION OF OUR WORK."

1. Child-Education, The Ministry of the Mother at the Cradle of Life ... ... ... ... 3
2. Some Influences of Morality: The Responsibility of Parents ... ... ... ... 5
3. On the Choice of a Wife ... ... ... ... ... ... ... 7
4. The Autobiography of Water: Nature Study Lesson for Schoolboys ... ... ... ... 9
5. The Viceroy's Birthday: The Children's Festival, 1914 ... ... ... ... ... 12
6. Musings in Cloudland ... ..... ... ... ... ... ... ... 13
7. Civilization and Social Service ... ... ... ... ... ... ... 17
8. Short Story : Ganapati's Strategam ... ... ... ... ... ... ... 23
9. Scientific Recreations for the Young ... ... -- ... ... ... ... 28
10. Kindergarten Story: The Evils of Insincerity and Hypocrisy. ... ... ... ... ... 29

1914ஹு ஏப்ரல்மூ 1-வது சஞ்சிகை.

"பிள்ளைகளுக்குழைக்கக் கங்கணம்."

1. பாலபோதசிக்ஷாஞானசாதனம், ... ... ... ... 3
2. ஸன்மார்க்க ஸாதனம்: பெற்றோர் கடமை, ... ... ... 5
3. விவாகதர்மம்: வதூலக்ஷணம் ... ... ... ... 7
4. பிரகிருதி வித்யாம்சம்: தண்ணீர் சொல்லியதன் வரலாறு; (பள்ளிப்பிள்ளைகளுக்கென்று எழுதியது.) ... ... ... ... 9
5. ஸ்ரீ ஹார்ட்டிஞ்ச் ஜயந்தி உபாக்கியானம் ... ... ... 12
6. மேகசந்தேகம், ... ... ... ... 13
7. யதார்த்த நாகரிகம், சமஷ்டி சேவை... ... ... ... 17
8. சிறு கதை: கணபதியின் சூழ்வினை ... ... ... ... 23
9. சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள் ... ... ... ... 28
10 பாலபிருந்தாவனகதை: சூதும் வாதும் வேதனை செய்யும். ... ... 29

### No. 2, For MAY, 1914.

"BLESSED ARE THEY THAT ARE PRIVILEGED TO WORK FOR THE CHILDREN."

1. Child-Education : What it means ... ... ... ... ... ... ... 35
2. The Mistake of Method in Child-Education ... ... ... ... ... ... 36
3. Natural Simplicity, the *Sine Qua Non* of Child-Education ... ... ... ... ... 38
4. Readings from the Book of Nature : The Wondrous Working of the Heart (Illustrated) ... ... 40
5. Lord Hardinge's Birthday : Children's Festival, 1914 ... ... ... ... ... 44
6 Social Service Institute—A Story ... ... ... ... ... ... 47
7. Short Story : The Greatness of Faith ... ... ... ... ... ... 52
8. A First Lesson in Child-Study : Tit Bits for Children ... ... ... ... ... 55
9. Short Tales for Young Folks ... ... ... ... ... ... ... 56
10. The Maiden Tribute of Modern Society ... ... ... ... ... ... 58
11. Conversation ... ... ... ... ... ... 58
12. The Sayings True of Grandma Wise ... ... ... ... ... ... 60
13. Scientific Recreations for the Young ... ... ... ... ... ... 62

1914ஹு மேமூ 2-வது சஞ்சிகை.

1. பாலபோதம் என்றால் என்ன ? ... ... ... ... 35
2. பாலபோதசிக்ஷையில் நேரும் ஓர் பெருந் தவறு ... ... ... 37
3. "அம்மா நீ காட்டுவது சுலபவழி, இருத்துவது கடின சிலை!" ... ... 39
4. ஹிருதயம் செய்வேலை விசித்திரம் ... ... ... 41
5. ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி ... ... ... ... 44
6. ஸமஷ்டி ஸேவை ஸாதனம்-ஒரு கதை ... ... ... 47
7. சிறு கதை ; நமசிவாய மஹாத்மியம் ... ... ... 52
8. சிறுவர்க்கான துக்கடாக்கதைகள் ... ... ... ... 55
9. சிறுவர்க்கான சிறுகதைகள் ... ... ... ... 56
10. தற்காலத்துத் தாடகை வாங்கும் கன்யாபலி ... ... ... 58
11. ஸம்பாஷணை சக்தி ... ... ... ... 59
12. ஔவைப்பாட்டிசொல் அருந்தவ உபதேசம் ... ... ... 60
13. சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள். ... ... ... ... 62

### No. 3, For JUNE, 1914.

"FATHER ! TELL ME, WILT THOU CHERISH OR LET ME PERISH ?"

1. The Problem of Popular Education ... ... ... ... ... ... 66
2. The Meaning of Secondary Education ... ... ... ... ... ... 71
3. The Mental Picture Gallery : The Voice of God : A Child Story ; ... ... ... ... 73
4. Readings from the Book of Nature: Some Facts about the Moon (Illustrated) ... ... ... 76
5. Social Service Institute : A Story ... ... ... ... ... ... 81
6. "My Baby is My World" ... ... ... ... ... ... 84
7. Short Story:—"Spade of Ace"—I. ... ... ... ... ... ... 86
8. The Children's Day Festival, 1914: Preliminary Report of Home Celebrations with Anthems, Hymns and Civic Songs sung by Children ... ... ... ... ... ... 89

1914ஹு ஜூன்மூ 3-வது சஞ்சிகை.

1. மனிதனை ஆளாக்கி விடுவதெப்படி? ... ... ... 67
2. துவிதீய வித்யாலக்ஷணம் ... ... ... ... 71
3. பாவனாசித்திர விலாசம் ... ... ... ... 73
4. பிரகிருதி வித்யாம்சம் : சந்திரனைப் பற்றிய சில விஷயங்கள் (படத்துடன்) ... ... 76
5. சமஷ்டிசேவை ஸாதனம்—ஒரு கதை ... ... ... 81
6. "உலகெல்லாம் குழந்தையில்" ... ... ... ... 84
7. சிறு கதை : "இஸ்பேட் ஆப் ஏஸ்"—I. ... ... ... 86
8. பாலர் திருவிழாக் கொண்டாட்டம் ... ... ... ... 89

## No. 4, For JULY, 1914.

THE VIVEKACHINTAMANI CHILDREN'S SPECIAL:—

"The Passing away of H. E. Lady Hardinge:" The Children's Message and the Viceroy's Reply. The Home Celebration of the Viceroy's Birthday.

SOCIAL SERVICE INSTITUTE: Report by the Secretary.


1. The Saving Power of Faith, which is Love ... ... ... ... .. ... 99
2. The Self-made Man ... ... ... ... ... ... 101
3. The Joy of Living ... ... ... ... ... ... 104
4. The Study of Words: "On Respectability" ... ... ... ... ... ... 107
5. Readings from the Book of Nature: Volcanoes, Hot Springs and Hot Vapours (*Illustrated*) ... ... 111
6. Short Story: Spade of Ace (*Concluded*) ... ... ... ... ... 121
7. Tit-Bits for Children ... ... ... ... ... ... 125
8. Scientific Recreations for the Young ... ... ... ... ... ... 128


1914௵ ஜூலை௴ 4-வது சஞ்சிகை.

விவேக சிந்தாமணி பாலர் விசேஷப் பதிப்பு:— காலஞ்சென்ற லேடி ஹார்டிஞ்சு பெருமாட்டி. பாலர் விடு தூது.

*பாலபோத ஸமஷ்டி சேவை ஸாதன சங்க ரிபோர்ட்டு.*


1. "அன்பொன்றுண்டானு லார்தான் பிழைக்கமாட்டார்!" ... ... ... 99
2. தானுகத் தலையெடுத்த பணக்காரன், ... ... ... 101
3. ஆனந்த வாழ்வு, ... ... ... ... 104
4. வாக்கு விசேஷார்த்த விதானம்: மானம்—தன்மானம், புறமானம், பேய்மானம், ... 107
5. பிரகிருதிவித்தியாம்சம்: எரிமலைகள், வெந்நீர் ஊற்றுகள், ஆவிக்குண்டங்கள், ... 111
6. சிறு கதை: ஸ்பேட் ஆப் ஏஸ் (முற்றும்) ... ... ... 121
7. சிறுவர்க்கான துக்கடாக் கதைகள் ... ... ... ... 125
8. சிறுவர்க்கான ஜால விநோதங்கள் ... ... ... ... 128


## No. 5, For UUGUST, 1914.

"THE VICEROY'S THANKS TO THE CHILDREN OF MADRAS.


The Children's Message of Love and Condolence to H. E. the Viceroy and Children. ... 129
1. On Child-Education ... ... ... ... ... ... 131
2. On Fearlessness ... ... ... ... ... ... 133
3. Proverbs as Aids to Child-Study ... ... ... ... ... ... 137
4. The General Conflagration of European War ... ... ... ... ... ... 141
5. Readings from the Book of Nature:—Mount Vesuvius (*Illustrated*) ... ... ... ... 144
6. Tit-Bits for Children:—" Blindman's Buff among Nations" ... ... ... ... 154
7. Transfusion Column ... ... ... ... ... ... 158
8. Press Notices ... ... ... ... ... ... 160


1914௵ ஆகஸ்டு௴ 5-வது சஞ்சிகை.


1. பாலபோத சிக்ஷை ... ... ... ... 131
2. அபயம் ... ... ... ... ... 133
3. பாலபோத சிக்ஷா ஸாதனம்: பழமொழி விளக்கம், ... ... ... 137
4. காட்டுத்தீப்போல் பரவிய கன யுத்தம் ... ... ... 141





5. பிரகிருதி வித்தியாம்சம்: விசூவியஸ் "எரிமலை" (படத்துடன்) ... ... 144
6. சிறுவர்க்கான துக்கடாக்கதைகள்:—"கட்டுக் கண்ணுமூச்சி விளையாட்டு" ... ... 154
7. மொழி பெயர்ப்பு வித்தை ... ... ... ... 158
8. பத்திரிகாபிப்பிராயங்கள் ... ... ... ... 160


## No. 6, For SEPTEMBER, 1914.

"THE MORAL OF THE PRESENT CONFLAGRATION OF EUROPEAN WAR."


1. The Moral of the Present Conflagration of European War... ... ... ... ... 163
2. The Brave King of a Brave People ... ... ... ... ... ... 16
3. The Choice between Keeping and Breaking our Solemn Obligations ... ... ... ... 169
4. Transfusion Column "The Poet Laureate's War Song" ... ... ... ... ... 172
5. The Indian Imperial Relief Fund ... ... ... ... ... ... 174
6. Social Essay on "Friendship" ... ... ... ... ... ... 175
7. Biographical Sketches: "Miss Florence Nightingale" ... ... ... ... ... 178
8. On National Self-Respect or In Praise of British Character ... ... ... ... ... 186
9. Readings from the Book of Nature: "Earthquakes" ... ... ... ... ... 188
10. Proverbs as Aids to Child-Study ... ... ... ... ... .. 192

*Press opinions, 172, 175, 178.*


1914௵ ஸெப்டம்பர்௴ 6-வது சஞ்சிகை.


1. "ஐரோப்பாவில் மஹாபார'த யுத்தம் நடக்கிறது பாருங்கள்." ... ... 163
2. "இரணகளத்தை மாற்றிய இரணவீர ஸிம்ஹராஜன்" ... ... 165
3. "செய்கடனைச் செய்யவோ, பொய்யவோ?" ... ... ... 169
4. மொழிபெயர்ப்பு வித்தை: "திருப்படையெழுச்சி"த் தானம் ... ... 172
5. "இந்தியன் இம்பீரியல் ரிலீப் பண்டு" ... ... ... 174
6. நேசம்-ஸமஷ்டிஸாதனம், ... ... ... ... 176
7. சரித்திரமஞ்சரி: 1 பிளாரென்ஸ் நைத்திங்கேல் என்னும் பரோபகாரியின் சரித்திரம் ... 178
8. தன்மதிப்பு அல்லது ஆங்கிலேயர் குணமாட்சி, .. ... ... 188
9. பிரகிருதி வித்தியாம்சம்: பூகம்பங்கள் ... ... ... 186
10. பாலபோத சிக்ஷா சாதனம்: பழமொழிவிளக்கம் ... ... .. 192

*பத்திரிகாபிப்பிராயங்கள், 172,175,178.*


## No. 7, For OCTOBER, 1914.

"LET US SAY THAT NEVER AGAIN SHALL THIS HORROR COME UPON US."


1. The Progress of War ... ... ... ... ... ... ... 195
2. Lullabies As First Aids to Child-Education (Gleanings from the Ancient Indian Methods of Kindergarten)... 198
3. Social Study: The True Nature of the Present War ... ... ... ... ... 202
4. Biographical Sketches: Elizabeth Fry (Illustrated) ... ... ... ... ... 205
5. Proverbs as Aids to Child-Study ... ... ... ... ... ... ... 211
6. Navaratri Mahatmyam ... ... ... ... ... ... ... 214
7. Transfusion Coloumn: "The Great City" ... ... ... ... ... ... 217
8. The Fall of Antwerp: "Tragedy of Belgium" ... ... ... ... ... 218
9. Madras and the War ... ... ... ... ... ... ... 222
10. The Imperial Indian Relief Fund: H. E. The Governor on "Madras and the War" ... ... 224

1914ஸ்ரு அக்டோபர்மூ 7-வது சஞ்சிகை.

1. யுத்தப் போக்கு ... 195
2. பாலபோத சிக்ஷா சாதனம்: குழந்தைகளுக்குச் சொல்லும் தாலாட்டுப் பாட்டுகள் ... 198
3. சமஷ்டிவித்தை: தற்கால யுத்தஸ்வபாவம் ... 202
4. சரித்திர மஞ்சரி : II. எலிஸபெத் ப்ரை யென்னும் பரோபகாரியின் சரித்திரம் (படத்துடன்)... 205
5. பாலபோத சிக்ஷாசாதனம்: பழமொழி விளக்கம் ... 211
6. நவராத்திரி மஹாத்மியம் ... 214
7. மொழிபெயர்ப்பு வித்தை: "பிரஹ்மபுரம்" ... 217
8. ஆன்ட்வெர்ப் நகரம் பிடிபட்டது: "பெல்ஜியத்தின் பிரலாப ஸ்திதி" ... 218
9. சென்னைமாநகரும் யுத்தமும், ... 222
10. இம்பீரியல் இந்தியன் ரீலிப் பண்டு : கவர்னரும் சென்னைமாநகரும் யுத்தமும் ... 224

## No. 8, For NOVEMBER, 1914.

### THE VIVEKA CHINTAMANI WAR NUMBER—PART I.

"LEAVE TO YOUR CHILDREN, THE RICHEST OF ALL INHERITANCES."

1. "A Page of Secret History: Mr. Asquith's Disclosures ... 225
2. "The Spiritual Governance of the World, by "A G. G." ... 226
3. "Leave to Your Children, the Richest of all Inheritances" ... 227
4. The Poet Laureate's War Song ... 230
5. "The Spiritual Governance of the Wor'd."—"Business as Usual" ... 231
6. The Plan That Failed ... 239
7. The Slav v. Teuton : A Historical Review ... 244
8. "Righteousness alone triumphs:" Epilogue ... 256
9. Reviews and Notes.

1914ஸ்ரு நவம்பர்மூ 8-வது சஞ்சிகை.

விவேகசிந்தாமணி-யுத்தகாண்டம்—முதற்பாகம்.

1. கனம் மிஸ்டர் ஆஸ்க்வித் வெளியிட்ட ரகஸியம் ... 225
2. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" ... 226
3. "பிள்ளைகளுக்கான பிதிரார்ச்சித பேரைசுவரியம்" ... 227
4. "திருப்படை யெழுச்சி"த்தானம் ... 230
5. "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு" ... 231
6. உருப்படாதொழிந்த ஏற்பாடு, ... 239
7. சண்டைக்காரர்களின் பூர்வோத்தரம் ... 244
8. "தர்மமே ஜயம்"—முடிவுரை, ... 256
9. விமர்சனங்களும் குறிப்பும்.

## No. 9, For DECEMBER, 1914.

### THE VIVEKA CHINTAMANI WAR NUMBER—PART II.

1. "Doing your dnty (Swadharma) is the Highest Award" ... 259
2. The Pitiful Story of Belgium, (As told by one of Her own Sons) ... 261
3. The Pathetic Tale of Belgium, (After M. Maurice Maeterlinck) ... 262
4. How Great Britain was drawn into the Great War of 1914 ... 263



5. The History of the Poles in relation to their Neighbours ... 276
6. History of the Poles : Introductory ... 284
7. Late Lord Roberts ... 291
8. War Notes with Map, (Western Theatre) ... 292
9. Diary of the Warup to September, 28.

1914ஸ்ரு டிஸம்பர்மூ 9-வது சஞ்சிகை.

விவேகசிந்தாமணி-யுத்தகாண்டம்—இரண்டாம்பாகம்.

1. "செய்கடனை (ஸ்வதர்மத்தை)ச் செய்தலே உயர்ந்த தர்மம் ... 259
2 பெல்ஜியத்தின் பரிதாபக் கதை ... 261
3. பெல்ஜியம் தன் பரிதாப நிலையை யுன்னி இரங்கல் கண்ணி ... 262
4. இந்தப் பார'தப்போரில் ஆங்கிலேயர் புகவாய்ந்ததெப்படி ? ... 263
5. போலண்டு ராஜ்யமும் போல்ஸ் ஜாதியாரும்: ஜெர்மனி ராஜ்யம் ஏற்பட்டதின் கதை ... 276
6. போல்ஸ் ஜாதியார் சரித்திரம்: முன்னுரை ... 284
7. காலஞ்சென்ற லார்ட் ராபர்ட்ஸ் அவர்கள் ... 291
8. யுத்த சமாசாரக் குறிப்புகள் (படத்துடன்) ... 292
9. யுத்த ஆரம்பத்தின் தினசரிக்குறிப்பு.

## No. 10, For JANUARY, 1915.

### THE VIVEKA CHINTAMANI WAR NUMBER—PART III.

"WE NEED HELP FROM ABOVE, FOR WITHOUT IT WE ARE HELPLESS."—SIR JOHN JELLICOE.

Dedication.
1. Death of the Viceroy's Son: Universal Sympathy. ... 299
2. "By this Sign We Conquer" by Mr. Benjamin Kidd ... 300
3. "We Need Help from above, for without it we are Helpless" ... 301
4. By this Sign We Conquer (Illustrated) ... 302
5. The History of Poles in Connection with their neighbours (Continued) ... 305
6. Sir John French's Fourth Dispatch (Illustrated) ... 312
The Western Theatre of War. ... 316
7. The Eastern Theatre of War ... 316
8. The Daily Cost of the War ... 317
9. The War Chests of the Combatants ... 318
10. The Growth of Wealth Among the Nations during 100 years ... 318
11. Advice to Students (National Indian Association) ... 320
12. The Emden and its Exploits (Illustrated) ... 322
13 Captain Von Muller of the Emden ... 322
14. The American Verdict on the War ... 323
15. "The Shocking Story of Proud William"

*(For fuller con'ents and List of Illustrations See within page V.)*

1915ஸ்ரு ஜனவரிமூ 10-வது சஞ்சிகை.

விவேகசிந்தாமணி யுத்தகாண்டம்—மூன்றாம்பாகம்.

அர்ப்பணம் :
1. நமது அரசர்-பிரதிநிதி ஜேஷ்ட குமாரர் மரணம்: ஸர்வ ஜன அனுதாபம் ... 299
2. ஜயமுத்திரை,—மிஸ்டர் பெஞ்சாமின்கிட் அபிப்பிராயம் (ஆங்கிலம்) ... 300
3. "தெய்வபலம் வேண்டும்: அஃதின்றி நமதுபலம் செல்லாது." (படத்துடன்) ... 301
4. ஜயமுத்திரை. (மூன்று படங்களுடன்) ... 302
5. போலண்டின் தொழில் விர்த்தி ... 305
6. பீல்ட்மார்ஷல் ஸர் ஜான் ப்ரெஞ்சு அனுப்பிய 4-வது ரிபோர்ட்டு, மேலண்டைப் போர்க்களம் (படத்துடன்) ... 312
7. கீழண்டைப் போர்க்களம் ... 316
8. இப்பார'த யுத்தத்தின் தினப்படிச் செலவு. ... 316
9. சண்டைக்காரர்கள் கைரொக்கம் ... 317

(மற்றவைக்கும் படங்களுக்கும் இச்சஞ்சிகையினுள்ளே பொருளடக்கம் பார்க்க).

## No. 11, For FEBRUARY, 1915.

"THE HOME AS THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION."


1. The Home as the Goal and Centre of true Education (Illustrated) ... ... ... ... 327
2. Lullabies as First Aids to Child-Education (Gleanings from the Ancient Indian Methods of Kindergarten), ... ... ... ... 333
3. Post-Puberty Marriage Bill ... ... ... ... 338
4. Height, Weight & Body Measurements ... ... ... ... 339
5. The Potential and Remote Origin of the War (Illustrated), ... ... ... ... 340
6. An Ethnological Map of Austria-Hungary (Illustrated) ... ... ... ... 341
7. The Sri Moolam Popular Assembly ... ... ... ... 342
8. The Pride of Self ... ... ... ... 345
9. The Joy of Life ... ... ... ... 345
10. A Needless Alarm in Social Legislation (Illustrated) ... ... ... ... 346
11. The Madras Society for the Protection of Children ... ... ... ... 350
12. The Prices & Enquiry Commission ... ... ... ... 351
13. Short Story; "Judgment: Temporary and Eternal" ... ... ... ... 358
14. The Late Hon'ble Mr. Gopalakrishna Gokhale. ... ... ... ... 352


### 1915ஹு பிப்ரவரி மூ 11-வது சஞ்சிகை.


1. வித்தியா விலாஸ ஸாதனஸங்கம் ... ... ... ... 329
2. பாலபோத சிக்ஷாஸாதனம் ... ... ... ... 333
3. ருதுமதி விவாக மசோதா ... ... ... ... 338
4. மனிதன் உயரத்துக்குத்தக்க பருமன் ஆகிருதி அளவு விவரம் ... ... 339
5. தற்காலச்சண்டையின் ஆதிகாரணம் (படங்களுடன்) ... ... ... 340
6. ஆஸ்திரியா-ஹங்கேரி: பலபட்டடை ராஜ்யம். (படத்துடன்) ... ... 341
7. திருவாங்கூர் சமஸ்தானத்து ஸ்ரீமூலம் ஜனப்பிரதிநிதி சபை ... ... 342
8. நானென்ற ஆணவம் ... ... ... ... 345
9. ஆனந்தக்களிப்பு ... ... ... ... 345
10. ருதுமதி விவாக மசோதா ... ... ... ... 346
11. சென்னை பாலரக்ஷண்ய சபையார் ... ... ... ... 350
12. அகவிலை ஏற்றத்தைப்பற்றி விசாரிக்க ஏற்பட்ட கமிஷன் ... ... 351
13. சிறு கதை: "அரசன் அன்றுகொல்லும், தெய்வம் நின்று கொல்லும்" .. ... 352
14. கனம் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே தேஹவியோகம் ... ... 358


## No. 12, For March, 1915.

"THE ENCOURAGEMENT OF MORAL AND INTELLECTUAL DEVELOPMENT OF THE PEOPLE."


1. Introduction to the Viveka Chintamani War Number by H. O. D. Harding, Esq., I. C. S. ... ... 359
2. The Meaning of University Life: Farewell Address by H. E. The Viceroy. ... ... 362
3. "The Goal of Education" and "The Need of India" by H. E. The Viceroy. ... ... ... 366
4. The late Mr. Gokhale: "The Best Monument to His Career" ... ... ... 370
5. The Fall of Przemysl,—with Map. ... ... ... ... 373
6. The Origin and Issue of the War by Sir Edward Grey ... ... ... ... 374
7. Viscount Bryce on India. ... ... ... ... ... 374
8. The Post-Puberty Marriage Bill. ... ... ... ... ... 375
9. Social Service Column; The Madras Social Service League ... ... ... 376
10. Advice to the Young "On Social Intercourse." ... ... ... ... 380


### 1915ஹு மார்ச்சு மூ 12-வது சஞ்சிகை.


1. வி-சி-யுத்தகாண்டத்திற்கு இந்தியன் ஸிவில் ஸெர்விஸைச் சேர்ந்த மிஸ்டர் எச். ஓ. டி. ஹார்டிங் துரையவர்கள் எழுதிய இங்கிலீஷ் முகவுரை ... ... ... 359
2. ஸர்வகலாசாலைப் படிப்பு—அதன் கருத்தும் பயனும். ... ... ... 362
3. "வித்தியாலக்ஷியமும்" "இந்தியாவின் தேவையும்." ... ... ... 366
4. காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே. ... ... ... 370
5. ப்ரஸ்மிஸல் கோட்டை பிடிப்பட்டது. ... ... ... 373
6. "இந்த யுத்தத்தின் மூலமும் முடிவும்." ... ... ... 374
7. இந்தியாவைப்பற்றி ப்ரைஸ் பிரபு பேசியது. ... ... ... 374
8. ருதுமதிவிவாக மசோதா. ... ... ... ... 375
9. "சமஷ்டிசேவை ஸாதனம்." ... ... ... ... 376
10. பாலபோத சிக்ஷாசாதானம். ... ... ... ... 380


# "OUR PLEDGE AND THE NEW EXPANSION OF OUR WORK."

"*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.*"

"*Seek Truth wherever you can find it,*" *But,* "*Make your choice and stick to it till you reach the End.*"

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF TRUE."




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*

**"New Series"** ஸத்தியமேவ ஜயதே—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **22.**] **1914**ஹு ஏப்ரல்மீ, ஆனந்தஹு சித்திரைமீ [சஞ்சிகை **1.**


## "OUR PLEDGE AND THE NEW EXPANSION OF OUR WORK."

On "All-saint's Day" (8th April) Our Editor, on requisition made, took his solemn pledge before the chosen representative of public instruction and child-education that with the New Expansion of our work he will (after his 29 years of approved and appreciated public service) exert himself once again to make *the Vivekachintamani* "the most amusing, the most interesting and the most instructive" and progressive Tamil Journal having the "widest circulation" among parents and children at home or in school.

*The Social Service Institute, 8th April* 1914.

### Lord Palmerston's Revelation to Queen Victoria.

Lord Palmerston, when Prime Minister of England (1861) was asked by Her Majesty Queen Victoria to remonstrate with Mr. Delane, the Editor of the *Times*, on the attitude of the paper towards the King of Prussia. This was one and Lord Palmerston in his reply to the Queen, reveals to His Majesty the Secret of business-success in "the Art of Newspaper production." The following is an extract from his letter to the Queen :—

"The actual price at which each copy of the newspaper is sold barely pays the expenses of paper, printing, and establishment! it is indeed said that the price does not repay those expenses. The profit of the newspaper arises from the price paid for advertisements, and the greater the number of advertisements the greater the profit. But advertisements are sent by preference to the newspaper which has the greatest circulation: and that paper gets the widest circulation which is the most amusing, the most interesting, and the most instructive. A dull paper is soon left off....As mankind takes more pleasure in reading criticism and fault-finding than praise, because it is soothing to individual vanity and conceit to fancy that the reader has become wiser than those about whom he reads, so the *Times*, in order to maintain its circulation, criticizes freely everybody and everything; and especially events and persons, and Governments abroad,

because such strictures are less likely to make enemies at home than violent attacks upon persons and parties in this country."

*The Vivekachintamani.* With the March issue, this excellent Tamil Monthly completes its twenty-first year. A perusal of the table of contents for the 21st volume shows how interesting and instructive the subjects are which have been dealt with in the course of the past year. This particular number is devoted to the illustration of "the triumph of soul over environment" and it starts with a brief description of the Association of Helpers or Bands of Hope, that did such good service to the cause of Diffusion of Knowledge in the nineties and early in the last decade. "Our coming of Age" is celebrated by "a social function" heralding the expansion of the work into the field of child-study and children's education. Next comes an illustrative biographical sketch of Mrs. Henry Fawcet whose marriage at the age of 19 with Mr. Henry Fawcet and subsequent married life is described as "a triumph of soul over environment.' "The Forces of Gravitation" deals with the subject in simple and yet vivid sketches of the working forces of Nature. Ceylon is treated next and then comes "some mistaken notions of civilization" in which the evil aspects of imitation are humorously described and exposed. The articles on *Samashti Sevai Sadan* or "The Social Service Institute" and "the Problem of child education" deserve the thoughtful attention of the thinking public. We congratulate the *Vivekachintamani* on its coming of age and wish it a long and prosperous career in the future.—*The Hindu*, April 22.

விவேக  சிந்தாமணி

## CHILD-EDUCATION:

### The Ministry of the Mother at the Cradle of Life.

SOME OPINIONS FROM EDUCATIONISTS OF GOOD STANDING.

"You must be with the boys, think with them, feel with them, play with them, suffer with them and *yet lead them on*. . . . . . . Step down and go up."

"The journal has considerably changed its tone and it is to be remembered that the Editor will have to minister to the School-boys entirely. . . . . . Must aim at one class—the School-children."

"I am glad that you have *made a correct* diagnosis of the defects in the present system of Indian Education. In spite of the many improvements that have been recently made, it has to be said with regret that there is still, a good deal of the forcing in of the so-called knowledge-matter, instead of the drawing out and invigorating of the faculties of children by cultivating their observation in new fields of God's glorious work.

"Your magazine makes an earnest and honest attempt to remedy this defect, and if the matter, the language and the style of the articles in the future issues will continue to be as they are in those hitherto received, I have no doubt that the magazine will serve a very useful purpose in the education of the school-going children of this Presidency.

"Your short biographies of great Educationists your articles on sanitation and village life, your lucid summaries of the pronouncements of our illustrious administrators on Education and other valuable contributions of a similar nature make excellent reading matter, and, in my view, the boys and girls who may be habitual readers of your magazine will surely become useful citizens of our country with true devotion to their God and their King and to the sweet service of their great mother land. With loving regards,—"

"There is one special feature in your journal which is rarely to be found in other journals. Each article or story, introduced into it, is based upon a useful moral lesson which every reader, young or old ought to learn to make himself and others about him happy in this world. I strongly recommend the introduction of your journal in all the elementary and secondary schools as a non-detailed text-book, also as a book for inculcating good sound, moral lessons to the rising young boys and girls of the present age".—



## பாலபோத சிக்ஷா ஞான ஸாதனம்.

"பிள்ளைகளைத்தான் வளர்க்கும் பேறறிவு" பெறுவது எப்படி? குழந்தைகளுக்கு பால போத சிக்ஷை செய்யும் தொழில் சிலாக்கியமானது. அதை சாதக சாதனத்தோடு சாதிப்பதுதானே இல்லறதர்மமாகும். "இல்லறமல்லது நல்லறமன்று." இந்த சாதனையைச் சாதிப்பது மஹா அருமையான வித்தை; அதிப்பிரயாசமானது. இதைவிடக் காசுபணம் தேடிக் குவியலாக தனம் சேர்த்துவிடலாம். கல்வியெல்லாம்கற்றுக் கனகவித்தை செய்திடலாம். இன்னும் உலகாளும் மன்னர் மெச்ச ஊரெல்லாம் ஆளலாகும்! நாட்டார் மிகத்துதிக்க நகரையுந்தான் ஆளல் ஆகும். பிள்ளையைத் தான் வளர்க்கும் பேறறிவு பெறல் கஷ்டம்.

ஆகையால் பிள்ளையைப் பெற்ற பாக்கியசாலிகள் குழந்தைகளை வளர்க்கும் வித்தையை நன்குப் பயிலல் வேண்டும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ஆவர். ஆதலால் தந்தை தாயார் தெய்வம் போல் குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க்கவேண்டும். அதில் பிசகினால் அவர்கள் தம்கடமையைச்செய்தவர்களாகார்கள். பிள்ளைப்பேறு 'புத்' என்னும் நரகத்திலிருந்து தப்புவதற்காக மட்டுமல்ல. பித்ருக்கள், தேவதைகள், ஜனசமஷ்டி முதலான எல்லாவர்க்கங்களும் ஸத்புத்திர ஸந்தான விருத்தியினாலேயே நற்பேறு பெற்று நற்கீர்த்தியடைகிறார்கள்.

ஆதலால் விவேகத்தாய் தன் குழந்தைகளை நற்குண நற்செய்கைகளிற் பழக்கி இளவயதில் தானே நல்ல சுபவாசனை படியச்செய்வாள். தந்தை தாயிடத்தில் குணமில்லாவிட்டால் பிள்ளைகளிடத்தில் குணமிருப்பது துர்லபம். "தன்குணத்தின் நற்சாக்ஷி ஜகத்திலுள்ள மெய்க்கீர்த்தி." இந்த மெய்க்கீர்த்தி நல்ல பிள்ளையைப் பெற்றவர்களுக்குத்தான் வாய்க்கும். இப்பிள்ளையைப் பெற்றவர்கள் என்ன தவம் செய்தார்களோ! என்று தம மகவினுடைய நடத்தையைக் கண்டு உலகம் துதிக்கும்போதுதான் நற்கீர்த்தியுண்டாகும்.

ஆதலாற் கண்மணியே
அழகுமிகும் விண்மணியே
நீதியொடு நற்குணமும்
நீ பெரிதா யெண்ணிசிற்பாய்."

"இணையில்லா இவ்வுயிர்தான்
இவ்வுடலை விட்டாலும்
குணமே பெரியதென்று
கொண்டுநீ வாழ்ந்திடுவாய்."

"தள்ளைநடை போல்நடப்பாய்
தக்கபேர் நீயெடுப்பாய்
பிள்ளையென்னும் பக்குவத்தே
பெருங்கீர்த்தி நீபடைப்பாய்."

"வாலியந்தா னென்றுசொல்லி
மாசுமறு செய்யாதே
பாலியந்தா னென்றுசொல்லிப்
பழிபழுது செய்யாதே."

"பிஞ்சில் விளைவதுவே
பெரியமர மானபின்பும்
மிஞ்சிநிற்கும் வாசனையை
வேருக்கக் கூடியதோ!"

"மட்டில்லா உண்மையிது
மனதுதனில் நீதரிப்பாய்
தொட்டிற் பழக்கமதே
சுடுகாடு மட்டுமம்மா."

இப்படியெல்லாம் தாலாட்டிச் சீராட்டி அடிமடியில் கருத்தரித்த நாள்முதற்கொண்டு பிள்ளைப்பேறு பெற்றுப் பெருவாழ்வெய்து மட்டும் குழந்தையை அன்புஆதரவோடு, கண்ணை இமைகாப்பதுபோல் தீய வழக்கங்கள் படியாமலும், துர்ச்சகவாசம் கிட்டாமலும், அசுப வாசனைகள் வந்து அண்டாமலும், பிள்ளைகளைப் பாதுகாத்து வளர்ப்பது பெற்றோருடைய கடமையாகவிருக்கிறது. இதை அவர்கள் உள்ளபடி யோர்ந்துணர்ந்து நடக்காமையினால் எவ்வளவோ தீமைகள் நேரிடுகின்றன. அத்தீமைகள் அவர்களைமட்டும் பாதிக்காமல் அவர்கள் குடும்பத்தையும், அக்குடும்பம வசிக்கும் ஜனசமூகத்தையும், ஜனசமூகங்களால் நிறைந்த ராஜ்யத்தையும், இராஜ்யத்துக்கு க்ஷேத்திரமாகிய தேசத்தையும், அந்த க்ஷேத்திரத்திற்கு க்ஷேத்திரஜ்ஞனான சமஷ்டிஜீவ

னும் விராட் தேவதையையும் தொடர்ந்து பாதிப்பனவாகின்றன. குழந்தைப் பருவத்தில் படியும் கொலை, களவு, காமம், பொய், கள்ளுண்ணல் முதலான குற்றங்கள் தாமே பின்னுல் முட்டி முதிர்ந்து பஞ்ச மஹாபாதகங்களாகின்றன. குழந்தையில் சிறு பிராணிகளைப் பிடித்து வதைத்து விளையாடும் சிறுவர்கள் பெரியவரானுல் குரூரசித்தராய்க் கொலை களவு முதலிய செய்ய அஞ்சாராகின்றனர். இது ஒவ்வொன்றுக்கும் பொருந்தும். ஆதலால் நம் விவேகசிந்தாமணித்தாய் சொல்லும் இப்புத்திமதிகளை மனதில் வைத்து இதை வாசிக்கும் எல்லோரும் குழந்தை-மனமுடையவர்களாய் (அஹம்பாவத்தைவிட்டு) குணத்தை வளர்த்து மணத்தைப்பெறல் வேண்டும். பின்வரும் புத்திமதிகள் ஸ்ரீலோகநாயகியாம் விவேகத்தாய் தன் குழந்தைஸந்தானத்துக்குச் சொல்நல்லறிவோபதேசங்களாம், இவை உடலிற் பெரிய குழந்தைகளுக்கும் உடலிற் சிறிய குழந்தைகளுக்கும் ஒக்கப்பொருந்தும். "காணுமற் கலப்பால் குடிக்கும் குழந்தை" யென்பர். பக்குவமுடைய குழந்தை-மனம் வாய்ந்தவர்கள் இவ்வுபதேசங்களின் உட்கருத்தை உள்ளாய்ந்து உண்மையுணர்ந்து உள்ளத்திருத்துவர்.

1. "களவுசெய்த கைகளுக்குக்
கைவிலங்கு பூட்டிடுவார்
அளவில்லாத் துன்பமுண்டாம்
ஆற்றுதற்கு மாளாது.

2. "பொய்சொன்ன வாயில்
புழுப்புழுக்கு மென்னரசே
மெய்சொன்ன வாயில்
விளம்புவதும் தேனியம்மா."

3. "மதிகேடு செய்தாலும்
மார்ச்சமுண்டு தப்பியிடச்
சதிசேடு செய்யாதே
தங்கள்கண்மணி தங்களுக்கே."

4. "வஞ்சித்தார் வாழார்
வழிப்பறித்தார் பாழாவார்
பஞ்சான தேஹமிது
பகவா னொருவனுண்டு."

5. "கச்சைகட்டிக்கூத்தாடிக்
சடைத்தெருவி லோடேந்திப்
பிச்சையெடுத் துண்டாலும்
பிறர்துயரஞ் செய்யாதே."

6. "தணியாத கோபமுள்ளார்
தயக்கம்வந்து வாழ்வார்கள்
பணிவாய் நடப்பவர்க்கோ
டாரெல்லாங் கையாட்சி."

7. "மூலம் தனத்தினுக்கு
முயற்சியென்பார் சிற்சிலபேர்
காலம் திரவியமாம்
கருத்துடையார் காட்சியிலே."

8. "உடலம் பிணிநீக்கி
உள்ளமதும் நற்றெளிவாய்த்
திடம்பெற் றிருப்பதுவே
சேரரிய பாக்கியமாம்.'

9. "அசலாது வாசனைதான்
அகிலமதி லெல்லோர்க்கும்
சகவாசம் போல்நடக்கை
சத்தியந்தான் சத்தியந்தான்."

10. "மாறுக்க லகமதை
மாற்றுவது நன்மௌனம்,
ஆருக் குபரமெல்லாம்
ஆற்றுவதோ ஈசனருள்."

11. "சத்தியமே நன்மார்க்கம்
தவறுவரு மற்றெதிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த."

12. "பூட்டியிட்ட தேஹமிது
போயழியு மெந்நாளும்
நாட்டிலுள்ள வாழ்வினுக்கு
நற்பெயரே கண்டபலன்.'

13 "வாலிபந்தா னுனுலும்
மாசுமறு சம்மதியேன்
பாலியந்தா னுனுலும்
பழிபழுது சம்மதியேன்."

14. "சித்தம்மொழி தானதிருந்திச்
செயல்திருந்தி நீநடப்பாய்
உத்தமியான் பெற்றெடுத்தேன்
ஒருகுறையுஞ் செய்யாதே."



15. உள்ளபல பூமியெல்லாம்
ஓர்குடைக்கீ ழாண்டாலும்
பிள்ளையை வளர்க்கும்வித்தை
பிரயாச மானவித்தை."

16. "ஆராய்ந் துலகனைத்தும்
ஆண்டாலும் பிள்ளையொன்றை
நேராக்க மாளாது
நிச்சயந்தான் நிச்சயந்தான்."

17. "நிச்சயந்தான் நிச்சயந்தான்
நிஜம்சொன்னேன் கேள்கண்ணே
உச்சிதமாய் உனைப்பெற்ற
உத்தமியான் சொலக்கேளாய்!"

18. "கண்ணேயென் கற்பகமே
கனகமாரி பொழிந்தாலும்
விண்ணேதான் வீழ்ந்தாலும்
வீண்வார்த்தை சொல்லாதே."

19. பெண்ணேயென் பெண்ணரசே
பொற்கொடியே கற்பகமே
கண்ணேயுன் முகம்பார்த்துக்
கவலையெல்லாம் தீர்ந்தேனுன்."

20. "கண்ணே யுறங்குறங்கு
கற்பகமே சித்திரைபோ
மண்ணிலுள்ள யாபேரும்
வாழியென்று சித்திரைபோ."

21. "பிள்ளையை வளர்ப்பதிலே
பேரறிவு பெற்றுன்ற
*தள்ளையெல்லாம் வாழியென்று
தண்ணமுதே சித்திரைபோ."

---

பாலபோத சிக்ஷா ஸாதனம் முற்றிற்று.

---

இது என்தாயார் ஸ்ரீ லோகநாயகிக்கு அர்ப்பணம்.

# SOME INFLUENCES ON MORALITY.

## The Responsibility of Parents.

"Coleridge calls conscience 'the pulse of reason;' but as this inward monitor is often set at naught, other influences are required for the promotion of what is good and the repression of what is evil. These are, (1) the influence of the family; (2) the influence of the teacher or *Guru*, (3) the inuflence of society, *i.e.*, the fear of public opinion or the desire of public approbation, (4) the teachings of religion, and (5) the repressive authority of the state which provides penal laws for crimes. The earliest of these influences is the family and it is the purpose of this to discuss how far parents realize the responsibility that is on them. A home is primarily the "nurse of virtue." As a plant thrives in its natvie soil so the moral principles are best developed at home."—*Rao Bahadur A. C. Pranatharthihara Iyer, Inspector of Schools.*

*தள்ளை-தாய்.

---

## ஸன்மார்க்கஸாதனம்.

## பெற்றோர் கடமை.

---

"நன்மார்க்கமேதுவோ அதுவே ஸன்மார்க்கம்.'

" சத்தியமே நன்மார்க்கம்
தவறுவரு மற்றெதிலும்
வித்தையிதில் லாபமெத்த
விசுவாசம் மெத்தமெத்த."

ஸத்தியமே நன்மார்க்கமாகையில் அதைப் பத்தியமாய் அனுஷ்டிக்க வேண்டும். ஸத்தியானுஷ்டானம் உள்ளவரையில் மனச்சாக்ஷி குன்றுது. மனச்சாக்ஷியொன்றே நீதிக்குப் பரமசாதனம். அந்த மனச்சாக்ஷிக்கு ஒப்பிதமாக நடக்காவிட்டால் ஸன்மார்க்கத்துக்கின்றியமையாத பரமஸாதனம் நழுவிப்போம். அது நழுவிப்போங்கால் அதற்கு ஈடாக வேறு ஸாதனங்கள் ஏற்படவேண்டியிருக்கின்றன. இவை (1) குடும்ப ஸாதனம், (2) குருஸாதனம், (3) ஜனஸமூக ஸாதனம்; அதாவது ஊரொக்க வாழ்ந்து உலகொப்ப நடக்கவேண்டுமென்கிற இயற்கையான அவா (ஆசை), (4) மதஸம்பந்தமான சிக்ஷாஸாதனம், (5) அரசனது துஷ்ட நிக்ரக தாமமாகிய ராஜதண்ட ஸாதனம். இவைகளில் மனச்சாக்ஷிக்கொப்ப நடப்பதே பரமஸாதனம். மற்றவையெல்லாம் உபஸாதனங்களாம்.

"குலத்தளவேயாகும் குணம்."

இந்த உபஸாதனங்களில் முக்கியமானதாயும், பிரதம விசேஷமானதாயுமுள்ளது குடும்பஸாதனம். "குலத்தை யடுத்தது குணம்" என்பது ஒரு பழமொழி. "நூலைப்போல சேலை, தாயைப்போல மகள்" என்பது இன்னொரு பழமொழி "குலத்தைப்பார்த்துப் பெண்ணைக்கொள் கோத்திரத்தைப்பார்த்து வரனைக்கொள்" என்பது மற்றொரு பழமொழி. இதனால் குலத்தைப் பொறுத்தது குணம் என்பது உலகானுபவத்தில் உண்மையாகக் கண்ட அனுபவமென்று ஏற்படவில்லையா.

குடும்பத்தில் தாயாரது குணமும் மனமும் குழந்தைகளுக்குத் தானாகப்படியும். கருவிலிருக்கும் பொழுதே தாயாருடைய எண்ணம் குழந்தைகளைப் பாதிக்குமென்பது நிஜமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அன்றியும் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கும் தாயார் புத்திசாலியும் விவேகமுடையவளுமானால் "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதை யுணர்ந்து தொட்டிலிற் குழந்தையாயிருக்குங் காலையில் தானே நல்லவாசனை படியும்படிப் பிள்ளைகளைப் பழக்கி வளர்த்து வருவாள். இப்படித் தாயார் குழந்தைகளை வளர்க்க வேண்டிய முறையை "பாலபோத சிக்ஷா ஞான ஸாதனம்" என்கிற தலைப்பின் கீழ் இச்சஞ்சிகை முதலில் விளக்கிக் காட்டியிருக்கிறோம்.

நம்மில் பெற்றோர்களாயுள்ளவர்கள் குழந்தைகளை வளர்க்கும காரியத்தில் தங்கள் பொறுப்பை யுணர்ந்து நடக்கிறதில்லை யென்பது அவர்கள்மீது நியாயமாய்ச் சொல்லத்தக்க ஒரு பெருங்குறையாயிருக்கிறது. அந்தக் குறையை நிவர்த்தித்துக்கொள்ள நம்மவர்கள் முயலவேண்டும். உத்தியோகஸ்தர்கள் பணம் தேடும் ஆரவாரத்தில் குழந்தைகளை நன்றாக கவனிப்பதில்லை. அவர்கள் மனைவிகளான தாய்மாரோ, தனவந்தர்களானால் தாதியிடம் குழந்தையை ஒப்புவித்துவிட்டு தாங்கள் நிர்விசாரமாயிருக்கிறார்கள். தனமில்லாத ஏழைகளானாலும் விவேகசூந்யத்தால் குழந்தைகளை வளர்க்கும முறை தெரியாமல் தங்கள் மௌட்டியத்தால் குழந்தைகளுடைய தேஹத்துக்கும், மனதிறகும், வளர்ப்புக்கும் தீங்கு வரும்படி நடந்து கொள்ளுகிறார்கள். இதையெல்லாம் ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ராவ்பஹதூர் வ. வி. ப்ரணதார்த்திஹர ஐயரவர்கள், பெல்லாரி முனிஸிபல் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டராக விருந்தபொழுது செய்த ஒரு உபந்யாஸத்தில் தெளியக் காட்டி விளங்க வைத்திருக்கிறார்.

"பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்"

என்று சொல்லியிருக்கிறதே யென்று பெண் பெண்டாட்டிகள்படியாத மூடங்களாய்விவேகசூந்யர்களாயிருப்பது தங்களுக்கு அழகென்று நினைக்கிறார்கள். இது மிகவும்தப்பு. "பேதைமை" என்னும் பதத்திறகு விவேக சூந்யமான மௌட்டியம் என்று அர்த்தமல்ல; அது அநர்த்தமாகும். ஆனால் பேதைமை யென்றால் என்ன வெனில் அத்துவித ஞானத்துக்கு வேறான வஸ்து - விவேகஞானம். இதற்கு உதாரணம் வசிஷ்டர் தசரதகுமாரனுக்குச் சொல்லிய சிகித்துவஜராஜன் கதையில சூடாலையாம் கதாநாயகியிடத்தில் காணலாம். அவளுக்கு அத்துவித ஞானம் ஸித்தித்திருந்தாலும் அதை உலக நடவடிக்கையில காட்டிக் கொள்ளாமல் ஊரொக்க வாழ்ந்து உலகொக்க நடந்துகொண்டு தன கணவனாகிய அரசனையும் கும்பமுனிரூபம் கொண்டு நல்வழி காட்டிச் சீர்திருத்தி அளவிலா அகண்டானந்தம் ஸித்திக்கச் செய்து மறுபடியும் அவனை உலகத்தின் கண் தர்மவழிக்குக்கொண்டு வந்து ஞானத்துக் கழகு தாமரையிலையிற்றண்ணீர் போல இருந்து உலகொப்ப நடப்பதேயென்று நிரூபித்துக் காட்டினாள்.

அறிந்தும் அறியாதுபோலிருந்து அடக்க ஒடுக்கமாய் நடந்து கொள்வதையே "பேதைமை" யென்று சொனனதன்றி மௌட்டியத்தைச் சிலாகித்துச் சொன்னதில்லை. வித்தையை "அவித்தை" யென்று சொன்னது போல் வித்யாகர்வ மில்லாதிருக்கவேண்டி "அடக்க ஒடுக்கத்தோடு கூடிய விவேக ஞானத்தை" பேதைமை யென்று காவியாலங்காரமாகச் சொல்லி அதை "மாதர்க்கணிகலம்" என்று சொன்னார். அதனால் மௌட்டியத்தையே புகழ்ந்ததாகமாட்டாது. நமது புருஷர்கள்கூடப் பெற்றோர்கடமையை அறியாது நடந்து கொள்கிறார்கள். ஸத்புத்திர ஸந்தானப் பேறு பெறுதல் சாஸ்திரோக்தமான ஒரு நல் வித்தையாகும். இதை "Eugenics" என்று மேற்றிசையார் பயிலத்தலைக்கியிருக்கிறார்கள். அதையே நாம் விவாகதர்மமாகக் கொண்டாடுகிறோம்.

நமக்குள் விவாகம் என்பது ஒருவித ஒப்பந்தமாத்திரமன்று. அது "ஆயிரங்காலத்துப் பயிர்" என்பர். அதை ஷோடச ஸம்ஸ்காரதீக்ஷைபாகக்கொண்டு அனுஷ்டித்து வரவேண்டுமென்று தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன. காரியத்தில் காலவிசேஷத்தால் விவாகமென்பது மிக்கச் சீர்கெட்டிருக்கிறது. அதைச் சீர்படுத்தவேண்டிக் குழந்தைகளும் பள்ளிப் பிள்ளைகளும் விவாக லக்ஷியத்துக்கின்றியமையாத விவாகதர்மத்தை நன்குணர்ந்திருக்கவேண்டும். அவர்களுக்காக விவாக தர்மத்தைப்பற்றிப் பின்னெழுதியிருக்கிறோம்.

## ON THE CHOICE OF A WIFE.

## விவாகதர்மம்.

### வதூலக்ஷணம்.

மேலேசொன்ன விவாக தர்மத்தை யனுஸரித்துத் தகப்பனார் தனக்கு இல்லறத்துணைவியாயிருக்கப் பெண் தேடின கதையை விவேசத்தாய் தன் குழந்தைகளுக்குத் தாலாட்டுப் பாட்டாகச் சொல்லியிருப்பதைக் கீழே யெடுத்துப் பிரசுரிக்கிறோம்.

### தாய் பிள்ளைக்குச் சொல்லல்.

தாலாட்டுப் பாட்டு.

(1) "ஊரெல்லாம் ஸம்மதிக்கும்
உத்தமியாள் வேணுமென்றார்
பாரெல்லாம் ஸம்மதிக்கும்
பதிவிரதை வேணுமென்றார்.

(2) "[illegible]த்தில் நாயகமாய்த்
[illegible]யவுதனிற் சாசரமாய்ப்
புத்தியுத்தி யுள்ளதொரு
பொற்கொடியாள் வேண்டுமென்றார்.

(3) "வீட்டினுக்கு நல்விளக்கு
வெளிதனக்கும் ஆபரணம்
நாட்டிலுள்ள பெண்களுக்கு
நாயகந்தான் வேணுமென்றார்.

(4) "*பொற்பிருந்தும் பூணிருந்தும்
போர்முகசந் தானிருந்தும்
கற்புநல மில்லாப்பெண்
காட்டுப்பே யாகுமென்றார்.

(5) "காட்டுக் குடித்தனமாய்க்
கனவறுமைப் பட்டாலும்
பாட்டும் படிப்புகளும்
பலகுணமும் வேணுமென்றார்.

(6) "ஆட்சியில்லை யானாலும்
அழகில்லை யானாலும்
மாட்சி[illegible]ற்ற வார்த்தையொடு
மதியூகம் வேணுமென்றார்.

(7) "வட்டிவட்டி யாய்ப் பொருள்தான்
வளமபெருகி வந்தாலும்
செட்டுமட்டு மாய்த்தனத்தைச்
செலவுசெய்ய வேணுமென்றார்.

(8) "வையகத்திற் சேவலமாய்
மாட்சியற்று நின்றாலும்
சையிறக்க மாதுசொர்ணக்
களஞ்சியந்தா னென்றுரைத்தார்.

(9) "வரிசையொடு தன்வீட்டில்
வாழ்ந்திடும்பெண் ணானாலும்
புருஷனே தெய்வமென்றார்
போற்றியிடும் பெண்மணிக்கு.

(10) "செல்லை [illegible] யாச்சொரணைச்
குவியலில்லை யானாலும்
பிள்ளைகளைத் [illegible]வளர்க்கு
பேரறிவு போதுமென்றார்.

(11) "மதலைகளைப் பார்ச்சவைத்து
வன்புதன்பு [illegible]ன்னுச்சால்

*பொற்பு-அழகு; "[illegible]ற்பெனப்படுவது சொற்றிறம்பாமை," கற்புநலம்-பதிவிருதாசீலம்,

பதங்குலைந்து பின் வாழ்வு
பாழாகுமென்றறிந்து,
(12) "வாச்சடக்கிச் செய்கைபொடு
மனசினையுந்தானடக்கி
தாக்கியிடும் நற்சகுனம்
தாபரிக்க வேணுமென்றார்.
(13) "வாலிபமுங் காயிதமும்
வாய்ந்தவுநக் காட்டுமென்று
மேலறிவாய்த் தான்வளர்க்க
வேணுமிகக் கல்வியென்றார்.
(14) "பணிவாகத் தெண்டனிட்டுப்
பர்த்தாவைப் பேணுமுறை
அணியாகக் கொண்ட பெண்ணே
ஆசையென்றார் வேணுமென்றார்.
(15) "அவிகொண்ட மாலையிட்ட
அன்புடைய நாயகனார்
வெளிவேலை தீர்ந்தபின்பு
வீட்டில்வரும் வேளையிலே,
(16) "மதியிலே மந்திரியும்
மனத்தபவில் மாதாவும்
மதிபோற் குளிர்முகமும்
வாதனைபிலே சேவியுமாய்,
(17) "வணங்கியுபசாரமுடன்
வந்தேற்றுக் கைகொடுத்தும்
இணங்கியிடும் வார்த்தைகளால்
இயல்புணைத் தானறிந்தும்,
(18) "மாறாத் துயரமெல்லாம்
மாற்றிமணவாளனவன்
ஆறாத்துக்கமெல்லாம்
ஆற்றுமின்னாள் வேணுமென்றார்.
(19) "பாளைசுசி சட்டிசுசி
பாத்திரங்கள் வீடுசுசி
ஆனதொரு தன்தேஹம்
அளவில்லா நல்லசுசி,
(20) "அத்தையார் பெற்றதன்னை
அம்மானார் தன்தகப்பன்
பர்த்தாவின் உற்றோர்தன்
பந்துவென எண்ணுமனம்,
(21) "உள்ளதொரு பெண்வேணும்
உளதெல்லாந் தோற்றாலும்
கொள்ளுவது மேலுரைத்த
குலக்கொடியே யென்றுரைத்தார்,'

"குலக்கோடி" யென்னும் பதத்தில் இவ்வளவு அர்த்தம் பொருந்தி குணமும் மணமும் சேர்ந்திருக்கிறதென்பதை இதை வாசிக்கும் எல்லாரும் சிந்தித்து மனதில் வைக்கவேண்டும். ஆகையினால்தான் "குலம் பெரிது குணம் பெரிது" என்று சொல்கிறார்கள்.

"வரப்புயர வயலுயரக்
குடியுயரக் கோனுயரும்"

என்றதுபோற்

"குணம் பெருகக்
குலம் பெருக—நாட்டின்
நலம் பெருக
எலாம் பெருகும்"

என்பது ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம்.

நீரில் முளைத்த ஆம்பல்கொடி அந்த நீர்நிலையின் ஆழம் எவ்வளவோ அவ்வளவாக வளர்ந்து நிற்கும். "கற்றோர்கல்வியும் மனப்பயிற்சி" யென்றபடி ஒருவன் மனதைப் பழக்கும் விதி விலக்குகளையுணர்ந்து ஓதும் நூல்களைக் கசடறக் கற்றுக் கற்றபடி நிற்கல்வேண்டும். இப்படிக் கல்விகற்ற அளவுக்குத் தக்கபடியே அவனிடத்தில் நுட்பமான அறிவு (கூர் புத்தி) யிருக்கும். பூர்வத்தில்செய்த தவம் (மனதை யடக்கல்) எவ்வளவோ அந்த அளவாக நிற்கும் தற்காலத்தில் அவன் அனுபவிக்கப்பெற்ற செல்வம். அவன் குணம் பிறவியைப் பொறுத்ததாதலால் அது "குலத்தளவே யாகும்." இதை ஔவையார் அருளிச் செய்துள்ள மூதுரையில் பரக்கக் காணலாம்.

"நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்."


பேற்றோர்க் கறிவிப்பு.

விவேக சிந்தாமணியை வாங்கி வாசிக்க விரும்புவோர் உடனே முன்பணமனுப்பிச் சந்தாதாரர்களாகச் சேரல் வேண்டும். இதுதான் சமயம். காலஹரணஞ்செய்யக்காலமில்லை. காபிகள் சீக்கிரத்தில் செலவாய்விடும். பள்ளிக்கூடப் பிள்ளைகளுபயோகத்துக்கு மாத்திரம் நூற்றுக் கணக்காய் காபிகள் தேவையிருக்கின்றன. இரண்டாம் பதிப்புக்கு அவகாசமில்லை. ஆகையால் உஷார்.

Apply to:—
The Sole Agents and Managers,
the "*Vivekachintamani*," *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*, *Madras*, S.




# THE AUTOBIOGRAPHY OF WATER.

*A Lesson in Nature Study for School-boys.*

## பிரகிருதி வித்தியாம்சம்.

## தண்ணீர் சொல்லிய தன்வரலாறு.

பள்ளிப்பிள்ளைகளுக்காக எழுதப்பட்டது.

### பீடிகை.

சிறுவர்க்கென்று சிலகதை குட்டியண்ணாவும் மற்றவர்களும் எழுதிவருகின்றனர். விவேகசிந்தாமணியின் 'சிறுவர் பக்கம்' போக மற்றப்பக்கங்களில் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தோருக்கு உபயோகமாகப் பற்பலர் பற்பல சங்கதிகளை எழுதிவருகிறார்கள். ஆனால், சிறுவர்க்கும் பெரியவர்களுக்கும் நடுவிலுள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு உபயோகமாக ஒருவரும் எழுதவில்லை. அவர்களுக்கு நான் என் அனுபவத்தில் கண்ட சில சம்பவங்களைச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

### தண்ணீரின் முறுமுறுப்பு.

சிநேகிதர்களே! நான் சில நாட்களுக்கு முன் என்னூருக்கு அருகிலுள்ள மற்றொரு ஊருக்குப் போய்த் திரும்பி வரும்போது புகைவண்டியிற் பிரயாணம் செய்வதற்காக ரெயில் ஸ்டேஷனுக்குப் போனேன். அங்கு 'டிக்கட்டு' வாங்கி அரைமணி நேரம் வரையில் புகைவண்டி வரவில்லை. ஆதலால் அந்த 'ஸ்டேஷனில்' அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தேன். அப்போது ஸ்டேஷன் ஓரத்தில் யானைத் துதிக்கையைப்போல் ஒன்று என் கண்ணுக்குத் தோன்றியது. அது என்னவென்று கண்டறியும்படி அதன் சமீபத்திற் சென்றேன். சில விடங்களில் வைத்திருக்கும் தபால் பெட்டியைப்போன்ற உயரமான உருக்குத் தூணிலிருந்து அந்தத் தோல் துதிக்கை தொங்கிக் கொண்டிருந்தது. அந்தத் துதிக்கை நுனியிலிருந்து சொட்டுச் சொட்டாய்த் தண்ணீர் வடிந்துகொண்டிருந்தது. அந்தத் தண்ணீர் எங்கிருந்து வருகிறதென்று சோதித்துப் பார்க்கையில் முன் உருக்குத்தூணாய்த் தோற்றியது, தண்ணீர் நிறைந்த உயர்ந்த தொட்டியென்றும், அதிலிருந்து தோல்துதிக்கையின் வழியாய்த் தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்ததென்றும் அறிந்தேன். அப்போது யாரோ ஒருவர் சில வார்த்தைகளை முறுமுறுத்துக் கொண்டிருந்ததாக எனக்குத் தோன்றிற்று. அப்படி முறுமுறுத்தது யாரென்று என்னைச் சுற்றித் திரும்பிப் பார்த்தும் ஒருவரையும் சமீபத்திற் காணேன். என்றாலும் என் செவியில் முறுமுறுப்பு வரவர அதிகமாகவே கேட்டது. சிறைச்சாலையில் அடைபட்ட ஒருவன் உள்ளிருந்து தன் அவஸ்தைகளைப்பற்றி முறுமுறுத்துக்கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. நன்றாய் நிதானித்துக் கேட்கையில், அது உருக்குத்தொட்டியில் அடைபட்டிருந்த தண்ணீரின் முறுமுறுப்பு என்று திட்டமாய்த் தெரிய வந்தது. அதன் முறுமுறுப்புக்கு அர்த்தம் என்னவென்று யோஜிக்க, மேகத்தைப்போல் உருவெளித்தோற்றம் ஒன்று என் மனக்கண்ணுக்குத் தென்பட்டது. தினம் வருண தேவனை ஸ்துதிசெய்து வழக்கப்பட்ட என் மனதுக்கு அது வருணதேவனுடைய சாயை போல் தோற்றியது. அந்த உருவெளித் தோற்றத்தை அம்முறுமுறுப்புக்கு என்ன அர்த்தம் என்று கேட்டேன். அதற்கு அது அத்தண்ணீர் தானாக அதன் குறையை எடுத்துச் சொல்லிற்று. அது என்னவென்றால்:—

### அம்முறுமுறுப்புக்கு அர்த்தம்.

"இதென்ன வாழ்வு! என்னாளும், என் ஆயுள் முழுவதும் இத்தொட்டியில் அடைபட்டிருப்பதில் என்ன சுகம்? 'சும்மா இருத்தல் சுகம் சுகம் எனச் சுருதியெல்லாம்' சொல்லுகின்றனவாம்!! அதென்ன சுகம்? இடுக்கமான இருட்டறையில் என்னை அடைத்து வைத்திருக்கின்றனர். நான் சர்க்காருக்கு விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையே. ஐயோ! என்னை இந்தச் சிறையிலிருந்து விடுவிப்பார்களானால்

நான் என் மனப்போன போக்கில் போவேன் அப்போது என்னை வாய்க்கால் என்பார்கள். செழிப்பான வயல்களுக்கு மத்தியில் எவ்வளவோ சந்தோஷமாய்ச் சாடி ஓடி இசைபாடி சிநேகிதருடன் கூடி விளையாடிக்கொண்டிருப்பேன். அருகிலுள்ள செடிகளின் புஷ்பங்கள் குனிந்து என்னை அன்புடன் முத்தமிடும். பக்ஷிகள் சந்தோஷத்துடன் காலைமாலைகளில் கக்ஷியாய் என்னிடத்தில் வந்து தம் சிறகுகளை அடித்துத் தலையை அமுக்கிக் குளித்துச் செல்லும். மேலும் உல்லாசமாய் என்மேல் துள்ளித் துள்ளிவிழும் மீன்களுடன் சல்லாபமாயிருந்தாலுமே என் பொழுது சந்தோஷமாய்க் கழியுமே! இதெல்லாம் விட்டு ஒன்றுக்கும் உதவாமல், ஒருவேலையும் செய்யாமல், 'பன்றி போல் தின்று' சோம்பலாயிருக்கும் சில மனிதரைப்போல் இந்த சிற்றறையில் அடைபட்டிருப்பதில் என்னபயன்? யாரையேனும் பார்க்க முடியுமா? என்னுடன் யாரேனும் சம்பாஷிக்க முடியுமா? என்னை ஓர் உபயோகமில்லாத வஸ்துவென்று உலகத்தோர் நினைத்திருப்பார்களே. என் உபயோகத்தை அவர்களுக்குக் காட்ட ஒரு வழியும் காணேனே. இதுவும் அன்றே அயன் என் தலையில் எழுதிய விதியோ!!" என்று தன்னையும் தன்னைப்படைத்த கடவுளையும் நொந்துகொள்ளும் சோகத்துவனியப்பா, அது!—என்றது.

## சிறைமீட்சி.

"இதென்ன விபரீதம்! ஐயோ! இந்தத் தண்ணீர் இவ்வளவு அவஸ்தைப் படுகிறதே; இதைச் சிறையினின்றும் விடுவிக்கும் இரக்க சித்தமுள்ளவர் ஒருவருமில்லையா" என நான் நினைத்துக்கொண்டிருக்கையில், "இதோ வந்தேன்" என்று புகைவண்டி, 'ஊதும் சத்தத்தால்' தன் வரவைத் தெரிவித்துக்கொண்டே ஓடிவந்து எனக்கு சமீபமாக நின்றது. நின்றதும் அவ்வண்டியிலிருந்து கரித்துணி போர்த்திருந்த ஒரு நாட்டுத்துரை கீழே குதித்து, அந்தத் தொட்டியிலிருந்து ஒரு குமிழ் ஆணியைத் திருப்பிவிட்டுத் தண்ணீரைப்பார்த்து "இங்கே விரைந்து வா: உனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது: சீக்கிரம்!" என்று உத்திரவு செய்வது போல் அண்ணாந்துபார்த்தார்.

## கொதிப்பும் கொந்தளிப்பும்

உடனே தண்ணீர் "தங்கள் சித்தம், என் பாக்கியம்" என்று முதலில் அவர் பாதத்தில் விழுந்து நமஸ்காரம் செய்து, பின் கடகடவென்று பாய்ந்து நீராவி யந்திரத்திலுள்ள ஒரு தொட்டியினுள் சென்று நின்றது. அந்தத் தொட்டிக்கு அடியில் செங்கல் சூளையில் தீ எரிவதுபோல நிலக்கரி சுவாலித்து எரிந்துகொண்டிருந்தது. அரை நிமிஷத்தில் அந்தத் தொட்டித் தண்ணீரில் கொதிப்பு உண்டாயிற்று. அப்போது அந்தத் தண்ணீர் பட்டபாட்டை என்னென்று சொல்லுவேன்! அதை நினைக்க நினைக்க அதிகப்பரிதாபமாயிருக்கிறது! அப்போது அது கொதித்துச் சொன்னதாவது: "இதென்ன! என்னை இப்படி வருத்துகின்றனர்! இரக்கமில்லா மனிதர் என்னைத் திறக்க மனங்கொள்ளாமல் இருக்கின்றனர். அவர் இறக்கக்கடவர்! ஐயோ, இதுவரை இப்பாடு நான் எப்போதும் பட்டதில்லையே. ஒருநாள் பேதை மடமாதர் சிலர் கூட்டாஞ்சோறு சமைப்பதற்கென்று என்னைப் பானையில் அடைத்துத் தீயினால் சுட்டுக் காய்ச்சினர். அதுவோ என்னைக் கொன்றது போலவே இருந்தது. என்றாலும் அவர் அறியாப் பெண்களானதால் பொறுத்திருந்தேன். இதென்ன! அதினும் பெரிய அவஸ்தையாயிருக்கின்றதே! ஓடிப்போகவென்றால் ஒரு ஊசி நுழைக்கவும் வழியில்லை. அப்பப்பா! இக் கொடியவரைப்போல் கல்நெஞ்சரை நான் எங்குங் கண்டதில்லை"—என்று கதறிக் கொந்தளித்து அங்குமிங்கும் முட்டியும் ஒன்றும் முடியாமல் தன் பிராணனைவிட்டு ஆவியைப் போக்கிற்று. பரிதாபம்! பரிதாபம்! இப்படியாக அந்த நல்ல தண்ணீர் ஸ்தூலவாழ்வொழிந்து சூக்ஷ்மவாழ்வெய்தியது.



## நீராவியின் சூக்ஷ்ம சக்தி.

தண்ணீர் போக்கிய இந்த ஆவியோவெனில், தண்ணீரைவிட அதிகப் பாடுபட்டபோதிலும், தனக்கு ஏதோ பலமும் சக்தியுமிருப்பதாய்க் காட்டியது. தண்ணீரைப்போல் அது அழுது தத்தளிக்கவில்லை. ஆனால் சினங்கொண்ட நாகம்போல் சீத் சீத் என்று சீறிக் கோபத்துடன் 'என்னை இப்போது விடுவிக்கின்றீர்களா, இல்லையா? நான் தண்ணீரைப்போல் வெகு நேரத்துக்குப் பொறுமையுடன் இருக்கமாட்டேன்: அதைவிட நான் பலசாலி; என் கோபத்தைத் தணிக்க எவராலும் கூடாது. என்னை வெளியே போகவிடத் தாமதிப்பீர்களாகில், இந்த அறையின் ஆமைப்பூட்டுகளை அரைநொடியில் ஹதமாக்கி வெளியே போய் விடுவேன்' என்று பயமுறுத்திற்று.

## நீராவியின் சேஷ்டை விளையாட்டு.

உடனே என் காது செவிடுபடும்படி கீச்சு சப்தமாய்க் கூச்சல் கேட்டது. நீராவியின் கோபத்தால் உண்டான சத்தமென்று நினைத்தேன். ஆனால் அது சந்தோஷத்தின் மிகுதியால் உண்டானதென்று அப்பால் தெரிந்தது. பிள்ளைகளே நீங்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே விளையாடப் போகும் பொழுது உங்களுக்கு மனம் எப்படியிருக்கிறதென்று பார்த்துக்கொள்ளுங்கள். அந்த உற்சாகம் வந்தால் நீங்களும் கீச்சு, வீச்சென்று கத்துகிறதில்லையா? அப்படித்தான் அந்த நீராவியும் உற்சாகம் மேலிட்டுக் கத்திற்று. எப்படியென்றால், நான் முன்சொன்ன துரை இஞ்சின் வண்டியிலிருந்த ஒரு திட்டிவாசலைத் திறந்துவிட்டார். அதின் வழியாய் நீராவி "தப்பினேம் தப்பினேம்" என்று சத்தமிட்டு வெளிப்பட்டது. அந்தத் திட்டிவாசல் உடனே மூடிக்கொண்டது. அப்பால் வேறொரு திட்டிவாசல் திறந்தது; அதின் வழியாயும் நீராவி வெகுவிசையாய் வெளிப்பட்டது. அப்படி வெளியே போகும் ஆவி சும்மா போகாமல் வண்டியின் சக்கரங்களுடன் பொருந்தியிருந்த உருக்குத்தடி † யொன்றை விசைகொண்டு தள்ளித் தள்ளிச் சென்றது. உருக்குத்தடி அசையவே, சக்கரங்களும் நகர்ந்தன. வண்டியும் மெதுவாய் நகர்ந்தது. வண்டி நகர்ந்தபின் தாமதிக்கலாகாதென்று நான் ஓடிப்போய்த் திறந்திருந்த ஓர் வண்டியில் பொட்டென ஏறிக்கொண்டேன். அரை நிமிஷத்திற்கெல்லாம் இஞ்சின் வண்டியும் அத்துடன் சேர்ந்த வண்டித்தொடரும் ஸ்டேஷனைவிட்டு அப்பால் சென்றது. சற்றுநேரத்தில் அவ்வூரும் எங்கள் கண்ணுக்கெட்டாத தூரத்தில் மறைந்து போயிற்று. பக்கத்திலிருந்த மரங்களும் வயல்களும் மாடுகளும் வீடுகளும் எங்களுக்கு எதிர்முகமாய் சிறகுகட்டிப் பறந்தாற்போல் பறந்து கண்ணுக்குக் காணாமல் மறைந்தன.

## ஓர் இனிய சம்பாஷணை.

இது இப்படியாக, 'இஞ்சின்' வண்டியிலிருந்து விடுபட்ட நீராவியானது வழிப்போக்கரிடத்தில் விடைபெற்றுப் போவதுபோல, எங்கள் வண்டிகளின் ஜன்னல்கள் வழியே எட்டிப்பார்த்துப் பார்த்துப் பின்னடைந்தது. அப்போது ஓர் மூலையில் 'விவேகசிந்தாமணி' யென்னும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகையை வைத்து வாசித்துக்கொண்டிருந்த ஓர் வியாபாரி அந்த நீராவிக் கூட்டத்தைப் பார்த்து, "உங்களுக்கு முன் நான் ஒரு வாரத்தில் செய்யக்கூடிய பிரயாணத்தை இப்போது அரைநாளில் முடிப்பது உங்கள் உதவியாலன்றோ!" என்று சொன்னார். அதற்கு "நாங்கள் உலக சிருஷ்டி முதல் இல்லையா? இப்போதுதான் புதிதாய் வந்தோமா என்ன!" என்றது அந்த நீராவிக்கூட்டம்.

வியாபாரி.—"உங்களை விண்ணவராக வருணன் என்றும், மேகராஜன் என்றும் அறிவோம், இப்படி மூட்டைதூக்கி முக்கையனாகவுங்களை நாங்கள் அறிந்ததில்லை" என்றான்.

"இது யாருடைய வேலை? தெரியுமா?" என்று அந்த நீராவிக்கூட்டங் கேட்க, "எந்த

† Piston Rod.

மஹான் உங்களை இப்படி விலங்கிட்டு வண்டியிற்பூட்டினாரோ, அறியேம்!" என்றார் அந்த வியாபாரி.

"ஐயோ! இவ்வளவுதானா? அது ஒன்றுமில்லை! ஒரு சிறுபையன் விளையாட்டாகச் செய்தது இப்படி வினையாகவந்து முற்றிற்று." என்றது அந்த நீராவிக்கூட்டம்.

"அவன் யார்?" "ஸ்டீவன்ஸன்" என்பார்கள் அவனை.

"ஒரு சிறுபையன் விளையாட்டாகச் செய்த வேலையா இது! ஒரு பையன் லீலை இப்படியானால் பகவான் லீலாவிபூதிக்கு (விளையாட்டு மஹிமைக்கு)க் கேட்பானேன்!" என்று வியாபாரி ஆச்சரியப்பட்டு ஆனந்த பூரிதனானான்.

ஒரு வருஷம் தன் பெற்றோர் முதலியவரையும் பாராமல், சென்னையிலிருக்கும் ஓர் கல்விச்சாலையில் படித்திருந்து நடுவேனில் விடுமுறையில் தன்னூருக்குப் போய்க்கொண்டிருந்த ஓர் சிறுவர் "நீராவிக் கூட்டங்களே! உங்களுக்கு நான் வந்தனம் தந்தேன். இன்று சாயந்தரமே என் பெற்றோர் சினேகிதர் முதலிய எல்லாரையும் பார்க்க என்னூருக்கு என்னைப் போகச்செய்வீர்களல்லவா!" என்றான்.

உடம்பு மெலிந்து முகம் வெளுத்து இரத்தம் கெட்டு வியாதிப்பட்டு உட்கார முடியாமல் தலையணைமேல் சாய்ந்துகொண்டிருந்த நோயாளி ஒருவன் "என்னை இவ்வளவு சீக்கிரமாய் என் வீட்டிற் கொண்டுவந்து சேர்த்தீர்களே, நீராவித்திரள்களே! உங்களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்!' என்று புகழ்ந்து பேசினான்.

இப்புகழ்ச்சியான வந்தன வார்த்தைகளைக் கேட்டவுடன் நீராவிக்குச்சந்தோஷமுண்டாகி "இப்போது தான் எனக்குத் திருப்தி; நான் உடம்பு எடுத்ததற்கு உலகத்துக்கு உபயோகமாகக் கொஞ்சம் உழைத்தேன்" என்றுசொல்லி ஆனந்தத்தின் மிகுதியால் உயர உயர எழும்பிக் குதித்தது. புகைவண்டித் தொடரோவெனில், பின்னடைந்த நீராவியைப்பற்றிய எண்ணமேயின்றி வெகுவிரைவாய் ஓடிவிட்டது. நீராவி செய்த உபகாரத்திற்காக அதற்கு பற்பலர் வந்தனம் கூறிச் சென்றும், அந்நீராவியால் தள்ளுண்ட வண்டியானது சற்றேனும் தாமதித்து அதற்குவந்தனங்கூறிச் சொல்லாமலும், அதைப்பற்றிய எண்ணமேயில்லாமலும் ஓடிவிட்டதைப் பார்த்த நீராவிக்கு அதிக விசனமும் கோபமும் உண்டாகி முகங்கருத்து "பளா! நன்றாயிருக்கிறது!! இவ்வுலகத்தில் நடக்குங் காரியங்கள் இப்படியே! எவ்வளவோ பரோபகார சிந்தையுடன் நாம் ஒருவருக்கு உபகாரஞ் செய்தும் அவர் நம்மை மறந்து போவதாயிருக்கிறது. வெகு நேர்த்தி! என்னையன்றி இப்பெரிய வண்டித்தொடரின் ஓர் அணுவும் அசையுமா? என் உதவியால் அசைந்தோடிய வண்டிக்கு அப்பால் என்னைத் தொட்டென்ன காரியமிருக்கிறது!! . . . . தன்னயம் பாராட்டும் இவ்வுலகத்தில் நானிருப்பதைவிட வேறெங்கேயாவது போய்விடுவது நன்று" என்று சொல்லிக்கொண்டு மேல் லோகத்துக்குப் போய்விட்டது. இங்கேயொரு உபகதை.

---

## THE VICEROY'S BIRTHDAY.

### The Children's Festival.

### ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி உபாக்யானம்.

ஸ்ரீ ஹார்டிஞ்ச் ஜயந்தி கொண்டாடும் குழந்தைகளுக்கு இங்கே யொருவார்த்தை சொல்ல விரும்புகிறோம்.

பிள்ளைகளே! சென்ற மார்ச்சுமாசத்துச் சஞ்சிகையின் முதற்பக்கத்தில் "நமது உபகாரச்சங்கம்" என்று எழுதியுள்ளதை வாசித்துப் பார்த்தீர்களா? இல்லாவிட்டால், உடனே பாருங்கள்! ஜன்ம மெடுத்ததற்குப் பிரயோசனம் பரோபகாரம். இதில் எல்லா உபகாரமும் அடங்கும். தேஹ ஸம்ரக்ஷணையும் உழைக்கிறபடி யுழைத்தால் பரோபகாரமே யாகும். எப்படி யெனில், "பூட்டியிட்ட தேஹமிது"



என்றுள்ள விவேகத் தாயின்' வாக்கியப்படி நீராவிக்கு ரயில்வண்டி யெப்படியோ, அப்படியே ஜீவனாகிய ஆவிக்கு இந்த தேஹமும் சம்பந்தப் பட்டிருக்கிறது. ஜடாத்மகமாய் ஜடபுத்தியுள்ளவர்களுக்கு நன்றியுணரும் சக்தியில்லை. அதனால் நீங்கள் ஜீவோபகாரம் செய்முயற்சி குன்றவேண்டாம். ஜீவனுக்கு நன்றியுணரும் சக்தியுண்டு. பரோபகாரம் செய்வதே ஸமஷ்டிஸேவை. இந்த ஸமஷ்டிஸேவையே பகவான் திருவருளை (கிருபா நோக்கைப்) பெறுவதற்குச் சாதனமாம். ஸமஷ்டிசேவை ஸாதனம் செய்வதென்றால் பரோபகாரம் செய்து பகவான் கிருபைக்குப் பாத்திரமாதல் என்றுதான் அர்த்தமே யன்றி வேறு பிரமாதம் ஒன்றுமில்லை. லார்ட் ஹார்டிஞ்சவர்கள் பரோபகார சிந்தை வாய்ந்தவர். ஆதலால்தான் பகவான் அவரை ஆபத்து வேளையில் காப்பாற்றி அவரால் குழந்தைகளெல்லாம் முன்னுக்கு வரவேண்டுமென்று ஸ்ரீஹார்டிஞ்சு ஜயந்தியையும் ஒரு நித்திய ஸ்தாபனமாக உண்டு பண்ணினார். இந்த வருஷம் ஸ்ரீஹார்டிஞ்சு ஜயந்தியின் பொருட்டு குழந்தைகள் கொண்டாடும் உற்சவம் ஜூன்௴ 22-௳க்கு பதிலாக மே௴ 18௳ கொண்டாடப் படுமென்று ஸிம்லாவிலிருந்து ஏப்ரல்௴ 29௳யில் தந்திசமாசாரம் வந்திருக்கிறது. அன்றைய தினம் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி, ஸ்ரீராமநவமி கொண்டாடுவதுபோல் எல்லாப் பிள்ளைகளும் வீட்டில் விருந்துண்டு 'பரோபகாரம் செய் கோஷ்டி' கூடி உற்சவம் கொண்டாடவேண்டுமென்பது கோரிக்கை. இதை யெல்லாரும் சுத்த மனத்தோடு அங்கீகரித்து அனுஷ்டிப்பார்களென்று பகவானைப் பிரார்த்திக்கிறோம். இனி நீராவிக் கூட்டங்களின் மேல்வரலாற்றைத் தொடுபிடியாய்த் தொட்டுத் தொடர்ந்து சொல்லிக்கொடுபோவோம். "பாலவித்யாஸாதக கோஷ்டி" யென்கிற "Bands of Hope" பள்ளிக்கூடங்கள் தோறும், பள்ளிக்கூட வகுப்புகள்தோறும் ஏற்படுத்த அது வாய்த்ததோர் சுபதினமாகும்.

### உலகுய்யத்தன்னைக் கோடுத்தல்.

இதற்குச் சமீபத்தில் என்னூரானதால் ஸ்ரீ ஹார்டிஞ்ச் உபாக்கியானம் கேட்டுக்கொண்டிருக்கையிலே நானிறங்கவேண்டிய 'ஸ்டேஷன்' கிட்டிவிட்டது. நான் அங்கே ரயில் வண்டியை விட்டு இறங்கிவிட்டேன். வீட்டுக்குப் போகும் வழியில் சிறுசிறு நீராவிக் கூட்டங்கள் சில அங்கே வெகு விசனத்துடன் ஒன்றும் பேசாமல் தங்கியிருந்தன. அவைகளைப் பார்த்து "ஏன் விசனப்படுகிறீர்கள்?" என்று கேட்டேன். "பலமுள்ள பெரிய நீராவிக் கூட்டங்களெல்லாம் எங்களை இங்கே விட்டு விட்டு மேலே போய்விட்டன. எங்களால் உயரமாய்ப் பறக்கமுடியாமல் இங்கே இருக்கிறோம்." என்றன. அப்போது நான் "பெரிய நீராவிக் கூட்டங்கள் எங்கே போய் விட்டன?" என்று கேட்டேன். "அதோ மேற்கே பொதியமலை யிருக்கிறது, அதின் உச்சியில் எங்கள் வாசஸ்தானம். அங்கேதான் போயிருப்பார்கள், எங்களுக்கு அவ்வளவு உயரமாய்ப் பறக்க சக்தியில்லை. ஆகையால் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். நாளைப்பொழுது விடியும்போது பனியாகவும் மூடுபனியாகவும் இப்பூமியின் மேல் விழுந்து நாங்கள் பிராணனை மாய்க்க எண்ணி யிருக்கின்றோம். நாங்கள் இறந்துபோன போதிலும் எங்கள் சரீரம் பயிர்களுக்கும் புற் பூண்டுகளுக்கும் கொஞ்சம் பிராணாதாரமாயிருக்கும். அப்படி உலகத்துக்கு உபயோகமாகும்படியாய் எங்கள் பிராணனை விடுவதால் எங்களுக்கு மோக்ஷம் கிடைக்கும்" என்று சொல்லின.

## MUSINGS IN CLOUDLAND.

### மேகசந்தேசம்.

### உலகசுபாவத்தை மாற்றமுடியுமா?

இதைக்கேட்டு அவைகளின் நல்லெண்ணத்துக்கும் பரோபகார சிந்தைக்கும் மெச்சிக்கொண்டு பெரிய நீராவிக் கூட்டங்களைத் தேடிப்போனேன். பொதியமலைச் சாரலில் அவைகள் இறங்கி யிருக்கக்கண்டு அவைகளின் சமீ

பத்திற் சென்றேன். அப்போது ஒரு மேகம் மற்றவைகளைப் பார்த்து "ஏன் மனஸ்தாபத்துடன் இருக்கின்றீர்கள்? உலகத்தின் இயற்கை நமக்குத் தெரியாதா? உலகத்தோர் தன்னயம் பாராட்டியே யிருப்பர்! அதனால் நமக்கென்ன?" என்றது. அது கேட்ட மற்றொரு மேகம் "செய்நன்றி யறியாத மனிதர் இவ்வையகத்தில் மெய்மறந்து திரிகின்றனர். அவர்களுக்கு புத்தி யுண்டாகவேண்டி இந்திரனிட்ட கட்டளைப்படி முன் 'மாதமும்மாரி' பொழிந்து வந்ததை யொழித்து இப்போது வருஷத்துக்கு மூன்றுமழை பெய்கிறோம். இதையும் அவர்கள் அறியவில்லை. செய்நன்றி யறியாமலிருப்பது மாத்திரமோ? உண்ட சோற்றுக் கிரண்டகஞ்செய்வது முதலாகிய எத்தனையோ தீங்குகள் அயலாருக்குச் செய்து வருகின்றார்கள். இவர்களுக்குக் கடவுளொருவரிருக்கிறார் என்பதை உணர்த்தும்பொருட்டு நாமெல்லாம் இப்போதே ஒன்று சேர்ந்து இவர்கள்மேல் கல்மழையாய் உடனே இறங்கி இவர்கள் 'சொந்தம்' 'சொந்தம்' என்று பாவித்து வருகிற வீடுகளையும் காடுகளையும் சம்பாத்தியங்களையும், நம்மை அவமதித்துச் சென்ற புகைவண்டியையும் ஒரு நிமிஷநேரத்தில் உடைத்துத் தகர்த்துவிடுவோமா? அல்லது நமது பந்துக்களெல்லாரையும் ஒன்றுசேர்த்து ஒரே மட்டாய்த் தரையிலிறங்கி மறுபடியும் ஜலரூபமெடுத்துப் பிரளய முண்டாகச்செய்து இத்துன்மார்க்கரின் பயிர்வகைகளை அழுகச்செய்து நாசமாக்கி அதன் மூலமாகப் பஞ்ச முண்டாக்குவோமா?" என்றது.

## செய்நன்றி யறியா மாந்தர்.

இது கேட்டிருந்த மற்றொரு மேகம் வெகு கோபங்கொண்டு "இந்தப் பாவிகளின் பாவச்செய்கைகளை நாம் பொறுத்திருக்க இருக்க, இவர்கள் அதிகமாகவே பாவம் செய்கிறார்கள். தற்புகழ்ச்சி, தன்னயம் பாராட்டும் குணம் இவைகள் அதிகமாக விர்த்தியாகின்றன. ஆகையால் பனிக்கட்டிக்கு இருப்பிடமான 'ஹிமயமலை' யுச்சியில் நாமெல்லாம் சென்று அங்கே பனிக்கட்டி மலையாய் உறைந்து திடீரென்று அம்மலையிலிருந்து அப்படியே பாறை பாறைகளாக வழுவி விழுந்து ஒரேமட்டாய் விந்தியமலைவரையிலும் மத்தியிலகப்பட்ட மனிதர், ஜந்துக்கள், வீடுகள் முதலிய எல்லாவற்றையும் பூமியோடு பூமியாய் அரைத்து அழித்து, அப்பால் விந்தியமலையிலிருக்கும் நமது பந்துக்களையுஞ் சேர்த்துக்கொண்டு மறுபடியும் நழுவி கன்னியாகுமரிவரையும் முன்போலவே பாழாக்கி விடுவோம். இப்படிச் செய்தால் தான் என் மனம் சாந்தப்படும்" என்றது.

## விவேக போதனை.

அப்போது மற்றொரு மேகம் "சீ, சீ, இது சரியல்ல: இப்படிச் செய்தால் கெட்டவர்களுடன் நல்லவர்களும மாண்டுபோவார்கள். கெட்டவர்கள் மட்டும் சில கப்பல்களில் ஏறி வடசமுத்திரத்துக்கு வருவராயின், அங்கிருக்கும் நமது பாட்டனுருக்குச் சொல்லி சமுத்திரத்தண்ணீரை உறைந்துபோகச் செய்தால் அந்தக் கப்பல்கள் எங்கும் அசைய வழியில்லாமல் அவைகளிலுள்ள ஜனங்களெல்லாம் உணவின்றி மாண்டு போவார்கள்" என்றது.

## "நிஷ்காம்மிய கர்மம் செய்வோம்"

இது கேட்டிருந்த மற்றொரு மேகம் "இதெல்லாம் என்ன சமாசாரம்? வேடிக்கையாய்ப் பேசி விளையாட்டாய்க் காலம்போக்க எண்ணியிருக்கின்றீர்களோ? நல்லது! நல்லது! உலகத்தோர் தன்னயம் பாராட்டினால் நாமும் அப்படியே யிருக்கவேண்டுமோ? ஒருவன் நமக்குக் கேடு செய்தால், நாமும் அவனுக்குக் கேடுசெய்யவேண்டுமோ? இதென்ன! மதியீனம். நம் எஜமானன் நமக்கிட்ட கட்டளையின்படி நாம் "நிஷ்காம்மிய கர்மம் செய்வோம்" என்றது.

அதற்கு மறுமொழியாக மற்றொரு மேகம்: "இதென்ன இப்படிச் சொல்லுகிறாய்? நான் தண்ணீராகும்போது இவ்விராஜதானியில் எல்லாப் பாகங்களிலுமுள்ள மனிதர் என்னை



ஆகாரமாகப் புசித்துவிடுகிறார்கள். என்னமோ தங்கள் ஜீவன் பிழைக்கவே அப்படிச் செய்கிறார்கள். அம்மட்டில் சரிதான். ஆனால், கடப்பை ஜில்லாவுக்கு சமீபத்தில் சில விடங்களில் இம்மனித பூதங்கள் என்னை விழுங்குவதன்றித் தீயினால் சுட்டுக் காய்ச்சுகிறார்கள்,* அப்போது எனக்கு சகிக்கக் கூடவில்லை. அதனால்தான் அவர்களைத் துன்பப்படுத்த வேண்டுமென்று சொன்னேன்" என்றது. அது கேட்டு முன் பேசிய மேகம் "நீ சொல்வது சரியல்ல. எப்படியென்றால், எல்லா மனிதரும் உன்னைச் சுடாமல் கடப்பை முதலிய சில இடங்களிலுள்ளவர்கள் மட்டும் உன்னை ஏன் சுடவேண்டும்? யோசித்துப்பார்! நீயோ மிகநல்லவன்; ஆனால் சகவாச தோஷத்தால் கெட்டுப் போகிறாய். நீ மட்டும் சுத்தமாயிருந்தால் உன்னைச் சுடுவார்களா? நீ காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரியும்போது வியாதிகொண்ட அநேக துன்மார்க்கருடன் சிநேகித்து அவர்களுடன் கலந்து செல்லுகிறாய். அதனால்தான் உன்னைச் சுடுகிறார்கள். உன்னைத் துன்பப்படுத்த வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமல்ல. ஆனால் உன்னுடன் கூடியிருக்கும் துன்மார்க்கரைக் கொன்று உன்னைச் சுத்தமாக்க வேண்டு மென்பதுவே அவர்களுடைய கருத்து. இதனால் உலகத்திலுள்ள மனிதரெல்லாம் மிகவும் நல்லவர்களென்றும், அவர்கள் செய்கையெல்லாம் நற்செய்கைகளென்றும், நல்லகாரணம் பற்றியே எல்லாக் செய்கைகளும் செய்வார்களென்றும், நான் சொல்லவில்லை. நீ யிப்போது சொல்லிக்கொண்ட முகாந்தரம் சரியானதல்லவென்றுதான் நான் சொல்ல வந்தேன்" என்றது.

## பரோபகாரமே பரமசிலாக்கியம்.

உடனே யெல்லா மேகங்களும் இப்போது பேசிய மேகத்தைப்பார்த்து "நீ சொல்வது சரிதான். ஆனால் எங்களை என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று கேட்டன. அந்த மேகம்: "நான் சொல்வதைக் கேளுங்கள். பலனையிச்சிக்காமலும் பிறர் குற்றம் நாடாமலும் நல்லவர் பொல்லாதவர் என்று பாராமலும், நன்மையே செய்யவேண்டு மென்பது நமக்கு எஜமான் இட்ட கட்டளை. அப்படியே ஒரு காரியம் செய்வோம். அதோ பாருங்கள். பயிர்வகைகளெல்லாம் தண்ணீரில்லாமல் வாடியிருக்கின்றன. கோடையின் வரட்சியால் கிணறுகளிலும் தகுந்த ஊற்று இல்லாமல், கவலையால் தண்ணீர் இறைப்பதை விட்டு கிருஷிகர் ஏற்றத்தில் சிறு பட்டைகளைக் கட்டி வேர்வை சொட்டப் பகல் முழுவதும் இறைத்தும் ஐந்தாறு பாத்திகளும் இன்னும் நனையவில்லை. புற்பூண்டுகளெல்லாம் தாய்முகங் காணாத பிள்ளைபோல் மழையை யெதிர்பார்த்திருக்கின்றன. பெரிய மரங்களும் வெயிலின் கொடூரத்தால் பட்டுப்போகின்றன வென்றால் புற்பூண்டுகள் உலர்ந்து போவதற்குச் சொல்லவும் வேண்டுமோ? ஆகையால், இவைகளுக்கேதாவது உபகாரம் செய்ய யோசிப்போம்!" என்றது.

## வான்மாரி - அமிருத வருஷம்.

உடனே மேகங்களெல்லாம் ஆகாயத்தில் பரவி தீக்ஷண்ணியமான சூரியகிரணங்களை மறைத்துப் பயிர்களுக்கும் புல்தரைகளுக்கும் குடைபிடித்தது போல் குளிர்ந்த நிழலைக்கொடுத்தன. இதனால் புற்பூண்டுகளும் பயிர்களும் வெகு நன்றியறிதலுடன் மேகங்களை ஏறெடுத்துப் பார்த்து புன்சிரிப்புக்கொண்டன. புஷ்பங்கள் சந்தோஷமாய் மலர்ந்தன. இதைப் பார்த்தவுடன் மேகங்களுக்கு அவைகளிடம் இரக்க முண்டாகி மழைத்துளிகளாக மாறி அவைகள் மேல் இறங்கின. சூரியன் தன் கொடுமையைக் காட்டி மேகத்தையும் மழையையும் சிதறச்செய்யப் பிரயாசைப்பட்டும் முடியாததால் கோபங்கொண்டு கர்ச்சித்து இடியுண்டாக்கினான். மழையோ அதற்கு அஞ்சவில்லை. நிலங்குளிர மழை பெய்தது. கிருஷிகர் 'இந்த ஈரம் உழப் போதும்' என்றனர்.

* இந்தப் பாகங்களில் நல்லதண்ணீர் கிடைப்பதில்லை யாதலால் விஷசுவரத்திற்குத்தப்பத் தண்ணீரை கொதிக்கக்காய்ச்சிக் குடிப்பது வழக்கம்.

தவளைகள் ஒன்று சேர்ந்து 'குறவை' யிட்டன. நீர்வாத்துக்கள் மழைத்தண்ணீரில் மூழ்கி மூழ்கி விளையாடிக்கொண்டிருந்தன. காக்கைகள் எல்லாம் தங்கள் தங்கள் சிறகுகளை உதறி உலர்த்திக்கொண்டு கா-காவென இங்கும் அங்கும் ஓடித்திரிந்தன. குளங்களிலிருந்து ஓடைகளில் எதிர்த்து ஏறிவரும் சிறு மீன்கள் ஓடைகளில் மழைத் தண்ணீர் குறைந்துபோக நீந்திப்போக முடியாமல் அங்கங்கே நின்று போயின; அவைகளைக் காக்கைகள் தம் இனத்தைக் கூவியழைத்து எல்லாம் பங்கிட்டுத் தின்பது வெகு விநோதமாயிருந்தது. மனிதர் புஞ்சைப் பயிர்கள் விதைக்கும் பொருட்டுக் கூட்டங்கூட்டமாய் மாடுகளை யோட்டிக்கொண்டு கலப்பைகளைச் சுமந்து சென்றார்கள். இப்படி எங்கே பார்த்தாலும் நிரம்பவும் சந்தோஷமுண்டாயிருந்தது.

நீரோட்டம் - வாய்க்கால்.

பூமியில்விழுந்த மழைத்துளிகளோவெனில்: அநேகம் ஒன்று சேர்ந்து சிறு சிறு ஊற்றுக்களாகி ஓடின. மண்ணின்மேல் உள்ள அழுக்கும் அசங்கியமும் கரைந்து சுத்தமாயிற்று; கல்லினுள் வசிக்கும் தேரைக்கு ஜீவன் வந்தது. சில ஊற்றுக்கள் மண்ணில் ஊறியும் கற்பிளவுகளில் இறங்கியும் கிணறுகளில் ஊற்றுக்கண்களுக்குச் சென்றன. பல ஊற்றுக்கள் ஒன்று சேர்ந்து சிறு ஓடையாயின. இவ்வோடையின் ஓரத்திலிருக்கும் செடி கொடிகள் செழுப்படைந்தன. ஓடையானது மரஞ்செடி யடர்ந்த சில திட்டுகளைச் சுற்றியோடி வருவதை நான் பார்க்கும்போது ஒரு வேளை அது மறைந்தும், ஒரு வேளை காணப்பட்டும் ஓடிவருவதால் அது 'கண்ணாமூச்சு' விளையாடுவதுபோ லிருந்தது. முன் தொட்டியில் அடைபட்டிருந்தபோது தண்ணீர் சொன்னது போல் புஷ்பங்கள் அவ்வோடையை முத்தமிட்டன. பக்ஷிகள் தங்கள் பேடுகளுடன் மறுநாட் காலையில் அவ்வோடைக்குச் சென்று சிறகுகளை யடித்துக்கொண்டு சந்தோஷமாய்க் குளித்தன. ஓடையும் இப்படி உல்லாசமாய் நடந்துவரும்போது, சமீபத்தில் மற்றொரு ஓடை வருவதைக் கண்டு "தற்காலத்து ஜனங்கள் ஒற்றுமையினாலுண்டாகும் பயனை அறியவில்லை: நாம் நம்மினத்துடன் சேர்ந்திருந்தோமானால் நமக்கு அதிக பலம் உண்டாகும்" என்று நினைத்து அதனுடன் சேர்ந்து வாய்க்கால் ஆயிற்று. அதில் அநேக ஜனங்கள் ஸ்நானம்பண்ணி தாகத்துக்குத் தண்ணீர் எடுத்துப்போக சிலர் அதில் துள்ளி விளையாடும் மீன்களை வலை வீசிப் பிடித்துப் போவதையும் பார்த்தேன்.

நீர்நிலை - குளம்.

சற்று தூரம் இந்தக்கால்வாய் சென்றவுடன் அங்கே ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அதில் வாய்க்கால் சென்று நிறைக்க அது குளம் ஆயிற்று. கோடைகாலத்துக்கு தாகத்துக்கு உபயோகிக்கும் இத்தண்ணீரில் அநேக ஜனங்கள் 'கால்கழுவி, அழுக்கு வஸ்திரங்களைத் துவைத்து ஸ்நானம்பண்ணி அசங்கியப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அப்போது அந்தத் தண்ணீர் "ஐயோ! நான் சந்தோஷமாகச் சுயேச்சையாய்க் காலங்கழிப்பதை விட்டு, இம்மனிதருக்குக் கோடைகாலத்தில் உபயோகப்படும் பொருட்டு இவ்விடத்தில் அடைபட்டிருப்பதை உணராமல், இவர்கள இப்படியென்னை அசங்கியப்படுத்துகிறார்களே! வரவர இவ்விந்துக்கள் தங்கள் 'மனுதர்மசாஸ்திரத்'தையும் மறந்துபோனார்களோ! நான் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது ஒருவேளை என்னை அசுத்தப்படுத்தினாலும் போகிறதென்னலாம். நான் ஓரிடத்தில் நிலையடைந்தபின் என் மேல் துப்புவதும், அழுக்கு வஸ்திரங்களைப் போடுவதும் மெத்த அநீதியன்றோ? இவர்களுக்கு எப்போதுதான் புத்தி வருமோ, நாராயணா!!' என்று மிக வருத்தத்துடன் கிலேசப்பட்டுக் கொண்டிருக்கையில், சில பள்ளர் வந்து குளத்தின் மடையைத் திறந்துவிடவே "நன்று, நன்று; பயிர்களுக்கு மத்தியில் சந்தோஷமாய்ப் பாய்ந்து விளையாடலாம்" என்று சொல்லிக்கொண்டு, தண்ணீர் ஓடிற்று.



நீரோட்டத்தாலாகும் இதர வேலைகள்.

இப்படி வயல்களுக்கு ஊடேபோன ஓடை வயல்களில் பாய்ந்தபிற்பாடு, முன் தான் விட்டுப்பிரிந்த வாய்க்கால், அருகில்வர, சம்பத்துடையவர் தம்மினத்தாரில் வறுமை யடைந்திருப்பவர்களைக் கண்ணெடுத்தும் பாராமல் தள்ளிவிடுவதுபோலல்லாமல், அது தன்னுடன் சேர்த்துக்கொண்டது. கொஞ்ச நேரத்தில் வாய்க்கால் சற்று தூரம் சென்றவுடன், அங்கு ஓர் அணை கட்டியிருக்கக்கண்டு, அது நூல்நூற்கும் யந்திரத்தின் சக்கரத்தைச் சுற்றுவதற்காகச் செய்திருந்த தந்திரமெனத் தெரிந்து, அந்தச் சக்கரத்தின்மேல் பாய்ந்து தள்ளிச் சற்று இயந்திரத்தை ஓட்டுவித்து அநேகமாயிரம் ஜனங்கள் செய்யும் வேலையைத் தானே செய்துமுடித்து அப்பால் அவ்வழியே சில நாள் போய்க்கொண்டிருக்கையில் இன்னொரு கால்வாயைக் கண்டது. இரண்டு கால்வாய்களும் சிநேகமாய்ச் சேர்ந்து நதியாகி, "இப்போது மனிதருக்கேதாவது உபகாரம் செய்யலாமா" வென யோசித்தது. அங்கே நானாவிதமான சரக்குகளை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குக்கொண்டு போவதற்காகச் செய்யப்பட்ட பெரிய கப்பல்கள் பாய்விரித்து நிற்பதைப் பார்த்து, அக்கப்பல்களைச் சுமந்து சென்று திரும்பவும் அவைகள் இருப்பிடம் சேர்த்தபின், அவ்வழியாய்ப் போய்க்கொண்டே யிருந்தது. ஒருநாள் சற்று கவலையீனமாய்க் கொஞ்சதூரம் போகவே வழிதெரியாமல் தடுமாறி சமுத்திரத்தில் விழுந்து விட்டது.

நதியுண்ட கடலில் நீருண்ட மேகம்.

ஐயோ! பாவம்! ஜனங்களுக்கு இவ்வளவு பிரயோஜனமாயிருந்த நதியின் கெதி இப்படியாயிற்றே யென்னும் துக்கத்துடன் நான் என் வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அதன்பின் சில நாட்கழித்துப் போய்ப் பார்த்தும், சமுத்திரத்தில் விழுந்தநதி திரும்பக் கரையேறப் பார்க்கவில்லை. ஆனால் அங்கு நின்றவர்களில் ஒருவர் "சூரியன் வித்தை செய்வதில் கெட்டிக்காரன்; அவன் சமுத்திரத்தில் விழுந்த நதியைப் புயல்காற்றுடன் மேகங்களிலேற்றி மலைகளுக்குக் கொண்டுபோகிறான்" என்றார். "அப்படியானால் என்கண்ணுக்குத் தெரியவில்லையே." என்று சொன்னேன். அதற்கு அவர் "நீ உன் வீட்டில் ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் வார்த்து சூரியனுக்கு முன்பாக வைத்திரு; சிலநாள் சென்றபின் சூரியன் செய்யும் வித்தை உனக்குத் தெரியும்" என்று சொன்னார். அவர் சொன்னபடியே வைத்தேன். ஒரு வாரத்தில் பாத்திரத்தில் தண்ணீரே இல்லை. அது எப்படி காணாமற் போயிற்றென்றும் எனக்குத் தெரியவில்லை.

சிநேகிதர்களே! நீங்கள் சொல்லமாட்டீர்களா?

உங்கள் அன்புள்ள,
பட்டண்ணா.

---

## CIVILIZATION AND SOCIAL SERVICE.

### யதார்த்த நாகரிகம்: சமஷ்டி சேவை.

வாஸ்தவமான நாகரிகம் காயபலம், புத்திபலம், ஆத்மபலம் அதிகரித்தலிலும், சரீரசுகம் ஹிருதயசுகம், புத்திசுகம் அடைவதிலும், இவைகட்கு வேண்டிய புத்தி அபிவிருத்தியும் சாஸ்திர அபிவிருத்தியும் கைத்தொழில்களும் வியாபார முறைகளும் விஸ்தாரமாயுண்டாவதிலும், சமுதாய ஏற்பாடுகள் பரிஷ்காரப்பட்டு ஜனங்களுடைய முயற்சிகள் வீண்வழியிற்செல்லாமல் சுகம் விளைவிக்கத்தக்கதும் துக்கம் நிவிர்த்திக்கத் தக்கதுமான வழிகளிற் செல்வதிலும், ஜனங்களுடைய ஆவசியங்கட்கும் உபயோகங்கட்கும் அனுசரணையாய்ப்

பிரகிருதியிலுள்ள பலவகைசக்திகளை வசப்படுத்துவதிலும், அவைகளை ஒரு முகப்படுத்தி பிரவிருத்திக்கும் பொருட்டு யந்திரங்கள் சிருஷ்டிப்பதிலும் அடங்கியிருக்கிறது; அதாவது சுருக்கிச்சொல்லுமிடத்து வாஸ்தவமான நாகரிகமானது அதிகமான ஜனங்கட்கு அதிக க்ஷேமத்தை யுண்டுபண்ணுவதில் நிற்கிறது. இது சமஷ்டிசேவை சாதனத்தாலன்றிச் சித்திக்காது.

யதார்த்த நாகரிகம்—உத்தம சரீரம்பெறல், காயபலம் வளர்த்தல், சரீர சம்ரக்ஷணம் செய்தல், உத்தமசந்ததி ஜனிப்பித்தல், ஊருக்குழைத்தல், அதாவது, பரோபகார சிந்தையோடு பாடுபட்டுழைத்தல்.

சமுதாய நிலைமையடைந்த ஜனங்கள் நாகரிகமென்ற பெயர் பெறவேண்டுமானால் தத்தம் சரீரத்தை ஒழுக்க விசேஷத்தால் உத்தமமாகச் செய்துகொள்ளு முறைகளும், காயபலம் வளர்க்கும் முறைகளும், கர்ப்பத்தில் ஒட்டிய வியாதி நிவர்த்தித்து தானும் வியாதி வராமற்றடுத்து, வந்த வியாதியைப் போக்கும்படியான முறைகளும், சரீரக்ஷயமும் துர்பலமும் பல்வகை உத்பாத அவலக்ஷணங்களும் இல்லாத சுபலக்ஷண சுகுணம்பொருந்திய சந்ததிகள் உண்டாகும் விவாகமுறைகளும் சம்பந்த முறைகளும் பரிஷ்காரமாய்த் தெரிந்திருக்கவேண்டும். அவைகட்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

## நம்மவர் மந்தகதி.

விவேக சிந்தாமணியில் ஹிந்துக்களின் க்ஷய கதிகளைப்பற்றி எழுதியிருப்பதிலிருந்து இப்பேர்ப்பட்ட முறைகள் எம்மட்டில் மங்கிப்போய் ஜனங்கள் கெட்டுப்போகிறார்களென்றும் அநாகரிக ஸ்திதிக்கு வருகிறார்களென்றும் காணலாம். தற்கால நாகரிகம் கொண்டாடும் ஜனங்கள் முற்காலத்தில் நமது ரிஷீசுவரர்கள், சித்தர்கள் எழுதி வைத்திருக்கும் வைத்திய கிரந்தங்களைக் காட்டிலும் புதிதாக என்ன புஸ்தகம் எழுதியிருக்கிறார்கள்? ஆபரணங்கள் நாகரிகச் சின்னமாக மதித்துச் சென்ற 30 வருஷத்திற்குள் 300 கோடி ரூபா ஆபரணத்தில் அழித்திருக்கும் தற்கால நாகரிக மகான்கள் முன் கண்டு பிடித்திருக்கும் மூன்று லக்ஷம் ஔஷதிகளைக் காட்டிலும் ஒரு மூலிகையாவது புதிதாய்க் கண்டு பிடித்திருக்கிறார்களா? மேற்கண்ட மூன்றுலக்ஷம் மூலிகைகள் இன்னவை யென்றாவது அறிந்திருக்கிறார்களா? அங்கிலேயர் முதலிய வெள்ளைக்காரர் அபிவிருத்தியாகி வருவதாய்ச் சொல்லலாம். அதனால் ஹிந்துக்களாய நமக்கென்ன பிரயோஜனம்? பின்னலான வியாதிகட்கு அங்கிலேய வைத்தியம் தலைகுனிவதேயன்றி அவைகளை வெற்றிபெறக் காணோமே. கொல்லைகளிலும் வயல்களிலும் தோட்டங்களிலும் காடுகளிலும் உண்டாகும் புற்பூண்டுகளைச் செலவின்றி சம்பாதித்து எளிதில் எல்லோரும் தெரிந்துகொண்டு சுகமாய் நிவர்த்தி செய்யும்படியான வழிகளை மறந்து கேவலம் செயற்கைமுறையாகவும் அதிகச் செலவுள்ளதும் நமக்கு ஒத்துக்கொள்ளாததுமான அந்நியமுறைகளைக் கைக்கொள்வதால் நமக்கென்னலாபம்? வருஷாவருஷம் வாரிக்கொண்டுபோகும் வாந்திபேதி, ஜ்வரம், அம்மை முதலிய கொள்ளைநோய்க்கு என்னமருந்து புதிதாகவும் உடன்கேட்கத் தக்கதாகவும் கண்டு பிடித்திருக்கிறார்கள்?

## யதார்த்த நாகரிகம் : புத்தியபிவிருத்தி.

தெரிவாக ஊர்வன பறப்பன நடப்பன செயற் கொண்டிருப்பனவாகிய ஜீவஜடங்களில் மனுஷிய ராசிக்கு விசேஷத்துவம் புத்தியினால்தான். அவ்வாறு ஜீவகோடிகளில் விசேஷத்துவத்திற்கு காரணமாகி யிருக்கிற புத்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகம் அதிகம். புத்தி அபிவிர்த்திக்குத் தகுந்தபடி பலதேசத்துப் பலவகைஜனங்கள் பற்பல நாகரிகப்படியிலிருப்பார்கள். புத்திவிசாலத்தால் நாகரிகம் மதிக்கப்படவேண்டுமே யல்லாமல், ஆபரணப் பெருக்கின் மேலாவது அவிவேக சமூகத்தாலாவது நாகரிகம் நிதானப்படுத்தப்படுவதாயிருந்தால், அமெரிக்கா ஆபிரிக்கா முதலிய கண்டங்களிலுள்ள காட்டு ஜனங்கள் எவ்வளவோ மேன்மையடைந்திருக்கும் வெள்ளைக்காரரைப் பார்க்கிலும் நாகரிகமுள்ளவர்களென்றே சொல்லவேண்டிவரும். வஸ்திரம் செய்ய அறிவில்லாமல் இலைகளையும் கிளைகளையும் தோல்களையும் அணிந்து, மீன்களையும் பக்ஷிகளையும் கொன்று சுடாமல் தின்று, மரத்தடியில் தங்கி, கொங்காணிபோல் மாற்றக்கூடிய குடிசைகளில் பதுங்கி, மேலெல்லாம் எலும்பும் கல்லும் உலோகங்களும் அணிந்து, தலைகளில் இறகுகள் சொருகி, கிலுகிலுக்கும் மணிகள் சலங்கைகள் இடுப்பிலும் காலிலும் அணிந்து, உடலெல்லாம் சாயப்பூச்சுப் பூசி தீர்க்கவிசாரமில்லாத காட்டுஜனங்களை அங்கிலேயர் முதலிய வெள்ளைக்காரர், இந்துக்கள், இவர்களைப் பார்க்கிலும் எப்படி நாகரிக முள்ளவர்களென்று கூறுகிறது?

புத்தி விருத்தியடைய வேண்டுமானால் சாஸ்திரம் நாளுக்கு நாள்* சாகோபசாகையாய் விரிந்து மேலோங்கி ஆகாயமண்டலம் வரை முட்டவேண்டும். சாஸ்திரரூபம் புத்தி அபிவிர்த்தி புலப்படவேண்டு மேயல்லாமல் மற்றெவ்விதத்தில் புலப்பட்டாலும் குணகரமாகவும் தீர்க்ககாலம் நிற்கக்கூடியதாகவும் இருக்காது. தர்க்கசாஸ்திரம், அங்ககணிதம் பீஜகணிதம், க்ஷேத்திரவிவகாரம் முதலிய கணிதசாஸ்திரங்கள்; பூகோள சாஸ்திரங்கள்; பிரகிருதிசாஸ்திரங்கள்; வான சாஸ்திரங்கள், எந்திரசாஸ்திரங்கள்; அக்னி, ஜலம், வாய்வு; ஜோதிஸ் இவைகளின் சாஸ்திரங்கள்; தனி பதார்த்தங்கள் சேர்க்கைப்பதார்த்தங்களாகவும், சேர்க்கைப்பதார்த்தங்கள் தனிப்பதார்த்தங்களாகவும் செய்யக்கூடிய முறைமை விளக்கும் ரசாயனசாஸ்திரங்கள்; சரீரசாஸ்திரங்கள்; வைத்திய சாஸ்திரங்கள்; ஸஸ்ய சாஸ்திரங்கள்; ஜீவசாஸ்திரங்கள்; தத்வசாஸ்திரங்கள்; தர்ம்ம சாஸ்திரங்கள் நாளுக்குநாள் விஷயம் வெளிப்படுவதுக்கேற்ப * சாகோபசாகையாய் விரிந்து வியாபகமாகவேண்டும். அதுபோலவே பல

ஆவசியகங்கட்குத் தகுந்தபடி பலபூதாம்சங்களைக் கொண்டு நடத்தக் கூடிய பல எந்திரங்கள் நிர்மிக்கப்படவேண்டும்.

## யதார்த்த நாகரிகம்: ஆத்மபரிசுத்தி.

எவ்வகைப் பயிற்சியும் எவ்வகை உழைப்பும், மனோசுத்தியும் வாக்குசுத்தியும் கிரியாசுத்தியும் அடைவதற்கேயாகையால், எவ்வகை நிர்ப்பந்தத்திலும் எவ்வகைக் கஷ்டத்திலும் மனோவாக்குக்காயங்களைச் சுத்தமாய் வைத்திருக்கும் திடசித்தமும் திடப்பிரவிருத்தியும் நிலைப்படவேண்டும். இவ்வாறு நிலைப்படுவதுதான் நாகரிகக் கொடுமுடி. கர்மபாசத்தில் அகப்பட்டு வாக்கு மனம் செய்கை இவைகள் வெவ்வேறாகப் போகவிட்டு ஆத்மரக்ஷை தேடாமல் ஆபரணாலங்கிருத முதலிய அற்ப சுகங்களை நாடி வாணாள் கழிப்பதைப்பார்க்கிலும் ஆத்மரக்ஷை தேடுவது பூஜிதமென்பதற்குச் சந்தேகமில்லை. பதவி வித்தியாசத்தால் கர்ம்ம வித்தியாசம் புலப்படுவதால் தீர்க்ககாலத்தில் பலிதப்படக்கூடிய ஆத்மசுத்தி தேடாமல் தீர்க்க காலத்தில் துன்பம் விளைக்கக்கூடிய காரியங்களையும் அதர்மங்களையும் ஆபரணாலங்கிருத முதலிய அற்ப மோக நிமித்தம் செய்வது கூடாது. வரப்போகிற காலத்தின் அள

* (சாகை = Branch of a tree = மரக்கிளை; உபசாகை = Sub-branch = உபகிளை) கொம்பும் கிளையுமாய்.

வை உத்தேசித்து ஒரு ஜீவகாலம் ஒரு விநாடியாகக்கூட நினைப்பதற்கு யோக்கியதை யில்லாதபடியால் இந்த அற்பகாலத்தைக் கருதி வருங்காலத்தை உபேக்ஷிப்பது கடுகைக்கருதி பிரம்மாண்டத்தை யிழப்பதொக்கும். ஆத்ம சுத்தி ஆத்மரக்ஷை இவைகட்கு அனுசரணையாயுள்ள லௌகீகப் பிரவிருத்திகள் நடக்க வேண்டுமே யல்லாமல் விருத்தமான பிரவிருத்திகள் நடக்கக் கூடாவாம்.

### யதார்த்த நாகரிகம்: சரீரசுகம்.

பசியால் வருந்துவதற்கும் நாகரிகத்திற்கும் சம்பந்தமில்லை. ஆபரணம் நாகரிகமென்னும் மகா சித்தாந்தத்தை அனுசரித்து நாகரிகங் கொண்டாடும் நாம் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு பசியால் கஷ்டப்படுவோமாகில் நம்மை யாராவது நாகரிகமாய்பட்டினி கிடக்கிறதாய்ச் சொல்லுவார்களோ? மேற்கண்ட சித்தாந்தப்படி நாகரிகமாய் க்ஷுத்பாதை யடைவதைப் பார்க்கிலும் அநாகரிகமாய்ப் பசியாற உண்பதல்லவா சுகம்? உள்ள முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு சுயங்கிருதானர்த்தம் வருத்திக் கொள்ளாமல் நிர்வாகமின்றி, எவ்வளவு பாடுபடத் தயாராக இருந்தாலும் வழியில்லாமல் கஷ்டப்படுபவர்களை அநாகரிகமுள்ளவரென்று சொல்லத்தகாது. நாகரிகமாக ஆபரணத்தில் முதலிட்டுவரும் நாம் யாதொரு கஷ்டப்படாமல் மூன்றுவேளையும் சாப்பிட்டு சுகமடையக்கூடிய வழிகளிருக்க, அவ்வழிகளில் முதலிட்டு சுகமடையாமல் அரைப்பட்டினி முக்காற்பட்டினி யாகக் காலத்தைத் தள்ளுவோமானால் நம்மை எப்படி நாகரிகமுள்ளவரென்று சொல்லுகிறது.

நாகரிகம் மூன்றுவேளை பசியாற்றுவதுமல்லாமல் சுகபோஜனமுமடைவதாம். நாகரீகமற்ற காட்டுஜனங்களைப்போல வெந்ததும் வேகாததுமாய் ஓரிரண்டு ரசத்தோடு சாப்பிடுவதைப் பார்க்கிலும், ஷட்ரசங்களோடு போசனத் திரவியங்கள் கலந்ததாக விதத்திற்கு விதஞ் செய்து சாப்பிடுவதே நாகரிகமாம். மலையாளதேசத்தில் உணவு பதார்த்தங்கள் எவ்வளவோ சுருக்கமாகவும் அவைகளைச் செய்யும் விதமும் எவ்வளவோ தாழ்ந்தபடியாகவு மிருக்கிறது. அவ்விடத்தில் பக்ஷணமாகச் செய்ய வேண்டுமானால் தோசை, சேவை, முறுக்கு, தேங்குழல், சீடை, வடை இவைகள் செய்யத்தெரியுமே யல்லாமல் விசேஷமாக வொன்றும் தெரியாது. அடுத்தாற்போல மதுரை, திருச்சினாபள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்களில் பக்ஷணங்கள் எவ்வளவோ வகை செய்கிறார்கள். இந்த மலையாளத்தை உத்தேசித்து மேற்படி ஜில்லாக்கள் வெகு நாகரிகமென்றே சொல்லவேண்டும். ஷட்ரசங்களிலும் புதிது புதிதாகவும் மனோகரமாகவும் எவ்வளவுக்கெவ்வளவு விதம்விதமாய்ச் செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாகரிகம் அதிகம் தற்காலத்தில் ஆபரண ஆசையால் போசன சுகம் கெட்டிருப்பதைப்பற்றியும் பக்குவ முறை கெட்டிருப்பதைப்பற்றியும் இவ்விடம் சூசிக்கலாமேயன்றி விஸ்தரிக்க அவகாசமில்லை. தற்காலத்தில் பக்ஷணவகைகள்புதிதாகச் செய்கிறோமென்ற பெருமை சில ஜில்லாக்களில் ஜனங்கள் அடைகிறார்கள். இது நூறுவருஷத்திற்குமுன் மகமமதிய அரசாட்சியின் நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு கொள்ளைக்காரருடைய பயத்தின்மேல் சமைத்துவைத்த அடிசிலைச் சாப்பிடலாமென்ற நிச்சயங்கூட இல்லாமல் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு கள்ளர் பயத்திற்காகச் சமைத்த ஆகாரத்தைப்பானையோடு பூமியிற்றோண்டிப் புதைத்து பந்தோபஸ்து செய்துவந்தகாலத்தை உத்தேசித்து நாகரிகமென்று சொல்லலாம். ஆனால் தற்காலத்தில் புதிதாகச் செய்துவரும் பக்ஷணங்களெல்லாம் வெகுகாலத்திற்குமுன் ஏற்பட்ட நளபாகம், வீமபாகம் என்ற பக்குவ



சாஸ்திரங்களில் உட்பட்டிருக்கின்றன. அச்சாஸ்திரங்களிலுள்ள முறைகள் பூரணமாய் இன்னு மனுஷ்டானத்திற்கு வரவில்லை. அவைகளைக்கடந்து இதுவரை புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்கவுமில்லை. அம்முறைகளின்படி நடக்கவேண்டுமானால் திரவியபுஷ்டிவேண்டும். காற்படி அரிசிக்குத் தகுந்த "கேசரீபாத்" செய்யவேண்டுமானால் குறைந்தது ஐந்து ரூபாய் செல்லும். அப்படியிருக்க நளபாகம் பீமபாகம் என்னும் சாஸ்திரங்களேற்பட்ட நம்முன்னோர்கள் காலத்தை யுத்தேசித்து தற்காலம் அநாகரிகமென்றே சொல்லவேண்டும்.

நாகரிகம் சுகபோஜனம் அருந்துவதன்றிச் சுகந்தாதிகள் அனுபவிப்பதும் சரீரசுகமாகையால் அதுவும் ஓர்வகை நாகரிகம்தான். வராகசம்மிதையில் புஷ்யஸ்நானம் வாசனைத்திரவியம் இவைகளைப் பற்றிய அத்தியாயங்களைப் பார்த்தோமானால் நம்முடைய முன்னோர்கள் சுகந்தாதிமூலமாய் எவ்வளவு சரீர சுகமடைந்திருக்கிறார்களென்று விளங்கும். தற்காலத்தில் ஆபரணப்பெருமை யிருந்தாலும் புதிதாக ஓர் முறையாவது கண்டுபிடித்ததாக எவனாவது விரல் மடக்குவானா? மதுரை முதலிய சில ஜில்லாக்களில் புஷ்பம் லேபனம் முதலிய சுகந்தாதி யனுபவங்கள் ஜனங்களடைவது வாஸ்தவமே. ஆனால் பசிப்பிணிக்குட்பட்டு சுகபோஜன மில்லாமல் நாக்குச்செத்து சுகந்தாதிகள் அனுபவிப்பது நாகரிகமன்று.

நல்ல ஆடையுடுத்தல் சரீரசுகமாகையால் நல்ல ஆடைநெய்யக்கூடிய நெசவுதொழில்கள் பலமாய் ஏற்பட்டாலல்லாமல் நாகரிகமென்று சொல்லுவதற்கிடமில்லை. ஐம்பது வருஷத்திற்கு முந்தி ஜனங்கள் உடுத்திவந்த வஸ்திரங்களைப்பார்க்கிலும் இப்போது ஜனங்கள் உடுத்திவரும் வஸ்திரங்கள் நாகரீகந்தான். ஆனால் முன்னோர்கள் செய்துவைத்த கருவிகளைக் கொண்டு தற்காலத்தில் யாதொன்றும் புதிதாய்க் கண்டுபிடிக்காமல், அங்கிலேயர் முதலிய அந்நியதேசத்தார் புதிதாய்க் கண்டுபிடித்த எந்திரங்கள் மூலம் நூற்றுவரும் சுகமான நூல்களை விலைக்கு வாங்கி வஸ்திரங்கள் நெய்கிறோமேயல்லாமல் நாமாகச் செய்வதொன்றில்லை. ஆபரணத்தில் முதலிட்டு நாகரீகம் கொண்டாடும் நாம் அன்னிய தேசத்தாரால் நம்முடைய நெசவுதொழில் கீழ்மாண்டு போகும்படி வந்திருக்கும் நிர்ப்பந்தத்திற்குப் பரிகாரமாக என்ன ஏற்பாடு செய்திருக்கிறோம்?

சுத்த ஆடை சரீரசுகமாகையால் அது நம்முடைய நெசவுகாரன் மூலங்கிடைத்தாலென்ன அன்னிய தேசத்தார் மூலங்கிடைத்தாலென்ன வென்று கேட்கக்கூடும். இது இந்துதேசம் உத்தேசித்து கேட்கக்கூடிய சரியான கேள்வியல்ல. வஸ்திரங்களுக்கு வேண்டிய பருத்திமுதலிய சரக்குகள் உற்பத்தியாகாததும் அப்படி உற்பத்தி யாகப்பட்ட தேசங்களிலிருந்து விலைக்குவாங்கி நெசவுதொழில் நடத்துவதால் நஷ்டம் வரத்தக்கதுமான சீமைகளில் அன்னியதேசங்களிலிருந்து வஸ்திரங்கள் வருத்துவது அநாகரிகமன்று. ஆனால் நம்முடைய தேசத்தவர்களுக்கு வேண்டிய முக்கியமான சரக்குகள் நம்முடைய தேசத்திலுற்பத்தியாக அவையெல்லாம் அன்னியதேசத்திற்கனுப்பி அவர்களால் நெய்து வந்த வஸ்திரங்களைக் கிரகிப்பதாயிருந்தால், ஷட்ரசங்களோடு எல்லாவிதத்திலும் சுகபோஜனமடையக்கூடிய பதார்த்தங்கள் புஷ்டியாக வரும்படியிருந்தும் அவ்வாறு செய்து சாப்பிடச் சக்தியின்றி அன்னியதேசங்களுக்கு பதார்த்தங்களை அனுப்பி பக்ஷணங்களாகச் செய்து வருத்தி சாப்பிடுவதற்கு சமமாகும். 7,000 மைல் தூரத்திலிருக்கும் நம்முடைய தேசத்திலிருந்தும், 4,000 மைலுக்

கப்பாலிருக்கும் அமேரிக்கா கண்டத்திலிருந்தும் பஞ்சுவருத்தி எந்திரங்களால் நூலாகவும் வஸ்திரங்களாகவும் சரக்குசெய்து நம்முடைய இந்துதேசம் முழுமையும் பரப்பி திரவியஞ் சம்பாதிக்கும் அங்கிலேயர் நாகரிகமுள்ளவர்களா? நாம் நாகரீகமுள்ளவர்களா?

பூமியின் சுற்றளவு 25,000 மைல். இவ்வளவு சுற்றளவுள்ள பூமிமுழுவதும் மாஞ்சஸ்டர் பட்டணத்தில் ஒருநாள் நெசவாகிற வஸ்திரங்கொண்டு மூடிவிடலாமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு விஸ்தாரமாக ஒருநாளில் செய்துவருவது நாகரிகமா? அல்லது மூன்றுநாளைக்கு 18 முழம் நெய்யும் நம் சுதேசிகளின் முறை நாகரிகமா? பருத்திவிளைவில்லாத அங்கிலேயர் பருத்திவிளைவுள்ள நம்மை நெசவுத்தொழில் முயற்சியிலும் ஜெயித்திருப்பதை உத்தேசித்து நாம் அவமானமடைய வேண்டுமேயல்லாமல் நாகரிகமென்று பெருமையடைவதற் கிடமில்லை. அந்த அவமானத்தை நிவர்த்திக்கும் சக்தி நம்மிடத்திலிருக்கும்போது அவ்வாறு நிவர்த்தி தேடிக்கொள்ளாமற் முதலெல்லாம் ஆபரணத்திலிட்டு அவமானத்திலடங்கியிருப்பது அவமானத்திலும் அவமானம்.

சங்கீதம் ஓர் சரீரசுகம்.

சங்கீதம் தற்காலத்தில் வெகுபேர் பழகிவந்தாலும் அதின்சுகம் நமக்கில்லாமற் போய்விட்டது. மனோபாவங்கள் அனுபோகரீதிக்குப் புஷ்டிவரும்படி சமயம், சந்தர்ப்பம், தாரதாரம் இவைகட்குத் தகுந்தமாதிரியாய் வீண் ஆகோஷமும் கோணங்கித்தனமும் இல்லாமல் சாஸ்திரங்களில் லக்ஷணம் கூறிய வண்ணம் முற்காலத்தில் பாடிவந்தார்கள். அதில் சுகம் இருந்தது. தற்காலத்தில் வேகடைசுபாவம் அதிகரித்திருப்பதற் கொப்பாய் சங்கீதமும் வேகடைப்பட்டுப் போய்விட்டது. மலையாளத்தில் இராமாயணத்திற்குப் புதுமெட்டு அமைத்திருப்பதில் அநேகம் ஜாவளிமெட்டிலும் இந்துஸ்தானி டப்பா மெட்டிலும் இன்னும் வேகடையாயுள்ள நாடோடியாயிருக்கும் பலவகை மெட்டிலும் பாணி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஜாவளியென்பது விடாள் சுபாவத்தைக்குறிக்கவந்த மெட்டு, தர்மபாசத்தாற் கட்டுண்டு மாதாபிதா வாக்குப் பரிபாலனம் பண்ணும்பொருட்டு அரசு துறந்து சுகந்துறந்து நாடுதுறந்து மரவுரியுடுத்தி தவவேடத்துடன் காட்டில் 14 வருஷகாலம் தள்ளி, அரக்கர் மூலம் துன்பத்துக்குட்பட்டு போர்புரிந்து முடிவில் வெற்றியடைந்து மகாபுருஷத்துவமாக வாளுள்செலுத்திய ராமகதைக்கும் ஜாவளிக்கும் சம்பந்தம் இருக்காது. விநயம், துக்கம், பரிதாபம், வியாகுலம், யுத்தக்குழப்பம், அதன்பின்புள்ள சந்தோஷம், வைராக்கியம், பக்தி, சிரத்தை இவைகட்குத் தகுந்த மெட்டுக்கள்தான் இணக்கமாயிருக்கக்கூடியன. அப்படியிருக்க இந்துக்கள் சுபாவமேயல்லாமல் மகம்மதிய மெட்டுக்களால் இந்துக்கள் உணர்வை எங்ஙனம் விளக்குகிறது. ஒருவேளை இது சாத்தியமென்று வந்தாலும் ராகமெட்டு சமயோசிதமாயிருக்கவேண்டும். லக்ஷ்மணர் யுத்தத்தில் மூர்ச்சைபோட்டு விழுந்தவுடன் ஸ்ரீராமருக்கு விசனமுண்டாகி லக்ஷ்மணரை மார்பில் சார்த்திப் புலம்பும்போது 'முத்துமாராக்குலக்கு' என்னும் சக்கிலிச்சிப் பாட்டிற்பாடுவது சமயோசிதமா? அப்படியிருந்தும் அம்மெட்டிற்குள் புதுமெட்டமைந்திருக்கிறது. ரவையுதிர்த்துக் கொட்டவேண்டுமென்ற தப்பிதமான சித்தாந்தத்தின்மேல் ரம்பம்கொண்டு அறுத்துப் பொடி உதிர்த்தாற்போல் கரகரவென்று சத்தம் எழுப்பி சன்னமான தொண்டையிலிருந்ததைத் திடீரென்று மலைபோல் தடித்த தொண்டையிலாக்கிக் கீச்சென விருந்தது திடீ



ரென்று மடத்தவளை கூப்பிட்டாற்போல் விரிந்த தொண்டையில் ஆழச்செய்து மகாவிகாரமாகத் தற்காலத்திற் பாடுகிறார்கள். இவ்வாறு பாடுபவர்கள் முக்கியமாய் புது நாகரிகம் கொண்டாடுபவர்கள் தான். அதாவது, வைரக்கடுக்கன் காதிலிட்டு மோதிரங்கள் அணிந்து, தங்க அரைஞாண்மாட்டி கமான் குடுமிவைத்துக்கொண்டு சிமிட்டாப்பிடுங்கின நெற்றி சகிதம் அருகுமீசை வைத்துக்கொண்டு மூலைத்தார்பாய்ச்சி வேஷ்டி யுடுத்தி சந்தனப்பொட்டின்மேல் குங்குமப்பொட்டும் அதற்குக்கீழ் விபூதி சாந்துப்பொட்டுமாகத் திரியும் வாலிபர்கள் தான். சரீரப் பிரயாசையின்றி பிரயாணஞ் செய்வது சரீரசுகமாகையால் ரெயில்வண்டி முதலியவை நிர்மாணிப்பது நாகரிகந்தான்.

யதார்த்த நாகரிகம்: இருதயசுகம்.

இருதயசுகம் முக்கியமாய்க் கவிதையின் மூலந்தான் அடையவேண்டியது. தற்காலத்தில் ஆபரணாலங்காரங்கொண்டாடும் வாலிபர்கள் எந்தபாஷையில் கவிதா சுகமடைகிறார்கள்? எந்தபாஷையில் கவிதையென்று சொல்லும்படியான கவிதை யுண்டாக்கி இருக்கிறார்கள்? ஒருபாஷையிலுமில்லை. அருட்பாவென்னும் தேனை வாசித்துப் புகட்டும்படி நான் பலபேரிடம் சிரமப்பட்டும் பத்துப் பாடல்கள் க்ஷமையோடு கேட்கப்பட்டவர்கள் இல்லாமல் விசனப்பட்டிருக்கிறேன். வயிற்று சுகத்தைப் பார்க்கிலும் இருதயசுகம் மேலான பதவியில் உள்ளதுதான். புத்திசுகம் ஹிருதயசுகத்தைக்காட்டிலும் மேலானது. அதுசாஸ்திரமூலந்தான் கிடைக்கக்கூடும். புத்திசுகத்தைக் காட்டிலும் ஹிருதயசுகம் தாழ்ந்தது. அதைப்பார்க்கிலும் விஷயசுகமாகிய சிற்றின்பசுகந்தாழ்ந்தது. இவ்வகை சுகானுபவங்கட்கு வேண்டிய சிரசு ஹிருதயம் வயிறு முதலிய கருவிகள் ஒன்றிற்கொன்று படிப்படியாய்த் தாழ்ந்தபடியிற்றானே அமைந்திருப்பதை யோஜிக்கும்போது பகவத்சங்கற்பமும் அவ்வாறென்றே நிச்சயிக்கவேண்டும்.

நாகரிகம்: ஆத்மசுகம்.

இந்தசுகம் எல்லாவற்றிலும் மேலானசுகம் என்பதற்கு சந்தேகம் இல்லை. ஆத்மசுகத்தில் தாழ்ந்த படியில் இருப்பதாயுள்ள தர்மசுகம் சத்தியசுகம் எவ்வளவோ பெரிதென்று மகான்கள் கூறியிருக்கிறார்கள். பிரவிருத்திக்கு அதீதமாயுள்ள ஆத்மசுகம் வாய்மொழியால் மனவிற்கெட்டாது. இவ்வகை சுகம் பகவத் கடாக்ஷத்தால் அடையவேண்டும். பகவத் கடாக்ஷம் பக்தி, தர்மம், தவம், யோகம், ஸமஷ்டிசேவை முதலியவற்றாற் பெறவேண்டும்.

---

## SHORT STORY.

### GANAPATI'S STRATAGEM.

### கணபதியின் சூழ்வினை.

---

நான் ஒரு நாள் பகல் பன்னிரண்டு மணிக்கு தலை குனிந்தவண்ணமாய் ஸெனேட் ஹௌஸிற்குப் (Senate House) பக்கத்தில் நின்று என் நிலைமையைப்பற்றியோசித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் பின்னால் ஓர் உயரமான மனிதர்புன்னகை கொண்டவராய் என்னை முதுகில் தட்டினார். அவர் சிறிது நேரம் என்னையே உற்றுநோக்கி,

“அடே, ஷண்முகம்! உன்னை எங்கெங்கு தேடுவது? அப்ப! கடைசியா யகப்பட்டாய். இனி யொன்றும் தொந்தரையில்லை. சரி; வா, போவோம். என்ன, தயங்குகிறாயே? ஷண்முகம்! நீ முன்போல் ஏழையல்ல. உன் சிறிய தந்தையாகிய பத்மநாப முதலியார் தாம் இறக்கும்போது தம்முடைய சொத்துக்கள் யாவும் உன்னைச்சேர வேண்டுமென உயில் (Will) எழுதிவைத்துவிட்டுப் போய் விட்டார். உனக்கு இப்போது வருஷத்தில் பத்தாயிரம்

ரூபாய் வருமானமுள்ள சொத்திருக்கிறது. வா, போவோம்,'' என்று அவர் மறுபடியும் என்னை வற்புறுத்தி அழைத்தார்.

இதைக்கேட்க எனக்கு ஆச்சர்யம் உண்டாயிற்று. என்ன? குடிக்கக்கஞ்சியின்றி, எச்சில் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த எனக்கா வருஷத்தில் பத்தாயிரம் ரூபாய் வருமானமிருக்கிறது? இது உண்மையாக விருக்குமா? சே! மூடயோசனை. இது எங்காகிலும் உண்டா?

ஆனால் என் செய்வது? என் பக்கத்தில் இருந்தவர் அம்மாதிரியல்லவோ தெரிவிக்கிறார்? என் பெயர் ஷண்முகமாம்! மெத்த நன்றாக இருக்கிறது! இது என்ன? சந்திரசேகரனல்லவா என்பெயர்!

நான் சற்றுநேரம் நிதானித்தேன். பிறகு,

''ஐயா! என்....................'' என்று சொல்லி முடிப்பதற்குள் அவர்,

''போதும், என்னுடைய 'கஸின்' (Cousin) ஷண்முகம் எனக்குத் தெரியாதா? வா, வீட்டுக்குப் போவோம் வேறு பேச்சு ஒன்றும் வேண்டாம். நீ முன்போல் ஏழையல்ல என்பதைமாத்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள். என்ன, காலையிலிருந்து சாப்பிடவில்லையா? பசித்தவன் போல் காண்கிறாயே? வா, முதலில் ஏதாவது ஒரு ஹோடலுக்கு (Hotel)ப் போய் சிற்றுண்டி யருந்தி பிறகு மைலாப்பூருக்குப் போகலாம்'' என்று சொல்லிக்கொண்டே அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த ஒரு ஜட்காவைப்பேசி அதில் என்னை ஏறும்படி தெரிவித்து, தானும் ஏறிக்கொண்டார். பிறகு, நாங்கள் இருவரும் ஒரு ஹோடலுக்குப் போய் பலகாரம் சாப்பிட்டு மைலாப்பூரிலிருக்கும் 'இலக்ஷ்மி நிவாஸம்' என்னும் பங்களாவைப் போய்ச்சேர்ந்தோம்.

நான் ஹோடலிலிருந்த போதும், வண்டியிற் சென்ற போதும் அவருடன் அதிகமாய் வார்த்தையாடவில்லை. நான் ஷண்முகம் என அவர் தவறாய் எண்ணி இருக்கிறாரென எனக்குப் புலப்பட்டது. ஆனால், நான் உண்ணவும் உடுக்கவும் வகையின்றி அன்று காலைமுதல் பட்டினி கிடந்தமையால் அவருடன் செல்ல சம்மதித்தேன்.

அவருடைய சம்பாஷணையால் ஷண்முகம் என்பவன் மூன்று மாதகாலமாக காணாமற் போய் விட்டதாகத் தெரிந்தது. அவன் மூன்று மாதங்களாக காணாவிடில் ஒரு வேளை இனிமேல் எப்போதுமே திரும்பி வராமலிருக்கவுங்கூடும். மேலும், அவன் பிறதேசமோ அல்லது இவ்வுலகை நீத்தோபோயிருக்கலாம். எனக்கோ வயிறு வளர்ப்பது இயலாததல்லவெனினும் மெத்த பிரயாசை எனத்தோன்றியது. இச்சமயத்தில் வருஷத்தில் பத்தாயிர ரூபாய் வருமானமுள்ள ஸ்திதி வருவதாயிருப்பின் அதை விட்டு விடுவதா? வலியவரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத்தள்ளலாமா? ஆதலால், என்னை அழைத்துச் செல்பவர் நான் இன்னானென அறிந்து துரத்தி விடும் வரையில் அவருடனேயே சுகமாய்க் காலங்கழிப்பதெனத் தீர்மானித்தேன்.

நான், சந்திரசேகரனாகிய நான், பரம ஏழையாகிய நான், திக்கற்றநான், நாடோடியாகிய நான், வருஷத்தில் பத்தாயிரம் ரூபாய் வருமானமுள்ளவனாகச் செய்யப்படுவதெனில் என் ஆச்சர்யத்துக் களவேது!

நாங்கள் இலக்ஷ்மி நிவாஸம் போய்ச்சேர்ந்ததும், கணபதி சுப்பு முதலியார் (அது தான் என்னை அழைத்து வந்தவரின் பெயர்) தற்கால நாகரிகத்துக் கேற்றவாறு அலங்கரிக்கப் பெற்றிருந்த இரண்டு அறைகளை என் உபயோகத்துக்காக விடுத்தார்.

மாலை சுமார் ஆறுமணியிருக்கும். நான் என் அறையில் உட்கார்ந்து களைப்பாறிக் கொண்டிருந்தேன்,



அச்சமும் ஆறுதலும்.

நான் சுகமாக சோபாவின்பேரில் சாய்ந்து, சுவர்களில் மாட்டப்பட்டிருந்த அழகிய படங்களை கவனித்து உல்லாசமாய் ஆனந்த சாகரத்தில் மூழ்கிக்கிடந்தேன். அச்சமயத்தில் ஒரு வேலைக்காரன் வந்து என் சிநேகிதன் சுந்தரம் வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

எனக்கு அச்சம் மேலிட்டது. கண்கள் மப்படைந்து தலை சுழல்வதுபோலிருந்தது. என்னைக் கண்டதும் நான் ஷண்முகமல்லவென சுந்தரம் கண்டு கொள்ளுவான். அப்போது என்கதி அதோகதிதான். போலீஸார் வசம் ஒப்புவித்து விடுவார்களெனத் தோன்றியது. பிறகு, நான் பிடித்துக் கொண்டிருந்த சுருட்டைப் பக்கத்தில் வைத்துவிட்டு என்ன ஆபத்து வருமோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

அறையினுள் வந்த அழகிய வாலிபனான சுந்தரம் சற்றுநேரம் என்னையும் கணபதிசுப்பு முதலியாரையும் உற்றுநோக்கிக் கொண்டிருந்து விட்டு, என் பக்கலில் உட்கார்ந்து, என் வருகைக்காக சந்தோஷப்பட்டதாக வெகு அன்பாய்ப் பேசினான்.

அவன் அங்ஙனம் பேசியதால் என் பயம் விலக ஆரம்பித்தது. சுந்தரமும் என்னை ஷண்முகமென்றே எண்ணிக்கொண்டதால், இனி அவனைப்போல் நடப்பதே உத்தமமென எனக்குப்பட்டது. அதற்காக ஷண்முகத்தின் சங்கதிகள் அதிகம் தெரியவேண்டியது அவசியமாகையால், அவர்களிருவரையுமே பேசவிட்டிருந்தேன்.

இரவு 9-மணி விக்டோரியா பப்ளிக் ஹாலில் நாங்கள் உட்கார்ந்துகொண்டு சுகுண விலாஸ சபையாரால் நடிக்கப்பட்ட ''லீலாவதி—சுலோசனா'' என்னும் சரிதையைப் பார்த்துக் களித்துக்கொண்டிருந்தோம். அச்சமயம் ஷண்முகத்தை அறிந்தபலர் என்னை அவனெனக் கருதியே என் சுபக்ஷேமம் விசாரித்தார்கள். ''சரிதான், நான் எல்லோருடைய கண்களிலும் மிளகாய்ப் பொடியை தூவிவிட்டேன்! என்னுடைய அதிர்ஷ்டமே, அதிர்ஷ்டம்!'' என்று நினைத்துக்கொண்டேன்.

பழவினை.

நான் அன்றிரவு படுக்கைக்குப் போனபோது, எனக்கு நித்திரையே வரவில்லை. என் யோசனை பலவழிகளிலோடிற்று. நான் கண்களை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டிருக்கும் போது என்னுடைய இளமைப் பருவம் என் நினைவுக்கு வந்தது. நான் என் சிறுவயதில் அதாவது என் 15-வது வயது வரைக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருந்தேன். என்னை யாரோ அவ்விடம் என் இரண்டாவது வயதில் விட்டுச் சென்றார்களாம். எனக்கு என் தாய் தந்தையர்களைப் பற்றிய சங்கதி சிறிதும் தெரியாது. நான் என் 15-வது வயதில் ஆஸ்பத்திரியினின்று வெளிவந்ததும் ஒரு ஆபீஸில் வேலைக்காரப் பையனாக அமர்ந்தேன். பிறகு ஒரு குமாஸ்தாவாக ஆனேன். அதிலிருந்து ஓர் பலசரக்கு மளிகை நானே திறந்து அதில் என் துர்அதிர்ஷ்டத்தால் நஷ்டமடைந்தேன். இப்போது நான் ஜீவிக்க வழியற்றவனாய் விட்டேன். இப்படி யிருக்கும் சமையத்தில் இவ்வித அதிர்ஷ்டம் வந்துற்றது.

குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கும்.

இப்போது இதைவிட்டு விடுவதா? அல்லது ஷண்முகமென நடிப்பதா? இவ்வினா என்னை வருத்திக் கொண்டிருந்தது. நான் இவ்விதமே போவேனே யானாகில் என்றாவது ஒரு நாள் யாராவது ஒருவர் என்னை ஷண்முகமல்லவென்று கண்டு கொள்ளுவார்கள். அப்போது என் கதி என்னாம்? எப்போது எவனொருவன் நான் ஷண்முகமல்லவெனக் கண்டுகொள்ளுவானோ வென்னும் எண்ணம் சதா என்னை வருத்திக் கொண்டிருக்கும். இவ்வித நிலைமையில் என் மனதுக்குத் திருப்தியேது? இங்ஙனமெல்லாம் யோசித்துக்கொண்டு கடைசியில் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அது என்னவெனில், கணபதிசுப்பு முதலியாரிடம் போய் சங்கதிகள் யாவற்றையும் சொல்லிவிட்டு மன்னிப்புப் பெற்றுக்கொள்வதே!

விடியற்காலை நான்கு மணி. எங்கும் நிசப்தமாயிருந்தது. நான் கணபதிசுப்பு முதலியாரிடம் போவதற்காக மெத்தையை அடைந்து, அவரது அறையைக் கிட்டினேன். அச்சமயம் அவர் சுந்தரத்துடன் பேசிக்கொண்டிருந்த வார்த்தைகளைக்கேட்டு அப்படியேஸ்தம்பித்து நின்று விட்டேன்.

சதியாலோசனை.

''ஷண்முகத்தைத் தான் கொன்று விட்டோமே! ஆனால் அதைப்பதறிச்செய்துவிட்டோம்;

இப்போது அவன் சவத்தைக்கொண்டு அவன் இறந்ததை ரூபித்தாலொழிய சொத்து எனக்கு வாராது. ஆகையால் தான் இம்மடையனை இவ்விடம் கொண்டுவந்திருக்கிறேன். இவனைக் கொன்றுவிட்டு..................எப்படித் தொலைக்கலாம்............பாஷாணம்...........?''

இதைக்கேட்டதும் என் நினைவு தடுமாறியது. அவ்வீட்டிலே இன்னும் ஒரு க்ஷணமேனும் இருக்கப்படாதெனத் திரும்பிப்போக ஆரம்பித்தபோது மறுபடியும் கணபதிசுப்பு பேசியதைக் கேட்கலுற்றேன்.

''நான் இவனைக் கொலை செய்யவேண்டிய ஆவசியகமில்லை. ஆனால், பக்கத்துத் தெருவிலிருக்கிறானே, அந்த வக்கீல் இராமகிருஷ்ணனைப்பற்றித் தான் கவனிக்கவேண்டி இருக்கிறது. அவன் ஏதோ சந்தேகிக்கிறான். ஆகையால் இவனைக்கொன்று ஷண்முகம் இறந்து விட்டானென அவனுக்கு ரூபிக்க வேண்டும்'' என்று சொன்னார்.

"தலை தப்பும் வழி."

இதைக்கேட்டதும் எனக்கு அங்கு நிற்க முடியவில்லை. கை கால்கள் உதறின. ஆகையால் உடனே அவ்விடத்தை விட்டு என் அறைக்குப்போய் அங்கிருந்த 'ஆல்மனாக்கில்' (Almanac) தேடிப்பார்த்து வக்கீல் இராமகிருஷ்ணன் வீடு கச்சேரித் தெருவு 19-வது நெம்பரென்றறிந்து அவருடைய வீட்டை விசாரித்துக் தேடிக்கொண்டு போனேன்.

நான் கதவைத் தட்டவும் வேலைக்காரன் கதவைத்திறந்து என் பெயரைக்கேட்டான். நான் ஷண்முக மென்றேன், அவன் சிறிது நேரம் கழித்து வந்து என்னை உள் அழைத்துக்கொண்டு போய் வக்கீல் இராமகிருஷ்ணரின் முன்னிலையில் விட்டான்.

நான் அவரைக்கண்டதும் "ஐயா, என் பெயர் ஷண்முகமல்ல. எனக்கு அப்பெயர்வந்த விதத்தைத் தெரிவிக்கிறேன்''-என அவரிடம் என் வரலாறு எல்லாவற்றையும் சொன்னேன் அவர் நான் சொன்ன யாவையும் கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்து விட்டு சொல்லுகிறார்:—

சரித்திர வரலாறு.

"பத்மநாப முதலியாரென்றொருவரிருந்தார். அவருக்குத் திரண்ட சொத்துக்களிருந்தும் சந்ததி கிடையாது. அவருக்கு இரண்டு சகோதரர்கள். அவர் தமையன் குமாரனின் பெயர் கணபதிசுப்பு தம்பி புத்திரனின் பெயர் ஷண்முகம். அவருடைய சகோதரர்களிருவரும் தங்கள் இளவயதிலேயே காலஞ்சென்றுவிட்டார்கள். இவ்விருபாலர்களும் பத்மநாப முதலியாருடைய சம்ரக்ஷணையின் கீழிருந்து வந்தார்கள். முதலியார் ஷண்முகத்தின் மீது தன் பட்சத்தை அதிகமாய்ச் செலுத்தியதுமல்லாமல் தனக்குப்பின் அவனுக்கே சகல சொத்துக்களையு மளிப்பதாகத் தீர்மானித்திருந்தார். அவன் சூதாட்டத்திற் பிரியனாகி விருந்தமைக்காக அவனைக் கண்டித்தும் வந்தார். அப்படியிருக்கும்போது கணபதிசுப்புவிற்கு ஷண்முகத்தின் மீது அருவருப்புண்டாகியது. வயது வளர வளர அவனுடைய பொறாமைக் குணமும், பேராசையும் அவனுடனேயே வளரலாயின. இங்ஙன மிருக்கையில், ஓர் நாள் ஷண்முகம் சிதம்பரம் போயிருந்தான். அப்போது கணபதி சுப்பு ஷண்முகத்தாலெழுதப்பட்ட 'அண்டிமாண்டைப்' போலொன்று 'போர்ஜ்* செய்து அவனுடைய சிறிய தந்தையிடங்காண்பித்தான். அவன் அதைப்பற்றி விவரித்துங்கூறினான். எப்படியெனில்: ஷண்முகம் முருகேசமென்பவனுடன் சூதாடி முன்னூறு ரூபாய் தோற்றுவிட்டதாகவும் அதற்காக 'அண்டிமாண்டு' எழுதிக் கொடுத்ததாகவும் அவ்வண்டிமாண்டை கணபதிசுப்பு முதலும் வட்டியும் கொடுத்து மீட்டுவந்ததாகவுமே. இதைக்கேட்டதும் பத்மநாபமுதலியாருக்கு ஷண்முகத்தின் மேல் அதிக கோபமுண்டாக அவன் ஊரினின்று வந்ததும் அவனிடம் அந்த பத்திரத்தை காண்பித்து தான் யாவும் அறிந்துக் கொண்டதாகவும் உடனே வீட்டை விட்டு அவன் விலக வேண்டுமென்றும் தெரிவித்தார். அது கேட்ட ஷண்முகம் மனம்பதறி "கூடிய சீக்கிரத்திலேயே உங்களுடைய தப்பிதத்திற்காக பரிதபிப்பீர்கள்.'' என்றுரைத்து வீட்டை விட்டகன்றான்.

"கேட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளியாகும்."

"அதன் பின் பத்மநாபமுதலியார் தன் சொத்துக்கள் யாவும் கணபதிசுப்புவைச்

* தப்புக் கையொப்ப மிட்டு,



சேர வேண்டுமென உயில் (Will) எழுதிவைத்தார். அப்போது ஒருநாள் முதலியார் கணபதிசுப்புவின் அறைக்குப்போனார். அவ்விடத்தில் போடப்பட்டிருந்த ஆபீஸ் மேஜை (Office Table) யின் மேலிருந்த மையொத்து காகிதத்தின் (Blotting Pad) கீழ் ஷண்முகம் எழுதியிருந்த ஓர் காகிதத்தைக்கண்டு அவன் நினைவு வந்து அது என்னவெனப்பார்த்தார். அது ஒரு 'அண்டிமாண்டு' ஷண்முகம் எழுதும் பாவனையாய் யாரோ ஒருவர் அதை எழுத அப்பியவித்ததாக விளங்கிற்று. அதைப்போன்ற'அண்டிமாண்டு' தான் கணபதிசுப்பு அவரிடம் தந்தது. அந்நினைவு வரவும் கணபதி சுப்புவின் வஞ்சகத்தனம் அவருக்கு தெற்றெனப் புலப்பட்டது. அடங்காத கோபங்கொண்டார். தான் ஆயாமல் பதறி ஷண்முகத்தை துரத்திவிட்டதற்காக தன்னைத்தானே பெரிதும் வெறுத்துக்கொண்டார். அதன் பின் அவர் கணபதிசுப்புவை வீட்டை விட்டுத்துறத்திவிட்டு சகல சொத்துக்களும் ஷண்முகத்தைச் சேரவேண்டுமென உயில்(Will) எழுதிவைத்து விட்டார். அப்போதே ஷண்முகத்தைத் தேடவும் மெத்தப் பிரயாசைப்பட்டார். யாது செய்தும் பிரயோசனப்படவில்லை. அவர் அவனுக்குச்செய்த துரோகத்தை நினைந்து, நினைந்து மனங்கசிந்து இரண்டு மாசத்திற்கு முன்னரே இறந்து விட்டார்.

"இவ்வித மிருக்கும்போது மூன்று மாதங்களுக்குமுன் ஷண்முகம், கணபதிசுப்பு, சுந்தரம் ஆகிய மூவரும் சமுத்திரத்தில் படவு விட்டுக்கொண்டுபோனார்கள். அப்போது ஷண்முகத்தைத் திடீரென்று சமுத்திரத்தில் தள்ளிவிட்டு மற்ற இருவரும் கரைக்குத் திரும்பி விட்டார்கள். அவன் நீஞ்சத் தெரிந்தவனாதலால் பக்கலில் சென்று கொண்டிருந்த ஓர் படவுக்கு நீஞ்சி அதனுதவியால் கரை சேர்ந்தான். ஆனால் அவன் அதிக நேரம் தண்ணீரில் கிடந்தமையால் கரைக்கு வந்ததும் மூர்ச்சையானான். அவனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் கொண்டுபோய் பரிசோதித்ததில் அவன் மூளைசுரத்தினால் வருந்துகிறானென அறிந்து அவனுக்கு சிகிச்சை செய்து வந்தார்கள். இதை அறியாத கணபதிசுப்பு, சுந்தரம் 'ஷண்முகம் இறந்தானென' நினைத்திருக்கிறார்கள்.

" தன்வினை தன்னைச் சுடும்."

"அப்போது தான் பத்மநாபமுதலியார் சோகத்தால் இறந்தது. அவருக்குப்பின் சட்டப்பிரகாரம் சகல சொத்துக்களும் ஷண்முகத்தைச் சேரும். அவன் இறந்தால் கணபதிசுப்புவைச் சேரும். இதனால் ஷண்முகம் இறந்து விட்டானென ரூபிக்க வேண்டியது அவசியமாகிறது. "ஷண்முகத்தைக் கொன்றுவிட்டோம். அவன் இறந்து விட்டான்'' என கணபதி சுப்பு நினைத்திருந்தானானாலும் அதை நிரூபிப்பது அசாத்தியமானதால் ஷண்முகத்தை உருவத்தில் ஒத்திருக்கும் உன்னை இப்போது பலியிட எத்தனித்திருக்கிறான். நீ தான் ஷண்முகமென்று பலர் அறிந்து கொண்ட பிறகு உன் பிராணனைப் போக்கினால் ஷண்முகம் இறந்து விட்டானென யாவரும் நினைத்து விடுவார்கள். அதன் பின் சொத்துக்கள் யாவும் அவனைச் சேர்ந்து விடும். இத்தகைய அவன் செய் சூழ்ச்சிக்காளாகாமல் உன் நல்லதிர்ஷ்டத்தால் என்னை அடைந்தாய்''என்றுசொல்லி சற்றுநேரம் நிறுத்திவிட்டு என்னைப் பார்த்து, "உன் தந்தையின் பெயர் யாது?'' எனக் கேட்டார்.

"எனக்கு என் தாய் தந்தையரைப்பற்றித் தெரியாது. என்னை யாரோ ஜெனரல் ஆஸ்பத்திரி யண்டை என் இரண்டாவது வயதில் விட்டுச் சென்றார்களாம். இப்பொழுது எனக்கு வயது முப்பத்திரண்டு'' என்றேன்.

" தர்மம் தலை காக்கும்.''

அவர் சற்றுநேரம் நிதானித்துப் பிறகு ஓர் மேஜை அறையைத்திறந்து ஓர் போட்டோ (Photo)வை எடுத்து சில நிமிஷம் அதையே உற்று நோக்கிக் கொண்டிருந்து விட்டு என் முதுகைக் காண்பிக்கச் சொன்னார். அவர் அதைப் பார்த்ததும் புன்சிரிப்புடன் 'ஷண்முகம்' என விளித்தார். அப்போதே பக்கத்து அறையின் கதவு திறக்கப்பட்டு என்னை முற்றிலும் உருவத்தில் ஒத்திருந்த ஓர் மனிதன் வந்தான். அவனுடைய ஒவ்வொரு உறுப்பும் என்னுடையதைப் போலவே இருந்தன.

லாயர் அவனை என் பக்கத்தில் நிற்கும்படிச் செய்து உண்மை ஷண்முகத்தைப் பார்த்து, "ஷண்முகம்! உன்பக்கத்திலிருப்பவர் தான் உன் சகோதரன்'' என்றார்.

இதைக்கேட்டதும் எனக்கதிக ஆச்சர்யமாய்விட்டது. நான் மிரட்சியாய் விழித்துப் பார்த்தேன். ஒருவேளை இதுவும் ஓர் மோசமோவென எண்ணினேன்.

லாயர் என் ஆச்சரியத்தைக்கண்டு சொல்லுகிறார்:

“சந்திரசேகரா, உன் தந்தைக்கு ஒரே தடவையில் ‘இரட்டை’யாக இருகுமாரர்கள்ஜனித்தனர். அவர்கள்தான் நீங்கள். உன் பெயர் கோபாலன். உன் செவிலித்தாய்க்கும், உன் குடும்பத்திற்கும் விவாதமேற்பட்டதால் அவள் உன்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டாள். உன்னைக் கண்டு பிடிக்க எவ்வளவு தேடியும் நீ அகப்படவில்லை. கடைசியில் அது நிஷ்பிரயோசனமென ஒழித்து விட்டனர். வயது, உருவம், முதுகின் மீதிருக்கும் மச்சம் இவைகளால் நீதான் அவனென நான் கண்டு கொண்டேன்.”

பிரிந்தவர் கூடல்.

நாங்கள் இருவரும் தழுவிக் கொண்டோம். என் சகோதரன் நேற்றுத்தான் ஆஸ்பத்திரியினின்று வந்தாராம். இப்போது என் சரிதை முடிந்து விட்டதெனச் சொல்லலாம். இன்னும் கொஞ்சந்தானிருக்கிறது. நாங்களிருவரும் உடனே புறப்பட்டு ‘இலக்ஷ்மிநிவாஸம்’ போய்ச் சேர்ந்தோம். கணபதி சுப்பு எங்களைக் கண்டதும் அச்சமுற்று மூர்ச்சையாய்ச் சாய்ந்தார். நாங்களிருவரும் அவரைத்தேற்றி,

அபகாரத்துக் குபகாரம்.

“சகோதரா! உமக்கு வருஷத்தில் ஆயிர ரூபாய் தந்துவிடுகிறோம். நீர் செய்த ஒவ்வொரு துரோகத்தையும் மன்னித்தோம்.” என்றோம்.

அதைக் கேட்டதும் கணபதிசுப்புவின் ஆனந்தத்திற் களவில்லை. அவர் எங்களிருவருடைய கைகளையும் பரிந்தெடுத்துப் பிடித்துக் கொண்டு, கண்களில் நீர் ததும்ப,

“என் தீயசூழ்ச்சிகட்கு இத்தகைய மாறுதவி நும்பால் பெற நான் பாத்திரனல்லேன். உத்தமரியல்பு இத்தன்மைத்தே. நான் பாவி. என் சரிதையை யோர்ந்த மாந்தர் யாவரும் திருந்துவர் எனும் அபிலாசை ஓர் பக்கமிருக்க, உத்தமர் மற்றவரின் துஷ்க்ருத்தியங்களை இலக்ஷியம் செய்யாது காருண்யம்கூர்ந்து நன்மையேபுரிந்து நன்கு மதிக்கப்பெறுவரென எல்லாம் வல்ல ஈசன் தாட்களை இறைஞ்சுகின்றேன்” என்றார்.

முடிவுரை.

இது ஷண்முகம், கோபாலன் இவர்களின் தாயார் நற்குண விசேஷத்தால் அவர்கள் மனதில் குழந்தைப் பருவத்தில் தானே பச்சைமரத்தாணிபோல் பதிந்திருந்ததால் அந்த சுபவாசனை அவர்களைவிட்டகலாது ஆபத்து வேளையில் அவர்கள் தலைகாத்ததுமன்றி, அவர்களுக்கிரண்டுநினைத்துப் பண ஆசையினால் சூழ்வினை செய்த துஷ்டனையும் நல்லவனாகத் திருந்தச் செய்தது.

“கச்சைகட்டிக் கூத்தாடிக்
கடைத்தெருவி லோடேந்திப்
பிச்சையெடுத் துண்டாலும்
பிறர்துயரம் செய்யாதே.”

என்னும் தொட்டிற் பழக்கந்தானே, அவர்களை முதிர்வயதில் உற்றவிடத்துதவியாயிருந்து காப்பாற்றியது. தாப்பழக்கமும் இப்படியே தொடரும் என்பதைத் தாய்மார் அறிந்து விவேக புத்தியால் குழந்தைகளை நல்வழியில் பழக்கி வளர்க்கவேண்டும்.

---

## SCIENTIFIC RECREATIONS FOR THE YOUNG.

## சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

### 1. கண்ணுக்குப்புலப்படா நாணயத்தைப் புலப்படச்செய்யும் விநோதம்.

ஓர் வெறுங் கோப்பையில் கால் அணாவைப் போட்டு அதை ஒரு மேசையின்மீது வைத்து மேசைக்கு சற்றுதூரத்தில் சென்று கோப்பையின் மேலோரம் கோப்பையிலிருக்கும் நாணயத்தை மாத்திரம் முழுமையும் மறைக்கிறதாகத் தோன்றும் அந்நிலையில் கண்ணை அசைவறநிறுத்தி எவனையாவது கோப்பையிலிருக்கும் அணாவைக் கிஞ்சித்தும் அசைக்காமல் மெதுவாக ஜலம வார்க்கச்செய்தால்; கண்ணுக்கு புலப்படாதிருந்த நாணயம் இப்பொழுது தோன்றும்.

### 2. டம்ப்ளரில் தோன்றும் மாய நாணயம்.

அலங்காரத்தின் பொருட்டு சுற்றி பட்டை பட்டையாய் வெட்டப்படாததும், சாதாரண



மானதும் அடியைக்காட்டிலும் வாய் அகண்டுள்ளதுமான ஒரு வெள்ளைக்கண்ணாடி டம்ப்ளரில் பாதி சலம் வார்த்து அதில் ஒரு காலணாவைப்போட்டு, டம்பளரின் வாயை ஒரு அட்டையால் மூடி, ஜலம் கொட்டாதபடி ஜாக்கிரதையாய் அதைத்தலை கீழாகக்கவிழ்த்து மேஜையின்மேல் வைத்து டம்ப்ளரின் மேற்பக்கமாய் அட்டையைப் பார்ப்போமாகில் அதில் நாம் வைத்தகாலணாவும் அதுவன்றி அரை அணா அவ்வளவு பெரிதான இன்னொரு நாணயமும் பக்கத்திலிருப்பதாகத்தோன்றும். இவ்வேடிக்கையை நூதனமாய்க் கண்டவுடன் டம்ப்ளரில் தோன்றும் இரண்டுநாணயமும் நிசமானதென்றே முற்றும் உண்மையாய் நம்புவன். அவனுக்கு உண்மையைக் காண்பிக்க, பிரத்தியக்ஷமாய் கண்ணால் கண்டது ஆரோபமாய் இருந்து விட்டதே என்று ஓர் வித ஆச்சரியமும் சந்தோஷமுமடைவன்.

### 3. பிரபை கானலாரோபங்கள்.

(Illusions of Irradiation)

காலங்குலம் மத்தியரேகையுள்ள வட்டமான ஓர் கறுப்பு கடிதத்தை ஒரு விசாலமான வெள்ளைக்காகிதத்தின் மீதும், அதே அளவுள்ள ஓர் வெண்மையான கடிதத்தை ஒரு விசாலமான கறுப்புக்காகிதத்தின் மீதும், வைத்து, இரண்டு வட்டிக்கடிதங்களையும் ஒரு நிலையினின்று பார்ப்போமானால் கருப்புக் காகிதத்தின் மீதிருக்கும் வெண்மைக்கடித சக்கரம் மற்றதைவிட சற்று பெரிதாகத்தோன்றும்.

ஒரு குண்டூசியை வலது கண்ணிற்கு நேராக அருகாமையில் பிடித்து, இடது கண்ணை மூடிக்கொண்டு, கவனமாக 30-விநாடிநேரம் குண்டூசியின் தலையைப் பார்த்துகொண்டிருக்குங்கால், பக்கத்திலிருக்கும் ஓர் மேஜையின் மீது பரப்பின பச்சைநிற வஸ்திரத்தின் மீது வைத்த எவ்விதவஸ்துவும் மங்கலாய்த் தோன்றும். இப்பொழுது மூடின கண்ணைத் திறக்காமல் பச்சை வஸ்திரத்தின் மீதிருக்கும் வஸ்துவை நோக்கின் சில விநாடிநேரம் அது மாயமாய் மறைந்து விட்டாற்போல் தோன்றும், இவ்வண்ணமே குண்டூசியின்முனையைக் கவனமாய்ப் பார்த்துவிட்டுகறுப்புக்காகிதம் அல்லது கறுப்பு வஸ்திரத்தின் மேலிருக்கும் ஒரு வெண்மையான வஸ்துவைப் பார்த்தால் மேற்சொன்ன விதமாகத்தோற்றம் தோன்றும்.

நாம் ஒரு வஸ்துவைப் பார்த்துக்கொண்டேயிருக்கும்பொழுது நம்மனம் அதிக ஆழமான ஆராய்ச்சியில் வீழ்ந்து விட்டால், நமது கண்கள் திறந்து கொண்டிருந்த போதிலும் எதிரிலிருக்கும் எப்பொருள்களும் நமக்குத் தோன்றாமற் போகிறது.

### 5. ஊசி வஸ்திரங்கள்.

ஒருகதவுக் கெதிரில் சற்றுதூரத்தில் நின்று அதின் பக்கமாய் ஒரு சாதாரண ஊசியை எடுத்து எறிய, அது கதவின் பலகையில் பட்டு அதில் குத்திக்கொள்ளாமல் கீழேவிழுந்து விடும். ஆனால் ஊசியின் காதில் ஒரு துண்டு நூலைக்கோத்து எறிய தப்பாமல் மரத்தில் அம்புபோல் பாயும்.

---

## KINDERGARTEN STORY.

**The Evils of Insincerity and Hypocricy.**

## பாலபிருந்தாவனக் கதை.

### சூதும் வாதும் வேதனைசெய்யும்.

பெங்களூரில் இராமசாமி முதலியார் என்பவர் ஒருவர் வர்த்தகஞ்செய்து கொண்டிருந்தார். அவருக்கு மாணிக்கம், உருக்குமணி என்றிரண்டு பெண்பிள்ளைகளும், கிருஷ்ணன், கோவிந்தன் என்றிரண்டுஆண்பிள்ளைகளும் உண்டு, உருக்குமணி நால்வரில் இளையவளாய் நான்கு வயதுடையவளாய் இருந்தாள். கோவிந்தன், கிருஷ்ணன் என்னும் ஆண்பிள்ளைகள் இருவரும் சென்னபட்டணத்தில் தங்களுடைய அத்தையம்மாள் வீட்டிலிருந்துகொண்டு ஒரு கல்விச்சாலையில் படித்து வந்தார்கள். ஒருமுறை இவர்களுக்கு ஒருவாரம் விடுமுறை கிடைக்கவே, பெங்களூரிலுள்ள தங்கள் தாய் தந்தையரைப் பார்த்துவரும் பொருட்டாகப் புகைவண்டி யேறிச் சென்றார்கள். தாய்தந்தையர்களும் இவர்களைக் கண்டமாத்திரத்தில் அதிக பரிவுடனே இவர்களுக்குத் தின்பண்ட முதலியன வாங்கிக்கொடுத்து உபசரித்தார்கள். இவர்களும் அண்டைவீட்டுச்சிறுவர்களுடனே பாலபிருந்தாவனத்தில விளையாடிக்கொண்டிருந்தார்கள். இபபடி ஆறுநாள் கழிந்தன. ஆறாவதுநாள் சாயரக்ஷை இவர்களைப்பார்த்து இராமசாமி முதலியார் “அடா! பையல்காள்!, நாளைப்பகல் பன்னிரண்டு மணி வண்டிக்கு நீங்கள் தயாராக இருக்கவேண்டும். திங்கட்கிழமை நீங்கள் பள்ளிக்கூடம் போகவேண்டு

மல்லவா ? நினைவிருக்கட்டும்" என்று சொன்னார்.

உடனே மூத்தவனாகிய, கிருஷ்ணன் "ஆமாம்" என்று சொல்லிவிட்டுக் கதவை ஒருக்களித்துக்கொண்டு சற்று உள்ளே சென்று மெதுவாக "இதென்ன இழவு" என்றான்.

அவன் தம்பி கோவிந்தன் "நாளைக்குத்திருவேங்கடம், நாராயணசாமி என்பவர்களோடு பந்தாடலாமென்று நினைத் திருந்தோமே, ஐயோ, பாழ்த்துப்போச்சே!" என்றான்.

அப்போது கிருஷ்ணன் "அடே கோவிந்தா! எல்லாரும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்குச் சரியாகக்கணக்குப் பார்த்து அனுப்பிவிடுகிறார்களா, நம்முடைய வீட்டில் தான் பெரிய இலச்சையாக இருக்கிறது" என்று சொன்னான்.

கோவிந்தன்: "என்ன அண்ணா, நாளையோடே நமக்கு விடுமுறை சரியாய்ப்போகிறதே. நாளைக்குப் பன்னிரண்டு மணி வண்டிக்குப் போக தயாராக இருக்க வேண்டுமென்று இத்தனை நாளாக நாயனார் சொல்லிக்கொண்டு தானே யிருந்தார். உனக்கு நினைவில்லையா?" என்றான்.

கிருஷ்ணன்: "ஆமாம், ஆனால் என்ன? இன்னும் இரண்டு மூன்று நாளைக்கு இங்கேதானே இருக்கச் சொன்னால் ஆகாதோ, முழுகிப் போச்சுதோ?" என்று சொன்னான்.

கோவிந்தன்: "இன்னும் இரண்டு நாள் இங்கிருக்கும்படி கேட்பதனால் என்ன பிரயோசனம்? எப்படியானாலும் நாம் போக வேண்டியவர்கள் தானே. சற்று முன்னாடியாகவே போய்விடலாமே" என்று சொல்ல,

கிருஷ்ணன்: "போடாபோ, ஏதோ ஒரு காரணமாக நம்முடைய நாயனார் நம்மை நாளைக்கு அனுப்ப விரும்பி யிருக்கிறார். அது இன்னதென்று எனக்குத் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. அது கிடக்கட்டும்." என்று சொல்லிக்கொண்டே கதவைப் படிய மூடிவிட்டு இரகசியமாய் "அடே, நாம் இன்னொரு நாள் இங்கே இருக்க ஒரு உபாயம் பண்ணப் போகிறேன்" என்று சொன்னான்.

கோவிந்தன்: "அதென்ன? ஏதோ, சொல்லு; பார்க்கலாம்."

"விளையாட்டுப்போய் வினையாகத் தொடர்ந்தது."

கிருஷ்ணன் "அடபோடா, சுண்ணாம்பிலிருக்குது சூக்ஷுமம், இதெல்லாம் எனக்குஆயிரம் அரைக்காற் பணந்தானே. பதினொன்றடித்த கொஞ்ச நேரத்துககெல்லாம் மெதுவாய் கம்மென்று போய் கடியாரத்தை நிறுத்திவிடுகிறேன். அப்புறம் நேரமாய்விட்டால், ஐயோ! மணி தெரியாமல் போச்சுதே' என்று சொன்னால் தகப்பனார் நம்மை என்ன செய்யப் போகிறார்." என்றான்.

கோவிந்தன்: "ஆமாம் அண்ணா! அதுமெய்யாகுமா?"

கிருஷ்ணன்: "ஏன் ஆகாது? கடியாரம்போகாவிட்டால் பன்னிரண்டு அடிக்கிற வேளை நமக்கு எப்படித் தெரியும்?'

கோவிந்தன்: "அதன்பேரென்ன? அது மாத்திரம் பொய்யாகாதோ? பெருமோசமாயிருக்கிறதே. நாயனாவுக்கு நாமம் போடப் பார்க்கிறாயே. கடியாரத்தின் சோலிக்குப் போவது சரியல்ல."

கிருஷ்ணன்: "போடா முட்டாள். வேறென்ன செய்கிறதாம். நான் என்ன, யாருடைய தலையையாகிலும் வெட்டி சாய்க்கப்போகிறேனோ? குடிமுழுகி விட்டாற்போலப் பேசுகிறாயே. கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையா? மிறகவும் ஆசை. ஒன்றுஞ் செய்யவுங்கூடாதென்றால் காரியம் எப்படியாகும்! கடியாரத்தில் ஆடுகிறதுண்டை அசையாமல் ஒருநாழி இரண்டுநாழி நிறுத்திவைத்தால் ஆருக்கென்ன நஷ்டம்? கடியாரத்திற்குத்தான் என்ன சேதம்? நீ அவ்வளவு யோக்கியனானால் பேசாமல் இரு. செய்யவேண்டியதை நான் துணிந்து செய்து விடுகிறேன். எப்படியும் உனக்கு லாபந்தானே."

கோவிந்தன் தன்னாலானமட்டும் சொல்லியும் கிருஷ்ணன் அவன் சொல்லைக் கேட்கிறதாயில்லை. இப்படி பேசிக்கொண்டே இருவரும் உறங்கி விட்டார்கள்.

அன்று பாதிராத்திரியில் உருக்குமணியென்பவளுக்கு காய்ச்சல் கண்டது. உடனே வைத்தியரை வரவழைத்துப் பார்த்தபோது அவர் "இது பிரமாதமான ஜன்னியாயிருக்கிறது. ஆயினும் பெரிதல்ல. இந்த மருந்தை அதிக ஜாக்கிரதையாக இரண்டு மணிக்கொரு



முறை ஒவ்வொரு சிட்டிகைப் பிரமாணமாகக் கொடுத்துவாருங்கள். அப்படி என்னவாகிலும் அபாயமான குறிகள் தோன்றினால் ஒரு ஆளை அனுப்புங்கள். பகல் பன்னிரண்டு மணி வரையிலும் வீட்டிலிருப்பேன். பயப்படவேண்டாம்." என்று சொல்லிப் பத்தியம் பரியாரங்களையுந் தெரிவித்துப் போய்விட்டார்.

காலையில் தூங்கியெழுந்ததும் வீட்டிலுள்ள யாவரும் துக்கமாயிருக்கக்கண்ட இந்தச் சிறுவரிருவரும் தங்கள்தங்கை ஜன்னிகண்டுதவிக்கிறாள் என்றறிந்து அதிக வருத்தப்பட்டார்கள். ஒன்பது மணிக்கு அவர்களுடைய தாயார் சற்று நிம்மதியாக இருந்தார்கள். கிருஷ்ணனும் கோவிந்தனும் இதைக்கேட்ட மாத்திரத்தில் புழைக்கடைத் தோட்டத்தில் சென்று விளையாடிக் கொண்டிருந்தனர். தாயானவள் குழந்தையின் பக்கத்திலிருந்து கொண்டு இமை கொட்டாமல் பார்த்திருந்தாள்.

சற்றுநேரங்கழிந்தபிறகு முதலியார் பிள்ளைகளைக்கூவி "தயாராயிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

உடனே கிருஷ்ணன் "இல்லை நாயனா. இன்னும் மணியாகவில்லையே. இப்போது தான் கடியாரத்தைப் பார்த்தேன். பதினொன்றேகால் ஆயிற்று" என்றுசொன்னான்.

முதலியாரும் "ஆனால் இன்னுங் கொஞ்ச நேரம் உல்லாசமாயிருங்கள். பத்திரம்! மணியை மறக்கப்போகிறீர்கள்." என்றார்.

என்று சொல்லிக்கொஞ்சதூரம் போனவுடனேகிருஷ்ணன் "அந்தமட்டில் தப்பித்துக் கொண்டோம்" என்றான்.

கோவிந்தன் "எனக்கு திக்கென்றிருந்தது. கைகடியாரத்தை மடியிலிருந்து எடுத்துப் பார்த்திருப்பாரானால் நம்முடைய வண்டவாளம் வெளியாயிருக்குமே."

கிருஷ்ணன் "அடபோடா, பயங்கொள்ளி. பனங்காட்டுநரி சலசலப்புக்கஞ்சுமா? கைகடியாரத்தைப் பார்த்தால்தானென்ன? பெரியகடியாரம் நின்றுபோய்விட்டதென்று தானேநினைத்துக்கொள்வார். எப்படியும் இந்நேரம்பன்னிரண்டுமணியாகியிருக்கும், இனிமேல் வண்டி வண்டிதான்.'

இது இப்படியிருக்கையில், நோயாய்க்கிடந்த குழந்வையின் பக்கத்தில் இருந்ததாயானவள் மூத்தபெண்ணாகிய மாணிக்கத்தைக்குழந்தை யண்டை உட்காரவைத்துத் தன் புருஷனிடம் ஓடோடியும் வந்து "ஐயா! குழந்தைக்குச் சுவாசம் குறைந்துவருகிறது. கைநெருப்புப் பறக்கிறது. உடனே வைத்தியருக்கு ஆளனுப்புங்கள்." என்று சொன்னாள். உடனே வீட்டுவேலைக்காரியை வைத்தியரிடம் அனுப்பினார்கள்.

உடனே கிருஷ்ணனும் கோவிந்தனும் "நாயனா! எங்களுக்குப் புறப்படமணியாயிற்றா?" என்று கேட்டார்கள்.

அவர் மடியிலிருந்த தம் கைகடியாரத்தை எடுத்துக்கொண்டே "இந்நேரம் மணியாகியிருக்கலாம்' என்று சொல்லி கடியாரத்தைத் திறந்து பார்க்க, "அடடா! இந்நேரம் வண்டி போயிருக்கும். பன்னிரண்டரை யாய்விட்டதே" என்று சொன்னார்.

அப்போது அவர் பெண்டாட்டி "உங்களுடைய கைகடியாம் சீக்கிரம் போகிறாப்போலிருக்கிறது. பெரிய கடியாரம் இன்னும் பன்னிரண்டு அடிக்கவில்லையே" என்றாள்.

கிருஷ்ணனும் தைரியத்துடன் "ஆமாம் இன்னும் பன்னிரண் டடிக்கவே யில்லை" என்றுசொன்னான். தாயார் போய் கடியாரத்தைப்பார்க்க கடியாரம் நின்றுபோய்விட்டதாகக் கண்டாள்.

அது கேட்டமுதலியார் "ஐயையோ! ஒரு பெரிய காரியார்த்தமாகப் பன்னிரண்டுமணி வண்டிக்கு ஒருவரைப்போய் கண்டுபேச உத்தேசித்திருந்தேன், என்ன செய்வேன்" என்று வருத்தப்படுகையில்,

தாயானவள் "ஐயோ! ஐயோ! வைத்தியர் இந்நேரம் வெளியே போய் விட்டிருப்பாரே. அடியம்மா ருக்மணி! என் குழந்தாய்! என்ன செய்வேன்" என்று கையை முறித்துக் கொண்டு குழந்தையண்டை ஓடினாள்.

இதுகண்ட கிருஷ்ணன் "அம்மா! பயப்படாதே, நான் ஒரே ஓட்டமாக ஓடி வைத்தியரை இட்டுக்கொண்டு வருகிறேன்" என்று ஓடினான். கோவிந்தனும் அவன் பின்னே ஓடினான்.

இருவரும் ஒரே மூச்சாக ஓடி வைத்தியர் வீட்டுக்கதவைத் தட்டி "வைத்தியர் இருக்கிறாரா" என்று அழைத்தார்கள். உள்ளே வைத்தியர் பெண்டாட்டி "பன்னிரண்டே கால்மணிக்குப் புறப்பட்டு வெளியில் வழக்கம்போலப்

போய்விட்டார்" என்று சொன்னாள். கிருஷ்ணன் "அவர் யாருடைய வீட்டுக்குப் போயிருக்கிறார் தெரியுமா அம்மா?" என்று கேட்டான்.

அந்நேர வேளையில் ஒரு சிறு பெண்ணோடு பேசிக்கொண்டிருந்த வைத்தியர் பெண்டாட்டியானவள் "முதலில் இன்னார் வீட்டுக்குப் போயிருப்பார் என்பது செம்மையாய்த் தெரியாது. இப்படி வந்து சற்றுநேரம் இருப்பாயானால் எனக்குத் தெரிந்தமட்டில் சொல்லுகிறேன்" என்றாள்.

இதைக்கேட்டதும் உகிர்ச்சுற்றின் மேல் அம்மி விழுந்தாப்போலக் சற்றுநேரங் காத்திருந்தார்கள். அப்போது மேலே சொன்ன சிறுபெண்ணானவள் தங்கள் வீட்டிற்கு அண்டையில் வசிக்கும் ஒரு ஏழைக் கைம்பெண்ணினுடைய மகள் என்று தெரியவந்தது.

அந்தப்பெண், வைத்தியர் பெண்டாட்டியை "ஆனால் அந்த வேலை எனக்குக் கிடைக்கும் என்ற எண்ணமில்லையா? அம்மணீ!" என்றாள்.

வைத்தியர் பெண்டாட்டி "ஐயோ பாவம் உன்னைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. என்ன செய்வேன். நீ சொன்னது போல் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வந்திருந்தால் அந்த வேலை உனக்கே கிடைத்திருக்கும் உனக்காக நான்வெகுதூரம் பரிவாகப்பேசினேன் பன்னிரண்டேகால் மணிவரையிலுங் கூடப் பார்த்தோம். அப்படி காத்துக்கொண்டிருக்கும்போது இன்னொருவர் வரவே அவரைப் பேசி அந்த வேலையில் வைத்தாய்விட்டது. சொன்னது சொன்னபடியே அந்தந்த வேளைக்கு அந்த வேலையைச் செய்யாதவர்கள் எனக்குச் சரிப்படுவதில்லை. நீ ஏன் அந்த வேளைக்கு வராமற் போனாய்?" என்று கேட்டாள்.

அதற்கு அந்தப்பெண் "அம்மா! நான் முன்னதாகவே வந்தேன். வரும்போது இராமசாமி முதலியார் வீட்டண்டையில் மணியென்னவென்று கேட்டேன். அங்கிருந்த ஆள் கடியாரம் பார்த்துப் பதினொன்றேகாலாயிற்று என்று சொன்னான். அதன்மேல் நான் சரியான வேளைக்குப் போகலாமென்று முன்னும் பின்னுமாகக் கொஞ்சநேரம் உலாவிக்கொண்டிருந்து வந்தேன். ஐயோ! அரைமணி நேரத்திற்கு மேலே ஆய் விட்டதென்றும் அதனால் எனக்குக் கிடைக்கக்கூடிய வேலையை இழக்கலாயிற்றே என்றும் காண என்மனம் துடிக்கின்றது. ஐயோ! என்தாய் இதைக்கேட்டால் மனவருத்தமடைவாளே! என்ன செய்வேன்" என்று சோகித்தாள்.

வைத்தியன் பெண்டாட்டி "இது உன்னால் வந்த தப்பிதமுமல்ல; நல்லது, அந்தப் பிள்ளைகள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று சொல்லி அவர்களை நோக்கி வந்தாள்.

அப்போதுகிருஷ்ணன் "ஐயோ! கோவிந்தா! உன் பேச்சைக்கேளாமற் போனேனே. நான் செய்த தந்திரத்தினால் எத்தனை துன்பம் உண்டாயிற்று பார்த்தாயா. இப்படி இந்தப் பன்னிரண்டுமணியை இத்தனை காரியம் பற்றிக் கொண்டிருப்பதுண்டா!" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

வைத்தியன் பெண்டாட்டியும் மூவர் நால்வருடைய பேரைச்சொல்லி அவர்களுடைய வீட்டிற்குப்போய் வைத்தியரைக் கண்டு பிடிக்கலாம் என்று சொன்னாள். அவர்களும் அது கேட்டதும் தாமதிக்காமல் அங்கங்கே அலைந்து திரிந்து அலுத்து, அதிவேகமாக வீட்டுமுகமாய் வருகிற வைத்தியரைக்கண்டு வண்டியை நிறுத்தி, சங்கதியைச் சொல்லி வைத்தியரை இட்டுக்கொண்டு போனார்கள்.

வைத்தியரும் குழந்தையை நாடி பிடித்துப் பார்த்துவிட்டு, வெளியேவந்து "ஐயோ பாவம்! சிறு குழந்தை, மிஞ்சிப்போய் விட்டது. இனி மனுஷப் பிரயத்தனத்தாலாவது ஒன்றுமில்லை. கெட்டகுறிகள் தொடங்கிவிட்டன, நோய்க்கு மருந்து ; விதிக்கு மருந்தேது"! என்று சொல்லிப் போய்விட்டார்.

அன்றிரவெல்லாம் கிருஷ்ணனுக்குத் தூக்கம் பிடிக்கவேயில்லை. அவன் எண்ணமென்னமோ சித்தியாயிற்று. இரண்டொரு நாள் பள்ளிக்கூடம் போகத் தடை உண்டாயிற்று; மெய்தான். அதனாலுண்டான நஷ்டம் எவ்வளவு. கடியாரம் டிக் டிக் என்று அடிக்கும் ஒவ்வொரு சப்தமும் அவன் இருதயத்தைத் துடிக்கச் செய்தது. அதைப் பொறுக்கமாட்டாமல் கதவைத்திறந்து வெளியே போய் அவன் தங்கையைப் படுக்க வைத்திருந்த அறைக்கு வெளியே ஒரு தூணின்மேல் சார்ந்து கொண்டு அவ்வறையின் கதவினுடைய துவாரங்களில் தெரியும் விளக்கொளியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

" BLESSED ARE THEY THAT ARE PRIVILEGED TO WORK FOR THE CHILDREN."

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*
*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*

**"New Series"** ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். **22.**] **1914**ளு மேமீ, ஆனந்தளு வைகாசிமீ [சஞ்சிகை **2.**

## " BLESSED ARE THEY THAT ARE PRIVILEGED TO WORK FOR THE CHILDREN."

### More Approvals from Elders of Society.

" BLESSED ARE THEY THAT ARE PRIVILEGED TO WORK FOR THE CHILDREN, for they shall see the Spirit of God working in and through the human heart."

A respected and much honoured Member of Society, a Companion of the Most Eminent Order of the Indian Empire, in greeting our Editor on the Pledge required of him and taken by him, and the large scope for the Expansion of Our Work, says :—" Your work in connection with the journal *Viveka Chintamani*, is universally approved. You need not take up any work not connected with the journal. God will help you."

An Educationist of high standing, and acknowledged ability, a distinguished Member of the Imperial Service Order says :—" Go on as usual. God will help you in your work. Opposition and obstructions overcome are invaluable aids in the path of true Progress."

" I have been told by Tamil Scholars that this journal is very instructive. The fact that it is 22 years old shows that it is a very useful publication."—Extract from personal communication of a retired Dewan.

A Tamil Scholar of acknowledged repute and ability remarked *en passant* that he knew the Editor of this Journal for a long time from his student days, and has always found him " to be a man of remarkable devotion to duty who has been quietly and unobtrusively going on with his work in connection with the *Viveka Chintamani* through good report and evil report. He has found him to be eminently successful in his own way."

We quote a few more opinions at random:—

"All success in this manifestation of your many-sided activities."—Dr. D. Duncan M.A., D. Sc.

"The school children are very eager over the "*Viveka Chintamani*," it is their favourite magazine." . . . "It is not only the children who like the "*Viveka Chintamani*," it is the teachers too; they say they often get useful hints from it."—Mrs. Pittendrigh.

"You have accomplished a great deal in the establishment of the *Viveka Chintamani* and the issue of reprints from it."—*Inspectress of Girls' Schools, N. & C. Circles.*

"Is as a rule interesting from end to end." —*Dr. G. U. Pope.*

"Dr. Duncan spoke to me with approval of your books and so did Mr. J. of the Danish Mission."

Regarding the *Viveka Chintamani* Series (which in these days of literary piracy and colourable imitations are largely copied with impunity), Rao Bahadur C. Nagoji Rao, (now retired Inspector ofSchools), has recorded his opinion that they are "excellent and deserve to be extensively read."

The Madras Text Book Committee has declared them "suitable for School Libraries."

*H.O.D. Hardinge, Esq., I.C.S.*, :—"The series is admirable."

*Mrs. Pittendrigh* :—"They are delightful books."

*The Madras Mail* :—"We trust that these publications will meet with the official patronage which they so richly deserve."

"I consider them excellent and the price reasonable."—*Inspectress of Girls' Schools, S. & W. Circles.*

"The excellence and usefulness of his publications are now recognised on all hands."—*Dr. Sir S. Subrahmania Iyer, L.L.D., K.C.I.E.*

"Deserving of every encouragement by the public."—*The Hindu.*

"Ought to be welcomed in every Hindu Home."—*The Madras Standard.*

## THE VIVEKACHINTAMANI "NEW SERIES."

"We heartily welcome the "New Series" of *Vivekachintamani* beginning with the twenty-second yearof its publication, specially adapted for school-use and home-reading and approved as suitable for the purpose by an influential committee of parents, teachers and educationists of good standing,having the control of child-education and the making of the future citizen in their hands. We see that the Editor is pledged to exert himself *once again to make the Vivekachintamani* what it really was before—"the most amusing, the most interesting and the most instructive," and progressive Tamil Journal having the "widest circulation" among parents and children at home or in school. We have the assuring testimony of one educationist of good standing that "the journal has considerably changed its tone" with a view to making it suitable and quite acceptable to school-children for whose needs the editor now feels called upon to minister with an earnestness of purpose which is so characterestic of him."

"We heartily endorse the gratifying view expressed by another educationist of good standingthat "the boys and girls whomay be'—and in ourview,all are soon bound to become—"habitual readers" of the Vivekachintamani, "will surely become useful citizens of our country with true devotion to their God and their King and to the sweet service of their great motherland" as His Excellency the Viceroy took care to emphasise in his great speech at the autumn session of the Supreme Legislative Council, while adumbrating the New Educational Policy of the Government of India inspired by the high ideals expressed by the King-Emperor, the vernacular translation of whose speeches while in this country, the Madras Government has wisely decided to place within easy reach of every school and every village in this Presidency."

"It is pleasing to note that the voice raised by Mr. Sharp, the Director of Public Instruction in the North in favour of cultivating the civic conscience in the child-mind has been listened to and is being acted upon by a man of such ripe experience and sobriety of judgement as the veteran Editor of the Vivekachintamani, whose *educational activities* rightly earned for him "the best thanks" of such a discriminating judgeof character as H.M. King Edward was when Prince of Wales, whom he afterwards described and mourned for as "Our Citizen-King."—*Extracts from the Dailies.*



விவேக  சிந்தாமணி

## CHILD-EDUCATION: WHAT IT MEANS.

"Satisfy the natural curiosity to know."

"The child is new to earth and sky and even the minutest thing appears to him a curiosity if not a mystery........It is a queer notion of parents that *School-going* is education and *memorising* is learning. Education is broader than many of us are prepared to believe. The child begins to learn from the moment that he is ushered into the world, and the very novelty of the situation to which he is introduced at birth, is the first of a series of lessons that are to end with the end of all that is perishable in him. Every moment of his existence on this side of the grave he *learns*—and school-going is a part and a very poor part it must be said—of this life-long teaching, and memorising is nothing but a weak instrument with which this long apprenticeship is served. Parents and teachers should always remember that to satisfy this natural curiosity of the child (to know by questioning) is not a negligible factor in the education of the child."

## பால போதம் என்றால் என்ன?

பாலன் என்றால் குழந்தை, போதம் என்றால் புத்தியினால் அறியும் அறிவு. குழந்தைகள் தம் புத்தியினால் அறியும் அறிவுக்கு "பாலபோதம்" என்று பேர். குழந்தை-மனம் மாசு மறுவற்றது. அப்படியென்றால் கல்லிய மாயுள்ளது. மனதின் விகாரங்கள் எல்லாம் தோற்றாமையால் மனது பாற்கடலில் மிதக்கும் ஆலிலைபோல் பச்சென்று ரம்மியமாய் நிர்விகாரமாய் நிச்சலனமாயிருக்கும்.

குழந்தைகளே, நீங்கள் ஆலமரத்தைப்பார்த்திருக்கிறீர்களா? அதோ சாலையோரத்திலிருக்கும் ஆலவிருக்ஷத்தைப் பாருங்கள். அதன் இளந்தளிர்கள் இளவெயிலில் தகதகவென்று மரகதம் போல் பச்சையொளிமின்னப் பிரகாசிக்கின்றது பாருங்கள்! அதன் கிளைகள் வெகுதூரம் பரவியிருக்கின்றது பாருங்கள். அக்கிளைகளிலிருந்து தூலம் வீழ்து தோரணங்கட்டினாற்போல் தொங்குவது எவ்வளவு அழகாயிருக்கின்றது பார்த்தீர்களா! அந்த வீழ்துகளின் நுனி எவ்வளவு மிருதுவாயிருக்கின்றது பாருங்கள். அதற்குமேல் அவை எவ்வளவு பலமுள்ளவைகளாக விருக்கின்றன பாருங்கள். அந்த வீழ்து மேலிருந்துண்டாகி பூமியை நோக்கிச் செல்லுகின்றது. பூமியில் பட்டதும் அது நிலத்தில் இறங்கி ஆழமாய் வேரோடி உறம் பெற்று வளர்ந்து பருமனடைகின்றது. பூமியில் வேரிறங்கும் மட்டும் அதற்கு வேண்டிய ஸாரத்தை அது மரத்தின் கிளையிலிருந்து இழுத்து உட்கொள்கிறது. பூமியில் வேரிறங்கின பின் பூமியிலிருந்து ஸாரத்தை யிழுத்து தான் உறம் பெறுவதோடு கிளைகளையும் உறம் பெறச்செய்கிறது. ஆலவிருக்ஷத்தின் மூலமரம் மக்கி மடிந்து போனாலும் வீழ்துகள் பருத்து மரம்போல் உறம்பெற்று அதன் கிளைகளுக்குப் பழுது வாராமல் அவைகளைத் தாங்கிநிற்கும். குழந்தை-மனம் வளருவதும் இப்படியே யென்று நீங்கள் அறியவேண்டும். ஆலவிருக்ஷத்தின் மூலமரம் தேஹம். அதன் வீழ்துகள் தான் மனம்.

பெற்றோர்களே, இங்கேயுங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேளுங்கள். அந்தக்குழந்தை-மனம் விஷயப்பற்று என்கிற பூமியை நோக்கிச் செல்லுகிறது. (விஷயப்பற்று என்பதை 'Sense impressions' என்பார்கள்). இந்த விஷயப்பற்றினால் தான் குழந்தை மனம் உறம்பெற்று (உலகஞானத்தில்) விரியவேண்டும். இதற்கும் தத்துவஞானத்துக்கும் வெகுதூரம். தத்துவஞானம் குழந்தைகளிடத்தில் இயற்கையறிவாக அமைந்திருக்கிறது. குழந்தை-மனம் விரிந்து விஷயஞானத்தில்

விருத்தியடையவேண்டும். விஷயஞானத்தில் விருத்தியடைந்தபின், அதில் முதிர்ந்த புத்தி, தரையில் வேரூன்றிய ஆலம் வீழ்துபோல், விஷயஞானத்திலிருந்து தத்துவத்தைக்கிரகிக்கும் சக்திவாய்ந்ததாகும். தத்துவம் என்பது (தத்+துவம்= அதுநீ,) அறிவேயுருவாயமைந்துள்ள உண்மைக்குச் சொல்லுகிறது. வயதில் முதிர்ந்து மனப்பயிற்சிபெற்றவர்கள் காரணகாரியதோரணை யறியும் விசாரபுத்தியின் (Reason) வலிமையினாலே விஷயங்களின் உண்மைகளைக்கிரகிக்கிறார்கள். குழந்தைகளோ அப்படியல்ல. விஷயத்தைக்கிரகிக்கும் இந்திரியங்களாலே விஷயஞானம் (Sense Impressions of the World) பெற்று, அந்த விஷயஞானம் முதிர்ந்த பின் காரணகாரிய தோரணையறியும் புத்திக்கு ஆராய்ச்சி யுண்டாகி "விஜ்ஞான போதம்" சித்திக்கப்பெறுகிறார்கள். ஆகவே பாலபோதம் என்பது ஆலமரத்தின் கிளையிலிருந்து கீழே யிறங்கிவரும் வீழ்துபோன்றது.

அது பூமியில் இறங்கினபின் தான் உறப்பெறும். இடையில் அதைத்தொட்டு இடர்புரிந்தால் அப்படியே வளர்ச்சிகுன்றி கட்டையாக நின்று விடும். அஃதேபோல் குழந்தை-மனம் விரிந்து விஷயஞானத்தில் முதிர்ச்சியடையுமுன் அதற்கு நிவிருத்திமார்க்க வித்தைகளைப் போதித்தால், குழந்தை மனம் விரியாது புத்தி மந்தப்பட்டுக் கட்டையாய் நின்றுவிடும். ஆகையால் வேதாந்தஞானம் கைவந்த தெளிந்த-மனமுள்ளவர்கள் உலகத்தாரைவிட என்னதான் மேல்பதவியிலிருந்தாலும்குழந்தைகளிடத்தில் தம் வேதாந்த ஞானத்தைக் காட்டமாட்டார்கள். குழந்தைகளுக்கு விஷயங்களைக் கிரஹிக்கும்புத்தி தானே விருத்தியாகவேண்டும். இதற்குப் பிரவிருத்தி மார்க்கம் என்று சொல்லுகிறது. விஷயநிக்ரகம் செய்யும் வழிக்கு நிவிருத்தி மார்க்கம் என்று சொல்லுகிறது. இவ்விரண்டும் வேறுபட்ட இரண்டு மார்க்கங்கள் அல்ல. ஆலம் வீழ்து மேலேயிருந்து கீழேயிறங்கி பூமியைப்பற்றிய பின் கீழேயிருந்து சாரத்தைக்கிரகித்துக்கொண்டு மேலே போவது போல, குழந்தை-மனம் விஷயஞானத்தால் விரிந்து முதிர்ந்தபின் அதுவே திரும்பி விசார ஞானத்தால் (by the exercise of Reason) விவேக புத்திவிருத்தியடைந்து விஷயநிக்ரகம் செய்யும் ரகஸியத்தை யுணர்ந்துகொள்ளும்.

ஆகையால் "பருவத்தே பயிர்செய்" என்கிற முதுரையை அனுஸரித்து, குழந்தைகளுக்குப் பாலபோதம் செய்யும் பொழுது அவர்கள் மனோபக்குவமறிந்து விஷய கிராஹிய சக்தியினால் அவர்கள் மனம் விஷயஞானத்தில் விரிந்து வளரும்படி செய்யவேண்டும். இது தான் பிரகிருதிசுபாவம் என்று சொல்லும் இயற்கை அமைப்பு. இதற்கு விரோதமாக நடந்தால் அநர்த்தம் விளையும். பாலபோதம் என்பது பிறந்ததுமுதல் ஜன்மம் அறுகிறவரையில் தொடர்பிடியாய்த் தொட்டுத் தொடர்ந்து நடக்கும் விருத்தி ஞானத்துக்கும் பொருந்தும். இந்த விருத்தி ஞானத்துக்குத்தான் உண்மையாய் (Education,) என்று சொல்லுகிறது. அப்படியென்றால், 'drawing out'—அதாவது, அறிவு விரிந்து மலரச்செய்கிறது என்று அர்த்தம்.

---

## THE MISTAKE OF METHOD IN CHILD-EDUCATION.

"READ AND YOU WILL KNOW."

"A child takes in the impressions of the world outside mainly through the gateways of the senses which feed the reason and are ultimately fed by it. An adult on the other hand, depends more upon his reason than on his sense-perceptions. In the child the reason is still undeveloped and the senses assert their undisputed authority. In the adult senses are thrown to the back-ground and reason holds absolute sway. There is thus a life-long schooling—though the means with which knowledge is acquired are different at different stages of life. And the mistake that is generally committed in education is to confuse the method of one with that of the other. We



try to explain in the terms of our consciousness in which the elements of reason are predominent, the tendencies of the child-mind in which the perceptual aspects of development are the prevailing traits. We cannot bring ourselves to think as the child thinks—the wealth of our knowledge and associations make us quite blind to the true perspective of the child-mind. The possession of a philosophical mind may be an enviable thing but to project it too much into the youthful mind is folly. If you cannot come down to the level of the child your pedagogy is a serious encumbrance and not a desirable possession."

---

## பாலபோத சிக்ஷையில் நேரும் ஓர் பெருந் தவறு.

போதனாமுறையில் சிக்ஷை, தீக்ஷை யென்று இரண்டுண்டு. சிக்ஷை யென்பது (Method) பழக்க வழக்க முறையைச் சுட்டும். தீக்ஷை (Principle) யென்பது உண்மையை ஓர்ந்துணரும் முறையைச் சுட்டும். குழந்தைகளுக்கு மனம் விரியவேண்டி அவர்கள் புலன்களுக்குத் தென்படும் விஷயங்களை அவர்கள் நன்றாகக் கவனித்து விஷயஞானம் பெறும் முறை (Object-lessons) போதித்தல் சிக்ஷையாகும். புலனறிவாலுணர்ந்து கிரஹித்ததை விசார புத்தியால் (Reason) ஆராய்ந்து அவற்றின் நித்தியமான குணங்களை உபாத்தியாயர் சொல்லும் குறிகொண்டு "குரு சொல் ஒரு சொல்" என்றபடி அவர் உபதேசலக்ஷியத்தில் மனம் குவிந்து பற்றி அதனுண்மையை லக்ஷிய லக்ஷண முறைபற்றி உள்ளறிவால் ஓர்ந்துணர்ந்து ஐயந்திரிபற அதில் திடம் பெறல் தீக்ஷையாகும். சிக்ஷை யென்பது பயிர்ச்சி சாதனம். தீக்ஷை யென்பது உணர்ச்சி சாதனம். பயிர்ச்சியும் உணர்ச்சியும் வேறல்ல. உழுது பண்படுத்திய நிலத்தில் விதைவிதைத்துக் களைபிடுங்கி நீர்ப்பாய்ச்சிப் பழுதுவாராமல் வளர்த்தல் சிக்ஷை சாதனமாகும். விதைத்து முளைத்தது பழுதுவராமல் வளர்ந்து முதிர்ந்து அதற்கு இயல்பான பலனைத்தரப் பார்த்து அதையுள்ளபடி யோர்ந்துணரல் தீக்ஷா ஸாதனமாம். எள்ளுப் போட்டால்கொள்ளு விளையாது என்பது தீக்ஷா ஞானமாகும். விதை விதைக்குமுன் நிலத்தையுழுது பண்படுத்திப் பரம்படித்துப் பக்குவமாக்கவேண்டும், பின்னர் களை பிடுங்கி நீர்ப்பாய்ச்சி மாடு மேயாமலும் பக்ஷி மிருகங்கள் பயிரை யழிக்காமலும் பாதுகாக்கவேண்டுமென்பது சிக்ஷா ஞானமாகும்.

பாலபோத சிக்ஷையில் (in the Method of Child-Education) ஓர் பெருந்தவறு நேருவது வழக்கமாயிருக்கிறது. அது பிள்ளைப்பேறு பெற்ற விவேகத்தாய்க்கு தெய்வீகமாய் நேருவதில்லை யானாலும், கூலிக்கு மாரடிக்கிற வழக்கமாய், வயிற்றுப் பிழைப்பை யுன்னி, வாங்குகிற சம்பளத்துக்கு வேலை செய்யவேண்டுமென்கிற நிர்ப்பந்தத்தின்மேல் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் மறித்துவைத்து, பாடம் சொல்கிற வியாஜம்கொண்டுகாலத்தைப் போக்கும் உபாத்தியாயர்களுக்கு அந்தத்தவறு நேருவது மிகவும் சகஜமாயிருக்கிறது.

குழந்தை-மனம் முன் விவரித்தபடி புலன் வழிசென்று விஷயப் பற்றினாலிழுக்கப்பட்டு விஷயங்களைக் கிரஹிக்கும் சுபாவசக்தி வாய்ந்திருக்கிறது. உலகத்தில் அடிபட்டு வளர்ந்தவர்களுடைய முதிர்ந்த-மனம் விஷயப்பற்றை நீக்கி விசாரபுத்தியினால் "வஸ்து நிச்சயம்" என்கிற விஷயங்களின் உண்மையைக் கிரஹித்துக்கொண்டு விளங்கிவருகிறது.

குழந்தை-மனம் விஷயப்பற்றினால்முதிர்ந்து விஷயஞானத்தால் விசாரபுத்தி யேற்பட்டு விருத்தியடைந்து வருகிறது.

முதிர்ந்த-மனம் விசார-ஞானத்தால் விவேக முதிக்க விஷய நிக்ரஹம் செய்து இந்திரியங்களையடக்கியாண்டு ஜிதேந்திரியத்துவம் (இந்திரியஜயம்) அடையப் பார்க்கிறது. பிரவிருத்திமார்க்கத்தில்முதிர்ந்தவர்கள் குழந்தை மனத்தின் சுபாவமறியாது தங்களுடைய விரிந்த ஞானத்தாலுணர்ந்ததைக்கொண்டு குழந்தை மனத்தின் சுபாவத்துக்கு விரோதமாகத் தமது

ஸ்வயஞானத்தைக் குழந்தைமனதின் விஷய தரிசன ஞானமாகப் பாவித்து அவர்கள் மேலேற்றி வில்லங்கம் விளைக்கிறார்கள். இவர்களுக்கு விசாரஞானத்துக்கும் விஷயஞானத்துக்குமுள்ள வித்தியாஸம் தெரியாமையால் தாங்கள் அஹமுகவிசாரத்திலறிந்ததை குழந்தைகளின் பஹிர்முகதரிசனத்தோடொத்ததாக மயங்கி மாறாட்டம் செய்கிறார்கள். இதனால் குருவுக்கும் சிஷ்யனுக்கு மிருக்கவேண்டிய பரஸ்பர மனவொற்றுமை தவறிப்போகிறது. மனம் பேதித்தால் போதனாசக்தி குறையும். போதனா சக்தி குறையும்போது கிராஹிய சக்தியும் குறையும். இதனால் போதிக்கும் வாத்தியாருக்கும் படிக்கும் பிள்ளைகளுக்கும் இருக்க வேண்டிய மனராசியற்றுப் போய் அன்பும் ஆதரவும், நேசமும் விசுவாசமுமிருக்கவேண்டியதற்கு பதிலாக துன்பும் தூற்றலும், அச்சமும் அருவெறுப்பும் உண்டாகிறது. இதையுதாஹரித்துக் காட்டவேண்டியே "நெடுமால் திருமருகா" என்கிற விக்னேசுவர ஸ்துதியைப் பள்ளிப்பிள்ளைகள் வித்தியாசம் பாராட்டி

"நெடுமால் திருமருகா
நித்தியம் நித்தியமுன்னிழவா!
வாத்தியார் சாகாரா
வயிற்றெரிச்சல் தீராதா!"

என்று விபரீதபாவனை செய்வதாகக் காட்டியிருக்கிறார்கள்.

பாலபோத சிக்ஷை, குழந்தைக்குத் தாய் பாலமுதமூட்டுவதுபோல்,குழந்தைகள் மனம் நோவாமல், வாசிக்கும் சிரமம் தெரியாமல், அவர்களுடைய சுபாவமறிந்து இயற்கை விரோதமின்றி நளினமாய் எதையும் லீலாவினோதமாக நயம்பெறத்தானே போதிக்கவேண்டும். விசாரஞானத்துக்கும் விஷயஞானத்துக்குமுள்ள பேதம் தெரிந்து குழந்தைகள் மனோநிலைக்குத்தக்கபடி, போதகர் படியிறங்கிப் போதித்தால், இந்த வீண் வில்லங்கமெல்லாம் விளையாது.

விசாரஞானமும் தத்துவஞானமும் விசேஷபாக்கியங்கள் தான். ஆனால் எதையும் பக்குவமறிந்து போதிக்கவேண்டும். பெரியவர்களுக்கு ஆகாரமாகும் அன்னம் பச்சைக் குழந்தைக்கு ஊட்டலாகுமா? ஆகாதுபோல், விஷயஞானத்தால் முதிர்ந்த மனதுக்கு விசாரபுத்தியினுண்டாகி விளங்குவது எதையும் புலன்வழி சென்று கிரஹிக்கும் சுபாவ கவனசக்தி வாய்ந்த குழந்தைகள் மனதுக்கு நிதரிசனமாக விளங்காது. ஆகையால் வாலிபர்களுக்கு வேதாந்த விசாரமும், நிவிருத்திமார்க்க உபதேசமும் கூடாதென்பது ஸர்வ ஸம்மதம்.

"வாலிபமும் காயிதமும் வாய்ந்த
வுருக் காட்டுமென்று
மேலறிவாய்த் தான் வளர்க்க
வேணுமிக்க கல்வியென்றார்!"

பெற்றதாய்க்கு தெய்விக புத்தியினால் பிள்ளையை வளர்க்கும் பேரறிவு தானே சித்திக்கிறது. இது அன்பு காரணத்தினால் அன்பின் சக்தியாகிய அருட் பிரஸாதமாகும். பெற்ற தாய்க்கு மேலே சொன்னபடி 'வாலிபமும் காயிதமும் வாய்ந்தவுருக் காட்டுமென்று" அதாவது விஷயஞானம் இலகுவில் படியும்படியான பக்குவம் வாய்ந்த இளமனதிற்கு விசார புத்தியின் சாதக சாதனமில்லையென்றுணர்ந்து,—"மேலறிவாய்த் தான்வளர்க்க வேணும் மிக்க கல்வி" யென்றால், சம்பளத்துக்குச் சேவிக்கும் உபாத்தியாயர்களுக்கு எவ்வளவு விவேகமும் வாத்ஸல்யமும் உயர்ஞானமும் இருக்கவேண்டாமென்பதை இதைவாசிப்போர்தாமே ஊகித்துணர்ந்து கொள்ளவேண்டும்.

---

## NATURAL SIMPLICITY THE *SINE QUA NON* OF CHILD-EDUCATION.

"What is required for the education of the child-mind is quite simple. It is in encouraging the natural activity of the body and senses essential to the harmonious development of the body and mind, guarding against lop-sidedness of any kind in the drawing out of its soul-life. No elaborate process, nor any artificial contrivance is wanted here. Nature's laws are simple and the education that will



help on the processes of nature must also be very simple. A most intricate system often defeats its own purpose. The child-mind is not a complicated study. It is an impulsive phenomenon backed by a dawning reason. The Educator in all his work must take note of this broad fact and should always try to develop the latter with the help of the former. Impulse is not a mean factor in education and it should be utilised for the attainment of a noble end, viz., the Development of Reason which Locke describes as "the candle of the Lord set by Him in men's minds."

"Simple truth is as complex as a woman."—*Carmen Sylva, (the Literary Queen of Roumania).*

---

## "அம்மா நீ காட்டுவது சுலபவழி, இருத்துவது கடினநிலை".

"பிரகிருதியினுண்மையில் பரமனைக்காணலாம்." பிரகிருதியென்பது ஆனந்தத்தாய். அவள் அறிவுருவாயிருக்கிறாள். அறிவு என்பது அறியும் சக்தி. அறியும் சக்தியெல்லாருக்கும் உண்டு. ஆனால் அறியும் வழி தான் அவரவர்க்குத்தக்கபடி வேறுபட்டிருக்கும். குழந்தைக்கு அறியும் சக்தியிருக்கிறது. பிறந்தது முதல் அது அந்த சக்தியை உபயோகித்துக் கொண்டேயிருக்கிறது. அறிவின்றிச் செயலில்லை. ஆதலால் குழந்தைகளுக்குப்பாலபோதம் செய்வதில் அனுஷ்டிக்க வேண்டிய விதி வெகு சுலபம். அது என்ன வென்றால் சுபாவத்தை யொட்டி அது அறியும் வழி யெதுவோ அதையறிந்து, அதன் மனோநிலையறிந்து, மனோபக்குவமறிந்து அதன் மனதிற்குப் படக்கூடியதை அது கிரகித்துக் கொள்ளவும், கிரகித்துக்கொண்டதை நன்றாகத் தெளிவாய் அறிந்து கொள்ளவும் நாம் பழக்க வேண்டியது. இதற்கு சுபாவ வழி யொன்றே மிகச் சுலபமானது. இயற்கை விரோதமாகச் செய்யும் ஏற்பாடுகளெல்லாம் பயனற்றதாகும். இயற்கை வழி போவது எல்லாருக்கும் எளிது. செயற்கை வழி இயற்கை விதியை யொட்டியுள்ள மட்டுமே பயன்படும். இயற்கைவிரோதமாகவுள்ள செயற்கைவிதி பயன்பட மாட்டாது. குழந்தை மனம் விகாரமற்றது. அதில் கலப்பு கல்மிஷம் ஒன்றுமில்லை. காகிதம் வெளுப்பாயிருந்து எழுதும் குறியைத் தரித்து நிற்பதுபோல் குழந்தை மனமும் சுத்தமாயிருந்து புலன்வழி செல்லும் விஷயத்தோற்றங்களை ஸம்ஸ்காரமாகத் தாங்கி நிற்கும். இந்த ஸம்ஸ்காரங்கள் தானே ஸ்மரணை அல்லது ஞாபகரூபமாக வேணும் போதெல்லாம் உதித்தெழுந்து விசாரபுத்திக்கு வேண்டிய ஆதாரங்களை யுண்டுபண்ணும். விசாரபுத்திக்கு ஆதாரமாய் வேண்டியது விஷயஞானம். விஷயஞானமில்லாவிட்டால் விசாரபுத்தியில்லை. விஷயஞானம் என்பது Knowledge of Sense Impressions. விசாரபுத்தியென்பது Reason. குழந்தைமனம் விஷயப்பற்றினால் இழுக்கப்பட்டு விஷயானுபவத்தைக் கிரகிக்கும். இப்படி மனதினால் கிரகிக்கப்பட்டு ஸ்மரணை அல்லது ஞாபக ரூபமாய் சித்தத்தில் பதிந்திருக்கிற விஷயஞானம் விசாரபுத்தி யுண்டாவதற்கு இன்றியமையாதது. ஆகையால் குழந்தைகளுக்கு விஷயஞானமுண்டாகச் செய்ய வேண்டியது முக்கிய அவசியம். இதற்குப்பிரகிருதிவித்தை (Nature-Study) இன்றியமையாதது. இதை (Object-lessons) விஷயஞானபாடம் என்று சொல்லி குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் அப்படி சொல்லிக் கொடுக்கும் பெரியவர்கள் தாம் விசாரஞானத்தாலுணர்ந்ததை அவ்விஷயபாடப்பொருளின் மேல் ஏற்றாமல், குழந்தைகள் புலனுக்குத் தென்படுவதாகியவைகளையே குறிப்பிட்டு அவர்கள் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும். புலனறிவுக்கு எட்டாதவைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லி மனப்பாடம் செய்யப்பண்ணி அவர்கள் மனதைக் குழப்பி கிராஹியசக்தியைக் கெடுக்கக்கூடாது.

மனதுக்கு விஷயப்பற்று என்னும் ஆகர்ஷண சக்தியினால் விஷயங்களைத் தாவிப்பற்றி அவ்விஷயந்தானாக நின்று மாறும் சக்தியுண்டு. இப்படி மனதுக்கு சுபாவமாகவுள்ள தாவிப்பிடிக்கும் சக்தியை (Impulsive Power) என்று சொல்லுகிறதுண்டு. இதையே நாம் உற்சாகம் என்று சொல்லுகிறோம். மனதுக்கு உற்சாகம் உண்டாவது சகஜம். அந்த உற்சாக சக்தியைக்கொண்டு தான் நாம் குழந்தைகளுக்கு விஷயஞானம் கற்பிக்கவேண்டும்.

இதோ பிள்ளையைப் பெற்ற தாயார் தன் பசுங்குழவியை மடியில் வைத்து விளையாடிக்கொண்டிருக்கிறாள் பாருங்கள். குழந்தைக்கு இன்னும் மூன்று மாசமாகவில்லை. பச்சைப் பாலகனானாலும் அக்குழந்தை குதித்துக்குதித்து விளையாடுகிறதைப் பாருங்கள். அதோ தெரிகிற விளக்கு வெளிச்சம் குழந்தையின் கண்களின் வழியாக நேத்திரேந்திரியத்தில்பட அது மனதிற்பட்டு பிரகாசரூபத்தை "வாய்ந்த வுரு" வாகக்கொள்ளச் செய்கிறது. அதனாலுண்டாகும் மனவெழுச்சி குழந்தைக்குக் களிப்பையுண்டுபண்ணி தேஹத்தை யெழும்பியெழும்பிக் குதிக்கச் செய்கிறது. இது மனதின் உற்சாகத்துக்கேற்ற தேகமுயற்சியாம். அது "அத்தா-இங்கா" என்று சப்தம் செய்து குதிக்கும் பொழுது தாயார் தானும் கூட உளமகிழ்ந்து அவ்வித சப்தம்செய்ய, அந்தச்சப்தம் காதின் வழியாகக் கரணேந்திரியத்திற் பட்டு மனதின் சப்தமாத்திரையைக் கிளப்பி துவனியாக ஒலிக்கச் செய்யக், குழந்தை அதனால் குதூஹலம் கொண்டு குதிக்கிறது. அது என்ன சப்தம் செய்கிறதோ அதைவிடத் திருத்தமான வார்த்தைகளைச் சொல்லி தாயார் சப்தம் செய்தால் அது குழந்தை மனதுக்கு விஷயமாகிறதில்லை. ஆதலால் அதைக் கவனிப்பதில்லை. குழந்தை செய்யும் சப்தம் போல் தாயார் துவனிசெய்து அகமகிழ்வோடு முகம் மகிழ்ந்து அக்குழந்தையைப்பார்த்தால் அது களுக்கென்று சிரிக்கிறது பாருங்கள். இது தான் குழந்தைகளுக்குப் போதிப்பதிலுள்ள மர்மம். இதற்கு அனுதாபசக்தி யென்பார்கள். அனுதாப சக்தியோடு மேலறிவும் கூடியிருக்க வேண்டும். மேலறிவுதானே தெய்விகபுத்தியாகும். (தெய்விகபுத்தி = Intuition).

தாயார் குழந்தையோடு விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஐந்து வயதுக்குழந்தை அப்பசும்பாலனோடு தாயைப்போல் தானும் அதன் பக்குவமறிந்து விளையாடி அதை மகிழச்செய்கிற விசேஷத்தைப் பாருங்கள். இந்த வித்தை அக்குழந்தைக்கு எப்படி வந்தது? இயற்கையமைப்பினால் அது தானாய் வந்தது. அப்படியென்றால், அறிவு ஒன்றேயாதலால் அறியும்சக்தியும் ஒன்று. ஆனால் அதன் கருவியாகிய மனசு இந்திரியங்களின் பக்குவாபக்குவம் அனந்தம் விதமாக மாறுபட்டு நிற்கும். இந்தப்பக்குவாபக்குவ பேதமறிந்து குழந்தை மனம் பூரிக்கப் போதிப்பதொன்றே சுலபவழி. இயற்கை விதியும் அதுவே. ஆகையால் தான்,

"சத்தியமே நன்மார்க்கம் தவறுவரும் மற்றெதிலும்,
வித்தையிதில் லாப மெத்த, விசுவாசம்மெத்தமெத்த"

என்று விவேகத்தாய் உண்மை யுணர்ந்தோதியுள்ளவாறு இதை யெல்லாரும் கைப்பிடியாகப் பிடித்தொழுகல் வேண்டும்.

---

## READINGS FROM THE BOOK OF NATURE.

### The Wondrous Working of the Heart.

### A Lesson in Nature Study.

"Medical science is now so far advanced that what appears to be miracles are possible— They make the heart itself take photographs— the electrical beat of your heart, the machanical beat, the pulse, and even the sounds made by your heart can be photographed—your heart can also be made to write a chart itself, to show how it is working before and after exercise.



" Every muscle when it contracts," said Dr. Strickland Goodall in a very interesting lecture at the Institute of Hygiene, " generates an electric current which starts at the point of contraction and travels along slightly in front of it. In the case of the heart, this current can be led off from the body to a galvanometer, and the deflection of it can be photographed." That is to say, a strip of sensitive paper is left exposed, and the heart of the patient in another room does the rest. It is really the heart itself that takes the photograph.

Dr. Goodall gives some rather alarming details of the work done by the heart under normal and abnormal conditions. " Every time the heart contracts it does enough work to raise a 2lb weight a foot high, or, in technical language, it does two foot pounds of work. When it is considered that the heart does this from 70 to 140 times per minute for years, some idea may be formed of the enormous amount of work the heart can do."—Dr. *Strickland Goodall's lecture before the Institute of Hygiene.*

## THE WONDROUS WORKING OF THE HEART.

### A Lesson in Nature Study.

### பிரகிருதி வித்யாம்சம்.

### ஹிருதயம் செய்வேலை விசித்திரம்.

ஹிருதயம் என்றால் இரக்தாசயத்துக்கு ஒரு பேர். அந்த ரக்தாசயத்துக்குள்ளே அதன் சக்திக்கு ஆதாரமாயும் உறைவிடமாயுமிருக்கும் அநாஹதஸ்தானமாகிய தஹராகாசத்துக்கும் அது பேர். தஹராகாசம் என்றால் சிறு ஆகாசம் அதாவது குறுகிய ஆகாசம். சிறு × அம்பலம் = சிற்றம்பலம் என்று ஆயிற்று.

இந்த இரக்தாசயமாகிய ஹிருதயம் ஸதா வேலை செய்து கொண்டேயிருக்கிறது. அது சுருங்கி விரிந்து இரண்டுக்கும் நடுவே சற்று இளைப்பாறி வேலைசெய்கிறது. லண்டன் சுகாதாரஸ்தாபன (Institute of Hygiene) சங்கத்தில் டாக்டர் ஸ்ட்ரிக்லாண்ட் கூடால் என்பவர் செய்த ஓர் உபந்நியாஸத்தில் சில உண்மைகளை நிரூபித்துப் பேசினார். தேஹத்திலுள்ள தசை நரம்புகள் (Muscles) ஒவ்வொன்றும் சுருங்கி விரியும் சக்திவாய்ந்திருக்கிறது. அது சுருங்




கும்போதெல்லாம் மின்சாரம் உண்டாகிறது. அந்த மின்சாரசக்தி சுருங்கு மையத்திலிருந்துண்டாகி அதற்குச் சற்று முன்னிட்டுச் செல்வதாயிருக்கிறது. இரக்தாசயத்தின் தசை நரம்புகள் சுருங்கும்போது உண்டாகும் மின்சாரசக்தியின் ஓட்டம் தகுந்த உபாயங்களால்

தேஹத்திலிருந்து வெளியே வெகு தூரத்திலுள்ள மின்-சக்தி-மாத்ரை யந்திரத்துக்குக் (Galvanometer) கொண்டு போகப்படலாம். அங்கேயது ரக்தாசயம் செய்யும் வேலையைப் படமெடுத்ததுபோல் சித்தரித்துக் காட்டும். இந்த வேலை ஹிருதயம் தன்னால் தானே ஆகிறது. படம்பிடிக்கிறதற்காக உபயோகிக்கிற உருவமர்சக்திக் காகிதம் (Sensitive paper) ஒன்றை அந்த யந்திரத்தினுள் அமைத்து வைத்திருந்தால் அது இரக்தாசயத்திலிருந்துண்டாகும் மின்சக்தியிலிருந்து இரக்தாசயத்தின் படம் அதில் தோன்றும்படி செய்கிறது. இது உண்மையில் இரக்தாசயத்தின் படம் பிடித்ததுபோலவே யிருக்கிறது.

ஒரு மனிதன் பேசுகிற குரலைக் கேட்டவர்கள் மறுபடியும் அக்குரலிலிருந்து அந்த மனிதன் வரவை அவன் உருவத்தைப் பார்க்குமுன் மனதில் திட்டம் செய்துகொள்கிறதை தினம் அனுபவத்தில் காண்கிறோம். அதேமாதிரி,

"மின்னுருத்தானே தன்னுருக்காட்டும்."

மின்சாரம் தேஜோமயமானது. அதற்கு ரூப சக்தி இயல்பாயுண்டு. ஆகாசத்திலிருந்து சத்தம் உதித்தாற்போலும், வாயுவிலிருந்து ஸ்பரிசம் உதித்தாற்போலும், தேஜஸ் (ஒளி) யிலிருந்து உருவெளி தானே உண்டாயமையும். அப்படியே நீரிலிருந்து ரசமும், நிலத்திலிருந்து கந்தமும் (வாசனையும்) உண்டாகிறது. இவையெல்லாம் சாஸ்திர உண்மைகள். சாஸ்திர விசாரத்தால் மட்டுமன்றி தகுந்த கருவிகளாலும் யந்திரங்களாலும் நிரூபித்துக்காட்டக் கூடியவை.

Unit of Work : வேலைசெய் மாத்ரையளவு

டாச்டர் கூடால் என்பவர் ஹிருதயம் செய்வேலையைப்பற்றி சில விவரங்கள் ஆராய்ந்துணர்ந்துதிட்டமாய்த்தெரிவித்திருக்கிறார். அவருடைய சித்தாந்தத்தை வெளியிடுமுன் வேலையை அளக்கும் அளவை மாத்ரையைக்குறித்து ஒருவார்த்தை சொல்லவேண்டி யிருக்கிறது. ஒரு பவுண்டு கனமுள்ள வஸ்துவை ஒரு அடி உயரம் தூக்குவதற்கு வேண்டிய முயற்சிக்கு "ஒரு அடி பவுண்ட் வேலை"(One foot pound of work) என்று சொல்கிறது. இப்படித் தூக்குவதில் பூமியின் ஆகர்ஷண சக்தியை வெல்வதற்கான நேரெதிர் சக்தி உபயோகிக்கவேண்டியிருக்கிறது. (See article on 'Forces of Gravitation' in March No. for 1914) பூமைய ஆகர்ஷணசக்தி ஒரு பவுண் நிறையுள்ள வஸ்துவை இழுத்துக்கொண்டிருக்க, அதற்கு நேர் எதிராக அந்தச் சக்தியை வெல்வதற்கு வேண்டிய அளவு சக்தியை உபயோகித்தாலன்றி அந்த கனமுள்ள பதார்த்தத்தைத் தூக்க முடியாது. இரண்டு பவுண்ட் நிறையுள்ள வஸ்துவை ஒரு அடி உயரம் தூக்கவும், ஒரு பவுண்ட் நிறையுள்ள வஸ்துவை இரண்டு அடி உயரம் தூக்கவும் பிடிககும் சக்திக்கு "இரண்டடி பவுண்டு"(2-Foot Pounds)வேலையென்று சொல்கிறது.

* * * *

## THE WORK OF THE HEART.

### ஹிருதயம் செய்வேலை.

இப்பொழுது ஹிருதயம் செய்வேலையை இந்த அளவைக்கணக்குப்படி யெடுத்துக் குறித்து விளக்குவோம்.

இரக்தாசயம் (ஹிருதயம்) சுருங்கும் போதெல்லாம் இரண்டுபவுண்ட் நிறையுள்ள பொருளை ஒரு அடி உயரம் தூக்குவதற்கு வேண்டிய அளவு சக்தி உபயோகப்படுகிறது. அதாவது, அது "2-அடி-பவுண்டு வேலை (2 Foot Pounds of Work) செய்கிறது. இப்படி ஒரு நிமிஷத்துக்கு 70 முதல் 140 தரம் வரையில் சுருங்கிவிரிந்து வருஷக்கணக்காய் ஓயாமல் வேலைசெய்து வருகிற ஹிருதயம் எவ்வளவு வேலை செய்கிறதென்று பாருங்கள். ஒரு நிமிஷத்துக்கு 140-அடி பவுண்டு முதல் 280 அடி பவுண்டுவரை வேலைசெய்கிறதென்றால் ஒரு



பக்ஷத்தில் (15-நாளில்) அது அதைப்போல் 21,600 மடங்கு வேலை செய்யும். (21,600 என்பது மூச்சுக் கணக்கு). ஒரு தினத்துக்கு இவ்வளவு என்று கணக்குப் பார்க்காமல் ஒரு பக்ஷத்துக்கு இவ்வளவு என்று கணக்குப் பார்ப்பதால் ஹிருதயம் செய்வேலைக் கணக்கை மூச்சுக்கணக்கோடு பொருந்த அமைத்து ஆயுள் கணக்குப்பார்க்கும் முறைப்படி கணித்துப்பார்ப்பது இலகுவாகும். 60 நிமிஷம் கொண்டது 1-மணி ($2\frac{1}{2}$ நாழிகை); 60 மணி கொண்டது ஒரு ராசிமானம் ($2\frac{1}{2}$ நக்ஷத்திர நாள்); 6-ராசிமானம் கொனடது ஒரு பக்ஷம், இரண்டு பக்ஷம் கொண்டது ஒரு (சந்திரமான) மாசம்.

* * * *

## HEART-STRAIN.

### மிதமிஞ்சின வேலையாலுண்டாகும் பிசகு.

ஹிருதயம் நிமிஷத்துக்கு 60 முதல் 140 தரம் வரையில் சுருங்கி விரிகிறது என்று சொன்னோம். மிதமிஞ்சின வேலை பலவீனத்தைக்கொடுக்கும் என்பது சுபாவதர்மம். நிமிஷத்துக்கு 70 தரம் அடிக்கும் ஹிருதயம் அவ் வளவுக்கு மிஞ்சி நிமிஷத்துக்கு 156 தரம் அடித்தால் அப்பொழுது அதன் தசைநரம்புகளுக்கு அதிகமாய் பிகு ஏற்பட்டு ஆபத்துண்டாகலாம் என்பது சாதாரணம். இரக்தாசயத்தின் தசைநரம்புகளுக்கு அதிக பிகுவேறினால் அவை தாங்கமாட்டா. சென்னை ரோட்டில் டிராம்வண்டி யோடுகிறதை ஓடிப்பிடிக்க வேண்டுமென்று ஒருவர் ஓடும்பொழுது அவர் ஹிருதயத்துக்குண்டாகும் வேலை எவ்வளவென்று கணக்கிட்டுப் பார்த்ததில் அவர் இரக்தாசயத்துக்கு எவ்வளவு அதிக வேலை கொடுக்கிறரென்பது தெரியவந்தது.

ஆரம்பத்தில் நிமிஷத்துக்கு 76 தரம் அடித்துக்கொண்டிருந்த ஹிருதயம் அவர் ஓடிப்போய் டிராம்வண்டியைப் பிடித்தேறினதும் நிமிஷத்துக்கு 180 தரம் அடித்துக்கொண்டிருந்தது. அதாவது நிமிஷத்துக்கு 369 புட்-பவுண்ட்ஸ் வேலை செய்வதாகிறது.

எப்படி யென்றால், 360 பவுண்ட் நிறையுள்ள பளுவை நிமிஷத்துக்கு ஒரு அடி உயரம் தூக்கும் வேலை செய்து வருகிறது. அது டிராம்வண்டியை ஓடிப்பிடிப்பதற்கு முன் சாதாரணமாயிருந்த காலத்தில் செய்த 76-தரம் அடித்தல் அல்லது 142-புட் பவுண்ட்ஸ் வேலையைவிட இரட்டிப்பு மடங்குக்கு மேலாகிறது. $2\frac{1}{4}$ மடங்குக்கு மேலும் $2\frac{1}{2}$ மடங்குக்குக் கீழுமாகிறது. திடீரென்று இவ்வளவு அதிக வேலையிட்டால் இரக்தாசயத்தின் தசைநரம்புகள் பிகுவேறிப் பங்கப்படக் கேட்பானேன்.

இப்படி பரபரத்து ஓடுவதால் மட்டுமன்று; கோபம், தாபம், சந்தோஷம், வெறி முதலிய மனோவிகாரங்களாலும் ஹிருதயம் அடிப்பது அதிகமாகித் துடிப்பு மேலிடக்கூடும். அடிப்பதற்கும் துடிப்பதற்கும் வித்தியாசமென்னவெனில் முன்னதில் சுருங்கல் விரிதலாகிய இரண்டுக்கும் நடுவில் இளைப்பாறுங்காலம் அதன் களை நீங்குவதற்குப் போதுமானதாயிருக்கும். அடிப்பதின் வேகம் அதிகமாக ஆக இளைப்பாறுங்காலம் குறைகிறது. மூச்சுவிடுவதிலும் அப்படியே ரேசகபூரக கும்பகலக்ஷணங்களோடு கூடிய மூச்சு "ஓட்டம், பயம், ஆபத்து" அதிகரித்த காலத்தில் கும்பகம் குன்றி "இரைத்தல்" என்கிற குணம் ஏற்படுகிறது. இரைத்தல் அதிகப்பட்டால் மேல் மூச்சுவாங்கும். அதற்குச்சரியாக ஹிருதயமும் படபடவென்று அடித்துத்துடிக்கும். அதனால் இரக்தாசயத்துக்கும் மற்ற உறுப்புகளுக்கும் பலஹீனமுண்டாகும்.

* * * *

## "MENS SANA IN CORPORE SANO."

### ஆயுராரோக்கிய திடகாத்திரம்.

ஆகையால் ஆயுராரோக்கியத்தை விரும்புகிறவர்கள் திடகாத்திரமாயிருக்க வேண்டும். திடகாத்திரமாயிருக்க மூச்சும் ஹிருதயமும் சரியாய் வேலைசெய்ய வெண்டும். சரியாய் வேலைசெய்வதாவது உசுவாச நிசுவாசம், அல்லது சுருங்கள்-விரிதல், இரண்டிற்கும் மத்தி

யில் கும்பகம் அல்லது இளைப்பாறல் முறைப்படி யேற்பட்டு வரல் வேண்டும். ஆதலால் தான் பிராமணக்குழந்தைகளுக்கு (ப்ரஹ்மத்தை அறிவதற்குப் பிறந்த குழந்தைகளுக்கு) 7-வயதில் உபநயனம் செய்து பிரஹ்மோபதேசம் செய்யவேண்டுமென்று ஸம்ஸ்காரம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குப் பிராணாயாமம் (மூச்சுவிடக்கற்று மூச்சையடக்கியாளும் வித்தை) காயத்ரீஜபம் இரண்டும் இன்றியமையாத சாதனங்களாம்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு கஸரத்கூடம (Gymnasium) எப்படியோ அப்படிப் போன்றது பிராணாயாம வித்தை மனதையடக்க வேண்டிய வித்தைகற்பவர்களுக்கு. அலையுமனத்தை யடக்கியாளலே எல்லா வித்தைக்கும் முடிவான பலன். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையாரும்.

மனதும் சுவாஸமும் குதிரையும் லகானும் போல் சம்பந்தப்பட்டிருக்கிறது. மனதை யடக்கக்கற்றால் சுவாஸம் தானே வசியப்பட்டு வரும், "மன்மனமெங்குண்டு வாயுவமங்குண்டு." குதிரையை அடக்கியாளத்தெரிந்தால் லகான், சேணம் முதலிய உபஸாதனங்கள் தேவையில்லை. அது போல் மனதையடக்குவதற்கு, உள்ளபடி சரியாகச் சுவாஸம் விடப்பழகுதலும் ஹிருதயம் மூறைதப்பாது வேலை செய்யப்பழகுதலும் இன்றியமையாத உபசாதனங்களாம். தேஹசுகத்துக்கும் இவை இன்றியமையாத சாதனங்களாயிருக்கின்றன. ஏனெனில் உலகத்திற்குக் காற்றும் நெருப்பும் போல், ஜீவதேஹத்துக்கு சுவாஸமும் ஹிருதயமும் சுருங்கிவிரிவது அவசியமா யேற்பட்டிருக்கின்றது. ஹிருதயம் தன் வேலையைச் சரிவரச் செய்யாவிட்டால் ரக்த ஓட்டமும் தாதுநடையும் தளர்ந்து நின்றுபோம். சுவாஸாசயம் சரியாக வேலை செய்யாவிட்டால் ரக்த பரிசுத்தம் குறைந்து தசை நரப்புகளுக்குள்ள சுருங்கி-விரியும் தன்மை குறைந்து மறைந்துவிடும். தசைநரம்புகள் (Muscles) பலம் குன்றினால் ஹிருதயம் சரியாக வேலை செய்யாது. இவ்விரண்டுக்கும் தேஹத்தில் ஆதாரமாயிருப்பது தஹராகாசத்திலுள்ள சுயஞ்சோதியாம் பரஞ்சுடரொளி. இந்த இடத்திலே தான் வாயுசக்தி ஓயாது விரிந்து குவிந்து அமர்ந்து 'தத்தோம்' (தத் + துவம் × ஓம்), ததிங்கணத்தோம்" (தத் + ஈம் + கண: + துவம் + ஓம்) என நடிக்கிறது. அது நடிக்க எல்லாம் நடைபெறுகிறது. இதையேபுறத்தில் "நடராஜதரிசனம்" என்று சொல்லி வருஷத்திற்கொரு தரம்ஜ திகமுறையாக உற்சவம் நடத்திக் காட்டுகிறார்கள்.

---

## LORD HARDINGE'S BIRTHDAY. THE CHILDREN'S FESTIVAL.

### ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி.

#### குழந்தைகள்கொண்டாடும் மஹோற்சவம்.

1914-ம் ௵ ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி யுற்சவம் ஸிம்லாவிலும் வேறு சில இடங்களிலும் மேமீ 18-உ யும் சென்னை முதலான வேறு சில இடங்களில் ஜூலை ஆகஸ்டு மாதத்திலும் கொண்டாடப்படும்.

சித்திரை-வைகாசி மாசங்களில் கோடைகாலத்திற்காகக் கோர்ட்டுகளும் பள்ளிக்கூடங்களும் சாற்றப்பட்டிருப்பதால், குழந்தைகள் விடுமுறை காலத்தைக் கழிக்க அவரவர்கள் ஊருக்குப் போயிருப்பார்கள். போயிருந்தாலும் அங்கே பள்ளிப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் வீட்டில் விருந்துண்டு ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி கொண்டாடி வரவேண்டியது அவசியம். ஏனெனில் ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் குழந்தைகளுக்கு உண்மையான வித்யாதனத்தை வழங்கினவராவர். அவர் கல்கத்தாவிலிருக்கும் பொழுது "ஒற்றிற்றெரியா மறைப்புறத்தோர்துமென" மாறுவேஷம் பூண்டு, கல்கத்தாவிலுள்ள 'ஸ்டூடண்ட்ஸ் ஹோஸ்டல்களில்'



வசிக்கும் பிள்ளைகளோடு தாராளமாய்க் கலந்து பேசிப் பழகி அவர்களுடைய உள்ளக்கருத்தைஉள்ளபடி யறிந்துகொண்டதால், இந்தியாவில் வித்தியாபிவிர்த்தி விஷயமாய்ச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைத்திருந்தச்செய்ய வேண்டுமென்று முயற்சி யெடுத்துக்கொண்டு பாடுபட்டு குழந்தைகளுக்கு குணமே பெரிதென்றும் அதுவிருத்திக்கச் செய்வதே வித்தியாப்பியாசத்தின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி கவர்ன்மெண்டு தீர்மானம் ஒன்று பிறப்பித்தார். அதைப்பற்றி விவேகசிந்தாமணியில் விவரித்தெழுதியிருக்கிறோம்.

குழந்தைகள் தேசாபிமானம் குறையாமலிருக்க வேண்டுமென்றும் அதற்காகச் சமஷ்டி சேவை சாதனங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறினார்.

அவருடைய சொந்தப்பிள்ளை பள்ளையில் படிக்கும் பொழுது அப்பையனோடு கூடிப்பழகின வாசனையைக் கொண்டு எல்லாப்பிள்ளைகளும் அவரவர்கள் உதித்த குலம் விளங்கப் பாடுபட்டுழைத்து நல்வழியில் விர்த்தியடைய வேண்டியதன்றி அவர்கள் தேசமும் அவர்களால் விளங்கி முன்னுக்கு வரும்படி உழைக்க வேண்டு மென்று தேசாபிமானத்தைப் போற்று முறையைச் சிலாகித்துப் பேசி அதற்குத் தக்க ஏற்பாடும்செய்யவேண்டுமென்றார். "இற்றைச் சிறியார் நாளைப் பெரியாராய்" இராஜ்ஜியமே அவர்களால் பெருமைபெற்று விளங்கும்படியாகு மென்பதை யோர்ந்துணர்ந்து இராஜ்ஜியத்தின் யோகக்ஷேமத்தையும் அவர்கள் சிறுவயதுமுதலே கவனிக்கப் பழகி வர வேண்டுமென்றுத்தேசித்துத் தமக்கு நேர்ந்த ஆபத்துக்காலத்திலும் அவர்களை மறக்காமல் அவர்கள் க்ஷேமத்தையே மேலாகக்கருதி, தாம் ஆபத்துக்குத் தப்பிப்பிழைத்த போதும் தம்முடைய ஜன்மதின மஹோற்சவத்தைக் குழந்தைகள் களித்துக்கொண்டாடுவதே தனக்குத் திருப்தியென்று ஹார்டிஞ்சு ஜயந்தியை யுண்டுபண்ணி அதை யொரு நித்தியஸ்தாபனமாகச் செய்தார். இவர் பக்திசிரத்தை நிறைந்தவராதலால் குழந்தைகளும் பக்திசிரத்தைநிறைந்தவர்களாய் தன்னயம் பாராட்டாது பரோபகார சிந்தை மிகுந்து ஊருக்குழைப்பதே உத்தமவழி யென்றுணர்ந்து, உணர்ந்தபடியொழுகுபவராய் இளமையிற்றானே நற்பழக்கம் பெற்று வளரல் வேண்டுமென்பது அவருடைய பிரதம நோக்கம். அதற்கு அனுகுணமாக நடப்பதே ஸ்ரீஹார்டிஞ்ச்ஜயந்தி கொண்டாடுவதின் நோக்கமாகும்.

சென்ற 1913-௵ ஜூன்மீ 17-உ பம்பாயில் ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி கொண்டாட வேற்பட்ட கமிட்டியார் உபாத்தியாயர்களை யெல்லாம் ஒருங்கு கூட்டி, மிஸ்டர் டி. எ. ஸாவேஜ் அக்கிராசனம் வஹித்திருக்க இந்த உற்சவதினம் ஏற்பட்டதின் நோக்கத்தை விளக்கிப் பிரசங்கித்தார்கள். அப்பொழுது காரியதரிசிகளில் ஒருவராகிய மிஸ்டர் தேவதார் அவர்கள் ஸ்ரீஹார்டிஞ்சு ஜயந்தியின்நோக்கத்தைப்பற்றி ஸ்வபாஷையில் விஸ்தாரமாய்ப்பேசினார். அக்கிராசனாதிபதியவர்கள் உண்மையைத்திரட்டி உள்ளபடியுரைத்ததில் ஸ்ரீஹார்டிஞ்ச் ஜயந்தி உற்சவதினமாக ஏற்பட்டது உபாத்தியாயர்களெல்லாரும்தங்கள் மாணாக்கர்களுக்குஸ்வதேசாபிமானம் உண்டாக, அவர்களெல்லாரும் இந்தியாமாதாவின் பிள்ளைகள் என்று போதிக்க வேண்டுமென்றும், மற்ற வித்தியாசங்கள் என்ன ஏற்பட்டிருந்தாலும் ஸ்வதேசம் ஒன்றேயாதலால் க்ஷேத்திர பாத்தியதை கொண்டு ஒரு வயிற்றுப்பிள்ளைகள் போல் சகோதர வாஞ்சை பாராட்டி ஒற்றுமையாய் வாழ்ந்து ஒருவரை யொருவர் நேசித்திருக்க வேண்டும் என்றும் வற்புறுத்திக்கூறினார்.

இந்தியாவில் க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தியென மூன்றும்பூஜிக்கத்தக்கபொருள்களாம். க்ஷேத்திரம் என்பது மாத்ருஸ்தானம்; தீர்த்தம் என்பது பிராணாதாரமாயிருப்பது பற்றி பித்ருஸ்தானம்; மூர்த்தியென்பது புத்திரஸ்தா

னம்; இக்கொள்கை ஆதிகாலந்தொட்டுள்ளது. க்ஷேத்திரத்தியானம் தேசாபிமானத்தையுண்டு பண்ணும்; தீர்த்தத்தியானம் தேசாபிமானத்துக்குப் பிராணாதாரமாயுள்ள ஸமஷ்டி சேவைக்குக் காரணமான பரோபகாரசிந்தையை உண்டுபண்ணும்; மூர்த்தித்தியானம் பாலபோத சிக்ஷாஞானத்தை யுண்டுபண்ணி க்ஷீராப்தியில் ஆலிலைமேல் பள்ளிகொண்டிருக்கும் அற்புதக் குழந்தையைப் பூஜிக்கவேண்டிய மனோபக்குவத்தை யுண்டுபண்ணும். இப்படிப்பட்ட தியானம் செய்து பாவசமாதியில் பூர்ணஜ்ஞர்களான ருஷிகள் தாமே இந்தியா மாதாவின் உண்மைக் குழந்தைகளாவர். நாமெல்லாம் அவர்கள் வழிபற்றிப் பூஜை செய்து கடைத்தேற வேண்டியவர்களாயிருக்கிறோம். இந்தவுண்மையை லார்ட்ஹார்டிஞ்சவர்களும் அவருடைய தர்மபத்னியாகிய லேடிஹார்டிஞ் சவர்களும் அவர்களுடைய பரஞானசிந்தையாலும் குழந்தைகளைத் தெய்வமாகக் கொண்டாடும் பக்தி சிரத்தை விசேஷத்தாலும் நமக்குக் கரதலாமலகம்போல் காட்டியுதவினார்களாதலால், அதுகாரணம் பற்றி அவர்கள் இவ்வித அபூர்வ பக்தி சிரத்தை காட்டுவதற்கு ஆஸ்பதமாயிருந்த ஆபத்திலிருந்து அவர் தப்பிப்பிழைத்ததை ஒரு அடையாளமாகக்கொண்டு அவர்கள் காட்டிய உத்தமகுணவைபவங்களைச் சிந்தித்து அந்த குணவிசேஷம் நம்மனதிற் பதியும்படி உற்சவங் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறோம். இதுதான் "ஸத்ஸங்க ஸஹவாஸம்" என்று சொல்கிற அதியுத்தமமான ஸன்மார்க்க ஸாதனம.

வரகவி டாக்டர் ரவீந்திரநாத்டாகோர் அவர்களுடைய சகோதரராகிய மிஸ்டர் அவனீந்திரநாத் டாகோர் அவர்கள் இந்தியாவை க்ஷேத்திர மாதாவாக உருவகப்படுத்திப் பூஜிக்கச் சாதனமாக ஒரு படம் எழுதியுள்ளார்.

இவ்விவேகசிந்தாமணியில் தானே "பாரதி மாதா" படமொன்று அனுபந்தமாகப் பிரசுரித்துள்ளோம். இப்பொழுது குழந்தைகள் அரசர் பிரதிநிதிக்குக் கொடுக்கும் அன்பார்ந்த சின்னமாக பூர்வமாயுள்ள ஸமஷ்டியானை யுருவத்தில் இந்தியாவை க்ஷேத்திரமாயும் க்ஷேத்திரமாதாவை வித்யாலக்ஷ்மியாகவும் சித்தரித்துக் காட்டி "கஜநாயகி" அல்லது "கஜேந்திர லக்ஷ்மி" என்கிற வித்யாலக்ஷ்மி படமொன்று சித்தரித்துக்காட்டியிருக்கிறோம். அதை ஆயிரக்கணக்காக அச்சிட்டுவழங்க அரசர்பெருமான் தான் பொருளுதவி செய்யவேண்டும். அப்படி யொருவர் முன்வரும் வரையில் குழந்தைகள் பார்த்து மனங்களிக்க வென்று ஜால விளக்குப் படமாக அதைச்சித்தரித்துக்காட்ட ஒரு நண்பர் இசைந்திருக்கிறார்.

இம்மாதிரிசித்திரங்கள் ஜனசமஷ்டியின்யோகக்ஷேம வைபவங்களைச் சரித்திர வாயிலாகவுணர்வது கஷ்டமென்று சித்தரித்துக்காட்டுவதற்காக ஏற்பட்டவை. இங்கிலாந்தில் பார்லிமெந்து சபைக்கட்டடங்களிலுள்ள சித்திரங்களும் மாஞ்சஸ்டர் டவுன் ஹாலிலுள்ள சித்திரங்களும் இவ்விதமானவைகளாம். அப்படியே நமதுகோயில் பிரகாரங்களிலுள்ளசித்திரங்கள் நமது தேசத்தின் யோகக்ஷேமவைபவங்களை விளக்கிக்காட்டுபவையாக விருக்கின்றன. அவ்வித சித்திரங்களில் தற்காலத்து நாகரிக சம்பந்தமான விஷயங்கள் ஒன்றும் சேராமலிருக்கிறது. அக்குறையை நிவிர்த்திக்க வென்று பூர்விகமாயுள்ள சமஷ்டியானைச் சித்திரத்தில் இந்தியாவை க்ஷேத்திரமாகவும் இந்தியாமாதாவை க்ஷேத்திரதேவதையாகவும் காட்டி ஸமஷ்டி வித்யாபழத்தை அத்தேவதை கையில் வைத்துக்கொண்டிருக்கக் குழந்தை அதைக்கொடுக்கச்சொல்லிக் கேட்கும் பாவனையாக எழுதியிருக்கிறது. இதை நமது நாட்டுக்கோட்டை செட்டிமார் கோயில்கட்டுகிற தர்மத்தில் முக்யமான தொன்றாக திவ்யஸ்தல மொன்றில் தீர்த்தக் கரையில் அல்லது கோயில் ஸந்நிதானத்தில் நிர்மிப்பார்களானால் ஸ்ரீநிவேதிதையம்மனுடைய மனோரதம் போல் அது ஜனங்களுக்கு ஸமஷ்டிசேவை ஞானத்தைப் புகட்டி அளவற்ற நன்மையைச் செய்யும்.



## "SOCIAL SERVICE INSTITUTE."

### ஸமஷ்டி-சேவை ஸாதனம்.

### வித்தைபயிலு முறை.

---

### ஆயுள்வேத பாஸ்கரன்.

இந்திய நாட்டின் வடக்கிலே சிந்தியத்திற்கிப்பால் விந்தியத்திற்கப்பால் இராஜக்கிரகம் என்றொரு தேசமுளது. அதனை நெடுநாள் முன்னர் பிம்பிசாரன் என்னும் அரசன் ஒருவன் அரசியல் வழுவாது செங்கோல் செலுத்தி ஆட்சிசெய்துவந்தான். அவனுக்கு அஜாதசத்துரு, அபயன், ஜீவககுமாரபந்தன் என்னும் பெயர்பெற்ற மூன்று புத்திரர்களுண்டு. மூவரில் மூத்தவனாகிய அஜாதசத்துரு என்பவன் பட்டத்திற்கு உரியவனாதலின், ஏனையிருவரும் தாந்தாமொரு கைத்தொழில் கற்று உய்தல் வேண்டுமே என்று எண்ணியிருந்தனர்.

இரண்டாவது குமாரனாகிய அபயன் அரசனிடத்தில் அக்கருத்தை அறிவித்துக் கம்மியத் தொழிலில் விம்மிய ஒருவனை அடைந்து அத்தொழில் பயில்வானாயினான். இளையவனாகிய ஜீவககுமாரபந்தன் இராசனிடம் சென்று தன் உள்ளக்குறிப்பை உணர்த்தினான். உடனே பிம்பிசாரன், "ஆயின், ஜீவகா! நீ எத்தொழில் கற்க விரும்புகின்றாய்?" என்று கேட்டான். மைந்தன், "அண்ணா! ஆயுள் வேதம், ஆராய ஆசை கொண்டுள்ளேன்" என்று கூறினான். அரசனும் அங்ஙனே செய்க என்று பணித்தான்.

ஜீவககுமார பந்தன் ஆயுள்வேதியரை அடைந்து, மருத்துவநூல் நுணுக்கங்களைக் கூர்ந்து உய்த்துணர்வானாகி மிகத் தேர்ச்சியடைந்தான். அதன் பின்னர், ஆயுத சிகிச்சையில் சிறந்தவனாகியும், கபாலந்திறக்குஞ் சிகிச்சையொன்றுமே கைவந்திலனாகித் தந்தையிடம் அடைந்து, "தந்தாய்; கற்க கசடறக் கற்பவை" என்றது வேதம். அடியேன் ஆயுள்வேதத்தை ஆராய்ச்சி செய்து அரிய பெரிய சிகிச்சைகள் பல கற்றேன். கபாலத்தைத் திறந்து சிகிச்சை செய்வதை அறிந்தாலொழிய என் பாண்டித்தியம் பூர்ணபாண்டித்தியமாகாது. இக்குறை ஒழிந்தாலொழிய என் மனமும் அவா அடங்காது. ஆகவே இதனை எவ்விதத்திலாயினும் கற்றுத்தீர வேண்டுமென உறுதிகொண்டேன். இந்த வித்தையில் கைபோனவர் ஆத்திரேயர் என்னும் ஆயுள்வேதியர் பெருமான் ஒருவரேயாவர். அவர் தக்ஷசீலம் என்னும் திருப்பதியிலே எழுந்தருளி யிருக்கின்றார். அவரை அடைந்து வழிபட்டு அவ்வித்தை அறிந்து வரும்பொருட்டாக அடியேனுக்கு விடை தந்தருள்க" என்று வேண்டினான். அரசனும் அதற்கு இசைந்து தக்ஷசீலத்தின் மன்னவனாகிய புஷ்கரபூபதிக்கு "என் அருந்தவச் செல்வனாகிய ஜீவகன் என்கின்றவன் ஆசிரியர் ஆத்திரேய ரிடத்தில் ஆயுள் வேதத்தின சூக்ஷ்ம மர்மங்களை அறியவேண்டிவருகின்றான். ஆதலின் அவனுக்குச் செய்வன செய்க" என்று கடிதம் போக்கினான்.

ஜீவகனும் தந்தைபால் விடைபெற்றுக் கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு வழி நடந்து சிலநாள் சென்றபின் தக்ஷசீலஞ் சேர்ந்து புஷ்கரனைக்கண்டான். புஷ்கரனும் ஜீவகனை வழிநடந்த இளைப்பாற்றி நீராட்டிச் சீராட்டிச் சிறப்புப்பலசெய்து அழைத்துக் கொண்டுபோய் ஆத்திரேயர் முன்னிலையில் விடுத்து, "ஐயீர்! கண்டீர். இவனாகின்றவன் மன்னர் மன்னன் பிம்பிசாரன் மக்கள் மூவரில் இளையவன். இவனை ஜீவககுமாரபந்தன் என்பர். மருத்துவநூலில் மிக்க உழைப்புள்ளவன். மண்டை ஓட்டைத்திறக்கும் சிகிச்சை ஒன்றனையும் தேவரீர்பால் உபதேசிக்கப் பெறும்படி பாவம் இத்தனை தூரம் வந்தடைந்தான். இவனைப்பற்றி அடியேன் இன்னும் சொல்லத் தகுவதொன்றுமில்லை. இச்சிறுவனைத் தங்கள் தலைமகனாகக்கொண்டு இவன் மீது ஒரு கண்மலரைச் சாத்தியருளல் வேண்

டும். அடியேனுக்குச் செலவு கொடுத்தருள்க" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றான். ஜீவககுமாரனும் ஆசிரியர்க்கு உள்ளங்குளிர வழிபாடென்னப்படுவன வெல்லாம் ஒன்றொழியாமல் நிறைந்த அன்புடன் செய்துவந்தான். ஆசிரியரும் "ஆ! ஆ! மாணாக்கன் என்றால் இவனுக்கேதகும்; நமது நிழலைப்போல்கின்றான். குளிருக்குத் தீக்காய்வாரையும் போல்கின்றான். நமக்குக் கைவந்த வித்தையை இவனுக்கு அங்கை நெல்லியாய்க்காட்டிக் கொடுத்தல்வேண்டும்" எனத் திருவுளங்கொண்டு குளிரக்கடாக்ஷித்து வந்தார்.

ஜீவகன் தன்னுடைய ஆசிரியர் கூறுவது கூறுமுன்னரே ஏகசந்தக்கிராகியாய்ப் பாடங்கொள்ளும் சூக்ஷ்மபுத்தியுடையனாயிருப்பதைக்கண்ட ஆத்திரேயர் அடங்காத ஆநந்தங்கொண்டவராகித் தாம் நோயாளரைப் பார்க்கப் போகும்போதெல்லாம் அவனையும் உடனழைத்துச் செல்வாராயினார். இங்ஙனம் ஒழுகும்போது ஒருநாள் ஆத்திரேயர் ஒரு நோயாளனைக்கண்டு நாடி பரீக்ஷை செய்து இன்னமருந்து உட்கொள்வது என்று திட்டப்படுத்தி விட்டுத் தமதிருப்பிடம் சென்றடைந்தார். அதுகண்ட ஜீவகன் "இந்நோயாளன் இம்மருந்தினை உட்கொண்டால் இன்றைக்கே இறப்பது திண்ணமாகும். இப்போது இதைச் சொன்னால் ஆசிரியர்மேல் குற்றங் கூறுவதாகும். என்ன செய்யலாம் என்று எண்ணிக்கொண்டே ஆசிரியருடைய இருப்பிடம் சேர்ந்தபின், வேறுகாரியமாகப் போகிறதுபோல நோயாளனுடைய வீட்டை மீண்டும் அடைந்தான். அடைந்து 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்னும் வேதவாக்கியமே துணையாக உபாயம் ஒன்று செய்தான். பிணியாளனிடம் அதிக விரைவாக வருவதுபோல நடித்து "வைத்தியர் முன்னர்க் கூறியமருந்தினை உட்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கைப்படுத்தி இம்மருந்தையே உட்கொள்ளும்படியாகத் தங்களிடம் ஓடோடியும் சென்று கூறிவா என்று சொல்லியனுப்பினார், எச்சரிக்கை!" என்று திட்டப்படுத்தி வந்துவிட்டான். வந்தவன் இது செய்தியை ஆசிரியரிடம் சொல்வது தற்புகழ்ச்சியாகுமே என்று நினைத்து சும்மா இருந்துவிட்டான். நோயாளியும் ஜீவகன் சொல்லிக் கொடுத்த மருந்தை உட்கொண்டு முன்னிலும் நோய் பதின்மடங்கு தணிந்து இலகுவாய் எழுந்து உலாவிக் கொண்டிருந்தான். மறுநாள் ஆத்திரேயர் போய் அந்நோயாளனைக் கைபிடித்துப்பார்க்க அவன் முன்னிலும் ஆயிரமடங்கு நோய்தணிந்து இலகுவாய் எழுந்துலாவ சக்தி உடையவனாயிருத்தலைக்கண்டறிந்து "குணமது கை விடேல்" என்பதற்கிசைய "அம்மருந்தையே இன்னும் இரண்டொரு வேளை உட்கொண்டாயானால், உன் நோய் பரிஷ்காரமாகப் போய்விடும்" என்றுசொன்னார். அப்போது அந்த வியாதியஸ்தன் "முன்னே தாங்கள் கொடுத்தீர்களே அதுவா அல்லது பின்பு ஜீவகன் கையில் கொடுத்தனுப்பினீர்களே அதுவா? என்று கேட்டான். கேட்கவே, ஆத்திரேயர் கலக்கமெய்தி "முன்னர் என்னகொடுத்தேன்? அப்புறம் என்ன கொடுத்தனுப்பினேன்? காட்டு என்ன, அவனும் அவற்றை எடுத்துக்காட்ட ஆசிரியர் "அடடா! மதிமோசம் போனேன். அந்தமட்டில் ஜீவகன் இவன் ஜீவனைப்பிழைக்க வைத்தான். வைத்தியருக்கு எப்போதும் சமயோசிதமான புத்திநுட்பம் இருக்கவேண்டும்" என்று நினைத்து, "ஜீவகன் கொண்டுவந்த மருந்தையே உண்பாய்" என்றார். அதுமுதல் ஆசிரியர் ஜீவகனைத் தம்மரிய உயிராக எண்ணித் திருவருள் பாலித்து வந்தார்.

ஆசிரியர் ஆத்திரேயரிடத்தில் ஜீவககுமாரனேயன்றி அனேக பிராமணச்சிறுவர்களும் சிஸ்ருஷை செய்து சிகிச்சைநூல் கற்று வந்தனர். ஆத்திரேயர் ஜீவகன்மீது அன்பு கொண்டிருப்பதைக்கண்டு பொறாதவர்களாகி



பார்ப்பனச் சிறுக்கர்கள் ஆசிரியரை அடைந்து "சுவாமீ! அடியோங்களும் தங்களை வழிபட்டுப் பிழைக்க எண்ணியிருக்கும் சிஷியர்களல்லவோ? உமக்கு எங்களைக் காட்டில் அவனிடம் உள்ள சிறப்பு என்ன. அவனுக்கு மாத்திரம் அகிலவித்தைகளையும் அதிக பிரீதியுடன் கற்பிக்கின்றீர்களே; இது தகுமோ?" என்று விண்ணப்பித்தார்கள். அதுகேட்ட ஆசிரியர் 'மாணாக்கர்களே! கேளுங்கள். நான் எல்லோரையும், ஒரு கண்ணிலே பார்ப்பவன். நீங்கள் இப்படிக் குறை கூறுவதைக் கேட்க எனக்கு மனம் நோகின்றது. உங்களெல்லோரையும் ஒருங்கே என் முன்னிலையில் வைத்துக்கொண்டுதானே மருத்துவம் கற்பிக்கின்றேன். அவனைமாத்திரம் அதிக ரகசியமாய் வேறிடத்தில் வைத்துக்கொண்டு கற்பிக்கின்றேனா? இல்லையே! அவன் ஏகசந்தக்கிராகியாய் இருக்கின்றான். யாதொன்றையும் குறிப்பினால் அறிந்துகொள்ளும் நுண்ணறிவு உடையவனாக இருக்கின்றான. அது என்னுடைய குற்றமல்லவே!" என்று சொன்னார். அதுகேட்ட பார்ப்பனப்பிள்ளைகள் "எங்களுக்கில்லாத புத்திகூர்மை அவனிடத்தில் மாத்திரம் அதிசயமாக என்ன கண்டீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அவ்வாசிரியர் "நல்லது' இது காரியத்தை உங்கட்கு நான் அதிசீக்கிரத்தில் ரூபிக்கிறேன். அதுவரையில் பொறுங்கள்" என்று சொன்னார்.

மாணாக்கர்களை ஒவ்வொருவனாக அழைத்து மருந்துக் கடைக்குப்போய் ஒவ்வொரு சரக்கின் விலையை விசாரித்தறிந்து வரும்படி அனுப்பினார். பிராமணப்பிள்ளைகள் ஆசிரியர் தத்தம்மை வேண்டிய அந்தந்தச் சரக்கின் விலையை மாத்திரம் கேட்டறிந்து வந்தனர். ஜீவகன் பற்பல சரக்குகளின் விலையையுங் கேட்டுக்கொண்டு வந்தான். அனைவரும் வந்து சேர்ந்தபிறகு ஆசிரியர் அவனவனைத் தாம் வேண்டின பொருளையன்றி மற்றும் ஒவ்வொன்றின் விலையைக் கேட்க அவனவன் "தாங்கள் கட்டளையிட்டதை மாத்திரம் விசாரித்து வருவது கடமையென்று அதன் விலையை விசாரித்து வந்தேன்: வேண்டுமானால் மறுபடியும் போய் இப்போது வேண்டின சரக்கின் விலையை விசாரித்து வருகிறேன்' என்றுசொல்ல, ஜீவகன் மாத்திரம் எவ்வெந்த சரக்கின் விலையைக் கேட்ட போதிலும் பளிச் பளிச்சென்று பதில் சொல்லிவந்தான்.

ஆசிரியர் பின்னுமொருமுறை ஜீவகன் ஆற்றலை† அச்சிறுவர்களுக்குச் செம்மையாக விளக்க வேண்டுமென்றெண்ணி அனைவரையும் நோக்கி, "அதோ காண்கின்ற குன்றத்தையடைந்து அங்கு நின்றும் ஒஷதி‡யல்லாததொன்றைக் கொண்டுவாருங்கோள் பார்ப்போம்" என்று ஏவினார். சிறுவர்களும் "அங்ஙனமே" என்று ஏகினார். ஏகினவர்கள் அங்கு சென்று அக்குன்றினை ஆராயத் தொடங்கினார்கள். அவனவன், எது எதனை ஒஷதியல்லவென்று நினைத்தானோ அவ்வதனைக் கையில் எடுத்துக் கொண்டுவந்தான். ஜீவகன் ஒரு கோரையைக் கிள்ளிக்கொண்டு வந்தான். இவர்கள் வருகின்ற வழியில் அந்தணச் சிறுவர்கள் ஒரு யானையின் அடிச்சுவடுகளைக்கண்டு அவைகளை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஜீவகன் அவர்களை அணுகி "என்ன பார்க்கின்றீர்கள்? நானும் சற்று பார்க்கட்டும்" என்று எட்டிப்பார்த்துச் சுற்றிவளைத்து நோக்கிச் சாவதானித்து "ஐயமார்களே! இவை ஒரு பெண்யானையின் அடிச்சுவடுகள், அந்த யானையும் வலக்கண்குருடு: இன்றைக்குக் குட்டி போடும். அதுவும் ஆண்குட்டி, அந்த யானையின் மேல் ஒரு பெண்பிள்ளை ஏறிக் கொண்டுபோனாள். அவளுக்கும் வலக்கண் குருடு: அவளும் கருப்பவதி: இன்றைக்குப் பிள்ளை பெறுவாள்" என்றான். பிராமணச் சிறுவர்கள் அனைவரும் "இந்த ஜீவகன் என்னடா! சித்திரம் பேசுகிறான், நாமெல்லாரும் ஒன்றாகத்தானே வந்தோம்; பெட்டையானை

† ஆற்றல் = திறமை. ‡ஒஷதி = மருந்து சரக்கு.

யாம்: அது குட்டிபோடப்போகிறதாம். அதன்மேலும் ஒரு பெண்பிள்ளையாம்; அவளும் பிள்ளை பெறப்போகிறளாம்; நம்மிடத்தில் அண்ட மளக்கிருனே" என்று கைகொட்டிச் சிரித்து பரிகாசஞ்செய்துகொண்டே வழி நடந்து வந்து ஆசிரியரிடம் சேர்ந்தார்கள்.

ஆசிரியர் அப்பார்ப்பனச்சிறுவர்கள் கொண்டுவந்த பச்சிலைகளைநோக்கி ஒவ்வொன்றாக "இது வயிற்று வலிக்காகும்; இதனால் தலைவலி தீரும்; இதுகட்டிகளின் மேல் வதக்கியிட உதவும்: இது கஷாயமிட்டுக்கொடுக்க ஜன்னிபாதத்தைத்தொலைக்கும்; இது சுவாசகாசத்தைக் கண்டிக்கும்: இது குஷ்டநோய் போக்கும்" என்றிப்படியாகக் கழித்துவைத்து "இவைகளெல்லாம் ஔஷதிகளே ஆகின்றன" என்றார். பின் ஜீவகனை நோக்கி "நீ கொண்டுவந்ததென்ன? காட்டு, பார்க்கலாம்" என்று கேட்க, ஜீவகன் "குன்றுமுழுதும் துருவித்திரிந்தேன் கண்டன கண்டனவெலாம் ஒவ்வோர் நோய்க்கு மருந்தாகும் ஔஷதிகளாகவே இருக்கின்றன. வெறுங்கையாக வருவதும் சாமர்த்தியமல்லவே. ஔஷதியல்லாத தொன்றைக்கொண்டுவர வேண்டுமே. இந்தக்கோரையைக் கொண்டு வந்தேன்" என்று சொல்லிக் கோரையைக் காட்டினான். ஆசிரியர் "இதனலாகும்பயன் என்னை?" என்றுகேட்க, ஒருவனைத் தேள் கொட்டினால் இந்தக் கோரையினால் வேறு பிடிக்கலாம்" என்று சொன்னான். உடனே ஆசிரியர் புன்னகை செய்தார். அது கண்ட பிராமணச்சிறுவர்கள், ஜீவகன்மேல் வெறுப்புக் கொண்டவராய் ஆசிரியர் நகையாடினார் என்று நினைத்து, "ஐயீர்! இவன் திறத்தை இவ்வுளவுதானென்று நினைத்தீர்களோ நாங்கள் வந்துகொண்டிருக்கும்போது வழியில் ஒருயானையின் அடிச்சுவடுகளைக் கண்டோம். இந்த அறிவாளன் அவை ஒரு பெண்யானையின் சுவடுகளென்றும், அந்த யானையும் வலக்கண்குருடு, இன்றைக்குக் குட்டிபோடுமென்றும்; அந்த யானையின்மீது ஒருபெண்பால் சாரிபோயினள், அவளும் வலக்கண்குருடு, கருப்பவதி, இன்றைக்குப் பிள்ளைபெறுவாள் என்றும் பிரத்தியக்ஷமாகக் கண்டது போல விசித்திர வார்த்தைகள் பேசினான்" என்று சொன்னார்கள்.

இதையெல்லாங் கேட்ட ஆத்திரேயர் "அப்பா! ஜீவகா! இதெல்லாம் மெய்தானா?" என்று வினவினார். அதன்மேல் ஜீவகன்: "ஆம் சுவாமி" என்றான். அதன்மேல் ஆசிரியர் "அடிச்சுவடுகளால் ஆண்யானை அல்லது பெண்யானை என அறிவதெப்படி?" என்று கேட்டார்.

ஜீவகன்: "சுவாமி! ஆண்யானையின் அடிச்சுவடுவட்டமாயிருக்கும். பெண்யானையின் அடிச்சுவடு நாற்கோணமாயிருக்கும்" என்று விடைகொடுத்தான்.

ஆசாரியர்: "அது வலக்கண்குருடென்று எங்ஙனம் அறிந்தாய்?"

ஜீவகன்: "சுவாமி! அது இடப்பக்கத்திலுள்ள புல்லைமாத்திரம் மேய்ந்திருக்கிறது."

"அந்தயானை கருப்பம் கொண்டதென்று எப்படி அறியப்பட்டது?"

"அதன் காற்சுவடு ஆழமாய் அழுந்தி யிருந்தது.'

"அது ஆண்குட்டி போடுமென்று எப்படி தெரியவந்தது?"

"வலப்பக்கத்துக் காற்சுவடு நன்றாய் குழிய ஊன்றியிருந்தது."

"அந்த யானையின்மீது ஒருபெண் ஏறியிருந்தாள் என்பது என்ன நிச்சயம்?"

"அவள் வழியில் இறங்கி நடந்திருக்கிற காற்சுவடுகளைக் கண்டேன்."

அவளுக்கு வலக்கண்குருடு என்பது எப்படி துணியப்படும்?'

"அவள் இடப்பக்கத்திலுள்ள பூக்களை மாத்திரம் கொய்திருக்கிறாள்"

"அவள் கருப்பிணியாவதெப்படி?"



"அவளுடைய குதிகால் தரையில் செம்மையாய்ப் பதிந்திருக்கிறது" என்று சொல்லிப் பின்னும் "ஐயரே! ஈதெல்லாம் உண்மை. இவைகளை அடியேன் அநுமானப் பிரமாணத்தால் அறிந்தேன். தாங்கள் உண்மை தெரியவேண்டினால் என்னோடு கற்கும் இவர்களில் ஒருத்தனைச் சத்திரஞ்சென்று விசாரித்துவரும்படி செய்யுங்கள்." என்று சொன்னான். பிரத்தியக்ஷத்தில் அப்படியே பரீக்ஷித்துப் பார்க்கையில் எல்லாம் அவன் சொன்னது சொன்னது போலவே நடந்திருந்தன. அதுமுதலாக பார்ப்பனச்சிறுவர்களும் இவன்மீதுகொண்ட பொறாமையை ஒழித்து ஒருமைப்பட்டிருந்தார்கள்.

ஜீவகனும் கபாலந் திறப்பது தவிர மற்றவெல்லாம் ஐயந் திரிபின்றிக் கற்றுணர்ந்தவனாகிக் காலங்கழித்து வருகையில், ஒருநாள் தீராத் தலைநோய் கொண்ட ஒருவன் ஆத்திரேயரை யடைந்து "ஐயா! ஆயுள் வேதியரே! எந்தநோய் கொண்டாலுங் கொள்ளலாம். அப்பப்ப! தலைநோய் பொல்லாதது. தலைநோயிலும் என் தலைநோய் தீராத தலைநோயாக இருக்கின்றது. எத்தனை வைத்தியர்களைக் கட்டிக்கொண்டழுதேன். எவ்வளவு பணம் விரயஞ்செய்தேன். ஐயோ பாழாய்ப்போன அந்த எமதர்மராஜன் என்றைக்குத்தான் என் வட்டை எடுத்துக் கிழிப்பானோ! தங்களைப் பற்றி வெளித்தேசங்களில் வெகுசிறப்பாகச் சொன்னார்கள். தாங்களும் கையை விரித்துவிட்டால் என்கதி அதோகதிதான். "இறுமுயிர்க்கும் ஆயுள் மருந்தொழுக்கல் நீதன்றால்" என்பார்களே. கடைமுறையாகத் தங்கட்குக் காட்டிவிடுகிறது: தாங்களும் அலாத்தியமென்றால் ஆருயிரை மாய்த்துக் கொள்வதென்று துணிவுகொண்டு வந்துவிட்டேன். மக்களும் மனையுமாக இருப்பவன. அடியேன் மீது கிருபா கடாக்ஷம்பண்ணி பிராணபிச்சை கொடுக்கவேண்டும், என் அப்பனே!" என்று சொல்லி வருந்தினான். அதுகேட்ட ஆத்திரேயர் அந்த நோயாளனைத் தலையைத் தடவிக்கொடுத்து "தம்பி! அஞ்சாதே, படுவது பட்டுத்தானே தீரவேண்டும். உன்னுடைய கிரகசாரம் நாளையோடு ஒழிந்துபோகிறது. நீ ஒரு கொட்டாரத்திலே ஒரு குழிதோண்டி அதினிறையச் சாணநீரை ஊற்றிவை. நாளைக்கு இதற்கேற்ற சிகிச்சை செய்கிறேன். ஒரு க்ஷணநேரத்தில் நோய் தணிந்துவிடும்." என்று சொல்லியனுப்பினார். இதையெல்லாம் செவியேற்ற ஜீவககுமாரன் ஆசிரியரை மும்முறை வலம் வந்துபணிந்து "சுவாமி! நான் ஆயுள்வேதத்தை ஆராய்ச்சிசெய்து அதனால் இலாபம் பெற்று செல்வவந்தனாக வேண்டுகின்றேனில்லை. வேறுபயன் வேண்டுகின்றேனுமில்லை. உலகத்தார்க்கு என்னாலான நன்மை செய்யவேண்டுமென்பதே அடியேனுடைய அவாவின் கருத்து. தேவரீரை அநேகநாளாக வழிபட்டுக் காத்துக்கிடந்தேன். நாளையொருபொழுதுந் தப்பினால் அடியேனுடைய கருத்து நிறைவேற எத்தனை நாளாகுமோ. தேவரீர் அப்பிணியாளனுக்கு சிகிச்சை செய்யும்போது அண்டையில் இருக்க அடியேனுக்கு வரங்கொடுக்க வேண்டும்" எனக் கல்லுமுருகக் கனிந்துபேசினான். ஆசிரியரும் இவனுக்கு இவ்வரங்கொடாவிட்டால சிஷ்யத்துரோகமாகுமென்று நினைத்து "அப்பா! அப்படியே செய். ஆனால் பரண்மேல் மறைந்திருக்க வேண்டும்" என்று அநுக்கிரகித்தார்.

ஆத்திரேயரும் மறுநாள் காலையில் வழக்கம் போலே ஜீவககுமாரபந்தனை உடனழைத்துக்கொண்டு சென்று தலைநோயாளனை யடைந்து அவனைச் சாண நீர்க்குழியிலிருக்கச் செய்து ஜீவகன் மறைந்திருக்க ஓரிடமுங்காட்டிச் சிகிச்சை செய்யத்தொடங்கினார். தொடங்கிக் கபலத்தைக்கழற்றிக் கீழிறக்கி வைத்துவிட்டு மூளையில் யாதேனும் பழுதுண்டோ என்று உற்றுப்பார்த்தார். பார்த்தவிடத்திலே மூளையில் ஒரு புழு மூளையோடு மூளையாய் ஒட்டிக்கொண்டு இருந்தது. உடனே அதனைப்பிடித்

திழுக்கும்பொருட்டுக் கையில் குறடு எடுத்தார். அவ்வளவிலே மறைவிலிருந்த மாணாக்கன் "பொறுங்கள்! பொறுங்கள்!!" என்று கூவினன். ஆசிரியரும் அசைவற்றிருந்து ஜீவகா! இங்கும் இருக்கிறாயா? பொறுக்கவேண்டியதென்ன? இந்தச்சனியனைத் தொலைத்தாலல்லவோ இவன் நோய் தீரும்" என்றார். ஜீவகன் "சுவாமி! மெய்தான். மூளை மிகவும் மிருதுவானதாகையால், புழுவினைப் பிடித்திழுக்கும்போது மூளைக்குச் சேதமுண்டாகி இவன், பாவம்! இறக்கும்படி நேரிட்டாலும் நேரிடும்" என்றான். ஆசிரியர் "அதை மற்றெப்படி ஒழிப்பது?" என்று கேட்க, ஜீவகன் ஐயரே! இக்குறட்டினைச் சற்றுக்கும்பியில் வைத்துக் காய்ச்சி அப்புழுவிற்கு நேராகக் காட்டினால் புழுவும் சூடு பொறுக்கமுடியாமல் நெளிவுறும். அப்போது அதனை இவ்வாயுதத்தின் நுனியினால் அசைப்போமாயின் பொட்டெனக் கீழே விழுந்துவிடும்" என்று சொல்லினன். ஆசிரியரும் அங்ஙனே செய்து முன்போலவே மண்டையோட்டினைப் பொருத்தி மற்றும் செய்ய வேண்டுவதைச் செய்த உடனே, நோய் கொண்டவன் பேயாடி விட்டவனைப்போலத் தெளிந்தெழுந்து ஆயுள்வேதியருக்கு ஐந்நூறு பொன்கொடுத்துப்போய்விட்டான். பின் ஆசிரியர் தமது தலைமாணாக்கனைத் தலைமூழ்கி வரச் செய்து கபாலசிகிச்சையின் மர்மத்தை உபதேசித்து "அப்பா நான் இந்தவித்தையின் உதவியால் உயிர்வாழ்ந்திருப்பவன். ஆதலால் நீ இதனை இந்நாட்டில் வழங்கலாகாது!" என்று சொல்லி, ஆசிமொழிகூறி வாழ்த்தினர். ஜீவககுமாரனும் ஆசிரியரை மும்முறை வலங்கொண்டு அடியில் முடியுறப்பணிந்து குருதக்ஷிணையுங் கொடுத்துப் பிரிவாற்றாதவனாய் மனந்தேறி விடைபெற்றுக்கொண்டு புஷ்கரபூபாலனுக்கும் வந்தனம் பண்ணித் தன்வீட்டுமுகமாக வழிகொள்வானாயினன்.

## SHORT STORY: THE GREATNESS OF FAITH.

### நமசிவாய மஹாத்மியம்.

"வஞ்சித்தார் வாழார், வழிப்பறித்தார் பாழாவர்,
பஞ்சான தேஹமிது, பகவானொருவனுண்டு."

பூர்வம் பஞ்சநத க்ஷேத்திரத்திலே ப்ராணதீர்த்தக்கரையிலே ஹரிஹர சிவனென்றொரு அந்தணரிருந்தார். அவர் "அந்தணரென்பர் அறவோர எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்" என்ற பெரியோர் வாக்குப்படி, தர்ம்ம சிந்தையுடையவராய் பாபதோஷத்துக் கஞ்சி, பிள்ளை குட்டி ஸம்ஸாரத்தோடு திண்ணைப் பள்ளிக்கூடம் போட்டு ஜீவனம் செய்து வந்தார். காலக்கிரமத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களுக் கெல்லாம் நாசகாலம் வர, அவர் அந்தப் பிரளயத்துக்குத் தப்பிப்பிழைக்க வென்று தஞ்சாவூரிலுள்ள ஒரு மிஷன் பாடசாலையில் சேர்ந்து உபாத்திமைத் தொழிலுக்கு லாயக்காக வாசித்து வந்தார். உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் வாசித்துத் தேறினதும் அவருக்குப்பதினைந்து ரூபாயில் வடக்கே பள்ளிக்கூட உபாத்தியாயர் வேலை யொன்று கிடைத்தது. அதைக்கொண்டு உபாயஜீவனம் செய்து வரும் நாளில் அவர் ஒருநாள் ஆருத்ரா தரிசனத்துக்காகச் சிதம்பரம் போக நேரிட்டது. போகும்வழியில் நதிப்பிரவாகத்தினால் கொள்ளிடம் கரை புரண்டு தண்ணீர் ஓடப், பரிசல்துறையெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிப்போய் அக்கரைபோக முடியாமல் தவித்தார். அப்பொழுது பிராணபயங்கொண்டு ஹரிஹரசிவன் அங்கேயிருந்த ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தின் மேலேறி யுட்கார்ந்துக்கொண்டு இரவெல்லாம் தூக்கமின்றி திருவாசகத்தை மனனம் செய்து கொண்டு 'நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!' என்று ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்தார்



அப்பொழுது தண்ணீர்ப்பெருக்கினால்காட்டிலிருந்த புலியொன்று புகலிடமின்றி அவ்வாலமரத்தின் பொந்தில்நுழைந்து வெளிப்புறப்பட்டு மரக்கிளையின் மேலேறிக் கால்நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தது. அந்தச்சமயத்தில் ஒரு பிள்ளைத்தாய்ச்சி தன் சிறுபாலகனைக் கையிலேந்திக் கொண்டு வெள்ளப் பெருக்கினால்ஒண்ட இடமின்றி அம்மரத்தையே அண்டி அதன் கீழ்க்கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கலானாள். இப்படி அந்த விருக்ஷத்தில் அந்தணர், புலி, தள்ளை (தாய்), தனையன் (பிள்ளை) ஆகிய நால்வரும் ஆபத்துக்கு ஒண்டி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகாமல் தப்பித்தால் போதுமென்று அஞ்சி உயிர்ப்பிச்சை கேட்டு நிற்கையில், ஒரு வேடனொருவன் வில்லும் கையுமாய் அவன் வில்லுக்குத் தப்பியோடிய மான் ஒன்றைத் துரத்திக்கொண்டு அந்த மரத்தடிக்கே வந்து சேர்ந்தான். அதற்குள் பிரவாகம் அதிகப்பட்டு வேறு எங்கும் கால் வைக்க இடமின்றி யெல்லாம் வெள்ளக்காடாகப் போய்விட்டது.

இந்த அவஸ்தையில் அந்தணன் புலிக்கு அஞ்சி யொடுங்கி யிருந்தான். தாயார் தன் பிள்ளையைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக மற்ற அபாயங்கள் எதையும் கவனியாதவளா யிருந்தாள். புலி மானைக்கண்டு பாயவிரும்பியும் வேடனுக்கஞ்சித் தன்னிருப்பிடத்தை விட்டசையாதிருந்தது. மான் முன்னே போனால் புலிவாய்க்கிரையாவது நிச்சயமென்றுணர்ந்து பின்னே திரும்பினால் வேடன்கைப் பட்டிறக்க வேண்டுமென்று அஞ்சி முன்னும் போகாமல் பின்னும்போகாமல் ஒரு சிறுகளையின் மீது தன்னைத்தாங்கி நின்றது. கிராதகன் அஞ்சாநெஞ்சோடு புலியைக் கொன்று மானை வசப்படுத்தி, அந்தப் புமானை வழிப்பறித்து, அங்கனையைப் பெண்டாள நினைத்தான். அப்பொழுது ஒரு நாகப்பாம்பு அதன் பொந்தில் ஜலம் புகுந்த வேகத்தால் சீறிக்கொண்டு வெளிப்புறப்பட்டு வந்தது. அது வந்த பொந்து வாசலில் வேடன் கால் வைத்து நின்றுக் கொண்டிருந்ததால் அவனது குதிகாலை வெடுக்கென்று கடிக்க அவன் சட்டென்று காலைத் தூக்கினான். அத்தருணம் அது சீறிப்பாய்ந்து அவன் மற்றொரு காலைச் சுற்றிக்கொண்டு பீஜத்தைக் கடித்துக்கொண்டு அவன் வீரியத்தைப் பாம்பு தன் முட்டையருந்துவதுபோல் அருந்தி நின்றது. அப்பொழுது அவன் "சிவசிவா" என்று சொல்லிக் கொண்டு உயிர்துறந்தான். அவன் உயிர் துறக்கவும் நிலைதவறிக் கீழே வெள்ளத்தில் வீழ்ந்தான். பாம்பும் கூட அவனோடுகீழே வெள்ளத்தில் வீழ்ந்தது. நல்லரவம் தண்ணீரில் தலை மூழ்கப் பொறுக்காததால், அந்த வெள்ளத்தில் நீரோட்டத்தை எதிர்த்து நீஞ்சி அக்கரைபோய்ச் சேர்ந்தது. அது கடித்துவிட்ட பிணம் மிதந்துகொண்டிருக்க, அப்பெண்பிள்ளை அதன்மேல் குதித்து தனயனை மர்க்கடம்போல் மாரிலணைத்துக் கொண்டு நீரோட்டத்தின் வேகத்தை யெதிர்த்து நீஞ்சிக்கொண்டு போன பாம்பின்வாலைப் பிடித்துக்கொண்டு அவளும் அக்கரைபோய்ச் சேர்ந்தாள். புலி மானின்மேல் தாவிவிழ இலக்குத்தப்பி வெள்ளத்தில் வீழ்ந்து அதன்வேகத்தைக் கடந்துபோக முடியாமல் கொஞ்சதூரம் சென்று மாண்டது. அந்தணன் ஒருவன் மட்டும் திக்கற்றுத் தியங்கி நின்றான். அப்போது அவன் ஆபத்துக்காலத்தில் பகவானை நினைத்து "நமச்சிவாய வாழ்க!" வென்று அஞ்செழுத்தை யெண்ணித்துதித்தான். அந்த அஞ்செழுத்தே பொரு பஞ்சமூட்டையாகி வெள்ளத்தில் மிதந்து வர அவன் மெல்ல அதன்மேற் குதித்து ஸ்வாமி விட்டவழி விடட்டுமென்று வெள்ளத்தோடு மிதந்து கொண்டு போனான்.

இப்படி திக்கற்றுத் தியங்கி மயங்கினவனாய்ப் பஞ்சமூட்டையின் மேல் அஃதோடு மிதந்துகொண்டு போனவன் கடைசியில் அந்நீரோட்டத்தோடு சமுத்திரம் போய்ச்சேர, அங்கே அலைகளால் மோதப்பட்டு அப்போ

தடித்தவோர் புசல்காற்றி லகப்பட்டுச் சிதறுண்டு பிராணன் போகும்படியான அவஸ்தையிலிருந்தான். அப்பொழுது அவன் ஏறியிருந்த மரக்கிளையின் பேரிலிருந்து விழுந்து அவனோடாபத்திலிருந்த பிள்ளைத்தாய்ச்சிக்குப் பிணையாக வுதவிய வேடனது பிரேதம் அங்கே மிதக்கக்கண்டு அதை ஆதரவாகக் கொண்டு பிடித்துக்கொள்ளப் பார்த்தான். ஆனால் அப்பிரேதம் நாட்பட்டு அழுகிப்போயிருந்ததால் இவன் கைபட்டதும் அது தன் துர்நாற்றத்தை வீசி இவனை மூர்ச்சித்துப்போகச் செய்துவிட்டு அது சிதறுண்டு போய்விட்டது. அப்பொழுது பிராண தீர்த்த ஹரிஹரசிவன் பிழைக்கலாமென்கிற ஆசைவிட்டு பூர்வஜன்ம புண்யசவாசனையால் "ஹர ஹர" வென்று சொல்லி ஆவியை விடவிருந்தான். "ஹரஹரனென்ன அரியதொன்றில்லை!" யென்றபடி அச்சமயம் அங்கே கட்டுமரம்கட்டி விட்டு, மீன்பிடித்துக் கொண்டிருந்த செம்படவன் வலைவீச அதில் இவன் தேஹம் அகப்பட்டது. உடனே அவன் இன்றைக்குப் பெரிய மீன் அகப்பட்டதென்று உளங்களித்து வலையை யிழுக்க, அவன் மனமுடைய ஆச்சர்யம்! ஒரு மனிதனுடைய தேஹம் வலையில் சிக்கியிருக்கக்கண்டான். குத்துயிராயிருந்த அத்தேஹத்தை யிழுத்துக் கட்டை மரத்தின்மேல் போட்டு அதற்கு வேண்டிய உபசாரம்செய்து உயிர்தரிக்கச்செய்து கொண்டிருக்குங் காலத்தில் ஒரு கொள்ளைக்கப்பல் தூரத்தில் வரக் கண்டான். அதைக்கண்டதும் இவன் அந்தப் பிராமணனைக் குத்துயிராய்த்தானே நீரில் தள்ளித் தான் தப்பியோடப் பார்த்தான். கப்பற் கொள்ளைக்காரர்கள் ஏதோ திரவியத்தைச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டு ஒளித்தோடுகிறானென்று சமுசயித்து அந்தப் பிராமணனையும் அவனையும் பிடித்து கப்பலில் போட்டுக்கொண்டு தூரதேசம் போய் அங்கே யிருவரையும் அடிமைகளாக விற்று அகப்பட்டதை யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ஹரிஹரசிவன் இப்படி அடிமையாகவே அவன் ஆயுசுகாலத்தைக் கழிக்கவேண்டியிருந்தது. மீன் வலையனோ எஜமானுக்கு மீன்பிடித்துக்கொண்டு வந்து கொடுப்பது வழக்கமாயிருக்கையில், ஒருநாள் ஒரு மீன் வயிற்றில் ஒரு பெரிய தங்கப்பாளமிருக்கக்கண்டு அதைத் தன் சுதந்திரத்தைப் பெறக் கப்பமாகக்கட்டி அடிமை நீங்கித் தன் சுயேச்சைப்படி உலகில் ஜீவனம் தேடிப்பிழைக்க வேறு தேசங்களுக்குச் சென்றான்.

ஹரிஹரசிவன் தூய ஹிருதயத்தோடு அஞ்செழுத்தோதி யிருந்தால் அவன் நற்கதியடைந்திருப்பான். மாசுபட்ட ஹிருதயத்தனாயினும் ஆபத்துக்காலத்தில் அஞ்செழுத்தை நினைத்து "நமச்சிவாயவாழ்க! நாதன்தாள் வாழ்க!" என்று சொன்னதினால் அவன் துர்மரணமாகச் சாகாமல், "மனம்போலிருக்கும் மாங்கல்யம்" என்கிற பழமொழிப்படி எப்பொழுதும் காசின்பேரிலே கண்ணாயிருந்துழைத்து வந்த விசேஷத்தால் அந்தக் காசுக்குத் தானே அடிமையாகி, அவன் கர்மத்தை அனுபவிக்கும்படி உயிர்தப்பிப் பிழைத்தான்.

அந்த ஜன்மத்தில் அடிமையாகவே யிருந்துயிர் துறந்தாலும் அவன் மறுஜன்மத்தில் தன் ஜாதிமாறாமல் அந்தணகுலத்தி லவதரித்தும் வாய்மை தூய்மையின்றி வைசியலக்ஷியம் மேலிட்டு பணத்துக்குழைத்து பணத்தையிழக்க கர்மவிதி யேற்பட்டவனாய் முன் பஞ்சமூட்டையாக வந்த அஞ்செழுத்துத் தானே இந்த ஜன்மத்தில் வைசியலக்ஷணம் பொருந்திய மானிடவுருவாக அமைந்துற்று அந்தப் பிராமணனை அடிமைகொண்டு அட்டைபோலொட்டி அவன் யசனஸ யுண்டுவருகிறது.

கர்மம் யாரையும் விடாதாயினும் நிஷ்காமிய கர்மத்தால் அதை வெல்லல் ஆகும் என்பதை இதை வாசிப்போர் அறியவேண்டும்.

வேடனுக்கஞ்சியோடிய மான் அவ்வாலவிருக்ஷத்தில் தானேயிருந்து வெள்ளம்வடியவும் தப்பிப்பிழைத்தது.



## A FIRST LESSON IN CHILD-STUDY. TIT-BITS FOR CHILDREN.

### பாலவித்யாம்சம்.

### சிறுவர்க்கான துக்கடாக் கதைகள்.

குழந்தைகளே, நான் உங்களுக்கு சின்னச் சின்ன துக்கடாக்கதைகள் சொல்லப்போகிறேன். அவற்றை மட்டும் நீங்கள் பக்தி சிரத்தையோடு கவனமாய்க் கேட்பீர்களானால், பெத்தப் பெரியவர்களுக்குத்தெரியும் அற்புத சமாசாரங்களெல்லாம் உங்களுக்குத் தெரிய வரும்.

"அம்மா 'குட்டி' யுன்நாமம்!
அருமை யாமொரு வாலை ரூபம்!
சும்மா விருந்துன் சொரூபத்தைக் காண்பான்
சுசியோ டுழைத்தேன் வெகுகாலம்."

"அப்பா, உனக்கு 'நான் குழந்தை' வேணுமோ வேண்டாமோ?"

ஐந்துவயதாகாத சிறு குழந்தையொன்று தன் தாயாரிடம் சென்று விளையாடிற்று. சாப்பிடுகிறநேரம் வரவே, விளையாட்டை ஸரஸமாய் நிறுத்தியோ அல்லது விளையாட்டோடு விளையாட்டாகவோ அக்குழந்தையைச் சாப்பிட அழைக்காமல், அதற்கு மனம் விளையாட்டின் மேலிருக்கையில் தன் அதிகாரத்தைக்காட்டி சாப்பிட அழைத்தாள். குழந்தை தாயார் அதிகாரத்துக்கு உட்படவில்லை.

"சாப்பிடவருகிறையா, அப்பாவிடம் சொல்லட்டுமா?" என்றாள் தாயார்.

"அப்பாகிட்டத்தானே போய் சொல்லிக்கோ!' என்றது குழந்தை.

உண்கலத்தில் சாதத்தைவைத்து "சாப்பிடு! இல்லாவிட்டால் உதைப்பேன்!" என்றாள் தாயார்.

"ஊட்டணும்! இல்லாவிட்டால் நான் சாப்பிடமாட்டேன்!" என்றது குழந்தை.

"உனக்கு சாப்பிடக் கையெங்கே போச்சு! சின்னக்குழந்தை அழுகிறது; நான் ஊட்ட முடியாது!" என்றாள் தாயார்.

"அப்படின்னா நான் அப்பாகிட்டப்போய்ச் சொல்லுவேன்!" என்றது குழந்தை.

"போய்ச் சொல்லு போ!" என்று தாயார் கடுகடுத்துச் சொல்ல, குழந்தை அழுதுக்கொண்டு மேலேபோய் "அப்பா, அம்மா சாதம் ஊட்டமாட்டேன் என்கிறாள்!" என்று சொல்லியது.

"நீ அழாதே போ! நான் அம்மாளை சாதம் ஊட்டச் சொல்கிறேன்!" என்று சமாதானம் சொல்லியனுப்பக் கீழேவந்து தாயாரைச் "சாதம் ஊட்டு!" என்று கேட்டது.

"குழந்தை அழுகிறதடி! நீயா சாப்பிடேன்; உனக்கென்ன கேடு!" என்று தாயார்கோபித்துச் சொல்ல,

"உனக்குத்தான் கேடு! நான் மட்டும் குழந்தையில்லையோ!" என்றது.

"குழந்தையுமாச்சு, கோட்டானுமாச்சு! எத்தனை குழந்தைகளுக்கு நான் ஏக காலத்தில் ஈடு கொடுப்பேன்" என்று தாயார் வெறுத்துச் சொல்ல, "நான் குழந்தை, உனக்கு வேண்டாமா?" என்று வெடுக்கென்று தாயாரைக்கேட்டது.

"நீ விஷமம் செய்து படுத்துகிறாய்! ஆதலால் நீ யெனக்கு வேண்டாம் போ!" என்றுதாயார் பதில் சொல்ல, குழந்தை மனம் குன்றித் தகப்பனாரிடம்போய்,

"அப்பா, அம்மாக்கு 'நான் குழந்தை' வேண்டாமென்கிறாள். உனக்கு 'நான் குழந்தை' வேணுமோ? வேண்டாமோ?" என்று கன்றின முகத்தோடு வெகு ரோஸப்பட்டுக் கேட்டது.

தகப்பனார் குழந்தை முகத்தைப்பார்த்துத் திடுக்கிட்டு, நடந்த விர்த்தாந்தத்தைவிசாரிக்க, "அம்மா 'நான் குழந்தை' வேண்டாமென்னாட்டாள். உனக்கு 'நான் குழந்தை' வேணுமோ, வேண்டாமோ?" என்று மறுபடியும் மனத்தாங்கலுடன் குழந்தை கேட்க,

"எனக்கு வேணுமடா அப்பா! உன்னைக் குழந்தைவேண்டாம், என்று சொன்னதுயார்? அம்மாள் சுத்த அசடு. சமர்த்தாயிருந்தால் அப்படிச் சொல்லியிருக்க மாட்டாள்!" என்று சமாதானம் சொல்லக் குழந்தை அகமும் முகமும்மலர்ந்து ஆறுதலடைந்தது.

அந்தக்குழந்தையை "வேண்டாம்" என்று தாயார் சொல்ல அதற்கு எவ்வளவு மனத்தாங்கலும் ரோஸமும் உண்டாயிற்றுப் பார்த்தீர்களா !

தாமரைப்புஷ்பம் சூரியனைக்கண்டு மலர்வதும் இருளைக் கண்டு குவிவதும் எதனால்? அப்படியே குழந்தை முகம் அன்பில் விரிந்து ஆத்திரத்தில் குவியும்.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" யென்று பெரியோர் சொல்லும் பழமொழிக்கு அர்த்தம் அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்து அதன் சோகக் குரல் காதில் விழுந்தபின் தான் எனக்கு நன்றாகத் தெரிந்தது. "குழந்தையைப் புறங்கையால் தள்ளக்கூடாது" என்று எல்லாருக்கும் தெரியும். "புறங்கையால் தள்ளக்கூடாது" என்பது மட்டுமல்ல: "மனதால் புறக்கணித்துப் பேசுவதும் கூடாது" என்பதை இச்சிறு குழந்தை யெனக்குப் போதித்தது. இப்படியாக 50-வயதான பெரியவர்களும் 5-வயதாகாத குழந்தை நடத்தையிலிருந்து எத்தனையோ நீதிபோதனைகளைக் கண்டுணரலாம். ஆதலால்தான் ஔவையார் "ஓதுவதொழியேல்" என்று சொன்னாள்.

"உயிருள்ளமட்டும் பயமில்லை!" ஏனெனில் எத்தனை மந்தமதியாக விருந்தாலும் ஒன்று தப்பினால் ஒன்றினால் உண்மையை ஓர்ந்துணரலாம். பிறப்புமுதல் இறப்புவரையில் ஜீவன் கற்றுக் கொண்டேயிருப்பதால் "ஓதுவதொழியேல்" என்று சொன்னார் ஞானத்தாயாகிய ஔவையார்.

பாலபோத சிக்ஷா ஞான சாதனமான இந்த விவேசிந்தாமணியும் குழந்தைகளாகிய ஒவ்வொருவரையும் பார்த்து "நான் விவேகக் குழந்தை, உங்களுக்கு வேணுமோ, வேண்டாமா?" என்று உருக்கமாகச் சுருக்கென்று இதயத்திற் பாயக் கேட்கிறது.

'வேண்டாமென்று புறக்கணித்தால், அதிக ரோஸத்தோடு மனத்தாங்கல் கொண்டு வித்யேசுவரியிடம் சென்றுக் கல்லும் கரைந்துருக முறையிடுகிறது,

இந்த முறையீட்டுக்கு இடங்கொடுக்காமல் நடந்து கொள்கிறவர்களுக்கே வித்யாலக்ஷ்மி தனது இனிய பிரஸாதத்தை யளித்து மனங்களிப்பாள். விவேகசிந்தாமணியாம் அவள் குழந்தையைப் புறக்கணித்தாரை அவளும் புறக்கணித்து முகங்கோணி நிற்பாள். ஆகையால் குழந்தைகளே, நீங்கள் அவள் முகங்கோண நடந்து கொள்ளாதீர்கள்! இப்படிக்கு,

உங்கள் அன்புள்ள,

குட்டியண்ணா.

---

## SHORT TALES FOR YOUNG FOLKS.

### சிறுவர்களுக்கான சிறுகதைகள்.

### "பஞ்சிலும் லேசானபண்டம்."

குழந்தைகளே, உங்களுக்குத் தெரிஞ்ச பண்டங்களிலெல்லாம் பஞ்சு தான் மிகலேசானது.

"பஞ்சான தேஹமிது
பகவானொருவனுண்டு."

என்று விவேகத்தாய் தாலாட்டிச் சீராட்டியிருக்கிறாள். ஆனால் பஞ்சிலும் 6-மடங்கு லேசான பண்டமொன்றிருக்கிறது. ஜாவாதேசத்தில் ஏராளமாகப் பயிராகும் 'காபோக்' விருக்ஷமொன்றிருக்கிறது. அந்தமரத்தின் காய்முற்றி நெற்றானால் அதற்குள் இலவம் பஞ்சுபோல் பட்டவ்வளவு ஸந்நமான நாரொத்த பண்டமிருக்கிறது. அதை நூலாகநூற்று நெசவு செய்யவென்று சென்ற இருபதுவருஷங்களாக ஒரு யந்திரம் நிர்மித்துவர முயற்சிசெய்து வந்தார்கள். கடைசியில் அந்த யந்திரம் நிர்மாணம் செய்து முடிந்து அந்த 'காபோக்' நாரினால் நூற்ற நூல் கொண்டு தலையணைத் துணி



முதலிய சரக்கு நெய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். அது பருத்தியைவிட 6-மடங்கு லேசானது.

* * *

"குடமுடைந்தாற் குடமாகும்,
மனமுடைந்தால் மனமாகும்?"

இது ஒரு சாதாரணமான பழமொழி, நான் குழந்தையாயிருக்கும்பொழுது என் தாயார் இதைப் பன்முறை சொல்லி என்னைத் தேற்றினது இன்னும் என் ஞாபகத்திலிருக்கிறது. இதன் உள்ளர்த்தம் என்னவென்றால், ஸ்தூலமான நாமரூப பேதங்களையுடைய பண்டங்களுக்குக் கெடுதி ஸம்பவித்தால் அதை நிவிர்த்தி செய்து கொள்ளலாம். மிஞ்சிப்போய் உடைந்து விட்டால் செப்பனிட்டுக் கொள்ளலாம். ஆனால் சூக்ஷ்மரூபமான மனது கவலைப்பட்டு நிலைகுலைந்து போனால் அதை நேர்ப்படுத்துவது மனுஷ ஸாத்தியமானதல்ல. இதையே இன்னொரு விதமாகவும் மாற்றிச் சொல்வதுண்டு! "தேஹவியாதிக்கு மருந்துண்டு: மனோவியாதிக்கு மருந்தில்லை" யென்பர்.

குழந்தைகளை வளர்ப்பதில் அவர்கள் மனமுடையாமல் பாதுகாப்பது தான் மிகவும் கஷ்டமான வேலை. ஏழைக்கும் அரசர்க்கும் இதில் வித்தியாஸமில்லை.

உதாஹரணமாக இப்பொழுது நேர்ந்த ஒரு அரசிளங்குமரன் பரிதாபக்கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

'ப்ரின்ஸ் காரலாப் பரிதாபக்கதை.'

ருஷியாவுக்குத் தலைநகரமாகிய 'மாஸ்கோ' பட்டணத்தில் ஒரு அரசிளங்குமரன் மனமுடைந்து தன் தேஹத்தை விட்டு விட்டான். அவன் பேர் 'ப்ரின்ஸ் காரலாப்'. அவன் அரசவம்சத்திற் பிறந்தானாயினும், ஏழையாகவேயிருந்தான். வயது 20-ஆயிற்று. பள்ளியிற்பழகும் காலத்தில் தனக்கு நன்றாகப்பாட வருகிறதென்றும் குரல் இனிமையாக விருக்கிறதென்றும் நினைத்து பள்ளிப்படிப்பை அசட்டை செய்து விட்டான். 20-வது வயதில் 'மாஸ்கோ' பட்டணம் சென்று அங்கே பாடக்கற்றுக் கொள்ள முயன்றான். கையில் காசில்லை. உறவுமுறையான் ஒருவன் கையைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'மாஸ்கோ' பட்டணம் வந்து சேரவும் அங்கே சாதாரணப்படிப்பு நன்றாகக் கற்றிருந்தால்தான் பாடக் கற்றுக் கொள்ளலா மென்று கண்டுகொண்டான்.

"இளமையிற்கல்" என்கிற மூதுரையைச் சட்டை செய்யாமல் தன் இளமை வீணிற் கழிந்ததைப்பற்றி விசனித்து மனமுடைந்தவனானான். என்னசெய்வதென்று தெரியவில்லை. மனமுடைந்த வேதனையில் வாழ்நாளை வெறுத்து துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு பிராணனை விட்டுவிட்டான். அரசனானாலும் ஏழையானாலும் மனவேதனை எல்லாருக்கும் ஒன்றுதான். இதை நித்தியப்படி, அனுபவத்தில் காணலாம்.

* * *

இங்கே குழந்தையொருவனுக்கு அபயங்கொடுத்து ஆதரிப்பதாகச் சபதம் செய்த ஒருவர் திடீரென்று தன் வாக்கை மறந்து அதனால் மனம் கோழைப்பட்டு வழவழவென்று உழன்றதைப் பார்த்து அக்குழந்தை மனம் திகிற்படலாயிற்று. அப்பொழுது விவேகத்தாய் ஸ்ரீலோகநாயகி யுருக்கொண்டு அபயவரதஹஸ்தங்கள் விளங்கத் தோன்றி "அப்பா, நீ யொன்றுக்கும் அஞ்சாதே, நானிருக்கிறேன்"! என்று அபயம் கொடுத்து ஆறுதல் கூறித் தேற்றப் பையன் தேறலுற்றான். ஆகையால் குழந்தைகளே "இந்த தேஹம் நான்" என்று மதம் பொங்கி யெழும் அஹம்பாவத்தில் அகப்பட்டுக் கொண்டு துரியோதனாதியர்களைப் போல் அழிந்துபோகாமல்,

"பஞ்சான தேஹமிது
பகவானொருவனுண்டு"

என்பதை உள்ளத்திருத்தி நெஞ்சகத்தில் வஞ்சகநினைப்பதை அறவிட்டு, தர்மபுத்திர

ரைப்போல் தர்மமே ஜயமென்கிற விருதுகட்டிப் பரோபகார சிந்தையோடு ஸத்தியவிரதம் கெடாமல் உழைத்து வாருங்கள்.

"ஸத்தியமே நன்மார்க்கம்
தவறு வரும் மற்றெதிலும்
வித்தையில் லாபமெத்த
விசுவாசம் மெத்த மெத்த."

என்னும் விவேகத்தாய் சொல்லிய வாக்கியத்தின் உண்மையை உங்கள் சொந்த அனுபவத்தில் தானே கண்டுணருவீர்கள். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளியாகி விடும்" என்பது நிச்சயம்.

---

## THE MAIDEN TRIBUTE OF MODERN SOCIETY.

### தற்காலத்துத் தாடகைவாங்கும் கன்யாபலி.

ஸ்ரீசிலாதேவி பிராணத்தியாகம் செய்தது பணஆசை கொண்ட எல்லாருக்கும் ஏளனமாகிவிட்டது, அந்தப் பெண் தற்காலத்துத் தாடகை வாங்கும் கன்னியாபலிக்கிசைந்து,

"நன்று தேஹம் விடுதலென்றே
நானுமூட்டு மிச்சிறுதீ
என்றும்விடா திவ்வுலகில்
காட்டுத்தீயா வளர்ந்தெரிய
வரமெனக்கு நீயருள்வாய்!"

என்று சொல்லி உயிர்துறந்தது பணமே பெரியதென்று பணப் பேய் பிடித்தார்க்கு ஒரு ஏச்சுப் பேச்சுக்கிடமாயிற்றே யன்றி வேறு பலனைக் காணக்கூடவில்லை யென்று பெங்காலி பத்திரிகை கூறுகின்றது. பவானிப்பூரில் இன்னொரு பெண்மணி தன் கலியாணத்துக்கு வழி பிறக்கும் பிறக்குமென்று கடைசி நாள்மட்டும் காத்திருந்து கடைசியில் 5000-த்துக்குக் குறைந்து மாப்பிள்ளை கிடைக்காதென்பதை யுணர்ந்து தன்னால் தன் பெற்றோர்க்கு இன்னல் விளைக்கவேண்டாமென்று உயிர்துறக்கலானாள். இவர்களை யெல்லாம்மனோதிட மில்லாதவர்கள் என்று சொல்லி யிகழ்வது பணத்தில்கண்ணுள்ளவர்களுக்கு எளிது. ஆனால் அவர்களுடைய மனோநிலையை யறிந்து அனுதாபத்தோடு அவர்கள் நடத்தையை ஆராய்வதற்குப், பணமே பெரிதென்று நினைப்பவர்கள் அருகராக மாட்டார்கள். ஆகையால் "உலகம் பலவிதம்" என்கிறபடி அவர்கள் மனம்போல் அவர்களைப் போகவிட்டு உலக தர்மத்தை யொட்டி உண்மைவிசாரம்செய்து விவாஹ ஸம்ஸ்காரத்துக்கும் வரசொல்கத்துக்கும் நியாயமான சம்பந்த முண்டா வென்று தீர விசாரித்து, "தர்மமே ஜயம்" என்கிற பிருதுகட்டி ஊண்மைக் கொப்பாயிருந் துழைக்க வேண்டும். பணமிதப்பில் பணமே பெரிதென்றும் பணம்பற்றப் பாபதோஷம் பார்க்கவில்லையென்றும் நினைக்கிறவர்கள் வங்காளத்தில் மட்டும்தான் இருக்கிறார்களென்றில்லை. தென்னிந்தியாவிலும் இவ்வினத்தார் யதேஷ்டமாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களைப்பற்றியொன்றும சொல்லக்கூடாது; சொன்னால் வீண் பொல்லாப்பு வரும். "உள்ளதைச் சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளமாகத் தானிருக்கும்."

---

## CONVERSATION.

"The art of conversation is the most important social gift, but there is no royal road for acquiring it."

"A well educated gentleman may not know many languages—may not be able to speak any but his own—May have read very few books. But whatever language he knows, he knows precisely; whatever word he pronounces, he pronounces rightly; above all he is learned in the peerage of words, knows the words of true descent and ancient blood at a glance from words of modern *Canaille*"—*Ruskin.*

"You should eudeavoure to cultivate the habit of attention so that you may build upon the remarks of your companion."



## ஸம்பாஷணை சக்தி.

ஸம்பாஷணை யென்பது இருவர் மனமொத்துப் பேசல் என்று சொல்லலாம், பலர் மனமொத்துப் பேசல் சம்பாஷணைக் கூட்டம் அல்லது கச்சேரி யென்று சொல்லப்படும்.

மனம் ஒத்து வருவது கஷ்டமான வேலை. ஏனெனில் மனம் ஒன்றுவிட்டு ஒன்றைப் பற்றிக்கொண்டே யிருக்கும். இப்படி குரங்கு சேஷ்டை செய்வது அதற்கு சுபாவம். அந்த மனதைக் கவர்ந்து நாம் சொல்லும் வார்த்தையையும் விஷயத்தையும் கவனிக்கும்படிச் செய்வது இலகுவான காரியமில்லை. ஆனாலும் ஸம்பாஷணை சக்தி யிருந்தால் ஜன சமூகத்தில் சேர்ந்து உறவாடிப் பழக்கலாம். "தன்னை யறிந்தவன் தலைவனாவான்." தன்மனதை யறிந்தவன் மஹான் (பெரியவன்) என்று சொல்லப்படுவன். ஏனெனில் பாவனம் இன்றி வாசிகம் பலிக்காது. மனதில் நினைவு பூரணமாயிருந்தால் தான் வாக்கில் வார்த்தை தானாக வரும். இல்லாவிட்டால் வாக்குத் தடைப்பட்டுபேசவராது அறிவுள்ளவன் மனதை யடக்கியாளக் கற்றவனாவான். தன்மனதை யடக்கியாளக் கற்றால் எல்லார் மனதையும் அடக்கியாளலாம். ஏனெனில் மனம் குரங்கு சேஷ்டை செய்தாலும் அது தன்னை யறிந்தார்க்குப் படிந்து நடக்கும். தன்னை யறியாதாரைத்தான் மயக்குவிக்கும்.

ஸம்பாஷணைக்கு இன்றியமையாத லக்ஷணங்களில் பூரணமான மனது ஒன்று. மற்றொன்று அதற்கேற்றபடி பூரணமான வாக்குத்திறமை, மனோசக்தி யுள்ளவர்களுக்கு வாக்குவித்தி தானே வரும். ஏனெனில் "Language is the slave of thought" என்றபடி, மனம் சங்கல்பிப்பதற்கு ஏற்றபடி வாக்கு அதன் எண்ணத்தை வெளியிடும்.

நீர்நிலைக்குத் தக்கபடி நீராம்பல் கொடி விட்டு வளர்ந்து நீருக்குமேல் வந்து புஷ்பிக்கிறது போல், மனநிறைவுக்குத் தக்கபடி மனதிலிருந்துண்டான வாக்கு அதன் கருத்துகளைப் பூரணமாகத்தெரிவிக்கும் சக்திவாய்ந்ததாகும்.

தன்குலை தாங்காக் காம்பில்லை. அதுபோல் தன்மனம் சிந்தித்ததை வெளியிடமுடியாத வாக்கில்லை. இரவல் சரக்கு வாங்கி வேஷம் போடுகிறவர்கள் தானே வாக்கு சக்தியால் கைவிடப்பட்டு அவமான மடைவார்கள்.

ஆகையால் பாஷாஞானமும் ஸம்பாஷணைக்கு ஓர் இன்றியமையாத சாதனமாகும்.

மனப்பழக்கமின்றி (கல்வியின்றி) நாப்பழக்கம் (ஸம்பாஷணைசக்தி) யுண்டாக மாட்டாது. பாஷாஞானமின்றி மனப்பழக்கமாகிய உண்மைக்கல்வி ஸித்திக்காது. ஆகையால் சிறுவயதிலேயே தாய் பாஷையை அசட்டை செய்துவிட்டு அந்நிய பாஷையைக் கற்கமுயல்கிறவர்கள் அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட பெண்ணின் கதியடைவார்கள்.

நம்மில் இங்கிலீஷ் படித்தவர்களென்று பேர் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் வீட்டிலும் ஜனசமூகத்திலும் பேசும்பொழுது பல பாஷைகளை யொன்றாகக் கொட்டிக் கலந்து கர்ணகடூரமாய்ப் பேசுகிறார்கள்.

மிருகங்களும் விசுவாசத்தினால் மனுஷர் பேசும் பாஷையை உணர்ந்து கொள்ளுகின்றன.

இன்று காலையில் நான் வழியில் வரும்பொழுது ஒரு பறைச்சி இரண்டு நாய்களை யழைத்துக்கொண்டு குறுக்கு வழியே வந்தாள். வரும்பொழுது ஒரு சுவரேறிக் குதித்து வரவேண்டியிருந்தது. அவள்பின் வந்த இரண்டு நாய்களில் ஒன்று அவள் குதிப்பதைப் பார்த்து தானும் குதித்து ஓடி வந்துவிட்டது. மற்றொன்றுக்கு அவ்வளவு உயரத்திலிருந்து குதிக்க சக்தியில்லை. ஆதலால் அது குதிக்கத் துணியாமல் தவித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து அந்தப் பறைச்சி "நீ அப்படிப் போய் சுற்றிக்கொண்டு வாசல் வழியாக வா!" என்று வார்த்தையால் சொன்னாள். அது அவசரப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்பட்டது. ஆனாலும் குதிக்கத் துணிவு வரவில்லை.

அதைக்கண்டு அப்பறைச்சி, "உன்னால் குதிக்க முடியவில்லை; அப்படிபோய்ச் சுற்றிக்கொண்டு தான் வரவேணும்! போ!" என்று சொன்னாள். அது அவளுடைய ஒத்தாசையை வேண்டினதாக பாவனைகாட்டியது. அதை யுணர்ந்து "நான் திரும்பிவர மாட்டேன்: நீதான் அப்படிப்போய் சுற்றிக்கொண்டுவரவேணும்! போ!" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். நான் "நீபேசுகிற பாஷை அதற்கு அர்த்தமாகுமா?" என்று கேட்டேன். "ஓ! சற்றுப்பாருங்கள்; அது அப்படியே போய்வருகிறதா இல்லையா வென்று!" என்றாள். அந்நாயும் அப்படியே போய் சுற்றிக்கொண்டு வாசல் வழியாக ஓடி வந்துவிட்டது. நம்மில் இங்கிலீஷ் படித்தவர்கள் ஸம்பாஷணைத்திறம் இவ்வளவுகூட இல்லையே!.

---

## THE SAYINGS TRUE OF GRANDMA WISE.

### ஔவைப்பாட்டி சொல் அருந்தவ உபதேசம்.

குழந்தைகளே! நான் உங்களைப் போல் சிறு குழந்தையாக விருந்த பொழுது எனக்குப் பாட்டியார் சொன்ன கதைகள் எத்தனையோ உண்டு. சரியாக சாப்பிடா விட்டால் அதற்கு ஒரு கதை சொல்லுவள், அக்கதையைக் கேட்டுக் கொண்டே, "ஊம், ஊம்," என்று சொல்லும் பொழுது "ஆம், ஆம்," என்று ஒரு பிடி சாதம் கையில் போட்டு "வாயில் போட்டுக்கோ பார்ப்பம்!" என்பள். கதை கேட்பதிலுள்ள உற்சாகத்தில் என்னத்திற்காகப் பிணங்கினேன் என்பதை மறந்துவிடுவேன். இப்படியே சமயோசிதமாய் ஒவ்வொன்றுக்கும் ஒரு கதையைச் சொல்லி அவர்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டு போக, நான் விஷமம் செய்யும் போதெல்லாம் பாட்டி ஒரு நல்ல கதை சொல்லுகிறாளென்று அவளிடத்தில் அதிக விசுவாசம் பாராட்டி யிருப்பேன். அந்தப் பாட்டியை உனக்கு இந்தக்கதை யார் சொன்னார்கள்? என்று கேட்டால் "நான் உன்னைப் போல் குழந்தையா யிருக்கும் பொழுது எங்கள் பாட்டியார் சொன்னாள்" என்பள்.

"உங்கள் பாட்டிக்கு யார் சொன்னார்?" என்று கேட்டால்,

"அவாள் பாட்டி சொல்லி யிருப்பள்!" என்பாள்.

"அந்தப் பாட்டிக்கு யார் சொன்னார்?" என்று பின்னும் கேட்டால்,

"அவாள் பாட்டி சொல்லி யிருப்பள்!" என்று அதையே சொல்லுவள்.

இப்படிக்குப் பாட்டி சொன்ன கதைகளெல்லாம் முதிர்ந்த அறிவினால் சொன்ன கதையாதலால், அதை யெல்லாம் திரட்டி யுருட்டி மாத்திரை செய்வதுபோல், ஒரு பாட்டி சுருக்கமாய் அவைகளை யெல்லாம் ஒரு வாக்கியம் இரண்டு வாக்கியத்தில் அடக்கி அதையும் காதுக்கினிமையாக விருக்கப் பாட்டாக அமைத்து விட்டாள். அந்தப்பாட்டுகளுக்கு "மூதுரை" யென்று பேர். "அந்தப் பாட்டிக்கு யார் சொன்னார்?" என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள். அதை நான் உங்களுக்குச் சொல்லும் படியாக அந்தப் பாட்டி மிச்சம் விட்டு வைக்க வில்லை!

அவள் தானே தான் சொல்லும் ஒவ்வொரு உண்மையையும் தனக்குச் சொன்னது யாரென்று சொல்லி அந்தப் பேர்வழியை உங்களுக்கும் காட்டி விட்டிருக்கிறாள். ஆகையால் நீங்கள் அவள் சொல்வது நிஜமோ பொய்யோ வென்று நேரில் தானே பரீக்ஷித்தறிந்து கொள்ளலாம். அந்த ஔவைப் பாட்டி குழந்தை முதல் கிழவியாகப் போகிற வரையில் தவஞ் செய்து இந்த உண்மைகளை யெல்லாம் உள்ளபடி ஆராய்ந்து சாக்ஷாத்கார தரிசனத்தா லறிந்தாள். அவள் தவஞ் செய்து கொண்டே யிருந்ததால், கலியாணம் செய்து கொள்ள ஒழிய வில்லை. கிழவியான பிறகு பிள்ளைப் பெறுவது கஷ்டமென்று உலகிலுள்ள எல்லாரையும் அவள் தன் குழந்தைகளாகப் பாவித்து அருந்தவ உபதேசம் செய்து வந்தாள். அப்படிப் பட்ட அற்புதப் பாட்டியாருடைய அருந்தவ உபதேச மொழிகளில் சிலவற்றை யெடுத்து நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நான் "தாத்தா" வாகப் போய் விட்டேன்



குழந்தைகள் என்னைச் சூழ்ந்து கொண்டு "தா, தா, தாத்தா," என்று மழலை பேசும் போது நான் கோட்டானைப்போல் வாயை மூடிக்கொண்டிருக்க முடிய வில்லை. நான் பர்வதராஜனைப்போல் மௌன விரதம் பூண்டு மௌனப் பிரஸங்கம்செய்து கொண்டிருந்த காலமுண்டு. ஆனால் "அது கூடாது, கீழே யிறங்கி வந்து, குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடி, அவர்கள் எண்ண மெல்லாம் தன்னதாக அவர்களோடிருந் தெண்ணி, அவர்களோடு ஆடிப் பாடி விளையாடி, அவர்கள் கஷ்டங்களை யெல்லாம் தன்னதாகப் பட்டனுபவித்து, அவர்களுக்குச் சரியாக விளையாடிக்கொண்டு அவர்களுக்கு வித்யா வழியும் காட்டி. யழைத்துக் கொண்டு போக வேண்டு" மென்றும், "குழந்தைகளுக்காகக் கீழே யிறங்கி மேலே போகவேண்டும்," என்றும் சொல்லி என் சமாதியைக் கலைத்து என்னைப் பிரமாணிக்கம் செய்யச் சொல்லி வாங்கிக் கொண்டு உங்களுக்கும் எனக்கும் இடையே பிரதிபந்தம் ஏற்பட்டதை யெல்லாம் அறுத்து நாம் கூடிக்குலாவி யுறவாட வழியேற்படுத்துவதாக வாக்கும் கொடுத்து விட்டார் உங்கள் வித்யாதிகாரிகள். "என்னுடைய பள்ளிப்பிள்ளைகள்" என்று உங்களிடம் பாத்தியம் கொண்டாடுமவர் பெற்றவர்களுக்குப்பிள்ளையுதவும்படி மட்டும் செய்தால் பரம சாதகமாயிருக்கும்.

## "ALL IS FOR THE BEST"

### "எல்லாம் நன்மைக்கே"

குழந்தைகளே, உங்களுக்குழைக்க என்னை யழைத்தபோது உங்களில் ஒரு குழந்தை என்னிடம் வந்து, "தாத்தா! 'எல்லாம்நல்லது! எதுவும் கடைசியில் நல்லதாகவே முடியும்!" என்கிறார்களே' அதையே விருதமாகக் கொண்டு எங்களுக்கு வழிகாட்டி யுழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். "அப்பா! எல்லாம் சிவமயம்" என்கிறார்களே, இதைத்தான் அப்படிச் சொல்கிறார்கள் என்றேன். சிவம் என்றால் மங்களம் என்று அர்த்தம். இதைப் பெரிய பெரிய மஹான்களெல்லாம் சித்தாந்தப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள் என்றேன். அப்படியா! என்றான் குழந்தை.

"நன்மைசெய்தால் நன்மையே விளையும்.'

ஔவைப்பாட்டியார், "நன்மை செய்தால் நன்மையே விளையும்" என்பதை வெகு நன்றாக வெடுத்துச் சொல்லியிருக்கிறார். "உலகத்தில் நாம் ஒருவர்க்கு நன்மை செய்தால் அவர் நமக்குத் தீமை செய்வதை நாம் தினம் பார்க்கிறோமே, அது எப்படி?" யென்று கேட்பீர்கள். நீங்கள் சொல்வது சரியல்ல! "எள்ளுவிதைத்தால் கொள்ளுமுளைக்குமா?" முளையாது போல் நன்மை செய்தால் அதற்குபதில் செய்வது மேலுக்குத்தீமையாகத் தோன்றினும் அது முடிவில் நன்மையே பயக்கும். பூமியை நம்பி விதையிட்டால் அது முளைக்குமோ என்று சந்தேகப்பட வேண்டாம்.

பூசாரம் மட்டும் நல்லதாக விருக்கப்பார்க்க வேண்டும்.

அதேமாதிரி "நன்றியொருவர்குக்ச் செய்தக்கால்," அந்த நல்லுபகாரத்துக்குப் பிரதியுபகாரம் எப்போ செய்வார்களென்று ஏங்கி யிருக்கவேண்டாம் என்கிறார் ஔவையார். ஏனெனில் நன்மை வீண்போகாது! இந்த உண்மையை அந்தப் பாட்டிக்கு யார் சொன்னது? என்று கேட்பீர்களேல், "உங்கள் தோட்டத்திலிருக்கும் தென்னமரத்தைக் கேளுங்கள்" என்று சாட்சி கூறியிருக்கிறாள். அதற்கு நீருற்றிவளர்த்தால், அது வேரினால் உண்ட நீரைத் தலையாலே இளநீராகத்தந்து உதவுகிற உதாரணத்தைக் கொண்டு உண்மையுணர்ந்து கொள்ளுங்கள் என்று சொல்கிறாள், இதைச் சொல்ல எனக்கு இத்தனை வார்த்தைகள் உபயோகிக்கவேண்டியிருந்ததே! அவள் எவ்வளவு அழகாயும் சுருக்கமாயும் இதைச்சொல்லியிருக்கிறார் தெரியுமா? அதை அப்படியே சொல்லுகிறேன். நீங்கள் கேட்டு மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில் இந்த மூதுரைகளெல்லாம் பிரகிருதிவத்தையைச் சேர்ந்ததாய் ஆத்மவித்தைக்கனுகூலமாயும் உலகில் இல்வாழ்வுக் கின்றியமையாததாயு மிருக்குமென்பது நிச்சயம்.

### மூதுரை-1.

"நன்றியொருவருக்குச் செய்தக்காலந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்."

உங்களையெல்லாம் பரோபகார சிந்தையோடு ஊருக்குழைக்க வேண்டுமென்று அரசர் பிரதிநிதி முதல் எல்லாரும் சொல்லி வருகி

ருர்களே. ஊரில் நல்லார் பொல்லார் எல்லாரும் இருப்பார்களே! உபகாரம் செய்தால் அபகாரம் செய்கிறபாவிகளுமிருக்கிறுர்களே யென்பீர்கள். உபகாரத்துக்கபகாரம் செய்தால் அது செய்வானைக் கர்மமாகத்தொடருமேயன்றி உபகாரியை யொருதீங்கும் செய்யவல்லதாகாது. அதை ஔவையார் இன்னொரு மூதுரையில் வெகு அழகாகச் சொல்லியிருக்கிறுர். அதையும் சொல்லுகிறேன் கேட்டு மனதில் இருத்துங்கள்.

மூதுரை-2.

"நல்லார் ஒருவருக்குச் செய்தவுபகாரம்
கல்மேலெழுத்துப் போற்காணுமே—அல்லாத
ஈரமிலாநெஞ்சத்தார்க் கீந்தவுபகாரம்
நீர் மேலெழுத்துக்கு நேர்."

நல்லவர்களுக்கு உப்காரம் செய்தால் அவர்கள் அதை என்றென்றும் நினைத்து நன்றிபாராட்டுவார்கள். அந்த நன்றியைப் பரோபகார சிந்தையினுல் காட்டுவார்கள். ஆதலால் அது கல்மேல் வெட்டின சிலாஸாஸநம் போல் என்றும் அழியாது விளங்கிக்கொண்டிருக்கும். அப்படிக்கில்லாத இரக்கமற்ற பாவிகளுக்கு உபகாரம் செய்தால் அவர்கள் அகத்தூய்மையில்லாக்குறையால் அதையுடனே மறந்து விடுவார்கள். அது நீரின் மேல் எழுதின எழுத்துப்போல் பயனற்றதாய் விளங்காதொழியும்.

இன்றைக்கு இவ்வளவு போதும். இன்னொரு முறை கூடும்போது இன்னும் சில அருமையான உபதேசங்களைப்பற்றிப் பேசுவோம். குழந்தைகளே இப்பொழுது விவேகசிந்தாமணி வாசித்தது போதும். சாயங்கால வேளையில் ஓடியாடி விளையாடிக் காற்றுவாங்குவோம் வாருங்கள்

குழவிக்கேற்ற கிழவனுய் உங்களுக் குழைக்க வென்று, அதிகாரிகளால் கங்கணம் கட்டி விடப்பட்ட,

எட்டுக்கு மேற்பட்ட
பட்டுத்தாத்தா.

## SCIENTIFIC RECREATIONS FOR THE YOUNG.

### சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

6. சுலபமாய் எவரும் செய்துகொள்ளத் தக்க பூதக்கண்ணுடிகள்.

பிளாடினம் (Platinum) என்னும் ஓர்வித உலோகத்தால் செய்யப்பட்ட அதிக மெல்லிய கம்பியை ஒரு துடைப்பக்குச்சி கனமுள்ள இரும்பு அல்லது செம்பு கம்பியின்மேல் ஒரு சுற்றுசுற்றி அதைக் கம்பியினின்றும் கழட்டி அதில் அமைந்திருக்கும் சிறுமோதிர வடிவான சந்தில், சுத்தமான வெள்ளைக்கண்ணுடிப் பொடிகளை வைத்து அசையாமல் (Spirit-lamp) ஸ்பிரிட் என்னும் ஓர் திரவம் விட்டு எரியும் விளக்கில் அல்லது கொல்லன் உலையில் பிடிக்க கண்ணுடி உருகி கம்பியின் மோதிரத்தில் சிறு நீர்த்துளிபோல் திரட்சியாய் நின்றுவிடும்.

இதை உபயோகித்துப் பார்ப்பதற்கு ஒரு கண்ணுடித்துண்டில் கால்நுளி ஜலம்விட்டு அதில் எறும்பு, கொசு முதலான சிறு ஜந்துக்களைவிட்டு, ஆகாயம் அல்லது விளக்கு பக்கமாய் பிடித்துக்கொண்டு அதற்கிப்பால் அரை நூல்தூரத்தில் மேற்செய்த பூதகண்ணுடியைப் பிடித்து அதின்மூலமாய்ப் பார்க்க ஜெந்துக்கள் அதிக பெரிதாய்த் தோன்றும்.

இன்னொருவிதம்,—அரைநூல் கனமுள்ள ஒரு இலேசான அச்சபித்தளைத்தகட்டில் குண்டூசி நுழையத்தக்க அவ்வளவு சிறுதுவாரம் செய்து, அத்துவாரத்தில் அசையாமல் ஒரு துளி ஜலம்விட அது உருண்டை வடிவாய்

### திருவாங்கூர் திவான்.

மேன்மை தங்கிய திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் மே மாசம் 11-தேதி யன்று கொடுத்த ஸந்நதுப்படி ம-ா-ா-ஸ்ரீ எம் கிருஷ்ணன் நாயர் அவர்கள் பி. ஏ., பி. எல், திருவாங்கூர் திவானுக நியமனம் பெற்று அன்றைக்கே அந்த வேலையை ஒப்புக்கொண்டு விட்டார்.

### புதியஹைகோர்ட்டு ஜட்ஜுகள்.

சென்னை ஹைகோர்ட்டுக்கு இப்பொழுதிருக்கிற 10-ஜட்ஜுகள் போதாதென்று இன்னம் 2-ஜட்ஜுகள் அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறுர்கள். இந்தப்புதிய ஸ்தானத்துக்கு திவான் பஹதூர் வி. வி. குமாரஸ்வாமி சாஸ்திரியாரவர்களும் மிஸ்டர் நேபியரும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்களென்றுதெரிகிறது.



நின்றுவிடும். இந்த ஜல பூதக்கண்ணுடியைப் பரீக்ஷிக்க மேற்சொன்ன விதமாய் கண்ணுடித்துண்டில் ஜலம்விட்டு அதில் கொசுமுதலான சிறு ஜெந்துக்களைப் போட்டுப் பார்க்கினும் பார்க்கலாம்; அல்லது, ஓர் துடைப்பத்தை அழுகின ஜலத்தில் துவைத்தெடுக்க துடைப்பத்தின் முனையில் நிற்கும் ஜலத்துளியை இப் பூதகண்ணுடியின் மூலமாய் சற்று தூரத்திலிருக்கும் விளக்கின் பக்கமாய்ப் பார்க்க அழுகின நீரிலிருக்கும் எண்ணிறந்த அணுக்கிருமிகள் தோன்றும். துடைப்பத்திலிருக்கும் ஜலத்துளியை தகட்டுக்கு வெகு அருகாமையில் கொண்டுவரின் இதிலிருக்கும் நீர்த்துளியோடு அதுவுங் கலந்து தகட்டிலிருக்கும் நீர்த்துளியின் திரட்சியை அழித்து அப்பிரயோஜன மாக்கிவிடும். ஆதலின் துடைப்பஜலத்துளியை வெகு சாக்கிரதையாய் ஜலப் பூதக்கண்ணுடியின் பின்னுல் பிடித்திருக்க வேண்டியதவசியம்.

7. குண்டூசி ஆரோபம்.

நான்கு அங்குலம் சதுரமுள்ள ஒரு மெல்லிய காகித அட்டையில் ஊசித்துவாரம் செய்து, அவ்வட்டையை கண்ணிற்கு அரை அங்குலம் தூரத்தில் பிடித்துக்கொண்டு, கண்ணிற்கும் அட்டைத் துவாரத்திற்கும் மத்தியில் ஒரு குண்டூசியை நேராகப் பிடித்து துவாரத்தின் மூலமாக ஆகாயத்தைப் பார்ப்போமாயின் வெகுதூல தூரத்தில் ஆகாயத்தில் ஒரு பிர்மாண்டமான ஒரு குண்டூசி தலைகீழாக இருப்பதாய்த் தோன்றும்.

8. இருட்டறையில் பேய்கள் காண்பிக்க.

துப்பாக்கி மருந்தில் கொஞ்சம் பிசின் ஜலம் கலந்து இவற்றுல் ஓர் இருட்டறையின் சுவரில் பயங்கரமான பிசாசு உருவத்தை எழுதி காய்ந்தபிறகு வேடிக்கை பார்ப்பவர்களை சுவரின் எதிரே தூரத்தில் நிற்கச்செய்து, நெருப்புக்குச்சியால் அவ்வுருவத்தின் கோடுகளில் எங்கேயாகிலும் பற்றவைக்க உருவமுழுதும் சடுதியில்பற்றி எதிரிலிருக்கும் ஜனங்களுக்கு ஷ உருவம் திடீலெனத் தோன்றி மறைந்துவிடும். இக்காட்சியைக் காண்பிக்க உருவம் எழுதுவதில் அதன் கோடுகளெல்லாம் ஒன்றோடொன்று கலக்கத்தக்கதாக எழுதவும்.

9. ஜால இங்கி.

1.—ஆக்ஸாலிக் திராவகத்தில்(Oxalic acid) ஆக்ஸைட் ஆப் கோபால்ட் (Oxide of cobalt) என்னும் மருந்தைக்கலக்கி அதில் கொஞ்சம் பொட்டிலுப்பைப் போட்டு இந்த இங்கியில் பேனுவைத் தோய்த்து எழுத எழுத்து ஒன்றும் தோன்ருது. ஆனுல் எழுதின காகிதத்தை அக்கினி அருகில் சூடுபடக் காண்பித்தால் எழுத்துகள் ரோஜாப்பூ வர்ணமாய்த்தோன்றும். ஆயினும் காகிதம் குளிரக் குளிர எழுத்து மறைந்துவிடும்.

2.—மயில் துத்தமும், முயுரியேட் ஆப் அம்மோனியாவும் (Muriate of Ammonia) சமனிடை எடுத்து ஜலத்தில் கலக்கி எழுத, எழுத்து ஒன்றும் தெரியாது. ஆனுல் எழுதின காகிதத்தை அக்கினி அருகில் சூடுபட காண்பிக்க அக்ஷரங்கள் மஞ்சள் வர்ணமாய்த் தோன்றும். ஆயினும் காகிதம் குளிரக் குளிர எழுத்து மறைந்துவிடும்

3.—நைட்ரேட் ஆப் பிஸ்மத்தைச் (Nitrate of Bismuth) சலத்தில் கலக்கி எழுத எழுத்து உலர்கிறவரையிலும் தோன்றும், பின்பு மறைந்துவிடும். காகிதத்தைச் சலத்தில் துவைக்க எழுதின எழுத்துகள் மறுபடியும் தோன்றும்.

4.—பச்சை நிறமுடைய (Muriate of cobalt)முயுரியேட் ஆப் கோபால்டை ஜலத்தில் கலக்கி எழுத காகிதத்தில் ஒன்றும் தெரியாது. ஆனுல் காகிதத்தை வெயிலில் அல்லது நெருப்பினெதிரில் சற்று சூடுண்டாகும்படி பிடிக்க மிகவும் பிரகாசமான பச்சைவர்ணமாய் எழுத்துகள் தோன்றும். காகிதம் குளிரக் குளிர எழுத்துகள் மறைந்துவிடும்.

5.—பிரஷியேட் ஆப் பொட்டாஷ் (Prussiate of Potash) என்னும் மருந்தில் மூன்று

கடுகளவினதாக எடுத்து ஜலத்தில் கரைத்து காகிதத்திலெழுத ஒன்றும் தெரியாது. ஆனால் சிறிது அன்னபேதி கரைத் திருக்கும் ஜலத்தை காகிதத்தின்மேல் தடவ எழுத்துக்கள் திடீரென நீலநிறத்தை உடையதாய்த் தோன்றும்.

6.—அன்னபேதி கரைத்த சலத்தால் காகிதத்தி லெழுதி உலரவைக்க எழுத்துகள் ஒன்றும் தோன்றாது. ஆனால் கடுக்காய்க்கொட்டை ஊறின சலத்தை அக்காகிதத்தின்மேல் தடவ, எழுத்துகள் திடீரெனக்கறுப்பு வர்ணமுடையதாய்த் தோன்றும்.

7.—மயில் துத்தம் கரைத்தசலத்தால் காகிதத்தில் எழுத, எழுத்துகளொன்றும் தோன்றா. ஆனால் அம்மோனியா (Ammonia) என்னும் திராவகத்தை மேல் தடவ, எழுதின எழுத்துக்கள் நீலநிறமுடையதாய்த் தோன்றிக் கொஞ்சநேரத்திற்குப் பின்பு மறைந்துவிடும். மறுபடியும் திராவகத்தைப் தடவ மறுபடியும தோன்றும்.

8.—அதிபம் நீர்கலந்த கந்தகதிராவகத்தால் காகிதத்தி லெழுத ஒன்றும் தெரியாது. எழுதின காகிதத்தை அக்கினி எதிரில் பிடிக்க எழுத்துகள் கறுப்பு நிறமாய்த் தோன்றும்.

9.—சாதாரணக் கஞ்சிநீரில் பேனாவைத் தோய்த்தெழுத, எழுத்து ஒன்றும் தெரியாது. ஆனால் ஒரு புட்டி சலத்தில் ஐந்தாறு துளி டிங்க்சர் ஆப் அயோடின் (Tincture of Iodine) என்னும் திராவகம்விட்டு இதில் ஷை காகிதத்தை துவைத்தெடுக்க எழுத்துகள் நீலவர்ணமாய்த் தோன்றும்.

10.—வெங்காயம் வெள்ளைப்பூண்டு இவைகளில் யாதாவதொன்றைக் கசக்கிப் பிழிந்து அச்சாற்றில் பேனாவைத் தொட்டு எழுத எழுத்துகளொன்றும் தோன்றா. ஆனால் ஒரு காகிதத்தைக் கொளுத்தி அதின் கரியை ஷை காகிதத்தின்மேல் தேய்க்க, எழுதின எழுத்து கருப்பிங்கியி லெழுதினதுபோல் தோன்றும்.

### 10. வெள்ளிசெடி உண்டாக்க.

ஒரு பெரிய புட்டியில் முக்காலளவு சுத்த நீர் (மழை ஜலம் மிகவும் நன்று) வார்த்து அதில் எவ்வளவு கரையுமோ அவ்வளவு ஸில்வர் நைட்ரேட் (Silver nitrate) அல்லது லெட் ஆஸிடேட் (Lead acetate) மருந்தை போட்டு அப்புட்டிக்கு நடுவில் சலத்தில் ஒரு துத்தநாகத் துண்டை கயிற்றால் கட்டி தொங்கவிட்டு அசையாமல் ஓரிடத்தில் வைத்து பன்னிரண்டுமணி நேரம் பொறுத்து பின்பு பார்க்க, துத்தநாகத்தின்மேல் வெள்ளிக்கொடிகள் படர்ந்திருப்பது போல் தோன்றும்.

### 11. பொட்டாஷியம் என்னும் உலோகத்தின் குணங்கள்.

இந்த உலோகம் வெள்ளியைக் காட்டிலும் அதிக பிரகாசமாயும், ஈயத்தைப்போல மெதுவாயும், சடையைப்போல் நீரில் மிதக்கக் கூடிய அவ்வளவு இலேசாயுமுள்ளது. இது ஸர் ஹம்ப்ரிடேவிஸ் (Sir Humphry Davis) என்னும் ஓர் சாஸ்திரியாரால் கண்டு பிடிக்கப்பட்டது. சலம்பட்டால் இவ்வுலோகம் பற்றிக்கொள்ளும். அணிவால் தூரிகையை வெறுஞ்சலத்தில் தோய்த்து ஒரு காகிதத்தில் எழுத்து படம் முதலானவைகளை தொடர்ச்சி கோடுடையதாய் வரைந்து அக்கோடுகளில் எங்கேயாவது ஒரு துண்டு ஷை உலோகத்தை வைக்க காகிதத்தின் மேலுள்ள நீர்க்கோட்டின் மூலமாய் உலோகம் எறிந்து கொண்டே ஓடும். உலோகத்தை ஒரு கனத்த ஐஸ் (Ice) அதாவது நீர்க்கட்டியின்மேல் வைக்க அது உடனே பற்றிக்கொண்டு, நீர்க்கட்டியினுள் ஊடுருவிச்செல்லும். நீருக்கும் இவ்வுலோகத்துக்கும் இவ்வித சம்பந்தங்களிருப்பதால், உலோகத்தை (Naphtha) நாப்தா என்னும் எண்ணெயில் விட்டுவைக்கவேண்டும்.

### 12. இரும்புக்கு செம்பு கிலிட்டிட.

மயில்துத்தம் கரைத்த ஜலத்தில் பளிங்கு போல் சுத்தமாய்த் துலக்கிய இரும்பு சாமானைப்போட்டு, கொஞ்சநேரம் பொறுத்து எடுத்துப்பார்க்க, இரும்பின் மேற்புறமெல்லாம் செம்பு முலாம் பூசினதுபோலிருக்கும்.

### 13. சூட்டினால் உலோகங்கள் விரியும்.

ஒரு மோதிரத்தில் சந்தின்றி சரியாய் புகக்கூடிய ஒரு இரும்புக் கம்பியை எடுத்து நெருப்பில் செந்நிறமாய் காயவைத்து மோதிரத்துள் குவிக்க கம்பி மோதிரத்தினுள் நுழையவே நுழையாது. இவ்வுண்மை சக்கரங்களுக்கு கட்டுபோடும் தொழிலாளிகளுக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம்.

" FATHER ! TELL ME, WILT THOU CHERISH OR LET ME PERISH ?"
"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.
"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

MADRAS



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*.
"New Series" ஸத்தியமே ஜேயம்—SATYAMEVA JAYATE. "Approved"
புத்தகம். 22.] 1914ளு ஜூன்மீ, ஆனந்தளு ஆனிமீ [சஞ்சிகை 3.

## "FATHER! TELL ME, WILT THOU CHERISH OR LET ME PERISH PRITHEE!"

H. E. LORD HARDINGE AS OUR EARTHLY KING AND FATHER.

*The Viceroy*:—"I am your father and you are my children."—The *Viceroy in* 1913.

"I love to see them."—*The Viceroy at the Children's Fete*, *Simla*, 1914.

*Vox Populi*:—"Great men with the child-heart conceive and plan it well; but the underlings blundering spoil it all."—Teacher of children and Maker of men(*From the report of the first Home-Celebration of the Children's Day Festival.*)

THE CHILD'S QUERY :—

"Father ! I, the Child of ages past, rejected and dejected come to thee !
"Tell me ! Wilt Thou Cherish or Let me Perish ? Prithee !"

—*A question "of Imperial concern to the future of our Empire."*

## THE CHILDREN'S DAY FESTIVAL 1914.

The Editor of the *Vivekachintamani* has suggested that the children's festival in honour of the Viceroy's brithday instead of being held in each school, may this year be held in every home in the midst of family surroundings. The school celebrations, he thinks, may follow later on when the schools are re-opened and in working order. So enthusiastic is the Editor that he has written to the *Times* (London) on the subject, and in the course of his letter he says :—"Their Excelliencies Lord and Lady Hardinge have, by the strong impression they have made on the child-mind of India, managed to leave their footprints on the sands of time which the coming generations of India are sure to read."—*The Madras Times*, 26th May.

"It is hoped that Children all over the Presidency will celebrate the day this year in their own homes on the 20th instant as a private festival."—*The Madras Times*, June 10.

The Assistant Private Secretary to the Viceroy writes from Viceregal Lodge, Simla, under date the 29th May, 1914. as follows :—

DEAR SIR,—I am directed to acknowledge, with thanks, the receip tof the printed letter on "The Children's Day Festival, 1914" which you have been so good as to send for His Excellency the Viceroy's information."

## LORD HARDINGE AS OUR EARTHLY KING AND FATHER.

Rev. Mr. Andrews of Delhi with his personal and intimate knowledge of Lord and Lady Hardinge as world-workers says :—

" At the present moment India has both earthly and spiritual kings who are popular and holy men. The earthly king is represented by Lord Hardinge, the present Viceroy of India. Lord Hardinge is a religious man. He is just and fearless and he ranks among the best men of the world. The Viceroy is ever solicitous about others. At the time of the outrage in Delhi, although he was suffering agony, his first inquiry after he came to his senses was about the ceremony of the day. He gave instructions that everything should go on as if nothing had happened to him. He was pained when he heard that the fireworks that were announced to take place the same evening were to be stopped and insisted that as they were the delight of the children, they should not be stopped on any account. The Indians of South Africa knew how warmly, zealously and fearlessly he had championed their cause and almost made it his own. Nor is Lady Hardinge less solicitous than her husband. She has specially deputed the speaker (Mr. Andrews) to organise a treat for the suffering children of India. Lady Hardinge's example has become infectious and the public-spirited men of India organised a similar treat on the same day for all the other children. Some one had suggested that more money should be set apart for European children as their upbringing was different from that of the Indian children. Lady Hardinge would have none of this idea."— Again it was Lord Hardinge who placated the Cawnpore Mussalmans by saying " I am your father and you are my children."

" To restore to their BEAUTIFUL MOTHERLAND an untarnished record of fame."—H.E. Lord Hardinge as " a Viceroy intensely jealous of the honour of the country."

"The School Children are very eager over the Vivekachintamani, it is their favourite Magazine."—*An Educationist's Tribute.*

"This favourite Children's Magazine...there is no doubt...is admirably conducted."

—THE MADRAS TIMES.



விவேக சிந்தாமணி

## THE PROBLEM OF POPULAR EDUCATION.

(i) " AN IMPERFECT & UNSUITABLE SYSTEM."

" Our course of instruction is a procruste's bed for all classes of schools . . . ." A. C. P.

" The despatch of 1854, which we hold to be our Educational Charter defines primary education as " consisting of so much knowledge, at least of reading and writing and of the simple rules of arithmetic and of land measurement, as would enable each man to look after his own rights." But the young agriculturist who stops with the primary course has not learnt sufficient arithmetic to find out for himself what assessment he has to pay......but must take for granted what the Karnam tells him. Of land measurement he has no knowledge......The small trader's son that has come home from the primary school measures out to a customer 4 seers of rice at 11½ seers a rupee ; but must ask some other as to what money he should receive for the rice sold. This is what he is as fashioned by our code ; but the people mind their own interests better than the Government does for them and arrange among themselves for some kind of practical instruction to supplement that of the prescribed curricula. There are some things in the indigenous system of instruction which are good in themselves, but which in the sweeping condemnation of all that is old are ignored. Thus our primary education is imperfect in that it does not meet the requirements of the people."—*A. C. Pranatharthihara Iyer, B.A.*

" Dr. Rabindranath Tagore is one of those patriots whose patriotism take a practical shape and one of those who realise that if we established a system of popular education such as we might establish now, we should lay the foundations of a Co-operative Commonwealth that would become a state within the states far more powerful to do good to the people than the strongest and best Government has ever been, and making the people much more free than the most liberal Governments have ever been."— *Captain J. W. Petavel R. E. (Retired.) in the Asiatic Quarterly Review.*



## மனிதனை ஆளாக்கிவிடுவதெப்படி?

ஜனங்கள் வித்யாப்பியாசம் செய்யு முறை.

வித்தை யென்றால் அறிவை விளக்குவது என்று பேர். அறிவு அறியாமையால் மூடப்பட்டிருக்கிறது. எப்படி யெனில், கிரஹணம் பிடித்த சூரியனைப்போல். சூரியன் ஒளிவிட்டெரிந்துகொண்டிருக்கச் சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில்வர, அதனுடைய சாயை (நிழல்) பூமியில்பட்டு சூரியகிரணங்களை மறைப்பது போல், அறிவு ஸ்வயம் பிரகாசமாய்த் துலங்கிக் கொண்டிருக்க மனம் இடையே புகுந்து அறிவொளியை விழுங்கி அதன் சாயையால் விஷயங்களை ஸ்வரூபம் தெரியாமல் மறைக்கிறது. இப்படி திரைபோட்டது போல் மனது அறிவொளியை மறைப்பது நீங்கச் செய்வதற்கான அப்பியாஸமே வித்தியாப்பியாஸம் எனப்படும். இதைக் கல்விகற்றல் என்றும் சொல்லுவர். இங்கே கல்வி யென்றால் 'மனப்பழக்கம்' என்று அருத்தம். "கற்றதோர்கல்வியும் மனப்பழக்கம்" என்று சொல்லி யிருக்கிறார் ஔவையாரும்.

'எட்டுப்படிப்பு' கல்வியல்ல.

கிளிப்பிள்ளை பேசப்பழகுவதுபோல் பொட்டைப்பாடம் செய்து நெட்டுருப்போடும் 'எட்டுப்படிப்பு' கல்வி ஆகமாட்டாது. நமது பள்ளிக்கூடங்களில் செய்யப்படும் போதனை இத்தன்மையதே யாம்.

'மனதை ஆளப்பிறந்தவன்' மனிதன்.

மனிதன் என்கிற சப்தத்துக்கே அர்த்தம், "மனதை யாளப்பிறந்தவன்." மன் = நினை. நினைக்கும் சக்தியுள்ளவன் மனிதன். நினைப்பான் கர்த்தா. நினைவு கருவி, நினைபொருள் விஷயம். மனிதன் சக்திமான், மனது சக்தி, மனதுக்குப் புலப்படுவது விஷயம். மனோசக்தியை ஆளப்பிறந்தவனை அந்த சக்திக்கு அடிமையாக்கும் படிப்பு அநர்த்த பரம்பரையை விளைக்குமேயன்றி அர்த்தத்தை விளைக்காது. அர்த்தம் என்றால் உட்பொருள் அல்லது கருப்பொருள். இதுஉட்பிரபஞ்சம், வெளிப்பிரபஞ்சங்களுக்கேற்க உள்ளர்த்தம், என்றும், வெளியர்த்தம் என்றும் சொல்லப்படும். இதையே அகப்பொருள், புறப்பொருள் என்றும் பகுத்துக் கூறுவர், "இலக்ஷியம் கண்டதற்கு இலக்கண முரைக்கும்" புலவர்.

'ஆளாக்கிவிடுதல்' என்றால் என்ன?

இப்படிப்பட்ட சக்திவாய்ந்த "மனிதனை" ஆளாக்கிவிடுவதெப்படி? யென்பது தான் நாம் ஆலோசிக்க எடுத்துக்கொண்ட விஷயம். அப்படி யென்றால், சக்திமான் சக்தியை ஆளும்படி செய்வது எப்படி யென்று பொருள்படும்.

"PROCRUSTE'S BED."

"இயற்கை-விரோதமுயற்சி."

தலைக்குத்தக்கின குல்லா செய்து போட்டுக்கொள்வது செயற்கைதர்மம். குல்லாவுக்குத் தக்கினபடி தலையைத் திருத்துவது இயற்கை விரோதம். பூர்வம் ரோமராஜ்ஜியத்தில் 'ப்ரோக்ரஸ்டிஸ்' என்றொரு பேர்போன திருடனிருந்தான். இவன் வழிப்பறி செய்வதில் இணையற்ற சூரன். இவனுடைய திருட்டுத்தொழிலை நடத்தி வருகையில் இவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. 'மனிதர்கள் உயரமும் குட்டையுமாக பேதப்பட்டிருப்பது அவலக்ஷணமாகத் தோன்றிற்று, ஆகையால் அதைத் திருத்த வேண்டி அவன் எல்லாரையும் ஒரேயளவாக ஆக்க ஒரு படுக்கை நிர்மாணித்து அதில் எல்லாரையும் படுக்கவைத்து அளந்து அந்த அளவுக்கு நீளமாயுள்ளவரைக் குறுக்கியும், குட்டையாயுள்ளவரை நீட்டியும் சரிப்படுத்தி வந்தான். அவன் செய்த இந்த அடாததொழிலினால், இப்படிச் செயற்கை முயற்சியால் இயற்கை தர்மம் கெட நடக்கும் நடத்தையெல்லாவற்றையும் ப்ரோக்ரஸ்டியன் படுக்கை யென்று சொல்கிறது வழக்கத்தில் வந்துவிட்டது.

நமது பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பது இந்தப் பிரபலத்திருடன் செய்த வித்தையைப்போலிருக்கிறதென்று இப்பொழுது ஸ்கூல் இன்ஸ்பெக்டர்

ராயிருக்கும் ராவ்பஹதூர் ஏ. வி. ப்ரணதார்த்திஹர ஐயர் அவர்கள் தமது அபிப்பிராயத்ன்தக் குறிப்பிட்டு அச்சிட்டிருக்கிறார்.

"பிரதம வித்யா லக்ஷணம்."

1854-வருஷத்து வித்தியா ஸம்பந்தமான கவர்ன்மெண்டதிகாரப் பத்திரத்தில் 'பிரதம வித்தை' யென்பது மனிதன் ஒவ்வொருவனும் தன் சுதந்திரத்தைப் பாது காத்துக் கொள்வதற்கு வேண்டிய ஞானம் பெறுவதற்கான 'எண்ணெழுத்து வாசனை' யறிந்திருப்பதற்குச் சொல்லத்தக்கதாகும் என்று சொல்லியிருக்கிறது. அதை யெடுத்துரைத்து அதற்குமேல் திருஷ்டாந்தங்களும் எடுத்துக் கூறுகிறார். இப்பொழுது பிரதம வித்தை யென்று பள்ளிக்கூடங்களிற் சொல்லிக் கொடுப்பது இதற்கு இணங்கினதாக வில்லை யென்று நிரூபிக்கிறார்.

தற்கால பள்ளிக்கூட ஏற்பாடு.

பிரதமவித்தியா பள்ளிக்கூடம் என்பது பாலசிக்ஷை வகுப்புமுதல் ஏழாவது ஸ்டாண்டார்டு வரைக்குமுள்ள வகுப்புகளுக்குப் பேராயிருந்தாலும், காரியத்தில் நாலாவது ஸ்டாண்டார்டு வரையிலும்தான் பாடம் சொல்லுகிறார்கள். ஐந்தாவது ஸ்டாண்டார்டு 'ஸெகண்டெரி ஸ்கூல்' தரப்பைச் சேர்ந்ததாய் 'முதல் பாரம்' என்று பேர் பெறுகிறது. பிரதமபாடசாலையின் 5,6,7-வது ஸ்டாண்டார்டுகள் ஸெகண்டெரி (த்விதீய பாடசாலையின் கீழ்தரப்பைச் சேர்ந்ததாக (லோயர்ஸெகண்டரி வகுப்புகள்) என்று சொல்லி 1,2,3-வது பாரம் எனப் பேர்பெற்று வழங்கிவருகின்றன.

பிரதம வித்தியாசாலைப் படிப்பு எல்லாருக்கும் கிடைப்பதாகவிருக்கவேண்டும். ஆனால் அந்த மட்டோடு படிப்பை நிறுத்தி, கைத்தொழில் செய்து பிழைக்க விரும்பும் சாமான்யவகுப்புக் குழந்தைகளுக்கும், அதற்கு மேல்தரமாயுள்ள துவிதீய பாடசாலையில்படித்துமேலான விர்த்தியடைய நினைக்கும் விசேஷ வித்யாலாபத்தைக் கருதும் குழந்தைகளுக்கும் படிப்பு விஷயத்தில் தராதரம் ஏற்பட்டிருக்குமாதலால் அதற்காகவென்று பிரதமவித்யாப்பியாஸம் செய் பாடசாலைகளை இருபிரிவுகளாகப் பிரித்து, பிரதமவித்தையோடு நின்றுபோகிற படிப்புக் கேற்றதாக ஒன்றும், அதற்கு மேல் தரமாயுள்ள படிப்புக்கு ஆயத்தமாகப் பிரதம வித்தைபயிலும் குழந்தைகளுக் கேற்றதாக வொன்றுமாகப் பிரித்து முன்னதைத்தனியாக வைத்துப் பின்னதை 'ஸெகண்டெரி ஸ்கூல்'களின் கீழ்பாகமாகச் சேர்த்திருக்கிறார்கள். முன்வகைப் பாடசாலை மிகவும் சொற்பம். தமிழ்ப் பிராந்தியங்களிலெல்லாம் பதினைந்து இருபது ஸ்தாபனங்களுக்கு மேல் இராது என்று சொல்கிறார். பின்னது மூன்னூறு முதல் நானூறு வரையிலிருக்கும். நாலாவது ஸ்டாண்டார்டு வரையில் பிரதமவித்தை போதிக்கும் பாடசாலைகள்தான் ஜாஸ்தியாயிருக்கின்றன. இவை தமிழ்ப்பிராந்தியங்களில் மட்டும், சுமார் 15-அல்லது 20-ஆயிரம் இருக்கும். இப்பாடசாலையில் படிக்கும் குழந்தைகளுக்கு பாலவித்யாப்பியாஸம் செய்வது தான் மிகவும் முக்கியமான கடமையாகவிருக்கிறது. "வாலிபமும் காகிதமும் வாய்ந்தவுருக்கொள்ளும்" என்பது இவர்களுக்கே உண்மையிற் பொருந்தும். சிறு குழந்தைகளுக்குப்பள்ளிப்பழக்கம் செய்கிறவர்கள் ஸத்திய சந்தர்களாயும் குணசீலர்களாயு மிருக்கவேண்டும். இந்த யோக்கியதை ஆசானிடத்தில்லாவிட்டால் குழந்தைகள் மனம் நேர்வழியிற் செல்லாது கோணிப்போகும். "முதற் கோணல் முற்றுங்கோணல்"என்றபடி இந்த மனக் கோணல் கடைசிவரையில் உள்ளத்திற் படிந்து முற்றுங்கோணலாகவே முடிகிறது.

"திரிகரணசுத்தி"

என்பது ஏற்பட்டால்தான் வித்தியாப்பியாஸம் பயன்படுவதாகும். வாய்மை (ஸத்தியவிருதம்) இருந்தால் தான் அஹம் தூய்மைப்படும். வாய்மைதவறினால் அஹம் மாசுபடிந்துபோம். அஹம், புற மிரண்டும் வேறுபட்டுப் போம். வேறுபட்டால் அப்புறம் வில்லங்கம் தான். உள்ளே யொன்றும் உதட்டிலே யொன்றுமாகப் பேசும் வழக்கமும், நினைப்பதொன்றும் நடப்பதொன்றுமாகப் பிரவிருத்திக்கும் வழக்கமும் அனுஷ்டானத்தில் தானே யேற்பட்டு வேரூன்றி விடும்.



இப்படி உள்ளும்புறமும் பேதப்பட அதிலிருந்து எல்லா அநர்த்தங்களும் விளைகின்றன. திரிகரண சுத்தியேற்படக் காரணமின்றிப் போகிறது. திரிகரணசுத்தி யில்லாத போது வலிப்பு வந்தவன் அவயவங்கள் போல், வாக்கும், மனமும், செய்கையும் வேறுபட்டு ஒற்றுமை யின்றி மூலைக்கொன்றாக இழுத்துக் கொண்டு போகக் கோணங்கிக் கூத்துக்கிடமுண்டாகிறது. இதனால் வரும் அநர்த்தங்களை யெடுத்துக்கூறி ஹென்றிக் இப்ஸன் என்பவர் ஒரு கிரந்த மெழுதியிருக்கிறார். அதை யங்கீகரித்து ராவ்பஹதூர் ஏ. வி. ப்ரணதார்த்திஹர ஐயரவர்களும் அதையே ஒரு கதையாகச் சுருக்கிச் சொல்லியிருக்கிறார். இப்படியாக

"ஸத்தியமே நன்மார்க்கம்
தவறுவரும் வேறெதிலும்"

என்பது கிரந்தகர்த்தா, உத்யோகஸ்தர், உலகஞானி, உண்மைஞானி, தத்துவஞானி யெல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

அநர்த்தபரம்பரை.

வாக்கு, மனம் பேதப்பட்ட பொழுது ஸத்திய விருதம் அனுஷ்டிக்க முடியாததாய் விடுகிறது. வாய்மை கெட்டால் அஹத்தூய்மையும் தானே கெட்டுப்போம். அஹத்தூய்மை கெட்டால் அறிவு தெளிவு கெட்டு மயங்கிப்போம். அறிவு மயங்கினால் புத்திகெட்டு விதண்டாவாதம் செய்யப்புகும். குதர்க்கம் மிஞ்சினால் நினைவு தடுமாறி மனம் திராசு போல் நடுவு நிலை பற்றி நில்லாது கோணங்கிக் கூத்தாடும். ஐயோ! மனம் கோணிக்குரங்காட்ட மாடத்தலைப்பட்டு விட்டால் அப்புறம் பொய்யும், புளுகும் புனைசுருட்டும் மலிந்தெழும். தன்னையன்றி தானறியாமல் நெஞ்சகத்தே வஞ்சகப் பேய் குடிகொண்டு இல்லாத கூத்தெல்லாம் ஆட்டி வைக்கும். "வஞ்சித்தார் வாழார்" என்பது உண்மையாதலால் வஞ்சகநெஞ்சக்காளானர் வாழ்நாளெல்லாம் வீண்நாளாகக் கழிப்பர். "குடிகெடுக்கும் நெஞ்சுக்குக்குற்றேவல்"செய்து தானும் கெட்டு பிறர்குடியையும் கெடுத்துப் "பிடிபடுக்கப்பட்ட களிறு" போல் மோஹவலையில் சிக்கிப் படுகுழியில் விழுந்து பாழாவார்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்."

ஆதலால் "எண்" என்பது ஒன்றிரண்டு மூன்று என்னும் கணக்குப் போடுதலன்றி அந்த எண்ணுக்கு லக்ஷியமாயுள்ள பொருளையும் அறிவதற்கான சங்கல்பசக்தி (நினைவு)க்கும் கூடப் பொருந்தும். "எழுத்து" என்பது சப்தத்தைக்குறிக்கும் லிபிகளையன்றி, அந்த சப்தத்தின் உட்பொருளாய் அழியாத் தன்மை யுடையதாயிருக்கும் மனோசங்கல்பங்களாலான கற்பனாலங்கார சித்திரங்களையும் குறிக்கும். "சித்திரமும் கைப்பழக்கம்" என்றபடி மனதினால் நினைத்ததைக் கையினால் சித்தரித்துக்காட்டுவதெல்லாம் "எழுத்து" ஆகும். இந்த "எழுத்து" எல்லாவற்றிற்கும் காரணமாயிருப்பதால் இது மூலமாய்ப்பிறந்த அக்ஷரங்களை மாத்ரிகாதேவதைகள் என்று சொல்லுவர் பெரியோர்.

"மாத்ரிகாதேவதைகள்" என்றால் அளவைக் குறிக்கும் பிரகாசரூபங்கள் என்று அர்த்தங்கொள்ளும். இக்காலத்தில் 'X. Rays' N. 'Rays' என்று கண்டுபிடித்துப் பேர் வழங்கிவருகிற ஒளிமயமான சக்திகளெல்லாம் 'மாத்ரிகாதேவதை'களின் கூட்டுறவால் ஆனவையென்று சூக்ஷ்மஞான முள்ளவர்களுக்கு பிரத்தியக்ஷப் பிரமாணமாய் நிரூபித்துக்காட்டலாம். நமது மந்திரசாஸ்திரம் முழுவதும்இந்த ஒளிமயமான சக்திகளை மூலசக்திகளிலிருந்து உண்டுபண்ணி அவைகளைக் காரியத்தில் உபயோகிக்கும் வழியைப்பற்றிப் போதிக்கும் நுட்பநூலாகும்.

"தாங்கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு" என்றபடி ஒருவனுடைய நுண்ணறிவு (சூக்ஷ்ம புத்தி) மனப்பழக்கத்தால் தான் கற்ற சாஸ

திர உண்மையைக் கூறும் நூல்களின் அளவினதாயிருக்கும்.

"டுக்ருங்கரணே,"—"மூடமதே"

'டுக்ருங்கரணே' யென்று தர்க்கசாஸ்திர இலக்கணத்தை மட்டும் கற்று இலக்கிய ஞானம் இல்லாதவன் 'மூடமதி'யே யாவன். அவனுக்குக் 'கல்வியினாலாயபயன்' சித்திப்பதில்லை. பள்ளிக்கூடத்தில் வாசிக்காதவர்களுக்கும் "நீரளவேயாகுமாம் நீராம்பல்" என்றது போல் அவர்களுடைய உலகஞான முதிர்ச்சியால் 'கல்வியினாலாயபயன்' பூர்த்தியாக சித்திக்கும். ஆகையால், ஒவ்வொருவருக்கும் அவரவருடைய

மனோபக்குவமறிந்து போதிக்கவேண்டும்.

இதுவே மனிதனை ஆளாக்கிவிடும் வழியாகும். மற்றப்படி மாடுகளை மந்தையில் மறைத்து வைப்பது போல் பிள்ளைகளைக் கூட்டமாய்க் கூட்டி 'எல்லாருக்கும் ஒரே சொட்டு!' என்று "குல்லாவுக் கேற்றதலை" செய்கிற மாதிரியாக, இன்ஸ்பெக்டர் 'எடியுகேஷன் கோட்' என்கிற அச்சிட்ட விதிகளை யனுசரித்து நடக்க, வாத்தியார்கள் இன்ஸ்பெக்டர் நடத்தைக் கிணங்கி நடக்கவேண்டி இட்டபாடத்தைத் தட்டாது சொல்லித் தன் கடனைத் தீர்த்து விடுவதென்றிருந்தால், "எண்ணைச் செலவேயன்றி பிள்ளை பிழைப்பது பூஜ்யந்தான்" என்கிற வசனப்படி பெற்றோர்களுக்கு பணச்செலவும் ஸர்க்காருக்குப் பொருட் செலவும் வாத்தியாருக்குச் சம்பளமும் புஸ்தகம் விற்பவர்களுக்கு லாபமும் தான் சித்திக்குமே யன்றி பிள்ளைகள் தேறி முன்னுக்கு வருவது ஏதோ அருமையிலும் அருமைதான். பள்ளிக்கூடத்தில் தான் பிள்ளைகள் "நித்தியம் நித்தியம் உன்னிழுவா!" என்று கடனிழவுக்குப் படித்து வருகிறார்களே யென்று, அவர்கள் மனதை உற்சாகப் படுத்தித் தேற்றுவதற்கான முயற்சி செய்து அவர்களை முன்னுக்கு வரப்பார்த்தாலும் அதற்கும் இடங்கொடாமல் இடையூறு செய்கிறார்களே யன்றி சாதகசாதனானுகூலம் செய்வதாயில்லை. இதையெல்லாம் உள்ளுணர்ந்தே வரகவி டாக்டர் ரவீந்திரநாத் டாகோர் தனிவழிசென்று போல்பூரிலுள்ள சாந்திநிகேதனத்தில் சர்க்கார் உதவியின்றிப் பாடசாலையேற்படுத்தி நடத்திவருகிறார்.

பிரகிருதி தர்மத்துக்குப் பங்கம் வரக்கூடாது.

மனிதனை ஆளாக்கி விடவேண்டுமென்றால் பிரகிருதி தர்மத்துக்குப் பங்கம் வராமல் பிரவிருத்தி மார்க்கத்தில் தேறி அவன் தானாக அறிவு விருத்தியடைந்து வரல்வேண்டும். அதற்கு அனுகூலங்கள் ஏற்படாத வரையில் "பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது" என்கிற கதையாகத்தான் எல்லாம் முடியும். இந்த ரகஸியத்தை கனம் லார்ட் ஹார்டிஞ்சு பிரபு அவர்கள் தமது "பெற்ற மனம் பற்றாக" உள்ளங்கரைந்து உண்மை யுணர்ந்து கொள்வாராயினர்.

'ஹாரோ'வில் நடந்த ஸம்பவம்.

சீமையிலே 'ஹாரோ' என்னும் பிரபலமான பள்ளிக்கூடத்தில் அவருடைய பையன் ஒருவன் வாசிக்கும் பாக்கியமுள்ளவராக, அவனைப்பார்க்கவென்று வருஷாந்த விளையாட்டு விசேஷ காலத்தில் (Annual Cricket Match) அந்த இடத்துக்குச்சென்றார். அங்கே அவருடைய பையனோடு கலந்து உறவாடி வருகையில், இந்தியச் சிறுவன் ஒருவன் அப்பள்ளியில் படிப்பானாக, அவன் மற்ற இங்கிலீஷ் பிள்ளைகளோடு சரிசமானமாகக் கூடிக் குலாவி வருவதைப்பார்த்து மனங்களித்து, இங்கே ஜாதி வித்தியாஸம் ஒன்றும் பாராட்டுவதில்லையோ வென்று பையனைக்கேட்டார். அதெல்லாம் நாங்கள் இங்கே பாராட்டுவதில்லை யென்று பையன் சொல்ல, "ஐயோ! எங்குமிப்படி நடந்தால் இராஜ்ஜியம் எவ்வளவு நல்ல ஸ்திதியிலிருக்கு" மென்று சிந்திக்கலானார். அது முதல் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதில் அவர்களைச் சரியாக நடத்திப் பழக்குவது இராஜ்ஜிய க்ஷேமத்துக்கு மிகவும் முக்கியமான விஷயமென்றுணர்ந்து அப்படியே இந்தியா மந்திரி முதலானவர்களிருக்கும் சபையில் வற்புறுத்திப் பேசினார். கல்கத்தாவிலிருக்கையில் பள்ளிப் பிள்ளைகளோடு கலந்து பழகி அவர் குணத்தைக் கிரகித்துக் கொண்டார். டில்லிப்பிரவேச காலத்தில் வெடிகுண்டினால் படு காயம் பட்டுக்கிடக்கும் பொழுதும், அவருடைய குழந்தை-மனம் காரணமாகக் குழந்தைகளையே பற்றிச் சிந்தித்து, அந்த பாலசிந்தனையின் திவ்யபலத்தால் தேஹம் அனுகூலப்பட்டெழுந்தபொழுது அவருடைய ஜன்மதினத்தைக் குழந்தைகள் தம் திருநாளாகக் கொண்டாடச் செய்வதே தெய்வபூசனையாகு மென்று உணர்ந்து அப்படியே நடந்து கொள்வாராயினர்.



கனம் டயமண்ட் ஹார்டிஞ்ச்.

அவருடைய குழந்தைகளில் கனம் டயமண்ட் ஹார்டிஞ்சு என்பவர் சென்ற மேமீ 18உ ஸிம்லாவில் நடந்த பாலர்திருவிழாவில் இதர குழந்தைகளோடு கூடிக் குலாவி 'ராட்டணம்' சுற்றி விளையாடி மகிழ்ந்தார். அந்தப் பெண்மணி பேரால் குழந்தைகளும் பெற்றோரும் பெரியோரும் சேர்ந்துபயோகிக்கக்கூடிய (Merry-go cart) 'ஸாரட்டு' நிர்மித்து அதைக் குழந்தைகள் ஞாபகசின்னமாகக் கொண்டாடக் கருதி யிருக்கிறார்கள்.

---

## THE MEANING OF SECONDARY EDUCATION.

"Perhaps the most significant extension downward of the domain of the secondary school is that which is coming in response to the demand for vocational education in the lower schools. Children who are not going to high school must be allowed to pursue differentiated courses in the upper grades of the elementary school. The boy who is going into the trades and has no thought of high school cannot with equity be required to do the same work that is required of the boy who is going to become a clergyman (clerk) and looks forward to a College education. Many boys have to make a choice between the trades and professions before they leave the seventh grade. The seventh grade must provide for such boys by providing a type of organization similar to that now established in high school."

"In Germany one of the chief marks of distinction between secondary education and higher education is to be found in the fact that the secondary student is put through a required curriculum, while the student in the higher schools, especially the Universities, is allowed to elect freely the courses which he wishes to pursue."—*C. H. Judd, School of Education, University of Chicago.*

துவிதீய வித்யாலக்ஷணம்.

"மனிதனை ஆளாக்கிவிடுவது எப்படி?" என்னும் தலைப்பின்கீழ் ஜனப்பொதுவில் எல்லாருக்கும் இன்றியமையாத பிரதமவித்யாப்பியாஸத்தைப்பற்றிச் சிறிது விஸ்தரித்துப் பேசினோம். கல்வி யென்றால் "மனப்பழக்கம்" என்று ஔவையார் சொல்லியிருப்பதுபோல் "வித்யாப்பியாஸம்" என்றாலும் அறிவுதெளியப் பழகும் மனப்பழக்கத்திற்கே பேராம். "மன, மொழி, மெய்" என்கிற திரிகரணங்களும் அறிவு விருத்தியாவதற்கு இன்றியமையாத சாதக சாதனங்களாம்.

மூவ்வகைப் பயிற்சி.

முதலாவது, மனம் நினைக்குங்கருவியாதலால் சங்கல்ப சாதனமாம். இரண்டாவது, மொழி நினைத்ததை வசனிக்கும் கருவியாதலால் வாக்கு சாதனமாம். மனதினால் நிதானித்து நினைத்து (சங்கல்ப ரூபமாகி) மொழியினால் வசனித்து (நிச்சயரூபமாகி) காரியமாக விளங்குவதற்குத் தயாராயிருப்பதைக் கர்மமாகச் செய்வதற்கு மூன்றாவதாகிய மெய் (உடல்) கருவியாயிருப்பதால் கர்மசாதனமாம். இம்மூன்று கருவிகளும் காரணகாரியதோரணையினால் ஒன்றுபடப் பொருந்தியிருப்பதினால் அந்த ஒற்றுமைக்குப் பங்கம் வராது எண்ணெழுத்துப் பயில்வதே பிரதம வித்யாலக்ஷணமாகும். இந்த லக்ஷணத்துக்கு

லக்ஷியமாயுள்ளது (அகப்பொருள்) திரிகரண சுத்தியாம். இதற்கு மனப்பழக்கம், நாப்பழக்கம், வினைப்பழக்கம் அல்லது, "நினைத்தது முடிக்கு மாற்றல்" என்கிற மூன்றுவிதப் பயிற்சி வேண்டும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றது மனப்பழக்கமாம் கல்வியும், நாப் பழக்கமாம் இனிய பாஷாஞானமாகிய இலக்கிய ஞானமும் (நூலறிவும்), நினைத்ததை முடிக்கும் ஆற்றலளிப்பதற்குரிய கைப்பழக்கமாம் எழுத்தும் கண்போலிருந்து உதவுமென்பதைக் குறித்தன்றி வேறில்லை. இதுதான் முதற்படி அல்லது ஆரம்பவித்தை. பிரதமவித்தை யென்றாலும் அர்த்தம் ஒன்றே. இப்பொழுது இரண்டாம் படியாகவுள்ள வித்யாப்பியாசமுறையைப் பற்றிச்சிறிது விசாரிப்போம்.

துவிதீய வித்யாலக்ஷணம்.

துவிதீய வித்யாசாலை யென்பது இங்கிலீஷில் "Secondary school" என்பதைக் குறிக்கும். இது இரண்டாம் படியான வித்யாபோதம் செய்யும் ஸ்தாபனம் என்று அர்த்தம் கொள்ளும். இதற்கு மேல் மூன்றாம்படியாகவுள்ளது மேல்தரப்படிப்பு (Higher education) எனப் பேர் பெறும். அது (1) ஸர்வகலாசாலையில் நுழைந்தவர்கள் படி, (2) ஸர்வகலாசாலையில் நுழைந்து தேறினவர்கள் படி, (3) ஸர்வகலாசாலையில் படித்துத்தேறினவர்கள் படி யென்று முத்தரப்பட்டு விளங்கும்.

இப்படியாக வித்யாமுறையின் பலதரப்படிகளும் ஐந்து வகையாகி நிற்கும். இதைப் பஞ்சாக்ஷரப்படி யென்று சொல்வதுண்டு. அக்ஷரம் என்றால் "அழியாதது" என்று அருத்தம். இந்த ஐந்து படியையும் படிப்படியாக ஏறிச் சென்றால் தான் "கல்வியின் பயன்" பெறப்படும்.

"கற்றதனாலானபயன்" "வாலறிவன் நற்றாள் தொழல்" என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால்,கடவுளை யறிந்து வழிபடுதலே கற்றதனாலான பயன் என்றருத்தம், மற்றதெல்லாம் அதனுள் அடங்கும். ஜீவனோபாயம் தேடுவதெல்லாம் ஜீவன் கடைத்தேறத்தானே! அறிவு தெளிந்தாலன்றி ஜீவன் கடைத்தேறுவதில்லை. அறிவுஎன்பது எல்லாம்கடந்துள்ளது: அது எங்கும் வியாபகமாயுள்ளது. "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்" இருப்பது எதுவோ அதுவே அறிவுதானாகும். அந்த அறிவு அருவமாயுள்ளது. அதுவே உருவமாய் விளங்கிக்காட்டும். அருவுருவாயிருந்து தோன்றி மறைவதும் உருக்காட்டி யுருவழிப்பதும் அதுவே. அது ஐந்துபடியுமேறிப் பூரணவித்யாஸம்பன்னர்களானவர்களுக்குத்தான் சாக்ஷாத்காரமாய் விளங்கும். மற்றவர்களெல்லாரும் கற்றுக்குட்டிகளாய்க் கல்வி பயில்கின்றவராவர். அதாவது மனதைப்பழக்கிப் பழக்கி அது அறிவுக்கு அடங்கி நடக்கச் செய்யப் பயில்பவராவர்.

"எழுநிலைக் கோபுரம்."

பிரதமவித்தை எழுநிலைக்கோபுரம் போல் ஏழுவகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லிக் காட்டினோம். திரிகரணமுமொத்துழைக்கப்பழகினபின் கைவேலை செய்து பிழைப்புத்தேடுவோர் ஏழைகள். அதற்கு மேல் இரண்டாம்படி யேறிப்பார்க்க விரும்புவோருக்கு இன்றியமையாத கலைக்கியானம் சித்திக்கப்போதிப்பது துவிதீயவித்யாமுறையாகும். "கல்வியைக்கல், கற்றபடிநில்" என்று சொல்லியிருக்கிறார் பெரியோர். முதற்படியில் திரிகரணசுத்தி யின்னதென்பதைக்கற்று அங்கே கற்றபடி மன,மொழி, மெய் மூன்றும் நிற்கப்புகுவது தானே இரண்டாம் படியில் கற்கவேண்டிய வித்தை. அதற்காக இலக்கண இலக்கியபாடங்களும், சரித்திர, பூகோள சாஸ்திரங்களும், கணிதநூல்களும், பூதபௌதிக ரஸாயன உண்மைகளைப் போதிக்கும் நூல்களும் இன்னனவும் துவிதீயவித்யாசாலையில் பாடங்களாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிறுபாகம் பிரதமவித்தையோடு படிப்பை முடித்துத் தொழில் பழகப் போவார்க்குப் போதிக்கப்பட வேண்டியிருக்கும். ஏனெனில் அவர்களுக்கு இந்த கலைக்கியானம் சிறிது வேண்டியது அவசியமாகும். திரிகரணங்களும் அறிவு தானாய் விளங்கும் அறிவானுக்குப் படிந்து நடக்கக் கற்பது தானே "பாடம்" என்கிறபொருளுக்கு லக்ஷணமாகும். "இலக்கியங்கண்டதற் கிலக்கண மியம்புவர் புலவனார்" என்பராதலால், குழந்தைகளுக்கு விஷயஞானம் உண்டாகப் (Object lessons) பொருள்-பாடங்கள் போதித்தும், போதித்த பின் அவர்கள் புலனறிவால் கண்டபொருள்களுக்கு லக்ஷணம் இன்னதென்பதை விசாரித்தறியப் போதித்தும், இப்படி "லக்ஷிய-லக்ஷண" தோரணையறிய அவர்கள் அறிவு விசாலிக்கப் பழக்கல் வேண்டும். பிரதமபாடசாலையில் எண்கணக்குக் கற்றபின்,கீழ்மாற்று,குழிக்கணக்கு, கணிதசாஸ்திரம், எண்ணலளவை, எழுத்தளவை முதலான அளவை சாஸ்திரங்களைக் கற்கப்பழகல் இரண்டாம் படியில் கற்கத்தக்கனவாம். அப்படியே சரித்திரம், பூகோளம், ஜனகணிதம், வர்த்தக வியாபார சம்பந்தமான நூல், அர்த்தசாஸ்திரம் ஆகிய இவையும் பொருந்தும். இவையெல்லாம் முதற்படியில் கற்றது நிலைக்கக் "கற்றபடிநில்" என்னும் உபதேசமொழியின் அர்த்தத்தில் உட்பட்டடங்கும். இதற்குமேல் மூன்றாம்படியாம் ஸர்வகலாசாலை வாசல் நுழைவான் இவ்வித நிர்ப்பந்தமின்றி கலைஞானங்கள் பலவற்றிலும் தனக்கிஷ்டமானவற்றைத் தெரிந்தெடுத்துப் பயிலுவானாவான். கலைகளெல்லாம் சூரியனும் கிரணங்களும் போல் மூலவித்தையோடு சம்பந்தப்பட்டிருப்பதால் அடிமரமேறினவன் அதற்கு மேலுள்ள பலகிளைகளின் ஞானம் உண்டான பின் எந்தக்கிளையைப் பற்றிச் சென்றாலும் அதன் நுனியில் பூத்துக்காய்த்துப்பழுத்துத் தன்னுள் விதையும், அவ்விதையினுள் ஆம்மரம் முழுமையுமாக விருக்கும் இரகசியத்தைக் காலாந்தரத்தில் பக்குவம் முதிர்ந்தவிடத்தில் தானே யறிவான்.

ஆதலால் பிரதமவித்தை யென்பது மரத்தின் மூலவேர் முதல் அடிமரம், கிளைகள், கிளைவேர்கள் இவற்றின் ஒற்றுமையை அறிவதாகும். இரண்டாவது படியில் துவிதீயமாகக் கற்கும் வித்தை மரக்கிளைகளுக்கும், கிளைவேர்களுக்கும் மரத்துக்குமுள்ள ஸம்பந்தத்தை ஐயந்திரிபற ஆராய்ந்து அறிவதாகும். அதற்கு மேல் இஷ்டம் போல் எந்தக்கிளையை அல்லது சாகையைப்பற்றி ஆராயப்புகினும் அவன் மரத்தின் பூரணஞானம் பெறுவதில் மதிமோசம் போகானாதலால் அந்த மூன்றாம் படியில் அவன் ஸர்வகலாசாலை வாசல் நுழைந்து இஷ்டம்போல் வேண்டிய கலைபயிலப் பாத்திரனாகிறான். துவிதீய வித்தையின் நோக்கம் திரிகரண ஒற்றுமை கலையாது தேஹ, மன, இந்திரியங்களைப் பழக்கி வழக்கப்படுத்துவதாகும். இது பிரதமவித்தைக்கும், மேலுள்ள ஸர்வகலாசாலை வித்தைக்கும் இடையில் அவை இரண்டுக்கும் ஸம்பந்தப்பட்டதாய் அடிமரம் வேருக்கும் கிளைக்கும் மத்தியிலிருப்பதுபோல் ஸம்பந்தப்பட்டு நிற்கும். இதை யுணர உணர்த்துவதே துவிதீய வித்யாலக்ஷணம்.

---

## MENTAL PICTURE GALLERY.
## THE VOICE OF GOD: A CHILD STORY.

"The description of a beautiful picture of the dedication of Samuel from the painting of Mr. W. W. Topham.

### பாவனா-சித்திரவிலாஸம்.

அருள்வாக்கு: பாலவித்யா உபாக்யானம்.

"One night, as the old priest lay in bed, the child Samuel came to his bed, and asked if Eli had called him. Eli sent him back to bed but a second and a third time the voice came and Eli told Samuel to say, if it came again, "Speak, Lord, for Thy servant heareth."

குழந்தைகள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். தெய்வபக்தியுள்ளவர்கள். தேவதாப்பிரஸாதமாக மகப்பேறு பெறுகிறார்கள். தசரதர் பிள்ளைப்பேறின்றி பெருந்தவஞ்செய்து திருவருட் பிரஸாதத்தால் இராம லக்ஷ்மண பரத-சத்ருகனர்களாகிய நான்கு பிள்ளைகளைப் பெற்று அகமகிழ்ந்தார். பிரஹ்லாதன், துருவன், ருக்மாங்கதன் இவர்களெல்லாம் தெய்வ

பக்தி நிறைந்த தாய் வயிற்றிற் பிறந்தவர்கள். இவர்களைப்போல் எக்காலத்திலும் எத்தேசத்திலும் தெய்வபக்தி நிறைந்தவர்களுக்கு ஈசுவர கிருபையால் ஸத்புத்திர ஸந்தானம் உண்டாகிறது. மார்க்கண்டன் தவத்திற்பிறந்தவனே. தவம் என்றால் இந்திரியங்களை யடக்கி ஒடுக்கி கடவுளிடத்தில் சிந்தை யெல்லாம் ஏகாக்ர (ஒருமுனைப்பட்ட) சித்தத்தோடு செல்ல கடவுள் மஹிமையில் ஈடுபட்டு அவருடைய திருவருட் பிரஸாதத்தைப்பெற எதிர்பார்த்திருப்பதாம். இதற்கு நேர்விரோதமாய்க் "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று மனதை, கிளைவிட்டுக்கிளை தாவிப்பிடித்தோடும் குரங்கே போல், நிலையற்ற விஷயங்களில் ஓடவிட்டு நிதானம் தப்பியிருத்தல் அவம் என்று சொல்லப்படும். அதாவது வீண் வாழ்வு என்று சொல்லப்படும்.

குழந்தைகளே ! இதோ இந்தப் புஸ்தகத்தில் (Children's Magazine) வெகு அழகான சித்திரமொன்றிருக்கிறது. பாருங்கள். அதைப்போல் சித்திரப்படமெடுத்து அச்சிட்டுக் காட்டுவதற்கு மிகுந்த கைப்பொருள் வேண்டும். ஏனென்றால் அந்தச் சித்திரப்படம் சித்திரத்தொழிலில் வல்லவரான ஒரு வித்வான் எழுதியது. அதைப் பிரசுரிக்கும் சுதந்திரம் எல்லாருக்கும் கிடைக்க மாட்டாது. ஆதலால் அந்தப்படத்தையே பிரசுரிக்கக்கூடவில்லை. ஆனாலும் அதை நான் வாக்கால் சித்தரித்துக் காட்டுகிறேன். சற்று கவனம் வைத்துக் கேட்பீர்களானால் உங்கள் மனதில் அந்த மாதிரி சித்திரம் தானே அமையும். அதை யாராலும் அபகரிக்கமுடியாது. அன்றி, நினைத்தபோதெல்லாம் அந்தச் சித்திரம் உங்கள் மனக்கண் முன் வந்து நிற்கும். வேண்டாதபோது மனவெளியில் பத்திரமான ஒரு இடத்தில் மறைந்து கிடக்கும். இது மனதினுடைய சுபாவமான சக்திகளில் ஒன்று. இதற்கு பாவனாசக்தியென்று சொல்லுகிறது. இங்கிலீஷில் "Power of imagination" என்று சொல்லுவர். இந்த பாவனாசக்தியினால் தான் மனிதன் மற்ற மிருகங்களைவிட மேலானவனாயிருக்கிறான். ஆனாலும் அவன் பதவியைக் குலைக்க அவனுக்குள் தானே மனோவிகாரங்கள் என்று சொல்லும் ஆறு பகைவர் இருக்கின்றனர். இப்படி உட்பகை ஆறுக்கும் சரியான வெளிப்பகையால் வரும் நஷ்டங்களைக் கணக்குப்போட்டுப் பார்க்கக்கற்றால் ஆயிரக்கணக்கேறி, லக்ஷம் கணக்காகத் தொகை வளர்ந்து விரிந்து நிற்பதைக்காணலாம். இதற்கெல்லாம் காரணம் சுருங்கச் சொல்லில்:—காமம் (ஆசை), குரோதம் (கோபம்), லோபம் (தந்நயமே பெரிதாகப்பாராட்டும் லுப்தத்தனம்), மோஹம் (மனம் இருளடைந்து மருளினால் செய்யும் பாதகங்கள்), மதம் (தான் கொண்ட அபிப்பிராயத்துக்கிரண்டில்லை யென்கிற அஹம்பாவக்கொழுப்பு), மாச்சரியம் (பிறர் நலம் பொறாமையினால் உண்டாகும் பொச்சாப்பு.)

பரிகாரமோவெனில்:—" காமோகாரிஷின் மன்யுனகாரிஷின் நமோநம:" என்று தியானித்தல். "இந்தப்பாபங்களெல்லாம் விவேகமின்மையால் காமம் செய்தது, மனம் செய்தது; இவற்றிற்கு வேறாயுள்ள அறிவுருவு தானான நான் செய்யவில்லை. (அதாவது நான் நிஷ்காமியன், நிர்விசாரன், நிர்த்தோந்தன், என்று சிந்தித்திருத்தலாம்.)

இந்தக் குணங்களெல்லாம் நற்றவத்தில் பிறந்த குழந்தைகளிடத்தில் ஸ்வபாவமாகவே பொருந்தி யிருக்கும். அக்குணங்களைப்பறி கொடுத்துப் பதறி யழாமல் பாதுகாக்கல் வேண்டும். இதுபெற்றோர்தம் கடன். விவேகத்தாய்க்கு இது இயல்பாக வரும். இனி நான் பார்த்த சித்திரத்தை வார்த்தையால் வர்ணிக்கிறேன். அதை உங்களுடைய மாசு மருவற்ற குழந்தைமனத்தில் பாவனாசக்தியால் சித்திரப்படமாக அமைத்துக் கொள்ளுங்கள்,



## SUBJECT FOR FORMING A MENTAL PICTURE.

பாவனா-சித்திரம் அல்லது கற்பனாபாடம்.

(1) அதோ ஒரு கோயில் தெரிகிறது பாருங்கள். அந்தக்கோயிலுக்குள் நாம் கும்பிடும் தெய்வமிருக்கிறது. அது நம்முன்னே யிருக்கிறது. வெளியில் பாவனத்தால் மட்டுமே காட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் "தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது" என்பது உண்மை.

(2) அந்தக் கோயிலில் கடவுள் ஸந்நிதானத்தில் ஒருபதிவிருதாசிரோமணி உள்ளக் குறையிரந்து "புத்திரபாக்கியம் அளிக்கவேண்டும் ஸ்வாமி ! எனக்கொரு குழந்தைபெறும் பாக்கியம் அளித்தால் அக்குழந்தையை உமது திருவடிச்சேவைக்கே அர்ப்பணமாக அளிப்பேன்!" என்று உள்ளங்குழைந்து கள்ளங்கரைய உள்ளமுருக உண்மைத்தவம் செய்து வரம் கிடக்கிறாள் பாருங்கள். ஸத்புத்திரர்களான உங்கள் தாய்மார் இப்படித்தான் வரம் கிடந்து உங்களைப் பெறும்பாக்கியம் பெற்றிருப்பார்கள் என்று நம்புங்கள்.

(3) கோயில் மஹந்தாம் பூஜகர் பாவசமாதியிலிருந்த அவளைக் கடிந்து, அவள் சோஹத்தை மோஹமெனத் தப்பாகஎண்ணி அவளை வினவுகிறார்.

(4) அந்த ஸ்திரீ அவருடைய வாக்கையும் வினவுதலையும் ஈசுவரப்பிரஸாதமாக எண்ணி, கடவுள் தன் பிரார்த்தனைக் கிரங்கிப் பிரஸந்நமாகித்தன்னைச் சோதிக்கிறார் என்றெண்ணி, தன்னுள்ளக் கருத்தை ஒளிக்காது சொல்லுகிறாள்.

(5) மஹந்துகுரு தன் தப்பெண்ணத்தை யுணர்ந்து அவள் பக்திக்கு உவந்து "ஸ்வாமி நீ கேட்ட வானைக்கொடுப்பார்: அதிற் சந்தேகமில்லை!" யென்று திடங்கூறி அவளை யனுப்புகிறார்.

(6) பிள்ளைவரமிருந்து குழந்தையைப் பெற்ற பாக்கியசாலியாம் தாய் அக்குழந்தையை அதன் ஐந்தாம் வயதில் குருவிடம் கொணர்ந்து ஸ்வாமி சேவைக்கென்று அர்ப்பணம் செய்கிறாள்.

(7) அக்குழந்தை குருகுலவாசம் செய்கையில் கடவுள் வாக்கைக் கேட்டு குருபக்தியினால் அதை குருவின் திருவாக்காக நினைத்து தூங்கும் குருவையெழுப்பி "ஸ்வாமி ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்கிறது. அதற்கு அந்த குரு அக்குழந்தையைப் பார்த்து "நான் உன்னைக் கூப்பிடவில்லை! நீ தூங்குபோ!" என்று சொல்லி யனுப்பி விடுகிறார்.

(8) குருவார்த்தையைக் கேட்டுத்தூங்கச் சென்ற குழந்தை மறுபடியும் அசரீரிவாக்குண்டாகக் கேட்டு அதை குருவாக்காக நம்பி அந்தக் கிழமஹந்தாம் குருவை யெழுப்பி "ஸ்வாமி! ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்கிறது. இரண்டாந்தரமும் அப்படியே அனுப்ப, அக்குழந்தை படுக்கப்போய் மறுபடியும் தன்னைக் கூப்பிட்ட சப்தம் கேட்டு குருவினிடம் வந்து "ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்கிறது.

(9) கிழகுரு இக்குழந்தை "திருவருளாற் பிறந்த அசரீரி வாக்கைக்கேட்டு" இப்படி நம்மிடம் வருகிறதென்றுன்னி மூன்றாந்தரம் அக்குழந்தை தன்னிடம் வந்து சொல்லிய பொழுது "அப்பா குழந்தாய்! நீ மறுபடியும் படுக்கைக்குப்போ! அந்த வாக்குப்பிறந்து உன்னை அடுத்தமுறை கூப்பிடும்போது "ஏன்!" என்று கேட்டு "பகவானே தங்கள் அடியன் உற்றுக்கேட்கத் தயாராயிருக்கிறான். மேலே சொல்லுங்கள்!" என்று மறுமொழி சொல் என்று சொல்லியனுப்பினார். இந்த அவஸ்தையில் கிழகுரு சிறுகுழந்தைக்குக் கடவுளுடன் பேச வகையறிந்து உபதேசம் செய்து கொண்டிருக்கிற தருணம் பார்த்து அவர்கள் திருவுருவம் விளங்கச் சித்திரப்படம் எழுதியிருக்கிறார்.

அக்குழந்தை பின்னால் ஒரு பிரபலமான பகவத் பக்தனாக, விளங்குகிறார், அதைச்

சொன்னால் "வேதாந்தம்" என்று தாய்க்குப் பிள்ளை யுதவாதபடி பிரித்து விடுவார்கள். ஆகையால் அந்தச் சித்திரத்தை மனதில் பதிய வைத்துக்கொண்டு "இணையில்லா இவ்வுயிர்தான் இவ்வுடலை விட்டாலும் குணமே பெரியதென்று கொண்டுநீ வாழ்ந்துவிடுவாய்" என்னும் தாய்மொழியை உள்ளத்திருத்தி உண்மையாய் நடந்துகொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் அன்புள்ள,

விவேகத்தாய்.

---

## READINGS FROM THE BOOK OF NATURE.

### SOME FACTS ABOUT THE MOON.
### A LESSON IN NATURE STUDY.

### பிரகிருதி வித்யாம்சம்.
### சந்திரனைப்பற்றிய சில விஷயங்கள்.

---

ஆனையும் முயலும்: ஒரு கதை.

ஒருகாட்டில் ஓர் அரசயானை பல யானைகளோடு கூடிக்கொண் டிருக்கும்போது அங்கே மழையில்லாமையால் ஏரி குளங்கள் எல்லாம் வற்றிப்போய் தண்ணீர் கிடையாமல் தாகத்தால் வருந்தி நெடுநேரம் தேடிக் கடைசியில் தண்ணீர் தங்கிய தடாகத்தைக் கண்டது. உடனே தன் பரிவாரத்துடன் அதிலிறங்க அங்கே வாசம்பண்ணிக் கொண்டிருந்த முயல்களில் சில யானைகளின் கால்களின் கீழ்ப்பட்டு இறந்தன. மற்றும் சில முயல்களுக்கு கால் கைகள் ஒடிந்தன. இவ்விதம் நாசம்செய்து அந்த யானைகள் போனபிறகு மீதியிருந்த முயல்கள் கூடி வேறோரிடம் தேடிச் செல்லவேண்டுமென்று விசனத்துடன் யோசனைசெய்யத் தொடங்கின. அப்பொழுது அனுபவம் முதிர்ந்த ஒரு கிழமுயல்: 'நன்றாயிருக்கிறது! பூமி உண்டானது முதல் நாம் தங்கியிருக்கிற இந்த இடத்தையா விட்டுப்போவது! இந்த மூடயானைகளை முடுக்க வேண்டுமேயல்லாது வேறு யோசனை கூடாது' என்று சொல்லவே, மற்றமுயல்கள்: 'ஓய் கிழவனாரே! அந்த உபாயம் இன்னதென்று சொல்லும்' என்று பரிகாசமாய்க் கேட்க, அதற்கு அந்த முயல் 'யானைகள் இவ்விடம் வராதபடி தடுப்பதை எனக்கு விட்டுவிடுங்கள்' என்று சொல்லி அங்கே நின்றும் புறப்பட்டு யானைகள் வரும்வழியில் ஓர் மேட்டில் உட்கார்ந்து கொண்டது. அப்படியே யானைகள் வந்தவுடன் அந்த முயல் 'அடா அரசயானையே!' என்று அதட்டிக்கூவி, 'அடா, நான் சந்திர தேவனுடைய தூதன்; நான் அவரிடத்திலேயே எப்பொழுதும் தங்கியிருக்கும் முயல்; அவருடைய பள்ளியறையாகிய தடாகத்தை நீங்கள் கலக்கிவிட்டீர்களென்று அவர் உங்களெல்லாரையும் கொல்ல எண்ணியிருக்கிறார்,' என்று சொல்ல, யானைகள் 'இவர் சந்திரமண்டலத்து முயல், பெரிய இடத்துப் பகை உதவாது' என்று அன்றுமுதல் அவ் விடத்தைவிட் டொழிந்தன.—என்ற இக்கதையை நாம் பஞ்சதந்திரத்திற் படித்திருக்கிறோமல்லவா?

தூரதிருஷ்டிப் பார்வை.

அந்தமுரட்டு யானைகளை மோசமசெய்த மூடமுயலையே நாம் நமது வானசாஸ்திர பண்டிதரென்று கொண்டு சந்திரனிடத்துத் தோன்றும் கரியஉருவம் முயல்தானென்று தீர்மானம் செய்துவிடலாமா? அல்லது தக்க கருவிகளைக்கொண்டு பரிசோதித்து அறியலாமா? இக்காலத்திலோ தக்க கருவிகளுக்குப் பஞ்சமில்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடியென்று ஓர் விதக் கருவியுண்டு. அதன் வழியே தூரத்திலுள்ள பொருள்களை நாம் பார்ப்போமானால் அவைகள் சமீபத்திலுள்ள பொருள்கள்போலக் காணப்படும். இந்தக் கருவியைக்கொண்டு 'அம்புலிமான் தோசை' யென்று குழந்தைகளுக்கு பிரியமாய் வார்த்துக்கொடுக்கிற தோசைபோ லிருக்கிற சந்திரனை நாம் பார்ப்போமானால் நமக்கு அது வெகு பெரிதாய்க் காணப்படும். அதில் உயர்ந்த மலைகளையும் வெகு தாழ்ந்த ஆழமான பள்ளத்தாக்குகளையும் நாம் தெளிவாய்க் காணலாம்.

இரவல் ஒளி.

சந்திரனுக்கு சுயமான ஒளி கிடையாது.



சூரியனுடைய ஒளியானது அதில் உள்ள உயர்ந்த மலைகளில் தாக்க, நாம் பேசுகிற வார்த்தையின் சத்தம் சுவர்களில் தாக்கி சிலை (எதிரொலி) உண்டாவதுபோல், அம்மலைகளிலிருந்தும் நமக்கு வெளிச்சமானது பிரதிபலிக்கிறது. 'கிரொஸின் எண்ணெய்' என்று வழக்கத்தில் சொல்லப்படும் நிலத்திராவகம் விட்டு எரிக்கும் சுவர்விளக்குகளில் கண்ணாடிக்குப் பின்னால் தட்டு ஒன்று வைத்திருப்பதை யாரும் பார்த்திருக்கலாம். அந்தத் தட்டு எவ்வளவுக் கெவ்வளவு பிரகாசமாயிருக்கிறதோ அதற்குத் தக்கபடி தீபத்தின் ஒளியும் அதிகப்படும். அந்தத் தட்டு, நிரம்பப் பிரகாசமாயிருந்தால் தீபத்தின் ஒளியைப்பார்க்க கண் கூசும். எப்படி விளக்கின் வெளிச்சம் அந்தத் தட்டில் பாய்ந்து அதினின்றும் பிரதிபலிக்கிறதோ அப்படியே உலகத்துக் கெல்லாம் தீபம் போன்ற சூரியனுடைய ஒளியானது தகரத்தட்டுபோல் தாவள்ளியமான சந்திரனிடத்துள்ள மலைகளில் தாக்க "தீம்பால் கதிர் மணிக்குடத்தி னேந்தி வீழ்தரச் சொரிவதே போல்"* என்றபடி பாலை பளிங்குக் குடத்திலெடுத்து ஆகாயத்திலிருந்தும் பூமியில் பொழிவதுபோல விளங்குகின்ற நிலவு ஒளியானது உண்டாகிறது. ஆகவே,

(1) வெண்ணிறநறவிறை வெள்ளமெனவும்
பண்ணிறஞ் செறிந்திடை பரந்ததென்னவும்
உண்ணிறைகாம்மிக் கொழுகிற்றென்னவும்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்த தெங்குமே.
—கம்பர்.

(2) ஆறெலாங் கங்கையேயாய வாழிதாம்
கூறுபாற் கடலையேயொத்த குன்றெலாம்
ஈறிலான் கயிலையை யியைந்த வென்னினி
வேறியாம் புகல்வது நிலவின் வீக்கமே.-கம்பர்.

அதாவது, உலகத்தின்கண் அமிர்த வெள்ளமானதுபரவியது போலவும், இனிமையான சங்கீதமே[1] உருவெடுத்து எங்கும் நிறைந்ததுபோலவும், மனிதர் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அன்பானது வெளியே ததும்பிப் பெருகினது போலவும்[2], குளிர்ச்சி பொருந்திய நிலவானது எங்கும் இனிமையாய்த் தழைக்க, பரமானந்தத்தைத் தரும் அந்த வெளிச்சத்தில் எந்த நதியும் கங்கா நதிபோல் விளங்கிற்று. சமுத்திரங்களெல்லாம் பாற்கடல்போல விளங்கின. குன்றுகளெல்லாம் பரமசிவனது கைலாச பர்வதத்தைப்போல் விளங்கின, என்று அடங்கா குதூகலத்துடன் ஆனந்தபரவசமாய் அளவற்ற புலவர்கள் வர்ணித்துப் பாடியிருக்கும் இந்த நிலவொளி சந்திரனுக்கு சொந்தமல்ல. சூரியனிடத்தில் கடன்வாங்கி அது நமக்குச் செய்யும் தானம். ஆயினும் சமுத்திர ஜலத்தையுண்டு பூமியில் மழையாகப் பொழியும் மேகத்தை

"*உள்ளியுள்ள வெல்லா முவந்தீயுமவ்
வள்ளியோரின் வழங்கின் மேகமே"

அதாவது, பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் கொடுக்கிற கொடையாளிகளுக்குச் சமானமாக மேகத்தைச் சொல்லவில்லையா? அதுபோல் சூரியனுடைய ஒளியை நமக்குக் குளிர உதவுகின்ற சந்திரனையும் 'இரவுக்கு அரசியே, தெய்வமே'[3] என்றும், 'ஜகத்ஜோதியே'[4] யென்றும், 'தாரகணத் தலைவனே'[5] யென்றும் பற்பலவாறுகக் கொண்டாடத் தடையென்ன இருக்கிறது!

உருவல்ல: உருவகம்.

இது நிற்க. நமது தூரதிருஷ்டிக் கண்ணாடி

---

* சிந்தாமணி. 'பாற்கதிர் பரப்பி மீனரசாண்ட வெள்ளி விளக்கத்து' என்றார் இளங்கோவடிகளும். 'பாற்கடன் முகந்து மூரிவான் சொரிந்ததேயாமென' —கம்பர்.

1 Poetry is Universal. Shelley has the same idea very often, *e. g.* his 'An Ariette for music.'

2 Shelley has the same in his 'Prometheus Unbound.'

* கம்பர்.

3 Ben Jonson. 4 Homer. 5 சிலப்பதிகாரம். இவ்வடை மொழிகள் சம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் வெகு சாதாரணம்.

யைக்கொண்டு சந்திரனை இன்னும் பரிசோதிப்போம். சந்திரனில் முயலைக் காணோம். ஆனால் மலைகளுக்குமத்தியி லனேக கெபிகள் இருக்கின்றன. அவைகளில் சூரியனுடையஒளி அதிகமாகத்தாக்காததினால் தூரத்துப்பார்வைக்கு அவைகள் கருப்புக் கோடுகள்போல் தோன்றுகின்றன. இவை தாம் பஞ்சதந்திரத்து யானைக்கு முயல்போல் காணப்பட்டன.

சந்திரனைப்பற்றிய சில விஷயங்கள்.

சந்திரன் பந்துபோல் வட்டமானது. அது பூமியைச் சுற்றியோடுகிறது. ஊசியைக்காந்த மிழுப்பதுபோல் உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் மற்றைய பொருள்களையெல்லாம் தன்னிடத்திலிழுக்கிறது. பெரிய பொருளுக்குச் சிறிய பொருளைக்காட்டிலும் காந்த சக்தி அதிகம். பூமி சந்திரனைவிட மிகப் பெரிதாதலால் பூமி சந்திரனைச் சுற்றுவதற்குப் பதிலாக சந்திரன் பூமியைச் சுற்றிவருகிறது. அதே சந்திரனை மற்ற கிரகங்களும் தங்களிடத்தி லிழுக்கிறபடியால் அது பூமியில் தாக்காதபடி விலகி செக்கில் சுற்றும் எருதுபோல் பூமியைச் சுற்றி வருகிறது. அப்படி யொருதரம் சுற்ற 27-நாள், 7-மணி, 43-நிமிஷம் 11-வினாடி ஆகிறது. சந்திரன் முதலில் ஒரு சிறு வெள்ளிக் கோடுபோல் தோன்றி பிறகு ஸ்திரீகளுடைய நெற்றிபோல் வளைந்து மன்மதனுடைய ஆக்ஞா சக்கரம் எனத் தோன்றி பிறகு தீயாருடைய செல்வம்போல் நாளுக்குநாள் தேய்ந்துவரக்காரணம் அடியில் வரும் படத்தால் அறியலாம்.




பூமியை பூ என்றும் சூரியனை சூ என்றும், சந்திரனை ச என்றும் அடையாள மிடுவோம். புள்ளிக்கோடிட்டுக் காட்டியிருக்கும் வட்டத்தின் வழியே சூரியனை பூமி சுற்றி ஓடுகின்றது. சின்ன வட்டத்தின் வழியே சந்திரன் பூமியைச் சுற்றிவருகையில் சந்திரமண்டலத்தில் சூரியன் ஒளிபடும் பாகத்தை விளக்கிக் காட்டியிருக்கிறது. சந்திரன் பூமியைச்சுற்றிவருகையில் 1, 2, 3, 4, 4, 5, 6, 7, 8, என்கிற இடங்களிலெல்லாம் அதன் ஒரு பாதி சூரியன் ஒளிபட்டுப் பிரகாசித்தாலும் அதன் பிரகாசமான பாகம் முழுமையும் பௌர்ணமை தினத்தன்றி போக மற்ற நாள்களில் பூமியிலுள்ள நமக்குத் தெரிகிறதில்லை. சந்திரன் உள்வட்டத்தில் 1, 2, முதலான ஸ்தானங்களி லிருக்கையில் அதன் பிரகாசமான பாதியில் நமக்குத் தோன்றும் பாகம் அதற்கு மேலுள்ள வெளிவட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது. 1-ல் சந்திரனிருக்கையில் சூரியன் ஒளிபடாத சந்திரனின்பாதி பூமிக்கு எதிரே யிருப்பதால் அன்று சந்திரனிருப்பதே நமக்குத் தோன்றுவ தில்லை. அன்றைக்குத்தான் அமாவாஸை. சந்திரன் தன் வட்டத்தின் வழியே பூமியைச்சுற்றி ஓடி 2-ல்வந்து நிற்கையில் சந்திரனுடைய வெளிச்சமுள்ள பாதியில் கால்பங்கு பூமியில் படுகிறது. (2-குறிப்பிட்ட படத்தைப்பார்க்க) அன்றைக்குத்தான் நாலாம்பிறை. 3-ல் சந்திரனுடைய வெளிச்சமுள்ள பாதியில் அரைப் பங்கும், 4-ல் முக்கால்பங்கும், 5-ல் முழுப் பங்கும் பூமியில் படுகிறது. இப்பொழுது தான் பௌர்ணமை. பிறகு 6-ல் முக்கால்பங்கும், 7-ல் அரைப்பங்கும், 8-ல் கால்பங்கும் படுகிறது. அதன் பிறகு மறுபடி அமாவாஸை. ஆகவே சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றிவருவதற்குள் ஒரு அமாவாஸையும் ஒரு பௌர்ணமையும் உண்டாகிறது. (மேலே, காட்டிய படத்தில் சந்திரன் ஒரு ஸ்தானத்திலிருந்து அடுத்த ஸ்தானத்துக்கு வர சுமார் 3½-நாள் செல்லுகிறதென்றறிந்து கொள்ளவேண்டியது.)

சந்திரனுடைய ஒளி சூரியனுடைய ஒளியைக்காட்டிலும் 8 லட்சம் பங்கு குறைந்தது. அது மிகப் பக்குளிர்ந்தது. அதனால்தான் சந்திரனுக்கு "தண்ணன்" "சீதகிரணன்"—குளிர்ச்சி யுடையவன், குளிர்ந்த கிரணங்களை யுடையவனென்று பெயர்.



சந்திரனுடைய் சக்தி.

சந்திரனுடைய சக்தியைப்பற்றி பலர் பலவிதம் நினைக்கிறார்கள். 'தண்ணன் கதிர்வரவால் பொங்கும் கடல்' * என்றபடி அலைகளுக்குச் சந்திரன் காரணம். வைத்தியம் முதலிய மனோவியாதியும் சிற்சில தேகவியாதியும் பௌரணமையில் அதிகரிக்கின்றன. உலகத்தில் நடக்கிற தற்கொலைகளில் அனேகம் பௌரணமை பிரதமைகளில் தான் நடக்கிறதென்று கணக்கு பூர்வமாகத் தெரிகிறது. † தங்களைத் தாங்களே உயிர்மாய்த்துக் கொள்பவர்கள் அந்த தினங்களை நல்முகூர்த்தமாகத் தெரிந்தெடுக்க காரணம் யாதோ? சந்திரன் மனதிற்கு அதிஷ்டான தேவதை யென்பார்கள். சந்திரனுடைய இனிமையையும் அழகையும், குளிர்ச்சியையும், ஒளியையும் பார்க்கும்போது ஆஹா! நாம் சந்திரனில் பிறந்தோமா என்று எண்ண முண்டாகலாம். ஆனால் உண்மையில் சந்திரன் பூமிக்கு எவ்வளவோ தாழ்ந்தது.

‡ தங்குறை தீர்வுள்ளார் தளர்நதுபிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளைநீக்கக் கருதா துலகில்
நிறையிருளைநீக்குமேனின்று.—

என்றபடி சந்திரன் தன்னுடைய குறையாகிய களங்கத்தை நீக்கிக் கொள்ளாமல் உலகத்து இருளை நீக்குவதுபோல் பெரியோர்கள் தங்கள் குறைகளைக் கூடப் பாராமல் பிறர் குறைகளை நோக்கிக் கவலைப் படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சந்திரனிடத்திலுள்ள குறைவு அதன் களங்கம் மாத்திரமல்ல. அங்கே முதலாவது நாம் சுவாசிக்கத் தக்ககாற்றுக் கிடையாது. அதன் காற்றை ஒரு க்ஷணம் நாம் சுவாசிக்குமுன்னமே தலை கிறுகிறுத்து மூச்சு அடைத்துத் தத்தளிக்கவேண்டும். 2-வது அங்கே ஒரு பொட்டு ஜலமாவது

* நன்னெறி. Shelley and Shakespeare use this simile very often, so also several others.

† Morselli's 'Suicide,' International Scientific Series.

‡ நன்னெறி.

கிடையாது. "சாந்த சமுத்திரம்" (The sea of serenity) எனப் பெயர்பெற்ற அநேக சமுத்திரங்கள் இருந்தாலும் அவைகள் போலி சமுத்திரமே தவிர வேறல்ல. அவைகளில் ஒரு துளி ஜலமும் கிடையாது. மேலும் பூமியில் இருப்பதுபோல் அடிக்கடி அடுத்தடுத்து இரவும் பகலும் வருவதில்லை. ஒரே தொடர்ச்சியாக 14-நாள் அல்லது 336 மணி தேசகாலம் பகலும் பிறகு அவ்வளவு நேரம் இரவும் உண்டாகும். சந்திரனிலும் இரவு பகலுக்குச் சூரியனே காரணம். பகலில் அதிக உஷ்ணமும் இரவில் அதிக குளிர்ச்சியும் உள்ளது. பகல் கழிந்து இரவு வரும்போது சூரியன் மறையும். ஆனால் சந்திரனில் அஸ்தமனம் பூமியில் உள்ளதுபோல் அலங்காரமாயிராது.

* "திசைமுகம்பசந்து செம்மலர்க்கண்கள்
முழுநீர்வாரமுழுமெயும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநிலமடந்தை
அரசுகெடுத்தலம் வருமல்லற்காலை."

என்றபடி 'பூமிதேவி தன்புருஷனை (சூரியனைக்) காணாமல் திசையாகிய தன் நான்குமுகமும் பசப்பூரப்பெற்றுப் புஷ்பங்களாகிய கண்கள் நீர் சொரிய சரீரமுழுதுங் குளிர்ந்து வருத்தப்படும் அஸ்தமனவேளை, யென்று அலங்காரமாய்ச் சொன்னபடி வானமெல்லாம் நாலுபக்கமும் சிவந்து பார்த்தவர் உள்ளத்தை உருக்கத்தக்க அழகு வாய்ந்த அஸ்தமனம் சந்திரமண்டலத்தில் கிடையாது. சூரியன் களைத்தவன்போல் திடீரென்று சந்திரனிடமிருந்து விடைகூறப் பெற்றுக் கொள்ளாது மறைந்து போய்விடும். சந்திரனில் புல்பூண்டு கிடையா. பக்ஷி, மிருகம் கிடையா. மனிதன் என்ற பேச்சே கிடையாது. வீசி அடிக்கும் காற்றுக்கிடையாது. ஒருவர்க்கொருவர் பேசினால் கேளாது. ஆனால் பொன் முதலிய உலோகங்கள் ஏராளமாய் உண்டு. அங்கிருக்கும் மலைகள் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பலவர்ணங்களாய் இருந்தாலும் பார்வைக்கு அதிக அருவருப்பாயிருக்கும்.

சந்திரனில் பகலில்கூட நக்ஷத்திரங்கள் புலப்படும். சூரியமண்டலத்திலுள்ள மலைகள் தெரியும். நம்முடையபூமி அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு 2-அல்லது 3 கஜ குறுக்களவுள்ள ஒரு கோளமாகத் தோன்றும். சந்திரனில் இரவாயிருக்கும்போது பூமிதான் அதற்கு முக்கிய ஒளியைத் தரும். ஆனால் அவ்வொளி நிலாவைப் போல் பிரகாசமாய் ஆனந்தமாயிராது.

நாம் தப்பித்தவழி சந்திர மண்டலத்துக்குப் போய்விட்டோமானால் இறகு கட்டினவர்களைப்போல் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குத் தாவலாம். பெரிய குன்றுகளைச் சுலபமாய் உருட்டலாம். அநேகமாயிரம் மயில்களை சொற்பநேரத்தில் சுற்றிவரலாம். நமக்கு அங்கே கீழேகால் பாவுகிறது வருத்தம்.* அங்கே மனிதர்கள் கீழே கால் ஊன்றி நடக்கவேண்டுமானால் நம்மைப்போல் 6 மடங்கு வளர்ச்சியுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

இம்மாதிரி ஜனங்களும் அவர்களுக்கேற்ற மற்ற ஜீவஜெந்துக்களும சந்திரமண்டலத்தில் ஒரு காலத்தில் வசித்துக்கொண்டிருந்ததாகவும், சந்திரன் ஆதியில் தற்காலத்திலுள்ளபடி மயானக்கரைபோல் பாழாயிருக்கவில்லை யென்றும் பலர் தீர்மானிக்கிறார்கள். அநேக ஆயிரம் வருஷத்துக்கப்பால் பூமியும் இப்பொழுது சந்திரன் இருப்பதுபோல் உயிர்ப்பிராணிகளின் வாசத்துக்கு யோக்கியமில்லாமல் மாறிவிடுமென்று பயப்படுகிறவர்களும் உண்டு. ஆனால் இனிமேல் உண்டாகிற விஷயங்களைப்பற்றித் திட்டமாய்த் தீர்மானிப்பது கேவலம் மனிதர்களாகிய நமக்கு அசாத்தியமன்றோ. அளவற்ற அண்டங்க ளனைத்தையும் அமைத்துக் காத்து அழிப்பதைத் தமக்கு அநவரதமான ஓர் 'விளையாட்டாய்க்' † கொண்டுள்ள சாக்ஷாத் ஈசுவரனுடைய உட்கருத்தின் இரகசியத்தை அற்ப அறிவினராகிய நாம் அளக்கத் துணிவது 2, 40,000 (2-லக்ஷத்து 40 ஆயிரம்) மயில்களுக்கு அப்பால் உள்ள சந்திரனை நமது 2-முழக் கைகளால் எழும்பி எட்டிப்பிடிக்க எத்தனித்தல் போலும்.

* சிலப்பதிகாரம்.

* இதற்குக்காரணம் சந்திரனுடைய காந்தசக்தி பூமியினுடையதைக் காட்டிலும் குறைந்ததாதலால் அதில் பொருள்களின் கனமும் குறைவு.

† கம்பர்.



## SOCIAL SERVICE INSTITUTE.

## சமஷ்டிஸேவை ஸாதனம்:

## வித்தை பயிலுமுறை.

## ஆயுள்வேத பாஸ்கரன்.

(முன் தொடர்ச்சி)

காலையுமாலையும் ஒவ்வோர் காதமாக வழி நடக்கையில் வழியில் ஒரு விறகு தலையன் எதிர்ப்பட்டான். அவ் விறகுதலையன் எலும்பு மூடிய உடம்பினனாய் இருப்பதைக்கண்டு ஏடா விறகுதலைய! நீ இப்படி உடல் மெலிந்திருப்பதென்னை?" என்று கேட்க; அவன் "சாமி என்னவோ தெரியவில்லை. இந்தச் சுமையைத் தாங்கினதுமுதலாகக் கொஞ்சங் கொஞ்சமாய் இளைத்து வருகிறேன்" என்று சொன்னான். அதன்மேல் ஜீவகன் இந்தவிறகு சுமையில் ஏதோ அதிசயமிருக்கின்றது என நினைத்து அதனை இருபது பணங்கொடுத்து வாங்கி அவிழ்த்துப் பார்த்தான். பார்த்தவளவிலே சுமையில் ஒரு வகை ஸ்படிகக்கல் இருக்கக் கண்டான். அதுவும் ஒருவன்மேல் வைக்கப்பட்டால் அவன் கொண்டுள்ள நோயின் குணங்களைத் தெற்றென விளக்குவதொன்றாக இருக்கவே, அவ்விறகு தலையனுக்குப் பின்னும் பத்துப்பணங்கொடுத்து விட்டு அக்கல்லினைக் கைக்கொண்டு சென்றான்.

சிலநாள் வழிநடந்தபின் ஒருநாள் வழியிலே ஒரு அரிசிமண்டியிலே அளவுகாரன் ஒருவன் அளக்குந்தோறும் கையிலுள்ள படியினால் தலையில் சொரிந்து கொள்வதைக்கண்டு நெருங்கி, 'ஐயா! அதேன் அப்படி அடிக்கடி சொறிந்துகொள்வது?' என்று கேட்க, அளவுகாரனும் "என்னவோ அடியேன் சிலநாளாக என் தலையில் தீராத தினவெடுக்கின்றது' என்று கூறினான். உடனே ஜீவகன் விறகு சுமையில் கிடைத்த கல்லை அவன் தலையிலே வைத்துப் பார்த்தான். ஒரு பூரான் இருக்கக் கண்டான். கண்டசெய்தியை அளவுகாரனுக்குரைக்க, அவனும் "இவன்ஒரு மகா வைத்தியபண்டிதன் போலிருக்கிறது" என்று ஆலோசித்து, 'ஐயோ! இதற்கு ஒரு பரிகாரஞ் செய்தால் 'ஐந்நூறு பணங்கொடுக்கிறேன்" என்றான். அவனை ஒரு சாணக்குழியிலிருத்திக் காபல சிகித்ஸை செய்து பூரானை வெளிப்படுத்தினான். அளவுகாரனும் ஐந்நூறுபணத்தை எண்ணிக் கொடுத்தான். அதனை ஜீவகன் ஆசிரியர் ஆத்திரேயர்க்கு அஞ்சல்* வாயிலாய் அனுப்பிவிட்டான்.

அப்புறம் சிலநாழிகை நடந்தபின்பு வழியில் சிலர் ஒருவனைப் பாடைகட்டித் தூக்கிக்கொண்டு ஸ்மசானஞ் செல்வதைக் கண்டான். பாடையின்மேல் வளர்த்தியிருந்தவன் அரோக திடகாத்திரனாய்ப் பீமன்போல் இருப்பதைப் பார்த்து "இவன் யாதோர் நோயினாலும் இறந்தவனாகக் காணப்படவில்லை" என நிதானித்து சுமந்து செல்கின்றவர்களை நிறுத்தி, "ஐயா! இவன் யாவன்? எங்ஙன மிறந்தான்?" என வினவினான். அவர்களும் "என்ன ஐயா! மயானத்திற்குப் போகும்போது வழி மடக்கிக் கேட்கின்றீர்! இனி யாகவேண்டியதென்ன? போம்போம்" என்றார்கள். ஜீவகனும் பின்னும் பரிந்துகேட்க, அவர்களும் "ஐயா! இவன் பேர்போன ஒருமல்லகசெட்டி; இன்று காலையில் ஒருதடியனொடு மல்யுத்தம் செய்தான். விதிவசத்தால் வீழ்ந்துமூர்ச்சித்தான்" என்று சொல்லிக்கொண்டே சென்றார்கள். ஜீவகன் "ஆனால் சற்றுக்கீழே இறக்குங்கள் பார்ப்போம்" என்ன, அவர்களும் இதேது "காலைச் சுற்றின பாம்பு கடியாமற்போகாது" என்பதாய் இவன் நம்முடன் விடாமற் போராடுகிறான், வைத்தியரோ என்னவோ தெரியவில்லை என்று நினைத்துச் சற்று இறக்கிவைத்தார்கள். ஜீவகன் தன் கையில் உள்ள கல்லை அம்மல்லகசெட்டியின் உடலில் வைத்துப் பார்க்க வயிற்றினுள்ளே குடல் புரண்டிருப்பதைக் கண்டு, அவன் வாயில் ஒரு மூங்கிற் குழையை வைத்து இதனுள்ளே ஒருவகைச் சூரணத்தைப் போட்டு ஊதினான். சூரணமும் உள்ளுறச் சென்று குடலைத் தீண்டின மாத்திரத்

* தபால்மூலமாய்

திலே குடலும் பழைய நிலைமையை அடைந்தது. அப்போது மல்லகஜெட்டி உறங்கிவிழித்தவன் போல் எழுந்திருந்தான். நடந்தஎல்லாவற்றையும் கேட்டறிந்த அந்த மல்லகசெட்டி ஜீவகனுக்கு நூறுவராகன் கொடுத்தான். ஜீவகன் அதனை முன்போலவே ஆத்திரேயர்க்கு அனுப்பிவிட்டான்.

அப்புறஞ் சென்று யமுனையாற்றங் கரையைச் சேர்ந்து ஓராலமரநிழலிலிருந்து இளைப்பாறிக்கொண்டிருந்தான். அப்போது ஆற்றில் நீரோடுகின்ற அழகைப் பார்த்திருக்கையில், ஆற்றுவெள்ளத்தில் ஒரு பிணம் மிதந்துவருவதைக்கண்டு எழுந்து பார்த்தான். பிணமும் சிரிப்பதாய்த்தோன்ற அவ்வதிசயத்தைநெருங்கிக் காண்போமென்று ஆராய்ந்து பார்க்கையில், பிணத்தின் குதிக்கால் நரம்பினை ஒரு மீனானது வாயிற்கவ்வி இழுத்துக்கொண்டிருந்தது. அது அங்ஙனம் இழுக்குந்தோறும் பிணமானது கண்திறப்பதும் மூடுவதுமாகச் சிரிக்கின்ற பாவனையாகக்காணப்பட்டது. அப்புறம் ஜீவகன் வழிநடக்கலாகி வேசாளியென்னும் பட்டணத்தை அடைந்தான். அங்குஒரு ஜெட்டியானவன் மற்போர் புரிகையில் கண்ணில் ஒரு குத்துண்டு கண்பிதுங்கிக் கனவருத்தமடைந்திருந்தான். அதுகண்ட ஜீவகன், இதற்கென்ன செய்யலாம், இதுமருந்தினாலாவதல்ல ஆயுதசிகிச்சை செய்வோமென்றால் 'கண்ணோ புண்ணோ! என்றபடி ஆயுத சிகிச்சையினாலும் எளிதில் ஆவதுமல்ல. இதனை உபாயத்தினால் தீர்ப்பதே திறமையாகும்' என்று யோசித்து, ஆற்றில்கண்ட அதிசயத்தை நினைவுகொண்டு, அந்த ஜெட்டியைப் படுக்கவைத்து ஆயுதமொன்றைக் கொண்டு குதிக்காலின் நரம்பினைப்பற்றி வலித்தான். கண்ணும் கண்ணாயிற்று; ஜெட்டியும் தன்னாலியன்றதனங் கொடுத்தான். ஜீவகுமாரன் அதனை அப்பதியில் வசிக்கின்ற, தன் சிற்றன்னைக்குக் கொடுத்தான்

வேசாளியில் வசிக்கும் குடியானவன் ஒருவன் தன்காதில் பூரான்கள் புத்திர பௌத்திர பாரம்பரியமாய்க் குடிகொண்டு குட்டிகள் பெருகி நெடுநாளாகப் படாதபாடுபட்டுக்கொண்டிருந்தான். இவன்ஜீவகனுடைய மருத்துவப் புலமையைப் பலர் சொல்லக்கேட்டு அவனிடம் சென்று "ஐயா! மருத்துவர் மன்னரே! என்னோயைத் தீர்த்தருளல் வேண்டும்" என்று வேண்டினான். ஜீவகன் "இதுவரையில் குரு உபதேசத்தின்படியே சிகித்சை செய்து வந்தேன்: இனி என் அறிவினுக்குத் தோன்றுந் தோன்றுமாறு சூக்ஷ்மப் பிரயோகங்களைச் செய்வேன்' என்று எண்ணி, நோய்கொண்டவனை நோக்கி "அப்பா! தழைவேய்ந்த ஒரு குடிசைகட்டி அதனுள்ளே நீலநிறக் கம்பளம் ஒன்றை விரித்து வை. அதனடியில் ஒரு மத்தளத்தையும் தேடிவந்துவைக்கவேண்டும், குடிசையின் அடித்தரையைச் சூடேற்றி வைக்கவும் வேண்டும். நாளைப் பத்து நாழிகைக்கு மேல் நான் வருவேன்" என்று சொல்லியனுப்பினான். குடியானவனும் வைத்தியன் சொன்னபடியே எல்லாவற்றையுஞ் சித்தஞ் செய்து வைத்தான். ஜீவகனும் அக்குடிசையை அணுகி நோவாளியைப் படுக்கவைத்துத் தரையில் தண்ணீர் தெளித்து மத்தளத்தை முழக்கினான். உடனே பெரிய பூரானானது இதுதான் இளவேனிற்காலமென்று செவியினின்றும் வெளிப்பட்டது. அதுகண்ட ஜீவகன் சிறிது இறைச்சியைச் செவிவாயில் வைத்தான். அதுகண்டபூரான் மீண்டும் உள்ளுறச் சென்று குஞ்சுகுட்டிகள் யாவற்றுடனே புறப்பட்டுவந்து இறைச்சியில் மொய்த்துக்கொள்ள, உடனே ஜீவகன் அவற்றையெல்லாம் ஒருசட்டியில் தள்ளிவிட்டான். குடியானவனும் அதனோடுஉபத்திரவமொழியப்பெற்று உற்சாகங்கொண்டு ஐந்நூறு காசுபணங் கொடுத்தான். ஜீவகன் இப்பணத்தையும் சிற்றன்னைக்குக் கொடுத்துவிட்டான்.

அப்பால் அங்குநின்றும் போய் இராஜக்கிருகமே சென்றடைந்து தந்தைதாய் தமயன்மார்



களுடனே அளவளாவியிருந்தான். இருக்கும்போது ஒருநாள் ஏழைப்பார்ப்பான் ஒருவன் கஷ்ட சாத்தியமான கண்ணோயுடன் ஜீவகனிடஞ்சென்று தனக்கு ஒருபரிகாரஞ் சொல்லும்படி வேண்டினான். ஜீவகன் அதிக கோபத்துடன் "சாம்பலை அள்ளிக் கண்ணிலே கொட்டிக்கொள் போ! போ!" என்று சொல்லியனுப்பினான். கபடறியாத அந்தப்பார்ப்பான் அப்படியே செய்தான். நேத்திர உபத்திரவமும் நீங்கிவிட்டது.

ஜீவகன் இங்ஙனமாக விந்தை விந்தையான செய்கைகளைச் செய்து வருகையில், அரசனாகிற பிம்பிசாரன் தலையில் ஒரு கட்டிபுறப்பட்டது. அரசனும் ஆயுள்வேதியர்களை யழைத்து "மருத்துவத் தலைவீர்! என் சிரகில் புறப்படுகின்ற பருவினைக்காண்மின்; இதற்குச் சிகிச்சை செய்மின்." எனக்கூறினான். அம்மருத்துவ நிபுணர்கள் "மருத்துவப்புலமை சான்ற ஆசிரியர் அகத்தியனாரும் திருப்பாற்கடலில் திருவுடன் தோன்றிய பகவான் தன்வந்திரியும் கண்டு அழுக்காறடையத்தக்க ஆயுள்வேதியர் பெருமானாகின்ற ஜீவககுமாரபந்தன் அங்கிருக்க அடியோங்களை அழைத்த காரணமென்ன? அவனைச் சிறுபிள்ளையென்றுஇகழ்ந்தீரோ! அவன் சூரியன்; அகத்தியராதியோர் சந்திரர்; அடியோங்களும் எம்போலியரும் நக்ஷத்திரங்கள்; அவனைச் சாமானியனாக எண்ணினீர். தங்கட்குச் சிகிச்சை செய்யத்தக்கவன் அவனே எனக் கூறிப்போயினர். அப்புறம் அரசன் "தம்மிற்றம் மக்களறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லா மினிது" என்பதை நினைத்து ஆநந்தித்து ஜீவகனை அழைத்துத் தன்னோயைத் தீர்க்கவேண்டினான்.

ஜீவககுமாரன் அரசனாகிய தன் தந்தையை நோக்கி "இந்தக்கட்டியை ஒருநொடிப்பொழுதில் கண்டித்துவிடுகிறேன், வாருங்கள். நானே என் கையால் உங்களுக்குத் தலைமுழுக்காட்டவேண்டும்" என்று சொல்லி, அரசனை மஞ்சனசாலையில் ஒரு பீடத்தின் மேலிருக்கச் செய்து கட்டியைப் பழுக்கச்செய்யும் கடுக்காய் முதலிய தைலத்தைத் தடவி, அதன் மேல் ஐந்நூறுகுடந் தண்ணீர் வார்த்தான். அந்தத் தண்ணீரிலும் சில ஔஷதிசாரங்களை ஏற்றி வைத்திருந்தான். இங்ஙனமாகக் குடங்குடமாய்த் தண்ணீரைக் சொரியா நிற்கையில், கட்டியானது பழுத்து விட்டதை யறிந்து ஒருவருக்குந் தெரியாதபடி, ஒரு சூரியெடுத்துச் சத்திரஞ்செய்து, சீயைப்பிதுக்கி, மீண்டும் முன்போலவே ஐந்நூறுகுடந் தண்ணீரைக் கொட்டினான். சத்திரஞ்செய்த வாயும் மூடிக்கொண்டு ஐந்நூறுகுடந் தண்ணீரையும் வார்ப்பதற்குள்ளாகச் சதைவளர்ந்து மயிரும் முளைத்துவிட்டது. அரசன் இதையெல்லாம் அறிந்தவனல்ல, தலைமுழுக்காட்டியாயிற்றே; இனிமேல்தான் சிகிச்சை நடக்கப்போகிறதென்றெண்ணிக் கொண்டிருந்தான். உடனே ஜீவகன் தகப்பனை உண்ணவேண்டினான். அரசனும் உண்டிசெய்தான் பின்பு ஜீவகனைநோக்கி "இனி நீ செய்யவேண்டிய சிகிச்சை செய்யலாமே" என்றான். ஜீவகனும் "செய்யவேண்டிய சிகிச்சை யெல்லாம் செய்தாயிற்றே; இன்னும் செய்யவேண்டுவ தொன்றுமில்லையே" என்றான். அது கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து அந்தவார்த்தையை நம்பாதவனாய்க் கட்டி கண்டிருந்த இடத்தைக் கையினால் பலமுறை தடவிப்பார்த்தான். ஒன்றுங் கைப்படவில்லை. பின்னும் நம்பிக்கையற்றவனாய் நிலைக்கண்ணாடியில் தலையைப் பலமுறை திருப்பித் திருப்பிப்பார்த்தான். கட்டியிருந்த இடம் மயிர்முளைத்துக் கிடக்கக் கண்டான். அப்படியும் மனம் நிலைகொள்ளாமல் மனைவி முதலான மற்றவர்களை அழைத்துக் காட்டினான். அவர்களும் கட்டியிருந்தவிடத்தில் மயிரும் முளைத்துப் பழையபடி இருக்கக்கண்டு அதிசயித்தார்கள். மந்திரிமார்களும் மன்னனைச் சூழ்ந்துகொண்டு "ஐயா மன்னவர் மன்னனே!

தந்தைமகற்காற்றுநன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்,"

என்னுங் கடமையைக் கடைபோகக்கழித்தீர். இவனும்

"மகன் தந்தைகாற்றுமுதவி இவன்தந்தை
என்னோற்றான் கொலென்னுஞ்சொல்."

என்பதற்கு எடுத்துக்காட்டாய் ஆயுள்வேத சாகரத்தை ஆழங்கண்ட அரிய புலவனாயினான்" என்று சொல்லி மனமகிழ்ந்தார்கள். அரசனும் பின்னர் ஆநந்தங் கொண்டவனாகி "இனி இவனுக்கு ஆயுள்வேதபாஸ்கரன் எனப் பட்டஞ் சூட்டுங்கள்" என்று சொன்னான்.

அப்போது அந்தகன் ஒருவன் அங்குற்று, "ஓ மன்னவர் பிரானே! மந்திரிமார்களே! ஜீவககுமாரன் எனக்குக் கண்தெரியப் படுத்தினாலன்றோ அவனுக்கு ஆயுள்வேதபாஸ்கரன் என்னும் பட்டம் தக்கதாகும்? இல்லாவிட்டால் நீங்கள் அவன்மீதுள்ள அன்பினால் அப்பட்டங் கட்டினீர் என்னுங் குறைமொழி கூறக் காரணமுண்டாகுமே" என்றுகூறினான். கூறக்கேட்ட ஜீவகன், ""நானே உன்னை முன்பின் ஒருபோதும்அறியாதிருக்க, உன்னோயைதீர்க்கவில்லையென்று சொல்லுகிறாயே" என்று கேட்க, அவ்வந்தகன், ஐயாஐயா முன்னேஒரு பார்ப்பானுக்கு ஒரு வைத்தியஞ் சொன்னீர்களே, அப்படியே செய்தேன். இன்னும் கண்தெரியவில்லையே" என்று சொன்னான். ஜீவகனும் கண்ணோயென்பதெல்லாம் ஒன்றுதானா அவற்றுக்கெல்லாம் மருந்தும் ஒன்றுதானோ? கண்ணோயில்எத்தனையோவிதமான பேதங்களிருக்கின்றன? அதைஇன்னின்னதென வறிந்து அதற்குத் தக்கபடி சிகித்சை செய்யவேண்டாமா: உன் கண்ணின் நோய்ஒன்று. அந்தப் பிராமணன் கண்ணின் நோய் வேறொன்று. ஆகவே உனக்கு வேறுவகைப்பட்ட சிகிச்சை செய்தல் வேண்டும்" எனக் கூறி, அவனுக்கு அங்கனஞ் செய்தான். அவனும் நோய்தீர்ந்து "இந்தப்புண்ணியவானுக்கே தகும் 'ஆயுள்வேத பாஸ்கரன்' என்கிற பட்டம். இனித் தடையில்லை, உடனேகட்டுங்கோள்' என்றான் உடனே ஜீவககுமாரபந்தனை ஓர் யானையின் மீதிருத்தி ஊர்வலம் வரச்செய்து ஆயுள்வேத பாஸ்கரன் என விருதூதிப் பட்டங் கட்டினார்கள். இது நிற்க.

---

## "MY BABY IS MY WORLD"

## "I wouldn't sell him for all the money the world contains."

## "உலகெல்லாம் குழந்தையில்."

குழந்தைகளே! கடவுளை வரகவி யொருவர் "உலகெலா முணர்ந்து ஓதற்கு அரியவன்" என்று பாடியுள்ளார். அப்படி உலகத்தினரெல்லாம் உணர்ந்து சொல்வதற்கு அருமையான கடவுள் (எல்லாம் கடந்து உள்ளவர் 'கடவுள்') குழந்தை ரூபமாயிருக்கிறார் என்று நமது புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழந்தை க்ஷீராப்தியில் (பாற்கடலில்) ஆலிலைமேற் பள்ளிகொண்டிருக்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நமது முன்னோர்கள் குழந்தைகளும் மனதிற்கொள்ளும்படி பாற்கடல் என்று சொன்னதையே "Magnetic field of consciousness" என்று சொன்னால் அது சாஸ்திர ஞானம் என்று நம்மவர்கள் புகழ்கிறார்கள். "ப்ரஜ்ஞானம்ப்ரஹ்மம்" என்று மஹாவாக்கியமோதினால் அது வேதாந்தமென்று இகழ்கிறார்கள். பாற்கடல் என்றால் புராணமென்றும் கட்டுக்கதை யென்றும் பழிக்கிறார்கள். ஐயோ! நம்மவர்கள் கதி இப்படி யாயிற்றே! யென்று பரிதாபமாயிருக்கிறது. பாற்கடல் என்றால் அளவற்ற அன்பு என்று சொன்னால் அது கூடார்த்தம் என்று குதிக்கிறார்கள்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் வாஷிங்டன் பட்டணத்தில் ஏழைகள் குழந்தைகளை வளர்ப்பதற்கான தர்ம ஸ்தாபனமொன்று ஏற்பட்டு வேலை செய்து வருகிறது. அந்த ஸ்தாபனகர்த்தர்களுக்குத் தாய்மார்களைக் கோடைகாலத்துக்கு குளிர்ந்த விடத்திற் கனுப்பப் பணம் வேண்டியிருந்தது. அந்த ஸ்தாபனத் தலைவரான பெருமாட்டி ஒரு யுக்தி செய்தாள். அது என்னவென்றால்: தங்களுடைய ஸ்தாபனத்தில் வளர்ந்த குழந்தைகளையெல்லாம் சந்தையில் கண்காட்சி காட்டுவது போல், கண்காட்சியாக ஜனங்களுக்குக் காட்ட ஏற்பாடு செய்து அதில் சேரும் பணத்தைக் கொண்டு தாய்மார்களை குளிர்ந்த இடத்துக்கு அனுப்ப பிரயத்தனித்தார்கள்.

அந்தக் குழந்தைகள் கண்காட்சிசாலை வெகு ரம்யமாயிருந்தது. இங்குமங்கும் குழந்தைகள் அழகாக விளங்கிக் கொண்டிருந்தன, மூன்று வாரமான குழந்தை முதல் நாலு வயசுக் குழந்தை வரையில் அக்கண்காட்சி ஸ்தலத்தில் பார்த்தோர் கண்களைக் களிக்கச்செய்து கொண்டிருந்தன.

அங்கே பார்க்க வந்தவர்களில் கோடீசுவரன் ஒருவர் இருந்தார். அவர் அக்குழந்தைகளிலெல்லாம் மேலானதாக வெகுமதி யளிக்கப்பெற்ற நாலுவயசுக்குழவியைப் பார்த்தார். அவருக்கு மனம் அக்குழந்தையிடத்திற் போய்விட்டது. பணக்காரனாதலால் பணத்தாலாகாத காரியம் ஒன்றுமில்லை யென்கிற மமதைகொண்டவர். அவர் தன்மனம்அக்குழந்தையிடத்துப் பற்றவே அக்குழந்தையைத் தன்னதாக ஸ்வீகரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். உடனே அந்த ஸ்தாபனத்தலைவரான பெருமாட்டியிடம் சென்று அந்த நாலு வயதுச் சிறுவனை எனக்கு ஸ்வீகாரமாகச் செய்து கொடுத்தால் உமது ஸ்தாபனத்துக்கு லக்ஷம் பொன் தருகிறேன் என்று சொன்னார். ஸம்மதமானால் உடனே வேண்டிய ஏற்பாடு செய்ய எனது 'லாயரை' வரவழைக்கிறேன் என்றார். அதற்கு அப்பெருமாட்டி லக்ஷம் பொன்னிருந்தால் எங்களுடைய ஸ்தாபனத்துக்கு அது எவ்வளவோ உபகாரமாயிருக்கும். ஆனால் நாங்கள் குழந்தைகளை வளர்க்கச் சொல்லித்தருகிறோமே யன்றி விற்கச் சொல்லித்தருவதில்லையே என்று விசனித்தார்.

அந்தச் சிறு பையனுடைய தாயார் ஒரு வேலைக்காரி. அவளைக்கூப்பிட்டு "உன் குழந்தையைக் கொடுத்தால் லக்ஷம் பொன் நமது தர்ம ஸ்தாபனத்துக்குக் கொடுப்பதன்றி உனக்கும் ஏராளமான திரவியமளித்து உன் தரித்திரத்தை ஹதம் செய்து விடுவார். உன்னிஷ்டம் எப்படி?" என்று கேட்டார்.

அதற்கு அந்த வேலைக்காரி கொஞ்சம் கூட யோஜியாமல் "என் குழந்தையே எனக்கு எல்லா உலகமும், இந்த உலகத்திலுள்ள பணமெல்லாம் என்னதாகக் கொடுத்தாலும் என் குழந்தையைக் கொடுக்க மாட்டேன்!" என்று உறுதியாகச் சொன்னாள்.

அரிச்சந்திரனைப் பொய் சொல்லச் செய்வதாக சபதம் செய்து கொண்டு "மதியிழந்து தன் வாயுமிழந்த மாதவன்" (விசுவாமித்திர ரிஷியின்) கதியாக அந்தக்கோடீசுவரன் பணச்செறுக்கு இழந்து தன்பணமெல்லாவற்றினாலும் தான் அனுபவிக்கும் திருப்தியைவிட அந்த உண்மைத்தாய் சாப்பிடச் சோறில்லாமல் உழைத்தாலும் அவள் குழந்தை முகம் பார்த்துக் கோடி கவலைதீர்ந்து சந்தோஷமாயிருக்கிறதை யுணர்ந்து பணத்துக்கெட்டாத பொருளும் இவ்வுலகிலிருக்கிறதென்று உணர்ந்து சென்றான்.

"தாயன்பு தானே தேவனருள்" என்பார். அந்தத் தேவனருள் பெற்று திவ்யப்பிரஸாதமாகப் பெற்ற குழந்தையை வளர்ப்பதிலும் பெரிய வித்தை வேறுண்டோ! இல்லையாதலால் தான் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று செப்பியுள்ளார்.

---

## The Vivekachintamani.

"This favourite Children's Magazine, for May, contains excellent reading for the young people, and there is no doubt that it is admirably conducted. We note among other tributes to the excellence and the success of the *Vivekachintamani*, - - - - - -

"The School Children are very eager over the *Vivekachintamani*, it is their favourite magazine." "It is not only the children who like the *Vivekachintamani*, it is the teachers too; they often get useful hints from it." *Madras Times*.

## SHORT STORY : "SPADE OF ACE"

### “இஸ்பேட் ஏஸ்”

அல்லது

### தன்வினை தன்னைசுடும்.

I. வரவும் வரலாறும்.

மைலாப்பூர் கோபாலன் தம்மிடம் கொடுக்கப்பட்ட விஸிடிங் கார்டைப்(Visiting card) பார்த்துவிட்டு என்னிடம் தந்தார். அக்கார்டின் மேல் அச்சிடப்பட்டிருந்த பெயராவது.—

“சென்ன கேசவலு நாயுடு”

“அவரை உள்ளே அழைத்துவா” என்று என் சிநேகிதர் சொன்னார். ஒரு நிமிஷநேரஞ் சென்றதும் சென்னகேசவலு நாயுடு அறையினுள்ளே வந்து அங்கிடப்பட்டிருந்த ஓர் நாற்காலியின்மேலுட்கார்ந்தார்.

அவர் உயரமாகவும், அழகாகவும், திடகாத்திரராகவுமிருந்தார். அவருக்கு உத்தேசம் 22 வயதிருக்கும். அவர் தம் உடையால் பிரபுவெனத் தோன்றினார். கல்வியில் தேர்ச்சியுடையவராகவும் தீவிர புத்தியுள்ளவராகவும் காணப்பட்டார்.

அவர் மொழிந்த விநோதமான செய்தியை இவ்விடம் தெரிவிக்கிறேன்:

சென்னகேசவலு:—நான் என் காலத்தையெல்லாம் சிங்கப்பூரில் கழித்தேன். சுமார் மூன்று வருடங்களுக்குமுன் அங்கே ஒரு சீட்டாட்ட சங்கத்திற் சேர்ந்திருந்தேன். அது மெத்த பிரத்யேகமும் இரகஸ்யமுமானது. என்னைத்தவிர மற்றெல்லோரும் பணத்தை நீர்போற் செலவிட அதிற் சேர்ந்தார்களென எனக்குப்பட்டது.

சூதாட்டத்திலும் சட்டமா? பேஷ்!

சங்கத்தினர் யாவரும் முறை பிறழாது ஆடுவதாகத் தெரிந்தது. ஆட்டம் சரியானபடி நடைபெறுவதற்கான விதிகள் யாவையும் வெகு நிர்ணயமாய் அனுசரித்து வந்தார்கள். சங்கத்திற் சேர்ந்தவர் எவரேனும் அஜாக்ரதையாய் ஏதாவது பிழைகள் செய்தபோதும் அதை வெகு மும்முரமாய்க் கண்டித்தும் பிழை செய்த நபருக்குப் பெருந்தொகை அபராதம் விதித்தும் வந்ததால் சீட்டாட்ட சட்டத்துக்கு விரோதமானதொன்றையும் நாங்கள் செய்வதுமில்லை, மனதினால் நினைப்பதுமில்லை. ஏதாவது சிறிது சந்தேகமேற்பட்டாலும் அதை அதிக ஜாக்ரதையாய் ஆராய்வோம்,

பலநாள் திருடன் ஒருநாள் பிடிபடுவான்.

எம்மவரில் இராமலிங்க மென்பவன் மெத்த அதிஷ்டசாலியாகவும் ஆட்டத்தில் நிபுணனாகவுமிருந்தான். அவனுக்கு சீட்டாட்டம் தவிர வேறொரு வேலையுங் கிடையாது. அவ்வாட்டத்தில் இரவில் சம்பாதிக்கும் பொருளைக்கொண்டே ஜீவனம் செய்துவந்தான். நான் அவனுடன் பிரத்யேகமாய் பலதடவைகளில் ஆட்டம் ஆடியிருந்தேன். ஒவ்வொரு விசையும் அவனே ஜெயமடைந்து வந்ததால் ஏதாவது சூது செய்கிறானென்று வெகு ஊக்கமாய் கவனித்து வந்ததில் கடைசியாய் அவன் வாஸ்தவமாகவே சூது செய்து வந்தானென்றும், அதனால் தான் அவன் ஒரு விசையும் தோல்வியடையாமல் சதா ஜெயமடைந்து வந்தானென்றும் நான் சந்தேகித்தேன்.

இச்சந்தேகத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுவதற்காக ஒரு நாள் நான் இராமலிங்கத்துடன் ஆடித்தோற்ற சீட்டுக்கட்டையே வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். சீட்டுகளை நான் மேஜையின் மேல் பரப்பி வெகு ஜாக்கிரதையாய் பரிசோதிக்க ஆரம்பித்தேன். வெகு நேரஞ்சென்று சில சீட்டுகளின் பின்னால் அடையாளங்கள் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு அவைகளை இராமலிங்கம் செய்திருப்பானோ என்று யோசித்தேன். ஆனால் அப்படியில்லை. சீட்டுக்கட்டுகள் செய்பவர்களே அவ்வடையாளங்களைச் செய்திருந்தார்கள்!

இவ்வபூர்வ விஷயத்தைக்கொண்டு இராமலிங்கத்தின் சூதை வெளியாக்கவெண்ணி, ஓர் நாள் அவன் ஸ்பேட் ஏஸை ஆடியபோது அச்சீட்டை நான் பற்றியெடுத்து என் சிநேகிதர்களை நோக்கி,

“பிரபுக்களே! இச்சீட்டுகளெல்லாம் அடையாளம் செய்யப்பட்டிருக்கின்றன. இராமலிங்கம் சூதாக ஆடுகிறானென அவர் மீது குற்றஞ் சாட்டுகிறேன்” என்று நிதானமாய்ச் சொன்னேன்.

இதைக்கேட்ட என் சிநேகிதர்கள் யாவரும் அதிக ஆச்சர்யமும் கோபமுமடைந்தனர்



அவர்களின் பரபரப்பை நான் என்னென்று சொல்லுவேன்! இராமலிங்கத்தை மனங்கொண்டவரையில் தூஷிக்க ஆரம்பித்தனர். அவன் தன் குற்றத்தை மறுத்தான். நான் காரணங்கள் மேல் காரணங்கள் எடுத்துக்காட்டி, அவன் குற்றத்தைப் பூராவும் ருசுப்படுத்தியதால் ஏதும் பதிலுரைக்க வழியின்றி, அடங்காத வெறிகொண்டு தன் சட்டைப்பையினின்றும் ஓர் கைத் துப்பாக்கியை யெடுத்து எனக்கு நேரே நீட்டினான். என்னைச் சூழ்ந்திருந்தவர்களும் தங்கள் துப்பாக்கிகளை எடுத்து அவனைச் சுடுவதாய் பயமுறுத்தியதால் நான் தப்பினேன்.

“உள்ளதைச் சொன்னால் நொள்ளை கண்ணனுக்கு நோப்பாளம் தான்:” ஆனால் என்ன செய்கிறது!

சபதம்.

நான் வெளிப்படுத்திய விஷயத்தால் தன் ஜீவனமுறை அழிந்ததெனக் கண்ட இராமலிங்கம் என்னைப் பார்த்து,

“அடே சென்னகேசவலு!” என் மேஜைமீதிருந்த ‘ஸ்பேட் ஏஸ்’ சீட்டைக் கையிலெடுத்துக் காட்டிக்கொண்டே, “இப்போது தப்பித்துக் கொண்டோம் என அகங்காரம் கொள்ளாதே! நீ பெரு மகிழ்வு அடையப் போகுங் காலத்தில் உன்னை மாளாத் துன்பத்துக்குள்ளாக்குவேன். அது நிச்சயம்: அப்போது உனக்கு முன்னெச் சரிக்கைக்காக இந்த ஸ்பேட் ஏஸையே அனுப்புவேன்,” என்று சபதம் கூறினான்.

இராமலிங்கம் ஓர் முரடன். தான் சொன்னபடியே என்னை வஞ்சித்து துன்பத்துக்குள்ளாக்குவானென எனக்குள் நிச்சயமேற்பட்டது.

“.........அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்.”

என்ற சான்றோர் வாக்கின்படியே பயப்படவேண்டிய விஷயத்தில் பயப்படுவது அறிவாளிகளின் செயலாதலால், நான் இராமலிங்கம் தெரிவித்த சொற்களால் அச்சமுற்று கோழைமனத்தனல்லாமற் போனாலும் வீணில் விபத்தை வருவித்துக்கொள்ள இஷ்டமுறாமல் உடனே சிங்கப்பூரைவிட்டு இவ்விடம் வந்து சேர்ந்தேன். இங்கு வந்தபின் இராமலிங்கத்தையும் அவன் பயமுறுத்தியதையும் வெகுவாய் மறந்திருந்தேன்.

இன்றைக்கு 6 மாதமுன் எனக்கும் என் தமக்கையின் குமாரத்தி ஸ்வர்ணாம்பாளுக்கும் விவாஹ நிச்சயார்த்தமாயிற்று. என் தமக்கை முன்னமேயே காலஞ்சென்றாள். என் அத்தான் நிச்சயார்த்தத்துக்குப்பின் சடுதியில் மாரடைப்பால் இறந்தார். அவர் இறக்குந் தருவாயில் தம்முடைய தம்பியாகிய ஸ்ரீராமுலு நாயுடுவை ஸ்வர்ணாம்பாளுக்கு கார்டியனாக்கி சகல சொத்துக்களுக்கும் அவரையே காரியஸ்தராக நியமித்து ஸ்வர்ணாம்பாளை எனக்கே விவாஹம் செய்து வைக்கும்படி ஏற்படுத்திவிட்டுப் போனார். இப்போதும் அவள் தன் சிற்றப்பனின் அநுசரணையின் கீழ் தான் இருந்து வருகிறாள்.

இராமலிங்கம் பயமுறுத்தியதையும் அதனால் நான் சடுதியில் சிங்கப்பூரைவிட்டு வந்ததையும் ஸ்வர்ணாம்பாளுக்கும் ஸ்ரீராமுலுநாயுடுவுக்கும் மட்டுமே நான் தெரிவித்திருந்தேன்.

ஸ்வர்ணாம்பாளுக்கும் எனக்கும் விவாஹம் நடைபெறுவதைப்பற்றி என் சிறிய அத்தான் அவ்வளவாய் பிரியம் காட்டவில்லை. சாக்குப்போக்குகள் சொல்லி விவாஹத்தை காலஹரணம் செய்துகொண்டு வந்தார். எனக்குத் திரண்ட சொத்தும், யௌவனமும், தேகதிடமுமிருந்தும், ஸ்வர்ணாம்பாளுக்கும் என்னை மணக்க இஷ்டமிருந்தும், அவர் எங்கள் விவாஹத்துக்கு ஏன் உடன்படவில்லையோ எனக்கு விளங்கவில்லை? எப்படியும் இன்னும் இரண்டு வாரத்தில் விவாஹத்தைப் பூர்த்தி செய்வதென நிச்சயித்திருக்கிறோம்.

சந்தேகாஸ்பதம்

இது நிற்க. இன்று காலையில் எனக்கு ஓர் கவர் வந்தது. அதனுள் ‘ஸ்பேட் ஏஸ்’ சீட்டு ஒன்றிருந்தது. ஸ்பேட் ஏஸ் அடங்கிய கவர் எனக்கு யார் அனுப்பியிருக்கக்கூடும்? நான் சந்தோஷமடையப்போகுங் காலத்தில் எனக்

குத் துன்பம் விளைவிக்குமாறு முதலில் எச்சரிக்கையாக 'ஸ்பேட் ஏஸ்' சீட்டை அனுப்பி வைப்பதாக இராமலிங்கம் சொன்னபடியே நானும் விவாகம் செய்து கொண்டு சந்தோஷமாயிருக்கப்போவதால் எனக்குத் துன்பம் விளைவிக்கவே இராமலிங்கம் தான் ஸ்பேட்ஏஸ் அனுப்பியிருக்கிறானென எனக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. கவரின் மேல் மதராஸ் என்கிற முத்திரை இருப்பதால் அவன் இப்போது சென்னையி லிருக்கிறானென நினைக்கிறேன். என்று முடித்தார்.

பிறகு சென்னகேசவலு நாயுடு தன் சட்டைப்பையினின்று ஒரு கவரை எடுத்து கோபாலன் கையில் கொடுக்கவும் அதிலிருந்த ஸ்பேட் ஏஸைப் பார்த்துவிட்டு அவர் அதைத் தன்னிடமே வைத்துக் கொண்டார்.

ஆராய்ச்சி

கோபாலன்: இராமலிங்கத்தின் அடையாளமென்ன?

சென்னகேசவலு: அவன் சிறிது குட்டையானவன். புஷ்டியாயிருப்பான். முகம் சப்பையாக விருக்கும். தலைமயிரை நீளமாய் வளரவிட்டிருப்பான். குனிந்த வண்ணமாய் நடப்பான். வெண்மை உடை தரிப்பதில் மெத்த பிரியங்கொண்டவன். சீட்டாட்டத்தில் சம்பாதித்ததை வைத்துக்கொண்டு செலவழித்து வருகிறானென நினைக்கிறேன்.

கோபாலன்: ஆம் அப்படியிருக்கலாம். அவன் உன்னை இங்கு தொடர்ந்து வந்திருக்கலாம். அவனுடைய கடிதம் உனக்குக் கிடைத்ததும் நீ எங்காவது போய்விடுவாயென அவன் உனக்காக காத்துக்கொண்டிருப்பான். நீ எங்கே வசிக்கிறாய்?

சென்னகேசவலு: தங்கசாலை மேற்கோடி 36-நெம்பர் வீடு.

கோபாலன்: அப்படியாயின் நீங்கள் ஒரு கோச்சுவண்டியில் போங்கள். நாங்கள் ஒரு வண்டியிலேறிக்கொண்டு உங்கள் பின்னாலேயே சிறிது தொலைவில் வருகிறோம். இராமலிங்கம் உங்களைத் தொடர்ந்துவந்தால் அவன் சங்கதிகளைப்பற்றி நாங்கள் ஏதாவது அறிகிறோம். அவன் போக்குவரவை நீங்கள் கண்டுகொள்ளாதேயும். நாங்கள் பின்பக்கமாக வந்து தெருவின் கோடியில் கலந்துகொள்கிறோம். ஆகையால் நீங்கள் தெருப்பக்கமாகப்போங்கள்.

அவ்விதமே, சென்னகேசவலு நாயுடுவின் வண்டி முன்னும் எங்கள் வண்டி பின்னுமாக நூறு கெஜதூரம் போவதற்குள், ஓர் ஊதா வர்ணம் கொடுக்கப்பட்டிருந்த மோடார் வண்டி எங்களைக் கடந்து, நாயுடு அவர்களின் வண்டியைத் தொடர்ந்தது. குள்ளமும் புஷ்டியுமான ஒருவர் வெண்மை உடைதரித்து அதில் உட்கார்ந்திருந்தார்.

கோபாலன் திருப்தியுடன் புன் முறுவலுற்றார்.

கோ:—இராமலிங்கம் தன்னுடைய விரோதியை ஒரு சிறிதும் மறையவிடமாட்டான் போலிருக்கிறது. தான் தொடரப்படுவதை கவனியாமலேயே வேறொருவரை அவன் தொடர்ந்து செல்லுகிறான்.

இங்ஙனம் முன்னும் பின்னுமாய் செல்லும் போது ஸென்ட்ரல் ஸ்டேஷனண்டை ஜன நெருக்கத்தால் வண்டிகள் சிறிது நேரம் நின்றன. சென்னகேசவலு வண்டியும் இராமலிங்கத்தின் மோடார் வண்டியும் ஒன்றின் பக்கத்தில் ஒன்றாய் நின்றன. எங்களுடையது பின்னால் நின்றது.

மறுபடியும் நாங்கள் வண்டியை யோட்டின போது இராமலிங்கத்தின் வண்டி சென்னகேசவலு வண்டியைத் தொடருவதை யொழித்து நேராக கோட்டைப் பக்கமாய்ப் போயிற்று. சென்னகேசவலுவின் வண்டி அவர் வீட்டை நோக்கிச் சென்றது. கோபாலன் மோடார் வண்டியைத் தொடர்ந்து செல்லும்படி வண்டிக்காரனிடம் சொன்னார்.



## SOCIAL SERVICE INSTITUTE.

(PRELIMINARY REPORT.)

20th June, 1914.

## THE CHILDREN'S DAY FESTIVAL, 1914. CELEBRATIONS AT HOME.

## ஸமஷ்டி சேவை ஸாதனம்.

### பாலர் திருவிழாக் கொண்டாட்டம்: அஹத்தில் உற்சவம் கோண்டாடும் ஆனந்த வைபவம்.

---

ஸரஸ்வதி தேவியார் துதி.

"அயனார் அணியே அறிவார் அறிவே
பயனும் ஒளியே பதுமாஸனியே!"
ஸரஸ்வதி தேவிக்கு ஜய ஜய!

THE INSTITUTION OF THE CHILDREN'S DAY.

குழந்தைகளே, சென்ற வருஷம் ஜூன் மாசம் 20-ந்தேதி யன்று இவ்விராஜதானியிலுள்ளவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு இராஜதானியிலுமுள்ள பள்ளிக்கூடங்கள் தோறும் படிக்கும் குழந்தைகள் பாலபோத ஸமஷ்டி ஸேவைஸாதனமாக லார்ட் ஹார்டிஞ்ச் பிறந்த நாள் மஹோற்சவத்தைக் குழந்தைகள் தமக்கேயுரியநாளாகக் கொண்டாடினார்கள். இப்படி லக்ஷம், கோடிக்கணக்கான குழந்தைகள் ஹிமாசலமுதல் கன்னியாகுமரிவரையில் ஏகாக்கிர சித்தம் கொண்டு லார்ட் ஹார்டிஞ்சவர்களும் அவருடைய பெருமாட்டியாரும் டில்லி நகர்ப்பிரவேசம் செய்யும்போது திடீரென்று அகஸ்மாத்தாய் நேர்ந்த ஆபத்து வேளையில் பக்தி வைராக்கியத்தோடு சாந்த சீலராய் மலைபோல் வந்துற்ற துன்பத்தைத்தாங்கி, பகவத் கடாக்ஷத்தால் அது சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கப்பெற்ற வைபவத்தைக் கொண்டாடினார்கள்.

THE CHILDREN'S *FETE* AT SIMLA.

இப்படிக் கொண்டாடின "பாலர் மஹோற்சவதினம்" வீண் போகலாகாதென்று இந்த வருஷம் லார்ட் ஹார்டிஞ்சவர்கள் மே மாசம் 18-ந்தேதியன்று ஸிம்லாவில் சுமார் 15,000 குழந்தைகள் சேரக் களியாட்டம் கொண்டாடி மஹோற்சவத்தைச் சிறப்பித்தார்.

"I LOVE TO SEE THEM."

அப்பொழுது அக்குழந்தைகளோடு குழந்தையாய்க் கூடி விளையாடி அத்திருக் காட்சியைப்பார்த்து மனமுருகி "அவர்களைக் காண என் உள்ளம் உருகுகிறது" என்று பன்முறை செப்பினராம்.

"குழந்தைமுகம் பார்க்கக் கோடிகவலை தீரும்" என்பர். இது உண்மையென்று லார்ட் ஹார்டிஞ்சவர்கள் ரூபித்தார். பாலர்க்குப் பாலனாய், தேவர்க்குத் தேவனாய், துஷ்டர்க்குக் கண்டனாய், சிஷ்டர்க்கு முண்டனாய் இலங்கும் தேவகுமாரனும் பாலதேவனைப் பணியும் பாக்கியம் பெற்ற பக்தர்களும் என்ன சொல்லியிருக்கிறார்களென்றால்,

"பாலன் பாபங்கோல்
சீலன் எங்கள் கோன்
கோலஞ் சேர் குகன்
பால தேவனே"—யென்று

பண்பாடித்தொழுது வழுத்தியிருக்கிறார்கள்.

THE ORGIN OF THE CHILDREN'S MOVEMENT.

சென்ற வருஷம் ஜூன் மாஸம் 20-ந்தேதி சாயங்காலம் இச்சென்னையைச் சேர்ந்த ராயப்பேட்டையிலுள்ள 'பாட்டர்ஸ்கார்டன்' என்னும் விசாலமானதோட்டத்தில் தென்சென்னையிலுள்ள பள்ளிப்பிள்ளைகளெல்லாம் சுமார் 20,000 பேர்கள் வரையில் கூடியிருந்தார்கள். அப்பொழுது விளையாட்டுகளும் வேடிக்கைகளும் நடந்தன. கடைசியில் விளையாட்டுப் பந்தயங்களில் ஜயித்தவர்களுக்கு மிஸ்டர் ஜே. எச், ஸ்டோன் அவர்கள் அக்கிராசனாதிபதியாக விருந்து பென்ஸிலும், பேனாவுமாகப் பரிசு வழங்கினார். அப்பொழுது அக்கூட்டத்தின் மத்தியிலே ஒரு சிறுவன் பாலர் உபயோகத்துக்காக வென்று அச்சிடப்பட்ட விவேகசிந்தாமணி அனுபந்தத்தை * வைத்துக்கொண்டு எல்

* "The Vivekachintamani Children's Special."

லாருக்கும் வழங்கத்தவித்தான். 2,000 பிரதிகளை வைத்துக்கொண்டு 20,000 பிள்ளைகளுக்கு வழங்குவதெப்படி? இந்த தர்மஸங்கடத்திலிருக்கும் குழந்தையை அக்கிராசனாதிபதி கடைக்கண் பார்த்துக் காப்பாற்றினார். அச்சிறுவன் கையிலிருந்து கொடுத்த பிரதிகளையெல்லாம் வாங்கி எண்ணிக்கணக்கிட்டு, பரிசு வழங்கும் பொழுது அஃதொவ்வொன்றோடும் ஒரு பிரதி சிறவர்க்கான விவேகசிந்தாமணி அனுபந்தத்தையும் கூடவைத்து வழங்கினார். இப்படியாகச் சென்னையில் பாலபோத ஸமஷ்டி சேவை ஸாதனம் அமுலுக்கு வந்தது. பின்னர் அங்கங்கே நடந்த வைபவங்களை வாசிக்கும் பொழுது பம்பாயிலும் இம்மாதிரியே நடத்தினார்களென்று தெரியவந்தது. பிறகு நமது அரசர் பிரதிநிதி சென்னைக்கு விஜயமாக வந்தபொழுது குழந்தைகள் யாவரும் அவருக்கும் கனம் ஹார்டிஞ்ச் பெருமாட்டியாருக்கும் வந்தன வழிபாடாக ஒரு பத்திரம் எழுதிச் சமர்ப்பித்தார்கள். அதில் லார்ட் ஹார்டிஞ்சவர்கள் குழந்தைகளுக்குச் சொன்ன புத்திமதிகளை "மூத்தோர்சொல்வார்த்தை அமிர்தம்'' என்றபடி சிறுவர்கள் அமிர்தவசனமாகக்கொண்டு அந்தப்படி நடப்பதாக வாக்களித்தார்கள்,

"ஆந்த வாக்குத் தவறாமல் குழந்தைகள் நடந்துவர அவர்களுக் குழைப்பதில் ஊக்கங்கொண்ட விவேகசிந்தாமணியை பாலர்களுக்குபயோகமாகும்படி. பாலபோத ஸமஷ்டி சேவை ஸாதன விளக்கமாக நடத்தவேணுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

THE PROMISES OF HELP AND CO-OPERATION.

இதைப்பற்றி வித்யா இலாகா அதிகாரிகளுக்கு எழுதியதில் அவர்களும் அனுகூலமாகவேயிருந்தார்கள். இடையிலே யோகசாஸ்திரங்களையும் உபநிஷதார்த்தங்களையும் பற்றியெழுதிவந்ததை நிறுத்தி பாலபோத சிக்ஷா சாதனமாய் விவேகசிந்தாமணியை நடத்திவர வேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டார்கள். கேட்டுக்கொண்டதுமன்றி அப்படியே பிரமாணிக்கம் செய்து கொடுத்து பள்ளிப் பிள்ளைகளுக்கென்றே யுழைக்க வேண்டுமென்று கங்கணமும் கட்டிவிட்டார்கள். ஆண்டவன் சாக்ஷியாக அப்படி யுழைப்பதாகச் சொன்னோம். அவர்களும் இன்னல் செய்யாது இனியவையே செய்து ஸாதகமளிப்பதாகப் பிரமாணிக்கம் செய்து வாக்களித்தார்கள்.

THE INCIDENT AT HARROW.

இப்பொழுது நமக்குப் பாலர்க்குழைப்பதைத்தவிர வேறு வழியில்லை. லார்ட் ஹார்டிஞ்சவர்கள் திரிகரண சுத்தியாய் உழைப்பவர் என்பதற்கு அவரிடத்தில் ஒரு விசேஷம். அவருடைய பிள்ளையொருவன் ஹாரோ (Harrow) பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்க, அவனைப்பார்க்கச்சென்றார். அப்பொழுது அச்சிறுவனோடு ஒரு காபிஹோட்டலுக்குப் போக இந்தியச் சிறுவனொருவன் அவன் ஆங்கிலத்தோழரோடு கூடிக்குலாவி யுலாவி வர "இங்கே இந்தியச்சிறுவர்களுக்கும் உங்களுக்கும் வித்யாஸம் ஒன்றும் பாராட்டுவதில்லைப் போலிருக்கிறதே'' யென்றார். "ஆம்! நாங்கள் இந்தியர்களோடு சரிசமமாகப் பழகுவதன்றி வித்யாஸம்சிறிதும்பாராட்டுவதில்லை'' யென்று அச்சிறுவன் தகப்பனாருக்கு பதிலுரைத்தான். அப்புறம் ஹாரோவில் படித்தவர்கள் எல்லோரும் கூடி ஹார்டிஞ்சவர்கள் இந்தியாவுக்கு அரசர் பிரதிநிதியாகப் புறப்பட்டுப் போகுமுன் 'ஸேவை ஹோடலில் (Savoy Hotel) அவருக்கு ஒரு விருந்தளித்தார்கள். அப்பொழுது ட்ரினிடி காலேஜ் தலைவர் (Master of Trinity) அக்கிராஸநம் வகித்திருந்தார். இந்தியா மந்திரியாகிய மகாகனம் பொருந்திய லார்ட் க்ரூ அவர்களும் அவ்விருந்துக்கு வந்தவர்களில் ஒருவராயிருந்தார். அவர்கள் முன்னிலையில் அவர் பேசியபொழுது இந்தியச்சிறுவர்க் கன்புகாட்டி அவர்களைச்சரிசமமாக நடத்துவது ஒரு பெரிய காரியமென்றும், நன்றி



யொருவர்க்குச் செய்தக்கால் அது வீண் போகாதென்றும், இந்தியச் சிறுவர்க்குச் செய்யும் உபகாரம் கல்மேலெழுத்துப் போல் அவர் உள்ளத்திற் பதிந்து பின்னுக்கு இராஜ்ஜிய க்ஷேமத்தையுண்டு பண்ணுமென்றும் சொன்னார்.

THE VICEROY'S PRSONAL INTERCOURSE WITH STUDENTS.

பின்னர் இந்தியாவுக்கு வந்த பிறகு கல்கத்தா ஹோஸ்டல்களில் வசிக்கும் மாணவர்களோடு 'மறைப்புறமாய்' இருந்து கூடிக்குலாவிப்பழகி அவர்களுடைய குணவிசேஷங்களைநேரில் அறிந்து கொண்டார். அதன் பின் டில்லிநகரப் பிரவேசத்தின் போது நேர்ந்த ஆபத்து வேளையில் அவருக்குக் குழந்தைகளிடத்துள்ள உள்ளன்பு கரைகடந்து பொங்கி தனக்குற்ற இடர்களை மறந்து அவர்களது சந்தோஷத்தையே பெரிதாக பாவிக்கும்படியான உத்தம சித்தத்தைக் கொடுத்தது. இந்த உத்தம பாவனந்தானே அவருடைய பெருவிபத்தை மாற்றுவதற்கும் காரணமாயிருந்தது. †

"யோக ஸம்யமத்தில்'' நினைத்தது நினைத்தபடி கைகூடும். ஆகவே அவருக்குற்ற இன்னலை மறந்து குழந்தைகளது சந்தோஷத்தையே ஸ்மரித்தவராயிருக்க அவருக்கிருந்த குழந்தைமன மென்கிற உயர்பக்குவ சாதன விசேஷத்தால் உடலுக்கு நேர்ந்த பெருவிபத்து உயிர்க்குண்டான பரசிந்தையின் உற்சாக விசேஷத்தால் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்குவதாயிற்று.

THE SECRET OF SUCCESS: THE LESSON OF LIFE.

இந்த ரகஸியத்தைத்தான் குழந்தைகளும் பள்ளிப் பிள்ளைகளும் உணர்ந்துய்யவேண்டும். பள்ளியிற் பழகும் சிறுவர்கள் பெரியவர்களாகி ஜீவனோபாயம் தேடும்பொழுது அவர்களுக்கு உலகத்தில் ஸம்ஸார தொல்லைகள் எத்தனையோ உண்டாகுமென்பது நிச்சயம். அத்தருணங்களில் அவர்கள் ஸ்வயநயம் பாராட்டுவதை விட்டு பரோபகார சிந்தை மேலிட்டு இந்தியாவை க்ஷேத்திர மாதாவாக பாவித்துத் தாமெல்லாரும் அவளுடைய குழந்தைகளென்றுள்ளத்தில் ஓர்ந்துணர்ந்த ஏகீபாவத்தில் ஐக்கியப்பட்டு நின்றால், சமுத்திரத்தின் அலைகள் அதில் மூழ்கியிருப்பவனைப் பாதிக்காது மேலோட்டமாக ஓடி யொழிவது போல், ஸம்ஸாரதொல்லைகளெல்லாம் ஸமஷ்டிசேவை ஸாதனா பாவனை யப்பியாஸத்தினாலே உள்ளத்திலுறைக்காது மேலோடின வண்ணமாகத் தோன்றி மறையும்.

VALUE OF SOCIAL SERVICE AS *SADHANA*.

இது எப்படி யென்றால், சொல்கிறேன் கேளுங்கள்: மனிதன் ஏகாங்கியாயிருக்கும் பொழுது ஸ்வயநயம் பாராட்டுகிறவனாயிருக்கிறான். அவனே விவாகம் செய்து கொண்டு அன்பு வழிப்பட்டக்கால், பெண்டாட்டி பிள்ளைகளுக்குழைப்பதில் தன் கஷ்டங்களையெல்லாம் மறந்து அவர்களுடைய சந்தோஷத்தைப்பார்த்துத் தான் மனம் பூரித்து அதனால் தேஹமும் புளகாங்கிக்கப் பெறுகிறான். அப்படியே குடும்பியும் தன் குடும்ப விசாரத்தில் மூழ்கி ஸ்வயநயசித்தனாயிருக்கும் பொழுது தன் குடும்பத்தைப்போல் பல்கோடி குடும்பங்கள் க்ஷேத்திரமாதாவுதரத்தில் உதித்த ஜீவாணுக்கள் போல் அவளை யண்டிப் பிழைக்கின்றன வென்று ஸ்வகுடும்ப சித்தத்தைவிட்டு ஸ்வதேசகுடும்ப சித்தம் வாய்க்கப் பெறுவானாகில் அவனுக்கு அந்த உயர்பாவனையால் சிறுதொல்லைகளெல்லாம் சூரியனைக் கண்டபனிபோல் நீங்கிவிடுகின்றன. இது தான் ஸமஷ்டி சேவை பாவனம் (Ideal of Social Service) என்று சொல்லப் பெறுவது.

"THE IDEALS OF SOCIAL SERVICE."

இந்த மாதிரிபாவனங்களை (Ideals of Social Service) விருத்தி செய்து பலப்படுத்திப் பயனைவிளைப்பது எதுவோ அது ஸமஷ்டி சேவை ஸாதனம் என்று சொல்லப்படும். இத்தொழிலைச்செய்வதற் குதவியாயிருப்பது விவேகசிந்

† இது யோகபாவ ரகஸியம். இதை பாவனாயோகம் என்றும் சொல்லுவர் பெரியோர்.

தாமணி யாதலால் உபசார வழக்கில் இப்பத்திரிகைக்கு அப்பேர் வழங்கப்பெறுவதாயிற்று. உண்மையில் ஸமஷ்டிசேவைக்கு ஸாதனமாயிருப்பது விவேக ஞானமாம். அந்த விவேகசிந்தை முதிருங்கால் நாகஸர்பத்தின் விஷம் முற்றி நாகமணியாவதுபோல் அதுவும் விவேக சிந்தாமணியாக விளங்கும். அறப்பொருள் பாக்கியவிருத்தியாம் இந்த விவேகசிந்தாமணியே ஸமஷ்டிஸேவைக்கு ஸாதகமாயிருப்பது. அதற்குப் புறப்பொருளுதவியாயிருப்பதெல்லாம் ஸாதனமாகும். இது நிற்க.

HOME CELEBRATIONS OF THE CHILDREN'S DAY FESTIVAL, 1914.

சென்ற சஞ்சிகையில் வெளியிட்டிருந்தபடி பாலர் திருவிழா இந்த வருஷம் வீடுகள்தோறும் குடும்ப ஸஹிதமாய் குழந்தைகளால் கொண்டாடப்பட வேண்டுமென்பதை யனுசரித்து, சென்ற மே மாசம் 31 தேதியன்று பானுவாரம் திருவல்லிக்கேணியில் இவ்விவேக சிந்தாமணிக்கு விஷயதானம் செய்து வந்து 'தமிழறியும் பெருமாளாகி' "எரிமலையைப் பிடித்தெழுதி உளச்கனிவால் சிவன்மலையில் தடுத்தாட்கொள்ளப்பட்டவரான" நமது நண்பர் வீட்டில் அவர் திருவருட் பிரஸாதத்தால் ஸ்ரீபால சுப்ரமண்ய கீர்த்தனைகள் செய்து பஜனைக்கிரந்தம் இயற்றியதை குமாரக்கடவுள் முன்னிலையில் அரங்கேற்றி அவர் திருவடிக்கு அர்ப்பணம் செய்யும் சமயத்தை முன்னிட்டு, காலையில் பஜனையும், மத்தியானம் பால தேவர்க்குப் பிரீதியாகச் சிறுவர்களுக்கு விருந்தும், சாயங்காலம் பாலபோத ஸமஷ்டிசேவை ஸாதன மஹோற்சவக் கொண்டாட்டமும் வைத்துக்கொண்டு இனிது நடந்தேறியது சுபகரமாயும் சந்தோஷபூரிதமாயுமிருந்தது. அத்தருணம் பாலர்கள் கூடிப் பெற்றோர் பெரியோர் சேரப் படித்துவந்த "பாலவிணு" மற்றோர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை இங்கிலீஷ் படுத்தி குழந்தைகளுடைய மங்களவசனத்தோடு அந்த பாலவிணுவையும் அரசர் பிரதிநிதிக்கு அர்ப்பணமாக அனுப்பச் சம்மதமாய்க் கூட்டம் கலைந்தது.

## THE CHILDREN'S DAY FESTIVAL

**(Celebrations at Home.)**

ANTHEMS, HYMNS AND CIVIC SONGS FOR CHILDREN.

வீடுகள் தோறும் பாலர் திருவிழாக்கொண்டாட்ட மகிழ்வுரை.

---

## THE CHILDREN'S PRAYER.

(From Gitanjali)

வரகவி ரவீந்திரநாத் தாகோரியற்றிய

"பிரார்த்தனைக் கொத்து."

---

1. அண்ணலே யுன்றனடிபணிந் தன்பன் செய்
விண்ணப்ப மீதையே வேண்டினேன் வரந்தருவாய்!
2. ஏழையே னுள்ளத் துறைதரித்திர மத்தனையும்
பிழை திருத்தி சீர்மூல மாகவே தீர்த்திடுவாய்!
3. துக்கமொடு சந்தோஷம் வருவனவெ லாமையே!
மிக்கவெளி தாகநான் பொறுக்கவலி தந்திடுவாய்!
4. அன்புமிகுந் துனைத்தொழவே யாசைகொண்டேனம்மானே!
என்பணியும் வளரவேதா னெனக்குவர மருள்வாய்நீ!
5. 'ஏழைபங் காளிநீ', யெனவறிந்தே னுனையுள்ளத்
தேழைகளை யொறுக்காவண்ண மெனக்குவலி தந்திடுவாய்!
6. கர்வமிகு வல்லாளர் கண்டரைக் கண்டுழிநான்
'ஸர்வமும்நீ' யென்றவரைப் பணியாத படியெனக்குத்திடமருள்வாயென்னீச!
7. தினமெனக்கு நேருசிறு தொல்லைகளில் தலையிறங்கி
மனஞ்சிதறு நுன்மனஸே சித்திக்க வரமருள்வாய்!
8. என்வலிதா னெவ்வளவே யாயிடினு மத்தனையும்
உன்வலியே யென்றுணர்ந் துனக்கடிமை யாகுமொரு
*தன்வலியை வேண்டினேனுன் எனக்கிந்த வலியீன்று
என்னீச! எனையுனக்கின் னடிமையாக்கொளருள் புரிந்தே!

*தன்வலி—ஆத்மசக்தி.



['கவிசக்ரவர்த்தி' யென்று இராஜப்பிரதிநிதியவர்களால் புகழ்ப்பெற்ற ஸ்ரீமத் டாக்டர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் 'கீதாஞ்சலி' யென்னு மவர் மஹிமை பெற்ற கிரந்தத்திலிருந் தெடுத்து ஸ்ரீஹார்டிஞ்ச்ஜயந்தியை குழந்தைகள் திருநாளாக திருவிழாக் கொண்டாடும் பாலர்களுக்காகத் தமிழ் செய்யப்பட்டது இது.— C. V. S.]

---

## THE SONG OF CHILD.

"What is a child?" "An Experiment A fresh attempt on the part of nature produce *the just man made perfect*: that is, to make humanity devine." The great thing is not to vitiate the experiment by interfering with it.— Mr. *Bernard Shaw.*

"The Child" then is Humanity made Divine. It is the father of Man *i. e.* of humanity as a whole.

"They reckon ill who leave me out;
When me they fly, I am the wings;
I am the doubter and the doubt,
And I the hymns the Brahmin sings."

—*The Song of the Child.*

### பால பகவத்கீதை.

பாலனைப் புறங்கையாற் தள்ள லாமோ!
பழவினை யால்வந்த பாக்கியம் போமோ!
ஏழைபோ லென்னைவிட் டோட லாமோ!
கோழைப்பட் டோடினு மோடுவார் ஓட்டம்நானே!

சீலன்நா னென்பதை மறக்க லாமோ!
சிவன்தான் நானின்றிப் பிறக்க லாமோ
மூலன்நா னென்பதை மறக்க லாமோ!
வேலவன் துணையின்றி வாழ லாமோ!

சந்தேகிப் பாரொடு சந்தே கம்நான்
வந்திப்பார் வந்திக்கும் கீத மும்நான்
சிந்திப்பார் சிந்திக்கும் சிந்த னைநான்
சந்திப்பார் சந்திக்கும் சந்தி நானே!

பாலனைத் தேவனென் றறிந் தார்க்குப்
பாக்கிய மெல்லாங்கை கூடுந் தானே
பாலனை வெறுத்துத் தள்ளி னோர்க்குச்
சீலமும் கோலமும் சிறப்பும் போமே!

---

## "BURNS' GIFT TO THE BAIRNS."

FIRST YEAR: "THE HONEST MAN."

"The honest man, though e'er so poor,
Is King of men for a' that."—*Burns.*

### யோக்கியன்.

யோக்கியன்தானே பாக்கியனுவான்.

"யோக்கிய னென்பான் யதார்த்தமுடையான்
போக்கிய மவனுக் கென்னதான் குறையினும்
யோக்கியதை யதனுடன் குறையவே மாட்டா
தாக்கியும் அழித்தும் காப்பவன் அவனைத் தானே
பாக்கியம்எல்லாம் கொடுத்துக் காப்பன்காணே!"

யதார்த்தமாவது வாக்குப்பொய்யாமை.

---

**SECOND YEAR: "THE MAN OF FAITH."**

Believe in God as the **Source of All**!
Have Faith in the *realising Power* of Will
And WORK! Failure then, is IMPOSSIBLE.

---

## THE CHILD'S QUERY.

"FATHER! WILT THOU CHERISH OR LET ME PERISH?."

**To H. E. Lord Hardinge our Earthly King and Father.**

The New-Born Spirit of Renaisance:—

"Father! I, the Child of ages past, rejected and dejected come to Thee,

"Tell me, Wilt thou cherish or let me perish? Prithee!"

*Vox populi:* "Great men with the child-heart conceive and plan it well; but the underlings blundering spoil it all."—*A Teacher of Children and Maker of men.*

### பாலவிணு.

பல்லவி.

"அப்பா 'நான் குழந்தை'—உனக்கு—
வேணுமோ, வேண்டாமோ"?

அநுபல்லவி.

"அப்பா 'நான் குழந்தை' யுனக்கு வேணுமோ, வேண்டாமோ?'
செப்பாயென் றழுதுகொண் டெனைவந் தடைந்தையே பாலா!

சரணங்கள்.

1. அப்பா! "நான்குழந்தை" யுனக்கு
வேணுமோ வேண்டாமோ?

செப்பாயென் றழுதுகொண் டெனைவந்
தடைந்தையே பாலா!
துப்பாய்நா னழுதுன்னைத் தரையிலே
தாயில்லாக் குழந்தையேபோ
லப்பாநீ கொள்ளென் றவன்கையிற்
கொடுத்தேனே பாவி!
தப்பாய்நான் செய்பிழை பொறுத்தென்னை
யாளவே யெண்ணிநீ
—(அப்பா 'நான் குழந்தை')—

2. பதின்மூன்றோ டெழுமூன்றும் வருடங்கள்
பாரினிற் பக்திசெய்துன்னை
மதிவளர் வித்தையா வளர்த்தேற்
கெனைக்கொண்டே யுனைத்தந்தாய்!
கதிமோசம் வாராமற் கண்பார்த்து
ரக்ஷித்த கருணையாலே
மதிமோசம் போயுன்றன் மஹிமை
யறியாரை நண்ணினேற்கு
விதிமோசம் வாராமல் வந்தென்னைக்
காக்கவே வதனங்குன்றி—
—(அப்பா 'நான் குழந்தை')—

3. வாக்குக் கொடுத்தவன் வாக்கு
வாங்கிப் பின்னர்
சாக்குப் போக்குச் சொல்லி
சண்டையு மிட்டதால்
வாக்குக் கொடுத்தவன் வாக்குத்
தவறவே வதனங்குன்றி
சாக்குச்சொன் னனைவிட் டிணையடி
மலர்ப்பாதம் தரையிற்பட
போக்குச்சொன் னென்றன் பொன்மேனி
வாடவே யோடிவந்து—
—(அப்பா, 'நான் குழந்தை')—

---

## The Viceroy's Message and India's Response.

### "Three Words of Strength."

"The Sovereign Lord his Message of Hope
did give;
Our own true Lord, the Viceroy, gave us Faith!
'Tis now India's turn Her Supreme Message
to give:
And that's '*Love to thee and thine surpassing
both Hope and Faith.*'

"I trusted myself and Lady Hardinge more to the care of the people than to that of the Police. If it was an error, it is an error that I am proud of and I believe it may yet prove not to have been an entirely mistaken confidence, for out of evil good may come . . . . "I will pursue without faltering the same policy in the future as during the past two years, and I will not waver a hair's breadth from that course."

"The fair fame of India must be restored to a high and unassailable plane . . . . have inspired me with confidence in the determination of the people of India . . . . to restore to their BEAUTIFUL MOTHERLAND an untarnised record of fame.' ... My faith in India, its future and people remains unshaken."

The Message of Hope.

மன்னர் மன்னன் மஹிபனம் மரசன்
மூன்னரிம் மாஸிலத் தேவந்து ளமொன்றிச்
சொன்னசொல் மனந்தேற தேற்ற முறுமென்றான்!

The Message of Faith.

அன்னவன் தேற்றத்தோ டாற்றல ளிக்குமுள்
ளேற்றம தானவோர் பக்திகொள் வீர்பைய!

The Festive call of Love.

என்றண்ணல் உரைத்தவோர் உரைகேட்டுப் [பாலர்கள்
உளந்தேறி மனந்தேறித் திருவிழாக் கொண்டாடு [வார்.

Invocation.

அஹறந்தோறு மவரன்பால் கொண்டாடும் திருக் [கூத்தை
மஹாத்துக்கள் மகிழவே பண்பாட அருள்புரிவாய்!

---

## HOLY HYMNS IN PRAISE OF GOD.

### பஜனை.

வரத விநாயகர் துதி.

"இபமா! முகனே! இதமா வரதா!
சுபமா கவுமே சுமுகா அருள்வாய்"
வரத விநாயக மூர்த்திக்கு—ஜயஜய!

ஸரஸ்வதி தேவியார் துதி

அயனார் அணியே! அறிவார் அறிவே
பயனும் ஒளியே! பதுமா ஸனியே!
ஸரஸ்வதி தேவிக்கு—ஜயஜய!

பராம்பொருள் துதி.

"அன்பே! அருளே! அழியா முதலே!
இன்பே! ரஸமே! இசையுட்சுவையே!
உன்பே ரொளியை உள்ளா துணராத்
என்பே யுருகாத் எங்குவனையே!"



பராசக்தி துதி.

தாயே! யமுதே! தனிமா ஸ்திதியே!
தேயா அருளே! ஜகத்அம் பிகையே!
அம்பிகா தேவிக்கு—ஜயஜய!

பாலாம்பாள் துதி.

அம்மா 'குட்டி' யுன்நாமம்
அருமையா மொரு வாலைரூபம்
சும்மாவிருந்துன் சொரூபத்தைக் காண்பான்
சுகியோ டுழைத்தேன் வெகுகாலம்
தர்மாவென் றுனை யுள்ளேபதிவித்துத் தாழ்ச்சியில்
மோனத்தால் அர்ச்சித்தேன் மெத்த
பிர்மாமுதல்வந்துன் மஹிமையைக் கண்டுதம்
கர்மாவொழிந்ததென் றசைவற்றமர்ந்தார்.

'குட்டியண்ணா' (திருமால்) துதி.

"கண்ணா! அண்ணா! கருணாகரனே!
பண்ணா! அண்ணா! பவநாயகனே!
மண்ணோர் உண்ணா மணியே! முதலே!
எண்ணா ருண்ணின் றொளிரும்மணியே!
விண்ணோ ரேற்றுமோர் சிந்தா மணியே!"

திருமகள் துதி.

பூவே! பொலிவே! பொருளாம் வடிவே!
கோவே யெனையாள் குலதெய் வதமே!
லக்ஷ்மிதேவிக்கு ஜயஜய!

பாலதேவன் துதி.

"பாலன் பாபங்கொல்
சீலன் எங்கள் கோன்
கோலஞ் சேர் குகன்
பால தேவனே"

பாலபோத சிக்ஷாபரன் துதி.

போதமாய்ப் புலர்ந்தோய் நீ
புகழனாய்ப் பொலிந்தோய் நீ
நேயமாய் இருந்தோய் நீ
சின்னுணர்வு தந்தோய் நீ
என்னுணர்வி லுள்ளோய் நீ!
காடும்நீ கடலும்நீ கதிரும்நீ கதியும்நீ
கோடும்நீ குருவும்நீ குலமும்நீ குகனும்நீ
நானும்நீ! அவனும்நீ! அதுவும்நீ! எதுவும்நீ!
அப்பநீ! அம்மநீ! ஐயநீ! அமிர்தநீ!
அன்புநீ! அன்புடைய மாமனும் மாமியும்நீ!
ஒப்புடைய தாரமும் உண்பொருளும்நீ!
ஓர் குலமும் சுற்றமும் ஒருவரும்நீ!
துணையா யென்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ!
இப்பொன்நீ! இம்மணிநீ! இம்முத்துநீ!
இறைவநீ! எழுந்த செல்வம் நீயே!

## CHILDREN'S TRIBUTE OF LOVE TO THE VICEROY.

### அரசர் பிரதிநிதி வாழ்த்து.

### ஸ்ரீ ஹார்டிஞ்ச் பிரபு ஜயந்தி.

குழந்தைகள் வாழ்த்துத் துதி.

"மூவாறுமாகிநின்றான்: வித்தையொ டவித்தையாம்
கலைகளென்ன காமிய மென்ன!"—தேவி துதி.

ஹார்டிஞ்பிரபுவே! யருள்வலி யுடையோய்!
பாரிடிஞ்சாலும் வானிடிஞ்சாலும் பொய்யுரை [சொல்லாய்!

பேரிடி முழக்கம் போலுயிர் வாங்கும் பாதகக்
கூர்வெடி குண்டினு லின்னுயிர் வாங்கவே
மாரிடி நெஞ்சம் நினைத்த வஞ்சகப் பேய்களின்
கூரிடிகாயம் பட்டுப் பதைத்து மூர்ச்சித்தபோதும்-
சீரடி சாந்தம் குறையா துள்ளம் தடுமாறாது
மானிடவெள்ளம் போலுள கூட்டத் திடையிருந் [தையே

நுண்ணிடை மின்னா ளுன்பணி செய்யவே
கண்ணுடை வள்ளலே கருணையே உருவாய்
மின்னிடைத் தோன்றிய பொன்னுரு வெளிபோல்
மன்னிடைத் தோன்றிய மாதவக் கொழுந்தே!
உன்திரு நாளைப் பெருநாளாக் கொண்டாடக்
கூடின குழந்தைகள் நாங்க ளெல்லோரும் குதூஹ [லத்துடனே

வாழிமிக வாழியென்று வாழ்த்துகிறோம் ஐய! [வும்மை
பதிவிரதா சிரோமணியாய்ப் பாரிலுள்ளோர் துதி [க்குமம்மை
ஹார்டிஞ்சு பெருமாட்டி யன்பிலேநீ ரெந்நாளும்
துன்பின்றி வாழ்கவென்று துதிக்கிறோம் கட [வுளையே!

பாலதேவாலயம்
திருவல்லிக்கேணி
1914ஆ மேமீ 31உ

---

## THE FESTIVE CALL.

### To celebrate "the Children's Day Festival."

(20th June, 1914.)

### "பாலர் திருவிழாக் கொண்டாடுவோம் வாரீர்!"

(Specially composed to celebrate the *Children's Day Festival*, 1914.)

பல்லவி.

பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!
சில முடன் மெத்த கோலம தாகவே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடுவோம்!

சரணங்கள்.

(2) பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்நாங்கள்
சாலவு மெத்தநல் ஹார்டிஞ்ச்ப்ர பூமகிழ்
வேலவன் லீலைசெய் ஞாலமெ லாம்புகழ்
சீல மிகுபால தேவனைத் துதித்துள்ளே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!

(2) மேலைநாட் சீர்மையில் நாமெல்லாம் பெரியோராய்
வேலைசெய் வேளையில் வில்லங்கம் வாராமல்
நாலைந்து மொன்றாக நாம்வளர்ந் துற்றபோ
தாலையிற்க ரும்பேபோ லன்புமிகுந் தென்புருக,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!

(3) தாய்தந்தை மகவெனும் திரிமூர்த்தி தேவர்கள்
வாய்பொத்திச் சேவைசெய் பகவான் ஒருவனைச்
சேயென்று மகிழ்ந்துளந் தாய்வாரிக் கொண்டாப்
[போல்,
தேயமெலாம்புகழ் 'ஹார்டிஞ்சஸ்' நாமாக 'ஹிரு
[தாஞ் சலீ'பாடி,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!

(4) துன்பம்வந் துற்றாலும் என்புறக் கிழியவே
அன்புமி குந்தம்மா! பாலரைச் சிந்தித்துள்
ளன்புதோல் போற்றிய வித்தேகம் வருந்தினும்
அன்புரு வாம்பாலர் மகிழ்வே பெரிதென்ற வள்
[ளலை வினைந்து
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!

(5) தாயைப்போல் மகளென்னும் தூயர்சொல் மெய்க்
[கவே
சேயைப்போல் தாய்தந்தை மகவுந்தான் கூடியே
காயைப்பழ மாக்குபரங் கருணையோ டொன்றான
சேயைப்போல் மகிழ்ந்தாடு 'டயமண்ட்'பெண்
[மணிவாழ,—
—பாலர் திருவிழாக் கொண்டாடு வோம்வாரீர்!
சீல முடன் மெத்த கோலம தாகவே,—
—பாலர் திருவிழாக் கொண்டாடுவோம்!

---

## THE CHILDREN'S DAY FESTIVAL.

To H. E. Lady Hardinge, God Save
THE FOUNDER OF THE CHILDREN'S DAY.

### பாலர் திருவிழா.

தாயன்பாலென்னம்மை ஹார்டிஞ்சு பெருமாட்டி
தூயவராம் குழந்தைகளைத் தன்னிதயத் துள்ளிரு
[த்தி
சீயவராம்காவலர்கோன் ப்ரதிநிதியாம் பர்த்தாவின்
ஸ்ரீஜயந்தி கொண்டாடச் சொன்னவர்தம்குடிய
[னைத்துங் காத்தருள்வாய்!
அம்மா, தாயே! காப்பாற்று!
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு.

---

'இன்றைப்போல் என்றைக்கும் கொண்டாடுவோம்.'

The Annual Celebration of the Day.
The Children's Resolve.

அம்மா, தாயே! மஹாராஜ்ஞி!
அடியேம் குழந்தைகள் உனைத்தொழுவோம்!
மிடிதீர ஹார்டிஞ்சு ஜயந்தி இன்றைப்போல்
என்றைக்குங் 'குடிவாழக்கோன்வாழக்' கொண்
[டாடுவோம்!
அம்மா, தாயே! காப்பாற்று!
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு.

---

வாழி-Prayer for Blessings on the Country and the King.

வாழிமிகவாழியென்று வாழ்த்தவலி தந்தருள்வாய்
"வரப்புயர!" வென்றம்மை வாழ்த்தினர் கோனை
[யல்லோ
"வரப்புயர, வயலுயரக், குடியுயரக், கோனுயர"
வரந்தருவாய்! அம்மாதாயே! இதுநாங்கள் கேட்
[கும் பழம்.
அம்மா, தாயே! காப்பாற்று!
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு

—*From the Children's Anthem or Hridanjali.*

---

TO THE HONORABLE DIAMOND HARDINGE.

தாயைப் போல் மகளென்னும் தூயர்சொல் மெய்ச்
[கவே
சேயைப் போல் தாய்தந்தை மகவுந்தான் கூடியே
காயைப்பழ மாச்குபரங் கருணையோ டொன்றான
சேயைப் போல் மகிழ்ந்தாடு 'டயமண்ட்'பெண்
[மணிவாழ
பாலர் திருவிழாக் கொண்டாடி னோம்
சீலமுடன் மெத்த கோலம தாகவே—
—பாலர் திருவிழாக் கொண்டாடி னோம்.

சுபமஸ்து.

"TO PRODUCE A HEALTHY TONE AND STABLE CHARACTER."
"*Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith.*"
"*Seek Truth wherever you can find it,*" *But*, "*Make your choice and stick to it till you reach the End.*"
ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**
"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*
"New Series" ஸத்தியமே ஜயம்—**SATYAMEVA JAYATE.** "Approved"

புத்தகம். 22.] 1914ளு ஜூலைமீ, ஆனந்தளு ஆடிமீ [சஞ்சிகை 4.

## THE HOME CELEBRATION OF THE VICEROY'S BIRTHDAY.

A DAY OF CHILDREN'S FESTIVAL *par excellence.*

"TO PRODUCE A HEALTHY TONE AND STABLE CHARACTER."

**(Report by the Honorary Secretary, Children's Movement.)**

That favourite Children's Magazine, the *Vivekachintamani* in its June issue gives a preliminary report of the Viceroy's Birth-day, celebration which was *par excellanec, the Day of Childret's* Festival. It was celebratrd in the midst of tamily surroundings with Anthems, Hymns and Civic Songs sung by children. The chosen motto of the Journal this month is properly the 'Child's Query' which is a question "of imperial concern to the future of our Empire." The new-born Spirit of Renaissance in the confiding simplicity of the child puts the query which runs as follows :—

"Father ! I, the Child of ages past, rejected and dejected, come to thee,

"Tell me, wilt thou cherish or let me perish ? Prithee !"

It gives a brief resume of the development of the Social Service Institute and the work done in the children's cause during the first year of its existence from 20th June 1913 to 20th June 1914. Beginning with the history of "the institution of the Children's Day" on 20th June 1913 it refers to the Children's *Fete* at Simla on the 18th May last, and the Viceroy's declaration of love for the children which found fitting expression in His Excellency's repeated exclamation "I love to see them." It then goes on to describe the origin of the Children's Movement in Madras, which was due to the children's natural desire to know the meaning of the *Children's Fete* then held under official auspices and what it all was for, and how it was encouraged by the elders and parents who were able to enter into the spirit of the children, and proceeds to put on record the promises of help and co-operation vouchsafed to that Movement. The Report passes on to trace the inception of the idea further back in time to the incident at Harrow which the Viceroy-elect mentioned at the Harrovians' farewell dinner to His Lordship at Savoy Hotel, London, with the Master of Trinity in the chair and Lord Crew among the audience.

The Report further makes a brief reference to the Viceroy's personal intercourse with students and deduces the great lesson of life from the adorable conduct of the Viceroy on the occasion of that deplorable outrage at Delhi. To the Man of Faith all things are possible. And the secret of success lies in the man of faith being able to put himself, of necessity, in-tune-with- the Infinite, which is in itself a great achievement.

The value of Social Service involving as it does the inevitable study of Social-life with a working knowledge of its laws, as *Sadhana* (or Means of Realization) to know the ultimate principle of Action (which includes Inaction) and to become one with it, is touched upon to show how useful and helpful its practice will be in overcoming the sorrows due to the trials and tribulations of the every-day life. Then come "the Ideals of Social Service" on which the Viceroy rightly laid so much stress as an important factor in the formation of character and the implanting of civic-virtues in the young and tender hearts of the student population.

The Report of Home-celebrations of the Children's Day Festival of which a touching account and programme follows, shows how these virtues are implanted in the child-heart by the Anthems, Hymns and Civic Songs sung by children to celebrate the Viceroy's Birthday which has become, thanks to the stepmotherly solicitude of certain people, a *household*-festival and an abiding *home*-influence tending to cultivate the civic consciousness in the child-mind. The stepmotherly conduct of certain people, has only tended to divest the movement of much of its artificial *tamasha*, showy element ; but it has more than made up for this loss by the genuine hold it has gained on the children's minds, knitting them closer in bonds of sympathy and helpful co-operation to their parents and elders who naturally understood their healthy activities and sympathised with them more truly than our civic fathers who in their mature and considerate wisdom had thought fit to forget their own initiative and did not think it necessary, though reminded, that they should do anything for the children taking part in the celebration of the Viceroy's Birthday on the20th. Better late than never. It is hoped that there will be a proper celebration of the Children's Day when the schools reopen and get into working order.

C. V. SWAMINATHAIYAR, K.S.S.A.

LALITALAYA, MADRAS, S. 25th June, 1914. } *Honorary Secretary.*

" To Produce a Healthy Tone and Stable Character."

## The Viceroy's Birthday and the Children's Movement.

*The following appeared in the Madras Dailies:—*

"To-morrow the 20th June will be the Viceroy's Birthday. It will be the second Children's day, if the institution which was started with so much *eclat* last year is to have justice done to it. The President of the Madras Corporation, I believe, has been moved to make the necessary allotments for the celebration of the Children's Day in all the Corporation Model Schools now working in Madras. The " Vivekachintamani Children's Record " was circulated to all the schools in the presidency having classes from the first form upwards and its contents read out and explained to the students and school-children by the school authorities concerned. I now request you to publish the Committee's acknowledgment of the kind services done to the Children's Cause by teachers and heads of institutions throughout the Presidency and by the Inspecting Officers who were good enough to have the Children's Record circulated among them. It is addressed to all the Headmasters, Headmistresses and other heads of Institutions through the Director of Public Instruction and runs as follows :—

"Sir, Madam, Your acknowledgment of " *the Vivekachintamani Children's Record* " has been placed before the Committee (of parents and educationists) and they desire me to thank you sincerely for explaining to your students and school children the contents thereof. As a parent speaking for other parents like myself, will you permit me to bespeak your continued interest in and watchful care of the Children's movement, so that it may in due course develop into a free and voluntary association of Helpers imbued with those ideals of Social Service which it is essential every child should rightly learn to understand and appreciate by early practice, *to produce a healthy tone and stable character* in the natural development of the child-mind which is intuitively active and responsive to every impulse from within and from without.



In this connection I would invite your attention to the institution of the voluntary " Association of Helpers" pledged to form reading circles around each of them as centre, which did such good work during the nineties and the early half of the last decade in connection with the Diffusion of Knowledge Agency (established 1892) with the *Vivekachintamani* as its organ. I have already arranged to enlist the interest and secure the services of the *Vivekachintamani* as an organ of the Children's Movement and shall be glad to have your co-operation in so working it as to conduce to the development of the child-mind. I request the favour of your helpful co-operation and shall be glad if you can respond to this appeal on behalf of the children."

C. V. SWAMINATHA AIYAR,
*Honorary Secretary.*

The Assistant Private Secretary to the Viceroy writes from Viceregal Lodge, Simla, under date 6th July 1914, as follows:—

" Dear Sir,—I am desired to acknowledge the receipt of your letter of the 25th June last and to thank you for the copy of the " Viveka-Chintamani " containing a detailed report of the celebration of the Viceroy's Birthday by the Children in Madras and also of the article " The Children's Tribute of Love to the Viceroy."

"As regards your request for a photograph of the Hon'ble Diamond Hardinge,* I regret to say that no copy is available that can be sent to you. "

A copy of the Report was also sent to His Excellency the Governor of Madras who has acknowledged it.

### Some Extracts of Opinions.

" The Magazine has entered on a new career of usefulness." " It is so useful and interesting and the articles are so very instructive that no school can afford to ignore the splendid work it is doing." " I trust every secondary school will go in for enough copies to supply every class in it with one copy at least." " The elementary school teacher will find it of invaluable help... .....and the children like it very much. " " The *Vivekachintamani* has now established its claim to be the children's favourite, the teachers' help and the parents' guide. Please send me ten copies of it. "

*Mixing freely with the Children and taking her part in the Children's Fete held at Simla on the 18th May last.

விவேக  சிந்தாமணி

## THE SAVING POWER OF FAITH WHICH IS LOVE.

"THE FAITH THAT FALTERETH NOT NOR FAILETH" SAYS:—

" Though Thou Slayest *Sree* ! yet will I trust in Thee."

"அன்பொன்றுண்டாகு
லார்தான் பிழைக்கமாட்டார்!"

அன்பு என்பது அளவிலாச் சக்தி யுடையது. * பொறை, சாந்தம், தீரம், மேன்மை, கருணை, பரோபகாரம், ஜீவகாருண்யம் எல்லாவற்றிற்கும் இருப்பிடமாயுள்ளது அது. தன்னைக் கொடுத்தார்க்குத் தாரகமா யிருந்துதவும் பெருமை யுள்ளது. "அன்புடையார் என்பும் பிறர்க்குரியர்" என்றபடி தன்னயம் பாராட்டாது பிறர்க்குதவி செய்வதில் சிபி சக்ரவர்த்தியைப் போல் தன் முதுகெலும்பைத்தானும் கொடுத்துதவச் செய்யும் ஆற்றலுள்ளது. பவம், தவம் எல்லாவற்றிற்கும் இன்றியமையாதது. உள்ளன்பில்லா விடத்தில் மனதிலுண்டாகும் உயர்பாவனங்கள் திருவுருக்கொள்ளா. நண்பர் ஒருவர் விக்ரஹங்களின் லக்ஷணங்களைக் குறித்து ஒரு பெரிய கிரந்த மெழுதி முடித்திருக்கிறார். அதில் இவ்விராஜதானியிலுள்ள கோயில்களில் காணக்கூடிய அபூர்வ விக்ரஹங்களின் திருவுருவப் படமும் அவற்றிற்கு ஆகமங்களில் சொல்லிய லக்ஷண விசேஷங்களும் இன்னவை இனியவை யென்று

* ஆசையை அன்பென்று சொல்லி மருள் கொண்டுழல்வார்க்கு அன்பு என்றாலும் சிவம் என்றாலும் கடவுள் என்றாலும் ஒன்றே என்னும் ஆன்றோர் வாக்கியத்தை அனுபவத்திற் கண்டுணர்ந்து இது எழுதப்பட்டுள்ளதென்று மட்டும் சொல்லுவோம். "God is love" என்றார் பிறரும்.

எடுத்தோதிக் கிரந்தம் எழுதி யச்சிட்டுக் கொண்டிருந்தார். ஐயா, இவ்வளவு பாடுபட்டு இந்த அருமைக் கிரந்தத்தை யெழுதி யச்சிட்டீர்களே, இந்த விக்ரஹங்களின் திருஉருவ லக்ஷியங்களென்னவென்று கேட்டேன். அதற்கு அவர், "அவற்றில் அடங்கியுள்ள பாவனங்கள் பாஸ்கர ராயரைப்போன்ற மஹான்களுக்குத்தான் விளங்கும்: அவை புஸ்தகங்களில் படித்தறியக் கூடியவையல்லவே!" யென்றார். ஐயா! விக்ரஹ லக்ஷணங்களையெல்லாம் இவ்வளவு ஆராய்ந்து தேர்ந்து கிரந்தமெழுதிய தாங்கள் தங்களுடைய உள்ளத்துதித்த அவற்றின் லக்ஷியார்த்தங்களையும் தெரிவிக்கலாகாதா? என்று கேட்டதற்கு, அவ்வளவுக் கருகனல்லேன், என்று விட்டார்.

விக்ரஹங்களெல்லாம் பாவனு ரூபங்களேயன்றி வேறல்ல. பாவனம் என்றது இங்கே பவோபவத்தைக்† குறிப்பதாகும். மனோபவமானல், சலனரூபமானதால் சலித்துக்கொண்டே யிருக்கும்: உருவெடுத்தமைதல் அசாத்தியமாகும்.

"Nature is the Symbol of the Spirit"

என்றார் எமர்ஸன் என்னும் அமெரிக்கா தேசத்து மஹான். "பிரகிருதியினுண்மையில் பரமனைக் காணலாம்" என்றார் நம்மனோரும். ஆகையால் பிரகிருதி வித்தையில் தேர்ந்தவர்களுக்கு உருவங்களெல்லாம் ஆத்ம ரூபங்களே யாகும். ஸவப்னவஸ்தையில் நாம் காண்கிற கூத்தெல்லாம் உருவக விசேஷமன்றி வேறல்ல. உருவகம் சுத்தப்பட்டு ஸ்திரப்பட்டால் அது இஷ்டதேவதை யாகும். திரிமலம் ‡ தீர்ந்தால் அதுவே ஸ்படிகலிங்கம் ஆகும். இஷ்ட தேவதைக்கு எல்லா சித்தியையும் அளிக்கும் சக்தியுண்டு. ஆனல் "என்னுடைய ரம்பைக்கு ஒத்தைக்கண் குருடு" என்றவன் கதையாக மனோபாவனத்தால் மட்டும் மாயாஜாலவித்தை செய்கிறவர்கள், மனோவலையின் சிக்கறுத்து ஆகாச வெளியில் ஆனந்த ரூபமாக நின்றுழைத்தல் கூடாத காரியமாகும். தேஹ பலத்திலும் மனோசக்தி பெரியது. மனோபலத்திலும் ஆத்மசக்தி பெரியது. ஆத்ம பலத்திலும் (அறியும் சக்தியிலும்) அறிவானந்தமாகிய ஸ்வானுபவசக்தி பெரியது. ஸ்வானுபவத்திலும் ஸகஜானுபவம் பெரியது. ஸகஜானுபவம் பெற்றவர்களுக்கு அபேதபாவனம் இயற்கையாக ஏற்பட்டுப்போவதால் அவர்களுக்கு மண்ணைப்பொன்னுகவும், பொன்னை மண்ணுகவும் பார்க்கும் சக்தியுண்டு. அப்படி யென்றால், மண் பொன்னுகும் முறையையும், பொன் மண்ணுகும் முறையையும் இடைவிடாது அறிவிலறிந்துணர்ந்து ஆத்மசக்தியால் "அதுவதுவாதல்" முறைபற்றி அம்முறையனைத்தும் தாமாக விளங்குவர். உப்புத் தண்ணீரில் கரைவதும், கரைந்த உப்பு சூரியன் முன் திரண்டு உப்புக்கட்டியாதலும் (Crystals) அன்பின் சத்தி யன்றி வேறல்ல.

அன்பு என்பது 'நான்' என்னும் அஹம்பாவித்தழிந்து 'எல்லாம் நீ' யென்கிற முளையாகத் தோன்றி அது வளர்ந்து விரிந்து ஒடுங்கிய ஒடுக்கத்தின் ஒழிவில் தானேதானுகத் தோன்றும் 'அது'வாக விளங்கும். இந்த அன்பு என்னும் பொருளுக்கு 'நான்' என்னும் பாவனம் வித்து (பீஜம்); "நான் எல்லாம் நீ" யென்னும் அபேதபாவனம் (பவோபவம்) முளை (கிலகம்); எல்லாம் நீயான பிரபஞ்சம் (தோற்றம்) விரிந்து ஒடுங்கி, அதாவது, கப்புக்கிளைகள் கண்டு பூத்துக் காய்த்துப் பழுத்து நின்றவிடத்தில், வித்தில் மரம் போல் ஒடுங்கின ஒடுக்கத்தின் ஒழிவில் (பீஜாங்குரமியாயம் பட்டு ஒழிய) தானேதானுக (ஸவயம்பிரகாச ஒளியாகத்) தோன்றும் அது; காண்பான், காட்சி

† "மற்றென்று மற்றென்று மனோபவம்; பற்றென்று பற்றென்று பவோபவம்."

‡ திரிகரணங்களில் மனதைப்பற்றியுள்ள மலம் அஞ்ஞானம்; வாக்கைப்பற்றியுள்ளது மாயை; காயமாம் தேஹத்தைப்பற்றியுள்ளது கர்மம். அஞ்ஞானம, மாயை, கர்மம் மூனறும 'திரிமலம்' எனப்படும். மனத்தெளிவு உண்டானல் அஞ்ஞானம் நீங்கும். வாக்கு சுத்தப்பட்டால் அர்த்தபேதங்களுக்கு ஆஸ்பதமான மாயை நீங்கும். தேஹோஹம் என்கிற பற்று அறவிட்டால் கர்மபந்தம் தொலையும் என்பர் பெரியோர்.



162040

யிரண்டையும் விழுங்கிக் காண்பொருள் ஒன்றேயெல்லாமாக அறிவுக்கறிவாயும் உயிருக்குயிராயும் உள்ள ஏற்றத் தாழ்ச்சியின்றி எங்கும் நிறைந்த வஸ்துவாக விளங்குவது எதுவோ அதுவே அன்பு. அது நன்மையே உருவாகக் கொண்டது. அந்த வுருவும் அருவமாயமர்ந்தது. அது உருவாயும், அருவாயும், அருவுருவாயும் காணப்படுவது சகள, நிஷ்கள, மிச்ர (சகள-நிஷ்கள) வடிவமாகும். இந்த வடிவங்களை தியானலக்ஷண விசேஷங்களோடு விளக்குவது தானே திவ்ய மங்கள விக்ரஹ வடிவாகும். அந்த விக்ரஹங்கள் மனோபாவனமென்றெண்ணினல் அநர்த்தம் வரும். மனதீதமான பவோபவ முதிர்ச்சியின் ஜோதிர் வடிவம் எதுவோ அதுவே திவ்யமங்கள விக்ரஹம் ஆகும். அவைகளைத்தான் நம் கோவில்களில் விக்ரஹங்களாக நிர்மித்திருக்கிறார்கள். விக்ரஹ ஆராதனையேற்பட்டது பவோபவமான உயர்பாவனங்களை 'சித்தவிருத்திநிரோதம்' செய்து மனதை யடக்கியாள முடியாத ஜனங்கள் வாக்கு மாத்திரத்தால் கிரஹித்துணர்தல் கூடாமைபற்றி. அவர்களுக்கு தியான ஸாதனமாக விருக்க திவ்வியமங்கள விக்ரஹ ரூபமாக ஏற்படுத்தியுள்ளார் பெரியோர்.

---

## "THE SELF-MADE MAN."

The *Times* (London) writes.—

Dr. Mott, pathologist to the London County differs very much from Dr. Samuel Smiles, author of "Self-help," in his opinion of the self-made man. According to him, "the self-made man is often the first step in the process of degeneration ; and the first evidence of degeneracy in a family is the selfishness and meanness, or the cunning, avarice, and moral guile, by which the self-made man succeeds in amassing a fortune for his still more degenerate children to spend in gratifying their sellish desires. The family seems to be on the up-grade because, in one generatiou, it makes a wordly success ; but this succes is a sign of disease rather than of health and soon the disease has not even success to conceal it."

## தானுகத் தலையெடுத்த பணக்காரன்.

உலகத்தில் பணம் பெரிதென்று பணத்துக்காக உழைப்பதும் பணமே பெரிதென்று பாவிப்பதும் பணமிருந்தால் எல்லா முண்டு என்று நினைப்பதும் சகஜமாயிருக்கிறது. இது உலகவாசனை மட்டுமென்று சொல்வதற்கன்றி முன் காலத்து வித்வான்களும் இதையே ஓதிவந்தார்கள். உதாரணமாக 'தன் முயற்சி' (Self-Help), குணசீலம் (Character) முதலிய புஸ்தகங்களைச் சிறுவர்கள் உபயோகத்துக்காக எழுதிவந்த டாக்டர் ஸாமுவெல்ஸ்மைல்ஸ் என்பவர் பணம் படைத்தவனே தானுகத் தலையெடுத்தவன் ("Self-made Man") என்று உபதேசித்திருக்கிறார்.

லண்டன் மாகாணத்திலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளுக் கெல்லாம் மனோசிகிச்சை செய்யும் தத்துவ சாஸ்திர நிபுணரான டாக்டர் மாட் (Dr. Mott) என்பவர் லோக்கல் போர்டாருக்குள் உத்தியோகமா யிருந்தும் அவர்களுடைய தப்பெண்ணத்துக்குள்பட்டு பயந்து நடக்கக் கட்டுப்பட்டவராகத் தோன்றவில்லை. ஏனெனில் அவர்பிரபஞ்ச மார்க்கத்தை (லௌகிகபாவத்தை) யனுசரித்துள்ள பூர்வமத சித்தாந்தங்களைத் தப்பென்று எடுத்துக்காட்டி நிரூபித்தெழுதியிருக்கிறார். இது விஷயத்தில அவர்சாஸ்திரோக்தமாய எடுத்தோதி ஸ்தாபித்திருக்கும் அபிப்பிராயம் என்னவெனில்:—

"தானுகத் தலையெடுத்தவன்" ("The Self-made Man") என்று சொல்லும் மனிதன் உண்மையில தன்நயம் பாராட்டிப் பிழைப்பதில் தேறினவனு யிருப்பதால், அவ்வாறு தேறினவன் ஜாதிவீரியம் குறைந்தவனே யாகிறான்: அவன் வீரியம் குறைந்ததற்கு அது அடையாளமன்றி அவன் குடும்பம நசிப்பதற்கும அவனுடைய ஸ்வயநயமுயற்சி முதற்காரணமாகிறது என்று எடுத்தோதி வற்புறுத்தியிருக்கிறார். உலகப்பிரசித்தி பெற்ற லண்டன்

டைம்ஸ் பத்திரிகையும் இவருடைய அபிப்பிராயத்தை ஆமோதித்து ஆசிரியர் பத்தியில் மேற்குறித்த தலைப்பின்கீழ் ஒரு வியாஸமெழுதிப்பிரசுரித்திருக்கிறது. அதன் சாரஸங்கிரகம் நமது பெரியோர்கள் அபிப்பிராயத்துக்கு ஒத்திருப்பதால் அதையே சற்று விஸ்தாரமாய் விசாரித்து விளங்கக் கூறுவோம்.

தானாகத் தலையெடுத்தவன், ஸ்வார்ச்சிதம் பெருத்தவனாவது எப்படியென்று விசாரித்து அவனுடைய குணக்கேடுகளை யெடுத்துரைக்கிறார். ஸ்வயநயம், அற்பத்தனம் அல்லது லுப்த சிந்தை, கனமோசம், பொறாமை, பேராசை, பொய்மார்க்கம் இவையெல்லாம் அவனிடத்தில் குடிகொண்டு விளங்குகின்றன. இவைகளை சாதனமாகக்கொண்டதனால் ஜாதிவீரியம் குன்றின அம்மூடன் அவனிலும் கேடுகெட்ட சந்ததியாரின்ஸ்வயநயப் பெருமைக்காக ஏராளமாய்ப் பணம் சேர்த்துவைக்கிறான். இவன் பணம் பெருத்தவனாவதால் அந்தக்குடும்பம் ஏதோ இவன் தலைமுறையில் 'தலையெடுத்ததாக' பாவிக்கப்படுகிறது. இப்படிமேலாகத் தோன்றுவதும் குலநாச ஹேதுவான வியாதி பற்றினதற்கு அடையாளமாயிருக்கிறதேயன்றி குலவிருத்திக்கு இன்றியமையாத சுகஜீவனத்தைக் குறிக்கவில்லை. ஏனெனில் சுகஜீவனம் என்பது பணத்துக்கு அடிமையாய் பணப்பைத்தியம் பிடித்துத் திரிவதல்ல என்கிறார். அடுத்த தலைமுறையில் இந்த மேல்தோற்றமுமின்றி குலம் க்ஷீணித்துப்போகிறது நிச்சயம் என்கிறார் டாக்டர் மாட் என்பவர்.

இந்த அபிப்பிராயம் நிஜமென்று ஒப்புக்கொண்டாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நமக்குள் வேரூன்றிய சித்தாந்தங்கள் கால விசேஷத்தால் மாறி வருகிறதென்பது இதனால் ஸ்பஷ்டமாகத் தெரிகிறதென்று டைம்ஸ் பத்திராசிரியர் கூறுகிறார். இது வாஸ்தவமே.

டாக்டர் ஸ்மைல்ஸ் என்பவர் அவர்காலத்தில் பிரபலம்பெற்று விளங்கியவராயிற்றே, அவர் எவ்வளவோ சன்மார்க்கபோதம் செய்திருக்கிறாரே, அவருடைய சித்தாந்தத்தை எளிதில் தள்ளிவிடலாமா? என்று ஆராய்ந்துபார்த்து அதிலுள்ள குற்றங்குறைகளை யெடுத்துக் கூறுகிறார்.

தானாகத் தலையெடுத்தல் என்பது ஸ்வார்ச்சிதமாகப்பெருநிதி சேர்ப்பதற்கே சொல்கிறார். இப்படி பணம் சம்பாதிப்பதற்குச் சில குணவிசேஷங்களிருந்தாலன்றி மற்றப்படி சாத்தியமில்லை. ஆனால் அந்தக் குணவிசேஷங்கள் டாக்டர் ஸ்மைல்ஸ் அவர்களுக்கு குணசம்பத்தாகத் தோன்றின. டாக்டர் மாட் என்பவர் மனோவியாதிக்குச் சிகிச்சைசெய்பவராதலால் பணம் ஸம்பாதிப்பதற்கான குணங்களை சுகானுபவத்துக் கின்றியமையாத குணங்களோடு ஒப்பிட்டுப்பார்த்து அவை 'குணஸம்பத்து' என்று சிலாகிக்கத்தக்கவையாகவில்லையென்கிறார். ஏனெனில் பணம் சேர்ப்பதிலுள்ள அந்த சாமர்த்தியம் சுகானுபவத்துக்கு இன்றியமையாத குணங்களில் சேர்ந்ததாயில்லை. உண்மையில் அதற்கு விரோதமாயிருக்கிறது. லுப்தன் பணம் குவியல் குவியலாகச் சேர்த்திருப்பதால் அவன் அப்பணக்குவியல்களை அனுபவிக்கிறான் என்று சொல்வதற்கில்லை. பூதம் காப்பதுபோல் பணத்தைக் காப்பதில் சுகமொன்றுமில்லை. அந்தப் பணத்தினுபயோகம் அவனுக்குத் தெரியாமையால் அவன் அப்படிச்செய்கிறான். அஃதேபோல், பணம் பெருத்தவனும், என்னவோ, பார்க்காய்க்குப் பங்கை விற்றவன் கதையாக, பணம் சேர்ப்பதற்காகத் தன் அறிவைப் பணத்துக்கு அடிமையாக்கி நிறைய திரவியம் சேகரித்து விடுகிறான். இப்படி திரவியசேகரம் செய்ய ஒருவிதத் துணிவும் மனோபலமும் வேண்டுமாதலால் அதை சிலாக்கியமாகக் கொண்டாடினார் டாக்டர் ஸ்மைல்ஸ். இப்பொழுது டாக்டர் மாட் என்பவர் அந்தத் துணிச்சலும் மனோபலமும் உண்மையில் பலமல்லவென்கிறார். சுரம் கண்டவனுக்கு சன்னிபலம் எப்படியோ அப்படிப்பட்டது என்கிறார்.



அதுபலம்போல்காட்டி முடிவில் பலஹீனத்தையே உண்டுபண்ணும் தன்மையது. சுரம் கண்டவன் பலமிழந்து போகிறான் போல், பணவாசைபிடித்துப் பணமே பெரிதாக நினைத்து பணக்குவியில் சேர்க்கவென்றே கங்கணம் கட்டியுழைக்கிறவன் குலநாசகனாய் குலவீரியம் குன்றிச்சீரழிந்து போகிறான். சுகஜீவனம் என்பது பணக்குவியலில் புரளுவதல்ல; அதற்குப்பணப்பைத்தியம் கிடையாது. பணம் தருவதெல்லாம் சுகம் தருவதாகாது. பல விஷயங்களில் இறங்கி பக்திசிரத்தையோடு உழைக்கிறவனுக்கு அவனுடைய உழைப்பே யொரு ஆனந்தத்தைத்தருகிறது. அவ்வித ஆனந்தம் பணவாசைபிடித்தவனுக்கு இல்லாமற்போகிறது. அவனுக்கு எல்லாவிதத்திலும் பணம் வந்தால் தான் திருப்தி. அந்தத்திருப்தியும் க்ஷணிகநேரம் தோன்றி மறைவது. பணம் சேர்ப்பதில் மட்டும் அவனுக்குக் கண்ணேயன்றி பணத்தினால் கிடைக்கும் சுகம் இன்னதென்று அவனுக்குத் தெரியாது. பணத்தினால் வரும் சுகதுக்கம் இன்னதென்று அவனுக்குத் தெரியாத போது அவன் லுப்தன் பணம் சேர்ப்பதுபோல் பணம் சேர்ப்பதற்குழைக்கிறவனாகிறான். லுப்தன் பணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்: இவன் பணத்துக் குழைத்துக்கொண்டிருக்கிறான். இவ்வளவு தான் வித்தியாஸம்.

பணம் சேர்க்கவும் மனோசக்தி வேண்டும். பணத்தில் மனம் ஏகாக்கிரப்பட்டு அதைப் பற்றினாலன்றி பணஞ்சேர்க்கும் வழி காண்பதரிதாகும். மனது ஏகாக்கிரப்படுவது ஒன்று மட்டும் போது. அதன் லக்ஷியம் பல வேறுபட்டுக்கிடக்கும். பணத்தில் லக்ஷியம் வைத்துழைப்பவன் ஜடபுத்தியுள்ளவனாகிறான். ஸத்யாஸத்ய வஸ்து விவேகம் அவனுக்கு உதிக்காது. எதையும் காசுக்கு வாங்கி விற்கும் வகையில் தான் பார்ப்பான். பணத்துக்கெட்டாத மணமுண்டென்று அவனுக்குத் தெரியாது. உளமகிழ்வு காசுபணத்துக்குக்கிடைக்காதென்று அவனுக்குத் தெரியாது. பணம் சேர்ப்பதே ஜன்மசாபல்யம் என்று நினைக்கிறவன் பணத்தினுடைய உபயோகம் இன்னதென்று அறியாதவனாகிறான். பணத்துக்கு மேற்பட்டது சுகம் என்று அவனுக்குத் தெரியாது. பணம் தேடுவதொன்றைத்தவிர தேடின பணத்தின் குணமென்னவென்று அவன் அறியான். நித்தியப்படி உழைத்து ஜீவனம் செய்கிறவனைவிட பணஞ்சேர்க்கும் லோபி எப்படித்தாழ்ந்தவனோ, அப்படிப்போல், பணம் சேர்ப்பதே பிரதானம் என்று நினைத்துழைப்பவன், மணமே பெரிதென்றுழைத்து ஜீவனம் செய்பவனிலும் தாழ்ந்தவனாகிறான்.

சுகஜீவனத்துக்கு மனோபக்குவம் இன்றியமையாததாகும். பணமே பெரிதென்று பணந்தேடுகிறவனுக்கு அதுதான் பூஜ்யம். சுகஜீவனம் செய்வோன் அவனுக்கு வேண்டிய (இஷ்டமான) வேலையைச் செய்கிறான். பணமே பெரிதென்றுழைப்போன் பணம் சேருவதற்கான ஆஸ்பதங்களில் சந்தர்ப்பங்கள் எப்படி யிருக்குமோ அததற்கெல்லாம் அடிமையாக விருந்துழைக்கிறான். பணத்துக்கடிமைப்பட்டவன் நடைப்பிணமாகிறான். சுகஜீவனம் தேடுகிறவன் பணத்தை ஆள்கிறவனாகிறான். பணப்பைத்தியம் பிடித்தவன் பணத்துக்கு அடிமையாகிறான்.

பணம் சேர்ப்பதே பெரிதென்றுழைப்பவன் பணம் சேர்த்தபின் அதைக்கொண்டென்ன செய்கிறதென்றறியான். நம்மில் அனேகர் சாகும் வரையில் உத்யோகத்திலேயே இருக்க விரும்புவதற்குக் காரணம் அதுதான். அவர்களுக்குப் பணம் சேர்க்கவும் பணத்துக்குழைக்கவும்தான் தெரியும். பரோபகார மென்பது அவர்களுக்கு நஞ்சாயிருக்கும்.

செக்கில் கட்டினமாடு உழைப்பது போல் பணம் சேர்ப்பதற்கே உழைப்பவனைக் கண்டு அவனைத் துதிப்பது டாக்டர் ஸ்மைல்ஸ் கொள்கை. அது தர்மஸம்மதமானதில்லை,

ஏனெனில் ஒருவன் உழைக்கும் போது அவனுடைய தேஜோமனஸாகிய (உத்தம பாகம்) அதில் ஈடுபட்டு நிற்கிறதா? என்று பார்க்க வேண்டும். தொட்டதையெல்லாம் ஜோதிமயமாகச் செய்து சுகவடிவாக்கும் ஸ்பரிசவேதி ஜோதிமனசே. ஜோதிமனஸ் என்பதே குழந்தை-மனம் என்பதும். அது கர்மத்துக்கு அதிகாரியே யன்றி அடிமையல்ல. எஜமானனை அவன் வீட்டில் தானே அடிமையாக்குவதும் அடிமை கொள்வதும் இயற்கை விரோதம் தானே. ஆகையால் பணப்பைத்தியம் பிடித்தவன் ருணபெந்தன் (கடன்பட்டான்) ஆகிறான். "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கைவேந்தன்" என்றதனால் ஜீவாந்தரத்தில் அவர்களுக்கு உண்டாகும் மனக்கலக்கம் சொல்லொணாததாகும்.

## THE JOY OF LIVING.

"Laugh and the world laughs with you ;
Weep and you weep alone ;
For this sad old earth
Is in need of mirth—
It has troubles enough of its own."

—*Ella Wheeler Wilcox.*

## ஆனந்த வாழ்வு.

"அறிவார் பராசக்தி ஆனந்தமென்பார்." ஆதலால் அந்த ஆனந்தத்தாயின் குழந்தைகளாகிய நாம் அறிவானந்தத்தை யனுபவிக்காது துக்கஸாகரத்தில் மூழ்கித் தவிப்பது எப்படி? இஃதெல்லாம் நம்முடைய மௌட்டியத்தினாலன்றி வேறல்ல. மூக்கரையன் கதையாக ஒருவன் கெட்டால் அவன் மற்றவரையும் கெடுக்கப் பார்க்கிறான். இப்படியாகத் துன்பமும் துக்கமும் உலகத்தில் விர்த்தியாகின்றது. நாம் அறிவுருவாயிருக்கிறோம் என்பதை யறிந்து அனுபவத்தில் நிச்சயமாய் திடப்பட்டு நிற்பவர்களுக்கு "துன்பமும் துக்கமும் இன்பசுக நீழலாம்" என்னும் ஆனந்தத்தாய் மொழியின் உண்மை தானே விளங்கும், குழந்தைகளே! 14-வருஷகாலமாய் பக்தி, யோகம், ஞானம், கர்மம் என்கிற நால்வகை ஸாதன வழிகளையும் ஆராய்ந்து அதன் அப்பியாஸத்தால் வரும் பயனை யுணர்ந்து உள்ளத்தில் அனுபவித்தும் புறத்தில் தன்னை அண்டினார்க்கு ஆப்தவாக்கியமாக ஓதியும் வந்த ஒருவருடைய அனுபவ சித்தாந்தத்தை எல்லா வீலர் உவில்காக்ஸ் என்னும் ஆங்கில மாதுசிரோமணி தனது அனுபவமாக மொழிந்திருக்கும் கவிஞானத்தைக் கண்டு தேறுங்கள்.

உலக வாழ்க்கையில் வரும் சுகதுக்கங்கள் சமுத்திரத்தில் ஓயாது அடித்துக்கொண்டிருக்கும் அலைகளைப்போல் க்ஷணிகமாத்திரையானவைகள். அந்த க்ஷணிகமாத்திரை யளவானதை உள்ளபடி யறியமாட்டாமல் மனோசிந்தனையினால் அவைகளை சங்கிலித் தொடராகத் தொடுத்து 'துக்கமூட்டை' யென்றும் 'துன்பமூட்டை' யென்றும் சொல்லி தாங்கமாட்டாமல் தவிக்கிறோம். ஏன்? இப்படித் தவிப்பானேன்? என்றால்,—அறியாமையினால் மனம் குழம்பிப்போக உண்மையை உள்ளபடி யுணர்ந்துய்வதற்கு வேண்டிய மனத்தெளிவு குன்றிக்குலைந்து போகிறது.

நேற்று நான் தன்னொத்த நண்பரொருவரோடு இந்தப் பிரபஞ்சமாயா விலாஸத்தின் கூத்தைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தேன். அக்கிரமஸ்தர் செய்யும் அக்கிரமங்களையும், துஷ்டர்கள் செய்யும் துஷ்கிருத்தியங்களையும், கிஷ்டர்கள் படும் கஷ்டங்களையும் பற்றி மனமுருகப் பேசிக்கொண்டிருக்கையில், இதற்கெல்லாம் விமோசன மில்லையா? என்று கேட்டேன்.

அவர் "எதற்கெல்லாம்?" என்று கேட்டார்.

"துன்மார்க்கர்கள் செய்யும் அக்கிரமஅழிச்சாட்டியங்களுக்குத் தான்?" என்று பதிலுரைத்தேன்.

"ஸத்தியமே நன்மார்க்கம். தவறுவரும் வேறெதிலும்" என்று விவேகத்தாய் மொழியிருக்க ஸத்தியம் கெட்டவர்கள் கெட்டுப்



போவதில் அதிர்சயமென்ன வந்தது! அவன் இஷ்டம் அவன் கெட்டுப் போகிறான்: அவனைத் தடுப்பார் யார்? ஈசுவரனாலும் முடியாது!" என்று சொன்னார்.

"அவன் கெடுவது மட்டுமில்லை: பிறரையும் கெடுத்து விடுகிறானையா" என்றேன்.

"அது தப்புச் சார்ஜு! நான் ஒப்பமாட்டேன்" என்றார்.

"மூக்கரையன் கதை கேட்டதில்லையா?"

"சொல்வார் சொன்னால் கேட்பாருக்கு மதி கெட்டுப்போவானேன்! அது யாருடைய குற்றம்? ஆராய்ந்து பாரும்!"

"மதிகெட்டுப்போனால் அப்புறம் யார் மேல் குற்றம் சொல்கிறது?"

"குற்றஞ்சொல்ல ஒருவரும் இல்லாவிட்டால், வாயை மூடிக்கொண்டு சும்மா இரும்!"

"சும்மா இருந்தால் உலகம் நடக்கிறதெப்படி?"

"உலகம் நடக்கிறதும் நடக்காததும் ஈசுவர ஆஜ்ஞையைப் பொறுத்தது. மனிதனால் உலகத்தைத் திருத்தமுடியாது."

"உலகத்தைத்திருத்த முடியாதென்றால் ஊருக்குழைப்பானேன்?"

"ஊருக்குழைத்தால்தான் உலக சுபாவம் தெரியும். உலகானுபவமின்றி ஞானானுபவம் சித்திக்காது. உலகம்வேறு உலககர்த்தாவாகிய ஈசுவரன் வேறு என்கிற தப்புபாவம் ஒழிவது எப்படி?"

"கர்த்தா ஒருவனின்றி கிருத்தியமுண்டா? காரணமின்றிக் காரியமுண்டா?"

"கர்த்தா ஈசுவரன்: இந்த உலகத்தைப் படைத்துக்காத்து அழிப்பது அவன்தொழில் அல்லது கிருத்தியம்."

"ஆம் குயவனின்றிப் பானை யுருவாகுமா? மண்ணின்றிப் பாண்டமாகுமா?"

"மாவில்லாத பணியாரமுண்டா? காரணமில்லாத காரியமுண்டா?"

"அப்படியிருக்க, துஷ்டன் துஷ்கிருத்தியம் செய்வதற்குக்காரணம் ஏன்தோன்ற வில்லையுமக்கு?"

"அவனுடைய மௌட்டியத்தனம்தான் காரணமென்று தோன்றுகிறது. ஏனெனில் 'இஷ்டம்' என்கிற இச்சா சக்திக்குத் துவந்துவமில்லை. "நினைத்தது முடிக்கும் ஆற்றல்" ஒன்றே அதன்குணம். நினைத்தது நல்லதா கெட்டதா என்னும் விசாரம் அதற்குக்கிடையாது. ஏனெனில் நலம்தீது என்கிற துவந்துவ பந்தம் அதற்குக்கிடையாது."

"மௌட்டியன் மூடத்தனத்தால் கெட்டால் விவேகி அதைக்கண்டு சித்தப்பிரமை கொள்ளக் காரணமென்ன?"

"ஆம்! மௌட்டிய முள்ளவரையில் மூடன் கெடுவான்தான். அதனால் அவன்கெட்டாலும் மற்றவருக்கு மௌட்டிய ஜாட்டியம் இல்லாவிட்டால் அவரைக்கெடுக்க அவனுக்கு அதிகார மில்லைத்தான்."

"அதிகாரமில்லாதவன் செய்கையைக்கண்டு மலைப்பானேன்? ஒருவன் பொய்வேஷம் போட்டுக்கொண்டு நான்தான் ராஜா என்று அதிகாரம் செய்தால் அவனுக்கு ராஜாதிகாரம் வந்துவிடுமா? ஆயினும் அவன் வேஷதாரியென்று அறியாதவர்கள் அவனை நிஜமாகவே ராஜனென்று நினைத்து மதிமயங்கி மோசம் போகலாமல்லவா? அது எதனால்? உண்மை அரசன் ஞானம் இல்லாமையினால். தலைவனை யறிந்தவனிடத்தில் ஊழியன் ஜாலம் பலிக்காது."

"ஆம்! வேஷதாரியை வேஷம் தரித்தவனென்று அறிந்தால் அவன்செய்யும் ராஜாஜ்ஞைகள் யாரையும் பாதிக்காதுதான். ஆனால் வேஷத்தைக் கலைக்கமுடியுமா?"

"அதுதான் தப்புவழி! ஒவ்வொருவனும் ஒருவித பாவனையைக்கொண்டு அதற்கு ஆள்பட்டு நடக்கிறான். ஞானி ஒருவன்மட்டும் சித்தவிருத்தி நிரோதம் என்கிற யோகஸாமர்த்

தியத்தால் தன் மனோவிருத்திகளை யடக்கி யாண்டு பாவனாதீதனாகப் பார்க்கிறான். மற்றவர்களெல்லாம் பாவனாவசத்தர்கள் தான். தன் வசமிழந்து பாவனாவசப்பட்டவன் பாவனையறிந்துவிட்டால் அவனை பொம்மைபோல் ஆட்டிவைக்கலாம். இது நிச்சயம். இதன்பர்மம் அறியாதவர்கள் தட்டுக்கெட்டுத் தடுமாற வேண்டியதுதான். தடுமாறினாலும் புத்திசாலி எப்படியும் தேறிவிடுவான் என்பது நிச்சயம். இதை நன்றாக மனதில்வைத்து மேலாக வேண்டிய காரியத்தைப் பாரும்" என்றார்.

அவர் சொன்னதை நான்கேட்டுச் சிந்தித்து உள்ளத்தில் ஆராய்ந்து உண்மையையுணர்ந்தேன். மலைபோல் வந்த சங்கடங்களெல்லாம் பனிபோல் நீங்க வழிவகை தானே சுலபமாக ஏற்பட்டது.

நினைத்தகாரியத்தை முடிக்கும் ஆற்றல் தானே வந்தது. அந்த சக்தி உதிக்கவும் எல்லாம் தெளிவாகப்பட்டது. கோபதாபங்கள் என்னை விட்டோடின. நலந்தீதென்னும் துவந்துவ பாவனையும் தானே நீங்குவதாயிற்று. எதைச் செய்தாலும் காரணகாரிய தோரணையொன்று தானே தெளிவாகத் தோன்றுவதாயிற்று. காசு, பணம், செல்வாக்கு, சிபார்சு, பெரிய இடத்து மதிப்பு இவை யொன்றினாலும் மசியாத காரியம் குழந்தைகள் உருசியோடு தின்றனுபவிக்க மாம்பழம் கொடுத்துப் பார்த்தால் பலிக்குமென்று தெரியவந்தது. மாம்பழம் என்கிற காரணம் பழுக்கக் காரியமும் தானேபழுத்தது. அந்த மாம்பழம் ஒன்று என் ஆனந்தத்தாய் எனக்கு அளித்தாள். அதை உங்களுக்குக் கொடுக்கிறேன் வாங்கித் தின்னுபாருங்கள்.

"அம்மாள் எனக்கொரு மாம்பழமீன்றாள்
அதற்குத் தோலுமில்லை நாருமில்லை
கட்டியுமில்லை கொட்டையுமில்லை
தின்னத்தின்ன ருசிக்குமென்றாள்
தெவிட்டாத்தேன் கட்டியென்றாள்
அதைய பக்தியினால் வாங்கிப்
புத்தியினாலாராய்ந்தேன்,
தின்றேன் தெவிட்டவில்லை
தேன்மயக்கம் தீரவில்லை."

இந்த அருமையான மாம்பழத்தை என்னைப் போல் பக்தியினால் வாங்கிப் புத்தியினால் ஆராய்ந்து உள்ளம் உவக்கத் தின்னுபார்த்தால் உலகத்திலுள்ள துன்பமெல்லாம் இன்பமாக மாறிவிடும். துக்கமெல்லாம் சுகமாகத் தானே படும். அப்பொழுது ஆனந்தவாழ்வு தானே சித்திக்கும்.

"ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்த மென்று சொல்லு!
சந்தோஷம் சந்தோஷம்
சந்தோஷமென்று சிரி."

என்று ஆனந்தமேலீட்டினால் உலகத்தின் சுகதுக்க போகங்களைக்கண்டு சிரிக்கவரும். அப்படிச் சிரிக்க வந்து சிரித்தால் உலகெல்லாம் கூடச்சிரிக்கும். அழுதால், உலகம் கூட அழாது; தானே தான் அழுதுகொண்டிருக்க வேண்டும். உலகத்துக்கு "அவனவன் பாடு அவனோடே" யென்கிற திடபாவம் நன்றாகப் பதிந்துபோயிருக்கிற தென்பதை அப்பொழுது உணரலாம். இந்த அநுபவத்தில் தோணும் உள்ளத்துணர்வுதனை ஒரு ஸ்வானுபவச் செல்வர் பின்வருமாறு சொல்லிப் பாடியிருக்கிறார்:—

"சிரிசிரி வேணமட்டும்;
சிரிப்பாய்ச் சிரிச்சையேநீ;
சிரிப்பாய்ச்சிரிச்சு
முடிப்பானை தூக்கினையே!
தூக்கினபானை
தொப்பென் றுடைந் ததுவே!
பானை யுடைந்ததென்று
பாசாங்காய் யழுதையே;
அழுத அழுகை யெங்கே
ஆனந்தமேன் இப்பொழுது!
ஆறியமர்ந்து
ஆராய்ந்துபார்த்தாக்கால்
*அழுவதெல்லாம் பொய்யம்மா
சிரிப்பதெல்லாம் மெய்யம்மா
உள்ளதைச் சொன்னேனுன்
உண்மையதை யுணர்த்திட்டேன்."

* "All exhilaration is real, All depression is unreal."



இதை மேற்றிசை வித்வான் ஒருவர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:

Farewell the old, with sorrow fraught,
Farewell the joys that might have been,
Farewell the battles that we have fought,
Farewell the grain we did not glean;
Enough for me is the joy of doing in being
Enough for all is the unmixed joy of living.

—*The Song of Life.*

---

## THE STUDY OF WORDS: ON RESPECTABILITY.

"Respectable in the eighteenth century meant worthy of respect. Then it was applied to the "deserving poor" and respectability became their main virtue from the point of view of the rich.........Thus the word acquired a slightly patronising meaning.......But respectability as applied to people ... has lost even this amount of slighting commendation. It means no longer real but an imitation virtue. The respectable are those whom no one respects, not even themselves, for they have not the power of respecting anything for its own sake. They practise certain virtues, perhaps, but they deserve no credit for them, since they practise them only because other people think them virtues. They have made rules for themselves in life or rather they have not made them but have accepted them at second hand. In a great part of their outward conduct they behave like good men, but there is nothing of the beauty, the inspiration of goodness in their behaviour because there is no passion or conviction in it. The good man pursues his own line of conduct even though the world thinks evil because he himself is quick to hear the voice of conscience, knows that it is good for him. In most things he may agree with the world about what is right or wrong; but this agreement is a mere accident to him, whereas to the respectable it is the essence of virtue. To them, if the world chose to reverse the Ten Commandments, the new ones would have all the prestige and authority of the old. The moral commands and inhibitions are rules for them and if any one breaks them he must take the consequences; which means that he will no longer have the pleasure of their acquaintance, and that not because they really hate his evil doing, but because if they remained his friends they might be suspected of doing likewise. Saints do not judge men much by their outward conduct for they know that the mind is often mistranslated by that; but the repectable judge by nothing else, since their own natural conduct is everything to them, and, while they keep the rules they never ask themselves why they do so." —*The Times* (London).

---

## வாக்கு விசேஷார்த்த நிதானம்.

### மானம்:—தன்மானம், புறமானம், பேய்மானம்.

"மானம்" என்றால் என்ன?

தன்னிடத்தில் மதிப்புண்டாக நடந்து கொள்வது மானம். மன் என்றால் நினை, மதி யென்று அர்த்தமாகும். இது தன்மானம் (அகப்பொருள்) புறமானம் (புறப்பொருள்) பேய்மானம் (இரண்டுமற்றது) என மூவகைப் படும். தன்மானம் என்பது Self-respect. அதாவது தன்னைத்தான் மதித்தல். தற்பத சப்தம் எப்போதும் ஆத்மனையே (அறிவுமயமானவனையே)குறிக்கும். தான் அறிவுமயமாயிருப்பதாக அறிந்தவன் அந்த அறிவின் மஹிமையை அறிந்து அந்த அறிவு தானாய் நிற்பதன் பெருமையை உணரவல்லவனாவன். "தன்னையறிந்தவன் தலைவனாவன்" அவன் எத்தாலும் தலைமை பூண்டொழுகுவனாவன். ஜனங்களில் பிரதான புருஷன். அவனே யாவன், எனெனில் அவன் தன் மனதை யடக்கி யாளக்கற்றவன். அப்படிப்பட்ட பெறற்கரியபேறு பெற்ற புருஷனை உலகத்தில் எதுவும் பாதிக்காது. ஏனென்றால் அவன் தன்மதிப்பு என்கிற சிவகவசம் பூண்டவன். சிவகவசம் என்றால் எதை

யும் நன்மையதாக மாற்றும் சக்திவாய்ந்த கவசம் என்று அர்த்தம் கொள்ளும். சி:சிரேஷ்டம், வ:வன்மை, சக்தி. உலகத்திலுள்ள சக்திகளிலெல்லாம் சிரேஷ்டமான சக்திக்கு சிவசக்தி யென்று பேர். வாதவித்தையில் (ஒன்றையொன்றாக மாற்றும் வித்தையில்)இரும்பாகிய கரும்பொன்னைப் பத்திரைமாற்றுப்பைம்பொன்னாக்குவது சிரேஷ்டமான வித்தை. இது பூதபௌதிக தர்மத்தைச் சேர்ந்தது. தீமையெல்லாம் நன்மையாக மாற்றுவது சிவஜீவதர்மத்தைச்சேர்ந்தது. "இந்த தேஹமே தேவாலயம் என்று சொல்லப்பெறும். அதிலுள்ள ஜீவன் தானே கேவலச்சிவமாகும்."—என்பது உபநிஷதவாக்கியம். அறியாமையை நீக்கி அறிவோடிருந்துழைப்பாருக்கு பூர்வகர்மவாசனைகள் நீங்கப்பெற்ற விடத்தில் அறிவு தானே தானாயிருப்பது பிரத்தியக்ஷத்தில் விளங்கும். இதை சொந்த அனுபவத்தில் அறிந்து அறிவுருவாகி நிற்பவர்தானே தன் மானம் உடையவராவர். இது தான் மானம் என்ற பதத்திற்கு லக்ஷியார்த்தம் ஆகும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை.

இனி மானம் என்பதற்கு வாச்சியார்த்தம் என்னவென்று விசாரிப்போம். உலகநடையில் தன்மை, முன்னிலை, படர்க்கை யென்கிற வேற்றுமையின்றி வியவகாரம் கிடையாது. நான் என்று தன்னைச்சுட்டுவது தன்மைப் பெயர். நீ யென்று முன்னே நிற்பானைச்சுட்டுவது முன்னிலைப் பெயர். இவ்விரண்டுமின்றி மூன்றாவது ஸ்தானத்திலிருப்பானை அவன் என்று சுட்டுவது படர்க்கைப் பெயர். இதை நீங்கள் உங்கள் இலக்கணப்பாடத்தில் படித்திருப்பீர்களே! தான் பிறரால் மதிக்கப்பட நடந்து கொள்வது புறமானம். இதையே பஹுமானம் என்றும் வெகுமானம் என்றும் சொல்லுவதுண்டு.

திரிபுடிஸம்பந்தம்.

மதிப்பானும் மதிக்கப்படு பொருளும் தானாக நிற்பது தன்மானம். மதிப்பான் முன்னிலைப்பெயராகவும் மதிக்கப்படுபொருள் தன்மைப் பெயரினதாகவும் மதிப்பு இரண்டுக்குமுள்ள ஸம்பந்தமாகவும் இருப்பது பஹுமானம்.

வெகுமானம்.

பள்ளியிற் படிக்கும் நீங்கள் படித்த வித்தையை அதிகாரிகள் முன்னிலையில் காட்டி அவர்கள் அவ்வித்தையை மதிக்கப்பெறுவது வெகுமானம். நீங்கள் பெறும் பரிசுகள் அவர்களுடைய மதிப்புக்கு அறிகுறியான ஒருசின்னமே (அடையாளமே) யன்றிவேறல்ல. பள்ளியில் படிக்கும் பொழுது அதிகாரிகள் மதிப்புப்பெறல் (பரிசுபெறல்) எப்படி சிலாக்கியமோ அப்படியே உலகத்தில் ஜீவனம் நடத்தும் பொழுது உலகத்தார் (அப்படியென்றால், பெரியோர்) மதிப்புப் பெறல் உலகவாசிக்கு சிலாக்கியமாம். அரசன் ஜனசமஷ்டிக்குத்தலைவனாதலால் அவன் மதிப்புப்பெறல் பிரபல சிலாக்கியமாக எண்ணப்படுகிறது. ஆனால் "குடியுயிரக்கோனுயர!" என்கிற அரசியல் (ராஜ்யதர்மம்) செல்லாது தட்டுற்று நின்ற பொழுது அந்த 'அரசன்மதிப்பு' ஜனசமஷ்டியின் மதிப்புத்தானாக நில்லாது தவறிப் போகுமாதலால் அதற்கு மாற்றுக்குறைந்து போகின்றது. ஆங்கிலேயநாட்டில் பிரபுகுலதிலகராய் விளங்குவோர் இந்த ஜனசமஷ்டி மதிப்பையிழந்துவிட்டபடியால் அவர்களுடைய பிரபுப் பட்டம் மதிப்பற்றதாகி ஜனமதிப்பில் தாழ்மைப்பட்டுப் போய்விட்டது. ஆகையால் அப்பட்டங்களைத் தொலைத்துவிட வழிபார்க்கிறார்கள். ஜனசமஷ்டியின் மதிப்பிழந்த விடத்தில் 'அரசன் மதிப்பு' அவமதிப்புக்கு இலக்காயிருப்பது உலகானுபவத்தில் எங்கும் சகஜமாய்ப் பார்க்கலாம். ஜனசமஷ்டிக் குழைத்து ஜனமதிப்புப் பெற்றவர்கள் அரசன் அவமதிப்புக்கு ஆளாவதையும் பார்க்கலாம். இதுதேஹத்தின் உறுப்புகள் புரணிக்கொண்டது போலாகும்.



"சிரஸே பிரதானம்."

"எண்சாணுடம்புக்கும் சிரஸே பிரதானம்" என்பது வாஸ்தவம். ஆனால் பைத்தியக்காரன் பரமமுட்டாள் இவர்களுடைய விஷயத்தில் "சிரஸே பிரதானம்' என்பது பொய்த்துப் போகிறதில்லையா? அஃதேபோல் ஜனசமஷ்டிக்குப் (Body-Politic) பிரதானமாயிருக்கிற காரணத்தினால் தலைமை பூண்டு அரசன், தலைவன் என்று சிரேயஸ் பெற்றவர்களும் ஜனசமஷ்டியின் இயல்பறிந்து சமஷ்டி தர்மத்துக்கு விரோதமாக நடக்குங்கால் பைத்தியம் பிடித்தவன் போல் ஸ்வதர்மத்துக்கு விரோதமாய் நடப்பாராகிறார்கள்.

"தனிமரம் தோப்பாமா."

(சமஷ்டி-வியஷ்டி யென்று சொல்வது இரண்டும் பாவனையேயன்றி வேறல்ல. மரம்-வியஷ்டிபாவம். தோப்பு-சமஷ்டிபாவம்.) மனிதன் வியஷ்டிபாவத்தில் 'மரம்' என்றது போல் தனியனாக நிற்கிறான். அவனே சமஷ்டி பாவத்தில் தோப்பில் மரம் போல் ஜனசமஷ்டியில் அடங்கினவனாகிறான். மரங்கள் தானே தோப்பானாலும், "தனிமரம் தோப்பாமா?" என்பது நிஜம். தனிமரம் தோப்பாகமாட்டாது போல், மனிதனும் தனியனாக நின்றால் அவன் சமஷ்டிபாவத்தை யறிந்தவனாகமாட்டான். காரணகாரிய தோரணையறிந்து, காரணமும் காரியமும் ஒன்றானாலும் வியவகார திசையில் காரணத்தில் காரியமும் காரியத்தில் காரணமுமாகத் தொக்கி நிற்கும் விசேஷத்தை யனுபவபூர்வமாக அறியவேண்டும். மரத்தினாலான யானையில்,—

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை"—என்றபடி

காரணமாகிய மரத்தைக் காரியமாகிய மாமத யானை மறைத்தது. தச்சன் சாமர்த்தியத்தால் உண்டுபண்ணிய மாமதயானையின் நாமரூப லக்ஷணங்களை விட்டுப் பார்க்கில் காரணமாகிய மரம் பிரத்தியக்ஷப்படும். அப்பொழுது யானையின் நாமரூப குணவிசேஷங்கள் மரத்தில் மறைந்து கிடக்கும். அஃதே போல்,—

"பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்."

"பூதமுதலாகவே நாதபரியந்தமும்" உள்ள "பார்முதற் பூதங்கள்" பிரபஞ்ச காரணமாகிய காரணகாரணமாம் "பரத்தை" மறைத்தது. எப்பொழுது? வியவகார திசையில். அறிவு வியவகார வியாபாரங்களை விட்டொழிந்த 'ஒழிவு" என்னும் அவஸ்தையில் ஒடுங்கி, ஆதியில் உள்ளது எதுவோ அதற்கு ஸமமாகி மனத்தெளிவு என்னும் அருள் வெளியில் பாலொடு பால் சேர்ந்தாப் போல் கலந்து நிற்கையில், "ஆதியிலுள்ளான் அநாதிதானே" யென்றபடி "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்" ஆனந்த பூர்த்தியாகி உள்ள "பரத்தில்" அதிலிருந்துண்டாய்ப் பரிணமித்த "பார்முதற் பூதங்களெல்லாம்" மறைந்து நிற்கும். இதுதான் உண்மையில் உள்ளபடி தன்மைப் மெயராய் நிற்கும் பரம்பொருள். அது எங்கும் நிறைந்ததாய் "அஹம்அஸ்மி" என்று தானே தானாகத் தனிமுதலாய் நிற்கும். அந்த அவஸ்தையெலாங் கடந்த நிலையில் முன்னிலை, படர்க்கை யிரண்டுமில்லை; எல்லாம் ஒன்றுபட்டு ஒரு தன்மைப்பட்டு நிற்குமென்றபடி.

பாலபோத சமஷ்டிசேவை ஸாதனம்.

ஜனங்களுக்குள்ளும் சமஷ்டி-வியஷ்டி பாவம் இப்படியே ஏற்படும். இந்த உலகமெல்லாம் நவவியூகங்களாலும் நவசக்திகளாலும் ஆனதாயிருக்கிறது-இந்த ஒன்பது (ஒன்று குறையப் பத்து) கூட்டத்தில் (வியூகம்-சேனைக் கூட்டம்) அடங்காதது ஒன்றுமில்லை. இந்த ஒன்பது சக்திகளில் அடங்காத பிரபஞ்ச சக்தியுமில்லை. இவையெல்லாம் தானாய் இவைக்கு அதீதமாய் உள்ளும் புறமும் ஒன்றாகச் சமைந்து நிற்பது ஒன்று உண்டு. அதை ஒன்றென்றும் இரண்டென்றும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. "ஏகன் அனேகன்' என்றபடி ஒன்றாகவும் பலவாகவும் எண்களை பெ'ல்

லாம் தன்னுள் அடக்கிக்கொண்டு தான் எண்ணுக்கடங்காமல் அளவற்று, கரையற்று, திரையற்று எங்கும் நிறைந்து ஏகவெளியாயிருப்பது அது. அதை தத் என்றும் ஸத் என்றும் ஓம் என்றும் பெரியோர் சொல்லிப் போற்றி யிருக்கிறார்கள்.

அந்த தத்பொருளை (அது என்றதன் அர்த்தத்தை) அறிந்து அதுநாமாதலே ஜன்ம சாபல்யமென்பர். ஜன்மசாபல்யமென்றால் ஜன்மமெடுத்ததற்கு (பிறந்ததற்குப்பலன்) என்று அர்த்தமாகும்.

"கற்றதனாலான பயன்."

கற்கும் கல்விக்கெல்லாம் கடைப்பிடியாயுள்ள பயன் அதுவே: அதை அறிந்துதொழுவதே "கற்றதனாலான பயன்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் மற்ற எல்லா ரிஷிகளும் அவதாரங்களும் சொல்லி யிருக்கக் காணலாம்.

அந்த மேலான அனுபவத்தைப்பெற வழியென்ன? அதுதான் "ஸமஷ்டி சேவை ஸாதனம்" என்று சொல்வது. அதாவது, வியஷ்டிபாவனாகிய நாம் சமஷ்டிபாவனா யுள்ளவர்களைத்தொழுது ஸமஷ்டி சேவைக்கருகரும் அதிகாரிகளுமாகி அதையே ஸாதனமாக (உய்யும் வழியாக) க்கொண்டு இகபரமிரண்டிலும் கடைத்தேறுதலாம்.

பாலர் திருவிழாக் கொண்டாடுவதேன்?

இதற்கு அரசர்பிரதிநிதியாம் லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் பிறந்தநாளை பாலர் திருவிழாவாகக் கொண்டாடுவானேன்? என்று கேட்கலாம். அவர் அரசர் பிரதிநிதியாகவிருக்கும் முறையில் இராஜ்ஜியத் தலைவராவர். அந்த அதிகார தோரணையில் அவர் டில்லிப்பிரவேசம் செய்தபொழுது வெடிகுண்டினால் அபாயமுற்று தோளெலும்பு தெரியத் தசைகிழிந்தும் அவர் சமஷ்டிபாவனாசித்தம் கலையாது வியஷ்டி பாவத்தைமறந்து குழந்தை-மனமுள்ளவராய் குழந்தைகளையேபற்றிச் சிந்தித்து அதனால்தானும் சுகிர்தமடைந்து தேசத்துக்கும் சுகிர்தம் இயற்றினாராதலாலும், பொறுமையே பூஷணமாக எல்லாத் தீங்கையும் பொறுத்து அவற்றையெல்லாம், நன்மையாக மாற்றினாராதலாலும், அவரைக்குழந்தைகள் தமக்கு நல்லுதாரணமாகக்கொண்டு வழிபடல் உத்தமமாம். "அரசனெவ்வழி குடிகளெவ்வழி" யென்றிருப்பதால் அவர் அரசபதவியிலிருந்துகாட்டிய வழியைக் குழந்தைகளெல்லாம் "விளையும் பயிர்முளையிலே" யென்றபடி இளமையிற்றானே கடைப்பிடியாகப்பிடித்து ஒழுகல் வேண்டுமென்பதே ஸத்துக்கள் எல்லாருடைய கருத்தாம்.

ஜகத்ஜாலயானை, அல்லது, ஸமஷ்டியானை.

இதற்கு அனுகுணமாக குழந்தைகள் ஸமஷ்டி ஸேவைஸாதனத்தின் உள்மர்மத்தை யுணரக்கூடியதாக ஸமஷ்டியானை யொன்று பெரியோர்களுடைய கற்பிதமாயுள்ளதை யங்கீகரித்து அதில் க்ஷேத்திரமாதாவாகிய இந்தியாவிருக்கும் நிலையையும் கற்பிதமாகவேயமைத்து கற்பனாலங்காரமான சித்திரவிசித்திரமொன்று நிர்மித்துள்ளோம். அதைப் பல்லாயிரவர்கூடினும் கண்டு மகிழும்படி ஜாலவிளக்கினால் பெரிதாய்க் காட்டக்கூடியதாகச் சித்திர மெடுத்து (Lantern slide) அமைத்திருக்கிறோம். அது நவசக்தியாலானது. தசமன் என்கிறபத்தாவது சக்தி யானைப்பாகனாக அமையப்பெற்றிருக்கிறது. இந்த ஜகத்ஜால யானையின் மீது "ஆரியப்ரக்ஞாபாரமிதா" என்னும் ஸத்யானந்த சாந்தஸ்வரூபிணி விக்ரஹம் ஆதியில் புத்தருக்கு தரிசனமளித்த உருவத்தோடு விளங்க அமைக்கப்பெற்றிருக்கிறது. அதன் திருவாசி ஸ்தம்பங்களில் "அம்மா, தாயே! காப்பாற்று" என்னும் குழந்தையினுடைய மழலைச்சொல் அக்ஷரங்களால் அமைக்கப்பெற்றிருக்கிறது. அதன் கருப்பொருள்:—

"ஜனத்தைத மறைத்த தஜ்ஜகத் ஜாலயானை
ஜனத்தில் மறைந்த தஜ்ஜகத் ஜாலயானை



மனத்தை மறைத்த தும்மஹத் தத்துவசாக்ஷி
மனத்தில் மறைந்த தும்மஹத் தத்துவசாக்ஷி!"

வியஷ்டி பாவனரான நவவியூகாத்மகஜனரை அந்த ஜகத் ஜாலயானை மறைத்தது. வியஷ்டி பாவனராகிய அவர்கள் சமஷ்டி பாவனத்தால் ஒன்று பட்டிசைந்த பொழுதுண்டான அந்த ஜகத்ஜாலயானைதானே அவர்கள் வியஷ்டிபாவனரானகாலத்தில் அவர்கள் ஹிருதயமத்தியில் அந்தர்த்தானமாய் மறைந்தது. அப்படியே வியஷ்டி பாவமனத்தை மறைத்ததும் அந்த மனத்தில்தானே அந்தர்த்தானமாய் மறைந்ததும் மஹத் என்று சொல்லப்பட்ட பெரிய தத்துவத்துக்கு சாக்ஷியா யமைந்துள்ள உள்ளறிவு.

பே'மானம்.

இதுவரையில் தன்மானம், புறமானம் என்னுமிரண்டையும் பற்றிச் சொன்னோம், இனி பே'மானம் என்பதைப்பற்றிச் சிறிது சொல்லி முடிப்போம். பே'மானி யென்பது பேய்மானி என்பதின் விகாரம். பேய்க்கு எப்படி சொந்தமான ரூபமின்றி அகப்பட்டதைப் பற்றிக் கொண்டு பிழைக்கவேண்டியதோ, அப்படியே பே'மானியும் தனக்குச் சொந்தமான மானம், மதிப்பு ஒன்று மின்றி, அவனைச்சுற்றியுள்ளார் சிலாக்கிய பாக்கியமாகச் சொல்வதையே சொந்த ஆராய்ச்சியின்றித் தானும் அப்படியே நினைத்து ஸ்திரபுத்தியின்றியும் இஷ்டசித்தியின்றியும் பேயைப்போல் பிறர் சொல்வதை யண்டிப் பிழைக்கும் சித்தவிருத்தியுடையோனாய் ஜடபாவம் மதர்த்துத் திரிவோனாவன். இவனுக்குத் தன்மானம் இல்லையால் பிறரால் மதிக்கப்படும் இரண்டாவதான பஹுமானமும் இல்லை. ஆனால் அவரவர் சொல்லுக்கிணங்கி ஸம்பிரதாயத்தை யனுசரித்து செக்கில் கட்டிய மாடுபோல் அவன் வாழ்நாளை உண்டுடுத்துறங்குவதில் கழித்து பிறப்பதும் இறப்பதும், இறப்பதும் பிறப்பதுமாய் ஜன்ம சக்கரத்தி லகப்பட்டுச் சுழன்று வருவான். இவனுடைய நிலை இவ்வுலகில் இப்படிப்பட்டதென்பதை லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் நன்றாக எழுதியிருக்கிறதை அப்படியே இங்கிலீஷில் எடுத்து முகப்பில் அச்சிட்டிருக்கிறோம். இவன் தான் பே'மானி யெனப்படுவான்.

"ஆடிக்காற்றில் அகப்பட்டதுரும்பு."

அபிமானம், அபிமானி யென்னும் சப்தம் ஒரு எண்ணத்தால் அதிலுள்ள பற்றுதலால் கட்டுப்பட்டிருக்கும் ஸ்திதியைக் குறிக்கும். அதில் மனப்பற்றுக் காரணமாயுண்டாகும் ஸ்திரத்தன்மை யொன்றுண்டு. பே'மானிக்கு அதுவுமில்லை. ஆடிக்காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அவன் மனம் அல்லற்பட்டலையும்.

## READINGS FROM THE BOOK OF NATURE.
## VOLCANOES, HOT SPRINGS AND HOT VAPOURS.
## A LESSON IN NATURE STUDY.
### பிரகிருதி வித்யாம்சம்.

எரிமலைகள், வெந்நீர் ஊற்றுகள், ஆவிக்குண்டங்கள் முதலியன.

நாம் வசிக்கும் இப்பூமண்டலத்தில் உள்ள அதிக அற்புதத்தையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கக்கூடிய அனேக விதமான விசித்திரங்களில் எரிமலைகள் முதலியவை யாவராலும் வியக்கத்தக்கவைகளா யிருக்கின்றன. எரிமலைகள் நமது இந்தியாவில் கிடையா. ஆனது பற்றியே அவைகளின் காரண காரியங்களை அனேகர் அறியார்கள். இவ்விசயச் சிருஷ்டியை யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டே இதை இவ்விடத்தில் விவரமாய் எழுதலாயிற்று.

எரிமலைகள்—பேர்விசேஷம்.

எரிமலைகளென்பவை: பூமியின் உட்புறத்தில் சில விடங்களில் அதிக உஷ்ணத்தால் உருகி நீராயிருக்கும் கற்குழம்பு, சாம்பல்,

நீராவி, புகை முதலானவைகளைத் தங்கள் சிகர மூலியமாய் வெளியே கக்கும் குணமுள்ள மலைகள். இவ்வித மலைகளுக்கு இங்கிலீஷ் பாஷையில் "வல்கானோ" (Volcano) என்று பெயர். ஐரோப்பா கண்டத்தில் இத்தாலியா தேசத்திற்கு தக்ஷிணத்தில் உள்ள சிசிலித்தீவில் "எட்னு" என்னும் ஓர் எரிமலை உண்டு. இம்மலையின் உட்புறத்தில் பூர்வீக உரோமர்களின் அக்கினி பகவானாகிய "வல்கன்" (Vulcan) என்பவருடைய உலைக்கூடமிருந்ததாகவும், அவர் உலைமூட்டியபோதெல்லாம் அந்த மலை நெருப்பைக் கக்கியதாகவும் அவ்விடத்திய பூர்வீக ஜனங்கள் அபிப்பிராயப் பட்டிருந்தார்கள். இது காரணம்பற்றியே எரிமலைகளுக் கெல்லாம் 'வல்கானோ' என்று பெயர் வரலாயிற்று.

அவற்றின் உற்பத்தி.

இவ்வுலகமானது ஒரு காலத்தில் சூரியன் இப்போது எவ்வளவு உஷ்ணமாயிருக்கிறதோ அவ்வளவு உஷ்ணமாயிருந்ததாகவும், நாளாவட்டத்தில் பூமியின்மேற்புறம் குளிர்ச்சியடைந்துகொண்டு வருவதாகவும் புவன உறுப்பிலக்கண சாஸ்திரிகள் சிலர் சொல்லுகிறார்கள். இப்போது அங்கங்கே பல விடங்களில் காணப்படும் அகோரமான நெருப்பைக் கக்கும் எரிமலைகளும், வெந்நீர் ஊற்றுகளுமே பூமியின் உட்புறத்தில் இருக்கும் உஷ்ணத்திற்கு அடையாளமாகக் காணப் படுகின்றன. மேலும் நாம் பூமியின் அடிப்புறத்தில் போகப்போக அதிக வெப்பமாயிருக்கு மென்பது சுரங்கங்களில் வேலை செய்து அப்பியாசப் பட்டவர்கள் சொல்ல நன்கே விளங்கும். இவ்வெரிமலைகளல்லாது பூமிக்குள் இருக்கும் விசித்திரக் காட்சிகளை யூகித்தறிந்துகொள்ள வேறு முக்கியமான சாதனங்கள் கிடையா. எரிமலையானது சாதாரணமாய் குவிந்த வடிவமுள்ளதாயிருக்கும். அதன் குவிந்த சிகரத்தில் கிண்ணம் போன்றதாய் அகன்ற வாயையுடைய கிடங்கு இருக்கும் இதற்கு இங்கிலீஷ் பாஷையில் "கிரேடர்" என்று பெயர். இதன் அடிப்புறத்தில் தான் பூமியின் உட்புறத்தில் உள்ள உஷ்ணத்தால் வெந்துருகிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் பாகத்தையும் எரிமலையின் உலைவாயையும் சேர்த்து வைக்கும் துவாரம் இருக்கிறது. இத்துவாரத்தின் வழியாய் உருகிய கற்குழம்பு, பெரிய குண்டாங்கற்கள், முதலியவை வெளியே கொண்டுவரப்படுகின்றன. சில எரிமலைகள் முதலில் சாமானிய தரையாயிருந்து பிற்பாடு நாளாவிருத்தியில் உலைவாயின் வழியாய் அப்போதைக்கப்போது கக்கப்படும் கற்குழம்பு முதலியவைகள் இறுகிப் பாறைகளாவதால் மலைபோன்ற உருவங்களை அடைகின்றன. சில 10 அல்லது 15 அடி குறுக்களவுள்ள சாமானியக் குன்றுகளாயிருக்கின்றன. எரிமலைகளில் பெரியவைகளோ 3 அல்லது 4 மைல் உயரமுள்ளவைகளாய் அக்கினிகக்கும் பெரிய உலைவாயும் அதைச்சுற்றிலும் அனேகம் சிறிய உலைத்துவாரங்களும் பிளவுகளும் உடையனவாயிருக்கும்.

அவைகளிலிருந்து வெளிப்படும் வஸ்துக்கள்.

எரிமலைகளிலிருந்து வெளியே கக்கப்படும் வஸ்துக்கள் : (1) ஆவி, புகை ; (2) 'லாவா' (lava) என்று சொல்லப்படும் கற்பாறைகள் உருகிய அக்கினி நீர் ; (3) பெரும்பாறைத் துண்டுகள் ; (4) மண் தூசு முதலிய கலந்த உஷ்ணநீர் ; (5) உருகிய உலோகக் களிம்புகள், இவைகளே. சில மலைகள் மண்ணைத் தாரை தாரையாய்க் கக்குவது முண்டு. எரிமலைகளுக்கு பாதாளத்திலிருக்கும் பெரும் பாறைகளை உடைத்துத் தகர்த்தும், நீராக்கியும், அதிக பளுவான வஸ்துக்களை வெளியே அதிக உயரத்தில் வீசி எறியவுந் தகுந்த வலிமை எப்படி உண்டாகிறது ? பூமியின் உட்புறத்தில் தண்ணீர் ஏது ? என்று சந்தேகங்கள் உண்டாகக்கூடும். அவைகளைக் குறித்துச் சற்றே சுருக்கமாய்ச் சொல்லுவோம். பூகோளத்தின் உள்ளே இருக்கும் அதிக வெப்பத்தினாலேயே அக்கினி மலை வெடிப்புகள் உண்டாவதாகத் தோற்றவில்லை. அவ்வெடிப்புகளுண்டானது, பூமியின் மேற்புறத்திலிருந்து ஜலமானது ஏராளமாய் உட்புறத்தில் கொதிப்புக்கொண்டிருக்கும் பாகத்திற்குப் போய்ச் சேருவதினாலேயே என்பது அனேக பண்டிதர்களின் கொள்கை. சமுத்திரங்களின் அடித்தரையும், அனேகம் ஏரிகள், நதிகள் முதலியவற்றின் தரைமட்டமும் துவாரமுள்ளவைகளா யிருப்பதாலும், வருஷா வருஷம் பெய்யும் மழைகளின் நீர் நிலத்தில் உள்ள துவாரங்களின் வழியாய் இறங்குவதாலும், அக்கினி மலைகளுக்கு அடியில் அமைந்திருக்கும் நீண்ட பெரிய பிலங்களில் அதிக தண்ணீர் வந்து சேருகின்றது. தண்ணீரானது அதை விட்டு வெளிப்பட வகையில்லாமல் வெகு சீக்கிரத்தில் கொதிப்புக்கொண்டு நீராவியாய் மாறும். மாறினதும், போக்கிடமில்லாமல் மேலுக்கு மேல் அதிக சூடுகொள்ளவே, ஆவியானது பரவ வழியில்லாமல் அக்கினி குண்டத்தின் நாற்புறமும் அதிவேகத்துடன் தாக்க மேற்புறத்தில் பூமியை நோக்கிய பாகமானது அனேகவித இடி முழக்கம், குமுறுதல், கிடுகிடுத்தல் முதலான சத்தங்களோடு வெடிக்கும். இச்சமயங்களில் உண்டாகும் பூமியின் அதிர்ச்சிக்கு பூகம்பம் என்று பெயர். (இதைக்குறித்த விஷயங்களை பின்னால் பிரத்தியேகமாய் எழுதுவோம்.) ஆ ! இதென்ன ஆச்சரியம் ! சாமானியமான நீராவிக்கு அதிக கனமாயுள்ள பூமியைப் பிளக்கவும், பென்னம் பெரிய பாறுங்கற்களால் அமைந்துள்ள மலைகளைத் தகர்த்துச் சின்னாபின்னமாக்கவும் கூடிய வலிமையுண்டோ என சிலர் சந்தேகிக்கக்கூடும். ஆம், சந்தேகமுண்டாவது சகஜமே. நாற்பது அல்லது ஐம்பது பூகாகிருதியுள்ள வண்டிகள் சேர்ந்த நமதுரயில் வண்டித் தொடர்கள் ஆயிரக் கணக்கான மனிதர்களையும், மிருகங்களையும், உத்திரங்கள், மூட்டைகள் முதலான பலவகை பாரமுள்ள பண்டங்களையும் வெகு சுலபமாய் இழுத்துக்கொண்டு போவது எதின் வலிமையால் என்று அவர்கள் சற்றே நிதானித்து யோசித்துப் பார்த்தால் சந்தேகம் ஒரு நொடிப்பொழுதில் தீரும். அவைகள் இழுக்கப்படுவது இஞ்ஜின் வண்டியென்று சொல்லப்படும் முதல்வண்டியிலிருக்கும் ஒரு சிறு தொட்டியில் நீர் வார்த்து அதன் கீழ் இருக்கும் உலையின் உதவியால் உற்பத்தியான நீராவியாலல்லவோ? இவ்வளவு கொஞ்சமான நீராவிக்கேஇவ்வளவுவேகமிருக்குமானால்பூமிக்கடியில் பெரிய தடாகங்கள் போன்று விசாலமாயுள்ள அக்கினி குண்டங்களில் தண்ணீர் வந்து சேரும்போது அதனால் உண்டாகும் அபரிமிதமான நீராவியின் வலிமையைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமோ? இது நிற்க.



எரிமலைக் காட்சிகள்.

நீராவியின் அதிவேகத்தால் பூமியின் மேற்புறம் வெடிக்குமென்று சொன்னோமே. வெடித்தவுடன் நீராவிப் படலமானது மேகத்தையொத்து வெடிப்பாலமைந்த உலைவாயின் வழியாய் ஆகாயத்தில் அதிக உன்னதமாய்ச் சுழன்றுகொண்டு கிளம்பிச்செல்லும். சில சமயங்களில் இப்படி எழும் ஆவியானது மலைச்சிகரத்திற்கு மேல் 1 மைல் அல்லது 2 மைல் வரையில் ஒரே ஸ்தம்பாகாரமாய் எழும்பி நிற்கும். இத்துடன் சில சமயங்களில் தூசு தும்புகள் ஏராளமாய் வெளியே கொண்டு வரப்படுகிறபடியால் சுற்றுப்பக்கத்தில் வெகு தூரம் வரையில் சூரிய கிரணங்களே தென்படாதபடி புகை சூழ்வது போல் கவிழ்ந்து இருள் மூடச்செய்யும். ஆவி நீங்கவே அதனடியில் உலைபோல் கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீர் கலந்த உருகிய கற்குழம்பானது அதிவேகத்துடன் பக்கங்களில் பலமில்லாத பாகங்களைப் பிளந்துகொண்டு பெரிய உலைவாயின் வாயிலாக அக்கினிமழை பொழிவது போலவும், கல்மாரி, மண்மாரி பொழிவது போலவும், சரமாரியாய்ப் பெரும்

பாறை, சாம்பல், மண் முதலியவற்றுடன் கலந்து வீசி அடிக்கும். மேலும் கற்குழம்பானது உலைவாயின் விளிம்பின் வழியாய் அபரிமிதமாய் வந்து நாலாபக்கத்திலும் சிற்றருவிகள் போலும், இரண்டு மூன்று நதிகள் சேர்ந்து பெருக்கெடுத்துப் பெருவெள்ளமாய்க்கரைபுரண்டு ஓடுவது போலும் உருக்கிவார்த்த இரும்புபோல் பளபளவென்று மின்னிக்கொண்டு, நெருப்புமயமான நீராக அதிதீவிரகதியுடன் செல்லும். இதுவுமல்லாமல் மலையிலிருந்து இழிந்த ஜலம் மண்ணுடனும் சாம்பலுடனும் கலந்து மண்ணாறாக ஒரு பக்கம் ஓடும். கற்குழம்பு வெள்ளமானது ஆற ஆற மந்தகதியடையும். இவ்வெள்ளத்திலிருந்து எழும் ஆவியும் உலைவாய்களிலிருந்து குமுறும் ஆவியும் ஆகாயத்தை அளாவி எல்லாவற்றையும் ஒரே மறைப்பாக மூடிவிடும். இதனடுவில் மலையின் பிளப்பிலிருந்து செவ்வென்று சிவக்கக் காய்ந்த அக்கினி மயமான குண்டாங்கற்களும், பழுக்கக் காய்ந்து பளீர் என்று மின்னும் உலோகக் களிம்புகளும், பெரிய கல்துண்டுகளும், உலைவாயின் வழியாய் உயர வீசப்பட்டு, சில மறுபடியும் பிளப்பில் விழுந்தும், சில மலைச்சாரில் விழுந்து சரிந்து ஓடியும், சில மலையின் சுற்றுப்புறத்திலுள்ள நாட்டுப் புறங்களில் விழுந்தும், இது என்ன ஊழிகாலந்தானோ என்று எல்லோரும் திகைத்துத் தவிக்கும்படி செய்யும். கற்குழம்பு வெள்ளமானது மலையைச் சுற்றியிருக்கும் பரப்புகளையும், துரவுகளையும், ஏரிகளையும், ஆறுகளையும், ஒரே வெள்ளக்காடாக்கி எல்லாவற்றையும் பாழாக்கிவிடும். ஆடுமாடுகள் முதலாகிய விலங்கினங்களில் இவ்வெள்ளத்தில் அகப்பட்டு மாய்பவை அனேகம். சுற்றுப்பக்கத்துக் கிராமங்கள், வீடுவாசல்கள் முதலானவைகள் அக்காலத்தில் விசேஷமாய் உண்டாகும் பூகம்பங்களால் இடிந்து நொறுக்குண்டு தீப்பட்டு எரிந்து நொடிப்பொழுதில் நீறாகிவிடும். இச்சமயங்களில் வீடு இடிந்து விழுவதாலும், இன்னும் மேலே சொல்லிய மற்ற சங்கடங்களாலும் மாளும் ஜனங்களுக்குக் கணக்கில்லை. எரிமலைகளால் உண்டாகும் கோரமான கேட்டையும் நஷ்டங்களையும், உலக அந்தியத்தில் உண்டாகும் என்று சொல்லப்படும் பிரளயத்திற்குச் சமானமாகவே சொல்லலாம். இத்தாலியா தேசத்தில் [1] 'நேபில்ஸ்' நகரையடுத்த[2] 'விசூவியஸ்' எரிமலையானது 1872-ம் வருஷம் வெடித்து அக்கினி கக்கியபோது பெருக்கெடுத்த அக்கினிக் கற்குழம்பானது ஏறக்குறைய 20-அடி ஆழமும் 3,000-அடி அகலமுமாய்ப் பரவி அனேகம் கிராமங்களைப் பாழாக்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது அம்மலையிலிருந்து கிளம்பிய கற்கள் சுமார் 4,000-அடிவரை மேலே சென்றனவாம்.

### உலகத்திலுள்ள எரிமலைகள்.

இதுவரையில் உலகத்தில் சற்றேறக்குறைய 3000 எரிமலைகள் வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நமது இந்தியாவுக்கு அதிக சமீபத்தில் உள்ள எரிமலை, [3] வங்காளக்குடாக் கடலில் [4] 'அந்தமான்' தீவுகளுக்குக் கிழக்கே இருக்கும் 'பாரன் ஐலண்டு' (Barren Island) என்று சொல்லப்படும் தீவிலுள்ள மலையே. 'பாழ்நிலத்தீவு' என்று பொருள்படும் பெயரையுடைய இந்தத் தீவை சமுத்திர மத்தியின்மேலே கிளம்பியிருக்கும் ஒரு எரிமலை என்றே சொல்லலாம். இம்மலையின் உயரம் 980 அடி. இதன் சிகரத்திலிருந்து அப்போதைக்கப்போது அக்கினிக்கற்களும், குடுண்ட கந்தக ஆவிப்படலங்களும் கக்கப்படுகின்றன.

### மிகவும் உன்னதமான எரிமலை.

[5] தென் அமெரிக்காவில், [6] 'ஈக்குவடோர்' மாகாணத்தில், [7] நிரட்சரேகைக்கு அருகாமையில், [8] 'ஆண்டிஸ்' மலைத்தொடரிலுள்ள [9] 'கொட்டப்பாக்ஸி' என்னும் மலையே உலகத்திலுள்ள எரிமலைகளிலெல்லாம் அதிக உன்னதமும், கோரமுமானது. இதன் உயரம் 19,000 அடி; அதாவது ஏறக்குறைய நான்கு மைல் இருக்கும். இது உலகத்தார்க்குத் தெரிந்தது முதல் அக்கினி கக்கினவண்ணமாகவே இருக்கிறது. இதில் உண்டான வெடிப்பில் ஒரு காலத்தில் 200-டன் எடை அல்லது 2,732 கன அடியுள்ள ஒரு பெரும் பாறைத்துண்டு வீசி எறியப்பட்டு 9-மைல் தூரம்போய் விழுந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சுலபமாய்த் தெரிந்துகொள்ளும்படியாய் இந்தக் கல்லின் பாரம், 14-அடி நீளம், 13 அடி அகலம், 14 அடி கனமுள்ள ஒரு பாறைக்குச்சரியானதாகஇருப்பதென்று சொல்லலாம்.

1 Naples.
2 Mount VeSuvius.
3 Bay of Bengal.
4 The Andaman Islands.
5 South America.
6 Ecuador.
7 Equator.
8 The Andes.
9 Cotopaxi



### மிக விசாலமானது.

உலகத்தில் உள்ள எரிமலைகளிலெல்லாம் மிக விசாலமானது வடபசிபிக் மகாசமுத்திரத்தில் [1] 'ஸாண்ட்விட்ச்' தீவுகளில் ஒன்றாகிய [2] 'ஹவேய்' தீவிலுள்ள [3] கிலெளயிர் மலை. இதின் அக்கினி கக்கும் உலைவாயானது 9-மைல் சுற்றளவும், சற்றேறக்குறைய $1\frac{1}{2}$-சதுர மைல் விஸ்தீரணப் பரப்புமுடையது. ததும்பிக் கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் அக்கினி நீரால் நிறைந்துள்ளது. பார்ப்பதற்கு ஒரு அக்கினிக்கடல்போன்று விளங்கும்.

### எக்லா எரிமலை.

இங்கிலாந்துக்கு சற்றே வடமேற்காய் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களுக்கு மத்தியில் 'டென்மார்க்கு' தேசத்து அரசன் ஆட்சிக்குள் அமைந்த 'ஐஸ்லாண்டு' என்ற ஒரு தீவு இருக்கிறது. இதில் எரிமலைகள் அனேகம் உள. அவற்றுள் முக்கியமானவை 'எக்லா,' 'ஸ்காப்டார் ஜோகல்,' என்ற இரண்டு மலைகள். எக்லா மலையானது ஏறக்குறைய 5,000-அடி உயரமும், 12-மைல் சுற்றளவுமுடையது. இம்மலையில் 1845-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ம் தேதி கொதிப்பெடுத்தபோது வெளியே விசிறி எறியப்பட்ட சாம்பலானது இத்தீவிற்கு 600-மைல்களுக்கப்பால் இருக்கும் [1] 'ஆர்க்னி' தீவுகளில் போய் விழுந்ததாம். அந்த மாதம் 15-ம் தேதி மறுபடியும் எடுத்த கொதிப்பில் கற்குழம்பு வெள்ளம் ஏராளமாய் மலையினின்றும் வெளிப்பட்டு பிரவாகித்தது. மலையிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் இந்த வெள்ளம், 1-மைல் அகலமும், 40-முதல் 50-அடிவரையில் ஆழமுமுள்ளதாக விருந்தது. 1783-ம் வருஷம் 'ஸ்காப்டார்' மலை பொங்கத் தலைப்பட்டு இரண்டு வருஷகாலம் ஓயாமல் அக்கினி மழை பொழிந்தது. இப்படியாகப் பொழிந்த கற்குழம்பு வெள்ளமானது 11-வருஷங்கள் வரையில் புகைந்துகொண்டிருந்ததாம். இந்த வெள்ளம் இரண்டு ஆறாகப் பெருக்கெடுத்து ஒரு ஆறு 50-மைல் நீளமும், 12-மைல் அகலமுமுடையதாக ஓடியதாம். மற்றொரு ஆறோ 40-மைல் நீளமும், 7-மைல் விஸ்தீர்ணமுமுள்ளதாயிருந்தது. இவைகள் 100-முதற்கொண்டு 600-அடி ஆழமுள்ளவைகளாயிருந்தன. இம்மலைக் கொதிப்பினால் உண்டான கேடு மிகுதி. புல் பூண்டு முதலியவை யற்றுப்போனதால் ஆடுமாடு முதலிய மிருகசாதிகள் அனேகமாய் மாண்டன. இது வல்லாமல் கற்குழம்பு முதலியவைகளால் உயிர் விட்டவை அனேகம். மலையிலிருந்து வந்த கந்தகப்புகை முதலியவற்றால் காற்றுக்கெட்டு துர்க்கந்த முண்டாய் அனேக ஜீவன்களை மாய்த்துவிட்டது. சமுத்திர ஜலமும் கரைக் கருகாமையில் கெட்டிருந்தபடியால் அவ்விடங்களில் மீன்களின் சஞ்சாரமேகொஞ்சகாலம் அற்றுப்போயிற்று. ஆகவே மனிதனுக்கு அவ்விடத்தில் முக்கிய ஆகாரமாகிய மீனும் கிடைப்பதரிதாய் விட்டது. பானம் செய்வதற்கு சுத்த ஜலமுமில்லாமலிருந்தது. இவ்வாறாக விஷக்காற்றாலும், விஷங்கொண்ட தண்ணீராலும், க்ஷாமத்தினாலும், இத்தீவிலுள்ள 50,000 ஜனங்களில் ஏறக்குறைய 9,000 பேர் இந்த இரண்டு வருஷங்களில் இறந்துபோய் விட்டார்கள்.

1 The Sandwich Island.
2 Hawaii Island.
3 Kilauer.

1 The Orkney Islasnd.

## வேடிப்புக்கண்டு சமுத்திரத்தில் மூழ்கிப்போன எரிமலை.

நமது இந்தியாவுக்கு தென்கிழக்குப் பாகத்திலிருக்கும் [1] 'சுமாத்திரா' தீவுக்கும், ஜாவா' தீவுக்கும் இடையே உள்ள [2] 'சுந்தா' ஜலசந்தியில [3] 'காகடோவா' என்ற ஒரு எரிமலை உண்டு. இதில் 1883-ம் வருஷத்தில் ஒரு பெரு வெடிப்புக்கண்டு பூகம்பமும் அதிகமாய் உண்டாயிற்று. அதன் அதிர்ச்சியால் அவ்வெரிமலை அனேகமாய் சமுத்திரத்தில் முழுகிப் போய்விட்டது. அத்தருணத்தில் உண்டான பேரொலியோ அனேக மைல் தூரம் வரையில் கேட்டதாம். சமுத்திரத்தில் உண்டான குழப்பமும் பேரலைகளும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் எட்டியதாம். அப்போது உண்டான பிரசண்ட மாருதமோ உலகமுழுதும் ஒரு சுற்று சுற்றி வந்ததாம். தற்காலத்திலுண்டான எரிமலைக் கொதிப்புகளிலெல்லாம் மிகவும் கொடியது இதுவே. இப்பெருங் கேட்டால்' ஏறக்குறைய 30,000 ஜனங்கள் வரையில் மாண்டார்கள். இந்த சமயத்தில் சில தினங்கள் வரையில் அனேகமாய் எல்லா தேசங்களிலும் சூரியன் ஒளி மழுங்கிச் சற்றே பசுமை நிறத்துடன் பிரகாசிக்கக் கண்டிருக்கலாம். அப்போது இந்நாட்டிலும் சூரியன் பச்சை நிறமாகப் பிரகாசித்ததை நோட்டமிட்டது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. சூரியனை அப்போது கண்கூசாமல் பார்க்கும்படியாயிருந்தது. இதற்குக் காரணம் மேற்சொன்ன எரிமலையின் கொதிப்பினால் மேலே வீசப்பட்டு ஆகாயத்தைக் கவிழ்ந்துகொண்டிருந்த புகை, தூசு முதலிய இவைகளின் கூட்டம் சூரியனை ஒருவாறு மறைத்ததினாலேயே.

## மஹாபிரமாதமான வேடிப்புக்கண்ட எரிமலை.

இதுவரையில் உண்டான எரிமலைவெடிப்புகளிலெல்லாம் பிரமாதமாயும், அகோரமாயும், சாம்பலையும் மண்ணையும் கக்கினது வடஅமெரிக்காவில், 'நிக்கரகுவா' மாகாணத்தில் உள்ள [4] 'காஸிகியூனு' என்னும் எரிமலையே. இது 26-வருஷங்கள் ஓய்ந்திருந்து கடைசியாய் 1835-ம் வருஷத்தில் ஒரு பயங்கரமான வெடிப்பெடுத்து நெருப்பைக் கக்கத்தலைப்பட்டது. இச்சமயத்தில் இம்மலையுள்ளிருந்து வந்து வீழ்ந்த சாம்பலுக்கும் மண்ணிற்கும் அளவில்லை. இவைகள் மேக மண்டலத்தை எட்டி வானத்தை நன்றாய்க் கவிழ்ந்து கொண்டபடியால் நல்ல நடுப்பகலிற் கூட சூரியரஸ்மி கொஞ்சமேனும் நிலத்தில் படாமல மலையைச்சுற்றி சற்றேறக்குறைய 35-மைல் விஸ்தீரணத்திற்கு காரிருள் சூழ்ந்து பிரளயகால அந்தகாரம்போல் கவிழ்ந்துகொண்டது. இந்த மண்மாரி, மலையைச்சுற்றி ஏறக்குறைய 310 மைல் தூரத்திலுள்ள பிரதேசங்களிளெல்லாம் விழுந்தது. மலைக்கருகாமையில் 24 மைல் தூரத்திற்கு 10 அடி கனப்பிரமாணம் சாம்பல், மண், தூசுமுதலியவற்றால் மேடுண்டாயது. இம்மாரியில் உண்டாகிய நுண்ணிய தூசுகள் கீழ்புறம் காற்றால் அடித்துக்கொண்டு போகப்பட்டு 700 மைல்களுக்கு அப்பாலிருக்கும் மேற்கு இந்திய தீவுகளில் ஒன்றாகிய 'ஜமெய்க்கா' வில் உள்ள [1] 'கிங்ஸ்டன்' என்னும் பட்டணத்தில் மலையில் வெடிப்புக்கண்ட நான்காம் நாள் விழுந்ததாம்.

## எரிமலைகள் பலவிதம்.

எரிமலைகளெல்லாம் எப்போதும் அக்கினியைக் கக்கிக்கொண்டிருப்பவையல்ல. சில 'ஆஸ்திரேலியாவுக்குக் கிழக்கிலிருக்கும் 'டொங்கா' என்னும் தீவிலுள்ள [2] 'டொபுவா' என்னும் எரிமலையைப்போலவும், 'ஆண்டிஸ்' மலைத்தொடரிலுள்ள [3] 'ஸாங்கே' 'கொடபாக்ஸி' என்னும் மலைகளைப்போலவும், அவைகள் தோன்றின நாள்முதற்கொண்டு அக்கினி வர்ஷம் செய்பவைகளாயிருக்கின்றன. வேறு சில ஒரு தடவை தங்கள் சுவரூபத்தைக்காட்டிய பிற்பாடு மறுபடியும் அவைகளுக்கு அடியில் இருக்கும் அக்கினிச் சுரங்கங்கள் தண்ணீரால் நிறைக்கப்படுமளவும் ஓய்ந்திருந்து திரும்பவும் வெடித்துப் பெருங்கேட்டை விளைக்கின்றன. சில வெடிப்புகள் உண்டான பிற்பாடு அக்கினி குண்டங்கள் இடிபட்டுத் தூர்ந்துபோய் விடுவதாலோ இன்னும் வேறு யாது காரணத்தாலோ மறுபடியும் உலைவாயைத் திறவாமல் அடங்கி விடுகின்கிறன. மற்றவைகளோ யா

1 Sumatra and Java Islands. 3 Mount Karakatoa.
2 The Strait of Sunda. 4 Coseguina in Nicaragua.

1 Kingston in Jamaica. 2 Tofva in Tonga Islands.
3 Mount Sangay.



தொன்றுக்கும் தீங்கு விளைவிக்காமல் தங்கள் உலைவாயால் குப்குப்பென்று புகையையும், ஆவியையும் ஊதினவண்ணமாயிருக்கின்றன.

## பேயர்போன எரிமலைகள்.

ஐரோப்பா கண்டத்தில் இத்தாலியா தேசத்திலுள்ள 'விசூவியஸ்' மலையும், சிசிலித் தீவிலுள்ள 'எட்னு' என்னும் மலையும் 'லிப்பேரி' தீவிலுள்ள [1] 'ஸ்டிராம்போலி'யும், ஐஸ்லாண்ட் தீவிலுள்ள 'எக்லா' என்றமலையும் பெயர்போன எரிமலைகள். இவைகளில் விசூவியஸ் மலையானது இவ்வுலகிலுள்ள எரிமலைகளெல்லாவற்றிலும் பெயர் பெற்றதாதலின் இதைப்பற்றிப் பிரத்தியேகமாய் அடுத்த சஞ்சிகையில் எழுதப்படும். இவ்விடத்தில் 'எட்னு' எரிமலையைக்குறித்துஞ் சிறிதுசொல்வோம்.

## 'எட்னு' எரிமலை.

இம்மலையின் உயரம் 10,000 அடி: சுற்றளவு நூற்றெண்பது மைல் உள்ளது. இதில் 1667-ம் வருஷம் கொதிப்பெடுத்தபோது அதினின்றும்வந்து வீழ்ந்த அக்கினி மழையால் 15 கிராமங்கள் எரிந்து நாசமாய் விட்டன. அப்போது பெருக்கெடுத்தோடிய கற்குழம்பு வெள்ளமானது அதன் போக்கிலிருந்த 'கடோனியா' என்னும் பட்டணத்தின் கோட்டைச் சுவரை முழுகடிக்கும்படி அவ்வளவு ஆழமாயிருந்தது.

## மலைகள் திடீரெனக் கிளம்புவதும் அழுங்குவதும்.

பூமியின் உட்புறமிருக்கும் உஷ்ணத்தால் மலைகள் கொதித்தெழுந்து அக்கினிமழை பொழிவதல்லாமல், இக்கொதிப்புக்குக் காரணமாகும் சக்தியினாலேயே மலைகளைப் பூமிக்குள் அழுத்துவதும் வெட்ட வெளியாயிருந்த தரையில் மலைகள் இருக்கும்படியாய் பூமியின் உட்புறத்தில் இருக்கும் மலைகளை மேலே கிளப்புவதும் உண்டு. இதன் காரணமாகவே சமுத்திரங்களில் புதிய தீவுகள் உண்டாவதும், இருக்கும் தீவுகள் சமுத்திரத்தில் முழுகிப்போவதும் உண்டு. அமெரிக்கா கண்டத்தில் [2] 'மெக்ஸிகோ' தேசத்தில் 'மால்பேய்' என்ற ஒரு பெரு மைதான வெளி இருந்தது. இதன் மேற்புறத்தில் கல்காடு ஒன்றும் வெகுகாலமாய் இல்லாமலிருந்தது. ஆகவே 1759-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 28-ம் தேதி அன்று இரவில் ஒரு மலைக்கூட்டம் இந்த இடத்தில் பூமியிலிருந்து வெளியே கிளப்பப்பட்டது. இவற்றில் ஆறு மலைகள் பூமிமட்டத்திற்கு மேல் 1312-முதல் 1640-அடி வரையில் உயரமுள்ளனவாயிருந்தன. இந்த மலைகளில் ஒன்று எப்போதும் கொதித்த வண்ணமாயிருந்தது.

இத்தாலியா தேசத்தில் [1] 'பெய்யா' என்னுமிடத்திற்கு அருகாமையில் உள்ள, புது மலை என்று பொருள்படும் பெயரை உடைய [2] 'மான்டி நோவோ' என்னும் மலையானது 1538-ம் வருஷம் திடீரென பூமியின் மேலே கிளப்பப்பட்டது. இதன் உயரம் 456-அடி. இதன் சிகரத்தில் ஒரு அவிந்த உலைவாய் இருக்கிறது.

## சமுத்திரத்தில் திடீரெனத் தோன்றி மறைந்த ஒரு தீவு.

ஐஸ்லாண்ட தீவிலுள்ள 'ஸ்காப்டர் ஜோகல் மலை' வெடிப்பெடுத்துக் கொதித்தலைக் குறித்து முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா. இது கொதிக்கச் சில வாரங்களுக்கு முன் ஐஸ்லாண்ட தீவிற்கு மூன்று காததூரத்திற்கு அப்பால் சமுத்திரத்திற்குள்ளிருந்து ஒரு சிறிய தீவு வெளிப்பட்டது. இத்தீவில் அனேக எரிமலைகள் இருந்தன. ஐஸ்லாண்ட தீவுக்கு அதிபதியாகிய டென்மார்க் அரசனே இத்தீவுக்கும் அதிபனானன். ஆனால் இந்தத் தீவு எப்படி சடுதியாய்த் தோன்றியதோ அது மாதிரியாகவே அடுத்த வருஷத்தில் சமுத்திரத்திற்குள் முழுகிப்போய்விட்டது.

## மண்மாரி மலைகள்.

சாதாரணமாய் முக்கியமான எரிமலைகளெல்லாம் புகை, ஆவி, உஷ்ணத்தால் உருகிய திரவ வஸ்துக்கள் முதலியவைகளைக் கக்குகின்றன. வேறு சில ஜலம் கலந்த மண்ணைத் தாரைதாரையாய்க் கக்குவது வழக்கம். இவைகளுக்குத்தாம் மண்மாரி மலைகளென்று பெயர். சில சமயங்களில் இவைகளிலிருந்து வெளியே கக்கப்படும் தண்ணீருடன் ஏராளமான சிறிய மீன்கள்வந்து விழுகின்றன.

1 Stromboli in the Lipari Islands. 2 Mexico.

1 Baia. 2 Monte Nuovo.

இவைகள் பூமிக்குட்புறத்தில் அம்மலைகளுக்கு அடியில் இருக்கக்கூடும் பெரிய தடாகங்களில் வசிக்கும் ஜந்துக்களென்று ஊகிக்கப்படுகின்றன. சிசிலித்தீவில் ஒரு சமவெளியில் பூமிமட்டத்திற்கு மேல் 150-அடி உயரமுள்ளதான ஒரு மலை இருக்கிறது. இது மற்ற எரிமலைகளைப்போலவே குவிந்த வடிவமுள்ளது. இதைச் சுற்றிலும் இரண்டு மூன்று அடி உயரமுள்ள அனேகம் குவிந்த வடிவமுள்ள மண்குட்டுகள் இருக்கின்றன. இவைகளில் எல்லாம் தண்ணீர் கலந்த கருப்புக் களிமண் எப்போதும் கொதகொத வென்று தளும்பிக்கொண்டே இருக்கின்றது. சிற்சில சமயங்களில் பூமிக்குள் இடிபோன்ற கிடுகிடுத்த சத்தமும், உருமலும், பூகம்பங்களும் உண்டாகின்றன. இத்தருணங்களில் இக்குன்றுகளிலிருந்து வராளமாய் வெளியே வீசப்படும் மட்குழம்பும், கற்களும், ஏறக்குறைய 200- அல்லது 300- அடி உயரம் கிளம்புவது வழக்கமாம். தென் அமெரிக்கா கண்டத்திலுள்ள [1] 'கார்த்தஜீனு' பட்டணத்திற்கருகாமையிலுள்ள ஒரு சதுப்பு நிலத்தில் 20 சிறிய மண் குன்றுகள் இருக்கின்றன. இந்தக் குன்றுகளின் கூட்டத்தையே இவ்விடத்தில் படமாகச் சித்திரித்துக் காட்டியிருப்பது. இவைகள் இருக்குமிடம் ஒரு பெரிய காட்டுக்கருகாமையில், புல்பூண்டு ஒன்றும் முளையாத ஒருவிதக் களிமண் பூமி. இக்குன்றுகளின் உயரம் சற்றேறக்குறைய 24-அடி. அவைகளின் சிகரங்களில் காணப்படும் உலைவாய்களின் குறுக்களவு 2-அடி. இவைகளின் வழியாய் தண்ணீர் கலந்த மண் அபரிமிதமாய்க் கக்கப்படுகின்றது. [2] 'காக்கஸஸ்' மலைப்பிரதேசத்திலுள்ள இவ்வித [illegible] மடிக்க மண் வெள்ள



மண்மாரி மலைகள்.

மானது அரைமைல் நீளம் மண்ணீர் அருவியாக ஓடியதாம்.

## எரிமலைகள் தோன்றுமிடம்.

எரிமலைகள் உலகத்தில் எந்த எந்த பாகங்களில் விசேஷமாய் இருக்கின்றன என்பதைக்குறித்து சற்று விசாரிப்போம். எரிமலைகள் சாதாரணமாய் பெரிய சமுத்திரங்களையடுத்த பிரதேசங்களிலும், அவ்விடங்களிலுள்ள பெரியமலைத் தொடர்களிலும் இருக்கின்றன. [1] 'பசிபிக் மகாசமுத்திரத்தைச்' சுற்றிலும் உள்ள பிரதேசங்களில் எரிமலைகள் அதிகம். மகாசமுத்திரங்களிலுள்ள பெரிய தீவுகளெல்லாம் எரிமலைகளை உடையனவாயிருக்கின்றன. அனேகம் பவளத்தீவுகளெல்லாம் சமுத்திரங்களிலுள்ள எரிமலைகளின் சிகரங்களின்மேல் உண்டாயிருக்கப்பட்டவை என்று ஊகிக்கப்படுகின்றன. எரிமலைகள் சமுத்திரங்களுக்கு அருகாமையில் இராமல் உள்நாடுகளில் தோன்றுமானால் சில சமயங்களில் பெரிய ஏரிகள் முதலான விடங்களுக்குச் சமீபத்தில் தோன்றுகின்றன. சிற்சில விடங்களில் அவைகள் தண்ணீருக்கு அருகாமையில் இராமலிருப்பதுமுண்டு. இதுவரையில் கண்டுபிடிக்கபபட்டிருக்கும் ஏறக்குறைய 300 எரிமலைகளில், அமெரிக்கா கண்டத்திலும், அதைத்சுற்றியுள்ள தீவுகளிலும் நூற்றுக்கு மேலாகவும், ஆசியாகண்டத்திலும் அதைச் சேர்ந்த சுமத்ரா, ஜாவா, ஜப்பான் முதலான பலதீவுகளிலும் 150-க்கு மேலாகவும், ஆப்பிரிகா கண்டத்தில் பதினொன்றும், ஐரோப்பா கண்டத்தில் இருபத்தொன்றும் இருக்கின்றன.



## Hot Springs—வெந்நீர் ஊற்றுகள்.

பூமியின் உட்புறத்திலுள்ள உஷ்ணமானது எரிமலைகளின் வாய்களால் வெளியே கக்கப்படுவதல்லாமல் வெந்நீரூற்றுகளாய் வெளியே வருவதுமுண்டு, இவ்வூற்றுகளிலிருந்து வரும் ஜலமானது உலைநீர்போல் தளைத்துக் கொண்டு அதிக உஷ்ணமுள்ளதாயிருக்கும். எரிமலைகளைப்போலவே பூமிக்கு அடிப்புறத்திலிருக்கும் சூடுண்ட பிலங்களில் தண்ணீர் சேருவதாலும் அல்லது அதிக உஷ்ணமுள்ள பெரும்பாறைகள் வழியாய்த் தண்ணீரானது பூமியின் மேற்புறத்திற்கு வருவதற்கு முன்னர் செல்வதாலும் ஊற்றுநீர் அதிக சூட்டை அடைவதாக ஊகிக்கப்படுகிறது. விசேஷமாய் இவ்வித ஊற்றுகள் எரிமலைகள் உள்ள தேசங்களில் இருக்கின்றன. நெடுநாளைக்கு முன்பாக அதிகமாய் எரிந்து கொண்டிருந்து பிற்பாடு அவிந்து கிடக்கும் மலைப்பிரதேசங்களிலும் இவ்வூற்றுகள் இருப்பது சாதாரணம். நமது இந்தியாவிலும் அனேக விடங்களில் வெந்நீர் ஊற்றுகளிருக்கின்றன. கங்கா நதியின் உற்பத்திஸ்தானமாகிய கங்கோத்திரி என்னுமிடத்தில் ஓர் ஊற்று இருக்கின்றது. மற்றொன்று வங்காளத்தின் கீழ்மாகாணங்களிலுள்ள [1] 'முங்கேருக்கு' அருகாமையிலிருக்கிறது. இதற்குச் சூரியகுண்டம் அல்லது சீதாகுண்டமென்று பெயர். இச்சிறிய ஊற்றில் எப்போதும் தண்ணீரானது உலைநீர்போலக் கொதித்துக்கொண்டு வெளியே வழிந்து சிற்றருவியாய் ஓடுகிறது. இவ்வதிசயத்தைப் பார்க்கப் போகும் பிரயாணிகள் அரிசியை ஒரு சிறிய துணியில் நன்றாக முடிந்து இக்குண்டத்தில் சற்றுநேரம் வைத்திருந்து பிற்பாடு சாப்பிடுவதற்கு யோக்கியமான பதத்தை அடைந்திருக்கும்போது உண்டு போவது வழக்கம். இச்சுனை, அரிசியைப் பதமாக்கக்கூடிய உலைநீர்போன்ற அவ்வளவு உஷ்ணமுள்ள ஜலமுடையது. நமது சென்னை இராஜதானியில், கோயப்புத்தூா ஜில்லாவிலுள்ள 'அவிநாசி' என்னும் ஊருக்கருகாமையில் 'திருமுருகன்பூண்டி' என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. இதில் உள்ள பிரசித்தியான ஒரு சிவாலயத்திற்கு அருகாமையில் ஒரு செய்குளம் உண்டு. இதன் அடி மட்டம் பாறை நிலம். இதற்குச் சமீபத்தில் மேல்புறத்தில் தரை மட்டமான தட்டைப்பாறை யிருக்கிறது. இதில் ஏறக்குறைய 6—7 அங்குலம் குறுக்களவுள்ள ஒரு வட்டமான துவாரம் உண்டு. இவ்வாயின் வழியாய் சிற்சில சமயங்களில் ஜலமானது பொங்கி தரை மட்டத்திற்கு மேல் சுமார் 19 அடி உயரம் எழுந்து மறுபடியும் தணிந்து வழிந்தோடுவது வழக்கம். இத்தருணங்களில் அந்தவிடத்தின் சுற்றுப்புறத்தில் கொஞ்சதூரம் வரையிலும் பூமியில் கிடுகிடுத்த சத்தமுண்டாவதுண்டு. இச்சத்தம் கேட்ட உடனே ஜலம் வெளியே வரும். இது கடைசியாய் பொங்கி ஏறக்குறைய 25-வருஷங்களுக்கு மேல் ஆகிறது. இது பொங்குவதை அவ்வூராரில் அனேகர் பார்த்திருக்கிறார்கள். இது முன்னால் 10, 12-வருஷங்களுக்கு ஒருதரம் பொங்கியதாகச் சொல்லப்படுகிறது. இதை அவ்வூரார் மகாமகதீர்த்தமென்ற புண்ணிய தீர்த்மென்று கொண்டாடுகிறார்கள். பூமியின் உட்புறத்தி



'The Great Geyser' of Ieeland.

ஐஸ்லாண்ட் தீவிலுள்ள பெரிய வெந்நீர் ஊற்று.

ஊற்றுகளைப்போல இதுவும் பொங்கி யிருக்க வேண்டும். உஷ்ண மாறுபாட்டாலோ, இன்னும் வேறு எந்தக் காரணத்தாலோ இது இப்போது பொங்குவதில்லை.

எரிமலைகள் அதிகமாயுள்ள 'ஐஸ்லாண்டு' என்னும் தீவில் வெந்நீர் ஊற்றுக்கள் நூற்றுக் கணக்காயிருக்கின்றன. 'எல்லா' எரிமலைக்கு வடமேற்கில் சற்றேறக்குறைய 50-மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கும் ஒரு பள்ளத்தாக்கில் 300-அடி முதல் 400-அடி வரை உயரமுள்ள ஒரு சிறிய மலைத்தொடரின் அடிவாரத்தில் மேலே சொன்ன ஊற்றுகளிருக்கின்றன. இவைகளின் அகலமோ நாலைந்து அங்குலமுதற்கொண்டு 72-அடி குறுக்களவுள்ளவைகளாயிருக்கின்றன. இவைகளிலிருந்து எப்போதும் சூடுண்ட ஜலம் பொங்கி வழிந்துகொண்டும் நீராவி குப்குப்பென்று வெளியே வந்துக்கொண்டுமிருக்கும். இவ்வூற்றுகளிலெல்லாம் பெரியது [1] 'கிரேட்கீஸர்' என்று சொல்லப்படும் பெரிய ஊற்று. இது மேலே சொல்லிய பிரகாரம் மலையடிவாரத்தில் அமைந்திருக்கும் காட்சியை இவ்விடத்தில் படமாக அச்சிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இது ஜல்லிக்கற்கள் சேர்ந்து இறுகி 15-அடி உயரமாய் அமைந்துள்ள ஒரு திட்டையின் பேரில் இருக்கிறது. சாமானிய காலங்களில் இது 72-அடி குறுக்களவும், 4-அடி ஆழமுமுள்ள ஒரு தடாகம்போன்று விளங்கும். இத் தடாகத்தின் நடுவில் 9-அடி குறுக்களவுள்ளதும் ஏறக்குறைய 70-அடி ஆழமுள்ளதுமான ஒரு பெருந்துவாரம் பூமியின் உட்புறத்தில் செல்கிறது. இந்த துவாரத்தின் வழியாய் அடிக்கடி வெந்நீரானது மேற்புறத்திலிருக்கும் தடாகத்தில் வந்துசேர்ந்து விளும்பின் வழியாய் நாலாபக்கங்களிலும் வழிந்து சிற்றருவிகளாய் ஓடுகின்றது. சில சமயங்களில் தடாகத்தில் இருக்கும் துவாரத்தின் வழியாய் வெகு சத்தமுள்ள உறுமல் கேட்கும் அப்போது குளத்திலுள்ள ஜலமானது கொதிக்க ஆரம்பித்து பூமியின் உட்புறத்திலிருந்து வெளியே கக்கப்படும் நீராவியுடன் சில அடி உயரம் எழும்பும். இப்படி ஒரு நாள் அல்லது இரண்டு நாளிருந்து பிற்பாடு ஊற்றுத் துவாரத்தில் அதிக குமுறுதல் உண்டாகும். சத்தம் அதிகரிக்கவே பூமியில் அதிர்ச்சியுண்டாய் ஊற்றுத் துவாரத்தின் வழியாய் பொங்கும் ஜலமானது வெகு சத்தமான வெடிப்புகளுடன் ஆகாயத்தில் 150-அல்லது 200-அடிகள் வரையில் ஒரே ஸ்தம்பமாய் கிளம்பி மறுபடி நாற்புறமும் சிதறி விழுந்தோடும். இத்தோற்றத்தை முன்பக்கத்துப் படத்தால் ஊகித்தறிந்து கொள்ளலாம். மேலே சித்தரித்துக் காட்டிய படமத்தியில் ஸ்தம்பம் போன்று நிற்பதே ஊற்றிலிருந்து மேலே கிளம்பிவிழும் ஜலம். இந்த ஜலஸ்தம்பத்திற்கு அடியில் சற்றே குவிந்த வடிவமுள்ள உருவாய்த் தோற்றுவது ஊற்று ஜலம் தேங்கி நிற்கும் தடாகத்தை உடைய மேடு. மேலே சொன்ன விதமாக ஊற்றிலும் மேற்புறத்திலுமுள்ள ஜலமெல்லாம் வடிந்து பிற்பாடு கொஞ்ச காலத்திற்குள்ளாக மறுபடியும் ஜலம் சுரந்து தடாகம் நிறையும். இது வெகு விநோதக் காட்சியாயிருக்குமென்று சொல்லவும் வேண்டுமா ?

வட அமெரிக்காவிலுள்ள [1]ஐக்கிய மாகாணங்களில் இவ்வித வெந்நீர் ஊற்றுகள் அனேகம் இருக்கின்றன. [2]'நியூ ஜீலாண்டு' என்னும் தீவுகளிலும் இவைகள் உண்டு.

## Hot Vapours—ஆவித் துண்டங்கள்.

பூமியின் உஷ்ணத்தினால் வெந்நீர் வெளியே வருவதல்லாமல் சூடுண்ட ஆவியாய் வெளியே வருவதுமுண்டு. இத்தாலியா தேசத்து [3]'நேபில்ஸ்' நகரத்திற்கு வடதிசையிலுள்ள [4]'பொஸ்ஸோளி' என்னும் இடத்திற்கு அருகாமையில் பூமியில் உள்ள சில பிளவுகளிலிருந்து கந்தகப்புகை கலந்த உஷ்ண ஆவியும், துர்கந்தமான சூடுண்ட காற்றும் வெளியே வந்துகொண்டிருக்கின்றன. பூர்வீக உரோம மன்னவர்களுக்கும், பிரபுக்களுக்கும் வேனிற்கால வாசஸ்தலமாயிருந்த 'பெய்யா' என்னுமிடத்தில், 'நீரோ' (Nero) சக்கிரவர்த்தியின் ஸ்நான கட்டங்கள் என்று சொல்லப்படும் ஒரு பாறையிலுள்ள போக்கின் வழியாய் நீராவியானது ஏராளமாய் வெளியே வீசப்படுகிறது. அதன் உட்புறத்துக் கோடிகளில் சாதாரணமாய் கோழி முட்டைகள் வெந்து பக்குவமாகக்கூடிய அவ்வளவு உஷ்ணமிருக்கிறது.

1 The United States.
2 New Zealand.
3 Naples.
4 Pozuoli.



## SHORT STORY: SPADE OF ACE.

## ஸ்பேட் ஆவ் எஸ்.

அல்லது நன்வினை நன்மை சேர்க்கும்.

### II

"அவன் எதற்காக சென்னகேசவலுவினுடைய வண்டியை ஸெண்ட்ரல் ஸ்டேஷன் வரைக்கும் தொடர்ந்து வந்து பிறகு வேறு வழி செல்லுகிறான்" என கோபாலன் முணுமுணுத்தார்.

"அது அதிக அபூர்வமாய்த்தான் தோன்றுகிறது" என்றேன். "ஒரு வேளை அவ்வண்டி இராமலிங்கத்தினுடையதாக இராமலிருக்கலாம். சென்னையில், இரண்டு வண்டிகள் ஒன்றன் பின் ஒன்றாய்ப் போவது அதிசயமல்ல.

கோபாலன் தலையசைத்தார்
"அது அபூர்வமானதே."

நாங்கள் கடற்கரைச்சாலை வழியாய்த் திரும்பி நேராகப்போய் வாலாஜா ரோட்டுக் கெதிராக மவுண்ட்ரோட் நோக்கித் திரும்பினோம், பிற நு மன்ரோ ஸ்டாட்யூ (Munro Statue) வைக் கடந்து டியூக் டியேஞ்சல் (Duc de Angel') ஹோடேலண்டை மோடார் வண்டி போய் நின்றது. எங்கள் வண்டிக்காரன் அதிக வேகமாய் வண்டியைத் துரத்தினான். இல்லாவிடில் நாங்கள் அந்த மோடார் வண்டியைத் தொடர முடியாது-நாங்கள் இறங்கி மோடார் வண்டி பக்கத்தில் போய் நின்றோம்.

மோடார்வண்டியினின்று இறங்கி ஹோடேலினுள் நுழைந்த அம் மனிதன் இராமலிங்கமென சொல்லுவதற்கு யாதொரு சமுசயமுமில்லை. அவன் சென்னகேசவலு தெரிவித்த அடையாளங்களுக்கு ஒத்திருந்தான்.

கோபாலன்.—அவனுக்கு நாம் தொடர்ந்து வந்த சங்கதியே தெரியாது. நாம் இப்போதே சென்னகேசவலுவின் வீட்டுக்குப் போக வேண்டும். அவரைப் பல கேள்விகள் கேட்க வேண்டும்.

நாங்கள் வண்டியிலேறிப்போய் சென்னகேசவலுவின் வீட்டை அணுகியதும் அவ்வீட்டண்டை கூடியிருந்த ஜனங்களைக்கண்டு எங்களுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. என்ன விசேஷம்? என்று கேட்டபோது சென்னகேசவலு நாயுடு வண்டியில் இறந்திருந்தாரெனத் தெரிவித்தார்கள்.

"ஹிருதய வியாதியினால் இறந்தாரென டாக்டர் சொல்லுகிறார்" என்று ஒருபோலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

கோ—"அது ஹிருதயத்தைப் பற்றியதேயல்ல. ஒரு துணிகரமான கொலை." கொஞ்ச நேரம் எங்கும் நிசப்தமாயிருந்தது.

"கொலையா!" என இன்ஸ்பெக்டர் பதட்டமாய்க் கேட்டுவிட்டு; ஒருக்காலு மிராது,—

அவர் வண்டியில் ஒண்டியாகவே யிருந்தார்: அவரை யாரும் தொந்தரவு செய்ததாகவும் காணப்படவில்லை. ஏதாவது விசேஷ சம்பவம் நேர்ந்திருந்தால் அதை வண்டிக்காரன் அறிந்திருப்பான். தனக்கு ஒன்றும் தெரியாதென சத்தியம் செய்கிறான்.

கோ:—"சரி நானும் என் சிநேகிதரும் அவ்வண்டியைத் தொடர்ந்து வந்தோம். நாங்களும் ஒன்றும் காணவில்லை. அப்படியிருந்தும் கொலை என்னமோ நடந்துவிட்டது. அதுவும் சென்ட்ரல் ஸ்டேஷனண்டை."

இன்ஸ்பெக்டர்:—தங்களுக்கு கொலையாளி யாரென்று தெரியுமோ?

கோபாலன்.—அவரை தங்களுக்கு சீக்கிரம் பரிச்சயம் செய்துவைக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்:—ஆனால், கொலை எவ்விதம் நடந்தது?

கோபாலன்:—அதைக் கண்டுபிடித்து விடலாம். பிணம் வண்டியில் எந்த நிலையிலிருந்தது?

இன்ஸ்பெக்டர்:—சென்னகேசவலு வண்டியில் வலதுபக்க மூலையிலுட்கார்ந்திருந்தார். வண்டிக்காரன் அவர் தூங்கிக்கொண்டிருந்தாரென நினைத்திருந்தான். அவன் அவரை

எழுப்பப் பிரயத்தனப்பட்டபோது அவர் இறந்து விட்டதாக அறிந்தான்.

"ஓர் விநோதமான கொலை!" என கோபாலன் சொல்லிக்கொண்டே தன் ஜேபியினின்று ஓர் சீட்டை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் தந்து "இது என்னவென தங்களுக்குத் தெரியுமா" என்றார்.

இன்ஸ்பெக்டர்:—என்ன? இது தெரியாதா! இது ஒரு ஸ்பேட் ஏஸ்சீட்டு. இதற்கும் கொலைக்கும் என்ன சம்பந்தம்?

இன்ஸ்பெக்டர் அதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

"வாரும்" என கோபாலன் அக்கார்டை வாங்கி தன் சட்டைப்பையில் வைத்துக் கொண்டே சொன்னார். நாம் தாமதிக்கலாகாது : நான் பிணத்தைப் பார்க்கவேண்டும்.

நாங்கள் இன்ஸ்பெக்டரைத் தொடர்ந்து உள்ளேசென்றோம். ஹாலில் போடப்பட்டிருந்த மேஜையின் மேல் பல கடிதங்களிலிருந்தன. அவைகளில் ஒன்றைக்கண்டு கோபாலன் நின்றார். அதை எடுத்துப் பார்த்தபோது சிங்கப்பூர் முத்திரை இட்டிருந்தது. அவர் இன்ஸ்பெக்டரைப்பார்த்து,

'இக்கடிதத்தில் ஒரு ஸ்பேட் ஏஸ் இருக்கிறதா பாரும்" என்று இன்ஸ்பெக்டரிடம் சொன்னார். கடிதத்தைப்பிரித்துப் பார்த்தபோது ஒரு ஸ்பேட் ஏஸ் இருந்தது. இன்ஸ்பெக்டர் இதைக்கண்டு ஆச்சர்யங்கொண்டார். அவர் வேறு சொல்லுவதற்குள் நாங்கள் சென்னகேசவலு இறந்து வளர்த்தப்பட்டிருந்த கட்டிலை நெருங்கினோம். அவருடைய முகம் விகாரமடையாமல் பிரகாசமாயிருந்தது. அவர் இறந்ததைத் தெரியாதவர்கள் யாரும் அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரென நினைப்பார்கள்.

இன்ஸ்:—அவர் எப்படி இறந்தார்?

கோபாலன் யாதொரு பதிலும் சொல்லவில்லை. அவ்வறையில், அவ்வலங்காரமான அறையில், ஓர் நடுவயதுள்ள, இன்னும் 2 வாரத்தில் விவாகம் செய்துகளிக்க எண்ணியிருந்த அம்மனிதன் தன் எண்ணங்களெல்லாம் விடுத்து மீளா நித்திரை புரிகின்றான். அவனைக் கொன்றவன் மனம் என்ன கல்லா? ஹா பாதகா! உன்னை நான் பழிக்குப்பழி வாங்குகின்றேன் என இன்னும் பலவாறு எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

கோபாலன் தன் ஆராய்ச்சிகள் முடிந்து நிமிர்ந்ததும் நான் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு,

"நாம் சீக்கிரம் பழிக்குப் பழிவாங்குவோம்" என்றேன். "இராமலிங்கத்தைக் கைது செய்யாவிடில் என் மனம் அமைதியுறாது."

கோபாலன்:—அப்படியாயின் கண்ணு! உன் மனம் அமைதியுறாது தான். இராமலிங்கம் கைது செய்யப்படமாட்டான்.

"கைதியல்லவா, ஏன்?" என நான் பரபரப்புடன் கேட்டேன்.

கோ:—ஏனெனில், அவன் கொலையாளியல்ல.

"வேறு யார் கொலையாளி?' என்று நான் வினித்துக்கேட்டேன்.

கோ:—உனக்கு மறுமொழி கூறுமுன் நான் சிறிது யோசிக்க வேண்டும்.

பிறகு நானும் கோபாலனும் அவர் வீட்டுக்குப் புறப்பட்டோம். "நான் ஒருவனே இவ்வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. இக்கொலையின் முடிவைப் பார்க்கவேண்டுமாயின் உனக்கு அதைப்பற்றித் தெரிவிக்கிறேன். இது சென்னை வாசிகளுக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கும் எப்பேர்ப்பட்ட அந்தரங்க சூழ்ச்சிகளும் ஓர் சிறு எதிர்பாராத சம்பவத்தால் கெடுகின்றனவென யாவரும் அறிவார்கள். இரண்டாவது சிங்கப்பூரிலிருந்து வந்த கவரில்லாவிடில் இந்த கேஸ் எப்போதுமே சரியான



முடிவுக்கு வந்திராது என்று கோபாலன் சொன்னார்.

மறுநாள் மாலை 3 மணிக்கு நான் கோபாலன் வீட்டுக்குச் சென்றேன். அவர் என்னை அச்சமயம் வரும்படி அழைத்திருந்தார். அவருடன் போலீஸ் இன்ஸ்பெக்டரும் இருந்தார்.

கோ:—ஸ்வர்ணம்பாளின் சிறிய தந்தையும் அவள் சொத்துக்குக் காரியஸ்தருமான ஸ்ரீராமுலு நாயுடுவுக்காக நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் கேஸின் முடிவைப்பற்றி அறிய ஆவலுள்ளவராயிருக்கிறார்.

அப்போது கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. ஒரு நிமிஷத்திற்கெல்லாம் டாக்டர் ஸ்ரீராமுலு நாயுடு உள்ளே வந்தார்.

கோ.—வாருங்கள் நாற்காலியில் உட்காருங்கள்.

ஸ்ரீராமுலு நாயுடு உட்கார்ந்தபின் கோபாலன் அவரைச் சுட்டிக் காட்டி "நண்பர்களே! இதோ இருக்கிறாரே ஸ்ரீராமுலுநாயுடு இவர் தான் சென்னகேசவலு நாயுடுவின் கொலையாளி" என்றார்.

நாங்கள் இருவரும் ஆச்சரியமும் பிரமிப்பும் அடைந்து அப்படியே ஸ்தம்பித்து விட்டோம். டாக்டர் ஸ்ரீராமுலு மாத்திரம் உடனே எழுந்து,

"என்ன முட்டாள்தனமாய் உளறுகிறாய், கோபாலா" என்று படபடப்பாய்ச் சொன்னார்.

கோ.—"போதும், ஸார், கேஸ் மெத்த வெளிப்படையாயிருக்கிறது. நீர் செய்த சூழ்ச்சியைத் தோற்கடிக்க வல்லது ஒரே வஸ்து. அது கடைசியாய் நேர்ந்துவிட்டது. அது தான் இரண்டாவது சிங்கப்பூரிலிருந்து வந்த ஸ்பேட் ஏஸ் அடங்கிய கவர். அதனால் தான் உம்முடைய சூழ்ச்சிகள் பிரயோஜனப்படாமல் போயின.

இப்படி சொல்லிக் கொண்டே அவர் அதற்கு மூன்நாள் சென்னகேசவலுவின் வீட்டில் பிரித்துப் பார்த்த கவரை எடுத்து ஸ்ரீராமுலு நாயுடுக்குக் காட்டி "இந்தக் கார்டு நேற்று இராமலிங்கத்தினிடமிருந்து வந்தது" என்றார்.

ஸ்ரீராமுலு நாற்காலியில் சாய்ந்தார். அவர் முகத்தில் கொலை பாதகக் குறி எழுதப்பட்டிருந்தது.

அவர் செய்த கொடுஞ் சூழ்ச்சி மெத்த தீர்மானம்: ஆனால் அது மற்ற கொடிய சூழ்ச்சிகள் போலவே கெடுதலாக முடிந்தது. தன் தமையனின் குமாரத்தியாகிய ஸ்வர்ணம்பாளுக்கு விவாஹம் நடந்து விட்டால் அவருக்கு இப்போது வரும் வருஷ வருமானமான 6000-ரூபாய் நின்று போய்விடும். அவ்வருமானத்தைக் கொண்டுதான் இவர் சிலகாலமாக ஜீவித்து வந்ததாகத் தெரிகிறது.

இதைக் கேட்ட ஸ்ரீராமுலு அடியற்ற மரம் போலானார். அவர் யாதொன்றும் சொல்லாமல் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டார்.

கோ.—ஹா, என்ன துணிகரம்; இவன் ஒரு படுகொலையைச் செய்தான். ஓர் குற்றமற்ற மனிதன் வாழ்க்கையைக் கொள்ளை கொண்டான். இறந்தவரால் தன்வசம் விடப்பட்ட பெண்ணின் ஹிருதயத்தை நோக்க—

என்று முடிக்குமுன் கோபாலன் டாக்டரின் பக்கத்தில் வேகமாய்ச் சென்றார். நாங்கள் அவனைத் தொட்டுப்பார்த்தபோது ஸ்ரீராமுலு மண்ணுலகின் தீர்ப்பைக் கேட்க இசையாது விண்ணுலகடைந்தான்.

கோ—அவன் செய்த யோசனை வியக்கத்தக்கதே. இரண்டாவது கவர் வந்திராவிடில் கேஸ் சரியான முடிவுக்கு வந்தே யிருக்காது. இதோ இவைகள் தான் மொத்த சங்கதி: நான் முன்னே தெரிவித்த பிரகாரம் ஸ்வர்ணாம்பாள் தன் பராமரிப்பில் இருக்கும் வரை ஸ்ரீராமுலுக்கு வருடத்தில் 6000-ரூபாய் வருமானம் வரும். பத்து வருடத்துக்கு முன் அர்பத்நட் பாங்க் முழுகி விட்டதால் அவன் ஏழையானவன். அவன் பல காரியங்களைக் கண்டு பிடிப்பதற்காகச் செய்த முயற்சிகள் வீணாயின. ஆகையால், அவன் இப்பணத்தையே பூரணமாய் நம்பியிருந்தான். ஸ்வர்ணாம்பாளுக்கு விவாஹம் நடந்து விட்டால் இவ்வருமானம் போய்விடும்.

ஆதலால் சென்னகேசவலுக்கும் ஸ்வர்ணாம்பாளுக்கும் விவாஹ நிச்சயார்த்தமான போது அதைத் தடுக்கப்பார்த்தான். தன் எண்ணம் நிறைவேறாமல் விவாஹம் நிச்சயமாய் விட்டதால் சாக்குகள் சொல்லி காலஹரணம் செய்யப் பார்த்தான். கடைசியாய் சென்னகேசவலு ஒரே பிடிவாதமாய் விவாஹத்தை இன்னும் இரண்டு வாரத்துக்குள் பூர்த்தி செய்ய நிச்சயித்ததால் தன் சுயநலத்தைக்கருதி இராமலிங்கமும் தானும் சென்னகேசவலுவின் விவரப்படி உருவத்தில் ஒத்திருந்ததால் சென்னகேசவலுவை கொலை செய்துவிட யோசனை செய்தான்.

கொலைக்குற்றம் இராமலிங்கத்தைச் சாரும்படி, அவன் பயமுறுத்திய வண்ணமே ஸ்பேட் ஏஸை சென்னகேசவலுக்கு அனுப்பினான். அதன்மேல் அவர் என்னிடம் யோசனை கேட்க வந்ததைத் தெரிந்து கொண்டு தான் ஒரு வாரமாய் சிங்கப்பூர் இராமலிங்கம் போல் தங்கியிருந்த டியூக் டீஎஞ்சல் ஹொடேலிலேயே ஓர் மோடார்காரை வாடகைக்குப் பேசிக்கொண்டு தன் வேலைக்காரனை வண்டி விடும்படி ஏற்பாடு செய்து என் வீட்டுப் பக்கத்தில் சென்னகேசவலுவுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள், காலஹரணம் செய்தால் தொந்தரவுக்கு இடமாகுமென்றும் கொலை நடந்ததைக் கேட்டால் உண்மையான இராமலிங்கம் பயந்து சென்னைக்கு வரமாட்டானென்றும் நம்பி சமயம்பார்த்து காரியத்தை முடித்துவிட்டு தான் க்ஷேமமாயிருக்கலாமென்றும் எண்ணினான்.

நாம் அவனைத் தொடர்கிறோமென்பதை அவன் அறியவில்லையென்றெண்ணினோமே அது தவறு. ஏனெனில், இராமலிங்கத்தின் அடையாளத்தை நிலை நிறுத்த அவன் அந்த மாதிரி செய்தான்.

நாம் ஸெண்ட்ரல் ஸ்டேஷனைக் கிட்டும்போது ஸ்ரீராமுலுவண்டியும் சென்னகேசவலுவண்டியும் ஒன்றின் பக்கம் ஒன்றாய் நின்றன. அப்போது அவன் இந்தக்குழாயைத் தன்கையில் பிடித்துக்கொண்டு சென்னகேசவலுவின் பக்கமாய்ச் சாய்ந்தான்,—

எனச்சொல்லிக்கொண்டே கோபாலன் தன்னுடைய ஜேபியினின்று ஒருகுழாயை எடுத்தார். பிறகு அதை மேஜையின்மீது ஜாக்கிரதையாக வைத்துவிட்டுச் சொல்லுகிறார்:

ஸ்ரீராமுலுவின் அறையைச் சோதித்தபோது இவ்வஸ்துவைக் கண்டுபிடித்தேன். அதில்விஷத்தின் ஆவியை நிறைந்திருக்கிறது. அது அவனுடைய முயற்சிகளில் ஒன்று. குழாவை அழுத்தின் அவ்விஷ ஆவி பலகெஜதூரம் பாயவல்லது. அவன் அதிக தைர்யத்துடனும் ஜாக்ரதையுடனும் இதை சென்னகேசவலுவின் மூக்கின் பக்கமாய்விட்டான். அவர் உடனே இறந்தார். அது ஒன்றும் பாதைப்படுத்தாமல் அவர் மடிந்ததனால் ஹிருதய நோயால் இறந்ததாக டாக்டர் சொன்னார்.

சென்ட்ரல் ஸ்டேஷனண்டை சென்னகேசவலுவைக் கொன்றபின் டியூக் டியேஞ்சல் ஹொடேலுக்குத் தன்னைப்பின்பற்றி வரும்படி செய்தான். சென்னகேசவலுவின் கொலை அப்போது நமக்குத் தெரியாதாகையில் நாம் அவனைப் பின்பற்றிச் சென்றோம். நாம் அங்கி



ருந்து நீங்கிய 5-நிமிஷத்துக்கெல்லாம் தானும் அதைவிட்டு அகன்றான்.

அவனுடைய துர்அதிர்ஷ்டவசமாய், சென்னகேசவலுவுக்கு இராமலிங்கம் சிங்கப்பூரினின்று அக்கவரை அனுப்பினான். சென்னகேசவலு நம்மிடம் வந்திருந்தபோது அந்த தபால் அவருக்கு வீட்டுக்குவந்தது.

நாம் வீட்டினுள் நுழைந்ததும் ஸிங்கப்பூரின் தபால் முத்திரையைக் கவனித்தேன். கவர் கார்டு அளவு கிருந்தமையாலும் மூலைகளெல்லாம் ரவுண்டாக விருந்தமையாலும் இது சீட்டு கடுதாசியென கண்டுகொண்டேன். நான் அதைப்பிரிக்க மற்றொரு ஏஸைக்கண்டபோது தன்யோசனைகள் யாவும் மாறுபட்டன. அதிக துணிகரமானதும் தீரமானதுமான படுகொலை நடந்ததென அறிந்தேன். நிச்சயமாய் இக்கார்டு சிங்கப்பூரிலிருக்கும் இராமலிங்கத்தினிடமிருந்துவந்தது. முதல் வந்த கார்டு சென்னையில் போஸ்ட் செய்யப்பட்டது. இப்போது அதை யார் அனுப்பியிருப்பார்கள்.

"இக்கேள்வி அதிசீக்ரமே விடையளிக்கப்பெற்றது. சென்னகேசவலு இச்சங்கதியைப் பற்றி தன் காதலிக்கும், ஸ்ரீராமுலுவுக்கும் தவிர வேறொருவருக்கும் தெரிவிக்கவில்லை. இம்மனிதன் ஒரு காரணமாய் விவாஹத்தை தடுத்துவந்தான். அவனுக்குக் கலியாணம் இடையூறாக இருந்தாலன்றி அவன் தடுக்க முகாந்திரமில்லை. நான் பலவழிகளினின்று இக்கால் கதியை அறிந்தேன். ஸ்வர்ணாம்பாள் விவாஹம் இவன் கண்டு பிடிக்கப்போகும் சங்கதி முடியுமுன் நேருமாயின் அவன் நாசமாகப்போய் விடுவான்.

"ஸ்ரீராமுலுமாத்திரம், அதிக தைர்யமுள்ளவனும், தீவிர புத்தியுள்ளவனாகவும், நான் செய்யப்போகும் குற்றச்சாட்டுக்கு எதிர்பார்த்திருந்து தைர்யமாய் மறுதலித்திருந் திருப்பானேயாமாகில் நாம் இக்குற்றத்தை அவன்மேல் சாட்ட அதிகஷ்டமாய் முடிந்திருக்கும். ஆனால் அவன் செய்தகுற்றம் இதுவே முதன்மையாகையால், அவன் எப்போது தைர்யமாக இருக்கவேண்டுமோ அப்போது அதைர்யமடைந்து அபஜயமடைந்தான். அவன் கையில் வைத்திருந்த விஷம் அவன் தன்கைகளால் முகத்தை மூடிய போது வாயினுள் சென்றதால் மறிந்தான். தன்வினை தன்னைச்சுடும் என்றபடி அவன் சூழ்வினை அவனையே சூழ்ந்துகொண்டு சமயத்தில் ஆளைக்காட்டிக் கொடுத்துவிட்டது.

சென்னகேசவலு "சூதுவிரும்பேல்" என்னும் மூதுரையைமதித்து நடந்திருப்பானாகில் இப்படி அகால மரணத்துக் காளாகியிருக்கமாட்டான். ஆதலால் ஸன்மார்க்கத்தைவிட்டு விலகினால் பின்னர் நேர்வழிப் பட்டுய்வது கஷ்டம். திருட்டுத்தனமாகக் குற்றஞ்செய்கிற சாமர்த்தியசாலிகள் சூழ்ச்சியைக் காட்டிக்கொடுக்க மனச்சாக்ஷியொன்று தன்னுள்தானே காவலாயிருக்கிறது. அந்தக் காவல் கடந்து நடப்பது எப்போதும் அநர்த்தம் விளைக்கும்.

(முற்றும்)

## TIT BITS FOR SCHOOL CHILDREN.

## பள்ளியிற் பழகும் சிறுவர்க்கான துக்கடாக் கதைகள்.

"சோக்கா, சோக்கா, சோறுண்டோ?
சோழியன் வந்து கெடுத்தாண்டோ!"

குழந்தைகளே, நான் உங்களுக்கு சின்னச் சின்ன துக்கடாக்கதைகள் சொல்லுவதாக ஒப்புங்கொண்டு விட்டபடியால், பத்திராசிரியார் என்னை மாசாமாசம் சதிருக்கிருக்கிறார். அறைக் கூத்து அம்பலக் கூத்தானால் அதைத்தான் "சதிருக்கிழுக்கிறது" என்று சொல்கிறது. அறையிலாடுவது சுலபம். அதையே அம்பலத்திலாடுவது கஷ்டமாகும். ஏனெனில் சபையில் கூட்டம் நெருங்கியிருக்குமாதலால். கூட்டம் நெருங்கியிருந்தால் என்ன? என்கிறீர்களோ, ஆயிரங்கண்கள் ஒரே காலத்தில் ஒருவனைப் பற்றி நின்றால் அது எப்படி யிருக்கும் தெரியுமா? சூரியனுடைய கிரணங்கள் பரவி யிருந்தால் அது பஞ்சிலுள்ள ஈரக்கை

மட்டும் இழுத்துக்கொண்டு அதை உலரச் செய்யுமேயன்றி அதை எரித்துவிடும் சக்தி அக்கிரணங்களுக்கில்லை, ஆனால் ஒரு சூரிய காந்திக் கண்ணாடியை வெயிலில் பிடித்தால் அதில் விழும் கிரணங்களெல்லாம் ஏகாக்கிரமாய் ஒருமுனைப் பட்டுப் பாயும். அப்பொழுது பஞ்சு தீப்பற்றிக்கொண்டு எரிந்துபோம். இந்தத் தீ எங்கிருந்துண்டாயிற்றென்றால் அந்தக் கிரணங்களிடத்தி லிருந்தே உண்டாயிற்று. ஆனால் பஞ்சில்லாதபோது அத்தீயேன் காணப்படவில்லையென்றால் "அதற்குப் பற்றுக்கோடு இல்லாமையினால் காணப்படவில்லை." அதேமாதிரி அஞ்சுபேரறிய அறையிலாடின கூத்தை ஆயிரம் பேர் முன் அம்பலத்தாட வேண்டுமென்றால், ஆடுகிற பேர்வழியிடத்தில் குற்றங்குறை யொன்றும் இருக்கக் கூடாது. அப்பொழுதுதான் அம்பலக்கூத்துச் சிறக்கும். குற்றங்குறை யிருந்தால் பஞ்சு சூரிய காந்தத்தின்முன் தீப் பற்றிக்கொண்டது போல், அக்குற்றங்குறை ஜனசமஷ்டிப் பார்வையில் எப்படியும் வெளியாகிவிடும். ஆதலால்தான் உங்களோடு அறையிலாடினதையெல்லாம் அம்பலத்தாடுவதென்றால் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது! எப்படியும் நான் குட்டியண்ணா தானே! இளங்கன்று துள்ளுபயமறியாது அல்லவா!

ஆம்! ஆனால், துள்ளினமாடு பொதி சுமக்கும், என்பார்கள்! அதுவும் ஞாபகத்தி லிருக்கட்டும்! உஷார்!' என்கிறார் நமது பெத்தண்ணாவாம் பத்திராசிரியர். அவர் சொல்வதிலும் ஒரு சூக்ஷமமிருக்கிறது! ஆகையால் நான் அம்பலக் கூத்தாடும்போது நீங்களெல்லாம் இப்படி குறுக்கே பேசி சேஷ்டை செய்யக் கூடாது. கன்றுக்குட்டி மாட்டுத் தொழுவத்தில் தான் துள்ளலாம்: நடுவீதியில் துள்ளினால் யாருக்கும் அசௌகரியமில்லாமற் பார்த்துக்கொள்ள வேண்டியது சொந்தக்காரனுடைய பொறுப்பு. அதுபோல நீங்களும் நானும் கூடி வேடிக்கை விநோதமாய்ப் பேசிக் குதிப்பதில் யார் காலையாவது மிதித்துவிட்டால் அதற்குப் பத்திராசிரியர் உத்திரவாதியாவர். ஆகையால் நீங்களெல்லாரும் விவேகசிந்தாமணிவெளியில் விளையாடும் பொழுது வாலைச்சுருட்டி மடியில் வைத்துக்கொண்டு துஷ்டத்தனம் ஒன்றும் செய்யாமல் சமர்த்துப் பிள்ளைகளாக விருக்கவேண்டும். தெரிந்ததா! இந்தப் போதனையை மறந்துவிடாதீர்கள். உங்களில் யாராவது விஷமம் செய்தால் பத்திராசிரியர் உங்களையும் என்னையும் கிட்ட அண்டவிடமாட்டார். ஆகையால் ஸாவதானமாக விருந்து கேளுங்கள்.

ஒரு ஊரிலே ஒருவன் பரம ஏழையாயிருந்தான். என்ன ஏழையாக விருந்தாலும் பசி யாரைவிட்டது! ஏழை, பணக்காரன், அரசன், பிரஜை யென்கிற வித்தியாசம் ஒன்றும் அதற்கு இல்லை. உதராக்னி யெரிவதற்குக் கட்டையில்லாவிட்டால் அது பசி ரூபமாகத்தோன்றி தாபாக்னியாக தேஹத்தைத்தஹித்து விடும். ஆதலால் யாராயிருந்தாலும் பசிக்கு ஏதாவது ஆகாரம் போட்டே யாகவேண்டும். அந்தப் பரம ஏழையும் அப்படியே படாதபாடெல்லாம் பட்டு போதும் போதாமைக்குப் பிச்சையெடுத்து ஆகாரந்தேடி வயிற்றுக்குப் போட்டு வந்தான். அவன் பரம ஏழையாக விருந்ததோடு தரித்திரமும் அவனைப் பிடித்திருந்ததால் அவன் மஹாலோபியாயிருந்து உண்ணச் சோறில்லாவிட்டாலும் காசு சேர்ப்பதில் கண்ணாயிருந்தான். இரவில் உண்ணும் போது விளக்கேற்றி வைத்து உண்டால் எண்ணைச் செலவு நஷ்டம் தானே, விளக்கில்லாமலுண்டால் எண்ணைச்செலவை லாபம் பிடித்து "சிறுதுளிபெருவெள்ளம்" என்று சிறுகச்சிறுகப் பிடித்துப் பெருந்தனம் சேர்த்து விடலாமென்று அவன் எண்ணலானான். ஆகவே அவன் உண்ணும் போதுகூட வீட்டில் விளக்கேற்றுவதில்லை.

இப்படியிருக்கையில் அந்தவீட்டுக்கொல்லையிலுள்ள கிணற்றில் சோற்றுக்கின்றி துர்மரணமாகச் செத்தவனுடைய ஆவி பிசாசு ரூபம்கொண்டு பகல் நேரத்தில் கிணற்றுக்குள்



தானே ஒண்டியிருந்து இரவு நேரத்தில் அந்த வீட்டு முற்றத்திலுள்ள வேப்பம் செடியொன்றில் தொத்தியிருந்து இவன் இரவில் சோறுண்ணும் போது இவனுக்குத் தெரியாமல் இருட்டில் அன்னரஸத்தை யெல்லாம் தான் புசித்து வசித்து வந்தது.

ஏழைக்கு இது தெரியாது. ஆனால் அவன் என்ன சாப்பிட்டாலும் அவன் பசிதீராமல் குடலைப் பிடுங்கிக்கொண்டேயிருந்தது கொண்டு என்னமோ வியாதி யென்று நினைத்து வைத்தியனுக்குக் கையைக்காட்டினால் காசு கொடுக்க வேண்டுமே யென்று அஞ்சி, கண்டார் கழிந்தாரிடமெல்லாம் தன் குறையைச் சொல்லி முறையிட்டு வந்தான். இப்படியிருக்கும் நாளில் ஒரு நாள் ஒரு சோழியப்பிராமணன் அந்த வீட்டுக்கு வந்தான். அவன் இரவு நேரத்தில் வீட்டில் விளக்கில்லாமலிருக்க ஏனென்று அது கேட்டான். ஏழை "விளக்குவைத்து எந்நேரமாயிற்று! இதுவரையில் யார் விளக்கு வைத்திருப்பார்கள்? போம், போம்!" என்றான். ஆனாலும் அவருக்கு தாஹத்துக்கு சாப்பிட வேண்டியிருந்தால் சற்று விளக்கேற்றும்படி கேட்டுக்கொண்டான்.

"போ போ! உனக்கென்ன, வாய்க்குக்கை வழி தெரியாது போலிருக்கிறதே! விளக்கில்லாமல் இந்த தீர்த்தத்தை சாப்பிடத்தெரியாதா உமக்கு என்ன!" என்று பரிஹாஸம் செய்தான். இவன் பரமலோபி யென்றுணர்ந்து, "அப்பா! நீ சாப்பிடுகிற போது விளக்கு வெளிச்சத்துக்கு என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் அந்தச் சோழியன்.

"நான் இருட்டில் தான் சாப்பிடுகிறவழக்கம்!" என்று பதில் சொன்னான் ஏழை.

"சிவசிவா! இந்தச்சண்டாளன் கையால் தீர்த்தம் சாப்பிட்டாலும் இவன் பாபம் நம்மைப் பற்றிக்கொள்ளு" மென்று சொல்லி கையிலுள்ள தீர்த்த பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டு ஓடலானான். அவனோடே இவனோடே, ஏழை சோழியனைத் துரத்திக்கொண்டு போய் கடைசியில் அவனைப்பிடித்து ஐயா, ஐயா, உம்காலில் விழுகிறேன் ஒரு, வார்த்தைக்குமட்டும் பதில் சொல்லிப்போம் என்று வழியை மறைத்துக்கொண்டு அவன் காலில் விழுந்தான்.

சோழியன் "என்ன கேட்கவேணுமோ, கேட்டுத்தொலை" யென்றுசொல்ல, நீர் வந்த போது உம்மோடு எத்தனைபேர் கூடவந்தார்கள் சொல்லும் என்றான்.

"நான் தனியாகத்தான் வந்தேன்" என்றான் சோழியன்.

"இல்லை; நீர் பேசிவிட்டு ஓட்டம் பிடிக்கவே, உம்முடைய பேச்சைக்கேட்டு 'சபாஷ்!'என்று கைகொட்டிச் சிரித்துக்கொக்கரித்த சப்தம் கேட்டதே, கண்ணுக்கு மட்டும்தான் ஆள் தென்படவில்லை. அந்தப் பேச்சரவம் எங்கிருந்து வந்தது?" என்றுகேட்டான்.

சோழியன் சற்று நிதானித்துப்பார்த்து அவன் கதையையெல்லாம் சொல்லக்கேட்டு அப்பா அந்தவீட்டில் பிசாசு குடியிருக்கிறாப் போலிருக்கிறது. இருட்டில் நீயுண்கிற உணவெல்லாம் உனக்கு உடம்பில் ஒட்டாமற் போவதற்குக்காரணம் அதுதான். இருட்டில் பிசாசு அன்னரஸத்தையெல்லா முண்டுவிட நீ அந்த சேஷத்தை யுண்கிறாய். அதுதான் உனக்கு உண்ணும் உணவு உடம்பில் ஒட்டவில்லை. விளக்கேற்றிவைத்து உண்டு பார்! நான் சொல்வதினுண்மை வெளியாகும்." என்று சொல்லிப்போனான்.

மறுநாள் ஏழை அப்படியே விளக்கேற்றி வைத்துச்சோறுண்ண அன்றைக்குமட்டும் அவன் உண்டது பசிதீரவிருந்தது. அப்பொழுது இன்னம் என்ன அதிர்சயம் நடக்குமோ என்று அவன் உற்றுக்கேட்ட வண்ணமாயிருக்கையில் கொல்லைக்கதவைத் தட்டுகிற அரவம்காதில் வீழ்ந்தது. உடனே "சொக்கா, சொக்கா, சோறுண்டோ?" என்கிற சப்தம் காதில்விழுந்தது. அதற்கு வேப்பமரத்துப் பிசாசாகிய சொக்கன், "சோழியன்வந்து கெடுத்தாண்டோ!" என்று பதில் சொல்லியது.

குழந்தைகளே, ஏழைதன் மனையிருள் நீங்கிச் சுகப்பட்டாற்போல் நீங்கள் உங்கள் மனவிருள் நீங்கிச் சுகப்படவேண்டும். அந்த ஏழை மனைவிளக்கின்றிச் சோறுண்டது அவனுக்கு உடம்பில் ஒட்டாமற் போனதுபோல், நீங்கள் 'அஹவிளக்கு' இன்றிப் படிப்பதெல்லாம் உள்ளத்திற்பதிந்து உண்மையறிவை விர்த்திசெய்யாமல் வெறும் ஏட்டுப் படிப்பாக முடிகிறது. "ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது" என்று உங்களுக்குத்தெரியுமே. சோழியன் என்றால் தீக்ஷைவகித்து ஸ்வாமி சேவைசெய்யக் கங்கணங்கட்டிய தீக்ஷிதர்கள் என்றுசொல்லும் தில்லைவாழ் அந்தணர் குலத்துக்குச் சொல்கிறது. அவர்களுடைய ஜாதிப்பேர் அது. அந்த சோழியப்பிராமணன் தீர்த்தபானம் கேட்டாற்போல் விவேகசிந்தாமணி உங்களுக்குபகாரமா யிருக்கவேண்டுமென்கிற ஆவாக்கொண்டு "தண்ணீர்ப்பிச்சை" அதாவது "ஈரமுள்ள நெஞ்சம்" வேண்டுமென்று பிச்சை கேட்கிறது. விவேகசிந்தாமணிப் பத்திராசிரியர் அந்தச்சோழிய ப்ராஹ்மணனைப் போல் ஊருக்குழைக்கக் கங்கணம்கட்டி மாயாண்டிரூபமாக வெளிவந்தவர். அவரே இப்பொழுது சோழியப்பிராமணனாக உங்கள் மனவிருள் போக்கக் கங்கணம் கட்டியிருக்கிறார். சமஷ்டிசேவையால் சேவைசிறப்பெய்தும். ஆகையால் நீங்கள் விவேகசிந்தாமணி சொல் வார்த்தையைத் தள்ளாமல் கேட்டுப் பிழைத்தால் மனவிருள் நீங்கி விவேகம் என்னும் அஹவிளக் கேற்றிவைத்து உண்டசோறு உடம்பிலொட்டம் பிழைக்கலாப். கேளாவிட்டால் சோக்கன்பாடு கொண்டாட்டம்தான்.

"உண்டு பசி தீர்ந்தாற்போலிருக்கும்
கண்டுகள் காட்சிமிகும்"—என்று

ஔவைப்பாட்டியும் ஞானக்குறள் ஓதியிருக்கிறார்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
குட்டியண்ணா.

## SCIENTIFIC RECREATIONS FOR THE YOUNG.

### சிறுவர்க்கான ஜாலவிநோதங்கள்.

ஜாலசம்மட்டி.

நீளமாயும் வாய் நெருக்கமாயுமுள்ள ஒரு புட்டியில் கால்பங்கு ஜலம் வார்த்து அடுப்பின் மேல் வைக்க, சற்றுநேரத்திற்குப் பின்பு புட்டிக்குள்ளிருக்கும் ஜலம் உஷ்ணத்தினால் கொதித்து நீராவியாய் புட்டிவாயின் வழியாய் வெளியில் புறப்படும். இவ்வாறானபின்பு புட்டியை அடுப்பினின்றும் எடுத்து சில வினாடியானபின், புட்டியின் வாயில் அழுத்தமாய் 'கார்க்கு' அடைத்து முத்திரை மெழுக்கால் முத்திரைபதித்து குளிர்ந்த இடத்தில் புட்டியை வைத்துவிடவும். நன்றாய் உஷ்ணம் ஆறினபின்பு புட்டியை எடுத்துக் கீழுமேலுமாகக் குலுக்க, உள் உலவும் ஜலம் கற்கட்டிகள் போல் புட்டிக்குள் தாக்கும்.

15. சூக்ஷ்ம கணிதம்.

ஆயிரம் போர்வீரர்களை ஒருவரிசையாக நிற்கவைத்து சேனாதிபதியானவன் அவ்வரிசையில் முதலில் நின்றவனுக்கு ஒரு பழமும் இரண்டாவது நின்றவனுக்கு இரண்டு பழமும் இவ்வாறே கடைசியில் நின்றவனுக்கு ஆயிரம் பழமும் அளித்தனன். பின்பு எல்லாரும் ஒரு பெரிய கூடையில் வாங்கின பழத்தை ஒருங்கே போட்டுவிட்டனர். கூடையில் மொத்தம் எத்தனை பழமிருக்கும்? முதல் எண்ணிலிருந்து ஆயிரம் எண்வரையிலும் கூட்டி மொத்தஞ் சொல்ல அநேக நாழிகை பிடிக்குமல்லவா? இப்படிச் சொல்லாது 2-நிமிஷத்திற்குள் முழு மொத்தத்தையும் சொல்லவேண்டும். இது சொல்வதெப்படி?

விடை:—கடை எண்ணாகிய ஆயிரத்தையும் அதின் சரிபாதியாகிய ஐந்நூற்றையும் பெருக்கி வந்த தொகையோடு கடை எண்ணாகிய ஆயிரத்தின் பேர்பாதியாகிய ஐந்நூற்றைக் கூட்ட மொத்தம் வந்துவிடும்.

1000-கடைசித்தொகை
500-ஷை யின் பாதி

பெருக்கிவந்ததொகை 5,00,000-இத்தோடு
ஆயிரத்தில் பாதியாகிய 500-ஐகூட்ட

மொத்தம் 5,00,500

"THE VICEROY'S THANKS TO THE CHILDREN OF MADRAS."
"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."
"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."
ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.
"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




[God is Love: Knowledge is Power: *Aum.*
அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.]
"Approved"
"New Series" ஸத்தியமே ஜேயம்—SATYAMEVA JAYATE.
[சஞ்சிகை 5.
புத்தகம். 22.] 1914ஸு ஆகஸ்ட்டுமீ, ஆனந்தஸு ஆவணிமீ

## "THE VICEROY'S THANKS TO THE CHILDREN OF MADRAS."

Chiranjivi S. Sadananda Subrahmaniam has received the following letter of acknowledgment communicating the Viceroy's thanks to the Children of Madras, from Sir James H. Du Boulay, Private Secretary to the Viceroy :—

"VICEROY'S CAMP, INDIA,
*29th July* 1914.

" Dear Sir,

"I am desired to acknowledge, with the Viceroy's thanks, your endorsement dated July 24th forwarding a letter from Mr. C. V. Swaminathaiyar to His Excellency's address giving cover to messages of sympathy from the Children of Madras to His Excellency the Viceroy and to the Hon. Diamond Hardinge.

Yours truly,
J. H. DUBOULAY,
*Private Secretary to the Viceroy.*

"S. SADANANDA SUBRAHMANIAM ESQ."

## THE CHILDREN'S MESSAGE OF LOVE AND CONDOLENCE TO H. E. THE VICEROY AND CHILDREN.

May it please your Excellency,

On behalf of the Children of Madras I beg leave to lay before your Excellency personally the following English transfusion of the Children's Message of Love and Condolence to His Excellency the Viceroy and Children adopted at the assemblage of children on the 14th July on hearing the sorrowful news of the passing away of Her Excellency Lady Hardinge, a Mother beloved of All. The original is published in the "Vivekachintamani Children's Special" which is prefixed as an extra supplement to the July issue of the "Vivekachintamani" the recognised organ of the Children's Day Movement, the aim of which is to imbue the minds of children with those ideals of social service which

are essential to produce a healthy tone and stable character in the natural development of the child-mind which is intuitively active and responsive to every impulse from within and from without. With these few words I beg to subjoin for your Excellency's and Children's information the English transfusion of the Children's Message sending with it a copy of the original in Tamil which is the mother-tongue of the children assembled. With fervent prayers for peace of mind and Power of Grace to bear the trials and tribulations of this life,

LALITALAYA, MYLAPORE. I beg to remain
*Madras, S., 24th July* your Excellency's most
1914. obedient & humble servant,

C. V. SWAMINATHAIYAR, K.S.S.A.

The following is an English transfusion of the Children's Message:—

(*First Verse.*)

"Prompted by Mother-Love H. E. Lady Hardinge our (civic) Mother, took the Innocent Children (of this Great Empire) to her tender heart and bade them rejoice on the Birthday of her Lord, our beloved Viceroy, thus inaugurating 'the Children's Day' on 20th June 1913.

"For this act of kindness on her part, we, the Children, loved her as our own Mother and prayed: "God bless the Founder of the Children's Day." While this prayer was still in our lips and we were celebrating the Children's Day Festival here there and everywhere (in the midst of family surroundings) our Gracious Mother left us all alone on earth,—and not only us, but even th se born of her flesh as dear to her as ourselves—and thinking of her Heavenly Home and Rest, she left even her beloved Lord and husband alone on earth, and like one versed in the mystic art of leaving one body to enter another at one's sweet will and pleasure, she left even her own fleshy tabernacle on earth, passing, in Angel-guise, away to her Heavenly Home and Rest.

We, her children by virtue of the love she bore us in the pursuit of her High Ideal on earth, with the children born of her body, alas! are left motherless on earth to bemoan her loss. Our heart melts with grief and we, poor things, are struck dumb and speechless, deprived of the power to express our sorrow like those dumb creatures that voiceless creep or crawl on earth."

(*Second Verse.*)

"Hardinge My Lord, true-hearted Son of Man (strong in the strength of Grace), thy heart grown great in the sunshine and warmth of Lady Hardinge's Love, now shivers at the cold thought of separation and thy life in tremulous emotion longs for that fellowship on earth, which, come weal or woe, made light the burden of this life to bear.

"Thy genuine grief and sorrow, My Lord, has entered like iron our young and tender hearts; and seest thou, how we trembling quiver, unable to bear the pain of it! We, Children assembled, in our innocence, grieve and suffer the sympathetic pangs of pain and sorrow too deep for us to speak.

"We, the children of school-going age, in meeting assembled, for ourselves and our brothers and sisters at home, our true love and condolence do respectfully tender, *My* Lord, which pray accept and convey to her who by virtue of the proverb old, 'like mother, like chi'd' inheriting the grace and love of her dearest Mother (now gone to Rest) fills her place in the heart not only of thee, My Lord, but of all who loved her mother and learned to like her for the goodness of her heart, (though the sight of her was denied to us, the Children of Madras, when ye both in royal state our city entered in November last).

"This our prayer grant us, My Lord, that thou shouldst in our name and behalf thus speak to our beloved and bereaved sister, the Hon'ble Diamond Hardinge, whom we all hold dear as the light of our eyes:—



"We, the Children, without intermission pray to God that the Grace of the Lord, in its fullness of Glory may descend on thee and thy children dear and lighten the burden of this sorrow great and consolation grant to the pure hearts that in poignant grief and sorrow mourn the loss of a mother beloved of all.

"This our constant prayer to God; and may the knowledge of this grant thee, My Lord, and thy children dear, consolation great and courage of heart to bear without sinking the burden of this sorrow keen and survive its effect to gently rule over us, is (the substance of) our Address and Message to thee, "our earthly King" and Viceroy beloved of our Sovereign Great."

Here endeth the Address and Message of the Children of Madras to His Excellency the Viceroy and Children as adopted by them in meeting assembled to offer their Love and Condolence on the evening of the 14th of July 1914.

(True copy and extract.)

ANANDA MISSION, (Signed)
MADRAS, S. INDIA, C. V. SWAMINATHAIYAR,
*24th July* 1914. K.S.S.A.,
*Honorary Secretary,*

All-India Children's Memorial Movement.

---

Respectfully submited to His Excellency the Viceroy in person through the Military Secretary to H. E. the Viceroy and Governor-General of India by the twice orphaned child,

(Sd.) **S. Sadananda Subrahmaniam,**
LALITALAYA, MYLAPORE. *Local Secretary of the*
*Madras, S., 24th July* 1914. *Children's Movement,*
*on the Anniversary*
*Day of his Mother beloved.*

---

விவேக சிந்தாமணி

## ON CHILD EDUCATION

### THE TRAINING OF THE SENSES AND OF THE ACCURATE POWERS OF OBSERVATION.

### பாலபோத சிக்ஷை.

சிரவண-மனனம்.

குழந்தைகளுக்கு வித்தியாப்பியாஸம் செய்வதில் மூன்று அம்சங்களை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலாவது குழந்தைகளுடைய இந்திரியங்களைப் பழக்கவேண்டும். இந்திரியங்களால் உணர்ந்ததைக் குழந்தைகள் மனதிலிருத்தி ஆராயத்தகுந்த சிக்ஷையும் வேண்டும். அதாவது ஒரு குழந்தை ஒரு நாயைப்பார்த்தால் அதன் உருவம் உறுப்புகள் குணங்கள் இவைகளைக் கவனித்து மனதிலிருத்தச் செய்ய வேண்டும். மனதிற்பட்ட உருவங்களையும் மற்ற குணவிசேஷங்களையும் ஆராய்ந்தெடுத்து விசாரம் செய்யவும் விசாரபுத்தியால் ஆய்ந்ததை நிதானித்துணரவும் போதிக்கவேண்டும். இம்மூன்றையும் (1) இந்திரிய ஞானம், (2) ஞாபகசக்தி (3) விசாரஞானம் அல்லது நிதானபுத்தியென மூவிதமாகக் குறிப்பிடலாம்.

கண்களைக் காணப்பழக்கல் வேண்டும்.

செவிகளைக் கேட்கப்பழக்கல் வேண்டும்.

இப்படி பஞ்சேந்திரியங்களும் தத்தம் தொழிலை இயற்றப் பழக்கல் வேண்டும்.

உருவங்களையும் உருவபேதங்களையும் வர்ணங்களையும் வர்ணபேதங்களையும் அறிந்து மனதிலிருத்தி அவற்றின் பேதாபேதங்களை விசாரபுத்தியால் தெரிந்து நிதானம் செய்வது கண்களைக்காணப் பழக்குவதாகும். கண் உறுப்பு; காண்பது காட்சி; காண்பான் அறிவுரு; காண்பொருள் கண்ணுக்குப் புலனுமவை-

அறிவுரு என்றது எப்போதும் ஆனந்த ஸ்வரூபம். குழந்தை காணக்கற்றதும் காட்சியைக் கண்டுகளிக்கும். மூன்றாவது மாசம் குழந்தை தாய்முகம் காணக்கற்கும் என்பர். தாய்முகம் காணக்கற்ற குழந்தை அது காணும் காட்சியைக் கண்டுகளிக்கும். அப்புறம் விளக்கைக் கண்டு களிக்கும். அதன்பின் வடிவத்தைக் கண்டுகளிக்கும். அப்புறம் வர்ணத்தைக் கண்டுகளிக்கும். இப்படி குழந்தை புதிதாய்க் கற்பன வெல்லாம் அதன் மனத்தில் ஞாபகசக்தியாக அமர்ந்திருக்கும். இதுதான் மனோவிருத்தி. இந்த மனோவிருத்திதான் விசாரஞானத்துக்கு ஆதாரம். விசாரஞான மிருந்தால்தான் நிதானபுத்தி யுண்டாகும். (Reasoning and Judgment) விசார ஞானமும் நிதானபுத்தியும் உபாயமாயிருக்கும். இந்திரிய ஞானமும் ஞாபகசக்தியும் விசேஷமாயிருக்கும்.

இந்திரியஞானம் முதிர்ந்தால் பிரபஞ்சஞானம் முதிரும். பிரபஞ்சஞானம் முதிர முதிர ஞாபகசக்தி யதிகப்படும். ஞாபகசக்தி யதிகப்பட்டால் விசாரஞானம் ஏற்படுவது சுலபம்: விசாரஞானம் ஏற்பட்டால் நிதானபுத்தி யுண்டாகி அது நிலைத்திருக்கும். நிதானபுத்தி ஸ்திரப்பட்டால் எதையும் திராசுமுனை போல் நடுவுநிலையாயிருந்து நிதானம் தப்பாமல் தீர்மானிக்கும் சக்தி யுண்டாகும். இதுதான் "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்று சொன்னதற்கு அடையாளம்.

குழந்தைகளுடைய இந்திரியங்களைப் பழக்குவதற்கு ப்ரோபெல் ஏற்படுத்திய 'கிண்டர் கார்டன்' முறையை அநுசரிப்பவர்கள் அவர் எப்படி உருவம், வடிவம், வர்ணம், கடினம், மிருதுத்துவம் முதலானவற்றைப் போதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார் என்பது விளங்கும். இதற்குப் பொருள் பாடம் (Object lesson) என்று சொல்லுகிறார்கள். இதையே புலன் தீக்ஷையென்றும் சொல்லலாம். ஏனெனில் புலனறிவு புலப்படவே இந்தப் 'பொருள் பாடங்கள்' ஏற்பட்டவையாக விருக்கின்றன.

இந்திரியங்களைப் பழக்கினபின் பொறி-புலன் இரண்டுக்குமுள்ள உறவுதானே விளங்கும். பொறியென்பது அந்தக்கரணங்களில் ஒன்று. புலன் என்பது புற உறுப்புக்களைக் குறிக்கும்.

இந்திரியங்களை நன்றாகப் பழக்கினபின் புலனறிவைத் திரத்தெளிய ஆராய்ந்து நிதானித்து உள்ளத்திருத்தும் சக்தி பொறிகளைப் பழக்குவதாகும். இது குணங்குறி கண்டு உவத்தல் என்னப்படும். இதனால் "Accurate powers of observation" சித்திக்கிறது.

"Training of the Senses" என்று சொல்லும் இந்திரியப் பயிர்ச்சியைப் பொதுவாய்ச் சிரவணசக்தி, யென்று சொல்லுவர்.

"Accurate Training of the powers of observation" என்று சொல்லும் பொறியின் பயிர்ச்சியை மனனம் என்று சொல்லுவர்.

இந்த இரண்டும் குழந்தைகளுக்கு இயல்பாகவும் (Instinctive) தெய்விகமாகவும் (Intuitive) அமையப்பெற்றுள்ளன. அவைகளைப் பழக்கத்துக்குக் கொண்டுவந்து தேற்றுவதே பயிர்ச்சி யென்னப்படும்.

குழந்தைகளுக்கு அறியும்சக்தி தானாக அமைந்திருக்கிறது. அந்த சுபாவசக்தியை நாம் பிரகிருதி தர்மத்துக்கு விரோதமின்றிப் பழக்குவதே மிகவும் மேலான வித்தியாப்பியாஸமாகும்.

"பாலபோதம்" என்பது குழந்தை யறிவைக்குறிக்கும். அது எப்போதும் அறிய முயன்றுகொண்டேயிருக்கும். அந்த முயற்சிக்கு அநுகூலமான சாதக சாதனங்கள் அமைத்து வைப்பதுதானே பெற்றோருடையவும் உபாத்தியாயருடையவும் கடமையாகும். தோட்டக்காரன் செடிவைத்துப் பயிர் செய்தால் செடியினுடைய சுபாவமறிந்து அது வளர்வதற்கு வேண்டிய சாதகங்களையமைத்து



இடையூறுயுள்ள பாதகங்களைக் களைபிடுங்கி யெறிகிறான். அப்படியே குழந்தைகள் அறிவு விரிவதற் கனுகூலமான சாதகங்களைச் செய்து பாதகமான இடையூறுகளை நீக்குவது பெற்றோர், போதகர் கடமையாகும். ஆதலால் இம்முறைக்கு ப்ரோபெல் "கிண்டர்கார்டன்" (Child-Garden) "பாலபிருந்தாவனம்" என்று பொருள் படும் நாமகரணம் சூட்டினார்.

## ON FEARLESSNESS.

## அபயம்.

"அஞ்சினேன்; அபயம்!" என்றார் உண்மைத் தொண்டராம் ஒரு பக்தர். கடவுளிடத்தில் அன்பு பூண்டு தொண்டு செய்யக்கற்ற தொண்டர்களும் "அஞ்சினேன்; அபயம்!" என்றால், மற்றவர்களுக்குக் கேட்பானேன். "அஞ்சினேன்" என்றால் பயந்து போனேன் என்று அர்த்தம். "அபயம்!" என்றால், அந்த பயம் நீங்க "அஞ்சாதே!" யென்று திடம் கூறல் வேண்டும் என்று அர்த்தம்.

சிந்நாட் பல்பிணிப்புல்லுடம்பாம் தேஹத்தை நம்பி "தேஹம் நான்" என்று தேஹத்துக்குச் சுபாவமான அற்பவாழ்வு, பலநோய்களுக்கு ஆளாதல், "புன்புலால் யாக்கை" யென்றபடி ஈனமான மாம்ஸபிண்டமாகிய உடம்பை என்றும் அழியாததும் எல்லா சுகபோகங்களுக்கும் ஆதாரமும் ஆதேயமுமாயிருக்கிற "நான்" என்னும் சத்புருஷ சப்தத்தோடுசேர்த்து இந்த தேஹம் நான் என்று மயங்கி தேஹத்துக்கு வரும் துன்பங்களை யெல்லாம் தன்னதாக பாவித்து துக்கசாகரத்தில் மூழ்கி துன்ப மூட்டையைச் சுமந்துகொண்டு வழிநடக்க முடியாமல் தவிக்கிற ஏழைகளாம் ஜீவன்கள் பயம் என்கிற பிசாசினால் பிடித்து ஆட்டப்படுகிறார்கள்.

சோற்றுக்கில்லாமற் போனால் என்ன செய்கிறது? என்கிறபயம் எல்லாருக்கும் உண்டு.

அந்தபயம் நீங்கக் கைப்பொருளிருந்தால், நோவுநொடி வந்தால் என்ன செய்கிறது? என்கிற பயம் பிடித்துக்கொண்டு உபாதி செய்யும்.

அந்த பயத்துக்கிடமில்லாமல் திடகாத்திரமிருந்தால், "ஐயோ! வயதாகிறதே மூப்பு (கிழத்தனம்) வந்தால் என்ன செய்கிறது?" என்கிற பயம் பிடித்துக்கொண்டு சஞ்சலத்தை யுண்டுபண்ணும். பசி, பிணி, மூப்பு என்கிற இந்த மூன்று பயமும் நீங்க தேறுதல் கூறப்பெற்றாலும், "ஐயோ! மரணம் வந்தால் என்ன செய்கிறது?" என்று மனம் ஏங்கிநிற்கும்.

பசி, பிணி, மூப்பு, மரணம் ஆகிய இந்த நான்கும் ஒன்றுவிட்டால் ஒன்று ஜீவனைப் பற்றிக்கொண்டு தீராத பயத்தை யுண்டுபண்ணும்.

புருஷார்த்தங்கள் நான்கையும் கெடுக்க இந்த நான்கு பயகாரணங்களும் போதுமானவை.

பசியினால் பீடிக்கப்பட்டவனுக்கு தர்மம் இல்லை.

பிணியினால் பீடிக்கப் பட்டவனுக்குப் பொருள் இல்லை. அவனுக்குக் கைப்பொருள் ஏராளமாயிருந்தாலும் அநுபவிக்க முடியாமையால் இருந்தும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

மூப்பு மேலிட்டவனுக்குக் காமம் இல்லை.

மரண பயமுள்ளவனுக்கு மோக்ஷமில்லை.

இப்படியாக தர்மார்த்த காமமோக்ஷம் என்கிற புருஷார்த்தங்கள் நான்கும் பசி, பிணி, மூப்பு, மரணம் என்கிற அச்சப்பேய்களால் பீடிக்கப்பெற்றவர்களுக்கு இல்லையாகும்.

புருஷார்த்தங்கள் இல்லையாகவே மனுஷ ஜன்மம் பாழ்த்துப்போகிறது. மனுஷ ஜன்மம் பாழ்த்துப் போனால் "நரகவேதனை" யென்று சொல்வது உடனே சித்திக்கும். அழுகிறபிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுகிற தோரணையாக தற்காலம் அவனைப் பீடித்துள்ள நரகவாதனையைப் போக்கும் வழி தோன்றாமையால் அதனாலுண்டாகும் துக்கத்தை சமனம் செய்யும்பொருட்டு நரகமென்பது மரணாந்தத்தில் (இறந்தபிறகு) லபிக்கும் ஓர்

வாசஸ்தலமாகக் கட்டுக்கதை கட்டிவிட்டிருக்கிறார்கள். அண்ட, பிண்ட, சமத்துவ விசேஷத்தால் Macrocosm என்றுசொல்லும் பிரம்மாண்டத்திலுள்ள தெல்லாம் Microcosm என்று சொல்லும் மானிட பிண்டத்திலுமுண்டு. அச்சம் அல்லது பயம் என்பது ஒன்றைக்கண்டு நடுங்குந்தன்மை.

அறிவுக்கு லக்ஷணமாயுள்ளவை திரிபுடியென்று சொல்லும் காண்பான், காட்சி, காண்பொருள் ஆகிய மூன்றுமாம். இம்மூன்றே அறிவான், அறிவு, அறிபொருள் ஆகும். மற்றப்படியுள்ள அஹப்புறவேற்றுமை யெல்லாவற்றிற்கும் இம்மூன்றுமே காரணமன்றி வேறு காரணமில்லை.

சிறு குழந்தைகள் விளக்குவெளிச்சத்தில் தோன்றும் தம் நிழலைக்கண்டு விளையாடுவதைப் பார்த்திருக்கலாம். சிலகுழந்தைகள் தாம்ஆடத் தம்நிழல் ஆடுவதைக்கண்டு சிரித்து விளையாடும். சில குழந்தைகள் அதையே பார்த்து பயந்து நடுங்கும். இது அக்குழந்தைகளின் பூர்வஜன்ம வாசனையினாலுண்டான மனோபக்குவத்தைப் பொறுத்தது.

விளக்குவெளிச்சத்தில் காணும் பிரதிபிம்பமாகிய நிழலைப்போல், ஞானவிளக்காகிய அறிவு பிரகாசிக்க அந்தப்பிரகாசத்தில் மனோபாவம் என்கிற நிழல் தோன்றும். இதற்குத்தான் "Mental images" என்று சொல்கிறது. இந்த மனோபாவங்கள் உண்டாக இருள், ஒளி என இரண்டு அம்சங்கள் தேவை. உண்மையில் மனவிருள் என்பது மனமாகிய இருள் எனப்பொருள் படும். ஏனெனில் மனதுக்கு ஸ்வயம்பிரகாச லக்ஷணமில்லை. சந்திரனைப்போல் இரவல் வெளிச்சத்தில் பிரகாசித்துக்கொண்டு பிறபொருள்களையும் நிலவொளிபோல் மங்கலாக விளங்கச்செய்யும். ஆகையினால் தான் சந்திரனை மனசுக்கு உவமானமாகச் சொல்வது. உண்மை விளக்கம் பெற்றோர் சந்திரனை மனதின் அதிஷ்டானதேவதையென்று சொல்லித் துதிப்பர். அப்படி யென்றால் மனதில் அறிவு பிரதிபிம்பிக்க அதனாலுண்டாகும் வெளிச்சம் நிலவொளி போன்றதால் அந்த நிழலொளிக்குக் காரணமான சந்திரனை மனதில் வசிக்கும் தேவதை (அறிவு வெளிச்சம்) என்று தொழுவர்.

இருளைக் கண்டு அஞ்சுவதெல்லாம் அவ்விருளில் காண்பொருள் நிச்சயமாக உணரப்படக் கூடாமையினாலேயாம்.

குழந்தைகளுக்குச் சொல்லும் ஔவையார் கதைகள் உண்டு இருட்டில் வாசம் செய்கிறவர்களான திருடர்களை மனோதர்ம முணர்ந்த ஒரு ஔவையார் தன்னுடைய புத்தி சாமர்த்தியத்தால் பயந்தோடச் செய்ததற்கு உதாரணமாக ஒரு கதை சொல்வதுண்டு. அதாவது:—

ஒரு நாள் நள்ளிருளில் (நடு ராத்திரியில்) இரண்டு பெரிய திருடர்கள் ஒரு அம்மையார் வீட்டில் திருடுவதற்காகச் சென்றார்கள். அந்த வீட்டில் அபலையான அம்மையாரும் அவர் வளர்த்துவந்த சிறு குழந்தைகளும் தவிர வேறு புருஷத்துணை யாருமில்லை. ஆண்பிள்ளைகள் துணையில்லாவிட்டாலும் அந்த அம்மையார் தன்னுடைய அறிவே குருவாகக்கொண்டனுஷ்டித்து வந்த சிக்ஷா, தீக்ஷா, விருதமஹிமையால் கிராதர்களான கொல்லுக்கொலைக்கஞ்சாத திருடர்களையும், மனோதர்மத்தையறிந்த தன் இஷ்டசித்தி சாமர்த்தியத்தால், அவள் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் நடுநடுங்கி யோடச் செய்துவைத்தார். அது எப்படியெனில், ஒரு நாள் இரு திருடர்கள் சேர்ந்து நின்று வீட்டில் புகும்படி யோஜித்துக்கொண்டிருக்கையில் அம்மையார் அதைக் கண்டு, குழந்தைகளை யெழுப்பிக் கதைசொல்வார்போல், "இரட்டைப் பனைமரம் நிற்குமாம்போலே போலே" யென்று சொல்லி, "தெரிந்ததா, தெரிந்ததா" என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

திருடர்கள் அதைக் கேட்டு அந்த அம்மாள் சிறிதும் பயங் கொள்ளாது "இரட்டைப் பனைமரம் நிற்குமாம் போலே, போலே, தெரிந்



தா?" என்று சொல்வதைத் தாம் அங்கு வந்திருப்பதை யுணர்ந்து அந்த அம்மாள் அவர்களைப் பிடிப்பதற்காக உளவு சொல்லிக்கொடுக்கிறார்களென்று நினைத்து தாங்கள் பிடிபடாமல் தப்பி யோடினால் போதும் என்று அஞ்சி ஓட்டம் பிடித்துவிட்டார்கள்.

இன்னொரு நாளிரவு திருடர்கள் தாம் நின்று கொண்டிருந்தால் உருவம் தெரிகிறதென்று இருட்டில் பதுங்கியிருந்து இலக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அம்மையார் குழந்தைகளை எழுப்பிக் கதை சொல்லுவார்போல் பாவனை காட்டி "ஆந்தை விழிக்குமாம் போலே, போலே! தெரிந்ததா?" என்று அடுத்தடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கத் திருடர்கள் நாம் இருட்டில் பதுங்கியிருந்து ஆந்தைபோல் விழிப்பதைக் கண்டு உளவு சொல்லிக்கொடுக்கிறாளென்று நினைத்து இன்றைக்கும் நாம் தப்பினால் போதும்! காத்தவராயன்தான் நம்மைக்காப்பாற்றவேண்டுமென்று சொல்லிக்கொண்டு ஓட்டம் பிடித்து ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டார்கள்.

அவர்கள் தேஹபலம் படைத்தவர்களாயிருந்தாலும் தேஹோஹ பாவனையில் வளர்ந்தவர்களாதலால் தேஹத்துக்கு அநர்த்தம் வருமென்று கண்டதும் அஞ்சி ஓடிவிட்டார்கள். இப்படியாக தேஹ பலத்திலும் மனோபலம் பெரியது. ஆனால் மனோபலத்தைக் குலைப்பதற்கு பயத்தைப்போல் மிருத்யு (எமன்) அதற்கு வேறில்லை. கவலை யென்பதும் பயத்தினா லுண்டாகும் ஒருவித மனோசஞ்சலமன்றி வேறல்ல.

"மனக்கவலை பலக்குறைச்சல்" என்கிற பழமொழி யேற்பட்டது இதனாலேதான். பயமில்லாவிட்டால் கவலையில்லை. இதற்கு உதாரணமாக ஒரு கதை சொல்வார்கள். அது என்னவெனில்:—

ஒரு பிள்ளையாண்டான் நிர்விசாரமாக வளர்ந்து மதர்த்துத் தடித்து மதோன்மத்தனாயிருந்தான். அவனைப் பெற்ற தாயார் அறிவிலியாதலால், பிள்ளையின் திடகாத்திர வலிமையைக் கண்டு சந்தோஷப்பட்டுச் செருக்குற்றிருந்தாள். அறிவுடையவரும் விவேக விற்பன்னருமாகிய தகப்பன், பிள்ளையாண்டான் இப்படி மௌட்டியத்தில் வளர்ந்து கொழுக்கவைத்த காளை மாதிரி வெறுந்தடியனாய் மிருகப்பிராயமாய் இருந்து வருகிறானே யென்று சிந்தை நொந்து வந்தார். இது அவர்பத்தினியாருக்கு வேறு விதமாகப்பட்டது. 'தனது பர்த்தா பிள்ளையினிடத்திலுள்ள அசூயையினாலோ, தன்னைப்போல் அன்புவைக்காததினாலோ இப்படி வீணே தன் தங்கமான பிள்ளையைக் கண்டு வெறுப்படைகிறாரென்று நினைத்து வந்தாள். மனதில் ஒன்றைச் சிந்தித்து வந்தால் சிந்தை முதிர்ந்த விடத்து அது எப்படியும் வெளியாகிவிடும்.

"அடுத்தது காட்டும் பளிங்கேபோல் அஹம்
கடுத்தது காட்டும் முகம்."—என்றபடி

அஹத்தினழகு முகத்தில் விளங்குமானாலும் அதைப் பார்த்துணரும் சக்தி எல்லாருக்குமே யுண்டாகமாட்டாது.

கண்ணாடியின் முன் நிற்கும் குழந்தை அங்கே காணும் நிழலை வேறொரு குழந்தையென்று கண்டு மருண்டு விளையாடும். அதுபோல் முகவிலாசத்தை உள்ளபடி யறியாது விபரீதார்த்தம் செய்து வில்லங்கம் வளர்ப்பார் உலகவாசனை படிந்தோர். தன் மனதை யடக்கியாளத் தெரிந்த அந்தர்முகலக்ஷியம் சித்தித்த தீரர்களே முகத்தைப் பார்த்து அஹத்தையுணர்வார்கள்.

இப்படியாக தம்பதிகளிருவரும் ஒரு நாள் தங்கள் மனதிலுள்ளதைச் சொல்லி கலந்து பேசிக்கொள்ள தாயார் பிள்ளையைப் பற்றி பெருமிதமாகச் சொல்லிக்கொண்டாள் தகப்பனார் அவளுக்கு அவளுடைய தப்பெண்ணத்தை ரூபித்துக் காட்டவேண்டுமென்று மறுநாட் காலையில் தான் திடீரென்று அவசர காரியமாக கிராமம் விட்டு பட்டணம் போகவேண்டியிருப்பதால் பிள்ளையாண்டானை வைத்துக்

கொண்டு வீட்டை சாவதானமாகப் பார்த்துக் கொள் என்று தாக்கீது செய்துவிட்டு ஊருக்குப் போய்விட்டார். குறித்த தவணையில் பர்த்தா வாராமையால் குடும்பச் செலவுக்கு அவர் வைத்துவிட்டுப்போன கைம்முதல் செலவாகிவிட்டது. பிள்ளையாண்டான் வெறும் சாப்பாட்டு ராமனாயிருந்தான்.

தாயார் குடும்பச் செட்டில் கைதேர்ந்தவளானதால் தன்னாலான சமர்த்தையெல்லாங் கொண்டு பிள்ளையாண்டானுக்குக் கவலையுண்டாகாமற்றானே குடித்தனத்தை நடத்திக் கொண்டு போனாள். ஊருக்குப் போனவர் ஒரு மாசம், இரண்டுமாசமாகியும் திரும்பிவந்தாரில்லை. கடைசியில் சமைப்பதற்கு உப்புக் கூட இல்லாமல் தட்டலாயிற்று. உப்பில்லாமற் சமைக்கும் வித்தை கற்றாளில்லை. கற்றிருந்தாலும் பிள்ளையாண்டான் உப்பில்லாப் பத்தியமிருப்பானென்று தோன்றவில்லை. ஆகையால், பொறுக்கக்கூடியமட்டும் பொறுத்துக் கடைசியில் வேறு விதியில்லாமையால் நெல்லூர்க் காளை மாதிரி வளர்ந்திருந்த புத்திரனையழைத்து "அப்பா, சமைக்கிறதற்கு உப்பில்லையே! என்ன செய்கிறது!" என்று சொன்னாள். "அப்படியா, உப்பில்லையா! என்ன செய்கிறது? எனக்கும் தெரியவில்லையே!" என்றான் பையன்.

"வெளியிலே போய் ஒரு காசுக்காவது உப்பு வாங்கிவா, நாளைக்கு உன் தகப்பனார் வந்தாலும் வந்துவிடுவார். இன்றைப் பாட்டைப் பார்க்க வேணுமே!" என்றாள் தாயார்.

"அப்படியா!" என்று சொல்லிப் பிள்ளையாண்டான் வெளியே போனான். ஒரு காசுக்கு உப்பு வாங்கிக்கொண்டு வந்து போடத் துப்பில்லை. அதே கவலையாக ஏங்கி யுட்கார்ந்து போனான். இரவு எட்டு மணிக்கு உப்பில்லாமல் தானே வாடி வதங்கி தேஹம் சருகுபோல் உலர்ந்து வீடுவந்து சேர்ந்தான். தாயார் பார்த்துத் திடுக்கிட்டாள். "என்னடா அப்பா! இப்படி துரும்பாய்ப் போய்விட்டையே! என்ன சம்பவித்தது உனக்கு?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை: அந்த உப்புத்தான் அகப்படவில்லை. அதுதான்: வேறொன்றுமில்லை!" யென்றான் பிள்ளையாண்டான்.

தன் பர்த்தாவின் அபிப்பிராயம் நிஜமென்றும் தான் கொண்டது தப்பு என்றும் அவளுக்கு அப்பொழுதுதான் பட்டது. "ஐயோ! பாவி! என் அறிவீனத்தால் பிள்ளையையும் பாழாக்கி பர்த்தாவுக்கும் வியாகூலத்தையுண்டுபண்ணி அவரை வீட்டை விட்டோடும்படிச் செய்தேனே!" யென்று உள்ளன்பால் மனம் கசிந்து உள்ளமுருக வருத்தப்பட்டழுதாள். அவள் மஹாபதிவிரதையானதால் அவளுடைய மௌட்டியமே காரணமாக அவளை விட்டு நீங்கிய பர்த்தா, அவளுக்கு விவேகம் வந்ததும் ஞானபானுபோல் மறுநாட் காலையில் வந்து சேர்ந்தார். அவளும் திருந்தி, அவள் மூலமாய் பிள்ளையும் திருந்தி உருப்படலானான்.—என்பது கதை.

இப்படியாக மனதைப் பண்படுத்திப் பயிர் செய்து பலனை யனுபவிக்கத் தெரியாத கற்றுக் குட்டிகள் ஏட்டுப் படிப்புப் படித்துவிட்டு நிலத்தைப் பண்படுத்தும் வித்தையை சிலாகித்துப் பேசும் வார்த்தைகள் அந்தமூடத்தாய் பேசிய வாய்மதம்போல் பொய்மதமாகிப் பிராணஹானியை விளைவிக்கும்.

விவேகம் என்பது சிந்தையென்னும் சுரங்கத்தினடியில் கிடக்கும் மணி. ஆகையால்தான் அதற்குச் சிந்தாமணி யென்று பேர் வந்தது. பயம் என்கிற பூதம் அதைக் காத்துக்கொண்டிருக்கிறது. அந்த பூதப் பிரேதபேதாள பைசாசக் கூட்டத்தைக் கண்டு அஞ்சாதே யென்று அபயம் கொடுக்கும்கை ஒன்றேயுண்டு. அதைத்தான் "அபயஹஸ்தம்" என்று சொல்கிறது அதுதான் நம் ஆனந்தத்தாயின் வலது அவள் கையை விரித்து "அஞ்சாதே நானிருக்கிறேன்" என்கிற பாவனையாக அபயவரதம் கொடுப்பதை அறியாதார் விவேகம் போதிப்பது குருடனுக்குக் குருடன் வழி காட்டுவது போலே யாகும்.

"குருடரும் குருடரும் குருட்டாட்டமாடிக்
குழி விழுந்தற்றே"

யென்று ஓதியுள்ளார் உண்மை யுணர்ந்த மஹான்களும்,



## PROVERBS AS AIDS TO CHILD-STUDY.

### பாலபோதசிக்ஷா ஸாதனம்.

### பழமொழி விளக்கம்.

நல்மக்கள் பெறுதலை, உலகவாழ்க்கைக்கும் ஹிந்துக்கள் கொள்கைக்குள் பரலோகத்தில் நம்மை நிலைநிறுத்தி வைப்பதற்கும் ஸாதனமாக எடுத்திருக்கிறபடியால் இங்கே மக்களைக் குறித்துள்ள பழமொழிகளைச் சற்று விரித்துச் சொல்லுவோம். பாலபோத சிக்ஷைக்கு இது அவசியம். ஏனெனில் "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்றிருக்கிறபடியால் என்க. நல்மக்களை அடைய நல்மனையாள் அவசியம் என்றும், தாயின் குணம் பிள்ளைக்கு என்பதையும், தாய் வளர்ப்பதின்பேரில் பிள்ளையின் குணம் படியும் என்பதையும், கெட்ட மக்கள் யார் என்பதையும், மக்கள் தாய்தந்தைகளுக்கு நடந்துகொள்ள வேண்டியதையும் இன்னும் அநேக விஷயங்களையும் நமது நாட்டில் மக்களையனுசரித்து வந்திருக்கும் பழமொழிகள் எடுத்துக்காட்ட நாம்காணலாம். ஹிந்துக்கள் எப்பொழுதும் பந்துப்பிரியர்கள். சிறு குழந்தைகளிடம் ஸ்வபாவமாகவே பிரீதியுள்ளவர்கள். அன்றியும் புத் என்னும் ஒரு நரகம் பரலோகத்திலிருக்கிறதென்றும், அந்த நரகத்தில் வீழாமல் தந்தைதாய்களை ரக்ஷிப்பது, புத்திரன் இவர்களுக்கு இவர்கள் காலஞ்சென்ற பிறகு செய்யும் சடங்குகள் என்றும் ஒரு பலமான கொள்கையை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். புத்திரன் என்னும் பதத்திற்கு அருத்தங்கூட புத் என்னும் நரகத்திலிருந்து ரக்ஷிக்கப்பட்டவன் என்பதாம். ஆகவே ஸ்வபாவத்தாலும், சாஸ்திரத்தின் அமைப்பாலும் ஹிந்துக்கள் எப்பொழுதும் குழந்தைகளை அடைய அதிக ஆசையுள்ளவர்கள் என்பதையும் எடுத்துக் கூறவேண்டுமா. எல்லாருக்குமே மக்கள் பாக்கியம் படைக்க எப்பொழுதும் அவா இருப்பது வெகு சகஜம். மனுஷ்யவர்க்கத்துக்கு மாத்திரமல்ல. பசு பட்சி ஜாதிகளுக்கும் இந்த அவா உண்டு. இப்படி ஈசுவரன் வைத்திருப்பது அந்தந்த வர்க்கங்கள் நசித்துப்போகாமல் எப்பொழுதும் அபிவிருத்தியாய்க் கொண்டிருக்கும்படி. தகப்பன் தாய்மார்களும் அந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களும் பரலோகத்தில் சுகமாய் வாழ்தல் ஒரு வம்சத்தில் பிறந்த புத்திரன்செய்யும் சிராத்தம் முதலிய சடங்குகளால் என்று ஹிந்துசாஸ்திரங்கள் ஏற்படுத்தியிருக்கிறபடியால் இவர்கள் மற்ற சாதியார்களைவிட மக்கட்பேற்றில் அதிக ஆசைபாராட்டியிருப்பதற்கு ஒரு காரணமாயிற்று. அநேகர் ஒரு சிறு குழந்தைக்காக காசி ராமேச்வரம் போவதையும், கோவில் குளங்கள் கட்டுவதையும் வெட்டுவதையும், அசுவதப் பிரதிஷ்டை நாகப் பிரதிஷ்டை முதலிய தர்மங்கள் செய்வதையும் நாம் பார்த்திருக்கிறோம். அன்றியும் ஸ்த்ரீயும் புருஷர்களும் ஒரு குழந்தைக்காக அநேகவித ஔஷதங்களை "பிள்ளை ஆசை பவ்வீயைத்தின்று" என்ற பழமொழிப் பிரகாரம் சாப்பிடவும் நாம் பார்த்திருக்கலாம். இவ்வளவுமட்டும் பொதுவாய் நமக்குள்ளிருக்கும் மக்களைப்பற்றிய ஆசையையும் கொள்கையையும் ஒருவாறு நாமிங்கு எடுத்துரைத்து இனி மக்களைச்சார்ந்த பழமொழிகளின் விளக்கத்தைச்சொல்ல ஆரம்பிப்போம்.

(1) சிறு குழந்தையில்லா வீடும் வீடல்ல, சீரகமிட் டாக்காக் கறியும் கறியல்ல.

நாம் சாப்பிடும் போசன பதார்த்தத்தை பரிமளிக்கச்செய்ய சீரகம் எவ்வளவு சாதகமோ அதுபோல நமது ஜன்மத்தை இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் மணக்கச்செய்ய குழந்தை அவசியம் என்பதாம். இந்தப் பழமொழியின் முதல்பாகத்தின் அருத்தத்தைவடமொழியில் வெகு அழுத்தமாயும் தெளிவாயும் "சூன்யம் அபுத்ரஸ்ய கிருஹம்"—சிறு குழந்தையில்லா வீடும் வீடல்ல என்று சூத்ரகர் என்ற கவி அநேக அருத்தத்தில் எடுத்துக்காட்டியிருக்கிறார். சிறு குழந்தைகளை எடுத்து வைத்துக்

கொண்டு அவர்களுடன் கொஞ்சிக் குலாவி அவர்களை ஆதரிப்பதால் அநேகவித நற்குணங்கள் ஒருவனுக்கு உண்டாகின்றனவென்பதும், அவ்வித நற்குணங்கள் மற்றவர்களிடத்தில் ஒருவன் அதிக பூததயை முதலிய உத்தம குணங்களைக்காட்ட சாதகமாகின்றன என்பதும் சில தத்துவவாதிகளின் கொள்கை. அது அநேகமாய் யதார்த்தந்தான். 4, 5 குஞ்சு குழந்தைகளுடனிருப்பவன் கொஞ்சம் அதிகமாகப் பச்சாதாபம் தயை தாக்ஷண்யம் உள்ளவனாகவேயிருப்பான் என்பது அநேக விஷயங்களில் வெளியாகும், குழந்தைகள் 5-வயது வரையில் தேவஸ்வரூபம் எனவும் சிறு குழந்தைகள் நமது வீட்டிலிருந்தால் தெய்வமேயிருப்பதாகவும் ஹிந்துக்கள் ஓர்கொள்கை பாராட்டுகிறார்கள். இதற்கு ஒரு சிறு கதையுண்டு. மலையாளதேசத்தில் அனந்தசயனம் என்றொரு ஸ்தலமிருக்கிறது. அந்த ஸ்தல புராணத்தில் நாமிதனடியில் எழுதப்போகிற கதை வெகு விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கு தற்காலம் இந்தக் கொள்கையை விளக்குவதற்கு வேண்டியமட்டும் அதை இங்கு சுருக்கிச் சொல்லுவோம் :—

தக்ஷிணதேசத்தில் ஒரு பிராமணனிருந்தான். அவன் சிவபூஜா துரந்தரன். கொஞ்சம் தனிகனானகையால் அடிக்கடி அவன் வயல் வெளிகளுக்கும் மற்ற விஷயங்களுக்கும் வெளியில் அலைந்து திரிந்து 15, 20 நாழிகைக்கு வீடுவருவது வழக்கம். வந்ததும் ஸ்நானம் முதலானதுசெய்து பூஜைக்கு உட்காருவான். அவனுடைய பத்தினி புருஷன் வரும் முன்னமே பூஜைக்குவேண்டிய சகல சாமான்களையும் எடுத்து தயார்செய்து வைத்திருப்பாள். இவ்விருவர்களுக்கும் செல்வக்குழந்தை ஒன்றுண்டு. அதற்கு விளையாட்டு வெகு அதிகம். எப்பொழுதும் துருதுரு என்று ஊர்ந்து கொண்டேயிருக்கும். அரை நாழிகையாவது விளையாடாமல் வீண்பொழுது போக்காது. இந்தப் பிள்ளையினிடம் அந்த வேதியருக்கும் அவர் மனைவிக்கும் அசாத்திய வாஞ்சை ; நியாயமாய் அதிருக்கவேண்டியது தானே. இந்தச்சிசு தகப்பனார் பூசைபண்ணும் காலத்தில் எப்படியாவது தவழ்ந்துகொண்டு வந்துவிடும். பூஜையின் மத்தியில் புகுந்து பாத்திரங்களை எடுக்கிறதும் புஷ்பத்தை அளைகிறதும் தண்ணீரைக் கொட்டுவதுமான பலவித சில்லரை உபத்திரவங்கள் செய்யும். ஒவ்வொரு சமயத்தில், எங்கு புருஷன் பூஜை பங்கப்படுமோ என்று அதன் தாயார் அதை ஓடிவந்து எடுப்பாள். ஒவ்வொரு சமயத்தில் தகப்பனார் போனால் போகட்டும் விட்டுவிடு, குழந்தை தானே, அதனிஷ்டப்படி விளையாடட்டும் என்று தடுத்துவிடுவார். இம்மாதிரி நடக்கும்.

இப்படி யிருக்கும்போது ஒருநாள் அந்த வேதியர் வெகு நாழிகைகழித்து வீடுவந்தார். பசிகொஞ்ச மதிகம். பொழுதுபோய்விட்டது. இனிமேல் பூஜையாகி அவர் புசிக்க வேண்டும். ஆகையால் வெகு அவசரமாய் அவர் ஸ்நானம் முதலியவைகள் செய்துவிட்டு பூஜைக்கு உட்கார்ந்தார். அன்றையதினமும் தனது வழக்கப்படி குழந்தை விளையாட வந்துவிட்டது அந்தசமயத்தில் வேதியர் மனைவி அடுக்குளில் வேறுவேலையாயிருந்தபடியால் குழந்தையை தூக்க வெளியில்வரவில்லை. நடுஉள்ளிலேயே யிருந்துவிட்டாள். அபிஷேகமாய் அர்ச்சனைக்காக வைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தையே தூக்க ஆரம்பித்தது. ஒருநாளும் கோபிக்காத அந்த பிராமணர் அன்று ஏதோ பசியின்கொடுமையால் புத்திமயங்கி அந்தக் குழந்தையை இழுத்து சீ! போ! என்று கடிந்து பூஜை ஸ்தலத்திற்கு கொஞ்சமப்பால் வைத்தார். அவ்வளவுதான்! குழந்தை மறைந்துவிட்டது. ஆகாசத்தில் நின்றுகொண்டு அவ்வந்தணனைப்பார்த்து பின்வருமாறு சொல்லிற்று:—

"குழந்தையிடம் அன்பில்லாத நீ சிவபூஜை பண்ணியென்ன பிரயோசனம்? நீ கெட்டாய். போ! நானினி உன்னிடம் வாசஞ்செய்யேன்."

இதைக்கேட்டு அவர் நடுங்கி,



"ஐயோ! புத்தியீனத்தால் செய்துவிட்டேன். நான் எப்பொழுதும் என் குழந்தையிடம் வெகு அன்புள்ளவனாயிற்றே. அந்தக் குழந்தையைக் காணோமே" என்று கதற அதற்கு ஆகாயத்தில் நின்ற உருவம்.

"நான்தான் அந்தக்குழந்தை. 5—வயது வரையில் ஒவ்வொரு குழந்தையும் தெய்வஸ்வரூபம். அதுவரையில் குழந்தைகள் செய்யும் பிழைகளை ஒருவன் பொறுத்துக் கொள்ள வேண்டும். அந்த வயதிற்கு மேற்பட்டுத்தான் கண்டிக்கவேண்டும். நீ என்னையின்று திரஸ்காரம் பண்ணினாய். இனிநான் உன்னிடம் தங்கேன்" என்றுசொல்லிற்று. அதற்கு அந்தணர்;—

"எனக்கு புத்திவந்தது. என்னைவிட்டுப் பிரிந்து போகக்கூடாது. என் குற்றத்தை ஒருவாறு மன்னிக்கவேண்டும்" என்று பரிதாபமாய்க் கேட்க, அதற்கு அவ்வுரு:

"இனி உன்பச்சாதாபத்தால் பிரயோஜனமில்லை. அச்சன் காட்டுக்கு வந்தால் என்னைக்கண்டு கொள்ளலாம்" என்று சொல்லி மறைந்து விட்டது.

இனி என்னசெய்வார் அந்த அந்தணர். அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை. பயித்தியம் பிடித்தவர் மாதிரி ஆய்விட்டார். அருமையாய் வளர்த்த செல்வக்குழந்தை போனதுடன் ஒரு குற்றம் ஒன்று அவர்மேல் ஏற்பட்டது. அச்சன்காடு எங்கே? அச்சன்காடு எங்கே? என்று பார்க்கிறவர்களை எல்லாம் கேட்டுக்கொண்டு அவர் சம்சாரசகிதம் வெளிக்கிளம்பி விட்டார். வெகுநாள் வரையில் அலைந்து திரிந்தார். "போ! போ! உனக்குப்பயித்தியம்" என்று எல்லாருமிவருக்கு பதில் சொன்னார்களே யல்லாது ஒருவனாவது அச்சன் காடு இன்ன பக்கத்தில் என்று எடுத்துக்காட்டவேயில்லை. ஐயோ அச்சன் காட்டை யின்ன பக்கமிருக்கிறதென்று ஒருவராவது சொல்லவில்லையே என்று ஏங்கி கவலைப்பட்டு அலைந்து கொண்டு ஒருகாட்டின் மார்க்கமாய் போய்க்கொண்டிருக்கையில், அங்கு ஒரு வேலைக்காரி தன் குழந்தை அதிகமாய் அழுவதையும் அவள் அதை அழாதே அழாதே என்று சாந்தப்படுத்துவதையும் பார்த்தார். என்ன சொல்லியும் குழந்தை அழுவதைவிட்டு ஓயவில்லை. இவளுக்குக் கோபம் பொங்கிவிடவே அந்தக் குழந்தையைப்பார்த்து "இந்தா! பேசாமலிருக்கிறாயா, இல்லாவிட்டால் இந்த அரசன் காட்டில் வீசி யெறிந்து விடட்டுமா?" என்றாள். இதைக் கேட்டதும் அவ்வந்தணனுக்கு வந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இத்தனைநாளாய் அவர் பல பெயரைக் கேட்டும் அறிந்துகொள்ள முடியாத இடத்தை ஒரு பெண்பிள்ளை அகஸ்மாத்தாய்ச் சொல்லிவிட்டாள். உடனே அவர் அவளிடம் வெகு ஆவலோடு ஓடி "அம்மணி அந்த அரசன்காடு எங்கே?" என்று கேட்டார். அதற்கு அவள் திகைத்து தானிருந்த இடத்திற்கு சமீபத்தில் என்று வழியைக் காட்டிவிட்டு தனது இருப்பிடம் சென்றாள்.

இவ்வந்தணரும் தனது மனையாள் சகிதம் அந்த அரணியத்தில் பிரவேசித்து 6,7 நாழிகைவழிதூரம் செல்லுகையில் அங்கு ஒரு மரக்கட்டையை கட்டிக்கொண்டு அழுது கொண்டிருக்கும் ஒரு குழந்தையைக்கண்டார். அவ்விடத்தில் தான் ஈசன் கவலையடைந்த தகப்பனாருக்கு இம்மாதிரி காட்சி கொடுத்தார். இதுதான், அனந்த சயனத்தின் காட்சி இன்றைக்கும். இவ்வளவுதூரம் இந்த இடத்தில் ஒவ்வொரு சிறு பழமொழிக்கு எழுதியது நாம் 4,5-வயது வரையில் குழந்தைகளிடம் அன்பாயிருந்து நல்ல விளையாட்டாலும் அபிமானத்தாலும் அவர்களை நல்ல வழியில் கொண்டுவரவேண்டும் என்பதை வற்புறுத்திக்காட்ட வேண்டியதன்பொருட்டே. (இதை விவேகசிந்தாமணியின்"பாலபோத சமஷ்டி சேவை" ஸாதன ஸஞ்சிகையில்("Vivekachintamani Children's Record") வெகு அழகாக எடுத்துச்சொல்லியிருக்கக் காணலாம். வேண்

டுவோர் "விவேகசிந்தாமணி சந்தாதாராகச் சேர விரும்பினால் சந்தா தொகைக்குள்ள வி.பி. சார்ஜோடு இதையும் இலவசமாகவே சேர்த்த னுப்புவோம்.)

(2) பேரில்லாச்சன்னதி பாழ் பிள்ளையில்லாச்செல்வம் பாழ்.

இதுவும் முற்கூறிய பழமொழிக்குச் சமானம். பிரபு என்று பெயர்மட்டும் படைத்து கீர்த்தியில்லாம லிருந்தால் ஒருவன் ஜன்மம் எப்படி வியர்த்தமோ அதுபோல், அளவற்ற ஐசுவரியம் படைத்து தனக்குப் பிற்காலம் அதையாள ஒரு குழந்தையில்லாவிடில் அந்தச் செல்வம் வீண் என்று சொன்னபடி.

(3) ஐந்தெழுத்தும் பாவனையும் அவனைப் போலிருக்கிறது.

இது ஒரு குழந்தை தன் தகப்பனை ஒவ்வொருவித அங்க அடையாளத்திலும் ஒத்திருந்தால் அப்பொழுது உபயோகிக்கப்படும் பழமொழி. ஐந்து எழுதது என்பது இந்தப் பழமொழியில் ஐம்புலன்கள் என்று கருத்தாகும். (ஸ்தூல சூக்ஷ்ம பூதங்களுக்கும் அர்த்தமாகும்)

(4) ஆரும் ஆரும் உறவு தாயும் பிள்ளையும் உறவு.

இந்தம் பழமொழிக்கு தாய்க்கு தன் பிள்ளையிடமிருக்கும் ஜாஸ்தி அபிமானத்தை வெளிப்படுத்தும் மூதுரை.

(5) கற்றவனும் உண்பான் பெற்றவனும் உண்பான்.

இது மக்களைப் பெறுதல் ஒரு ஆஸ்தியை யடைவதற்குச் சமானம் என்று காட்டுகிறது. எப்படி நமக்குக் கல்வி, ராஜாங்கம் முதலிய இடங்களில் வயிறு வளர்க்கும்படியான லாபம் முதலியவற்றைத் தருகின்றதோ அதுபோல பிள்ளைகளைப் பெற்றால் வீண்போகாது: நமக்குத் தள்ளாதகாலத்தில அவர்கள் ஏதாவது நமக்கு சம்பாதித்து வந்து நம்மை ரட்சிப்பார்கள் என்றபடி.

(6) பள்ளி பிள்ளை யென்றால் செலவம் குறையுமா.

இதன் கருத்து உயர் குலத்தானாயினும் தாழ் குலத்தானாயினும் ஏழையாயினும் பணக்காரனாயினும் அவனவனுக்கு தன் பிள்ளை அருமைப்பிள்ளை தான் என்பதாம், பள்ளியின் பிள்ளையாயிருந்த போதிலும் அதற்கு தன் வீட்டில் செல்வம் ஏன் குறைவுபடும்? ஒருபொழுதும் குறைவுபடமாட்டாது என்றபடி.

(7) காக்காய்க்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.

முற்கூறிய பழமொழிக்குச் சமானம். காக்காய்க் குஞ்சு நிறத்தில் கறுப்பு என்று சொல்ல வேண்டியதில்லை. அப்படி யிருந்தபோதிலும் அதன் தாய் கண்ணுக்கு அது பொன்வருணமாகத்தான் தோன்றும். அதாவது என்னதான் அழகுக் குறைவாயிருந்தாலும் ஒவ்வொரு தாய் தகப்பனுக்கும் தன் குழந்தை அழகாய்த் தான் காணப்படும் என்பதாம்.

(8) அடுக்களைக்கு ஓர் பெண்ணும் அம்பலத்துக்கு ஓர் ஆணும்.

இதன் அருத்தத்தை பின்னொரு சஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதுவோம். இதன் கருத்து இல்லவிருத்திக்கு ஒரு பெண் குழந்தையும் ஒருவன் பெயரையும் பொருளையும் அங்கீகரிக்க ஒரு படித்தபிள்ளையும் வேண்டும் என்பதாம். ஏனெனில்,

(9) தகப்பன் பட்டம் பிள்ளையதல்லவா.

சுலபம்; தகப்பன் பெயரையும் கீர்த்தியையு மனுபவிக்க அவன் குமாரன் என்றபடி. முக்கியமாய் எந்தப் பிள்ளைக்கு என்றால்,

(10) தகப்பன் பட்டம் பிள்ளைக்கல்லவா.

மூத்தபிள்ளைக்கு என்றபடி.

(11) தாயைப்போல் பிள்ளை நூலைப்போல் சீலை.

வெகு உண்மையான பழமொழி. புருஷன் வெளியிற்சென்று பணந்தேடுகிறவனாகையால் அவனுக்குத் தன் குழந்தையை அதிகமாய் அடிக்கடி பார்த்துக்கொள்ள அவகாசமிருக்



காது. வீட்டிலிருக்கும் பெண்பிள்ளைதான் இந்த விஷயத்தில் அதிக கருத்துள்ளவளாக இருக்கவேண்டும். இதற்காகத்தான் பெண் பிள்ளைகள் சிறுவயதில் கற்றறிந்திருந்தால் தாங்கள் குழந்தைகளை சீராய் வளர்த்து புத்திமதிகள் உபதேசிக்கக்கூடிய யோக்யதையுள்ளவர்களாவார்கள். தாய் தொட்டிலாட்டும் பொழுதும், பால் புகட்டும்பொழுதும், அமுது அளிக்கும்பொழுதும், தன் சிறு குழந்தைக்குப் போதிக்கும் கதைகளும் மூதுரைகளும் அதன்மனதில் எவ்வண்ணம் ஏறுமோ அம்மாதிரி மற்றவர்கள் போதிக்கும் உபதேசங்கள் ஏறுவாம். இம்மாதிரி உபதேசங்களில் நற்றாயின் பாக்யத்தால் வித்வான்களானவர்கள் வெகுபெயர்கள் என்பது அங்கிலேயம் இன்னும் மற்ற பெண்கல்வி சீர்பெற்ற இடங்களை பரிசோதித்தவர்களுக்கு புலப்படும். ஆகையால் தாயைப்போல் பிள்ளை என்பது நூலைப்போற் சீலை என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை என்றபடி.

(12) தாய் உறவோ நாய் உறவோ.

மிருகங்களுக்குள் நாயானது யஜமான விசுவாசமதிகமாயுள்ளதென்பது லோகப் பிரசித்தம். அதுபோல் தாயின் விசுவாசம் மக்களிடத்தில் என்பதும் லோகப்பிரசித்தம். இதை இவ்வளவு அழகாய் இந்தப் பழமொழி எடுத்துக் காட்டுகிறது.

(13) பிச்சையிட்டுக் கெட்டவனும் இல்லை, பிள்ளைபெற்றுக் கெட்டவனும் இல்லை.

அதிகக் குழந்தைகளைப்பெறுவது துவக்கத்தில் அவர்கள் ஸம்ரக்ஷணை முதலியவைகளில் கொஞ்சம் கஷ்டமாயிருந்தபோதிலும், பிற்காலத்தில் சுகமாகவே யிருக்குமாகையால் பிள்ளைபெற்றுக் கெட்டவனுமில்லை என்று சொல்லப்பட்டது.

(14) பிள்ளைபெற்றவனுக்கும் மாடுபடைத்தவனுக்கும் வெட்கமில்லை.

சுலபம். பிள்ளையும் துஷ்டனாயிருக்கலாம், மாடும் கொண்டியாயிருக்கலாம்; வெட்கப்பட்டு அவைகளை அகற்றமுடியாது. மாடு தானே ஏன் அகற்றமுடியாதென்றால் ஒருக்கால் அது சிலவேளை கொண்டியா யிருந்தபோதிலும் அதிக உழைப்பாளியாயிருக்கலாம். ஆகையா லிவைகளை நல்வழியில் கொண்டு வந்து சீர்திருத்தி பிரயோஜன முள்ளவைகளாகச் செய்துகொள்ளவேண்டும் என்றபடி.

## THE GENERAL CONFLAGRATION OF EUROPEAN WAR.

### DIVINE WILL WORKS FOR GOOD.

Lucknow, Aug. 10—Preaching in Christ Church yesterday (9th) Canon Oldham quoted the Premier's words saying that "this was a just war." He urged that this was essentially a time for action and that all Britons had a paramount duty. They should put away selfishness and self-seeking. "Be ever ready to lend a helping hand to those in trouble and perform your duties with redoubled zeal." They should assist by all the means in their power those in authority and whatever the issue, they might rest assured that it would be in accordance with the Divine Will working for the good of the world.—*Telegram.*

## காட்டுத்தீப்போல் பரவிய கன யுத்தம்.

தென்னல் முற்றிப் பெருங்காற்றாகி காட்டுத்தீயோடு கலந்துகொண்ட அதிர்சயம்.

தென்னல் முற்றிப் பெருங்காற்றான கதையாக ஒரு பள்ளிப்பையன் செய்த காரியம் பிரமாதமாகி ஐரோப்பா முழுவதும் ரணகளமாகும் ஸ்திதியில் வந்திருக்கிறது.

"சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம்
பெரியோராகிற் பொறுப்பது கடனே"

என்று சொன்னவர்தானே

"சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
பெரியோரப்பிழை பொறுத்தலுமரிதே"

யென்று சொல்லியிருக்கிறார்.

இப்பொழுது ஐரோப்பா கண்டத்திலுள்ள தேசங்களெல்லாம் சண்டைக்கு முனைந்து யுத்தவிருது கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கின்றன.

ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜர்மனி யொருபக்கம்; ஸெர்வியா, ருஷ்யா, பெல்ஜியம், ஹாலண்டு, ப்ரான்ஸ், இங்கிலாந்து ஒரு பக்கம்.

ஆஸ்திரியா-ஹங்கேரிக்கும் ஸெர்வியாவுக்கும் முதலில் சண்டையாயிற்று.

இதற்குக் காரணம் என்னவென்றால் ஒரு பள்ளிப்பையன் செய்த பெருங்குற்றமாம். கேட்பார் பேச்சைக் கேட்பது "எடுப்பார் கைக்குழந்தையாம்" நிதானபுத்தியில்லாத சிறுவர்கள் ஸ்வபாவம். இவர்களைக் கொண்டு பெருங்கொலைக்குற்றம், கலகம் செய்விப்போர் அடாது செய்பவராவர்.

ஆஸ்திரியா தேசத்து இளவரசும் அவர் பத்தினியாரும் திடீரென்று வெடி-குண்டால் கொலையுண்டு மாண்டார்கள். இக்குற்றம் செய்தது ஸெர்வியஜாதீய பையன் ஒருவனாம்.

ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் விரோதம் இயல்பாக உண்டுபோலும்.

இதைச் சாக்கிட்டு ஆஸ்திரியா தேசத்து கவர்ன்மெண்டார் ஸெர்வியா தேசத்துட் புகுந்து தம் அதிகாரத்தைச் செலுத்த நினைத்தனர். நினைத்ததுமன்றி அப்படியே தூதுமனுப்பினர். ஸெர்வியா தேசத்தார் அதற்கு உடன்படவில்லை. இரு தேசத்தாருக்கும் மனஸ்தாபம் நேரிட்டுவிட்டது. இந்த மனக்கொதிப்பிலிருந்துண்டான நெருப்பு காட்டுத்தீபோல் எங்கும் பற்றிக்கொண்டு ஐரோப்பா முழுவதையும் அமர்க்களமாக்கிவிட்டது.

ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தலி இம்மூன்று தேசத்தாருக்கும் ஒரு சிநேகக் கட்டுப்பாடுண்டு. அதன்படி ஒரு தேசத்தை யாராவது எதிர்த்தால் மற்ற தேசத்தார் அத்தேசத்துக்கு உதவிபுரிய உடன்பட்டுள்ளார். ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்குமுண்டான சண்டையில் ஆஸ்திரியா ஸெர்வியாவின் மீது படையெடுத்துச்சென்றதால் அது வலுவுச் சண்டையென்று சொல்லி இத்தலி தேசத்தார் ஒதுங்கியிருந்து விட்டார்கள்.

ஜர்மனி சக்ரவர்த்தி அப்படிக்கின்றி ஆஸ்திரியாவுக்குப் பரிந்துகொண்டு கிளம்பினார்.

ஸெர்வியா தேசத்திலுள்ளவர்களும் ருஷியா தேசப் பிரஜைகளாயுள்ளாரும் உடன்ஜாதியாரானது கொண்டு அவர்களை வென்று அவர்கள் தேசத்தைக் கட்டிக் கொள்வது ருஷியாவுக்கு ஹிதமாயில்லை. ஆகையால் ஸெர்வியாவுக்குப் பரிந்துகொண்டு ருஷியா சண்டைக்கு ஆயத்தமாக, ஜெர்மனி சக்ரவர்த்தி அது பொறுக்காமல் ருஷியாபேரில் யுத்தம் செய்யத் தொடங்கிவிட்டார்.

ருஷியாவுக்கும் ப்ரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் ஒருவித ஸ்நேக ஸம்பந்த மனோ ஐக்கியமுண்டு. இதற்கு "Entente" என்று சொல்லுகிறார்கள்.

ஜெர்மனிக்கும் ருஷியாவுக்கும் சண்டையுண்டாகவே (இது ஆகஸ்டுமீ 2உ நேர்ந்தது) ஜெர்மனி ப்ரான்ஸ் தேசத்தைத் தாக்க நினைத்து ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் இடையிலுள்ள பெல்ஜியம் நாட்டு வழியாக சைனியங்களை நடத்திப்போக சாதகம் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள்.

பெல்ஜியமும் அதற்கடுத்த ஹாலண்டும் சண்டையில் ஒரு கக்ஷியையும் சேருவதில்லையென்று ஒதுங்கியிருந்தார்கள்.

ஜெர்மனிக்கு பெல்ஜியத்தின் வழியாய்ப் போய்த்தான் ஆகவேண்டியதாயிருந்தது.

ஆதலால் பெல்ஜியம் அனுமதி கொடுக்காவிட்டால் பலாத்காரமாகப் பிரவேசிப்போமென்று தூதனுப்பி அப்படியே பிரவேசமும் செய்தார்கள்.

இது இங்கிலாந்துக்குப் பொறுக்கவில்லை. பெல்ஜியத்தின் எல்லைக்குள் ஒரு ஜெர்மன் யுத்தவீரன் காலடிவைத்தாலும் போதும், நாங்கள் சண்டைக்கு வருவோமென்று தூதனுப்பினார்கள்.

ஜெர்மனி சக்ரவர்த்தி அவர்கள் தூதனுப்பியதை மதிக்காமல் பெரியயுத்தம் நடக்கிறபடி நடக்கட்டுமென்று பெல்ஜியத்துக்குள் பிரவேசித்துவிட்டு, "இங்கிலாந்து தேசத்தார் பெல்ஜியத்தை ஜெர்மனியோடு சேர்த்துக்



கொள்ளப் போகிறதாக பயப்படுகிறார்கள்: அப்படிப்பட்ட எண்ணம்சிறிதுமில்லையென்று அவர்களுக்கு உறுதிகூறவும்" என்று தூதனுப்பினார்.

ஆங்கிலேய அரசரும் ஜெர்மனி சக்ரவர்த்தியும் விக்டோரியா மஹாராணியின் பேரப்பிள்ளைகள். ஜெர்மனி சக்ரவர்த்தி பெண்வயிற்றுப் பேரன். ஆங்கிலேய அரசர் பிள்ளைவயிற்றுப்பேரன். ஆகவே உறவுமுறையில் அத்தான்-அம்மாஞ்சி யாகவேண்டும்.

ஜெர்மனி சக்ரவர்த்தி வாக்சாலகர்.

ஆங்கிலேய அரசர் அடக்கமும் பொறுமையும் நிரமுமுடையவர். அத்தான் அம்மாஞ்சியை ஏமாற்றி விடலாமென்று பார்த்தார் போலும் தோன்றியது. ஆனால் அவர் ஜாலம் பலிக்கவில்லை.

ஆகஸ்டுமீ 4உ செவ்வாய்க் கிழமை இராத்திரி பதினொன்றே முக்கால் மணிக்கு ஆங்கிலேயதேசத்தரசர் தமக்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் உண்டாய்விட்டதென்று தெரியப்படுத்திவிட்டார்கள். பின்னும் ½ மணி நேரத்துக்கெல்லாம் ஜெர்மனி சக்ரவர்த்தியும் அப்படியே யென்று தெரிவித்து விட்டார்.

இப்பொழுது அங்கங்கே கைகலந்து சண்டைகள் சின்னதும் பெரியதுமாய் நடந்துவருகின்றன. ஸெர்வியாதேசத்தார் ஆஸ்திரியா தேசத்தாரை உள்பிரவேசிக்க விடாமல் அடித்துத் துரத்திவிட்டார்கள்.

ஜெர்மனி தேசத்தார் பெல்ஜியம் தேசத்தில் பிரவேசித்து அடிபட்டுக்கொண்டு திரும்பி ஹாலண்டு மார்க்கமாய் ப்ரான்ஸ் எல்லைக்குப் போகப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஹாலண்டு தேசத்தார் அவர்களை யெதிர்த்து வருகிறார்கள்.

உலகெங்கும் காப்ரா அதிகப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய யுத்தம் நெப்போலியன் காலத்துக்குப்பின் ஐரோப்பாவில் எப்பவும் நேர்ந்ததில்லை.

நிலத்திலும், நீரிலும், ஆகாசத்திலும் சண்டைகள் நடக்கின்றன. நகரங்கள் பட்டணங்களைப் பகைவர்கள் இடித்துத் தகர்த்துப் பாழாக்கி வருகிறார்கள்.

"குயவனுக்குப் பலநாளைவேலை: தடிகாரனுக்கு ஒருநாளைவேலை" யென்கிற பழமொழியாக வருஷக்கணக்காகப் போற்றிவந்த சமாதானம் ஒருவாரத்தில் (ஜூலைமீ 28உ முதல் ஆகஸ்டுமீ 4உக்குள்) இருந்தவிடம் தெரியாமல்போய் தென்னல் முற்றிப் பெருங்காற்றாகிக் காட்டுத்தீயோடு கலந்துகொண்ட கதையாக, சில்லரை மனஸ்தாபங்கள் பெரிய வர்மங்களாக முற்றி முதிர்ந்து "பாரதப்போர்" ஒத்த மஹா பெரிய சண்டையில் வந்து முடிந்துவிட்டது.

"அதர்மம் முற்றி முதிர்ந்தால் தர்மம் தலையெடுக்கச்செய்ய நான் எப்போதும் அவதாரமாகிறேன்" என்பதை நீ அறிவாயாக வென்று போர்க்களத்தில் விசுவரூப தரிசனமளித்துத் தேற்றிய அருச்சுனனுக்கு வாக்குறுதி கூறிய பகவான் பூமிபாரம் தீர்க்க நினைத்தார்போலும் இம்மஹா பெரியயுத்தம் வந்துமூண்டுகொண்டிருக்கிறது.

யூனைடெட் ஸ்டேட்ஸ் ப்ரெஸிடெண்டவர்கள் சண்டைக்காரர்கள் சம்மதித்தால் தாம் மத்தியஸ்தம் செய்ய வருவதாகக் கூறியிருக்கிறார். ஆனால் அதை யாரும் கவனித்ததாகத் தோற்றவில்லை.

"தர்மமே ஜெய"மென்ற பிக்ஷைகேட்டேன்:
தரணியிலே கலிமுற்றுங் காலமாச்சு!
பரணியிலே யதிஷ்டானங் கூடலாச்சு!
அரணியிலே அக்கினியும் தோன்றலாச்சு!
ஆன்மாக்களீடேறு மார்க்கங்கேண்மின்!"

என்றுசொல்லி "ஆசையறுமின்கள், ஆசையறுமின்கள்" என்று ஆத்ம தத்துவத்தைப் போதித்த பெரியோர்கள் வாக்கு மெய்க்கலாயிற்று.

"மாசுபடிந்த மனத்தினுரவறமின்கள்
தூசுபடிந்த தபசிலன் தயவை யரவினுறவெனவே
கண்டஞ்சியோடிப் பிழைமின், பிழைமின் குழையீரே-
உண்டுடுத் துறங்கு வஞ்சகநெஞ்சின ருள்ளம்போல்,
கண்டங்கறுத்துள்ளம் நடமாடி காட்டிய வழியிதுவே."

யென்றோதிய பிக்ஷாடனமூர்த்தி யுபதேசவாக்கும் உண்மையாயிற்று. ஊரைவிட்டு, நாட்டைவிட்டு ஒடிப்பிழைக்க வழியில்லை. தேஹத்தைவிட்டோடினாலும் தேஹோஹபாவம் மாறுதவரையில் மறுஜன்மம் சித்திப்பது நிச்சயம். ஆதலால் அறிவே குருவென்றுறுதியாய் நம்பி அஹத்தூய்மையால் சிற்றம்பல தரிசனஞ் செய்து அங்கே குஹப்ரஹ்மமாய் விளங்கும் பாலதேவனும் குமாரக்கடவுளைத் தஞ்சமென்றடைந்து “அஞ்சேல்!” என்று அவர் அபயமளிக்க பயந்தீர்ந்து, செய்கடன் திருந்தச்செய்து நைஷ்கர்மசித்தி பெற்றுய்வதே வழியன்றி வேறு பிழைக்கும்வழி யில்லை. “கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.”

---

## READINGS FROM THE BOOK OF NATURE

### "MOUNT VESUVIUS"

### பிரகிருதி வித்தியாம்சம்.

விசூவியஸ் எரிமலை.

விசூவியஸ் எரிமலையானது உலகத்திலுள்ள எரிமலைகளெல்லாவற்றிலும் மிகவும் பெயர் பெற்றதென்றும் அதைக் குறித்த விசேஷங்களை பிரத்தியேகமாய் எழுதுவதாகவும் முந்தின சஞ்சிகையில் சொன்னோமல்லவா.

விசூவியஸ் எரிமலையின் பூர்வ காலஸ்திதி.

இப்பெயர் பெற்ற மலையானது ‘[1] ஐரோப்பா’ கண்டத்துத் தீபகல்பங்களி லொன்றாகிய ‘[2] இத்தாலியா தேசத்தின் ஓர் மாகாணமாகிய ‘[3] காம்பேனியா’ வில் ‘[4] நேபில்ஸ்குடா’ வின் கீழ் கரையில் ஆகாயத்தை அளாவி நிற்கின்றது. இதைச் சற்றேறக்குறைய இருபது நூற்றாண்டளவாய் நாகரீகம் பெற்றுக் கீர்த்தியடைந்த ஜாதியாரால் குடியேறப் பட்டுள்ளது. ஆனதுபற்றியே இம்மலையானது எரிமலைகளென்பவை எவ்விதத்தனவென்று சாமானியமாய் ஜனங்கள் அறிந்து கொள்ள ஓர் உதாரணமாக உதவுகின்றது. அதன் கொதிப்புகளைக் குறித்த சரித்திரமோ, பூமியின் உட்புறத்தி லுள்ள விசேஷ உஷ்ணத்தைக் குறித்தும், அவ்வுஷ்ணமானது எரிமலைகள் வெந்நீரூற்றுகள் ‘உஷ்ண ஆவிகக்கும் பிளவுகள்’ முதலான இவைகள் மூலியமாய் சுற்றிலும் உள்ள நாடேடே வெளியேவரும் வஸ்துக்கள் முதலியவற்றைக் குறித்தும், பூமி லக்ஷண சாஸ்திரக் கற்பனைகளின் பிரகாரம் நிரூபிக்கவேண்டுமான சங்கதிகளைக் காட்டியிருக்கின்றது. இம்மலையின் உயரம் அப்போதைக் கப்போது இதில் உண்டாகும் கொதிப்பின் பிரகாரம் மாறுபாடடைந்து வருகிறது. சில சமயங்களில் உண்டாகும் வெடிப்பில் மலையின் மேற்புறம் தகர்க்கப்பட்டுச் சின்னாபின்ன மாக்கப்படுவதால் உயரம் குறைவது முண்டு. சிற்சில சமயங்களில் வெடிப்பின் காரணமாய் வெளியே கக்கப்படும் கற்குழம்பு, பாறைத்துண்டு முதலியவற்றால் உயரம் அதிகமாவது முண்டு. ஆயினும், இம்மலையானது சமுத்திரமட்டத்திற்கு ஏறக்குறைய 4,000-அடிக்கு மேல் இருப்பதாகச் சொல்லலாம். வடபக்கத்தில் ஏறக்குறைய 3,747 அடி உயரமுள்ளதும் அர்த்த மண்டலமாய் வளைந்ததுமான ஓர் குன்று தற்காலத்தில் கொதிப்பெடுக்கும் பாகமாகிய குவிந்த வடிவுள்ள குன்றை அர்த்தாகாரமாய் வளைத்துக்கொண்டு சரிந்த வண்ணமாய் கீழ் நோக்கிச் செல்கின்றது. ‘மாண்டி சொம்மா’ என்று சொல்லப்படும் இந்த செங்குத்தாப் பாகமானது பூர்வீகத்தில் இம்மலையில் இருந்த ஒரு பெரிய உலைவாயின் சுற்றுப்பக்கத்துச் சுவராயிருக்கு மென்று தோன்றுகிறது. ஆனால் இப்பழமையான வாய் தற்காலத்திய உலைவாயிலிருந்து கக்கப்படும் கற்கள் முதலியவற்றால் தூர்ந்துபோய் வருகிறது. முற்காலத்தில் இந்த எரிமலை யானது மிகவும் பெரியதாயிருந்ததாகவும், அப்போது நேர்ந்திருக்கக்கூடிய ஒரு பெரிய கொதிப்பினால் மேல் பாகம் உடைக்கப்பட்டு சின்னா பின்னமாய் உருமாறி இப்போது இருக்கும் சிறிய



உருவத்தை அடைந்திருக்கக் கூடுமென்றும் ஊகிக்கிறார்கள். இம்மாதிரி பின்னமாயிருந்த இந்த மொட்டை மலையின் சுற்றுப் புறத்தில்தான் ‘பூர்வீக கிரேக்கர்கள்’ நவீனமாய் வாசஸ்தானங்கள் ஏற்படுத்திக்கொண்டு குடியேறினார்கள். கிறிஸ்து பிறந்த ஆரம்பத்திலும், அதற்கு முன்னால் அனேக நூற்றாண்டுகளிலும் இம்மலையானது வெடித்துக் கொதிப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. சரித்திரத்தில் ஏற்பட்ட இதன் முதற் கொதிப்பு கிறிஸ்து பிறந்த 79-ம் வருஷத்தில் உண்டாயது. இக்கொதிப்பு உண்டாய பின் இந்த



விஸுவியஸ் எரிமலை.

மலை வடிவில் பழைய மலையின் சற்றே தாழ்ந்த பாகத்தின் பேரில் குவிந்த வடிவமுள்ளதாய் ஒரு குன்று தோன்றியது. இது மேற்கண்ட கொதிப்பினால் மலையிலிருந்து வெளியே வீசி எறியப்பட்ட கற்குழம்பு, பாறை முதலியவற்றால் உண்டான புதிய குன்று. இச்சிறிய குன்றை ஒழித்து நோக்கில் கிரேக்கர் இந்த மலையைச் சுற்றிலும் குடியேறிய காலத்து அதற்கு இருந்த உருவை ஊகிக்கலாம். விசேஷ பூஸாரமுள்ள இம்மலைச் சரிவுகளில் திராட்சத் தோட்டங்களை ஏராளமாய் விர்த்திசெய்தும், மலையின் அடிவாரத்தைச் சுற்றிலும் அனேக கிராமங்களையும் பட்டணங்களையும் ஏற்படுத்தி விர்த்திசெய்தும் வந்த கிரேக்கர் விசூவியஸ் மலையினிடத்து இருந்த எரியுந்தன்மையைச் சற்றேனும் அறிந்திலர் போலும். அற்றேல் அவர்கள் அவ்வெரிமலையின் வாய்க்கு இரையாக்க நாடு நகரங்கள் முதலியவற்றை அவ்விடத்தில் ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள் என்பதற்கு ஐயமில்லை. புற்றில் கொடுநாக மிருக்கிற தென்று அறிந்தும் அதனுட் கைவிடுவாருண்டோ! அக்காலத்தில் அதிக புத்திகூர்மையும் அவதானமுமுள்ள பூகோளசாஸ்திரி யாகிய ‘ஸ்டிராபோ’ (Strabo) என்பவர், மலையின் குவிந்த வடிவம் எரியும் தன்மையால் உண்டாயிருக்கக்கூடியதென்றும், அதன் பாறைகள் அக்கினி சம்பந்தத்தால் மழுங்கி யிருக்கக்கூடியவை என்றும் சந்தேகித்து எழுதி யிருக்கிறார். இவர் சொல்லி யிருப்பதைக்கொண்டும், இன்னும் மற்றும் அக்காலத்திலிருந்த உரோம, கிரேக்க கிரந்த கர்த்தாக்கள் சொல்லி யிருப்பதைக் கொண்டும், விசூவியஸ் மலைச்சார்பானது கிறிஸ்து பிறக்க வெகுகால முன் முதற்கொண்டு

அதிக செழிப்பாய்ப் பயிரேற்றப்பட்ட வளமுள்ள பூமியாயிருந்ததென்று தெரியவருகிறது. ஆனால் இம்மலையின் சிகரமோ பயிர் பச்சை ஒன்றுமில்லாமல் பாழாய் நாற்புறமும் கரடுமுரடான பாறைச்சுவரால் சூழ்ந்து விடுதியான சாம்பல் நிறைந்துள்ள பள்ள நிலமாயிருந்தது.

### கி. பி, 79-ம் வருஷத்தில் நேரிட்ட பெருங் கோதிப்பு.

இந்த எரிமலையானது வெகு காலமுதற்கொண்டு கிறிஸ்து பிறந்து 63-வருஷங்கள் வரையில் யாதொரு சேஷ்டையுமில்லாமலிருந்து திடீரென்று ஆர்ப்பாட்டஞ் செய்யத் தலைப்பட்டது. 63-ம் வருஷத்திற்கு அப்பால் சற்றேறக்குறைய 16-வருஷங்கள் வரையில் பூகம்பங்கள் விசேஷமாய் உண்டாய்ச் சுற்றுப்பக்கத்துக் கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் அதிக நஷ்டத்தையும் கேட்டையும் உண்டாக்கியது. இம்மலையிருக்கும் 'காம்பேனியா மாகாணமுழுமையும் ஜனங்கள் அதிக பீதியடைந்திருந்தார்கள். இவ்வதிர்ச்சிகளால் மலையடிவாரத்துக்கு மேற்புறத்திலிருந்த 'எர்குலானியம்' என்னும் பட்டணமும்; தென் கிழக்கிலிருந்த 'பாம்பியை' என்னும் நகரமும் வெகுவாய் நாசமாக்கப்பட்டன. 'பாம்பியை' பட்டணத்திலிருந்த ஒரு பெரிய கோவிலானது அஸ்திவார முதற்கொண்டு ஒரே குலுக்காய்க் குலுக்கப்பட்டுப் பொடிப்பொடியாய் இடிந்து விழுந்தது. 'மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை' என்னும் வாசகத்தின் உண்மையை நாம் அனுபவசித்தியா யுணர்ந்து, அதிக மின்னல் இடி முழக்கம் இவைகளெல்லாம் உண்டான பிற்பாடு மழை தாரை தாரையாய் பொழியப் பார்த்திருக்கிறோமல்லவா. இது மாதிரியாகவே எரிமலை கொதிப்பெடுக்கத் துவங்கு முன் அதன் வரவை நமக்கு முன்னரே அறிவிப்பதாய் பூமியின் அதிர்ச்சியும், உட்புறத்தில் இடிமுழக்கம் போன்ற சத்தமும் உண்டாவது வழக்கமென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். 16-வருஷங்களாய் இவ்விதமாய் பூகம்பங்கள் கொடுமையிலும், கெடுதியிலும் காலம் செல்லச்செல்ல அதிகரித்துப் பிற்பாடு 79-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி மலைமுடியில் ஓர் பெருவெடிப்பெடுத்துக் கொதிப்புண்டு அகோரமான தீமைகளை விளைவித்தது. இதனால் நேரிட்ட நஷ்டமோ உலக சரித்திரத்தில் இது காறும் மானிடருக்கு நேர்ந்ததாகக் குறித்திருக்கும் பெருங் கேடுகளில் இதுவும் ஓர் பெரிய அவகேடாய் நிற்கிறது. இதனால் விளைந்த தீமைகளை இச்சரித்திரத்தை அறிந்தோர்கள் நினைக்க இன்னமும் நடுங்குவார்கள். இக்கேட்டினால் சுற்றுப்பக்கத்தில் குடியேறியிருந்த ஜனங்களுக்கு நேர்ந்த துன்பத்தைக் குறித்தும், இதன் காரண காரியங்களைக் குறித்தும் பரீக்ஷித்து அறிய முயன்ற 'ப்ளினி' என்ற அக்காலத்திய பண்டிதர் ஒருவர் இந்தக் கொதிப்பினால் உண்டாகிய புகையால் மூச்சுத்திணறி மாண்டதைப் பற்றியுமுள்ள விவரங்கள் அவர் சகோதரியின் புதல்வராகிய மற்றொரு 'ப்ளினி' என்பவரால் 'டாஸிடஸ்' என்னும் ஓர் சரித்திராசிரியருக்கு எழுதப்பட்டிருந்த இரண்டு கடிதங்களால் நன்கு விளங்குகின்றன. அக்கடிதங்களின் கருத்தை யாவருமறியச் சுருக்கமாய் இவ்விடத்தில் எடுத்துரைக்கிறோம்.

### ப்ளினி என்பவரெழுதிய கடிதங்களின் சுருக்கம்.

மேற்குறித்த காலத்தில் பெரிய ப்ளினியும் அவர் மருமகனாகிய சிறிய ப்ளினியும் விசூவியஸ் மலையடிவாரத்துக் கருகாமையில் கடற்கரை யோரமாக விருக்கும் 'மைஸீனம்' என்னும் கிராமத்தில் குடி இருந்தார்கள். இப்படி அவர்கள் அவ்விடம் வசித்துக்கொண்டிருக்கையில் மேற்சொல்லிய 79-வது வருஷம் ஆகஸ்டு மாதம் 24-ம் தேதி பெரிய ப்ளினியானவர் ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு தமது அறையில் உட்கார்ந்து ஏதோ



ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து யோசித்தவராயிருந்தார். அத்தருணத்தில் அவர் பெண்சாதி சரேலென்று உள்ளே வந்து, தான் என்றும் பார்த்திராததும் வெகு ஆச்சரியமான தோற்ற முடையதுமான ஒரு பெரிய மேகத்தைக் கண்டதாகவும், அதை அவரும் வந்து பார்க்கவேண்டுமென்றும் வேண்டினாள். அது கேட்டு அவர் வெளியே வந்து இவ்வதிசயக் காட்சியை நன்றாய்க் கண்டறியும் பொருட்டு ஒரு பெரிய மேடையின் மேல் ஏறிப்பார்த்தார். வெகு தூரத்திலிருந்து இந்த மேகமானது தென்பட்டபடியால் எவ்விடத்திலிருந்து இது உண்டாயதென்பதை உடனே நிதானிக்க முடியவில்லை; ஆயினும் பிற்பாடு இது விசூவியஸ் மலையிலிருந்து எழும்பியதாகத் தெரியவந்தது. இம்மேகம் ஒரு பெரிய தேவதாரு மரம்போலக் காணப்பட்டது; அடியில் பருமனாய்த் தடித்த அடி மரம்போலவும், மேலே வெகு செழிப்பாய்க் கிளைத்துத் தழைத்துக் கொப்பும் கிளையுமாய் காயுடனும், பூவுடனும் கவிழ்ந்து கொண்டிருக்கும் மரத்தின் மேற்பாகம் போலவும் தோன்றிற்று. சில சமயங்களில் இது பெரிய பீரங்கிகள் முதலிய வெடிக்கும்போது உண்டாகும் வெளிச்சம்போல் அதிக காந்தியுடையதாயிருந்தது. இருட்டாயிருந்த மற்ற சமயங்களிலோ இப்புகைக் குழப்பத்தினடுவில் பிரகாசமுள்ள சிறிய எரியும் வஸ்துக்கள் பளிச்சுப் பளிச்சு என்று மின்னிக்கொண்டிருந்தன.

இவர் இந்த ஆச்சரியத்தைக் கண்ணுற்றதும் அது உண்டாகும் இடத்திற்கு அருகாமையில் சென்று அதின் விசேஷத்தை அறியும் ஆவலுற்றவராய் அவ்விடம் பிரயாணமாய்ப்போக படகு ஒன்றை ஆயத்தம் செய்யச்சொன்னார். இதற்குள் விசூவியஸ் மலையடிவாரத்தில் ஓர் கிராமத்தில் வசித்துக் கொண்டிருந்த 'ரெக்டைனா' வென்னும் ஒரு ஸ்திரீ தான் இருக்கும் ஆபத்து நிலைமையையறிந்து கப்பலேறி வேறெவ்விடமாவது போய் உயிர் தப்புவதை ஒழித்து, தப்பிப் பிழைக்க வேறு வகையில்லையென்று கண்டு ப்ளினி என்பவருக்கு இச்சமாசாரத்தைக் காட்டி எழுதியிருந்த கடிதம் அவருக்கு அப்போது கிடைத்தது. இதைக் கண்டதும், இம்மாதிரியாக மலையைச் சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களில் அவதிப்படு மனேகரைக் காப்பாற்ற எண்ணங்கொண்டவராய், அனேகம் படகுகள் சித்தம் செய்துகொண்டு மலையை நோக்கிக் கடல்மார்க்கமாய்ச் சென்றார். அவ்விடத்துச் சனங்களெல்லாம் இப்பெருங் கேட்டுக்குப்பயந்து அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும் இவர் மட்டும் அந்த ஆபத்தான இடத்தை நோக்கிச் சென்றவராயிருந்தார். போகப்போக இவர் ஏறியிருந்த படகில், எரிந்துகொண்டிருந்த நெருப்புத் துண்டுகளும், சூடுண்ட கல்துண்டுகளும் வந்து விழத்தலைப்பட்டன. இச்சமயத்தில் மலையிலிருந்து வீசப்பட்டு வந்து விழுந்த கற்களோ மணற்காடாயிருந்த சமுத்திரக் கரையை' எல்லாம் நிரப்பிவிட்டது. இவ்விதமாய்ப் பல கேடுகள் உண்டாவதாய்த் தெரிந்தபடியால் படவோட்டும் மாலுமி திரும்பிப் போய்விடுவோமென்று எவ்வளவு சொல்லியும், 'ப்ளினி'யானவர் கேளாமல் தன் சினேகிதராகிய 'பாம்போனியேனஸ்' என்பவர் இருக்கிற இடத்திற்கு படகைச் செலுத்தச் செய்து அவ்விடம் வந்து சேர்ந்தார். 'பாம்போனியேனஸ்' இருந்த இடம் அத்தருணத்தில் அவ்வளவு தீவிரமான அபாயஸ்திதியில் இல்லாமற்போனாலும், அவர் தன் சாமான்களையெல்லாம் படகிலேற்றி அவ்விடம் விட்டுப் புறப்படுவதற்குச் சித்தமாயிருந்தார். ஆனால் காற்றுவாய்க்கவில்லையாதலால் அவர் பிரயாணம் தடைப்பட்டிருந்தது; அதற்குள் அவர் சினேகிதர் ப்ளினியும் வந்து சேர்ந்தார். வந்ததும் பயந்திருந்த 'பாம்போனியேனஸ்ஸைத்' தேற்றுவித்து தான் ஸ்நானம்செய்து உணவுகொள்ள உட்கார்ந்தார். இங்கு இது இப்படியிருக்க, அங்கோர் மலையான

அனேக விடங்களில் அகோரமாய் வெடிப்புக்கொண்டு வெகு கடூரமாய்ப் பொங்கி எரியத்தலைப்பட்டது. இதற்குள் இராத்திரியாய் இருள் மூடியபடியால் இம்மலையின் எரியும் வஸ்துக்கள் அதிக பிரகாசத்துடன் தோன்றியதோடுகூட, பார்ப்பவர்கள் அஞ்சி நடுங்கும்படியாய் அவ்வளவு கோரமாயும் பயத்தைவிளைவிக்கத் தக்கதாயும் காணப்பட்டது. இந்த விபரீதக்காட்சியை 'பாம்போனியேனஸ்ஸூம் அவர் உடனிருந்த மற்றவர்களும் கண்டு நடுநடுங்கித் தியக்கமுற்றார்கள். ஆனால் ப்ளினியோ மனந்தளர்ந்த வரல்ல.

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.'

அவருக்கு எரிமலையின் செய்கையை மேன்மேலும் பார்த்து அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் அதிகரித்துக் கொண்டே வந்தது. தனது நண்பர் முதலானவர்களுக்கு உண்டாயிருக்கும் பயத்தைப் போக்குவதின் பொருட்டு, இந்தப் பேரொளி, எரிமலையிலிருந்து விழும் வஸ்துக்கள் சுற்றுப்பக்கத்து கிராமங்களில் விழுந்து அவ்விடமுள்ள வீடுகளெல்லாம் தீப்பற்றி எரிவதனால் உண்டாகும் ஒளி என்றும், சத்தமோ வீடுகள் முதலியவை இடிந்து விழுவதால் உண்டாகும் சத்தமென்றும் சொல்லித் தேற்றினார். இவ்வாறு சொல்லி, தான் அதை யொன்றும் பாராட்டாமல் சயன அறையிற்சென்று நன்றாய் அயர்ந்து நித்திரை செய்தார். இதற்குள்ளாக இவர் இருந்த அறைக்கு முன்புறமிருந்த முற்றமுழுவதும் மலையாற் கக்கப்பட்ட எரியும் வஸ்துக்களால் நிரப்பப்பட்டது. இன்னும் சற்றுநேரம் அவர் அவ்விடத்திலேயே இருந்திருப்பாரானால் உருத்தெரியாமல் உருகி நீறாயிருந்திருக்க வேண்டும். இவர் மலையின் எரிச்சலுக்குக் கொஞ்சமேனும் பயந்தவராயிராமல் அயர்ந்து நித்திரை செய்வதை மற்றவர்கள் கண்டு ஆச்சரியமடைந்த க்ஷணப்பொழுதில் அவருக்கு இருந்த அபாயத்தை அவருக்குத் தெரிவித்து அவரை நித்திரையிலிருந்தும் எழுப்பினார்கள். எழுந்ததும் அவர் தன் நண்பனாகிய 'பாம்போனியேனஸ்ஸூம்' மற்றவர்களும் இருக்குமிடத்திற்குப் போனார். அவர்கள் பயந்தவர்களாதலால் மனந்தளர்ந்து கொஞ்சமேனும் உறக்க மற்றவர்களாய் விழித்திருந்தார்கள்.

இத்தருணத்தில் பூமி ஊசலாடத் தலைப்பட்டது. இத்துடன் வீட்டுச்சுவர்கள் முதலியன ஒன்றுக்கொன்று உறைந்துகொண்டு ஆடின. அப்போது அவர்களுக்கு வீட்டிற்குள்ளேயே இருப்பது க்ஷேமமோ அல்லது வீடு முதலியன இல்லாத வெட்டவெளியில்போய் நிற்பது அனுகூலமோ வென்று தெளிவாய்ப் புலப்படவில்லை. வீடு எங்கே நொருக்குண்டு விழுந்து ஒரே அமுக்காய் எல்லோரையும் அமுக்கி விடுமோ என்ற பயம் அவர்களுக்குள் வெகுவாய் இருந்தது. ஆனாலும் வெட்ட வெளியில்போய் நிற்கவும் தைரியம் கொண்டார்களில்லை. மலையிலிருந்து வந்துவிழும் அக்கினி வருஷத்திற்கு பயந்தே அப்படி செய்ய அவர்கள் துணியவில்லை. ஆயினும் வீட்டிலிருப்பதைக் காட்டிலும் வெளியேபோய் விடுவதே அனுகூலமென்று பிறகு அவர்களுக்குத் தோன்றவே எல்லோரும் அவ்விடத்தைவிட்டு அகன்று சமீபத்தில் உள்ள ஒரு வெளியில் போய் நின்றார்கள். ப்ளினியைத் தவிர மற்ற எல்லோரும் பயத்தாலே வெளியே ஓடிவந்தவர்கள். ஆனால் ப்ளினியோ வெளியேவந்தால் எரிமலையின் காரியங்களையும், அதிலிருந்து மழைபோன்று தாரை தாரையாய்க் கக்கப்படும் அக்கினித் துண்டுகள் முதலியவற்றின் குணங்களையும், பரிசோதித்து அறிந்து கொள்வதற்குச் சாதகமாயிருக்கு மென்றே எண்ணி வெளியேவந்தார். இவர்கள் வெளியே போகும்போது தலையில் கற்றுண்டு முதலியவை விழுந்து தகர்க்காமல் தலையணை, திண்டு, மெத்தை முதலானவைகளைத் தலையில்வைத்துக் கட்டிக்கொண்டுபோனார்கள். இவைகளைத் தவிர அவர்கள் தலைகளைக்காக்க வேறு



மறைப்பில்லை. பஞ்சுக்கும் நெருப்பிற்கும் இருக்கும் உறவை யோசிக்கில் இந்த ஆதாரமும் என்ன ஆதாரமாகும்! இவர்கள் செய்த சாகஸச்செயல் ஒருவன் மண் குதிரையை நம்பி ஆற்றைக்கடக்க எத்தனித்ததை யொக்கும்.

அப்போது பொழுதுவிடிந்து அருணோதயமாய் மற்றவிடங்களெல்லாம் பிரகாசமாயிருந்தது, இவ்விடத்திலோ அதிக இருள் மூடியிருந்தது. கதிரவனும் இக்கடூரமான அக்கினி வெள்ளத்தையும், அதினால் மதிமயங்கித் தவிக்கும் ஜனங்களையும் பார்க்கச் சகியாது மறைந்திருந்தனன் போலத்தோற்றியது. இவ்வாறு தப்பிப்பிழைக்க வகையில்லாமல் இவர்கள் அவதிப்படுகையில், கடலோரம் சென்று படகேறிப் பாய்விரித்து நடுக்கடலில்போய் நிற்கலாமோ என்ற ஓர் எண்ணம் அவர்களுக்குள் உண்டாகியது. அப்படியே கடற்புறம் சென்றார்கள். கடலோ கொந்தளித்து பெரு அலைகளாய் அதிக உயரம் கிளம்பிக் கரையைத்தாக்கி மோதிக் கொண்டிருந்தபடியால் கிட்ட அணுக ஏலாததாயிருந்தது. அவர்கள் தாங்கள் பட்ட அவதியினால் மிகக் களைப்புண்டவர்களாய் அவ்விடத்தில் தரையில் துணியை விரித்துட்கார்ந்தார்கள். உட்கார்ந்ததும் கொஞ்சநேரத்துக்கெல்லாம் அவ்விடத்தில் கந்தகம் முதலிய கலந்ததான ஒருவிதப் புகைசூழ்ந்து அக்கினிக் காற்று வீசியதால் அவ்விடம் இருந்தவர்களெல்லாம் இக்கஷ்டத்தைப் பொறுக்கமுடியாமல் நாலாபக்கமும் சிதறி ஓடிப்போனார்கள். ப்ளினியும் எழுந்திருக்க வேண்டியதாயிற்று. அவர் சிநேகிதரது உதவியால் எழுந்திருந்த உடனே கீழேவிழுந்து இறந்துவிட்டார். இவருக்குச் சுபாவமாய் அடிக்கடி மூச்சு அடைத்துக் கொள்ளும் ஓர் வியாதி உண்டு. அப்போது வீசிய கந்தகக் காற்றாலோ, அல்லது அதைப் போன்று வீசிய விஷசம்பந்தமான காற்றாலோ, உடனே மூச்சுத்திணறி உயிரைவிட்டதாகக் காண்கிறது. இக்கேடு சம்பவித்த மூன்றுநாள் வரையில் அந்தகாரம் நீங்கவில்லை. பிற்பாடு வெளிச்சம் உண்டான உடனே இவர் தேகத்தைப் பார்த்ததில், கொஞ்சமேனும் காயமுதலியன ஒன்றுமில்லாமல் முதலில் விழும்போது எப்படி இருந்ததோ அதேமாதிரி இருந்தது. உறங்குபவர்போலத் தோற்றியதே ஒழிய உயிரொழிந்து மாண்டவராகக் காணப்படவில்லை.

இவ்வாறு இவர் இவ்விடத்தில் மாண்டு கிடக்க, மைஸீனத்தில் என்ன நடந்ததென்று சற்று விசாரிப்போம். பெரிய ப்ளினியானவர் மலையை நோக்கிப் பிரயாணமாய்ப் போகையில், சிறிய ப்ளினியும் அவர் தாயாராகிய பெரிய ப்ளினியின் சகோதரியும் வீட்டில் இருந்தார்கள். அன்று இரவு போஜனமான பிற்பாடு சிறிய ப்ளினி சற்றே ஏதோ வேலையாயிருந்து படுக்கைக்குப்போனார். ஆனால் கொஞ்சமேனும் தூக்கம் வரவில்லை. கொஞ்சகாலமாய் அவ்விடத்தில் பூமி நடுங்கிக்கொண்டேயிருந்தது. இருந்தும் அவ்விடத்தில் பூகம்பம் அடிக்கடி உண்டாவதால் அவ்விடத்து ஜனங்கள் அதைச் சாதாரணமாக வழக்கமாய் உண்டாவதைப்போல நினைத்து அவ்வளவாக அதைப்பாராட்டாமல் அச்சமற்றிருந்தார்கள். ஆயினும் இந்த அதிர்ச்சியானது வழக்கமாய் இருப்பதுபோல் இராமல் சற்றுநேரத்துக்குள் பூமியானது அதிகமாய் ஊசலாட ஆரம்பித்து, கொஞ்சநேரத்தில் வீடுகளெல்லாம் ஆடும் ஆட்டத்தால் சரிந்து விழுந்து நொருக்குண்டு நாசமாய் விடுமென்று தோன்றியது.

இதன் அபாயத்தை அறிந்து சிறிய ப்ளினியும் அவர் தாயாருமாகப் பொழுது விடியுமுன்னமே கடற்கரை யோரமாயுள்ள ஒரு திறந்த வெளியில் வந்துசேர்ந்தார்கள். பொழுது விடிந்ததும் கதிரோன் ஒளி இல்லாமல் கார்மேகம் கவிந்ததை யொப்ப எங்கும் சற்றே இருளாயிருந்தது. இவர்களைச் சுற்றிலும் இருந்த வீடுகளெல்லாம் ஊசலாடிக்கொண்டிருந்தன. ஆதலால் இவ்வெளியில் நின்று

னும் ஏதாவது அபாயம் நேரிடக்கூடு மென்று நினைத்து ப்ளினியும் அவர் தாயாரும் அவ்வூரை விட்டு வெளியேபோய் வேறு அபாயமில்லாத இடத்திற்குப் போகலாமென்று புறப்பட்டார்கள். இவ்வாறாக அந்த ஊரில் மிகவும் முக்கியமானவர்களும் புத்திமான்களுமாகிய இவர்கள் புறப்படவே, ஏது செய்கிறதென்று ஒன்றும் தோன்றாமல் தியங்கித் தடுமாறி நின்றுகொண்டிருந்த மற்ற ஜனங்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக இவர்களைப் பின் பற்ற ஆரம்பித்தார்கள். ஆகவே, இவர்களிருவரையும் சுற்றி நாற்புறத்திலும் ஜனங்கள் திரள் திரளாய்க் கூடிக்கொண்டபடியால் கொஞ்ச தூரங்கூடச் செல்ல முடியவில்லை. மேலும், வெளிப்புறங்களிலும் பூகம்பம் அதிகரித்து வந்தபடியால், அவ்விடங்களிலும் அதிக அபாயம் இருக்குமென்று தோன்றிற்று. அவர்கள் கட்டளையால் கொண்டுவரப்பட்ட வண்டிகள் சமநிலத்தில் கூட நின்ற விடத்தில் நிற்காமல் முன்னும் பின்னுமாய் ஓடி ஊசலாடிக்கொண்டிருந்தன. பெருங்கல் துண்டுகளைத் தடையாக வைப்பினும் அவைகள் ஒரே இடத்தில் நின்றபாடில்லை. இப்படி உண்டான அதிர்ச்சியால் கடல் பின்வாங்கிக் கரையைவிட்டு உள்ளே வெகுதூரம் போய்விட்டது. இதனால் நீரில்வாழும் பிராணிகள் அநேகம் உலர்ந்த தரையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்தன. இம்மலையிலிருந்து அடிக்கடி மேலே எழும்பிவருவதும் முன்னமே குறிப்பித் திருப்பதுமான புகைப்படலமானது தேவதாரு மரத்தையொத்து, ஆவியாலும், தூசு தும்புகளாலும், நெருப்புக் கற்களாலும் அமைந்ததாய் மலையின்பேரில் ஒரே ஸ்தம்பாகாரமாய்க் கிளம்பி நின்று மேலே சுற்றுப்பக்கத்துப் பிரதேசங்களை ஒரே வளைவாய் வளைத்துக்கொண்டது. இவைகளில் தோன்றிய மின்னற் கொடிகளோ அதிக பிரகாசமும், சாமனிய மின்னல்களைக் காட்டிலும் நீளமுள்ளவைகளாயு மிருந்தன. மேலும், அதிக பிரகாசமுள்ள நெருப்புத் தழல்களும், ஏராளமான சாம்பலும், உருகிய பளபளப்பான கற்குழம்பு வெள்ளமும், உலைவாயிலிருந்து சுற்றிலும் சுக்கப்பட்டன. மலையிலிருந்து வீசப்பட்ட நுண்ணிய அணுக்கள் ஆகாயமெங்கும் பரவி அவ்விடத்திய பிரதேசங்களில் மூன்று நாட்கள் வரையில் இருளா யிருந்தது.

இக்கொடிய கொதிப்பினால் உண்டாகிய பிராணச்சேதமும், அழிந்து நாசமுற்ற பட்டணங்களும், கிராமங்களும் அனந்தம். இக்காரிருளால் உண்டாகிய குழப்பத்தினால் ஜனங்கள் நிலைதடுமாறி இருந்தார்கள். இருட்டென்றால் இது சாமானிய இருட்டாகுமா? ஒரு அறை அல்லது குகையின் வாயிலை மூடிக் கொஞ்சமேனும் உள்ளே சூரியரஸ்மி எவ்விதத்திலும் வராதபடி தடுத்திருந்தால் அது எவ்வளவு இருளாயிருக்குமோ அதை ஒத்ததாயிருந்தது. சாதாரணமாய் நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தண்ணொளி பரப்பி வெண்மதியுலாவப் பெற்ற இரவையும், அனலொளி காட்டி அதிகாந்தி வீசும் பகலவன் பொழுதையும் ஒழித்து, ஊழி காலத்தை ஒப்ப மூன்றுநாள் வரையில் கன்னங்கரிய காரிருள் ஊர்களடங்கலும் கவழ்ந்ததேல் ஜனங்கள் நிலைமயங்கி, நடுத்தடுமாறித் திண்டாட்டம் கொள்வதற்கும் ஐயமுண்டோ? அவர்கள் பட்ட துயரத்திற்கும் பெருங்கஷ்ட நஷ்டங்களுக்கும் நிகருமுண்டோ? அவ்விருள்,

'ஆலமுலகிற் பரந்ததோ வாழிகிளர்ந்ததோ
வவர்தம்
நீலநிறத்தை யெல்லோரு நினைக்கவதுவாய்
நிரம்பியதோ
காலனிறத்தை யஞ்சனத்திற் கலந்துகுழைத்
தாகாயத்தின்
மேலு நிலத்து மெழுகியதோ விளக்கு
மிருளாய் விளைந்ததுவே'

என்று கம்பர் பாடியதற்கு இசைந்ததாயிருந்தது.

இச்சமயத்தில் உண்டான கொடுந்தீயினால் மாண்டவர்கள் அநேகர். வீடுகள் தீப்பற்றி அதிலுள்ளவர்களுடன் எரிந்து நீறாகியும், பூகம்



பங்களின் கேட்டினால் வீடுகள் இடிந்து விழுந்து அவற்றுள் வாசமாயிருந்த மனிதர்களுடன் நசுங்கியும், வெளியே ஓடிப்பிழைப்போமென்று ஓடியவர்களில் சிலர் உருகிய கற்குழம்பு வெள்ளத்தில் அகப்பட்டு மாண்டும், சிலர் பெருங்கற்றுண்டுகளால் புடைப்புண்டு விழுந்து இறந்தும், சிலர் அக்கினி வஸ்துக்களால் எரியுண்டு வீழ்ந்தும், சிலர் விஷ ஆவிக் காற்றுகளாலும், புகையாலும் மூச்சுத்திணறுண்டு மாண்டும், இவ்வாறு அநேக கஷ்டங்கள் நேர்ந்தன. இவ்விதமாய் அநேக ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய பட்சி, மிருக முதலான ஜீவராசிகள் உயிர்துறந்தன. புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய யாவும் எரிக்கப்பட்டு அந்த பிரதேசம் முழுதும் சாம்பல்காடுபோல் விளங்கியது.

இச்சமயத்தில் அவ்விடமெல்லாம் ஆண்மக்கள் உரத்துக்கூவும் ஓசையும், பெண்பாலரின் அழுகுரலும், குழந்தைகளின் வீரிட்டழும் ஓசையுமே பரவிக் காதுகளை அடைத்து எங்கும் ஒரு பெருங்குழப்பமாக்கிவிட்டன. குழந்தைகள் அழுகுரலைக் கேட்டு அவர்களுக்கு ஆதரணை புரிய வகையற்றவர்களாய் தவித்து நின்றார்கள் சில தாய் தந்தையர். வயோதிகரான பெற்றார் உற்றார்கள் திண்டுமுண்டாடித் தவித்துக் கூவியழுவதைப் பொறுக்க முடியாராய்ப் பிரலாபித்து உள்ளமுருகி அழுதனர் சில சிறுவர் சிறுமியர். இவ்வுலக இன்பத்தையும், பெண்டு பிள்ளைகளையும், ஆஸ்திபாஸ்திகளையும், ஒருங்கே துறந்து உயிர் மாய்வதெப்படி என்று நினைந்து நினைந்து கரைந்தழுதனர் சிலர். தங்கள் குடும்பம் எல்லாம் ஒருங்கே படும் அவஸ்தையைச் சகிக்கக் மாட்டாதவர்களாய் வயிற்றிலேயும் வாயிலேயும் புடைத்துக் கொண்டவர்கள் சிலர். ஊழிகால அந்தகாரமோ வந்து விட்டது: ஆண்டவன் முன் நின்று அவர் ஆக்கினைக்கு உத்தரமளிக்க ஏற்பட்ட நாளும் கிட்டிய தென்று பயந்தார் பாபியர் சிலர். ஆ! தேவனே, எங்களுக்கு இக்கொடுமையை விளைவிப்பதேன்; ஆ! சர்வ ஜீவகாருண்யனாகிய கடவுளே, எங்களை இப்பெருந்துயரத்திலிருந்து காத்து ரக்ஷித்து இவ்விருளை நீக்க உம்மால் முடியாதாவென்றும், யாம் செய்த பிழைகளைப் பொறுத்து எங்களை ஆதரியும் என்றும் பலவாறாகச் சொல்லிக் கடவுளைத் துதித்து வேண்டுவோரும் உளர் சிலர். மற்றுமுள்ளவர்களோ இதேது பிரளய காலந்தான் வந்து விட்டதென்றும், இனி இவ்விருளினின்று தப்பிப் பிழைப்பது அரிதென்றும் பூலோகமுழுதும் ஒரே அடியாய்த் தொலைந்து போய்விடும் என்றும் எண்ணினார்கள்.

'வரைகலங்க வனங்கலங்கக் கலங்குறாத மண்
கலங்க விண் கலங்க மகரமுந்நீர்த்,
திரை கலங்கத் திசை கலங்க வீறிலாத செகங்
கலங்க வுகங்கலங்கச் சிந்தை தூயோர்,
உரை கலங்க வுளங்கலங்கத் துளங்கிமெய்யி
லூன்கலங்க விலங்கொடு புள்ளினங்கள் யாவும்,
நிரைகலங்க வுலகினுயிர் படைத்த தம்மினிலை
கலங்காதன வுண்டோ நிகழ்த்தினம்மா.'

இவ்வாறாக ஒரு பெருங் குழப்பமிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் இருள் நீங்கி ஜனங்களுக்குள் ஓர் தைரியமும் அமைதியும் உண்டாக, கதிரவனும் பிரகாசிக்கலுற்றான். ஆயினும், ஆகாய மண்டலத்தைக் கவிழ்ந்துகொண்டிருந்த நுண்ணிய அணுக்களின் குணங்களாலும், கந்தக முதலான ஆவிகளின் தன்மையாலும், சூரியன் பிரகாசமற்று கிரகணமுண்டாய காலத்து விளங்குவதுபோல் ஒளி மழுங்கிக் கிடந்தான். இதைப் பார்க்க எரிமலைக் கொதிப்பினால் நாடு நகரங்களுக்கும், ஜீவகோடிகளுக்கும் உண்டான இப்பெருந்துயரம் சூரியனையும் பற்றியது போலத் தோற்றியது. அந்தகாரம் ஒழிந்து மலையின் கொதிப்பும் அடங்கவே மலையைச் சுற்றிலும் அதிக தூரம்வரையில் நிலமானது பனியை யொப்ப வெண்ணிறமான போர்வை போட்டதுபோல் எங்கும் சாம்பலால் மூடப்பட்டிருந்தது.

### புதையுண்ட நகரங்கள்.

இவ்வளவு விபத்துகளும், நஷ்டங்களும், உண்டானதற்குக் காரணம் எரிமலையின் கொ

திப்பே. இம்மலையில் உண்டான வெடிப்பின் அதிர்ச்சியாலும், பூகம்பங்களாலும், கொதிப்பினாலும் முன்னமே சொல்லப் பட்டிருக்கும் 'எர்குலானியம்' (Herculaneum) 'பாம்பியை' (Pompeii) என்னும் நகரங்களும், மலைக்குத் தென்புறத்தில் தற்காலத்திய 'காஸ்டல்லாமேர்' (Castellamare) என்னும் பட்டணம் இருக்கும் ஸ்தானத்தில் அப்போது இருந்த 'ஸ்டாபே' (Stabae) என்னும் பட்டணமும் இருந்த இடமே தெரியாமல் முற்றிலும் மூடப்பட்டுப் பாழாக்கப் பட்டன. இப்பட்டணங்களிலுள்ள ஜனங்களில் அனேகர் கொதிப்பெடுக்கு முன்னும், கொதிப்பெடுத்த உடனும் ஓடி உயிர் தப்பினார்கள். இப்பட்டணங்கள் கற்குழம்பு வெள்ளத்தில் முழுகி நாசமானவைகளாகக் காணப்படவில்லை. கற்குழம்பு வெள்ளத்தாலும் சாம்பல் மாரியாலும் வீடுவாசல்களிலுள்ள சந்துபொந்துகளெல்லாம் நிறைந்து தூர்ந்துபோவது சாத்தியமா யிருந்திராது. இம்மலையிலிருந்து நெருப்பு மழை வருஷித்தபோது வெளியே வந்த நுண்ணிய தூசு மண் முதலிய வஸ்துக்கள், மலையிலிருந்து ஏராளமாய் வெளியே கக்கப்பட்ட நீராவியுடன் கலந்து மண்ணீராய் மாறி பெரு வெள்ளமாய் மலைச்சரிபுகளில் பிரவாகித்து வீடுகளையும் கிராமங்களையும் முழுக அடித்ததாகத் தற்காலத்திய சோதனைகளால் தெரிய வருகிறது.

இந்தப் பட்டணங்கள் நாசமடைந்து ஏறக்குறைய 1700-வருஷங்கள் வரையில் இவைகள் இருந்த இடமே தெரியாமலிருந்தது. சென்ற 1738-ம் வருஷம் சில வேலைக்காரர்கள் ஒரு கிணறு வெட்டிக்கொண்டிருக்கும்போது அடியில் ஏதோ ஒரு கட்டடத்தின் மேற்றரை தென்பட்டது. இது என்னவென்று முழுதும் வெட்டிப் பார்த்ததில் 'எர்குலானியம்' நகரத்து நாடகசாலை மண்டபமென்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் தற்காலத்திய தரை மட்டத்திற்கும் புதையுண்டகளில் 70-அடியும் சில விடங்களில் 100-அடி ஆழமும் இருக்கிறபடியால் மண்ணை வெட்டி வெளியே கொண்டுபோய்க் கொட்டுவது அசாத்தியமாயிருக்கிறது. ஆனதுபற்றி நாடகசாலையைப்போல மற்ற விடங்களையும் சோதனைசெய்து வெளியாக்கவில்லை. இது மாதிரியாகவே 1748-ம் வருஷம் பாம்பியை நகரத்தை வெட்டிப் பரிசோதிக்க ஆரம்பித்தார்கள். ஆனால் அடிக்கடி இந்த வேலையைக் கைவிட்டு விட்டபடியால் ஒன்றும் சரியாக முடியவில்லை. பிற்பாடு 1861-ம் வருஷம் 'இத்தாலியா' தேசத்து இராஜாங்கத்தாரால் இவ்வேலை மேற்போட்டுக் கொள்ளப்பட்டு விசேஷமாய் வெளியாக்கப்பட்டு வருகிறது. இவைகள் இறுதியாய், கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் இருந்த உரோமர்களுடைய நடை உடைபாவனைகளைக் குறித்தும், அவர்கள் உபயோகப்படுத்திய பாத்திரம், தட்டுமுட்டு சாமான்களைக் குறித்தும், அவர்கள் வசித்திருந்த வீடுகளின் ஏற்பாடுகளைக் குறித்தும், அவர்கள் சிற்ப சாஸ்திரத்தில் அடைந்திருந்த தேர்ச்சியைக் குறித்தும், அவர்கள் அக்காலத்தில் அடைந்திருந்த சீர் திருத்தத்தைக் குறித்தும் அதிக விவரமாய் நமக்கு அறிவிக்கும் அறிகுறிகளாக விளங்குகின்றன. இவ்வாறாக மூடுண்ட இப்பட்டணங்களின் மேற்றரையில் புல், பூண்டு, செடி கொடி, மரங்கள் முதலிய முளைத்து, வீடு வாசல்கள் கிராமங்கள் முதலியன ஏற்பட்டு ஜனங்கள் தலைமுறை தலைமுறையாய் இவ்விடம் வசித்து அனேக காலம் சென்ற பின்னர் தற்செயலாய் இப்பட்டணங்கள் வெளிப்பட்டன. ஆனால் கி. பி. 63-ம் வருஷத்தில் உண்டான பூகம்பங்களினால் இவைகள் விசேஷமாய் இடிந்து பாழானதாகவும், மறுபடி முழுதும் புதிப்பிப்பதற்கு முன்பாகவே 79-ம் வருஷத்தில் மலையில் உண்டான மேற்சொல்லிய பெருங்கொதிப்பினால் இப்பட்டணங்கள் முழுதும் நாசமாக்கப் பட்டதாகவும் சரித்திர மூலியமாய் தெரியவரு



## 1631-ம் வருஷத்தில் நேர்ந்த பெருங் கொதிப்பு.

இந்தக் கொதிப்புக்குப் பிற்பாடு தற்காலம் வரையில் இந்த மலையில் ஏறக்குறைய 60-கொதிப்புகள் வரையில் உண்டாயிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. 17-ம் நூற்றாண்டின் கடைசியில் இம்மலையானது, 79-ம் வருஷத்தில் நேரிட்ட கொதிப்புக்கு முன்பாக எவ்வளவு நேர்த்தியான காட்சியுடன் தோற்றப்பட்டதோ அவ்வளவு நேர்த்தியான காட்சி அமைந்ததாக இருந்தது. 5-மைல் சுற்றளவுள்ள அதன் உலைச்சுவர்முழுதும் மரங்களாலும், செடி கொடிகளாலும் மூடப்பட்டிருந்தது. மலையின் அடிவாரச் சுற்றுப்புறங்களோ ஆடு, மாடு முதலிய விலங்கினங்கள் மேய்வதற்குத் தகுந்த புல் பூண்டு மைதானங்களாகவும், காட்டுப்பன்றி முதலியன தங்கும் புதர்களாகவும் இருந்தன. ஆனால் மலையின் சிகரமாகிய உலைவாய்ப் பாகமானது சாம்பலாலும் அங்கு மிங்கும் உஷ்ணமான உவர்நீர் தேங்கி நிற்கும் குட்டைகளாலும் நிறைந்திருந்தது. இவ்வாறிருக்கக் கடைசியாய் 1631-ம் வருஷத்தில் சற்றேறக்குறைய ஆறுமாதவளவு பூகம்பங்கள் அதிகமாய் உண்டாய்க்கொண்டிருந்து வரவர அவைகள் கொடுமையில் அதிகரித்து அவ்வருஷம் டிசம்பர்மாதம் 16-ம் தேதி திடீரென விசூவியஸ் மலையானது வெடிப்பெடுத்துக் கொதிக்கத் தலைப்பட்டது. மலையின் உலை வாயிலிருந்து வெளியே வீசப்பட்ட மேகங்கள் போன்று அடர்ந்து பரந்தவைகளாயிருந்த மண் கல் முதலிய சேர்ந்த தூசுப்படலமானது வானத்தில் அதிக உயரம் கிளம்பி நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் போய்விழுந்தது. இவற்றிலிருந்த நுண்ணிய வஸ்துக்களோ 'துருக்கி' (Turkey) தேசத்து தலைமை நகராகிய 'கான்ஸ்டான்டிநோபில்' (Constantinople) பட்டணத்தில் விழுந்தனவாம். இம்மலையிலிருந்து வெளியே வந்த ஏராளமான நீராவியோ தண்ணீராய் மாறி, சாம்பல் முதலியவற்றுடன் கலந்து பெருமண்ணாறுகளாய்ப் பெருக்கெடுத்துச் சுற்றுப்பக்கத்துச் சமவெளிகளையெல்லாம் வெள்ளத்தால் முழுக்கடித்தது. இவ்வெள்ளம் 'இத்தாலியா' தேசத்தை ஊடுருவிச்செல்லும் 'அப்பென்னைன்ஸ்' (Appennines) மலை அடிவாரம் வரையில் சென்றதாம். மலையின் உலைவாய் விளிம்பிலிருந்து பெருகிய கற்குழம்பு வெள்ளமோ மேல்புறமும் தென்புறமுமாய் ஓடிச் சமுத்திரத்தில் 12, 13 இடங்களில் அருவிகள் போலப் பாய்ந்தனவாம். கொதிப்புக்கு முன்னமே நேரிட்டுவந்த பூகம்பங்களினால் பின்னர் வரப்போகும் ஆபத்து ஜனங்களுக்குத் தெரிந்திருப்பினும், மலையானது திடீரெனக் கொதிப்பெடுத்ததனால் தப்பிப்பிழைக்க வகையற்றவர்களாய் ஏறக்குறைய 18,000-பேர்கள் வரையில் மாண்டதாகத் தெரியவருகிறது.

## மலையின் பிற்காலத்திய ஸ்திதி.

இந்தப்பெருங்கேட்டுக்குப்பிறகு விசூவியஸ் மலையானது முற்றிலும் வாய்மூடினதாக இல்லை. அது முதற்கொண்டு சொற்பகாலத்திற் கொருதரமாக அடிக்கடி நீராவி, தூசு, உருகின உலோகக் களிப்பு, அல்லது கற்குழம்பு முதலியவைகளைக் கக்கிவண்ணமாயிருக்கிறது, 1766-67, 1779, 1794, 1822, 1872, இந்த வருஷங்களில் இந்த மலை விசேஷமாய்க் கொதிப்பெடுத்தது. இக்கொதிப்புகளில் கண்ட காட்சிகளைக்குறித்து விவரமாய் எழுதப்பட்டிருக்கிறதாயினும், எரிமலைகளின் தன்மைகளைக்குறித்து அறிந்துகொள்ள மேலே சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களே போதுமாதலின் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. 1872-ம் வருஷத்தில் எடுத்த கொதிப்பைக் குறித்து முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம்.

## சோதி மண்டபம்.

இம்மலையின் தாழ்ந்த சரிவுகளில் ஓர் பக்கத்தில் சோதிமண்டபமொன்று, எரிமலையின் செயல்களைக்குறித்து அப்போதைக்கப்போது குறிப்பிட்டுவர வெகு காலத்திற்கு முன்பா

கவே கட்டப்பட்டு துரைத்தனத்தாரால் ஆதரிக்கப்பட்டுவருகிறது. இந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் அருமையான கருவிகளால் மிகவும் சாமானியமான பூகம்பங்களும் கணக்கெடுக்கப்பட்டு அவைகள் எத்திசையை நோக்கி உண்டானவென்றும், அவைகளுடைய தீட்சண்ய மெவ்வளவென்றும், அவைகள்தோன்றிய பிற்பாடு உண்டாகும் அதிர்ச்சியின் காலவளவு எவ்வளவென்றும் தெரிவிக்கப்பட்டு முன்னால் வரப்போகிற ஆபத்தை முன்னரே ஒருவாறு அறிந்துகொள்ளப்படுகிறது.

கம்பிவட இருப்புப்பாதை.

இந்த எரிமலையின் விசேஷங்களை பார்ப்பதற்காக அடிக்கடி அவ்விடம்வரும் பிரயாணிகள் அடிவாரத்திலிருந்து மேலே ஏறிப்போய் பார்த்து வருவதற்கு அதிக அனுகூலமாக அவ்விடத்தில் கம்பிவட இருப்புப்பாதை ஒன்று உளது. இதன்மூலியமாய் குழந்தைகள், கிழவர்கள் முதற்கொண்டு யாவரும் வெகு சுலபமாய் மேலேபோய் உலைவாயின் அற்புதக் காட்சியைக்கண்டு களித்துவரலாம்.

விசூவியஸ் எரிமலையைக்குறித்த விஷயங்களை ஒருவாறு சொல்லிமுடித்தோம். இனி, எரிமலைகளைக்குறித்து எழுதியபோது அடிக்கடி சொல்லிவந்த பூகம்பங்களைக்குறித்து விவரமாய் எடுத்துரைப்போம்.

---

## TIT-BITS FOR CHILDREN.
## BLINDMAN'S BUFF AMONG NATIONS.
## சிறுவர்க்கான துக்கடாக்கதைகள்.
## "கட்டுக்கண்ணாமூச்சி விளையாட்டு."

குழந்தைகளே! உங்களுக்கு இம்முறை ஒருகதை சொல்லவேண்டும். "ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம்; இறங்கச்சொன்னால் நொண்டிக்குக்கோபம்" என்கிற கதையாக நான் தர்மஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். கதை சொல்லமாட்டேன் என்றால் பத்திராசிரியருக்குக் கோபம் வரும். நான்கண்டதைக் கேட்டதை அம்மையார் கதையாக உங்களுக்குச் சொல்லுவோமென்றால் "உள்ளதைச்சொன்னால் நொள்ளைக் கண்ணிக்கு நோப்பாளம்" என்கிறபடி "நொள்ளைக்கண்" உள்ளவர்கள் கோபத்துக் காளாகவேண்டும். நான் யாருக்கென்று பயப்படுவேன்? இதைப்பற்றிப் பத்திராசிரியரிடம் சொல்லிக்கொண்டேன். அவர் விவேகசிந்தாமணியரசாகையால், ஒரு குழந்தையைக் கூட்டிக்கொண்டுவந்து உங்களுக்கு பயம்நீங்க வழி சொல்லுகிறேன் வாரும் என்று அழைத்தார். அவருடனிருந்த குழந்தை "அண்ணா, வாருங்கள்; அவர் என்ன வழிதான் காட்டுகிறார் பார்ப்போமே!" யென்று கையைப் பிடித்திழுத்தது. நானும் சரிதானென்று கூடவே போனேன்.

ப்ரதோஷ காலவிசேஷம்.

அன்றைக்கு ப்ரதோஷநாள். (ப்ரதோஷம் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ!) திரயோதசியன்று சாயங்காலத்துக்கு 'ப்ரதோஷகாலம்' என்று சொல்லுகிறது. அக்காலத்தில் பகவான் 13 கலைகளோடுகூடி அபயமென்றடைந்தார்க்கு அஞ்சேலென்றுசொல்லி தரிசனம் கொடுக்கிறார் என்பது ஐதிகம். இதெல்லாம் வெறும்கட்டுக் கதையில்லை. பெரிய உண்மைகளைக் கதைகளாக அமைத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரதோஷகாலத்தில் பகவான் எளியார்க்கெளியனாய் தரிசனமளிக்கிறார் என்பதுமட்டும் நிஜம். திருமயிலையில் அறுபத்திமூவர் உற்சவத்தின் உள்மர்மம் இதுதான். இது நிற்க.

அன்று ப்ரதோஷகாலத்தில் கோவிலில் தீபாராதனை நடந்தது. கண்டாமணி கணார் கணார் என்று அடித்து எல்லாரையும் தரிசனத்துக் கழைத்துக்கொண்டிருந்தது. ஜனங்களெல்லாரும் கூட்டமாக நின்று 'ஹரஹர' வென்றுசொல்லி கன்னத்தில் போட்டுக்



கொண்டு தீபாராதனை தரிசனம் செய்துகொண்டிருந்தார்கள். நாங்களும் அங்குபோனோம். அப்பொழுது அவர்களையெல்லாம் பார்த்து எனக்கும் பக்தியுண்டாயிற்று. தர்மசங்கட முற்றபொழுது பகவான் தான் துணையிருப்பதாக அர்ச்சுனனுக்கு வாக்களித்திருக்கிறபடியால், "ஸ்வாமி, யாருக்கு பயப்படுவேன்?" என்று எண்ணிக்கொண்டே மனம் உருகிக்கொண்டிருந்த எனக்கு பகவான் இந்த ப்ரதோஷகாலத்தில் பிரசன்னமாகி (அப்படியென்றால், 'நேரில்தோன்றி' யென்றர்த்தம்) என் சங்கடத்தைத் தீர்க்கமாட்டாராவென்று தோன்றியது. அதை வெளியிடாமல் உள்ளத்தில்தானே உண்மையாக நினைத்துக்கொண்டிருந்தேன். "எண்ணினார்க் கெண்ணினபடியிருந்தருளீயுமீசன்" என்று பெரியோர் கூறியிருக்கிறார்களாதலால், அவர்வாக்குப் பொய்க்காமல் ஒரு அதிர்சய சம்பவம் நேர்ந்தது. அதென்னவென்றால் :—

ஸ்வாமி தரிசனம்.

கற்பூரதீபம் எடுக்கும்பொழுது என்னையறியாமல் என்னெண்ணமெல்லாம் என் முன்னேயிருந்த மூர்த்தியிடத்தில் போய்விட்டதனாலோ, வேறு என்ன காரணத்தினாலோ, பெரியோர்கள்செய்த பூஜாபலம் காரணமாக எதிரிலிருந்த மூர்த்தியுரு அந்தக்கற்பூர தீபாராதனை காலத்தில் தேஜோமயமாகிக் கண்கொள்ளாக்காட்சியாய் விளங்கியது. அந்த திவ்வியமங்கள தரிசனத்தைக்காணவும் நான் குழந்தைபோல் அன்பொன்று தவிர வேறெதையும் உணராதவனாய்விட்டேன். அப்பொழுது அந்த தேஜோமயாநந்த விக்ரஹரூபமாய் விளங்கியதேவதை அன்புருவேயாகி ஆனந்த வடிவாய் நிருத்தம்செய்து "அஞ்சாதே, அஞ்சாதே, நானிருக்கிறேன்!" என்று சொன்னதுபோல் உள்ளத்துவனி கிளம்ப, இதென்ன அதிர்சயமென்று மூடின கண்ணைத் திறந்து பார்த்தேன். அப்போது "அபயவரதம்"* என்றுசொல்கிற இருமுத்திரைகளையும் காட்டிக்கொண்டு அந்த ஆனந்தமூர்த்தி என் எதிரே சோதிவடிவமாய் நிற்கக்கண்டேன். "சோதியே, சுடரே, சொல்லிறந்த மதியே, ஆதி, யனாதியே!" என்று பெரியோர்கள் பாடித் துதித்ததின் அர்த்தமும் உண்மையும் எனக்கு அப்பொழுதுதான் சுருக்கென்று உள்ளத்திற் பதிய உறுத்தியது.

வலதுகையைத் தூக்கிவிரித்து ஹிருதய கமலத்துக்கு நேராகவைத்து "அஞ்சாதே!" யென்றுகாட்டிய அழகுகை என்னுள்ளத்தைக் கவர்ந்தது. இடதுகரம் அந்த திவ்யானந்த விக்ரஹமூர்த்தியின் பாதத்தைக் குறித்துக்காட்டி "நீ குழந்தை: நான் உன்னைப் பெற்றதாய்! என்காலைக் கட்டிக்கொள்: பயப்படாதேயடா அப்பா!" என்று அன்புகூர்ந்து சொன்ன பாவனையாக அந்த ஆனந்தவிக்ரகம் என் கண்முன்னே ஸ்தூல சூக்ஷ்மமிரண்டிலும் கலையாது அப்படியே நிற்கக்கண்டேன். கண்டுகளித்து உளந்தேறி இந்த அதிர்சயத்தைப் பத்திராசிரியரிடம் சொன்னேன். அதுவரையில் கூடவிருந்த குழந்தை திடீரென்று 'சொப்படிவித்தை' காட்டி மறைத்தாற்போல், மறைந்துபோக, "ஐயா, என்னைக் கூட்டியழைத்துவந்த குழந்தை யிங்கேயிருந்தபடி மறைந்துபோன அதிர்சய மென்ன"வென்று கேட்டேன்.

"அதிர்சய மொன்றுமில்லை: எல்லாம் திரிசயமாகத்தான் இருக்கிறது வாரும்" என்று பத்திராசிரியர் என்னைவீட்டுக்கு அழைத்தார்.

"அந்தக் குழந்தையைக் காணாமற்போக விட்டுப் பிரிந்துவர எனக்கு மனம் வரவில்லை" யென்றேன்.

அப்பொழுது அங்கேவந்த குருக்கள் "அக்குழந்தையை நான் காட்டுகிறேன் வாருங்கள்" என்று எங்களை அழைத்துப்போய் தண்டபாணியாய் ஸதானந்த மூர்த்தியாய் நின்றுகொண்டிருந்த சுப்பிரமணியக்கடவுளைத் தீபாராதனைகாட்டி தரிசிக்கச்செய்தார்.

* For particulars see "Elements of Iconography" by the Superintendent of Archealogy, Travancore State.

‘ கடடுக்கண்ணுமூச்சி.”†

“அப்படியா! அது!” என்று சொல்லிக்கொண்டே வீடுவந்து சேர்ந்தேன். அன்று இராத்திரி “கட்டுக்கண்ணு †மூச்சிவிளையாட்டு” விளையாடினதாக ஒருதிவ்வியதரிசனம் கண்டேன். இதென்ன வேடிக்கை! “மர்ஸா (Vision of Mirza) கண்ட உவமை தரிசனம்” போல் இப்படிப்பட்ட விளையாட்டு விளையாடப் பார்த்தேனே; இது என்னகுறியோ, ஏது லக்ஷியமோ! ஒன்றும் தெரியவில்லையே யென்று மயங்கிக்கொண்டிருந்தேன். அப்பொழுது பத்திராசிரியர் “அடயம்” என்று தலைப்பெயரிட்டுத் தான் ஒரு விஷயமெழுதியதின் அச்சுக்காபியைக்காட்டி, குழந்தைகளுக்குக் “கட்டுக்கண்ணுமுச்சி” விளையாட்டின் கருத்தை இந்தவிசை அழகாய்ச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மறுநாட்காலையில் ஐரோப்பா கண்டமெங்கும் ஒரேகாட்டுத்தீபோல் பரவத்தக்க யுத்தமொன்று ஆரம்பித்து விட்டதாகத் தெரியவந்தது. (“ Germany has declared war ”) “ஜர்மனி யுத்தஸந்நத்தன் ஆய்விட்டது.” என்கிற நாலு வார்த்தையில் புருஷார்த்தமெல்லாம் பாழாய்ப்போனதுபோலும் ஒரு பிரமாதயுத்தம் கிளம்பிவிட்ட சமாசாரம் உலகெல்லாம் பரவிவிட்டது. லோகமாதா தேசாதிபதிகள் கண்ணைக்கட்டி ‘கண்ணுமூச்சி’ விளையாடவிட்டுப் பார்க்கிறாள்.

“கண்ணு மூச்சியாரே
“காட்டு மூச்சியாரே
“மோட்டு மூச்சியாரே
“எனக்கொரு பழம்
“உனக் கொரு பழம்
‘ கொண் டோடி வா ”!

என்று ஜர்மனி சக்ரவர்த்தி கண்ணைக்கட்டி கண்ணுமூச்சி விளையாட விட்டுவிட்டாள். அவர் உருஷியா தேசாதிபதியைப்பிடிக்க அவர் கட்டுக்கண்ணுமூச்சி விளையாடுகிறார்.

† கட்டின கண்ணோடு விளையாடுகிற மூர்த்தி. மூச்சி என்பது மூர்த்தியின் மழலை மருவென்பர்.

இப்படியாக ஐரோப்பிய தேசாதிபதிகளெல்லாரும்கூடி கட்டுக் கண்ணுமூச்சி விளையாடுகிறார்கள். இதற்குக் காரணமென்னவென்று கேட்டால் ஆஸ்திரியா - ஹங்கேரி தேசத்துக்கும் ஸேர்வியா தேசத்துக்கும் விவாதமுண்டாகிச் சண்டையிடத் தொடங்கினார்களாம். அதற்காகவென்று ஐரோப்பாவிலுள்ள தேசத்தார்களெல்லாம் கக்ஷிகட்டிக்கொண்டு நரமேதயாகம் செய்யக் கங்கணம் கட்டினார்போலும் ஜனங்களைப் போர்க்களத்தில் பலியிட்டு ஸர்வஸங்கார தீக்ஷை பெற்றுக்கொள்ளக் காத்திருக்கிறார்கள்.

“ அறிவார் பராசக்தி ஆனந்த மென்பார்
அறிவார் அறிவுரு வாமவளென்பார்
அறிவார் கருமம் அவளிச்சை யென்பார்
அறிவார் பரனும் அவளிடந்தானே”

என்றார் பெரியோர்.

“ஏகைவசக்தி” யென்றபடி எல்லாம் வல்ல பராசக்தி யொன்றே. அவள் தானே ஆனந்த வடிவாகவும், அறிவுருபமாகவும் இருக்கிறாள். இந்த இரண்டு ஸ்வரூபமும் ஸத்துக்களுக்கும் ஸாதுக்களுக்கும் தன்னை வென்ற தலைவர்களுக்கும் தான் தரிசனப்பேறும். கருமத்தைச் செய்து கர்மபலனை யனுபவிக்கப் பிறந்தவர்களுக்கு குழந்தைக்குச் செவ்வெண்ணெய் போட்டும் செவிலித்தாய் போல், அவர்கள் செய்கர்மத்துக்குத் தக்கபடி கர்மபலனை யுண்டு பண்ணி ஊட்டுவிக்கும் பொறுப்பும் “அவளிச்சை” யென்று சொல்லப்பெறும் அவளது இச்சாசக்தியைப் பொறுத்ததாயிருக்கிற தென்பர் மேலோர். பரப்ரஹ்மசாக்ஷாத்காரம் பெற விரும்பும் ஸர்வஸங்கபரித்தியாகிகளும் அவளருட்சக்தியினாலே பரமனைக் காணப் பெறுவர்.

இப்படியாக ஸர்வகாரண சக்தியின் திவ்விய மங்கள விக்ரஹமாக விளங்கும் அந்த பரதேவதை அவள் குழந்தைகளாம் தேசாதிதேசராஜாக்களையெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு “கட்டுக் கண்ணுமூச்சி” விளையாட



விட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாள். அந்த அதிர்சயத்தை நான் “உவமை தரிசனமாகக் கண்டேன்” என்று சொன்னால் யார் நம்புவார்கள்? இக்காலத்தில் ஒருவரும் நம்பமாட்டார்கள். ஆனாலும் “Wireless telegraph” என்று சொல்லும் தந்தியில்லாத நந்திசோல்லோத்த சமாசாரம் ஒன்று வந்துவிட்டதென்றால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதை வாசித்துப் பார்த்துத் தாம் நேரிற் கண்டதுபோல் அந்தச் சமாசாரத்தை நம்பி நடக்க தினசரி சமாசாரப் பத்திரிகைகள் பிரசுரமாகும் அச்சாபீஸ் வாயிலில் காத்துக் கொண்டு கிடக்கிறார்கள். வித்தில்லாத மரமும் பற்றில்லாத பரமும் நேரில் பார்த்தபிறகு தான் (சாக்ஷாத்காரமான பின்னரே) நம்பி நடப்பதற்கு சாத்தியமாகுமென்பர். நம்பிக்கையின்றி நேரில்பார்ப்பதும் சாத்தியமில்லை: சாக்ஷாத்காரமாகாமல் நம்பி நடப்பதும் கஷ்டமே. ஆகையால் தான் “ கட்டுக் கண்ணுமூச்சி விளையாட்டு” விளையாடிக் கண்ணில்லாமல் காணவும், காதில்லாமல் கேட்கவும், வழிகாணாமல் நடக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். மஹாபாரத யுத்தம் நடந்து முடிந்த பின்னர் தான் துரியோதனாதியர் கொட்டம் அடங்கியது. அதைப்போன்ற மஹாபாரதப் போர் இப்போகிளம்பியிருக்கிறது. ஆனந்தத் தாய் “கட்டு கண்ணுமூச்சி” கட்டிவிட்டு விளையாடிக்கொண்டிருக்கிறாள்.

“ கட்டுக் கண்ணுமூச்சி” விளையாடும்போது சொல்கிற பாட்டுக்கு அர்த்தமென்னவென்று ஒரு பெரியவரைக் கேட்டேன். “ அப்பா அதை யேன் கேட்கிறாய்? அர்த்தத்திற்கு அநர்த்தம் செய்யு மிக்காலத்தில் அது உனக்கேன் ?” என்றார். “ ஸ்வாமி, சொல்லுங்கள்! பாதகமில்லை !” யென்றேன். அதன்மேல் அவர் சொன்னது இது:—

(1) “கண்ணுமூர்த்தியாரே!—(குருடருக்குக் கோலுதவும் தேவதையே) கண்ணை மூடிவிட்டேன் என் குழந்தையைப் பார்த்துக்கொள்.

(2) காட்டு மூர்த்தியாரே !—(வனதேவதைகாள்) வழிகாணத் தெரியாமல் நீ காட்டும் வழி பற்றிச்செல்லும் என் குழந்தையைப் பார்த்துக்கொள்.

(3) மோட்டு மூர்த்தியாரே!—(மலைமேல் வசிக்கும் உத்தமேசிகரே தேவி!) மேடுபள்ளம் தெரியாமல் ஓடும் என் குழந்தையைப்பார்த்துக்கொள்.

(4) எனக்கொருபழம்.—உன்னைப்பெற்ற எனக்குப் பெரும்பயன் உண்டாக ஒப்பற்ற பழமாம் பிரசவ துக்க நிவாரண காரியான ‡ “அன்பாங்கனி” “ கொண்டோடிவா”.

(5) உனக்கோரு பழம்.—கர்மபந்தத்தால் கட்டுப்பட்டுத் துக்கமும் துன்பமுமே யனுபவிக்கப் பிறந்த உனக்கு அதிலிருந்து விடுதலை கொடுக்கும் துக்க விமோசன காரியான ஆனந்த மரத்தின் உச்சியில் காய்த்துப் பழுத்து உதிரும் சுககனமான பழமொன்று “கொண்டோடிவா.”

இப்படியாக திவ்ய தேஜோமயானந்த, மங்கள விக்ரஹமாக விளங்கும் லோகமாதாவாம் பராசக்தி தம்குழந்தைகளோடு “ கட்டுக் கண்ணு மூர்த்தி விளையாடும் லீலா விநோதத்தை” (Mirza) மெர்ஸா கண்ட உவமைதரிசனம் போல் நீ தரிசனமளிக்கப் பெற்றாய்!” என்று சொன்னார் அப்பெரியவர்.

இதைச் சொன்னால் குழந்தைகளுக்கு அர்த்தமாகா தென்பார் சிலர். ஆனால் பள்ளிப் பிள்ளைகளும் வீட்டில் குடித்தனம் செய்யும் பெண்டீர் பிள்ளைகளும் காலை, மாலை இரண்டு வேளையன்றி உச்சி காலத்திலும் ஒரு தந்தி சமாசாரம் வந்தால் அது என்னவென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு ஸேர்வியா தேசமும் ஆஸ்திரியா-ஹங்கேரி தேசமும் மற்ற இதர தேசங்களும் இருக்கு மிடமாவது அத்தேசங்

‡ cf. “ பெற்றுப் பெற்றலுத்தாளென் தாயும் பிறந்து பிறந்தலுத்தேன் நானும்” என்றார் பெரியோரும்.

களின் அக்கப்போர் சமாசாரமாவது தெரியாது. "யுத்தம் நடக்கிறதா? எப்படி நடக்கிறது?" என்று கேட்கிறார்கள். இவன் அவன் கப்பலை யுடைத்தான். அவன் இவன் நகரில் ஆகாசரதத்திலிருந்து வெடிகுண்டைப் போட்டுக் ஊரைப் பாழாக்கினான். அங்கே ஒரு சைனியமழிந்தது. இங்கே யொரு பட்டணம் பாழ்த்தது-என்று வரும் தந்தியைக் கேட்டு ஆச்சரியப்படுகிற குழந்தைகள் தேசாதி தேசங்களையெல்லாம் சூத்திரப்பாவைபோல் கட்டியாட்டும் தேவி "கட்டுக்கண்ணு மூர்த்தி விளையாடுகிற லீலாவிபூதியைச் சொன்னால் கேட்கமாட்டார்களா" வென்று கண்டதைக் கண்டபடி சொன்னேன். காதிருந்து கேட்டவர் கேட்கட்டும். காதிருந்தும் கேளாதவர் அதைத் தள்ளட்டும். என்னிடத்தில் யாருக்கும் வர்மம் வேண்டாம். "கள்ளத்தனம் செய்தால் குள்ளநரி யாகவேண்டும்" என்பர் மேலோர்.

அவையடக்கம்.

ஒரு பெரியவர் தான் கண்டதைக் கண்டபடி ஸாதுசங்க சாக்ஷியாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது, 'தப்பிலிப்பய'கள்' பலபேர் அவர்களைச்சுற்றிக் கூட்டங்கூடி நின்றுகொண்டிருந்தார்கள். ஸாதுக்கள் சிரவண முறையால் அவதானமாகக் கேட்டு "மனனம்" செய்து கொண்டிருக்கையில், போக்கிலிகள் 'கெக்கொலி' கொட்டிச் சிரித்தார்கள். அப்பொழுது அவர் சாதுக்கள் கவனம் கலையாமலிருக்க வேண்டியதின்பொருட்டுக் குறிப்பாக ஒரு பாட்டுச்சொன்னார். அது இது:—

"கண்டேன் கண்டதைக்
கண்டபடி நானுரைத்தால்
காணாதைக் கட்டியழும்
கண் கெட்ட குருடரெல்லாம்
பேயென்றும பித்தென்றும்
பரிகாசம் செய்கிறார்கள்:
பேயென்றாலென்ன!
பித்தென்றாலென்ன!
பரம் பொருளெல்லாம்
ஒன்று தானே!"

யென்று சொல்லி, அப்பியாச புருஷர்களுக்கு அபேதபாவனம் உண்மையவதானத்துக்கு இன்றியமையாததென்பதை வற்புறுத்தினார். இந்த விவேகசிந்தாமணியரசும் ஆதியில் அதையே சாதனமாகக் கைக்கொண்டனுஷ்டித்து வந்ததாகத் தெரிகிறது. பழைய புஸ்தகங்களின் முதற்பக்கத்தலையேட்டில் பின்வரும் இப்பாட்டு அச்சிட்டிருக்கக் காண்கிறோம்.

"கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதனில் ஆசையுள்ளோர்
பெற்றோ மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
குட்டி யண்ணா.

---

### * TRANSFUSION COLUMN.

["If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English...into Tamil, the effect will be to assist and stimulate greatly the study of both languages."—*Dr. G. U. Pope.*]

மொழிபெயர்ப்பு வித்தை.

(1) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

Thought and Language are the very eyes (*i.e.*, true expressions) of the soul.

(2) "விண்ணவனை நண்ணினார்க் கெண்ண மெல்லாம் கண்ணாகும்."

"The thoughts of those that have approached *the Light*
Are all transformed into *visions bright.*"

---

* "No exercise of faculty is better and nobler for *a real* man than that of struggling with great thoughts, and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the best feelings, and elevate the whole being of their fellow men around them!"—*Rev. Dr. G. U. Pope* on the "Vivekachintamani Series."



### WOMEN'S THOUGHTS. ஸ்ரீபாவம்.

*(From some women poets of England).*

### I. THE CHILD IN THE MANGER.

*(From "The Living Chalice" by Miss Susan Mitchell,)*

"His presence set the skies aflame,
As through the glittering zones He came,
The Heavenly Child as He swept by,
Snatched one bright bauble from the sky.
The Magi watched the heavens afar,
Saw in the blue a starry stranger,
But He whose playthings planets are
Lay innocently in the manger."

### I. அவதார மஹிமை.

"தொட்டியிற் பிள்ளை கிடக்கு'து பார்!"

---

"தொட்டியிற் பிள்ளை கிடக்கு'து பார்!
பட்டியில் மாடுபோல்; எட்டாத சூரிய
மண்டலத் துக்கப்பா லிருந்தவர் திவ்விய
லோகங்க ளூடேவந் திழிந்திங்கே கிடக்கிறார்!
ஆகாச மார்க்கத்தி லவர்கையிற் றூங்கிய
போக சுகமா'நீர்க் குமிழியின் தேஜஸும்
ஆகாசத் தேபுது நக்ஷத்ர மாகவே,
யோகநற் சித்தர்கள் ஆகாசத் தேயந்த
விண்மீ னொளிர்வதைக் கண்ணுற்றுக்காட்சியின்
உண்மை யுணரவே ஓடிவந் திங்குற்றார்!
தண்ணளி சுரந்து அண்டங்க ளையெல்லாம்
வண்ணமாம் பந்துபோல் விளையாடும் கையினர்
கண்மணி போலிங்கே தொட்டியிற் பாவையா
மண்ணுளோர் கலிதீர்க்க வந்தவ தாரமாய்
விண்ணி லொளிதானேவிண்மீனாத் தோன்றியிம்
மண்ணிலே யவதார மானதைக் கண்ணுற்றார்."

---

### II. "THE FRIEND."

"In the eyes of my friend
As he speaks to me,
Mirrored, reflected, I sometimes see,
Deep in their depth, and beneath his love,
The image of God.

"The Highest does send
His vast mystery
Veiled in the flesh we love to see;
And while we fancy Him far above,
We have kissed our God."

—Marie C. Stopes, D.Sc., Ph. D., F.L.S.

### நண்பரிலன்பர் காட்சி.

Motto: "எண்ணினார்க் கெண்ணினபடி யிருந்தருளீயுமீசன்."

என் நண்பர் என்தோழர்
என்னோடு பேசும்போ
தென்னன்ப ரென்னண்ணல்
கடவுள்தம் பிரதிமையைநான்—
கண்ணினுட் பாவைபோலே
அண்ணல்தம் சாயையை
அவரன்பில் அவருள்ளக்
கருத்தினில் கருவின்நல்
மூலத்திற் கண்ணாடி
முன்போலே கண்டுநான்
மகிழ்கின்றேன் அன்பாலே!

பரமாய தேவர்தம்
பரமார்த்த உண்மையைப்
பாமரர் அறியவென்
றிதமாயவர் நேசித்தாரால்
இன்பூட்டிப் போதிக்கிறார்.
அண்ணலைத்தா னுணராதார்
அவரையதி தூரனாகப்
பாவித்திருக்கை'லே பரமனைநாம்
நண்ணியிங்கே அண்ணலாக
நல்முத்தம் கொடுத்து'ட்டோம்!
அம்மம்ம! அதிர்சயங்காண்!

## PRESS NOTICES.

THE VIVEKACHINTAMANI CHILDREN'S SPECIAL:—The July issue of this popular and attractive children's Magazine has a touching tale to tell of the feelings of children, for whom it devotes a large amount of space, issuing this month a special supplement under the above head which gives a full report of the proceedings of and the address adopted by the children assembled on the 14th July to give expression to their feelings of sorrow on the passing away of H. E. Lady Hardinge. An English version of the children's address has, we learn, been furnished to H. E. the Viceroy in person though the Military Secretary. There are other articles of varied interest and amusing stories and Readings from Nature, are written in easy flowing style to suit the requirements of children cultivating their own mother-tongue. The article on "the Sarving power of Faith which is Love" explains the purpose of the images in temples for the worship of the common people. The social study article on Respectability' is instructive as well as interesting, as also that on 'the self-made man.' Tit-bits for Children and Recreaions for the young amusing and instructive. The Magazine thus fulfils the object with which it has been converted into a children's Journal.—*The Hindu, 28th July*, 1914.

"THE VIVEKACHINTAMANI" Children's Supplement:—The July issue of this widely circulated Tamil Journal contains a special supplement which is devoted to the passing away H. E. Lady Hardinge, and the report of the proceedings of the Children's Meeting held on the 14th July, and the address of condolence in Tamil, adopted by the children assembled. There are other articles on various subject which are instructive and amnsing.—*The Madras Times, 23rd July*, 1914.

"THE VIVEKACHINTAMANI CHILDREN'S SPECIAL".—

The July issue of this popular Tamil journal contains a special supplement under the above heading, which is devoted to the Children's gatherings on the passing away of H. E. Lady Hardinge. The address of condolence adopted by them in Tamil is given in full, and we learn that an English version of the children's pathetic and touching message has been submitted to H. E. the Viceroy. There are other articles on various subjects which are instructive and amusing, and calculated to imbue children with those ideals of social service which are essential to produce a healthy tone and character."—*The Madras Mail*, 25th July 1914.

"The July issue of this journal has a number of articles of varied interest all of which are written in easy flowing Tamil to suit the requirements of children who have cultivated their mother-tongue. It devotes a large amount of space for the delectation of young minds and has this month added to it a special supplement under the above heading which has a touching tale to tell of the feelings of children on the passing away of H. E. Lady Hardinge. The children's address adopted by the children assembled is given in full and we understand that an English version of the same has since been sent to H. E. the Viceroy personally through the Military Secretary. The magazine has now established its claim to be "the children's favourite, the teacher's help and the parent's guide," and it aims at imbuing the minds of children with those ideals of social service which are essential to produce a healthy tone and stable character in the natural development of the child-mind which is intuitively active and responsive to every impulse from within and from without."—*The Indian Patriot*, 25th July 1914.

மகா சந்தனாதித் தைலம்

சந்தனாதித் தைலமெனப் பெயர்கொண்டு எங்கு முலாவுவது போன்றன்று இந்த சந்தனாதித் தைலம். பரிசுத்தமானது அப்பட்டமானதென்பது இத்தைலம் ஒன்றுக்கே தகும். இச்சிறந்த தைலத்தை உபயோகித்த விஷேமே அதன் அற்புதமான குணம் விளங்குகிறது. அதிக கொதிப்புள்ள மூளையைக் குளிரபண்ணி ஞாபக சக்தியை விருத்தி செய்கிறது. இயற்கையான பரிமளவாசனை மிகுதியேயாயினும் மனதுக்கு உற்சாகத்தைக்கொடுக்கிறது. ஒரு புட்டித் தைலம் கொண்டு அநேக புட்டிகள் தயார் செய்துவிடலாம் போலிருக்கிறது. இந்தச் சந்தனாதித் தைலமும் மதராஸ் பந்தர்தெரு. ஆர். வி. பண்டிட் கம்பெனியாரிடம் கிடைக்கும்.

10. தோலாகொண்ட புட்டி 1-க்கு ரூ 2-4-0.

"THE MORAL OF THE PRESENT CONFLAGRATION OF EUROPEAN WAR."

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."

8 - OCT 1914 MADRAS.



அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*
"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"
புத்தகம். 22.] 1914ஆு செப்டம்பர்மீ, ஆனந்தஆு புரட்டாசிமீ [சஞ்சிகை 6.

## "THE MORAL OF THE PRESENT CONFLAGRATION OF EUROPEAN WAR."

"THE CHOICE BETWEEN KEEPING AND BREAKING OUR SOLEMN OBLIGATIONS."

### The Moral of the General Conflagration of European War.

An "Indian Thinker" writes (under date the 4th instant) to us :—

If there is one thing which the general conflagration of European War proves to the far-seeing eye of a reflective soul more than anything else, it is this : The Higher Laws of Morality which are self-executive and immutable cannot be set at nought by make-believe professions of peace and good-will, while the hand is grasping the sword and *making ready to* strike when it can be done without discomfiture to oneself. The Laws of Conscience cannot be safely set aside and all substitutes for the restraining influence of conscious action in the higher plane of consciousness which *embraces all* humanity and *all created beings* in its magnetic fold are mere make-believe shifts which, may veil the inevitable hand of Nemesis bringing the retribution due for acts done which, hide its meaning how you may under plausible pretexts, cannot escape *the* watchful eye of the recording angel whose duty it is to be constantly weighing the words and acts of conscious beings, be they individuals or nations, and record them truly and correctly in the Book of Fate ; so that *nothing* shall escape the watchful care of the Powers that preside over the working of the Great Law of Action and Reaction, which is the only efficient corrective that cannot by any pretence whatsoever be evaded or set at nought.—*The Hindu.*

### "A Debt which cannot be paid by Wo ds."

"THE BEST WAY" IS "WE SHOULD REALISE"

"But our admiration and our sympathy are not confined to the Belgian army, they go out in fullest measure to the Belgian people who have endured and who are now enduring all horrors of war, and after making every allowance for the source from which our information comes, we do not doubt that they are enduring them in forms which ought to be impossible among civilised nations. (Cheers). . . . . . .

"Belgium has deserved well of the world. She has added another to the long list, of which the Prime Minister has spoken, of great deeds which have been done by the heroic patriotism of small nations. But to us, her Allies, she has done more than set an example. She has placed us under an obligation which as a nation we shall not forget.

"It is fitting that we should acknowledge that debt in words, but it is *a debt which cannot be paid by words*, and at this moment, in my belief, *the best way in which we can attempt to pay that debt is that we shoul l realise*, as I believe our country has not yet fully realised *that this for us is*, as much as for Belgium, *a struggle of life and death* and that we must, without haste and without rest, employ the utmost of our resources to bring it to a successful end"—*Mr. Bonar Law in the House of Commons, 27th August*, 1914.

## "ONE SUPREME AND OVERRIDING INTEREST OF EVERY STATE."

"THE DUTY OF ASSERTING AND MAINTAINING THAT GREAT PRINCIPLE."

"**Belgium's Courageous and Heroic Discharge of that duty**"

London, Aug. 27.—In the House of Commons to-day Mr. Asquith (Prime Minister) rose amid cheers to move the following resolution :—

ADDRESS TO THE KING.

"That an humble Address be presented to His Majesty, praying him to convey to His Majesty the King of the Belgians, the sympathy and admiration with which this House regards the heroic resistance offered by his army and people, to the wanton invasion of his territory, and an assurance of the determination of this country to support in every way the efforts of Belgium to vindicate her own independence and the public law of Europe."

THE PRIME MINISTER'S SPEECH.

Mr. Asquith said: "Very few words are needed to commend to the House the terms of this Address. The war which is now shaking to its foundations the whole European system, originated in a quarrel in which this country had no direct concern. We strove with all our might as everyone now knows (Cheers) to prevent its outbreak and, when that was no longer possible, to limit its area.

"FACING THE INEVITABLE."

It is of importance that it should be clearly understood when it was, and why it was, that we intervened. It was only when we were confronted with the choice between keeping and breaking our solemn obligations in the discharge of a binding trust, and a shameless subservience to naked force that we threw away the scabbard. We do not repent our decision (Loud Cheers.)

CHARACTER ASSERTS ITSELF.

The issue was one which no great and self-respecting nation, certainly none nurtured like ourselves in this ancient home of liberty, could, without undying shame, have declined.

"OUR PLAIN AND PARAMOUNT OBLIGATIONS."

We were bound by obligations, plain and paramount, to assert and maintain the threatened independence of a small and useful State.

"ONE SUPREME AND OVERRIDING INTEREST."

Belgium had no interests of her own to serve (Cheers) save and except one supreme and overriding interest of every State, great or little, which is worthy of the name—the preservation of her integrity and her national life (Cheers).

"THE DUTY OF ASSERTING & MAINTINING IT"

History tells us that the duty of asserting and maintaining that great principle, which is after all the well spring of civilisation and of progress, has fallen once and again at the most critical moments in the past on States relatively small in area and in population, but great in courage and resource (Cheers). On Athens, Sparta and the Swiss Cantons and not less gloriously, three centuries ago, on the Netherlands (Cheers).

"BELGIUM'S COURAGEOUS AND HEROIC DISCHARGE OF THAT DUTY."

Never, I venture to say has the duty been more clearly and bravely acknowledged, and never has it been more courageously and heroically discharged, than during the last few weeks by the Belgian King and Belgian People. They have faced without flinching and against almost incalculable odds the horrors of irruption, devastation, spoliation and of outrage. (Loud Cheers).

"THE DEFENCE OF LIEGE—AN INSPIRING THEME."

They have stubbornly withstood and successfully arrested the inrush of wave after wave of the gigantic and overwhelming force. The defence of Liege (loud cheers) will always be a theme of one of the most inspiring characters in the annals of Liberty.

The Belgians have won for themselves the immortal glory which belongs to a people who prefer freedom to ease and security, and even to life itself. We are all proud of their alliance and of their friendship, and we salute them with respect and honour. (Renewed cheers).

"WE ARE WITH THEM HEART AND SOUL"

We are with them heart and soul because by their side and in their company we are defending at same time two great causes the independence of small States and the sanctity of International obligations. We assure them to-day in the name of this United Kingdom and of the whole Empire that they can count to the end on our whole hearted and unfailing support.

"THE HERO OF THE DEFENCE OF LEIGE."

LONDON, AUGUST 25.—A Telegram from Aix-La-Chappelle says that General Leman was found among the ruins of a Liege fort nearly suffocated.

"THE TRIUMP OF SPIRIT OVER FLESH."

He was brought before General Emmich who returned him his sword in recognition of his gallantry. General Leman and other Belgian officers have been sent to Cologne.

புஸ்தகம்-22. சஞ்சிகை-6.

ஆனந்தவருஷ புரட்டாசிமீ

# விவேகசிந்தாமணி

September-October, 1914.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளில் ஸ்ரீந்தையுற்றோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

☞ In reply to several inquiries addressed to us we beg to state that the Government have approved of the recommendations of the Director of Public Instruction (R.O.C. No. 8043/13) and declared the *Viveckachintamani* as "suitable for use in Elementary Schools" and ordered its supply to all the Government schools and Educational officers. The Editor requests that Officers and Heads of Institutions receiving the *Viveckachintamani* will be pleased to recommend its resupply to all the Elementary and Lower Secondary schools under their supervision. Indents for copies of the journal will be supplied by the Managing Agents of the *Viveckachintamani* from the beginning of the current Volume, which coincides with the official year.

## "THE MORAL OF THE PRESENT CONFLAGRATION OF EUROPEAN WAR."

## "ஐரோப்பாவில் மஹாபாரதயுத்தம் நடக்கிறது பாருங்கள்."

ஐரோப்பாவில் உண்டாகி நடந்துவரும் யுத்தம் காட்டுத்தீபோல் எங்கும் பற்றிக்கொண்டு எல்லாரையும் யுத்த சந்நத்தராக்கிவிட்டது. சண்டைக்குப் போவதில்லையென்று தீர்மானித்துள்ள தேசங்கள்கூட யுத்தச் செலவுக்கென்று லக்ஷம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துப் படைகளைக்கூட்டி எல்லைப்புறங்களில் யுத்தத்துக்குத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அனேகர் யுத்தத்தில் சேர்ந்துவிட்டார்கள். திடீரென்று கோடையிடிபோல் இப்படி நாடு நகரங்களையும் குடிபடைசேனை யானைகளையும் ஹதம்செய்து பாழாக்கும் யுத்தமுழக்கம் வந்ததற்குக் காரணம் என்ன? இதைப்பற்றி வாச்சாமஹோசரமாய்ப் பேசுவதில் பிரயோஜனமில்லை. இராஜாக்களும் இராஜதந்திரிகளும் மந்திரிகளும் இத்தனைகாலமாக சமாதானத்துக்காகவென்றே சைனியங்களையும் படைகளையும் கப்பல்களையும் ஆகாயரதங்களையும் விர்த்திசெய்து வருவதாகச் சொன்னதெல்லாம் வெறும்புளுகென்றும் ஜனங்கள் கண்ணில் மண்ணைத் தூவச்செய்த ஜகப்புரட்டென்றும் இப்பொழுது வெட்ட வெளியாகிவிட்டது. மனித சங்கல்பமின்றி விஷயங்கள் தானே சம்பவியா. விதியென்று சொல்வதுங்கூட மனிதர் பூர்வசங்கல்பமேயன்றி வேறல்ல. ஈசுவரன் "விதி" யென்று ஒன்றைப் படைக்கவில்லை. அவர் மனிதனைத்தான் படைத்தார். அதுவும் தன்னைப்போலவே அவனைச் சங்கல்ப சாதனாதீரனாகச் சிருஷ்டித்தார். குழந்தைகளே, "சங்கல்ப சாதனாதீரன்" என்றால் என்னவோவென்று மயங்கிவிடவேண்டாம். அப்படியென்றால் "நினைத்ததுமுடிக்கும் ஆற்றலுடையவன்" என்று அர்த்தமேயன்றி வேறொன்றுமில்லை. சங்கல்பம் என்றால் நினைக்கும்நினைவு என்று அர்த்தம். "எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி!" யென்றார் பெரியோரும். "எண்ணினேன் எண்ணமிது" என்றதனாலும் "நினைக்கும்நினைவு" என்றதனாலும் "எண்ணாத எண்ணமும்" "நினையாத நினைவும்" கூட உண்டோ? என்று நீங்கள் கேட்கலாம். உண்டு. அது எப்படியென்றால், சொல்கிறேன் கேளுங்கள்:

மனிதன் சிந்தனாஸஹிதன்: அதாவது சிந்தனையோடு (சிந்திக்கும் சக்தியோடு) கூடினவன். சிந்திப்பான் (நினைவான்), ஆண்; சிந்தனாசக்தி, பெண்; சிந்தனை, இவ்விருவரும்

சேரப்பிறந்தவுரு. தந்தை, தாய், மகவென்னும் மூன்றம்சத்தில், ஒன்றுக்கொன்று காரணகாரிய தோரணையால் சம்பந்தப்பட்டு நிற்கிறது விளங்கும். தந்தை (அப்பன்) இன்றி, தாய் (அம்மை) இல்லை. அம்மையின்றி மகவுமில்லை. அப்படியே மகவின்றித் தாயுமில்லை. "மலடி மகவீன்றாள்" என்றால் காரணதோரணையில்லாத காரியம் நடந்தது என்று உணர்த்துகிற பாவனையாக விருக்கிறது: அதனால் அது உணர்வில் (அறிவில்) ஏறாது. பிள்ளையுண்டாகப் பெறாதவள் (மலடி) பிள்ளைப்பேறு பெறுவது எப்படி? அசாத்தியம். அப்படியேபோல் நினைப்பானின்றி நினைவு (எண்ணம்) என்பது உருவெடுக்கமாட்டாது. நினைப்பான் (Thinker) உண்டானாலும் நினைக்கும் சக்தியின்றி நினைவு உருவெடுக்கமாட்டாது. நினைப்பானும், நினைக்கும் சக்தியும் உண்டானால், நினைவு தானே யுருவெடுத்து வளரும். யுத்தத்துக்கு ஆயத்தமாக விருக்கவேண்டுமென்று உள்ளே நினைத்துக்கொண்டு வெளிப்பேச்சுக்கு மட்டும் சமாதானத்தைக் காப்பாற்ற சைனியங்களையும் படைகளையும் கப்பல்கள் ஆகாய ரதங்களையும் விர்த்திசெய்வதாகச் சொன்னால், அது பலிக்குமா. வெளிப்பேச்சு வெறும் வார்த்தைமட்டு மாதலால் அது காற்றாய்ப் போய்விடும். ஆனால் உள்ளத்தில் நினைக்கும் நினைவு உருவகப்பட்டு வெளியகத்திலும் காலக்கிரமத்தில் தோன்றும். இப்படி நினைவொன்றும் வாக்கொன்றும் செய்கையொன்றுமாக விருப்பதற்கு உண்மையான காரணமென்னவென்று பார்த்தால் அது "வாக்கு வியபசாரம்" என்று சொல்லும் தோஷத்தாலுண்டாகிறதென்று ஸ்பஷ்டமாய் ஏற்படும். மனம், வாக்கு, காயம் என்கிற மூன்றில் மனம் தந்தை ஸ்தானத்திலுள்ளது, வாக்கு தாய்ஸ்தானத்திலுள்ளது, காயம் (உடற்செய்கை) மகவுஸ்தானத்திலுள்ளது.

தாய் பதிவிரதையானால் நல்ல "ஸத்புத்ரஸந்தாரிதை" யாவாள். அப்படிக்கின்றி தாய் வியபசரித்தால் (பதியைவிட்டுப் பரபுருஷனை நாடினால்) அஸத்துக்களான புத்திர ஸந்தானம் தான் உண்டாகும். ஏனென்றால் மனம்-வாக்கு, இரண்டுக்குமுள்ள 'தம்பதி' முறை பிசகிப் போய்விட்டது. வாய்மையால் அறம் தூய்மையாவதுபோல, பொய்மையால் அறம் புன்மைப்பட்டுப் பாழாவது நிஜம். ஆதலால்தான் ஔவையார் "பொய்சொல்லி வாழலாமா?" என்று அதன் அஸாத்யத்தை யெடுத்துரைத்தார்.

அரசர்கள் பொய்பேசினால் அநர்த்தம் விளையும் என்பது இதனால்தான். "நான் மனிதரில் அரசனாயிருக்கிறேன்" என்றார் பகவான். பகவத்லக்ஷணம் உண்மை. அந்த உண்மையில்லாதவிடத்தில் பகவான் ஒருபோதும் இருக்கமாட்டார். பகவான் ஹிருதய கமலபீடத்தை விட்டு ஒளித்தாரானால், சூரியனை யொளித்த சந்திரன் போல் கிரகணதோஷம்உண்டாகிறது. பட்டப்பகலில் இருள்வந்து மூடிக்கொள்கிறது. பக்ஷிகளெல்லாம் இரைதேடுவதை விட்டுக் கூண்டுகளை யடைகின்றன. தாமரைப்புஷ்பமும் மலர்முகம் மாறித் தலைகுனிந்து வாடி நிற்கிறது. இஃதெல்லாம் ஏன்? சூரியன் ஆகாசத்திலிருந்தும் அவனுடைய கிரணங்களைச் சந்திரன் மறைத்துவிட்டபடியால், ஒளியற்ற விடத்தில் இருள்வந்து மண்டிக்கொள்கிறது. அப்படியே பகவான் ஒளித்தால் ஹிருதயத்தில் மனவிருள் வந்து மூடிக்கொள்கிறது. அது ஸ்வயம்பிரகாசமான அறிவை மறைத்து விடுகிறது. அறிவொளி மழுங்க புத்தியின் கூர்மை தேய்ந்து விவேகஞானம் சூனியமாய் விடுகிறது. ஞானசூனியமான ஹிருதயமுடையவன் அசுர சுபாவத்தையடைகிறான். அசுரசுபாவம் லபிக்கவே ராக்ஷஸகுணம் அதிகரிக்கிறது. "எல்லாம் நான்" என்னும் சுத்தாஹங்காரத்தால் மனம் விரியாமல், "எல்லாம் எனது" என்று அகங்கார மமகாரவிர்த்தியால் அழுக்காறும் அவாவையும் மற்ற மனோவிகாரங்களும் அதிகரிக்கின்றன.

"அறம்பாவத்தாலே அழிந்தான் துரியோதனன்." ஆனால் அந்த துரியோதனன் அரசபதவியிலிருந்தமையால், அரசாங்கங்களான குடி படை அரண் நாடு முதலியவற்றோடு அவனை நாசம்செய்ய வேண்டியிருந்தது. ஆகையால் தான் பகவான் தனது சைனியங்களையும் அவனுக்கு உதவியாக விருக்கக்கொடுத்து விட்டுத் தான் தூதுசென்று தர்மஸ்தாபனம் செய்யப்பட்ட பாடுகளெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் துரியோதனாதியர் அக்கிரம அதிக்கிரமங்களுக்கே அனுகூலமாக மாறினதுபற்றி, அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைதாழ்ந்த பின் தானும் தாழ்ந்தவராய் கச்சைகட்டித் தேரேறி அர்ச்சுனனுக்குச் சாரதியாகவிருந்து அவனுக்குக் கர்மதர்மத்தை யுபதேசித்து "விதைத்தான் வினையறுப்பான்" என்பதை அவருடைய விசுவரூப தரிசனவிசேஷத்தால் அவனுக்கு ஞானக் கண்ணைக்கொடுத்து நிதரிசனமாகக் காணச்செய்து மனந்தேற்றி, மனமுடைந்து உடல்சோர்ந்து சோகமேலீட்டால் மூர்ச்சித்துப் போனவனைத்தேற்றி "அப்பா உன் கடனைக் கர்மபலனிடத்தில் இச்சைவைக்காமல்செய் !" என்று நைஷ்கர்மசித்தியோகத்தை அவனுக்கு உபதேசித்து தர்மஸ்தாபனம் செய்தார். இது என்றென்றைக்கும் காலபேதம் தேசபேதமின்றி ஸநாதநமாய், ஸத்யமாய், ஸ்வயங்கிருதமாய் (தானே வேலைசெய்வதாய்) உள்ள நித்தியதர்மம். இதுவே இப்பொழுது காரியத்தை நடத்துகிறதென்பதைக் கண்ணுள்ளோர் (ஞானக்கண்பெற்றோர்) பிரத்தியக்ஷமாய்க் காணலாம், எல்லாம் கர்மதர்மத்தை யனுஷ்டித்தே நடக்கும். இதையே,—

"தான் முன்னஞ்செய்த விதிவழி தானல்லால்
வான் முன்னஞ்செய்தங் குவைத்ததோர் மாட்டில்லை
கோன் முன்னஞ்சென்னி குறி வழியேசென்று
நான் முன்னஞ்செய்ததே நன்னிலமானதே."—

என்றார் பெரியோரும்.

---

பரதேசிப்பாட்டு.

"யுத்தம் நடக்குதுபார் ! ஐயாவோ !
தத்தம் வினையாலே தீவினை மேலிட்டுப்
பெத்தப்பெரியவோர் யுத்தம் நடக்குது !
செத்தபேரெல்லாம் சாகத்தெரியாதே
சுத்தமாம் பூமிக்குச் சுமையா விருந்ததால்
அத்தனை பேர்கள்செய் அக்ரமந் தாங்காதே
சித்தங்கு ழைந்தவள் துக்கந்தீர் பொருட்டாக
யுத்தம்நடக்குது பார் ! ஐயா "—
"கண்ணுள்ளோர்கண்டதன் குணத்தைக்கிரகிக்கட்டும்
கண்ணில்லார் மண்டையோ டுடைந்தாலுங் காணாரே!"

---



## THE BRAVE KING OF A BRAVE PEOPLE. THE SOLDIER KING WHO CHANGED THE SCENE OF BATTLE.

## இரணகளத்தை மாற்றிய இரணவீர ஸிம்ஹராஜன்.

### பெல்ஜியம் தேசாதிபதி ஆல்பர்ட் அரசரின் தீரம்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடந்துவரும் பிரமாதமான யுத்தத்தில் பெல்ஜியம் தேசம் தான் முக்கியமான ரணகளமாக விருக்கிறது. பெல்ஜியம் தேசத் தரசன் ஒரு கக்ஷியிலும் சேராமல் தனியாக விருக்கத் தீர்மானித்தார். ஆனால் ஜெர்மனிக்கு அத்தேசத்து வழியாகத்தான் ப்ரான்ஸ் தேசத்துக்குப் போகவேண்டியதா யிருந்தபடியாலும் அப்படியே போக இரகஸியமாய் ஏற்பாடுகள் செய்திருந்தபடியாலும் பெல்ஜியம் தேசாதிபதி அவர் தேசத்தூடே ஜெர்மனியின் சைனியம் செல்ல ராசிப்படாவிடில் பலாத்காரமாகப் பிரவேசித்துத் தங்கள் காரியத்தை முடித்துக்கொள்வதாகச் சபதம் செய்தார்கள். அதன்மேல்தான் அவர் சண்டைக்குக் கிளம்பலாயிற்று. பிரிடிஷ் ராஜ்யத்தார் சண்டையிற் புகுந்துகொண்டது பெல்ஜியத்துக்குள் ஜெர்மனி சைனியம் நுழைந்ததால் தான். பெல்ஜியம் தேசம் உருவிற் சிறியதாயினும் அவர்கள் தேசத்து சைனியம் தைரியத்திற் சிறந்து வீரத்தில் மேம்பட்டவர்களாய் ஜெர்மனியின் சைனியத்தை எல்லை தாண்டவிடாமல் மறித்தடித்து தடுத்துவிட்டார்கள். இவர்களுடைய வீரச்செய்கையினால் ப்ரான்ஸுக்கும் ருஷியாவுக்கும் தங்கள் சைனியங்களை முஸ்தீபு செய்துகொண்டு ஜெர்மனி யெல்லையோரமாகக் கொண்டுவர அவகாசமுண்டாயிற்று. இப்படி பெல்ஜியம் தேசத்தார் செய்த உதவியால் ஜெர்மனியில் செய்த முன்னேற்பாடுகளெல்லாம் பயனற்றுப்போயின. ஆகையால் சண்டை யாரம்பத்தில் இவ்வளவு பிரதாபத்துக்குரியவர்களான பெல்ஜியம் தேசத்தாருடைய அதிபதியைப்பற்றிச் சிறிது

தெரிந்துகொள்ளவேண்டிய தவசியமாயிருக்கிறது. இதை வாசிக்கும் பெற்றோர்களும், பிள்ளைகளும், பள்ளிக்கூட மாணாக்கர்களும் உண்மையை நன்றாக வுணர்ந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு ஒரே உபாயம் உண்டு. அதை அவர்கள் உபயோகித்தார்களானால் அவர்களுக்கு எல்லா விஷயங்களையும் நாம் நன்றாக விளங்கக் காட்டுவோம். அது என்னவெனில், கடவுள் மனிதஜாதிக்கு அளித்திருக்கும் மனோரதம் என்கிற தேரை யலங்கரித்து அதில் கருடக்கொடி கட்டி, அவர்கள் ஏறிக்கொள்ள வேண்டியது. அந்த மனோரதத்தில் ஏறிக்கொண்டால் கருடக்கொடியின் சக்தியினால் அவர்களை நாம் ஒரு நொடிக்குள் யுத்தகளத்துக்குக் கொண்டுபோய் அங்கே நடப்பதையெல்லாம் காட்டிவைப்போம்.

குழந்தைகளே! நீங்கள் இங்கே வாருங்கள்: கண்ணை மூடிக்கொண்டு என் கழுத்தைக் கட்டிக்கொள்ளுங்கள். நான் கருடனை உபாசித்து உங்களைத் தூக்கிக்கொண்டு மனோகாசம் என்கிற வழியாக யாருமறியாமல் சைனியங்கள் நிற்குமிடத்துக்குக் கொண்டுபோகிறேன். கருடனை உபாசித்து கருடன் நானான "எனக்கு" இறக்கைகட்டிக்கொண்டு பறக்கும் சக்தியுண்டு. அப்படியென்றால் சித்தவிருத்தி நிரோதஞ் செய்து அடக்கியாளப்பெற்ற "என் மனதிற்கு" என்று அர்த்தம். உங்களுக்கு தென்னங்குரும்பையினாலும் காட்டாமணக்குக் காய்களினாலும் 'சப்பரம்' (சின்னரதம்) கட்டி யிழுத்து விளையாடத் தெரியுமல்லவா. அந்தக் குரும்பைக்கு பதிலாக நான் இங்கே சொல்லும் சில விஷயங்களைக்கொண்டு உங்களுடைய மனோரதம் கட்ட வழிசொல்லுகிறேன் கேளுங்கள்.

ஐரோப்பா என்பது ஒரு கண்டம். அதன் ஜனத்தொகை 36-கோடி. ஆசியா கண்டத்தின் ஜனத்தொகையோ 85-கோடி. இதில் இந்தியாவின் ஜனத்தொகை 29-கோடியே சொச்சம். ஐரோப்பாவின் 36-கோடி ஜனத்தில் பிரிடிஷ் தீவுகளின் ஜனத்தொகை 41-கோடியே சொச்சம். ஜெர்மனி ராஜ்யத்தின் ஜனத்தொகை 66-கோடியே சொச்சம்.

ஆஸ்திரியா—ஹங்கேரியின் ஜனத்தொகை 45-கோடியே சொச்சம். அதற்கடுத்த 'போஸ்நியா ஹெர்விகோவினா' என்னும் சிறிய நாட்டின் ஜனத்தொகை $1\frac{1}{2}$ கோடி. பெல்ஜியம் தேசத்தின் ஜனத்தொகை $6\frac{3}{4}$ கோடிக்கு மேற்பட்டது. லக்ஸம்பர்க் என்னும் சிறுமாகாணத்தின் ஜனத்தொகை 23-லக்ஷத்துக்குச் சொச்சம், ஹாலண்ட் தேசத்தின் ஜனத்தொகை 5-கோடியே சொச்சம். பிரான்ஸ் தேசத்தின் ஜனத்தொகை 38-கோடியே சொச்சம், ஸெர்வியா தேசத்தின் ஜனத்தொகை $2\frac{1}{2}$-கோடி சுமார், மான்டி நிக்ரோ என்னும் சிறிய நாட்டின் ஜனத்தொகை $2\frac{1}{4}$ லக்ஷம் சுமார்; ஸ்வீடின் 5 கோடி; நார்வே 2 கோடி; டென்மார்க் 2 கோடி.

அதோ ஜர்மனி தேசம் தெரிகிறது பாருங்கள். நீங்கள் பள்ளியில் வாசிக்கும் தேச படத்தில் அது மஞ்சள் நிறமாகத்தீட்டப்பட்டிருக்கிறது. அதன் முக்கிய ராஜ்யம் ப்ரஷ்யா. ப்ரஷ்யாவின் அரசர் தான் ஜெர்மனியின் சக்ரவர்த்தியாகவுமிருக்கிறார். அதோடு இன்னும் அநேக சிறுநாடுகள் சேர்ந்திருக்கின்றன. இவைக்கெல்லாம் 'ஜெர்மன் எம்பையர்'—ஜெர்மனி மஹாராஜ்யம் என்றுபேர். ஜெர்மனி ராஜ்யத்தின்கீழ் கோடியில் ரைன் என்னும் நதியொன்று ஓடுகிறது. அது ஸ்விட்ஸர்லாண்டிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி (Baden) நாட்டுக்கும் ஆல்ஸேஸ் (Alsace) நாட்டுக்கும் இடையே ஓடி, ப்ரஷ்யா நாட்டுட் பிரவேசித்து, முகத்துவாரத்தண்டை ஹாலண்ட் நாட்டுட்புகுந்து 'நார்த்ஸீ' என்னும் வடகடலில் சமுத்ரசங்கமமாகின்றது.

ஜெர்மனிராஜ்யம் உருவத்திற் பெரியதாயினும் அதற்குக்கடல்துறை யதிகமில்லை. சுமார் 40 அல்லது 50 மைல் தூரமுள்ளகடற்கரையில் எம்டன் (Emden), உவில்ஹெல்மஸ்ஹேவன் (Wilhelmshaven) என்கிற இரண்டு துறைமுகங்களிருக்கின்றன. அவையும் பெரியவைகளாகவின்றி மற்றப்பெரிய துறைமுகங்களுக்குச் சிறியவையாகவேயிருக்கின்றன.



கிழக்கே சமுத்திரக்கரையைச் சேர ஹாலண்ட் தேசம் குறுக்கே நிற்கிறது. அது ஸ்வாதீன ராஜ்யம். அதற்குத் தென்கிழக்கே ப்ரான்ஸுக்கும் ப்ரஷ்யாவுக்கும் இடையில் பெல்ஜியம் நாடு இருக்கிறது. பெல்ஜியத்துக்கும் ரைன் நதிக்கரையிலுள்ள ரீனிஷ்ப்ரஷ்யாவுக்கும் இடையில் லக்ஸம்பர்க் என்னும் சிறிய நாடு இருக்கிறது. இதற்குத்தெற்கே தென்மேற்கு முகமாய் ஓடி ரைன் நதியைத்தொட்டுக்கொண்டிருக்கிறது லாரேயன் (Lorraine) மாகாணம். அதற்குத்தெற்கே ரைன் நதியின் கீழ்கரையிலுள்ளது ஆல்ஸேஸ் (Alsace) என்னும் மாகாணம். இந்த ஆல்ஸேஸ், லாரேய்ன் என்னும் இருமாகாணங்களும் பூர்வத்தில் ப்ரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாயிருந்தது. 1870-ம் வருஷத்தில் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கு நடந்த யுத்தத்தில் ப்ரான்ஸ் தோற்றுப்போக இவ்விருமாகாணங்களையும் ஜெர்மனிக்குக் கொடுத்து விடும்படி நேரிட்டது. இப்பொழுது அவை ஜெர்மனி ராஜ்யத்தைச் சேர்ந்ததாயிருப்பினும் அங்கேயுள்ள குடிகள் ப்ரெஞ்சு ஜாதியார்களாதலால் அவர்கள் ப்ரான்ஸினிடத்திலேயே மனப் பற்றுடையவர்களாயிருக்கிறார்கள். இந்த ஆல்ஸேஸ் மாகாணத்துக்குக்கிழக்கே ப்ரான்ஸுக்கும் அதற்குமிடையிலோடும் மலைத்தொடர் ஒன்றிருக்கிறது. அதற்கு 'வோஸ்ஜஸ்' (Vosges)மலைத்தொடர் என்றுபேர். ரைன்நதிக்கு உபநதியாகிய மூஸேல் (R. Mooselle) நதியிந்த வோஸ்ஜஸ் மலைத்தொடரின் கீழ்பாகத்தில் உற்பத்தியாகி லாரேய்ன் மாகாணத்தின் வழியாகச்சென்று காப்ளென்ஸ் (Coblenz) என்னும் பட்டணத்தண்டை ரைன் நதியோடு சங்கமமாகிறது இந்த மூஸெல்நதிக்கரையில் மெட்ஸ் (Metz) என்றொரு பட்டணமிருக்கிறது. பாருங்கள், இந்த மெட்ஸ் பட்டணத்துக்குத் தெற்கேயுள்ள ப்ரான்ஸ் தேசத்து மலைகளிலுற்பத்தியாகி (R. Meuse) நதியென்னும் பேரால் பெல்ஜியம் நாட்டிலுள்ள டினான்ட் (Dinant), நாமூர் (Namur) லீஜ் (Liege), மாஸ்ட்ரிச்ட் (Maastricht) பட்டணங்கள் வழியாக வோடி, ஹாலண்ட நாட்டுட் பிரவேசித்து அங்கே (R. Maas) மாஸ் நதியென்னும் பேர் பெற்று ரைன் நதியின் கிளையாகிய வால் (R. Waal) நதியோடு நிஜ்மிஜன் (Nijmegen) என்னும் டட்ச் (ஹாலண்ட்தேசத்து) பட்டணத்தண்டை அது சங்கமமாகிறது.

தெற்கே ஆல்ஸேஸ் மாகாணத்திலுள்ள மெட்ஸ் பட்டணம் முதற்கொண்டு மியூஸ் நதி மார்க்கமாய் கண்ணோட்டம் செய்து பாருங்கள்.

இந்த மெட்ஸ்பட்டணத்தையேகுறியாகக்கொண்டு ஆல்ஸேஸ் மகாணத்தின் தென்கோடியில் ரைனின் உபநதி தீரத்திலுள்ள முல்ஹாஸன்(Mulhausen)பட்டணம்வரைகண்ணை ஓடவிட்டுப் பாருங்கள். அந்த பக்ஷிப் பார்வையில் (Bird's eyeview) காணப்படும் முக்கிய பட்டணங்களில் சிலவற்றைச் சொல்கிறேன், கவனித்து நன்றாக நோட்டமிட்டு மனத்தில் வையுங்கள்.

(தென்மேற்கில் முல்ஹாஸன் (Mulhausen)

அதற்க்குமேலே (வடக்கில்) கோல்மார்(Colmar)

அதற்குமேலே (வடகிழக்கில்) ரைன்நதியில் ஸ்ட்ராஸ்பர்க் (Strassburg)

அதிலிருந்து (வடமேற்கே) மெட்ஸ் (Metz) (மூஸெல் நதிக்கரையில்)

மெட்ஸுக்கு (வடக்கே) தியோன்வில் (Thionville) (மூஸெல் நதிகரையில்.)இவையெல்லாம் லாரேய்ன் நாட்டிலுள்ளன.

அதற்கு வடக்கே லக்ஸம்பர்க (Luxemburg) (நாடும் பட்டணமும்.) இருக்கிறது.

தியோன்வில் பட்டணத்திலிருந்து மூஸெல் நதிமார்க்கமாய்க் கண்ணை ஓடவிட்டுக்கொண்டு போனால் லக்ஸம்பர்க்பட்டணத்துக்கு வடகிழக்கேயுள்ள ட்ரீவ்ஸ் (Treves) பட்டணம் தென்படும். இது ரைன் நதிக்கரையிலுள்ள ப்ரஷ்யாவிலிருக்கிறது. ஜர்மனிதேசத்தைச் சேர்ந்தது.

மெட்ஸ் பட்டணத்திலிருந்து மீயூஸ் நதியைப் பிடித்துக்கொண்டு அந்நதிமார்கமாய்க் கண்ணை யோடவிட்டுக்கொண்டு போனால் ப்ரான்ஸ் நாட்டில் மெஸியரிஸ் (Mezieres) அரண்செய்யப்பட்ட பட்டணம் தெரியும்.

அதற்கப்பால் மியூஸ் நதியோடு நாமும் பெல்ஜியம் நாட்டுக்குட் புகுந்தால் டினான்ட் (Dinant) என்கிற பட்டணமும் அதற்குவடக்கே நாமூர்(Namur)பட்டணமும், அதிலிருந்து வடமேற்காகத் திரும்பிப்போகும் அந்த மியூஸ் நதிக்கரையில் லீஜ் (Liege) என்கிற பட்டணமும் தென்படும்.

இந்த லீஜ் என்னும் பட்டணத்துள் ஜர்மன் சைனியம் புகுந்து அப்பட்டணத்துக் கரணாயுள்ள கோட்டைகளை முற்றிகைபோட்டிருக்கிறார்கள்.

அதோ வரிசையாகத் தெரியும் கோட்டைகளில் ஒன்றைப்பாருங்கள். அது லீஜ்கோட்டைகளில் ஒன்று. அந்தக்கோட்டையிலுள்ள பெல்ஜியம் சைனியத்துக்குத் தலைவர் இருமுறை குண்டுபட்டுக் காயம்பட்டுப் போனார். ஆனாலும் அவருடைய மனோவலிமையால் அவர்தன் தேஹத்தை மறந்து தன் கடமையைச் செலுத்துவதிலே கருத்தாயிருக்கிறார். அதோ ஒரு சீக்காளியை வைத்துத்தள்ளும் நாற்காலி தெரிகிறது பாருங்கள். அதிலிருந்து ஒருவர் சைனியங்களுக்குச் சண்டையிடும் வழிசொல்லி உத்திரவிட்டுக் கொண்டிருக்கிறார் தெரிகிறதா? அவர்தான் அந்தக் கோட்டைச் சைனியத்தலைவர். அவர் வீராவேசம் கொண்டு தேஹத்தை மறந்து மனோவலியால் தன் தேஹத்தையும் தரித்துக்கொண்டு தன் கடைமையைச் செலுத்துகிறார். இது தான் மனோவலியின் திறமை. வீராதி வீரனினும் தீராதி தீரன் தன் மனோவலியினால் காரியத்தைச் சாதித்துக் கொள்வான் என்பதற்கு இது ஒரு உதாரணம். லீஜ்பட்டணத்தண்டை ஔர்தி (R. Ourthe) என்னும் உபநதி பொன்று ஆர்டென்ஸ் மலைத்தொடரில் (Ardennes) உற்பத்தியாய் மீயூஸ் நதியோடுவந்து சங்கமமாகிறது. இந்த ஆர்டென்ஸ் மலைப்பாதை வழியாகத்தான் ஜெர்மனி சக்ரவர்த்தி தம் சைனியத்தை நடத்திக்கொண்டுபோய், மீயூஸ் நதிக்கரையிலுள்ள டினான்ட் பட்டணத்தைத் தாண்டி ப்ரான்ஸ் எல்லைக்குச் சென்று அத்தேசத்தைத் திடீரென்று படையெடுத்துத் தாக்க ஏற்பாடு செய்திருந்தார். இந்த ஏற்பாடு பெல்ஜிய அரசருடைய ரணவீர சாமர்த்தியத்தாலும் பெல்ஜியன் துருப்புகளின் அகாத சூரத்தாலும் திடகாத்திர தைரிய விசேஷத்தாலும் நிறைவேறாது ஜெர்மனிசைனியம் நிலைகுலைந்து போகலாயிற்று.

அதோ ஒரு மோடார்ரதம் இங்கும் அங்கும் வெகு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது பாருங்கள். அந்த ரதத்தை உற்றுப் பார்த்தீர்களானால் அதில் உயர்ந்த வடிவமும் மெலிந்த ஆகிருதியும் நீலம் படர்ந்த கண்களும் லேசான மயிர்க்கத்தையு முடைய 39 வயதுள்ள மனிதரைக் காணுவீர். அவர்தான் பெல்ஜியம் தேசத்தரசன். அவர் 15-வயது முதல் யுத்த வித்தை பயின்று, 1892-ம் வருஷத்தில் சைனியத் தலைவராயமர்ந்து சீக்கிரத்தில் தானே முக்கிய சேனாதிபதி ஸ்தானத்துக்கு வந்தார். அவருடைய பெரிய தகப்பனார் லியோபால்ட் அரசுபுரிந்து வந்த காலத்தில் அவரை சைனியத்தில் வேலையாக அமர்த்தி "அப்பா, பிள்ளாய், இன்றைக்கு இத்தேசத்தின் கொடியை நீ கைப்பற்றினாய் உன் உயிருள்ளமட்டும்நீ அதைக்கைவிடாது காப்பாற்றி ஜயவீரசிங்கனாய்ப் பிரதாபப்பேர் பெறுவாயாக!" என்று அவருக்குப் புத்திமதி கூறினார். அந்தச் சொல் தவறாமல் அவர் ரணவீரசிங்கனாய்த் தானே முக்கிய சேனாதிபதி வேலை பார்த்துக்கொண்டு தன் பெரியதகப்பனாருக்குப்பின் பட்டத்துக்குவந்தார். இப்பொழுது முடிசூட்டிய மன்னனாயிருந்தும் அவர்தானே ரணகளத்தில் பிரவேசித்து சைனியங்களை நடத்தி வருகிறார். அவருடைய வீரப்பிரதாபத்தால் ப்ரான்ஸில் நடக்கவேண்டிய யுத்தம் ஜெர்மனியின் எல்லைப்புறத்தில்தானே நடக்கும்படியான வசதி வாய்ந்திருக்கிறது.



முல்ஹாளன் பட்டணம் முதல், மியூஸ்நதி, ஔர்தி நதிக்கரையோரமாகச் சுமார் 350-மைல் தூரத்துக்கு சைனியங்கள் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் புரியச் சன்னத்தமாய் நிற்கின்றன.

மேலண்டைப் புறத்தில் ஜெர்மனியின் சைனியங்கள் ஏராளமாகத் திரண்டு புரண்டுகொண்டு சமுத்திரம்போல் வருகின்றன. அதோ எய்க்ஸ் லா சாபெல் (Aix-la-chapelle) என்னும் ஜர்மன் பட்டணம்தெரிகிறது பாருங்கள். அங்கே ஜெர்மனி சக்ரவர்த்தியின் ஜேஷ்டகுமாரர் ரணகளத்தில் காயம்பட்டுக் கிடக்கிறார். ஜெர்மன் சக்ரவர்த்தியும் பெர்லின் நகரைவிட்டு அங்கே வந்திருக்கிறார். அதற்கெதிரே, பெல்ஜியம், ப்ரான்ஸ் இத்தேசங்களின் சைனியங்கள் நிற்கின்றன. இவர்களுக்குத் துணையாக ப்ரிட்டிஷ் சைனியங்களும் ருஷிய சைனியங்களும் வந்து சேர்ந்துகொள்ளும். இம்மஹாயுத்தம் தொடங்கி ஒருவாரம் இரண்டு வாரத்துக்கு எந்தப் பக்கம் ஜெயித்தது, எந்தப்பக்கம் தோற்றதென்று சொல்வது முடியாததாகும்.

இப்பொழுது இவ்வளவு பார்த்தது போதும். குழந்தைகளே நீங்கள் கண்ணை மூடிக்கொள்ளுங்கள்: உங்களையெல்லாம் உங்களுடைய வீடுகளில் முன்னிருந்த நிலையில் கொண்டுபோய் விட்டுவிடுகிறேன். இதோ கண்ணை விழித்துப் பாருங்கள். கண்டதெல்லாம் கனவென மறந்து மனக்கிலேசமின்றி உங்கள் நித்தியப்படிக் கடன்களைச் செய்து முடியுங்கள். எப்பேர்ப்பட்ட நிலைமையிலும் மனம் கலங்காதிருப்பதே தீரம். இந்தத் தீரத்தை மட்டும் நீங்கள் கைவிடாதேயுங்கள். இதுதான் நீங்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம். கவனத்தைச் சிதறவிடாதேயுங்கள். மனதைக் 'கொண்டி மாடுபோல்' ஓடவிடாதேயுங்கள். திரிகால ஸந்தியாவந்தனம் ஏற்பட்டது இதற்காகவே யன்றி வேறெதற்குமில்லை. சாதனமின்றிச் சாதிப்பாரில்லையால், சாதனம் முக்கியம் என்பர். ஆனால் அது நினைத்தது முடிக்கும் வழியேயன்றி அதுவே ஒரு முடிவன்று. இதை நீங்கள் நன்றாக அறியவேண்டியது.

## "THE CHOICE BETWEEN KEEPING AND BREAKING OUR SOLEMN OBLIGATIONS."

## "செய்கடனைச் செய்பவோ, பொய்பவோ?"

"ஆட்டுக்கடாச் சண்டை ஏதுக்கடா?" என்றார் பெரியோர் ஒருவர். அதையே லக்ஷியமாக வைத்துக்கொண்டு முன்னொரு பிரபந்தம் எழுதினோம். இப்பொழுது பிரிடிஷ் ராஜ்யத்து முதல்மந்திரியாகிய மிஸ்டர் அஸ்குவித் அவர்கள் பார்லிமெண்டு காமன்ஸ் சபையில் நாளது ஆகஸ்டுமீ 27உ ஒரு மறக்கக்கூடாத பிரசங்கம் செய்தார். பெல்ஜியம் தேசத்தாரும் அவர்களுடைய அரச ஸிம்ஹமாகிய ஆல்பர்ட் அரசரும் வெகு தைரியமாக ஜெர்மனி சைனியத்தை எதிர்த்து நின்று அவர்கள் யுத்த ஆவேசத்தையடக்கி அவர்களுடைய நேசர்களான ப்ரெஞ்ச் இங்கிலீஷ் தேசத்தார் தங்கள் சைனியங்களைத் திரட்டிக்கொண்டு எல்லைப்பக்கத்தில் வருமளவும் அவர்கள் வழியை மறைத்துக்கொண்டு அகாத சூரர்களாகச் சண்டை செய்து "உடல் சிறியாரென்றிருக்கவேண்டாம்" என்ற மூதுரைப்படி அவர்கள் தேசம் உருவத்திற் சிறியதாயினும் அத்தேசத்தார் தீரமும் தைரியமும் அகாத சூரத்துவமும் அஸாத்தியமானதென்று ரூபித்ததற்காக ஆங்கிலேய பார்லிமெண்டுசபையாருடையவும் ஆங்கிலேய மஹாராஜ்யத்திலுள்ள எல்லா ஜனங்களுடையவும் அனுதாபத்துக்கும் பெருமிதமான சந்தோஷத்துக்கும் பாத்திரர்களாய்விட்டதைத் தெரிவித்து அவர்களுக்கு உதவியாக நின்று சண்டைசெய்ய ஆங்கிலேயர் எவ்விதத்திலும் கடமைப்பட்டிருக்கிறார்களென்று உறுதி கூறவேண்டி அரசர் மூலமாய் பெல்ஜியன்ஸ் அரசர்க்கு உபசார வார்த்தைகள் அனுப்பத் தீர்மானித்தார்கள். இத்தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியதில் மிஸ்டர் அஸ்குவித் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆணித்திறமான வார்த்தையாக விருந்தது.

முதலாவது, இந்த சண்டையில் பிரிடிஷார் தலையிட்டுக் கொள்ளவேண்டி வந்ததின் அவசியத்தைப்பற்றிச் சொன்னார். "ஆட்டுக்கடாச் சண்டை ஏதுக்கடா?" என்று கேட்டால் எங்கள் மட்டிற்கு இது "ஆட்டுக்கடாச் சண்டை" யில்லை. இந்தச்சண்டையை விலக்கவும், கூடாத போனால் சண்டைக்காரர்கள் மட்டில் சண்டை செய்து கொள்ளட்டும் என்றும் ஆனமட்டும் பார்த்தோம். முடியவில்லை. இந்த மஹாபாரத யுத்தத்துக்குக் காரணமென்னவென்று கேட்டால் அதை இரண்டே வாக்கியத்தில் சொல்லலாம் என்றார். அவ்விரண்டு மென்னவென்றால்:—

முதலாவது:—வல்லான் வகுத்தது வாய்க்கால் என்று ஜெர்மனி தான் இட்டதே சட்டமாக தனது வாக்கையும் உடன்படிக்கையையும் கடந்து பெல்ஜியத்தின் வழியாக ப்ரான்ஸ் மீது சண்டைக்குப்போகத் தீர்மானித்து நியாயத்துக்கும் தர்மத்துக்கும் விரோதமாயிருந்தது. பெல்ஜியன்ஸ் அரசர் இந்த அக்கிரமத்தைப்பற்றிக் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது ஜெர்மனி தேசத்து கவர்ன்மெண்டார் "நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் ; நாங்கள்பெல்ஜியம் தேசத்திலாவது, ப்ரான்ஸ் தேசத்திலாவது ஒரு அடி நிலம்கூடச் சேர்த்துக் கொள்கிறதில்லை. சண்டை முடிந்தபின் பெல்ஜியன் தேசத்தார் ஸ்வதந்தரத்தை மதிப்போம்" என்றார்கள்.

ப்ரான்ஸ் தேசத்தின் குடியேற்ற நாடுகள் செய்தி என்னவென்று கேட்டதற்கு அதைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது என்றார்கள். பெல்ஜியத்தினுட் புகுந்து சண்டைக்குப் போகிறதென்றால் அத்தேசம் பாழாகாதா ? அதற்கு இடம்கொடுக்கலாமா ?

இரண்டாவது:—சிறு தேசங்களையும் ஜாதியாரையும் பெரிய தேசத்தார் பக்ஷணம் செய்துகொண்டு வந்தால் ராக்ஷஸதர்மம் மேலிட்டுப் போம். இன்றைக்கு நமக்கென்ன வென்றிருந்தால், நாளைக்கு பெல்ஜியத்தையும் ப்ரான்ஸையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு இங்கிலீஷ் கால்வாய்க்கு அக்கரையிலிருந்து "உங்கள் செய்தி என்ன?" என்று க்ஷேமம் விசாரிக்கப் புகுவார்கள். அக்கிரமம் ஜயிக்க ஜயிக்க அது காட்டுத் தீ போல் மேன்மேலும் வளரும். அதிக்கிரமித்துப் போவோரை யடக்குவது ராஜதர்மம். யாராயிருந்தாலும் வரம்புகடந்து நடக்கவிடக்கூடாது. ஜெர்மனிவரம்புகடந்து நடந்து பெல்ஜியத்துக்குள் பிரவேசித்ததாலும், ப்ரான்ஸ்தேசத்துக்கும் இங்கிலாந்துக்கும் நேசக்கட்டுப்பாடு இருப்பதாலும், ஆங்கிலேயர் சண்டைக்குப் போகக் கடமைப்பட்டவர்களாக விருந்தார்கள். "செய்கடனைச் செய்யவோ, பொய்யவோ?" என்கிற கேள்வி உதித்துவிட்டால் அதற்கு ஒரே பதில்தான் உண்டு.

"செய்கடனைச் செய்வதே சரி"யென்பதுதான் சரியான உத்தரமும் தீர்மானமுமாம்.

ஜெர்மனி தேசத்துச் சக்கிரவர்த்தி ஆங்கிலேயரை ஏமாற்றி விடலாமென்று பார்த்தார் போலும். அதற்கு அவர்கள் அவ்வளவு ஏமாந்தவர்களாக வில்லை.

ஜெர்மனி பெல்ஜியத்துக்குள் நுழையாமலிருந்தால் இந்தச் சண்டையில் ஆங்கிலேயர் புகுந்துகொள்ள ஆஸ்பதமிராது. பெல்ஜியம் தேசத்தில் நுழைந்து செல்லாவிட்டால் ஜெர்மனிக்கும் காரியமாவதாயில்லை. அதற்குத் தெற்கேயுள்ள வழியாகப்போக இடையிலே லக்ஸெம்பெர்க் நாடு இருந்தது. அதுவும் சண்டையிற் சேர்வதில்லை யென்றிருந்தது. சமுத்திரமார்க்கமாய் ப்ரான்ஸ்மீது படையெடுத்துப்போக 'இங்கிலீஷ் சானல்" 'வடகடல்' இரண்டும் ஆங்கிலேயர் ஆதீனப்பட்டது. அங்கே பிரவேசிக்காமல் பிரான்ஸ்மீது சண்டைக்குப்போவது துர்லபம். வடக்கேயிருந்து வந்தாலும் ப்ரான்ஸின் வடபாகத்துக் கடற்கரையோரங்களைக் காக்கும் பொறுப்பு ஆங்கிலேயர் தம்மதாக வகித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக எப்படிப்பார்த்தாலும்



சண்டை விடுவதாகவில்லை. இந்தச் சண்டையில் பெல்ஜியன் தேசத்தார் கடமையென்னவெனில், பகைவரைத் தம்நாட்டுட்புகவிடாமல் பார்ப்பது. ஜெர்மனிதேசம் பெரிய ராஜ்ஜியம். அபார செல்வமும் சைனிய பலமும் உள்ளது. அவ்வளவையும் எதிர்த்து முறியடிப்பது சிறிய தேசமாகிய பெல்ஜியத்துக்கு முடியாத காரியம். ஜெர்மனி சைனியங்கள் தங்கள் நாட்டு வழியாக தாராளமாகப் போகவிடாமல் தடுக்க வேண்டியதொன்றே அவர்கள் கடமையாகும். அக்கடமையை அவர்கள் வெகு தீரமாகவும் எல்லாரும் மதித்துக்கொண்டாடும்படியாகவும் செய்து முடித்துவிட்டார்கள் இரண்டுவாரம் வரையில் படையெடுத்துவந்த சமுத்திரம் போன்ற சைனியத்தை அணைபோட்டு மறித்தது போல் தடுத்து நிறுத்திவிட்டார்கள். கடைசியில் அபார சைனிய பலத்தால், அவர்கள் கோட்டை கொத்தளங்களை யெல்லாம் இடித்து அவர்கள் நாடு நகரங்களை யழித்து தலைநகரையும் பிடித்துக்கொண்டு ஆன்ட்வெர்ப நகரில் அவர்கள் போய்ச்சேரும்படிச் செய்துவிட்டார்கள் பெல்ஜியம் தலைநகராகிய ப்ரஸ்ஸல்ஸ் பகைவர் வசப்பட்டுவிட்டது. அதற்குக் கொஞ்சதூரத்திலுள்ள லௌவெய்ன் (Louvain) பட்டணத்தைச்சுட்டுச்சாம்பலாக்கிவிட்டார்கள். மியூஸ் நதிதீரம் ஜெர்மனி வசமாய் விட்டது. ஆனாலும் ப்ரெஞ்சு இங்கிலீஷ் சைனியங்கள் அவர்களுக்கு உதவி புரியவந்துவிட்டன. இப்பொழுது சண்டை மியூஸ்நதி தீரத்தைவிட்டு ஸாம்பரி (Sambre) நதி தீரத்திலும், அதையும் விட்டு (Somme) ஸோம் நதி தீரத்திலுமாக நடந்து வருகிறது. ஆகஸ்டு மாசம் கடைசி வாரத்தில் அநேக சண்டைகள் நடந்து ஒவ்வொன்றிலும் மடிந்து விழுந்தவர்கள் தொகை ஆயிரக்கணக்காகவும் லக்ஷக்கணக்காகவும் சொல்லப்படுகிறது.

சண்டைகள் நடந்த முக்கிய இடங்கள்:—

சார்லிராய் (Charleroi), காம்ப்ரே (Cambrai), கைஸ் (Guise), மான்ஸ் (Mons), காம்பீன் (Compeign), ஸென்ட்குவென்டின் (St. Quentin), மாலின்ஸ் (Malines). இவை லீஜ்கோட்டைகள் விழுந்த பின்னும் நாமூர் கோட்டைகள் பிடிபட்ட பின்னும் நடந்தவை.

இவைகளில் யார் ஜயித்தார்கள் யார் தோற்றார்கள் என்று முடிவாய்ச் சொல்வதற்கில்லை. ஜெர்மனி சைனியங்கள் ஏராளமாய் நெருங்கி வந்து விழுந்தாலும் சேதம் அதிகப்பட்டுப்போவதால் குறைந்து வருகிறது. இப்பொழுது 'ஸோம்' நதிக்கரையில் அமீன்ஸ் பட்டணத்துக்கருகில் சண்டை நடந்து வருகிறதாகத் தெரிகிறது. (இது ஸெப்டம்பர் மாதம் 1-உ சமாசாரம்) இந்தத்தேதியில் ப்ரெஞ்சு ப்ரிடிஷ் சைனியங்கள் ஸோம் நதி முகத்துவாரத்தின் உட்பாகத்திலிருந்து அந்நதிக்கரை வழியாக லாபிரி (La Fere), லேயான் (Laon) கோட்டைகள் வரையில் எதிர்த்து நின்று சண்டைசெய்து வருகிறார்கள். அமீன்ஸ் (Amiens) என்பது ஸோம் நதிக்கரையிலுள்ள ஒரு முக்கிய ப்ரெஞ்சுப்பட்டணம். லாபிரி (La Fere) என்பது வலுத்த ப்ரெஞ்சுக் கோட்டை ; (Laon) லேயான் என்பதும் அரண்செய்யப்பட்ட ஸ்தலமே. இவையெல்லாம் ப்ரான்ஸிலே யிருக்கின்றன. இதெல்லாம் ப்ரான்ஸ்தேசத்தின் வடமேற்கு பாகத்தில் நடக்கும் சண்டைகள். இவை நிற்க.

ஜெர்மனியின் கீழ்புறத்தில் ருஷியசைனியம் புகுந்து ஜெர்மன் பட்டணங்களை ஒன்றின்பின் ஒன்றாகப்பிடித்துக்கொண்டு வருகின்றன. ஆஸ்திரியாவில் லிம்பர்க் பட்டணத்தையும் ஜெர்மனியின் கீழ்பாகத்தையும் ருஷியர்கள் பிடித்துக்கொண்டுவிட்டார்கள், ஸெப்டம்பர் மாதம் 1-உயன்று ருஷியர்கள் கோனிக்ஸ்பர்க் என்னும் பட்டணத்தைப்பிடிக்க முயன்று வருகிறதாகச் சமாசாரம்.

தரையில் நடக்கும் சண்டையின் ஸ்திதி இப்படியிருக்க, வடகடலில் ஹெலிகோலாண்ட் என்னும் தீவுக்கு சமீபத்தில் ஆங்கிலேய சண்டைக்கப்பல்களுக்கும் ஜெர்மனி சண்டைக்கப்பல்களுக்கும யுத்தம் நடந்து அதில் ஜெர்மனி சண்டைக்கப்பல்களெல்லாம் தோல்வி

யடைந்து முழுகினவைபோக, மிகுந்தவை சில ஆங்கிலேயரால் பிடித்துக்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. அந்தச்சண்டையில் தேழிப்பிழைத்தவர்களும் மிச்சம் மிகுதியாயுள்ளவர்களும் ஹார்விச் (Harwich) என்னும் ஆங்கிலேய துறைமுகம் வந்து சேர்ந்திருக்கிறார்கள்

ஸெப்டெம்பர்மீ 4உயில் ப்ரெஞ்சு கவர்ன்மெண்டார் தலைநகராகிய பாரிஸ் நகரைவிட்டு கடலோரத்திலுள்ள போர்டோ பட்டணத்துக்கு துரைத்தனஸ்தானத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள், பாரிஸ் நகரை ஜெர்மானியர் முற்றுகை போட்டால் அதைச்சுற்றி 80-மைல் வட்டத்துக்கு அரண்கள் இருக்கின்றன. 50,000 பேர்கொண்ட சைனியம் வேண்டும். பட்டணத்துக்கு 16-மைல் தூரத்தில் கோட்டைகள் இருக்கின்றன. அவைகளைப் பிடிக்காமல் ஒன்றும் செய்யமுடியாது என்கிறார்கள். கிழக்கே ஆஸ்திரியாவைச் சேர்ந்த 'காலிஷியா' (Galicia), மாகாணத்தை ருஷியர் ஜயித்து தம் நாட்டோடு சேர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

இந்தியாவிலிருந்து இரண்டு டிவிஷன் சைனியம் சண்டைக்காக யுத்தகளத்துக்குப்போயிருக்கிறது. இந்திய சைனியத்தை லார்ட் க்ரூ மிகவும் மெச்சி "உயர்பாவசித்தர்கள், புராதன நாகரீகமுள்ளவர்கள்" (High souled men, representativesof an ancient civilization) என்று புகழ்ந்து பேசினார். இங்கிலாந்திலுள்ள இந்தியர்கள் சிலர் சண்டைக்குப் போக ஸோல்ஜர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நமது அரசர்பிரதிநிதி யவர்களின் குமாரர் லெப்டினென்ட் ஹார்டிஞ்சு இந்த சண்டையில் காயம்பட்டுக் கிடக்கிறதாகச் சொல்லி சக்ரவர்த்தியவர்கள் அவருக்குத் தந்தியனுப்பியிருக்கிறார். இந்த அவஸ்தையில் நாமெல்லாரும் அவருடன் அனுதாபப் படுகிறோமென்பதிற் சந்தேகமில்லை.

இந்தியாவில் அரசர் பிரதிநிதியவர்கள் கனம் லார்ட் ஹார்டிஞ்சு தலைவராகவிருக்க 'இந்தியன் ரிலீப் பண்டு' ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அவருடைய விண்ணப்பத்தை வேறொரு பக்கத்தில் பார்க்கலாம்.

சென்னை கவர்னர் அவர்கள் யுத்தகளத்தில் போர் புரிகிறவர்களுக்கு சகாயம் செய்யவென்று ஒரு நிதி சேகரித்து வருகிறார்.

முன்னதற்கு ஸெப்டெம்பர் மாஸம் 1உயில் $14\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வரையில் சேர்ந்திருக்கிறது. பின்னதற்கு $11\frac{1}{2}$ லக்ஷம் வரையில் சேர்ந்திருக்கிறது.

## * TRANSFUSION COLUMN.

["If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English...into Tamil, the effect will be to assist and stimulate greatly the study of both languages."—*Dr. G. U. Pope.*]

### மொழிபெயர்ப்பு வித்தை

(1) "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."

Thought and Language are the very eyes (*i.e.*, true expressions) of the soul.

(2) "விண்ணவனை நண்ணினோர்க் கெண்ணமெல்லாம் கண்ணாகும்."

" The thoughts of those that have approached *the Light*
Are all transformed into *visions bright.*"

* "No exercise of faculty is better and nobler for *a real* man than that of struggling with great thoughts, and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the best feelings, and elevate the whole being of their fellow men around them !"—*Rev. Dr. G. U. Pope* on the "Vivekachintamani Series."

## The Vivekachintamani.

" The August issue of this popular Tamil monthly publishes in English the Children's Messages of Sympathy to the Viceroy and the Hon'ble Diamond Hardinge and the Viceroy's thanks for the same. The article on Child-Education treats of the training of the senses and the accurate powers of observation of the Child-mind. The descriptive stretch of the General conflagration of European War and the story of Blindman's Buff among Nations in Tit-Bits for Children are good and to the point."—*The Indian Patriot,* 1st *September* 1914.



## THE LAUREATE AND THE WAR.

" God Defend the Right!"

1. Thou careless, awake !
Thou peacemaker, fight !
Stand, England, for honour,
And God guard the Right !

Thy mirth lay aside,
Thy cavil and play :
The foe is upon thee,
And grave is the day.

3. The monarch Ambition,
Hath harnessed his slaves ;
But the folk of the Ocean,
Are free as the waves.

4. For Peace thou art armed,
Thy Freedom to hold :
Thy Courage as iron,
Thy Good-faith as gold.

5. Through Fire, Air, and Water,
Thy trial must be :
But they that love life best,
Die gladly for thee.

6. The Love of their mothers,
Is strong to command ;
The fame of their fathers,
Is might to their hand.

7. Much suffering shall cleanse thee ;
But thou through the flood,
Shalt win to Salvation,
To Beauty through blood.

8. Up, careless, awake !
Ye peacemakers, Fight !
England stands for Honour,
God Defend the Right !

ROBERT BRIDGES.
*Poet Laureate.*

## THE POET LAUREATE'S WAR SONG.

"God Defend the Right!"

### "திருப்படை யெழுச்சி" த்தானம்.

1. தூங்குசிந் தையினீர் துயில்விட் டெழுமின் !
பாங்குடன் சமாதானம் பேசுவிர், எடுபடை !
ஆங்கில நாடுநம் கௌரவம் காக்கவே
தூங்கிலாத் தெய்வம் தர்மம் புரக்கவே.

2. மகிழ்விளை யாடுவீர் மகிழ்வினை யகற்றுவிர் !
இகழ்சிந் தையினீர் இகழ்வதை யொழிவீர் !
திகழ்பகை யாளர் எதிர்த்துளார் காண்மினோ !
திகழ்பகல் ப்ரமாதம் விளைப்பதை யுணர்வீர் !

3. பேராசை தலையெடுத்துத் தன்னரசு செலுத்தவே
தூராசைக் காரர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள்:
கூராசை கொண்டுகலபாணியாளும்ஸர்ஜனர்நாம்
பேரோசை செய் திரைபோற் பயமின்றிக் கர்ச்சிக்
[கிறோம்.

4. கரும்பொன் போல்கரு வுருமிகு திண்விரல்
செம்பொன் போல்ச்ரத்தா பக்திநிறை யுன்மனஸ்
அம்பொன் னம்பல வாணர்கை யாயுதம்
நம்பொன் னம்பல ஸ்வதந்தர நாட்டவேதரித்தீர்.

5. தீயொடு கால் நீர் எனச்சொலு பூதங்கள்[மினோ!
தீயொடு ம-வ சேர்ந்துமைச் சோதிக்குங்காண்
இகபர மெனச்சொலு மிரண்டிலு மவாவுற்றோர்
மிகவர ஜயம்பெற உயிர்தனை உவப்புடன்மாய்ப்
[பரோ.

6. அன்னையின் அன்பில் வளர்ந்தவர் முந்தியே
தன்னையிப் பாரதப் போரினில் அளிக்கவே
முன்னையித் தேசத்துப் புகழினை நாட்டவே[வே,
தன்னையளித்தழு தாதையர் தோள்வலி தூண்ட

7. போரினில் முன்னின்று படுமவை பட்டுநீர்
பாரினில்பிரளயம் வந்ததேபோன்றதற்குட்பட்டு
நீரினில் மிதந்து நீஞ்சியே கரையேறிப்
பாரினிலுதிரஞ்சிந்தியேபெறவீர்சுந்தரப்பேறுநீர்.

8. தூங்குசிந் தையினீர் துயில்விட் டெழுமின் !
பாங்குடன் சமாதானம் பேசுவீர் ! எடுபடை !
ஆங்கில நாடுநம் கௌரவம் காக்கத்
தூங்கிலாத் தெய்வம் தர்மம் புரக்கவே.

[ஆங்கில கவிசக்ரவர்த்தியாகிய ராபர்ட் ப்ரிட்ஜஸ் அருளிச்செய்த திருப்போர்ப்படை யஷ்டகத்தின் உண்மையான தமிழிசைக்கூற்றிது.—C. V. S.]

## THE INDIAN IMPERIAL RELIEF FUND.
## APPEAL BY THE VICEROY.
## "இந்தியன் இம்பீரியல் ரிலீப்பண்டு" அரசர்பிரதிநிதி விண்ணப்பம்.

---

ஸிம்லா, ஆகஸ்டுமீ 16வ.—பிரிட்டிஷ் ராஜ்யத்தை யுத்தத்தில் இழுத்துவிட்டார்கள்; ஆதலால் சமுத்திரத்துக் கப்பல் நடக்கும் சண்டையில் பிரிட்டிஷ் ராஜ்யத்தைப் பாதுகாக்கும்படி இந்தியாவிலிருந்து யுத்தத்துக்கு உதவியாக ஒரு சைனியம் அனுப்பத் தயாராகி வருகிறது.

யுத்தத்துக்குப் போகிற சைனியம் பெரியதாயிருக்கும். அதில் வீரத்திற் பேர்போன நமது இந்தியன் துருப்புப் பட்டாளங்கள் பலவுடன் சுதேச ராஜாக்களுடைய இம்பீரியல் ஸெர்விஸ் துருப்புகளில் சிலவும் சேர்ந்திருக்கும்.

இந்தியாவிலிருந்து யுத்தகளத்துக்குப் போமவர்கள் குடும்பங்களில் கஷ்ட நஷ்டங்கள் நேரிடும்; யுத்தத்தின் பயனாக, பாபம்! அனேகர் கணவனை யிழந்த கைம்பெண்களும், தகப்பனை யிழந்த குழந்தைகளும் ஆகி அநாதைகளாவார்கள்.

ஆதலால் இவர்களுக்கு உதவிபுரிய பெருநிதியம் வேண்டியதவசியம்: அந்நிதி சேகரஞ்செய்யத் தாமதமின்றி பணம் சேர்க்கவேண்டியிருக்கிறது. அதற்காக இந்தியா முழுவதுக்கும் பொதுவான 'ஸெண்ட்ரல் கமிட்டி' யொன்று ஏற்படுத்த உத்தேசித்து, அக்கமிட்டிக்கு ப்ரெஸிடெண்டாயிருக்கும் பொறுப்பை யானே வகிக்கப்போகிறேன். அந்தக் கமிட்டியில் கனந்தங்கிய பெங்கால், சென்னை, பம்பாய் கவர்னர்களும், முக்கிய சேனாதிபதியவர்களும், எனது எக்ஸிகியூடிவ் கௌன்ஸில் மெம்பர்களும், இதர மாகாணத்து கவர்ன்மெண்டுகளின் தலைவர்களும், பின்வரும் தேசாதிபதிகளும் மெம்பர்களாயிருப்பார்கள். அவர்கள் பேர் விவரம்:—

மேன்மை தங்கிய பிகானீர் மஹாராஜா, போபால்பீகம், குவாலியர் மஹாராஜா, ஐதராபாத்நிஜாம், இந்தூர் மஹாராஜா, ஜெயபுரி மஹாராஜா, ஜாட்பூர் மஹாராஜா ரிஜண்டு, கோட்டா மஹாராவ், மைசூர்மஹாராஜா, பட்டியாலா மஹாராஜா, ரீவா மஹாராஜா, உதயபுரி மஹாராணா.

இந்த ஸெண்ட்ரல் கமிட்டியின் அதிகாரத்துக்குட்பட்டு ஒரு நிர்வாக சபையும் (எக்ஸிகியூடிவ் கமிட்டி) அங்கங்கே கிளைச் சபைகளும் ஏற்படுத்தப்படும்.

யுத்தம் நடப்பதின் காரணமாக ஜனங்களுக்கு உண்டாகக்கூடிய கஷ்ட நஷ்டங்களை முக்கியமாய் ராஜ்ய பாதுகாப்பின்பொருட்டு பொது க்ஷேமத்தை நாடி யுத்த களத்திற் சென்று பிராணஹானிக்குட்பட்டு கஷ்டங்களை யனுபவிக்கும் வீரர்கள் குடும்பங்களில் அவரை யண்டியிருந்தார்க் குண்டாகும் கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்தனுபவிக்கக் கூடியதாய் அவர்களுக்கு வேண்டிய சகாயம் செய்வதற்காக இந்தியாவிலுள்ள இராஜமன்னர்களென்ன, பிரபுக்களென்ன, வியாபாரிகளென்ன, ஐரோப்பியர்களும் இந்தியர்களும் சேர்ந்த மஹாஜனங்களென்ன, இவர்களெல்லாரும் அவரவர்கள் சக்தியானுசாரம் முன்வந்து திரவிய சகாயம் செய்வார்களென்றும் முழு நம்பிக்கையோடு அவர்களெல்லாருக்கும் விண்ணப்பம்செய்து கேட்டுக்கொள்கிறேன்.

இந்த "இம்பீரியல் இந்தியன் ரிலீப் பண்டு" க்குக் கையொப்பம் செய்கிறவர்கள் பின்வரும் பாங்கிகளுக்கு கையொப்பத் தொகையை அனுப்பலாம். அந்த பாங்கியார்கள் தங்கள் பிரதான ஸ்தலத்திலும் கிளை பாங்கிகளிருக்குமிடங்களிலும் கையொப்பத் தொகைகளை வரவு பற்றிச் சேர்த்துக் கொடுப்பதாக மனமுவந்து உடன்பட்டிருக்கிறார்கள்.

அந்த பாங்கிகளின் பேர் விவரம்:—பெங்கால் பாங்கி, கல்கத்தா; பம்பாய் பாங்கி, பம்பாய்; மதராஸ் பாங்கி, சென்னை; 'அல்லையன்ஸ் பாங்கி ஆவ் ஸிம்லா அண்டு டெல்ஹி.' ஸிம்லாவிலுள்ள ஸர் ஏ. கெர் (Sir A. Ker, Simla) பொக்கிஷதாரராக விருக்க மனமுவந்து சம்மதித்திருக்கிறார். (1) (*Mr*, F. W. Johnston) மிஸ்டர். எப். டப்ளியூ ஜான்ஸ்டன் அவர்களும், (2) (Major John Mackenzie) மேஜர் ஜான் மக்கென்ஸி அவர்களும் சேர்ந்து காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடிதப்போக்குவரத்துக்களெல்லாம் ஸிம்லா, வைஸ்ரிகல் லாட்ஜிலுள்ள மேஜர் ஜான் மக்கென்ஸி யவர்கள் பேர் விலாஸத்துக்கு அனுப்பப்படவேண்டியது. (Major John Mackenzie, Viceregal Lodge, Simla).

இப்படிக்கு:
ஹார்டிஞ்ச் ஆவ் பென்ஸ்ஹர்ஸ்ட்.
HARDINGE OF PENSHURST.

---

### The Vivekachintamani.

"We have received the August issue of the *Vivekachintamani* now in its 22nd year of Publication, devoted to the cause of the Children's Education in their own mother-tongue and to the improvement of vernacular studies. It publishes an English version of the Children's Messages of Sympathy with the Viceroy's thanks therefor. It opens with an article on Child Education which treats of "the training of the senses and of the accurate powers of observation" of the child. The article on Fearlessness combines the ancient and traditional teachings of the East with its application to modern conditions of Society. There are a number of other articles of interest all written in easy style and to suit the understanding of the child-mind. The descriptive sketch on the General conflagration of European War and the story of "Blindman's Buff among nations" in "Tit-Bits for Children" are to the point. We are glad to note that the popularity of this Journal is ever on the increase and the change that has come over it since it took up the Children'scause has attracted the attention of all, including the Government who, on the recommendation of the *Director* of Public Instruction, have specially approved of it as suitable for use in Elementary and Lower Secondary Schools and allowed the Local Boards and Municipalities to follow their example and re-supply the schools under them with copies of the Journal for the use of pupils and teachers. We wish the Journal all success in its now widely extended sphere of usefulness."—*The Hindu, 4th September* 1914.



### SOCIAL ESSAY ON FRIENDSHIP.

"Friendship is above reason, for, though you find virtues in a friend, he was your friend before you found them. It is a gift that we offer because *we must*; to give it as the reward of vitrue would be to set a price upon it, and those who do that have no friendship to give. If you choose your friends on the ground that you are virtuous and want virtuous company, you are no nearer to true friendship than if you choose them for commercial reasons. Besides, who are you that you should be setting a price upon your friendship? It is enough for any man that he has the Divine power of making friends, and he must leave it to that power to determine who his friends shall be. For, though you may choose the virtuous to be your friends, they may not choose you; indeed, friendship cannot grow where there is any calculated choice. It comes, like sleep, when you are not thinking about it; and you should be grateful without any misgiving when it comes. So no man, who knows what friendship is, ever gave up a friend because he turns out to be disreputable. His only reason for giving up a friend is that he has ceased to care for him; and when that happens, he should reproach himself for this mortal poverty of affection, not the friend for having proved unworthy. For it is inhuman presumption to say of any man that he is unworthy of your friendship, just as it is to say of any woman, when you have fallen out of love with her, that she is unworthy of your love. In friendship and in love we are always humble because we see that a free gift has been given to us, and to lose that humility because we have lost friendship or love is to take a pride in what should shame us. . . . .

"A man is your friend, not because of his superiorities, but because there is something open from your nature to his, a way that is closed between you and most men. You and he understand each other, as the phrase is: your relation with him is a rare success, among a multitude of failures, and if you are proud of the success you should be ashamed of the failure."—*The Times*, (London.)

## நேசம்.

“அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்!”

உடலிற் சிறியாரும் பெரியாருமாகிய குழந்தைகளே, இம்முறை நான் உங்களுடன் ‘நேசம்’ என்பதைப்பற்றிப் பேசப்போகிறேன். அதை நீங்களெல்லோரும் சிரத்தா பக்தியுடன் அவதானமாகக் கேட்கவேண்டும்:—

“நேசமென்பது பாசங்கடந்தது.” பாசமென்பது கட்டுங்கயிறுபோல் ஆசைக்கயிற்றினால் அறிவினைக்கட்டும் தன்மையுடையது. ஆசையோ மாசுபடிந்த மனத்தினின்றெழுமோர் ஆவல். மனத்தின் சுபாவம் நினைப்பும் மறப்புமாய் ஒன்று விட்டொன்றைப்பற்றின வண்ணமாயிருத்தலாம். இதை “மற்றொன்று மற்றொன்று மனோபவம்” என்னும் மூதுரையால் அறியலாம். மனது ஒன்றையே பற்றி நின்றால் தாதத்மியசக்தி வன்மையால் அறிவானும் அறிபொருளும் ஒன்றாக இடையிலுள்ள மனம் (அறிகருவி) அறிவுமயமாகிவிடும். அது எப்படியென்றால் மண்ணை உலையிலிட்டு ஒரே சூடாக உருக்க உருக்க அது கன்மஷமிழந்து பளிங்காகுந்தன்மைபோல் என்று சொல்லுவர். இவ்வுலகிலே “பணத்துக்கெட்டாத மணம்” என்று சொல்வதில் “உண்மை நேசம்” ஒன்றாம், பணம் என்பது பொன் வெள்ளி நாணயத்துக்குமட்டும் பேராகக் கொள்ளக்கூடாது. பதார்த்தம் அதுவே யானாலும் கொள்வினை கொடுப்பனைக்கு அது ஒரு சாதனமாக விருத்தலால், கொடுத்து வாங்கும் வியாபாரத்துக்கே அது அறிகுறிப்பேராய் நிற்கும். அறிகுறிப் பெயராயிருப்பதின் பொருளுக்கு லக்ஷியார்த்தம் என்றுபேர். லக்ஷியம் என்றாலும் “அறிகுறி” யென்றாலும் ஒன்றே. லக்ஷியத்துக்கழகு லக்ஷணம். தமிழில் இவற்றை “இலக்கிய இலக்கணம்” என்பர்.

“இலக்கியம் கண்டதற்கு இலச்கணம் இயம்புவர் புலவனர் என்பர்.”

ஒரு பொருளை நேர்நேராய் உள்ளும் புறமும் ஒக்கப்பார்ப்பது இலக்கியம். இது அறிவின் தொழில் இதைச்செய்யும் ஓர் சக்தியுண்டு. அதை சித்சக்தி யென்பர். சித் என்றால் அறிவு. இந்த அறிவுக்கு அறியும்சக்தி தானுமுண்டு. அது எப்படியென்றால் சூரியனுக்கு வெளிச்சம் உண்டுபோல் இயற்கையாயுடையது.

சூரிய வெளிச்சம் இருளையகற்றிப் பொருளை விளக்குவதுபோல், இந்த சித்சக்தி அறியாமையை (அஜ்ஞான இருளை)ப்போக்கி அறிவின் பிரகாசத்தால் மனத்தெளிவையும், மனத்தெளிவின் மூலமாக உண்மை யுணர்ச்சியையும் உண்டு பண்ணுகிறது. இப்படியுள்ளத்துணரும் உண்மை யுணர்ச்சியை பஹிர்முகதரிசனமாக வெளியிற் கண்டால் தன்னையறியாமல் தன்மனம் அந்த உண்மை லக்ஷியப்பொருளைப்பற்றி அதில் ஒன்றுபட்டுச்சேரும். இப்படிச்சேரும்போது மனம் லயித்துப்போகும். அப்படி யென்றால் ஒய்ந்து உட்கார்ந்து போகும். ஒய்ந்து போகிறதென்றால் நினைப்பு மறப்புத்தொழில் செய்யும் வேலை ஒய்ந்தது என்று அர்த்தம். உட்கார்ந்து போகிறதென்றால் நினைப்பும் மறப்பு மற்ற விடத்துள்ள நிஷ்களரூப ஏகவெளியில் ‘அலையற்ற நீர்போல்’ அமர்ந்து விடுகிறது. இதற்கு “ஒழிவிலொடுக்கம்” என்று சொல்லுவர். இந்த அவஸ்தையில் அது அன்பொன்றேயாகி அந்த அன்பின் விலாஸமாகிய “அருள்வெளி”யில் “ஊசியைக் காந்த மிழுக்கின்றவாறுள்ள ஓர் சக்திக்குட்பட்டதாயிருக்கிறது. அந்த அருள்வெளியை மேற்றிசைமனோதத்துவசாஸ்திரக்ஞர் “Field of consciousness” என்று சொல்கிறார்கள். இந்த வேளிக்கு எதையும் தன்மயமாக்கும் சக்தியுண்டாதலால், இதை “ஸ்பரிசவேதி” யென்று தாந்திரீகர்கள் சொல்லுவர். இதையே இங்கிலீஷில் “Philosopher’s Stone” என்று சொல்கிறதுண்டு. “மணி மந்திர, ஔஷதம்” என்கிற மூன்று உபாயங்களில் இந்த அருள் வெளியில் அருளொளிபட்டு மனவிருள் நீங்கிய ஸ்படிகரூப சுத்தமனமே “சிந்தாமணி” யென்று சொல்வது. இதையே சுருக்கமாய் “மணி” யென்று சொல்வதுமுண்டு. இந்த சிந்தாமணி ஸத்யா ஸத்ய வஸ்து விவேகம் உதயமாகி அவ்



விவேகம் முதிர்ந்த [illegible]னவில் தானே (உன்மனவில்) உண்டாகிறபடியால் இதற்கு விவேகசிந்தாமணி யென்று சிறப்புப் பெயர் உண்டாயிற்று. இந்த விவேகசிந்தாமணியும் அந்த அருள் வெளியிலிருந்து தானே நடத்தப்படுகிறது. “ஏடலாத ஏட்டிலுள்ள எழுதாக்ஷரம் * வாசிக்கும் சக்தி” பெறலே படிப்பின் பயனும் முடிவு நோக்கமுமாம். அஃது பெறப்படாவிடத்து படித்தபடிப்புப் பயனிலதாகும். அதற்குத்தான் “ஏட்டுப்படிப்பு” என்றும் “சோற்றுப் படிப்பு” “வயிற்றுப்படிப்பு” என்றும் பல விதமான பேர் வழங்குகிறது. பாசங் கடந்த நேசம் உண்மைப்படிப்புப் படித்தவர்களிடத்தே தோன்றும். உண்மைப்படிப்பாவது மனம் அடங்கப்பெறுவதாம். “அலையுமனத்தையடக்குமவனே” எல்லா வித்தைக்கும் பாத்திரனும் வித்யாதேவதைகளால் சேவிக்கப்பெறுவன். “அலாடின்ஸ் விளக்கு” (Aladdin's Lamp) என்பது அறிவிளக்கையே குறிக்கும். இது மனமடங்கப்பெற்றார் வசமானதாயினும், எல்லோரிடத்தும் அகஸ்மாத்தாகத் தோன்றும். அப்படித்தோன்றும்பொழுது தன்னையறியாது உள்ளம் அன்புள்ள விடத்தில் பற்றும். அந்த அன்புக்குறைவிடமாயிருக்கிறவரையே “எனதுள்ளம் கவர் கள்ளன்” என்று மேலோர் துதித்திருக்கிறார்கள். கமலாம்பாள் சரித்திரத்தில் “கல்யாணி” தன் அன்புடை நேசனை “மனந்திருடிச்சீமா” என்று குறிக்கும்பொழுது இந்த உண்மையையே உள்ளன்பு காரணமாகத் தானுகவெடுத்துரைப்பாளாகிறாள். அவள் சீனுவுக்கெழுதும் கடிதத்தை நன்றாகப் படித்துப்பார்த்தால் “தத்துவஞானம்” என்று வாச்சாமகோசரமாய்ச் சொல்லும் உண்மைகளெல்லாம் உள்ளன்புடையாரிடத்தில் எவ்வளவு சாமானியமாய்த் தோன்றுகிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தானே விளங்கும்.

உள்ளன்புண்டான விடத்தில் உண்மை நேசம் தானே தோன்றும். அது ‘காசுபணம்’ [illegible] [illegible]ாரக்கட்டுக்கு அடங்காதது. “ஆசாபாசம்” என்கிற [illegible]க்குமப்பாற்பட்டது. அது “இச்சாசக்தி” வசப்பட்டது. மண்கொட்டினால் வெட்டப்படாதது. குந்தாலியினால் பிளக்கப்பட மாட்டாதது. கட்டப்பாரையினால்தகர்க்கப்படாதது. “கொட்டுக்குந்தாலிக்கும் பாரைக்கும் முன்னிற்கும் இஷ்டம் வலிதென்பர்.” அந்த இஷ்டத்தைப் பொறுத்தது உண்மை நேசம். அந்த இஷ்டம் தானும் ஈசன் அருள் தானேயாகும். உலகத்தில் ‘உண்மை நேசம்’ இருந்தால் சண்டை பூசல் இராது. மதமாச்சரியங்களின் உபத்திரவங்கள் அற்றுப்போம். ‘உண்மை நேசம்’ அறிவாகிய இலக்ஷியத்துக்கு அழகான இலக்ஷணமாகும். அந்த நேசமுள்ள விடத்துப் பாசம் நில்லாது.

“நான்காசுப ணம்வாங்கேன்
காணிக்கையு மேற்றுக்கொள்ளேன்
“அன்பான வார்த்தைகளே
இன்பந்தரும் வெற்றிலைகாண்
மன்மதனைச் சுட்டெரித்த
சாம்பலே வாசனைகாண்
அகங்காரமம காரமதை
யறைத்துச்சந்தனப் பூச்சிடுவேன்;
புத்தியெனும் பூவைக்கொய்து
பூமாலை சூட்டிடுவேன்;
ஊனஉடல் அழித்துனக்குச்
சாந்துப்பொட்டு இட்டிடுவேன்;
உன்னறிவதனைப் புகையில்காட்டியுன்
கண்ணுக்குமை யிட்டிடுவேன்;
உன்பஞ்சேந்திரியங் களையழித்துப்
பாதக்குரடு தந்திடுவேன்;
உன்னுயிரைமட்டும் அடைக்கலமா
என்னிடத்து வைத்திருப்பேன்.
இத்தனைகோ லங்களும்நான்
கோர்வையாகச் செய்துவிட்டேன்”—

என்று என் ஆனந்தத்தாயார் சொல்லியபடி ‘உண்மை நேசம்’ உள்ள விடத்து இத்தனை கோலங்களும் அது செய்துவிடும். நேற்று நான் உண்மை நேசம் வைத்த அன்பர் ஒருவர் இரண்டு மாதம் வெளியே போவதாகச்

* ‘Book of Nature’.

சொல்லி விடைகேட்டுக் கொண்டு போக வந்தார். அவருக்கு விடைகொடுக்க மனந்தாளவில்லை. அப்பொழுது உள்ளத்து நிகழ்ந்ததை உற்றுப்பார்க்கையில் உண்மை நேசத்தின் மஹிமையின்னதென்றுகண்டேன். கண்டதைக் கண்டபடி விவேகசிந்தாமணியை வாசிக்கும் சிறுவர் சிறுமிகளுக்குபயோகமாக வென்று இங்கு எழுதலானேன். இதையே லண்டன் டைம்ஸ் பத்திரிகையிலும் ஒருவர் விளங்கக்கூறியிருக்கிறார். அதில் முக்கிய பாகத்தை இதன் முகப்பில் அச்சிட்டிருக்கிறது. அதைப்பார்த்தாலும் 'உண்மை நேசம்' உண்டான விடத்தில் வேற்றுமையெல்லாம் விழுந்துபோமென்பது ஸ்பஷ்டமாய் விளங்கும்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
குட்டியண்ணா.

*The Madras Social Service League.*—The Secretary of the Leage, writing to the Editor of the "Vivekachintamani," says:—"In the meeting held recently under the presidency of the Hon'ble Mr. T. V. Seshagiri Iyer, a resolution was passed conveying to you the thanks of the League for the kind gift of the periodicals you were pleased to make to the League last week. I have been directed to communicate to you the same and to intimate to you the readiness of the League to avail itself of your generous offer to place a portion of your Library at the service of the League."—*The Madras Mail, 8th September*, 1914.

"*The Vivekachintamani.*"—"The August number of this popular Tamil monthly, now in its 22nd year of publication, opens with an excellent article on child-education. It treats of "the training of the senses and powers of observation." There are a number of other articles, all written in easy style, to suit the understanding of the child-mind. The descriptive sketch on "The general conflagration of European War" and "Blindman's buff among nations" in "Tit-bits for Children," are to the point. We are glad to note that the Government have, on the recommendation of the Director of Public Instruction, recognised the good work the journal has been doing in the cause of child-education and the improvement of vernacular studies, and declared it as suitable for use in all Elementary and Lower Secondary schools, including those under the management of Local Boards and Municipalities. The supply of the journal to all the Government schools and to educational officers in charge of Elementary and Secondary education has been ordered by Government. The persevering and persistent labours of the Editor, who has been working in the field of vernacular studies for more than a quarter of a century, are commendable." — *The Madras Mail, 8th September*, 1914.

## BIOGRAPHICAL SKETCHES.

I. MISS. FLORENCE NIGHTINGAME.

(ILLUSTRATED.)

"England's Empire over the raging seas
She owes to Nelson's voice of 'Duty to be done!'
England's Empire over the Mind that feels
That Lady with the Lamp founded on her 'Duty Done.'

—*From the Vivekachintamani Children's Record.*

## சரித்திர மஞ்சரி.

### I. பிளாரேன்ஸ் நைத்திங்கேல் என்னும் பரோபகாரியின் சரித்திரம்.

பிளாரேன்ஸ் நைத்திங்கேல் ஒரு ஆங்கிலேய பிரபுவின் குமாரத்தி. இவள் இத்தாலியா தேசத்தில் 1820-ம் வருஷத்தில் பிளாரென்ஸ் என்னும் நகரத்தில் பிறந்தாள். இதனாலேயே இவளுக்கு பிளாரென்ஸ் என்னும் பெயர் கிடைத்தது. இங்கிலாந்து சீமையில் கூட அக்காலத்தில் ஸ்திரீகளுக்கு உயர்ந்த படிப்புச் சொல்லி வைப்பது சரியல்லவென்று எண்ணினவர்கள் அநேகர். பிளாரென்ஸின் தகப்பனார் மாத்திரம் தன்னுடைய பெண்ணுக்கு புருஷர்கள் சர்வகலாசாலைகளில் படிக்கும் படிப்பெல்லாம் தானே சொல்லிவைத்தார். இவ்வாறு இவள் கற்றவித்தைகள் பலவும் பின்னர் இவளுக்கு வெகு பிரயோஜனமாகவே யிருந்தன.

இளம்பிராயம் முதற்கொண்டே பிளாரென்சுக்கு ஜீவப்பிராணிகளின் பேரில் அத்தியந்தப் பிரீதி. மனிதனாகட்டும், மாடாகட்டும், நாயாகட்டும் எதுவுமே வருந்த இவள் சகியாள். தன்னால் இயன்றமட்டும் அதற்கு உதவிசெய்யாது அரைக்கணமும் நில்லாள். இவ்வாறே ஒருநாள் சாயங்காலம் தன்னுடைய தகப்பனாருக்கு வெகு நண்பரும், ஜனங்களுக்கு வெகு உபகாரியுமான ஓர் பாதிரியும் தானுமாக வழக்கம்போல் சவாரி போய்க்கொண்டிருக்கையில் ஆட்டிடையன் ஒருவன் தன் தடியை கீழே ஊன்றிக்கொண்டு அதன்மேல் சாய்த்த தலையனாய் வெகு விசாரத்துடன் நின்றுக்கொண்டிருந்ததையும், அவன் பக்கத்தில் ஆடுகள்



அங்குமிங்குமாய்ச் சிதைந்து ஓடிக்கொண்டிருந்ததையும் கண்டு என்ன சமாசாரமென்று இவர்கள் இடையனை விசாரிக்க, அவன் தன்னிடத்தில் ஒரு நாய் இருந்ததாகவும், அது எப்பொழுதும் தன்னுடனேயிருந்து ஆடுகள் சிதறி ஓடாமல் வெகு விசுவாசத்துடன் காத்துக் கொண்டிருந்ததாகவும், தனக்கு பெண்டு பிள்ளைகள் ஒன்றும் இல்லாமையினால் அதுவே பிள்ளையென்று தான் அதை அருமையுடன் வளர்த்துவந்ததாகவும், அதை யாரோ துஷ்



Miss Nightingale.

டப்பையன்கள் கல்லை விட்டெறிந்து காலை முறித்துவிட்டதாகவும், அதற்குமேல் அது தனக்கு பிரயோஜனப் படாதாகையால் அதை தான் வீணே வைத்துச்சோறுபோட முடியாமையின் தூக்கிடவேண்டி வந்துவிட்டதாகவும், கண்களில் நீர்ததும்பச் சொன்னான். பிளாரென்ஸும், பாதிரியும் இடையனுடன் மேலொன்றும் பேசாமல் கொஞ்சதூரம் போனார்கள். போனதும் பாதிரி "இடையன் நாயைப்போய்ப் பார்ப்போமா? அதன் கால் முறிந்திருக்குமென்று தோன்றவில்லை. ஒரு பெரிய நாயின் காலை முறிக்க எவ்வளவு பெரிய கல்லைக் கொண்டுபோடவேண்டும்" என்றார். பிளாரென்ஸுக்குக் கேட்கவேண்டுமா: எப்பொழுதும் யாருக்கு என்ன உபகாரம் செய்வோமென்று இருப்பவளாயிற்றே! சரி! யென்று இருவரும் நேரே இடையன் வீட்டுக்குச்சென்று நாயின் காலைப்பார்த்ததில் கால் முறிந்தில்லை. கல் அடித்ததில் கொஞ்சம் காயப்பட்டு கால் வீங்கியிருந்தது. பாதிரி இதெல்லாம் கொஞ்ச மறிந்தவராகையால் வெந்நீரைவைத்து வேதுபோட்டால் வீக்கம் வற்றுமென்று சொன்னதுதான் தாமதம். பிளாரென்ஸ் உடனே ஒரு அடுப்பு மூட்டி

வெந்நீர் வைத்து ஒற்றடம் கொடுக்க ஆரம்
பித்தாள். நாய்க்கு வலி கொஞ்சம் மட்டுப்
பட்டது. அவர்கள் வீட்டுக்குத் திரும்பும்
பொழுது வழியில் நாயைத் தூக்குவதற்
கென்று சுருக்கிட்ட கயிறும் கையுமாய் வந்து
கொண்டிருந்த இடையனைக்கண்டு நாயைக்
கொல்லவேண்டாமென்று சொல்லிவிட்டு வீடு
போய்ச் சேர்ந்தார்கள். பிளாரென்ஸ் நைத்
திங்கேல் மறுநாள் காலமே இதுவே நினைவாய்
எழுந்து இடையன் வீட்டுக்கு வந்து மறுபடி
யும் ஒரு தடவை ஒற்றடம் போட்டுவிட்டுப்
போனாள். நாயும் காயமாறி நடமாடத்தலைப்
பட்டது. இப்படி இவளுக்கு பாலியத்திலே
யே உண்டாகிய ஜீவகாருண்ணியம் வயது ஆக
ஆக வளர்ந்துகொண்டே வந்தது. குழந்
தைப் பருவம் கழிந்து கல்யாணம் செய்து
கொள்வதற்கேற்ற யௌவனமும் வந்தது.
நல்ல குலத்தில் பிறந்து, தக்க ஐசுவரியம்
படைத்து, விசேஷக் கல்வியும் நிறைந்து விளங்
கிய இவளுக்கு கல்யாணம் செய்துகொள்ள
வேண்டுமென்றால் தக்க புருஷர்கள் வாய்த்
திருக்கமாட்டார்களா? நான், நீ யென்று குதி
போட்டுக்கொண்டு வந்திருப்பார்களே? ஆனால்
பிளாரென்ஸுக்கு அப்படி யொன்றிலும் கருத்
தில்லை; தன் வயதுப்பெண்கள் மற்றவர்களைப்
போல ஆட்டம், பாட்டு, ஆடை, ஆபரணம்,
இவைகளில் இவளுக்கு மனம் போகவில்லை.
யாருக்கு என்ன உதவிசெய்யலாம் எவர்க்கு
எது பிரீதி என்று எப்போதும் யோசனையே
தவிர தன்னைப்பற்றிய ஞாபகம் அவளுக்குக்
கொஞ்சமும் கிடையாது.

இவ்வாறு பரோபகாரம் செய்வதே தான்
ஜன்மம் எடுத்ததின் பிரயோஜனமென்று ஒரே
உறுதியாய் நம்பி, எந்த வழியில் ஏற்பட்டால்
தன் கருத்து முற்றிலும் நிறைவேறு மென்று
ஆலோசிக்கையில் அக்காலத்தில் ஆஸ்பத்திரி
யில் நோயாளிகளுக்குத் தக்க போஷணையில்
லாததால் வெகு உயிர்ச்சேதம் நேரிடுவதைக்
கண்டு அதை நிவர்த்திப்பது தான் தனக்கு
அமைந்துள்ள தொழிலென்று கண்டுகொண்டு
அதையே அநுசரிக்கும்பொருட்டு தேச
தேசங்களுக்குப்போய் ஆங்காங்குள்ள பற்பல
ஆஸ்பத்திரிகளிலும் வியாதியஸ்தர்களை பரா
மரிக்கும் விதம் என்னென்னவென்று தீர
விசாரித்து வந்தாள். நோயாளிகளைப் பாது
காக்கவேண்டுமானால் நோயின் விபரமென்ன?
அதற்குச் செய்யவேண்டிய சிகிச்சைகள்
என்னவென்று அறிந்திருப்பது அவசியமா
கையால் அதையும் அறிந்துவந்தாள்.

இவள் இவ்வாறு ஆஸ்பத்திரியில் வியாதி
யஸ்தர்களைப் போஷிக்கும் தொழிலைச் சீர்
பண்ண ஏற்படுவதற்கு முன் அத்தொழில்
செய்துகொண்டு வந்தவர்கள் யாவர்களோ
எனின், அவர்கள் ஈனகுலத்திற் பிறந்து இழி
தொழிலில் பிரவேசித்து துன்மார்க்கத்தில்
அழுந்திப் பின்பு போக்கற்று இத்தொழிலை
யோர் ஜீவனாதாரமாகப் பற்றிவந்தவர்களா
யிருந்தார்கள். அவர்கள் விகாரமான முகத்
தையும், அவலட்சணமான ரூபத்தையும்,
அசுத்தமான துணிகளையும் பார்க்க ஒரு வியா
தியுமில்லாமல் பசியுட னிருப்பவர்களுக்கே
அன்னத்துவேஷம் உண்டாகுமானால் ஏற்கன
வே அரோஜிகம் பிடுங்கித்தின்னும் வியாதி
யஸ்தர்களுக்கு இவர்கள் கையால் மருந்து
சாப்பிட்டு பத்தியம் வாங்கிக்கொள்ளவேண்டு
மானால் கேட்கவும் வேண்டுமா? வியாதியும்
சௌக்கியமாய் விடும்! வியாதியஸ்தர்களும்
உயிருடன் எழுந்துவிடுவார்கள்! இப்படியிருந்
தால் ஆஸ்பத்திரிகளில் ஜனங்கள் ஏராளமாய்
மாண்டுபோகக் கேட்பானேன்! இப்படிப்
பட்ட கூடாடதேவதைகளைத் தவிர்த்து தூய்ய
வெள்ளையான உடையும், மெதுவான நடையும்,
அன்பும், ஆதரவும் நிறைந்த தாதிகள் இப்
பொழுது எந்த ஆஸ்பத்திரிகளிலும் காணப்
படுவார்களானால் அது இம்மாது சிரோமணி
யினால் சித்தித்த பாக்கியமே. இக்காலத்தில்
நமது மாக்ஷிமை தங்கிய முதல் சக்கரவர்த்தினி
'விக்டோரியா' பெருமாட்டி முதற்கொண்டு



நமது தற்காலத்து கவர்னர்ஜெனரல் கனம்
பொருந்திய லார்டு ஹார்டிஞ்சு பிரபு அவர்கள்
பத்தினியார் தாமும், இன்னுமற்றவர்களும்,
மிகவும் எளியவர்கள் வீடெல்லாம் சென்று
அங்கே வியாதியா யுள்ளவர்களுக்கு மருந்தோ,
தீனியோ, கொண்டுபோய்க் கொடுப்பது
தமக்கு இழிந்ததென்று எண்ணாமல் கஷ்டப்
படுபவர்களைத் தேற்ற வேண்டியது தங்கள்
கடமையென்று எண்ணுவது முதலில் பிளா
ரென்ஸ் நைத்திங்கேல் காட்டிய உதாரணத்
தினால் தான். தற்காலம் நடக்கும் சண்டை
யில் காயம்பட்டவர்களுக்கு உதவி செய்ய
வென்று இந்தியாவிலுள்ள கவர்னர்கள்
மனைவிமாரெல்லாம் இவ்வழியில் முயன்று வரு
கிறார்கள்.

பிளாரென்ஸுக்கு இவ்வாறாகப் பட்டுக்கொ
ண்டு வந்த பிரயாசையின் பலன் கைக்கு மெய்
யாகக் கூடிய சீக்கிரத்தில் கிட்டியது. 1854-
வருஷத்தில் இங்கிலாந்து தேசத்தவர்க்கும்
ருஷியாதேசத்தவர்க்கும் கிரிமியாவில் போர்
உண்டாகியது. யுத்தகளத்துக்கு சமீபத்தில்
ஆஸ்பத்திரிகள் கிடையா. யுத்தகளத்தில்
காயப்பட்டவர்களை (Black Sea) கருங்கட
லைத்தாண்டி 'ஸ்குத்தாரி' என்னும் இடத்துக்
குக் கொண்டுபோக வேண்டியிருந்தது. அங்
கேதான் என்ன, வேண்டியபடி மருந்தா,
துணியா, உண்டியா ஒன்றும் கிடையாது.
குற்றுயிராய்க் கொண்டுவந்து போடப்பட்ட
வர்கள் போட்டவிடத்திலே போடப்பட்டுக்
கிடந்தார்கள். ஆஸ்பத்திரியில் சுத்தமென்
பதே கிடையாது. துர்க்கந்தமோ குடலைப்
பிடுங்கியது; நல்ல காற்றோட்டத்துக்காவது
இடமுண்டோ வென்றால் அதுவும் இல்லை.
இவ்வாறாக ஆஸ்பத்திரிகள் சீர்குலைந்து கிடந்
ததினால் போர்க்களத்தில் மடிபவர்களைக்காட்
டிலும் இங்கே பார்க்கச் சகிக்காத ஹிம்சைப்
பட்டு சாகும் ஜனங்கள் தொகை ஜாஸ்தியாக
இருந்தது. ஏன் என்று கேட்க ஒரு நாதியு
மில்லாமல் காயம்பட்ட யுத்தவீரர்களும் மற்ற
வர்களும் மடிந்துபோகிறார்களென்று இங்கி
லாந்தில் ஜனங்களுக்குத் தெரிந்தவுடன் எல்
லாருக்கும் தாம்தாம் போய் உதவிசெய்ய
வேண்டுமென்று தோன்றிற்று. போய்ச் செ
ய்வதென்னவென்று ஒருவர்க்காவது தோன்ற
வில்லை யாதலால் என்ன செய்வதென்று விழி
த்து வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார்கள்.
இவ்வளவு குழப்பத்தில் மனம் கலங்காமலிருந்
தவள் பிளாரென்ஸ் நைத்திங்கேல் ஒருவளே!
ஜனங்கள் கிடந்து பரிதபிக்கிறதைக்கேட்டு
அந்த அம்மாள் மனமுருகித் தானே 'கிரிமியா'
வுக்குப் புறப்பட்டுப்போகச் சித்தம் என்று
அப்பொழுது யுத்த இலாகா மந்திரியான மிஸ்
டர் ஸிட்னி ஹெர்பர்ட் துரையவர்களுக்கு
எழுதினார். அவருக்கும் இந்த அம்மாள் ஒரு
வள் தான் இந்த சமயத்தில் உதவிசெய்யக்
கூடியவள் என்று தோன்றியதால் இவள் ஒத்
தாசையைக் கோரி ஒரு கடிதமெழுதினார்.
இருவரும் பிரத்தியேகமாய் ஏககாலத்தில்
எழுதிய கடிதம் வழியில் சந்தித்து அவரவரி
டம் போய்ச்சேர இருவரும் சரியென்று உட
னே அதற்காகவேண்டிய ஆயத்தம் செய்தார்
கள். மிஸ்டர் ஸிட்னி ஹெர்பர்ட் துரை, மிஸ்
நைத்திங்கேல் தானே தனக்கு உதவிபுரியத்
தக்கவர்களைத் தெரிந்தெடுத்து தன்னோடு
அழைத்துக்கொண்டு போய் போர்முகத்தில்
காயப்பட்டவர்களுக்கு வேண்டிய உதவிபுரிய
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொண்டார். அப்பொழுது சீக்கு மனுஷர்
களைப் போஷிக்கும் தாதித்தொழில் நாம் முன்
சொல்லியபடி ஈனப்பட்டிருந்ததால் கண்ணிய
முள்ள குலமாதர்கள் அத்தொழிலை வெறுத்
திருந்தார்கள். ஆனால் இப்பொழுது ஜனங்
களுக்குள் உண்டாயிருந்த உற்சாகத்தில் மிஸ்
நைத்திங்கேல் ஒண்டியாக யுத்தம் நடக்கு
மிடத்துக்குச் சென்று யுத்த முகத்தில் காயப்
பட்டு வருந்தும் போர்வீரர்களுக்கு உதவி
செய்யப் போகிறாளென்ற செய்தி நாடெங்கும்
பரவியதும் அநேகம் குலமாதர்கள் யுத்தத்
திற்குப் போயிருக்கும் தங்கள் புத்திர மித்திரர்

கள்; சகோதரர்கள் முதலானவர்களை பினைத்துப் பரிகசித்துக் கொண்டிருந்தபடியால் 'நான் வருகிறேன், நான் வருகிறேன்' என்று முன் வந்தார்கள். அவர்களில் கூடியமட்டும் தக்கவர்களும் தன்னுடைய சொல்லைக் கேட்கக்கூடியவர்களுமாக 34 பேர்களைத் தன்னோடு தாதிகளாக வரக் கூட்டிக்கொண்டு அவள் சிறுபிராயமுதலறிந்த பாதிரியொருவரைத் தவிர வேறு புருஷத்துணையின்றி மிஸ் பிளாரென்ஸ் நைத்திங்கேல் 1854-௵ அக்டோபர்௴ 30௳ கிரிமியாவுக்குப் புறப்பட்டாள். புறப்பட்டுவிட்டாளென்றபோதே ஜனங்களுக்கு வெகு உற்சாகம் உண்டாயிற்று. எங்கும் அவள் பெயர் கொண்டாடப்பட்டது. கிரிமியாவிலிருந்து வந்த ஒவ்வொரு தபாலும் அவருடைய சாமர்த்தியத்தை மேன்மேலும் கொண்டாடியே வந்தது. அவளுக்கிருந்த சாமர்த்தியம், காருண்ணியம், தோரணி இவைகள் அணுவளவேனும் குறைந்திருக்குமானால் அந்த அம்மாள் எடுத்த முயற்சி வீணாகவே முடிந்திருக்கும்.

இவர்கள் ஸ்குத்தாரியில் போய் இறங்குவதற்கு முந்தினநாள் தான் பாலக்லாவா (Balaclava)ச் சண்டையில் காயப்பட்டவர்கள் அங்கே கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்தார்கள்.

ஸ்குத்தாரி ஆஸ்பத்திரியிருந்த கட்டடம் பாஸ்போரஸ் ஜலசந்திக் கரையில் சமுத்திர மட்டத்திற்குச் சுமார் நூறு அடி உயர்ந்த ஓர் இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அது சச்சதுரமாய் கால் மைலுக்குக் கால்மைலிருந்தது. அதின் நான்கு மூலையிலும் நான்கு கோபுரங்கள் இருந்தன. அவைகளில் தென் கிழக்கு மூலையிலுள்ள கோபுரத்தில் தான் மிஸ் நைத்திங்கேலும் அவளுடன் வந்த தாதிமார்களும் இறங்கியிருக்க விடுதி யேற்படுத்தப்பட்டிருந்தது.

இவர்கள் போய் இறங்கினதும் ஆஸ்பத்திரியிலிருந்த அலங்கோலத்தைச் சொல்ல முடியாது. ஒரு படுக்கைக்கும் மற்றொன்றுக்கும் மத்தியில் ஒரு ஆள் போவதற்குக்கூட இடமில்லாமல் நெருங்கி ஒரு சுமார் நாலாயிரம் பேர்கள் கால்மாடு தலைமாடாய்க் கிடந்தார்கள். கால் முறிந்தவர்களும், கை ஒடிந்தவர்களும், மண்டை உடைபட்டவர்களும், வாந்திபேதி கண்டவர்களும், ஜன்னி பிறந்தவர்களுமாக ஒரு ஒழுங்கில்லாமல் நாலாயிரம்பேர்கள் அங்கே அடைபட்டிருந்தார்கள் என்றால் இதையெல்லாம் ஒழுங்குபடுத்த வந்திறங்கினவர்களுக்கு எவ்வளவு வேலையிருந்ததென்று சொல்லவும் வேண்டுமோ! போருக்குறைக்கு அங்கிருந்த வைத்தியர்களோ சுத்த மூர்க்கர்கள். பிளாரென்ஸ் தன்னுடன் வந்த ஆய்ச்சிகளை வைத்தியர்கள் சொற்படி நடக்கவேணுமென்று கண்டிப்பாய் உத்திரவுபண்ணினாள். ஆஸ்பத்திரியில் சாதாரணமாய்க் கொடுக்கும் ஆகாரத்தைத் தவிர வேறு பத்தியம் கொடுக்கவேண்டியவர்களுக்கென்று ஒரு சமையல் கொட்டடியும், வியாதியஸ்தர்களின் துணிமணிகளை சுத்தம் செய்ய ஓரிடமும் ஏற்படுத்தினாள். அங்கே அவசரத்துக்குத்தக்கபடி தானே கஞ்சி முதலியவைகள் காய்ச்சவும் ஏற்படுவாள். எல்லாவற்றிற்கும் தானே பொறுப்பாயிருந்து வெகுகண்டிப்பாய் வேலைவாங்குவாள். தனக்கு அபாயம் நேரிடுமே என்று கொஞ்சமும் அஞ்சாமல் எவ்வளவு கொடிய நோய் உள்ளவர்களிடத்தும் போய் மருந்து முதலானவைகள் கொடுத்துவருவாள். அலுப்பு சலிப்பு என்பதை அறியமாட்டாள். எங்கெங்கே வியாதி கொடுமையாயிருக்குமோ அங்கெல்லாம் இவளை சித்தமாகக் காணலாம். இவளுக்கு நோயாளிகளிடத்திலிருந்த அன்பே அன்பு! பகலெல்லாம் கூடவேயிருந்து எவர் எவர்க்கு எதெது வேண்டுமோ அதனை அந்தக்ஷணமே கொடுப்பதுமல்லாமல் இராத்திரி வைத்தியர்களெல்லாம் போய் அரவம் ஒடுங்கினபின் கையில் ஒரு தீபத்தை எடுத்துக்கொண்டு மெதுவாய் ஆஸ்பத்திரி முழுக்கச் சுற்





றிப் பார்த்துக்கொண்டே வருவாள். இவ்வாறு இவள் அபிமானத்துடன் நோயாளிகளைப் பாதுகாத்து வந்ததினால் அவர்களுக்கும் இவள்மேல் பிராணன். எப்போதும் சண்டை சச்சரவு செய்துகொண்டு அசத்து வார்த்தைகளே வாயில் குடிகொண்ட படை வீரர்கள் கூட எங்கே இவள் மனம் நோகுமோவென்று ஒரு அடாதவார்த்தை கூட இவள் முன்னால் சொல்லமாட்டார்கள். வைத்தியன் எதாவது கையாடவேண்டுமென்றால் 'பிராணனையாவது விடுவேன் மேலே கத்தி போடவிடமாட்டேன்' என்பவன்கூட இவள் பக்கத்திலிருந்து தைரியம் சொன்னால் இவளுக்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு வேதனையைச் சகித்துக்கொள்வான். இவள் ஒவ்வொரு அறையிலும் போகும்போது அங்குள்ள ராணுவவீரர்கள் தத்தம் படுக்கையினண்டை வந்துநின்று ஒரு வார்த்தையாகிலும் பேசமாட்டாளாவென்று அதிக ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். அவர்கள் ஊருக்



The Hospital at Scutari.—ஸ்குத்தாரி ஆஸ்பத்ரி.

குக் காகிதம் எழுதவேண்டுமானாலும் சம்பளத்தின் மீதத்தை ஊருக்கு அனுப்பவேண்டுமானாலும் எல்லாம் இவளேதான் செய்யவேண்டும்.

இவ்வாறாக ஸ்குத்தாரி ஆஸ்பத்திரியில் ஒரு நாள் இரண்டு நாளல்ல, பதினெட்டு மாதகாலம் ஓய்வு ஒழிவுஇல்லாமல் உழைத்து ஆயிரக்கணக்காய் இறந்திருக்கவேண்டிய பிராணன்களைக் காப்பாற்றி தனக்கு அழியாக் கீர்த்தியைப் பெற்றதும்தவிர நோயாளியைப் போஷிக்கும் தாதித்தொழிலுக்கு இருந்த கெட்ட பேரையும் நீக்கி உலகத்திற்கு என்றென்றைக்கும் பயன்படும்படியான ஒரு பேருதவியைச் செய்தாள்:

யுத்தகளத்திலிருந்த சில ஆஸ்பத்திரிகளைப் பார்க்க ஸ்குத்தாரியிலிருந்து கிரிமியாவுக்குப் போனாள். போனவிடத்தில் அவளுக்கே ஜுரம்வந்து பிழைத்தது புனர்ஜன்மமாயிற்று. இங்கிலாந்துக்குத் திரும்பிப் போவதற்காகவேண்டி அவளை ஒரு கப்பலின் பேரில் வைத்தார்கள். ஸ்குத்தாரியில் தான் செய்யவேண்டியவேலை குறையிருந்ததால் அது முடியாமல் ஊருக்குத் திரும்பமாட்டேனென்று நின்றுவிட்டாள். சண்டை முடிந்து ஆங்கிலேயர் இங்கிலாந்துக்குத் திரும்பும் வரை மிஸ் நைத்திங்கேலும் ஸ்குத்தாரியிலேயே இருந்தாள்.

தன் உயிர்க்கே அபாயம் நேரிட்டபோதும் தன் வேலையைவிட்டு வரமாட்டேனென்று பரோபகார சிந்தனையே மேலிட்டிருந்த இந்த அம்மாள் சீமைக்குத்திரும்பி வரும்போது தக்கபடி அவளை எதிர்கொண்டழைக்க வேண்டுமென்று ஜனங்கள் ஏற்பாடுசெய்து கொண்டிருந்தார்கள். மிஸ் நைத்திங்கேல் ஒருவருக்கும்தெரியாமல் ஊர்போய்ச் சேர்ந்துவிட்டாள். அன்றுமுதல் அவருயிருள்ளவரையும் தான் கிரிமியாவில் பட்ட சிரமத்தினால் வியாதி மேலிட்டு வீட்டை விட்டு வெளியில்வருவதற்கில்லாமலிருந்தது. எவ்விதத்திலாவது இவள் செய்த பேருதவிக்குத் தங்களுடைய விசுவாஸத்தைக் காண்பிக்கும்பொருட்டு ஜனங்கள் என்னமாகிலும் செய்யவேண்டுமென்று ஆத்திரப்பட்டார்கள். தங்களுடைய வருத்தத்தை நீக்கும் பொருட்டுத் தன்னுயிரையும் இழக்க சித்தமாயிருந்த இம்மாதுசிரோமணிக்குத் தங்களாலியன்றமட்டும் தாங்களும் ஏதாவது செய்யவேண்டுமென்று ராணுவ வீரர்களும் ஆவலாயிருந்தார்கள். ஆகவே எல்லாருமாகச் சேர்ந்து "நைத்திங்கேல் பண்டு" என்று ஒரு நிதி சேர்த்தார்கள். அது ஒரு சுமார் இலட்சம் ரூபாய் சேர்ந்தது. அதைக் கொண்டு பிளாரென்ஸ் நைத்திங்கேலின் இஷ்டப்படியே ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளைப்போஷிக்கத் தாதிகள் பயிற்றுவதற்காக "நைத்திங்கேல் ஹோம்" ஒன்று கட்டியிருக்கிறார்கள். மாக்ஷிமைதங்கிய மகாராணியவர்களும் நைத்திங்கேலுக்கு வைரங்கள் இழைத்த ஆபரணமொன்று "நைத்திங்கேல் கிரிமியாவில் தன்னுடைய ராணுவ வீரர்களைப் பாதுகாத்ததற்காக ராணி விக்டோரியாவினால் கொடுக்கப்பட்டது" என்னும் எழுத்துக்கள் வெட்டிப் பரிசாய் அளித்திருக்கின்றனர்.

மிஸ் நைத்திங்கேல் எவ்வளவு நோயாளியாயிருந்தாலும் அவர் செய்துவந்த பரோபகாரத் தொழில்களில் ஒன்றும் குறைவேயில்லை. 1858-ஹு த்தில் "நோயாளிகளைப் போஷிப்பதைக் குறித்துச் சில குறிப்புகள்" என்று ஒரு புத்தகம் எழுதினாள். அதில் சில அருமையான உண்மைகளை வெளியிட்டிருக்கிறாள். வியாதியஸ்தனுக்கு முதலில் வேண்டியது நல்ல காற்று. இது நம்மவர்க்குத் தெரிகிறதேயில்லை. கொஞ்சம் உடம்பு பளுவாயிருக்கிறதென்றால் உடனே சூரியகிரணமென்பதே கண்டிராத ஒரு இருட்டறையில் அடைத்துவிடுகிறார்கள். இது இரண்டு காரணங்களினால் கெடுதல். முதலாவது நல்ல காற்றோட்டம் கிடையாது. இரண்டாவது தக்க வெளிச்சமில்லை. சவுக்கியமாயிருப்பவனையே ஒரு உள்ளேபோட்டு அடைத்து வைப்பதானால் சகிக்கமாட்டானென்றால் ஏற்கனவே கஷ்டப்படுபவர்களை அப்படி அடைத்தல் யுக்திக்காவது புத்திக்காவது ஒற்றதாயிருக்கிறதா? பிளாரென்ஸ் நைத்திங்கேல் சொல்லுகிறபடி அநேகம் வியாதிகளில் வியாதியஸ்தர்கள் படும் கஷ்டமெல்லாம் வியாதியினால் உண்டாவதில்லை; தக்க காற்றோட்டம், அமைதி, வெளிச்சம், உஷ்ணம் இவைகளில்லாததினால் உண்டாகின்றன. வியாதியஸ்தனை எப்பொழுதும் ஒரு கட்டிலில் படுக்கவைத்து அவன் மெத்தையின் உறை, போர்வை, துணி இவைகளை அடிக்கடி மாற்றிக்கொண்டே யிருக்கவேண்டும். மேலும் அவனுக்குக் கொடுக்கும் பத்தியத்தைக் காலாகாலத்தில்கொடுக்கவேண்டும்,



பின்னும் வியாதியின் ரீதியை நன்றாய் அறிந்து அதற்குப் பரிகாரமும் தெரிந்தவர்கள் தவிர மற்றவர்கள் அவனிடம்போய் உட்கார்ந்துக்கொண்டு, இது இப்படியிருக்குமோ இதற்கு இப்படிப் பார்க்கக்கூடாதுபோலிருக்கிறதே; இன்னாருக்கு இப்படித்தான் வந்திருந்தது, அதற்கு இன்ன இன்ன செய்தார்கள். என்றிவ்வாறு பேசவிடுவது மிகவும் கெடுதி. இவ்வாறு இன்னும் எவ்வளவோ அந்த அம்மாள் தன்னுடைய சொந்த அநுபவத்திலிருந்து எழுதியிருக்கிறாள். ஒரு வியாதியஸ்தனுக்கு ஒரு கொத்துப் பூ, ஒரு நல்ல படம் இவைகள் மிகவும் நன்மைசெய்கின்றன. மிஸ் பிளாரென்ஸ் நைத்திங்கேல் தான் கிரிமியாவில் வியாதியாயிருக்கும்போது ஒரு சிநேகிதர் ஒரு கொத்து ரோஜாமலர் அனுப்பியதாகவும் அது தன் கைக்கு வந்ததுமுதல் தனக்கு சுவரம் சீக்கிரம் சுவஸ்தமாயிற்றென்றும் எழுதியிருக்கிறாள்.

நெடுநாளாய் வியாதியுடன் இருப்பவர்கள் ஒரு நாய்க்குட்டி, பூனைக்குட்டி அல்லது கிளிப்பிள்ளை ஏதுவாவது வைத்து வளர்ப்பது அவர்களுடைய வியாதிக்கு வெகு அநுகூலமென்று மிஸ் நைத்திங்கேல் மற்றொரு இடத்தில் எழுதியிருக்கிறாள்.

(இவ்வகைச் சாதனங்களெல்லாம் மனோற்சாகத்தால் தேஹவியாதி சீக்கிரத்தில் குணப்படுகிறதென்பதை ஸ்தாபிக்கிறதாயிருக்கிறதன்றி வேறில்லை.)

1857-ஹு இந்தியாவில் பெரிய ராணுவக்கலகம் நேர்ந்தபோது வெள்ளைக்கார ராணுவ வீரர்கள் அநேகர் வியாதியினால் மரித்தார்கள். அவர்கள் அப்படிச் சாகாவண்ணம் பாதுகாக்கச் சில ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மிஸ் நைத்திங்கேல் கவர்ன்மெண்டார்க்கு எடுத்துச் சொல்லி உதவி புரிந்தாள். அன்றி ஆஸ்பத்திரி சீர்திருத்த விஷயமாயும் இராணுவங்களின் சுகாதார விஷயமாகவும் எத்தனையோ அருமையான சாதனங்களை யெடுத்துக்காட்டி கவர்ன்மெண்டாருக்கு மிகசிலாக்கியமான உதவிகள் புரிந்திருக்கிறாள். இதெல்லாம் செய்தபோது அந்த அம்மாளுக்கு வயது 75. இவ்வளவு வார்த்திபமடைந்தவரா யிருப்பதோடு நோயாளியாய் வீட்டைவிட்டு வெளிப்புறப்படக் கூடாமலிருந்தாலும் அவர் தம்முடைய அறையிலிருந்த வண்ணம் ஜனங்களுக்கும் இராஜாங்கத்துக்கும் செய்த உதவி அற்பசொற்பமில்லை. இராணுவ சுகாதார சம்பந்தமாயும் ஆஸ்பத்திரிகள் சம்பந்தமாயும் சென்ற 50-வருஷ காலத்தில் உண்டான சீர்திருத்தங்களெல்லாம் அந்த அம்மாளுடைய முயற்சியாலும் ஆலோசனை உதவியாலுமேயென்று சொல்லலாம். அநேகவருஷகாலமாக அந்த அம்மாள் இந்தியாவில் வசிக்கும் ஜனங்களின் சுகாதார நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டி இந்தியா அதிகாரிகளுக்கு எழுதி அவர்களை அது விஷயத்தில் அடிக்கடி தூண்டிவந்தார்கள்; லார்ட் டப்பிரின் பிரபுகாலத்தில் ஏற்பட்ட சீர்த்திருத்தங்கள் அந்த அம்மாள் சொன்னதை குருவாக்காக மதித்து அவர் நடந்துகொண்டதின் பலனென்று அவரேசொல்லியிருக்கிறார். இந்தியாவில் கிராமாந்திரங்களின் சுகாதார நிலையை விர்த்தி செய்யவேண்டுமென்று அதற்காக இந்தியாவிலுள்ள ஜனசிரேஷ்டர்களோடு கடிதப்போக்கு வரவு வைத்துக்கொண்டு அவர்கள் முலமாய் இந்தியாவிலுள்ள கிராமக்குடிகளின் விருப்பு வெறுப்புகளையும் ஆசார அனுஷ்டானங்களையும் அறிந்துகொண்டு அவர்களுடைய மனோபாவத்துக் கிசைந்தபடி சுகாதாரத்துக் கடுத்த சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதைப்பற்றி அந்தியம் வரையில் அதிகமுயற்சி யெடுத்துக்கொண்டுவந்தார். ஐரோப்பாவில் கூடும் சுகாதார விர்த்தியைப்பற்றி யோஜிக்கும் காங்ரெஸ் மஹாசபையில் இந்தியாவுக்கு வேண்டிய சீர்

திருத்தங்கள் இன்னவென்று கவனிக்கும்படி செய்து அச்சபையாருக்கு இந்தியா விஷயத்தில் சிரத்தையுண்டாகச் செய்ததும் இவரே. நமது கிராமாந்திரங்களும், பட்டணங்களும் வெகு ஆபாசமாய் இருப்பதை நிவிர்த்தி செய்யும்படி சர்க்காரை மிகவும் தூண்டிவந்தது மல்லாமல், ஜனங்களுக்குள் படிப்பும் செல்வாக்கும் உடையவர்கள் ஊருராய்ப்போய் ஊர்களைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளும் விதங்களை அநுசரித்துக் காட்டவேண்டுமென்று இந்திய பத்திரிகைகள் மூலமாக ஒரு கடிதமெழுதிப் பிரசுரஞ் செய்தார். இப்படி இன்னும் எத்தனையோ விதங்களில் அந்த அம்மாள் தன் அறையைவிட்டு வெளிப் போகாமலிருந்தும் உலக விஷயங்களை நன்றாகக் கவனித்து லோகோபகாரம் செய்வதே மணியமாயிருந்தாள். அவர் காலஞ்சென்றபின் அவருடைய பேரால் "கிராம சுகாதார சகாயநிதி" யென்று மிஸ்டர் வெட்டர்பர்ன் அவர்கள் (Nightingale Village Sanitation Fund) ஏற்படுத்தியுள்ளார். அது விஷயமாய் இன்றைக்கும் வேலை நடந்து வருகிறது. நாம் கிராமங்களின் சுகாதார நிலைமைப்பற்றி யுழைத்தபோது மிஸ்மானிங் மூலமாய் இந்த அம்மாள் எடுத்துக்கொண்ட சிரத்தையினால்தான், மேன்மை தங்கிய எட்வர்ட் இளவரசர் நம் சிறுமுயர்சியை நன்கு மதித்துவக்கலானார் என்று சொல்லலாம். அவர் சமீபகாலத்திற் காலஞ்சென்றும் புகழுடம்பெடுத்து நம்முள் வசிக்கிறார் என்றே சொல்லவேண்டும். இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் மஹாபாரத யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கும் சீக்காய் விழுந்தவர்களுக்கும் செய்துவரும் உபசாரங்களெல்லாம் அந்த அம்மாள் உதாரணத்தாலும் மதியூகத்தாலும் செய்த சீர்திருத்தங்களின் பலனே.

## ON NATIONAL SELF-RESPECT
OR
## IN PRAISE OF BRITISH CHARACTER.

"CHARACTER ASSERTS ITSELF"

"The issue was one which no great and self-respecting nation, certainly none nurtured like ourselves in this ancient home of liberty, could, without undying shame, have declined."—*The* Prime Minester of England on the present War.

### தன்மதிப்பு
அல்லது
### ஆங்கிலேயர் குணமாட்சி.

"தன்னை மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்."

1. ஆங்கிலேயர் குணமாட்சி.
The British Character.

பிறவியந் தகனிரண்டு கண்களும
பெற்ற தென்கோ?
அறவுறு மிடியனுங்கே யடைந்ததோர்
நிதிய மென்கோ?
சிறுவரில் மலடிபெற்ற சேயிளஞ்
செல்வ னென்கோ?
முறைசெய் ஆங்கிலேயர் குணமாட்சியை
மொழியின் நாமே.

2. ஆங்கிலர் தம்மர்சுமஹிமை.
The British Principle of Liberty.

பாலையில் உழல்வார்க் காங்கோர் பசும்
பொழில் கிடைத்ததென்கோ?
வேலையில் வருந்து வார்க்கோர்
துறைமுகம் விளங்கிற்றென்கோ?
ஆலைவாய்க் கரும்புபோல உடைந்தயர்ந்
தார்க்கிங் கம்மா
மேலை நற்றவத்தால் மேவிவ்
வாங்கிலர்தம் மரசுதானே.

3. தர்மஸ்தாபன கடன் மஹிமை.
Their Native Love of Righteousness.

மனுவென்றும், மாந்தா தாவாம்
மன்னென்றும், வளரும்கீர்த்தி
தனிநின்ற குலைவில் வாய்மை
தழுவரிச் சந்த்ரன்என்றும்,
இனிநின்ற அரசர்எல்லாம் கதையினில்]
இயம்பல் அல்லால்,



மூனைவென்ற பிரித்தர் † போலும்
மொழியவிங்கொருவர் உண்டோ!

4. தர்மமே ஜயமென்னும் கொள்கை.
Their Faith in the Triumph of Righteousness.

நாடுநல் நிதியம் வேண்டி நளிர்கடல்
கடந்து போந்தார்,
தேடும் ஆங்கிலம் ஆம் தங்கள்
தேயம்விட்டிவண்காண் என்பர்;
நீடிய அறம்தான் நான்கு
பாதமேல் நின்று லாவக்,
கூடிய தவமே இன்னார்க்
கொணர்ந்ததென் றுரைப்பேன் யானே.

5. ஆங்கில ஜாதியின் குணவிசேஷம்.
Their National characterestics.

முரணிய பகைவர் தம்மை முனையினில்
முருக்கி, இந்தத்
தரணியில் தமது கோலை நாட்டினார்
என்ப தென்னே?
கருணையும், கொடையும், தூய
நீதியும், கற்பின் மாண்பும்
அரண்என நாட்டினரால் ஆங்கிலர்
இவர்தாம் அன்றே.

6. நடுநிலைமதியின் நுண்மை.
(Their Keen Love of Fairplay).

உடைதிரைக் கடல்சூழ் ஞாலம் முழுதும்
ஓர்குடைக்கீழ் ஆள்வார்
படைவலி பெரிதென் கோயான்
பயன்தரு வினையினாலே
குடிகளைக் கண்ணில் காக்கும்
கொள்கையால் இவர்தம்தூய
நடுநிலை மதியின் நுண்மை நலம்
பெரிதென்கோ இன்றே!

7. அசுரவேர் அறுக்கும் அன்னார்.
Siding with Right against Might.

வஞ்சயுறு மன்னர்தங்கள் வலியெலாம்
அடக்கி மண்ணில்
இசைபெற உயிர்கள் யாவும்
இன்புறக் காக்கும் இன்னார்க்
கசுரவேர் அறுத்து ஞாலம்
அருளினால் காத்தவள்ளல்
பசுமுகில் வண்ணன் அன்றி
ஒருவரைப் பகரல் ஆமோ?

8. அநீத அரசு கண்டனர்.
Their Role as Champions of Right and Justice.

ஆர்கலி உலகில் ஆங்காங் கநீதமா
அரசு கொண்ட
போர்வலி யவரை நீக்கிப் புரவலர்க்
குரிமை ஈந்தார்
சூர்வலி தடிந்து வானத்
தரசுவாசவற்குச் சூட்டும்
கார்மலி தோகை வாகற்
கிணையலால் கழறல் ஆமோ!

9. இதுவுமது.
(Ibid.)

கொஞ்சமில் கொடுமை செய்த
கூற்றம் அன்னவர்தம் ஆவி
வெஞ்சமர் அதனில் உண்டு
விரிகடல் உலகம் எல்லாம்
நெஞ்சகம் களிக்கக் காத்த
நிருபருக் குவமை கூறில்
நஞ்சம் உண்டுலகம் காத்த
நம்பனே அல்லால் உண்டோ?

10. நீடுசால் அரசி செங்கோல்.
(The Queen's Proclamation of 1858.)

வாடல் இன்றுலகம் இன்பின்
வதிந்திட எமக்குநேரும்
கேடிலை; குடிகள் உள்ளம்
கிளர்ந்தெழும் அன்பின் என்றும்
கூடுநன் றுணர்தலேநாம்
கொள்ளும்வண் பரிசாம்' என்ற
நீடுசால் அரசி செங்கோற்
கிணையொன்று பேசல் ஆமோ!

11. வேற்றுமை சாற்றல் இன்மை.
Their Impartiality & Unifying Influence.

தமரென்றும் பிறர்தாமென்றும்
வேற்றுமை சாற்றல் இன்றி
அமர்தரும் சீர்களெல்லாம்
அனைவர்க்கும் ஒருங்கே ஈந்து
சமயமும் பயிலும் தத்தம் சாதியின்
நெறியும் குன்றா
தமையவே உலகம் ஆள்வார்
இவர்புகழ்க் களவும்உண்டோ!

12. வாழி.
Prayer for Blessings.

வான்புகழ் இனைய ஆங்கிலேயர்
தம் அரசு வாழ்க!
மீன்படர் கடல்சூழ் ஞாலத்
துயிரெலாம் விருப்பின் வாழ்க!
தேன் பொழிந்தமுதம் ஊற்றும்
தமிழ்மகள் சிறந்துவாழ்க!
தான்பகர் உண்மை வேதத் தனி
நெறி தழைக்க! மாதோ.

† The British.

# READINGS FROM THE BOOK OF NATURE

"EARTHQVAKES"

## பிரகிருதி வித்தியாம்சம்.

### பூகம்பங்கள்.

முந்தின சஞ்சிகையில், பூமியின் உட்புறத்தில் அதிகமாய்க் காய்ந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் வஸ்துக்கள் இருக்கும் பாகங்களுக்கும், பூமியின் மேற்புறத்திற்கும் போக்குகளுண்டாய், அவைகளின் மூலியமாய்,'எட்னு' கொடபாக்ஸி,' விசூவியஸ், முதலிய பெரிய எரிமலைகளைப்போன்ற மலைகளை உண்டாக்கத்தக்கதாய், அவ்வளவு தூசுகளும், கற்களும், கற்குழம்பு வெள்ளமுதலியவைகளும், பூமியின் உட்புறத்திலிருந்து வெளியே கக்கப்படுவதைக் குறித்தும், இவ்விதமாய் ஆக்கப்பட்ட எரிமலைகளைக்குறித்தும், சொல்லியிருக்கிறோமல்லவா. இது போலவே பூமியின் உட்புறத்திலிருக்கும் சூட்டினாலும், இன்னும் வேறு சில காரணங்களாலும், பூமியானது திடீரென்று அதிக கடூரமாயும், அல்லது நம்முடைய நோக்கத்திற்கு தெரியாமலே மெதுவாயும், சலனமாவதுண்டு. சில சமயங்களில பூமி வெகு உக்கிரமாய் அசைக்கப்பட்டு பெரிய பிளவுகளுண்டாவதும், சில விடங்கள் சமுத்திர மட்டத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாய் உயர்த்தப்படுவதும், சில விடங்கள் படிப்படியாய் பள்ளத்தாக்காக ஆக்கப்படுவதும் வழக்கம். பூமியின் இவ்வித அசைவுகளால், அதன்மேற்புறத்தில் அனேகவித மாறுபாடுகள் உண்டாவதால், இவ்விஷயத்தைக்குறித்து யாவரும் அறிந்துகொள்வது அவசியமே. இவ்வித அசைவை, (1) பூகம்பங்கள், (2) பூமியின் கிளர்ச்சி, (3) பூமியின் தணிவு, என மூன்று பிரிவுகளாகப் பிரித்து தனித்தனியாய் ஒவ்வொன்றைக் குறித்தும் எழுதுவோம்.

### 1. பூகம்பங்கள்.

பூகம்பங்கள் என்பது பூமியின் அதிர்ச்சிகள் அல்லது நடுக்கங்கள். அவைகளில் சாமானியமானவை அதிகபாரமேற்றிய ஒரு பெரியவண்டி சற்றே விரைவாய்ப் பாதையில் ஓடும்போது பூமியில் உண்டாகும் ஒரு கிடுகிடுப்பான நடுக்கத்திற்கு சமமானதாக விருக்கும். மேலும் நமது வீடுகளில் உரலில் தானிய முதலானவைகள் உலக்கையால் இடிக்கப்படும்போது சமீபத்தில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களும், சாளரக்கதவு முதலானவைகளும், கலகலவென்று சற்றே அசைவதைப் பார்த்திருக்கிறோமல்லவா. உலக்கையால் உரலானது புடைக்கப்படும்போது, அதன் மூலியமாய் பூமிக்கும் அந்த விசையானது தாக்கவே, பூமியில் அதிர்ச்சி உண்டாகிறது. இந்த அதிர்ச்சியால்தான் பாத்திரம் முதலியவைகள் ஆடுகின்றன. இதையும் ஒரு சாமானிய பூகம்பத்திற்கு உதாரணமாகச் சொல்லலாம. அவைகளில் உக்கிரமானவைகளோ, பூமியை ஒரே குலுக்காய்க் குலுக்கி, மலைகளின்பேரில் இருக்கும் விடுதிப் பாறைகளை புரட்டித்தள்ளியும், மரங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தியும், பெரிய நகரங்கள், கிராமங்கள், கோட்டைகள், கொத்தளங்கள் முதலிய யாவற்றையும நிர்த்தூளியாக்கியும், பெரிய கேடுகளை விளைவிக்கும்.

### பூகம்பங்களைக்குறித்து ஜனங்களுடைய அபிப்பிராயம்.

இந்துக்களும், பௌத்தர்களும் பூகம்பங்கள் உண்டாவதைக்குறித்து பலவிதகாரணங்களைச் சொல்லுகிறார்கள். இப்பூகோளமானது, ஆயிரம் முடிகளைப் படைத்த ஆதிசேடன் என்னும் ஒரு பெரு நாகத்தால் தாங்கப்பட்டிருப்பதாகவும், இச்சர்ப்பமானது ஒரு பென்னம்பெரிய ஆமையின் முதுகின்பேரில் மண்டலமிட்டு நிற்பதாகவும், இந்த ஆமையை எட்டுத்திக்கிலும் எட்டுயானைகள் நின்று தாங்கியிருப்பதாகவும், இந்துக்கள் உருவக உருவமானம் சொல்லுகிறார்கள். இப்பெருநாகமாவது, † அல்லது யானைகளாவது ‡ பிரமாண்டமாகிய இப்பூகோளத்தை ஒரே, நிலையில் தாங்கி நிற்பதில் சற்றே களைத்து நிலையைமாற்றக்கருதி இடம் பெயர்வதினால் பூமியானது நடுங்குவதாகச் வெகு அழகாய்க் கதை சொல்கிறார்கள். பௌத்தர்களோ, இப்பூமியானது ஒரு பெரு ஆழியில் மிதந்துகொண்டிருப்பதாகவும், சமுத்திரம் வாயுமண்டலத்தில் நிற்பதாகவும், வாயுமண்டலம் ஆகாயவெளியில் பரவியிருப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். வாயுமண்டலத்தில் பெருங்காற்று எடுத்து வீசும்போது, அது ஜலமண்டலத்தை கொந்தளிக்கச் செய்து, அதன்மேல் மிதந்துகொண்டிருக்கும் பூகோளத்தை நடுங்கச்செய்கிறதாம். பாணியர்கள், இப்பூமியின் கீழ் ஒரு பெருந்திமிங்கிலம் இருந்து அதைத் தாங்கிக்கொண்டிருப்பதாகவும், அது தூங்கிக்கொண்டிருக்கும்போது பூமி அசைவற்று நிற்பதாகவும், நித்திரைபொழிந்து தனது உடலை நெளித்துக்கொள்ளும்போது பூகம்பங்கள் உண்டாவதாகவும் சொல்லுகிறார்கள். மேற்சொல்லிய விஷயங்கள் யாவரும் பிரமாணமாய் அங்கீகரித்துக் கொள்ளத்தக்க யாதாவது சாஸ்திரங்கள் மூலியமாய் நாம் அறிந்துகொண்டவையல்லாமற் போனாலும், ஜனங்களுக்குள் இந்த அபிப்பிராயங்கள் சாதாரணமாய் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. இப்படி வழங்கிவரும் காரணங்கள் சரியானவைகளல்ல. அவைகள் உண்மையாயிருக்குமாயின் பூகம்பங்கள் சாதாரணமாய் உண்டாவதுபோல ஒரே தடவையில் பூமியின் ஒரு சிறிய பிரதேசத்தில் மாத்திரம் காணுமல், உலகமுழுதும் ஒருங்கே நேர்ந்து பூமியானது ஒரே குலுக்காய்க் குலுக்கப்படவேண்டும். ஆனாலும் பெயர்பெற்ற தற்காலத்திய ஐரோப்பிய புவன உறுப்பிலக்கண சாஸ்திரபண்டிதர்களாலும் பூகம்பங்கள் உண்டாவதின் உண்மையான காரணங்கள் இவைகள் தாமென்று நிச்சயமாய்க்கண்டுபிடிக்கப்பட்டதாகவில்லை. வானத்தில் அனேககோடிமைல்களுக்கப்பால் இருக்கும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் முதலிய பல கிரகங்களைக்குறித்து, அவைகளின் பிரமாணம் இன்னதென்றும், இன்ன கிரகம் இதைச் சுற்றி ஓடுகிறதென்றும், அக்கிரகங்களில் தோன்றும் களங்கங்கள் அவைகளில் இருக்கும் சமுத்திரங்கள், பனிமூடிய மலைகள் முதலியவைகளின் சாயலென்றும், இன்னும் அவைகளில் உள்ள பலவிதமான விசேஷங்களையும் சுலபமாய் கண்டுபிடிக்கத்தகுதியான தூரதிருஷ்டிக்கண்ணாடி முதலாகிய அருமையான கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறாகளே. இதுமாதிரியாகவே நமது கால்களுக்குக் கீழ் இருக்கும் இப்பூகோளத்தின் உட்புறத்தில் நடக்கும் அனேகமான மாறுபாடுகளைக் கண்டறிய மானிடர்களாலாகாதது மிகவும் ஆச்சரியமே என அனேகர் நினைக்கக்கூடும். வானமோ நமதுகண்முன் நிற்கும் வெளியாய் இருக்கிறது. ஆனால் பூமியோ பெரும்பாறைகள், மண்முதலியவற்றால அமைக்கப்பட்டு கடினமானதாகவிருப்பதாலும், உள்ளே தோண்டிக்கொண்டு வெகு ஆழம் போவதற்கு, அவ்விடத்தில் வாயுவின்மையாலும், காலாக்கினி போன்ற சூடானது இடங்கொடாததாலும், அதன் உட்புறத்தில் நேர்ந்துவரும் மாறுபாடுகளைக் கண்டறிய பலவிதத்தாலும் ஏலாததாயிருக்கிறது. ஆனாலும் அனுபவத்தைக் கொண்டும், இன்னும் பல பரீக்ஷைகளைக்கொண்டும, பூகம்பங்கள் உண்டாவதற்கு சில காரணங்கள் ஊகிக்கப்படுகின்றன. அவைகளை இவ்விடத்தில் சற்றே சுருக்கமாய்ச் சொல்வோம்.

### பூகம்பங்கள் உண்டாவதற்குச் சில காரணங்கள்.

பகம்பங்களில் மிகவும் சாமானியமான நடுக்கங்கள், சமபங்களில் வாயு மண்டலத்தின் விசையின் மாறுபாடுகளாலும், சூரியன் சந்திரன் இவைகளுடைய கவர்ச்சிகளாலும் உண்டாகக்கூடும் என்று சில பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பெரிய பூகம்பங்களோ, பூமியின் உட்புறத்தில் உண்டாகும் மாறுபாடுகளினாலேயே உண்டாகவேண்டும்

† நாத தத்துவத்துக்கு உருவகம்.

‡ ஆவரண சக்திக்கு உருவகம்.

என்று நிச்சயிக்கப்படுகின்றன. முக்கியமாய் அக்னிமலைகள் உள்ள பிரதேசங்களிலும், இன்னும் சில விடங்களிலும் பூமியின் உட்புறத்தில் உள்ள பெரிய பிலங்களின் மேற்றளங்கள் அவைகளின் வேற்புறங்களில் தங்கி நிற்கும் பெரும் பாரத்தை தாங்கமுடியாமல் பிளவுகள் கண்டு இடிந்து நொருக்குண்டு விழுவதால் உண்டாகும் அதிர்ச்சிகளால் பூகம்பங்கள் உண்டாகக்கூடும். மேலும் பூமியின் சூடுண்ட பாகங்கள் சில சமயங்களில் ஏதாவது காரணங்களால் குளிர்ச்சி யடையும்போது சுருங்குவதால், அச்சமயங்களில், அவைகளில் பிளவுகள் உண்டாய் இடிந்துவிழும் அதிர்ச்சிகளாலும் பூகம்பங்கள் நேரிடலாகும். அல்லது, பூமியின உட்புலத்தில் இருக்கக்கூடும் அதிக உஷ்ணமுள்ள பெரிய பிலங்களில் தண்ணீர் வந்து சேர்ந்து, அவ்விடத்தில் விசேஷமாய் நீராவி உண்டாய்ப் பரவுவதால் வெடிப்புகள் கண்டு, அவைகளாலும் பூமி அதிரலாம். எரிமலைகள் கொதிப்பெடுக்கத் தொடங்கி வெடித்தெழும்போதெல்லாம் பூகம்பங்கள் உண்டாவது வழக்கம். இதைக் குறித்து, எரிமலைகளைப்பற்றி எழுதியிருப்பதில் சொல்லப்பட்டிருக்கிறது. கொதிப்பெடுக்கும் எரிமலைகள் உள்ள பிரதேசங்களில்லாமல் மற்ற இடங்களில் உண்டாகும் பூகம்பங்களுக்கு காரணங்கள் இன்னவை என்று இன்னமும் சரிவரப் புலப்படவில்லை. ஆனாலும் பூமியின் உட்புறத்தில், மேலே குறிப்பிட்ட பலவித காரணங்களால், திடீரென்று உண்டாகும் ஒரு வெடிப்பைப் போன்ற உக்கிரமான வேகத்தின் காரணத்தால் தான் பூகம்பங்கள் உண்டாகின்றனவென்பது நிச்சயம். இப்படி இடி உண்டான இடத்திற்கு சரியான, பூமியின் மேல்பாகத்தில் தான் பூகம்பங்கள் அதிக கொடூரமானவைகளாயிருக்கின்றன. இந்த மத்தியபாகத்திலிருந்து பூமியின் சலனமானது பரவுவதில் தூரம் செல்லச்செல்ல அதன் உக்கிரம் தணிவுபடும். இதற்கு உதாரணமாக, சற்றேனும் அசைவில்லாமல் தண்ணீர் நிலைத்து நிற்கும் ஒரு குளத்தில் ஒரு சிறிய கல்லை எறிவதினால் அதில் உண்டாகும் மாறுபாட்டைச் சொல்லலாம். கல்லானது தண்ணீரில் விழுந்த இடத்தில் சிறிய அலைகளைப்போன்ற வட்டங்கள் உண்டாய் அப்படியே வெளிப்புறமாக பெரிய வட்டங்களாய்ப் பரவி கடைசியாய் ஒன்றுக்கொன்று அதி தூரமுள்ளவைகளாயும், கண்ணுக்கு வட்டமாய்த் தெரியாமலும் மழுங்கிப் போய் விடுகின்றன அல்லவா. இது மாதிரியாகவே பூகம்பங்களானவை, அவைகளின் உற்பத்தி ஸ்தானங்களிலிருந்து சுற்றிலும் பரவப் பரவ வலிமையில் குறைவுபடும். இப்படி அலைகளை ஒத்த சலனமன்றியில், பூகம்பங்களால் பூமி சற்றே மேலே கிளம்புவதுமுண்டு. இதுவுமல்லாமல் பூகம்பங்கள் நேரிடும்போது பூமியின் உட்புறத்திலிருந்தும், ஆகாயத்திலிருந்தும், ஒருவித குமுறலான சத்தங்கள் உண்டாவதுண்டு. பூகம்பங்கள் சாதாரணமாய் பூமியின்மேற்புறத்தில் காணப்படுவதற்கு முன்னர் பூமியின் உட்புறத்தில் உண்டாகும் இடங்கள், தரைமட்டத்திற்கு ஏறக்குறைய 30-மைல்களுக்கு உள்ளாகவே இருப்பதாக ஊகிக்கப்படுகின்றன.

### பூகம்பங்களினால் தரையில் உண்டாகும் மாறுபாடுகள்.

பூகம்பங்களினால் உண்டாகும் அதிக கொடூரமான பிராணச்சேதமும், பண்டச்சேதமும், நாடு நகரங்களின் நாசமுமே, அவைகளின் முக்கியமான காரியங்களாகக் காணப்படுகின்றன. இவ்விதங்களான பல நாசங்கள் உண்டாயினும், பூகம்பங்களால் நமது பூகோளத்தின் மேற்புறத்தில் உண்டாகும் ஸ்திரமான மாறுதல்கள் சொல்பமே. நமக்கு முன் பின் பூகம்பங்கள் உண்டாகப்போகின்றனவென்று யாதொரு அறிவிப்புமில்லாமலே, திடீரென ஒரு க்ஷணப்பொழுதில், வெகு தூரத்தில் இடி இடிக்கும் கர்ச்சனைபோலவும், அல்லது, பெரிய பீரங்கிகளிலிருந்து வெடிகள் தீர்க்கப்படுவது போலவும், சத்தங்கள் உண்டாய் நமது தேசங்களில் ஒரு அச்சத்தை உண்டாக்கும். ஏதோ



ஒருவித பயங்கரமான சத்தமுண்டாகின்றதே இது என்னவோ தெரியவில்லையே, என்று மனிதர்களில் ஒருவருக்கொருவர் கேட்டுத் தெளிவதற்கு முன்னர், இக்கொடும் பூகம்பங்களானவை அவர்களுக்குள் உண்டாகிய சந்தேகத்தை ஒழிப்பனவாய் அவர்களை ஒரே குலுக்காய்க் குலுக்கி விடுகின்றன. பூமியானது இத்தருணங்களில் நமது பாதங்களுக்குக் கீழ், ஒருவன் பெருமூச்செறிவதினால் அவன் மார்பானது எப்படி முன்னுக்கு வந்து பிற்பாடு தணிகிறதோ அது மாதிரியாக, மேலே உப்புவதுபோல கிளம்பி மறுபடியும் தணியும். வீடுகள், பெரு அலைகளில் அகப்பட்டுத் தத்தளிக்கும் கப்பல்களைப்போல் முன்னும் பின்னுமாக ஊசலாடி, அடி முதல் முடிவரையில் பிளவுகள் கொண்டோ, அல்லது, ஒரே அடியாயோ விழுந்து நிர்தூளியாகிவிடும். இச்சமயங்களில் பூமியானது இங்கும் அங்கும், கொடும் பசியால் உபாதையுண்டு தவித்துக் கிடக்கும் ஒரு ஒரு புலி இரையைக்கண்ட உடன் வாயைத்திறப்பதுபோல், பிளவுகள் கண்டு, அவைகளில் அகப்பட்டவைகளுடன் மறுபடி மூடிக்கொள்ளும். இவ்வாறாக ஒரு க்ஷணநேரத்தில் பெரிய நகரங்கள் முதலியவைகள் இடிந்து தும்ஸமாக்கப்பட்டு அவைகளில் வசிக்கும் லக்ஷக்கணக்கான மானிடர்களையும், மிருக பக்ஷி ஜாதிகளையும், இறந்தவர்களும், இறப்பவர்களுமாக்கி, ஒரு நொடிக்கு முன்னர் பலவித சம்பத்தாலும் பெருமை பெற்று விளங்கிய பட்டணங்கள், பார்ப்பவர்கள் நடுங்கும்படியாய் பெரிய பிணக்காடுகளாக்கப்படும். பெரிய பூகம்பங்கள் ஆன உடனே அடுத்தடுத்து அவ்வளவு உக்கிரமில்லாத சாமானிய பூகம்பங்கள் உண்டாவது வழக்கம்.

பூகம்பமானது, சமுத்திரத்தில் உண்டாகும் அலைகளைப்போல, நிலத்திலுண்டாகும் அலைகளென்று சொல்லலாம். ஒரு துறைமுகத்தில் நங்கூரங்கள் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருக்கும் கப்பல்களின் மேற்புறத்திலுள்ள பாய்மரங்கள், முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டிருக்கப் பார்த்திருக்கிறோமல்லவா? இவைகளின் காரணம் கப்பல்களுக்கு அடியில் சமுத்திரத்தின் அலைகள் புரண்டு செல்வதாலல்லவோ! இதுமாதிரியாகவே பூகம்பங்கள் உண்டாகும்போது, மரங்கள், கோபுரங்கள் முதலிய உயரமான வஸ்துக்கள் முன்னும் பின்னுமாக ஊசலாடப் பார்க்கலாம்.

உன்னதமான கரைகளிலிருந்தும் குன்றுகளிலிருந்தும் பூகம்பங்களின் அதிர்ச்சிகளால், பெரிய களிமண் திட்டுகளும், பெரும்பாறைத் திடல்களும், விடுவிக்கப்பட்டு கீழே தண்ணீர் செல்லும் பள்ளத்தாக்குகளில் விழும். இப்படி விழுமவைகளால் காட்டாறுகள் குறுக்கே அணைகளிட்டதுபோலத் தடுக்கப்பட்டு பெரிய ஏரிகள், குளங்கள் முதலியவைகளை ஒப்ப நீர் நிலைகளுண்டாய், கொஞ்சகாலத்திற்கெல்லாம் இந்த ஸ்திரமில்லாத அணைகள் உடைப்புண்டு நதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து,” இரு கரையும் புரண்டோடி அனேகவித நாசங்கள் உண்டாகும்.

பலசமயங்களில் பூகம்பங்கள் நேரிடும் காலத்தில் பெரிய பிளவுகளுண்டாய், அவைகள் மறுபடி மூடப்படாமல் தண்ணீர்ப் போக்குகளாய் மாறி அகலத்திலும் ஆழத்திலும் அதிகரித்துப் பெரும் பள்ளத்தாக்குகளாகவும், காட்டாறுகளாகவும் ஆகின்றன. பூகம்பங்கள் நேரிடும்போது சிலசமயங்களில் பூமியில் வட்டமான கிடங்குகள் உண்டாவதுண்டு. அனேகமாய் இக்குழிகளிலிருந்து ஏராளமான தண்ணீர் பூமியினுட்புறமிருந்து வெளியே கக்கப்படுகின்றன. பூமியின் அலைகள் ஒழியவே இக்குண்டங்கள் தண்ணீர் நிற்கும் மடுக்களாகக் காணப்படுகின்றன. இவைகள், பூமியின் உட்புறம் இருக்கும் நீர் நிலைகள் நசுக்குண்டு வெளியே மேற்சொல்லிய துவாரங்கள் வழியாய் வருவதாக ஊகிக்கப்படுகின்றன.

பூகம்பங்களினுல் பூமியானது, அது முதலில் இருந்த மட்டத்தைக் காட்டிலும் சற்றே உயரமாகவாவது, அல்லது, தணியாகவாவது ஆவதுண்டு. 1822-ம் வருஷம் நவம்பர் மாதம் 19-ம் தேதியில் தென் அமெரிக்காவில் உண்டாகிய ஒரு கொடிய பூகம்பத்தால், *'சில்லி' மாகாணத்தை ஒட்டிய கடற்கரை வெகு தூரமளவும் 3- அடி முதல் 4- அடி வரையில் சமுத்திரமட்டத்திற்குமேல் உயர்த்திவிடப்பட்டது. அதனுல் சமுத்திர ஜலத்தின் கீழிருந்த சிறு பாறைகளில் கிளிஞ்சில்கள், பூச்சி சிப்பிகள் முதலியவைகள் ஒட்டிக்கொண்டிருந்தபடியே, அநேகவித செத்தமீன்களுடன் வெளியாக்கப்பட்டன. பிற்பாடு, அவ்விடங்களில் மறுபடியும் உண்டான பூகம்பங்களால், இப்பிரதேசமானது இன்னும் அதிகமாய் உயர்த்தப்பட்டிருக்கிறது.

1811-ம் வருஷ முதல் 1813-ம் வருஷம் வரையில் வட அமெரிக்காவிலுள்ள 'மிஸ்ஸிசிபி' என்னும் ஓர் பேருற்றின் பள்ளத்தாக்கைச் சார்ந்த பிரதேசங்களில் நேர்ந்துவந்த பூகம்பங்களின் இறுதியில், பூமியானது அநேக விடங்களில் பெரும் பிளவுகளாய் பிளக்கப்பட்டதுமல்லாமல், சிலபாகங்கள் தணிவடைந்து ஏறக்குறைய 50-மைல்கள் சுற்றளவுள்ள பெரிய ஏரிகளாய்விட்டன. இப்பிராந்தியங்களில் சிலபாகங்களுக்கு † 'தணிந்த தேசம்' என்று இன்னும் பெயர் வழங்கிவருகிறது. இந்த ஏரிகளுக்குள், முன்னர் மட்டமாயிருந்தபோது இப்பூமிகளில் விருத்தியாயிருந்த மரங்களின் சின்னங்களைப் பார்க்கலாம்.

1762-ம் வருஷத்தில் நமது இந்தியாவைச் சேர்ந்த வங்காள மாகாணங்களில் பூகம்பம் உண்டானபோது ‡ 'சிட்டகாங்கை' அடுத்த கடற்கரையில் சற்றேறக்குறைய 60-சதுர மைல் அளவுள்ள பூமி திடீரென சமுத்திரமட்டத்திற்கு தணிவாய்விட்டது.

* Chili. † The Sunk Country. ‡ Chittagong.

## PROVERBS AS AIDS TO CHILD STUDY.

### பாலபோத சிக்ஷாஸாதனம்.

### பழமொழி விளக்கம்.

(141-வது பக்கத்தொடர்ச்சி.)

(15) அண்ணன் தம்பி வேண்டும் இன்னும் தம்பிரானே.

முன்னொரு பழமொழியில் "பிள்ளை பெற்று கெட்டவனும் இல்லை" என்று சொல்லியிருக்கிறோம். அதே அருத்தத்தை ஒரு சகோதரன் எடுத்துச் சொல்லும் பழமொழி இது. அண்ணனும் தம்பியும் அதிகமாய்வேண்டும் ஸ்வாமி என்று ஈஸ்வரனை ஒரு சகோதரன் பிரார்த்திப்பதாக இந்தப் பழமொழி அருத்தத்தைக் கொடுக்கிறது. தம்பிதான் தனக்குப் பிறகு பிறக்கக்கூடும். அண்ணன்வேண்டும் என்று எப்படி பிரார்த்திக்கலாம். வேண்டியமட்டும் அண்ணன்கள் தனக்கு முந்தியே பிறந்திருக்கவேண்டும். தனக்குப் பிறகு, தனக்கு அண்ணன் பிறக்கவேண்டும் என்பதாக ஒருவன் எப்படி பிரார்த்திக்கக்கூடும் என்பதாக நமது நண்பர்கள் சந்தேகிக்கலாம். ஆனுல் அண்ணன்வேண்டும் என்று இந்தப் பழமொழியில் எடுத்தது அண்ணன் இன்னும் சிறப்புற்று ஸௌக்கியமாக வாழ்ந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் தம்பிக்கும் சௌக்கியம் என்றபடி.

(16) ஒரு புத்திரன் ஆனுலும் குரு புத்திரன் வேண்டும்.

(17) ஒன்றைப் பெற்றுலும் கன்றைப்பெற.

(18) ஒன்றைப் பெற்றுலும் நன்றைப்பெற வேண்டும்.

இம்மூன்று பழமொழிகளின் அருத்தமும் ஒன்றே. ஒரு குழந்தையைப் பெற்றபோதிலும் நல்ல குழந்தையைப் பெறவேண்டும் என்பதாயிற்று.

## "LET US SAY THAT NEVER AGAIN SHALL THIS HORROR COME UPON US."

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."


OFFICE OF THE REGISTRAR 23 DEC 1914

அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*

**"New Series"** ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**

புத்தகம். 22.] ஆனந்தஹு ஐப்பசிமீ, 1914ஹு அக்டோபர்மீ [சஞ்சிகை 7.

## "LET US SAY THAT NEVER AGAIN SHALL THIS HORROR COME UPON US."

"THEN OUR CHILDREN MAY LOOK BACK WITH GRATITUDE TO THIS TREMENDOUS TIME AND SEE IN OUR AGONY THE DAWN OF THEIR BETTER DAY."

### e Virtue of War."

"THERE IS VIRTUE IN WAR AS IN MEDICINE."

"It was a saying of John Bright that the only virtue of war was that it taught people geography. Between that view and the doctrine of Bernhardi and the Prussian military school that war is a sort of spiritual purgative from which a nation emerges strong and purified there is wide room for choice. But that war does teach us geography will not be questioned. Even the most inattentive schoolboy is interested in the subject to-day. The Continent has ceased to be a vague abstraction to him and has become as actual as the neighbouring football field. Maps are no longer dead things, but exciting realities. I have discovered like everybody else an inexhaustible appetite for them. They have ceased to be maps and have become forests and rivers and plains, cities and villages, echoing to the tramp of great armies and to the roar of guns. I no longer live in London. I live in the Vosges and the Ardennes. I know the windings of the Meuse and the Moselle better than I know the windings of the Thames and feel that I could find my way blindfold along the whole vast battle line."—*Mr. A. G. Gardiner.*

### "Roll up that Map."

It is said that when the news of Austrelitz came to Pitt he pointed to the map of Europe and said "Roll up that map. It will not be wanted these ten years."

A hundred and ten years later we are rolling up the map of Europe again. We are blotting out its lines in seas of blood. Let us take care that when we come to draw the new map for the generations that follow we do not draw it as Frederick William drew the plan of Berlin—with his sword. If we do, then we shall have only emerged from this world-war to begin building for another world-war. Let the new Europe that is to rise out of these red seas be the Europe of the people and not merely a new chessboard for the old players. Let us say that never again shall this horror come upon us that no nation shall be allowed to arm itself to the menace of the peace of the world, that Europe shall be policed by one force and that force shall be in the hands of one Executive representing all the Powers and that any attack on a nation by another nation shall be a crime against all, punishable by all.

"Then our children may look back with gratitude to this tremendous time and see in our agony the dawn of their better day." *Ibid.*

## OUR INDIAN SOLDIERS.

Sir J. P. Hewett writes to the *London Times* :—

Lord Crewe's announcement that Indian soldiers are to fight side by side with our British forces in repelling the invasion of France and the attack on Belgium has sent a thrill of joy through many who had begun to fear that these gallant troops would not be given this opportunity. Great Britain need have no fear that they will not justify this trust to the full. Their employment in this supreme struggle side by side with the best troops that the world knows will do more to make our rule in India popular than any other step that the Government could take. During this war India will remain as peaceful as England and at least 100,000 Indian Regulars could be brought to Europe without imperilling the quiet either of the border or of the interior of the country. May we hope that no time will be lost in dispatching the full number that can reasonably be spared; that a large body of native cavalry will form part of the contingent, and that Imperial Service troops, whose services have been offered by their chiefs, as well as a part of the Gurkha Army said to have been offered by the Prime Minister and Marshal of Nepal, may be allowed to accompany the Regular troops?

The splendid gift of over £300,000 presented by His Highness the Maharaja of Mysore, a ruling chief held in the highest regard by every European and Indian who knows him, has been accepted by the Government for the Indian force. I feel sure that all England trusts that this money will be spent, not in relieving the Government of any charges which it ought itself to bear, but in giving to the troops comforts and amenities that the State would not be justified in providing, and particularly that it may be used in ensuring that the wives and families of native officers and men may be spared any avoidable hardship and suffering owing to the absence of their dear ones in Europe.

---

### "THE VIVEKACHINTAMANI."

The September number of this Tamil monthly contains three interesting articles on the European War. The articles on "Earthquakes" will be read with great interest by most. One noteworthy feature about the journal is that the articles are all written in such clear and simple style that many can understand them without much difficulty. We are glad to note that the usefulness of the journal has been recognized by the Government who have ordered its supply to all the Government Schools and Educational Officers. We wish the journal every success.—*New India*, 25-9-14.

## The King's Message to Indian Troops.

Allahabad, Oct. 5.—The *Pioneer's* London Correspondent cabled on the 2nd October :—

The King has sent the following messages to the Indian troops :—"I look to all my Indian soldiers to uphold the *Izzat* of the British Raj against an aggressive and resultless enemy. I know with what reedin ss my brave loyal Indian soldiers prepared to fulfil this sacred trust shoulder to shoulder with their comrades from all parts of the Empire. Rest assured that yon will always be in my thoughts and prayers. I bid you go forward and add fresh lustre to the glorious achievements and noble traditions of courage and chivalry of my Indian Army whose honour and fame is in your hands."

## To the British Indian Troops.

"I KNOW YOUR DUTY WILL BE NOBLY DONE."

The King has also sent a message to the British troops from India, in which he says:—"I have implicit confidence in my soldiers. Duty is your watchword, and I know your duty will be nobly done."

---

### THE "VIVEKACHINTAMANI."

This popular Tamil Magazine for September devotes itself to pointing the moral of the present conflagration of the European War. There is a brief and glowing account of the Belgians and their brave King under the head "Brave King of a brave people." Then comes the Poet-Laureate's war song which is rendered into excellent Tamil and printed in parallel columns. H. E. Lord Hardinge's appeal *re* the Imperial War Relief Fund is fully given in Tamil. The essay on "Friendship" is excellent and is an illustration of the way in which great subjects can be treated in a simple and lucid way. The biographical sketch of Miss Florence Nightingale is most appropriately dealt with in its application to the requirements of the present situation. It has two illustrations—one of Miss Nightingale herself, and another of the Hospital at Scutari. The Tamil Ode on "National Self Respect or In Praise of British Character" is good and refers to the salient features of the British national character.—*The Hindu*, 29th September 1914.

புஸ்தகம்-22.] [சஞ்சிகை-7.

"The Children's Favourite, The Teachers' Help, And the Parent's Guide."

ஆனந்த ஞு ஐப்பசி மீ } விவேகசிந்தாமணி { October–November. 1914.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளில் ஞுத்தையுதீறேர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சர்ய மோதா னவர்க்கு."

☞ In reply to several inquiries addressed to us we beg to state that the Government have approved of the recommendations of the Director of Public Instruction (R.O.C. No. 8043/13) and declared the *Vivekachintamani* as "suitable for use in Elementary Schools" and ordered its supply to all the Government schools and Educational officers. The Editor requests that Officers and Heads of Institutions receiving the *Vivekachintamani* will be pleased to recommend its supply to all the Elementary and Lower Secondary schools under their supervision. Indents for copies of the journal will be supplied by the Managing Agents of the *Vivekachintamani* from the beginning of the current Volume, which coincides with the official year.

## THE PROGRESS OF WAR.

### யுத்தப் போக்கு.

யுத்தப் போக்கிலும் சுத்தப் போக்குண்டு. அப்படியென்றால் யுத்தம் நடத்துவதிலும் சுத்த மனத்தோடு யுத்தம் நடத்துகிற வழியுண்டு. அதாவது, சண்டை செய்யும் இருதரத்தாரும் சரிசமமாக நின்று யுத்தம் செய்து யார் ஜயிக்கிறார்களென்று பார்ப்பதாம். செத்த பாம்பை அடிப்பதில் வீரத்துவம் ஒன்றுமில்லை. நிராயுத பாணியை ஆயுதவீரன் கொல்லுவது கொலைபாதகமேயன்றி அது யுத்தநீதியாகாது. மஹாபாரதம் பீஷ்ம பருவத்தில் யுத்த நீதி யின்னதென்று சொல்லியிருக்கிறது. ரத, கஜ, துரக, பதாதி யென்னும் சைனியப் படைகளில், அவரவர் தத்தமக்குச் சரிசமமான வாஹனம் ஆயுதம் தரித்தவர்களோடு எதிர்த்துச் சண்டை செய்யல்வேண்டும். குதிரைவீரன் காலாட்படை வீரனைத்தாக்குவது யுத்ததர்ம மல்லவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இக்கலிகாலத்தில் நடக்கும் சண்டையில் "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்பது எப்போதும்போல உண்மையாக விருந்தாலும், "ஸர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார் : அவருடைய தர்மம் எப்படியும் தலையெடுக்கும்" என்கிற நம்பிக்கை குறைவாயிருக்கிறது.

கொள்ளை யிடுவதும், கொலை புரிவதும், தீயிட்டுச் சொத்தை யழித்தலும் யுத்தநீதியில் சேர்ந்தவையல்ல, சண்டைக்காலத்தில் இந்த அக்கிரமம் செய்கிறவர்களை உடனே கண்டிக்க அரசுக் கதிகாரமின்றிப் போனாலும், தெய்வத்தின் சக்தி குறைந்து போகவில்லை. "அரசன் அன்று கொல்லும்" என்பது தவறினாலும் "தெய்வம் நின்று கொல்லும்" என்பது ஒரு போதும் தவறாது. அநீத அக்கிரமங்களெல்லாம் அற்ப வாழ்வுடையன. இவையெல்லாம் கொஞ்ச காலத்துக்குத்தான் செல்லும். பிறகு கர்ம தர்மத்தின்படி "விதைத்தான் வினையறுத்தான்" என்றபடி தர்மவிரோதமான காரியம் செய்கிறவர்கள் அதன்பலனை அனுபவிக்காமற் போகார்கள். தர்மத்தைக் காக்க ஒருவர் இருக்கிறார். அவர்தான் கடவுள், "எல்லாம் கடந்து உள்ளவர்" ஆதலால் அவருக்கு அந்தப் பெயர் சித்திக்கலாயிற்று. "அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைதாழ்ந்தபொழுது நான் அவதாரமாகி தர்மம் தலை யெடுக்கச் செய்கிறேன்" என்று பகவான் சொன்னது அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் மெய்யே.

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தப் போக்கை நடுவுநிலைதவறாது நின்று பார்ப்பவர்களுக்கு அதன் உண்மை விளங்கும் ஜெர்மானியர் ஏதோ தாம் வலுத்தகையா

விருக்கிறதுபற்றி எளிய ராஜ்யங்களைத் தாமிட்டது சட்டமாகக் கொண்டு நடக்கச்செய்யலாமென்று நினைத்து வெகு பாராதூர யோசனையோடு தங்கள் கைவலியைக் காட்டி மற்ற ராஜ்யங்களை ஒடுங்கச் செய்யலாம்: தற்காலம் ஒடுங்கச் செய்ய முடியாத ராஜ்யங்களை இந்தப் போரில் தலையிட்டுக் கொள்ளாமல் ஒதுங்கியிருக்கவாவது செய்யலாமென்று நினைத்தார்கள். "நாமொன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது" என்பதின் உண்மையை அவர்கள் அப்பொழுது உணராவிட்டாலும், ஆரம்பசூரத்துவமாய்க் கிளம்பி நாடு நகரங்களையெல்லாம் அழித்துக்கொண்டு பாரிஸ் நகரக் கோட்டைகள் தென்படுகிறவரையில் சென்று பின்னர் எதிர்த்து மறுத்துத் திருப்பி யடிக்கப்பட்டு வருகிற தற்பொழுது உணர்த்த உணர்வாரா யிருக்கிறார்கள்.

வெள்ளம் மடை திறந்தவாறு படையெடுத்துச் சென்றவர்கள் அணைகோலி யடைத்துக் கரை துறைக்குட்படக் கட்டிய நீர்போல் இப்பொழுது தங்கள் தேசத்தின் எல்லையை நோக்கிப் பின்வாங்கி வருகிறார்கள். பாரிஸ் நகரில் 'ஸீன்' நதியோடு சங்கமமாகும் அதன் உபநதிகள் பலவுள. அவைகளிற் சில : வடக்கே (1) ஆய்ஸ் (Oise); இந்நதி தீரத்திலுள்ள ஜில்லாவுக்கும் அதே பேர்தான். வடகிழக்கே (2) எய்ஸ்னி (Aisne); இந்நதிக்கரையிலுள்ள ஜில்லாவுக்கும் அதே பேர்தான். இங்கே பிரமாதமான சண்டை நடந்துவருகிறது. கிழக்கே (3) மார்ன் (Marne); இந்நதிக்கரையிலுள்ள ஜில்லா அல்லது மாகாணத்துக்கு [ப்ரெஞ்சில் இதற்கு டிபார்ட்மெண்ட் (பிரிவு) என்று பேர்] அதே பேர்தான். மார்ன் ஜில்லாவுக்கும் பாரிஸ் நகருக்கும் இடையில் "ஸீன்-எட்-மார்ன்" (Seine et Marne) என்கிற மாகாணப் பிரிவிருக்கிறது. அப்படியென்றால் "ஸீன்-மார்ன் நதிதீரம்" என்று அர்த்தம் கொள்ளும். மார்ன் மாகாணத்துக்குத் தெற்கே (3) ஆப் (Aube) நதியும் அதே பேருடைய மாகாணமும் இருக்கிறது. ஆப்-க்குத் தென்மேற்கே (5) யோன் (Yonne) என்கிற உபநதியும் அதே பேருடைய மாகாணமுமிருக்கிறது. யோன்-க்கு மேற்கே லாய்ர் என்கிற மற்றொரு நதியும் அந்நதிக்கரையிலுள்ள 'லாய்ரெட்' என்கிற மாகாணமுமிருக்கிறது. இதற்கு நேர் வடக்கே ஸீன்-எட்-ஆய்ஸ் (Seine et Oise) என்கிற மாகாணமிருக்கிறது. இதிலே தான் பாரிஸ் நகர் இருக்கிறது. இப்பொழுது நாம் பாரிஸ் நகரிலிருந்து வடபுறமாகப் புறப்பட்டு அதை ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டிருக்கும் நதிகள், நதிதீரங்களைப் பார்த்துக்கொண்டு தெற்கு வழியாக மறுபடியும் பாரிஸ் நகருக்கே வந்துவிட்டோம்.

ஸீன் நதிக்கு வடகிழக்கே ஸோம் (Somme) நதியும் அந்நதி தீரமாகிய அதே பேருள்ள மாகாணமும் இருக்கிறதென்றும் முன் பத்திரிகைகளில் எழுதிய சமாசாரங்களைக் கருத்துடன் படமும் கையுமாய் வாசித்தவர்களுக்குத் தெரியும். அந்த ஸோம் நதிக்கரையில்உள்ள அமீன்ஸ் பட்டணம் ஜெர்மானியரால் பிடிக்கப்பட்டு, இப்பொழுது மறுபடியும் ப்ரெஞ்சு-இங்கிலீஷ் சைனியங்களால் பிடித்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்கள் ஸோம் நதிதீரத்தைப் பிடித்துக்கொண்டு அதற்குத் தெற்கேயுள்ள ஆய்ஸ் நதிதீரத்துக்குச் சென்று அங்கேயுள்ள (Noyon) நோயன், காம்பீன் (Compiegne), ஸென்லிஸ் (Senlis) இப்பட்டணங்களைப் பிடித்துக்கொண்டு பாரிஸ் நகருக்கு 20 மைல் தூரம் (அரைநாட் பயணம்) வரையில் சென்றனர். பிறகு அங்கிருந்து எதிர்த்துத் தாக்கி ஒன்றுவிட் டொன்றாகத் திருப்பியோடும்படி துரத்தப்பட்டிருக்கிறார்கள்.

எய்ஸனி மாகாணத்தில் அந்நதிக்கரையிலுள்ள ஸாய்ஸான்ஸ் (Soisons) பட்டணத்திலும் அந்நதித் தீரமாகிய மாகாணத்திலுள்ள லேயான், ஸெய்ன்ட்குவென்டின், கைஸ், ஹிர்ஸன் பட்டணங்களிலும் ஸெப்டம்பர்மீ பின் பாதியில் சண்டைகள் நடந்துவந்தன.

சண்டையில் முக்கியமான மெஸியர்ஸ் (Meziers) என்கிற பட்டணம் எய்ஸனிக்கு



அடுத்த கிழக்கேயுள்ள ஆர்டென்ஸ் (Ardennes) மாகாணத்திலிருக்கிறது. ஆர்டென்ஸ் என்பது ஒரு மலைத் தொடரின் பேர். இது ப்ரான்ஸ், பெல்ஜியம் இரண்டுக்கும் இடையே இருக்கிறது. இந்த மலைப் பாதையாக ப்ரான்ஸுக்குள் நுழைவதற்கு பெல்ஜியத்தைத் தாண்டித்தான் வரவேண்டும். பெல்ஜியத்தைத் தாண்டிச் செல்லவேண்டி சண்டையிற் சேராத அத்தேசத்தின் எல்லையுட் பிரவேசித்ததினால் தான் ஆங்கிலேயர் இந்தயுத்தத்தில் தலையிட்டுக் கொள்ள வேண்டிய நிமித்தம் ஏற்பட்டது. இந்த மெஸியர்ஸ் பட்டணம் மியூஸ் நதிக் கரையிலிருக்கிறது.

1870-ம் வருஷத்தில் நடந்த ஸெடான் (Battle of Sedan) சண்டைக்களம் மியூஸ் நதிக்கரையில் தானே 'மெஸியர்ஸ்' பட்டணத்துக்குச் சிறிது தென்கிழக்கே யிருக்கிறது. அதற்குத்தெற்கே மியூஸ் நதி தீரமாகிய அதே பேருள்ள மாகாணம் இருக்கிறது. இதிலே வெர்டன் (Verdun) என்கிற எல்லைப்புரத்து அரண்செய்த பட்டணம் இருக்கிறது. இதுவும் மியூஸ் நதிக்கரையிலேதா னிருக்கிறது. இதற்குத் தென்கிழக்கே மியூர்தி-எட்-மூஸெல் (Meurthe et Moselle) என்கிற நதிதீரமாகிய மாகாணமிருக்கிறது. அதிலேதான் இச்சண்டையில் பேர்போன 'நான்ஸி' (Nancy) என்னும் அரண் செய்யப் பெற்ற எல்லைக் கோட்டை யிருக்கிறது. இந்த மாகாணத்துக்கு நேர் தெற்கே 'வாஸ்ஜெஸ்' (Vosges) மலைப்ரதேசமாகாணமும் அதில் எபிநேய் (Epinai), ஸெய்ன்ட் டை' (St. Die) என்கிற அரண் செய்யப்பட்ட ஸ்தலங்களும் இருக்கின்றன. வாஸ்ஜெஸ் மலைத் தொடர் ஆதியில் ப்ரான்ஸ் தேசத்துக்குட்பட்டதா யிருந்தது. 1870-71-ம் வருஷத்துக் சண்டையில் ப்ரான்ஸ் தோல்வி யடைந்து அவர்களுக்குச் சொந்தமான ஆல்ஸேஸ், லாரெய்ன் (Alsace & Lorraine) மாகாணங்களின் கீழ் பாதியை ஜெர்மனிக்குக் கொடுத்துவிடும்படி நேரிட்ட பின் இந்த வாஸ்ஜஸ் மலைத் தொடர் ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் இடையிலுள்ள எல்லை ஸ்தானமாகக் கொள்ளப்பட்டது. மஹாலயபக்ஷக் கடைசியான ஸெப்டெம்பர் மூன்றாவது வாரத்தில் இங்கேதான் சண்டை நடந்துகொண்டிருந்ததாகத் தெரியவந்தது. மார்ன் நதிக்கரையில் அஃதோடு ஆர்நெய்ன் (R.Ornaine) என்னும் உபநதி சங்கம ஸ்தானத்திலிருக்கும் விட்ரி(Vitry) பட்டணத்தை விட்டு ஜெர்மன் சைனியங்கள் திரும்பிப் போகும்படி அடித்துத் துரத்தப்பட்டதாக தந்தி சமாசாரம். ஸெப்டம்பர்மீ 16௳யிலிருந்து ஜெர்மனியின் சைனியம், நோயன்ஸ் (Noyons) தொடங்கி லேயான் (Laon) கோட்டைக்கு வடக்கு வழியாக (Argone) ஆர்கானைத்தாண்டி வெர்டன் (Verdun) கோட்டைக்கு வடக்குவரையில் ஓடி நின்று எதிர்த்துச் சண்டை போட்டு வருகிறதாகத் தெரிகிறது. ஸெப்டம்பர்மீ முதல்வாரக் கடைசியிலும் இரண்டாவது வாரத்திலும் நடந்த மார்ன் சண்டையில் (Battle of the Marne) ஜெர்மன் சைனியம் தோற்றுப்போனதாக சமாசாரம். அச்சண்டைக்குப் பின் மார்ன் நதியை விட்டுப் பின்வாங்கி யிருக்கிறார்கள்.

ஸெப்டெம்பர் 10-12-ந் தேதிகளில் வெங்காளக் குடாக் கடலில் எம்டன் (Emden) என்னும் ஜர்மனி சண்டைக் கப்பல் புகுந்து நாலைந்து வியாபாரக் கப்பல்களைப் பிடித்து உடைத்து முழுக அடித்துவிட்டு அதிலிருந்த பேர்களை 'காபிங்கா,' என்னும் ஒரு கப்பலில் ஏற்றி கல்கத்தா துறைமுகத்துக்கு 78-மைல் தூரம் வரையில் கொண்டுவந்து விட்டுவிட்டுத் திரும்பிப் போய்விட்டது. இதே கப்பல் சென்னைப்பக்கம் வந்து ஸெப்டம்பர்மீ 22௳ இராத்திரி நகரில் குண்டுபாய வெடிதீர்த்துச் சிலருக்கு உயிர்ச்சேதமும் பலருக்குக் காயமும் எல்லாருக்கும் மனதில் கலக்கமும் உண்டாகச் செய்துவிட்டுப் போய்விட்டது. 26, 27-ந் தேதியில் மலையாளத்துக் கப்பாலுள்ள லக்ஷத்தீவுகளுக்கு அருகில் 4-கப்பல்களைப் பிடித்து உடைத்துவிட்டு நிலக்கரி யேற்றிவந்த ஒருஸர்க்கார்கப்பலையும் பிடித்துக்கொண்டு போய்விட்டது. யாருக்கும் உயிர்ச்சேதமில்லை. இந்தக் கப்பலைப் பிடிக்க மூன்று கப்பல்கள் துரத்திக் கொண்டு போகிறதாகச் சமாசாரம்.

## LULLABIES AS FIRST AID TO CHILD - EDUCATION.

### Gleanings from the Ancient Indian Methods of Kindergarten.

### பாலபோத சிக்ஷா சாதனம்.

### சிறு குழந்தைகளுக்குச் சொல்லும் தாலாட்டுப் பாட்டுகள்.

இந்நாட்டில் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு தூங்கச் செய்யும்பொழுது அவர்களை சீக்கிரமாய்த் தூங்கப் பண்ணும்பொருட்டும், அல்லது அழுதுகொண்டிருந்தால் அந்த அழுகையை அடக்கும்பொருட்டும் தாய்மார்களும் செவிலித்தாய்களும் அத்தை பாட்டிமுதலிய மற்றோர்களும் தாலாட்டல் என்ற பாட்டுக்களை எடுத்து "நீலாம்பரி" என்கிற இராகத்தில்பாடுவது வழக்கம். இந்தப்பாட்டுகள் வெகு அருத்தத்தோடு கூடினவாயும் கடவுள்பெருமை முதலியவைகளை எடுத்துக் காட்டுகிறவைகளாயும் இருக்கும். அவற்றுள் சிலவற்றை நாம் இந்த சஞ்சிகையில் எடுத்துக் கூறுவோம்.

1. ஆறிரண்டும் காவேரி
அதன்நடுவே ஸ்ரீரங்கம்
சுவாமி இரண்டு கையினாலே
தந்த என்தன் திரவியமோ.

இதன் அருத்தம்:—இந்தக்குழந்தை காவேரிக்கும் கொள்ளிடத்திற்கும் மத்தியிலிருக்கிற விஷ்ணு க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீரங்கநாதருடைய திரு அருளால் பெற்றபாக்கியம் என்றபடி.

2. பச்சை இலுப்பைவெட்டி
பால்வடியத் தொட்டிலிட்டு
தொட்டிலிட்ட அம்மானே
நீபட்டினியாய்ப் போகாதே.

இதன் அருத்தம்:--பசுமையாகிய இலுப்பை மரத்தைவெட்டி அதிலிருந்து பால் வடிந்துக்கொண்டிருக்கும்பொழுதே அவசரம் அவசரமாய் குழந்தைக்குத் தொட்டிலைப்பண்ணி அதில் குழந்தையைப் படுக்கச்செய்த மாமாவே, நீர் இதற்குத் தகுந்தபடி விருந்து போஜனம் உண்டு போவீராக! பட்டினியாய்ப் போகலாகாது என்றபடி. நமது நாட்டில் அம்மான் தொட்டிலிடும் வழக்கத்தையும் அதற்குப்பதிலாக அவருக்கு ஓர்விருந்து அளிக்கும் வழக்கத்தையும் இந்தப்பாட்டு எடுத்துரைக்கிறது.

3. ஆராரோ, ஆராரோ
என்னரசே, ஆராரோ
சீராரும் எங்கள் குல
தீபமே நீ, ஆராரோ.

இதன்கருத்து:--என்னை ரக்ஷிக்கவந்த குழந்தையே, எங்கள் குலத்தை தீபம்போல் விளங்க வைக்கும் கண்மணியே, பூர்வஜன்மங்களில் நீ பார், நான் யாரோ [இந்த ஜன்மத்தில் அன்னையும் பிள்ளையுமாக வந்து தோன்றியிருக்கிறோம்,] நீ கண்வளராய் என்றபடி.

4. கங்கைபுனை ஸ்ரீ நாதன்
கருணையினால் என்வயிற்றில்
மங்களமாய் வந்துதித்த
மணியே நீ கண்வளராய்.

இதன்கருத்து:—'கங்காதேவியைத் தலையில் தரித்துக்கொண்டிருக்கிற ஸ்ரீ சிவபெருமானுடைய திருவுளத்தால் எனக்கு க்ஷேமத்தையுண்டாக்கும்பொருட்டு என் வயிற்றில் அவதரித்த குழந்தையே, நீ தூங்குவாயாக என்றபடி.

5. பாலே பழரசமே
பகரவொண்ணாத் தெள்ளமுதே
மேலேவிண் ணோர்மகிழும்
வித்தேநீ கண்வளராய்.

இதன்கருத்து:--'தனது குழந்தையை மகிழ்ந்து "என்க்ஷீரமே, நல்ல ஜாதிப்பழங்களின் இரசமே, வருணிக்கமுடியாத தெளிந்த அமிர்தமே, எல்லாவித ஆநந்தத்துக்கும் மேலான ஆநந்தமே, தேவர்கள் ஆநந்தப்படும் என் குழந்தையே, நீநித்திரைசெய்வாயாகஎன்றபடி. "அன்பே யருளே, அழியாமுதலே, இன்பேரலமே இசையுட்சுவையே" என்றார் பிறரும்.



6. வேதமனு நூற்கலைகள்
விளங்கிவரும் இந்நாட்டில்
கீதமொழி கேட்கவந்த
பைங்கிளியே துயில் கொள்வாய்.

இதன்கருத்து:—'வேதங்கள், மானவதர்ம சாஸ்திரங்கள் முதலிய நூல்கள் விளங்கிவரும் இந்த புண்யபூமியில் அவதரித்து பகவத்கீதை கேட்டு கிருதகிருத்தியனாக வந்த' பைங்கிளியொத்த பாலனே, நீ உறங்குவாயாக என்றபடி.

7. வண்ணமணித் தொட்டிலிலே
வாய்த்த செம்பொற் கட்டிலிலே
கண்ணே என்கண்மணியே
கற்பகமே நித்திரைசெய்.

இதன்கருத்து:—'என் குழந்தாய், நல்ல வர்ணம் இழைத்த மணிகள்கட்டிய தொட்டிலில் அமைக்கப்பட்டிருக்கும் சிரேஷ்டமான பொன்னாற் செய்தகட்டிலில் என் மனோரதங்களையெல்லாம் ஈன்ற கற்பகத்தருவாகிய நீ கண்துஞ்சுவாயாக' என்றபடி.

8. தண்டைமணி சத்தமாட
தாய்மார்கள் முத்தமிட
தொண்டையுடன் வாய்மூடி
துரைமகனே கண்ணமர்வாய்.

இதன்கருத்து:—'இதுவரையில் உன்காலில் அணிந்த தண்டையின் மணிகள் சத்தமிட்டது கேட்டு நாங்கள் எல்லோரும் உன்னை முத்தமிட்டுக் கொஞ்சினதுபோதும். இனி நீ உன் வாயையும் தொண்டையையும் கொஞ்சம் மூடித்தூங்குவாயாக.

9. அத்தைமனம் நோகாமல்
உன் அண்ணன்மனம் வேகாமல்
சித்தமதில் தயைகொண்டு
சிகாமணியே கண்ணுறங்காய்.

இதன்கருத்து:-'குழந்தை அழும்பொழுது அத்தையின் மனம் கொஞ்சம் நொந்தும் அண்ணன்மனம் கொஞ்சம் வருத்தப்பட்டும் இருக்குமாகையால் அப்படி இல்லாமலிருக்கும்படி நீ தயைகூர்ந்து கண் வளருவாய்' என்றபடி.

10. தாய்மார்கள் வைதாரோ
தாதியர்என் செய்தாரோ
வாய்திறந்து சொல்லியெங்கள்
மன்னவனே கண் அடைவாய்.

இதன்கருத்து:—'என்னை ஆளப்பிறந்த குழந்தாய்! ஏன் அழுகிறாய்? உன்னை யார் என்ன செய்தார்கள்? அவர்கள் பேரைச் சொல்லி உன் துக்கத்தை நீக்கித் தூங்குவாயாக' என்றபடி.

11. அத்தை அடித்தாளோ
அக்காள்தான் அடித்தாளோ
முத்தான வாய்திறந்து
மொழிந்துறங்காய் கண்மணியே.

இதன்கருத்தும்:—முன்பாட்டின் கருத்தேதான்.

12. தங்கத்தால் யானைகளும்
தந்தத்தால் சேனைகளும்
அந்தமாக நான்கொடுப்பேன்
புத்திரனே கண்வளராய்.

இதன்கருத்து:—புத் என்னும் நரகத்திலவிழாமல் என்னை ரக்ஷிக்கவந்தவதரித்த குழந்தையே! நான் உனக்கு விளையாடுவதற்காக தங்கத்தால் செய்யப்பட்ட யானைகளும் தந்தத்தால் செய்யப்பட்ட குதிரை கால்வீரர்முதலான சேனைகளும் நீ தூங்கியெழுந்திருக்கும் பொழுது அழகாகவைத்து விளையாடும்பொருட்டு அன்போடு தருவேன். நீ இப்பொழுது நித்திரை செய்' என்றபடி.

13. பொற்சரிகை வஸ்திரமும்
போற்றுபல சித்திரமும்
நற்சரிகை அங்கியுமே
நான்தருவேன் நித்திரைசெய்.

இதன்கருத்து:—மிகவும் சுலபம். 'நான் உனக்கு பொன் சரிகைபோட்ட வஸ்திரமும் பலர்புகழும் அழகுநிறைந்த சித்திரங்கள் பலவும் நல்ல சரிகையால் நெய்யப்பட்ட சட்டையும் கொடுப்பேன். நீ இப்பொழுது கண்வளராய்' என்றபடி.

14. பஞ்சவர்ணக் கிளிகொஞ்ச
பாடும்குயில் ஓசைமிஞ்ச
நாஞ்சலில்லாப் பஞ்சணைமேல்
என்மகனே கண்வளராய்.

இதன் கருத்து:—'நாலுபக்கமும் பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சிப்பேச, இன்னிசையோடு பாடும் குயில்களின் ஓசை மிகுந்தொலிக்க மாசற்ற பஞ்சு மெத்தையின்மேல் என்மகனே நீ நித்திரை செய்வாயாக!' பஞ்சவர்ணக்கிளி கொஞ்சிப்பேசுதல் அருளொளி நிறைவுக்கும் 'பாடும் குயில் ஓசை' நாதகீத நல்லிசைக்கும் உருவக உவமானம். 'அருள்வெளியில் 'நாத வடிவான' உன் தாயின் இன்னிசைக் குரல் கேட்க நீ இவ்வுலக வாசனையற்று அறிதுயில் அமர்ந்து நித்திரை செய்வாயாக' என்றபடி.

15. தந்தையொரு பக்கம்நிற்க
தாயுமொரு பக்கம்நிற்கச்
சிந்தைமகிழ் விற்பார்க்கும்
தெருட்கடலே நித்திரைசெய்.

இதன் அருத்தம்:—தொட்டிலின் ஒரு பக்கத்தில் தகப்பனும் மற்றொரு பக்கத்தில் தாயும் நின்றுகொண்டு ஆனந்தக்களிப்பு அடையச்செய்த தெள்ளமுதப்பெருக்காம் அருட்செல்வமே நீ தூங்குவாயாக. [தந்தை யொரு பக்கம் தாய் ஒருபக்கம்நிற்கப் பாட்டியார் குழந்தையைத் தொட்டெடுத்து நாமகரணம் சூட்டி (பேரிட்டு) தரையில்படாமல் (உலக வாஸனை யென்கிற ஸம்ஸாரதுக்கம் தாக்காமல்) அந்தரத்தில் நடராஜாவைப்போல் ஆடிவர இடும் ஊஞ்சல் சாதனம் "தொட்டில்."] அருட்செல்வமான குழந்தையைப்பெற்று அது ஸம்ஸார துக்கத்திலுழன்று நொந்து மனம் புண்ணாகாதபடி தாமரையிலைத் தண்ணீர்போல் இவ்வுலகவாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாமல் சுகவாழ்வு எய்தி வருகவென்று பாட்டியார் ஆசீர்வதித்துத் தொட்டிலில் இட, தாயார் தகப்பனார் அந்த வைபவத்தை ஆனந்தக்களிப்போடு பார்த்துக்கொண்டு தொட்டியின் இருபக்கத்திலும் நிற்க தெளிந்தஅமுதம் [illegible] எல்லாவர்க்கும் மனக் களிப்பையூட்ட வந்தசெல்வமே நீ அறிதுயில்கொண்டு ஆனந்திப்பாய்—என்றபடி.

16. சரியாய் தவம்தானம்
தருமங்கள் செய்தஎங்கள்
கலிதீர்க்க வந்துதித்த
காதலனே கண்வளராய்.

இதன்பொருள்:—நாங்கள் பிள்ளையில்லாக் குறைதீர அநேக தானதர்மங்கள் செய்து கடைசியாய் அவைகளின் பலனாகக்கண்டெடுத்த எங்கள் அன்புக் குறைவிடமான புதல்வனே நீ தூங்குவாயாக. 'பிள்ளை மிடி தீர்க்க வந்த' புத்திரனாகையால் அப்படிப்பட்ட ஸத்புத்திரன் இந்திரிய நிக்ரஹமாகிய தவமும், 'ஈவதறம்' என்றபடி ஸத்பாத்திர மறிந்துகொடுக்கும் சரியானதானமும் ஆகிய பஹிர்-அஹமுக சாதனங்களின்றிப் பிறக்கமாட்டான். அஸத்துக்களான பிள்ளைகள் ஆயிரம்பேரைப் பெறுவதிலும் ஸத்புத்திரன் ஒருவனையாகிலும் அவனைப் பெறுதலே மேல். ஏனெனில் அவனால் உலகத்தில் தர்மம் தழைப்பதன்றி பெற்றோர்களுக்கும் இகபரமிரண்டிலும் சுகமுண்டு: பிள்ளையில்லாக்குறை தீர்க்கவந்த புத்திரன் அவர்கள் அன்புக் குறைவிடமாயிருத்தலால் 'காதலனே' யென்றுவிளித்து அறிதுயிலமர்ந்து ஆனந்திப்பாய்! என்று சொன்னபடி. "காதலிருவர் கருத்தொருமித்தாதரவுபட்டதேயின்பம்" என்றார் ஔவையார். அப்படிப்பட்ட இன்பம் நுகர்ந்தகாலையில் அவர்களுடைய அன்புதானே உருவெடுத்ததுபோலும் மைந்தன் உதித்தானாதலால் அவன் "காதலன்" ஆனான்.

17. இளையோ ருடன்தெருவில்
இன்பமாய்த் தேருருட்டி
விளையாடி வந்துநின்ற
வேலவனே நீ துயிலாய்.

இதன்பொருள்:—தன்னொத்த சிறுவர்களுடன் தேர், சப்பரம் முதலானவைகட்டி தெருவில் அவையோடும்படி உருட்டி விளையாடி [illegible] களைப்பாறவேண்டி அம்மையைநினைத்து அஹந்தேடிவந்த வேலாயுதம் தரித்த குமாரதேவனொத்த பாலகனே நீ கண்துஞ்சுவாய்.

[இத்தாலாட்டுப்பாட்டினால் சிறுகுழந்தைகளின் வித்தியாபோதம் எப்படி நடந்து வந்ததென்று தெளிவாய்த் தெரிகிறதல்லவா. இப்பொழுது மந்தையில் யாடு மறிப்பதுபோல் சிறு குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் மறிக்கப்போட்டு ஜாமநேரம் அவர்கள் மனப்பாடம் செய்யும்படி சித்ரவதைசெய்து வீட்டுக்கனுப்புகிறார்கள். முன்காலத்தில் இருடிகளும் முனிவர்களும் நிறைந்த இத்தேசத்தில் குழந்தைகள் எப்படி வளர்க்கப்பட்டு வந்தார்களென்று இத்தாலாட்டுப்பாட்டு நன்றாகச் சூசிப்பிக்கிறது. தொட்டிலிற் படுத்துத் தூங்கும் குழந்தைகளுக்கும் குரும்பைகள் முதலான சாதனங்கள்கொண்டு தேர், சப்பரம், வண்டி, இரதம் முதலானவை கட்டத்தெரியும். அவர்கள் தன்னொத்த பிள்ளைகளோடு தெருவில் "தேருருட்டி" விளையாடிவிட்டு, அயர்ந்த காலையில் தாயாரண்டைவந்து ள் தங்யபான [illegible] முண்டு களை நீங்கி, அன்னை அவர்கள் வாய் மடுக்க இன்னமுதூட்டியவாறே, செவி மடுக்கச் சொல்லமுதூட்டி அன்புநிறைந்த இனிய குரலால் அறிவுநிறைந்த வார்த்தைகளைக்கூட்டி தாலாட்டுப்பாட அதைக் கேட்டுக்கொண்டே அவர்கள் நித்திரைபோனார்கள். குழந்தைகளுக்குப் பாலபோதம் செய்யும்வகை இதுவல்லவோ சரி! இப்பொழுது பிரதம பாடசாலைகளில் பாலபோதம் செய்யும் முறையையும் தாயின்பால் பாலமுதுண்டதோடு ஞானமுதும் கூடவுண்டு வளர்ந்த ஞானசம்பந்தமூர்த்திகளான இத்தேசத்துப் பூர்வகுழந்தைகளுக்கு விவேகத்தாய் பாலபோத மியற்றி வந்த முறைமையும் சிந்தித்துப்பார்க்க இக்காலத்து நம்மவர்களுக்கு வெட்கமும் துக்கமும்வந்து மூண்டுகொண்டு அவர்களுக்குப் புத்தி வரச்செய்ய வேண்டாமா! இதுநிற்க. பூர்வத்தில் தாய்மார்கள் இப்படியிருக்க தகப்பன்மார் சிறப்பைச்சொல்லக் கேட்போம்.]

18. மதுரையிலே குதிரை கட்டி
மாந்தோப்பு விடுதிவிட்டு
சடுதியிலே வந்திறங்கும் [குறங்கு.
என்செல்வன்மகன் பால்குடமேயுறங்

இதன்பொருள்:—அப்பா நீ என்னையாளும் செல்வன் மகன். அந்தச் செல்வனும் யார்? உன் தகப்பனாரே! அவர் மதுரைப் பட்டணத்திலே வசித்துக்கொண்டு அங்கேயிருந்து குதிரை கட்டிக்கொண்டு போய் மாந்தோப்பு முதலான தோப்புத் துறவுகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு அங்கேயுள்ள விடுதியில் கச்சேரி வைத்து உலக வியவகாரங்களை யெல்லாம் சரிவரச் செய்து முடித்துவிட்டுக் காரியமானவுடனே மாந்தோப்பு விடுதிவிட்டுச் சடுதியிலே (ஒரு நிமிஷ நேரத்தில் குதிரை போட்டுக்கொண்டு வேகமாய் சவாரி செய்து வந்து) வீடுவந்திறங்குவார். அப்படிப்பட்ட என் காதற் செல்வன் மகனாகிய நீ "பால்குடமே" அமுத கலசம்போல் எல்லா மிடியும்தீர்க்க வல்ல பாக்கியமென்பதிற் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட என் குழந்தாய் நீ களைதீற ஆலிலையிற் பள்ளிகொண்ட அற்புதக் குழந்தைபோல் அறிதுயிலமர்ந்து எழுந்திருப்பாயாக-நீ அழுதால் நான் சகிப்பேனோ-என்றபடி. உனக்கு வீட்டில் ஒரு குறையுமில்லாதிருக்க, நீ யழுவானேன்? வெளியில் விளையாடுகையில் யாராவது உன்னைத் தொட்டு அடித்து உபத்திரவம் செய்திருக்கலாமோ என்று சிந்தித்துத் தாயார், சொல்கிறாள்:—

19. அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணிவைப்போம்.
தொட்டாரைச் சொல்லியழு
தண்டனைகள் பண்ணிவைப்போம்.

இதன்கருத்து:—வெகு சுலபம், அப்பா குழந்தாய்! நீ யேன் அழுகிறாய்? உன் குறையைச் சொல்லியழு! தெருவில் யாராவது உன்னை அடித்ததுண்டானால் அவர்கள் யாரென்று சொல்லியழு; அவர்களுக்குக் கண்டிப்பான ஆக்கினைகள் பண்ணிவைப்போம். உன்னை யாராவது தொட்டு உன் விளையாட்டைக்கலைத்து உபத்திரவம் செய்திருந்தாலும் அவர்கள் யாரென்று சொல்லியழு! அவர்களுக்கும் தக்க தண்டனைகள் செய்துவைப்போம். வீணாய் அழுது வருந்தாதே என் கண்ணே! நீ அறிதுயில் கொள்வாய்—என்றபடி.

இப்படிக்கு:
உங்கள் அன்புக்குரிய

## The True Nature of the Present War.

A WAR OF SYSTEMS.

"The fact illustrates one of the strange complications of this war. It is not a people's war. It is a war of systems. We have our junkers and militarists as Prussia has. Let us take care that in destroying junkerism in Germany we do not put it in the saddle in England.

For we must remember that the real issue behind this struggle is something profounder than maps. They are only symbols. The real issue is independent of territorial boundaries and racial ambition. It is whether despotism founded on militarism and secret diplomacy and backed by the armaments' conspiracy is to be master of Europe or whether the democracy in all lands is to be free. It is whether modern civilisation or ancient barbarism, whether a society based on credit or a society based on powder barrel is to survive. We now know that civilisation and barbarism, credit and the powder barrel, militarism and freedom cannot co-exist in Europe. One or other must go. It is for the war and the settlement that follows the war to decide which it is to be. If the diplomatists make the settlement, the old system will survive and freedom will perish. The settlement must come from the people or there is no hope."—*Mr. A. G. Gardiner in the "Daily News and Leader."*

"யுத்தம் நடக்கு'து பார்! ஐயாவோ!
ஈத்தம் வினையாலே தீவினை மேலிட்டுப்
பெத்தப் பெரியவோர் யுத்தம் நடக்கு'து!
செத்தபே * ரெல்லாம் சாகத்தெரியாதே
சுத்தமாம் பூமிக்குச் சுமையா விருந்ததால்
அத்தனை பேர்கள்செய் அக்ரமந் தாங்காதே
சித்தங் குழைந்தவள் துக்கந்தீர் பொருட்டாக
யுத்தம்ந டக்குது பார்! ஐயா!
கண்ணுள்ளோர் கண்டதன் குணத்தைக் கிரகிக்கட்டும்
கண்ணில்லார் மண்டையோடுடைந்தாலுங் காணரே!"

—பரதேசிப்பாட்டு.

## ஸமஷ்டி வித்தை.

### தற்கால யுத்த ஸ்வபாவம்.

### "தொந்தப்போர்."

குழந்தைகளே! "தொந்தம்" என்றால் என்ன தெரியுமா? "த்வம்-த்வம்" என்கிற ஸம்ஸ்கிருத பதங்கள்சேர்ந்து தமிழில் "தொந்தம்" என்று திரிபுவிகாரமாய் வந்தபதம் அது. "த்வம்" என்றால் "நீ" என்று அர்த்தம். தொந்தம் என்றால் "நீ, நீ" என்று நேருக்குநேர் முன்னிலையாக நிற்கும் எதிர்மறைப்பொருளுக்குப் பேர். அவைகளுக்கு உதாரணம்:—"நலம்-தீது"; "குணம்-கேடு" "உண்டு-இல்லை" இவை போன்றனவாம். இந்த உலகத்தில் கேவலம் சுத்தநன்மையும், கேவலம் சுத்ததீமையுங் கிடையாது. ஏனெனில் உலகமே போராட்ட சக்திகளால் உண்டாகி மத்திழுக்கிற மாதிரியாக அவை சன்னபின்னலாகச்சுற்றிவருவதால்நடைபெற்று வருகிறது. இந்த "தொந்தப்போர்" இயற்கையாயுள்ளது. நலமான பாகம் மலிந்து மேலிட்டபோது அதை உபசாரார்த்தமாய் நன்மையென்றும் தீதானபாகம் மலிந்து மேலிட்டபோது அதை உபசாரமாக தீமையென்றும் சொல்லுகிறது உலகவழக்கம். ஆகவே தீமையில்லாத நன்மையும், நன்மையில்லாத தீமையும் இவ்வுலகில் காணக் கிடைக்கமாட்டாது. அப்படியானால் இப்பொழுது நடக்கும் மஹாபாரத யுத்தத்தில் என்ன நலமிருக்கிறது என்று கேட்பீர்களே! ஆம், சொல்கிறேன் கேளுங்கள்.

"கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்று இருந்தவர்களெல்லாம், இப்பொழுது த்ரிஸந்தியாகாலமும் (காலை, மத்தியானம், ஸாயங்காலம்) சண்டை எப்படி நடக்கிறது? ஜெர்மானியர் எங்கேயிருக்கிறார்கள்? ஆங்கிலேயசைனியம் எங்கேயிருக்கிறது? ப்ரெஞ்சு வீரர்கள் எங்கேயிருக்கிறார்கள்? 'எம்டன்' கப்பல் எங்கே என்ன செய்கிறது? என்று கேட்கிறார்கள். "மார்ன் நதிக்கரையில் சண்டை நடந்தது. ஜெர்மானியர் தோற்றுப் பின்வாங்கி யிருக்கிறார்கள். இப்பொழுது எய்ஸ்நி நதிக்கரையிலும் ஆய்ஸ் நதிக்கரையிலும் சண்டை நடக்கிறது" என்று சொன்னால், சுவற்றில் மாட்டியிருக்கும் படத்தண்டை போய் நின்றுகொண்டு மார்ன் நதி எங்கேயிருக்கிறது? எய்ஸ்நி நதி எங்கே? பாரிஸ் நகர் எங்கே? ப்ரெஞ்சு எல்லை எங்கே? இதில் பெல்ஜியம் எல்லை எந்தமட்டும்? அப்பால் ஜெர்மனியின் எல்லை யெப்படி ஓடுகிறது? இங்கேயுள்ள கோட்டைகள், அரண்கள், மலைகள், நதிகள், மேடுகள், பள்ளங்கள், காடுகள், நாடுநகரங்கள் இவற்றின் விவரம் என்ன? என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்கிறார்கள். பதில்சொன்னால் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிறார்கள். ப்ரெஞ்சுதேசம் என்றால் புதுச்சேரி, காரைக்கால், சந்திரநகர் என்னும் இவைகளைத்தவிர வேறு ஏதும் அறியாதவர்களுக்கு இப்பொழுது பெல்ஜியம், ப்ரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, போலாண்ட், இத்தேசங்களிலுள்ள முக்கியபட்டணங்களெல்லாம் அண்டையூர், அசலூர்போல் காணப்படுகிறது.

சண்டைநடந்த இடங்களின் பேரெல்லாம் நன்றாகத்தெரியும். நதிகளின் ஓட்டமும் நீட்டமும் சுற்றுச் சுழலாட்டமும் அவர்களுக்கு நன்றாகத்தெரியும். பள்ளிக்கூடப் பையன்களெல்லாம் சிறிய "அட்லாஸ்" என்னும் படப்புஸ்தகத்தை வைத்துக்கொண்டு அவைகளை விடாதுபார்த்து வருகிறார்கள். ஊரின் எல்லைப்புறம் தாண்டாத பேர்களெல்லாம் ஐரோப்பா சண்டையென்றால் வெகு சிரத்தையோடு யுத்தசமாசாரம் கேட்கத் தயாராய் வந்துவிடுகிறார்கள். வாசிக்கத் தெரியாதவர்களும் அடுக்குள் காரியம் செய்கிறவர்களும்கூட யுத்தசமாசாரப் பேச்செடுத்தால் "அதென்ன சங்கதி?" யென்று வெகு பக்தி சிரத்தையோடு கேட்க வருகிறார்கள். வேலைக்காரர், கூலிக்காரர், பில்லுக்கட்டுக்காரி முதல் எல்லாருக்கும் இப்பொழுது ஜர்மனி, ப்ரான்ஸ், இங்கிலாந்து என்றால் அண்டையூர், அசலூர்போல் தெரியும். அவர்களுக்கு இந்த அபூர்வசக்தி எங்கேயிருந்துவந்தது? எல்லாம் மனோசக்தியால் தான் வந்தது என்பீர்கள். அந்த மனோசக்திதான் எத்தன்மையது? அதனால் ஆகும் காரியமென்ன? அந்த மனோசக்தியை உபயோகிக்கும் வழியென்ன? உபயோகிக்கும்போது அதுகொண்டி மாடுபோலும் முரட்டுக் குதிரைபோலும் வழியில் இடக்குச்செய்து அநர்த்தம் விளைக்காமல், அதை முறையறிந்து அடக்கியாள்வது எப்படி? இந்தக் கேள்விகளுக்கு பதிற்சொல்லத் தலைப்பட்டால் அது மஹாபாரதமாக வளரும். மஹாபாரதமே இதிஹாஸநூல் (உதாஹரணம்) என்பது இது பற்றித்தான். ஜகத்போர் என்பது தோற்றப்பொருள்களின் நடுவேயிருந்து அத்தோற்றங்களின் உண்மைபுணராது அவைகள் செய்யும் தொந்தப்போரில் ஜீவனும் தன்னையறியாது புகுந்துகொண்டு போராடுவதால் நடக்கும் யுத்தத்துக்குச் சொல்கிறது. இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் எப்படிப்பட்டது என்று ஊன்றிப்பார்த்தால் அது "இராமராவணயுத்தம்" என்று நன்றாய்ப் புலப்படும். வெளித்தோற்றத்துக்கு என்னமோ "ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் சண்டை" என்று தேசங்களின் பேரைச்சொல்லியும், டியூடன் ஜாதியாருக்கும் (ஜர்மானியர்) ஸ்லாவ் ஜாதியாருக்கும் சண்டையென்றும் சொல்லுகிறோம். ஆனால் மிஸ்டர் கார்டினர் எழுதியிருக்கிறபடி உண்மையிற்பார்த்தால் இந்த மஹாபார-ஹதச் சண்டை நாட்டைப்பற்றின தாகவாவது ஜாதியைப் பற்றினதாகவாவது சொல்வதிற்கில்லையென்று தெரிகிறது.

"பிடரிகொழுத்தஆடு இடையனைமதியாது" என்று பெரியோர் பழமொழி யொன்றுண்டு. பிடரியாவது சரீரபலத்துக்கு மூலஸ்தானமாயிருக்கும் முக்கியஸ்தானம். தேஹத்துக்கு உபாதி காணுமுன் கழுத்துப்பிடரியில் வலி தோன்றுவது சகஜம். தேஹத்திலோடும் நாடி நரம்புகளுக்கு மூலஸ்தானம் (வேர்போன்ற

* Dead to the Power of Consciousness.

cf. "சித் இலாதபோது சீவன் இல்லையில்லை இல்லையே."

இடம்) இருக்குமிடம் பிடரி. "பிடரிகொழுத்த ஆடு" என்றால் சரீரபலம் மிகுந்தவர்கள் என்று சாமானியமாகவும், "தேஹோஹம் பாவம்" அதாவது சரீரக்கொழுப்பினால் மமதை கொண்ட அஹம்பாவமதம் ஏறினவர்கள் என்று விசேஷமாகவும் அர்த்தம்கொள்ளும்: அவர்களுக்கு தர்ம நெறிகாட்டும் இடையனாகிய பகவானிடத்தில் மதிப்பிராது என்று அர்த்தம். இராவணன் திரிலோகாதிபதி யென்று பேர்பெற்று ஜகதீசுவரனையும் வசப்படுத்திக் கொண்டு இராவணேசுவரன் என்று புகழ் பெற்றிருந்தாலும், தன்னைக் கேட்பாரொருவரு மில்லையென்கிற அஹம்பாவக்கொழுப்பினால் அதர்மகாரியத்துக் குடன்படுவானாயினான். கர்மதர்ம மரியாதையினால் அவன் பலமெல்லாம் அவலமாகப்போயிற்று. அந்த மாதிரி இக்காலத்தில் ஆணவக்கொழுப்பேறிய இராணுவக்கக்ஷி யொன்றிருக்கிறது. அவர்கள் "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்கிற உலகநீதியை மேலாகக் கொண்டாடுகிறவர்கள். சண்டைக்காலத்தில் இரணகளத்தில் யுத்தம்செய்வதும் சமாதானகாலத்தில் சூதுவாது யுத்தம்செய்து தம்காரியத்தின் மேலே கண்ணாயிருப்பதுமாக நடந்துவருகிறவர்கள். இவர்களுக்குப்பொதுவாய் 'மிலிடேரிஸ்ட்' (Militarist) என்றும், தந்திரவாதிகள் (Diplomats) என்றும் பேர் வழங்குகிறார்கள். இவர்களைப் போராட்டக்காரர்களென்றும் வாதாட்டக்காரர்களென்றும் சொல்லலாம். அரசியலில் நடக்கும்கோணல்மாணல்களுக்கெல்லாம் இவர்கள் தான் காரணமென்றும், இவர்கள் செய்கர்மங்களால் தர்மம் தலைகவிழ்ந்து பெரும்போர் விளைகிறதென்றும் ஸமஷ்டிவித்தையில் ஞானமுதிக்கப்பழகினவர்கள் சொல்கிறார்கள். "அரசனெவ்வழி, குடிகளவ்வழி" யென்றிருப்பதால், அரசன் இவர்கள் வழிப்பட்டானாக, குடி, படை, நாடு, அரண் என்கிற இராசாங்கங்கள் நான்கும் அரசன் வழிப்பட்டுக்கடைசியில் எல்லாரும் பெரும்போரில் சிக்கி மடிகிறார்களென்பது அவர்களுடைய சித்தாந்தம்.

"இராமனாண்டாலென்ன இராவணனாண்டாலென்ன" என்று நமக்குள் ஒரு பழமொழியுண்டு. அதற்கு அர்த்தம் இக்காலத்துப் படிப்புப் படித்தவர்கள் ஜனங்களுக்கு இராஜதர்மத்தில் சிரத்தையில்லையென்று சொல்கிறார்கள். உண்மையாக ஊன்றிப்பார்த்தால் அதன் அர்த்தம் வேறு என்று தெரியவரும்.

இராமன் தர்மஸ்தாபனஞ்செய்ய அவதரித்த மஹாபுருஷன். இராவணன் கர்மஸ்தாபனம் செய்து திரிலோகாதிபதியென்று புகழ்பெற்ற சூரன்.

இவர்களிருவரும் போராடிக்கொண்டிருக்க கர்மதர்மம் எதுவோ அதுவே நிலைபெற்று நித்தியபலனை யளிக்கிறது. தர்மம் பெரிதென்கிறவன் ஆண்டாலென்ன? கர்மம் பெரிதென்கிறவன் ஆண்டாலென்ன? யார் கைவலுத்தால் தானென்ன? கர்மத்தில் தர்மமும் தர்மத்தில் கர்மமும் இணைபிரியாது சேர்ந்தேயிருக்கிறது. இராமராயவதரித்து தர்மஸ்தாபனம் செய்ததுபோலவே, அடுத்த கிருஷ்ணாவதாரத்தில் அந்த மஹாவிஷ்ணுவே ஜகத்ரக்ஷணார்த்தம் கர்மஸ்தாபனம் செய்யவேண்டி அர்ச்சுனனுக்கு கர்மதர்மத்தை யுபதேசித்து நைஷ்கர்ம ஸித்தியின் மேன்மையை ஸ்தாபித்தார். ஆதலால் அரசாளும் மன்னர் போராட்டக்காரர்களும் வாதாட்டக்காரர்களுமான அவர்கள் வசப்பட்டுழலாமல், அவர்கள் தேசக்ஷேமத்தையும் ஜனக்ஷேமத்தையும் காக்கப்பாத்திரப்பட்டவர்களாதலால் தர்மத்துக்கு கேடு வாராமலும் கர்மத்துக்கு நஷ்டம் வாராமலும் நிஷ்காமிய சித்தர்களாயிருந்து பரோபகார சிந்தையினாலும் ஜீவகாருண்யமிகுதியினாலும் அஹத்தாய்மைபெற்று நைஷ்கர்ம ஸித்தி சாதனங்களைக் கையாண்டு வருதலே இப்படிப்பட்ட பாரையழிக்கும் யுத்தம் வாராமல் காக்க யுக்தமான வழியாகுமென்று மிஸ்டர் கார்டினரைப்போன்ற மதசித்தாந்த முடையவர்கள் அனேகர் அவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து வருகிறார்கள். இஃதெல்லாம் மேற்றிசையாருக்கும் மேற்றிசைப் படிப்பு (அதாவது சோற்றுப்



படிப்பு) மட்டும் படித்த கீழ்த்திசையாருக்கும் உணர்வரிதாயினும், ஸாதுக்களுக்கும் சத்துக்களுக்கும், குழந்தை மனம் மாறாத உடலிற் சிறியார் பெரியார் எல்லாருக்கும், ஸாது ஸங்கப் பழக்கமுள்ளவருக்கும் வெள்ளிடை மலை போலும் உள்ளங்கை நெல்லிக்கனி போலும் தன்னிலக்காகத் தானே விளங்குவதாகும். அவலை நினைத்து உரலை யிடிக்கிற கதையாக ஒன்றை யுத்தேசித்து அவ்வுத்தேசம் நிறைவேறாத ஒரு வீண் காரியத்தைச் செய்து சங்கடப்பட்டு சங்கட மியற்றுவோர் எப்போதும் சங்கடம் விளைத்துக்கொண்டே தானிருப்பார்கள். அவர்களுக்கு பயந்து இந்த உலகத்திலிருப்பது அசாத்தியமாகும். அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிக்கிறவன் பிறருக்குத் தலைவலியுண்டுபண்ணுவதும் தன் அங்கம் நோவதுமன்றி வேறு காரியஸித்தியைக் காணான். ஆதலால் மனச் சாக்ஷியை மூட்டை கட்டித் தூர வைத்துவிட்டு நன்னடத்தைக்காக வேலியெடுத்து வழி யடைக்கிறவர்கள், அடைக்கட்டும். அப்படிப்பட்டவர்கள் தாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறதென்பதைப் பக்குவம் வந்த காலத்தே யுணர்வார்கள். தன் சித்தம் கோணாது ஜீவசங்கல்பத்தை விட்டு ஈசுவர சங்கல்பத்தை யொட்டி நடப்பவர்களுக்கு இகபரம் இரண்டிலும் ஒருபோதும்குறைவுவராது. அப்படிக்கின்றி குறைவாகத் தோற்றுவதெல்லாம் கடையில் நிறைவாகவே முடியும். "Out of evil cometh good" என்பதின் அர்த்தம் இதுவே. "அதர்மம் மலிந்து தலையெடுத்து தர்மம் தலைகவிழச் செய்யும்போது நான் அவதாரமாகி உலகில் தர்மத்தை நிலைக்கச செய்கிறேன்" என்ற பகவத் வாக்கியத்தின் உட்கருத்தும் இதுவே.

## BIOGRAPHICAL SKETCHES.

### II. Elizabeth Fry.

(Illustrated)

## சரித்திரமஞ்சரி.

### II. எலிஸபெத் ப்ரை.

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறு மறிவு." *—குறள்.

பூர்வீகத்தில் ஹிந்துக்களுக்குள்ளும் தற்காலம் ஐரோப்பிய ஜாதியாருக்குள்ளும் ஸ்திரீகள் தங்கட்கேலாதன வென்று சாதாரணமாக மதிக்கப்படும் பல துறைகளில் இறங்கி வேலை செய்து லோகோபகாரிகளாய்ப் பேரும் கீர்த்தியும் பெற்றிருக்கிறார்கள். பெண்பாலார் படித்தால் அவர்கள் பெண்மையை இழந்து விடுவார்களென்னும் தப்பெண்ணம் நம் தேசத்தாருக்குள் இப்பொழுது பரவியிருப்பதுபோலவே அங்கிலேயருக்குள்ளும் இந்நூற்றாண்டின் துவக்கத்திலும் அதற்கு முன்னும் பரவியிருந்தது. இருந்தாலும் அக்காலத்தில் அவர்களுக்குள் விசேஷ புத்தி, வித்தை, பரோபகாரசிந்தை முதலிய உத்தம குணங்கள் மிகுந்துள்ள மாதர்கள், ஜனசாதாரணமான மேற்படி தப்பெண்ணத்துக்குள்பட்டு அவர்கள் அந்தக்கரண சக்தியை விர்த்திபண்ணாது கட்டி மூலையில் போட்டுவிட்டு 'வழக்கம் வழங்கம்' என்கிற பந்தத்துக்குள்பட்டு அதன் விலங்கு பூண்டு தூங்கவில்லை. ஸ்திரீகள் கல்வி, சாஸ்திரம், கலைக்கியான முதலியவை ஓதி அவற்றில் பயிற்சிபெற்றுத் தேர்ச்சியடைந்தால் அவர்கள் உண்மையான பெண்மைக் குணத்தை யிழந்து பெண்களுக்குரிய தங்கள் இல்லறக் கடமைகளைக் கவனிக்காது விட்டுவிடுவார்களென்று சொல்வோர் இத்தேசத்திலிருப்பதுபோல் அங்கிலேய நாட்டிலும் அக்காலத்து அதிகமில்லாதிருக்க வில்லை. இது மிகவும் தப்பான எண்ணம்; உண்மைக்கு ஒவ்வாதது; என்று நாம் வற்புறுத்திக் கூறாமலே

* "மணலின்கண் கேணி தோன்றிய அளவிற்றாக ஊறும்; அதுபோல மக்கட்கு அறிவு கற்ற அளவிற்றாக ஊறும்."—பரிமேலழகர்.

விவேகிகளுக்கு விளங்கும். புத்திசாலியான பெண் அறிவுப் பயிற்சி செய்வதால் அவள் தன் கடமைகளை மறந்து போவதற்குப் பதிலாகப் பெண்மைக்குரிய அவள் காரிய கடமைகளின் பொறுப்பு பிரயோசனங்களை நன்றாயுணர்ந்து, அக்கடமைகள் காரியங்களை அவற்றிற் குண்மையாகவுள்ள ஏற்றத்திற்கேற்ப மதிப்பாளாவளென்பது வாஸ்தவந்துக்கும் அனுபவத்துக்கும் பொருந்தியதாகும். 'தண்ணீர் நில நலத்தால்' மேம்பட்டு அதன் குணம் பிரகாசிப்பது போல் கல்வியும் அதையடைவோர் குணநலத்தால் பிரகாசிப்பதாகும். மணற்கேணி தோண்டத்தோண்ட ஜலம் ஊறுவதுபோல் மாந்தர் படிக்கப்படிக்க அவர்கள் புத்தி விர்த்தியாகுமென்று நாயனாரும் சொல்லியிருக்கிறார். இது இருபாலார்க்கும் பொதுவாகச் சொன்னதன்றே. அனுபவத்திலும் அப்படியே தோன்றக் காணலாம். முற்காலத்தும் தற்காலத்தும் மேன்மையடைந்து சென்ற எத்தேசத்து மாதர் சரித்திரத்தாலும் விளங்கும்.

அங்கிலேய நாட்டில் பொது விஷயங்களிலுழைத்துப் பெருந்தன்மைக்குப் பேர்போனவர்களான ஸ்திரீ ஜாதிகள் பலருடைய சரித்திரங்களையும் படித்துப்பார்த்தால் மேலேசொல்லிய உண்மை பிரத்தியக்ஷமாக விளங்கும். இவர்கள் பேர் அநந்தம்; ஒவ்வொருவரும் பொது ஜனோபகாரமான ஒரு துறையிலிறங்கியுழைத்து அத்துறையில் அவர்கள் ஜனங்களுக்குச் செய்த நன்மைகளினால் பரோபகாரிகளென என்றுமழியாப் புகழுடம்பெடுத்திருக்கிறார்கள். இவர்களில் 'எலிஸபெத் ப்ரை' 'மேரி கார்பென்டர்' 'ப்ளாரென்ஸ் நைத்திங்கேல்' 'ஜோஸெபைன் புட்லர்' 'ஆக்டேவியா ஹில்' என்னும் பேர்கள் மிகவும் பேர்போனவை. இவர்களன்றி கலைக்கியானத்திலும், பாஷாக்கியானத்திலும், சாஸ்திரப் பயிற்சியிலும், ராஜ்யபாரத்திலும் விசேஷநிபுணத்துவம் காட்டிப் பேர்பெற்ற மாதர்களுமுளர். இப்படி பிரக்கியாதிபெற்ற மாது சிரோமணிகள் அவர்கள் மணம்பூண்டு இல்வாழ்க்கை நடத்தி வந்த பொழுது 'வாழ்க்கைத்துணைநலம்' அவர்களிடத்து எவ்வளவும் குறைவுபடாது நிறைவுபட்டு விளங்கியது அவர்கள் சரித்திரத்தைப் படிக்க விசிதமாகும்.

இந்த சரித்திரம் எலிஸபெத் ப்ரை என்னும் பரோபகார சிரேஷ்டையைக் குறித்தது. மாதர்கள் அதிகமாய் கல்வித்தேர்ச்சி யடைவதால், அவர்கள் தங்கள் வீட்டுக்கு மட்டுமின்றி நாட்டுக்கு முபயோகமானவர்களாகும் பெருந்தன்மையடைகிறார்களன்றி வீட்டுவேலைகளை விட்டுக் கெட்டுப்போவதில்லை யென்பது இச்சரித்திரத்தால் விளங்கும். எலிஸபெத் ப்ரை 1780-வது வருஷத்தில் பிறந்தாள். ஆனால் இந்த அம்மாள் பரோபகார சிரேஷ்டை யென்று பேரெடுக்கச்செய்த வேலை 1813-ம் வருஷத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இவள் நார்விச் பட்டணத்தில் 'கர்ணி' யென்று பேர்போன ஒரு சம்பத்துள்ள குடும்பத்தில் பிறந்தாள். இவளுடைய பெற்றோர்கள் 'குவேகர்கள்' என்னும் ஒரு உள் மதக்கோஷ்டியைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். ஆனால் அம்மதக்கோட்பாடுகளை அவர்கள் ஒழுங்காய் அநுசரித்ததில்லை. அக்காலத்தில் அந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் யாரும் அவர்கள் குடும்பத்துப் பெண்களை சங்கீதம், நாட்டியம் முதலிய வித்தைகள் பயிலவிடுவதில்லை. பெண்கள் உயர்தரப்படிப்புப் படிப்பதும் கூடாதென்று அப்பொழுது தடுக்கப்பட்டிருந்தது. எலிஸபெத்தின் பெற்றோர்கள் முன் சொன்னபடி அம்மதக்கோஷ்டியின் கோட்பாடுகளை அதிக கண்டிப்பாய் மதித்தவர்களில்லையாதலால், அவர்கள் தங்கள் குழந்தைகளை அக்கால சம்பிரதாயத்துக்கு விரோதமாக சங்கீத நாட்டிய முதலிய வித்தைகள் பயில விட்டதன்றி, பையன்களைப்போல் பெண்களையும் கணித சாஸ்திரம், லத்தீன் பாஷை முதலிய உயர்தரப்படிப்பும் பயிலவிட்டு வந்தார்கள். இப்படி நமது எலிஸபெத் இளமைப்பருவத்திலே அவள் காலத்துப் பெண்களை விட மிகவும் மேலான வித்தியாப்பியாசம் பெற்று கல்வியின் பயனை யடைந்தவளாயிருந்தாள்.



சிறு வயதிலே இவளிடத்து இயல்பாயமைந்துள்ள அநுதாபகுணம், பரோபகாரசிந்தை, ஆராயுந்தன்மை, எடுத்தது முடிக்கும் ஊக்கமுடைமையாகிய குணங்கள் இருப்பது வெளிப்படத் தொடங்கின வென்று தெரிய வருகிறது.

இந்த அம்மாள் சிறுபெண்ணாயிருக்கையில் கோயிலில் பாதிரியார் ஒருவர் செய்த பிரசங்கத்தால் மனதுருகி மனிதரில் கடையராயுள்ளார் கஷ்டங்களை நீக்கி அவர்களைநல்வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணம் இவள்மனதில் உதித்தது. இந்த எண்ணம் மனதில் பதியப்பெற்ற மாது ௨௦-வயதில் மணமுடிக்கப்பெற்று புருஷன் வீடுபோய் வாழ்க்கையில் அக்கம்பக்கங்களிலுள்ள ஏழைகள் துயரை நீக்குவதில்சிரத்தையெடுத்துழைத்துவந்தாள். அவளுடைய கணவரும் இந்த சத்விஷயத்திலுழைக்க அந்த அம்மாளுக்குள்ள பிரீதியை யறிந்து அச்செய்கையில் தாமும் அநுதாப சிந்தையுடையவராய்க்காட்டி அவள் சிறு முயற்சியைக் கண்டு களித்து அவளை உற்சாகப்படுத்திவந்தார்.



Elizabeth Fry. எலிசபெத் ப்ரை.

ஒருநாள் எலிஸபெத் ப்ரை* தெருவோடு போகையில் ஒரு பிச்சைக்கார ஸ்திரீ பிணியால் மிக மெலிந்து நொந்துபோன குழந்தையொன்றைக் காட்டி இவர் பரிதாபத்தைக் கிளப்பிப் பிச்சைகேட்டாள். இயல்பாகவே மிகவும் பரிதாப சிந்தையுள்ள இம்மாதுமனம் அக்குழந்தையின் ஸ்திதியைக் காணவும் அதிக

* அங்கிலேய ஜாதியாருக்குள் பெண்கள் மணமுடிக்கப் பெற்றபின் அவர் பிறந்த குலப்பெயரை விட்டு புகுந்த குலப்பெயரைத் தரித்துக் கொள்வார்கள். நமக்குள் பெண்களுடைய கோத்திரம் புருஷன் கோத்திரமாக மாறுவதுபோல், அவர்கள் கலியாணகாலத்தில் குலப்பெயரை மாற்றிக்கொள்வது வழக்கம்.

பரிதாபத்தால் நெக்குவிட்டுருக, ஐயோ! வென்றிரங்கி அப்பிச்சைக் காரியுடன் கூடச்சென்று அக்குழந்தைக்கு வேண்டிய உதவி செய்வதாகச் சொன்னாள். உடனே அப்பிச்சைக்காரி மெல்ல தப்பித்துக்கொண்டு போகப்பார்த்தாள். இதனால் அவள் விரும்பியது பணக்கொடையே யன்றி குழந்தைக்கு உண்மையாக உதவி விரும்பினவளல்லவென்பது பிரத்தியக்ஷமாயிற்று. ஆகவே *மிஸ்ரஸ் ப்ரை அம்மாள் அப்பிச்சைக்காரியைப் பின்தொடர்ந்து சென்றாள். சென்று அவளிருந்த குடிசைக்கு வரவே அங்கு பல பிணிகளால் பீடிக்கப்பட்டு பல படியாக வருந்திக்கொண்டிருந்த குழந்தைகள் பலவற்றைப் பார்த்தாள். உடனே தன்னை வழியை மறித்துப் பிச்சை கேட்டவள் இப்படிப்பட்ட குழந்தைகளைச் சேகரித்து வைத்துக்கொண்டு அவைகள் படும் அவஸ்தைகளைக் காட்டி பரிதாபத்தைக் கிளப்பிப் பிச்சை வாங்கிப் பிழைக்கும் பாதகர் வகுப்பில் சேர்ந்த ஒருத்தியென்று தெரியவந்தது. இக்காக்ஷியைக் கண்டது முதல் 'எலிஸெபெத் ப்ரை' என்னும் தர்மிஷ்டி மனம் ஒருவகையிலுழைக்கத் தேடிவிட்டது. இதுமுதல் மிகவும் இழிகுலத்தாரும் குற்றம்செய்துபிழைப்பவருமாய்ப் படுகுழியில் விழுந்த இழிகுல வகுப்பு ஸ்திரீகளுடையவும் குழந்தைகளுடையவும் நிலைமையை உணர்ந்து அவர்வளை ஒருவாறு சீர்ப்படுத்தி நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவதே அவர் கடமையென்று தீர்மானித்துக்கொண்டு அதற்காக உழைப்பதே அவர் நோக்கமாயிருக்க வேண்டுமென்று கங்கணம் பூண்டார்.

இத்தீர்மானம் செய்து கங்கணம் பூண்டபின் இது விஷயத்தைப்பற்றி அவருடைய அல்லார் அபலார் சிநேகிதர்கள் இவர்கள் கூடும் கூட்டங்களில் பிரஸ்தாபித்துப் பேசி அங்கிழ் ஜாதியாருடைய நிலைமையில் மற்றவர் பரிதாபத்தைக் கிளப்பிவிட்டு அவர்களைச் சீர்திருத்தும் வேலையில் அவர்கள் அநுதாபத்தைச் சம்பாதித்துக்கொள்ள முயன்றுவந்தாள். இப்படி நாளாவட்டத்தில் இவ்வம்மணி செய்துவந்த முயற்சி பலப்படப்பட அவள் ஜெயில்களிலுள்ள குற்றவாளிகளைக் கண்டு அவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர என்ன செய்யலாமென்று உபாயந்தேட ஆரம்பித்தாள். இதற்காக 'நியூகேட்' என்னும் சிறைச்சாலைக்கு அடிக்கடி விஜயமாகப் போய் வருவது வழக்கம். அங்கே ஆண் கைதிகள் பெண்கைதிகள் குழந்தைகள் எல்லாரையும் ஒருமிக்க, ஆடுமாடுகளைப் பட்டியிலடைப்பதுபோல் பேதமின்றி ஒரு அறையில் போட்டு அடைத்துவைத் திருப்பதையும் அதனால்விளையும் தீங்குகளையும் கண்டு, அவைகளை நிவர்த்திக்க வழிதேடினதன்றி ஜெயிலிலுள்ள கைதி ஸ்திரீகளையும் அவர்கள் குழந்தைகளையும் சன்மார்க்கத்துக்குத் திருப்பலாமென்று அவர்களுக்காக ஜெயிலிலே ஒரு பள்ளிக்கூடமும் வைத்தாள்; அவளும் அவள் தோழிகளிரண்டொருவரும் தனியாக இப்படி உழைத்து வந்த உழைப்பு காரியத்தில் நல்ல பலன் தருவதாகக் காணப்படவே குற்றவாளிகள் நிலைமையைச் சீர்திருத்தவேண்டிய வழிவகைகளைப்பற்றி அந்த அம்மாள் பொது விடங்களில் பயிரங்கமாகப் பிரசங்கிக்கவும் அதிகாரிகளுக்கு மனுக்களெழுதி அவர்கள் ஒத்தாசையைக் கோரவுமாக இப்படி சிறுகச்சிறுக அவள் முயற்சியைப் பலப்படுத்திக் கொண்டாள்.

முதலில் பலபோர் கூடியசபையில் பயிரங்கமாக நின்று பேச வெகு கூச்சப்பட்டாள். பயிரங்கமாகப் பலாதிய முன்னின் றுழைப்பது அவளுக்கு முதலில் மகா வெறுப்பாயிருந்தது. மனதுக்கும் மிக வருத்தமாயிருந்தது.

"சலங்காநுகண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்."* என்று

திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். தன் கடமை யின்னதென்று ஒருதரமுணர்ந்தபின், நாயனார் சொற்படி 'மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த' வேலையினின்று பின் வாங்காமல் சடுதியில் அதைச் செய்யத் தொடங்கினாள். முதலில் மனக்கலக்கமும் கஷ்டமும், கூச்சமும் உண்டுபண்ணுவதாக விருந்தவேலை போகப்போக வெகு சல்லிதாக விருந்ததன்றி மனதுக்கு இன்பமும் ஆறுதலும் பயக்குவதாயிற்று.

* 'மிஸ்ரஸ்' என்பது மனைவிக்குரிய மரியாதைப் பட்டம். 'கன்னியர்களுக்கு 'மிஸ்' என்றுசொல்கிறது.

* "மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண் பின்னைசைதலின்றி நீட்டித் தலையொழிந்து செய்க"—பரிமேலழகர்.



இந்தப் புண்ணியவதி இழிகுலத்தினரினும் இழிவானவரான இவ்வகுப்பாரிடத்து உண்மையான அன்பு பாராட்டி அவர்கள் நிலைமையைச் சீர்திருத்திவர முயற்சிக்கையில் அவரிருந்த ஊரார் பலர் இவர் செய்கையை விநோதமானதென்று சொல்லி இவரை ஏகத்தாளம் செய்து பழித்தார்கள். அப்போதிருந்த பிரபலமான கவிவாணர் ஒருவர் இவர் சிறைச்சாலையில் பள்ளிக்கூடம் வைத்துழைத்து வருவதைப்பற்றி ஏளனம் செய்து அவ்வேலையை விட்டுவிடும்படி ஒரு பாட்டுப்பாடிப் பிரசுரித்தார். அவரோடு கூட வசித்தவர்களில் அநேகர் இப்படி அவர் செய்கையைக்கண்டு நகைத்துப் பரிகாசம் செய்தும், சிலர், 'இச்செய்கையெல்லாமேனுனக்கு? விவாகமாகிப் பிள்ளை குட்டிகளைப் பெற்றவளுக்கு தன் புருஷனையும் பிள்ளைகளையும் போஷித்துக் காப்பாற்றி வருகிற கடமையைவிட வேறு கடமையென்னவிருக்கிறது?' என்று இவ்வேலையை இகழ்ந்து காட்டியும், அந்தம்மாள் தான் சரியென்று கண்ட வேலையைவிடாது ஊக்கமுடன் செய்து வந்தாள்.

'துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி*
இன்பம் பயக்கும் வினை."

இவ்வேலையை இவ்வளவு ஊக்கத்தோடு செய்து வந்தும் இவர் தம்மில்லத்தில் செய்யவேண்டிய வீட்டு வேலைகளைப் பாராதுவிடவில்லை: தன் புருஷனுடையவும் கஉ-குழந்தைகளையுடைய தன் பெரிய குடும்பத்தி னுடையவும் க்ஷேமத்தைநாடிச் செய்யவேண்டிய பல குடும்பகாரியங்கள், நித்தியக்கடன்கள் இவற்றில் எதையும் அலக்ஷியம் செய்தவராகவில்லை. தான் ஸமஷ்டிஸேவை யார்த்தம் பொதுவிஷயத்தில் கவனம் வைத்துழைத்ததால் இல்லறத்துக்குரிய தம் கடமைகள் எதையும் கவனிக்காதுவிட்டதாகச் சொல்ல ஏது மிடமின்றி அவைகளையெல்லாம் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார். பிந்தி இவர் குடும்பத்துக்குப் போதாக் காலம்வந்து இவர்களுக்கு கஷ்டதிசை வந்தது. அப்போதும் இப்பொதுநல காரியத்தைக் கைவிடாமல், தம் கஷ்டதிசையாலுற்ற வருத்தங்களை இத்தர்மவிஷயத்தி லுழைக்கு முற்சாகத்தில் மூழ்கிப்போகச்செய்து, தாமும் தம் குடும்பத்தோடு சந்தோஷமாயிருந்து, துர்ப்பாக்கியத்தால் துன்பசாகரத்தில் மூழ்கியுள்ள திக்குத் திசையற்ற கீழ்ஜாதி ஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர முயற்சித்து வந்தார். இவர் செய்த முயற்சியால் தம் சொந்த தேசத்திலுள்ளஜெயிலேற்பாடுகள் சீர்ப்பட்டு, குற்றம் செய்து கெட்டுப்போனவர்களிலநேகர் இவர் ஏற்பாட்டை யனுசரித்து ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களால் நல்ல கதிக்குத் திரும்பிவர வழியமைந்ததன்றி, அந்நிய தேசங்களில் கதியற்றவர்களுக்கும், கெட்டுப் போனவர்களுக்குமுள்ள ஸ்தாபனங்களை இவர் விஜயம் செய்து அவைகளின் காரியவிசாரணையிலிருந்த குறைவுகளை எடுத்துக் காட்டினதால் அந்த ஸ்தாபனங்களும் சீர்ப்பட்டு நல்ல நிலைமைக்கு வரவும் காரணமாயிருந்தனர். கைதிகள், குற்றவாளிகள், நாதியற்றகுழந்தைகள் இவர்களன்றி இன்னும் எளியஸ்திதியிலும் துர்ப்பாக்கிய ஸ்திதியிலுமுள்ள அநேகவகுப்பினர்களுடைய நிலைமை இவருடைய பரோபகார முயற்சியால் சீர்படுத்தப்பெற்று அவர்கள் நல்லஸ்திதிக்குக் கொண்டுவரப்பெற்றார்கள். ஏழைகள் படும் தேகவருத்தங்கள் பலவற்றை நீக்கி, அவர்களுக்கு சன்மார்க்க போதனை செய்துவர முயற்சித்ததன்றி கூலிக்காரர்களும் வீட்டுவேலைசெய்து பிழைப்பவர்களும் ஆகிய வகுப்பார் ஒழிந்தவேளைகளில்

* (துணிவு-கலங்காமை.) துணிவாற்றி-தளராது திட்ப முடையராய்.

உல்லாசமாக இருந்து வாசிக்க அவர்களுக்குப் புஸ்தகம் கடன் கொடுக்கும் புஸ்தகசாலைகள் சிலவும் ஏற்படுத்தினார். இப்படி அவர் சாகுங் காலமளவும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு நன்மைசெய்ய நானாவிதத்திலு முழைத்து வந்து, கடைசியில் கஅசடு-ம் வருஷத்தில் அவருடைய சுடு-வது வயதில் யாவரும் மெச்சப் பரோபகாரியென்று புகழுடம்பெடுத்து நிலையற்ற இவ் யாக்கையைத் துறந்து புகழுடம் போடு பரமபத மடைந்தார்.

இப்பொழுது நாம் "பாலபோத ஸமஷ்டி ஸேவை ஸாதனம்" என்று பள்ளியிற்படிக்கும் சிறுவர்கள் (Social Service)என்கிற"ஸமஷ்டி ஸேவை" செய்யப் பயிலவேண்டுமென்று கனம் லார்ட் அண்ட் லேடி ஹார்டிஞ்சவர்கள் ஏற்படுத்திய பாலர்திருவிழாக் கொண்டாட்ட நாளை யொட்டிச் செய்து வரும் ஏற்பாட்டில் சிரத்தையுள்ளவர்கள் இந்த அம்மையின் சரித்திரத்தைப் படிக்க அவர் உதாரணத்தால் விளங்கும் நடத்தையை மேலானதென்று மெய்ச்சிக் கையாடத்துணிவார்களென்பதிற் சந்தேகமில்லை.

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர், அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்றார் திருவள்ளுவநாயனார். கிராமங்களில் பொதுவிஷயமாய் உழைக்கின்றவர்கள் விவேகசிந்தாமணியை வாங்கி வாசிக்கிறவர்களாயிருந்து "விவேகசிந்தாமணி உபசார சங்கத்தைச்" சேர்ந்துழைக்கும் பாலர்களாயிருந்தால் அவர்களுக்கு உதவியாக வேண்டிய சாதகம் செய்ய "ஸ்ரீ லோகநாயகி ஞாபகசின்ன நிதி"யிலிருந்து சிறிது பொருளுதவிசெய்து "விவேகசிந்தாமணியை" வாங்கியனுப்பச் சித்தமாயிருக்கிறோம். இப்படியாகச் சென்னையிலுள்ள "மதராஸ் ஸோஷியல் ஸெர்விஸ் லீக்" என்னும் ஸமஷ்டிஸேவை சங்கத்தாரின் காரியதரிசி கேட்டுக்கொண்டதின்பேரில் ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளிகளும் மற்ற ஏழைகளும் மனோற்சாகமுண்டாக வாசிக்கக்கூடியதாய் விவேகசிந்தாமணி கொடுத்துதவி வருகிறோம். அச்சபையைச் சேர்ந்துழைப்பவர்கள் பெரும்பாலும் பி.ஏ., பி.எல். பரீக்ஷைகளில் தேறி சட்டப் பரீக்ஷைக்கு வாசிக்கும் மாணவர்களா யிருக்கிறார்கள்.

இதை எழுதிமுடிக்கு அச்சிடப்போகும் சமயத்தில் மேற்படி "ஸோஷியல் ஸெர்விஸ் லீக்" காரியதரிசியவர்கள் அவருடைய சங்கத்து ஆஸ்பத்திரி கமிட்டியாருடைய ரிபோர்ட்டிலிருந்து விவேகசிந்தாமணியைப் பற்றிய பாகத்தைக் குறிப்பிட்டெழுதி யனுப்பியிருக்கிறார். அதிலே நோயாளிகள் ஆயாஸம் தீரவென்று அவர்களுக்கு மனோற்சாகத்தை யுண்டுபண்ண வேண்டிக்கொடுக்கப் பெற்று வரும் கிரந்தங்களில் விவேகசிந்தாமணியை அவர்கள் சிரத்தையுடன் வாசித்து வருகிறார்களென்று எழுதி யிருக்கிறது. அந்த ரிபோர்ட்டைக் கீழே பிரசுரிக்கிறோம்.

The Secretary to the Madras Social Service League sends us the following extract from the Report of the Hospital Committee of the League :—Reporting on the work of the last week done in the General Hospital, the Captain of the Hospital Committee writes : "The *Vivekachintamani* is being appreciated by the patients."

பெற்றோர்கள் பிள்ளைகளுக் கறிவிப்பு.

விவேகசிந்தாமணியை வாங்கி வாசிக்கவிரும்புவோர் உடனே முன்பணமனுப்பிச் சந்தாதாரர்களாகச் சேரல்வேண்டும். வித்யா இலாகா தலைவருடைய சிபார்சை யங்கீகரித்து கவர்ன்மெண்டார் விவேகசிந்தாமணி பிரதம பாடசாலைகளிலும் வாசிக்க யோக்கியமானதா யிருக்கிறதென்று தெரிவித்து கவர்ன்மெண்ட் பிரதம பாடசாலைகளுக்கெல்லாம் அதை வாங்கியனுப்ப உத்திரவு செய்திருக்கிறார். லோகல் முனிசிபல் பாடசாலைகளிலும் அதைவாங்கி யுபயோகிக்க அனுமதி தந்து பத்திராசிரியரை அவர்களுக்கெழுதிக் கேட்கும்படி உத்தவுபிறப்பித்திருக்கிறார்கள். ப்ரைவேட் பாடசாலைகளின் உபாத்தியாயர்களும் பிள்ளைகளும் அதை வாங்கிப்படிக்க இதுதான் சமயம். காலஹரணம் செய்யக்கூடாது. காபிகள் சீக்கிரத்தில் செலவாய்விடும். பள்ளிக்கூடப் பிள்ளைகளுபயோகத்துக்கு மாத்திரம் நூற்றுக்கணக்காய் காபிகள் தேவையிருக்கின்றன. இரண்டாம் பதிப்புக்கு அவகாசமில்லை. ஆகையால் உடனே விவேகசிந்தாமணி மானேஜர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Address:—

The Managing Agents,
the "*Vivekachintamani*," *Lalitalaya*, 19, *Adam Street*, *Mylapore*, *Madras*, S.



## PROVERBS AS AIDS TO CHILD-STUDY.

## பாலபோத சிக்ஷாஸாதனம்.

### பழமொழி விளக்கம்.

(141-வது பக்கத்தொடர்ச்சி.)

(16) ஒரு புத்திரன் ஆனாலும் குரு புத்திரன் வேண்டும்.

(17) ஒன்றைப் பெற்றாலும் கன்றைப்பெறு.

(18) ஒன்றைப் பெற்றாலும் நன்றைப்பெற வேண்டும்.

இம்மூன்று பழமொழிகளின் அருத்தமும் ஒன்றே. ஒரு குழந்தையைப் பெற்றபோதிலும் நல்ல குழந்தையைப் பெறவேண்டும் என்பதாயிற்று.

நல்ல குழந்தையை என்பதைத் தான் மூன்று விதமாக "குருபுத்திரன்" என்றும் "கன்றைப்பெறு" என்றும் "நன்றைப் பெற வேண்டும்" என்றும் எடுத்துக் காட்டியதாயிற்று. இதே அருத்தத்தை வடமொழியில் "ஏகசந்த்ரஸ்தமோ ஹந்தி நசதாரா கணைரபி": சந்திரன் ஒருவனாய் நின்று இருளைப் போக்குகின்றது. நட்சத்திரக் கூட்டங்கள் ஆயிரக்கணக்காயிருப்பினும் இருளை நீக்கமுடியாமல் விளங்குகின்றன. அதுபோல் நற்குணமுள்ள ஒருபிள்ளை குணமற்ற 100-பிள்ளைகளைக்காட்டிலும் அதிகம். "வரமேகோ குணீபுத்ரோ நசமூர்கசதைரபி"—என்று எடுக்கப்பட்டிருக்கிறது. ஜனங்களுக்கும் 100 மூர்க்கர்களைப் பிள்ளைகளாய்ப் பெறுவதைக் காட்டிலும் ஒரு வித்வானைப் பெற்று சுகமாயிருப்பதில் எப்பொழுதும் ஆனந்தம் அதிகம். இம்மாதிரி யிருந்ததற்கு ஆயிரக்கணக்காய் கதைகள் மார்க்கண்டேயர் சரித்திரம் போன்றவையுள.

(19) ஒருவனாய்ப் பிறப்பது பிறப்பாமா ஒன்றிமரம் தோப்பாமா.

மேலேசொன்ன இந்தப்பழமொழிகளில் நற்குணமுள்ள ஒருவனைப் பெறுவது சிலாக்கியம் என்று எடுத்தபோதிலும் அந்த ஒருவன் காலத்தின் கொடுமையாற் போய்விட்டால் அப்புறம் தகப்பன் அபுத்திரவானவனுகையாலும் ஒருவனாய்ப் பிறந்த ஒரு பிள்ளைக்கு சகோதரன் சகோதரி இவர்களின் சகவாசமில்லாதபடியால் இவ்வித சகவாசத்தாலுண்டாகும் அநேகவித அருமை பெருமை முதலியவைகள் தெரியாமலிருக்குமாகையாலும் இந்தப் பழமொழியில் தனியாய் நிற்கும் ஒரே ஒரு மரம் எம்மாதிரி தோப்பாகமாட்டாதோ அது போல தனிமையில் ஒருவனாய்ப் பிறப்பவன் உச்சிதமாய்ப் பிறந்தவனாகமாட்டான் என்று எடுத்துப்பேசினார்.

(20) ஒன்றைப் பெற்றாலும் கடுகப்பெறு.

ஒருவனுக்கு புத்திர பாக்கியமிருந்தால் அது அவனுக்கு தகுமான வயதில் அதாவது 25, 30-வயதுக்குள் உண்டானால் நன்றாயிருக்கும். எப்படி என்றால் தகப்பன் 50-வயதாகும் போது பிள்ளை 20, 25-வயதாயிருந்து தள்ளாதகாலத்தில் தகப்பனை ரட்சிக்கும். அப்படியில்லாமல், 60-வயதில் பிள்ளையைப் பெற்றால் அதன் லாபத்தை நாமெப்படி அடையமுடியும். ஆகையாற்றான் ஒன்றைப்பெற்றாலும் கடுக அதாவது சீக்கிரமாகப்பெறு என்று சொன்னார்.

(21) ஒருவனாய்ப் பிறந்தால் தனிமை, இருவராய்ப் பிறந்தால் பகைமை.

(22) அண்ணனும் தம்பியும் ஜன்மப்பகைவர்.

முன் பழமொழியில் ஒருவனாய்ப் பிறப்பது பிறப்பல்ல என்று சொல்லிவிட்டு, இப்பழமொழிகளில், எப்படிப் பிறந்தாலும் சங்கடம் வரவேண்டிய துறைகளிருப்பின் சங்கடம் ஒருவனாய்ப் பிறப்பதிலும் உண்டு, அண்ணன் தம்பிமுதலிய அநேகராய்ப் பிறப்பதிலும்உண்டு என்றார். அது எப்படியென்றால், சில துர்ப்பாக்கிய குடும்பங்களில் அண்ணன் தம்பிமார்கள் எப்பொழுதும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு பாராட்டி ஆதரித்து சந்தோஷித்து, தாங்களும் சௌக்கியமடைந்து,தங்களைப் பெற்றவர்களையும் சௌக்யப்படுத்தி வாழ்ந்திருக்கும் நியாயத்திற்கு பதிலாக, எலி - பூனைகள்போல்

எப்பொழுதும் சச்சரவு செய்து வருவார்கள். இவர்கள் மிருகங்களாகப் பிறக்கவேண்டியது தப்பி மனித சாதிகளாய்ப் பிறந்த சகோதரப் பதர்கள். மிருகங்களில் கூட ஆடு, மாடு முதலிய இனங்கள் ஒத்துவாழ்கின்றன. புலி, கரடி முதலிய காட்டு விலங்குகள்தான் சச்சரவிடும். ஆகையால் இவர்களை துஷ்ட விலங்குகளுக்கே ஒப்பிடல்வேண்டும். சில சமயத்தில் ஒரு தாய் வயிற்றில் பிறந்த இருவர்களில் மூத்தவன் இளையவனைக் கண்டால் சகிக்கான்; அசலகத்துப் பிள்ளையைக் கண்டால் அன்பாய் சிரிப்பு முகத்துடன் பேசுவான், தன்சொந்தத் தம்பியைப் பார்த்தால் கடுகடுத்து 'வள்' என்று விழுவான். அன்னியபந்து தன் சமீபத்தில் உட்கார்ந்து புசிக்கக் களிப்பான். தன் சொந்தத் தம்பியை "உன் இலை யிதல்ல, ஓடு அதோ!" என்பான். அன்னியனுக்கு வரும் லாப நஷ்டங்களைக்கண்டு சந்தோஷிப்பான், சஞ்சலப்படுவான். தன் தம்பி எக்கேடு கெட்டாலும் கொஞ்சமேனும் உணரான். அந்தோ! இவனை என்ன செய்யலாம். ஈஸ்வரனிவனுக்கு தகுந்த புத்திமதி கொடுக்கவில்லையே. தன்னுடன் பிறந்தவனை இவ்வளவு பரிமதித்தால் இவனை ஒருநாளில்லாவிடில் ஒருநாள் ஈஸ்வரன் தண்டிப்பாரே என்று பரிதபித்து புத்திமதி சொல்லவேண்டியதுதான். இம்மாதிரியிருக்கப்பட்டவர்களை உத்தேசித்து இவ்விரண்டு பழமொழிகள் பிறந்திருக்கின்றன. ஒருவனுய்ப் பிறப்பது பிறப்பல்ல என்று 19-வது பழமொழியில் சொல்லி வாய்மூடும் முன், இருவனுய்ப் பிறந்தால் பகைமை என்று இம்மாதிரி சில துஷ்டப்பிள்ளைகளை உத்தேசித்து 21-வது பழமொழியும் சொல்லலாயிற்று. இம்மாதிரி மனித ரூபத்தைத் தரித்து மிருகங்களாய் வாழும் வாலிபர்களிருக்கும் வீட்டில் அண்ணனும் தம்பியும் ஜென்மப்பகை என்று 22-வது பழமொழி எடுத்துச் சொல்வதும் பொய்யாமா. இவ்விருபழமொழிகளின் கருத்து: இம்மாதிரி துர்க்குணத்தைவிட்டு வாலிபர்கள் இராமலட்சுமணர்கள் போலும், பஞ்சபாண்டவர்கள்போலும் அன்னியோன்னியமாய் வாழவேண்டும் என்பது திண்ணம். பஞ்சபாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிர மகாராஜா பாரத யுத்தத்தில தன் தம்பியார்களில் யாராவது ஒருவன் மாண்டால், தான் தன் பிராணனை விட்டுவிடுவதாக சபதம் பண்ணிக்கொண்டார். அதல்லவோ அண்ணன் தம்பி விசுவாசம்! ராமன் காட்டுக்குப் போக அவர் தம்பி தமையனுக்குப் பணிவிடை செய்ய 14-வருஷங்கள் அவருடன் காட்டிற் சென்று வசித்தார். அதல்லவோ சகோதரவாஞ்சை!! இவ்விருவர்களுக்கும் சகோதரனான பரதர் தனக்கு இராஜ்ஜியம் கிடைத்திருக்க ராமனில்லாமல் அயோத்தியில் புகமாட்டேன் என்று சத்தியம் பண்ணி ராமன் பாதக்குரட்டை அவருடைய அத்தாக்ஷியாக வைத்து நந்திகிராமத்தில் மரவுரி பூண்டு 14-வருஷம் ராமன் வருமட்டும் யதியாக வசித்தார். அதல்லவோ அண்ணன் தம்பி நட்பு !!!

(3) சத்தியத்திற்கு இல்லாதபிள்ளை துக்கப் பட்டபோது அழப்போகிறதா?

இப்பழமொழியின் கருத்து தகப்பன் அந்தரங்கத்தையறிந்து அவர்மேல் விஸ்வாசம் வைக்காத பிள்ளையைப் பெற்றதைப்போல் பெருந்துக்கம் வேறில்லை என்பதாம். எப்பொழுது நம்மிடத்தில் அந்தரங்க விஸ்வாசமில்லையோ அவன் நாம் துக்கப்படும்போது ஏன் அழப்போகிறான். ஒரு சொட்டு தண்ணீர்கூட அவன் கண்களினின்று வெளிப்படா. அனுதாபமிராது என்றபடி.

(24) சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்.

இப்பழமொழியில் சித்திரை மாதத்தில் பிறந்த குழந்தைகள் அவ்வளவு அதிர்ஷ்டமுள்ளவைகளா யிருக்கமாட்டா என்னும் நமது நாட்டார் கொள்கையை எடுத்துச் சொல்லியிருக்கிறது. இதே அருத்தத்தை,

(25) சூரியதசையில் வாழ்ந்தவனு மில்லை, சுக்கிரதசையில் கெட்டவனுமில்லை.



என்ற பழமொழியும் ஒருவாறு எடுத்துரைக்கின்றது. சித்திரை மாதத்தில் சூரியதசையின் பிறப்பு அதிகம். ஐப்பிசியில் சுக்கிர திசைப் பிறப்பும் அதிகம். இந்தப் பழமொழியில் சித்திரையில் பிறப்பு எவ்வளவு அசிலாக்கியமோ அவ்வளவு சிலாக்கியம் ஐப்பிசியில் பிறப்பு என்று எடுத்துக்காட்டியபடி. இதுதான் சோதிட சாத்திரத்தின் பிரகாரம் உண்மை யென்பர். ஆனால் இதைக்கண்டு ஜனங்கள் அதைரியப்படக் கூடாதென்று இவ்வர்த்தங்களுக்கு நேர் விரோதமாக மற்றொரு பழமொழி,—

(26) சித்திரை மாதத்திற்பிறந்த சீர்கேடனுமில்லை, ஐப்பிசிமாதத்தில் பிறந்த அதிர்ஷடவானுமில்லை.

என்று எடுத்துச் சொல்லுகிறது. இந்த மூதுரை சோதிட சாத்திரம் உண்மை என்று நம்பாதவர்கள் சொல்லியிருக்கும் பழமொழி, மாதத்தில் என்ன விருக்கிறது. ஒருவன் ஒரு மாதத்தில் பிறப்பது தெய்வாயத்தம். அவன் பாக்கியமும் தூக்கமும் அவன் செய்யும்காரியங்களால் உண்டாகின்றன என்று தாத்பரியம்.

(27) ஞானமில்லாத சேவலர்கள் ஆவின்கன்றிலும் அதிகமல்ல.

சுலபம். புத்தியில்லாத பிள்ளைகள் பசுவின் கன்றுகளைவிட அதிகமாகமாட்டார்கள். என்றபடி.

(28) தங்கச்சி பிள்ளை தன்பிள்ளையானல் தவத்திற்குப் போவானேன்?

வெகு சரியான பழமொழி. தனக்கு சொந்தப் பிள்ளையில்லாதவர்கள், சமீபபந்துக்கள் அண்ணன் தம்பி அல்லது அக்காள் தங்கையிவர்கள் பிள்ளையை தத்து எடுத்துக்கொண்டும் அல்லது எடுத்துக்கொள்வதாகச் சொல்லியும் அந்தப்பிள்ளையை தன் பிள்ளையாக பாவிப்பது வழக்கம். இம்மாதிரி ஒரு பக்கம் சொல்லுவார்கள் செய்யவும் செய்வார்கள். மற்றொரு பக்கத்தில் ஒரு சுப்பிரமணியசுவாமிகோவில் கட்டிப் பிரதிஷ்டை செய்தால் தனக்கு ஒரு குழந்தை உண்டாகமாட்டாதா என்று பொருளைச் செலவிடுவார்கள். தன் சொந்தப் பிள்ளையிடமிருக்கும் அன்பு மற்றக் குழந்தைகளிடம் வரமாட்டாதென்றபடி.

(29) தாய்முகம் காணுப்பிள்ளையும் மழைமுகம் காணுப்பயிரும்.

இதன் அருத்தப சுலபம். மழைகாணுப் பயிர் எப்படி வாடுமோ அப்படி தாயன்பில்லாக் குழந்தை மனம்வாடி முகம்வாடி நொந்துபோம் என்றபடி.

(30) தாய்வார்த்தை கேளாத பிள்ளை நாய் வாயிற் சீலை.

நாய் வாயிற் சிக்கின சீலை எப்படி சின்னபின்னமாய் கிழிக்கப்படுமோ அப்படி தனது உலகவாழ்க்கையில் தாய்சொற் கேளாத பிள்ளை அவஸ்தைப்படுவான் என்றபடி. இது திண்ணம். "மாதிருதேவோபவ"—என்ற வேத வாக்யமும் இதைத்தான் கதறுகிறது.

(31) பெற்றதெல்லாம் பிள்ளையா? இட்டதெல்லாம் பயிரா.?

முன்னொரு பழமொழியில் நாம் சொன்ன கருத்தை கவனத்தில் வைத்தால் பெற்றது எல்லாம் பிள்ளையாகமாட்டாது; நற்குண நற்செய்கை யுள்ளவர்களே பிள்ளைகள் என்பது நன்ருய் விளங்கலாகும். இதே கருத்தைத் தான் பின்னும்,

(32) பெற்றதெல்லாம் பிள்ளையோ வனைந்ததெல்லாம் குசக்கலமோ.

வனையும் குசக்கலங்களில் எவ்வளவு உடைந்துபோகின்றன! எவ்வளவு கெட்டுப்போகின்றன! அதுபோல கெட்டவர்களைப் பிள்ளைகளாகக் கணக்கிடலாகாது என்று கூறியபடி.

(33) மாதாமனம் எரிய வாழான் ஒருநாளும்.

தன்னை யீன்ற தாயார் மனம் எரியும்படி நடக்கப்பட்டவன் ஒரு நாளும் நல்லவழியில் வாழமாட்டான். வெகு கஷ்டப்படுவான் என்றபடி. இது அவ்வளவும் உண்மை.

(34) மாலைசுற்றி பிறந்த பிள்ளை மாமனுக்கு ஆகாது.

இது இந்துக்களாகிய நமது கொள்கைகளில் ஒன்றை எடுத்துச சொல்லுகிறது. இதனல் உண்டாகும் அரிஷ்டத்தைத் தீர்க்கத்தான் "நாளசாந்தி" என்னும் சடங்கு இம்மாதிரி பிறக்கும் குழந்தைகளுக்குச் செய்வது வழக்கம்.

# NAVARATRI MAHATMYAM.

## நவராத்திரி மஹாத்மியம்.

மஹாலயபக்ஷம்கழிந்தது. மஹாலய அமாவாசையன்று ஜனங்கள் ஏராளமாய்ச்சென்று சமுத்திரத்தில் ஸ்நானம்செய்து தங்கள் பாபம் தீரப் பிதுர்க்கள் கரையேறத் தர்ப்பணம் செய்து வீட்டுக்குத் திரும்பினார்கள். சனிக்கிழமை இரவு முதல் நவராத்ரி யாரம்பம். வீடுகள்தோறும் தேவி கொலுவிருக்க, குழந்தைகளும் பெண்டீரும் ஆடையாபரண அலங்கிருதராய் சாயங்காலவேளையில் தங்கள் சிநேகிதர்கள் வீடுகள்தோறும் சென்று தங்கள்தோழிகளை கொலுவுக்கழைத்தார்கள். தெருவில் எங்கும் அந்திநேரத்தில் கலியாண வைபவமாயிருந்தது. கோயில்களில் நவராத்ரி உற்சவம் வெகு ஆடம்பரத்தோடு கொண்டாடப்பட்டு வருகிறது. தினந்தோறும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்க் குஞ்சு குழந்தைகளோடு கோவிலுக்குச்சென்று தேவி கொலுவிருக்கும் காட்சியைக்கண்டு ஆனந்தித்து வருகிறார்கள். அந்நியர்களுக்கு நவராத்ரியின் மஹிமை அவ்வளவாகத் தெரியாது. ஆனால் வீடுகள்தோறும் தேவிபூஜை செய்வாரும், தேவிபாகவதம் பாராயணம் செய்வாரும், குழந்தைகள் 'தேவி கொலு'வென்று பொம்மைகளை வைத்து உற்சவம் கொண்டாடுபவராயு மிருப்பதைப் பார்த்துக் கேட்டு அறிந்தவர்கள் நவராத்திரியின் மஹிமையையும் அதனால் ஜனங்களுக்குண்டாகும் மனக்கிளர்ச்சியையும் ஒருவாறு உணரக் கூடும். அவர்களது உள்ளக்கிளர்ச்சியை உள்ளவாறு உணர அவர்களாலும் முடியாது. ஏனெனில், இந்த நவராத்ரி உற்சவத்தில் ஹிந்துக்களின் ஜாதி மதக்கொள்கைகளன்றி, பிரகிருதிவிசேஷமும், ஆசார, அனுஷ்டான, ஸம்பிரதாய விசேஷமும்சேர்ந்து ஜனங்களுடைய உள்ளம், உணர்வு, நடை, உடை, பாவனை, ஆசாரம், அனுஷ்டானம், உண்டிமுதலாக எல்லாவற்றையும் கிளர்ச்சிப்படத் தூக்கி யுற்சாகத்தை யுண்டுபண்ணுகிறது.

ஸ்ரீதேவி பண்டாசுரனை யெதிர்த்து அவனை வதம்செய்து அசுரர்கள் கொட்டம் அடங்க ஆத்ம ரக்ஷணார்த்தம் தான் காமேசுவரியாகக் கொலுவீற்றிருந்து ரதிதேவிக்கு மாங்கல்ய பிக்ஷையளித்த விசேஷத்தைக் கொண்டாடும் காலம் இது.

* * * * * * *

"அவனன்றி யோரணுவும் அசையாது" என்பது மூதுரை. கடவுளுடைய கிருபையின்றி இவ்வுலகம் நடைபெறாது. உலகம் பிரவிருத்தி மார்க்கம் நிவிருத்திமார்க்கம் என இருமார்க்கங்களினால் நடைபெற்று வருகிறது. அது எப்படியென்றால் சொல்கிறேன் கேளுங்கள்:—

அதோ ஓடுகிற நதிப்பிரவாகத்தைப் பாருங்கள். அந்த ஆற்றில் ஓடும் வெள்ளம் எங்கேயிருந்துவந்தது? வானின்று பெய்த மழையாலும் பனியாலும் அந்த நீர்ப்பெருக்குண்டாகி நதிப்பிரவாகமாக ஓடுகிறதென்று உங்களுக்குத் தெரியுமே. ஆனால் வானிலுள்ள மேகங்களுக்கு மழை வருஷிக்கும் சக்தி என்னமாக வுண்டாயிற்று?

"மேகங்கள் சமுத்திரநீரைக்குடித்து மழையாக வருஷிக்கிறது." என்கிறான் ஒரு குழந்தை.

ஆம் அது சரிதான்! ஆனால் மேகங்கள் என்ன, மாடா, மிருகமா, நீர்குடிக்க?

"அண்ணா, அந்த ரகஸியம் எனக்குத்தெரியும். வாத்தியார் "Elementary Science" பாடம் சொல்லும்போது அதன் மர்மத்தை யுணர்த்தினார். கோபு என்ன சொல்கிறான் பார்ப்போம்! அப்புறம் நான் சொல்கிறேன்."

"அடே, கோபு, நீ மேகம் நீர் குடிக்கிறதைப்பார்த்திருக்கிறாயா? சொல் கேட்போம்."

"அண்ணா! நான் கிட்டவிருந்து பார்த்ததில்லை. ஆனால் நான் நீலகிரிக்கு எங்கள் அப்பாவோடுகூடப் போயிருந்தபோது, காட்டெருமை மாதிரி மேகங்கள் ஆகாசத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கப் பார்த்திருக்கிறேன். அவை நீருண்டு கருத்திருந்தபடியால்



"காளமேகம்" என்று அவைக்குப் பேர்வந்தது என்று பாட்டி கதை சொல்லியிருக்கிறாள் எனக்கு."

ஆம் "காளமேகம்" என்றால் "கருத்த மேகம்" என்றுதான் அருத்தம். அந்தமேகம் உண்டாகும் வழி தெரியுமா?

"மேகங்கள் வருணராஜனுடைய சேனைகள் என்று கதைசொல்லக் கேட்டிருக்கிறேன்."

சரி! அந்த வருணராஜன் எங்கேயிருக்கிறார்?

"அவர் சமுத்திரத்திலும் ஆகாசத்திலே மேகமண்டலத்துக் கப்பாலும் இருக்கிறார்."

அப்பா, வருணராஜன் என்றால் ஜலக்கூட்டங்களுக்குத் தலைவன் என்று அர்த்தம். "மனிதர்களில் நான் ராஜாவாயிருக்கிறேன்" என்று பகவான் அர்ச்சுனனுக்குச் சொன்னதின் அருத்தம் ஜனசமஷ்டியெல்லாம் என்னில் அடக்கம் என்பதாம். அதுதான் விசுவரூப தரிசன மஹிமை. அதேமாதிரி ஜலக்கூட்டங்களெல்லாம் அப்பு தன்மாத்திரைமுதல் ஆற்றிலோடும் ஜலம் ஈறாக எல்லாம் வருணனில் அடக்கம். அதுதான் வருணராஜன் என்பதற்கு அர்த்தம். இப்பொழுது ஆற்றிலுள்ள ஜலத்திற்கும் சமுத்திரத்திலுள்ள நீர்நிலைக்கும் சம்பந்தமென்ன தெரிந்ததா?

"நதிகளெல்லாம் சமுத்திரத்தில்போய் சங்கமமாகிறவிஷயம் கண்கூடாகக் காணத்தக்க காட்சியாகவிருக்கிறது. சமுத்திரத்திலிருந்து மேகங்கள் நீரையுண்டு மழையாகவும் பனியாகவும் பெய்து நதிகளுக்கு மூலமாகவுமிருக்கிறது." கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் சூக்ஷ்மத்தில் உண்மையே.

இதைத்தான் சுருக்கமாகக் கூறும்போது, "நதிகள் சமுத்திரத்திலிருந்து உற்பத்தியாகி சமுத்திரத்திலேபோய் லயிக்கின்றன" என்று சொல்கிறது, தெரிந்ததா?

சமுத்திரஜலம் சூரியகிரணங்களால் கிரகிக்கப்பட்டு நீராவிக் கூட்டங்களாகமாறி "மேகம்" என்கிற நாமரூபங்கொண்டு மழைவருஷம் என்கிற சாதனத்தினால் நதிகளாகி பூமியின் ஆகர்ஷணசக்தியால் இழுக்கப்பட்டு மறுபடியும் சமுத்திரத்தையே போய்ச் சேருகிறது.

அதேபோல, இந்தப் பிரபஞ்சகோடியெல்லாம் பகவானிடத்திலிருந்து உற்பத்தியாகிமறுபடியும் அந்த பகவானிடத்திலேபோய் லயிக்கின்றன. அது எப்படியென்றால், மரத்தால் செய்யப்பட்ட ஒருபெரிய மதயானையானது "மதயானை" என்கிற நாமரூபவிசேஷத்தினால் அதற்கு உபாதி காரணமாகிய மரத்தை மறைத்து, அந்த மரத்தைப்பற்றிய விசாரணை யேற்படும்பொழுது அந்த நாமரூபம் மறத்தில் மறைந்துவிடுகிறது எல்லாருக்கும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறதல்லவா! அஃதேபோல், பார்முதலாக ஏற்பட்ட பூதக்கூட்டங்கள் அவைகளின் ஆதிகாரணமாகிய பரத்தை மறைத்தது. அந்த ஆதிகாரணமாகிய பரத்தைப்பற்றிய விசாரணை யேற்பட்டபோது அதிலிருந்துண்டான தத்துவகோடிகளெல்லாம் அந்தப் பரத்தில்தானே ஒடுங்கி மறைந்தன. ஜலமின்றி எப்படி நதியில்லையோ, அப்படிப்போல ஈசுவரன் கருணையின்றி பிரபஞ்சம் நடைபெறுவதில்லை. ஆதலால்தான் கடவுளுக்குக் "கருணா சமுத்திரம்" என்று பேர்.

* * * * * * *

இந்த கருணைக்கடலாகிய பகவான் கல்லால நீழலில் உட்கார்ந்து சனகாதி நால்வருக்கும் ஞானோபதேசம் செய்துகொண்டிருக்கையில் அவருடைய அசைவற்ற தன்மையைக் காட்ட வேண்டி நிர்விகல்ப சமாதியிலிருந்து ஞானமுத்திரை சாற்றியருளிநின்றார். அப்பொழுது பிரபஞ்சமெல்லாம் நிர்விகல்பமடைந்து ஆணொடு பெண் சேராமல் உலகப்பிரவிருத்தி நின்றுவிட்டது. இது தேவர்களுக்கு ஆபத்தாகமுடிந்தது. அந்த சமயத்தில் தேவர்களெல்லாம் ஒன்றுகூடி காமனை ஏவிவிட, அவன் தன் புஷ்பபாணத்தைப் பரமேசுவரன்மேல் எய்து அவர் சமாதியைக்கலைத்து காமசேஷ்டையுண்டுபண்ணப் பார்த்தான். அப்பொழுது பரமன் தன் நெற்றிக்கண்ணை (ஞானக்கண்ணை) விழித்துப்பார்க்க காமன் தீப்பட்டெரிந்து

பிடிசாம்பலாகப் போய்விட்டான். அந்த சாம்பலையெடுத்துப்பிடித்து பெரிய பிள்ளையாராகிய விக்னேசுவரர் ஒரு பிம்பமாகச்செய்தார். பரமன் பிள்ளையார் திருவிளையாட்டைக் கடைக்கண்ணால் பார்த்துமகிழ, அவருடைய அமிர்தக்கண் பட்டமாத்திரத்தினாலே அந்தபிம்பம் உயிர்பெற்று எழுந்துவிட்டது. அவன் பண்டைய ரூபங்கொண்டு பரமனிடத்துப் பகைபாராட்டின சித்தனாக விருந்ததனால் அவனுக்கு "பண்டாசுரன்" என்கிற பேர் கிடைத்தது. இவன் தபவியற்றி ஸ்ரீ தேவியினாலன்றி வேறு யாராலும் தனக்கு மரண ஹிம்ஸை யுண்டாகாதபடி வரம் வாங்கினான். அந்த வரம் பெற்ற கெர்வத்தினால் மமதைகொண்டு திரிலோகங்களையும் தன்வசமாக்கி தேவர்களையெல்லாம் நடுங்கியோடச் செய்தான். அந்த சமயத்தில் தேவர்களெல்லாரும் லோகமாதாவாகிய பரமேசுவரியைக்குறித்து தபஸ்செய்து வரம் கிடக்க அந்த ஸ்ரீமாதா "சித்-அக்னிகுண்ட ஸம்பூதை" யாகக்கிளம்பி "தேவகாரியத்தைச் சாதித்துக்கொடுப்பதற்காக" அவதாரமானாள்.

* * * * * * *

அப்படி யவதாரமான ஸ்ரீதேவி பண்டாஸுரனை வதை செய்யச்செய்த யுத்தம் ஒன்பதுநாள் நடந்தது. ஆகலால்தான் அதற்கு நவராத்ரியென்றுபேர். 'இராத்ரி' யென்பது மாயாஸஹிதமான தேவிக்கு மாறுபெயர். நவாம்சங்களுடன்கூடிய தேவி பண்டாசுரனையெதிர்த்து வதம்செய்த யுத்த வைபவத்தைக் கொண்டாடுவது நவராத்திரி யுற்சவமாம். இந்த ஒன்பதுநாள் யுத்தமும் வெகு அற்புதமாயிருக்கும். பத்தாம் நாளாகிய விஜயதசமியிலே தேவி தன்னுடைய ஆயுதங்கள் எதனாலேயும் பண்டாசுரன் மாய்வதாயில்லையென்று கண்டு அன்பேயவனாய் விளங்கும் காமேசுவரனை மனதிற் சிந்தித்து காமேசுவராஸ்திரப் பிரயோகம் செய்ய அதனால் பண்டாசுரன் மடிந்தான். காமேசுவரியும் ஜயபேரிகை முழங்கக்கொலுவீற்றிருப்பாளாயினாள். அப்பொழுது ரதிதேவிவந்து புலம்ப, அவளுக்கு அபயங்கொடுத்து காமனை அநங்க ரூபனாகவிருந்து அவள் கண்களுக்குமட்டும் புலப்படுவோனாக விருக்கச்செய்து அவளை அகமகிழ்வித்து தான் காமேசுவரரைமணந்து, பார்வதி தேவியாரைவிட்டுப் பிரிந்திருந்த பரமேசுவரனை அவருடன் கூட்டிவைக்க மன்மதனுக்கு மறுபடியும் தன்னுடைய வரப்பிரஸாதமளித்து குமார ஸம்பவத்துக்குக் காரணமாக பார்வதி பரமேசுவரைக்கியம் உண்டாக அவர்களிருவருக்கும் கலியாணம் செய்துவைக்கக் காரணமானாள். இதுதான் தேவகாரியத்தைச் சாதித்துக்கொடுத்தது.

* * * * * *

அப்படி உற்பத்தியான சண்டை நடக்கிற நாலாம்இரவு ஜர்மன்கப்பல் ஒன்று, "எம்டன்" என்னும் பேருடையது, எப்படியோ வங்காளக் குடாக்கடலில் வந்து நுழைந்துகொண்டு,

> "கல்லுளிமுண்டன் போற'வழி
> கதவுகிதவெல்லாம் தவிடுபிடி."

யென்கிற கதையாக த்வம்ஸம் செய்துகொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தது. ஒருவாரம் 10-நாளைக்கு முன்பு இந்த எம்டன் என்னும் ஜர்மன் கப்பல் (Cruiser) ஜெகந்நாதம் என்கிற புரிநகருக்கு எதிரில் 5-கப்பல்களைப் பிடித்து அவைகளை உடைத்துத் தகர்த்து மூழ்க அடித்துவிட்டது. இரங்கூனுக்குப் போகிறவழியில் மற்றொரு கப்பலைப்பிடித்துக் கொள்ளை யடித்துவிட்டது. இவ்வளவுசெய்தும் அதன் கொட்டத்தை யடக்குவாரின்றி அது வங்காளாக்குடாக்கடலில் காட்டு ராஜாவாகத் திரிந்துகொண்டிருந்தது. போகிறபோக்கில் செவ்வாய்க்கிழமையன்று இராத்திரி சென்னைத் துறைமுகப் பக்கம்வந்து அது ஒரு பிரிடிஷ் காவல்கப்பல் என்றும் அதன்பேர் 'நியூகாஸில்' என்றும் மாறாட்டமாக 'ஸிக்னல்' (குறி) காட்டி 'கடலில் பயமில்லை' யென்கிற அபயமும் கொடுத்துவிட்டு, துறைமுகத்துக்குத் தெற்கேசென்று 7000 கஜ தூரத்திலிருந்து 30-40 குண்டுகளைவிட்டுப் பட்டணத்தைத் தகர்க்கமுயன்று எல்லாரையும் பயத்துக் குள்ளடுத்திவிட்டதன்றி மூன்றுபேர்களுக்கு உயிர்ச்சேதமும் 16-பேர்களுக்குக் காயமும் உண்டுபண்ணி 3-லக்ஷம் ரூபாய்க்குச் சேதமும் விளைத்துப்போய்விட்டது.

சீதாதேவி ஸ்ரீராமருடைய சந்தேகம் தீர்க்கத் தீக்குளித்தெழுந்ததுபோல், சென்னைமாதேவியும் ப்ரிடிஷ் சாதியார் சந்தேகம்தீர இந்த மஹாபாரத யுத்தத்தில் தீக்குளித்தெழுந்தாள் போலும் 3-உயிர்களைக்கொடுத்து 3-லக்ஷத்துச் சொச்சம் நஷ்டமும்பட்டுத் தீக்குளித்தெழுந்தாள்.

இந்தக்கதையை நேரில்கண்டு கேட்டவர்களும், வாசிக்கக் கேட்டவர்களும் ஸ்ரீதேவியின் விளையாட்டில் இதுவுமொன்றென்று லலிதாசோபனம் பாடிப் பயம் நீங்கி அபயவரதம்பெற்று ஆபத்துக் கஞ்சாதநெஞ்சம் படைத்தவர்களாய் தைரியசாலிகளாயிருந் துய்வாரானார்கள். இக்கதையைக்கண்டது, கேட்டது, உள்ளது உள்ளபடி உண்மையாய் எழுதலானேம். குழந்தைகளே பிக்ஷடனர் பாடின பாட்டு ஞாபகத்திலிருக்கிறதா ?

> " தர்மமே ஜயமென்ற பிக்ஷை கேட்டேன்
> தரணியிலே கலிமுற்றும் காலமாச்சு
> பரணியிலே அதிஷ்டானம் கூடலாச்சு
> அரணியிலே அக்னியும் தோன்றலாச்சு,
> ஆன்மாக்கள் ஈடேறும் மார்க்கம் கேண்மின்:—
> "ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
> ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
> மாசுபடிந்த மனத்தினுறவறுமின்கள்
> தூசுபடிந்த தபசிலன்தய வையரவினுறவெனவே
> கண்டஞ்சியோடிப்பிழைமின், பிழைமின் குழையீரே"

அதர்ம அக்கிரமங்களுக்கு அஞ்சியோடிப் பிழைக்க வேண்டுமேயன்றி வெடிகுண்டிற்கும் பிடிசண்டைக்கும் ஓடிப்பிழைக்க வேண்டியதில்லை. இருந்த இடத்திலிருந்து ஒருகை பார்த்தால் வந்ததுவரட்டும். என்று தீரமாயிருப்பதே ஆண்தன்மைக்ழகு. வருவனவந்தே தீருமானாலும் தைரியத்தைக் கைவிடலாகாது. தைரியமிருந்தால் எல்லாவற்றையும் வென்று வீரக் கொடிகட்டிப் பிழைக்கலாம். இதுவே மனுஷத்தனம். மற்றப்படி பயந்தோடுவது பேடித்தனம். இதை யெல்லாரும் இச்சமயம் அறிந்து பிழைக்கவேண்டும். கோழை மனதைப்போல் குடிகெடுக்கும் பகைவேறில்லை.

| | | |
|---|---|---|
| ஆனந்தஹு கன்யாமீ (நவராத்ரி) மஹாநவமி. | } | இப்படிக்கு, உங்கள் அன்புள்ள குட்டியண்ணா. |



## * TRANSFUSION COLUMN.

[" If a combined, honest and sustained effort is made to *transfuse* (not merely *translate*) good English... into Tamil, the effect will be to assist and stimulate greatly the study of both languages."—*Dr. G. U. Pope.*]

### மொழிப்பெயர்ப்பு வித்தை.

(1) "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."

Thought and Language are the very eyes (*i.e.*, true expressions) of the soul.

(2) " விண்ணவனை நண்ணினார்க் கெண்ண மெல்லாம் கண்ணாகும்."

> " The thoughts of those that have approached *the Light*.
> Are all transformed into *visions bright*."

---

THE CIVIC IDEAL OR " THE GREAT CITY."

> Where the city of the cleanliness of the sexes stands.
> Where the city of the healthiest fathers stands.
> Where the city of the best-bodied mothers stands.
> There the Great City stands.
> A Great City is that which has the greatest men and women.
>
> —Walt Whitman.

---

### ப்ரஹ்மபுரம் எங்கே?

> தர்மபுரமெங்கேயோ அங்கே காண் ப்ரஹ்மபுரம்
> தர்மபுரம் என்பதுவும் சதிபதிகள் தூயமனம் [மாவான்
> சதிபதிகள் தூய்மையினால் அய்யன் அப்பன் சுக கன
> சதிபதிகள் தூய்மையினால் அம்மையுடல் பலமடையும்
> அம்மையப்பன் சதிபதியாய் தர்மம் தலைகாக்குமிடம்
> செம்மையாகஎங்கேயுண் டேஅங்கேயுண்டுப்ரஹ்மபுரம்
> ப்ரஹ்மபுரம் என்பதுவும் மஹத்துக்களாம் ஸ்ரீபுருஷர்
> அஹத்தூய்மை குறையாமல் அன்பில்வாழும் இடமே
> இவ்விதமாயுள்ளவிடம் எங்கேயுண்டோ [யாம்!
> அங்கேயுண்டு நிச்சயமாய் "ப்ரஹ்மபுரம்"
> என்று சொல்லும் பெரிய' புகழ்மாநகரம்.

* " No exercise of faculty is better and nobler for a *real* man than that of struggling with great thoughts, and labouring to express them in such a way that they shall reach the heart, instruct the mind, stimulate the rest feelings, and elevate the whole being of their know men around them !"—*Rev. Dr. G. U. Pope* on the ' Vivakachintamani Series."

## THE FALL OF ANTWERP.

"TRAGEDY OF BELGIUM."

"The Main British and Belgian Force with King Albert has reached Ostend safely. Refugees state that King Albert is wearing his arm in a sling."—*Cablegram from London, October 11, 6-40* A.M.

A German communique says :—"Antwerp was evacuated by the British and Belgians before the Germans entered it. Pourparlers for surrender were conducted with the Burgomaster."—*Cablegram from Amsterdam, October 11, 12-20* P.M.

"TRAGRDY OF BELGIUM."

"King Albert has good reason to be proud of the heroic achievements of his people. But never was there a ruler less intoxicuted by the pomp and circumstaoce of war. Never was there a pacifist more deadly moved by the horrors of "civilised warfare."

He impressed me as overwhelmed by the agony and anguish of martyred Belgium. His anxious sympathy for the suffering of his people was reflected in his every word and expression. It had been decreed one hundred years after Waterloo that Belgium should have become once more the battlefield of nations. It had been decreed that millions of soldiers should ravage her territory, sack her villages, destroy her cities.

What will remain, the King exclaimed in despair, of Belgium's thriving industries, of her commerce so laboriously built up ? Brussels and Liege and Namur in the power of the enemy, Malines, Louvain, Aerscht destroyed, the whole of the territory given over to plunder—what will remain of my sorely tried country ? And what further excesses will these barbarians be guilty of maddened by the stubborn resistance of our gallant army ? When victory finally decides in our favour what wreckage will have accumulated ? If the Germans were to continue their depredations for a few more months the country would be a desert."—*Dr. Charles Savolea in the Daily Chronicle.*

## ஆன்ட்வெர்ப் பிடிபட்டது.

பெல்ஜியத்தின் பிரலாப ஸ்திதி.

ஆன்ட்வெர்ப் நகரம் ஜர்மானியர் கையில் விழுந்துவிட்டது. அதைக்காத்துவந்த பிரிடிஷ், பெல்ஜியன் சைனியங்கள் கோட்டை பிடிபடும் என்பது தெரிந்ததும், எண்ணெய்க் கிடங்குகள், தானியக் களஞ்சியங்கள் எல்லாவற்றிற்கும் நெருப்புவைத்துக் கொளுத்திவிட்டு கரைதுறைப்பட்டணமாகிய ஆஸ்டெண்ட் வந்துசேர்ந்து விட்டார்கள். பெல்ஜியர்களின் ராஜவிஷ்றமமாகிய ஆல்பர்ட் அரசர் கடைசிவரையில் கோட்டைக்குள்ளிருந்து நகரத்தைக் காக்கவேண்டிய முயற்சியெல்லாம் செய்து இனி அங்கிருப்பது சாத்தியமில்லையென்று கண்டபின் ஆஸ்டெண்ட் துறைமுகப்பட்டணத்துக்கு வந்துவிட்டார்.

இரணவீரசிங்கம் என்னும் பேர் ஆல்பர்ட் அரசருக்கு நன்றாய்ப் பொருந்தும். அவர் வயதில் குறைந்தவராயினும் மதியிலும் தீரத்திலும் இராணுவ சாமர்த்தியத்திலும் நிறைந்தவராக விருக்கிறார். ஜெர்மனியின் சூழ்ச்சி பலிக்காமற்போனது அவர் ஒருவராலேதான் என்று சொல்லவேண்டும். சண்டை யாரம்பிக்க 18-மாதங்கள் முந்தியே ஒரு பெரிய யுத்தத்திற்கு அடிப்போட்டு வருகிற சமாசாரம் அவருக்கு இரகஸியமாய்த் தெரியவந்தது. மதியூகியாதலால் உடனே தனது இராஜ்யத்துப் பார்லிமெண்ட் சபைமெம்பர்களைக் கூட்டி இரகஸியமாக ஒரு சபைவைத்துக்கொண்டு ஜெர்மானியர்களுடைய சித்தப் போக்கைத் தெரிவித்து பெல்ஜியம் எல்லைப் புறத்திலுள்ள கோட்டைகளை யெல்லாம் பலப்படுத்தி இராணுவங்களையும் சீர்ப்படுத்திவந்தார். இது 1912ஞு நவம்பர் மாசத்தில் நடந்தது. அவருடைய பெருமுயற்சியாலும் மதியூகத்தாலும் ஜனப்பிரதிநிதிகளுக்கு அவரிடத்திலுள்ள பெருநம்பிக்கையாலுமே சமுத்திரம்போல்திரண்டுவந்த ஜெர்மன் சைனியங்களை லீஜ், நாமூர் தாண்டவிடாமல் இரண்டுவாரம் வரையில் நன்றாகத் தடுத்து நிறுத்துவது சாத்தியமாயிற்று.



அவர்மட்டும் மதியூகத்தோடும் முன்யோசனையோடும் "வருமுன்காப்போன்" கதையாக வேண்டிய ஏற்பாடுகள் செய்து அவற்றையும் வெளிவிடாமல் இரகஸியமாகக் காப்பாற்றி வந்திருக்காவிட்டால், ஜெர்மன் சைனியங்கள் இத்தனைகாலம் பிரான்ஸில் நுழைந்து அத்தேசத்தைப்பிடித்துக்கொண்டு அடுத்ததேசங்களையும் "உங்கள்செய்தி யென்ன?" என்று கேட்டிருப்பார்கள். இரணவீர சிங்கமாகிய ஆல்பர்ட் அரசருடைய மதியூக விசேஷத்தாலும் தன் தேசத்துப் பிரஜைகளைத் தன்னுடைய அன்பும் ஆதரவும் நிறைந்த நடத்தைகளால் தன் வசப்படுத்தி அரசும் குடியும் ஒருமனப்பட்டுழைப்பது சாத்தியமாகச் செய்திராவிட்டால், பெல்ஜியம் தேசத்து அரசர்க்குரிய குடி, படை, அரண், நாடுநகரங்களெல்லாம் இப்படி வீராவேசங்கொண்டு, மஹாபிரளயம்போல் வந்து தாக்கிய ஜெர்மன் சைனியங்களை யெதிர்த்து, வெள்ளத்துக்கு அணைகோலினாற்போல் அவர்களுடைய ஆரவாரம் அடங்கவும், அவர்களுடைய மனோரதமும் முன்யோஜனையோடு அவர்கள் செய்த ஏற்பாடும் பயன்படாது போகவும் செய்த அற்புத வீரச்செயல்கள் பிரயோஜனப் படாதொழிந்திருக்கும்.

ஜெனரல் லீமான் பிடிபட்டபொழுது அந்தச் சமாசாரத்தைக் கேட்ட நமக்கு கண்ணில் நீர் தளும்பியது. அவருடைய சுத்தவீரச் செயல்கள் மஹா அற்புதமாயிருந்தன. ஆனாலும் இரண்டேகுண்டுகள் வெடிதீர்ப்பதினால் ஒரு கோட்டை முழுவதையும் இடித்து ஹதம் செய்துவிடத் திறம்வாய்ந்த பீரங்கிகளை யெதிர்த்துநிற்க எந்தமனிதனால்தான் முடியும்? ஜெர்மானியர்கள் க்ருப் செய்த முற்றுகை பீரங்கி யென்று ஒருவகைப் பெரிய பீரங்கி செய்திருக்கிறார்கள். அது இதுவரையில் செய்திராத அற்புத பீரங்கி. சைனிய பலத்தினால் பிடிக்கமுடியாத லீஜ் கோட்டைகளைத் தகர்க்கவென்று அந்த மஹாபெரிய பீரங்கியைக் கொண்டுவந்து நாட்டினார்கள். அதைத் தரையில் இழுப்பது சாத்தியமின்றி ரயில் தண்டவாளம் போட்டு அதன்மேல் இழுத்துக் கொண்டுபோக வேண்டியதாக விருக்கிறதாம். அவ்வளவு கனமுள்ளது. அந்தப் பெரிய பீரங்கியினால் நாலுகுண்டு போட்டார்களாம். அதில் இரண்டு குறிதப்பிப் போய்விட்டது. மற்றிரண்டு குண்டுகளும் கோட்டையை யிடித்துத் தகர்த்து நிர்த்தூளி பண்ணும் வேலையைச் செய்துமுடித்துவிட்டன. இப்படிப்பட்ட பீரங்கிக்கு எதிரே எந்த சைனியம், எந்தக் கோட்டைதான் நிற்கமுடியும்! இராவணன் தன்புஜபலத்தால் கைலாஸ பருவதத்தை வேரோடு பிடுங்கித் தூக்கினதாகப் புராணங்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம், அவ்வளவு பலமுள்ள அவனும் சாதாரண பீரங்கிகளுடைய குண்டுகளா லெல்லாம் தகர்க்கப்படாத மஹாபலமுடையதாய்க் கட்டிய வலுத்தகோட்டையை, இரண்டு குண்டினால் 5-நிமிஷத்தில்முற்றும் நிர்த்துளியாக்கிய இந்த பீரங்கிகளைப்போல், ஒரு கோட்டையை நெறித்துத் தகர்த்ததாகக் கேட்டதில்லை.

புஜபலத்தால் ஆகாத காரியத்தை ரத,கஜ, துரக, பதாதிகளென்கிற படைகள் எவற்றாலும் முடியாதென்றுகண்டு, அற்புதவலியுடைய கோடியானை பலமுடைய பீரங்கிகளைக் கொண்டு தகர்த்து விடுவதாகத் துணிந்துவிட்டால் அப்புறம் மனுஷப் பிரயத்தனத்தால் ஆவதென்ன விருக்கிறது. ஆன்ட்வெர்ப் முற்றுகையில் இதிலும் பெரிய 17-அங்குல குண்டு வெடி தீர்க்கக்கூடிய பீரங்கிகளை யுபயோகித்தார்களாம். இப்படிப்பட்ட இராக்ஷஸபலத்தை மனுஷபலத்தால் எதிர்ப்பது அசாத்தியமே. தெய்வபலத்தினால் தான் எதிர்க்க வேண்டும். தெய்வபலம் பூரணமாக விளங்க தெய்வத்தினிடத்தில் இருக்கவேண்டிய பக்தியும் நம்பிக்கையும்தான் குறைவாயிருக்கிறது. பூரணபக்தியுண்டானால் சாணிக்கியனைப்போல், ஒருவன் தான் நிராயுதபாணியாகவிருந்துகொண்டே, இவ்வளவு இராக்ஷஸ பலத்தையும், தன் கையைக்கொண்டே தன் கண்ணைக் குத்துவதுபோல், அதற்கவே

யெதிராக நிற்கத் தந்திரமாய் முடுக்கிவிட்டு "அஹம்பாவத்தாலே யழிந்தான் துரியோதனன்" என்றதுபோல, அவர்களுடைய அஹம்பாவச் செறுக்கைக்கொண்டே அவர்களுடைய இராக்ஷஸ பலத்தைக் குலைத்து நாசமாக்கலாம். அதற்கு அஹம்பாவத்தை வென்றவருடைய மதியூக சாதகமும் அவர் வாக்கை குருவாக்காகக்கொண்டு மதித்து நடக்கும் அரச சிங்கமும் வேண்டும். பெல்ஜியம் தேசத்து ராஜஸிம்ஹமாகிய ஆல்பர்ட் அரசர் அர்ச்சுனனைப்போலவே பரிபக்குவம் வாய்ந்தவராக விருக்கிறார்: அவரைக்கொண்டே பகவான் இம்மஹா பெரிய பார்-ஹத யுத்தத்தை நடத்தத் திருவுளம்கொண்டார் போலும் தோற்றுகிறது. "அவர்தான் நாடு நகரெல்லாமிழந்து ஏதோ ஊனம்பட்டு கையைத்தூளியில் தொங்கவிட்டுக்கொண்டு, ஆஸ்டெண்ட பட்டணம் வந்திருக்கிறாரே! பகவான் கிருபை செய்வது நன்றாகவிருக்கிறது!" என்று சிலர் லேசாகப்பேசலாம். கடவுளுடைய திருவுளத்தை யறிவது இந்தப் பேய்மானிகள் சொல்வதைப்போல் அவ்வளவு எளிதல்ல. அவருடைய எல்லாம்வல்ல சக்தியின் குணமும் மஹிமையும் எளிதில் உணரத்தக்கதல்ல. மக்கள், தேவர், நரகர் எல்லாருள்ளத்திலும் அவர் அந்தர்யாமியாக விருக்கிறவர்: ஆதலால் அவருக்கு அவரவர்கள் அந்தக்கரணசுத்தத்தை யறிந்து படியளப்பது நமக்குத் தோன்றுவதுபோல் அவ்வளவு அஸாத்தியமான காரியமில்லை. இம்மி குறையாமலும் ஏறுமலும் எல்லாருக்கும் ஸரிஸமமாய்ப் படியளக்கும் சக்தி யவருக்குண்டு. அவருடைய மஹாசக்தி பண்டாசுரனை யெதிர்த்து அவன் சைன்யங்களை யெல்லாம் ஹதம் செய்தும் அவனை வதம் செய்ய முடியாமல்தயங்கிற்று. பராசக்தியே, இப்படி தன்னாலாகாத காரியமும் ஒன்றுளதென்றுணர்ந்து பகவானைச் சிந்தித்துத் திருவுளத்திருத்திக் காமேசுவராஸ்திரம் ஒன்றினால் மட்டுமே பண்டாசுரனை வெல்வது சாத்தியமென்று கண்டாரானால் அவருடைய சிருஷ்டியம்சமாகிய மனிதனுடையசக்தி யாலாவதென்ன விருக்கிறது?

"அவனன்றி யோரணுவும் அசையாது"

என்பதை இக்காலத்தோர் கலியுக தர்மத்திலும் அது உண்மையென்றுணரல் வேண்டும். அப்பொழுது தான் (Crass Materialism) என்று சொல்கிற கேவலம் லோகாயிதமாயுள்ள மதம் குன்றி தெய்வசிந்தனையும் தெய்வபக்தியும் உண்டாக அனுகூலம் பிறக்கும். அதுவரையில் எல்லாரும் கர்மபலனை யனுபவித்தே தீரல் வேண்டும். "வர்மமப்பா வெல்வதில்லை, வாயாலொன்றுமாவதில்லை" யென்னும் அருள்வாக்கின் உண்மையை உலகத்தோர் உணர்ந்துய்ய வேண்டும். "அரசனெவ்வழி குடிகளவ்வழி" யென்பது மனுஷதர்மமாதலால், உலகத்திலுள்ள அரசர்களெல்லாம் அஹச்செறுக்கடைந்து மமதைகொண்டிருப்பது சரியல்லவென்று பகவான் திருவுளம் பற்றினதுபோலும் தோன்றுகிறது. பராசக்தி பலமெல்லாம் அவள் அன்புருவாயிருப்பதிலிருக்கிறதே யன்றி வேறெதிலுமில்லை. "ஏகைவசக்தி" யென்றபடி பராசக்தியொன்றேயானாலும், "பிரயோஜனார்த்தம்" அந்த சக்தி "சதுர்விதாபூத்"—நாலு விதத்திலும் பிரவர்த்தித்து போககாரணமாகவும், புருஷகாரணமாகவும், குரோதகாரணமாகவும், ஸமர்-யுத்த காரணமாகவுமிருந்து பகவத் சங்கல்பத்தை நிறைவேற்றி வைக்கிறாள்.

"அவளன்புக் கோரளவில்லை
அருளுக்கோர் குறைவில்லை
அடுத்தாற் கெடுப்பதில்லை
அவமதித்தாற் தொடுவதில்லை
'அன்பர்க்கன்பான மெய்யளவள்' செய்யும்
அற்புதலீலைகளையென் சொல்வேன் தோழி!"

யென்று பாடியிருக்கிறார் ஸ்வானுபவச் செல்வர்களான பெரியோர்களும்.

"அன்பர்க்கன்பான மெய்யளவள்" ஆகையினாலே, அவளிடத்து பக்தி சிரத்தையுள்ள பெல்ஜியம் தேசத்து ஆல்பர்ட் அரசரை அவள் கை



சோர விட்டுவிடமாட்டாள். இதற்கு அத்தாக்ஷி வேண்டுமெனில் அந்த அரசசிங்கத்தின் திருவுளமே சாக்ஷி. அவர் ஆன்ட்வெர்ப் நகரில் முற்றுகை போடப்பட்டிருக்கும் பொழுது, ஒரு பத்திரிகையின் நிருபர் எழுதிய புஸ்தகமொன்றைப் படித்துவிட்டு அவர் ஆன்ட்வெர்ப் நகருள் தானே யுத்த-நிருபராக விருக்கிறாரென்றுணர்ந்து அவரை வரவழைத்து அவருடன் தன் உள்ளத்தை விண்டு ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தாராம். அரசர் வெளியிட்ட அந்தரங்க விஷயங்களை யெல்லாம் அவர் வெளியிடுவது சாத்தியமில்லையானாலும் அவர் ஆல்பர்ட் அரசரின் மனோநிலை விளங்க வேண்டியமட்டும் எழுதி அவருடைய பத்திரிகைக்கனுப்பி யிருக்கிறார், அந்த பாகத்தை இதன்முகட்டில் எடுத்து அச்சிட்டிருக்கிறோம். அதிலிருந்து அவர் தம் குடி-படை-யரண் நாடுநகரெல்லாம் சிதைந்து பாழாயிற்றென்று என்னதான் துக்கித்தாலும் இவ்வளவு கஷ்ட நஷ்டங்களாலும் சிறிதேனும் உள்ளமுடைந்தவராகக் காட்டவில்லை. அதுதான் அவருடைய உள்ளப்போக்கைக் காட்டுகிறது. இதுவரையில் அவரை "இரணவீரஸிம்ஹம்" என்றுன்னி மதித்துவந்தோம். இப்பொழுது அவர் இரணகளத்தில் காட்டிய வீரத்திலும் தர்மமேஜயமென்கிற மெய்யுணர்வில் ஊன்றிய தீரம் பெரிதாயிருக்கிறது. வீராதிவீரனிலும் தீராதிதீரன் பெரியவன். அவரது உள்ளமுணர்ந்து கைப்பற்றிய தீரம் வீண்போகாது. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்." யுத்தகளத்தில் நடக்கும் மெய்ச்சண்டையிலும், தந்திமூலமாக நடக்கும் பொய்ச்சண்டை பெரிதாகவிருக்கிறது. திரிநேத்திர பாக்கியம் இல்லாத ஜனங்கள் தந்தி மூலமாய் வரும் சமாசாரங்களில் பொய்யெது மெய்யெதுவென்று ஆய்ந்தெடுத்துத் தேறச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆல்பர்ட் அரசர் அர்ச்சுனனைப்போல் தெய்வபக்தியுடையவராதல்பற்றியும் அவர் உள்ளத்துணர்வில் தெய்வபக்தியும் அதன்மூல்மாய் ஸித்திக்கும் பகவத் கடாக்ஷவீக்ஷண்யமும் இருப்பது நிச்சயமாகத் தெரியவந்திருப்பதாலும் அவருள்ளம் போய்க்காது என்கிற தீரம்கொண்டு கடைசியில் எப்படியும் "தர்மமேஜயம்" என்கிற ஜயக்கொடி நாட்டப்பெறும் என்று உறுதியாய் நம்பியிருக்கிறோம். இவ்வளவுதான் சொல்லலாம். இதற்குமேல் எழுதக் கைகயோடவில்லை, மனதும் பெல்ஜியர் அரசன்படும் துயரத்திலாழ்ந்து அர்ச்சுனனைப்போல் அவரடைந்த சோகத்திலீடுபட்டுச் சிந்தனையொழிந்து கிடக்கின்றது. இதுவரையில் "அர்ச்சுன விஷாதயோகம்" என்கிற முதல் அத்தியாயத்துக்குச்சரியாக "ஆல்பர்ட் விஷாதயோகம்" என்றுசொல்லும் பெல்ஜியர்கள் அரசன் சோகமடைந்த கட்டம் வரையில்தான் சண்டை நடந்திருக்கிறது. இனி என்ன நடக்கப்போகிறதோ அதை "ஸஞ்சயன்" போல் யார் சொல்லப்போகிறார்களென்று அஹக்கண் குருடான உலக ஜனங்கள் திருதராஷ்டிரனைப்போல் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

முன்னம் "கடவுளை நம்பினோரைக்" கட்டையில் கட்டியெரித்து ஹிம்ஸித்தார்கள், இப்பொழுது கடவுளையே கட்டையில் கட்டியெரிக்கத் தயாரா யிருக்கிறார்கள் போலும் லௌகிக சித்தம் மதர்த்திருக்கிறது. கட்டையென்பது ஜடப்பொருள். கட்டையில் கட்டியெரிக்கும் எரி தீயின் ஜ்வாலைதான் (Crass Materialism) கேவலம் லோகாயதசித்த பாவனையாக உலகைப் பற்றிச் சுட்டெரிக்கிறது. இதெல்லாம் கடவுள்செய்யும் லீலையாக விருக்கிறது! முன் அரசர்கள் க்ஷத்திரியதர்மத்தை யனுசரித்து அவர்கள் மட்டில்சண்டைபோட்டு யார்ஜயித்தாலும் குடிகளைக்காத்துவந்தார்கள். இப்பொழுதுகலிகாலமஹத்துவத்தால் வருணாசிரமதர்மம் மாறுபட்டு எங்கும் "குடியாசு" பாவம் மிகுந்திருப்பதால் குடிகளும் சண்டையினாலுண்டாகும் கொடுமைகளை யனுபவிக்கிறார்கள். யுத்தகளத்தில் படும் துயரைவிடதூரவிருந்து யுத்தசமாசாரங்களைக் கேட்பவர்கள் துயரம் பெரியதாயிருக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு "யுத்தாவேசம்" என்கிற யுத்தஜ்வரம்பிடிக்காததினால் என்கலாம். யுத்தபைத்தியம் பிடிக்காதவர்கள் (depression) என்கிற சைத்திய ஜ்வரம்கண்டு வருந்துகிறார்கள்.

## MADRAS AND THE WAR.

(By A School boy.)

## சென்னைமாநகரும் யுத்தமும்

(ஒரு பள்ளிப்பையன் எழுதியது.)

சென்னைமா நகரவாசிகள் யுத்தத்தில் காயம் பட்டவர்களுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் தங்களாலியன்றமட்டும் பணவுதவிசெய்தும் கூட்டங்கள்கூடி தங்கள் ராஜபக்தியை வெளியிட்டும் தாங்கள் இச்சண்டை காலத்தில் அதன்கஷ்ட நிஷ்டூரங்களைப் பொறுத்துக்கொண்டு அரசாங்கத்தாருக்கு உதவிசெய்ய ஆயத்தர்களாயிருப்பதை வெளியிட்டார்கள். அரசாங்கத்தாரும் இந்தியர்களுடைய ராஜ பக்தியைக்கண்டு சந்தோஷமடைந்தார்கள்.

சண்டை நடக்குமிடங்களில் எப்படி ஜனங்கள் ஊரைவிட்டு ஓடினார்களென்றும், அவர்கள்வீடுகள் கொளுத்தப்பட்டதென்றும், நாம் பேபர்களில் படிக்கிறோம். நாம்நேரில் அந்த கஷ்டங்களைக்கண்டனுபவிக்க வேண்டுமென்று ஈசுவரன் கிருபை கூர்ந்தாப்போல், சென்னைமாநகரானது செப்டம்பர்மாதம் 22-ந்தேதி செவ்வாய்க்கிழமை ராத்திரி ஒன்பதரை மணிக்கு "எம்டன்" என்னும் ஜர்மனி சண்டை கப்பலால் தாக்கப்பட்டது. "எம்டன்" என்னும் ஜர்மனி சண்டைக்கப்பலானது இன்னொரு கப்பலோடுகூட வங்காளக் குடாக்கடலில் வந்து நுழைந்துக்கொண்டு ஸ்வதேசம் திரும்பிப் போகமுடியாமல் அவதிப்படுகிறது. அது இங்கிலீஷ் சண்டைக்கப்பலால் பிடிக்கப்படுமென்பதற்கு சந்தேகமில்லை. இது நிச்சயமாய்த்தெரிந்த "எம்டன்" கப்பலானது தன்னால் எவ்வளவுமட்டும் த்வம்ஸம் செய்ய முடியுமோ அவ்வளவு மட்டும் த்வம்ஸம் செய்கிறது. அதனுடைய விஷமங்களினால் ஜனங்கள் பீதியை யடைகிறார்கள். கப்பல் கூட்டங்களிலிருந்து அகஸ்மாத்தாய் பிரிந்து எதிரியின் கடலில் அகப்பட்டுக்கொண்டு தனக்கு மரணம் நிச்சயமென்று தெரிந்த ஒரு கப்பல் தான் சாவதற்குமுன் தன்னால் முடிந்தமட்டும் எதிரிக்கு கெடுதல் விளைவிப்போமென்று விளைவித்தால் அதனால் பீதியடையலாமா! சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரஜலம் முழங்கால்மட்டும் என்று கேள்விப்பட்டதில்லையா? இந்த எம்டன், கல்கத்தாவுக்கருகில் ஆறுவர்த்தகக் கப்பல்களை முழுக அடித்தது. பிறகு சென்னைத் துறைமுகம் வந்து பிரிட்டிஷ் கப்பலாகிய "நியூகாஸில்" என்னும் கப்பலின் கொடியை பறக்கவிட்டுக்கொண்டு தான் வங்காளக்குடாக்கடலை ரக்ஷிக்க வந்த பிரிட்டிஷ் கப்பலென்றுசொல்லி, "வங்காள குடாக்கடலில் அபாயமில்லை" என்று சமாசாரம் சொல்லிவிட்டு ராத்திரியில் நகரைத் தகர்த்தது. 22-ந்தேதி ஒன்பதரைமணிக்கு திடீரென்று குண்டுகேட்டது. பிறகு சுமார் இருபதுஜோடி குண்டுகள் ஒன்றின்பின் ஒன்றாக்கேட்டன. ஜனங்கள் பீதியை யடைந்தவர்களாய் அலங்கோலமாய்த் தெருவில்வந்து நின்றுக்கொண்டு இங்குமங்கும் ஓடினார்கள். எம்டன் கப்பலின் வெளிச்சமானது நன்றாகத் தெரிந்தது. எம்டன்போட்ட குண்டுகளுக்குப் பதிலாக காவிமேட்டிலிருந்து மூன்றுகுண்டுகள் அதிகாரிகளால் போடப்பட்டன. பிறகு எம்டன் தனதுவிளக்கை அணைத்துக்கொண்டு புதுச்சேரிப் பக்கம்போயிற்று.

சேதங்கள்.

1. குண்டுபட்டு இரண்டு போலீஸ்காரர்கள் இறந்து கிடந்தார்கள். அவர்களுடைய சவங்கள் மரணசோதனைக்காக எடுத்துக்கொண்டுப் போகப்பட்டன.

2. சமுத்திரத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்த, ரங்கூன், பின்லே ப்ளெய்மிங் கம்பெனியாரின் இரண்டு லக்ஷம் ரூபாய் பெறுமான கிரொஸின் எண்ணெய்க் கிடங்கு தீப்பற்றிக்கொண்டு எரிந்து போயிற்று. இதர நஷ்டங்கள் ரூபாய் $1\frac{1}{2}$-லக்ஷம் மொத்தம் $3\frac{1}{2}$-லக்ஷம்.

3. அவைகளுக் கருகிலிருந்த ஒருமகமதிய காவல்காரன் இறந்தான்.

4. அப்பொழுது அப்பக்கம் போய்க்கொண்டிருந்த ஒரு வாலண்டியர் கையில் காயமடைந்தார்.



5. சூளையில் கரையான்குட்டைக் கருகில் மூன்று கூலிக்காரஸ்திரீகள் பலத்த காயமடைந்தார்கள்.

6. துறைமுகத்தைச்சேர்ந்த நாலு வேலைக்காரர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்கள்.

7. கப்பலில் காயமடைந்த மூன்று வேலைக்காரர்கள் இறந்துவிட்டார்கள்.

8. சூளையில் வெங்கடாசல முதலிதெருவில் ஒரு குண்டுவிழுந்து வீடு விழுந்துவிட்டது. அங்கே ஒருவருக்குத்தான் காயம்பட்டது.

9. மேற்படிதெருவில் உரலில் இடித்துக்கொண்டிருந்த இரண்டு ஸ்திரீகள் கையிலும் காலிலும் காயமடைந்தார்கள்.

10. பட்டணம் போலீஸ் கோர்ட்டில் ஒரு கண்ணாடி உடைந்தது.

11. ஹைகோர்ட்டில் சில இடங்களில் சுவர்களைச் சேதப்படுத்தி யிருக்கிறது. ஜெனரல் போஸ்டாபீஸ் கட்டடத்திலும் சிறிது குறி பட்டிருக்கிறது. பட்டணத்தில் பல இடங்களில் குண்டுவெடித்த சல்லிகள் விழுந்துகிடந்தன. இதன் காரணமாக அறியாஜனங்கள் பயந்துக்கொண்டு தங்கள் தங்கள் கிராமங்களுக்குப் போகிறார்கள். சென்னைமா நகரில் சண்டை நடக்கப்பொகிறதென்று பயப்படுகிறார்கள். ஏதோ ஒருகப்பல் ஓடி ஒளிக்கும் போக்கில் சில குண்டுகளைப்போட்டதினால் பெரிய சண்டை நடக்குமென்று சொல்லலாமா? நாலு, ஐந்து நாள்களுக்குள் அறுபதினாயிரம் ஜனங்கள் பட்டணத்தை விட்டுப் போய் விட்டார்களாம். அதிகாரிகள் உண்மையான செய்தியை விளக்கிக்காட்டி பலபாஷைகளில் விளம்பரத் துண்டுகள் பிரசுரித்தாவது, தண்டோராப் போட்டாவது ஜனங்களுக்கு பயமில்லையென்பதை வெளியிட்டார்களானால் மிகவும் நன்றாயிருக்கும். சென்னைமாநகரின் தலைவர் உதகமண்டலத்திலிருந்து சென்னைவந்தது ஜனங்களுக்குத் தைரியத்தைக்கொடுத்தது. இப்பொழுது அவர்திரும்பிப் போகிறாரென்பதுஜனங்கள் பயப்படுவதற்கு இடம் கொடுத்திருக்கிறது. நமதுராஜப் பிரதிநிதி எம்டன் கப்பலைப்பிடிக்க, பிரிட்டிஷ் ஜப்பான்சண்டை கப்பல்கள் அதைத் துரத்திக்கொண்டிருக்கின்றனவென்றும் சென்னைமாநகரைக்காப்பாற்ற சண்டைக் கப்பல்கள் வந்துக்கொண்டிருக்கின்றனவென்றும் அபயம் கொடுத்திருக்கிறார். படித்தவர்கள் நிஜமான செய்தியை அறிந்தவர்களாயிருப்பதால்ராஜப்பிரதிநிதியின் அபயத்தினால் தைரியமாயிருக்கிறார்கள். படிக்காத கூலிவேலை செய்பவர்களும், தொழிலாளிகளும் என்ன செய்வார்கள்! அவர்கள் அவர்களுடைய தலைவர் செய்கிறபடி செய்கிறார்கள். அவர்கள் தலைவர் சென்னை வந்து சேதமான இடங்களைப்பார்த்தார். ஜனங்கள் தைரியமடைந்தார்கள். தலைவர்வந்தார்: "எம்டன்" கப்பல் பண்ணின] லூட்டியைப்பார்த்தார். இரண்டு நாளில் திரும்பிப்போகப் போகிறார் என்றால், ஓஹோ, அவர் "எம்டன்" மறுபடியும் வரப்போகிறதென்று போகிறார், நாமும் போவோமென்கிறார்கள். பரிதாபம்! தலைவர் இங்கு தங்கியிருந்து ஜனங்களுக்குத் தைரியம் கொடுத்தால் நன்றாயிருக்கும். படிக்காத ஜனங்கள் வீண்பயத்தினால் ஊர்களுக்குப் போவதைத்தவிரச் சென்னைமாநகர் அமைதியாகவே யிருக்கிறது.

[கவர்ன்மெண்டார் அக்டோபர்மீ 13உ மலையைவிட்டிறங்கி 15உ சென்னைக்கு வருவார்கள். உடனே கவர்னர் சுற்றுப்பிரயாணம்போகிறார். நவம்பர்மீ 10-ந் தேதி வாக்கில் திரும்பிச் சென்னைக்கு வருவார்.]

## "THE IMPERIAL INDIAN RELIEF FUND"

### H. E. The Governor on "Madras and the War"

## "இம்பீரியல் இந்தியன் ரிலீப் பண்டு"

### கவர்னரும் "சென்னைமாநகரும் யுத்தமும்"

ஸெப்டம்பர் மாதம் 29-ந் தேதி காலை பத்து மணிக்கு, கவர்ன்மெண்டு ஹவுஸில் இம்பீரியல் இந்தியன் ரிலீப் பண்டினுடைய சென்னை மாநகரின் ஜெனரல் கமிட்டியானது, கவர்னரை அக்கிராசனாதிபதியாக வைத்துக்கொண்டு கூட்டம் கூடிற்று. சுமார் அறுபது மெம்பர்கள் வரையிலும் வந்திருந்தார்கள். அக்கிராசனாதிபதியவர்கள் ஆரம்பமாக, ஜெனரல் கமிட்டி செய்திருக்கும் வேலையைப்பற்றி புகழ்ந்துப் பேசினார். பிறகு பின்வரும் தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன.

தீர்மானங்கள்.

1. ரிலீப் பண்டுக்கு தங்களாலியன்றமட்டும் தாராளமாக பணஉதவி செய்தவர்களுக்கும், கமிட்டியின் காரியதரிசிக்கும் பொக்கிஷதாரருக்கும் ஆங்கில, தமிழ், பேபர்காரர்களுக்கும் வந்தனங்கள். மேற்படி தீர்மானத்தை முன் கொண்டுவந்து, ஸர் ஜான் வாலிஸ் அவர்கள், சென்னை வாசிகள் தங்களாலியன்ற மட்டும் தாராளமாய் பணஉதவி செய்ததோடு கூட, கமிட்டியோடு கூட மனப்பூர்வகமாய் உழைத்தார்களென்றும், அவர்களின் உதவியில்லாமல் கமிட்டியார் சரியாக உழைத்திருக்க முடியாதென்றும் சொன்னார்.

மேற்படி தீர்மானமானது திவான் பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜதாஸ், ஜஸ்டிஸ் டையாப்ஜி இவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

2. வசூல் பண்ணப்பட்டத் தொகையில் முக்கால்வாசி, யுத்தத்தில் மடிந்த வீரர்களின் குடும்ப ரக்ஷணார்த்தமாக செலவழிக்கப்படுவதற்காக ஸிம்லாவுக்கு அனுப்பப்பட வேண்டும். மீதி கால்வாசியானது சண்டையினால் வேலை முதலியவைகளில்லாமல் கஷ்டப்படும் குடும்பங்களின் உதவிக்காக செலவழிக்கப்பட வேண்டும். மேற்படித் தீர்மானமானது ஸர் ஹ்யூ ப்ரேஸரால் கொண்டுவரப்பட்டு மிஸ்ஸஸ் பெஸண்ட், எஸ். கஸ்தூரிரங்க அய்யங்கார் இவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

3. இங்கு யுத்தத்தின் காரணமாக கஷ்டப்படும் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு எக்ஸிகியூடிவ் கமிட்டி ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தத் தீர்மானம் ஸர் ஹாரால்டு ஸ்டுவேர்ட் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, பின் வரும் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

பிரஸிடெண்ட்.—கவர்னர்.

அங்கத்தினர்கள்.—ஸர் ஜான் வாலிஸ், ஸர் ஹாரல்டு ஸ்டுவர்ட், மிஸ்டர் எபடடர்வொர்த், ஸர்ஹ்யூக்ப்ரேஸர், மிஸ்டர் எ. இ. லாஸன், மிஸ்டர். ஜெ ஓ. ராபின்ஸன், மிஸ்டர், டி. ஆர் ரிச்மண்ட், ராவ்பகதூர் பி. என். ஸர்மா, கான்பகதூர் குடூஸ்பாக்ஷா ஸாஹிப்.

கௌரவ காரியதரிசி.—மிஸ்டர் ஸி. பி. காட்டால். மேற்படி கமிட்டிக்கு, இன்னும் மெம்பர்களைச் சேர்த்துக்கொள்ள அதிகாரம் திவான்பகதூர் எல். எ. கோவிந்தராகவ அய்யர் அவர்களின்பிரேரேபனையின்பேரில் கொடுக்கப்பட்டது.

பிறகு கவர்னர் எம்டனைப்பற்றி பேசினார். எம்டனைப் பற்றி பயப்படுவதற்கு யாதொரு காரணமுமில்லை. எம்டனைப் பிடிப்பதற்காக பல பிரிட்டிஷ் கப்பல்கள் வங்காளக் குடாக் கடலிலும் இந்திய மஹா சமுத்திரத்திலும் அதைத் தேடிக்கொண்டிருக்கின்றன.

எம்டனை இந்த இரண்டு சமுத்திரங்களிலும் தேடுவது வைக்கோல் போரில் ஒரு ஊசியைத் தேடுவது போலிருக்கிறது. சென்னைவாசிகள் எம்டனாவது வேறு எந்த ஜர்மனிக் கப்பலாவது அவர்களை மறுபடியும் தொந்திரவு செய்யுமென்று ஸ்வப்னத்திலும் பீதியையடையவேண்டாம். சென்னைமாநகரானது இப்பொழுது அரசாங்கத்தாரால் நன்றாகக் காக்கப்பட்டு வருகிறது. வந்திருந்த அங்கத்தினர்களை இப்பொழுது ஜனங்களுக்குள் பரவியிருக்கும் பொய் வதந்திகளை மறுத்து தைரியம் சொல்லும்படிக் கேட்டுக்கொண்டார். பிறகு அக்கிராசனாதிபதியவர்களுக்கு ஸர் ஜான் வாலிஸ் அவர்கள் வந்தனமளித்த பிற்பாடு யாவரும் கலைந்தனர்.

"LEAVE TO YOUR CHILDREN THE RICHEST OF ALL INHERITANCES."

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*" Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

" HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE.'

THE WAR NUMBER.




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "Approved"

புத்தகம். 22.] ஆனந்தஹு கார்த்திகைமீ, 1914ஹு நவம்பர்மீ [சஞ்சிகை 8.

## " LEAVE TO YOUR CHILDREN THE RICHEST OF ALL INHERITANCES."

### " THE MEMORY OF FATHERS WHO IN A GREAT CAUSE PUT SELF-SACRIFICE BEFORE EASE AND HONOUR ABOVE LIFE ITSELF."

### "A Page of Secret History : Mr. Asquith's Disclosure."

"One does not make New friendships worth having by deserting old ones.New friendships by all means let us have, but not at the expense of the ones we have. That has been, and I trust always will be, the attitude of those whom the Kaiser in his now notorious proclamation describes as " the treacherous English."

" The war has now lasted sixty days, and every one of those days has added to the picture its share of sombre and repulsive traits. We now see clearly written down in letters of carnage and spoliation the real aims and methods of this long prepared and well-organised scheme against the liberties of Europe."

" Let us acknowledge what becomes clearer and clearer every day, that the world is just as ready as it ever was, and no part of it readier than the British Empire, to understand and to respond to moral issues. The new school of German thought has been teaching for a generation past.. that " force and nothing but force is the test and the measure of right.......and they have succeeded only too well in indoctrinating with their creed...those who control and execute German policy."

" We still believe...that the weak have rights and the strong have duties, that small nationalities have every bit as good a title as large ones to life and independence, and *freedom for its own sake is as well worth fighting for to-day as it ever was in the past.* (Cheers.) And we look forward at the end of this war to a Europe in which these great and simple and venerable truths will be recognised and safeguarded for ever against the recrudescence of the era of blood and iron. (Cheers)...that is the reason for our united front, the reason that has brought our gallant Indian warriors to Marseilles, that is extracting from our most distant Dominions the best of their manhood, and which in the course of two months has transformed the United Kingdom into a vast recruiting ground. (Cheers.)

" Now I have come here to-night not to talk but to do business. (laughter and cheers)......our primary business is to fill the ranks ".........Why, the freedom and the autonomy of the smaller nationalities is one of the great issues of this gigantic contest.........Never has a stronger or a more compelling appeal been made to you of all that you as a nation honour and hold true. Be worthy of those who went before you and leave to your children the richest of all inheritances, the momory of fathers who in a great cause put self-sacrifice before ease and honour above life itself." (Loud cheers.)—*Mr. Asquith's Speech at Cardiff on October, 2.*

## "THE SPIRITUAL GOVERNANCE OF THE WORLD."

"THE ISSUE THAT IS BEING FOUGHT AT THIS MOMENT IN THE TRENCHES OF THE AISNE."

"It is important in war, as in chess or business or any other form of conflict, to understand the mind of the enemy. It is only in that way that we can anticipate his moves and forestall his purposes. The task is not easy in the case of the Kaiser for there are so many of him. * * * *

The Prussians have the defect of a mind that works in compartments. And they have the still more fatal defect that they use only material factors, never moral or human factors, in their calculations.

* * * *

No. We need not fear the machinations of the Kaiser. On the whole they should be useful. But the Allies will have to watch and check the tendencies to dissolution from within. The chief danger in that direction comes from what Mrs. Malaprop used to call "participating matters"—from discussing conditions of peace, rival claims respective of services, individual aims and interests. If we begin to talk about these things we shall begin to quarrel about them, and nothing is easier in this world than to deflect one's indignation from the general to the particular, from the enemy who is before you to the friend who is at your elbow........ ......it is reasonable to hope that this will prove a war of emancipation for Russia as well as Germany—that in destroying the devilworship of Nietzche in the one it may release the great spirit of Tolstoy in the other.

In any case, the business of the moment for the Allies is to keep a single purpose in view and to refuse to look to the right hand or the left until that purpose is achieved. The purpose is plain. As this great tragedy proceeds it becomes increasingly clear that the issue that is being fought at this moment in the trenches of the Aisne is not this or that national gain or loss but *the spiritual governance of the world*. Someone—I think it was Sir Robertson Nicoll—has expressed it in the phrase "Corsica or Calvary." I think that is more true than picturesque pharases ordinarily are, for the cause for which the Allies fight is more vast than any material motive that inspires them. They are the instruments of something greater than themselves"—"A.G.G." in the *Daily News and Leader*.

INDIA TAKING HER PART IN THE WAR.

"Whatever may have been the treatment of India in the past, she was rising to the consciousness that she must take her part in this great Empire. Therefore the Indian Princes and people had come so nobly forward to help their English brethren in the hour of trial and danger. Hindus and Mussulmans had no need for despair. They saw in the great war now going on the reassertion of what Christ died for; they saw, too, the reassertion of what they had been learning for untold ages, and they could go forward with courage in the fight for the cause of their motherland. (Cheers.)—Mr. Bupendranath Basu at the *National Indian Association*, 21, *Cromwell Road*.

INDIAN TROOPS FIGHTING IN THE FRONT.

LONDON, NOVEMBER 4.—The Press Bureau says:—The Indian troops have now commenced to take part in the operations of the British Expeditionary Force.............................Their dash and resolution was worthy of the highest traditions of the army.

The Indian Corps Commander has received the following message from Field Marshal Sir John French: "Please congratulate your Indian troops on their gallant conduct and express my gratitude to them." The Corps Commander under whose orders the first engaged units were temporarily placed also sent a warm message of congratulations and thanks.

THREE MONTHS OF WAR.

OFFICIAL REVIEW OF EVENTS.

DELHI, NOVEMBER 5.—A Cable to the Viceroy from the Secretary of State says:—Reviewing the course of events during three months the position is that the Germans have succeeded in occupying the greater part of Belgium and a small part of France but have failed in the attempt to reach Paris and Warsaw and have been compelled to retreat and their effort to reach Calais has been held for two weeks.

At sea a few of their cruisers are still at large but their commerce has been completely destroyed. The Naval losses are fairly evenly balanced but the new battleships and a score of 30 knot cruisers alluded to by Mr. Churchill will further increase the existing relative superiority over the German fleet.

Without declaration of war, without warning and with no shadow of provocation or pretext the Turkish torpedo boats on the 29th ultimo raided Odessa, sank a Russian gunboat, damaged Russian and French steamers and shelled an open town. In the face of this wanton outrage the Allied Governments had no alternative but to withdraw their Ambassadors.

புஸ்தகம்-22.] "The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide." [சஞ்சிகை-8.

ஆனந்தஹு கார்திகைமீ } விவேகசிந்தாமணி { November-December. 1914.

ESTABLISHED 1892

# THE WAR— "யுத்த காண்டம்" —NUMBER.

OFFICE OF THE REGISTRAR 23 DEC 1914

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேச் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## A HOUSE-HOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.

"உன்னதமாம் பாரதப்போர் செய்வார் கதை."

## A SECRET PAGE OF HISTORY IN HUMAN AFFAIRS.

MR. ASQUITH'S APPEAL TO THE NATION AT LARGE.

இராஜ்யவித்தையி லோர் குப்தபாகம்.

### "LEAVE TO YOUR CHILDREN THE RICHEST OF ALL INHERITANCES."

"பிள்ளைகளுக்கான பிதிரார்ச்சித பேரைசுவரியம்."

"Leave to your children the Richest of All Inheritances, the memory of fathers who in a great cause put self-sacrifice before ease and honour above life itself."

—*The Right Hon'ble Mr. Asquith.*

"தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு
யோகயுக்தோபவார்ஜுந"—பகவத்கீதை.

"And freedom for its own sake is well worth fighting for to-day as it ever was in the past."

—*The Right Hon'ble Mr. Asquith.*

சென்றசஞ்சிகையில் ஆன்ட்வெர்ப் பிடிபட்டதையும், பெல்ஜியம்தேசத்து அரசர் அர்ச்சுனனைப்போல் சோகமுற்றதையும் சொன்னோம். சண்டையாரம்பித்து 60-நாளாயிற்று. ஆங்கிலேய முதல்மந்திரி, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து தேசங்களின் முக்கிய பட்டணங்களாகிய லண்டன், எடின்பரோ, டப்ளின் நகரங்களின் முனிசிபல் தலைவர்கள் ஆதீனத்தில் மஹா ஜனங்களுக்குச் சண்டையில் அவர்கள் செய்கடனைப்பற்றி உபதேசித்துவிட்டு வேல்ஸ் நாட்டிலுள்ள கார்டிப் பட்டணத்திலும் அந்நகர் முனிசிபல் அக்ராசனாதிபதியவர்கள் ஆதீனத்தில் யுத்த காரணத்தைப் பற்றியும் அதன் தர்மாதர்மத்தைப்பற்றியும் இராஜ்யதந்திரத்தில் குப்தபாகமாயுள்ள இரகசியத்தை வெளியிட்டு ஜனங்களெல்லாரும் தர்மம் தலையெடுக்க ஒத்து நின்று சண்டைபோடத் தயாராகவேண்டுமென்று உள்ளக்கிளர்ச்சியை யுண்டுபண்ணின ஒரு திவ்யப் பிரசங்கம் செய்தார். அது பூர்வம் குருக்ஷேத்ர போர்க்களத்தில்,

"யோகயுக்தோ பவார்ஜுந"

என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்குபதேசித்ததுபோலிருந்தது. முக்திமார்க்கத்தையும் பெந்தமார்க்கத்தையு முபதேசித்து "கர்மபந்தத்தினின்றும் விடுபடவேண்டி எல்லாக்காலங்களிலும் நீ யோகமார்க்கத்தோடு கூடினவனாயிரு" என்று பகவான் சொன்னதையே இவரும் சொன்னார். அப்படியென்றால் என்னவென்று அர்ச்சுனன் கேட்குமுன்னமேயே அவர் அதன் குட்டை (இரகசியத்தை) யெடுத்துச் சொல்லிவிட்டார். அதாவது:—"நீ செய்யுங் கருமத்தையும், புசிக்கும் பதார்த்தங்களையும், செய்யும் யஜ்ஞங்களையும், தானங்களையும், தவத்தையும் எனக்கு அர்ப்பிதம் செய்" என்று சொன்னார். ஆங்கிலேய முதல்மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்குவித் அவர்கள் செய்த பிரசங்கத்திலும் தர்மத்துக்காக

எல்லாவற்றையும் துறந்து சண்டை செய்ய வேண்டுமென்றும், ஸ்வதந்திரத்துக்காகச் சண்டைசெய்வது அவசியமென்றும் சொன்னார்.

### “பிதிரார்ச்சித பேரைசுவரியம்.”

ஸ்ரீகிருஷ்ண பகவானும் தான் அர்ச்சுனனுக்குப்போதித்த மேற்குறித்த உண்மை இரகஸியத்தை “இராஜவித்யா இராஜகுஹ்ய யோகம்” என்று பெயரிட்டுக்கூறினார். ஏனெனில் வித்தைகளிலெல்லாம் தலைமைபெற்றதும், இரகஸியங்களிலெல்லாம் மேன்மையானதுமாயுள்ளது “நைஷ்கர்மஸித்தி.” அதைப்பெற கர்மத்தைவிடுவது மார்க்கமாகாது. கர்மத்தைச் செய்து கர்மபலனை ஈசுவரார்ப்பணம்செய்வதே இரகஸியவழியாம். மிஸ்டர் ஆஸ்குவித் செய்த திவ்யப்பிரசங்கத்தின் உட்கருத்தும் அதுவேயாம். பெற்றோர் பிள்ளைகளுக்கு வைக்கும் பிதிரார்ச்சிதங்கள் எல்லாவற்றிலும் மஹா பெரியது என்னவென்றால், ஆபத்துக்காலத்தில் தேஹசுகத்தைப்பாராமல், தன்னையே உடல் பொருளாவியும்சேர்த்து அர்ப்பணம் செய்து தர்மம் நிலைபெறச் சண்டைசெய்து எதுவரினும் பிராணனிலும் வாக்குநாணயமே பெரிதென்றுமதித்த மூதாதையர் ஞாபகம் தானே பெரிதாமென்று சொன்னார்.

### “வல்லான் வகுத்ததே வாய்க்காலாக விட்டுவிடலாமா?”

இந்த உண்மையை நாம் நித்தியவாழ்வுக்கு இன்றியமையாத சாதகமாக வுணரவுணர்ந்து பிறர்க்கு உணர்த்தி வந்தோம். அதனால் நமக்கு வந்த கஷ்ட நஷ்டங்களைச் சொல்வதிற் பிரயோசனமில்லை. இப்படி 8-வருஷம் கழியுமுன் ஐரோப்பாவில் பெரிய சண்டையுண்டாகி இராஜதந்திர நிபுணர்களும் இராஜ்ஜிய மந்திரிகளும் அந்த உண்மையையே ஜனங்களுக்குப் போதித்து வருகிறார்கள். அதர்மம் தலையெடுத்து தர்மம் தலை சாய்ந்தால்தான், அதர்மம் அடங்கவும் தர்மம்தலையெடுக்கவும் வழிபிறக்கும். பிரகிருதி தர்மத்தை ஒட்டி அக்ரம அநியாயங்களும் பூத்துக்காய்த்துப் பழுக்கவேண்டும். ஜெர்மானியர்கள் “வல்லான் வகுத்ததே வாய்க்கால்” என்னும் கொள்கையுள்ளவர்கள் என்றும், அவர்கள் அவர் வல்லமையைக் காட்டித்தாங்கள் போனதே வழியென்று ஸ்தாபிக்க ஏற்பட்டிருப்பதால் அதர்மம் மிஞ்சி தர்மம் அடியோடு அழிந்துபோகாமலிருக்க, உலகெலாம் பரவிய ஒரு பிரமாத யுத்தம் ஆரம்பித்திருக்கிறதென்றும், இந்தப் பாரதமஹாயுத்தத்தில் எல்லா தேசத்துப் படைகளோடுகூட நமது இந்தியா தேசத்துப் படைகளும் தர்ம யுத்தம்செய்ய வந்திருக்கிறார்களென்றும் ஆங்கிலேய பிரதான மந்திரியவர்கள் அவருடைய திவ்வியப் பிரசங்கத்தில் எடுத்துச்சொன்னார்.

யுத்தகளத்தலைவராம் ஜெனரல் ஸர் ஜான் ப்ரெஞ்ச் அவர்களும் போர்முனையில் இந்திய வீரர்கள் காட்டிய தீரத்தையும் பெருதவியையும் நன்குமதித்து நன்றிபாராட்டி முகமன் கூறியிருக்கிறார்.

### “தர்மமே ஜயம்” என்ற பிக்ஷை.

“தர்மமே ஜயமென்ற பிக்ஷைகேட்டேன்”
“கர்மமே ஜயமென்று வர்மம்செய்தார்”
“வர்மமே ஜயமாகும் காலத்திப்போ”
“தர்மமே ஜயமென் றுணரலானார்.”

என்பதாக ஒரு பரதேசி தன் ஸ்வானுபவத்தைச் சொல்லிப் பாடியிருக்கிறார். எப்படியும் உலகம் உண்மை யுணர்ந்து தர்மவழிப்படுவது நிச்சயம். சௌக்கியமாயுள்ள காலத்தில் தேகாரோக்கியத்தின் பெருமை யுணரார், அசௌக்கியம் வந்துற்று ஆபத்து நேர்ந்த பொழுது சுகப்பேற்றை வேண்டி விரும்புவார். அப்பொழுதுதான் வைத்தியன் செய்யும் சிகிச்சை பலிக்கும். அப்படிப்போல, சமாதான காலத்தில் அவரவர் “கண்டதே காட்சி, கொண்டதே கோலம்” என்று இருந்து இறுமாந்தார், சண்டை வந்துற்ற காலத்தில் “உண்மையே சாட்சி, தர்மமே ஜயம்” என்று உணரலாவார். ஆகையால் எவ்விதத்திலும் ஸ்வதந்திரத்தை யிச்சிப்போர் அதைப் பாடுபட்டுத் தேடிய பழம்பொருளென்றுணர வேண்டி அதற்காக உடல் பொருள் ஆவியையும் தத்தம் செய்து ஸ்வயநயமென்பதை யறவிட்டுழைக்கல்வேண்டும். குழந்தைகளுக்குப் பெற்றோர் வைத்துப்போகக்கூடிய பெரிய ஆஸ்தி இதுவேயாம். (ஆஸ்திக புத்தியே நிலையான ஆஸ்தி யென்றபடி.)



### “குடிஉயரக் கோன்உயரும்.”

இது குலதர்மமானால், “குலத்தளவே யாகுமாம் குணம்” என்றிருப்பதால் குலத்திற்பிறந்த பிள்ளைகளெல்லாரும் இந்த மேலான குணசம்பத்தைப் பெற்றவர்களாவார்கள். குழந்தைகள் குணம் உயர்ந்தால், குலத்தின்சிறப்பு உயரும். குலம் என்பதே ‘குடி’. ஏனெனில் தொகுதியான இராஜ்ஜியத்துக்குப் பகுதியான ஏகட்பொருள் குலம் என்னும் குடித்தனமேயாம். ஆதலால், “குடிஉயரக் கோனுயர” என்றுரைத்த ஔவை வாக்கியம் உண்மையேயாம். எப்படியெனில், குடிஉயரக் கோல் உயரும்; அதாவது, செங்கோல் உயர்பதவி பெறும். கோல் உயரக் கோன் உயரும். இது பிரத்தியக்ஷம். இந்த அனுபவத்தை பெல்ஜியம் நாட்டில் நிதரிசனமாகக் காணக் கூடியதா யிருந்தது. அப்படிப்பட்ட தேசம் அதர்மம் தலையெடுத்த காரணத்தால் ஜெர்மானியர் செய்த அசுர அக்கிரமங்களுக்காளாகி அழிபலாயிற்று. தேசம் அழிந்தும் அத்தேசத்து அரசன் அதைரியப்பட்டாரில்லை. அவர் தர்மமே ஜயமென்பதில் உண்மையான பக்தி வைத்தவராய், தனது உயர்பதவி உடுப்புகளைக் களைந்து சாமான்ய இராணுவ வீரன் தரிக்கும் உடுப்பையுடுத்து அவர்களோடு உடனிருந்து, சண்டைசெய்வார் பதுங்கியிருக்க வெட்டிய பள்ளங்களில் அவர்களுண்ணும் உணவுண்டு அவர்களுடனிருந்து சண்டைசெய்துவருகிறார். அர்ச்சுனனைப்போல் சோகமடைந்த அவருக்கு பகவான் கர்ம-தர்மத்தை உபதேசிப்பார்போல், அவர் பொருட்டு சண்டையிற் தலையிட்டுக்கொண்ட பிரிடிஷ் இராஜ்பத்தின் முதல் மந்திரி தேச தேசங்களிலும் சென்று கர்மதர்மத்தை யுபதேசித்துச் “சண்டைக்குப்புறப்படுங்கள்” என்று பகவான் பஞ்ச ஜன்யத்தை யூதினதுபோல், அவருடைய பஞ்சேந்திரியங்களையு மடக்கியாளும் நிறைமனங்கொண்ட எண்ணங்களை வீரியம் நிறைந்துள்ள அவர் திருவாக்குப் பறையறைந்து வெளியிட்டுவருகிறது. அவர் “வாய்ப்பறை” கொண்டு வெளியிட்டு வரும் உண்மைகள், பூர்வீக தர்மவாக்கை யொத்ததாகவே யிருக்கின்றன. அதன் சார சங்கிரகம் இது:—

### “இராஜ்ய வித்தையி லோர் குப்தபாகம்”

“ஜர்மானிய இராஜாங்கத்தார் “வல்லான் வகுத்ததே வாய்க்கால்”என்னும் அசுரபாவம் நிறைந்த துஷ்டர்கள். அவர்கள் தங்கள் வலிமிகுதியால் எளிய தேசத்தார் ஸ்வதந்திரங்களையபகரித்து வல்லாளகண்டராக ஜயக்கொடி நாட்டக் கிளம்பி யிருக்கிறார்கள். அதில் முதற்படியாக பெல்ஜியத்தின்மீது தர்ம விரோதமாகப் படையெடுத்து அத்தேசத்தைப் பாழாக்கி விட்டார்கள். இந்தக் கொடுமை தலையெடுத்தால் உலகத்தில் தர்மம் தலைகவிழ்ந்துபோம். ஆகையால் நாமெல்லாரும் ஒரு மனப்பட்டு குழுக்காயிருந்து அவர் கொட்டத்தையடக்கல் வேண்டும். இந்தியாவிலிருந்தும் தூரதேசங்களிலிருந்தும் தர்ம யுத்தம் செய்ய சைனியங்கள் வந்து கூடியிருக்கின்றன. தாய்-ஸ்தானத்திலுள்ள பிரிடிஷ் ராஜ்யக் குடிகளான நாம் இச்சமயம் பின் வாங்காது உடல் பொருளாவியையும் உண்மையாகத் தத்தம் செய்து சண்டைமுகத்தில் பகைவரை வென்று “தர்மமே ஜயம்” என்கிற ஜெயக்கொடி நாட்டல் வேண்டும். இதில் மாண்டு மடிந்தாலும் நமக்குப் பின்னால் நமது குழந்தைகள் நமது வீரதீரத்தைக் கேட்டு நம் வழிப்பட்டு நல்வழி யடைவார்கள். நாம் தர்மத்துக்காகவே சண்டை போடுவதாலும் தர்மமே ஜயமென்பது நிச்சயமாதலாலும் நாம் அதைரியப் படவேண்டியதில்லை. மலைபோல் வந்த இடர்களெல்லாம் பக்தி சிரத்தையோடு பகவானிடம் நாட்டிய தர்மசித்த முடையார்க்குப் பனிபோல் நீங்கிப்போம். ஆகையால் எல்லாரும் சண்டைக்கெழுமின்! சைனியத்தைச் சேர்த்து படையெடுத்து தர்மயுத்தம் செய்யப்பழகுமின்! ஆலசியமாயிருக்க அவகாச மில்லை!”-என்பதே.

### “ததாஸ்து!”

இதற்கு உலகிலுள்ள தமர்சித்தமுடையார் எல்லாரும் ‘ததாஸ்து”-“அப்படியே ஆகுக!” என்று ஆசிகூறி ஆமோதிப்பாரா யிருக்கிறார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

## THE LAUREATE AND THE WAR.

"God Defend the Right!"

1. Thou careless, awake !
Thou peacemaker, fight !
Stand, England, for honour,
And God guard the Right !

2. Thy mirth lay aside,
Thy cavil and play :
The foe is upon thee,
And grave is the day.

3. The monarch Ambition,
Hath harnessed his slaves ;
But the folk of the Ocean,
Are free as the waves.

4. For Peace thou art armed,
Thy Freedom to hold :
Thy Courage as iron,
Thy Good-faith as gold.

5. Through Fire, Air, and Water,
Thy trial must be :
But they that love life best,
Die gladly for thee.

6. The Love of their mothers,
Is strong to command ;
The fame of their fathers,
Is might to their hand.

7. Much suffering shall cleanse thee ;
But thou through the flood
Shalt win to Salvation,
To Beauty through blood.

8. Up, careless, awake !
Ye peacemakers, Fight !
England stands for Honour,
God Defend the Right !

ROBERT BRIDGES,
*Poet Laureate.*

## THE POET LAUREATE'S WAR SONG.

"God Defend the Right'!"

### "திருப்படை யெழுச்சி" த்தானம்.

1. தூங்குசிந் தையினீர் துயில்விட் டெழுமின் !
பாங்குடன் சமாதானம் பேசுவிர், எடுபடை !
ஆங்கில நாடுநம் கௌரவம் காக்கவே
தூங்கிலாத் தெய்வம் தர்மம் புரக்கவே.

2. மகிழ்விளை யாடுவீர் மகிழ்வினை யகற்றுவிர் !
இகழ்சிந் தையினீர் இகழ்வதை யொழிவீர் !
திகழ்பகை யாளர் எதிர்த்துளார் காண்மினோ !
நிகழ்பகல் ப்ரமாதம் விளைப்பதை யுணர்வீர் !

3. பேராசை தலையெடுத்துத் தன்னரசு செலுத்தவே
ஆராசைக் காரர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள் :
கூராசை கொண்டுசலபாணியாளும்ஸர்ஜனர்நாம்
பேரோசை செய்திரைபோற் பயமின்றிக் கர்ச்சிக்
[கிறோம்.

4. கரும்பொன் போல்கரு வுருமிகு திண்விரல்
செம்பொன் போல்ச்ரத்தா பக்திநிறை யுன்மனஸ்
அம்பொன் னம்பல வாணர்கை யாயுதம்
நம்பொன் னம்பல ஸ்வதந்தர நாட்டவேதரித்தீர்.

5. தீயொடு கால் நீர் எனச்சொலு பூதங்கள்[ மினோ!
தீயொடு மூ-வ சேர்ந்துமைச் சோதிக்குங்காண்
இகபர மெனச்சொலு மிரண்டிலு மவாவுற்றோர்
மிகவர ஜயம்பெற உயிர்தனை உவப்புடன்மாய்ப்
[பரோ.

6. அன்னையின் அன்பில் வளர்ந்தவர் முந்தியே
தன்னையிப் பாரதப் போரினில் அளிக்கவே
முன்னையித் தேசத்துப் புகழினை நாட்டவே[வே,
தன்னையளித்தநம் தாதையர் தோள்வலி தாண்ட

7. போரினில் முன்னின்று படுமவை பட்டுநீர்
பாரினில் பிரளயம் வந்ததேபோன்றதற்குட்பட்டு
நீரினில் மிதந்து நீஞ்சியே கரையேறிப்
பாரினிலு திரஞ்சிந்தியேபெறுவீர்சுந்தரப்பேறுநீர்.

8. தூங்குசிந் தையினீர் துயில்விட் டெழுமின் !
பாங்குடன் சமாதானம் பேசுவீர் ! எடுபடை !
ஆங்கில நாடுநம் கௌரவம் காக்கத்
தூங்கிலாத் தெய்வம் தர்மம் புரக்கவே.

[ஆங்கில கவிசக்ரவர்த்தியாகிய ராபர்ட் ப்ரிட்ஜஸ் அருளிச்செய்த திருப்போர்ப்படை யஷ்டகத்தின் உண்மையான தமிழிசைக்கூற்றிது.—C. V. S.]





# "THE SPIRITUAL GOVERNANCE OF THE WORLD."

## "THE ISSUE THAT IS BEING FOUGHT AT THIS MOMENT IN THE TRENCHES OF AISNE."

"BUSINESS AS USUAL."

"Our Primary business is to fill the ranks."—The Prime Minister.

### "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு."

"சதுரங்கம்."

குழந்தைகளே ! நீங்கள் "சதுரங்கம்" விளையாடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திராவிட்டால் அதை அவசியம் ஒருதரமாவது பார்த்துவிடவேண்டும். ஏனெனில் அது மிகவும் நல்ல விளையாட்டு. அதிலே ரத, கஜ, துரக, பதாதியென்கிற நால்விதப் படைகளுங்கொண்டு இருதரத்தாரும் ஒருவரையொருவர் ஜயிக்கப்பார்ப்பது வெகு அழகாயிருக்கும். ராஜா, மந்திரி, பிரதானி, ஆனை, குதிரை, ஒட்டகை, காலாட்கள் அல்லது பதாதிகள் என உள்ள சண்டைச் சாஸனங்களைக்கொண்டு சதுரங்கப் பலகையில் அல்லது தரையில் சதுரக்கட்டங்களாகக் குறிக்கப்பட்ட கட்டத்துக்குள் ஆட்டத்தின் ஒழுங்குப்படி காய்களை நகர்த்தி எதிர்க்கக்ஷியைத் தோற்கடித்து ஜயிக்கவேண்டும். இதில் விசேஷமாய் கவனிக்கத்தக்கவை சதுரங்கப்பலகையில் ஒழுங்காய் பரப்பப்பட்டிருக்கும் படைகளின் பலமும், நிலைமையும் ஆயினும், ஆட்டம் தொடங்கிவிட்டால், பார்ப்பவர்களுக்கும் விளையாடுகிறவர்களுக்குமுள்ள சிரத்தையெல்லாம் கேவலம் காய்களில் மட்டுமின்றி, அந்தக்காய்களை பாரதூர யோசனையோடு நகர்த்தும் ஆட்டக்காரர்களின் சிந்தனையில் சென்றுவிடும். காய்களை நகர்த்துவதிலிருந்து அவர்களுடைய சிந்தனா சாமர்த்தியமும் அதைக்கொண்டு அவர்கள் முன்பின் யோசனையோடு காய்களை நகர்த்துவதின் முடிவு நோக்கமுமே விசேஷமாய் கவனிக்கத் தக்கதாய்விடும். ஆடுகிறவர்கள் மனப்போக்குத் தெரியாதவர்களுக்கு காய்களைமட்டும் நகர்த்துவதான ஆட்டத்தில் ஸ்வாரஸியம் குறைந்துவிடும். ஏனெனில், ஆடுவோனிலும் ஆட்டுவிப்பான் முக்கியஸ்தனாயிருப்பதினால் என்க.

"ஆடுவோன்"—"ஆட்டுவிப்பான்."

"ஆடுவோன்" ஸ்தூலமாகக் காயை நகர்த்துவான். "ஆட்டுவிப்பான்" சூக்ஷ்மமாகவிருந்து பாரதூர யோசனைசெய்து "இந்தக்காயை இப்படி நகர்த்தினோமானால், எதிரி இன்ன இன்ன விதமாகவந்து சூழ்ந்துகொள்ளலாம் : அப்பொழுது இன்ன இன்னவிதமான பெரிய நஷ்டங்கள் தடுக்கமுடியாதபடி சம்பவிக்கக் கூடியதாகும். அந்த சமயத்தில் ஜயம், அபஜயம் இப்படி இப்படித்திரும்பும்" என்று இவ்வளவையும் மனவெளியில் சூக்ஷ்ம புத்தியினால், தான் தானே எதிர்ப்பானும் எதிரியுமாகவிருந்து ஆடிப்பார்த்துக்கொண்டு அதன்முடிவை ஒரு க்ஷணப்பொழுதில் விவேகபுத்தியினால் நிதானித்தறிந்துகொள்வான். இப்படி திடசித்தத்தோடு ஆடுகிறவன் யாரோ அவனே தீரன். இந்த சதுரங்க விளையாட்டு உலகில் நடக்கும் போராட்டங்களையெல்லாம் மானஸீகவிளையாட்டாக ஆடிப்பழகுவதற்கான ஒரு சாதனமாம்.

"உபமான—உபமேயம்."

வர்த்தகவியாபாரத் துறைகளில் நேரும் போட்டிகளிலும், இராஜாக்கள்போடும் சண்டைகளிலும் உள்ளம் பழக இது உண்மையாய் வாய்ந்த சாதனமாகும். ஆகையால் "சதுரங்கம்" என்கிற பதம் விளையாட்டிற்கும் வினைக்கும் பொதுவான காரணப்பெயராகக் கொள்ளப்படுவதாயிருக்கிறது.

"சாதனமின்றிச் சாதிப்பாரில்லை."

இந்த அழகான அற்புத விளையாட்டில் ஜெயம்பெற, விளையாட்டின் ஒழுங்கும் விளையாட்டில் கைப்பழக்கமும் மட்டுமிருந்தால் போ

தாது. ஆனால் ஜயம் பெறுவதற்கு முக்கியமாய் வேண்டியதென்னவெனில், சொல்கிறேன் கேளுங்கள்:—

மேற்குறித்த சாதன விசேஷத்தோடு மனப்பழக்கமாகிய சாதக அனுகூலமும் வேண்டும். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்று ஔவையார் சொல்லியிருக்கிறார் ஆதலால், எதிரியின் நோக்கத்தை யறிந்து அவனுடைய மனம் எப்படி வேலைசெய்கிறது என்று அறியும்சக்தி மனப்பழக்கமாகப் படிந்திருக்கவேண்டும். இதுதான் சதுரங்க வித்தையில் தேறினதற்கு உண்மையான லக்ஷணமாகும். இந்த லக்ஷணம் லக்ஷியமின்றி அமையாது. ஆகையால் எதிரியின் மனப்போக்கை யறிவதற் கவசியமான லக்ஷியம் (குறி) இன்னதென்றறியவேண்டும். மனம் போகிற போக்குக்குச் "சித்த விருத்தி" யென்று சொல்கிறது பெரியோர்களுடைய சம்பிரதாய வழக்கம்.

"தன்னடக்கம்."

"Self-Control."

இந்த "சித்த விருத்தி"யை ஒருவன் தன்மட்டில் அடக்கியாளக் கற்றிருந்தா லன்றிப் பிறர் மனோராஜ்யம் செய்வதை யுணர உணர்த்தும் உணர்வு (அறிவு) அவனுக்கு ஸித்திப்பது துர்லபம். ஆதலால்,—

"தன்னைத்தான் நெஞ்சம் கரியாகத் தானடங்
பின்னைத்தா னெய்தாற் பயனில்லை—" [கில்

என்றுள்ள கவிவாக்கு உண்மையே யாம்.

"தன்மனமே சாக்ஷியாக தன்னைத் தானே ஆராய்ந்து தன்மனதின் போக்கை யடக்கியாளக் கற்றவனால் தன் மனம் அடங்கப்பெற்றபின், மனதைப் பிரவிருத்தி மார்க்கத்தில் விஷய ஆராய்ச்சியில் அம்பு எய்தாற்போல் குறித்த குறி தப்பாமல் பாய்ந்து பற்றவிட்டால், விஷயப் பற்றினால் வரும் கர்மபந்தமாகிய (வினைப்பயன் என்னும்) விதிவலி தன்னைக்கட்டுவதில்லை."—என்பது இதன் பொருள். அப்படிக்கில்லாமல்,

—"தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யிற் பிடிபடுக்கப்பட்ட களிறு."

தன்னுடைய நித்தியசுக வாழ்வாகிய "பெருவாழ்வு" என்று சொல்லும் குடியைக் கெடுக்கும் ஸ்வபாவமுள்ளதாகிய மனதிற்கு உட்பட்டு அது போனபோக்கில் விட்டு அது இழுத்தவழியெல்லாம் போய்க்கொண்டிருந்தால், காட்டிலே ஸ்வேச்சையாகத் திரிந்துக்கொண்டிருக்கும் ஆண் யானையானது அதைப் பிடிப்பதற்காக விட்ட 'மனிதனுக்கு அடிமையான பெண்யானையின்மேல்' மோஹங்கொண்டு அதனால் அதைப் பின்பற்றிச்சென்று படுகுழியில் விழுந்து தன் ஸ்வதந்திரத்தை யிழந்ததற் கொப்பாகும்.—என்று சொல்லியிருக்கிறார்.

"சாதன-சாதகம்."

ஆதலால் எப்போதும் எதிரியின் நோக்கமறிந்திருக்க வேண்டியது அவசியம். அதற்கு எதிரியின் மனப்போக்கை யறிவதற்கான சாதன சாதகங்கள் வேண்டும். "சாதனம்" வெளிப்படையான கருவி; "சாதகம்" அந்தரங்கமான அந்தக்கரண அனுகூலம்.

"யுத்த ஆரம்பம்"

மற்றோர் பக்கத்தில் அச்சிட்டிருக்கும் யுத்த தினசரிக் குறிப்பினால் இந்த யுத்தம் ஜூலைமீ 28உ தொடங்கியதென்றும், இதில் ஆங்கிலேயர் தலையிட்டுக்கொள்ள நேர்ந்தது ஆகஸ்டுமீ 2உயிலாரம்பித்து 4உயில் யுத்தம் தொடுக்கலாய் முடிந்ததென்றும் தெரியவரும்.

"மும்மாச பலன்"

இதை நாமெழுதும்பொழுது சரியாக இரண்டரை மாசமாகிவிட்டது: அச்சிடுங்கால்மூன்று மாசம் இந்த $2\frac{1}{2}$-3 மாசங்களாக நடந்த சண்டையில் பெல்ஜியம் பாழான தொன்றைத் தவிர வேறு தீர்ப்பாய்ச் சொல்லக்கூடிய பலன் ஒன்றும் நேர்ந்ததாகத் தெரியவில்லை.

"தர்மவிரோத அதிக்கிரமம்"

ஜெர்மானியர் பெல்ஜியம், லக்ஸெம்பர்க்





இந்நாடுகளில் தர்ம விரோதமாக அதிக்கிரமித்துப் புகுந்து பிரான்ஸின்மேல் படையெடுத்துச் சென்று பாரிஸ் நகருக்கு அருகாமையிலுள்ள பட்டணங்களைப் பிடித்துக்கொண்டார்கள். ப்ரான்ஸ்-பெல்ஜியம்-எல்லையில்தானே இவர்களை யெதிர்க்கலான கூட்டாளிகள் (Allies) சைனியம் முதலில் பாரிஸ்வரையில் பின்வாங்கிச் சென்று பின்னர் அவர்களை யெதிர்த்து ப்ரான்ஸ் எல்லையை நோக்கித் திரும்பத் துரத்தி வருகிறது.

"ஜெனரல் ப்ரெஞ்ச் அனுப்பிய ரிபோர்ட்டு"

ப்ரான்ஸிலே போர்க்களத்திலிருக்கும் ப்ரிடிஷ் சைனியங்களுக்குத் தலைவரான ஜெனரல் ஸர் ஜான் ப்ரெஞ்ச் அவர்கள் அனுப்பிய ரிபோர்ட்டுப்படி கூட்டாளிகள் சைனியம் ஸெப்டெம்பர்மீ 5உயில் எதிரிகளை எதிர்த்துத் துரத்த முனைந்து ஏற்பட்டதாகத்தெரிகிறது. அதுவரையில் இராணுவ தந்திர நிமித்தம் ஸீன் (Seine) நதிக்கிப்பால் வரையில் பின் வாங்கிக்கொண்டே வந்தார்கள். ஸெப்டெம்பர்மீ 5உயில் ஜெனரல் ஸர் ஜான் ப்ரெஞ்சும், ப்ரான்ஸ் முக்கிய சேனாதிபதியாகிய ஜெனரல் ஜாப்ரெ (General Joffre) அவர்களும் சேர்ந்து எதிரியை மடக்கியடிக்க முனைந்தார்கள். ஸெப்டெம்பர்மீ 6உயில் ஒரு பெரிய சண்டை நடந்தது. அதில் பாரிஸ் நகருக்கு வடகிழக்கே 20-மைலுக்குள்ளிருக்கும் 'மினன்வில்' ('Ermenonville' in the war map) தொடங்கி மியூஸ் நதிக்கரையிலுள்ள எல்லைப்புறக் கோட்டையும் பட்டணமுமாகிய வெர்டன் (Verdun) வரையில் சுமார் 100-அல்லது 150-மைல் தூரத்துக்கு எதிர்த்து நின்ற இருதரத்தாரும் ஓய்வு ஒழிவின்றி ஐந்துநாள் உக்ரமான சண்டை போட்டபின் எதிரிகள் கை சளைத்துப் பின்வாங்கத் தலைப்பட்டார்கள். இந்தச் சண்டை ஸெப்டெம்பர்மீ 6உ முதல் 10உ சாயங்காலம்வரையில் நடந்தது. இதிலே ஆயிரக்கணக்கானபேர்கள் கைதிகளாகப் பிடிபட்டார்கள். எதிரிகளுடைய பீரங்கிகள் அனேகம் கூட்டாளிகள் கைவசமாயின. வண்டி வகையராக்களில் ஏராளமானவற்றைப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இந்தச் சண்டையில் பிரிடிஷ் தரப்பிலும் நஷ்டம் அதிகம்தான். ஆனால், மான்ஸ் பட்டணம் முதல் ஸீன்நதி வரையிலும், ஸீன்நதிக் கரையிலிருந்து 'எய்ஸ்னி' ['ஏன்' என்று உச்சரிப்பு] (Aisne) நதிக்கரை வரையிலும் ஓய்வொழிவின்றி 5-நாளைக்குத் தொடுபிடியாய் நடந்த சண்டையில் அதிக நஷ்டம் நேர்ந்தது அதிசயமல்ல வென்று ஜெனரல் ப்ரெஞ்சு எழுதியிருக்கிறார்.

"ஏன்' (Aisne) நதிதீரத்துச்சண்டை யாரம்பம்"

ஸெப்டெம்பர்மீ 13உ பிரிடிஷ் சைனியங்கள் (Aisne) 'எய்ஸ்னி' 'ஏன்' நதிக்கரையைத் தாண்டினார்கள். அன்று சாயந்திரம் எதிரிகள் சைனியம் சற்று பின்வாங்கி, பாரிஸ் நகருக்கு 50-மைல் தூரம் நேர் வடக்கேயுள்ள 'காம்பீன்' (Compeigne) என்னுமிடத்துக்கு வடக்கேயிருந்து எய்ஸ்னி (Aisne) நதிதீரத்தில் ரீம்ஸ் (Rheims) பட்டணம் வரையில் சுமார் 80-மைல் தூரத்துக்கு நன்றாக அரண்செய்யப்பெற்ற அகழ்களின் மறைவிலிருந்துக்கொண்டு எதிர்த்து நின்றார்கள். இங்கே எதிரிகள் கொத்தளம் முதலானதுகள் கட்டி 'மாபூஜ்' (Maubeuge) கோட்டையிலிருந்து முற்றுகையி லுபயோகிக்கும் பெரிய பீரங்கிகளைக் கொணர்ந்து ஏற்றி சண்டைமுனையை நன்றாக பலப்படுத்திக்கொண்டு எதிர்த்து நிற்கலானார்கள். இந்தச் சண்டை (Battle of the Aisne) 13உ முதல் 28உ வரையில் 15-நாளைக்குத் தொடர்பிடியாய்த் தொட்டு நடந்தும் எதிரிகள் கை வலுக்காமல் அவர்களை எதிர்த்தடிக்க முடிந்ததேயன்றி ஜயாபஜயம் இப்படியென்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. எதிரிகள் பின்வாங்கும்படி நேரிட்டபோதெல்லாம் அவர்கள் கைப்பற்றின பட்டணங்களை யெரித்துத் தகர்த்துப் பாழாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். இப்படியாக ஸென்லிஸ் (Senlis)

பாழாய்விட்டது. ரீம்ஸ் (Rheims) கோவி லுடன் பாழாகிவிட்டது.

ஆகஸ்டுமீ 28உ யிலிருந்து ஸெப்டெம்பர்மீ 28-உ வரையில் ஜெனரல் ப்ரெஞ்ச் எழுதிய ரிபோர்ட்டின் சுருக்கத்தைச் சங்கிரஹமாய்க்கூறி விட்டோம்.

“தோற்பு-கெலிப்பு தெரியாத சண்டை”

ஸெப்டெம்பர்மீ 28-உக்குமேல் அக்டோபர்மீ 5-உ† வரையில் ‘ஏன்’ (Aisne) நதி தீரத்தில் சண்டை நடந்து கொண்டேவந்தும் தோற்பு கெலிப்பு நன்றாகத் தெரியவில்லை. எதிரிகள் கைசளைத்து வருகிறதாக மட்டும் தெரிய வருகிறது. ஆனால் அவர்கள் அக்டோபர் 5, 6, 7-தேதிகளில் ஆன்ட்வெர்ப் கோட்டைகளைத் தகர்த்து அதைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள். பிறகு பெல்ஜியத்தின் கரை-துறைப் பட்டணமாகிய ஆஸ்டெண்ட் (Ostende) பட்டணத்தையும் கைப்பற்றினதாகச் சமாசாரம். ப்ரூஜஸ் (Bruges) பட்டணத்தையும் கைப்பற்றி விட்டார்கள். இதெல்லாம் பெல்ஜியம் தேசத்தில். பெல்ஜியம் கவர்ன்மெண்டார் அந்நாட்டை விட்டு ப்ரான்ஸிலுள்ள (Havre) ஹாவர் துறைமுகப் பட்டணத்திற்குப் போய் விட்டார்கள். பெல்ஜியன்ஸ் அரசராகிய ஆல்பர்ட் அரசர் மட்டும் அவருடைய சைனியங்களோடிருந்து சண்டை செய்து வருகிறார்.

“பஹீரதப்பிரயத்தனம் பலிக்கவில்லை.”

ப்ரான்ஸின் கரை-துறைப்பட்டணங்களில் ஒன்றாகிய ‘காலே” (Calais) பட்டணத்தைப் பிடிக்க பஹீரதப் பிரயத்தனம் செய்தது பலிக்கவில்லை யென்று சமாசாரம். இப்பொழுது பிரிடிஷ் கப்பற்படைகள் கரை-துறைப் பட்டணங்களில் ஜெர்மன்ஸ் தங்கவிடாமல் குண்டுவெடி போட்டுத் தகர்த்துச் சண்டையிட்டு வருகிறார்கள்.

“எதிரி கை சளைத்தல்.”

எய்ஸ்னி (Aisne) ‘ஏன்’ நதி தீரத்தில் நடந்து வரும் சண்டை இன்னும் அப்படியே தோற்பு கெலிப்பின்றி, இப்பொழுது ஒரு தரப்பார் எதிரியைப் பின் வாங்கச்செய்வதும், எதிரிகள் முன் மற்றோரிடத்தில் பின் வாங்குவதுமாக நடந்து வருகிறது. ஜெர்மன்ஸ் கைசளைத்ததாகத் தோற்றுகிறதென்றும் சீக்கிரத்தில் அவர்கள் ப்ரான்ஸ் எல்லையைத் தாண்டி யோட வருமென்றும் சொல்கிறார்கள். இப்பொழுது லில்லி (Lille-லீல்) க்கு அருகில் சண்டை நடந்து வருகிறது. எய்ஸ்னி (Aisne) ‘ஏன்’ நதி தீரச்சண்டை இன்னமும்‡ முடிந்தபாடில்லை.

“கீழண்டைப் போர்க்களம்.”

மேற்குப் புறத்தில் நடக்கும் சண்டை இப்படிப்பட்ட ஸ்திதியிலிருக்க, ஜெர்மனி கீழண்டைப்பக்கத்தில் ருஷியர்கள் படையெடுத்து வந்து பல பட்டணங்களையும் ஜெர்மனி ஆஸ்திரியாவைச் சேர்ந்த சில மாகாணங்களையும் பிடித்துக்கொண்டு போலண்ட் (Poland) மாகாணங்களையெல்லாம் கைப்பற்றி வருகிறார்கள்.

“நோக்கத்திலிருக்கிறது ஸ்வாரஸியம்.”

இப்பொழுது நடக்கும் சண்டையின் நோக்கமென்ன? சண்டைக்குக் காரணம் “மதுபிந்து நியாயமாயிருக்கிற” தென்று சொல்வது மேலுக்கு எப்படி யிருப்பினும் உள்நோக்கிப் பார்க்கில் உண்மை யறியாதவர்கள் சொல்லும் வார்த்தை யென்று தள்ளிவிட வேண்டியதேயன்றி ஆழ்ந்து விசாரிக்கத் தக்கதாகவில்லை.

சண்டையின் ஸ்வாரஸியம் சண்டைக்காரர்களின் நோக்கத்திலிருக்கிறது. சண்டைக்காரர்களின் நோக்கம் அவர்களுடைய மனப்போக்கிலும் அதை யொட்டி அவர்கள் செய்யும் தந்திரோபாயங்களிலு மிருக்கிறது.

“சண்டைக்குப் புறப்பட்டவர்.”

இப்பொழுது சண்டைக்கென்று சாதம் பிசைந்துகட்டிக்கொண்டு புறப்பட்டவர் ஜெர்மனி சக்ரவர்த்தியாகிய இரண்டாவது உவில்லியம் என்பவர். இவர் ஜெர்மனியிலுள்ள நாடுகளெல்லாம் ஐக்கியபத்தியமுணர்ந்து ஒன்றுபட்ட ராஜ்யமாக ஏற்பட்டபின் வந்த சக்ரவர்த்திகளில் மூன்றாவது சக்ர

† நவம்பர்மீ 5உ வரையிலும் இங்கே விசேஷ மாறுதலில்லையென்று தந்தி சமாசாரம். (வி-சி. யுத்த காண்டம்-6-வது பக்கம் பார்க்க.

‡ நவம்பர்மீ 13உ.



வர்த்தி. முதலில் 1871-ல் சக்ரவர்த்தியாக கீர்த்திப்பிரதாபத்தோடு ‘ஜெர்மன் எம்பையர்’ ஸ்தாபகம் செய்தவர் “முதலாவது உவில்லியம்” என்பவர். இவருக்கு முக்கிய மந்திரியாயிருந்தவர் தான் ‘ப்ரின்ஸ் வான் பிஸ்மார்க்.’ சேனைத் தலைவராயிருந்து உடனுழைத் துதவியவர் ‘மோல்ட்க’ (Moltke) என்பவர். இவர்கள் மூவரும் தான் ஜெர்மனியின் கீர்த்திப் பிரதாபத்தை வெளிப்படையாக ஸ்தாபித்தவர்கள். இரண்டாவது சக்ரவர்த்தியாகிய ப்ரெடரிக் (நமது விக்டோரியா மஹாராணியாரின் மாப்பிள்ளை யிவர்) காலத்திலும் இவர்களிருவருமே அதிகாரத்திலிருந்து வந்தார்கள். அவருடைய புத்திரர்தான் இப்பொழுது சக்ரவர்த்தியாகவிருக்கும் 2-வது உவில்லியம் என்பவர். சக்ரவர்த்திக்கு ஜெர்மனியில் கெய்ஸர் (Kaiser) என்று சொல்கிறது. இவருக்குப் பின் பிரதானமந்திரியாக வந்தவர் ப்ரின்ஸ் வான் பூலோ (Prince Von Bulow) என்பவர்.* இவரை நியமிக்கவும் நீக்கவும கெய்ஸருக்கு ஸ்வதந்திரமுண்டு. ப்ரின்ஸ் வான் பிஸ்மார்க் கெய்ஸருடைய பாட்டன் காலம்முதல் பிரதான மந்திரியாகவிருந்து வந்தாராயினும், அவருக்கும் இவருக்கும் மனம் ஒப்பவில்லை யென்று கண்டதும் அவரை (1890-ல்) பட்டத்துக்குவந்த இரண்டு வருஷத்துக்கெல்லாம் வீட்டுக்கனுப்பிவிட்டார்.

“அவர் ஸ்வபாவமும் மனப்போக்கும்.”

இப்பொழுது நடக்கும் பார’த மஹாயுத்தத்துக்குக் காரணபூதமாயுள்ளவர் இவர்தான். இவருடைய ஸ்வபாவமும் மனப்போக்கும் தெரிந்தால்தான் இச்சண்டையின் மூலமும் இதன்நோக்கமும் நன்றாகத்தெரியும்.

“குலத்தளவே யாகுமாம் குணம்.”

“குலத்தளவேயாகுமாம் குணம்” என்றிருப்பதால இவருடைய குணம் விளங்க வேண்டி இவருடைய ஜாதியாராகிய ப்ரஷியன்ஸ் என்றுசொல்லும் டியூடன்ஸ் ஜாதியாரின் பூர்வோததர சரித்திரத்தை இவர்களுக்கு ஆதிமுதல் பரம்பரை விரோதிகளான ஸ்லாவ்ஸ் ஜாதியார் பூர்வோத்தர சரித்திரத்தோடு சரித்திரவாயிலாய் தீரத்தெளிய விசாரித்தெழுதியிருக்கிறோம். அந்தச் சரித்திரவிசாரணையின்தோரணை பிரிடிஷ் ராஜ்யத்திலுள்ளவர்களும் அதன் குடியேற்ற நாடுகளின் ஜனங்களில் பிரமுகர்களானவர்களும் மெம்பர்களாகச் சேர்ந்துள்ள “பிரிடிஷ் அண்ட் கலனியல் இன்ஸ்டிடியூட்” என்னும் ஸ்தாபனத்தின் பத்திரிகையாகிய “யூனைடெட் எம்பையர்” என்னும் மாதசஞ்சிகையின் ஆசிரியராகிய மிஸ்டர் கால்குஹன் 1912-ல் எழுதிய ஒரு புஸ்தகத்திலிருந்தும் அவர் தமது பத்திரிகைக்கெழுதிய சரித்திர சங்கிரகதோரணையை ஒட்டியும் ஜெர்மனியின் சரித்திரத்தை கதையாகச் சொல்லியுள்ள புஸ்தகத்திலிருந்தெடுத்தாராய்ந்தெழுதி யுள்ளதாயிருக்கிறது.

“உன்னதமாம் பார’தபோர் செய்வார் கதை.”

அந்தச் சரித்திரம் வீட்டில் கதைசொல்கிற மாதிரியாகத்தானே சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் மனதில் படும்படியான விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்பது அதை சிரத்தையுடன் வாசிப்போருக்குத் தானே பிரத்தியக்ஷமாக விளங்கும்.

விவேகசிந்தாமணி—“யுத்த காண்டம்.”

இப்பொழுது நடக்கும் பார’த மஹாயுத்தத்தின் மூலத்தையும், அது உண்டானதற்கான அந்தரங்க காரணங்களையும், அதன் நோக்கமின்னதென்பதையும், அதன்முடிவு எப்படியாகலாமென்பதையும், விவேகத்தோடு ஊகித்துணர விரும்புகிறவர்கள் “சண்டைக்காரர்களின் பூர்வோத்தரம்” என்கிற தலைப்பின் கீழ் சொல்லியிருப்பதையும் அதை யொட்டிவரும் விவரங்களையும் ஆதியோடந்தமாய் வாசித்து, ஊகித்து, உண்மையுணரக் கிரகிக்கவேண்டும். கிரகித்தால்தான் விவேகிகளான இதரஜாதியார் சொல்லும் அபிப்பிராயங்களின் உண்மையை உள்ளபடி ஆராய்ந்து மதிக்கமுடியும். ஆதலால் இதை யெல்லாம் சேர்த்து விவேகசிந்தாமணி—“யுத்த காண்டம்” (War Number)

* இப்பொழுது கெய்ஸருடைய இம்பீரியல் சான்ஸலராயிருப்பவர் (பிரதான மந்திரி) டாக்டர் வான் பெத்மான் ஹால்வெக் (Dr. Von Bethmam Hollweg.)

என்று பேரிட்டுப் பிரத்தியேகமாக இரண்டு மாச சஞ்சிகைகள் அடங்கும் விஷயங்களை ஒன்றுசேர்த்து அச்சிட்டு வெளியிட உத்தேசிக்கலானோம். உத்தேசித்து நாம் செய்கடனைச் செய்தோம். அதை வாங்கி வாசித்துப் பயன்பட உணர்வது பிள்ளைகள் பெற்றோர்களின் கடமை. அதை அவர்கள் குறைவற நிறைவேற்றிப், படித்தறிந்த அறிவின் பயனை ஈசுவரார்ப்பணம் செய்து கிருதார்த்தர்களாவார்களென்பது மேலோர் கருத்து.

அவையடக்கம்.

இந்த யுத்தத்தினால்வரும் லாபநஷ்டங்களுக்குப் பாத்திரப்பட்டவர்கள் இன்றைக்குச் சிறுவராயிருந்து நாளைக்குப் பெரியோராம் பாக்கியம்பெற வாய்ந்த குழந்தைகளும், அக்குழந்தைகளை வளர்க்கும் தந்தை தாய்மார்களுமே. ஆதலால் "பெற்றோர்கள்" உவப்போடேற்றுப்படிக்கவும், "பிள்ளைகள்" சிரத்தையோடு கற்றுத்தேறவும் வாய்ந்த வண்ணமாக எளிய நடையில் எல்லாருக்கும் விளங்கும்படி யெழுதப்பெற்றிருக்கிறது. அதைவாசித்துக் கிரகித்தவர்களுக்குத்தான் ஆங்கிலத்தில் அத்தேசவித்வான் ஒருவர் எழுதி யதிலிருந்தெடுத்து இதன் முன்னேட்டில் அச்சிட்டிருக்கும் உச்சிதமான வார்த்தைகளின் அர்த்தம் ஒருவாறு மனிதிற்பதியும். (6-வது பக்கம் பார்க்க).

ஆங்கில வித்வான் அபிப்பிராயம்.

அவர் எழுதியது "டெய்லி நியூஸ் அண்டலீடர்" என்கிற ஆங்கிலேய பத்திரிகையில் பிரசுரிக்கப் பெற்றிருப்பதிலிருந்து பின்வரும் முக்கியாம்சங்கள் பொறுக்கி யெடுத்துக் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. அவை பின்வருமாறு:—

சதுரங்க உவமானம்.

சதுரங்கத்திலாகட்டும், சச்சரவிலாகட்டும், வேறு உலகவியவகாரங்களிலாகட்டும் எதிராளியின் மனப்போக்கை யறிந்தால் தான் அவன் செய்யும் தந்திரத்துக்கு எதிர் தந்திரங்களை முன்யோசனையோடு தீரத்தெளிந்து செய்து அவன் காரியம் பலிக்காதபடி செய்ய முடியும். ஆதலால் எதிரியின் மனப்போக்கை யறிவது முக்கியமாயிருக்கிறது. இந்த யுத்தத்திலும் அப்படியே தான்.

"கெய்ஸர் மனப்போக்கு."

ஆனால் ஜெர்மன் கெய்ஸருடைய மனப்போக்கை யறிவது எளிதாகவில்லை. ஏனெனில் அவர் ஒருமனப்பட்டவராயின்றி அவருடைய மனோசக்தி பலதுறைகளிலுமிறங்கி வேலை செய்வதாயிருக்கிறது. இது காரணத்தினால் தான் அவர் மனப்போக்கை யறிவது அவருடைய சொந்த ஜனங்களுக்கும் அவரோடு நெருங்கிப் பழகிய நேசர்களுக்குமே கஷ்டமாயிருக்கிறது.

"அதை அறிவதிலுள்ள கஷ்டம்."

இதற்கு ஒரு உதாரணம் சொல்லிக் காட்டுகிறார். கெய்ஸருடைய அத்யந்த நேசர்களில் ஒருவர்ஹெர்பாலின் ('ஹெர்' என்றால் 'மிஸ்டர்' என்பதற்குச் சமானம்). இவர் ஒரு பெரிய வியாபாரி. அனேகம் கப்பல்கள் வைத்து வியாபாரம் செய்கிறவர். சென்ற 1913ஸ்ரீ நவம்பர்மீ இவரோடு சம்பாஷிக்கையில் ஒரு நண்பர், இத்தனை காலமாக சண்டை முஸ்தீபு நடந்துவருகிற முடுக்கைப் பார்த்தால் கெய்ஸர் சண்டைக்குத் தயாராயிருக்கிறார் போல் தோன்றுகிறதே, என்னசமாசாரம்? என்று கேட்டார்.

"ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்."

அதற்கு ஹெர் பாலின் சொன்னபதில் இது:-

"அது எப்படி யாகுமோ அது தான் எனக்கும் தெரியவில்லை. வியாபாரிகளாகிய நாங்கள் ஒரு பக்கம் அவர் காதில் சமாதானம் அவசியம் என்று உபதேசித்துக்கொண்டு வருகிறோம். சண்டைக்காரர்களான (Militarists) இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு பக்கமிருந்து சண்டை அவசியம் என்று இன்னொரு காதில் உபதேசம் செய்து வருகிறார்கள். கடைசியில் எந்த உபதேசம் பலிக்குமோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!-என்றார்.





"படபடப்பு, கபடம், சஞ்சலம்."

தானாகவே இப்பொழுதுள்ள கெய்ஸர் படபடப்பு ஸ்வபாவமுள்ளவர். அஃதோடு கபடமும் சஞ்சல ஸ்வபாவமும் சேர்ந்திருக்கிறது.

"ஜாதிஸ்வபாவம்."

"போதாக் குறைக்குப் பொன்னியம்மன் குறை" யென்றொரு பழமொழியுண்டு. அதுபோல, இவருடைய பிரத்தியேக ஸ்வபாவத்தோடு இவருடைய ஜாதி ஸ்வபாவமும் சேர்ந்துக்கொண்டிருக்கிறது.

"பூர்வோத்தர பரம்பரை."

(2) ப்ரஷ்யர்கள் ஆதியில் கொள்ளைக் காரர்களும் சண்டைக்காரர்களுமா யிருந்தவர்கள் பரம்பரையி லுதித்தவர்களாதலால் மிகவும் சாதனைக்காரர்கள்; அதிலும் அவர்கள் மனம் பிடித்ததே பிடியாகத் தொடர்ந்து பற்றி வேலை செய்யும் ஸ்வபாவம் அமைந்ததாயிருக்கிறது. இந்தக் குறையோடு அவர்கள் புஜபலம், படைவலி, ஆயுதச்சிறப்பு முதலான கெடுபிடி நியாயத்தைக் கொண்டே தீர்மானிப்பவர்களாயிருக்கிறார்கள். மனுஷ ஸ்வபாவம், நீதிமுறை, தர்ம்ம ஸ்பாவம் இவைகளையெல்லாம் அவர்கள் கணக்கில் எடுப்பதில்லை. இவை அவர்கள் மனதில் ஏறுவதாயுமில்லை.

"பேதபாவம் கூடாது."

(3) கெய்ஸர் செய்யும் கபட தந்திரங்களுக்கெல்லாம் நாம் பயப்படவேண்டியதில்லை. அவைகளெல்லாம் அவருடைய ஸ்வபாவத்தை உலகறிய விளக்க உபயோகமாகும். ஆனால் ஒரு விசேஷம். அவர் ஏகமாய் நின்று ஏகாக்ர சித்தத்தோடு சண்டைசெய்யத் துணிந்திருக்கிறார். அவரை யெதிர்த்து நிற்கும் கூட்டாளிகளோ பலர். இவர்கள் கூட்டுச் சிதறினால் வந்தது அநர்த்தம். பங்கம்வர, சிறிது பேதப்பட்டாலும் போதும். ஆதலால் இவர்களுக்குள் பேதபாவம் உதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அத்யாவசியகமாக விருக்கிறது.

"மித்திரபேதம் செய்வதில் கைதேர்ந்தவர்."

இவர்கள் அவரவர்கீர்த்திப்பிரதாபத்தையும், லாபநஷ்டத்தையும், லாபாலாப சம்பந்தமான மனோராஜ்யங்களையும் செய்யத் தொடங்குவாரானால் பேதபாவம் முற்றிப்போய் கூட்டுறவுக்குப் பங்கம் வருவது நிச்சயம். கெய்ஸரும் சமயமகப்பட்டால் கலகம் விளைக்கப் பின்வாங்கமாட்டார். அவருடைய எண்ணங்களெல்லாம் "இவர்கள் கூட்டுறவு எத்தனைகாலம் நிற்கும்! இவர்களுக்குள் பேதம் வராதா!" என்று இது ஒன்றில்தான் பற்றி நிற்கிறது. மித்திரபேதம் செய்வதில் அவர் கைதேர்ந்தவர் என்பதை மறந்துவிடக்கூடாது.

"சந்துவிட்டால் பொந்துசெய்யத் தயார்."

அவருடைய எதிரிகள் ஸ்வகாரியப்புலிகளாய் ஸ்வாமிகாரியம் வழ வழ வென்று விட்டார்களானால் அந்த சமயத்தைத் தந்திரமாய்ப் பற்றி அது அவர்கள் கூட்டுறவைக் கெடுக்கும்படி வேண்டிய சூழ்ச்சி செய்வதில் அலுப்புச் சலிப்பின்றி யுழைத்துவர அவருடைய தூதர்கள் உலகெங்கும் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சந்துவிட்டால் வந்து நுழைந்துகொண்டு பொந்துசெய்யத் தயாரா யிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆஸ்திரியா கூட்டாளி. வேறு ஸகாயமில்லை. அந்யதேசங்களில் துருக்கி யொன்றுமட்டுந்தான் அவருக்கு அனுகூலமாக விருக்கிறது. மற்றவர்களெல்லாம் சண்டை தொடுக்காவிட்டாலும், இவர் போரில் செய்த அக்கிரமங்களினால் இவருக்கு எதிரிகளாய் நின்று போர்நடத்தும் கூட்டாளிகளிடத்து அனுதாபம் கொண்டவர்களாக விருக்கிறார்கள்.

"தர்மதேவதை சிந்தைநொந்திருக்கிறாள்."

பெல்ஜியத்திலும், ப்ரான்ஸிலும் அனேக பட்டணங்களை வீணாகத் தீயிட்டுத் தகர்த்துப் பாழாக்கினது தர்மசிந்தையுள்ளவர்கள் மனத்தையெல்லாம் இவருக்குப் பிரதிகூலமாகத் திரும்பச் செய்துவிட்டது. தர்மமே சிந்தை நொந்திருக்கிறதென்று சொல்லலாம். ஆயினும் அவர்கள் யுத்தமுடிவு எப்படியாகிறது பார்ப்போம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்,

"உப்புக்குறவன் கதை."

கூட்டாளிகள் பேதபாவனைக் கிடங்கொடுத்தார்களானால் "உப்புக்குறவன் கதை" சொல்லி தம்பதிகளின் அந்யோந்யத்தைக் கெடுத்த ஸந்யாசி சமர்த்தாக 'கெய்ஸர்' அவர்கள் பேதத்தை முன்னிட்டுச் சேதம் விளைக்கப் பின்னடையார். இது கூட்டாளிகள் ஞாபகத்திலிருக்கவேண்டுமென்று ஆங்கில வித்வான் எச்சிரித்தெழுதியிருக்கிறார்.

"பேதபாவம் உறவைக் கெடுக்கும்."

பேதபாவமொன்றுமட்டும் மனதில் ஏற்பட்டுவிட்டால், எதிரிலுள்ள பகைவன்மேலுள்ள காரத்தையெல்லாம் பக்கத்திலுள்ள உறவின்மேல் திரும்பச் செய்வது வெகு சுலபம். இஃதோ நித்தியமான மனோ தத்துவங்களால் ஸாதனமாகும் ஓர் முக்கிய தர்மம். ஆகையால் கூட்டாளிகள் பேதபாவனைக் கிடங்கொடுக்கக்கூடாது. ஸ்வகாரிய சிந்தையிருந்தால் பேதபாவனை யெப்படியும் உதிக்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஆதலால் காரியம் முடிவு பெறுகிறவரையில் ஸ்வகாரிய சிந்தை கூடவே கூடாதென்று எச்சரிக்கிறார். இது உண்மையான எச்சரிக்கைதான்.

"கெட்டவனுக்குப் பட்டபின் தெரியும்."

(4) இந்த யுத்தம் மட்டும் கூட்டாளிகள் ஸ்வகாரிய சிந்தனையின்றி காரியம் முடிவுபெற நடத்தி முடித்தார்களானால், ஜெர்மனியின் படாடோபமும், வாச்சாஞானமும் பேசி சண்டைக்கு நியாயம் கட்டும் சாமர்த்தியமும் காரியத்தில் பிரயோஜனமற்றதென்று கண்டபின் அவர்களுக்கு புத்திவந்து சீர்ப்படலாம். ருஷியாவும் சண்டையிலே நம்பிக்கையுள்ள சித்தம் மாறி டால்ஸ்டாய் போதித்த தர்மத்தை யனுசரித்து சமாதானத்தைக் கைப்பற்றி நடக்கத் தீர்மானிக்கும்படியான புத்திவரப் பெறலாம். இது எப்படி யாயினும் ஆகுக. ஒன்றுமட்டும் நிச்சயம். அது என்னவெனில்:—

"சித்திலாதபோது சீவனில்லை யில்லை இல்லையே."

(5) இப்பொழுது (Aisne) 'ஏன்' நதி தீரத்தில் ஒரு மாசமாகியும் முடிவுபெறாமல் நடக்கும் பெருஞ் சண்டையினால் தீர்மானிக்கப்படத் தக்கது இத்தேசத்தார் அத்தேசத்தார் லாபநஷ்டமில்லை; இந்த ஜாதியார் அந்த ஜாதியார் உயர்வு தாழ்வுமில்லை. ஆனால் இந்தப் பெரிய சண்டை என்னத்திற்காக நடக்கிறதென்றால் இவ்வுலக தர்மம் ஜடசக்தியாகிய முரட்டுபலத்தை யனுசரித்து நடக்கிறதா? அல்லது ஜடசக்தியிலும் மேலான ஆத்மசக்தியாகிய சித்சக்தி (அறிவாகியசக்தி) பலத்தை யனுசரித்து நடைபெறுவதா யிருக்கிறதா? என்பது ஒன்றைத் தீர்மானிக்கவே இந்தச் சண்டை நடக்கிறது என்பதைக் கூட்டாளிகள் க்ஷணப்பொழுதும் மறக்கக்கூடாது. "சித்திலாதபோது சீவனில்லை யில்லை இல்லையே" என்பதை மறந்து விடக் கூடாது. மற்றவையெல்லாம் எதிரி கொட்டமடங்கினபின் யோஜித்துக்கொள்ளத்தக்க இரண்டாம்படியான காரியங்கள். தற்காலம் "தர்மமே ஜயம்" என்பதொன்றையே பற்றி "வர்மமப்பா வெல்வதில்லை" என்னும் உபதேசம் கெய்ஸருக்கும் அவருடைய ஜாதியாருக்கும் உள்ளத்திற்பட உணர்த்திக்காட்டவேண்டியது கூட்டாளிகள் செய்கடனாம். இதை அவர்கள் மறக்கக்கூடாதென்று ஆங்கில வித்வான் பன்முறையும் வற்புறுத்திக் கூறுகிறார்.

"குருக்ஷேத்ர மஹாவாக்கியம்."

குருக்ஷேத்திரத்தில் நடந்த மஹாபாரத யுத்தத்திலும், "இது ஒன்றேதான் அப்பா! கடைநோக்கம்; மற்றப்படி தோல்வியும் வெற்றியும் உனக்கில்லை. எல்லாம் எனக்கென்று அர்ப்பணம் செய்துவிட்டு செய்கடனைச் செய்பமாய்ச் செய்து கர்மபலனை விட்டு நைஷ்கர்ம ஸித்திபெற்றுய்வாய்!" என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் இதையே மஹாவாக்கியமாக உபதேசம் செய்யலானார்.



இந்தக் கலிமுற்றிய காலத்தில் பகவான் "ஜனசமஷ்டி" ரூபமாக அவதாரமெடுத்துப் பொதுஜன வாக்கு மூலமாய் அதே தர்மத்தைச் சண்டைக்காரர்களில் "தர்மத்துக்கென்று சண்டைபோடுகிறவர்களுக்கு" உபதேசம் செய்தது போலிருக்கிறது இவர் எழுதியிருக்கும் அற்புத வியாசம். ஆகையால் அதையே பெரிதாக் கொண்டு இந்த "சண்டைக்காரர்கள் பூர்வோத்தரம்" என்கிற கதைக்கு அவர் எச்சரிப்பு வார்த்தைகளை முன்னுரையாக எடுத்தாளலானோம்.

"BUSINESS AS USUAL"

"ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு."

சண்டைக்காரர்கள் கர்த்தாவென்றும் போக்தாவென்றும் அஹம்பாவச்செருக்குக்கொள்ளாமல் "தர்மமே ஜெயம்" என்று முழு மனதையும் அறிவையும், அவர்கள் பலமெல்லாவற்றையும் அது ஒன்றிலே பற்றாகப் பற்றி மற்றப் பற்றுகளையெல்லாம் விட்டொழித்தால், "பற்றற்றார் பற்றாகப் பற்றி நிற்குமவன்" எப்படியும் அவர்கள் கைபலக்கவும் தர்மம் தலையெடுக்கவும் உடனிருந்துதவுவன் என்பதிற் சந்தேகமில்லை. "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின் மேல்கண்ணாயிரு" என்றார் பெரியோரும். இங்கே காரியம் என்னவென்பதைக் கூட்டாளிகள் மறந்துபோகக் கூடாது.—என்பது அவர் முக்கியக்கருத்து.

சுபமஸ்து.

## THE PLAN THAT FAILED.

## உருப்படாதொழிந்த ஏற்பாடு.

"நடுவுநிலையார் பகர் சாக்ஷி."

ஜெர்மானியர் யுத்தம் ஆரம்பித்தகாலத்தில் அவர்களுடைய பிரதான ஸ்தானத்தில் ஜெர்மனிசைனியத்தோடுகூடவே யிருந்து எதையும் கண்ணால் காணக் கொடுத்துவைத்த சண்டையிற் சம்பந்தப்படாத ஒரு தேசத்தவர், ஜெர்மனி பிரதமத்தில் யுத்தம்தொடுக்கச்செய்த ஏற்பாட்டையும் அது சீர்ப்படாமலொழிந்ததின் காரணத்தையும் பற்றி லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அது சண்டையில் சம்பந்தப்படாதவர் பக்ஷபாதகமின்றி தான் கண்டதைக் கண்டபடி யுரைப்பதாயிருப்பதால் இச்சண்டையின் பிரதம ஏற்பாடு அதில் நன்றாய் விளங்குகிறது.

"சடுகுடு மந்திரம்."

முதலாவது ஜெர்மானியர் சண்டைக்கு ஆயத்தம் செய்தபொழுது திடீரென்று தங்கள் கைபலத்தைக் காட்டி எதிரிகளை மடக்கியடித்து அவர்கள் சைனியங்களைக் கிலிபிடிக்கச் செய்துவிடலாமென்பது அவர்களுடைய பிரதமநோக்கம். இப்படி 'சடுகுடு மந்திரம்' போடுவதற்காக வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு சவரணையாய்ச் செய்து முடித்து வைத்தார்கள். அவர்கள் சண்டையிற் பிறந்து சண்டையில் வளர்ந்து சண்டையிலே களிக்கும் ஜாதியாரென்பதை நாம் முதலாவது மனத்திலிருத்தல்வேண்டும். சமாதான காலத்தில் எல்லாம் அவர்கள் யுத்தநிதி என்று சண்டைக்குப் பணம் சேமம் செய்துவைத்து வந்தவர்கள். அத்தோடுகூட அவர்கள் தேசத்திலுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் 3-வருஷ காலம் சைனியத்தில் சேவகம் செய்து சண்டையிற் பழகி யிருக்கவேண்டும். வாஸ்தவத்தில் சண்டையுண்டானால் அவர்களெல்லாரும் இராணுவத்தில் சேர்ந்து சண்டைசெய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள், இதையும் நாம் மனத்தில் வைக்கவேண்டும்,

"தலைவரிசை" "பின்வரிசை"த் துருப்புகள்.

இப்பொழுது ஒவ்வொரு தேசத்திலும் சைனிய ஏற்பாடு செய்வதில் முதல்தர சைனியமென்றும் இரண்டாந்தர சைனியமென்றும் இருவகையுண்டு. இதையே "தலைவரிசை" (First line) என்றும், "பின்வரிசை" (Second line) என்றும், சொல்லுவர். தலைவரி சைனியம் எப்போதும் சண்டைக்கு முஸ்தீப்பாய் சண்டையே தொழிலாகப் விருக்கப்பட்டவர்கள். இந்த பாகம் நிலைவரமாக விருப்பதால் இதை "ஸ்டாண்டிங் ஆர்மி" யென்று சொல்வார்கள். இவர்களன்றி சண்டையிற் பழகி சண்டைக்காலத்தில் சண்டைக்கு ஆயத்தமாய் வரக் கடமைப்பட்டவர்கள் "பின்வரிசை" யென்கிற இரண்டாந்தர சைனியமாவர். இவர்கள் கோட்டைகளுக்குக் காவலிருக்கவும் போக்குவரத்து வழிகளைக் காக்கவும், தலைவரிசைத்துருப்புகள் சண்டையிட்டு ஜெயித்துப் பிடித்துக்கொண்டநாடுநகரங்களை வசப்படுத்தி வைத்துக்கொள்ளவும் சாதாரணமாக உபயோகமாவர். சமயம் வந்தால் சண்டை முகத்திலும் போய் யுத்தம் செய்யவேண்டியது தான்.

ஜெர்மனி கவான்மெண்டார் இந்த யுத்தத்துக்கு ஏற்பாடு செய்தபொழுது, படையெடுப்புச் சேனையென்றும், கையிருப்புச் சேனையென்றும் இருவித சேனைகளைத் தயார்செய்து, தலைவரி சைனியமடங்கிய முன்னதான படையெடுப்புச்சேனை படையெடுத்துச் சண்டை செய்து பிடித்துக்கொண்ட நாடுநகரங்களைப் பின்னால்வரும் கையிருப்புச்சேனை வசப்படுத்தி வைத்துக்கொண்டு போக்குவரத்து வழிகளைக் காத்து வரவேண்டியது.

"சதுரங்கசேனை" விமரிசை.

படைவகுப்பில், பூர்வகாலந்தொட்டு ரத, கஜ, துரக, பதாதியென நால்வகைப்படைகள் சொல்லப்பட்டிருக்கிறதை யெல்லாரும்வாசித்துக்கேட்டிருப்பார்கள். இப்பொழுது நடக்கும் சண்டை விமரிசையில், ரதப்படை யென்பதில் 'மோடார் சைனியம்' வலுத்திருக்கிறது. அதாவது, குண்டுவெடி தாங்கத்தக்க வலுவுள்ள கேடயங்களால் மூடப்பெற்ற 'மோடார் ரதத்தில்' 10-முதல் 20, 30 வரையில் கொண்டமட்டும் இராணுவவீரர்களை யேற்றி அவர்கள் கையில் சடுதியில் யந்திரசூக்ஷமத்தால் சுடும் பீரங்கிகளைக்கொடுத்து அவைகளை அற்புதமாக வெகு சீக்கிரத்திலும் சடுதியிலும் உபயோகிக்கப் பழக்கி யிருக்கிறார்கள். இவர்களுக்கு "Quick-firers" என்று பேர். சிறுவர்கள் தீபாவளிகாலத்தில் சீனி வெடியைக்கட்டோடு வைத்துச்சுட்டு வேடிக்கை பார்ப்பதுபோல், இவர்கள் படபடவென்று சடுதியில் சுடப் பழகியவர்கள். ஒருநிமிஷத்தில் பலவெடிகள் சுட்டு ஒவ்வொன்றிலும் அனேகரைச்சுட்டுவீழ்த்தும் சாமர்த்தியம் வாய்ந்தவர்கள். இவர்கள் புதிதாய்ச் சண்டையில் உபயோகிக்கப்படுவது இதுதான் முதல் தடவை. அதுவும் ஜெர்மானியர்கள்தான் இவர்களைப் பழக்கித் தயார் செய்து யுத்தகளத்தி லுபயோகிக்க ஆரம்பித்தவர்கள். இந்தப் படையில் ஆகாச ரதமும் சேர்க்கப்படலாம். ஏனெனில் ஆகாச ரதமேறி எதிரிகள் குடி, படை, யரண் வலி, இன்னவிதம் இப்படி யிருக்கிறதென்று தெரிந்துகொள்ளாவிட்டால் இவர்களை நன்றாக உபயோகிக்க முடியாது.

"பீரங்கிப்படை."

இரண்டாவதான யானைப்படை இப்பொழுது கிடையவே கிடையாது. அதற்கு பதிலாக அனேக யானைகள் பலமுள்ள பீரங்கிகளைத் தயார்செய்து உபயோகித்து வருகிறார்கள். அவற்றில் 4-அங்குல குண்டு வெடி சுடத்தக்க பீரங்கிகள் முதல் 16, 17-அங்குல குண்டு வெடி சுடத்தக்க மஹா பெரிய பீரங்கிகள் வரையில் இருக்கின்றன. சென்னையின் மேல் "எம்டன்" கப்பல் விடுத்த குண்டுகள் 4-அங்குலக் குண்டுகள். 'லீஜ்' கோட்டையைப் பிடிக்க 16-அங்குலக் குண்டுவெடிகள் தீர்க்கத்தக்க பெரிய பீரங்கிகள் உபயோகிக்கப்பட்டன. ஆன்ட்வெர்ப் கோட்டையைப் பிடிக்க அதிலும் பெரியதான 17-அங்குல பீரங்கிகள் உபயோகிக்கப்பட்டன. இந்த மஹா பெரிய பீரங்கிகளை முதல் முதல் செய்துபயோகிப்பவரும் ஜெர்மானியர் தான்.



"எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி."

அவர்கள் பிரதமத்தில் செய்த ஏற்பாட்டுப்படி அவர்கள் உத்தேசம் என்னவென்றால்:—

பெல்ஜியம் நாட்டு வழியாக நயமாகவோ, பயம் காட்டியோ, தலைவரி சைனியங்களைச் (Army of Invasion) செலுத்திச் சென்று பிரான்ஸ்தேசத்தின் எல்லைப்புறக் கோட்டைகளைப் பிடித்துக்கொண்டு அவைகளைப், படையெடுப்புச் சேனைகளைப் பின்பற்றி வரும் (Army of Occupation) இரண்டாந்தர சைனியங்களால் வசப்படுத்திக் கொண்டு நேராகப் பாரிஸ் நகருக்குப்போய் அம்மஹா நகரைச்சுற்றியுள்ள மஹத்தான கோட்டைகளைப் பெரிய பெரிய பீரங்கிகள்கொண்டு தகர்த்து அதைக் கைப்பற்றிக்கொண்டு எதிரிகள் திகிற்பட்டுப் போகச் செய்துவிடலாமென்பதே. • "எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி" யென்றார்போல அவர்கள் எண்ணம் இப்பொழுது வெளிப்படை யாகிவிட்டது.

"படைச் சிறப்பு."

இதற்கு வேண்டிய ஆயுத முஸ்தீப்புகளெல்லாம் வெகு நேர்மையாகச் செய்து வைத்திருந்தார்கள். ஜெர்மன் படைகளில் குதிரைப்படைவீரர் "Uhlans" 'ஊலன்ஸ்' என்பார் வெகுதீரர்கள். பதாதிப்பட்டாளம் என்பது கத்தி கேடயம் துப்பாக்கிகொண்டு கால் நடையாகச் சண்டை செய்யும் துருப்புகளுக்குப் பேர். ஜெர்மன் சைனியத்தில் இந்தமாதிரி காலாட்படைகள் இல்லவேயில்லை. அவர்களுடைய காலாட்படை யெல்லாம் "மெஷின்கன்" என்னும் யந்திரசூக்ஷமத்தால் தானாகச் சுடும் பீரங்கிகள் உபயோகிப்பதற்கானவர்களே யன்றி கையில் துப்பாக்கி யேந்திச் சுடுவதில் அவ்வளவு கைதேர்ந்தவர்களல்ல. இந்த யந்திரசூக்ஷமம் அமைந்த பீரங்கிகளை உபயோகிப்பதற்கானமனிதர்கள் வேண்டுமே. அவர்களையதில் பழக்கி குழுக்காக முன்செல்ல நடத்தி எதிரியின்சமீபத்தில்வந்து சண்டை வெகு மும்மரமாய் நடக்கையில் அவர்கள் பின்வாங்கிக்கொண்டு "மெஷீன்கன்களை" உபயோகிப்பார்கள். அது படபட வென்று பட்டாசு வெடி கேட்பதுபோல், பல குண்டுவெடிகளைத் தீர்த்து எதிரிகள் சைனியத்தை யழித்துவிடும். ஒவ்வொரு வெடிகுண்டிலும் அனேக சிறு குண்டுகள் துண்டு வெடிகள் இவை ஏராளமாகவிருக்கும். யந்திரத்தினால் பீரங்கி வாயிலிருந்து விடுபட்ட வெடிகுண்டு வெகுதூரம் வரையில் அதிவேகமாய் எதிர்ப்பட்டதையெல்லாம் துளைத்துக்கொண்டு சென்று கடைசியில் விழுந்த விடத்தில் உடனே வெடிக்கும். அதுவெடிக்கும்போது ஆகாசத்தில் அவுட்டு வாணம் வெடித்தால் வெகுதூரத்துக்கு அம்புமாரி பெய்தாற்போல் ஒளி தோன்றுவதுபோல, ஈயக் குண்டுகளும், சிறுதுண்டு வெடிகளும் 30, 40-கஜ தூரத்துக்குப் பரவி யெறிந்துவிட்டு வெடிக்கும். அது பட்டதெல்லாம் பாழாகும். இதற்கு "Shrapnel" † என்று பேர். மனிதர்களைக்கொல்வதற்காகவேயேற்பட்டது. புதைவாணம், அவுட்டு வாணம் போல் படாரென்றுவெடித்துப் பல கஜங்கள் சுற்றளவுக்குள்ளவர்களையெல்லாம் நாசஞ் செய்யத்தக்க சக்திவாய்ந்தது இது. 40-50 குதிரைகள் இறங்கியிருந்த ஒரு வயல் வெளியில் ஒரு குண்டு வெடிவிழ, அத்தனை குதிரைகளும் அதன் வீரர்களும் கண்டதுண்டங்களாகச் சிதைந்து போனார்களாம். இவ்வளவு பாரதூர யோசனையோடு யந்திர தந்திர நிர்மாணம் செய்தவர்கள் மந்திர சக்தியில் மட்டும் தாழ்ந்தவர்களாகக் காட்டிவிட்டார்கள். "தேஹபலமே பலம்" என்கிற அசுரபாவம் மிகுந்தவர்களாதலால், மனுஷனுடைய தீர புத்தியினாலும்அது காரணமாக ஜனித்த வீரச்செய்கைகளினாலும் இவர்களுடைய தந்திரயந்திர நிர்மாண யுக்திகளெல்லாம் சேர்ந்துள்ள "சடுகுடுமந்திரம்"

† 'ஷ்ராப்நெல்'-சரமாரிக் குண்டுவெடி.

பலிக்காமற் போகலாமென்பதை மட்டும் இவர்கள் முன்யோஜனையோடு தீரத்தெளிய நினைந்து ஆலோசிக்கவில்லை.

"உடல்சிறியாரேன் றிருக்கவேண்டாம்."

"மடல்பெரிது தாழை, மகிழினது கந்தம்
உடல் சிறியார் என்றிருக்கவேண்டாம்"—

என்னும் மூதுரையின் உண்மையை இவர்கள் உள்ளபடி யுணர்ந்தார்களில்லை. இவர்கள் கணக்கிலும், உருவத்திலும், யந்திர தந்திர நிர்மாண யுக்தியிலும் தேர்ந்தவர்களாயிருந்தபடியால் நமக்கு மிஞ்சினவர்கள் யாருமில்லை யென்கிற அகம்பாவச் செருக்கில் பெல்ஜியம் தேசத்தாரையும் அவர்களுடைய மனோதீரத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், அடாபிடித்தனத்தால் அவர்களை வென்று விடலாமென்று நினைத்துவிட்டார்கள். இந்த எண்ணம்தான் தப்பாகப் போய்விட்டது.

"சிற்றுளியால் கல்லும் தகரும்."

பெல்ஜியம் தேசத்தார் "உடல் சிறியார்" என்கிறபடி சிறு நாட்டில் வசிப்பவர்களாயினும் புத்தி யுக்தி தீரத்தில் இவர்களைவிட எத்தனையோ மடங்கு மேலானவர்களாகக் காட்டிவிட்டார்கள். அவர்கள் 15 நாளைக்கு இவர்களை எல்லைப் புறத்தில் மறியல் போட்டு மடக்கிவிட்டதால், ப்ரான்ஸுக்காரர்கள் தங்கள் சைனியங்களை முஸ்தீப்பு செய்துகொண்டு யுத்த ஸந்நத்தர்களாக அவகாசம் கிடைத்துவிட்டது. இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் இது பரமசாதகமாக விருந்தது. ஜெர்மானியர்கள் பெல்ஜியம் நாட்டைத் தாண்டி வருமுன் அவர்கள் வலி குறைந்துவிட்டது. எதிரிகள் படைவலி பலத்துவிட்டது. ஆகவே பாரிஸ் நகரண்டை மட்டும் வந்துவிட்டுத் திரும்பிப் பின்வாங்க வேண்டி நேரிட்டுவிட்டது. 'கொல்லுலைக் கூடத்து'ப் பெரியசம்மட்டியினால் தகர்க்கப்பட முடியாத கன்மலை "சிற்றுளியால்" தகர்க்கப்பெறும் என்பதை யுணர்ந்தார்களில்லை.

"மத-மோஹம்."

இப்பொழுது அவர்கள் ஏற்பாடெல்லாம் உருப்படா தொழிந்ததற்கு காரணம் இதுதான்.

" ........................——சிற்றுளியால்
கல்லும்தகரும், தகராதனங்கூழாய்
கொல்லுலைக் கூடத்தினால்"

என்றதன் உண்மையை உணராமல் அவர்கள் பட்டபாடு, அப்பப்பா! சொல்லிமுடியாது. இரவில் தீவட்டிக் கொள்ளையடிக்கத் தயார் செய்தவன் பகல் வெளிச்சத்தைக் கண்டு தன் ஏற்பாடு பயன்படா தொழிந்ததுபோலும், பகற்கொள்ளைக்கு ஏற்பாடு செய்தவன் சைனியங்களை யெதிர்த்துச் சண்டை செய்ய ஏலாதது போலவும், திடீரென்று அசப்பில் எதிரிகளை முறியடித்து அவர்கள் நாடு நகரங்களைப் பிடித்துக்கொண்டு விடலாமென்று ஏற்பாடு செய்தவர்கள் பெல்ஜியம் நாட்டார் காட்டிய வீர தீரத்தால் விழித்துக்கொண்டு சண்டைக்குத் தயாராக வரப் புறப்பட்டபின் முன்செய்த ஏற்பாடுகள் தலைகவிழ்ந்து போவனவாயின. அவர்கள் நினைத்த தொன்றாக நேர்ந்த தொன்றாயிற்று. அசுர பலமுள்ளவர்கள் அழிவதெல்லாம் இப்படித்தான். பத்மாஸுரன் தன்மையால் தானே தஹிக்கப்பெற்று நாசமானான். ஏனெனில் மோஹத்தில் மதிமயங்கி தன் தலையில் தானே கை வைத்துக்கொண்டான். அவன் பிறரை யழிக்கப் பெற்றவரம் அவனையே அழிப்பதாயிற்று. ஆகையால் தான் தேஹபலத்திலும் மனோபலம் பெரிதென்றும், மனோபலத்திலும் ஆத்மபுத்தி பலம் பெரிதென்றும் பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். முன்னதற்குதாரணம் எத்தனையோ பஞ்சதந்திரக் கதையில் காணலாம். பின்னதற்குதாரணம் தேவாசுரர்கள் சண்டையில் அசுரர்கள் அழிந்ததெல்லாம் மதிமோசத்தாலென்று நன்றாக விளங்கும். ஆகையால் "தர்மமே ஜயம்" என்பதில் நம்பிக்கையும், தர்மத்தை யுள்ளபடி யுணர்ந்து நடக்கும் சிந்தையும்





ஒழுக்கமும் வேண்டும். இவ்விரண்டு மில்லாதவிடத்து வெறும் தேஹபலம் வீண்முரட்டுபலமாய் முடிந்து மிருகபலத்துக்கொப்பாகும். அசுரபலமும் அப்படியேதான் கடைசியில் முடியும். இதையுணர உணர்த்தவே இந்தப் பாரத மஹாயுத்தம் நேர்ந்தாப்போலு மிருக்கிறது.

"அஹம்பாவத்தால் வந்த ஆபத்து."

பெல்ஜியத்தைப் படைவலியால் ஜயித்தும் அத்தேசத்துக் குடிகள் தம் மனோவலியால் இவர்களை எதிர்த்து நிற்பதால், இவர்கள் படைவலி பிரயோஜனப்படாமற் போயிற்று. பிரதமத்தில் ஊரைக் கொள்ளையிட்டும் 'யுத்தநஷ்டம்' என்று பெருநிதி வசூல் செய்தும் காரியத்தைச் சாதித்து வந்தார்கள். இதை யுணர்ந்த குடிகள் தம் தானியக்களஞ்சியங்களை யழித்துவிட்டு ஊரைவிட்டோடத் தலைப்பட்டு விட்டார்கள். பெல்ஜியம் நாட்டிலுள்ள சைனியங்களுக்கு ஆகாரம் முட்டுப்பட்டு அது இல்லாமல் தவிக்கிறார்கள். மனிதன் வயிற்றால் பிழைத்திருப்பவன். அதுவும் இராணுவத்துக்கு பலம் வயிற்றுச் சோற்றில் தானிருக்கிறது. சேனைகள் வாய்க்குப்போடச் சாப்பாடில்லை. பீரங்கி வாய்க்குப்போட மருந்தில்லை. சேனைகள் இந்த ஸ்திதியில் அந்நிய தேசத்திலிருந்து சண்டை போடுவதென்றால், அது எப்படி ஸாத்தியமாகும்? ஜெர்மானியர் இந்த வித்தையும் கற்றார்போல ஆரம்பசூரத்துவமாய் நடந்துகொண்டுவிட்டார்கள். முட்டுப்பட்டபோது விழிக்கிறார்கள். கைப்பொருளெல்லாம் செலவாய்விட்டது. சண்டைச் செலவுக்கு இனிக் கடன் வாங்கியாகவேண்டும். இந்த அவஸ்தையில் அவர்கள் இப்பொழுது இருக்கிறார்கள். இதிலிருந்து எப்படி தப்புவார்களோ தெரியவேண்டும்.

## A HOUSE-HOLD NARRATIVE OF THE CONTENDING PARTIES IN THE GREAT WAR OF 1914.

### The Slav vs Teuton: A Brief Historical Review.

"Europe and America have gasped with admiration before the symmetry and system of German organisation. Only those who placed liberty of thought, a generous admosphere and a love of abstract truth before mechanical perfection have wondered—and are still wondering—if Germany may not have to be freed from Teutonism before she can resume her place in the world as a leader of thought. However that may be this military Teutonising element is essentially antipathetic to the Slav-dreamer and democrat. He can fight for an ideal; he will die for a dream. He will not submit to being thrust wholesale into a sausage machine, to come out the other end neatly measured, labelled, and looking like every other sausage. The Slav and the Teuton are hereditary foes, on racial grounds, but that racial animosity is founded on a real difference of ideals, on a mutual incompatibility. German and Slav might settle down side by side—they have mingled much and have much in common, but the Teuton comes with his brutal drill-sergeant methods and the inmost soul of the Slav revolts. In writing this it must be remembered that Slav unity has never yet been complete. The Slavs have never trusted each other, and their distrust has been justified. Their opportunity for cohesion has come. Will they grasp it?"—*Mr. Ellis M. Cook in the Royal and Colonial Institute Journal.*

## A HOUSE-HOLD NARRATIVE OF THE CONTENDING PARTIES IN THE GREAT WAR OF 1914.

### The Slav vs Teuton: A Brief Historical Review.

### 1914ஹூத்துப் பார'த மஹாயுத்தம்: சண்டைக்காரர்களின் பூர்வோத்தரம்.

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் சண்டையில் இருஜாதியார் சம்பந்தப் பட்டிருக்கிறதாகச் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஸ்லாவ் ஜாதியாரென்றும் டியூடன் ஜாதியாரென்றும் பேர்வழங்குகிறது. தற்காலம் ஐரோப்பாவிலுள்ள ஜனங்களெல்லாரும் ஆதியில் ஏகமாயிருந்த ஒரு (Indo-European Stock) ஜாதியிலிருந்துவந்ததாகச் சொல்கிறார்கள். இது எப்படியாயினும் சரித்திரமூலமாய் ஆராய்ந்துபார்க்கில் பூர்வம் ப்ரபலமாய் விளங்கிய ரோமராஜ்யம் (Roman Empire) சீர்குலைந் தழிந்ததற்குக்காரணம் 'ஜர்மானிக்' ஜாதியார் பலர் படையெடுத்து வந்தது என்று பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் தெரியும். கிறிஸ்து சகாப்தமுதலில் சக்ரவர்த்திப் பட்டம்தரித்து ரோம் ராஜ்யங்களையெல்லாம் ஆண்டவரான சார்லிமேன் சக்ரவர்த்தி இந்த ஜர்மானிக் ஜாதியைச் சேர்ந்தவர்தான். ஆனால் அவருடைய ராஜ்யத்துக்கும் ரோமுக்கும் சம்பந்தமில்லை. ஓரினத்தாராகிய பலஜாதியாரும் பலநாட்டுச் சிற்றரசர்களும் ஒன்றுகூடி அவர்களுக்குமேல் சக்ரவர்த்தியாகிய மேல் அதிகாரி சேர்ந்துள்ள இராஜ்யமது.

THE HOLY ROMAN EMPIRE.

"ஹோலி ரோமன் எம்பையர்."

இந்தப் பரதகண்டத்திலே 56-தேசத் தரசர்களிருந்ததாகவும் அவர்களுக்கெல்லாம் மேலாய் சக்ரவர்த்தியொருவர் இருந்ததாகவும் சரித்திரபூர்வகமாய் அறிகிறோம். அப்படிப்போல "ஹோலி ரோமன் எம்பையர்" என்று பூர்வத்தில் பிரக்கியாதிபெற்று சார்லிமேன் சக்ரவர்த்தி காலத்தில் பிரபலம்பெற்று அதற்கு முன்னிருந்த ரோமராஜ்யத்தின் அதிகாரத்தையெல்லாம் வகித்துவந்த ராஜ்யம் பலதேசங்கள்கூடிய ராஜ்யமாயிருந்தது. இந்த தேசங்களுக்கெல்லாம் மேலானவர் "சக்ரவர்த்தி." இந்த சக்ரவர்த்திப் பட்டம் ஆஸ்திரியா தேசத்தவராகிய ஹாப்ஸ்பர்க் வம்சத்தார் பாரம்பரியமாக இருந்துவந்தது. 1814-ஹூ முடிந்த நெபோலியன் யுத்தங்களின் பயனாக "ஹோலி ரோமன் எம்பையர்" என்கிற பேரால் விளங்கிய பூர்வீகராஜ்யம் சிதைந்து போய்விட்டது.

ப்ரஷ்யா முன்னுக்கு வந்தகாலம்.

நெபோலியன் சண்டையில் ப்ரஷ்யா முன்னுக்கு வரலாயிற்று. "வாடர்லூசண்டை" (Waterloo) 1814-ம் வருஷத்தில் நடந்தது. அஃதோடு நெபோலியன் கொட்டம் அடங்கிவிட்டது. பிறகு 1870-ம் வருஷத்தில் ப்ரஷியாவுக்கும் ப்ரான்ஸுக்கும் சண்டை நடந்தது. அதில் ப்ரெஞ்சு தேசத்தார் தோல்வியடைந்தார்கள். ஸெடான் (Sedan) சண்டையில் அவர்கள் தோல்வி யடைந்தபின் ப்ரஷ்யா தேசமும் அதைச்சேர்ந்த சிற்றரசர்களும் ஒன்றுகூடி ஒரு இனத்தாராக விருந்து இப்பொழுதுள்ள "ஜெர்மன் எம்பையர்" என்னும் மஹாராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இராஜ்யம் ஏற்பட்டபோது அது பாரிஸ்நகரில் விளம்பரம் செய்யப்பட்டது. 1871-ம் வருஷம் பிப்ரவரிமீ ஆல்ஸேஸ் லாரேய்ன் மாகாணங்கள் ஜெர்மனி ராஜ்யத்தைச் சேர்ந்ததாக ப்ரஷியாவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது.

தற்கால ஜெர்மனி ராஜ்யம்.

இப்படியாக இப்பொழுதுள்ள ஜெர்மன் எம்பையர் வாழ்வெல்லாம் 1870-ம் வருஷத்துக்குப்பின் உண்டானதே. ஆனால் அது முதல் 30 வருஷத்தில் ஜெர்மனி மிகவிர்த்தியடைந்துவிட்டது. 1870-ம் வருஷத்தில் ஜர்மனியைச்சேர்ந்த நாடுகளெல்லாம் ஏழைமைப் பட்டிருந்தன. இப்பொழுது கல்வியிலும், செல்வத்திலும் சீரிலும் மிகுந்திருக்கின்றன. 1814-ம் வருஷத்தில் (வாடர்லூ சண்டையி





னால் நெபோலியன் கொட்டம் அடங்கிய வருஷம்) ஜெர்மன் எம்பையர் என்பதே இல்லாமலிருந்தது. அந்த நாடுகள் சில்லரை அரசர்களால் ஆளப்பட்டு மிகவும் க்ஷீணதசையிலிருந்தன. அத்தேசங்களின் ஆஸ்தியெல்லாம் 200 கோடிக்குக் குறைந்திருந்தது. இப்பொழுது 1914-ம் வருஷத்தில் ஜெர்மன் ராஜ்யத்தின் ஆஸ்தியிலிருந்துவரும் வருஷாந்தர வருமானம் மட்டும் 200 கோடியிருக்கும். இதைத் தவிர 160 கோடி முதல் சேர்ந்திருக்கிறது.

1814-ம் வருஷத்தில் இப்பொழுது ஜர்மனியிருக்கும் நாடுகளின் மொத்த ஜனத்தொகை 2-கோடியே 40-லக்ஷம். இப்பொழுது ஜெர்மனியின் ஜனத்தொகை 6-கோடியே 70-லக்ஷம். அதாவது 100-க்கு 180 விகிதம் பெருகியிருக்கிறது. இப்படியே வியாபாரம், வர்த்தகம், கல்வி, நாகரிகம் எல்லாவற்றிலும் அவர்கள் மிகவும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள்.

THE HOUSE OF HAPSBURG.

ஹாப்ஸ்பர்க் வம்சம்.

ப்ரஷ்யாவின் தலைமைக்குள்பட்டு ஜெர்மன் நாடுகள்சேர்ந்து 'ஜெர்மன் எம்பையர்' எனப் பேர்பெற்று விளங்கவும், பழமையான "ஹோலி ரோமன் எம்பையர்" என்னும் மஹாராஜ்யத்தின் தலைமைவகித்த ஹாபஸ்பர்க் வம்சத்தார் ஆஸ்திரியா சக்ரவர்த்தியாக விளங்கினார். இப்பொழுது ஆஸ்திரியா, ஹங்கேரி இரண்டு தேசங்களும்சேர்ந்து ஒரு ராஜ்யமாக விளங்குகிறது. அதற்குத்தலைவர் ஹாப்ஸ்பர்க் வம்சத்தவரான ப்ரான்ஸிஸ் ஜோஸெப் சக்ரவர்த்தி. இவருடைய மூத்தகுமாரரும் பட்டத்துக்குரியவருமான 'ஆர்ச்டியூக் ப்ரான்ஸிஸ் பேர்டினேண்ட்' என்பவர்தான் அவருடைய மனைவியோடு ஸிராஜிவோ (Serajevo) பட்டணத்தில் கொலை செய்யப்பெற்றார். அது காரணமாகவே இந்தமஹாயுத்தம் உண்டாயிற்று என்பர்.

(THE HOUSE CF HOHENZOLLERN.)

ஹாஹன்ஸால்லர்ன்.

1870-ம் வருஷமுடிவில் தலையெடுத்த ஜெர்மன் எம்பையருக்குத் தலைவர் ப்ரஷ்யா தேசத்தரசர். இவர்தான் ஜர்மன் சக்ரவர்த்தி பட்டத்துக் குரியவர். இவர் ஹாஹன்ஸாலர்ன் (Hohenzollern) வம்சத்தைச் சேர்ந்தவர்.

சார்லிமேன் (Charlemagne) சக்ரவர்த்தியாண்ட "ஹோலி ரோமன் எம்பையர்" என்னும் மஹாராஜ்யம் அவருடைய பேரன் அரசாண்டகாலத்தில் இரண்டுபட்டுச் சீர்குலையலானபோது, 'கால்' (Gaul) என்னும் (இப்பொழுது ப்ரான்ஸ் இருக்கிற) பாகம் ரோம நாகரிகத்துக்குட்பட்டுச் சீரடைந்தவர்களான ஜாதியாரால் குடியேறப்பெற்றிருந்தது. அவர்கள் இரத்தத்தில் (Celts) ஸெல்ட்ஸ் ஜாதியின் ரக்தமும் கலந்திருந்தது. இவர்கள் ஒன்று சேர்ந்து ப்ரான்ஸ் ராஜ்யத்தை யேற்படுத்தினார்கள். இவர்களுக்கு (Gauls) "கால் நாட்டார்" என்கிறபேரும் இருந்தது. பூர்வீகமான நாகரிகம் படிந்த இந்த ஜாதியார், "கால்" பிரதேசத்தில் வாழ்ந்து வந்தபொழுது, தென்னிந்தியாவில் பாளையக்காரர்கள் முன்னுக்குவந்து பிரபலமடைந்ததுபோல், ஆதியில் இவர்கள் "தேசத்தைக் கொள்ளையடித்துப் பாழ்படுத்திய திருடர் கூட்டத்தலைவர்கள் விசேஷபிரபலம் பெற்றிருந்தார்கள்.

அவர்கள் நாகரிகத்தில் பின்னடைந்தவர்களாய், நாகரிகமாய் 'உழுதுண்டு' ஜீவித்த ஜாதியாரைக் கொள்ளையிட்டு வசித்து வந்தார்கள். இவர்கள் ஜெர்மானிக் ஜாதியைச் சேர்ந்தவர்கள். கொள்ளையடிப்பதே தொழிலாயிருந்தவர்கள். இந்த கொள்ளைக்காரர்கள் கூட்டத்தை கிறிஸ்துபிறக்குமுன் 102-வது வருஷத்தில் (சரியாக 2016 வருஷங்களுக்கு முன்) பேர்போன மேரியஸ் (Marius) என்னும் ரோமன் ஜெனரல் வேரறுத்து அவர்கள் கொட்டத்தை யடக்கினார். அதற்குப்பின் இந்தக் கொள்ளைக்கூட்டத்தார் வம்சத்தில் உதித்தவர்கள் "டியூடன் ஜாதியார்" என்று பேர்பெற்றார்கள் என்று சொல்கிறார்கள். இந்தக் கூட்டக்கொள்ளைத் தலைவர்கள் கிறிஸ்துபிறந்த 13, 14-வது நூற்றாண்டுகளில் கைவலுத்து பொமரேனியா முதல் மிமேல் (Pomerania to Memel, on

the Baltic) வரையிலுள்ள பால்டிக் கடலோரத்து தேசங்களைப்பிடித்து வசப்படுத்திக்கொண்டு வாழ்ந்தார்கள். இந்த நாடுதான் பிந்தி ப்ரஷ்யாவாகத் தலையெடுத்தது. இவர்கள்தான் டியூடன் ஜாதியாரின் மூதாதைகள். 'ஜர்மானிக்' ஜாதியார் என்பது ஆதியில் இருந்த இனத்தைக்குறிக்கும் பேராயிருந்தது. இதில் டட்ச், பிரிடிஷ், ஸ்காண்டிநேவியன் முதலான பலதேசத்தார்களும் சேர்ந்தவர்களாகிறார்கள். இவர்களெல்லாம் ஆதியில் ஓரினத்தாராகவிருந்தவர்களாதலால் (Germanic) ஜர்மானிகர்கள் என்று பேர்பெற்றார்கள். இப்பொழுதுள்ள ஜெர்மனி தேசத்தவர்கள் (முக்கியமாய் ப்ரஷ்ய தேசத்தார்) டியூடன்ஸ் என்றுசொல்லும் பூர்வம் கொள்ளைக் கூட்டத்தலைவர் (Robber Chiefs) களாயிருந்தவர்களுடைய பரம்பரையிலுதித்தவர்கள். இவர்களுக்குத் தலைவராயுள்ளவர்தான் ஹாஹன்ஸால்லர்ன் வம்சத்தார். இவருக்கு Grand Master of the Teutonic Knights என்கிற பட்டமுண்டு.

(CENTRAL EUROPE.)

ஐரோப்பாவின் மத்தியபாகம்.

ஐரோப்பாகண்டத்தின் மத்தியபாகத்திலும் வடபாகத்திலுமுள்ளஜனங்கள் ஆதி ஜெர்மானிகர்கள் மட்டுமென்றாவது அவர்களுக்குப் பின்வந்த டியூடன் ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றாவது சொல்லமுடியாது. ஆதி ரோமராஜ்யத்தை ஜெர்மானிகர்கள் கூட்டம் கூட்டமாய் வந்து பிடித்துக்கொள்ள அது சீர்குலைந்ததென்று சொன்னோம். அவர்களைப்பின்தொடர்ந்து இன்னொரு ஜாதியார் படையெடுத்து வந்து குடியேறினார்கள். அவர்கள்தான்

"ஸ்லாவ் ஜாதியார்."

இவர்களுக்கு ஸ்லாவ்ஸ் (Slavs) என்று பேர். இவர்கள் பூர்வோத்தரம் என்ன, இவர்கள் எப்பொழுது ஐரோப்பாவிற் சென்று குடியேறினார்கள் என்று சொல்வது சாத்தியமாகவில்லை. ஆனால் பூர்வந்தொட்டுள்ள 'ஸிதியன்ஸ்' (Ancient Scythians) ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்கிறார்கள். இது எப்படியிருப்பினும், இவர்கள் அதிபூர்வகாலந் தொட்டு ஐரோப்பா கண்டத்தின் மேற்பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டு அங்கே குடியேறி வசித்து வந்தார்களென்பது நிச்சயம். (Balkan Mountains) பால்கன் மலைத் தொடரையடுத்த பால்கன் தீபகல்பத்திலும் (Balkan Pennisula), க்ரீஸ் (Greece) தேசத்திலும் கூட இவர்கள் குடியேறியிருந்தார்கள் என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

"ஸார்மேஷியா" ("Sarmatia")

பூர்வத்தில் ரோமராஜ்யமிருந்த காலத்தில் (கிறிஸ்து பிறக்குமுன்) "ஸார்மேஷியா" என்னும் தேசமொன்றிருந்தது. அது தான் இப்பொழுதுள்ள படங்களில் (Russian Poland) ருஷியன் போலண்ட் என்றும், காலிஷியா (Galicia) என்றும் பேர்கள் பெற்றிருக்கிறது. (இந்த இடங்களைப் பிள்ளைகள் "அட்லாஸ்" என்னும் படப்புஸ்தகங்களை வைத்துக் கொண்டு பெற்றோர் பெரியோர்கள் உதவி வேண்டியிருப்பினும் அதை நாடியடைந்து நன்றாகப் பார்த்துத் தெரிந்துகொள்ளல்வேண்டும்.)

ஸ்லாவ் ஜாதியரின் பூர்விக ஸ்தானம்.

ஆதியில் இந்த ஸார்மேஷியாவில் (Modern Galicia and Russian Poland) இருந்தவர்கள்தான் ஸ்லாவ்ஸ் என்பார். இவர்களுடைய பூர்வேத்தரம் இவ்வளவுதான்தெரியும்; இதற்கு மேல் தெரியாது. இங்கேயிருந்து இவர்கள் (ஸார்மேஷியாவி லிருந்தவர்களாதலால் ஸர்ப்ஸ் "Serbs" என்று பேர்வழங்கப் பெற்று) தங்கள் படைவலியாலும், சண்டை செய்யாமல் குடியேறிப் பரவும் சக்தியாலும் ஐரோப்பாவில் புகுந்து அட்ரியாடிக் (Adriatic) கடற் கரைவரையில் பரவிவிட்டார்கள்.

"ஸர்ப்ஸ்' (Serbs)

பூர்வம் கூட்டக்கொள்ளைத் தலைவர்களாயிருந்து பிரபலம்பெற்றபின் "டியூடானிக் நைட்ஸ்" "டியூடன் ஜாதி யுத்தவீரர்கள்" என்று பெத்தப்பேர் வைத்துக்கொண்டு நாடு நகரங்களைப் பிடித்துக்கட்டிக்கொண்டவர்களான டியூடன்ஸ் பிந்தி ஜயித்த நாடுகளில் பூர்வம் இந்த "ஸர்ப்ஸ்" (Serbs) என்கிற ஸ்லாவ் ஜாதியார் குடியேறியிருந்தார்களென்று நன்றாகத் தெரியவருகிறது. அவர்களுடைய ஸ்தானபலம் போஹிமியா (Bohemia) தேசத்தில் விசேஷித்திருந்தது. இன்றைக்கும் அங்கே அவர்கள் செல்வாக்கேதான் விசேஷம். அரசுரிமையிழந்தாலும் அவர்களுடைய ஜாதிக்குணம் மாறவில்லை. "சுட்டாலும் சங்கு தன் நிறம் மாறாது" அல்லவோ! அதுபோல அவர்கள் அரசுரிமையைப் பிடுங்கிக் கொண்டாலும், அவர்கள் பிறவிக் குணத்தை மாற்றமுடியவில்லை.

அவர்கள் பூர்வோத்தரம்.

"கோத்திரமறிந்து பெண்ணைக் கொடு,
பாத்திரமறிந்து பிச்சையிடு."

என்பது நமக்குள் வழங்கும் ஒரு உண்மையான பழமொழி. பழமொழியென்றால் பரம்பரையாக வழங்கிவரும் மூதுரை, அதாவது, மூத்தோர் சொல் என்று அர்த்தம். கோத்திரம் என்றால் பூர்வோத்தர பரம்பரையென்று அர்த்தம். பூர்வோத்தர பரம்பரை உத்தமமாக வில்லாத ஒருவனுக்குப் பெண்ணைக் கொடுத்துவிட்டால், சந்ததியின் குணம் மாறிப்போம். விவாகமென்பது குலவிருத்திக்கு மட்டுமல்ல; குணவிருத்திக்கும் அதுவே சாதனமாகும். குலம் கெட்டால் குணம் கெடும். குணம் கெட்டால் ஜாதிகெடும். இது காரணம் பற்றியே ஆர்ச்சுனன் சண்டைமுகத்தில் யுத்தம் செய்யப் பின்னடைந்தான். குலத்துக்கு கோத்திரம் எப்படியோ அப்படிப் போல ஜாதிக்குப் பூர்வோத்தரம் விசேஷம். ஆதலால் இப்பொழுது நடக்கும் பார்-ஹதயுத்தத்தில் முக்கிய வைரிகளாயிருப்பார்களுடைய ஜாதியின் பூர்வோத்தரத்தைப்பற்றிச் சரித்திர வாயிலாய் ஆராய்ந்தறிந்த மட்டும் உள்ளதை யுள்ளபடி அதிசுருக்கமாய்ச் சொல்லி விளங்க வைத்தோம்.

"உழுதுண்டு வாழ்வார்."

பூர்வந்தொட்டு "ஸலாவ்ஸ்" சாந்தஸ்வபாவமுள்ளவர்கள். அடக்கமும் பொறுமையும் அதற்கேற்ற ஊக்கமும் உழைப்பும் அதிகம். ஓரிடத்தில் நிலையாயிருந்து "உழுதுண்டு வாழ்வார்" நிலையே பெரிதென்று சண்டைசச்சரவுகளில் தலையிட்டுக்கொள்வதைவிட வியவசாயத்தை விர்த்திசெய்து ஜீவிக்கும் ஸ்வபாவம் அவர்களிடத்து பிறவிக்குணமாக ஏற்பட்டிருந்தது. பூர்வத்தில் ஐரோப்பாவில் படையெடுத்துப் போர்விளைத்து ஓரிடத்தும் நிலைத்துத்தரிக்காமல் போர்த்தொழில் செய்து பிழைத்து வந்தவர்களான (Nomadic tribes) அல்லாடிச் சாதியார்களான ஹூணர்கள் (Huns), ஆவர்ஸ் (Avars) இனத்தையொட்டிப் பிழைக்கும் ஜர்மானிக் ஜாதியார்கள், (Germanic hordes) இவர்களெல்லாரிலும் "ஸ்லாவ்ஸ்" பயிர்த்தொழில் ஜீவனம் செய்து பிழைப்பதில் விசேஷ பற்றுள்ளவர்களாய் அதற்கேற்ற மேலான குணமும் மணமும் பொருந்தியிருந்தார்கள்.

"இல்வாழ்வார்" (Homeloving people).

இங்கே ஜனஸமூக சம்பந்தமான இன்னொரு விசேஷம் கவனிக்கவேண்டும். நாடோடியாகத் திரிந்து அல்லாடிப் பிழைப்பவர்கள் சண்டை சச்சரவுகளில் கைதேர்ந்தவர்களாய் துணிச்சல் மிகுந்தவர்களாயிருப்பது சகஜம். ஏனெனில் இந்த குணவிசேஷங்கள் அவர்களிடத்தில் இல்லாவிட்டால் அவர்கள் வம்சவிர்த்தியின்றி சீக்கிரம் சிதறுண்டு அழிந்து போவார்கள். அப்படியே ஓரிடத்தில் நிலைத்துக் குடியேறி வீடுவாசல்களோடு வியவசாயம் கைத்தொழில் செய்து பிழைக்கிறவர்கள், சமுதாயக்கட்டுப்பாடும் ஸம்பிரதாய வலுவுமுடையவர்களாயிருப்பது சகஜம். ஏனெனில், "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்பதின் உண்மையை அவர்கள் நித்தியப்படி அநுபவமாயறிந்துணர்ந்தவர்கள். ஸமுதாயக்கட்டுப்பாடுள்ள விடத்தில் ஜாதிபொற்

றுமை தானே விளங்கும். இவ்விரண்டுக்கும் ஆதிமூலமாயிருப்பது "இல்வாழ்வு" என்று சொல்லும் குடும்பம். இதையே "Home" என்றும் "Family" என்றும் சொல்லுவர்.

"குடித்தனமோ துரைத்தனமோ"
(The Principles of Democracy.)

"குடித்தனமோ துரைத்தனமோ" என்றொரு பழமொழி வழங்கி வருகிறதல்லவா. "இல்வாழ்வு" சம்பந்தமான "குடித்தன"ப் பாங்கும் "துரைத்தனம்" என்று சொல்லும் "அரசியல்" முறையும் ஒரே தர்மத்தை யனுசரித்துள்ளன. இவ்விரண்டுக்கும் ஸமஷ்டி, வியஷ்டி பேதமன்றி வேறு பேதமில்லை.

ஸமஷ்டி தர்மம் (Social Evolution)

"ஒன்றிமரம் தோப்பாமா?" என்பது போல, "ஓரிக் குடித்தனம்" அல்லது ஒன்றுபடாத பலவேறுபட்ட குடித்தனங்கள் துரைத்தனமாகாது. ஆகையால் குடித்தனங்கள் பல விருந்தால் அவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி ஓரினப்படுத்தும் "ஸமுதாயக் கட்டுப்பாடு" கூடவேயிருக்கும். இஃதிருந்தால் தான் அது "ஊர்" ஆகும். ஜனங்கள் ஒன்று கூடி பிரவிருத்தி மார்க்கத்தில் ஓரினப்பட்டு நடக்காவிட்டால் ஸமஷ்டி தர்மம் சீர் பெற மாட்டாது. "ஸமஷ்டி தர்மம்" என்பது ஏகம் அநேகமாயும், அநேகம் ஏகமாயும் முறைப்படி ஒன்றிற் பலவும், பலவில் ஒன்றுமாய் நிகழ்ந்து வளருவதாம். மரங்கள் சேர்ந்தடர்ந்து தோப்பாவதும், தோப்புகள் சேர்ந்தடர்ந்து வனமாவதும் ஸமஷ்டிதர்மமாம். தோப்பு ஒன்றில் மரங்கள் பலவுண்டு." தோப்புகள் பல விருப்பினும் "வனம்" என்பது அவைகளில் எல்லாம் சமமாய் இருந்து ஒன்றில் மட்டு மில்லாமையால், "பலவில் ஒன்றும்'. இந்த விதியை ஜனங்களுக்கும், ஜனசமூகத்துக்கும் பொருந்தப் பொருத்துவதே "Laws of National Growth" என்னும் ஜனசமஷ்டி தர்மமாகும் (Social Evolution). இனி ஸ்லாவ் ஜாதியாரின் குணகுணங்களை யெடுத்துச் சொன்னால் குழந்தைகளும் கிரகித்துக் கொள்வது சாத்தியமாகுமென்றெண்ணி கீழே அவைகளை எடுத்துரைக்கிறோம்.

ஸ்லாவ் ஜாதியாரின் குணகுணங்கள்.
(Their characterestics)

ஆதிகாலம் தொட்டு அவர்கள் 'குடியரசு' என்று சொல்கிற சமுதாயக் கட்டுப்பாட்டை யனுசரித்து வந்தவர்களாகத் தெரிகிறது. இதில் சமுதாய கோஷ்டி ஏற்பாடு அவர்களுடைய ஸ்வபாவத்துக்கு அடுத்ததென்று தெரிகிறது. இந்த ஏற்பாட்டை மேற்றிசை நாகரிகத்தில் ஒன்றாக அங்கே வேரூன்றச் செய்யவேண்டுமென்று அங்குள்ள சீர்திருத்தக்காரர்கள் பாடுபட்டுழைத்தும் அது கனவில் நினைவாயிருப்பதன்றி காரியத்தில் பலிக்கவில்லை. "அவரையில் ஒரு கொடியும் வடமனில் ஒரு குடியுமிருந்தாற் போதும்" என்கிற பழமொழி யொன்று நம்முள் வழங்கி வருகிறது. அதன் அர்த்தம் என்னவெனில், அவரை ஒரு கொடி யிருந்தாலும் அது எங்கும் பரவி யடர்ந்து விடுகிறதுபோல, வடம ஜாதியில் ஒரு குடியிருந்தால் அந்தக் குடும்பம் அதன் உற்றார் உறவுமுறையார் அபிமானம் மிகுந்த விசேஷ குணத்தால் சீக்கிரம் பரவி ஊரெல்லாம் வடம ஜாதியாகப் பரவி விடும் என்பதாம். அந்தமாதிரி ஸ்லாவ் ஜாதியாருக்குள் பந்துபரிபாலனமும் ஸ்வஜாதியாரென்கிற அபிமானமும் ஜாஸ்தியாக வுண்டு. இந்த அபிமானமும் ரத்தபாந்தவியத்திலிருந்து கைத்தொழில், வியவசாயம் முதலான 'தொழிலினம்' என்கிற பாந்தவியத்தால் தொழிலாளிகளை ஓரினமாகச் சேர்த்து அவர்களுக்குள் ஜாதிக்கட்டுப்பாட்டை யுண்டுபண்ணுவதாய் விரிவதாயிற்று.

இலக்ஷியபூரணக் குறைவு.
(Their defective Idealism.)

ஸ்லாவ்ஸ் ஜாதியாரைப்பற்றி பூர்வ சரித்திரங்களை ஆராய்ந்து பார்த்தால், அவர்களுக்குள் குடித்தன துரைத்தனமுறை (Democratic





Form of Government) யும், ஸ்வயேச்சைப் பிரியமும் (Love of Liberty) விசேஷமாயிருந்ததாகத் தெரியவருகிறது. இதன் குணங்கள் அவர்களுடைய சரித்திரத்தில் எங்குமிருக்கக் காணலாம், அல்லது கண்டு பிடிக்கலாம். இந்த லக்ஷணங்களெல்லா மவர்களிடமிருந்தும் அவர்களுடைய லக்ஷியம் பூரணமானதாக இல்லாததுபற்றி அவர்களுடைய ஸ்வயேச்சைப்பிரியம் காரியத்தில் பிரயோஜனகரமான துரைத்தனச் சீர்பாட்டை யுண்டு பண்ணவில்லை. வீரிய லக்ஷணமும், பூர்வீக நாகரிகமும், இன்னும் பல மேன்மைக் குணங்களு மிருந்தும் 'ஸ்லாவ்' ஜாதியைச் சேர்ந்த ஜனங்கள் ஒருவர் பின்னொருவராக ஸ்வாதீனமிழந்து அந்நியர்களுக் காளாகும் கதியடைந்துவிட்டார்கள்.

பல்கேரியா தேசத்தார். (Bulgarians.)

ஸ்லாவ் ஜாதியாரில் பிரதம ஸ்தானத்திலிருந்து அதிக வல்லமையோடு விளங்கினவர்கள் "பல்கேரியா தேசத்தார்." இவர்கள் அநேக நூற்றாண்டுகளாகப் பிரபலம் பெற்றிருந்தும் 1912-13-ம் வருஷத்தில் நடந்த 'பால்கன் யுத்தத்தில்' அவர்கள் தோல்வியடைந்து திறனழிந்தவர்களானார்கள். இவர்கள் துருக்கி ராஜ்யத்துக் கடுத்திருந்ததால் அந்த ஜாதியின் இரக்தக்கலப்பும் கொஞ்சம் உண்டு. 10, 11-வது நூற்றாண்டுகளில் பல்கேரியா ஐரோப்பாவெங்கும் பிரபலமான பேர்பெற்ற இராஜ்ய வல்லபத்தோடு விளங்கியது. அப்புறம் (Byzantine) பைஸாண்டைன் அரசர்களுக் குள்பட்டவர்களாகி 170-வருஷகாலம் கிரீஸ் தேசத்து கவர்னர்களால் ஆளப்பட்டுவந்தார்கள். பிறகு சிறிதுகாலம் ஸ்வதந்திரம் பெற்றிருந்து கடைசியில் ஸெர்வியா தேசத்தாரால் ஜெயிக்கப்பட்டார்கள்.

ஸெர்வியாதேசம். (Servia.)

ஸெர்வியாதேசம் இரத்தக் கலப்பில்லாத சுத்த ஸ்லாவ் ஜாதியார் தேசம். அது 13-ம் நூற்றாண்டில் உச்சத்திலிருந்து விளங்கியது. அப்பொழுது அதைச் சேர்ந்ததாயிருந்த தேசங்கள், இப்பொழுது ஆஸ்திரியாவோடு சண்டைபோட்டுவரும். 'ஸெர்வியா' தேசமட்டுமன்றி, பால்கன் நாடுகள் எல்லாமும், தற்காலம் ஆஸ்திரியாவைச் சேர்ந்ததாயுள்ள க்ரோஷியா (Croatia), போஸ்நியா (Bosnia), டால்மேஷியா (Dalmatia), ஸ்லாவோனியா (Slavonia) மாகாணங்களெல்லாம் அதைச் சேர்ந்தனவாக விருந்தன. பிறகு (Wars of the Crusade) என்று சொல்லும் மத சம்பந்தமான சண்டையில் 'ஸரஸன்ஸ்' என்னும் துருக்கர்கள் ஜெரூஸலேமைப் பிடித்துக்கொள்ளச் செய்த யுத்தத்தில், அவர்கள் வலிக்கு ஆற்றாமல், அவர்களோடு செய்த சண்டையில் அத்தேசத்து உயர்குல மக்களெல்லாம் மாண்டு மடிந்தார்கள். 14-வது நூற்றாண்டு முதல் 19-வது நூற்றாண்டுவரையில் இந்த ஸ்லாவ் ஜாதியார் நாடுகளெல்லாம் துருக்கர்களால் பிடித்துக்கொள்ளப்பட்டு இவர்களும் சீரழிந்து கெட்டார்கள். மான்டிநிக்ரோ (Montenegro), நாடும் ராகுஸா (Ragusa) என்னும் சிறிய குடியரசுநாடும்தான் துருக்கர் ஆட்சிக்குட்படாதிருந்தன. இப்பொழுது ஆஸ்திரியாவோடு சண்டைக்கு நிற்கும் ஸெர்வியா தேசத்தரசர்கள் விஷமக்காரர்களென்று பேர் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தாம் செய்த குற்றத்துக்காக இராஜ்யமிழந்து மிருக்கிறார். ஆனாலும் அவர்கள் ஸ்வதந்திரம் பெறச் செய்த பிரயத்தனங்கள் கடைசியில் பலிக்கலாயின. அத்தேசத்து இராணுவ வீரர்களெல்லாம் பயிரிடுங் குடிகளானதால், தேஹ வலிமையும் மனோதீரமும் பொருந்தியவர்கள். அவர்கள் புஜபல பராக்கிரம விசேஷத்தைப் பார்க்கலானவர்கள் அவர்கள் வீர, தீர, சாமார்த்தியத்தைப் புகழ்ந்துகொண்டாடாம லிரார்கள்.

மோரேவியா. (Moravia.)

இது இப்பொழுது ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு மாகாணம், பூர்வத்தில் இதுவும் ஒரு

பிரபலமான ஸ்லாவ் ராஜ்யமாக விருந்தது. கி. பி. 9-ம் நூற்றாண்டில் இந்த இராச்சியம் இப்பொழுதுள்ள ப்ரஷியா முழுவதையும் அட்ரியாடிக் கடற்கரை யோரம்வரையில் ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்தது. கடைசியில் அது பொஹிமியாவினால் ஜெயிக்கப்பட்டதாயிற்று. ஸ்லாவ் ஜாதியாரில் ஸ்வதந்திரமிழந்து தாழ்மையடைந்த தேசங்களில் போலாண்ட் ராஜ்யம் ஒன்றைத்தவிர இந்த மொரேவியா ராஜ்யம் அதிரவிகமானது. அந்தோ, பாவம், அதன் பொல்லாதவிதி அதைப் பூண்டற்றுப் போகும்படி செய்துவிட்டது. இப்பொழுது அது ஆஸ்திரியாவில் ஒரு மாகாணத்தின் பேராக விருக்கிறது. பொஹிமியாவுக்கும் மொரேவியாவுக்கும் இடையில் "மொரேவியன் ரேஞ்ச்" என்று ஒரு சிறு மலைத்தொடரிருக்கிறது.

### பொஹிமியா. (Bohemia.)

இதுவும் இப்பொழுது ஆஸ்திரியாவில் ஒரு மாகாணமா யிருக்கிறது. பூர்வத்தில் இதுவும் ஒரு பிரபலமான ஸ்லாவ் ராஜ்யமாக விருந்தது. பொஹிமியாவிலுள்ள "ஸ்லாவ்ஸ்"க்கு "ஜெக்ஸ்" (Czechs) என்று பேர். பூர்வத்தில் ஐரோப்பா கண்டத்தின் நாகரிகத்துக்கெல்லாம் இது மத்யஸ்தானமா யிருந்தது. 13-வது நூற்றாண்டின் முடிவில் (Ottokar II) இரண்டாவது ஆட்டோகர் என்னும் பொஹிமிய ஸ்வதேசராஜன் அத்தேசத்தையும் அதை யடுத்த மொரேவியா, ஸைலீஷியா (Silesia), லூஸிடானியா (Lusetania) இந்நாடுகளையும் ஆண்டுவந்ததன்றி சிறிது காலம் ஆஸ்திரியா, ஸ்டிரியா (Styria), கரின்தியா (Carinthia), கார்னியோலா (Carniola) நாடுகளையும் சேர்த்து, பெர்லின் முதல் அட்ரியடிக் கடல் வரையிலுள்ள பிரதேசங்களையெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்தான்.

### பூர்வீக "ப்ரேக்." (The Ancient Prague.)

பூர்வத்தில் "ஹோலி ரோமன் எம்பையர்" என்று பிரபலம்பெற்று விளங்கிய மஹாராஜ்யத்தின் சக்ரவர்த்தியாகிய நாலாவது சாரல்ஸ் (Charles IV) பொஹிமியாவின் தலை நகராகிய 'ப்ரேக்' (Prague) நகரைத் தனது இராஜ்யத்துக்குப் பிரதானப் பட்டணமாகக்கொண்டு இராஜ்ஜியபாரம் நடத்திவந்தார். இப்படியாக அது அக்காலத்தில் ஐரோப்பா முழுமையிலும் பிரபலம்பெற்ற பிரதமநகராகவிருந்தது. கடைசியில் அதன் கதி யென்னவாயிற்றென்றால்,—

### (The House of Hapsburg.)

### "ஹாப்ஸ்பர்க் வம்சம்."

ஹாப்ஸ்பர்க் வம்சத்தாரால் அது ஜெயிக்கப்பட்டு ஆஸ்திரியாவில் ஒரு பாகமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டதுமன்றி ஆஸ்திரிய அரசின் கொடுமையினால் அதனுடைய பாஷையையும் ஜாதியையும்கூட மறந்துபோகும்படியான கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது. 19-ம் நூற்றாண்டில் ஸ்லாவ் ஜாதியாருக்கு மறுபடியும் நல்லகாலம் பிறந்தவரையில் ருஷியர் ஒருவரைத்தவிர மற்ற 'ஸ்லாவ்' இனத்தாரெல்லாரும் ஸ்வதந்திர மிழந்து அந்நியராட்சிக்குள்ளாயிருந்தார்கள். பல்கேரியா, ஸெர்வியா, கிரீஸ் இம்மூன்று தேசங்களும் துருக்கர் ஆட்சியிலிருந்து மீட்சிபெற்று ஸ்வதந்தரம் பெறவே, பொஹிமியாவும், போலாண்டும் ஸ்வதந்திரம் பெறவேண்டுமென்கிற ஆசைதூண்ட உள்ளக்கிளர்ச்சி யுண்டாக வுணர்ந்தார்கள். அவர்கள் எதிர்த்துச் சண்டை செய்து ஸ்வதந்திரம் பெற முடியாவிட்டாலும் ஆஸ்திரியா அரசாங்கத்தாரின் கட்டுக்குள்பட்டிருந்து தானே துரைத்தனப் பாங்கின்படி அனேக ஸ்வதந்திரங்களும் பாத்தியதைகளும் அளிக்கப்பெற்றார்கள்.

### (Their Love of Native Language.)

### ஸ்வபாஷைப்பிரியம்.

இந்த ஸ்வதந்திரங்களைக்கொண்டு ஸ்வபாஷையையும் அவர்களுடைய சொந்த சித்திர வேலையையும் சங்கீத ஸாஹித்திய மெட்டுகளையும், அவர்களுடைய ஸ்வஜாதி லக்ஷியங்களையும் ஜீர்ணோத்தாரணம் செய்து மறுபடியும் விர்த்திக்குக் கொண்டுவந்தார்கள். இதனால் ஸ்வஜாதீய லக்ஷியம் அதிகரித்ததன்றி அந்நிய லக்ஷியம் ஆகாததென்று தலைகாட்டா தொழியவும் தலைப்பட்டது. ப்ரேக் நகரில் தெருத்தெருவா யலைந்து பார்த்தாலும் ஒரு ஜெர்மன் பேர்கூடக் காண்பது கஷ்டம். கடைக்காரர்கள்கூட தங்கள் சரக்கு விலையாகவேண்டி ஜெர்மன் குலப்பேரை மாற்றி பொஹிமியன் பேர்போல் விளங்கச் செய்துகொள்கிறார்கள். ஆஸ்திரியாவின் தலைநகராகிய வியன்னாவில் கூட ஜெக்ஸ் ஜாதியார் தாழ்ந்த கையாகத் தோற்றாமல், தங்கள் ஸ்வபாஷையையே பேசி வருகிறார்கள். இப்பொழுதுண்டாயிருக்கும் ஆஸ்திரியா-ஸெர்வியா ருஷியா சண்டையில் ஜெக்ஸ் ஜாதியார் தம்மினத்தாரோடு சண்டை செய்ய மனமில்லாதவராய்த் தவித்துத் துடிக்கிறார்கள்.

### யுத்தமத்தியில் நேர்ந்த சம்பவம்.

### (An Incident of War.)

இங்கே ஒரு சம்பவம் குறிக்கத் தக்கது. ருஷியர்களுக்கும் ஆஸ்திரியாவுக்கும் நடந்துவரும் சண்டையில் இரு சைனியங்களும் சண்டைமுகத்தில் எதிர்த்து நிற்கையில், ருஷியர் பக்கத்தாருக்கும் ஸ்லாவ் ராணுவஸ்தர்களுக்கும் சண்டைமுகத்தில்தானே பேச்சுவார்த்தை நடக்கிறதுண்டாம். அவர்கள் தங்களுடைய சுபாஷையைப் பேசக் கேட்டபின் அவர்கள் பகைவரென்று மதித்து துப்பாக்கி பிடித்துச் சுடமாட்டாமல் ஆயுதங்களை நழுவவிட்டுவிட்டு எதிர்க்கக்ஷிக்குப் போய்விடுகிறார்கள். அனேகம் பாளையங்கள் தம் இனத்தாரோடு சண்டைபோட மனமிசையாமல் வேணுமென்று கைதிகளாக வந்து அகப்பட்டுக்கொள்கிறார்கள். பொஹிமியா தேசத்தார் மிக்க உணர்ச்சியும் நுண்ணறிவுமுள்ளவர்கள் : ஆஸ்திரியாவில் அதிக செல்வாக்குள்ளவர்கள். ஆனாலும் ஸ்வஜாதி யபிமானம் மிகுந்தவர்கள். தம்மினத்தோடு சண்டைசெய்ய மனந் தாளாது தவிக்கிறார்கள்.

### சந்தத்திலும் பேந்துத்துவம் வலியது.

### (Blood is Thicker than Water.)

இதை யறிந்து ஆஸ்திரியா அதிகாரிகள் பொஹிமியா, க்ரோஷியா, டால்மேஷியா இந்த மாகாணங்களிலுள்ள நகரமாக்களை—முனிசிபல் சேர்மன், காலேஜ் ப்ரொபெஸர், ராயஸக்காரர்கள் போன்றவர்களை—பிடித்து வைத்துக்கொண்டு ஸ்லாவ் இராணுவ வீரர்கள் விசுவாசகாதகம் செய்யாமலிருக்க அவர்களுயிரை அடைக்கலமாக வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். ஸ்லாவ் இராணுவ வீரர்களில் அனேகர் தம்மினத்தாரோடு சண்டைசெய்ய இணங்காததற்காக நூற்றுக்கணக்கானபேர் மிலிடெரி சட்டப்படி சுட்டுக்கொல்லப்பட்டார்களென்று தெரியவருகிறது. 'ஸ்லாவ்' இராணுவவீரர்கள் ஆஸ்திரியா இராணுவாதிகாரிகள் ஜெர்மன் பாஷையில் உத்தரவு கொடுத்தால் அதற்கு கீழ்ப்படிகிறதில்லையென்கிற பிடிவாதம் கொண்டு நடந்ததால் அனேக வருஷகாலம் இது இராணுவ அதிகாரிகளுக்கு வெகு தொல்லையாக விருந்தது வாஸ்தவம் என்கிறார்கள். உண்மையாகவே அனேகருக்கு ஜெர்மன் பாஷை பேசத் தெரியாது; தெரிந்தவர்களும் அதைப் பேசுவதுமில்லை.

### "ஜாதி கெட்டுப்போகவில்லை."

### (Resisting attempts at Denationalisation.)

அவர்களுடைய ஸ்வஜாதி யபிமானத்தைக் கெடுக்கவென்று ஆஸ்திரியர் செய்த முயற்சியை அவர்கள் முற்றும் எதிர்த்துப் பிடிவாதமாய் தங்கள் ஸ்வஜாதி யபிமானத்தைக் காப்பாற்றி வளர்த்துவருகிறவர்களா யிருக்கிறார்கள். ஆஸ்திரியா சைனியக்களில் இப்படிப்பட்ட ஸ்லாவ் ஜாதிப் பட்டாளங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவையெல்லாம் அத்தேசத்து இராணுவ பலத்துக்குக் குறைச்சலேயன்றி அனுகூலமில்லை. இரண்டுமாசமாக நடந்துவரும் சண்டையில் இதனால் விளைந்த கெடுதிகள் எவ்வளவென்று நிதரிசனமாகத் தெரிந்துகொண்டார்கள். சண்டை நடந்து

கொண்டிருக்கையில் அதிகமாய் எழுதுவது சாத்தியமாகவில்லை.

தனிவழி. (Independence of Spirit.)

ஜெர்மானிக் ஜாதியாருக்கும் ஸ்லாவ் ஜாதியாருக்கும் நடந்துவந்த தீராப் போராட்டத்தில் மதவிஷயம் மிகவும் முக்கியமானதா யிருந்தது. “ஹோலி ரோமன் எம்பையர்” மூலமாய் வந்த கிறிஸ்துமத போதனையை யெதிர்த்து கீழ்த்திசையிலிருந்து வந்த கிறிஸ்து மதத்தை யங்கீகரித்த ஸ்லாவ் ஜாதியார், ரோமாபுரியிலிருந்துவந்த காதொலிக் மதத்தையனுசரித்த ஜர்மானிக் ஜாதியார், ‘கேய்லிக்’ ஜாதியாருக்கு இயற்கைவிரோதிகளாயிருந்தார்கள். மத விஷயங்களிலும் துரைத்தன விஷயங்களிலும் பிறர்வழிபற்றாது அவர்கள் தனிவழி நடப்பாரா யிருந்தனர். இது ஆதி தொட்டு அவர்களிடத்து விளங்கிய குணம்.

மதவிஷயம் (The Religious Question)

ரோமா புரியிலுள்ள “போப்” அதிகாரத்துக்கு விரோதமாக ஆங்கிலேயமத சீர்திருத்தம் ஏற்பட்டது ஆதியில் இங்கேதான் உற்பத்தியாயிற்று. அந்த மத வித்து விதைத்தவர் ஜான் ஹஸ் (John Hus) என்பவர். இவர் பொஹிமியாவிலுள்ள ‘ஜெக்ஸ்’ ஜாதியைச் சேர்ந்தவர். துரைத்தன விஷயங்களிலும் மத விஷயங்களிலும் ஜெர்மன் செல்வாக்குப் பலிக்காமற் போக அரும்பாடு பெரும்பாடு பட்டு உழைத்தவர் இவர். கடைசியில் இவர் பெருமுயற்சி பலிக்காமற் போயிற்று. (Serbo-croats) ஸர்ப்ஸ் ஜாதியில் க்ரோஷியா வாசிகளான ‘க்ரோட்ஸ்’ கடைசியில் துருக்கர் அரசாட்சிக்காளான பொழுது காதொலிக் மதத்தையாவது மகம்மதிய மதத்தையாவது ஏற்றுக்கொள்ளவேண்டு மென்கிற நிர்ப்பந்தம் ஏற்பட்டபொழுது, ரோமன் காதொலிக்ஸ் மதத்தை யங்கீகரிப்பதிலும் மகம்மதியராவோமென்று அம்மதத்தைச் சேர்ந்து விட்டார்கள். பரஷ்யாவில் அனுஷ்டானமாய் வரும் மதம் ‘லூதர்’ ஏற்பட்டுச் சீர்படுத்திய கிறிஸ்து மதம். இந்தமதக் கொள்கை ‘ஸ்லாவ்’ ஜாதியாருக்கு ஹிதமாகப் படவில்லை. ப்ரஷியாவையடுத்துள்ள பொஹிமியா தேசத்தின் சீர்திருத்தக்காரர்களும் இம்மதக் கொள்கையைக் கவனித்தார்களில்லை. தற்காலம் ‘பொஹிமியா’ காதொலிக் மதத்தை யனுசரிக்கும் தேசமாகச் சொல்லிக்கொள்கிறது. ஜான் ஹஸ் என்பவரை அவர்களுடைய ஜாதியினுதித்த ஓர் பெரிய தேசாபிமானியாகக் கொண்டாடி வருகிறது. போலாண்ட் தேசத்தைச் சேர்ந்த ‘போல்ஸ்’ மட்டும் ஆதிமுதல் ரோமிலிருந்து வந்த கிறிஸ்துமதக்கொள்கையை யனுசரித்தவர்களாயிருந்தார்கள். இதனால் அவர்களுக்கும் ருஷியர்களுக்கும் தீராத போராட்டமுண்டு.

பாஷை (Language.)

‘ஸ்லாவ்’ ஜாதியாரின் பாஷை அவர்கள் வசிக்கும் எல்லாத் தேசங்களிலும் ஓரினப் பட்டதாகவேயிருக்கிறது. எல்லா ஸ்லாவ் தேசங்களிலு மிருந்துவந்த பிரதிநிதிகள் சபைகூடிப் பேசியதில் ருஷியா, பல்கேரியா, ஸெர்வியா, மாண்டிநிக்ரோ, க்ரோஷியா, டால்மேஷியா, போலண்ட், பொஹிமியா முதலான தேசங்களிலிருந்துவந்த பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் அவரவர் தாய் பாஷையில்பேச அது மற்ற எல்லாருக்கும் புரிவதாயிருந்தது. இது கற்றோர் குழாத்தின் நடபடிக்கை. படியாத மூடஜனங்கள் பேசும்பாஷை இதைவிட அதிக வித்தியாசப்பட்டிருக்கும். ‘பொலிஷ்’ பாஷையும் ‘ஜெக்ஸ்’ (பொஹிமியன்) பாஷையும் ‘லத்தீன்’ லிபிகளில் எழுதப்பெற்று ஓரினமாகவேயிருக்கிறது. ‘ஸெர்போ-க்ரோஷியன்’ பாஷை (ஏறத்தாழ) பல்கேரியன்ஸ், ஸெர்வியன்ஸ், க்ரோட்ஸ், தென்னாஸ்திரியாவிலுள்ள ஸ்லோவினீஸ் (Slovenes) இவர்கள் எல்லாராலும் பேசப்பட்டு வருகிறது. ருஷிய பாஷைமட்டும் ஸிரில்லிக் லிபியில் (Cyrillic Character) எழுதப்பெற்று ஸ்லாவ்-பாஷையல்லாத ‘மங்கோல்’ வார்த்தைகள் அதிகமாய்ச் சேர்ந்ததாக விருக்



# THE VIVEKACHINTAMANI

## WAR NUMBER

**A HOUSEHOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.**

**Issued in three monthly parts: November, December, and January.**

# விவேகசிந்தாமணி

## “யுத்தகாண்டம்”

**“உன்னதமாம் பாரதப்போர் செய்வார் கதை.”**

நவம்பர், டிஸெம்பர், ஜனவரி மாசங்களில் மூன்று பாகங்களாகப் பிரசுரிக்கப்பட்டது.

*“We need help from Above, for without it we are helpless”—Admiral Sir John Jellicoe.*

PUBLISHED BY

THE SECRETARY, DIFFUSION OF KNOWLEDGE AGENCY,

SOLE AGENTS AND MANAGERS: THE LALITA PUBLISHING CO.,

LALITALAYA, 19, ADAM STREET, MYLAPORE,

MADRAS, S.

**Price Re. 1-As. 2. by V. P. P.]** [விலை ரூ. 1-அணா 2. வி. பி. பி.

# விவேகசிந்தாமணி—“யுத்த காண்டம்”.

## உன்னதமாம் பாரதப் போர் செய்வார் கதை.

### முதற்பாகம் (நவம்பர்மீ)


பக்கம்.

1. அர்ப்பணம் ... — 1
2. பிள்ளைகளுக்கான பிதிரார்ச்சித பேரைசுவரியம் பிரிடிஷ் முதல்மந்திரியின் பிரசங்கம் (ஆங்கிலமூலம்) ... — 5
3. “ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்” “The Spiritual Governance of the World” ... — 6
4. இராஜ்பவித்தையிலோர் குப்தபாகம் ... — 7
5. பிள்ளைகளுக்கான பிதிரார்ச்சித பேரைசுவரியம்:
“யோகயுக்தோபவார்ஜுன”—“பிதிரார்ச்சித பேரைசுவரியம்”—வல்லான் வகுத்ததே வாய்க்காலாக விட்டு விடலாமா?—“தர்மமேஜயம்” என்ற பிகைஷ—குடிஉயரக்கோன் உயரும்—“இராஜ்யவித்தையிலோர்குப்தபாகம்”— ... 7—8
6. “திருப்படையெழுச்சித்தானம்.” ... —10
7. “ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு”: “ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்”:
சதுரங்கம்—“ஆடுவான் ஆட்டுவிப்பான்”—“உபமான உபமேயம்”—சாதனமின்றிச் சாதிப்பாரில்லை—“தன்னடக்கம்”—சாதன சாதகம்—யுத்த ஆரம்பம்—மும்மாசபலன்—தர்மவிரோத அதிக்கிரமம்—ஜெனரல் ப்ரெஞ்ச் அனுப்பிய ரிபோர்ட்டு—‘என்’ நதிதீரத்துச் சண்டையாரம்பம்—தோற்பு கெலிப்புத்தெரியாத சண்டை—எதிரி கை சளைத்தல்—கீழண்டைப் போர்க்களம்—நோக்கத்திலிருக்கிறது ஸ்வாரஸியம்—சண்டைக்குப் புறப்பட்டவர்—அவர் ஸ்வபாவமும் மனப்போக்கும்—குலத்தளவேயாகுமாம் குணம்—விவேகசிந்தாமணி: “யுத்தகாண்டம்”—அவையடக்கம்—ஆங்கில வித்வான் அபிப்பிராயம்:—சதுரங்க உவமானம்—கெய்ஸர் மனப்போக்கு—அதையறிவதிலுள்ளகஷ்டம்—“ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்”—“படபடப்பு, கபடம், சஞ்சலம்”—“ஜாதிஸ்வபாவம்”—“பூர்வோத்தர பாரம்பரை”—“பேதபாவம் கூடாது”—மித்திரபேதம் செய்வதில் கைதேர்ந்தவர்—“சந்துவிட்டால் பொந்துசெய்யத்தயார்”—தர்மதேவதை சிந்தை நொந்திருள் கிருள்—உப்புக்குறவன் கதை—பேதபாவம் உறவைக்கெடுக்கும்—கெட்டவனுக்குப்பட்டபின் தெரியும்—“சத்திலாதபோது சிவனில்லையில்லை, இல்லையே”—குருக்ஷேத்ர மஹாவாக்கியம்—“ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணாயிரு”—“ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்”— 11—19
8. உருப்படா தொழிந்த ஏற்பாடு:
நடுவு நிலைடார் பகர்சாக்ஷி—“சடுகுடுமந்திரம்”—“தலைவரிசை” “பின்வரிசை”த்திருப்புகள் — சதுரங்கசேனை விமரிசை — பீரங்கிப்படை—“எண்ணினேன் எண்ணமிதா ஸ்வாமி”—படைச்சிறப்பு—“உடல்சிறிய ரென்றிருக்கவேண்டாம்”—“சிற்றுளியால் கல்லுந்தகரும்”—“மத-மோஹம்”—அஹம்பாவத்தால் வந்த ஆபத்து— 19—23
9. 1914-ம் வருஷத்துப்பாரத மஹாயுத்தம்: சண்டைக்காரர்களின் பூர்வோத்தரம்:—
“ஹோலிரோமன் எம்பையர்”—ப்ரஷ்யா முன்னுக்குவந்தகாலம்—தற்கால ஜெர்மனி ராஜ்யம்—ஹாப்ஸ்பர்க் வம்சம்—ஹாஹென் ஸால்லர்—ஐரோப்பாவின் மத்தியபாகம்—“ஸார்மேஷியா”—ஸ்லாவ் ஜாதியாரின் பூர்வீகஸ்தானம்—“ஸொர்ப்ஸ்”—அவர்கள் பூர்வோத்தரம்—உழுதுண்டு வாழ்வார்—இல்வாழ்வார்—“குடித்தனமோ துரைத்தனமோ”—ஸமஷ்டி தர்மம் (Social Evolution)—ஸ்லாவ்ஸ் ஜாதியாரின் குணகுணங்கள்—இலக்ஷியபூரணக் குறைவு—பல்கேரியா தேசத்தார்—ஸெர்வியாதேசம்—மொரேவியா—பொஹிமியா—ஹாப்ஸ்பர்க்வம்சம்—ஸ்வபாஷைப்பிரியம்—யுத்தமத்தியில் நேர்ந்த சம்பவம்—சந்ததிலும் பெந்துத்துவம் வலியது—ஜாதிகெட்டுப் போகவில்லை—தனிவழி—மதவிஷயம்—பாஷை—அங்க அடையாளம்—அவர்கள் மனோபாவம்—குணவிசேஷம்—உள்ளதெல்லாமிழந்தாலும் உள்ளமொன்றை யிழக்கவில்லை—ஆஸ்திரியா—ஹங்கேரி—பெர்டினண்ட் இளவரசர்—டியூடன் ஜாதியார் மித்திரபேதம்—தற்காலத்து (ப்ரஷியன்) ஜெர்மனி—தர்மமே ஜயம்—முடிவுரை:—


## பொருளடக்கம்.

### இரண்டாம்பாகம் (டிஸம்பர்மீ.)


பக்கம்.

10. “செய்கடனை (ஸ்வதர்மத்தை)ச் செய்தலே உயர்ந்த தர்மம் ... —37
11. பெல்ஜியத்தின் பரிதாபக் கதை ... —39
12. பெல்ஜியம் தன் பரிதாப நிலைமையுன்னி இரங்கல் கண்ணி ... —40
13. இந்தப் பாரதப்போரில் ஆங்கிலேயர் புகவாய்ந்த தெப்படி? “மழைவிட்டும் தூவானம் விடவில்லை.” ... —41
இந்திரன் விரோசனன் கதை—கங்காளத்தில் பார்—கண்ணாடியிற் பார்—தேஹமே ஆத்மா—பிராணனே ஆத்மா—தேவர்கள் கர்வபங்கம்—லக்ஷியபேதம் கக்ஷியை யுண்டுபண்ணும்—பட்டாக்கத்தியும் கலப்பைக்கொழுவும்—யத்பாவம் தத்பவதி—கர்மதர்மம்—‘பால்கன்’ யுத்தத்தின் பிற்பலன்—ஸிராஜிவோ கொலை ஸம்பவம்—கரூர்நாமா—ருஷியா பரிந்துகொண்டு வரல்—வால்போச்சு கத்திவந்தது டம்டம்—எல்லாம் சரி! எட்டிநின்று பேசு! சண்டைக்காரனுக்கு சறுக்கிவிழுந்தது குற்றம்—சண்டைக்கிழுத்தாலும் ஸாஹஸம் வேண்டும்!—சண்டைக்காரனிடம் ஸமாதானம் பலிக்காது—போர்த்தீ மூட்டல்—பூசினிக்காய் திருடின கள்ளன் கதை—கள்ளனுக்குள் குள்ளன்—நொண்டிக் குதிரைக்கு சறுக்கி விழுந்தது சாக்கு—காலைச்சுற்றின பாம்பு. காலைச்சுற்றினபாம்பு கடித்தாலன்றி விடாது—அரசமரத்தைப்பிடித்தசனி பிள்ளையாரையும் கூடப் பிடித்தது—திருடனுக்குத்தோன்றும் திருட்டுப்புத்தி—செட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளிப்படும்—ப்ரெடரிக் சாஸனமெழுதிவைத்த போதனைகள்—பிரதமபாடம்—இரண்டாம் பாடம்—மூன்றாம் பாடம்—தந்திரம் பலிக்காமற்போனது—கையால் வல்லவன் வாயால் வல்லவன்—பசப்பு வார்த்தையும் கசப்புக் காரியமும்—கண்ணில் மண்ணைத் தூவப்பார்த்தது—துராகிருதப் பிரவேசம்—வலியார் எளியாரை யடித்தால் எளியாரைத் தெய்வம் அடிக்கும்—ஒன்றே ஜாதியும் ஒருவனே தேவனும்—சங்கிலித்தொடர் நியாயம்—பெல்ஜியம் துணைகோரியது—சொக்கா, சொக்கா சோறுண்டோ, சோழியன்வந்து கெடுத்தாண்டோ—ஆபத்சகாயம்—மூர்க்கரிடம் தர்மோபதேசம் பலிக்காது.
13. போலண்டு ராஜ்யமும் போல்ஸ் ஜாதியாரும் (ஜெர்மனி ராஜ்யம் ஏற்பட்டதின் கதை) ... —54
ஓர் அற்புத விளம்பரம்—ஸ்லாவ் ஜாதியில் முக்கியமானவர்கள்—இப்பொழுதுள்ள ஜெர்மனி ராஜ்யம் ஏற்பட்ட காலம்—பூர்வீக ஜெர்மன் சக்ரவர்த்தி—ப்ரஷ்யாவின் பூர்வோத்தரம்—கையால் வல்லவர்கள்—கெல்ட்ஸ், டியூடன்ஸ்—கொள்ளைவீரர்கள்—குடி உயரல்: ஹன்ஸா லீக்—நைட்பட்டம்-இராஜசேவகம்—இராஜசேவகர்களுக்கு முக்யத் தலைவர்—மஹாதீரரான ப்ரெடரிக்—ஸெடான் சண்டை—ஜெர்மனியின் ஐக்கியபத்தியம்—ஜெர்மனியின் முதல் சக்ரவர்த்தி—ஜெர்மனியின் ஐக்கிய பத்தியத்தில் சேர்ந்த நாடுகள்.
14. ஜெர்மனியின் சரித்திர ஸாரம் ... —58
சுள்ளிக்கட்டுகதை — பிள்ளைகளின் குணகுணம் — என்னசெய்வான் பாவம்—சுள்ளிபொறுக்கல்—பரிசோதனை—கிழவன் செய்த உபாயம்—மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்—உவமானத்துக்கு உவமேயம்—எந்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்.
15. பூர்வ வாஸனை ... —60
குருட்டு யோசனை—‘கட்டுப்பாடு’-ஸ்தூலபாவனை—ஜெர்மனியின் பூர்வக் குடிகள்—டியூடன்ஸ் ப்ரஷ்யாவைத் தலையெடுக்கச்செய்தல்—சூக்ஷ்மமறிந்தும் காரணம் அறியவில்லை—பட்டால்தான் தெரியும்.
16. போல்ஸ் ஜாதியார் சரித்திரம்: முன்னுரை ... —62
ப்ரஷ்யா அரசர்கள் அந்யதேசத்தாரோடு கூட்டுறவு செய்யும் முறை—பீஜாங்குரம்: வித்தும் மரமும்—ப்ரஷ்யாவின் அரசாட்சி முறை—திருடனுக்குத் தோன்றும் திருட்டுப்புத்தி—குருட்டுப் புத்தி-கதை—மரவட்டைபோன்ற மச்சம்—இருதலைப் பக்ஷி—அரசாட்சி முறை—சண்டைக்காரர் பங்குபோட்டுக்கொள்ளல்—யார் ஆண்டால் என்ன?—30-வருஷம் வாழ்ந்தவனுமில்லை: 30-வருஷம் கெட்டவனுமில்லை—பூர்வ விஸ்தீரணம்—இலவுகாத்த கிளி—வாய்த்தவிடம்போய் அடுப்புநெருப்பும் அணைந்தது—‘க்ராகௌ’ குடியரசு—1863-ம் வருஷத்து அக்ரம அழிச்சாட்டியம்—1848-வது வருஷத்து அக்ரம

உ

# IN LOVING AND GRATEFUL MEMORY OF

(i) MY SAINTLY MOTHER (SRI LOKANAYAKI AMMAL)

WHOSE LOVE OF TRUTH HAS PRESERVED TO US THE PRECIOUS HERITAGE OF

"THE GOSPEL OF THE HOLY MOTHER,"

AND

(ii) OUR CIVIC MOTHER (HER EXCELLENCY LADY HARDINGE, C. I.,)

WHOSE LOVING INSTITUTION OF "THE CHILDREN'S DAY"
HAS BEQUEATHED TO US, THE CHILDREN OF INDIA,
'THE RICHEST OF ALL INHERITANCES," *viz.*, "THE EVER INSPIRING IDEAL OF HEROIC WOMANHOOD,"
THIS HOUSE-HOLD NARRATIVE OF CONTENDING FOLKS
IN THE GREAT DEVASTATING WAR OF 1914
IS DUTIFULLY INSCRIBED BY THEIR DEVOTED SON AND CHILD.

*on the Day of Light sacred to 'Kartikai' ushering in the 'Great Dawn of Hope' to the Powers of Light.*

## அர்ப்பணம்:

### I

அன்னையே, எனையீன்ற அருந்தவக் கொழுந்தே,
உன்னையே நினைந்துள்ள முருகினன் சேய்!
பின்னையே தனைச்சுட்டும் "ஆனந்தத் தாய்மொழி"
தன்னையே அறிந்துய்யத் தாரகமா யிருந்தனையே!

### II

தாயன்பா லென்னம்மை ஹார்டிஞ்சு பெருமாட்டி
தாயவராம் குழந்தைகளைத் தன்னிதயத் துள்ளிருத்தி
சீயவராம் காவலர் கோன் ப்ரதிநிதியாம் பர்த்தாவின்
ஸ்ரீஜயந்தி கொண்டாடச் சொன்னவர்தம் பேர்வாழ்க,—

"துன்பம்வந் துற்றாலும் என்புறக் கிழியவே
'அன்புமிகுந் தவரம்மா! பாலரைச் சிந்தித்துன்
'என்புதோல் போற்றிய இத்தேகம் வருந்திலும்
'அன்புரு வாம்பாலர் மகிழ்வதுவே பெரிதென்றார்."—

அன்னவரை நினைந்துள்ளே அவர்பெருமை யாம்பெறவே
சின்னவராம் பாலர்களைத் திருவிழாக்கொண் டாடச்செய்த
அன்னையவர்: எம்முள்ளே ஸமஷ்டிஞானம் † உதிக்கச்செய்தார்:
புன்னைவனம் போலேயவர் புகழுடம்பைப் போற்றியுள்ளே,—

பொன்னம் பலநடுவே பொதுநடம் செய்யுமீசன்
மன்னுபேர் அருளாலே மாநிலத்தில் நடக்கக்காணும்
உன்னதமாம் பார்-அதப்போர் செய்வார்கதை கேட்கவென்று
சின்னஞ்சிறியார்க்கும் சிறுமனங்கொண்டார்க்கும் எளிதாகப் புரிகதையாச்

சொன்னதையிங் கெனையீன்றாள், எந்தாய் தநர்
பொன்னகமபோ லிச்சகவாழ் வெங்கட்குப்
பொருந்தவென்றே பாலர்மனம் விரியச்செய்த
அருந்தவத்தாய் ஹார்டிஞ்சுக்கும் அர்ப்பணமாய்

எழுதிவைத்தோம்: கடமையிது, கார்த்திகைநாள்: காண்பீர்மன்றே!

"ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்!"

'ஏன்' நதிதீரத்தில் "உன்னதமாம் பாரதப்போர்" நடக்கும் யுத்தகளம்.

ஸெப்டெம்பர்மீ 12உ இரவு முதல் இன்னும் நடந்துவருகிறது.

(வி. சி. யுத்தகாண்டம் 11-19-வது பக்கங்கள் பார்க்க.)

"The purpose is plain. As this great tragedy proceeds it becomes increasingly clear that the issue that is being fought at this moment in the trenches of the Aisne is not this or that national gain or loss but *the spiritual Governance of the World.*"—Vide *Vikekachintamani War Number*, Part I, pp. 6 & 11-19.



*War News.* *Illustrated.*

"The great Battle of the Aisne, which has been in progress since the evening of the 12th instant." * "A panoramic View of the Scene of Action where our troops are fighting just across that river along the whole of our front."—* Sir John French's Message of September 17, 1914.



His Excellency Lord Hardinge, Viceroy & Governor General of India from a photo (*Lafayette*) published in 1910.

கனம்பொருந்திய அரசர் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள்.



H. E. Lady Hardinge (m. 1890) with Her Excellency only Daughter the Hon'ble Diamond Hardinge (born 190 from a photo (*Rita Martin*) published in 1910.

கனம். ஹார்டிஞ்ச் பெருமாட்டியும் அவர்களுடை ஏகபுத்திரி கனம் டயமண்ட் ஹார்டிஞ்ச் பெண்மணியு



**THE BRAVE KING OF THE BELGIANS AND THEIR HEROIC QUEEN.**

பெல்ஜியம் தேசத்தார் ராஜசிங்கமும் அவர்கள் தீரம் மிகுந்த ராணியும்.

(வி. சி. யு. 39-40 பக்கம் பார்க்க.)



**The Various kinds of Gun Fire employed in Modern Artillery Practice.**

தற்காலத்தில் உபயோகிக்கப்படும் பலவிதமான பீரங்கிகளின் குண்டுகள் வெடிக்கும் விதம்.



**GENERAL LEMAN.**

**The History of whose defence at Liege will live for all time.**

ஜெனரல் லீமான்.

லீஜ்கோட்டையை காப்பாற்றுவதற்காக் கோரயுத்தம் புரிந்த தீரர். அவருடைய தீரத்தை எப்பொழுதும் மறக்க முடியாது.







**His Majesty the KING.**

IN ADMIRAL'S UNIFORM

நமது மாகூஷிமை பொருந்திய ஜார்ஜ் அரசர்.

(சப்டல்படைத் தலைவர் உடையில்.)



**Field Marshal LORD KITCHENER**
**Secretary of State for War.**

பீல்ட் மார்ஷல் லார்ட் கிச்சனர்,
யுத்த மந்திரி.

"Huge columns of Germans advanced in the neighbourhood of Lille during the third week of October and by sheer impetuous onset beat some British troops out of their trenches and came up against the Indian Supports. The Sikhs and Gurkhas swung into the enemy with the utmost fervour. Back past our own evacuated trenches up the little slopes behind which they had collected and down the reverse went the Kaiser's Soldiers, while Sikh Bayonet and Gurkha Kukri played havoc among their disordered ranks."

இந்தியர்கள் ஜர்மானியரை ஹதம் செய்து துரத்தல்.



லீல் கோட்டைக் கருகாமையில் ஜர்மானியர்கள் கூட்ட பலத்தினால் சில பிரிட்டிஷ் சைனியங்களைத் துரத்தி, இந்திய சைனியங்களிருக்குமிடத்திற்கு அக்டோபர்மீ மூன்றுவது வாரத்தில் வந்தார்கள். இந்தியர்கள் வீராவேசத்துடன் சண்டையில் புகுந்ததும் ஜர்மானியர்கள் அலங்கோலமாக தாங்கள் பிடித்த இடங்களையெல்லாம் விட்டு விட்டு ஓடினார்கள். சீக்யஜாதி வீரர்கள் பேயனெட்டுகளாலும் கூர்க்க ஜாதி வீரர்கள் குக்ரியென்கிற சிறு கைக்கத்தியாலும் ஜர்மன் துருப்புகளைக் குத்தியும் வெட்டியும் ஹதம் செய்வதைக் காட்டும் படம்.

# The Faith That Made a Nation Whole.

"I give you the message of Faith"—*H. E. Lord Hardinge.*




"India's Future":
"A Crown of Glory
to the British Nation"
and A Tower of Strength to the
Kingdom of God on Earth.

"DALAPANGALA":
"THE STRIVING STRUGGLING
MARCH OF CIVILISATION."

INDIA'S ONE MESSAGE:
"PEACE AND GOOD WILL
BE UNTO THEE."

# "LOYAL INDIA'S PRAYER"

## FOR KING, COUNTRY AND CAUSE.

*(PRO REGE GREGE LEGE)*



மாட்சிமை தங்கிய நமது சக்ரவர்த்தி, (இந்திய இராணுவ உடையில்.)

**The King-Emperor as Colonel-in-Chief of King George's Own Lancers (Indian Army).**

*King George's Message to the Princes and People of India: September 10th* 1914.

"Among the many incidents that have marked the unanimous uprising of the population of my Empire in defence of its unity and integrity, nothing has moved me more than the passionate devotion to my Throne expressed both by my Indian subjects and by the Feudatory Princes and the Ruling Chiefs of India, and their prodigal offers of their lives and their resources in the cause of the realm. Their one-voiced demand to be foremost in the conflict has touched my heart, and has inspired to the highest issues the love and devotion which, as I well know, have ever linked my Indian sub-jects and myself."

"God save our gracious King !
Long live our noble King !
God save the King !"
Hear England's, India's, prayer !
From peril, fear, and snare—
Whatever foes may dare,
God save the King !

God save our Empire-State
From perils small and great
Of land, sea, air !
In cities, towns and marts,
In all the Empire's parts,
In many million hearts,
Resounds the prayer.

Since man on earth appeared,
Since the first tomb was reared,
Since death's alarms
First struck in hearts dismay,
Has never been such fray:
For Earth beholds to-day
A world in arms.

Death's Angel every hour
Mows down the richest flower
Of every race :
Fair lands and fertile climes !
Your muffled Christmas chimes
Lament the cruel times
In every place.

Your dearest kith and kin
Grim death hath garnered in :
And yet take heart !
Was ever France so fair?
For Britain's best are there,
With India's sons, who bear
Nobly their part.

England hath pledged her hand
By Chivalry to stand,—
Witness the Lord !
Hearts that in union beat !
Hands that each other greet !
From many lands ye meet,
To keep the word.

From clash of sword and steel,
From cannon's thunder-peal,
Springs a new fire !
Our country's Empire's cause
Is holier than it was:
A higher law than laws
Binds son and sire;

Binds families and friends,
Seals rights and wrongs amends ;
In death is life !
From Eastern, Western end,
The Empire's sons attend
And creed and colour blend
In friendly strife.

For all our friends to-day
O God ! we humbly pray:
Help us, O Lord !
We trust our cause is thine,
And trusting, we combine:
Let freedom fairer shine
For peace restored !"



## Hridanjchali.—*The Heart's Tribute.*

### THE CHILDREN'S ANTHEM.

"Her eyes are homes of silent prayer."—*Tennyson.*

"Thrice blest whose lives are faithful prayers
Whose loves in higher love endure;
What souls possess themselves so pure
Or is there blessedness like theirs."—*Tennyson.*

" அம்மா தாயே காப்பாற்று !
அடியேம் குழந்தைகள் சொற்கேட்டு!"

---

## " THREE WORDS OF STRENGTH."

### " HOPE, FAITH AND LOVE."

I

Hardinge, My Lord, true-hearted Son of Man;
On bended knees I bow to the Christ in thee
And pray to the Voice of Faith that urged "Go on!"
Heeding not the demon that tore thy flesh from thee.

II

England's Empire over the raging seas
She owes to Nelson's Voice of * Duty t' be done!
England's Empire over the Mind that feels
That 'Lady with the lamp' † founded on her 'Duty done.'

III

England's Empire over our people's heart
The mother-heart of Victoria the Good did found
But the Empire of Man over hearts that smart
The Voice of 'Faith that faltered not' *alone* could found!

IV

Henceforth' n Imperial Delhi's Crown shall stand
Thy Glorious Form of Faith on Elephant mounted
The' ternal symbol of the Spirit that stand
And Guide a Nation's path to the Goal it counted.

V

The Sovereign-Lord his message of Hope did give;
Our own true Lord, the Viceroy. gave us Faith!
'Tis now India's turn Her Supreme Message to give :
And that's *Love to thee and thine surpassing both Hope and Faith.*

*Aum ! Peace ! Peace ! Peace !.*

---

* " England expects every man to do his duty."
† Miss Florence Nightingale.

## THE SHOCK-ING STORY OF PROUD WILL-I-AM.

(*From Punch's Almanack of* 1915.)

" Once there was a (Gentleman) Man named WILL-I-AM. He was a Soldier, and a Sailor (with a lovely fleet of Canal BOATS), and all sorts of Other things be-sides. He could do everything better than any-body else : He was It. He was so proud that his boots hurt. He had a mailed Fist, a tame Eagle, and a beautiful sticky-up Moustache. Also he had two friends—(Only one of them was'n't very keen).

Now WILL-I-AM was very fond of dream-ing. There was one lovely dream where he was Emperor of the Earth, and Alex-ander and Napo-lean and Cæsar and all those people were in the back seats. But he could never really enjoy his dream, because of a cock and a Li-on and a Big Bear who lived near him and used to disturb his Rest. So he thought it all out, and at last One Day he decided to give them What For. He fetched one of his two Friends—the Other One thought he wouldn't come, thank you,—and said to him, " Look here just you go and sit on that Bear. My Eagle will knock the stuffing out of the Old Cock ; and I am going to tame that con-tempt-i-ble litt-le Li-on. Li-on-taming my Long Suit. Now watch, and you will see a Circus ! "

But the Cock turned out to be a fight-ing Cock ; and the Li-on some-how did-n't see his way to be-ing tamed. So Will-i-am pre-tend-ed he did-n't real-ly mean an-y-thing, and turned back towards Home. The Li-on and the Cock have very kindly pro-mised to see him right up to his Door : and there he will find the Big Bear sit - ting on his poor friend waiting to welcome him.

I do not think that he will be able to enjoy his silly Dreams for quite a little while."—William Bernard Partridge in the Punch. (*See P.* 324.)

உன்னதமாம் பார்ஹதப்போர் விளைகூத்தை விளக்கினார் பார்.




"The titanic struggle into which the German Kaiser has plunged himself has gathered against him another foe in Japan. He now fights five enemies—France, Belgium and England in the West, and Russia in the East of Europe, and Japan in Asia.—*From the Punch.*

உன்னதமாம் பார்ஹதப்போர் விளைகூத்தை விளக்கினார் பார்.

I

முன்னமிங்கே தென்னாலு ராமன் மன்னர்க் குபதேசங்கள்
மன்னுகூர் புத்தியாலே வேடிக்கையாகவே விகடத்தால்
பண்ணினார்போல் லண்டனிலே 'பஞ்ச்'என்ற விகடரத்னம்
மன்னர்மானிட ரென்றே'சரிவாரி' யாகவேயிருந்து போதிக்கிறார்.

II

உன்னதமாம் பார்ஹதப்போர் செய்வார்கதை படிக்குஞ்சிறார்
மன்னுபோர் புரிவார்பட மத்தியிலேயிற்குமொரு கேய்ஸர் என்பார்
உன்னதப்போர் விளைத்தஅவர் உக்கிரமாய்ப் பரசேந்தி
தன்னுடைய வலிச்செருக்கால் சண்டைசெய்யப் புறப்பட்டார்.

III

புறப்படவும் சுற்றியுள்ள தேசமன்னர் அவரையெதிர்த்
தொருபுறத்தில் கரடிக்கொடி யுடையருஷ்யா தன்வலியாலவரைத்தாக்க
ஒருபுறத்தில் வேட்டைநாய்க் கொடியுடையபெல்ஜியமதை மிதிக்கப்பாய்ந்ததாகேள
[வுதுபார்
மறுபுறத்தில் பறவைக்கொடி யுடைப்ரான்ஸ் பாய்ந்துசண்டைசெய்றதுபார்!

IV.

அலைகடலைத் தாண்டியதோ ஆங்கிலசிங்கம் பாய்றதுபார்
தொலைதூரத்தி லுள்ளஜப்பான் தாக்கியவரை முடுக்குதுபார்
தொலையாச்சண் டையிலெதிர்த்தனைபேர்கள் எதிர்த்துவந்தாலும் பார்ப்பேன் ஒருகை
[பென்
றலையாதுபராசுகை யேந்தியேயுக்கிரமாச் சண்டைசெய் கேய்ஸரின் கூத்தைப்பாரே!
குலையில்லை விலையில்லை நிலையில்லை யெல்லாமோர் யுத்தக்காடே!





கிறது. ஆனால் இதற்கும் மற்ற 'ஸ்லாவ்' பாஷைகளுக்குமுள்ள வித்யாஸம் எந்த ஸ்லாவ் ஜாதியானும் இலகுவில் கற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

அங்க அடையாளம் (Physical Features.)

ஸ்லாவ் ஜாதியாரின் அங்க அடையாளங்களில் விசேஷமான வித்யாசமில்லாவிட்டாலும் அவர்கள் வர்ணத்தில் ஜெர்மன்ஸ், ஸ்காண்டிநேவியன்ஸ் இவர்களைவிடச் சிறிது லேசாயும், நீலம் அல்லது வெண்மை கலந்த கறுப்பு விழிகளும் உடையவர்களாயிருப்பதாகச் சொல்லலாம். 'ஜெர்மன்' ஜாதியார் பொன்னிறம், அல்லது செம்பட்டைநிறம் மிகுந்தவர்களாய் கருநீலம் பாய்ந்த கண்களுடையவர்கள். 'ஸ்லாவ்ஸ்' அவ்வளவு நன்றாக வர்ணம் பாய்ந்தவர்களல்ல. லேசானவர்ணமும் வலுத்த உறம்பெற்ற தேகக்கட்டும் உடையவர்கள். கல்விப் பயிர்ச்சியிலும் ஸம்பிரதாய விசேஷத்திலும் ஜர்மானிக் ஜாதியாருக்கும் அவர்களுக்கும் வித்யாசமில்லாததுபோல் தோற்றலாம். ஆனால் உள்ளத் துணர்விலிருக்கும் 'ஸ்வபாவம்' என்கிற பிறவிக்குணத்தில் அவர்களுக்கும் மற்ற எல்லா ஐரோப்பிய ஜாதியார்களுக்கும் சொல்லிக் காட்டமுடியாத அதிசூக்ஷ்மமான வித்தியாசமொன்றிருக்கிறது. அதை எடுத்துரைப்பது கஷ்டசாத்தியம்.

அவர்கள் மனோபாவம். (Mental Attitude.)

அவர்களிடத்திலுள்ள அந்த சூக்ஷ்மகுணவிசேஷத்தை "அயுக்தம்" என்று சொல்லலாம் போலும். அப்படியென்றால் என்னவெனில், ஜர்மானிக் ஜாதியாரைப்போல் முகம் கோணாமல் எதையும் ஞானபரமாக 'ஒட்டியும் ஒட்டாததுபோல்' எடுத்துக்கொண்டு தன்னுள்ளமறியத் தனிநினைந்திருக்கும் சாமர்த்தியம் அவர்களுக்கில்லை. 'ஸெல்ட்' (Celt) ஜாதியாரைப்போல் மனோரதமேறிச் செல்லும் குணமும் அவர்களிடமில்லை. 'ஸ்லாவ்ஸ்' அதிக ரோஸமும் உணர்ச்சியுமுள்ளவர்கள். எதுவும் மனதில் உறுத்தப்பெறும் சுபாவமுடையவர்கள். உள்ளத்திற்பட்டதை யொளிக்கும் ஸ்வபாவம் போதாது. படபடத்த ஸ்வபாவமும் அஃதோடு வந்தது வரட்டுமென்று பொறுக்கும் குணமும் அவர்களிடத்து விசேஷமாயுண்டு. படபடப்பும் பொறுமையும் சேர்ந்திருக்கிற 'முன்பின் ஒவ்வாத சேர்க்கைக்குணம்' அவர்களிடத்திருப்பது விசேஷம். (இதில் அதிரஸிகமான மனோதத்துவ சூக்ஷ்மமிருக்கிறது. ஆனால் அதைப்பற்றி விசாரிக்க இது ஸமயமல்ல. சரித்திர ஆராய்ச்சிசெய்து உணர்ந்தவர்கள் உணர்த்தியுள்ளதை யெடுத்துரைப்பதேயன்றி வேறெதுவும் சொல்ல நமக்கு அதிகாரமில்லை.)

குணவிசேஷம். (Temperament.)

ஸ்லாவ்ஸ் ஜாதியாரின் குணவிசேஷம் இன்னொன்றுண்டு. அவர்கள் மோஹசித்தமுடையவர்கள். இதனால் உலக சம்பிரதாயப்படி உண்மைபேசுவது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. இந்தக்குறையை கல்விப் பயிற்சியினால் ஒருசாரார் திருத்திக்கொண்டிருக்கிறார்கள். படியாதவர்களிடத்தில் இந்த துர்க்குணம் விசேஷமாக நிறைந்திருக்கிறது. ஸ்லாவ்ஸ் விதிவசத்தில் நம்பிக்கையுள்ளவர்கள். ஆனால் குழந்தைகளைப்போல் இலகுவில் சந்தோஷ பூரிதராகும் குணமும் அவர்களிடத்திலிருக்கிறது. அவர்கள் ஸ்வப்னபாவ சித்தர்கள். ஸ்வப்னலோகத்தில் எல்லாம் சாத்தியமாகும். ஆதலால் அவர்கள் எண்ணும் எண்ணங்களுக்கு வரையறையில்லை. அவர்களில் பயிரிடுங்குடிகள் "உழுதுண்டுவாழ்வார்" எல்லாரையும்போல், தந்திரமும், சூக்ஷ்மபுத்தியும், உலகஞானமும், அவர்களனுபவத்தில் கண்ட பழமொழி ஞானமும் உடையவர்கள். அவர்களில் 'படித்தவர்கள்' 'கல்வி கரையில' என்பதை யுணராத 'கற்றறிமூடர்களாய்' கர்வங்கொண்டு தலைகவிழ்ந்து போகிறவர்களாயிருக்கிறார்கள். "டுக்ருங்கரணே" யென்கிற கரட்டுவாத சித்தமும், வாச்சா மகோசரமாய்ப்பேசும் சுபாவமும், அனுபவத்தால்வரும் நடுநிலையின்றி உற்சாகம்நேர்ந்தபொழுது பொங்கி

வழிந்துபோகிற சித்தம், சங்கடம் நேர்ந்த காலத்தில் கோழைப்பட்டு காரிய சித்தியைத்தராது என்பதை அவர்கள் உணரவில்லை. இதைத்தான் நம்மவர்கள் “ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது” என்று பழமொழியாகச் சொல்கிறார்கள்.

"THEIR HERITAGE OF UNCONQUERED AND UNCONQUERABLE SOULS."

“உள்ள தெல்லாமிழந்தாலும்
உள்ள மொன்றை யிழக்கவில்லை.”

இப்படியாக ஸ்லாவ்ஸ் உலகவாழ்க்கையில் தாழ்மைப்பட்டு உள்ளதை யெல்லாமிழந்தாலும் உள்ளம் என்கிற மனச்சாக்ஷி யொன்றை மட்டும் ‘இழந்துவிடவில்லை. ‘பார்க்காய்க்குப் பங்கைவிற்றவன்’கதையாகவும் “பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகள்” என்றார் போலும், அவர்கள் தம் உள்ளத்துணர்வாகிய மனச்சாக்ஷியைமட்டும் இழக்கவில்லை. அதை ஜயிப்பாருமில்லை; அது ஜயிக்கப்படத் தக்கதுமில்லை. என்றும் அணையாத இந்த அஹ விளக்கைக்கொண்டு அவர்கள் “ஜாதிஸ்வதந்திரம்” என்கிற வெளிச்சம் போட்டுக்கொண்டு கிளம்பி யிருக்கிறார்கள். இவர்கள் உருவத்திற் சிறியாராயினும் தீரத்திற் பெரியராயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பூர்வீக ஜாதியாருடைய ஸ்வதந்திரங்களைக் காக்கவென்றே பிரிடிஷ் ப்ரெஞ்ச் ருஷியர்களானவர்கள் ஐக்கிய நேசம் பூண்டு கத்தியுருவிச் சண்டைசெய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

ஆஸ்திரியா-ஹங்கேரி.

(Austro-Hungarian Monarchy.)

ஆஸ்திரியா-ஹங்கேரியிரண்டும் சேர்ந்து ஒன்றாய்விளங்கும் அரசாங்கத்தார் வெகு காலமாக ஒற்றுமையின்மையால் சிதறுண்ட இந்த ஸ்லாவ் ஜாதியார்களை தம்மரசாட்சிக்குட்படுத்திக் கொடுங்கோல்புரிந்து ஆண்டு வந்தார்கள். இப்பொழுது அவர்களுக்கு நல்லகாலம் வந்துற்றபொழுது டியூடன்ஜாதியாரானஜெர்மனியரசாங்கத்தார் அவர்களைத் தலையெடுக்கவிடாது நசுக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். அப்படி நசுக்கிவிடப் பார்த்திருக்கக் கூடாதென்றுதான் இந்த பிரமாதமான யுத்தம் தொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்லாவ்ஸ உச்சத்திலிருக்கையில் ஐக்கிய பத்தியத்தின் அருமை பெருமையையுணர்ந்து அதை யனுசரித்திருந்தால் இப்படிச் சிதறுண்டு சின்னபின்னப்பட்டிருக்க மாட்டார்கள். அந்த உண்மையை அவர்கள் தக்ககாலத்தில் உணராமையினால்தான் இத்தனைகாலமாகத் துன்பமனுபவித்தார்கள். இப்பொழுது அவர்கள் தலை யெடுக்கும்பொழுது ஜெர்மனி ராஜாங்கத்தார் பேர்லினிலும் வியன்னாவிலும் செல்வாக் குடையவர்களாய் அவர்களை நசுக்கிவிடப் பார்க்கிறார்கள்.

பெர்டினண்ட் இளவரசர்.

(The late Archduke Ferdinand.)

மூப்பேறிய ஆஸ்திரியா-ஹங்கேரியின் சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப் சகரவர்த்தித் திருமகனாகிய ஆர்ச்-டியூக் ப்ரான்ஸிஸ் பெர்டினண்ட் இளவரசர் உயிரோடிருந்திருப்பாரானால் அவர் இந்தச் சண்டைக் குடைந்தையா யிருந்திருக்க மாட்டாரென்கிறார்கள். அப்பொழுது ஸ்லாவ் தேசங்களெல்லாம் ஆஸ்திரியா-ஹங்கேரியின் மேலரசுக் குட்பட்டு ஐக்கிய நாடுகளாகச் சேரும்படியான ஏற்பாடு செய்திருக்கலாம் என்கிறார்கள். அப்படிப்பட்ட ஏற்பாடு சமைந்தால் ஐரோப்பாவின் மத்தியபாகத்தில் ஸ்லாவ்ஸ் ஜாதியார் செல்வாக்கு மிகுந்த வலியுடைய இராஜாங்கம் ஏற்பட ஹேதுவாகும். இது ஜெர்மனிக்கு (அதாவது ப்ரஷ்யாவுக் குடந்தையானவர்களுக்கு) விரோதமாகும். ஏனெனில் ஐரோப்பாமுழுமையும் அவர்கள் செல்வாக்கே பரவவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமும் நோன்புமாயிருக்கிறது.

(The Intrigue of Teutonic Germany.)

டியூடன் ஜாதியார் மித்திரபேதம்.

ஆதலால் பூர்வம் கொள்ளைத் தலைவர்களாயிருந்து பிறகு டியூடானிக் யுத்தவீரர்களென்று



பேர் வைத்துக்கொண்டு கடைசியில் ப்ரஷ்யாவைப் பிடித்துக்கொண்டு 1871-ம் வருஷம் முதல் “ஜெர்மன் எம்பையர்” என்கிற ஐக்கிய ராஜ்யத்தை ஸ்தாபித்து அதற்கு அவர்கள் தலைவராகிய “ஹாஹென்ஸால்லர்ன்” வம்சத்தரசர்களே சக்ரவர்த்தியாக வரத்தக்கவர்களென்று ஏற்பாடு செய்துகொண்டு சென்ற 30-வருஷகாலத்தில் கல்வி, ஐசுவரியம், ஜனப்பெருக்கு சைனியவிருத்தி யெல்லாவற்றிலும் பெருமை பெற்று விளங்கிய ஜெர்மன்ஜாதியார் (டியூடானிக் ஜர்மன்ஸ்) ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் மித்திரபேதம்செய்து அவர்களுக்குள் உண்டான சண்டை காரணமாகத் தாங்களும் சண்டைக்குக் கிளம்பி யிருக்கிறார்கள்.

“ஜெர்மன் எம்பையர்” என்பது எல்லாங்கூடி இன்றளவு 43-வருஷ வாழ்வுள்ளதென்று சொன்னோமே. அதிலும் எல்லாம் ஒரு இனத்தாரில்லை. ப்ரஷ்யாவைச்சேர்ந்த சிலரே மேன்பட்ட கையாக விருக்கிறபடியால் அவர்கள் செல்வாக்கு நடக்கிறது. 10,12-சிறிய நாடுகள்சேர்ந்த ராஜ்யத்தில் பூர்வீகமான ஜர்மானிகநாடுகள் கல்வியிலும், வித்தையிலும் பிரபலமாயிருந்தன. அருமையான கவிசக்ரவர்த்திகளும், சங்கீத ஸாஹித்ய வித்வான்களும், தத்துவஞானத்திற் சிறந்தவர்களும் அந்நாடுகளிலிருந் துண்டானார்கள். அப்படிப்பட்டவர்களில் உலகப்பிரஸித்திபெற்றவர்கள் கீதே (Goethe), ஷில்லர் (Schiller), லெஸ்ஸிங் (Lessing), ஹிஜெல் (Hegel), காண்ட் (Kant), பிச்டி (Fichte), வாக்னர் (Wagner), மோஸார்ட் (Mozart), முதலானவர்கள்.

தற்காலத்து (ப்ரஷியன்) ஜெர்மனி.

ப்ரஷியா வசப்பட்டு அத்தேசத்தால் முன்னுக்குவந்த இக்காலத்து ஜெர்மனியில் சாஸ்திரஞானத்துக்கும் விற்பதிக்கும் குறைவில்லை. ஆனால் சென்ற 40-50-வருஷங்களில் பேர்போனவர்கள்:-பிஸ்மார்க் (Bismarck), மோல்ட்க் (Moltke), ட்ரீட்ஷ்க் (Trietschke), உவில்லியம் சக்ரவர்த்தி இவர் போன்றவர்களாயிருக்கிறார்கள். ப்ரஷியர்களுடைய குணவிசேஷ மென்னவெனில், எதையும் பூரணமாகச்செய்து உருப்படுத்தும் சாமர்த்தியம் அவர்களுக்கு அதிகம் உண்டு. அதைக்கொண்டு அவர்கள் சென்ற 30-வருஷகாலத்தில் 300-வருஷத்திலாகக்கூடிய அபிவிருத்தியை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

(1) கல்வி யபிவிர்த்தி:—இதை எங்கும் ஒரேமாதிரியாக ஆக்கி எல்லாப் பிள்ளைகளுக்கும் இராணுவத்தில் சேவகம் செய்யப் பழக்குவித்தல்.

(2) உபாத்தியாயர்களைக்கொண்டு புதிய கொள்கைகளைப் போதித்துப் பரவச்செய்யல்.

(3) உலகெலாம் கண்டதிசயிக்கும்படியான அபிவிர்த்தி யேற்படும் அற்புதக் கட்டுப்பாடும் செய்து அரசன் நாவசைந்தால் நாடசையும்படியான ஏற்பாடுகளை ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவந்திருப்பது. இயந்திரம் வேலை செய்வதுபோல் எல்லாம் கச்சிதமாக வேலை செய்யும்படி செய்திருக்கிறார்கள்.

இப்படியாக “டியூடானிக் நைட்ஸ்” அவர்கள் பூர்வோத்தரத்துக்குத் தக்கபடி ஜெர்மனி முழுவதையும் சண்டைக்குச் சித்தமான யந்திரமா யாக்கிவிட்டார்கள். முற்காலத்திய வித்வத்ஞானப்பேறு தற்காலத்திய கைத்தொழில், இராணுவச் சீர், சண்டைக்கு வேண்டி ஆயுதங்கள், கப்பல்கள் ஆகாய ரதங்கள் இவைகளைப் பூர்ண பக்குவத்துக்குக் கொண்டுவரும் காரிய விசேஷத்துக் குடந்தையாகச் செய்யப்பட்டிருக்கிறது. “திருடனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி” யென்கிறதுபோல சண்டைக்காரனுக்குத் தோன்றும் சண்டை யுக்தி. இந்த வித்தையில் பூர்வம் கொள்ளைத்தலைவர்களாயிருந்து, பிந்தி “டியூடானிக் நைட்ஸ்” என்கிற யுத்த வீரர்களாகத் தலையெடுத்து நேபோலியன் காலத்துச் சண்டைகள் முடிந்ததும் ராஜ்யத் தலைவர்களாக ஏற்பட்டு விளங்கிய டியூடானிக் ஜாதியார் பரம்பரை யப்பியாஸம் மிகு

ந்தவர்கள் என்பதை யெல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டியதா யிருக்கிறது.

ஸ்லாவ்ஸ் பூர்வத்தொட்டு சாந்தமும் சமாதானமும் உள்ளவர்களாயிருக்க, டியூடனிக்ஜெர்மன்ஸ் அல்லது ப்ரஷ்யர்களின் இனத்தாராகிய தற்கால ஜர்மனியைச் சேர்ந்தவர்கள் சண்டைச்சச்சரவிலே தலையிட்டுத் தேறி முன்னுக்கு வந்தவர்களா யிருக்கிறார்கள். இப்படியாக ஸ்வபாவமாகவும் ஆதிகாலந்தொட்டும் வைரிகளான இருதரத்தாரும் இப்பொழுது மல்லுக்கு நிற்கும்படி நேரிட்டிருக்கிறது. உலகெலாம் இரு கக்ஷியாகப் பிரிந்து யுத்தம் நடத்துகிறார்கள்,

"தர்மமே ஜயம்."

'டியூடன்ஸ்' கைவலுத்தால்இங்கிலாந்துக்கு நல்லதா 'ஸ்லாவ்ஸ்' கைவலுத்தால் இங்கிலாந்துக்கு நல்லதா வென்பது கேள்வி. டியூடன்ஸ் வலுத்தால் ஜெர்மனி (ப்ரஷ்யா) தான் இட்டது சட்டமென்கும். ஸ்லாவ்ஸ் கைவலுத்து ஜயித்தால் ருஷியா பங்குக்கு வரும். தற்காலம் டியூடன்ஸ் கொட்டத்தை யடக்குவது அவசியமா யிருக்கிறது. பின்னால் என்ன நேருமோ இப்பொழுது சொல்லமுடியாது.

இராஜதந்திரமென்பது எப்படியும் தந்திர வித்தையே. அதில் தந்திர யந்திரப் பிரயோகம் எப்படியும் இருக்கும். பிரயோக விதியின்னதென்று தற்காலமே யன்றி கர்த்தா காரண காரிய நிர்ணயை எக்காலத்துக்கும் ஒன்றேயாகச் செய்வது பொருந்தாது. காலதேசவர்த்தமானங்களுக்குத் தக்கபடி அவை மாறுபட்டு வரும். ஆகையால் ஸ்வதந்திரத்தின்மேல் நோக்கமுள்ளவர்கள் தர்மத்தைத் தலைமையாகக்கொண்டு கர்ம தர்மத்தைக் கற்றுணர்ந்து நிஷ்காம்ய கர்மம் செய்துவந்தால் உய்யலாமேயன்றி ஸ்வகாரியப் புலிகளாயிருந்து எப்போதும் என் பக்ஷமே ஜயமாக வேண்டுமென்றால் அது பலிக்காது, "தர்மமே ஜெயம்" என்பது நிச்சயமானதால் எல்லாரும் தர்மத்தை யனுசரிக்கவேண்டும். அப்பொழுது தெய்வானுக்ரகத்தால் யாதொரு குறையும் நேரிடாது. ஆதலால்தான் பகவான் பிக்ஷாடன மூர்த்தியாக அவதரித்து,—

"தர்மமே ஜெயமென்ற பிரைஷ கேட்டேன்
தாணியிலே கலிமுற்றும் காலமாச்சு
பாணியிலே அதிஷ்டானம் கூடலாச்சு
அரணியிலே அக்னியும் தோன்றலாச்சு
ஆன்மாக்களீடேறு மார்க்கங்கேண்மின்"

என்று பற்றற்று நின்று தர்மத்தைப் பற்றி நடக்கும் வழியை மறைா பெரிய கர்மயோகமாக உபதேசித்தார்.

முடிவுரை.

இப்படியாக டியூடன்ஸ்—ஸ்லாவ்ஸ் என்கிற இருஜாதியாருடைய குறை குணங்களையும் சரித்திர பூர்வமாய் அவர்கள் பூர்வோத்திரத்தை விசாரித்து உள்ளது உள்ளபடி புணர்ந்து உணர்த்தலானோம்.

ஆனால் ஸ்லாவஸ் என்பவர்களும் டியூடன்ஸ் என்பவர்களும் யார்? அவர்களிருவரும் நரமனுஷர்களே. நூலைப்போல் சேலையும் குணத்தைப்போல் மணமும் அமைவது இயற்கை தர்மம். இப்படி அவர்கள் நாமரூப தேசபேதங்களைத் தள்ளி முக்கியமான குணபேதங்களைக் கொண்டு பார்த்தால் இந்த மஹா பாரத யுத்தம் பூர்வம் குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தம் போலவே கர்மத்துக்கும் தர்மத்துக்கும் நேர்ந்த போராட்டமாக விருக்கிறது. கர்மத்தில் தேர்ந்தவர்கள் சண்டைக்காரர்கள் பரம்பரையி லுதித்த டியூடன்ஸ், தர்மத்தில் தேர்ந்தவர்கள் உள்ளதெல்லா மிழந்து உள்ளம் (மனச்சாக்ஷி) ஒன்றை யிழக்காமற் காப்பாற்றிய ஸ்லாவ்ஸ். இவர்கள் தர்மத்தைக்கொண்டு கர்மத்தைக் கைவிட்டார்கள். அவர்கள் கர்மத்தைக்கொண்டு தர்மத்தை கைவிட்டார்கள். "தாணியிலே கலிமுற்றுங் காலமாச்சு" ஆகையால் அவரவர்கள் போட்ட வித்து முளைத்து விளைந்து அறுவடைக்குத் தயாரா யிருக்கிறது. கண்ணுள்ளார் காணட்டும், உளக்கண்ணிலார் என்னதான் பட்டனுபவித்தாலும் காணாரே.



## NOTES AND REVIEWS.

### குறிப்பும் விமர்சனங்களும்.

'எம்டன் கப்பலும்' அதன் நாசமும்.

வங்காளக் குடாக்கடலில் எப்படியோ நுழைந்து தன்னிடம் அகப்பட்ட வியாபாரக் கப்பல்களை உடைத்து வியாபாரிகளுக்கு பீதியையும் சேதத்தையும் உண்டுபண்ணினதும், இரண்டு மாசங்களுக்குமுன் சென்னையில் சில குண்டுகளைப் போட்டு அறியா ஜனங்களை பயமுறுத்தியனதுமான "எம்டன்" கப்பலானது நவம்பர்மீ 10-ந்தேதி யன்று ஆஸ்திரேலியாவின் கப்பலாகிய "ஸிட்னி" என்னும் கப்பலால் கோகோஸ் அல்லது கீலிங்ஸ் என்னும் தீவுகளுக்கருகில் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

'எம்டன்' கப்பலானது அத்தீவுகளில் இருக்கும் தந்திகம்பியை அறுக்கவந்ததாக தெரியவருகிறது. 'எம்டன்' கப்பலின் சேதம் விளைத்ததில் சுமார் 200 பேர்கள் மாண்டார்கள் என்றும் 30 பேர்கள் காயம் பட்டார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஸிட்னி' கப்பலின் சேதம் 3 பேர்கள் மாண்டவர்கள் 15 பேர்கள் காயம்பட்டவர்கள். 'எம்டன்' கப்பல் தலைவராகிய ! காப்டன் வான் முல்லரும், ஜர்மன் சக்கிரவர்த்தியின் மருமானாகிய ப்ரின்ஸ் ப்ரான்ஸிஸ் ஜோஸப்பும் கைதியாக பிடிக்கப்பட்டார்கள். அவர்களின் தீரத்தையும் யுத்த நீதியையும் கருதி கைதியானதும் அவர்களுடைய கத்திகளைப் பிடுங்காமல் விட்டுவைத்து அவர்களை கௌரவத்தோடு நடத்திவரத் தீர்மானித்திருக்கிறார்கள்.

லார்ட் ராபர்ட்ஸ்.

பீல்ட் மார்ஷல் லார்ட் ராபர்ட்ஸ் அவர்கள் பிரான்ஸில் நடக்கும் யுத்தகளத்துக்கு விஜயமாகப்போன விடத்தில் குளிரினால் மூப்புக் காரணமாக காலஞ்சென்று விட்டார்.

---

ஆக்ஸ்பர்ட் கதை புஸ்தகங்கள்.

இவைகள் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் புரியும்படியான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இதுவரைக்கும் மூன்று கதை புஸ்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளிலிருக்கும் கதைகள் ஸ்வாரஸ்யமாயும், அதே சமயத்தில் அறிவை விருத்திசெய்வதாயு மிருக்கின்றன. இக்கதை புஸ்தகங்கள், எலிமெண்டரி வகுப்புச் சிறுவர்களால் கட்டாயம் வாசிக்கப்படவேண்டும்.

இப்புஸ்தகங்களிலிருக்கும் கதைகள்:—

1. தொட்டதெல்லாம் பொன் ; செண்பகவல்லி.
2. பெரும்புயல், ஸோனாபாய், மர்லினும் விவியனும்.
3. பொன்பறவை, வானவில்லும் புதையல் பணமும்.

மேற்படி புஸ்தகங்களை பிரசுரித்தவர்கள், ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரெஸ், சென்னையும், பம்பாயும். மேற்படி புஸ்தகங்களை நமது பார்வைக்கு அனுப்பின சென்னை, மேற்படி பிரெஸ்ஸின் மானேஜராகிய எஸ். வி. ரங்கசாமி அய்யங்கார் அவர்களுக்கு நமது வந்தனம். மேற்படி புஸ்தகங்களின் விலை ஒன்று 0—1—3 பை தான்.

பக்திவிளக்கம்.

மேற்படி புஸ்தகம் கும்பகோணம் லோகாநுகூலன் பத்திராதிபராகிய வி. எஸ். ராதாகிருஷ்ணய்ய ரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இப்புஸ்தகத்தில் பக்தியினால் மோக்ஷமடையலாம். மோக்ஷத்திற்கு பக்தியே முக்கியமென்பவைகள் நன்றாகவிளக்கி காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 12.

தத்துவ ஞானபோதினி.

அல்லது அத்வைதமஞ்சரி. இப்புஸ்தகமும் வி. எஸ். ராதாகிருஷ்ணய்யரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இப்புஸ்தகமானது பெயருக்கேற்றபடி நன்றாக எல்லாரும் அறியும்படியான வழியிலெழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 8.

கர்ணன்.

இப்புஸ்தகமானது ஆர். சுந்தரராகவ அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு வி. எஸ். ராதகிருஷ்ணய்யரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இதில் கர்ணனுடைய முழு சரிதையும் எளியநடையி லெழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

இந்தியன் எமிகிரண்ட்.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து நடந்துவரும் ஒரு ஆங்கிலேய பத்திரிகை. இதனுடைய கருத்துகள்,

1. பினங்கு, சிங்கப்பூர், முதலிய அன்னிய நாடுகளுக்கு கூலிகளாகப் போகிறவர்களை கூடியமட்டும் தடுத்து புத்திமதிக் கூறுதல்.

2. படித்தவனும் தொழிலில் கைதேர்ந்த வனுமானவனை உத்ஸாகப்படுத்துதல்.

3. இந்தியாவிற்கு வெளியிலிருந்து வியாபாரமும் கைத்தொழிலும் விருத்தியாவதற்கு சாதனமான சமாசாரங்களை சேகரித்துப் பிரசுரித்தல்.

4. வெளிநாடுகளில் இருக்கும் இந்தியர்களைப்பற்றியும் அவர்களுடைய வேலைகளைப் பற்றியும் சமாசாரங்கள் பிரசுரித்தல்.

5. கூலிகளாகப் போனவர்களின் உதவிக்காக பணம் சேகரித்தல்.

6. இந்தியர்களுடைய பிரிட்டிஷ் பிரஜையின் ஸ்வதந்திரியங்களை ஆமோதித்தல்.

உள்நாடு வருஷசந்தா ரூ. 5—0—0

விலாசம்:—

தி. கே. ஸ்வாமிநாதன், பத்திராதிபர்,
இந்தியன் எமிகிரண்ட், 33. ப்ராட்வே, மதராஸ்.

எம். எஸ். ஸர்மா.

மேற்படியார் மாதந்தோறும் பிரசுரித்து வரும் சித்திர படங்களின் தீபாவளி ஸ்பெஷல் நம்பர் வரப்பெற்றோம். அதில் பகவானது எல்லா அவதாரங்களும் இருக்கின்றன. இது ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சிறுவர்கள் உபயோகத்திற்காக இருக்கவேண்டியது. விலாசம்:—எம். எஸ். ஸர்மா, 2. ஆபிஸ் வெங்கடாசல முதலி தெரு, திருவல்லிக்கேணி.

The "VIVEKACHINTAMANI".—The October number of this popular Tamil monthly discusses the present war from the point of view of our children's interests. It draws pointed attention to the moral aspects of war in general and to the unrestrained license indulged in by the aggressive party to the present war. "Even the most inattentive schoolboy is interested in the subject to day." It has as usual a number of other articles in connection with child-study, social study and the general education of children. The report of the Hospital Committee of the Madras Social Service League mentions the fact that "the Vivekachintamani is being appreciated by the patients in the General Hospital among whom it is circulated by the Captain of the workers there." *Hindu*, 24th October 1914.


## ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய அவசியமான புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கமலாம்பாள் சரித்திரம் (விவேகசிந்தாமணி பிரசுரங்கள்) | ரூபா | 1 | 4 | 0 |
| ஆத்மவித்யாமஞ்சரி (கடவுளை வழிபடுமின்) | ,, | 1 | 0 | 0 |
| நாதகீத நாமகள் சிலம்பொலி | ,, | 1 | 0 | 0 |
| புத்தர் சரித்திரம் | ,, | 1 | 0 | 0 |
| | ,, | 0 | 14 | 0 |

பக்தமாலா சரித்திரம் (182 பக்தர்களின் சரிதை அடங்கியது) காலிகோ பைண்ட்ரூபா 3—8—0
பெற்றோர் ஒழுக்கம் (சிறுவர்கள் ஸன்மார்க்கத்திற்கு ஸாதனமானது) ரூபா 1—0—0
ஒவ்வொரு தாயார் தகப்பனும் வாங்கி வாசிக்க வேண்டியது.
லீஹ அல்லது அருளாநந்தரின் ஆச்சரிய சம்பவம் ஓர் இனிய சுயசரிதை ரூபா 0—4—0

தபால் செலவு பிரத்தியேகம்.

**Lalita Vilasa Vidya Series:** *English Religious and Mystical works.*

1. **Gleanings on the Way from Earth to Heaven, Rs.** 1-8.
2. **The Spirit of Religion or Veerasaivam to the Fore, As.** 8.
3. **Spero Meliora or The Practice of Religion and the Rationale of Morality with a number of other instructive papers, As.** 12.
4. **My Master's Voice (In the Press.)**
5. **Karmathura - Aphilosophical Novel As. 6.** **Postages Extra.**

விலாஸம்;—

லலிதா விலாஸ வித்தியாஸங்கம்,
Lalita Publishing Co.,
லலிதாலயா, 19. ஆடம் தெரு, மைலாப்பூர், மதருஸ்.


"**DOING YOUR DUTY (SWADHARMA) IS THE HIGHEST AWARD.**"

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE".

THE HINDU 28 JAN 1915 MADRAS.

**THE WAR NUMBER.**





அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum.*
"**New Series**" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** "**Approved**"
புத்தகம். **22.**] ஆனந்தஃ மார்கழிமீ, **1914**ஃ டிஸம்பர்மீ [சஞ்சிகை **9.**


"**DOING YOUR DUTY** (*SWADHARMA*) **IS THE HIGHEST AWARD.**"

### "Duty for Duty's Sake,"

### THE INDIAN'S "HIGHEST REWARD."

*A Stirring Army Order.*

An Order to the Indian Troops says :— "In a few days we shall be fighting, as it has never been our good fortune to fight before against enemies having a long history. But is their history as long as yours? You are the descendants of men who have bean mighty rulers and great warriors of many centuries, and you will recall the glories of your race. Hindu and Mahomedan will be fighting side by side with British soldiers and our gallant French Allies, and you will be helping to make history. You will be the first soldiers of the King-Emperor to have the honour of showing in Europe that the sons of India have lost none of their ancient martial instincts, and that they are worthy of the confidence reposed in them in battle. *You will remember that your religion enjoins that to give your life in doing your duty is the highest reward.* The eyes of your co-religionists and countrymen are upon you, and they are eagerly awaiting news of how their brethren conduct themselves when they meet the foe."—*War Telegrams.*

### THE SECOND ATTEMPT AT YPRES.

### Attack by the Prussian Guards.

*Delhi, November* 20.—The Viceroy has received the following from the Secretary of State dated 18th :—"Fighting in Belgium continues severe. No change of position reported there or in France. Eye-witness describing the supreme effort of Prussian Guards on the 11th November to take Ypres and break through to Celais, says assaults at the end of October by infantry on the line having failed, the best German troops were called for and at intervals employed in minor attacks and heavy bombardment designed to weaken our resistance. On the early morning of 11th most furious Artillery fire yet employed commenced followed by full attack of the Prussian Guards. Though casualties before they reached our lines must have been enormous, such was their resolution and momentum that they succeeded breaking our line in three places, but were counter-attacked and driven back to the line of trenches. Germans have thus failed to capture Ypres from which they are still kept four or five miles distant."

### The Battle of the Yser.

*Westminster, October* 30.—No battle in history was ever more tenaciously fought than that which has been proceeding in what remains of Belgium during the past fortnight. What we have been witnessing on that sanguinary coast is really the culmination of the battle of the Aisne. The rival forces in that titanic and indecisive struggle gradually pushed each other further and further to the north-west until the sea made it impossible for the process to continue, and then there was nothing for it but to fight the issue out face to face. There was no more room for flanking movements—nothing was left to either side but the straight frontal attack. . . . .

Much depended, and still depends, upon the issue of this awful battle. The Belgians are fighting bravely for their lost strip of territory. The French are contesting with the foe for the possession of Northern France and the new approach to Paris. The British are primarily concerned in keeping the invaders out of the Channel ports and in maintaining for themselves the mastery of the Dover Straits. All these interests are vital to the Allies, but not so vital as the stakes for which the German army is fighting. If the Allied front cannot be broken here the enemy may as well pack up and go back to his own land.—*London Correspondent of the Hindu.*

"If the German Army," wrote the Old Kaiser in 1879, "is defeated in the first (great) battle (in France), then the left bank of the Rhine is immediately lost to us, and we must withdraw across the river." That is really what the Germans in France seem to be contemplating. —*Illustrated War News.*

### Indian Regiments in Action.

*Westminster, October*, 30.—"The Indians had their first bit of actual fighting towards the end of last week. They have been engaged in the neighbourhood of Lille, fifty or sixty miles south of the main battle described above. At one point near La Bassee the British forces got into a very tight corner. After a terrific hail of shells from the German artillery great masses of the supporting infantry were hurled in successive waves against the British line. So furious was the onslaught and so numerous were the attackers that they almost succeeded in breaking through. But the Indian troops were in position behind as principal supports. It was an opportunity for which they had been longing. Hitherto they had been kicking their heels in comparative inaction, making what they could of the prestige which the story of previous exploits has given to their name. At last they were able to prove that they were of the same calibre as their predecessors.

The behaviour of the Indians in this critical affair was a sufficient answer to the insinuations of the "Pioneer." These soldiers of the King-Emperor have shown themselves able to do more than hold their own against disciplined European troops. An eye-witness has described their bravery and dash as equal to anything done in this war, and that is saying a good deal.

We are not allowed to know which of the Indian regiments were engaged, but it is evident that they met the foe with the greatest eagerness. It was an affair of bayonets, and when the clash of arms came the result was not long in doubt. The German advance was not merely checked and stopped; it was beaten and broken. The enemy seemed utterly demoralised by the furious onslaught. They turned and fled, pursued by their dusky foes. Nor did the chase cease until the Germans had been driven back over the trenches which had been temporarily won from the English. The pursuit would have been carried still further if the officers had not thought it prudent to call a halt.

Similar accounts have been received of the fighting round Ypres where the Indians similarly distinguished themselves. Here again things were going none too well for the Allies when the Indian reinforcements were called upon to fill the breach. It was again a matter of cold steel, with results disastrous to the opposing forces.

Of course, the brave Indians had to pay their toll in killed and wounded. Some of the latter arrived at Netley Hospital early this week, and are now being attended to by the Indian Ambulance doctors and staff."—*London Correspondents.*



புஸ்தகம்-22.] "The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide." [சஞ்சிகை-9.

ஆனந்தஹு மார்கழிமீ } விவேகசிந்தாமணி { December-January. 1914—15.

ESTABLISHED 1892

# THE WAR—"யுத்த காண்டம்"—NUMBER.

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மேனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## A HOUSE-HOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.

"உன்னதமாம் பாரதப்போர் செய்வார் கதை."

## A SECRET PAGE OF HISTORY IN HUMAN AFFAIRS.

Mr. ASQUITH'S APPEAL TO THE NATION AT LARGE.

இராஜ்யவித்தையி லோர் குப்தபாகம்.—(தொடர்ச்சி.)

### THE PITIFUL STORY OF BELGIUM.

**(As told by one of her own sons.)**

M. Maurice Maeterlinck, the Belgian Dramatist, and Philosopher said:—

It is a pitiful story I have to relate. It is the story of a little kingdom which has kept its pledge and died for it. (Cries of "Never.") Belgium was established as a buffer State against two great contending Powers to prevent the passage of one army into the territory of the other, and her neutrality was guaranteed by the greatest Power in Europe—England. We have kept our pledge loyally. In August Germany sent an ultimatum asking that we should let their forces go through into French territory. It is untrue that if the request had come from France, Belgium would have been more lenient. She would in the same way have endeavoured to prevent the French Army from breaking the terms of neutrality. Belgium has been called England's foster child, and England has certainly proved herself a good foster mother. My countrymen realize that England's word is her bond. (Cheers.)—Speech at *Lord Haldane's Meeting on October 10th at Newcastle-Upon-Tyne.*

### பெல்ஜியத்தின் பரிதாபக் கதை.

பெல்ஜியம் தேசத்தவரும் பிரகிருதி வித்தையில்தேர்ந்த மஹாவித்துவானும் நாடககிரந்தங்களியற்றிப் பேர்பெற்றவரும், உண்மையான தத்துவசாஸ்திரியுமாகிய எம். மாரிஸ் மெடர்லின்க் அவர்கள் "நியூகாஸில்-அபான்-டைன்" என்னும் பட்டணத்தில் லார்ட் ஹால்டேன் சைனியத்துக்கு ஆள் சேர்ப்பதற்காகச் செய்த பிரசங்கங்களைக் கேட்பதற்காகக்கூடிய மீட்டிங்குமுன் பெல்ஜியத்தின் பரிதாபக்கதையை வெகு சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொன்னார். அவர் யுத்தப்பாழில் தம் வீடு, வாசல், நாடு, நகரம் எல்லாம் துறந்து இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்துள்ள லக்ஷக் கணக்கானபேர்களில் ஒருவர்.

"நான் உங்களுக்குச் சொல்லவிருக்கும்கதை வெகு பரிதாபமானது. ஒரு சின்னராஜ்யம் தன் செய்கடனைச் செய்யவென்று தலைகொடுத்துத் தலைசாய்ந்த கதையிது. (இல்லை, இல்லை, தலை சாயவில்லை)." ஆட்டுக்கடா சண்டையிலே மாட்டிக்கொண்டே நசுங்கிவிட்டோம் என்று

சொன்னாற்போல் அவர் தம்தேசத்தின் பரிதாபக்கதையை அரிதாகச்சொல்லி இரங்குகிறார். சண்டைக்குத் தயாராய் எதிர்த்து நிற்கும் இரண்டு பெரிய இராஜ்யங்களுக்கு நடுவே அவர்கள் முட்டிக்கொண்டு சண்டையுடையாதபடி இடையிலே மெத்தை கட்டினாற்போல் பெல்ஜியத்தை ஒருகக்ஷியிலும் சேராமல் தனியரசாகவிருக்க நியமித்தார்கள். ஜெர்மனி, ப்ரான்ஸின் சைனியங்கள் ஒரு தேசத்திலிருந்து மறுதேசத்துக்குப்போக வழியில்லாதிருக்கும்படி பெல்ஜியம் ஸ்வதந்திர நாடாக ஏற்படுத்தப்பெற்றது. அதன் ஸ்வதந்திரத்துக்குக் கேடுவராதென்று ஜெர்மனி, ப்ரான்ஸ் மட்டுமல்ல, ஐரோப்பாவில் அதிமேலாகவிளங்கிய இங்கிலாந்தினும் உறுதி கூறப்பட்டது.

"நாங்கள் செய்கடனைச் செய்துவிட்டோம். அதனால் தலை போகிறதானாலும் செய்தே தீருவோம் என்று ஜெர்மனியின் சைனியம் பெல்ஜியத்தில் நுழையக்கூடாதென்று தடுத்தோம். ஆகஸ்டு மாசத்தில் ஜெர்மனியார் தம் சைனியம்போக வழிவிட வேண்டுமென்று கேட்டார்கள். கூடாதென்று சொன்னோம். அப்படியே ப்ரான்ஸ் கேட்டிருந்தால் அதற்கும் அதே பதில்தான். அத்துமீறி பைத்தியங்கெட்டு முரட்டுத்தனமாய் ஜெர்மனியர் கொள்ளைக்காரனைப்போல் கூட்டங் கூடிக்கொண்டு அக்ரமச்சண்டைக்கு வந்தார்கள். வந்தவர்களை பலமுள்ளமட்டும் எதிர்த்து நின்று மடக்கியடித்தோம். சுரணைகெட்டு அவர்கள் மரணம் விளைக்கச் சண்டைசெய்து நாடுநகரங்களை யழித்துப் பாழாக்கிவிட்டார்கள். பெல்ஜியம் இங்கிலாந்து வளர்த்த குழந்தையென்று சொல்கிறார்கள். அது உண்மையே. இங்கிலாந்து நல்ல வளர்ப்புத்தாயாக வந்து வாய்த்தாள். ஆங்கிலர் வாக்குத் தவறுதவரல்லவென்று எங்கள் தேசத்தார் நம்பியிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண் போகவில்லை." "இங்கிலாந்தின் வாய்வார்த்தையே கைப்பத்திரம்." வாக்குறுதி வீண்போகாதிருக்க நாக்குறுதி வேண்டும். நாக்குறுதியுண்டானால் கைக்குபலம் தானேவரும். "அல்லனபோல் ஆவனவும் உண்டு சில."

## பெல்ஜியம் தன் பரிதாப நிலைமையுன்னி இரங்கல் கண்ணி.

*(After M. Maurice Maeterlinck.)*

1. செய்கடனைச் செய்யவென்றே
   தலைகொடுத்தோம் இலையோ கதி!
2. ஆட்டுக் கடாச் சண்டை நடுவிலே
   மாட்டிக் கொண்டே நசுங்கிப் போனோம்!
3. நாடுநகர் வளமிருக்க கலைமெல்லாம் சேர்ந்திருக்கக்
   கூடுவிட்டுக் கூடுபாயும் கூத்தாடிபோ லானோமே!
4. கேடுகெட்ட மானிடர்கள் கூடிகட்டி வாழுமென்று
   மாடுபிடிக் கள்ளரைப்போல் நாடுநகர் பிடித்தாரய்யா!
5. ஆங்கிலர்சொல் தவறாரென்று அவர்கையைப் பார்த்திருந்தோம்
   எங்கள்கதி இவ்விதமா யாகுமென்று நினைத்தோமில்லை.
6. ஆளுக்காள் எதிர்நின்று சண்டைசெய்வ துலகதர்மம்,
   அசுரர்களைப் போலேயம்மா அநியாய யுத்தஞ்செய்தார்.
7. நாடுநகர் எல்லாமொரு நொடியில்பொடி யாக்குவிக்கும்
   கோடியானை பலமுள்ள கொடியஜட யந்திரஞ்செய்தார்.





8. அரக்கர்போல் அவ்வியந்திரம் முடுக்கிவிட்ட பாதகர்கள்
   இரக்கமில்லார் பரக்கக்குடியைப் பதறவிட்டார் பாரம்மா!
9. தர்மம்தலை யெடுக்கவென்றே தனஞ்சயனைப் போலேயெங்கள்
   அரசசிங்கம் ஆல்பர்ட்அம்மா! அற்புதப்போர் செய்கிறார்பார்!
10. தர்மமில்லை வர்மமில்லை கைப்பலமே பலமென்றானே!
    தர்மவர்ம மில்லாச்சண்டை அதர்மம்தானே யாகாதோ!
11. "தர்மம்தலை தாழும்போதே அதர்மம்தலை யெடுத்தபோது
    தர்மம்நிலை நாட்டவென்றே நானும்வந்து அவதரிப்பேன்."—
12. என்று சொன்னார் வாக்குப்பொய்யோ, இல்லாவிட்டால்,
    எங்கள் கர்மம் இப்படியோ தெரியவில்லை.
13. ஸநாதநமாம் தர்மமென்றும் பொய்க்காது ஸத்தியமிது:
    அநாதரவா யெங்களையும் விட்டுவிடார் ஈசன்தானும்.
14. நல்லோர்நலம் இழந்தாற்றான் பொல்லார்கொட்டம் அடங்குங்காண்:
    எல்லோரும் இதையறிய ஸர்வேசன் விதிவகுத்தார்.
15. அந்தவிதி தவறாமல் அநர்த்தம்வந்த தெங்களுக்கு:
    சொந்தவிதி தவறில்லை எங்கள்மனச் சாக்ஷியாணை.
16. மனச்சாக்ஷி யொப்பநாங்கள் மாநிலத்தில் நடந்துகொண்டோம்
    அறம்பாவம் தலைக்கேறி அதர்மம்செய்தார் அழிவதெப்போ?

## HOW GREAT BRITAIN WAS DRAWN INTO TNE GREAT WAR OF 1914.

"The sequence of events illustrate the interdependence of all Great Powers in their relations. Austria threatens Servia; Russia backs Servia: Germany opposes Russia: France backs Russia: Germany and France being opposed, Belgium is in the way; Belgium is attacked, and we are obliged to defend Belgium and to help France and Russia in order to protect ourselves."

### இந்தப் பாரதப்போரில் ஆங்கிலேயர் புகவாய்ந்த தெப்படி?

"மழைவிட்டும் தூவானம் விடவில்லை."

1912-13-ம் வருஷத்தில் பால்கன் நாடுகள் (Balkan States) துருக்கியோடு யுத்தம் செய்ய நேர்ந்தபோது ஐரோப்பாவிலுள்ள பெரிய இராஜ்யங்கள் அதில் புகுந்துகொள்ளாமல் தானே அது ஒருவிதமாய் முடிந்தது. "மழைவிட்டும் தூவானம் விடவில்லை" யென்கிற பழமொழியாக அந்தச் சண்டை யொழிந்தும் யுத்தகாரணமான மனவெரிச்சல் நீங்கவில்லை. ஸ்லாவ்ஸுக்கும் டியூடன்ஸுக்கும் "சண்டைக்காரர்கள் பூர்வோத்தரத்தை" விசாரித் தெழுதிய விடத்தில் காட்டியிருக்கிறோம். இது ஜாதிப்பகையென்று சொன்னாலும், உண்மையில் ஜாதிவேற்றுமையினால் உண்டானதில்லை. தேவாசுரர்கள் சண்டை மாதிரி இது ஸ்வபாவமாக ஏற்பட்டது. ஏனெனில் அவர்களிருவர்களுடைய லக்ஷியங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டு ஒவ்வாததாக விருக்கிற காரணத்தினால் விரோதம் எப்படியும் எப்போதும் சம்பவிக்கக் கூடியதே. இதிஹாஸமாக இங்கே யொரு கதை சொல்கிறேன்:

இந்திரன்—விரோசனன் கதை.

ஆதியிலே பிரம்மாவினுடைய புத்திரராகிய பிராஜபதிக்கு இரண்டு புத்திரர்களிருந்தார்கள்.

அவர்கள் பேர் இந்திரன், விரோசனன். இவர்களிருவரும் மஹாபலிஷ்டர்கள். மிகவும் புத்திசாலிகள். ஒருநாள் இருவரும்கூடி சரஸஸல்லாபமாகப் பேசிக்கொண்டிருக்கையில் "ஆத்மலாபமே ஜன்மஸாபல்யம்" என்று சொல்லியிருக்கிறதே அதன் அர்த்தம் என்னவென்பதைப்பற்றி விவாதம்நேர்ந்தது. "தேஹமெடுத்ததற்குப் பலன் ஆத்மஞானம் பெறுவதே" யென்பது அதற்கு வாச்சியார்த்தம். இங்கே ஆத்மாவென்றால் என்னவென்கிற கேள்வி பிறந்தது. ஏனெனில் ஜன்மமெடுத்ததற்குப் பலனைப் பெறவேண்டுமென்றால் ஆத்மாவை யறியவேண்டும். ஆத்மாவையறிய அதில் லக்ஷியம் வைக்கவேண்டும். ஆகையால் ஆத்மா இன்னதென்று தெரிந்துகொண்டால் அதை அடையவழி தேடலாம். இந்த சந்தேகம் அவர்களுக்குள் தீராமையால் இருவரும் பிதாவாகிய பிரஜாபதியுலகம் சென்று அங்கே யவரிடத்துச் சிஷ்யர்களாயிருந்து ஆத்மா என்றால் இன்னதென்று அறிந்துகொண்டுவரப் போனார்கள். பிரஜாபதி ராஜா இவர்களுடைய மனக்கருத்தையறிந்து இவர்களுக்குண்மையுபதேசம் செய்யப் பக்குவம் போதாதென்று அவர்கள் கேட்ட கேள்விக்கு மட்டும் பதிலுரைத்தார்.

"கங்காளத்தில் பார்."

"ஆத்மாவென்றால் என்ன ? அதைக் காண்கிற விதம் எப்படி ?" என்று கேட்டதற்கு, "அப்பா, கங்காளத்தில் ஜலத்தை நிறப்பி அது அசையாமல் தெளிந்திருக்கையில், கங்காளத்தைப்பார்: தெரிந்துகொள்ளலாம்" என்றார்.

இருவரும் அப்படியே செய்தார்கள். விரோசனன் தன் தேஹம் அதில் பிரதிபிம்பித்து விளங்க "தேஹமே ஆத்மா" வென்று தீர்மானித்துக்கொண்டு "ஸ்வாமி ! தெரிந்துகொண்டேன், வந்தனம்" என்று குருதக்ஷிணை சமர்ப்பித்து வீட்டுக்குப்போக விடை பெற்றுக்கொண்டு வந்துவிட்டான்.

இந்திரனுக்கும் அப்படியே தோன்றினலும் அவன் விவேகபுத்தியால் விசாரித்தபொழுது ஆத்மா "அழியாதது" "ஆனந்தரூபம்" என்று சொல்லியிருக்கிறதே. தேஹம் அழியுந்தன்மையுடைய தாயிற்றே. பிணி, மூப்பு, மரணத்துக் காளாகி துக்கஸாஹரத்தில் கிடந்து அலைகளால் மொதுண்டு தடுமாறும் கட்டையொத்த இந்த ஜடதேஹம் எப்படி ஆத்மாவாகும் ? என்று சந்தேகம் தோன்ற, அதைச் சொல்லி விண்ணப்பித்துக்கொண்டான்.

பிரஜாபதி அவனை 30-வருஷமிருந்து குருகுலவாஸம் செய்தால் அந்த சந்தேகம் தீர பதில் சொல்வதாகச் சொன்னார். அப்படியேயிருந்து தேஹம் ஆத்மாவல்ல வென்று கண்டபின் ஆத்மாவைக் காட்டவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொண்டான்.

"கண்ணாடியிற் பார்"

என்றுசொல்ல, கண்ணாடியிற் சென்று பார்த்து அதன் ஸ்படிகத் தன்மையை யுணர்ந்து அதற்குச் சரியான "சுத்தமனஸ்" ஆத்மாவென்று கருதி அதிலும் சந்தேகம் தோன்ற, பின்னும் 30-வருஷமிருந்து அந்தச் சந்தேகத்தை நிவிருத்தித்துக்கொண்டான்.

இப்படியாக 101-வருஷம் குருகுலவாஸம் செய்து பிராணனே ஆத்மாவென்று நிச்சயித்து வந்தான்.

"தேஹமே ஆத்மா."

Philosophy of Brute Force.

விரோசனன் தேஹமே ஆத்மாவென்றுணர்ந்து தேஹத்தில் லக்ஷியம் வைத்து 'அவ்யக்தம்' வரையிலுள்ள எல்லாவற்றையு முணர்ந்து பிரகிருதியெல்லாம் தன் வசமாகச் செய்துகொண்டவனானன். இதை அவன் தன் பரிவாரங்களுக்குப் போதித்து பிரகிருதிவித்தையில் மிகவும் தேறினவனானன்.

"பிராணனே ஆத்மா:"

Philosophy of Spiritual Force.

இந்திரன் பிராணனே யாத்மாவென்றுணர்ந்து பிராணனில் லக்ஷியம் வைத்து வச்சிராயுதனாய் தேஜோமனஸ் வரையில் எல்லாம் தன் கைவசமாக, ஆஸ்திக புத்திமாறி அஹம்பாவம் முதிர்ந்து நானே தெய்வமென்று அகங்கரித்து இந்த தைஜஸாகங்காரம் எல்லாருக்கும் பற்ற அவனுடைய பரிவாரங்களை அந்த 'தைவிக' வித்தையிலத் தேற்றிவந்தான்.





"தேவர்கள் கர்வபங்கம்"

பகவான் தேவர்களுடைய கர்வத்தை யடக்கத் திருவருள் சுரந்து தாணுரூபம் கொண்டு அடிமுடியில்லாத திவ்ய தேஜோமயாநந்தப் பிழம்பாக தரிசனமளிக்க இந்திரன்' முதலான தேவர்கள் அதையுணரமாட்டாமல் தவித்துப் பின்னர் தேவி திருவருளால் திரிபுர ஸம்ஹாரமான பின் தேவி உணர்த்த உணர்ந்து இந்திரன் கர்வமொழிந்து தேவர்களுக்கு அரசனானன்.

விரோசனன் அசுரர்களுக்கரசனானன்.

இவர்களிருவருக்கும் ஸதா சண்டை. ஏன் ?

லக்ஷியபேதம் கக்ஷியை யுண்டுபண்ணும்.

சகோதரர்களாயிருந்தும் ஒரு குருவினிடத்திற் சிக்ஷைபெற்றும் லக்ஷியம் வேறானபடியால் ஸதா தேவாஸுர யுத்தம் நடந்துகொண்டே தானிருந்தது. ஒருக்கால் தேவர்கள் ஜயிப்பார்கள். தோற்றுப்போன அசுரர்கள் தோல்வியின் காரணத்தையறிந்து அதை நீக்கிக்கொண்டு மறுபடியும் சண்டைக்கு வருவார்கள். சண்டைபோட்டு ஜயிக்கவும் ஜயிப்பார்கள். தோற்றுப்போன தேவர்கள் முறையிட்டுக்கொண்டுபோய் கடவுளிடம் வரப்பிரஸாதம் பெற்றுப் பின்னும் சண்டைக்கு வருவார்கள். இப்படியாக இவர்களுடைய சண்டை நடந்துகொண்டே யிருக்கும்.

"பட்டாக்கத்தியும் கலப்பைக்கொழுவும்."

The Sword vs. The Ploughshare.

பூர்வந் தொட்டு ஸ்லாவஸ் என்கிற சாந்த சுபாவமுடைய "உழுதுண்டுவாழும்" ஜாதியாருக்கும், டியூடன்ஸ் என்கிற முரட்டுசுபாவமுள்ள சண்டை சச்சரவுகள்போட்டுத் தேசிப் பிழைக்கும் "யுத்தவீரர்களான" ஜாதியாருக்கும் எப்போதும் சண்டைதான்.

இது கால, தேச, வர்த்தமான சந்தர்ப்பங்களுக்கேற்பப் பலவிதமாகத் தோற்றினாலும், சண்டை யென்னவோ நித்தியமாயுள்ளதுதான். இரும்பு ஒன்றானலும் பட்டாக்கத்திக்கும் கலப்பைக்கொழுவுக்கும் விரோதம் தான்.

"யத்பாவம் தத்பவதி"

லக்ஷியம் வேறுபட்டால் எல்லாம் வேறுபடும். "என்னுடைய ரம்பைக்கு ஒற்றைக்கண் குருடு" என்று சொன்னவன் கதையாக அவரவர்கள் அந்தரங்கத்தில் எதைக் குறியாக வைத்துப் பூஜிக்கிறார்களோ, அந்த மயமாகிறார்கள். இது என்றும் மாறாத மனோதத்துவம். "யத்பாவம் தத்பவதி"— மனிதன் யாதொன்றை இடைவிடாது அல்லும் பகலும் கனவிலும் நனவிலும் நினைக்கிறானே அவனுக்கு அது "அதுவாகும்" பலன் வித்திக்கிறது.

கர்மதர்மம்.

சண்டையின்மேல் லக்ஷியமுள்ளவனுக்கு சண்டைவந்துகொண்டே யிருக்கும். சாந்தத்தின்மேல் லக்ஷியமுள்ளவனுக்குச் சாந்தம் எப்படியும் வித்திக்கும். அவனைச் சண்டைக்கிழுத்தாலும் தன் சாந்தநிலை குலையாமல்தானே ஸ்ரீராமகிருஷ்ணமூர்த்திகளைப்போல் நிஷ்காமியனாய்ச் சண்டைபோடுவான்.

'பால்கன்' யுத்தத்தின் பிற்பலன்.

Aftermath of the Balkan War.

இது உலக ஸ்வபாவமாக, 1912-ம் வருஷம் நேர்ந்த பால்கன் யுத்தம் ஓய்ந்தும், யுத்த ஸந்தம் நிற்கவில்லை.

ஆஸ்திரியாவில் டியூடன் ஜாதியாருடைய செல்வாக்கு மிகுதி. ஜெர்மனியிலும் ப்ரஷ்யா வைத்ததே தான் சட்டம், இவ்விரு தேசத்தார்களும் நேசக்கட்டுப்பாட்டுக் குள்பட்டவர்கள்.

அப்படியாக ருஷியா ஸ்லாவ்ஸ் இராஜ்ஜியமாதலால், அவர்கள் ஸ்லாவ்ஸ் நாடுகளுக்குத்

துணைசெய்யக் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுது இந்தச் சண்டையாரம்பமான விதத்தைச் சொல்லுவோம்:—

### "ஸிராஜிவோ கொலை ஸம்பவம்"

### The "Serajevo tragedy"

(1) ஸிராஜிவோவில் ஆஸ்திரியா-ஹங்கேரி சக்ரவர்த்தியின் இளவரசரும் அவருடைய பத்னியாரும் 1914ஆ ஜூன்மீ 28ஆ ஒரு மாணவன் கையால்கொலையுண்டுமாண்டார்கள்.

ஸிராஜிவோ (Serajevo) என்பது 1909-ல் ஆஸ்திரியாகட்டிக்கொண்ட 'போஸ்னியா' நாட்டில் அதேபெருமையுடைய ஒரு மாஹாணத்தின் தலைநகர். அந்த மாகாணம் ஆஸ்திரியாவினால் ஜயித்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டதாயிருந்தும் அங்கேயுள்ள குடிகள் ஜாதியிலும் மதத்திலும் மனப்போக்கிலும் ஸேர்வியாவிலுள்ள ஜனங்களை யொத்தவர்கள். அதாவது இருவரும் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவர்கள். போஸ்னியா (Bosnia) ஸெர்வியாவுக்குப் பக்கத்திலுள்ள நாடு. அதிலும் 'ஸிராஜிவோ' (ஆஸ்திரியா-ஹங்கேரிபடம் பார்க்க) எல்லைப்புறத்திலிருக்கிறது.

### கரூர்நாமா.

### The Ultimatum.

(2) ஜூலை 23உயில் ஆஸ்திரியா கவர்ன்மெண்டார் ஸெர்வியா கவர்ன்மெண்டுக்கு ஒரு கரூர்நாமா எழுதி அதற்கு 48-மணி நேரத்துக்குள் சரியான பதில் அனுப்பவேண்டுமென்றும் இல்லாவிட்டால் சண்டை தொடுப்போமென்றும் எழுதியிருந்தார்கள். அதில் ஸெர்வியா கவர்ன்மெண்டார் ஆஸ்திரியா ராஜாங்கத்துக்குள்பட்ட விடங்களில் கலகம் உண்டு பண்ணுவதையும் ஸிராஜிவோவில் நடந்த கொலைக்கு அவர்கள் உடந்தையாக வில்லாவிட்டாலும் அக்கொலைபாதகம் செய்தவர்களை அவர்கள் தண்டனைக்குள்ளாகாதபடி காத்துவருகிறதாகவும் குற்றஞ்சாட்டி அவர்களுடைய ஸ்வதந்தரத்துக்கு ஒவ்வாத சில நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள்.

### "ருஷியா பரிந்துகொண்டு வரல்."

(3) ஜூலைமீ 24உ ருஷியா கவர்ன்மெண்டார் ஆஸ்திரியா ஸெர்வியாவைத் தாக்கினால் அது அந்தேசத்து மூலமாய் ருஷியாவைத் தாக்கினதாகக் கருதப்படுமென்றும், ஸெர்வியா ராஜ்பத்தின் ஸ்வதந்தரத்துக்கு இம்மியும் கேடுவாராதபடி காப்பது அதன் கடமையாக விருக்கிறதென்றும் தெரிவித்தார்கள். ஸெர்வியாவை அடக்கிவிட்டால் பால்கன்ஸ் நாட்டில் (Balkans) ஆஸ்திரியாவின் செல்வாக்குப் பெரிதாய்விடுமென்றும் அதற்கு ருஷியா ஒருக்காலும் சம்மதிக்க முடியாதென்றும் ஸ்பஷ்டமாய் விளங்கத் தெரிவித்தார்கள்.

### "வால்போச்சு கத்திவந்தது டம்டம்"

(4) அதே தினத்தில் (ஜூலைமீ 26-ல்) ரோமாபுரியிலுள்ள பிரிடிஷ்தூதர் ஆஸ்திரியா 'ஸலோனிகா' ரெயில்வேயைப் பிடித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறதாகத் தெரிவித்தார். இந்த ரெயில்வே மார்க்கமாய் ஆஸ்திரியா, ஜெர்மெனியிலிருந்து ஸெர்வியா மூலமாக (Ægean Sea) இஜியன் கடலுக்குப் போக வழியேற்படுவதாயிருப்பதால் இதைப்பிடித்துக்கொள்ள வேண்டுமென்று ஜெர்மனிக்கு வெகு நாளாய் அதன்மேல் நோக்கமிருந்து வந்தது. "வால்போச்சு கத்திவந்தது டம்டம்" என்ற குரங்கின் கதையாக இப்பொழுது ஸிராஜிவோவில் அகஸ்மாத்தாக நடந்த குற்றத்தை ஸேர்வியா தலையில் போட்டுவிட்டு அது சாக்காக அந்த ரயில் மார்க்கத்தை வசப்படுத்திக்கொள்ள எண்ணினார்கள்.

### "எல்லாம் சரி! எட்டிநின்று பேசு!"

ஜூலைமீ 25-தேதியில் ஸேர்வியா கவர்ன்மெண்டார் ஆஸ்திரியா கவர்மெண்டாருடைய 'கரூர்நாமா'வுக்கு பதில்எழுதினார்கள். அதிலே அவர்கள் குறிப்பிட்டிருந்த 10-அம்சங்களில் அவர்களுடைய ஸ்வதந்தரத்துக்கு ஒவ்வாததான இரண்டம்சங்களைத் தவிர மற்றவைக்



கெல்லாம் சரியான ஜவாபு சொல்லியிருந்தார்கள். அந்த இரண்டு அம்சத்திலும்கூட அவர்களுடைய ராஜயாதிகாரத்தின் ஸ்வதந்தரத்துக்குக் குறைவுவராதபடி ஆஸ்திரியாவுக்கு வேண்டிய உதவி செய்வதாக எழுதியிருந்தார்கள். "எல்லாம்சரி! எட்டி நின்று பேசு!" என்கிற கதையாக அவர்கள் பதில் அனுப்பியிருந்தார்கள்.

### "சண்டைக்காரனுக்கு சறுக்கிவிழுந்தது குற்றம்"

ஜூலை மாஸம் 26-ந்தேதியில் நார்வேக்குப் பக்கத்தில் ஜாவெடுத்துக்கொண்டு கடல்யாத்திரை செய்துகொண்டிருந்த ஜெர்மன் சக்ரவர்த்தி திடீரென்று பெர்லினுக்குத் திரும்பி வந்து இந்த வியவகாரங்களை யெடுத்து தானே மேற் போட்டுக் கொண்டவரானார். அவர் ருஷியாதலையில் பழிபோட்டு அவர்கள் சைன்யங்களைக் கூட்டி யுத்தத்துக்கு முஸ்தீபு செய்ததால் தானும் யுத்தம் தொடுக்க வேண்டியதாயிற்றென்று சொன்னார். ஆனால் இது உண்மையில்லை. ஏனெனில் ஜூலைமாசம் 26-ம் தேதி ஆஸ்திரியாவின் தலைநகராகிய வியன்னாவிலுள்ள ஜெர்மனியின் தூதர் ஆஸ்திரியா, ஸெர்வியாவுக்குப் புத்திவர எச்சரித்து விட்டு நின்று விடலாமென்றும், ஆதலால் ருஷியர் தலையிட்டுக்கொள்ள நிமித்தமிரா தென்றும் சொன்னார். (பார்லிமெண்டு சபையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரங்களில் (White Paper No. 32.) 32-வது பத்திரம் இதற்கு ஆதாரம். "சண்டைக்காரனுக்கு சறுக்கி விழுந்தது குற்றம்" என்கிறபடி சண்டைபோடத் தயாரானால் சண்டைக்குச் சாக்குத் தானா அகப்படாது?

### சண்டைக்கிழுத்தாலும் ஸாஹஸம் வேண்டும்!

ஜூலை மாஸம் 27ந்-தேதியிலும் ஜெர்மனியின் மந்திரி (ஸ்டேட் செக்ரிடெரி) சண்டைக்கு ஆஸ்பதம் இராதென்றும் ருஷியா சண்டைக்கு வர நிமித்தமிராதென்றும் அவர்கள் சைனியமுஸ்தீபு செய்வது உஷாருக்காக மட்டும் கவனிக்கப்படத்தக்கதென்றும் சொன்னார். (White Paper No. 43.) சண்டைக்கிழுத்தாலும் ஸாஹஸம் வேண்டுமென்பது உண்மையாயிருந்தது.

### "சண்டைக்காரனிடம் ஸமாதானம்பலிக்காது."

ஸெர்வியா அனுப்பிய பதிலில் ஸிராஜிவோவில் நடந்த குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்களாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப்படுமென்றும் அதில் ஆஸ்திரியாவின் உத்யோகஸ்தர்கள் சேர்ந்திருப்பது ஸெர்வியாவின் ஸ்வதந்தரத்துக்கு ஊனம் வருமென்றும் (International Law) ஸ்வாதீன இராஜங்கத்தார்கள் அனுசரிக்கும் பொது தர்மப்படி கமிஷன் ஏற்பட்டு விசாரணை நடக்குமென்றும் அதன்முன் குற்றவாளிகளென்று ஏற்பட்டவர்களை சட்டப்படி விசாரித்துத் தண்டிப்பதாகவும் சொல்லியிருந்தார்கள். இது திருப்திகாமாயில்லை யென்று உடனே (ஜூலை மாஸம் 25-ந்தேதி யன்றைக்கே ஆஸ்திரியா ஸெர்வியாவிலுள்ள தங்கள் தூதரை அத்தேசத்தை விட்டு வந்துவிடும்படி உத்தரவு செய்தார்கள் ஜெர்மனியின் முதல் மந்திரியாகிய 'இம்பீரியல் சான்ஸெலர்' ஆஸ்திரியா ஸெர்வியாவுக்கு அனுப்பிய கரூர்நாமா முற்றும் ஒழுங்கானதாயில்லையென்று ஒப்புக்கொண்டார் (White Paper No. 18). அதோடு அவர் அன்றையதினம்(25ந்-தேதி) பிரிட்டிஷ் தூதர் (Sir E. Goschen) ஸர். இ. கோஷனோடு பேசுகையில் ஆஸ்திரியா 'ஸெர்வியாவை' இராணுவசிக்ஷை செய்யப்போகிறதாக ஒப்புக்கொண்டார். ஆனால் ஆஸ்திரியா அனுப்பிய கரூர்நாமாவின் உள்ளடக்கம் தனக்குத் தெரியாதென்று சொன்னார். ஆனால் வியன்னாவிலுள்ள ஜெர்மனிதூதர் ஆஸ்திரியா அனுப்பிய கரூர்நாமாவின் அடக்கம் இன்னதென்று தெரியுமென்றும் அதை அவர் தானே, ஸெர்வியாவுக்கு அது அனுப்பப்படுமுன் ஜெர்மன் சக்ரவர்த்திக்கு தந்தி மூலமாயனுப்பியதாகவும் ஒப்புக்கொண்டாரென்று வியன்னாவிலுள்ள பிரிடிஷ் தூதர் (Sir M. de Bunsen) ஸர் எம்.

டி. பன்ஸன் ஜுலை மாஸம் 30-ந் தேதியில் லண்டனுக்குத் தந்தி யனுப்பியிருக்கிறார். (WhitePaper No.95). "சண்டைக்காரனிடம் ஸமாதானம் பலிக்காது" என்பது வாஸ்தவமாயிற்று.

### போர்த்தீ மூட்டல்.
### Beginning of the Conflagration.

ஜுலை மாஸம் 28-ந்தேதி ஆஸ்திரியா ஸெர்வியாவோடு சண்டை தொடுக்கலாயிற்று. இடையில் பிரிட்டனும் இத்தலியும், ருஷியாவும்கூட இராஜதந்திர சம்பாஷணையினால் சண்டை யுண்டாகாதபடி தடுக்கப் பார்த்தார்கள். ஜுலை மாஸம் 27-ந்தேதியன்று பெர்லினிலுள்ள பிரிடிஷ்தூதர் ஜெர்மனியின் அந்நியதேசகாரிய மந்திரியோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது பிரிடிஷ் அந்யதேச காரிய மந்திரியாகிய ஸர் எட்வர்ட்க்ரே(Sir E. Grey) அவர்கள் சொல்லிய பிரேரேபணையை ஏற்றுக் கொள்ளவில்லை. பிரிட்டன், இத்தலி, ப்ரான்ஸ், ஜெர்மனி இந்த நான்கு ராஜாங்கத்தாரும் சேர்ந்து ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்குமுள்ள வித்யாஸத்தை சண்டைச்சச்சரவுக்கிடமில்லாமல் மத்யஸ்தமாயிருந்து தீர்த்துவிடலாமென்றார். இதற்கு ஜெர்மனியின் அந்யமந்திரி சம்மதிக்கவில்லை, இது "ஆர்பிட்ரேஷன் கோர்ட்டாகும்" : ஆஸ்திரியா, ருஷியா இவர்களுடைய சம்மதியின்றி இந்தக் காரியம் முடியாது என்று சொல்லிவிட்டார். (White Paper No. 43.)

லண்டனிலுள்ள ஜெர்மனியின் தூதர் நாலு தேசத்தாரும் சேர்ந்து மத்யஸ்தம் செய்யலாமென்பதை நல்ல யோசனையாக ஒப்புக்கொண்டார். (White Paper No. 46.) ஆனால் ஜுலை மாஸம் 28-ந்தேதி பெர்லினிலுள்ள இம்பீரியல்சான்ஸெலர் எப்படியாவது சமாதானமாகப் போகவேண்டுமென்று அவர் மிக்க விரும்புவதாகமட்டும் சொல்லி, மத்யஸ்தம் கூடவே கூடாதென்று தள்ளிவிட்டார்.

ரோமாபுரியிலுள்ள பிரிடிஷ் தூதர் ஜெர்மனி மந்திரிகள் சொல்லும் வார்த்தைகளிலுள்ள பேதத்தை யெடுத்துக்காட்டி பெர்லின் நகரிலுள்ளவர்கள் சொல்வதுதான் உண்மையென்று வற்புறுத்தினார். (White Paper No. 80). ஜுலை மீ 28-ந்தேதியில் தானே ருஷியா கவர்ன்மெண்டார் பிரிடிஷ் மந்திரி பிரேரேபித்த மத்தியஸ்த ஆலோசனையை ஒப்புக்கொள்ள தமக்கு இஷ்டமென்று தெரிவித்தார்கள். (White Paper No. 53.)

### "பூசினிக்காய் திருடின கள்ளன் கதை"

பிரிடிஷ் ராஜாங்கத்தில் அந்யதேச காரியங்களைப் பார்க்கும் மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே அவர்கள் ஆஸ்திரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் சண்டையானால் அது "காட்டுத்தீபோல் எங்கும் பற்றிக்கொள்ளுமே" யென்று அஞ்சினதையறிந்து ஜெர்மனியும் ஆஸ்திரியாவும், அவர் பயப்படவேண்டாமென்றும் ஸெர்வியா நாட்டைப்பிடித்துக் கொள்வதில்லை யென்று வாக்குறுதி கொடுத்தால் ருஷியா சம்மதித்துத் திருப்தியாய் விடுமென்றும் உறுதிவார்த்தை கொடுத்தார்கள். இது பூசினிக்காய் திருடவந்து, தவறிவிழுந்துவிட்ட கள்ளன் தான் ஸ்வர்க்க லோகத்திலிருந்து குதித்து விட்டதாகவும் 'பூலோகம் இது தானா? மானிடவர் நீங்கள் தானா?' என்று கேட்டு ஆசீர்வாதம் செய்த கதையொத்திருந்தது. ஆனால் ருஷியாவோ ஸெர்வியா நாட்டை மட்டுமல்ல, ஸெர்வியா கவர்ன்மெண்டின் ஸ்வதந்தரத்தையும் தொடக்கூடாதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிவித்திருந்தார்கள். ஆஸ்திரியா அனுப்பிய கரூர்நாமாவில் (Ultimatum) ஸெர்வியா கவர்ன்மெண்டின் ஸ்வதந்திரத்துக்குப் பங்கம் வரும்படி யெழுதியிருந்தது. அது கூடாதென்று ருஷியா ஒரே தீர்மானமாகக் கூறியிருந்தது.

### "கள்ளனுக்குள் கள்ளன்."

ஜுலை மாஸம் 30 தேதி வரையில் ருஷியாவின் அந்யமந்திரி (Foreign Minister) ஸெர்வியா கவர்ன்மெண்டின் ஸ்வதந்தரத்துக்குப் பங்கம் விளைப்பதாயுள்ள பாகத்தை கரூர்நாமாவிலிருந்து களைந்துவிட்டால் ருஷியா





சண்டைக்கு முஸ்தீபு செய்வதை உடனே நிறுத்தி விடுவதாகத் தெரிவித்தார்.

### "நொண்டிக் குதிரைக்கு சறுக்கி விழுந்தது சாக்கு."

ஜுலை மாஸம் 28-ந் தேதி ஆஸ்திரியா, [illegible] சண்டை [illegible] என்று சொன்னோமே.

ஜுலை மாஸம் 29-ந்தேதியில் பேர்லினிலுள்ள ஜெர்மன் மந்திரி(செக்ரிடெரி) [illegible] தூதரிடம் [illegible]யில் பிரிடிஷார் மத்யஸ்தம் செய்யவேணுமென்று நல்ல எண்ணத்தோடு செய்த முயற்சி சமயத்தில் சண்டையை விளைத்து விட்டதென்று சைத்தியபாவனை காட்டி ("Very depressed") ச் சொன்னார். ருஷியா சண்டைக்கு முஸ்தீபு செய்து வருகிறதாகவும் பிரான்ஸ் தேசத்திலும் முஸ்தீபு நடந்து வருகிறதாகவும் சொன்னார். அதற்கு ப்ரெஞ்சு தூதர் (Ambassador) "ஜெர்மனியார் செய்த காரியத்தை ப்ரான்ஸும் செய்கிறது: ரஜாவின்பேரில் போன உத்யோகஸ்தர்களைத் திரும்பிவர உத்தரவிட்டிருக்கிறார்கள்" என்று நன்றாக பதில் சொன்னார். ஜெர்மனி கவர்ன்மெண்டு அப்படியொன்றும் செய்யவில்லை யென்று ஜெர்மன் மந்திரி (செக்ரிடெரி) சொன்னார். ஆனால் பேர்லினிலுள்ள பிரிடிஷ் தூதரான ஸர் எட்வர்ட் கோஷன் (Sir E. Goschen) "அது மெய்தான்" என்றார் ("It is true") (White Paper No. 76). உண்மையில் ஜுலை மாஸம் 28-ந் தேதிக்குப் பலநாள் முந்தியே ஜெர்மன் ரிஸர்வ் சைனியத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் சைனியத்தைச் சேரவேண்டுமென்று உத்தரவு அனுப்பியிருந்தார்கள். ஆர்ஜண்டைன், ஜோஹன்னிஸ்பர்க் போன்ற தொலைதூரத்தில் (ஆபிரிகாவில்) உள்ளவர்களுக்குக்கூட உத்தரவு போயிற்றென்று பிந்தி ருஜு அகப்பட்டது. இப்படியாக ஜுலை மாஸம் 23 ந்தேதி முதல் 30-ந்தேதி வரையிலுள்ள எட்டு நாளைய சமாச்சாரம் அஷ்டமத்துச்சனிபோல் நம்மைச் சண்டை சச்சரவுக்கு மத்தியில் இழுத்துக்கொண்டுபோய் விட்டுவிட்டது.

### "காலைச்சுற்றின பாம்பு."

"காலைச்சுற்றினபாம்பு கடித்தாலன்றி விடாது" என்பதாக பழமொழியொன்றுண்டு. அது [illegible] கர்மம் ஒன்றைச் செய்துவிட்டால் (வித்துப்போட்டால்) அது முளைத்துத் துளிர்த்துத் தழைக்குப் பூத்துக்காய்த்துப் பலனைக் கொடுத்தே தீரும். உள்ளத்தில் நினைத்தது நிறைவேறியே தீரும். சங்கல்பம் ஒருபோதும் வீண்போகாது. சண்டைக்குத் தயாராய் ஆயத்தம் செய்துகொண்டு வந்தார்கள்: அது சண்டையிலேயே வந்து முடிந்தது. ஆயினும் இன்னும் ஒருவாரத்துச் சமாசாரம் சொல்லவேண்டியிருக்கிறது. அதையும் சொல்லித் தீர்த்துவிடுவோம். இதற்கிடையில் ஒரு சின்ன சமாசாரம் இருக்கிறது. அது வேடிக்கையாக விருப்பதால் அதையும் சொல்லிவிடுவோம். பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்த சண்டையில் தலையிட்டுக்கொள்ள மாட்டார்களென்று நம்பியிருந்ததாகவும் அவர்கள் தலையிட்டுக்கொண்டது "நம்பிக்கைத் துரோகம்" என்றும் "படுமோசம்" என்றும் ஜெர்மன் சக்ரவர்த்திமுதல் எல்லாரும் சொல்லித் தூற்றுகிறார்கள். இதன் உண்மை யெப்படியென்று விசாரிப்போம்.

ருஷியா கவர்ன்மெண்டார்கூட "பிரிடிஷ் கவர்ன்மெண்டார் முனைந்து பிரயத்தனம் செய்திருந்தால் இந்த சண்டையைத் தடுத்திருக்கலா"மென்கிறார்கள். இது சாத்தியமல்லவென்று பிரிடிஷ் அந்ய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரேக்குத் தெரியும். ஆகையால் அவர் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

### "அரசமரத்தைப்பிடித்தசனி பிள்ளையாரையும் கூடப் பிடித்தது."

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஒரு கக்ஷியையும் சேரவில்லை. சேருவதாக வாக்குத் தரவுமில்லை. ஏனெனில் பார்லிமெண்டு சபையினுடைய சம்மதியின்றி வாக்குக் கொடுக்கமுடி

யாது. கொடுத்தாலும் அது செல்லாது. பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஒரு கக்ஷியிலும் சேராமல் நடுவுநிலைமையாகவிருந்து வந்தால் சண்டைக்காரர்களை ராசிசெய்து வைக்கலாமென்று பார்த்தார்கள்.

இப்படியவர்கள் ஒன்றிலும் ஒட்டாமல் தனியாக நின்றது புத்தியோ, அபுத்தமோ, அதைப் பற்றி இப்பொழுது நாமொன்றும் தீர்மானமாகச் சொல்லமுடியாது. சரித்திரக்காரர்தான் அதைத் தீர்மானிக்கவேண்டும். ஆனால் அவர்கள் ஒரு கக்ஷியையும் சேராமல் ஒன்றிலும் ஒட்டாமலிருந்தார்கள் என்பது மட்டும் வாஸ்தவம்: அதில் சந்தேகம் ஒன்றுமில்லை.

“திருடனுக்குத்தோன்றும் திருட்டுப்புத்தி.”

“திருடனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி” யென்கிறபழமொழிப்படி மனதில் வஞ்சகம் நினைத்தவர்களுக்கு வஞ்சகபுத்தியே தோன்றும். ப்ரஷியன் கவர்ன்மெண்டாருடைய வஞ்சகத்துக்கு அத்தாக்ஷியாக அந்த தேசத்தை முன்னுக்குக் கொண்டுவந்த மஹா சாமர்த்தியரான ப்ரெடரிக் (Frederick the Great) கைப்பட எழுதிய பத்திரம் ஒன்றிருக்கிறது. அவருடைய உபதேச வாக்குப்படி கள்ளத்தனம், மித்திரபேதம், ஒருவரைச் சேர்ந்து ஒருவரைக் கெடுத்தலாகிய ‘சந்திவிக்ரகம்’ என்கிற மூன்று தந்திரங்களும் ப்ரஷியன் கவர்ன்மெண்டின் மூலக்கொள்கைகளாகவிருக்கவேண்டுமென்று எழுதிவைத்திருக்கிறார். கொள்ளையிலிருந்து சண்டைக்கும், சண்டையிலிருந்து ராஜ்பத்திற்கும், ராஜ்பத்திலிருந்து ராஜ்யதுரைத்தனத்துக்குமாக கீர்த்திபெற்ற ஜாதியார், கீர்த்திபெற்ற காலத்தும் அவர்கள் உள்ளத்துணர்வுக்கு மாறாக நடக்கமுடியுமா? புலியைப் போர்வையிட்டு மூடினாலும் அதன் ஸ்வபாவம் மாறுமா? இப்பொழுது ஜெர்மன் கவர்ன்மெண்டார் (அதாவது ப்ரஷியன் கவர்ன்மெண்டுத் தலைவர்கள்) செய்த சூழ்ச்சி பிறருக்கு எப்படித் தோன்றினும் அவருடைய மூதாதையிட்ட சட்டத்துக்கு விரோதமின்றி யிருக்கிறது. ஏமாந்துபோனபின் “ஏமாற்றிவிட்டார்கள்” என்று சொல்வதில் காரியம் ஒன்றுமில்லை. ஆனால் அவர்களுடைய சூழ்ச்சியின்னதென்று தெரியவேண்டி அதைச் சொல்கிறோம்.

“கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளிப்படும்.”

ஜெர்மன சக்ரவர்த்தியும் அவருடைய மந்திரிகளும் ப்ரெடரிக் உபதேசப்படி நன்றாக நடந்துகொண்டார்கள். உலகம் அதை ஒப்புமோ தப்பென்று செப்புமோ அதைப்பற்றியவர்கள் உண்மையில் அதிக கவலைகொண்டவர்களாகத் தோற்றவில்லை. “கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் வெளியாகும்” என்பது வாஸ்தவம் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் கெட்டிக்காரன் உண்மையில் “கெட்டிக்காரனானால்” “எட்டுநாளில்” உலகைத் தலைகீழாக நிற்கச்செய்து விடலாம் என்பது அவர்கள் துணிபு.

“ப்ரெடரிக் சாஸநமெழுதிவைத்த போதனைகள்.”

ப்ரெடரிக் எழுதிவைத்த சாஸநத்தின் முதற் கொள்கைப்படி ஜெர்மனி சண்டைக்குத் தயாராக ஒவ்வொரு ஏற்பாடும் செய்து வருகையில் அதை வெளியிலும் யாருக்கும் தெரியாமல் ஒளித்து சரளஸல்லாப வார்த்தைகளாலும் விருந்து வேடிக்கை யுறவுகொண்டாடல் நேசம் பாராட்டல் முதலிய வியாஜங்களாலும் எதிரிகள் சமுசயிக்காதபடி மூடிவைத்துக் காப்பாற்றி வந்தார்கள். ப்ரெடரிக் எழுதிவைத்த சாஸனத்தில் கண்ட துரைத்தன மூலக் கொள்கைகளில் முதலாவதான பிரதம நிபந்தனையை நன்றாகச்செய்து முடித்துவிட்டார்கள். அது இது:—

“பிரதமபாடம்.”

(1) “Constant attention must be paid to hiding as far as possible one's plans and ambitions. Secrecy is an indispensible virtue in politics as well as in the art of war.”

இதன்பொருள்:—ஒருவர் தம் மனோபீஷ்டத்தையும் அதை நிறைவேற்றச்செய்யும் ஏற்





பாடுகளையும் ஒளிமறைவாக வைத்திருக்கவேண்டி தன் கவனத்தைச் சலியாது செலுத்தல் வேண்டும். இராஜதந்திரத்திலும் யுத்தத்திலும் இரகஸியம் (அதாவது கள்ளத்தனம்) இன்றியமையாத நற்சாதனமாயிருக்கிறது.

ப்ரஷ்யா கவர்ன்மெண்டாருக்கு அவர்கள் தலையெடுத்ததுமுதல் இதுதான் பிரதம பாடம். இந்தப்பாடம் படித்துத் தேறினால்தான் அடுத்தபடியிலுள்ள இரண்டாம் பாடத்தைக் கையாட அவர்களால் முடியும். இதில் இப்பொழுதுள்ள ஜெர்மன் சக்ரவர்த்தி கைதேர்ந்தவரென்று காட்டியிருக்கிறார்.

“இரண்டாம் பாடம்.”

ப்ரெடரிக் சாஸநத்திலுள்ள இரண்டாவது “மூதுரை” என்னவெனில், மித்திரபேதம். அதையும் அவர் சொல்லியபடி சொல்லித் தமிழ்ப்படுத்திக் காட்டுவோம்.

(2) If possible the Powers of Europe should be made envious and be set against one another in order to give occasion for a coup when opportunty offers.

கூடுமானால் ஐரோப்பாவிலுள்ள இராஜாங்கத்தார்களெல்லாம் ஒருவர்மேல் ஒருவர் பொறாமைப்படும்படி மித்திரபேதம் செய்து ஒருவருக்கொருவர் ஆகாதபடி கலகம் விதைத்து வரவேண்டும். சமயம் நேர்ந்தபோது திடீரென்று ஒரு யுக்திசெய்து அதைப் பிறரறியுமுன் “நினைத்தது முடிக்குமாற்றலால்” காரிய சாத்தியமாகச் செய்து முடித்துக்கொண்டு விடல்வேண்டும்.

இதிலும் அவர்கள் ப்ரெடரிக் படிப்பினைப் படியே நடந்துகொண்டார்கள். ஆனால் அவர்களொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது. பெல்ஜியம்தேசத்து ஆல்பர்ட் அரசனைக்கொண்டு அவர்கள் சதியோசனை பலிக்காதபடி செய்துவிட்டது. இதிலேதான் வில்லங்கமெல்லாம் வந்து சேர்ந்துகொண்டது. யுத்தம் தொடுத்த மூன்றும்நாள் அதாவது ஆஸ்திரியா ஸெர்வியாவோடு யுத்தம்தொடுத்த 8-ம் நாள் அவர்கள் யுத்தம் தொடுத்த செய்தி கூடத் தெரியாமல் பாரிஸ்நகரைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து மேல் ஏற்பாடுசெய்யத் தீர்மானித்திருந்தார்கள். “சொக்கா, சொக்கா சோறுண்டோ? கோழியன்வந்து கெடுத்தாண்டோ!” என்கிற கதையாக பெல்ஜியம்தேசத்து அரசரும் துருப்புகளும் எதிர்பாராத பராக்கிரம வீரியம்காட்டி அவர்கள் செய்த சூழ்வினை பலிக்காதுபோகச் செய்துவிட்டார்கள்.

“மூன்றும் பாடம்.”

மூன்றாவது மூதுரை யென்னவென்றால் “சந்திவிக்ரகம்” என்னும் அடுத்துக்கெடுக்கும் தந்திரம். இதை யனுசரித்து பெல்ஜியம் தேசத்தூடே சைனியங்கள்போக இடங்கொடுத்தால் அதனாலுண்டாகும் கஷ்டநஷ்டங்களுக்கெல்லாம் பாத்தியப் பட்டவர்களாய் சண்டைமுடிந்ததும் அதற்குவேண்டிய பிரதி பலன் செய்வதாகச் சொன்னார்கள். அதற்கு பெல்ஜியம் அரசராகிய ஆல்பர்ட் தூங்கின பேர்வழியாகவின்றி “கள்ளனுக்குள்குள்ளன்” என்கிறபடி இவர்களுடைய தந்திரம்பலிக்காது போக இவர்களினும் இரகஸியமாக 1912-௵ நவம்பர்௴ முதல் அதிரகஸியமாகவே வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் முன்யோசனையோடு “வருமுன்காப்போன்” கதையாகச் செய்து வைத்திருந்தார். ஜெர்மானியர் இதிலும் ஏமாந்துபோனார்கள். பிறரை ஏமாற்ற நினைத்துத் தான் ஏமாந்துபோன அவமானமும் ஆத்திரமும் பொறுக்காமல் சண்டையில் சம்பந்தப்படாத பெல்ஜியம் தேசத்தைத்தாக்கி நாடு நகரங்களையெல்லாம் பாழாக்கி ஜனங்களையும் ஹிம்ஸித்து வருகிறார்கள். இதற்குக் கூலி பகவான்தான் கொடுக்கவேண்டும். அவரும் பாத்திரமறிந்து நல்ல சமயத்தில் படியளப்பார். ப்ரெடரிக் சாஸனத்தின் மூன்றாவது மூதுரையிது:—

(3) It is one of the first Political principles to endeavour to become an ally of that one of

one's neighbours who may become most dangerous to one's State. For this reason we have an alliance with Russia and then we have our back free as long as it lasts.

இதன்பொருள்:—இராஜ தந்திரத்தில் பிரதானமாயுள்ள மூலக் கொள்கைகளில் முக்கியமான தொன்றுண்டு. அது என்னவெனில், அயலார்களில் யாரால் தனது இராஜ்யத்துக்கு அபாயம் விளையக்கூடுமோ அவ்விராஜ்யத்தோடு நேசமாயிருக்கப் பார்க்கவேண்டும். இம்முகாந்திரம்கொண்டே ருஷியாவோடு நேசக்கட்டுப்பாடு செய்துகொண்டிருக்கிறோம். அது உள்ளவரையில் நம்மைப் பின்புறத்தில் ஒருவரும் தாக்கார்கள்.

"தந்திரம் பலிக்காமற்போனது."

இது ப்ரெடரிக் காலத்தில் செய்த தந்திரம். ருஷியர்கள் விழித்துக்கொண்டு ப்ரான்ஸோடு நேசக்கட்டுப்பாடு செய்துகொண்டு விட்டார்கள். இப்பொழுது ஆஸ்திரியா இந்த தந்திரத்தில் அகப்பட்டுக்கொண்டு திக்குமுக்காடித் தவித்துக்கொண்டிருக்கிறது. ருஷியாவைக் கூடிக் கெடுக்கப்பார்த்தார்கள். அவர்கள் ஜாக்ரதையாக விருந்ததால் முடியவில்லை. ஆயினும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி 30-வருஷகாலத்தில் அவர்கள்தேசக் கட்டுப்பாட்டை மிகவும் பலப்படுத்திக்கொண்டு கப்பல் சைனியத்தையும் பலப்படுத்திக் கொண்டு விட்டார்கள். இப்பொழுது ஐரோப்பா கண்டத்தில் இங்கிலாந்தைவிட்டு, ஜெர்மனிக்கு நிகரான கப்பற்படை வலுத்த தேசம் வேறில்லை யென்கலாம்.

"கையால்வல்லவன் வாயால்வல்லவன்."

இப்படி மூவாற்றாலும் தாம் நினைத்த காரியத்தை முடித்துக்கொள்வதொன்றே பெரிதாகக் கருதி நடந்துகொண்டு வந்தவர்கள் "கையால் வல்லவன் வாயால்வல்லன் சண்டையாக" காரியத்தின்மேலே கண்ணாயிருந்து பழிபாவம் என்பதையுணராமல் தானே பிறர்மேல் பழிபாவம் சுமத்திப்பேசுகிறார்கள். இவர்கள் செய்த இரகஸ்ய ஏற்பாட்டில் இங்கிலாந்தோடு தற்காலம்சண்டை செய்வதாக உத்தேசமில்லைபோலும்: எப்படியும் அவர்களைச் சண்டைக்குவராதபடி ஒதுங்கிவைக்கத் தந்திரமாய் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். பிரிடிஷ் ராஜ்யத்தில் ஐர்லாந்துக்கு 'ஸ்வயஆக்ஷி' (Self-Government) கொடுக்கும்நிமித்தம் செய்த சட்டத்தினால் கக்ஷி பலப்பட்டு தேசம் இரண்டுபட்டு "ஸிவில் யுத்தம்" நடக்கும் தருவாயிலிருந்தது.

ஐர்லாந்தில் இருதாத்தாரும் (Ulstermen and Nationalists) ஆயுதபாணிகளாய் 'உருவின கத்தியும் கையுமாய்' நின்றுகொண்டிருந்தார்கள், மாட்சிமைதங்கிய ஜியார்ஜ் அரசர் கலகம்முற்றி ஸிவில் யுத்தமாகமுடியும் என்று அஞ்சி இருகக்ஷியாரையுமழைத்து ஒருவழிக்குவரவேண்டுமென்று கலந்துபேச அரண்மனையில்தானே ஒரு 'கான்பரென்ஸ்' நடக்க ஏற்பாடு செய்தார். செய்தும் பலிக்கவில்லை.

பசப்பு வார்த்தையும் கசப்புக்காரியமும்,

இப்படி வீடு இரண்டுபட்டிருக்க இங்கிலாந்து அந்நியதேசச் சண்டைகளில் தலையிட்டுக்கொள்ளச் சித்தமாயிராதென்றுணர்ந்து அவர்களோடு ஒருவித ஏற்பாடு செய்துகொண்டு அவர்களை யொதுக்கிவைக்கப் பார்த்தார்கள். அவர்கள் தங்கள் கௌரவத்துக்கு ஹானிவராமல் ஒதுங்கியிருப்பது சாத்தியமாகவில்லை. கெட்டிக்காரன் புளுகுக்கு எட்டு நாள் வாழ்வுதான் உண்டு என்று அறிந்துணர்ந்த ஜெர்மானியர் காலத்தைக் கைநழுவவிடக்கூடாதென்று பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்குப் பசப்பு வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே தங்கள் காரியத்தை நடத்தினார்கள்.

"கண்ணில் மண்ணைத் தூவப்பார்த்தது."

துரியோதனாதியர் சூது நடத்தியதுபோல் கபடமாய் சத்திரிகள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தங்கள் காரியத்தை முடித்துக் கொள்ளப் பார்த்தார்கள். பெல்ஜியம் தேசத்தாசர் "கள்ளனுக்குள் குள்ளன்" என்கிற வசனம்போல், இவர்களினும் தந்திரவாதியாயிருந்து





இவர்களுடைய சூழ்வினை சூதுகளையெல்லாம் நன்றாயறிந்தவராதலால் அவர் இவர்களுடைய பசப்பு வார்த்தையைக்கேட்டு ஏமாந்து போகாமல் பிரிடிஷார் உதவியைக் கோரினார். உடனே பெல்ஜியத்தின்வழி போகக்கூடாதென்கிற உடன்படிக்கைக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு சரியானபதில் கொடுக்காமல், "ஆபத்துக்கு தோஷமில்லை" (Necessity knows no law) யென்கிற விதிப்படி "எங்களுக்கு ஆபத்து வந்துற்ற வேளையில் பெல்ஜியத்தின்வழி போகாமலிருக்க முடியவில்லை" யென்று சொல்லிவிட்டார்கள்.

"துராகிருதப் பிரவேசம்."

தூது பேசிக்கொண்டிருக்கையிலே ஜுலை மாஸம் 30உ யன்று லக்ஸெம்பர்க் (Luxemburg) மீது படையெடுத்து அத்தேசத்துள் துராகிருதப் பிரவேசம்செய்து அதன்வழியாக ப்ரான்ஸின் எல்லைக்குப்போக ஆரம்பித்து விட்டார்கள். பெல்ஜியத்துக்கும் "நீங்கள் பெல்ஜியத்தின் வழிபோக இசைந்தால் நல்லதாயிற்று: இசையாவிட்டால் பலாத்காரமாகப் போகத் துணிந்துவிட்டோம்" என்று தெரிவித்தார்கள். ப்ரான்ஸின் எல்லைக்குள் ஜெர்மனி எல்லைக் காவலாளிகள் நுழைந்து 'ஒற்றுப்' பார்க்கிறதாகத் தெரியவந்தது. உடனே ஆகஸ்டுமீ 2உ பிரிடிஷ் கவர்ன்மெண்டார் கப்பல் சைனியங்களை சண்டைக்கு முஸ்தீபு செய்து பெல்ஜியத்தினுள் ஒருஜெர்மன் இராணுவவீரன் காலடிவைத்தாலும் நாங்கள் சண்டை தொடுப்போமென்று "கரூர்நாமா" அனுப்பினார்கள். இதிற் குறிக்கப்பட்ட காலதவணை ஆகஸ்டுமீ 4உ இராத்திரி 12-மணிக்குக் கழிந்தது. அன்றிரவு 12-45-மணிக்கு யுத்தபேரிகை முழக்கலானார்கள்.

"வலியார் எளியாரை யடித்தால் எளியாரைத் தெய்வம் அடிக்கும்."

வலியார் எளியாரை யெதிர்த்துச் சண்டை போடுவதில் கௌரவக்குறைவு ஒன்றிருக்கிறது. சரிசமமானவர்களோடு சண்டைபோட்டு ஜயித்தால அது வீரத்துக் கழகாகும். கழுகு ஊர்க்குருவியோடு சண்டைக்குப் போனால் பார்த்திருக்கிறவர்கள் சும்மா விருப்பார்களா? ருஷியர்கள் ஆங்கிலேயர்களுக்கெதிரிகளாகத் தக்கவர்கள் என்கிற பாவனையினாலும், ஸெர்வியர் கவர்ன்மெண்டார் கொடுத்தபதிலினாலும், வீண்சண்டை யென்னத்திற்கு என்றிருந்தவர்கள் அனேகருண்டு. ஆனால் பெல்ஜியத்தினுள் பிரவேசிக்கத் துணியவே உடன்படிக்கைக்கு விரோதமாக "வல்லான் வகுத்தது வாய்க்கால்" என்று அவர்கள் போனதே போக்காய் விட்டுக்கொடுப்பது பிரிடிஷ் கவர்ன்மெண்டார் அந்தஸ்துக்காவது கௌரவத்துக்காவது ஒத்ததாகவில்லை. ஆகையால் சண்டை தொடுக்கவேண்டியது அதியாவசியகமாகவே யேற்பட்டது.

இந்தச்சண்டை "மதுபிந்து நியாயமா" யிருக்கிறதென்று சிலர் சொல்கிறார்கள். வெளிப்பார்வைக்கு அப்படித்தான் தோன்றும்: தோற்றத்தைக்கண்டு "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று பஹிர்முகபாவனையோடு நிற்கிறவர்கள் எப்படியும் மோசம் போவார்கள் என்பது திண்ணம்.

"ஒன்றே ஜாதியும் ஒருவனே தேவனும்."

"ஒன்றே ஜாதியும் ஒருவனே தேவனும்" என்றபடி மனிதஜாதி ஒன்றே—அதாவது ஒரு கூட்டமாகவே இருக்கிறது வாஸ்தவம். நான் வெளியில் போகிறதாகப் புறப்பட்டால் என் கையும் காலும்மட்டும் வீட்டிலிருக்கமுடியுமா? அதுபோலே, சண்டையென்று ஏற்பட்டுவிட்டால் மனிதவர்க்கம் முழுவதும் அதன் பலாபலனை யனுபவித்தே தீரவேண்டும். "யாரோ செத்தான், எவளோ அழுதாள், இழவுக்கு வந்தவள் தாலியறுத்தாள்" என்றொரு பரிகாச பழமொழியுண்டு. இது பேதபாவனை காரணமாக வுண்டான சித்தவிருத்தியை விளக்கும் பழமொழி.

யாரோ ஒருவன்செத்தால் எவளோ ஒருத்தி யழுவாளா? உடைமையை யிழந்தால் தான் துக்கம்வரும். செத்தவன் எப்படியோ ஒரு விதத்தில் "உடையவனா" யிருந்தால்தான் உடையவளுக்கு அழுகைவரும். தாலி கட்டினவன் இறந்தால்தான் கட்டப்பெற்றவள் தாலியறுப்பாள். இதெல்லாம் ஜனங்கள் உள்ளத்து உறவும் அதையறியும் உளவும்தெரியாமல் பிதற்றும் வார்த்தையென்பதை யுணர்த்தத்தான் அந்தப்பழமொழி யேற்பட்டது.

மனித ஜாதியொன்றே யென்பதற்கு அடையாளமாக ஜனசமூகங்கள் ஒன்றுக்கொன்று சங்கிலித் தொடர்போல் சம்பந்தப்பட்டிருப்பதை, ஊன்றி உள்ளமுணர விசாரிப்போர் நன்றாயறிவார்கள். இந்தச் சண்டையையே எடுத்துக்கொள்வோம்.

"சங்கிலித்தொடர் நியாயம்."

ஆர்ச்டியூக் ப்ரான்ஸ் பெர்டினெண்டையும் அவர் பத்னியையும் † 'ப்ரின்ஸெப்' என்னும் ஒரு மாணவச் சிறுவன் ஜூன்மீ 28உ ஸிராஜிவோ பட்டணத்துத் தெருவில் சுட்டுக் கொன்று விட்டான். இதைச் சாக்கிட்டுக்கொண்டு ஜெர்மனியார் ஆஸ்திரியாவைத் தூண்டிவிட்டு ஸெர்வியாவின் கொட்டத்தை அடக்க இதுதான் சமயம் என்று பசப்பு வார்த்தை சொல்லி ஆஸ்திரியாவை சண்டைக்குத் தூண்டிவிட்டார்கள். ஆஸ்திரியாவும் பழவினை தூண்ட ஸெர்வியாவின்மேல் சமுசயங்கொண்டு, ஸெர்வியாவைப் பயமுறுத்தி சண்டைக்கிழுத்தது. ருஷ்யா, ஸெர்வியாவுக்குத் துணையாக நின்றது.

ஜெர்மனி ருஷியாவுக்கு விரோதமாக வந்தது: ஜெர்மனி விரோதம் ஏற்படவும் ப்ரான்ஸ் ருஷியாவுக்குத் துணையாகநின்றது. ஜெர்மனிக்கும் ப்ரான்ஸுக்கும் பகையேற்பட, பெல்ஜியம் வழியிலிருந்தது. அதன் வழியேபோக பெல்ஜியத்தைத் தாக்கினார்கள்.

பெல்ஜியம் துணைகோரியது.

பெல்ஜியம் சிங்கக்குட்டிபோல் ஜெர்மனியை எதிர்த்துநின்று அநியாயமாய்த்தன் தேசத்தில் புகுந்து அதர்ம சண்டைதொடுத்த ஜெர்மனியை யடக்க உடன்படிக்கைப்படி கட்டுண்ட பிரிடிஷ் கவர்ன்மெண்டாருடைய உதவியைக் கோரியது. பெல்ஜியத்தின்மேல் அதர்ம யுத்தஞ்செய்யும் அக்கிரமஸ்தர் கொட்டத்தை யடக்க பிரிடிஷார் சண்டையிற் புகுந்துகொண்டு ப்ரான்ஸுக்கும் ருஷியாவுக்கும் துணையாகவிருந்து உதவவேண்டியதாக வந்துமுடிந்தது. இப்படியாக "சங்கிலித்தொடர்" நியாயம் நன்றாக ஏற்படவில்லையா?

"சொக்கா, சொக்கா சோறுண்டோ, சோழியன்
வந்து கெடுத்தாண்டோ."

பிரிடிஷார் நடுவில்வந்தது ஜெர்மனிக்கு ரவிக்காமையாலும், அவர்கள் இப்படிச் செய்வார்களென்று தற்சமயம் எதிர்பார்க்காமையினாலும், எதிர்பாராதபடி தர்மவழியில் நின்று அதர்ம அக்கிரமத்தையெதிர்த்த பெல்ஜியத்தைப் பாழாக்கிவிட்டு, அவர்களுக்காகப் பரிந்து கொண்டுவந்த ஆங்கிலேயர்மேல் உக்கிரமாய்க் கோபித்து 'இடியுண்ட நாகம்போல்' சீறிவிழுகிறார்கள். எப்படியும் தர்மமேதான் ஜெயிக்குமென்பது நிச்சயமானாலும், அதர்மம் தலை யெடுத்தாடினால்தானே தர்மம் நிலை நாட்டப்பெறும். இப்பொழுது உலகிலுள்ள தேசங்களெல்லாம் யுத்தத்தில் மனம் பதிந்தவர்களாக விருக்கிறார்கள். எந்தச்சமயத்தில் என்ன சம்பவிக்குமோ தெரியாது. நவம்பர்மீ முதற் கொண்டு ஜெர்மனியின் மித்திரபேதத்தால் துருக்கியோடும் சண்டை நேர்ந்திருக்கிறது. துருக்கி ஜெர்மனி கட்சியைச் சேர்ந்துவிட்

† Cf. "The greatest war of Modern times, and perhaps in the whole history of the human race, was begun by Germany using the crime of a schoolboy in Bosnia as her excuse. On Sunday, June 28th, 1914, a student named Prinzep shot and killed the Archduke Francis Ferdinand, heir to the thrones of Austria-Hungary, and his wife, the Duchess of Hohenberg, in the streets of Serajevo. The Austro—Hungarian Government and its supporter and adviser the German Government, determined to take advantage of the crime to make a great step forward in Europe."—*Wilson's History of the Great War.*



டது. ஜெர்மனியாரோ, கொள்ளைக்காரன் கொள்கையை யனுசரித்து ஜனங்களைப் பீதிக்குள்ளாக்கி அவர்கள் கவர்ன்மெண்டின் பலத்தைக் குலைக்கப்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட இராக்ஷஸப் போர் புரிவது மற்றவர்களுக்கு என்ன அருவருப்பைத்தரினும் அவர்களுக்கு சகஜமானதாகவே யிருக்கிறது.

ஆபத்சகாயம்.

"ஆபத்துக்குத் தோஷமில்லை" யென்பது சண்டைக்காரன் சொல்லும் குதர்க்கநியாயம். தர்மவழியில் ஆபத்துவந்தால் அந்த ஆபத்தை நீக்கிக்கொள்ள ஆபத்தில்லாத காலத்தில் அனுஷ்டிக்கத் தக்கதாக ஏற்பட்ட விதிவிலக்குகள் ஆபத்துவேளைக் கொவ்வாமைபற்றி அவைகளை மீறிநடப்பது தோஷமாகாது என்றுசொன்னார். "Necessity knows no law" என்பது உண்மையானாலும் "Necessity itself is a law." ஆபத்துக்கு தோஷமில்லை யென்பதுண்மையானாலும் ஆபத்துவருவதே ஒருவிதியை யனுசரித்தாதலால், வினைவிதித்தவன் வினையறுக்காமற் தப்பித்துக்கொள்ள முடியாது.

"மூர்க்கரிடம் தர்மோபதேசம் பலிக்காது."

"ஆசைக்கோரளவில்லை" யாதலால், அதிக ஆசையினால்வரும் ஆபத்துவிளைவு தானாய்த் தேடிக்கொண்டதன்றி அதுவாக வந்ததில்லை. இந்த மூர்க்கரோடு நியாயம்பேசி தர்மமுரைப்பதில் பிரயோசனமில்லை. சண்டைக்கென்று கிளம்பிவிட்டார்களாதலால், சண்டை முகத்தில்தானே அவர்கள் கொட்டத்தை யடக்க வேண்டும். இதற்கு பகவான் ஆபத்ஸகாயனாதலால், உற்றதோர் சமயத்தில் உள்ளபடி கைகொடுத்து தர்மத்தை நிலைநாட்டுவன். ஏனெனில் அது அவன் பொறுப்பு. நாமெல்லாம் அவன் ஆட்டுவிக்க ஆடும் சூத்திரப் பாவைகள். சூத்திரக் கயிறுதான் "இஷ்டம்" என்றுசொல்லும் "ஈசனருள்". அந்த ஈசனருளோடு ஒன்றுபட்ட மனத்தராயிருந்து நடந்துவந்தால் பகவத்சங்கல்பம் வெகு அற்புதமாக நிறைவேறுவதைப் பார்க்கலாம். "பற்றற்றார் பற்றுகப்பற்றி யிருக்குமவன்" என்பதுண்மை.

## THE HISTORY OF THE POLES IN RELATION TO THEIR NEIGHBOURS.

[On August 15th the Grand Duke Nicholas, Generalissimo of the Russian Forces, issued a Proclamation in the Polish language, to all Poles, promising to unite the dismembered portions of their country, and guaranteeing them full liberty of language, religion and Self-Government under the sceptre of the Russian Tsar. This was followed by the Tsar's rescript.]

"The determining factor in Prussian foreign policy was, of course, the Geographical position of the kingdom. Having its origin in the military settlements of the Teutonic Knights on the shores of the Baltic, right in the centre of the Slav population, which extended westward as far as the Elbe in the neighbourhood of Hamburg, Prussia was military from its birth, and, as Frederick said had to be "toujours en vedette."

"The eighteenth century found Prussia hemmed in on one side by the Slav Kingdom of Poland. Frederick induced Maria Theresa (in 1772,) to join Prussia and Russia in despoiling that kingdom and accordingly each of the Great Powers took a slice of territory contiguous with its own. Twenty years later, in 1793, Russia and Prussia rounded off their territory with further acquisitions, leaving the kingdom a mere slip in the centre with nominal independence; but even this was forfeited in 1795, when Austria joined in the final partition. The kingdom of Poland disappeared and the King retired with a pension to St. Petersburg."

# போலண்டு ராஜ்யமும் போல்ஸ் ஜாதியாரும்.

## ஜெர்மனி ராஜ்யம் ஏற்பட்டதின் கதை.

### "ஓர் அற்புத விளம்பரம்"

இப்பொழுது நடக்கும் பாரத மஹாயுத்தம் தொடங்கியபின் ருஷியா சைனியங்களுக்கெல்லாம் முக்கிய சேனாதிபதியாகிய க்ராண்ட் டியூக் நிகோலாஸ் என்பவர் ஆகஸ்டு மாஸம் 15-ந்தேதி போலிஷ்பாஷையில் 'போல்ஸ்'களுக்கெல்லாம் இராஜ விளம்பரம் ஒன்று அனுப்பினார். அதில் அவர்களுடைய தேசம் சிதைவுற்றிருப்பதையெல்லாம் ஒன்று சேர்த்து ஸ்வபாஷை, ஸ்வமதம், ஸ்வய ஆட்சி இவைகள் அளிப்பதாகவும் ருஷியாவின் சக்ரவர்த்தியின் குடைக்கீழ் அவர்கள் எல்லா ஸ்வதந்திரங்களும் வித்தித்து ஸ்வராஜ்யப்பேறுபெற்று அனுபவிக்கலாமென்றும் தெரிவித்தார். இதையொட்டி ருஷியசக்ரவர்த்தியவர்களுடைய உத்தரவும் கூடவந்தது. இப்படி இவர்களுக்கு இது வரையில் இல்லாத ஸ்வதந்தரங்கள் அளித்ததற்குக் காரணமென்ன? இவர்களுடைய பூர்வோத்தரம் என்ன? இவர்கள் சரித்திரமென்ன? இதையெல்லாம் விசாரித்தறிந்தால் இப்பொழுது நடக்கும் சண்டையின் காரணமும் சண்டைக்காரர்கள் அனுசரிக்கும் தந்திரங்களின் உளவுமர்மமும் தெரியவரும்.

### ஸ்லாவ் ஜாதியில் முக்கியமானவர்கள்.

இதைப்பற்றி விசாரிக்கும்பொழுது ஜெர்மானியர்களுடைய சரித்திரமும் இதில் கலந்துவரும். 'போல்ஸ்' ஸ்லாவ் ஜாதியாரில் முக்கியமானவர்கள். இவர்கள் பேரை இங்கிலீஷில் 'Slav' என்றும் 'Sclav' என்றும் எழுதுகிறார்கள்.

### இப்பொழுதுள்ள ஜெர்மனி ராஜ்யம் ஏற்பட்ட காலம்.

இப்பொழுதுள்ள 'ஜெர்மன் எம்பையர்' 1871-ம் ௵ ஜனவரி மாஸம் 1 தேதி ப்ரான்ஸ் தலைநகரும் ப்ரெஞ்சு சக்ரவர்த்தியின் அரண்மனை ஸ்தானமுமாகிய பாரிஸுக்கு அடுத்த வெர்ஸேய்ல்ஸ்(Versailles) அரண்மனையில் ப்ரஷியா தேசத்தரசரும் இதர ஜெர்மனியரசர்களும் தங்கியிருந்த பொழுது விளம்பரப்படுத்தப்பெற்றது. ஜனவரி மாஸம் 18-ந் தேதி ப்ரஷ்யா அரசராகிய உவில்லியம் முதலாவது சக்ரவர்த்தியாக அங்கீகரிக்கப்பெற்று இதர மன்னர்களால் மரியாதை செய்யப்பெற்றார். அதற்கு முன்னால் அவர்கள் ஒற்றுமையின்றிச் சிதறுண்டிருந்தார்கள்.

### பூர்வீக ஜெர்மன் சக்ரவர்த்தி

பூர்வம் "ஜெர்மன் எம்பரர்" சார்லிமேன் ஸ்தாபித்த மஹாராஜ்யத்தலைவர் அவர் ஆஸ்திரியாவிலுள்ள வியன்னா (Vienna)வில் வசித்து வந்தார். அவர் தானே "ரோமன் எம்பரர்" ஆகவுமிருந்தார். இத்தலி, நேப்ள்ஸ் நாடுகளுக்கு சக்ரவர்த்தியாகவிருக்கும் முறையில் அவர் போப் அவர்களால் முடிசூட்டப்பெற வேண்டும். போப் என்பவர் கிறிஸ்துமதத்தலைவர். ஸெய்ன்ட்பீடர் என்னும் யேசுகிறிஸ்துவினுடைய ஆப்ஸ்தலரின் பரம்பரையில் பட்டத்துக்கு வந்தவர்கள். யேசுநாதர் ஸ்வர்க்கத்தின் திறவுகோலை அவரிடம் ஒப்புவித்துச் சென்றார் என்னும் ஐதிகம்பற்றி அவருக்கு உலகில் செல்வாக்கு அதிகம். கிறிஸ்துமதம் ஐரோப்பா முழுமையும் பரவியிருந்தது. முடிமன்னர்களெல்லாம் அவர்களுடைய ஆசீர்வாதத்துக்குரியவர்கள்: யாராவது அவருக்கு விரோதமாக நடந்து கொண்டால் அவரை மதப்பிரஷ்டரென்று தள்ளிவைக்கும் அதிகாரம் அவருக்குண்டு. அவர் மதப்பிரஷ்ட உத்தரவு (Bull of Excommunication) பிறப்பித்துவிட்டால் வரிசெலுத்தும் குடி வரிசெலுத்த மாட்டேன் என்னலாம். சிற்றரசர்கள் கப்பம் கட்ட மாட்டோம் என்னலாம். இதர அரசர்கள் "மதப்பிரஷ்டன் அரசைக் கெடுக்கிறான்" என்று சண்டைக்கு வரலாம். ஆதலால் அவருடைய செல்வாக்கு மிகுந்திருந்தது. ஆனால் அவர் ஸந்யாச ஆச்ரமம் புகுந்தவராதலால் கத்தியெடுத்துச் சண்டைபோடுவதற்கில்லை. இல்லாவிட்டாலும் முடிமன்னர்களைக்கொண்டு தம் காரியங்களை முடித்துக்கொண்டு வந்தார். அவருடைய அதிகாரம் உலக சத்ராதிபதியுடைய அதிகாரத்துக்குச் சமமாகவிருந்தது. சில அம்சங்களில் மிகுந்துமிருந்தது. கி. பி. 9-வது நூற்றாண்டு முதல் 17-வது நூற்றாண்டு வரையில் சக்ரவர்த்திப்பட்டம் சூட்டப்பெற்றவர்களெல்லாம் "நாளைக்குவருமென்று நினைத்த பலாப்பழத்துக்காசைப்பட்டு இன்றைக்குக் கையிலுள்ள களாக்காயையிழந்தவர்களாயிருந்தார்கள்". அல்லது, இன்னொரு உவமானம் செப்பலாம். மாம்ஸத்துண்டை வாயில் கௌவியிருந்த நாய் தண்ணீரில் அதன் பிரதிபிம்பத்தைக்கண்டு அந்த மாம்சத்துக்காசைப்பட்டு வாயிலிருந்த மாம்சத்துண்டை நழுவவிட்ட கதையாக ஏமாந்திருந்தார்கள். சார்லிமேனுடைய இராஜ்யம் சீர்குலைந்தும் அவருடைய பட்டமும் பேரும் மட்டும் தொடர்ந்திருந்தது. இப்பொழுதுள்ள 'ஜெர்மனி' அப்பொழுதில்லை.



### ப்ரஷ்யாவின் பூர்வோத்தரம்.

ப்ரஷ்யா நாடும் அதிபூர்வீகமானதில்லை. நீங்கள் ஐரோப்பாவின் படத்தையெடுத்துப் பார்த்தால், இத்தலி தேசத்துக்கு வடக்கே ஆல்ப்ஸ் (Alps) என்கிற பெரிய மலைத்தொடர்களிருக்கிறது தெரியும். அதற்கப்பால் "ஸ்விட்ஸர் லாண்ட்" என்னும் தேசமிருக்கிறது. இத்தேசத்து ஞாபகசின்னம் வேண்டுமானால் பள்ளிக்கூடப்பிள்ளைகள் தாங்கள் தரித்திருக்கும் விலைமலிந்த கைக்கடிகாரத்தையெடுத்துப் பார்க்கட்டும், "Swiss Made"—"ஸ்விட்ஸர்லாந்தில் செய்யப்பட்டது" என்று அதில் வெட்டப்பட்டிருக்கும். அந்த மலைப்பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் திடகாத்ரமானவர்கள். சந்ததி விர்த்தியதிகமாயுள்ளவர்கள். அத்தேசமோ மலையடர்ந்த நாடு. காட்டுபூமி. அங்கே பிறக்கும் எல்லாருக்கும் போதுமானஜீவனம் கிடைக்க அத்தேசத்தில் போதுமான வளமும் வசதியுமில்லை.

### " கையால் வல்லவர்கள்."

ஆதலால், இன்றைக்கும் அத்தேசத்தார் வெளிதேசங்களுக்குச் சென்று கொல்லத்துவேலை, சமையல்வேலை, பரிசாரகவேலை, கடிகாரவேலை இவற்றில் கைதேர்ந்தவர்களாய் ஜீவனம் செய்துவருகிறார்கள். பெண்கள் தாதிகளாகவும், சமையல்காரிகளாகவும் வெளியேறி ஜீவனம் செய்கிறார்கள். ஆதிகாலத்தில் இந்த மலைப்பிரதேசத்தவர்கள் இப்படிப்பட்ட கைத்தொழில்கள் கற்றவர்களாகவில்லை. மலைப்பிரதேசத்தில் பிறந்தவர்களாதலால் புஜபல, பராக்ரமம், தேஹமனோதிடம், இவை மிகுந்தவர்களாயிருந்தார்கள். ஆகையால் "கையால் வல்லவர்களான" இவர்கள் தம் மலைநாடுகளைவிட்டு வெளியேறிச் சண்டைபோட்டுத் தம் புஜபல பராக்ரமத்தால் வீடுவாசல்கள், நாடுநகரங்களைத் தேடிக்கொண்டு வாழ்வாராயினர். இவர்கள் முக்யமாய் இரு வகுப்பாய்ப் பிரிந்திருந்தார்கள். அவர்களில் கெல்ட்ஸ் (Celts) ஜாதியார் ஒருவர்; டியூடன்ஸ் அல்லது டாய்ட்ச்ஸ் (Deutsch) (டட்ச்) என்பவர் இன்னொரு ஜாதியார்.

### கெல்ட்ஸ், டியூடன்ஸ்.
### "Celts and Teutons."

கெல்ட்ஸ் என்பவர்கள் கல்லுளி மிண்டர்களுக்குச் சமானமானவர்கள். அந்த வார்த்தையே சிற்றுளி யென்று பொருள்படும் ஒரு தாதுவிலிருந்துண்டாயது. இப்பொழுது இவர்களுடைய பாஷை பேசுகிறவர்கள் ப்ரிடன்ஸ், வெல்ஷ், ஹைலாண்டர்ஸ், ஸ்காட்ஸ், ஐரிஷ்.

### "கொள்ளைவீரர்கள்"
### Robber Knights.

ட்யூடன்ஸ் அல்லது 'டாய்ட்ச்ஸ்' என்றால் "ஜனங்கள்" என்று அர்த்தம். இவர்கள் முதலில் சண்டைசெய்து பிழைத்துவந்தார்

கள். சண்டை செய்வதிலும் கொள்ளையிடுவதிலும், வெகு சமர்த்தர்கள். இவர்கள் எப்போதும் வேல் தரித்திருந்ததால், பின்னால் இவர்கள் கொள்ளையிடுவது பலத்து சண்டையிடுவது தொழிலாகக்கொண்டபொழுது பூர்வீகர்களான "ஜெர்மன்ஸ்" (வேல்-தரித்தவர்கள் வேலாயுதர் (Germans=Spearmen) பேரை இவர்களும் தரித்தார்கள். இவர்கள் ரைன் (Rhine) நதிதீரத்தில் குடியேறினபொழுது இவர்களுக்கு (Robber Knights) கொள்ளை வீரர்கள் என்று பேர் வழங்கிவந்தது. "க்ரூஸேட்" என்கிற மதயுத்தங்களில் இவர்கள் பாலஸ்தீனுக்கு ஏராளமாகச் சென்று அங்கே ஸரஸென்ஸ் என்னும் துருக்கரோடு சண்டையிட்டு மாண்டு மடிந்துவந்தார்கள்.

"குடி உயரல்" : "ஹன்ஸாலீக்."

அந்தக் காலத்தில் இவர்களுடைய ஹிம்சை யடங்கியிருந்தது. அச்சமயத்தில், இவர்களுடைய லூட்டியின்றி வசித்த வர்த்தக வியாபாரிகளும் இதர பட்டணவாசிகளும் சேர்ந்து இவர்கள் கொட்டத்தை யடக்கவென்று கங்கணம் கட்டிக்கொண்டு வேண்டிய முயற்சியெடுத்து உழைத்துவந்தார்கள். இப்படி ஒன்றொன்றாய் 100 பட்டணங்கள் சேர்ந்து "ஹன்ஸாலீக்" (Hansa League) என்கிற பெரிய ஐக்கிய சங்கத்தை யேற்படுத்தின பின் இவர்கள் வேலையற்றுத் திரிய ஆரம்பித்தார்கள்.

"நைட்பட்டம்"—"இராஜசேவகம்."

Institution of the Order of Knights.

இவர்களால் அபாயம் வராதபடி இவர்களை இராஜ்யத்துக்காகச் சண்டை செய்யவேண்டி "இராஜசேவகத்தில்" அமர்த்திக்கொண்டு "நைட்ஸ்" என்கிற பட்டம் கொடுக்கப்பெற்றார்கள். (Knight) "நைட்" என்றால் (Servant of the Crown) "இராஜசேவகன்" என்று பொருள் படும்.

" இராஜசேவகர்களுக்கு முக்யத் தலைவர்."

Grandmaster of the Teutonic Order.

பிந்தி யிவர்கள்தானே "கௌண்ட்"கள் என்கிற மாகாணாதிபதிகளானார்கள். இவர்களுக்கு "டியூடானிக் நைட்ஸ்" என்று பேர். பிறகு அது இவர்களுக்கு ஸமூகப்பேராக விளங்கியது. இவர்களுடைய இனத்தார் குழுக்காய் இருந்தார்கள். சக்ரவர்த்தியின் கை சளைத்தபொழுது இவர்கள் கைவலுத்து 'டியூக்' என்றும் "ப்ரின்ஸ்" என்றும் பேர்பெற்று தங்கள் சிறிய நாடுகளை ஆளும் ஸ்வாதீன அரசர்களாக ஆனார்கள். இப்படிப்பட்டவர்களில் ஒருவர்தான் ப்ரஷியா அரசாயிருப்பவரும். பூர்வம் இவர் (இப்பொழுது பெர்லின் நகரிருக்கிற சிறு நாடான) "ப்ராண்டன்பர்க்" மாகாணத்துக்கு அதிபராய் "மார்க்ரேவ்" Margrave என்கிற பட்டத்தோடு "டியூடானிக்" நைட்ஸ் இனத்துக்குத் தலைவராயிருக்கும் அந்தஸ்துப் பெற்றிருந்தார். அப்பொழுது அவருக்கு "Grand Master of the Teutonic Order" என்கிற பட்டமும் அதற்குள்ள அதிகாரமும்தானிருந்தது. சமயத்துக்குத் தக்கபடி அண்டை அயலாரை ஜயித்தும் கூடிக்கெடுத்தும் "ப்ரஷ்யா அரசன்" என்கிற பட்டத்துக்கு வந்தார்.

மஹாதீரரான ப்ரேடரிக்.

Fredericke the Great.

இந்த இராஜ்யமும் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மஹாதீரரான ப்ரேடரிக் (Fredericke the Great) காலத்தில்தான் சீரும் செல்வாக்கும் பெற்று முன்னுக்கு வந்தது. இவர்தான் 1814-ம் வருஷத்தில் நெபோலியன் கொட்டத்தை யடக்கின அரசர்களில் ஒருவர். 'வாடர்லூ' சண்டையில் அவன் முறியடிக்கப் பெற்றான். ஆனாலும் ப்ரெஞ்சுக்காரர்கள் அவர்களைத் தலையெடுக்க விடாமல் தானே யடக்கிவந்தார்கள். 1870-ம் வருஷத்தில் மூன்றாவது நெபோலியன் ப்ரான்ஸுக்குச் சக்ரவர்த்தியாக விருந்தபொழுது மறுபடியும் சண்டையுண்டாயிற்று. அப்பொழுது உவில்லியம் என்பவர் ப்ரஷ்யா அரசராயிருந்தார்.





ஸெடான் சண்டை.

Battle of Sedan.

அப்பொழுது உண்டான சண்டையில் மெட்ஸ் நகரண்டையில் ப்ரெஞ்சு சைனியங்கள் தோற்றுப்போய் 'ஸெடான்' (Sedan) என்னுமிடத்தில் தப்ப வழியின்றி அகப்பட்டுக்கொண்டார்கள். நெபோலியன் சக்ரவர்த்தி தப்பியோடவும் வழியின்றி தன்னுடைய கத்தியை அனுப்பி ப்ரஷ்யா அரசனுக்குக் கீழ்ப்படிந்து போனார். அப்பொழுது ப்ரெஞ்சு சைனியமெல்லாம் அவர்கள் வசமாயது.

ஜெர்மனியின் ஐக்கிய பத்தியம்.

German Unity.

அப்புறமும் பிரான்ஸிலுள்ளவர்கள் (குடியரசு) "ரிபப்ளிக்" என்கிற பேர்வைத்துக்கொண்டு சண்டை செய்ய பாரிஸ் மேல் படையெடுத்துச் சென்று வேர்ஸேய்ல்ஸ் அரண்மனையைப் பிடித்துக்கொண்டார்கள். அங்கேயிருக்கும்போதுதான் ஜெர்மனி சிற்றரசர்களெல்லாரும் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்கிறதின் உண்மை யுணர்ந்தவர்களாய் உடனே அவர்களெல்லாரும் ஐக்கிய பத்தியம் குலையாது ஒன்றுபட்டிருக்கவேண்டுமென்று 26-சிற்றரசுகளும்* "டச்சீஸ்" ('டச்சி† யென்பதின் பன்மை) என்கிற சிறுநாடுகளும் சேர்ந்து "எம்பையர்" என்கிற ஐக்கிய ராஜ்யமாக விருக்கத் தீர்மானித்து அதன் ஸ்தாபனத்தை உடனே விளம்பரப் படுத்தினார்கள்.

ஜெர்மனியின் முதல் சக்ரவர்த்தி

அந்த ஜெர்மனி ஐக்கிய ராஜ்பத்துக்கு முதல் சக்ரவர்த்தியாக, 'டியூடானிக் நைட்ஸ்' என்கிற இனத்துக்குப் பூர்வீக முக்கிய தலைவரும் ப்ரஷியா அரசருமாய் சண்டையில் பிரதானஸ்தராயிருந்த முதலாவது உவில்லியம் அவர்களைத் தெரிந்தெடுத்தார்கள். இது 1871-ம் வருஷம் ஜனவரிமாசத்தில் ஏற்பட்டது. இவருக்குப்பின் இரண்டாவது சக்ரவர்த்தியாக வந்தவர் "எம்பரர் ப்ரெட்ரிக்" என்பவர். இவர்தான் இப்பொழுதுள்ள "இரண்டாவது உவில்லியம்" சக்ரவர்த்தியின் தகப்பனார். முதலாவது உவில்லியம் சக்ரவர்த்தியின் குமாரர். நமது விக்டோரியா மஹாராணியின் ஜேஷ்ட குமாரத்தியை இவருக்கு மணம்புரிந்து கொடுக்கப் பட்டிருந்ததால், இப்போதுள்ள ஜெர்மனி சக்ரவர்த்தி விக்டோரியா மஹாராணியவர்களின் பெண்வயிற்றுப் பேரனாகிறார்.

ஜெர்மனியின் ஐக்கிய பத்தியத்தில் சேர்ந்த நாடுகள்.

ஜெர்மன் எம்பையரில் சேர்ந்த தன்னரசு நாடுகள் பூர்வம் 26. அவற்றில் முக்கியமானவை:—(1) ப்ரஷ்யா, இது பால்டிக் கடலுக்கும் போலண்ட ராஜ்யத்துக்கும் இடையிலேயுள்ளது. இதற்கு வடகிழக்கே (2) பொமரேனியா இருக்கிறது. பொமரேனியாவுக்குத் தெற்கே (3) ப்ராண்டன்பர்க் இருக்கிறது. ப்ரஷியா அரசர்களுக்கு இதுதான் பிதிரார்ச்சித சொத்து. இங்கேதான் பெர்லின் நகரிருக்கிறது. பெர்லினுக்கு நேர் கிழக்கே (4) போஸென் இருக்கிறது. இவ்விரண்டிற்கும் தென்கிழக்கே ஸைலீஷியா (Silesia) இருக்கிறது. இதற்குக் கிழக்கே பொஹிமியாவுக்கு வடக்கே (6) ஸாக்ஸனி யரசு இருக்கிறது. இது ஓர் சிறிய இராஜ்ஜியம். இதிலேதான் லீப்ஸிக், ட்ரேஸ்டன் என்கிற முக்கியபட்டணங்களிருக்கின்றன. இதற்குச் சற்று வடகிழக்கு முகமாய்ப் போனால் (7) ஸாக்ஸனி யென்னும் பெரிய மாகாணமிருக்கிறது. இந்த ஸாக்ஸனி இராஜ்யம், டச்சி இவைகளின் வழியே எல்ப் என்னும் நதியோடுகிறது. இந்நதிக்கரையோடு சென்றால் இதற்கு வலதுபுறத்தில் (8) மெக்லென்பர்க் என்னும் டச்சியிருக்கிறது. இது பெர்லினுக்கு வடகிழக்கேயுள்ளது. எல்ப் நதிமுகத் துவாரத்தில் முக்கியமான ஹாம்பர்க் பட்டணமிருக்கிறது. இது (9) ஹால்ஸ்டெய்ன் (Holstein) நாட்டிலுள்ளது. இங்கே இன்னொரு முக்கிய

* Principalities = சிற்றரசு நாடுகள்.

† 'டியூக்' பட்டவர்த்தனர் நாட்டுக்கு 'டச்சி' யென்று பேர்.

ஸ்தலம் லுபெக் (Lubeck). இதற்கு வடக்கே ஹால்ஸ்டெய்னைத் தொடர்ந்ததாய் கீழ்பக்கம் பால்டிக் கடலும், மேல்பக்கம் வடகடலும் சூழ்ந்துள்ளது (10)ஷெல்ஸ்விக் (Schleswig) டச்சி. 'எல்ப' நதிக்கு இடதுபக்கத்திலும் வடகடலுக்குத் தென்பக்கத்திலுமாக இருப்பது (11) ஹானோவர் (Hanover). ஹானோவருக்குத் தென்கிழக்கே (12) வெஸ்ட்பாலியா (Westphalia). இங்கேதான் பேர்போன க்ருப் கம்பெனியின் மஹாபெரிய ஆயுதசாலைகளிருக்கும் (Essen) 'எஸ்ஸன்' பட்டணமிருக்கிறது. இதற்குத் தென்-தென்கிழக்கே (S. S. W.) 19-மைல் தூரத்தில் ரைன் நதிக்கரை. அந்நதி தீரமாகிய ரைன்மாகாணத்தில் 'டுஸ்ஸல்டார்ப்' என்னும் ஆகாய ரதசாலையுள்ள பட்டணமிருக்கிறது. இந்த ரைன்மாகாணம் (13) மேல்ரைன் என்றும் (14) கீழ்ரைன் என்றும் இருபாகமாகவிருக்கிறது. ரைன் நதிக்குக் கிழக்கே (15) நாஸ்ஸோ (Nassau), (16) டாம்ஸ்டார்ட் (Damstarat) (17) ஹெஸ்ஸி (Hesse) (18) காஸெல் (Cassel) என்கிற மிகவும் சிறியநாடுகளிருக்கின்றன. இவைக்குத் தெற்கே (19) பலாடினேட் (Palatinate) என்னும் பவேரியாவின் ஒருபாகமிருக்கிறது. இதற்குத் தெற்கே (20) லாரெய்ன் (Lorraine) இருக்கிறது. இதகுப் பூர்விகப்பேர் (லாதரிங்கியா) இதுவும் இதற்குத் தெற்கேயுள்ள (21) ஆல்ஸேஸ் மாகாணமும் நேராக ஜெர்மன் எம்பரர் ஆளுகைக்குள்பட்டதாக விருக்கிறது. இவையிரண்டும் ரைன், மூஸெல் நதிகளுக்கு இடையே இருக்கின்றன. ஆல்ஸேஸுக்கு மேற்கே (22) பேடன் (Baden). இதற்கு மேற்கே (23) உவர்டம்பர்க் (Wurtumburg) இருக்கிறது. இதற்கும் மேற்கே (24) பவேரியா (Bavaria). பவேரியாவுக்கு வடக்கே (25) தூரிஞ்சியா (Thuringia). (26) ஸ்வேபியா (Swabia). ப்ரஷ்யாவின் வடமேற்கில் கோனிக்ஸ்பர்க் பட்டணம் இருக்கிறது. இவையெல்லாம் சேர்ந்தது ஜெர்மனி மஹா-ராஜ்யம், அல்லது 'எம்பையர்'.

## ஜெர்மனியின் சரித்திர ஸாரம்.

## The Moral of the History of German Unity.

ஜெர்மனியின் பூர்வ சரித்திரத்தை வாசிக்கிறவர்களுக்கு ஜெர்மனியின் ஐக்கியபத்திய விசேஷத்தின் பலம் இப்படிப்பட்டதென்று ஸ்பஷ்டமாகத் தெரியும். குழந்தைகளே உங்களுக்கு இராஜ்யங்களின் பேரைச் சொன்னால் மலைப்பாயிருக்கும், ஆகையால் தற்கால ஜெர்மனியின் சரித்திர ஸாரத்தையெல்லாம் சுருக்கி ஒரு கதையாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

### "சுள்ளிக்கட்டுகதை"

முன்னொரு காலத்திலே 'ஆதிபுருஷன்' என்கிற கிழவனிருந்தான். அவன் யௌவன காலத்திலும் மனிதப் பிராயத்திலும் வெகு பாடுபட்டுழைத்து உலகப்பிரஸித்தி பெற்று விளங்கினான். மூப்பு மேலிடவும் தன்னாலொன்றும் செய்ய இயலாமல் தன் பிள்ளைகளைக் கொண்டு தன் காரியங்களையெல்லாம் பார்க்கவிட்டு தான் மட்டும் தன் பிள்ளைகளின் குணாகுணங்களைக் கவனித்து நோட்டம் செய்துகொண்டுவந்தான்.

### பிள்ளைகளின் குணகுணம்.

மூத்தவன் படாடோபமும், டாம்பீகமும், காரியத்தலைவனென்கிற செருக்குமுடையவனாயிருந்தான். இவன் தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டிச் செய்துவந்த ஆடம்பரங்களில் குடித்தன விஷயங்களை நன்றாகக் கவனித்துச் சீர்திருத்த அவகாசமற்றவனாயிருந்தான். மற்றொருபிள்ளை மூத்தவன் தான் காரிய விசாரணை கர்த்தாவானான். நாம் நம் காரியத்தைப் பார்த்துக்கொள்வோமென்று அவன்மட்டில் அவன் காரியத்தைப் பார்த்துக்கொண்டு பொதுவிசாரணையில் நேர்ந்த ஊழல்களைத் திருத்துவதில் சிரத்தையற்றவனாயிருந்தான். மற்றொருவன் தன் ஸ்வகுடும்பம் முன்னுக்கு வரும்வழியிலே கண்ணாயிருந்தான். வேறொருவன் சொந்தமாக வர்த்தக



வியாபாரம் செய்து தகப்பனாரைப்போல் தானும் பிரபலப் பேரெடுக்கவேண்டுமென்று முயற்சித்துவந்தான். இப்படி ஒவ்வொருவரும் ஸ்வகாரியப் புலிகளாய் ஸ்வாமிகாரியம் வழவழவென்று விட்டுவருவதைப் பார்த்தான் கிழவன். அவனுக்கு துக்கம் பொறுக்கமுடியவில்லை. ஆனால் தேஹத்திலோ பலமில்லை. அந்தியகாலம் கிட்டிவிட்டது.

### என்னசெய்வான் பாவம்.

பிள்ளைகளெல்லாவரையும் கூப்பிட்டுப் படுக்கையருகில் வைத்துக்கொண்டு "குழந்தைகளே எனக்கு அந்தியகாலம் வந்துவிட்டது. இன்னும் சொற்பகாலம் தான் இருப்பேன். ஏற்கனவே பேல்மூச்சு வாங்குகிறது. உங்களுக்கு நான் வைத்துள்ள ஆஸ்தியெல்லாம் பதருக்கு ஸமானம். என்னுடைய மெய்ப்பொருளை நீங்கள் ஒருவரும் இன்னும் கைப்பற்றினீர்களில்லை. ஆகையால் ஒரு சோதனை செய்து உங்களுக்கு என்னுடைய மெய்ப்பொருளைக் கொடுக்க நினைத்து உங்களைக் கூப்பிடலானேன். உங்களிஷ்டம் என்ன?" என்று கேட்க, எல்லாரும் "சரி, சரி, அப்படியே செய்யுங்கள். நாங்கள் அந்த சோதனைக்கு உட்படுகிறோம்" என்றார்கள்.

அப்படியானால் ஒவ்வொருவரும் நான் செய்கிற சோதனையில் உள்ளமறிந்து உண்மையென்று பற்றியதற்கு மாறாக எப்போதும் நடப்பதில்லையென்று சத்தியம் செய்து கொடுங்கள் என்று கேட்டான்.

"அப்படியே" யென்று எல்லாரும் ஸத்தியம் செய்து கொடுத்தார்கள்.

### "சுள்ளிபொறுக்கல்"

"சரி! நீங்கள் எல்லாரும் ஒவ்வொருவராய்ச் சென்று அவரவர்கள் இஷ்டப்போக்குக்கிசைந்ததாகவுள்ள இரண்டு சுள்ளிகள் பொறுக்கிக்கொண்டு வாருங்கள் சொல்கிறேன்" என்றான் கிழவன்.

அப்படியே! யென்று எல்லாரும் சென்று ஒவ்வொருவரும் ஒருகைக்கு ஒருசுள்ளியாகப் பொறுக்கிக்கொண்டு வந்து நின்றார்கள். இத்தனை சுள்ளிகளில் எது மிகவும் வலியது கொடுங்கள் பார்ப்போமென்றான் கிழவன். ஒவ்வொருவரும் இது வலிது, இது வலிது என்று கொடுத்தான்.

### "பரிசோதனை"

கிழவன் ஒவ்வொன்றாக வாங்கி "எங்கே பார்ப்போம்!" என்று ஒவ்வொன்றையும் ஒடித்துப்பார்க்க எல்லாம் ஒடிந்துவிட்டது.

"உங்கள் பலமெல்லாம் இப்பொழுது இந்தச் சுள்ளிகளின் பலம் அவ்வளவுதான்; நீங்கள் இந்த உலகத்திலிருந்து என்னமாக வாழ்ந்து முன்னுக்கு வரப்போகிறீர்கள்?" என்று கேட்டான்.

எல்லாரும் விழித்துக் கண்ணீர்விட்டுக் கதறினார்கள்.

### கிழவன் செய்த உபாயம்.

"அழுவதில் பிரயோஜனமில்லை. எனக்கு மூச்சுத் திணறுகிறது. நான் ஒரு உபாயம் சொல்கிறேன். அதை யெல்லாரும் மனமொற்றுப்பற்றி நடப்பதாக உறுதிவாக்கிட்டால் சொல்கிறேன்" என்றான் கிழவன்.

எல்லாரும் ஒப்புக்கொண்டார்கள்.

"உங்கள் சுள்ளிகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் கட்டுங்கள் பார்ப்போம். என்றான் கிழவன். அப்படியே வலுக்கக் கட்டினார்கள்.

உங்களில் மிகவும் பலசாலி யார்? என்று கேட்டான்.

"நான், நான்," என்று ஒவ்வொருவரும் முன்னுக்கு வந்தார்.

"இருங்கள்: உங்கள் பலத்தை ஒவ்வொருவராய்ப் பரீக்ஷிக்கிறேன்" என்று சொல்லி, ஒவ்வொரு பிள்ளையையும் கூப்பிட்டு, "அப்பா நீ இந்தச் சுள்ளிக்கட்டை அப்படியே ஒடி பார்ப்போம்" என்றான்.

ஒவ்வொருவரும் முயற்சித்துப் பார்த்தார்கள்: ஒருவராலும் முடியவில்லை,

இப்பொழுது நீங்கள் எத்தால் வாழலாம்? தெரிந்ததா? என்று கேட்டான்.

எல்லாரும் ஏகோபித்து "ஒத்தால் வாழலாம்" என்றார்கள்.

"மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்"

இந்த உண்மையை மறந்து விடாதேயுங்கள். நீங்கள் செய்துகொடுத்த சத்தியமும் ஞாபகமிருக்கட்டுமென்று சொல்லிவிட்டு கிழவன் பிராணனைவிட்டார்.

ஜெர்மனியின் சரித்திர ஸாரம் முழுவதையும் உங்களுக்குக் கதையாகச் சொல்லிவிட்டேன்.

உவமானத்துக்கு உவமேயம்.

"ஹோலிரோமன் எம்பையர்" என்று சார்லிமேன் அரசாண்ட ஆதி இராஜ்யம் தான் கிழவன். ப்ரஷ்யா உள்பட ஜெர்மனியின் சிற்றரசர் நாடுகளெல்லாம் அந்தக் கிழவனுடைய பிள்ளைகள். இவை தனித்தனியாகச் சிதறிக் கிடந்தபொழுது இவைகளையெல்லாம் சுள்ளிக்குச் சமானமாக நினைத்து ப்ரான்ஸில் தலையெடுத்தோங்கிய "முதலாவது நெபோலியன்" இவர்களை முறியடித்துவிட்டார்.

"எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்."

ப்ரேடரிக் அரசர் இந்த உண்மையை அறிந்து முதலில் தன்னுடைய நாட்டை ஒழுங்குபடுத்தி ஒற்றுமையென்னும் கயிற்றினால் எல்லாருடைய ஹிருதயத்தையும் கட்டி, பலப்படுத்தினார். அதனால் ப்ரஷ்யா மற்ற நாடுகளைவிடப் பேர் பெற்றுப் பலமாய் விளங்கியது. இந்த மர்மத்தை யவருக்குப்பின் வந்தவர்கள் அனுசரித்தும் அவ்வளவாக அதன் உள் சூக்ஷமத்தை யுணரவில்லை. 1870-ம் வருஷத்தில் பின்னும் சீர்குலைந்து போகும்படியான ஸ்திதி வந்தபொழுது ஒற்றுமையினாலாகும் பயனை யுணர்ந்து எல்லாரும் மறுபடியும் ஒருமனப்பட்டு நடந்துகொண்டார்கள். "சுட்டுச்சுள்ளி" சுள்ளியானாலும் அதன் பலம் மூன்றாவது நெபோலியனாலும், அவனுக்குப் பின்வந்த ப்ரான்ஸ் கவர்ன்மெண்டுகளினாலும் முறியடிக்கப்பட முடியாததாயிருந்ததைக் கண்டார்கள். இனி இந்தக் கட்டவிழாமல் இப்படியே நாமெல்லாரும் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்று இருந்த இடத்தில் தானே "ஜெர்மன் எம்பையர்" ஸ்தாபனம் செய்தார்கள். அவர்களுடைய பலத்துக்கெல்லாம் காரணம் இதுதான். "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்னும் பழமொழிக்கு அவர்கள் தேசசரித்திரத்தில் ஓர் உதாஹரணமானார்கள்.

## INFLUANCE OF HERIDITY AND TRADITION.

### பூர்வ வாஸனை.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இவர்களுடைய மூதாதையர்கள் மலை நாடுகளிலிருந்திழிந்து இத்தலியிலுள்ள நாடு நகரங்களையெல்லாம் கொள்ளையிட்டபொழுது மேரியஸ் என்னும் அக்காலத்து ரோமன் சேனைத்தலைவர் அவர்கள் பலத்தைக் குலைக்கப்பார்த்தார். அவர்கள் நாகரீகமில்லாதவர்களாதலால் ஐக்கியப்பட்டுச் சண்டை செய்ய வழியின்னதென்று தெரியவில்லை.

"குருட்டு யோசனை"

வழி தெரியாவிட்டாலும் எல்லாரும் ஒற்றுமையாக ஒரே குழுக்காய்க் கூடி நின்று எதிர்த்தால்தான் மேரியஸ் சைனியத்துக்கு எதிர்த்து நிற்கலாமென்று மட்டும் கண்டுகொண்டார்கள். திரும்பி ஓடிவோமென்றால் ஓடு[illegible]யில்லை. ஏனெனில் அவர்களுடைய மலைப்பாண் தேசங்களிற்குச் சென்றால் அங்கே பட்டினி கிடந்து குளிரில் விறைத்துச் சாகவேண்டியதுதான். எதிர்த்து நிற்கவோ மேரியஸ் கைகாரனாயிருந்தார். ஆகையால் அவர்களுடைய அற்ப மதிக்குத் தோன்றியபடி ஒரு உபாயம் செய்தார்கள். அது என்னவெனில் இது:—

"கட்டுப்பாடு"—ஸ்தூலபாவனை.

மலையிலிருந்து இழிந்து வந்தவர்களையெல்லாம், மேரியஸ் சைனியம் மடக்கியடித்து எதிர்த்து நின்று சண்டைபோட்டு ஜயித்தாலன்றி



வேறு தப்ப வழியில்லாமற் செய்தபொழுது, அவர்களெல்லாரும் சண்டையில் சிதறிப் போகாமலிருக்க ஒரு பெரிய கயிறுகொண்டு ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு சண்டை செய்தார்கள். தத்துவம் உண்மையாயினும் சாதனம் சாதகமளிப்பதாகவில்லை. ஏனெனில் சண்டைமுகத்தில் ஒருவர் பட்டிறந்தால் இறந்தவன்பிணம் மற்றவர்களையெல்லாம் இழுத்துக்கொண்டு விழ அது அவர்களுக்குப் பெரிய இடையூறாயிருந்தது.

ஜெர்மனியின் பூர்வக் குடிகள்.

இப்படி அவர்கள் 11-வருஷம் சண்டை செய்து பார்த்தும் பலிக்காமல் கடைசியில் கி. மு. 102-ம் வருஷத்தில் மேரியஸ் என்னும் ரோமன் சேனைத்தலைவரால் முறியடித்துத் துரத்தப்பட்டார்கள். அப்பொழுதுதான் அவர்கள் 'இத்தலி' தேசத்தை விட்டுவிட்டு (Rhine) ரைன் நதிதீரத்திலும் அதற்கப்பாலுள்ள எல்ப் (Elbe), டானியூப் (Danule) நதிதீரங்களிலும் கொள்ளைக்காரர்களாக குடிபுகுந்து ப்ரஷ்யா வரையில் ஜெயித்துக்கொண்டு சென்றார்கள். அக்காலத்தில் உழுதுண்டு வாழ்பவரான ஸ்லாவ்ஸ் அந்நாடுகளில் பூர்வந்தொட்டுக் குடியேறியிருந்தார்கள்.

டியூடன்ஸ் ப்ரஷ்யாவைத் தலையெடுக்கச் செய்தல்.

"கட்டுப்பாடு"—சூக்ஷ்ம பாவனை.

சுமார் 2000-வருஷ காலத்துக்கு அவர்கள் பா[illegible]தபாடெல்லாம் பட்டு கெடாதபடியெல் யன்த[illegible]ம் கெட்டுக் கடைசியில் 1871-ம் வருஷத்தில் அவ[illegible] பூர்வம் கயிற்றினால் கட்டிக்கொண்டு சண்டைப்பட்டதின் சூக்ஷ்மத்தை யுணர்ந்து, மனக்கட்டுப்பாடு செய்துகொண்டால், கயிற்றினால் கட்டிக்கொண்டு சண்டை செய்வதைவிட மேலாகவும், திறமாகவும், ஜெயம் பெறவும் சண்டைசெய்து சமாளிக்கலாம் என்று அறிந்துகொண்டார்கள்.

"சூக்ஷ்மமறிந்தும் காரணம் அறியவில்லை."

இந்த சூக்ஷ்மத்தையவர்கள் அறிந்தார்களாயினும் அவர்களுடைய குணம் மட்டும் முற்றும் மாறவில்லை. முன்னே கயிற்றினால் கட்டிக்கொண்டு சண்டை செய்த புத்திநுட்பத்தைப் போலவே, இப்பொழுது அவர்கள் மன ஒற்றுமையால் வெற்றியடைந்து ராஜ்ப ஸ்தாபனம் செய்த 43-வருஷத்துக்குள் தர்மாதர்மம் பாராமல் மன ஒற்றுமையினாலும் புத்தி விசேஷத்தாலும், உலகையெல்லாம் வென்று தம் அதிகாரத்தை நாட்டிவிடலாமென்று நினைத்து "Necessity knows no law" என்கிற (Robber knights,) கொள்ளைவீரர்கள் கொள்கையை மேற்கொண்டு தர்ம விரோதமாக பெல்ஜியத்தின்மீது வீணே படையெடுத்துச்சென்று அத்தேசத்தைக் கொள்ளையிட்டுக் கொளுத்திப் பாழாக்கிவிட்டார்கள். தர்மத்தின் ஸ்வபாவம் இன்னதென்று இவர்கள் இன்னும் முற்றும் உணரவில்லை.

"பட்டால்தான் தெரியும்."

"தர்மமே ஜயம் என்ற பிக்ஷை" கொடுக்கப் பாத்திரமில்லை. ஆகலால் "பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு" என்கிறபடி புத்தி நுட்பமுடையவர்கள் "புத்திக்குமிஞ்சி" வேறொன்றுமில்லையென்கிற மதம் கொண்டாடுவது, அனுபவத்தில் அதை யனுஷ்டித்து அதனால் வரும் பலனைப்பட்டனுபவித்தால் தான் தெரியும். வாயினால் சொல்லியும் எழுத்தினால் எழுதியும் தர்மோபதேசம் செய்வது பயன்படாதொழியும். பட்டனுபவிக்க வேண்டும். அப்புறம் தான் தெரியவரும்.

இப்படியாக ஜெர்மானியர் பூர்வோத்தரமான கதையைச் சொல்லிமுடிக்க அது இவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டது. இனி அவர்களுடைய எதிரிகளும் ஸ்வபாவத்தில் அவர்களுக்கு வேறுபட்டவர்களுமான ஸ்லாவ்ஸ் ஜாதியாரால் பூர்வீகம் தொட்டுப் பிரபலம் பெற்று விளங்கி இப்பொழுது இராஜ்யமென்கிற பேருமற்று அண்டையரசர்களால் ஆளுக்கொரு பாகமாகப் பங்கிட்டுக் கொள்ளப்பட்ட போலண்டு சரித்திரத்தைச் சற்று ஊன்றி விசாரித்துப் பார்ப்போம்.

## போல்ஸ் ஜாதியார் சரித்திரம்: முன்னுரை.
## History of the Poles: Introductory.

### The Prussian Foreign Policy.
### ப்ரஷியா அரசர்கள் அந்யதேசத்தாரோடு கூட்டுறவு செய்யும் முறை.

இப்பொழுதுள்ள ஜெர்மனி 19-வது நூற்றாண்டின் முதலில் ப்ரெடரிக் மஹாவீரனை ப்ரஷ்யா அரசர் போட்ட வித்திலிருந்து முளைத்துத் தழைத்ததாகச் சொல்லலாம்.

### "பீஜாங்குரம்"—வித்தும் மரமும்.

அந்த வித்து முளைத்துத் துளிர்த்துத் தழைத்து "ஜெர்மன் எம்பையர்" என்கிற மரமாயிற்று. அது பூத்துக் காய்த்துப் பழுக்கும்பொழுது அந்தப் பழம் தித்திக்குமோ, புளிக்குமோ, கசக்குமோ, துவர்க்குமோ? அதை இப்பொழுதுள்ள ஜெர்மன் சக்ரவர்த்தியும் அவருடைய சந்ததியும் தான் தின்று பார்த்துச் சொல்லவேண்டும். சரித்திரக்காரர் வேலை சரித்திரத்தை உண்மையாகச் சொல்லிக்கொண்டு போகவேண்டியது. போகும்போது கர்மதர்மத்தின் மஹிமையை மறந்துவிடாமல் அங்கங்கே நின்று முன்பின் நோக்கி, "இந்த மரம் இன்ன வித்திலிருந்துண்டாயது; இந்தப் பழம் இன்ன மரத்திலிருந்து காய்த்துப் பழுத்தது" என்று காரணகாரியதோரணை ஞாபகம் மறந்துபோகாமல் ஞாபகக் குறிப்பெழுதிக்கொண்டே போகவேண்டும்.

2000 வருஷங்களுக்குமுன் கயிற்றினால் கட்டிக்கொண்டு சண்டைப்போட்ட "கட்டுப்பாடு" என்கிறஸ்தூலபாவனை இப்பொழுது (Organisation) என்கிற சூக்ஷ்ம "கட்டுப்பாடாக" அமைந்து வேலைசெய்கிறது. தத்துவம் ஒன்றே. தோற்றம் பலவேறுபட்டிருக்கும்.

### ப்ரஷ்யாவின் அரசாட்சி முறை.
### (Principles of the Prussian Government.)

"நாயின்வாலைக் குணக்கெடுக்கலாமா" வென்றொரு பழமொழியுண்டு. அது எப்படி முடியாதோ, அப்படிப்போல ஒரு ஜாதியார் குணத்தையும் மாற்றிவிட முடியாது.

"திருடனுக்குத் தோன்றும் திருட்டுப் புத்தி" என்னும் பழமொழியி னுண்மையை இதற்குமுன்னெடுத்தோதி விளங்க வைத்தோம். அப்படியே "குருடனுக்குத் தோன்றும் குருட்டுப் புத்தி." இதற்கு ஒரு கதை யுண்டு; அதைச் சொல்கிறேன், கேளுங்கள்:—

### "குருட்டுப் புத்தி"—கதை.

ஒரு பிறவிக்குருடனிருந்தான். அவன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது "குழந்தைக்குப் பால் போட்டினையா" என்று தாயார் அகத்துக் காரியம் விசாரித்துக்கொண்டிருக்கக் கேட்டு, அம்மா, அம்மா, பால் எப்படியிருக்கும்?" என்று உன்னைக் கேட்கவேண்டுமென்று இருந்தேன்: மறந்தே போய்விட்டேன். இப்பொழுது அது ஞாபகம் வந்தது என்று சொல்லி "பால் எப்படியிருக்கும் அம்மா?" என்று கேட்டான்.

தாயார், பிள்ளையின் குருட்டுக்குத் துக்கித்து, "அப்பா அது வெள்ளையாயிருக்கும்" என்றாள். "வெள்ளையாக" என்றால் எப்படி? என்று கேட்டான் பிள்ளை.

விவேகமில்லாத தாயார் "கொக்காட்டமாகவிருக்கும்" என்றாள்.

"ஐயோ! அம்மாடி! அவ்வளவு பெரியதாயிருக்கிறதைக் குழந்தைக்குக் கொடுத்தால், குழந்தை தொண்டையில் சிக்கிக்கொண்டு செத்துப்போய்விடாதா?" என்று பிள்ளையாண்டான் விசன முற்றுக் கேட்டான்.

தாயார் தன் பிள்ளையினுடைய கண்குருடும் தன்னுடைய அறிவுக்குருடு பெரியதென்று கண்டு, அதற்குத் தக்க சமாதானம் சொன்னாள் என்பது கதை.

வெள்ளையென்பது கேவலம் நிறமாயிருக்க, அதற்கு உருவம் அமைத்தது குருட்டுத்தனத்தால் புத்தி விசாலப்படாதிருந்ததினால் என்றறிக. இது அதிசயமில்லை. இதற்கு இன்னொருகதை இவர்கள் சரித்திரத்திலிருந்தே யெடுத்துச் சொல்கிறோம்,





### "மரவட்டைபோன்ற மச்சம்!"

ஜெர்மனியைச்சேர்ந்த இராஜ்யங்களில் ஒன்றின் அதிபருக்கு "க்ராண்ட் டியூக்" (Grand Duke) என்கிற பட்டப்பேர். அவருக்கு ஒரு செல்வக் குமாரியிருந்தாள். அவள்தேசத்தில் புருஷர்களெல்லாம் மீசையைச் சரைத்துவிடுவது வழக்கம். சிறிதும் வளரவிட்டால் அது அந்தஸ்துக்குறைவு. ஆகையால் அவள் மீசையைப் பார்த்ததேயில்லை. அடுத்த தேசமாகிய போஹிமியாவின் இளவரசையவள் மணம் புரிவதாகப் பேசித் தீர்மானித்திருந்தார்கள். மணக்கோலம்கொண்டு புருஷன் வீட்டுக்குப் போகுமுன் அவருடைய அடையாளம் தெரிய வேண்டியதற்காக அவருடைய படத்தைக் காட்டினார்கள். அதைப்பார்த்ததும் அந்தப் பிரபுகுலச்செல்வி மாப்பிள்ளை நன்றாகத்தானிருக்கிறார்: ஆனால் மேலுதட்டில் மரவட்டைபோல் இரண்டு மச்சங்களிருக்கின்றனவே. அது முகவிகாரம்தான், என்றாள். அவள் மீசையைப்பார்த்து அப்படிச்சொன்னாள். இன்னும் இவளினும் மேதாவியான சக்ரவர்த்தியொருவரிருந்தார். அவர் கதையிது.

### "இருதலைப் பக்ஷி."

"ஹோலி ரோமன் எம்பையர்" க்ஷீணதிசை யடைந்தகாலத்தில் ஆஸ்திரியா சக்ரவர்த்தியா யிருந்தவர்தானே இத்தலிக்கும் சக்ரவர்த்தியாக விருந்துவந்தார். இது பாரம்பரிய சம்பிரதாயமாக மாத்திர மிருந்ததே யன்றி உண்மையான அதிகாரம் அவருக்கில்லை. அவர் இரண்டு இராஜ்யங்களுக்குத் தலைவரா யிருப்பதைக் குறிப்பிட அவருடைய கொடியில் எழுதப்பட்டிருந்த கருடன் அல்லது பருந்துப்பக்ஷிக்கு இருதலைகளிருந்தன.

அவை ஒன்றுக்கொன்று எதிர்புறம் நோக்கியிருந்தன. அவர் ஒருநாள் பரிவார ஸஹிதமாக வேட்டையாடப் போனார். அப்பொழுது வேட்டையில் பருந்து ஒன்றைச்சுட்டு வீழ்த்தி இவர் பார்வைக்குக் கொண்டுவந்தார்கள். அதைப் பார்த்துவிட்டு "இது என்ன விகாரமான பக்ஷி: இதற்கு ஒருதலையும் ஒருகழுத்தும் தானே இருக்கிறது" என்று சொன்னாராம். அவர் தம்தேசத்துக் கொடியிலெழுதப்பட்டிருந்த பக்ஷியைத்தவிர வேறு பக்ஷியைப் பார்த்ததில்லை. ஆகையால் "குருடனுக்குத்தோன்றும் குருட்டுப்புத்தி" யென்பது, அகக்கண், முகக்கண் இரண்டுக்கும் பொருந்தும்.

இப்பொழுதுள்ள ஜெர்மனி சக்ரவர்த்தியைச் சூழ்ந்தவர்கள் "அறக்கண் குருடு" வாய்ந்தவர்களென்று பல காரணங்களாலும் தோற்றுகிறது.

தீரத்தில் பெரியவரென்று பேரெடுத்த ப்ரெடரிக் அரசன் ப்ரஷ்யாவை முன்னுக்குக் கொண்டு வந்தார். (1819.) அதற்குமுன் அவர்முன்னோர்கள் "ப்ராண்டன்பர்க் மார்க்ரேவ்" (Margrave of Brandenburg) என்கிற பட்டம் மாத்திரம் தரித்திருந்தார்கள்,

### "அரசாட்சி முறை."

அவர் "அரசாட்சி முறை" விவரம் எழுதிவைத்திருப்பதில் கள்ளத்தனம், சூது, மித்திரபேதம், அடுத்துக்கெடுத்தல், இதையெல்லாம் அரசாட்சிக்கு இன்றியமையாத குணங்களாகச் சிறப்பித்துச்சொல்லி யிருக்கிறார். "ஜெர்மன் எம்பையரை" ஸ்தாபனம் செய்தவர்களில் முக்கியமானவரான ப்ரின்ஸ் பிஸ்மார்க் இவருடைய உபதேசம் பலிக்கப்பயின்றவர் என்று தெரிகிறது. ப்ரஷியாவின் அந்த உபதேச சம்பந்தமான நடபடிக்கைகள், அத்தேசத்தின் இருப்பிடத்தைப் †பொறுத்ததாக விருக்கிறது. அது 'பால்டிக்' கடற்கரையில் கொள்ளைத் தலைவர்களாயிருந்து பிந்தி "டியூடானிக் நைட்ஸ்" என்று பேர்பெற்ற யுத்தவீரர்கள் குடியேறினதிலிருந்துண்டானது ப்ரஷியா. அதைச் சுற்றியுள்ள தேசங்கள் (Elbe) எல்ப் நதிதீரத்தில் ஹாம்பர்க் நதிவரையில் ஸலாவ ஜாதியார் குடியேறியிருந்தனர். ஆதலால் அவர்கள் ஆரம்பமுதல் சண்டைபோட்டே ஜீவனம் செய்யவேண்டியவர்களாயிருந்தார்கள். ப்ரெ

† Geographical position.

டரிக் "ஆரம்பத்திலெப்படியோ அப்படித்தான் முடிவுவரையிலுமிருந்து தீரவேண்டு"மென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் சண்டை போடுவதும் சண்டைபோட்டுப் பிழைப்பதும் அவர்களுள்ஸ்வபாவம். இதை மறந்துவிடக் கூடாது.

சண்டைக்காரர் பங்கு போட்டுக்கொள்ளல்.

18-வது நூற்றாண்டில் ப்ரஷ்யாவைச்சுற்றி ஸ்லாவ் தேசங்கள் வலுவற்றிருந்தன: அத்தேசத்துக் குடிகளெல்லாம் உழுதுண்டு வாழ்வாராயிருந்தார்கள். ப்ரஷியர்கள் சண்டைபோட்டுப் பிழைப்பவர்களாயிருந்தார்கள். 1772-ம் வருஷத்தில் போலண்ட் இராஜ்யத்தை வலுக்குலைக்கவெண்ணி, ப்ரெடரிக், ஆஸ்திரியாவின் சக்ரவர்த்தியாகிய மேரியா தெரிஸாவோடு ஒருபக்கமும், ருஷியாவோடு ஒருபக்கமும் ஐக்கியக்கட்டுப்பாடு செய்துகொண்டு அத்தேசத்தைக் கொள்ளையிட்டு ஒவ்வொருவரும் அவர்கள் தேசத்துக்கடுத்த பாகத்தைத் தங்கள் இராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்கள்.

இதற்கு 20-வருஷம் கழித்து 1793-ல் ருஷியாவும் ப்ரஷியாவும் இன்னும் சிலபாகங்களை ஜயித்து தங்கள் ராஜ்யங்களோடு சேர்த்துக் கொண்டார்கள். இப்படிப் போனதெல்லாம் போக போலண்ட் இராஜ்யம் ஒரு சிறு துண்டாகமாத்திரம் மிஞ்சியிருந்தது. அதுவும் பேருக்கு மட்டும்தான் ஸ்வதந்த்ர மனுபவித்து வந்தது. 1795-ம் வருஷத்தில் அதுவும் போய்விட்டது. அத்தேசத்து அரசன் ஜீவனும்சம் (பென்ஷன்) வாங்கிக்கொண்டு ருஷியா தலைநகராகிய "ஸெண்ட்பீடர்ஸ்பர்க்" பட்டணத்தில் வசிக்கப்போய்விட்டார்.

"யார் ஆண்டால் என்ன ?"

[illegible] னும் அதற்கு எதிர்த்து நிற்கவில்லை. ஏனெனில் அவர்கள் தங்களுடைய சொந்த கவர்ன்மெண்டே திருப்திகரமாயில்லையென்று உணர்ந்திருந்தார்கள். எல்லாமொன்றா யிருக்கும் பொழுது யார் ஆண்டாலென்னவென்று சும்மா விருந்துவிட்டார்கள். அவர்கள் தங்கள் ஜாதி மத பாஷைக்கு விருத்தம் வருமென்று கனவிலும் நினைக்கவில்லை. இந்த விரோதம் இல்லாதபோது இதரராஜ்யங்களின் கீழ் இருந்து ஸ்வதந்தரம் பெறலாமென்கிற ஆசை யொருபக்கமிருந்தது.

"30-வருஷம் வாழ்ந்தவனுமில்லை: 30-வருஷம் கெட்டவனுமில்லை"

இப்படி பங்கு போட்டுக்கொண்டானபின் போல்ஸ் ஜாதியாரில் பெரும்பாலார் ருஷியாவைச் சேர்ந்தவர்களா யிருக்கக்கண்டார்கள். 18-ம் நூற்றாண்டின்முடிவில் நெபோலியன் தலையெடுக்கவும் அவர்களுக்கு நல்லகாலம் பிறக்குமென்று நினைக்கலானார்கள். நெபோலியன் ஆஸ்திரியாவை யடக்கிவிட்டான். ப்ரஷியாவும் அதன் கொட்டமடங்கியிருந்தது. ருஷியாவின் கொட்டத்தையடக்க அவன் படையெடுத்துச்சென்றான். அதன்கொட்டமும் அடங்கிவிட்டால், போலண்ட் இராஜ்யத்தைச்சேர்ந்த மாகாணங்கள் சிதறிப் போனவற்றை ஒன்றுசேர்த்து அவர்கள் ஒருஜாதியாக விருப்பதால் முன்னுக்கு வரலாமென்று நினைக்கலானார்கள்.

"30-வருஷம் வாழ்ந்தவனுமில்லை !
"30-வருஷம் கெட்டவனுமில்லை"
—யென்பது பழமொழியல்லவா.

பூர்வவிஸ்தீரணம்.

போலண்டு இராஜ்யத்தை 1772-ல் பங்கு போட்டுக்கொள்ளத் தொடங்கு முன் அது பால்டிக் கடற்கரைமுதல் கிட்டத்தட்ட கருங்கடல் (Black Sea) வரையிலும், கிழக்கே நீபர் (Dneiper) நதிமுதல் மேற்கே ஓடர் (Oder) நதிவரையிலும் பரவியிருந்தது.

"இலவுகாத்த கிளி"

ரூஸோ (Jean Jackes Rousseau) எழுதிய கிரந்தங்களினாலுண்டான மனோபாவனையில் ப்ரெஞ்சுக்காரர்கள் போல்ஸ் ஜாதியாரிடத்தில் மிகுந்த அனுதாபம் காட்டிவந்தார்கள்.





நெபோலியனும் போலண்டைசமகாணமு ஆஸ்திரியாவையும் ருஷியாவையும் அடக்கலாமென்று அவர்கள் ஆசையைக் கிளப்பிவிட்டு வந்தான். போல்ஸ் ஜாதியார் நெபோலியனுக்காக எவ்வளவோ பாடுபட்டு சூதுவாதுகள் செய்து தந்திரமாயும் பஹிரங்கமாய்ப் படைமுகத்திலும் அவனுக் குதவியாயிருந்து சண்டைசெய்து உதவிபுரிந்தார்கள். கடைசியில் நெபோலியன் இவர்களை ஏமாற்றிவிட்டான்.

"வாய்த்தவிடும்போய் அடுப்புநெருப்பும் அணைந்தது."

ஏமாற்றி விட்டானென்று தெரிந்தபின்னும் அவன் பக்ஷமாயிருந்து அதிக தீரத்தோடு சண்டைசெய்தார்கள். அவருடைய கைப்பொருள் படைவலி யெல்லாம் அவனுடைய சண்டையில் தோற்றுவிட்டு "வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அணைந்த அம்மையார் கதையாக" இருக்கிறதும்போய் ஏதோ வரப்போகிறதென்கிற ஆசையும் ஒழிந்துபோக மனமுடைந்து நின்றார்கள். நெபோலியன் போலண்ட் தேசத்துக்கு ஒருவித ஸ்வதந்திரமளித்து அதைத் தனிராஜ்யமாக ஏற்படுத்துவதாகச் சொன்னது, ஆஸ்திரியாவைச்சேர்ந்த போலண்டிலிருந்தும் ப்ரஷியாவைச்சேர்ந்த போலண்டிலிருந்தும் ஒரு பாகத்தைச்சேர்த்து "டச்சி அவ் வார்ஸா" (Dutchy of Warsaw) என்பதை யேற்படுத்தினதோடு நின்றது. அதுவும் அவன் அதிகாரம் குலைந்ததோடு போய்விட்டது. ஏனெனில் அதில் பெரும்பாகத்தை ருஷியாவோடு சேர்த்துக்கொண்டு "போலண்ட் ராஜ்யம்" என்கிறபோரால் அதற்கு ஒரு தனி கவர்ன்மெண்டு ஏற்படுத்தி "ட்ஸார்" ருஷியசக்ரவர்த்தி தன்ராஜ்யத்தைச் சேர்ந்ததாகச் செய்துவிட்டார்.

"க்ராகௌ" குடியரசு. (Cracow)

மூன்றாவது போஸன் (Posen) மாகாணத்தைமட்டும் ப்ரெடரிக் உவில்லியம் அரசன் அவர்கள் ஸ்வாதந்திரியம் குறையாமல் அவர்களை மேம்பட நடத்துவதாக வாக்களித்த[illegible] ப்ரஷியாவுக்குக் கொடுத்துவிட்டார்கள். ருஷியாவும் ப்ரஷியாவும் இப்பொழுது ஓரே எல்லைப்புறமுடைய ராஜ்யங்களாயின. இது இப்படி ஆயினும் போல்ஸ்ஜாதியார் அவர்களுடைய ஸ்வதந்தரத்தை (Cracow) "க்ராகௌ" வென்னும் சிறிய குடியரசு நாட்டில் காப்பாற்றிவந்தார்கள். போல்ஸ்களுடைய ஆசார அனுஷ்டான ஸம்பிரதாயங்களுக்கெல்லாம் மூலஸ்தானமாயிருந்த அந்த க்ராகௌ பட்டணத்தைப் பிடித்து அதன் ஸ்வதந்தரத்தை யழித்துவிடவேண்டுமென்று ஐரோப்பாவிலுள் பெரிய அரசர்கள் துவஜப் கட்டிக்கொண்டிருந்தார்கள். 1835-ம் வருஷத்திலே இந்த சூழ்வினை செய்து அதை நிறைவேற்றத் தீர்மானமும் செய்திருந்தார்கள். 1846-ம் வருஷத்தில் காலிஷியா (Galicia)வில் கலகமுண்டாக இது தான் சமயமென்று க்ராகௌ பட்டணத்தைப் பிடித்துக்கொண்டு அதை ஆஸ்திரியன் போலண்டோடு சேர்த்துவிட்டார்கள்.

1863-ம் வருஷத்து அக்ரம அழிச்சாட்டியம்.
(The Great revolution of 1863.)

ஸ்வாதீன மனுபவித்த க்ராகௌ ஆஸ்திரியாவோடு சேர்த்துக் கொள்ளப்பட்டதாக, ருஷிய ஆளுகைக்குள்பட்டதான "போலண்ட் ராஜ்யமும்" ஆபத்துக்குள்ளாவதாயிற்று. போலண்ட் ஜாதியார் நெபோலியன் காலத்தில் தாங்கள் ஸ்வதந்தரமடைந்துவிடலாமென்று எண்ணியதை விட்டொழித்தார்களில்லை. முற்றும் ஸ்வாதீனமாய் முன்போல் போலண்டு தனியரசு நடத்துவதா யிருக்கவேண்டுமென்கிற ஆசை அவர்களை விட்டதில்லை. அதனுடே ருஷியாவோடு சேர்ந்துள்ள "போலண்ட் இராஜ்யத்துக்கும்" அநர்த்தம் விளைவதாயிற்று. 1831-ம் வருஷத்தில் வீண்கலகம் செய்து கிளம்ப, அது பிரயோசனமற்றதாக முடிந்ததன்றி ருஷியாவோடு சேர்த்த போலண்ட் ராஜ்யத்துக்கு நல்லகாலம் பிறக்கலாமென்கிற எண்ணத்துக்கும் ஹானி விளைப்பதாயிற்று.

1848-வது வருஷத்து அக்ரம அமி...
(The French Revolution, 1848.)

1848-ம் வருஷம் ப்ரான்ஸில் அக்ரம அழிச் ...ாட்டியம் நடந்தபொழுது ஐரோப்பாவின் ...ற்ற தேசங்களில் ஜனங்கள் கலகம் செய்து ...ளம்பியதுபோல் போலண்டிலும் கலகம் ...செய்து பார்த்தார்கள்; அதுவும் பலிக்கவில்லை. ...தற்குப்பின் 1849-ம் வருஷம் முதல் 1862-வருஷம் வரையில் இன்னொரு நிதான கக்ஷி...ார் தலையெடுத்து ருஷியா ராஜ்யத்துக்குள் ...டுத்தானே ஸ்வயபாஷா ஸ்வதந்திரம், ஸ்வ ...தானுஷ்டான ஸ்வதந்திரம், ஸ்வ ஆட்சி சுதந் ...ரம் பெற்று ஜாதியொற்றுமை கலையாமல் ...வராஜ்யப் பேறு பெற்று வாழலாமென்று ...யற்சித்து வந்தார்கள்.

"ஆசையை அமுக்கிவிட அந்யரால் ஆமா?"

இதுவரையில் ஸ்வஜாதி மத அபிமானம் ...ண்டு ஸ்வய ஆட்சிக்குப் பாடுபடுகிறவர் ...ா அமுக்கிவிடலாமென்கிற எண்ணம் ...னுஷ்டானத்தி ...ிருந்ததில்லை. ஆயினும் ...த எண்ணம் மெட்டர்னிச் (Metternich) ...பவர் முயற்சியால் எங்கும் பரவிவந்தது. ...ன்ற நூற்றாண்டின் மத்தியில் ருஷியா ...ல்ஸ் ஜாதியார் ஆசையை அமுக்கிவிட ...ண்டுமென்று விரும்ப யாதொரு பலவந்த ... செய்ய நினைக்கவில்லை. 1862-ம் வருஷத் ... ருஷியா மந்திரியாகிய கார்ட்சகாப் (Gor-akoff)என்பவரை அவர்களை சமாதானமா ...ானே வழிக்குக் கொண்டுவரப் பார்த்தார். ...ல்ஸ் ஜாதியாரிடத்தில் அனுதாப சித்த ...டயவரான டியூக் அவ் கான்ஸ்டன்டைன் ...ர்களை இராஜப் பிரதிநிதியாக அனுப்பி, ...ல்ஸ் ஜாதியைச்சேர்ந்தவரும் அவர்களுக்கு ...கூலம் செய்வதில் பிரிய சித்தருமாகிய ...துவிஸ் வையிலோபாஸ்கி" (Marquis ...opolski) என்பவரை வித்யா இலாகா, நீதி ...கா, பொதுமத இலாகா இவற்றிற்கு மந் ...ாக அனுப்பினர். இவர் ஒரு கக்ஷியிலும் ...ந்தவரில்லை. ஆனால் முதிர்ந்த அறிவும் ... ... ... ...ன் காலத் ...துக்கு மேலான சீர் பெற்ற அபிப்பிராயமுடையவராயிருந்தார். இவர்கள் இருவரும் செய்த சமாதான முயற்சி ஒரு கக்ஷியாருக்கும் திருப்திகரமாயில்லை. அவர்கள் மனங்கொதித்து அவர்களைக் கொலை செய்ய ஆரம்பித்தார்கள். கடைசியில் நிதானமில்லாத துணிவு கொண்ட மித மிஞ்சின கக்ஷிக்காரர்கள் கை வலுக்க அவர்கள் 1863-ம் வருஷத்தில் ஒரு பெரிய கலகம் செய்து அக்ரம அழிச்சாட்டியம் தொடுத்தார்கள். இதுவும் பலிக்காது போகுமென்பது நிச்சயமாயினும் போல்ஸ் ஜாதியார் பஹீரதப் பிரயத்தனங்கள் செய்து தங்கள் ஸ்வதந்தரத்தைத் திரும்பிப் பெறப் பார்த்ததினால் கலகம் நீடித்திருந்து பெரு விபத்து விளைத்தது.

பிஸ்மார்க்கும் ஸ்லாவ்ஸ் விஷயமும்.

1859 முதல் 1862 வரையில் ஸெண்ட் பீடர்ஸ்பர்கில் ப்ரஷியாவுக்கு தூதாயிருந்தபொழுது பிஸ்மார்க் இந்த ஸ்லாவ் ஜாதியார் விஷயத்தை நன்றாகக் கவனித்து யோஜித்து வந்தார். போல்ஸ் ஜாதியார் விஷயம் ருஷியாவில் சமாதானமாக முடிந்ததனால் ப்ரஷ்யாவிலும் அப்படியே செய்யவேண்டி வருமென்று நினைத்து சூழ்வினையால் அது பலிக்காதபடி அதற்குவேண்டிய முயற்சி செய்துவந்தார். ருஷியர்கள் சமாதானமாகச் செய்தமுயற்சி விருதாவாகி போல்ஸ்ஜாதியார் அவர்களை ஜயித்தவர்களையெதிர்த்து நின்றபொழுது பிஸ்மார்க் ருஷியாவுக்கு உதவியாக வருபவராக வந்தார். ஐரோப்பாவின் மேற்குப் பாகத்திலுள்ள தேசத்தார் எல்லாரும் ஸ்லாவ் ஜாதியாருக்கனுகூலமாகவும் அவர்களிடம் அனுதாப முற்றவர்களாகவுமிருக்கிற விஷயம் அவருக்குத் தெரியும். அவர் அவர்களுக்கு விரோதமாக ருஷியாவைச்சேர்வதால் அவர்களெல்லாரும் அவரைத் திட்டுவார்களென்றும் தெரியும். தெரிந்திருந்தும் ருஷியாவினுடைய நேசம் ப்ரஷியாவுக்கு அவசியமா யிருந்தமையால்





அதற்காக வந்ததெல்லாம் வரட்டுமென்று துணிந்துதானே அவர் இப்படி மித்திரபேதம் செய்து அடுத்துக் கெடுக்கத்துணிந்தார். இவருடைய பிரயத்தனம் போல்ஸ் ஜாதியாருக்கு அநர்த்தமாய் முடிந்தது. ப்ரஷியாவின் கீழுள்ள போல்ஸ் ஜாதியாருக்குக் கெடுதல்வராவிடினும் அவர்களுக்குக்காலம் வரவில்லையென்று காத்திருந்தாரேயன்றி வேறில்லை.

1863-ம் வருஷத்துக்கலகம் நேர்ந்ததற்குப்பின் போல்ஸ் ஜாதியாரைக் கொடுமை செய்து துன்புறுத்த ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள்செய்த கொடுமைகளாவன:—

(1) உயர்தர வித்யாசாலைகளில் ஸ்லாவ் பாஷை போதிக்கப்படக் கூடாதென்று தடுத்துவிட்டார்கள்.

(2) காதொலிக் மதஸ்தர்கள் சிற்சில ஸ்வதந்திரங்களை யனுபவிக்க அநருகர்களென்று ஏற்படுத்தியது.

(3) போல்ஸ் ஜாதியாருக்கு ஸர்க்கார் உத்யோகம் கிடையாதென்று நிர்ணயித்தது.

(4) ருஷிய உத்யோகஸ்தர்களில் வெறி கொண்டவர்களானவரைத் தெரிந்தெடுத்து போலண்டையாளவென்று அத்தேசத்துக்கு அனுப்பி அவர்களைக் கொடுமையாக ஆளும்படி செய்தது.

இந்தக் கொடுமைகளெல்லாம் ருஷ்யமந்திரி அனுகூல சித்தராயிருந்தும் பிஸ்மார்க்செய்த சூழ்வினையினாலும் ஸ்வகாரியஸித்தியை யுத்தேசத்துச்செய்த தந்திரத்தினாலும் போல்ஸ் ஜாதியாருக்கு நேர்ந்தன. போல்ஸ் ஜாதியாருக்கு ருஷியாவும் பிஸ்மார்க்கும் செய்துவைத்த பிரயோஜனமிது. இதை யவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

ஆஸ்திரியன் போல்ஸ்.

(AUSTRIAN POLAND.)

பிஸ்மார்க்செய்த தந்திரத்தினால் ருஷியாவில் போல்ஸ் பெருங்கொடுமை யனுபவித்தார்களாயினும் ஆஸ்திரியாவைச்சேர்ந்த போல்ஸுக்கு அக்காலம் கூடியவரையில் நல்லதாகவேயிருந்தது. ஆஸ்திரியா க்ராகோவை பிடித்துச்சேர்த்துக்கொண்டபின் 1846-முத 1860-வது வருஷம்வரையில் 14-வருஷகால ஆஸ்திரியா சக்ரவர்த்தி அவர்களை யமுக்க பார்த்து அவர்கள் ஆசைக் கிடங்கொடுக்கமல் தானே கொடுமை யிழைத்துவந்தார். புறம் ஒரு ஜாதியாரின் ஆசையை யடக்குவ. ஆபத்தாக முடியுமென்று அவரே கண்கொண்டு தமது ராஜ்யத்தை ஆள ஒருகட்டுபாட்டுக்குள்பட்டதான ஏற்பாடுசெய்தார். இபடி "கட்டுப் பாட்டுக்குள்பட்ட கவர்ன்மெண்டு" (Constitutional Government) ஏற்டுத்து கையில் ஜனப்பிரதிநிதி சபையொன் ஏற்படுத்தலானார்.

"14-வருஷக் கெடுபிடி பலிக்காமற்போனது."

1846-ம் வருஷம் காலிஷியாவில் கலக நடந்ததுமுதல் போல்ஸ்ஜாதியார் கொட்த்தை யடக்கவென்று அம்மாகாணத்தில் ஸவான்களாயிருக்கிற போல்ஸுக்குள்யானவர்களும் பண்ணை வேலைக்காரர்களுமயிருக்கிற அதிபூர்வீகர்களான ஏழைக்குடிக இராணுவத்தில் சேர்த்துக்கொண்டு அவர்க இஷ்டமானபடியெல்லாம் போல்ஸ்வாசிகளை கொள்ளை யிட்டு ஹிம்ஸித்துவந்தார். இபடி 14-வருஷம் செய்துபார்த்தும் அது பலிகாதது கண்டு புதியதுரைத்தன ஏற்பாடு செயத்துணிந்தார்.

"போல்ஸ் அபாயம்விட்டு உபாயம்தேடல்"

காலிஷியாவிலுள்ள போல்ஸ் படித்தவர்ளும் நிலஸ்வான்களுமாக விருந்தமையால் தகள் செல்வாக்கினால் பிரதிநிதி சபையிலுள் ஸ்தானங்களையெல்லாம் பிடித்துக்கொண் ஒற்றுமையாக விருந்துகொண்டு கவர்ன்மெடார்க்கு முடக்குவந்த சமயத்தில் தங்களுக் வேண்டிய ஸ்வதந்திரங்களைப் பெற்றுக்கொண்டு தங்கள்வோட்டுகளை யவர்களுக்குக்கொத்து, இப்படியாக அனேக ஸ்வதந்திரங்களை பெற்றுவிட்டார்கள்,

"ஆர்ப்பாடமில்லாத ஏற்பாடு"

இப்பொழுது ஆஸ்திரியன் போல்ஸ் தங்கள் சொந்த ஜாதி "வைஸ்ராய்" (இராஜப் பிரதிநிதி) தங்களை யாளப்பெற்றிருப்பதோடு, சொந்தப் பிரதிநிதி சபையொன்று மேற்படுத்தப் பெற்றிருக்கிறார்கள். போலிஸ் பந்தோபஸ்து அவர்கள்வசமேயிருக்கிறது. ஸர்க்கார் உத்யோகங்களெல்லாம் அவர்கள் வசமே. அவர்கள் ஸ்வபாஷை ஸ்வதந்தரம் பூராவாகக் கொடுக்கப் பெற்றிருக்கிறார்கள். இப்படியாக போல்ஸ் ஜாதியாருடைய ஸ்வதந்தரம்

"திங்கற்றூர்க்கங் குண்டு"

என்கிற வசனப்படி, ருஷியாவிலுள்ளவர்களுக்கில்லாதபோது ஆஸ்திரியாவிலுள்ளவர்களுக்குண்டானதா யிருந்து அவர்கள் ஸ்வஜாதி ஸ்வதந்திர விருப்பம் அழியாது மணி விளக்குப்போல் அவர்கள் ஹிருதயத்து ஒளிர்ந்துகொண்டே யிருக்க ஆஸ்பதமாயிற்று.

இப்படியாக சென்ற 40-வருஷங்களாக போல்ஸ் ஜாதியார் தங்களுடைய ஸ்வஜாதீய ஸ்வதந்தர நோக்கத்தை மறந்துவிடாமல் தானே காப்பாற்றி வந்ததன்றி அவர்தள் எண்ணம் பலிக்குமென்கிற நம்பிக்கையும் உண்டாகும்படி நடந்துகொண்டிருக்கிறார்கள்.

## ருஷியாவின் கீழுள்ள போலண்ட்.

## (Russian Poland)

ஆஸ்திரியாவின் கீழுள்ள போலண்டில் பலித்த ஏற்பாடு முதலில் க்ராகௌவில் ஆரம்பிக்கப்பெற்று இப்பொழுது எங்கும் பரவியுள்ளதாயிருக்கிறது. அங்கே போல்ஸ் ஜாதியார் எல்லாருக்கும் பொதுவான 'ரிவியூ' (பத்திரிகை, யொன்று) பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தங்கள் பிதிரார்ச்சிதத்தை யிழந்தவர்களான போல்ஸ் எல்லாரும் அப்பத்திரிகையை மத்தியஸ்தானமாகக் கொண்டு அதைச் சூழ்ந்து தங்கள் எண்ணங்களை விர்த்திசெய்து வருகிறார்கள். இங்கேயொரு விஷயம் முக்கியமாய்க் குறிப்பிட்டு மனதில் வைக்கத்தக்கதாயிருக்கிறது. அது இது:—

"பொதுமனமின்றிப் பொதுநலமில்லை."

பொதுஜன க்ஷேமமும் பொதுஜனவிர்த்தியும் பொதுநல சிந்தையைப் பொறுத்தது. பொதுநலம் என்பது "பொதுமனம்" காரணமாகவுண்டாகிறது. "பொதுமனத்திலிருந் துண்டாகும் எண்ணங்கள்" தான் "பொதுஜன அபிப்பிராயம்" என்று சொல்லத் தகும். ஸ்வஜாதி, ஸ்வபாஷை, ஸ்வமதம், ஸ்வதேசம், ஸ்வய ஆட்சி, ஆகிய இவையெல்லாம் பொதுமனம் விர்த்திப்பதற்கான சாதனங்களேயன்றி வேறல்ல. "பொதுமனம்" விர்த்தித்து விட்டால் எல்லா துரைத்தன ஸ்வதந்திரங்களும் தானே விர்த்திக்கும். ஏனெனில் "பொதுமனம்" உண்மையில் "ஸமஷ்டிமனம்" ஆகும்.

"ஸமஷ்டிமனம்"

ஸமஷ்டிமனம் ஈசுவரஸங்கல்ப சாதனமானது. ஈசுவர ஸங்கல்பத்துக்கு விரோதமான மனித ஸங்கல்பம் பலிக்காது. "மனிதனொன்று நினைக்க, தெய்வமொன்று நினைக்கிறது" என்னும் பழமொழி "ஜீவேசுவர பேதம்" பாராட்டுவோர் சித்தவிருத்தி பயனற்றதாவதின் காரணத்தைக் குறிக்கிறது. இதற்குச் சரியாக இங்கிலீஷில் ஒரு பழமொழியுண்டு. அது "Man Proposes, God disposes" என்றுள்ளது. மனிதன் ஒன்றைப் பிரேரேபிக்கிறான். கடவுள் அது தர்மம் ஸம்மதமாயிருக்கிறதா வென்று பார்த்துப் பைஸல் செய்கிறார். ஆகையால் "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்பது எல்லாருக்கும் பொருந்தும். குடித்தன முறையில் குடித்தனத்தார் மனமொத்து இருந்தால் தான் வாழ்க்கை மணம்பெறும். "வீடு இரண்டு பட்டால் கூத்தாடிக் கொண்டாட்டம்." ஜன ஸமூகத்திலும், ஸமுதாய காரியங்களில் ஜனங்களுக்குள் மனஒற்றுமை யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் மோசம் வரும். "ஊரிரண்டுபட்டால் கூத்தாடிக்கொண்டாட்டம்." எப்போதும், ஒன்றுபட்ட விடத்தில் சுகமும், இரண்டுபட்ட விடத்தில் துக்கமும் உண்டாகும். ஆகலால் தான் "பேதபாவனையை" விசார புத்தியினாலும் விவேக ஞானத்தாலும் களைந்துகொண்டே யிருக்கவேண்டும். இல்லாவிட்டால் துன்பம் வரும்.

பஹிர்-அஹமுகம்: கருவிகரணம்.

துரைத்தனம் என்பதும் இராஜாங்கமென்பதும் "பொதுமனம்" அந்தர் முகத்தில் (உள்ளத்திலுள்) செய்யும் வேலைகளைச் செய்விப்பதற்காக ஏற்பட்ட பஹிர்முக சாதனங்கள். உலகிலுள்ள ஜனங்களெல்லாரும் மனதொத்துப் போய்விட்டால் அப்பொழுது துரைத்தனம் என்பதே அனாவசியமாகும்.





"உள்ளும் புறமும் ஒத்திருக்கவேண்டும்."

ஆதலால் ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒருமனப்பட்டுழைக்கவேண்டும். இந்த மனவொற்றுமை குறையக்குறைய துரைத்தனத்தின் சீரும் சிறப்பும் குறைந்துதானிருக்கும். ஆதலால் 'ஸமஷ்டிசேவையில்' கைதேர்ந்தவர்களே பொதுவிஷயங்களைக் கவனித்து தர்ம்ம ஸம்மதமாய் நடத்தவல்லவர்களாம்; அதற்கு அதிகாரிகளும் அவர்களே ஆவர். அந்த அனுபவம் இல்லாதவிடத்து அநர்த்தம் விளையும் தான். ஆதலால் துரைத்தனச் சீர் எல்லாம் பொதுமன அமைப்பைப் பொறுத்ததாகும். என்னதான் படைவலியுள்ள அரசனாயினும், பொதுமன சம்மதமின்றி நடப்பானாயின் அவன் காலக்கிரமத்தில் பொதுமனவிரோதத்துக்காளாகி அழிந்துபோவான். "பலதுளி பெருவெள்ளம்" ஆவதுபோல், பலர் எண்ணம் ஒன்று சேர்ந்தால் அது பொதுமன சங்கல்பமாகி, தர்ம்ம சம்மதமாயின் ஈசுவர சங்கல்பத்தோடொன்றுபட்டதாகும்.

"மனுதர்மம்"

"வெகுஜனவாக்கு தேவ வாக்குக்கு ஸமானம்" என்று சொல்வது இதனால்தான். பூர்வந்தொட்டுள்ள பழமொழியொன்றும் இதையே கதறுகிறது. "Vox Populi Vox dei" என்பதும் இதையே கூறுகிறது. ஆதலால் எவ்வாற்றானும் மனஒற்றுமைக்கு அனுகுணமானசாதனங்களைத் தேர்ந்தாள்வதே தர்ம துரைத்தனமாகும். இதைத்தான் "மனுதர்மம்" என்று சொல்கிறது. அதாவது, "ஒரு மன்வந்தர காலத்திற்கு மாறாதிருக்கும் தர்மம்" என்று பொருள்படும். இப்பொழுது துரைத்தனச் சீர் காரணமாக "ஆஸ்திரியன் போல்ஸ்" அடைந்த நலத்தை உழைப்புக்காரணமாக ருஷியர் கீழுள்ள போல்ஸ் அடைந்தார்களென்றால் அதனுண்மையைக் கிரகித்துக்கொள்ளும்சக்தி இதை வாசிப்பவர்களுக்கிருக்கு மென்று எண்ணுகிறோம். ஆகையால் அடுத்த அதிகாரம் "Industrialisation of Russian Poland" என்னும் தலைப்பேர் பெறும். (2-வது பாகம் மிக விரிந்துவிட்டபடியால், இதை வி-சி-யுத்தகாண்டம் 3-வது பாகத்தில் தொடர்ந்துவரக் காணலாம்.)

## LORD ROBERTS' DEATH.

### Feeling in the Indian Army.

*Delhi, November* 21.—The following from a responsible source has been transmitted to the Viceroy by the Secretary of State dated yesterday :—Late on the night of the 14th November, the news of Lord Roberts' death received by the Indian Head-quarters was communicated to the Corps early this morning. The news was most unforeseen and tragic, following as it does his recent visit. The news was received with profound grief by all ranks. There is no doubt that the only other Englishman who attained anything near the place Earl Roberts filled in the heart of Indian soldier, was John Nicholson. But certainly, no other English soldier has commanded such a measure of human affection. An Indian officer said : "He was truly not only the Colonel-in-Chief of our army but he was our father. He was a pattern of the British Officer under whom we gladly serve—brave, wise and above all full of sympathy. It is sad. What, parting with one like him is not ; but, thank God, we saw him here at the last. If I live, I will be able to tell my children in the Punjab that he shook hands with me and spoke to me in my own language. What death could have been more to his choosing, than to die amid the sound of the guns among us, the army that he loved so well.

All Indian Officers felt the fitness of the end. A Gurad-of-Honour of representatives of the Army Corps watched his last resting Place, Bikanir, Jodhpur, Kishengarh, Cooch Behar, Sir Pertab and others going to the funeral. Sir J. Wilcocks sent a message of sympathy and grief of the Indian Contingent.

## THE LATE LORD ROBERTS.

### காலஞ்சென்ற லார்ட் ராபர்ட்ஸ்.

சென்னையில் முக்கிய சேனாதிபதியாக விருந்து பிந்தி இந்தியா முழுமைக்கும் முக்கிய சேனாதிபதியா யிருந்தவரான பீல்ட்மார்ஷல் எர்ல் ராபர்ட்ஸ் அவர்கள் ப்ரான்ஸில் நடக்கும் யுத்தகளத்துக்குப் போனவிடத்தில் நவம்பர்மீ 14உ குளிர் தாங்காமல் மூப்பினால் மரணமடைந்துவிட்டார். இவர் இந்திய சைனியங்களிடத்தில் மிகவும் விசுவாஸம் வைத்தவர். ப்ரான்ஸில் சண்டைக்குப் போயிருக்கிற இந்திய சைனியங்களுக்கு இவர் கௌரவ கர்னல் (Honorary Colonel-in-Chief). ஆதலால் இந்திய துருப்புகளைப் பார்த்து வரவேண்டுமென்று யுத்த களத்துக்குப் போனார். அவர் போனபோது 'ப்ளாண்டர்ஸ்' மாகாணத்தில் சண்டை நடந்துகொண்டிருந்தது. ஈப்ரெஸ் (Ypres) சண்டை வெகு மும்முரமாய் நடந்துகொண்டிருக்க இந்திய துருப்புகள் அச்சண்டையில் எதிர்த்து நின்றார்கள். ஜெர்மானியர் 'காலே' Calais பட்டணத்தைப் பிடிக்கச் செய்த முயற்சி பலிக்காமற் போயும், அவர்கள் அதே நோக்கமாக அப்பட்டணத்தை நோக்கிச்செல்ல பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். சாதாரண துருப்புகளால் முடியாத காரியத்தை ஜெர்மனி சைனியத்தில் மிகப் பேர்போன வீரர்களான "க்ரனேடியர் கார்ட்ஸ்" (Grenadier Guards) என்கிற அதிவீரர்கள் மூலமாக எதிரிகளைவென்று ஈப்ரெஸ் (Ypres) மார்க்கமாக காலே பட்டணத்துக்குப் போகப் பார்த்தார்கள். அம்முயற்சி பலிக்காதபடி (Ypres) ஈப்ரெஸ் சண்டையில் அவர்கள் தோல்வியடைந்தார்கள். அந்தச் சண்டை நடந்துகொண்டிருக்கையில் எர்ல் ராபர்ட்ஸ் அவர்கள் குளிர் மிகுதியால் பார்நோவு கண்டு சுவாஸப்பையடைத்துக்கொள்ள யுத்த களத்தருகில் துருப்புகளுடன்கூட விருக்கையில் பீரங்கி வெடிகள் கேட்டுக்கொண்டிருக்க மரணமடைந்தார். அவருடைய பிரேதத்தை இராணுவ மரியாதைகளோடு இங்கிலாந்துக்குக் கொண்டுபோய் ஸெய்ன்ட் பால் கோவிலில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்திய ராணுவங்களின் பிரதிநிதிகளாக ஸர் பிரதாபசிங்குமுதல், ஜாட்பூர், பிகானேர் மஹாராஜாக்களும், இதர இந்திய அரசர்களும் துருப்புகளும் அவருடைய உத்தரக்கிரியை நடக்கும்பொழுது அவருடைய ஞாபகத்தைக் கொண்டாடவென்று இங்கிலாந்துக்கு வந்திருக்கிறார்கள். இந்தியாவில் ஒவ்வொருவரும் அவருடைய மரணத்துக்காக விசனிக்கிறார்கள். இவர் கான்பூரில் பிறந்தவர். உலகெல்லாம் புகழ்பெற்ற மஹா வீரர். ஆயினும் வெகு ஸாது. மிகவும் நல்லவர். பக்தி விசுவாசம் நிறைந்தவர். இவருடைய மரணத்தைக் குறித்து நாமும் துக்கம் கொண்டாடி இவர் பத்தினியாருக்கு அனுதாபங் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். இக்கடமையை நமக்காக நமது இராஜப்பிரதிநிதியவர்கள் இவருடைய பத்தினியாருக்கு நவம்பர்மீ 16உ தந்தி மூலமாய் தெரிவிக்க அவரும் நன்றி கூறி 18உ பதில் தந்தி யனுப்பியிருக்கிறார்.

---

## WAR NOTES :—யுத்த சமாச்சாரக் குறிப்புகள்.

கப்பல் சண்டை:—டிஸெம்பர்மீ 8உ காலை 7-மணிக்கு (Falkland Islands) பால்க்லாண்ட் தீவுகளுக்கு சமீபத்தில் வைஸ் - அட்மிரல் ஸ்டர்டீ யவர்களின் கீழுள்ள பிரிடிஷ் கப்பற்படை ஜெர்மன் கப்பற்படை யொன்றைத் தாக்கி, மூன்று ஜெர்மன் சண்டைக்கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாகச் சமாசாரம். ஐந்து ஜெர்மன் கப்பல்களில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்கள் மூன்று போக, 'நியூரெம்பர்க்,' 'ட்ரெஸ்டன்' என்னும் இரண்டு கப்பல்கள் ஓடிப் போய்விட்டன, அவைகளைத் துரத்திக்கொண்டு





பிரிடிஷ் சண்டைக்கப்பல்கள் பின்தொடர்ந்து போயிருக்கின்றன. சண்டையில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் பேர்:—(Scharnhorst) ஷார்ன்ஹார்ஸ்ட், (Gneisenau) நீஸ்னௌ, (Leipzig) லீப்ஸிக். சமுத்திரத்தில் ஓடிக்கொண்டிருந்த 9-ஜெர்மன் கப்பல்களில் 'எம்டன்' கோகோஸ் தீவண்டை (கீலிங்) ஸிட்னி யென்னும் ஆஸ்திரேலியன் கப்பலால் எதிர்த்துத் தகர்த்துக் கொளுத்திவிடப்பட்டது. கோனிக்ஸ்பர்க் (Koenigsberg), கீயர் (Geier) என்னும் வேறு இருகப்பல்கள் ஹோனலுலுவில் (Honolulu) † ரூபிகி (Rufigi) நதியில் வெளிப்போவதற்கின்றி சிறைப்படுத்தப்பட்டுள்ளன. பாக்கியுள்ள ஆறு கப்பல்களில், ஷார்ன்ஹார்ஸ்ட், நீஸ்னௌ, லீப்ஸிக் இம்மூன்றும் டிஸெம்பர்மீ 8உ நடந்த சண்டையில் மூழ்கடிக்கப்பட்டன. நியூரெம்பர்க், ட்ரெஸ்டன் இவ்விரண்டும் சண்டையிலிருந்து தப்பி யோடிவிட, அவைகளைத் துரத்திக்கொண்டு போயிருக்கிறார்கள். கார்ல்ஸ்ரூ (Karlsruhe) என்னும் மூன்றாவது கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தின் தென்பாகத்தில் 15-பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டது. இவைகளைத் தவிர துருக்கியார் வாங்கிக்கொண்ட கீபன் (Goeben,) ப்ரெஸ்லா (Breslau) என்னும் இரு ஜெர்மன்கப்பல்கள் ருஷியாவின் கடற்கரை யோரத்தில் தீங்கு விளைக்கப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. 'கீபன்' கப்பற் சண்டையில் வெடிகுண்டு பட்டு தலைகாட்டாது ஓடிப்பதுங்கிவிட்டது. ப்ரெஸ்லா கப்பல் 'ஸெவாஸ்டபூல்' (Sevastapool) என்னும் ருஷியன் துறைமுகத்தண்டை தலைகாட்ட கப்பற்படைகளாலும்ஆகாசரதப்படைகளாலும் தாக்கப்பட்டது. அவைகளுக்குத் தப்பி அது ஓடிவிட்டது. டிஸெம்பர்மீ 13உ வந்த தந்தி சமாசாரத்தால் 'கீபன்' கப்பல் மறுபடியும் தலைகாட்டி 'பாடூம்' (Batoum) பட்டணத்தைத் தாக்கி 15-வெடிகுண்டுகள் தீர்த்துவிட்டு ஓடிப்போய்விட்டதாகத் தெரிகிறது. மற்ற ஜெர்மன் கப்பல்களெல்லாம் பால்டிக் கடலில் பெட்டியிற் பாம்புபோல் அடைபட்டிருக்கின்றன. இப்படியாக சமுத்திரத்தில் பிரிடிஷ் கப்பல்கள் ஜெர்மன் கப்பல்களை தலைகாட்டவிடாம லடித்திருக்கின்றன. இது ஒரு பெரிய காரியம். (பிந்திவந்த தந்தி சமாசாரத்தால் சில ஜெர்மன் கப்பல்கள் ஆங்கில கடற்கரைப் பட்டணங்களிரண்டைத் தாக்கிவிட்டு ஓடிப்போனதாக சமாசாரம்.)

ஏன்நதிதீரச் சண்டை:—'ஏன்' நதிதீரத்தில் இருதரத்தாரும் இன்னும் விசேஷ தோற்புகெலிப்பின்றி எதிர்த்துக்கொண்டு நிற்கிறார்கள். ப்ளாண்டர்ஸ் மாகாணத்தில் நடந்து வரும் இதைத் தொடர்ந்த சண்டையில், ஜெர்மானியர் காலே (Calais)க்குப் போகச் செய்த பகீரதப் பிரயத்தனங்கள் இது வரையில் பலிக்கவில்லை. டிஸெம்பர்மீ 11உ வந்த சமாசாரத்தில் ஜெர்மன் சைனியங்கள் (Yser) ஈஸர் நதியின் மேற்குக்கரையை விட்டு ஓடவேண்டியதாக வந்ததாகவும், மேலண்டைப் பக்கத்தில் கூட்டாளிகள் சைனியம் ஸ்திரமாக விருக்க ஏற்பாடு செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

ஜியார்ஜ் அரசர் விஜயம்.—மாகூிமை தங்கிய ஜியார்ஜ் அரசர் ப்ரான்ஸுக்கு விஜயமாய்ச் சென்று அங்கே அகழ்களிலிருந்து சண்டை செய்யும் துருப்புகளைத் தவிர மற்ற சைனியங்களையெல்லாம் பார்வையிட்டு வந்திருக்கிறார். இந்தியாவிலிருந்து சென்ற சைனியங்களையும் பார்வையிட்டு அநேகருக்குப் பட்டங்கள் கொடுத்து கௌரவித்தாரென்று சமாசாரம்.

ஜெர்மன் சக்ரவர்த்தி:—ஜெர்மன் கெய்ஸர் தேகம் அசௌக்கியமாயிருந்து இப்பொழுது அனுகூலப்பட்டு வருவதாக சமாசாரம். கெய்ஸருக்கும் அவருடைய சேனாதிபதிக்கும் அபிப்பிராய பேதத்தினால் வித்தியாசம் உண்டாக நேரிட்டிருக்கிறதாகவும் சமாசாரம்.

போலண்டில் சண்டை: —"கீழண்டைப் போர்க்களம்." இப்பொழுது ஆஸ்திரியாவைச்

† In German East Africa.

சேர்ந்த போலண்டில் இருந்து வருகிறது. வார்ஸா(Warsaw)வைச் சுற்றிச் சண்டை நடந்துவருகிறது. லாட்ஸ் என்னும் பட்டணத்தை ருஷியர் பிடித்துக்கொண்டு பின்னர் காலிசெய்து விட்டார்கள்.

மேலண்டைப் போர்க்களம்: சண்டைமுகம்.

இந்தப் படம் ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் ஆங்கில துருப்புகளும் பெல்ஜியன், ப்ரெஞ்சு துருப்புகளும் ஜெர்மனியை எதிர்த்துச் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் சண்டைமுகத்தைக் காட்டுகிறது. அது வடகடல் ஓரத்தில் ஆஸ்டெண்டுக்குச் சற்று தெற்கேயுள்ள 'நியூபோர்ட்' முதல் 'டிக்ஸ்மூட்' 'ஆர்மென்டைர்ஸ்', 'லா பாஸ்' 'அர்ரஸ்' 'காம்ப்ரெ', 'பிரோன்' வரையில் தென்முகமாக வளர்ந்து 'ஸோம்' நதிக்கரையைத் தாண்டி தென்கிழக்கு முகமாகத்திரும்பி 'நோய்ன்', 'காம்பீன்' வரையில் சென்று, அங்கேயிருந்து 'ஏன்' நதிதீரத்தோடு அந்நதிக்கு வடகரையில் 'ஸாய்ஸன்ஸ்' என்னும் பட்டணத்தண்டை இருகரையும்

The Western Theatre of War showing the Belgian and Anglo-French Battle-Front.




மேலண்டைப் போர்க்கலம். ஆங்கில பெல்ஜியன் ப்ரெஞ்சு சண்டை முக மடங்கியது.

எதிரிகள் வசமாக அவ்விடத்தில் ஆங்கில சேனைகள் ஏன் நதியைத் தாண்டி எதிரிகளை அதற்கு வடக்கேயிருக்கும் குன்றுகளடர்ந்த மேட்டுநிலத்துக்குத் துரத்த அங்கே அவர்கள் பெரிய பீரங்கிகளை வைத்துக்கொண்டு முற்றிகைக்கு வேண்டிய பந்தோபஸ்தோடு க்ஷேத்திரபலம் அமிந்து எதிர்த்து நிற்கக்கண்டார்கள். 'ஏன்' நதிதீரத்துச் சண்டைக்களமும் குன்று பள்ளங்கள் மேடுகளும் "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்கிற தலைப்பெயரிட்டுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சண்டை தேவாசுரர்கள் சண்டையைப் போல் உலகம் 'விஷ்ணுமய'மாயிருந்து மண்ணுயிரைக்காக்க ஏற்பட்டதா, அல்லது ராக்ஷஸ



மயமாக எல்லாரையும் அழிக்க ஏற்பட்டதா என்பதை ஸ்தாபிக்கவே நடந்து வருகிறதாகச் சொல்லலாம். 'ஏன்' நதிதீரத்தில் உன்னதமாம் பாரதப்போர் நடக்கும் யுத்தகளப் படத்தில் 'ஏன்' நதி யோட்டமும் அந்த நதி தீரத்திலுள்ள 'ஸாய்ஸன்ஸ்' 'மிஸ்ஸி', காண்டி', 'வாய்லி' 'காஸ்மி' முதலான ஊர்கள் கிராமங்களும் இருக்குமிடம் காட்டப்பட்டிருக்கிறது.

இந்தப்படத்தில் 'மான்ஸ்' சண்டைக்குப் பின் ஆங்கில-ப்ரெஞ்சு துருப்புகள் ஜெர்மன் சைனியத்துக்குமுன் பின்வாங்கிஸெப்டம்பர்மீ 4உ ஸீன் நதியின் தென்கரையை அடைந்து மறுபடியும் அங்கிருந்து ஸெப்டம்பர்மீ 5உ அவர்களை எதிர்த்துத் துரத்தத் தொடங்கி ஏன் நதிதீரத்தின் வடகரையில் அவர்களைக் கொண்டு சேர்த்த விவரங்கள் தேதியோடு காட்டப்பட்டிருக்கின்றன.

மான்ஸ்-காண்டியிலிருந்து ஆகஸ்டுமீ 22உ பின்வாங்கத் தொடங்கி ஆகஸ்டுமீ 25உ காம்ப்ரே-லாண்ட்ரிஸீஸ் மார்க்கத்திற்குப் பின் வாங்கினார்கள். அங்கிருந்து வெர்மாண்ட்-ஸெண்ட்க்வெண்டின்-ரிப்மாண்ட் மார்க்கத்தை 26உயில் அடைந்து, ஆகஸ்டுமீ 28-ல் நோய்ன்-லாபீர் மார்க்கத்தை யடைந்தார்கள். அங்கிருந்து ஆகஸ்டுமீ 30உ காம்பீன்-ஸாய்ஸன்ஸ் வரையில் பின்வாங்கி ஸெப்டம்பர்மீ 2உ மார்ன் நதிக்குத் தெற்கே லாக்னி-விட்ரிக்குச் யரியாக வந்து நின்றார்கள். அங்கிருந்து ஸெப்டம்பர்மீ 4உ ஸீன நதிக்குத் தென்கரையை வந்தடைந்தார்கள். இதுவரையில் பிரிடிஷ் சைனியம் பின்வாங்கின விவரங்கள் ஸர் ஜான் ப்ரெஞ்ச் அவர்களுடைய முதலாவது இரண்டாவது ரிபோர்ட்டுகளிலும் தந்தி சமாசாரங்களிலும் காணலாம். ஸெப்டம்பர்மீ 5உயில் பிரிடிஷ் சைனியம் எதிர்த்து நின்று எதிரியைத் துரத்த ஆரம்பித்தார்கள். ஸீன் நதிதீரத்திலிருந்து மார்ன் நதி தீரத்துக்கு அவர்களைத் துரத்தியடித்து மார்ன் நதி தீரத்தில் நடந்த சண்டையில் எதிரிகளைத் தோற்கடித்தார்கள். பிறகு ஸெப்டம்பர்மீ 10உ எதிரிகள் ரீம்ஸ் பட்டணத்தை விட்டோடும்படி நேரிட்டது. போகும்போது ரீம்ஸ் பட்டணத்தைக் கொளுத்திவிட்டு அங்கேயுள்ள அழகான கோயிலைத் தகர்த்துத் தீக்கிரையாக்கிப் பாழாக்கிவிட்டார்கள். அப்படியே காம்பீனை விட்டோடும்படி நேர்ந்தபொழுது அதற்குத் தெற்கே பாரிஸுக்கு 20-மைல் தூரத்திலுள்ள ஸென்லிஸ் பட்டணத்தைக் கொளுத்திப் பாழாக்கிவிட்டார்கள். இப்பொழுது ஏன் நதியின் வடகரையில் க்ஷேத்திரபலமறிந்து முற்றிகை போடும் பீரங்கிகளை வைத்துக் கொண்டு எதிர்த்து நிற்கிறார்கள். ஸெப்டம்பர்மீ 12உ சாயந்திரம் ஆரம்பித்த சண்டை மூன்று மாசமாக இன்னும் நடந்து வருகிறது. இந்த சண்டைமுகம் மேலண்டைப் பக்கத்தில் வடகடல் வரையில் வளர்ந்துசென்று ஈப்ரெஸ் சண்டையில் முடிந்தும் முடியாமலிருக்கிறது. எதிரிகள் காலேயைப்பிடித்துக்கொள்ள பகீரதப் பிரயத்தனங்கள் செய்தும் பலிக்கவில்லை. கீழண்டைப் பக்கத்தில் சண்டைமுகம் 'வெர்டன்' வரையில் சென்று அங்கிருந்து 'பெல்போர்ட்' வரையில் ஓடி ஸ்விட்ஸர்லாந்து எல்லை வரையில் நீண்டிருக்கிறது. இந்தச் சண்டைமுகம் மொத்தம் 260 மைல் தூரம் விஸ்தீரணமுள்ளது.

---

The "Viveka Chintamani"—The War Number Part I of this Tamil Monthly Contains very interesting articles written in elegant and Chaste Tamil, on "A Page of Secret History" being some of Mr. Asquith's Disclosures and "The Spiritual Governance of the World." The Epilogue, "Righteousness alone triumphs" and the Historical Review "The Slav-vs-Teutons" deserve much Commendation. The articles on "Leave to your children the richest of all Inheritances" is a well-thought-out one. The Translation in verse of the Poet Lauerate's War Song will be much appreciated by the Tamil Reading Public.—*The Hindu* Dated 9-12-14.

# Diary of the War upto September 28.

## யுத்தாரம்ப தினசரிக் குறிப்பு.

ஜூலைமீ. 23உ ஆஸ்திரியா-ஹங்கேரி, ஸெர்வியாவுக்குக் கரூர்நாமா அனுப்பியதேதி.

„ 24உ ஆஸ்திரியா-ஹங்கேரியின் கரூர்நாமா, ஸெர்வியா மூலமாக ருஷியாவை சண்டைக் கிழுப்பதாயிருக்கிறதென்று தெரிவித்ததேதி.

„ 25உ ஸெர்வியன் கவர்ன்மெண்டார் அனுப்பிய பதில் ஆஸ்திரியாவுக்குத் "திருப்திகரமாயில்லை."

„ 28உ ஆஸ்திரியா, ஸெர்வியாவின்மேல் யுத்தம் தொடுத்ததேதி.

„ 31உ ஜெர்மனி "யுத்தஸந்நத்த" மாயிருக்கிறதாகத் தெரிவித்த தேதி. ருஷியாவில் சைனியங்கள் சண்டைக்குப் புறப்பட்டதேதி.

ஆகஸ்டுமீ. 1உ ஜெர்மனி ருஷியாவின்மேல் யுத்தம்தொடுத்து, லக்ஸெம்பர்க் என்னும் சிறிய இராஜ்யத்தின்மேல் படையெடுத்துச் சென்றது.

„ 2உ ஜெர்மன்ஸ் ப்ரெஞ்சு நாட்டினுட்புகுந்தது. பிரிடிஷ் கப்பல்படைகள் யுத்தம் பழகுவதற்காகக் கூடியிருந்தவை அப்படியே சண்டைக்கு ஆயத்தமாய்ப் புறப்பட்டது.

„ 3உ ஜெர்மனி, பெல்ஜியம் தேசத்துக்குக் கரூர்நாமா கொடுத்து, ப்ரான்ஸின்மீது யுத்தம் தொடுத்தல். ஜெர்மன் துருப்புகள் பெல்ஜியத்தின்மேல் படையெடுத்துச் சென்றது. பெல்ஜியம் ஜெர்மனியின் கரூர்நாமாவை நிராகரித்துத் தள்ளியது.

„ 4உ பெல்ஜியத்தை சண்டைக் கிழுக்கக்கூடாதென்று பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஜெர்மனிக்குக் கரூர்நாமா அனுப்பியதை அவர்கள் நிராகரித்துத் தள்ளியது. யுத்த ஆரம்பம்: பிரிடிஷ் சைனியங்கள் சண்டைக்குப் புறப்பட்டது. லீஜ் அண்டையில் சண்டை நடந்தது.

„ 5உ லார்ட் கிட்சனர் யுத்தமந்திரியாக வந்ததேதி. சமுத்திரத்தில் வெடிசுரங்கம்வைக்கும் ஜெர்மன் கப்பல் ஒன்று வடகடலில் பிரிடிஷ் சண்டைக்கப்பல் ஒன்றால் மூழ்கடிக்கப்பெற்றது.

„ 6உ பிரிடிஷ் 'க்ரூயிஸர்' (Amphion) ஆம்பியான் என்னும் சண்டைக்கப்பல் கடலிலிட்ட வெடிசுரங்கம் வெடித்து மூழ்கிப்போனது.

„ 7உ ஆல்ஸேஸ் மாகாணத்தில் ப்ரெஞ்சு துருப்புகள் வெற்றிபெற்றது. ஆப்ரிகாவில் ஜெர்மனிக்குச் சொந்தமான தென் டோகோலாண்ட் (S. Togoland) பிரிடிஷ் படையால் பிடித்துக்கொள்ளப் பெற்றது.

„ 9உ கடலில்மூழ்கி சண்டைசெய்யும் கப்பலான ஜெர்மன் 'ஸப்மாரின்' ஒன்றை பிரிடிஷ் 'க்ரூயிஸர்' (லேசான சண்டைக்கப்பல்) மூழ்க அடித்தது. லார்ட் கிட்சனர் இரண்டாவது சைனியத்துக்கு லக்ஷம் பேர்கள் இராணுவவீரராக வேண்டுமென்று கேட்கிறார்.





ஆகஸ்டுமீ. 10உ ப்ரான்ஸ் ஆஸ்திரியா-ஹங்கேரியின்மேல் யுத்தம் தொடுத்ததேதி.

„ 12உ பிரிடிஷ் கவர்ன்மெண்டார் ஆஸ்திரியா-ஹங்கேரியின் மீது யுத்தம் தொடுத்தது.

„ 15உ ஜெப்பான் கவர்ன்மெண்டார் சீனாவில் ஜெர்மானியர் வசமாயிருக்கும் 'கியோ-சௌ' (Kio Chau) விஷயமாய் அதை விட்டுவிட வேண்டுமென்று ஜெர்மனிக்கு கரூர்நாமா அனுப்பியது. பெல்ஜியத்தில் 'டினாண்ட்' (Dinant) என்னும் பட்டணத்தில் ப்ரெஞ்சு துருப்புகள் வெற்றி பெற்றது.

„ 17உ பிரிட்டிஷ் யுத்த சைனியங்கள் $1\frac{1}{2}$ லக்ஷம் கொண்டது ப்ரெஞ்சு தேசத்தில் 'பூலோன்' துறைமுகத்தில் வந்திறங்கியது. இங்கிலீஷ் சேனாதிபதி பீல்ட் மார்ஷல் ஸர்ஜான் ப்ரேஞ்ச் அவர்கள் ப்ரான்ஸ் தேசத்து ப்ரேஸிடெண்டு 'பாய்ன்கேர்' அவர்கள் பேட்டிபெற்று யுத்தகளத்துக்குச் செல்லல். ஸெர்வியன் சைனியம் ஆஸ்திரியா சைனியத்தைத் தோற்கடித்தது. ப்ரெஞ்சு துருப்புகள் ஆல்ஸேஸ் மாகாணத்தில் சைனியபலத்தோடு பிரவேசித்துச் செல்லல். ஜெர்மனிக்குச் சொந்தமான ஸ்வாகோப் மண்ட் (German S-W-Africa) நாட்டை அவர்கள் காலிசெய்து விட்டோடியது.

„ 18உ ஜெர்மன் சைனியங்கள் 'டிர்ல்மாண்ட்' (Tirlemont) வரையில் சென்று அங்கிருந்து பெல்ஜியத்தை ஜயிக்கப் புறப்பட்டது.

„ 20உ பெல்ஜியத்தின் சைனியங்கள் 'ஆண்ட்வெர்ப்' கோட்டையில் போய்ப் புகுந்துகொண்டது. ஜெர்மன் சைனியம் பெல்ஜியத்தின் தலைநகராகிய 'ப்ரஸ்ஸெல்ஸ்' (Brussels) பட்டணத்தைப் பிடித்து ஸ்வாதீனப்படுத்திக்கொண்டது. ருஷியர்கள் ப்ரஷியாவின் கீழ்பாகத்தின்மேலும் ஆஸ்திரியாவின்மேலும் படையெடுத்துச் செல்லல்.

„ 23உ ஜப்பான் ஜெர்மனியின்மீது சண்டை தொடுத்த தேதி. 'மான்ஸ்' (Mons) அண்டையில் பிரிடிஷ் சைனியத்துக்கும் ஜெர்மனிக்கும் பெரிய சண்டை. 'நாமூர்' (Namur) ஜெர்மானிய சேனையால் பிரவேசிக்கப்பெற்றது. சில கோட்டைகள் இன்னும் எதிர்த்து நிற்கின்றன. லீஜ் கோட்டைகள் சில இன்னும் எதிர்த்து நிற்கின்றன.

„ 24உ பிரிட்டிஷ்-ப்ரெஞ்சு கூட்டாளிகள் சைனியம் பெல்ஜியத்தை விட்டு ப்ரெஞ்சு எல்லையை நோக்கிப் பின்வாங்கியது. 'கியோ-சௌ'-ஜப்பானியரால் முற்றுகை போடப்பெற்று வெடி குண்டுகளால் தகர்க்கப்பட்டு வருகிறது.

„ 25உ லார்ட் கிட்சனர் லார்ட்ஸ் ஸபையில் பேசியது. ஆல்ஸேஸ் மாகாணத்தில் ஜெர்மானியர் ஆட்டம் அடங்கப்பெற்றது. ப்ரான்ஸின் வடபாகத்திலுள்ள 'காம்ப்ரே' (Cambrai) அண்டையில் பெரிய சண்டை. பிரிடிஷ் சைனியங்கள் சண்டை செய்கின்றன.

ஆகஸ்டுமீ. 26உ காம்ப்ரே சண்டை நடந்து வருகிறது.

" 27உ ஆஸ்டெண்ட் (பெல்ஜியத்தின் பிரதான கரைதுறைப்பட்டணம்). பிரிடிஷ் கப்பற்படைகளால் பிரவேசிக்கப்பெற்று காக்கப்பட்டு வருகிறது. ஜெர்மன் வியாபாரக்கப்பலாயிருந்து சண்டைக்கப்பலாக மாற்றப்பட்ட 'கெய்ஸர் உவில்ஹெல்ம் டெர் க்ராஸி' (Kaiser Wilhelm der Grosse) ஆபிரிகாவின் மேற்குப் புறத்துச் சமுத்திரக்கரை யருகில் 'ஹைப்ளேயர்' (Highflyer) என்னும் பிரிடிஷ் க்ரூயிஸர் கப்பலால் மூழ்கடிக்கப்பெற்றது. ருஷியர்கள் ப்ரஷியாவின் கீழ்பாகத்தின்மீது படையெடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

" 28உ லார்ட் கிட்சனர் இன்னொரு லக்ஷம்பேர் இராணுவவீரராகவேண்டுமென்று கேட்கிறார். ப்ரான்ஸின் வடபாகத்தில் ஓயாச்சண்டை நடந்து கொண்டிருக்கிறது.

" 29உ ஹெலிகோலாண்டிக்கு சமீபத்தில் பிரிடிஷ் கப்பற்படை வெற்றிபெற்றது. 5. ஜெர்மன் சண்டைக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. [ஆகஸ்டுமீ 28உ முதல் ஸெப்டெம்பர் 28உ வரையில் ஜெனரல் ப்ரெஞ்சு எழுதிய ரிபோர்ட்டின் சுருக்கம். மற்றோரிடத்தில் தொடர்ந்து சொல்லப்பட்டிருக்கிறது.]

ஆகஸ்டுமீ. 29உ பிரிடிஷ்படை ஸெய்ன்ட்குவென்டினிலிருந்து காம்பீன் (Compeigne & Soissons) ஸாய்ஸன்ஸுக்குப் பின்வாங்கியது. அமீன்ஸ் (Amiens) காலிசெய்யப்பட்டது.

ஸெப்டம்பர்மீ. 2உ மார்ன் (Marne) நதிக்கரைக்குத் தெற்கே பின்வாங்கி ஸீன் (Seine) நதிக்குப் பின் சென்றது.

" 5உ கூட்டாளிகள் எதிரி சைனியத்தை எதிர்க்கத் தீர்மானித்தது.

" 6உ ஜெர்மன்சைனியங்கள் எதிர்க்கப்பட்டது. (Menonville to Verdun) மினன்வில் முதல் வெர்டன் வரையில் பரவிநின்ற சைனியங்கள் பெரிய சண்டை தொடுத்தது. ஜெர்மானியர் பின்வாங்க ஆரம்பித்தது.

" 10உ சாயந்திரம் மேற்படி சண்டை முடிந்தது. ஜெர்மானியர் (Soissons-Rheims) ஸாய்ஸன்-ரெய்ம்ஸ் நோக்கித் துரத்தியடிக்கப்பட்டது.

" 13உ காலையில் பிரிடிஷ் சைனியம் 'ஏன்' (Aisne) நதியைத் தாண்டிச் செல்ல ஆரம்பித்தது, எதிரி பின்வாங்கி நின்றெதிர்க்கத் தலைப்பட்டது. காம்பீன் (Compiegne along the Valley of the Aisne to beyond Rheims) முதல் ஏன் நதிதீரத்தில் ரெய்ம்ஸுக்கு அப்பால் வரையில் தொடர்ந்து நின்று சண்டைதொடுத்தது.

" 19உ (New plan of attack to envelop the German right) ஜெர்மானியரை வலப்புறத்தில் தாக்க புது ஏற்பாடு செய்தது.

" 23உ இடப்புறத்தில் எதிரி தாக்கப்பெற்றுப் பின்வாங்கியது.

" 28உ எதிரி தொடர்ந்து சண்டைசெய்து ஜெயிக்கப்பார்த்து முடியாமற் போனது. பெரிய பீரங்கிகளின்றி சண்டைபோட்டு ஜயிப்பது சாத்தியமாயில்லையென்று பீரங்கிகள் வரவழைத்து சண்டை நடந்து வருகிறது.



"WE NEED HELP FROM ABOVE, FOR WITHOUT IT WE ARE HELPLESS"

"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."

"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."

ஸத்தியம் வத—SPEAK THE TRUTH.

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE".




[God is Love: Knowledge is Power: Aum
அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.]

"New Series" ஸத்தியமே ஜெயம்—SATYAMEVA JAYATE. "Approved"

புத்தகம். 22.] ஆனந்தஞு தைமீ, 1915ஞு ஜனவரிமீ [சஞ்சிகை 10.

"WE NEED HELP FROM ABOVE, FOR WITHOUT IT WE ARE HELPLESS"—*Admiral Sir John Jellieose.*

## DEATH OF THE VICEROY'S SON: UNIVERSAL SYMPATHY.

### MADRAS CHILDREN.

Mr. C. V. Swaminatha Aiyar, Honorary Secretary, Children's Day movement, Madras, has sent the following Message to His Excellency the Viceroy on the 22nd instant :—" Madras Children depressed and heart-broken join their parents in offering their respectful and heartfelt sympathy to His Excellency the Viceroy and the Honourable Diamond Hardinge in their sad breavement by the untimely death of Lieutenant the Honourable E. C. Hardinge. They feel the loss as that of a brother."

THE following telegram, has been receiv-d by Mr. C V. Smaminathiyar, Secretary, Children's Da; Movement. Lalitalaya Mylapore, Madras :—"His excellency is grateful to you, and the Madras Children for your kind sympathy with him in his sorrow."

### நமது அரசர் பிரதி ஜேஷ்ட குமாரர் மரணம்: ஜனங்களுடைய அனுதாப சிந்தை.

சென்னையில் "ஹார்டிஞ்ச் ஜயந்தி" கொண்டாடுவதற்கான பாலர்குழாம் சம்பந்தமாக ஏற்பட்ட பாலபோத ஸமஷ்டி சேவை சங்கக்காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ ஸி. வி. ஸ்வாமிநாதையர் அவர்கள், டிஸெம்பர்மீ 22உ கனம் பொருந்திய இராஜப்பிரதிநிதியவர்களுக்குப் பின்வரும் தந்திசமாசாரம் அனுப்புவாராயினர்.

"சென்னைச் சிறுவர்கள் கனம் பொருந்திய அரசர் பிரதிநிதியவர்களுடைய (ஜேஷ்ட குமாரர்) கனம். லெப்டினென்ட் இ. ஸி. ஹார்டிஞ்ச் அவர்கள் மரணமடைந்த துக்கசமாசாரத்தைக் கேட்டு அனுதாபத்தால் மனமுடைந்து முகம்வாடி, கனம்பொருந்திய அரசர் பிரதிநிதிக்கும் அவருடைய செல்வக்குமாரி கனம் டயமண்ட் ஹார்டிஞ்ச் அவர்களுக்கும் மட்டு மரியாதையோடு தங்கள் ஹிருதயபூர்வமான அனுதாபத்தை அவர்கள் பெற்றோர்களோடு ஒன்று சேர்ந்தவர்களாய் தெரிவிக்கலாயிருக்கிறார்கள். கனம். இ. ஸி. ஹார்டிஞ்ச் போனது அவர்கள் சகோதரர் போனது போலிருக்கிறது."

இதற்கு கனம் பொருந்திய இராஜப் பிரதிநிதியவர்கள் தம் அந்தரங்க காரியதரிசி மூலமாய்ப் பின்வரும் பதில் தந்தி யனுப்பியுள்ளார்:—"டில்லி. டிசெம்பர்மீ 28உ :சென்னை, மைலாப்பூர், லலிதாலயம், பாலர் திருவிழாக்கொண்டாடும் சபையின் காரியதரிசி ஸ்வாமிநாதையர் அவர்களுக்கு.—

"கனம் பொருந்திய அரசர்பிரதிநிதியவர்கள் அவருக்கு நேர்ந்த துக்கத்தில் நீரும் சென்னைச் சிறுவர்களும் உளம்கசிந்து காட்டிய அனுதாபத்துக்காக நன்றியுள்ளவராயிருக்கிறார்."

### "BY THIS SIGN WE CONQUER."

The Conflict of Spiritual Ideals.

ஐயமுத்திரை.

"This is *not merely a material, it is* also a spiritual conflict, said the British Prime minister in tones of conviction in the opening weeks. Upon this issue every thing that contains the promise and hope that leads to emancipation and fuller liberty for the millions who make up the masses of mankind will be found sooner or later to depend."

"The great social forces which roll onward in their majesty and might are on our side" exclaimed Gladstone in one of his great speeches.

It is equally true to affirm that in this Titanic War the great moral forces which roll onward in their majesty and might are on the side of the Allies.

He who does not know what those great moral forces are is deprived of half his armour, for thrice is he armed who knows his quarrel just and who has eyes to see the invisible Allies which fight on his side. All who would arm themselves in this great conflict for spiritual ideals should read a remarkable article by Mr. Benjamin Kidd in the "Daily Mail Year Book" for 1915.—*Public Opinion.*

Germany's ideal is "the religion of force inspired and organised as the world has never seen it before."

"There is only one way in which great Britain can attain to victory in the conflict. She can only win if, behind all her forces and through all her efforts, she is ultimately sustained in the prolonged struggle by an idealism which is higher and a belief and a determination which are stronger than those of Germany in this war."

"Progress represents that great spiritual integration of mind which has raised the conception of Right to the plane of the Universal by projecting the sense of human responsibility outside all theories of the State *whatsoever. It* has made RIGHT *independant of and superior* to all *interests of the State on whatever claim or mission they may be based, on whatever scale they may be represented or whatever force they may be backed.*"

"The contrary doctrine that no Right is above the State and that the State has no standard but that of power and expediency" resting on omnipotent force has been the standing challenge to liberty and progress in every phase of the stupendous struggles which make the history of the West. The principles of a higher civilisation have always broken it. But every new absolutism of the world has constantly essayed to follow in the path of its predecessors, and to inscribe *on its banner* the inexorable *motto which is inherent in the* conception and which *drives them all to their fate*, "World Power *or* Downfall."

Social Evolution is based on *eternal moral forces* which bear the burden of the FUTURE—the ultimate triumph of the principle of Universal Right.—*Benjamin Kidd.*

*"Sarvam Vishnumayam Jagat."*

"Whenever O descendant of Barata, there is decline of *Dharme*, and rise of *Adharma*, then I body Myself forth. Though I am unborn, of changeless nature, and lord of Beings, yet subjugating My Prakriti, I come into being by My own Maya."—*Bhagavad Gita.*

"Indeed unless our pride is humbled, unless we cling to truth unflinchingly, *we cannot* see God—"The ultimate triumph of the Principle of Universal Right."—*The Lesson of Vamanavathar.*

புஸ்தகம்-22.] [சஞ்சிகை-10.
"The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide."
ஆனந்தஹு தைமீ
விவேகசிந்தாமணி
January-February. 1915.
ESTABLISHED 1892

# THE WAR— "யுத்த காண்டம்" —NUMBER.

"பெற்றேர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றேர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னெஞ் சேயிகழ்க்க
யாச்சரிய மோதா னவர்க்கு."

162040

## A HOUSE-HOLD NARRATIVE OF CONTENDING FOLKS IN THE GREAT WAR OF 1914.

"உன்னதமாம் பாரதப்போர் செய்வார் கதை."

### "WE NEED HELP FROM ABOVE, FOR WITHOUT IT WE ARE HELPLESS."

ADMIRAL SIR JOHN R. JELLICO'S LETTER.

"தெய்வபலம் வேண்டும்: அஃதின்றி நமது பலம் செல்லாது"

அட்மிரல் ஸர் ஜான் ஜெல்லிகோ எழுதிய கடிதம்.

"It is good to know we are in the people's thoughts and prayers, for we need them. Our enemy is bold and skilful and with the new method of warfare, mines and submarines, it requires great care and vigilance to retain our superiority in the battleship class of vessel which will be the ultimate arbiter of the command of the sea. We need help from Above, for without it we are powerless, and I feel we shall obtain it for our cause is good. J. R. Jellicoe"—to a relative in Ceylon. (Vide Colombo telegram of Jany. 7th.)



**Admiral Sir JOHN R. JELLICOE.**
*In Supreme Command of the British Home Fleats.*

"எண்ணினேன் எண்ணமிது ஸ்வாமி" என்றூர்போல "ஜனங்கள் நம் நலத்தையே கருதிப் பிரார்த்தித்து வருகிறூர்களென்பதைக் கேட்கச் சுபமாயிருக்கிறது: ஏனெனில் அந்த பலம் வேண்டும் தான். எதிரி துணிவும் ஸாமர்த்தியமு முள்ளான்: கடலிற் சுரங்கமிட்டு தண்ணீரில் மூழ்கியோடித்தாக்கும் படகுகளோடு சண்டை செய்யும் நவயுத்த தோரணையில் போர்க்கப்பலின் மேலான பலத்தைக்காக்க விழித்தகண்மூடாது சாக்கிரதையாகவிருக்கவேண்டியிருக்கிறது, போர்க்கப்பல்பலத்தாலே கடலில் நம் அதிகாரம் சல்லவேணும், இதற்கு தெய்வபலம் வேண்டும்: அஃதின்றி நமது பலம் செல்லாது. நமது பக்கத்தில் நல்ல எண்ண மிருப்பதால், உள்ளத் துணர்வில் அந்த உதவி கிடைக்குமென்றேயிருக்கிறேன்: ஜெ. ஆர். ஜெல்லிகோ" இலங்கையிலொரு பெந்துக்கு எழுதிய கடிதம்.

# "BY THIS SIGN WE CONQUER."

"SYMBOLS" OR: "REALISED IDEALS."

"Observe........that of man's whole terrestrial possessions and attainments, unspeakably the noblest are his Symbols, divine or divine-seeming; under which he marches and fights, with victorious assurance, in his life-battle: what we can call his Realised Ideals."—*Carlyle.*




ஜய முத்திரை.

'ஏன்' நதிதீரத்தில் நடந்துவரும் சண்டை மேற்கே வடகடல்மட்டும் ஓடி, தென்கிழக்கே 'ஸ்விட்ஸர்லாந்து' எல்லை வரையில் பரவி 260-மைல் தூரம் விஸ்தீரணமுடையதாயிருக்கிறது. மஹாபாரதப் போரிலும் இது மிகப் பெரியதாக விருக்கின்றமையாலும் இந்தப் பாரதப்போரின் முடிவும் மஹாபாரதப்போரைப்போல், தர்மம் ஜயிக்குமா அதர்மம் ஜயிக்குமா என்பதை எதிர்பார்த்திருப்பதாலும் இந்தச்சண்டையை நாமெல்லாரும் நன்றாய் ஊகித்துணர்ந்து ஆராய்ந்து கவனிக்கவேண்டும். இதுதன்றி கீழண்டைப் போர்க்களத்தில் போலிண்ட் தேசத்திலோடும் 'விஸ்துலா' நதிதீரத்தில் 'வார்ஸா'வைச்சுற்றி ருஷியருக்கும், ஆஸ்திரியா ஜெர்மனிக்கும் சண்டை நடந்து வருகிறது. இந்த மஹா பெரிய சண்டை யென்னமாக உண்டாயிற்று?

ஒரு பள்ளிப்பையன் புத்திகெட்டுக் கேட்பார் பேச்சைக்கேட்டு * ஆர்சடியூக் ப்ரான்ஸ் பெர்டினெண்ட் அவர்களையும் அவருடைய மனைவியாரையும் விராஜிவோ பட்டணத்துத் தெருவில் கொலை செய்து விட்டான். அது காரணமாக உலகெலாம் பரவியுள்ள இப்பாரதப்போர் இப்பொழுது வெகு உக்கிரமாக நடந்து வருகிறது. இந்திய துருப்புகளும் சென்று சண்டை போட்டு போர்க்களத்தில் எதிரிகளைத் துரத்தியடித்தும் ஏராளமாக மாண்டு மடிந்து வருகிறார்கள். இதரதேசத்துத்துருப்புகளும் ஏராளமாக மாண்டு மடிந்து வருகிறார்கள். இரத்தவெள்ளம் ஆறுகப்பெருக செத்தவர்கள் பிணம் மலையாகக் குவிந்து வருகிறது. இவ்வளவும் என்னத்திற்கு? வேடிக்கையா? விளையாட்டா? வேடிக்கையுமில்லை விளையாட்டுமில்லை. எல்லாம் வினைப்பயனே.

இந்தப் பாரதப்போர் இகலோகத்தில் நடந்து வந்தாலும் முக்கியமாய் (Spiritual) பரதர்மகாரணமானதென்று சொல்லலாம்.

ப்ரஹ்லாதன் அசுரர்களுக்கு அரசனாக மஹா விஷ்ணுவாக முடி சூட்டப்பெற்றபின் அவருடைய பேரப்பிள்ளையாகிய மஹாபலி (மஹாவலி) சக்ரவர்த்தி உலகெலாம ஒரு குடைக்கீழ் ஆண்டு பூலோகத்தில் தனக்கு அதிகாரம் ஸ்திரப்பட்டது போதாமல் ஸ்வர்க்கலோகத்தையும் கட்டியாளவேண்டுமென்று அசுவமேதயாகம் செய்தார். இந்திரனுக்குப் பட்டம் போய்விடும்போலிருந்தது. தேவர்களெல்லாரும் சென்று விஷ்ணுவினிடம் முறையிட்டுக்கொண்டார்கள். "தர்மமேஜயம்! பயமில்லை!" என்று அவர் அவர்களுக்கு அபயம் கொடுத்தனுப்பினர். இது தேவலோகத்தில் (Spiritual world) நடந்த சமாசாரம்.





*The late Archduke Franz Ferdinand and his wife the late Duchess of Hohenburg.*

* கொலையுண்டிறந்த ஆர்ச் டியூக் ப்ரான்ஸ் பெர்டினெண்டும் அவருடைய மனைவி டச்செஸ் ஆவ் ஹோஹன்பர்க்கும்.

பூலோகத்தில் மஹாபலி சக்ரவர்த்தி திக்குவிஜயம்செய்து தேச தேச மன்னர்களையெல்லாம் ஜயித்து அளவற்ற ஐசுவரியம் தேடி, எல்லாவற்றையும் தானதர்மத்தில் செலவழிப்பான் அசுவமேதயாகம் செய்து யஜ்ஞமுடிவில் பிராமணர்களுக்கும் யாசகர்களுக்கும் கேட்டதையில்லை யென்னமல் கொடுத்து வழங்கிவந்தான்.

அப்பொழுது ஒரு பிராமணச்சிறுவன், பிரஹ்மசாரி விருதம் பூண்டோன், கையில் தண்டுகமண்டலம் ஏந்தி உக்கிரமா யெரித்த வெயிலுக்கு நிழற்றா குடையொன்று பிடித்துக்கொண்டு யாகசாலைக்குள் நுழைந்தான்.

மஹாபலி சக்ரவர்த்தி பிராமணச்சிறுவனைப் பார்த்தார். அவனுடைய முகஅழகும் தேஹகாந்தியும் அவர் மனதைக் கவர்ந்தது. அவன் ஆத்ம தேஜஸ் முகஜொளி அவருடைய மஹாகர்வத்தையும் அடங்கியிருக்கும்படிச் செய்தது.

அசுவமேதம் ஆய்விட்டது. அக்கிரபூஜையும் பிராமணர்களுக்கு தானம் கொடுத்தலுமே பாக்கி. இதுவும் இடையூறின்றி இனிது முடிந்துவிட்டால் இந்திரனுக்குப் பட்டம் போய் விட்டது நிச்சயந்தான். தேவலோகம் மஹாபலி கைவசமாய்விடும். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" என்கிற சுருதிவாக்குப் பொய்த்து, "ஸர்வம் வலிமயம் ஜகத்" என்கிற நூதன வாக்குப் பிரபலமாய்விடும். தர்மம் தலைசாய்ந்து விட்டது. அதர்மம் தலை யெடுக்கத்தயாராயிருந்தது. அந்த சமயத்தில் வாமனரூபியான சிறுபையன் வந்து யாகசாலையில் சேர்ந்தான்.

மஹாபலி சக்ரவர்த்தி அவனைப் பார்த்தார். பார்த்த பார்வையில் அவனுடைய வசீகரசக்திக்கு உட்பட்டவராய், "பிராமணோத்தமரே! வாரும்! உமக்கு வேண்டியதைக் கேளும். இதோ தந்தேன் என்று தத்தம் செய்ய தீர்த்த பாத்திரமும் கையுமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றார். "மஹா சக்ரவர்த்தியே. நான் பிராமணச் சிறுவன். அதிலும் பிரமசாரி. எனக்கு என்ன வேண்டியிருக்கிறது! ஆயினும் பிச்சையெடுப்பதை தீக்ஷையாக வகித்தவனுத

லால், என் காலடியால் மூன்றடி அளவு இடங் கொடுத்தால் நான் நியமநிஷ்டைகள் தவறாது யஜ்ஞம் செய்து வருவேன். அவ்வளவு உபகாரம் செய்தால் போதும்!" என்றான் பிராமணச் சிறுவன். பக்கத்திலிருந்த அசுரகுருவாகிய சுக்ராசாரியர் கவனித்தார். சிறுவனுடைய வாமனரூபத்தையும், அவனுடைய அளவற்ற தேஜஸ், காந்தியையும், அவன் முகவிலாசத்தையும் பார்த்தார். "ஓஹோ! இந்தக்கள்ளன் மஹா விஷ்ணுவே! இதில் ஏதோ மோசமிருக்கிறது!" என்று உன்னி, உடனே மஹாவலியின் காதில் உபதேசம் செய்வாராயினர். "உடல் சிறியானென்று மோசம் போகாதே! உள்ளே ஆளிருக்கிறான். அவனைப் பார்த்துப் பேசு!" என்று எச்சரித்தார்.

மஹாபலி சக்ரவர்த்தி குள்ளனை உற்று ஊன்றிப்பார்த்தார். இவன் ஏதோ அசாதாரணமான பேர்வழிதான் என்று கண்டுகொண்டார். ஆயினும் அஹத்தில் கர்வம்தலைக்கேறியிருந்தபடியால் மஹாவிஷ்ணுதரிசனம் அவருக்குக் கிடைக்கவில்லை.

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்பதிலுள்ள நம்பிக்கையை மாற்ற முடியவில்லை.

"நாம் உலகெலாம் ஜயித்த மஹாசக்ரவர்த்தி: இந்தச் சிறு பையனுக்கு பயந்து இப்படிப்பட்ட காலத்தில் அவன் கேட்டதைக் கொடுக்கப் பின்வாங்கி யஜ்ஞத்துக்குப் பங்கம் விளைக்கலாமா!" என்று யோசித்தார் சக்ரவர்த்தி.

என்ன செய்வான்! கொடுத்தாலும் சங்கடம்: 'தேஹி' யென்றவனுக்கு 'நாஸ்தி' யென்று சொன்னாலும் அழியாத அபகீர்த்திக்காளாவன். இப்படி இருவிதத்திலும் சங்கடம். இதற்குத்தான் "தர்மசங்கடம்" என்று சொல்கிறது.

இந்த தர்மசங்கடத்தில், மஹாவலி சக்ரவர்த்தி ப்ரஹ்லாதன் வம்சத்திலுதித்தவனாதலால், ஸத்தியத்தை விட்டுப் புரள இஷ்டப்படவில்லை.

"மஹாவிஷ்ணுவாகவே யிருந்தாலும், 'மஹாவிஷ்ணுவுக்குப் பிச்சை கொடுத்தான்' என்கிற கீர்த்தியொன்றே போதும். திரிலோகாதிபதியின் மகுடத்தைவிட அந்தக் கீர்த்தி பெரிதாய் விளங்கும்" என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு "சுவாமி! அப்படியே! இதோ மூன்றடி மண் தத்தம் செய்தேன்" என்று ஓம் என்கிற பிரணவத்தை உச்சரித்து தாரை வார்த்துக் கொடுத்தான். (படத்தைப்பார்க்க.) அவன் உள்ளம் அடங்காமகிழ்வடைந்தது.

பிராமணச் சிறுவன் முகம் சுருங்கியது!

"ஸ்வாமி, யேன் முகம சுருங்கியிருக்கிறது"? என்று கேட்டான் மஹாபலி சக்ரவர்த்தி.

அதற்கு பிராமணச் சிறுவன்:—"வாயால் கொடுத்தேன் என்று சொல்லி தாரை வார்த்து இலகுவாய் தத்தமும் செய்துவிட்டீர். நீரோ மஹாபலி சக்ரவர்த்தி. நானோ பிராமணச் சிறுவன். உம்மிடத்திலிருந்து நீர் கொடுத்த தானத்தை நான் கைப்பற்றி ஸ்வாதீனப்படுத்திய பின்னல்லவோ என் காரியம் முடிந்ததாகும்! 'அரசன் பகை ஆபத்து விளைக்கு'மென்பர்,—காரியமோ விட்டுக் கொடுக்கத்தக்கதாகவில்லை!—இதையெல்லாம் சிந்திக்க முகம் வாட்டம் கொடுக்காதா?" என்று கேட்டான்.

"ஸ்வாமி! மஹாபலி பொய்சொல்லமாட்டான். அந்த சிந்தனையொன்றும் வேண்டாம். உங்கள் சொத்தை உடனே கைப்பற்றிக்கொள்ளுங்கள்" என்றான் மஹாசக்ரவர்த்தி.

பிராமணச் சிறுவன் "ஆனால் சரி, நான் அடிபோட்டு அளக்கலாமா" என்று கேட்டு அந்தர்முஹமானார். உடனே அவர் விசுவரூபமாய் விளங்கக் கண்டான்.

பூமத்திய பாதாளமெல்லாம் அவருடைய ஒரு கால் மூடிக்கொண்டது. அந்தரிக்ஷமெல்லாம் அவர் தேஹமாக, மற்றொரு காலடியால் தேவலோகத்தையெல்லாம் ஒன்றாக அளந்துவிட்டார். நான்முக பிரம்மா அவர் பாதத்தை அர்க்கியபாத்திய உபசாரங்களோடு பூஜை செய்தார். (படம்பார்க்க.)





"மஹாராஜாவே, இரண்டடி யளந்தாய்விட்டது. மூன்றாவதடி அளக்க அடியை எங்கே வைக்கிறது?" என்று கேட்டார்.

மஹாபலி ப்ரஹ்லாதாழ்வார் ஆசீர்வாத பலத்தால், "ஸ்வாமி அடியேன் சிரஸில் வைத்தருள்க" வென்று தலையைக் காட்டினான்.

விஷ்ணுவும் அவன் சிரஸில் காலை வைத்து ஸ்ரீதளலோகம்போய்ச்சேரும்படி யழுத்திவிட்டார்.

உலகில் இந்திரனுக்கு பயம் தீர்ந்தது. தர்மம் நிலைநாட்டப் பெற்றது. வலியே பெரிதென்கிற வல்லடி வழக்கு ஒழிந்தது. உலகெலாம் புரக்கும் தர்ம ரக்ஷணகாரியம் முடிந்தது. ஆபத்துக்காலத்திலும் ஸத்தியம் தவறாத உத்தமசீலனை விட்டுப் பிரிந்திருக்க அவருக்கு மனங்கொள்ளவில்லை. ஆகையால் உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டிவிட்டு தானும் ஸ்ரீதளலோகத்துக்குச்சென்று அங்கே தபஸ் செய்து கொண்டிருந்த மஹாபலிக்குத் தரிசனம் தந்து "அப்பா அடுத்த இந்திரப்பட்டம் உனக்கே உரியது" என்று அபயம் கொடுத்துவிட்டு, அவனுக்கு துவாரபாலகனாயிருக்கும் தொழிலிலமர்ந்தார்.

பார்த்தால் இதுவெல்லாம் ஒரு பெருங்கதை. உளக்கண்ணால் பார்த்தால் எல்லாம் ஸநாதந தர்மமன்றி வேறொன்றுமில்லை. இந்த ஸநாதநமான தர்மம் ஒன்றாலும் ஒருபோதும் கெடுவதில்லை. "தர்மமே ஜயம்" என்பதற்குச் சந்தேகமில்லை. இதை 'பென்ஜாமின் கிட்' என்பவர் வெகு அழகாய் எடுத்துக் கூறி இந்தப் பாரத மஹாயுத்தத்துக்கு இந்த தர்மம் பொருந்துமென்று காட்டியிருக்கிறார். அதை அப்படியே இங்கிலீஷில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். (வி. சி. பு. 78-வது பக்கம் பார்க்க.)

---

## THE HISTORY OF THE POLES IN RELATION TO THEIR NEIGHBOURS.—(*Continued.*)

### போலண்ட் ராஜ்யமும் போல்ஸ் ஜாதியாரும்.

(291-வது பக்கத் தொடர்ச்சி.)

### INDUSTRIALISATION OF RUSSIAN POLAND.

### ருஷியன் போலண்டின் தொழில் விர்த்தி.

ருஷியாவின் கீழுள்ள போலண்டில் இரும்புக்கனிகளும், நிலக்கரியும் ஏராளமாக விருக்கின்றன. இவை சம்பந்தமாக ஒரு பெரிய வியாபாரம் ஏற்பட அதற்கு மூலஸ்தானமாக வாயது ருஷியன் போலண்ட். இது மூலமாக இப்பொழுது புத்திசாலிகளான ஒரு மத்திய வகுப்பாரும், வேலைக்காரர்களாய்க் கைதேர்ந்தவர்களான தொழிலாளிகள் வகுப்பாரும் உண்டாயிருக்கிறார்கள். பூர்வத்தில் நிலஸ்வான்களும் பயிரிடுங்குடிகளுமாகவிருந்தவர்கள் மறைந்து இப்பொழுது நடுத்தர வியாபாரிகளும், கணக்கர், வர்த்தகர்களும், தொழிலாளிகளுமான பேர்கள் தலையெடுத்திருக்கிறார்கள். இவர்கள் வர்த்தக வியாபாரத்தின் விர்த்தியினிமித்தம் ருஷியாவை யனுசரிக்கவும், ருஷியர்கள் இரும்பு, நிலக்கரி இவைகள் வாங்க வேண்டியதின் பொருட்டு போலண்டோடு ஐக்கியமாய் கூட்டுறவு கொண்டாடவும் நேர்ந்திருக்கிறது. இதனால் இருதரத்தாருக்கும் மனவொற்றுமை ஏற்பட்டு, பரஸ்பரம் வியாபார நம்பிக்கையும் விசுவாசமும் உண்டாகலாயிருக்கிறது. 1870-ம் வருஷத்தில் ப்ரான்ஸ் தோல்வியடைந்தபின் 'அக்ரமஅழிச்சாட்டிய' நடபடிக்கைகளால் (Revolutionary tactics) காரியவித்தி பெறலாமென்னும் நம்பிக்

கை குறைந்துவிட்டது. இப்படியாக, பொது நலசித்தம் விர்த்தியாகவும், பேதபுத்தி க்ஷீணித்துப்போகவும், ஆள்வோர் ஆளப்படுவோர் இருவருக்கும் பரஸ்பர நம்பிக்கை யுண்டாகி வளர்ந்து, இப்பொழுது ருஷியன் டியூமா (Duma) என்னும் துரைத்தனப் பிரதிநிதி சபையில் போல்ஸ் ஜாதியார் மெம்பர்களாகி "நாஷனல் டெமொக்ராடிக் பார்டி" யென்று சொல்லும் கக்ஷியாகி ருஷியர்களில் தாராளசித்தமுடையவர்களோடு சேர்ந்துழைப்பவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் ருஷியாவுக்கு அந்யமாயிருந்து ஸ்வதந்தரம் நாடாமல், ருஷ்யாவிற்குள்பட்டுத்தானே யிருந்து 'அக்ரம அழிச்சாட்டிய' வழிகளில் பிரவேசிக்காமல் சமாதானமாகவே ஸ்வய ஆட்சி சுதந்தரங்கள் பெற்று அது மூலமாக ஸ்வஜாதீய ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஒரு மனப்பட்டு பொதுஜன க்ஷேமார்த்தம் பொதுஜன அதிகாரம் பெற்று வாழ முயற்சித்து வருகிறார்கள். ருஷியா கவர்ன்மெண்டார் இது வரையில் இவர்களுடைய நோக்கத்துக்கனுகூலமாக விருப்பதாகக் காட்டவில்லை. போல்ஸ் ஜாதியார் டியூமா சபையில் மெம்பர்களான அவர்களினத்தார் எல்லாரும் ஒற்றுமையாக ஒருமனப்பட்டு நடந்துகொண்டதால் அதிக செல்வாக்குள்ளவர்களாயிருந்தார்கள். இவர்கள் இப்படி செல்வாக்கு மிகுந்தவர்களாகவே ருஷிய கவர்ன்மெண்டார் இவர்களுடைய முயற்சி பயன்படாதொழியவென்று இவர்களுடைய பிரதிநிதிகள் தொகையை ஒன்றுக்குப் பாதியாகக் குறைத்துவிட்டார்கள். ருஷியா மந்திரியாகிய M. ஸ்டோலிபின் (M. Stolypin) அவர்களுடைய ஏற்பாட்டை நன்றாகக்கவனித்து ஆலோசித்தபின் 'அதற்கு இணங்க முடியாது' என்று சொல்லிவிட்டார். ருஷியாவில் தாராளசித்தமும் விசாலமனமுமுள்ளவர்கள் போல்ஸ் ஜாதியாரை அனுசரணையாகவே நடத்தி முன்னுக்குக்கொண்டு வரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மனோபீஷ்டத்தை கவர்ன்மெண்டார் உணர்ந்து அவர்கள் மனமொப்ப நடக்கும்படிச்செய்ய அவர்களுக்குத் தருணம் வாய்க்காமலிருந்தது. இந்த "நாஷனல் டெமொக்ராட்" கக்ஷியைச் சேர்ந்தவர்கள் உண்மையாகவே ருஷியராஜ்யத்தில் சேர்ந்திருக்கப்பிரியப்பட்டவர்கள் என்பதும் ருஷ்ய சக்ரவர்த்தியதிகாரத்திற்குள்பட்டிருக்கப் பிரியப்பட்டவர்களென்பதும் ருஷியாவுக்கும் ஜபானுக்கும் நடந்த சண்டையில் ருஷியர் தோற்றுப்போனபின், ருஷியாவில் நடந்த கலகக்காலத்தில், போலண்டில் யாதொரு சலகமுமின்றி அமைதியும் சமாதானமும் மேலிட்டிருந்ததை அத்தாக்ஷியாகக் கூறப்படுகிறது. (ஆகஸ்டு மாஸம் 15-ந்தேதியில் பிறந்த இராஜ விளம்பரத்தின் அர்த்தம் இப்பொழுது விளங்குவதாகுமென்று நினைக்கிறோம்.) அந்த விளம்பரம் பிறப்பித்தவரான ருஷிய முக்கிய சேனாதிபதி க்ராண்ட் டியூக் நிகோலாஸ் அவாகளுடைய படத்தை இச்சஞ்சிகையின் மற்றோரிடத்தில் பிரசுரிக்க காணலாம்.) இவர்கள் ஸ்திதி இப்படியாக ப்ரஷ்யன் போலண்டின் ஸ்திதியைப்பற்றிச் சிறிது விசாரிப்போம்.

## ப்ரஷியாவின் கீழுள்ள போலண்டு.

## (Prussian Poland)

"பிஸ்மார்க் செய்த சதியோசனை."

பிஸ்மார்க் ஸெண்ட்பீடர்ஸ்பாகில் ஜெர்மன் தூதராயிருந்த காலத்தில் போல்ஸுக்குச் செய்த அபகாரத்தைப்பற்றிச் சொன்னோம். அவர் 1870-ம் வருஷம் வரையில் சண்டை மும்முரத்திலிருந்து விட்டார். 1871-ம் வருஷத்தில் "ஜெர்மன் எம்பையர்" ஸ்தாபகமானபின் அந்த வேலையில் மும்முரமா யிருந்துவிட்டார். இருந்தாலும் போல்ஸ் விஷயத்தில் கவனம் வைத்தவராகவேயிருந்தார். 1848-ம் வருஷத்தில் ப்ரான்ஸில் (Revolution) "அக்ரம அழிச்சாட்டியம்" நடந்தபொழுது போல்ஸ் ஜாதியாரைக் கிண்டிவிட்டுக் கலகம் செய்தது ப்ரஷ்யா தான் என்கிறார்கள். பெர்லின் ஆயுதசாலையிலிருந்து ஆயுதங்களைக் கொண்டுவந்து இரகஸியமாய்ப் போல்ஸ்பட்டாளம் ஒன்றுக்குக் கொடுத்துக் கலகம் செய்யத்தூண்டிவிட்டதாகச் சொல்கிறார்கள். இங்கே யிவர்களைத் தூண்டிவிட்டு, ருஷியாவின் பயத்தைக்கிளப்பிவிட்டு அதோடு சேர்ந்துகொண்டு போலண்டை அபகரிக்கச்செய்த தந்திரம் எப்படிப் பலித்ததென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். போல்ஸ் ஜாதியார் ப்ரெஞ்சுக்காரர்களைப்போல் குடியரசு துரைத்தனம் ஸ்தாபிக்க முயலுவார்களென்று ப்ரஷ்யாவுக்குத் தோன்றினதின்பேரிலே அவர்கள் செய்த வஞ்சகத்தாலும் மித்திரபேதத்தாலும் அடுத்துக்கெடுக்கும் தந்திரத்தாலுமே போலண்டு முற்றும் பகிர்ந்து பங்கிட்டுக் கொள்ளப்பட்டதென்று சொல்கிறார்கள்.

"துடையையும் கிள்ளி
தொட்டிலையும் ஆட்டினது."

பிஸ்மார்க் செய்த சூழ்ச்சி யென்னவென்றால் போல்ஸ் ஜாதியாரையும் இரகஸியமாய்க் கிளப்பிவிட்டு, ருஷியாவில் அவர்களுக்கு விரோதமாயுள்ள கக்ஷியையும் பலப்படுத்தி ஸ்லாவ்ஸ் ஜாதியார் ஒன்றுகூடச் செய்தமுயற்சியைக் கெடுக்கவேண்டுமென்பது. இதில் அவருடைய தந்திரம் பலிக்கவே, ப்ரஷியாவின் கீழுள்ள போல்ஸ் ஜாதியாரை யடக்க முயன்றார்.

"சதிபாதகம்."

அதற்காக அவர் செய்த சதியாலோசனை இரண்டு விதமானதா யிருந்தது. ஒன்று போல்ஸ் ஜாதியாருடைய செல்வத்தைக் குலைக்க யத்தனித்தது. மற்றொன்று அவர்கள் மனதையே மாற்றிவிடப் பார்த்தது.

முதல் சூழ்ச்சியை நிறைவேற்ற வேண்டி ப்ரஷியன் போலண்டிலுள்ள நிலசுவான்கள் தொகையைக் குறைக்க யத்தனித்தார்.

இரண்டாவது சூழ்ச்சி நிறைவேற பொது ஸ்தலங்களிலும் பொதுவிஷய சம்பந்தமான நடபடிக்கைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் போல்ஸ்பாஷையை உபயோகிக்கக்கூடாதென்று உத்தரவு செய்துவிட்டார்.

இவ்விரண்டு யோஜனைகளும் 1873 ம் வருஷத்தில் தீர்மானத்துக்கு வந்தன. ஆயினும் 13-வருஷகாலம் இந்த ஏற்பாடு அமுலுக்கு வராமல் தானே கிடந்தது. காரணம் என்னவெனில் பிஸ்மார்க்குக்கு, வியாபார ஸ்வதந்தரத்துக்கு விரோதமாகச் செய்த முயற்சியை யடக்குவதிலும், ஜனஸமூகக் கட்டுப்பாடு செய்துகொண்டு கிளம்பிய சபைகளை அமுக்குவதற்காகச்செய்த நிர்ப்பந்த சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதிலும் வேலை சரியாகவிருந்தது. இதோடுகூட அவ்வேற்பாடுகளை நிறைவேற்றுவது லேசானபாடாகவில்லை. போல்ஸ் நாட்டிலுள்ள நிலசுவான்கள் நிலத்தை விலைக்கு வாங்கி ஜெர்மன் குடிகளை நிலசுவான்களாக நியமிக்க, பெருந்தொகை கைம்முதல் வேண்டியிருந்தது. நிலத்தைப்பிடுங்கிக்கொண்டுவிடப்பட்டவர்கள் போக மற்றவர்கள் தங்களுடைய ஸ்வபாஷையை மறக்கும்படிச்செய்து ஸ்வஜாதியபிமானமென்பது அற்றுப்போகும்படி செய்யப்பார்த்தார். இதைப்பற்றி அவர் செய்த பிரயத்தனங்களையும் அதன் பலனையும் பற்றிச் சற்று விசாரிப்போம்.

"ஆனைக்கும் அடிசறுக்கும்"

பிஸ்மார்க் மஹாபுத்திசாலிதான். ப்ரெடரிக் முதுரையில் தேறிய தந்திரவாதியே. ஆனாலும் "மாமியாருக்கும் ஒரு சாமியார் உண்டு" என்பதை அவர் அறியவில்லை. இவருடைய தந்திரத்தையெல்லாம் பயன்படாமற் செய்யத்தக்க சக்தி யொன்றுண்டு என்பதை அவர் அறியவில்லை.

## Prussianisation Policy.

"கறுப்புநாயை வெள்ளைநாயாக்கச்
செய்தமுயற்சி"

மனிதன் செயற்கையில் என்ன தான் செயினும் இயற்கைக்கு விரோதம் செய்ய அவனாலாகாது, இது ஸநாதனமான தர்மம். இதை அதிகாரத்திலுள்ளவர்கள் அதிகாரக்கிறுக்கு தலைக்கேறியிருப்பதினால் அறிவதில்லை. தென்னிந்தியாவிலே ராயர் அப்பாஜி அரசாண்டகா

லத்தில் அவர் இப்படித்தான் முரட்டுத்தனமாய் இயற்கை விரோதமான காரியங்களைத் தன் அதிகாரவல்லமையினால் செய்து வருவாராயினர். அவருடைய மந்திரிகளெல்லாம் அவரிடம் எதிர்பேச அஞ்சி இந்த மூர்க்கனுக்குப் புத்தி சொல்வார் யார்? என்று நடுங்கியிருந்து விட்டார்கள். அப்பொழுது அவரிடத்தில் விதூஷகனாயிருந்த திருவாழ்த்தான் இராஜாவுக்குப் புத்திபுகட்ட ஒரு யுக்தி செய்தான். ஒரு அக்னிகுண்டம் நிர்மித்து அதில் தீவளர்த்து ஹோமம் செய்கிறபாவனை காட்டி ஒரு கறுப்பு நாயைக் குளிப்பாட்டி அதன் கழுத்தில் கயிற்றைக் கட்டியிழுத்துக்கொண்டு அக்னியை வலம் வந்து கொண்டிருந்தான். அரசன் பார்த்து என்னடா செய்கிறாய்? என்று கேட்டபொழுது "கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கப்போகிறேன்" என்று சொன்னான். அரசன் "முட்டாளே! நாயின் நிறத்தை உன்னால் மாற்றமுடியுமா?" யென்று கேட்க, அவன் அரசன் செய்த அக்கிரமங்களைச சொல்லி, "உங்களால் இயற்கை விரோதமான காரியம் செய்ய முடியுமானால் என்னால் ஏன் ஆகாது?" என்று கேட்டு புத்தி புகட்டினான். அந்த மாதிரி பிஸ்மார்க் செய்த அக்கிரமம் இயற்கை விரோதமானதால் பயன்படாதொழிந்தது.

ப்ரஷியன் போலண்டிலுள்ள நிலத்தை வாங்க ப்ரஷிய ஜனப்பிரதிநிதிசபையார் 1898-ம் வருஷம் வரையில் 24 கோடிபவுன் செலவிட அனுமதி கொடுத்தார்கள். இப்பொழுதுள்ள இரண்டாவது உவில்லியம் பட்டதுக்கு வந்தபின் பிஸ்மார்க்கை அவர் வீட்டுக்கனுப்பிவிட்டார். வேலை போன பிறகும் கூட இந்த ஏற்பாட்டை ஆதரித்துப்பேசி வந்தார் பிஸ்மார்க். இப்பொழுது இம்பீரியல் சான்ஸலராயிருக்கும் (பிரதான மந்திரி) ப்ரின்ஸ் வான் பூயூலோ அவர்கள் 1902-ம் வருஷத்திலும் கூட இது மிகவும் முக்கியமான அம்சமென்று பேசினர். கீழ்த்திசை மாகாணங்களில் ப்ரஷியர் குடியேறச்செய்வதற்கான ஏற்பாடு அதி முக்கியமானதாயிருப்பதன்றி நம் ஸ்வதேச க்ஷேமமும் அதைப் பொறுத்ததாயிருக்கிறது' என்று சொன்னார். இப்படி இவர்கள் ஒரே பிடிவாதமாய் போல்ஸ் ஜாதியாரை யடக்கிவிடச்செய்த பிரயத்தனங்களெல்லாம் என்னவாயிற்றுப் பார்ப்போம்.

"மாமியாருக்குமொரு சாமியார் உண்டு."

1906-ம் வருஷம் வரையில் மொத்தம் செலவில் 'ஸாங்ஷன்' கொடுக்கப்பட்ட 24 கோடிபவுனில் ஒன்றே முக்கால் கோடி பவுன் செலவு செய்துவிட்டார்கள். இவ்வளவு செலவு செய்ததற்குப்பலனாக 75-ஆயிரம் ஏகரா நிலம் போல்ஸாரிடமிருந்து ஜெர்மன்ஸ் வசம் வந்திருக்கிறது. போலண்டில் அவர்களுக்கு சொந்தமான "ஸெட்டில்மெண்ட் கமிஷன்' ஒன்றிருக்கிறது. அது நில பாங்கிமூலமாகவும் மற்ற ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமாகவும் (Co-operative Societies) வேலை செய்து வருகிறது. நல்ல லாபம் தரும்படியானது. இவைகளின் நடபடிக்கைகளினால் நிலத்தின் விலை மிகவும் அதிகரித்துவிட்டது. ஜெர்மன் நிலசுவான்கள் அக்கம்பக்கத்தார் பொல்லாப்புக்குட்பட்டுக்கொண்டு நிலத்தை வைத்துக்கொண்டு பிழைப்பதைவிட அதை போல்ஸுக்கு விற்றுவிடுவது லாபகரமாயிருக்கிறதென்று கண்டு விற்றுவிட்டுப் போய்விட்டார்கள். போல்ஸ் ஜாதியான் யாராவது ஜெர்மன்ஸுக்கு நிலத்தை விற்றானால் அவனையுடனே ஜாதிப்பிரஷ்டனாகத் தள்ளிவைத்து விடுவார்கள். ஸெட்டில்மெண்டு உத்தியோகஸ்தர்கள் சாப்பிட்டது போக நிலம் வாங்கச் செலவு செய்த ஸர்க்கார் பணத்திற்குப் பலன் இந்த 75 ஆயிரம் ஏகரா நிலமும் ப்ரஷியாவின் கடன் தொகையில் கால் பங்கு செலவழிந்ததும்தான் மிச்சம். ஸர்க்காரார் பொதுஜன விரோதம் செய்யத் துணிந்தால் அது எப்படியோ பயன்படாதொழியும் என்பது திண்ணம். ஏனெனில் பொதுஜன ஸம்மதமில்லாதபோது 'ஸர்க்கார்' என்கிற பேரேயில்லை. ஸர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்கள் அக்ரமமாக ஸர்க்கார் அதிகாரத்தைச் செலுத்தமுயன்றால் "மாமியாருக்கும் ஒரு



சாமியார் உண்டு" என்கிற கதையாகத்தான் முடியும். நிலத்தைப் பிடுங்கச் செய்த பிரயத் தனம் இப்படியாகப் பயனற்றதாக அவர்கள் ஸ்வபாஷையை யடக்கச்செய்த முயற்சியின் கதி யென்னவாயிற்றென்று பார்ப்போம்.

"நான் அது செய்யமாட்டேன்."

"கொட்டுக்கோடாலி பாரைக்கும் மூன்றிற் கும் இஷ்டம் வலிதென்பர்." இந்த இஷ்டம் (Cultivated Will) ஈசன் அருளேயாகும். இத ற்கு விரோதம் செய்யும் மனுஷப் பிரயத்த னம் பலிக்காது. ப்ரஷியா இப்பொழுது பெ ரிய இராஜ்யமாகிவிட்டது. அதன் அரசன் ஜெர்மனி இராஜ்யத்துக்கெல்லாம் சக்ரவர்த்தியாயிருப்பவர். "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்கிற மூதுரையை அனுசரித்து ப்ரான்ஸைத் தோற்கடித்துவிட்டார். ஐரோப் பாவெங்கும் பிரபலப் பேர்பெற்று நிகரற்ற செல்வம் படைத்துவிட்டார். இப்படிப்பட்ட இராஜாங்கத்தார் "தர்மமே ஜயம்" என்கிற உண்மையறியமாட்டாமல் அதிகாரக் கொழுப் பினால் அவர்கள் குடைக்கீழ் வசிக்கும் ஒரு தேசக் குடிகளின் பூர்வீகமான பாஷையை அவர்கள் சொந்த தேசத்தில் தானே வழங் காதபடி செய்யத் தீர்மானித்து விட்டார்கள். தீர்மானித்தபடி தாக்கீதும் பிறப்பித்து விட் டார்கள். ஸ்கூல் அதிகாரிகளுக்கெல்லாம் உத் தரவு போய்ச் சேர்ந்தது. ஸர்க்கார் உத்தர வை அமுலுக்குக் கொண்டுவரவேண்டி மறு நாட்காலமே பள்ளிக்கூடங்களில் எல்லாம் காலை வந்தனம் ஜெர்மனி பாஷையில் சொல்ல ஏற்பாடாகிவிட்டது. பள்ளிக்கூடங்களெல் லாம் திறந்தாயிற்று. பிள்ளைகளும் பள்ளிக்கு வந்துவிட்டார்கள். காலையில் பாடம் ஆரம் பிக்கவேண்டும். காலைவந்தனம் (பிரார்த்தனை) செய்யாமல் பாடம் ஆரம்பிக்கக்கூடாது. பள் ளிக்கூட வாத்தியார்கள் ஜெர்மனி பாஷையில் பிரார்த்தனையை எழுதிச் சொல்லும் படிகுழந் தைகளுக்குத் தாக்கீது செய்தார்கள். 50- ஆயிரம் குழந்தைகள் நாடெங்கும் ஒருமனதாய் "நான் அது செய்யமாட்டேன்" என்று விட்டார்கள். ஐரோப்பாகண்ட முழுவதும் இந்தச் செய்தி பரவிவிட்டது. இதர இராஜாங்கத்தாரெல்லாம் இதைக் கேட்டுச் சிரிப்பும் வெறுப்பும் கொண்டார்கள்.† குழந்தைகளை யென்ன செய்கிறது! ஒரு பெரிய கவர்ன்மெண்டார் இப்படி யோசனையின்றி நடந்துகொண்டதற்காக எல்லாரும் வருத்தப்பட்டார்கள். சர்க்கார் சட்டம் குழந்தைகளின் இஷ்டத்துக்கு விரோதமாகப் பலிக்கவில்லை!

ஆணைப் பெண் வசியமாக்கிய அனுபவம்.*

ஒஸ்ட்மார்க் என்னும் ஒரு டிவிஷனில் மட்டுமுள்ள போல்ஸ் ஜனங்களின் தொகை 1890-க்கும் 1900-க்கும் இடையிலுள்ள 10-வருஷகாலத்தில் 100-க்கு $10\frac{1}{2}$ அதிகமாகப் பெருகிற்று. 1900-வருஷம் முதல் போல்ஸ் ஜாதியாரின் பார்லிமெண்டு சபை மெம்பர்கள் நியமன 'வோட்டுகள்' தொகை 1903-ல் 342,783-ஆகவிருந்தது. 1907-ல் 453,764-ஆக விருத்தியாயிற்று. ஜனஸமூகத்தில் போல்ஸ் ஜெர்மன்ஸுக்குப் பின் வாங்கினவர்களாகவில்லை: அந்தஸ்திலும் குறைந்தவர்களாகவில்லை. ஜெர்மனியிலிருந்து படித்தவர்கள் போலண்டுக்கு ஜீவனார்த்தம் பிழைப்புத்தேடிவந்தால் அவர்களை

---

† "All Europe was amused and pained at the spectacle of a great kingdom like Prussia fuming and fulminating with rage while 50,000 School children upset the whole course of law by refusing to say their pray- ers in German!"—"1912 ? *Germany & Sea Power." by Archibaldd R. Colquhoun.*

* "Intermarriage means that the children, almost invariably, are brought up with Polish ideas." "Experience teaches," says Bismarck, "that a Polish wife makes her husband a Polish patriot in the twinkling of an eye." In short, we find this extraordinary anamoly by no means rare, however—that the conque- red race is proving stronger than its conquer- or.—"1912 ? *Germany and Sea Power" by A. R. Colquhoun.*

ஜாதிக்கட்டுப் பாட்டினால் ஒதுக்கிவைக்கிற வழக்கத்தால், போல்ஸ் ஜாதியிலே மத்திய வகுப்பார் கிளம்பி நல்ல ஸ்திதியிலிருந்து வருகிறார்கள். நிலத்தைப் பிடுங்கவும் குழந்தைகளை நிர்ப்பந்தப்படுத்தவும் தான் முடியவில்லையே, விவாக சம்பந்தத்தினால் போல்ஸ் ஜாதியாரை ஜெர்மன்ஸாகச் செய்துவிடலாமென்றும் பார்த்தார்கள். அதுவும் பலிக்கவில்லை. பிஸ்மார்க்தானே சொல்கிறார்:— "அநுபவ ரீதியாகப்பார்த்தால் போல்ஸ் ஜாதி மனைவி அவளுடைய புருஷனைக் கண்ணிமையப் பொழுதில் போல்ஸ் தேசாபிமானி யாக்கிவிடுகிறாள்." ஐயோபாவம்! அவர் என்ன செய்வார்! போல்ஸ் ஜாதிப்பெண்களின் கண்களைப் பிடுங்கிவிட்டு அவர்களை ஜெர்மன்ஸுக்கு விவாகம் செய்து கொடுக்கும்படியான சூழ்ச்சி செய்யத்துணிவு வரவில்லை! கூடுமானால் அதையும் செய்து பார்த்திருப்பார்! அதுவும் பலிக்காதென்று அவருக்குத்தெரியும். வீணாகக் கதையை வளர்த்துவானேன். ஜெயித்தவர்களைவிட ஜெயிக்கப்பட்டவர்கள் வல்லாளகண்டர்களாயிருக்கிற காட்சியை இங்கே யெல்லாரும் காணலாம். இது அதிசயமாக விருக்கலாம்: தோரணைக்கு முரணாகவுமிருக்கலாம். ஆனால் இது உண்மையானதென்பதை ஐரோப்பா முழுவதும் அறிந்திருக்கிறது. தேஹ பலத்திலும் மனோபலம் பெரியது. தேஹ மனோபலத்திலும் புத்திவன்மை பெரியது. தேஹ-மனோ-புத்திவலிமையிலும் இம்மூன்றும் ஒன்றுசேர்ந்த வலியிலும் "இஷ்டம்" வலிது. ஏனெனில் இது ஈசன் அருளோடு ஒன்றுபட்டிருப்பதினாலென்க.

"The Historic Mission of Prussia"

ப்ரஷியாவின் கடைப்பிடி நோக்கம்.

ப்ரஷியாவுக்குக் கீழ்ப்பட்ட போலண்டை "கருப்புநாயை வெள்ளை நாயாக்கப்பார்த்த திருவாழ்த்தான் மாதிரி" போல்ஸ் ஜாதியின் வாசனையறவும் ஜெர்மன்ஸ் வாசனை படியவும் செய்யவேண்டுமென்று முயன்றதெல்லாம் பலிக்காமற்போக, இப்பொழுது புதிதாய் ஒரு சட்ட நிர்ப்பந்த முண்டுபண்ணி போல்ஸ் நிலங்களைப் பிடுங்கி ஜெர்மன்ஸுக்குக் கொடுக்க யோஜித்து வருகிறார்கள். இந்த மசோதா சட்டமாகவும் செய்யப்பட்டிருக்கிறது. இதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய தொன்றுதான் பாக்கி. இந்த முறையை ப்ரஷியாவின் "நாஷனல் முறை"யாகச் சொல்கிறார்கள். இதை வெகு ஊக்கத்தோடும் விடாமுயற்சியோடும் கடைப்பிடிப்பாகப் பிடிக்க [illegible] பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டமுண்டு பண்ணினதற்குக் காரணம் ஜெர்மன் ஜாதியாரை அங்கே நிலசுவான்களாக்க வேறுவிதியில்லாமல் இப்படிச் செய்யவேண்டியதாயிற்றென்று ப்ரின்ஸ் வான் பூலோ சொல்லியிருக்கிறார். ஜெர்மனி சக்ரவர்த்தியும் 1907-ம் வரு ஜனவரி 7உ ப்ரஷியாவின் ஜனப்பிரதிநிதிசபையைத் திறக்கும்பொழுது செய்தபிரசங்கத்தில் "இது ப்ரஷியாவின் கடைப்பிடி நோக்கமாயிருக்கிறது" என்று சொல்லியிருக்கிறார். இப்படி நிர்ப்பந்தித்தாலும் காரியம் நிறைவேறாது என்கிறார்கள் போல்ஸ் ஜாதி அபிமானிகள்,

**GERMAN POLICY TOWARDS THE SLAVS.**

ஜெர்மன்ஸ் ஸ்லாவ்ஸ் ஜாதியாரை நடத்துமுறை.

ஜெர்மன்ஸ் ஸ்லாவ்ஸ் ஜாதியாரை இப்படி நடத்துமுறை யனுஷ்டிக்கலானது ஏன் என்றால் அதற்குக்காரணம் வேறு. அது என்னவெனில்:—

"மூக்கரையன் கதையான சூழ்ச்சி."

ப்ரஷியாவின் கிழ எல்லை 750-மைல் தூரத்துக்கு மலைத்தொடர், நதியோட்டம் முதலிய இயற்கையான பிரிவுகள் ஒன்றுமின்றி பள்ளத்தாக்கு நிலத்தில் ருஷியாவின் எல்லைக்கு ஒட்டினதாக விருக்கிறது. இது போதாதென்று ருஷ்யநாட்டில் ஒருபாகம் முளையடித்தது போல் பெர்லினுக்கு 180-மைல் தூரத்தில் பாய்ந்து நிற்கிறது. இப்படி இயற்கையான காவல் ஒன்றுமில்லாமலிருக்கிற எல்லையை அரண்



செய்யவென்று அங்கங்கே அரண் செய்யப்பெற்ற கோட்டைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தக்கோட்டைகள் சண்டைக்காலத்தில் பலந்தருவதாயிருக்க இவைக்குப் பின்னாலிருக்கும் நாடுகள் பந்தோபஸ்துக் கொடுப்பதாயிருக்கவேண்டும். இங்கேதான் போல்ஸ் ஜாதியார் இருக்கிறார்கள். அந்த நாட்டுவாசிகள் விரோத சித்தமுடையவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து கிளப்பவும் முடியவில்லை. ஜெர்மன்ஸ் ஆக மாற்றவும் முடியவில்லை. பகைவர் படையெடுக்குங் காலத்தில் இவர்கள் பேராபத்து விளைப்பவர்களாயிருப்பார்கள். ப்ரஷியாவின் கீழுள்ள போல்ஸ் ஜாதியாரைத் திருப்திசெய்யவேண்டின் அவர்கள் கட்டிக்கொண்ட நாடுகளைவிட்டுக் கொடுக்கவேண்டுமென்றுணர்ந்து, பிஸ்மார்க் தந்திரமாகச் சூழ்ச்சிசெய்து மூக்கரையன் கதையாக ருஷியாவின் கீழுள்ள போல்ஸ் ஜாதியார் நல்ல ஸ்திதிக்குவாராமலும் ருஷியா கவர்ன்மெண்டார் அவர்களுக்கு அநுகூலமாயில்லாத படிக்கும் செய்துவந்தார். அதுமுற்றும் பலித்துவிட்டது.*

"தன்வினை தன்னைச்சுடும்."

"One Reaps as one Sows."

"தன்வினை தன்னைச் சுடும்" என்பது ப்ரஷியா விஷயத்திலுண்மையாயிற்று. அவர்கள் சூழ்வினையெல்லாம் இப்பொழுது அவர்களுக்கே ஆபத்தாக முடிந்திருக்கிறது.

பூர்வத்தில் ருஷியாவை ஸ்லாவ்ஸ் ஜாதிக்குத் தலைமையாக வைத்துக்கொண்டு ஸ்லாவ்ஸ் ஜாதியார் ஒன்றுகூடப் பிரயத்தனம் செய்யலாமென்று நினைத்தார்கள். இது பால்கன்ஸ் நாடுகளையெல்லாம் ருஷியாவின் ஆளுகைக்குள் கொண்டு வருவதாயிருக்குமென்று அனேகர் இதற்கிணங்கினார்களில்லை. மேலும் ஸ்லாவ்ஸ் ஜாதியைச்சேர்ந்த பலதேசத்தாரும் 'ஒருவருக்கொருவர் விரோதமாய் பொறாமை பாராட்டிக்கொண்டிருக்கிறபடியால் இவர்களெல்லாரும் ருஷியாவை யழைக்க உடன் படமாட்டார்கள்.

இப்பொழுது ஸ்லாவ்ஸ் ஜாதியார் எல்லாரும் சேர்ந்து ஒரு ஐக்கிய கட்டுப்பாட்டுக்குள்பட்டு கவர்ன்மெண்டுகள் வேறுபடினும் ஸ்வஜாதியபிவிர்த்தி நோக்கத்தில் ஒன்றுபட்டுழைக்கக்கருதி 'பான்-ஸ்லாவ் முயற்சி' செய்து வருகிறார்கள். அதாவது "ஸ்லாவ்ஸ் எல்லாம் ஒன்று" என்கிற லக்ஷியம் கொண்டுழைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். நாகரிகத்திலும் ஜனஸமூகவிர்த்தியிலும் ருஷியாவின் தலைமையை ஒப்புக்கொள்ளாதவர்களும் இப்பொழுது கிளம்பியிருக்கும் நவமான ஸ்லாவ்ஸ் முயற்சியில் (Neo-Slavism) ஈடுபட்டுழைக்க ஆக்ஷேபனையிராது.

"ஸ்லாவ்ஸ் நவஜனமுயற்சி."

"Neo-Slav Movement." †

இந்த ஜனமுயற்சி (Movement) பொஹிமியாவில் உற்பத்தியாகி இராஜாங்க ஸ்வதந்திரத்தை அவ்வளவாகப் பாராட்டாமல் ஸ்வஜாதியவிர்த்தியையும், ஸ்வபாஷா விர்த்தியையும், ஸ்வஜனாபிவிர்த்தியையுமே பிரதமமான நோக்கங்களாகக்கொண்டுள்ளதாயிருக்கிறது. இந்த ஏற்பாட்டினால் எந்த தேசத்தின் அந்தஸ்துக்கும் குறைவுவர நிமித்தமில்லை. இதைப் பிரேரேபித்து வேலை செய்து வருகிறவர்கள் ருஷியாவின் உத்யோகஸ்தர்களாகவின்றி ஸ்லாவ் ஜாதியாரின் பூர்விக ஸ்தானமாகிய பொஹிமியாவிலுள்ள பொதுஜனப்பிரமுகர்களாயிருக்கிறார்கள். ருஷியாவில் 'லிபரல்' கக்ஷியார் இதற்கு அநுகூலமாக விருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்லாவ்ஸ் ஜாதித் தலைவர்களும் ருஷ்ய ராஜ்யத்திற்குள்ளிருந்தாலே போலண்ட் ஸ்வஜாதீய ஸ்வதந்திரமனுபவிக்கப்பெற்றால் போதுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

† "A Bohemian delegate to the second Neo-Slav conference told his Russian hearers that Justice to the Poles is essential to Slav Unity and progress."—A. R. Colquhoun in the Royal Colonial Institute Journal.

"கழுத்துக்குக் கயிறு."

இது ப்ரஷியாவுக்கு கழுத்துக்குக்கயிறு கொடுத்ததுபோல் இருக்குமென்பதிற் சந்தேகமில்லை. இதையெல்லாம் ஆரத்தீர அமர்ந்து விசாரித்துணர்ந்து படத்தில் இந்த தேசங்களிருக்கிற ஸ்தானத்தையும் இருப்பையும் நுட்பமாய்ப் பார்த்துணர்ந்தால், ஆகஸ்டுமாஸம் 15-தேதியன்று ருஷியசேனாதிபதி Grand Duke Nicholas) பிறப்பித்த இராஜ விளம்பரத்துக்கும் அதை யொட்டி வந்த ருஷிய சக்ரவர்த்தியின் தீர்மானத்துக்கும் அர்த்தம் இன்னமாயிருக்கலாமென்று புத்திசாலிகள் ஊகித்தறிந்து கொள்ளலாம்.

கீழ்ண்டைப் போர்க்களத்தில் ருஷியர் வெற்றி.

ருஷியா இப்பொழுது போல்ஸ் நாடுகள் ஸ்லாவ்ஸ் நாடுகள் பலவற்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ரஷியாவின் கிழ்புற எல்லையில் ருஷியர்கை யெங்கும் வலுத்திருக்கிறது. ஆஸ்திரியா ஏற்கனவே கைசளைத்துப் போய்விட்டதாக சமாசாரம். ஜெர்மன்ஸ் பெல்ஜியத்தைப் பிடித்துக்கொண்டு ப்ரான்ஸ் எல்லைக்குள் சென்றவர்கள் திரும்பித் துரத்தப்பட்டு வருகிறார்கள். பெல்ஜியத்தை இராஜாங்கத்தார் அனுசரிக்கும் தர்ம விதிக்குமுரணுக்காரணமின்றி புகுந்து பாழடித்துப் பிடித்துக்கொண்டபின், ஜெர்மன் சக்ரவர்த்தி தன்னை "பெல்ஜியன் அரசராக" சண்டையில் சம்பந்தப்படாத தேசங்கள் ஒப்புக்கொள்வார்களாவென்று விசாரித்து வருகிறாராம். இதுவும் ஒரு விந்தைதான். இவ்வளவோடு சண்டைக்காரர்களில் முக்கியமான ஜெர்மன்ஸ், ஸ்லாவ்ஸ் இவர்களுடைய பூர்வோத்தர சரித்திரத்தை விசாரித்து அது விஷயமாய் அறிந்து கொள்ள வேண்டியவைகளைச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தோம்.

**FIELD MARSHAL SIR JOHN FRENCH.**
**THE WESTERN THATRE OF WAR.**

பீல்ட்மார்ஷல் ஸர்ஜான் ப்ரெஞ்சு
அனுப்பிய 4-வது ரிபோர்ட்டு.
மேலண்டைப் போர்க்களம்.



FIELD-MARSHAL SIR JOHN FRENCH COMMANDER-IN-CHIEF OF THE BRITISH EXPEDITIONARY FIELD FORCE.

பீல்ட்-மார்ஷல் ஸர் ஜான் ப்ரெஞ்சு.
ப்ரான்ஸிலுள்ள ப்ரிடிஷ் சைனியங்களுக்கு
முக்கிய ஸேனாதிபதி.

ப்ரான்ஸிலுள்ள ப்ரிடிஷ் சைனியங்களுக்கெல்லாம் முக்கிய ஸேனாதிபதியாகிய பீல்ட்-மார்ஷல் ஸர்ஜான் ப்ரெஞ்சு அவர்கள் அனுப்பிய 4-வது ரிபோர்ட்டு நவம்பர்மீ 20உ யிட்டுள்ளது. அங்கே சண்டைபோடும் கூட்டாளிகள் சைனியங்களுக்கெல்லாம் தலைவர் ஜெனரல் ஜாப்ரே. இவர்தான் ப்ரெஞ்சு ஸைனியங்களுக்கெல்லாம் முக்கிய ஸேனாதிபதி பெல்ஜியத்திலிருந்து பிரிடிஷ் சைனியங்களையும் ப்ரெஞ்சு சைனியங்களையும் ஸீன் நதியின் தென்கரை வரையில் பின்வாங்கிச் செல்ல ஏற்பாடு செய்தவர் இவரே.



GENERAL JOFFRE COMMANDER-IN-CHIEF OF THE ALLIED FORCES IN FRANGE.

ஜெனரல் ஜாப்ரே.

இவர் செய்த தந்திரத்தால் படை யெடுத்து வந்த ஜெர்மன் சைனியங்களுக்குத் தலைவரான ஜெனரல் வான் க்ளக் என்பவர் பாரிஸ் வரையில் படையெடுத்து சென்றும் அந்த கரைப் பிடிக்க இயலாதுபோயிற்று. இவர் பிரிடிஷ் சைனியங்களை ஆகஸ்டுமீ 26உ வெர்மாண்ட் ஸெண்ட் குவெண்டின் ரிப்மாண்ட் மார்க்கத்தில் பக்கத்தில் வந்து சூழ்ந்துகொண்டு மடக்கி முடுக்கப்பார்த்தார். அப்பொழுது அந்த ஆபத்திலிருந்து பிரிடிஷ் சைனியங்களைக் காப்பாற்றினவர் ஜெனரல் ஸர் ஹோரேஸ்ஸமித் டோரீன் அவர்கள் இவரைப்பற்றி ஸர்ஜான் ப்ரெஞ்சு அவர்கள் அவருடைய ரிபோர்ட்டில் வெகுவாய் சிலாக்கித்துப்பேசியிருக்கிறார். (*Vide* his report of 7th Septr.)

ப்ரிடிஷ் சைனியங்கள் ஆகஸ்டுமீ 17உ ப்ரான்ஸிலுள்ள 'பூலோன்' துறைமுகத்தில் இறங்கி 22உ பெல்ஜியத்திலுள்ள மான்ஸ் பட்டணம்வரையில் முன் நோக்கிச்சென்று அங்கே படை யெடுத்துவந்த ஜெர்மன் சைனியங்களை யெதிர்த்து 'மான்ஸ்' சண்டைக்குப்பின் பெல்ஜியம் எல்லையைவிட்டு ப்ரான்ஸ் எல்லைப்பக்கத்தை யடையவேண்டி யிருந்ததையும், அங்கிருந்து ஆகஸ்டுமீ 23, 25, 26, -8, 30-தேதிகளிலும் ஸெப்டெம்பர்மீ 2, 4-தேதிகளிலும் படிப்படியே பின்வாங்கி ஸீன் நதிக்குத் தென் கரையில்வந்து தங்கவேண்டியிருந்ததையும் மேலண்டைப் போர்க்களப்படத்தில் நன்றாகக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளோம். அவருடைய இரண்டாவது ரிபோர்ட்டில் பின்வாங்கிய பிரிடிஷ் சைனியம் ஸெப்டெம்பர்மீ 5உ முதல் எதிரிகளை யெதிர்த்துத்துரத்த ஆரம்பித்து மார்ன்நதிதீரச் சண்டையில் அவர்களைத் தோற்கடித்து, படிப்படியே ஏன் நதிதீரம்வரையில் அவர்களைத் துரத்திக்கொண்டுபோன சமாசாரம் கண்டிருக்கிறது. இது ஸெப்டெப்பர்மீக் கடைசிவரையில் நடந்த விர்த்தாந்தங்களைக் கூறுகிறது. அக்டோபர்மீ முதல் நடந்த விர்த்தாந்தங்களை அவருடைய மூன்றாவது ரிபோர்ட்டு கூறுகிறது. இதிலே 'ஏன்' நதி தீரத்தில் ஜெர்மானியர்கள் எதிர்த்து நிற்பதையும் அங்கே பிரமாதமான சண்டை நடந்து வருவதையும் பற்றிக் சொல்லியிருக்கிறது. இங்கேயிருந்து எதிரிகள் சேனையை அவர்கள் வலப்புறத்தண்டை மடக்கி அர்ரஸ் (Arras), லா பாஸி (La Basse), லீல் (Lille) இந்த வழியாகப்போய் அவர்களைச் சுற்றிக்கொண்டு லிஸ் (Lys) நதியைத் தாண்டவிடாமல் தானே அவர்களை கென்ட் (Ghent) பட்டணம்நோக்கித் திருப்பியடித்து அங்கிருந்து ப்ரூஜஸ் (Bruges) பட்டணத்தை வசப்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்திருந்தார். இந்த சமயத்தில் ஆன்ட்வெர்ப் (Antuerp) கோட்டை பிடிபட்டதனால் அங்கேயுள்ள ஜெர்மன் சைனியங்கள் விடுபட்டுப்போக அவைகள் லீல் கோட்டையைநோக்கி ஏராளமாகச்சென்று அங்குள்ள சைனியங்களை பலப்படுத்துவ



GENERAL SIR HORACE SMITH DORIEN
ஜெனரல் ஸர் ஹோரேஸ் ஸ்மித் டோரின்.



GENERAL VON KLUCK
ஜெனரல் வான் க்ளக்.

தெளிதாயிருந்தது. இதனால் 'ஏன்' நதிதீரத்திலுள்ள ப்ரிடிஷ் சைனியங்களை யெல்லாம் (Ypres) ஈப்ரேஸ் நதிக்கரைக்குக் கொண்டு போக வேண்டியதாயிருந்தது. எதிரிகளுக்குத் தெரியாமலும் அவர்களுக்குச் சந்துவிட்டுக் கொடாமலும் $1\frac{1}{2}$-லக்ஷம் பிரிடிஷ் சைனியத்தோடு 70-ஆயிரம் இந்திய சைனியங்களையும் ஈப்ரேஸ் நதிப்பக்கத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய தவசியமாயிருந்தது. இந்தக் கஷ்டமான வேலையை வெகு சாவதானமாகவும் காலஹரணமின்றியும் 17-நாளில் (அக்டோபர் 3-19.) செய்து முடித்தார்கள். (Lille) லீல் கோட்டையைச்சுற்றி நடந்த உக்கிரமான சண்டையில்தான் இந்தியதுருப்புகள் முதல் முதல் பிரவேசித்து அவர்கள் வீரதீரத்தைக் காட்டிப்பேரும்கீர்த்தியும் பெற்றார்கள். பிறகு ஈப்ரேஸ் நதிக்கரையில் நடந்த உக்கிரமான சண்டையிலும் அவர்கள் வீரதீரம்விளங்க பிரிடிஷ் சைனியங்களோடு ஒத்துநின்று எதிரிகளைத் தோற்கடித்தார்கள். இப்பொழுது பிரிடிஷ் சைனியம் இந்திய துருப்புகளோடு லாபாஸி, ஆர்மென்டைர்ஸ் டிஸ்திரிக்டுகளிலிருந்து ஈப்ரெஸ், ஈஸர் (Yeser) நதிதீரங்களில் பரவி டிக்ஸ்மூட் (Dixmude), நியூபோர்ட் (Nieuport) மார்க்கமாக வடகடல்வரையில் சண்டைமுகம் காட்டி நிற்கிறார்கள்.

ஏன் நதிதீரத்தில் கீழ்மேல் ஓட்டமாகவிருந்த பிரிடிஷ்சைனியம் இப்பொழுது அர்ரஸ் முதல் வடக்கு நோக்கிச்செல்லும் சண்டைமுகத்தைப்பற்றி நிற்கிறார்கள். இங்கே லீல் கோட்டையைச்சுற்றி நடந்த உக்கிரமான சண்டையின் விவரம், ஈப்ரெஸ் சண்டையின் விவரம் முதலானவைகள் அவருடைய நாலாவது ரிபோர்ட்டில் கண்டிருக்கிறது.

அந்த ரிபோர்ட்டில் இந்திய துருப்புகளுடைய வீரதீரமும் அவர்கள்செய்த பேருதவியும் இந்தியவீரர்கள் சிற்றரசர்கள் சண்டைமுகத்தில் காட்டிய வீரதீரச் செயல்களும் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் அக்டோபர்மீ நான்காவது வாரமுதல் நவம்பர்மீ மத்திவரையில் நடந்தது. இந்த ரிபோர்ட்டின் காலத்துக்குப்பிறகு நவம்பர்மீ 23உயில் ஜர்மன் சைனியம் இந்தியர்கள்மேல்








The Western Theatre of War.

மேலண்டைப் போர்க்களம்.

உக்கிராவேசங்கொண்டு அவர்கள் பதுங்கியிருந்து சண்டைசெய்த அகழ்களைத் தாக்கினார்கள். எதிரிகள் சைனியபலம், பீரங்கி பலம் எல்லாம் அபரிமிதமாகச் சேகரித்துக் கொண்டு இந்தியர்களை நாசம்செய்துவிடுகிறதென்று வந்தார்கள். முதலில் இந்தியர்கள் என்னதான் வீரதீரமாக எதிர்த்து நின்றாலும் 'மெஷின்கன்' என்கிற யந்திர வெடிகுண்டுகள் முன்நிற்க ஆற்றாமல் மிகநஷ்டப்பட்டுப் பின் வாங்கவேண்டியிருந்தது. ஆனால் அவர்களிருந்த இடம் மிகவும் முக்கியமானதாயிருந்ததால், எப்படியாகிலும் அதைத்திரும்பிப் பிடிக்கவேண்டியதென்று உத்தரவு பிறந்தது. அதன்பேரில், ஒருநாளில் மூன்றுதரம் எதிர்த்துச்சென்று முதலிரண்டு தடவைகளில் ஜெயிக்க முடியாமற்போயும் மூன்றாந்தடவை எதிரிகளைத் தோற்கடித்துத்துரத்தி ஜயக்கொடி நாட்டி நின்றார்கள். முதல்தரம் $1\frac{1}{2}$-மணிக்கு எதிர்த்தார்கள். அது பலிக்காதுபோகவே மறுபடியும் $4\frac{1}{2}$-மணிக்கு எதிர்த்தார்கள். அதுவும் பலிக்காதுபோகவே இரவு $10\frac{1}{2}$-மணிக்கு மூன்றாந்தடவை யெதிர்த்து இரவெல்லாம் சண்டைசெய்து மறுநாட்காலை $6\frac{1}{2}$-மணிக்கு எதிரிகளைத் துரத்தியடித்து ஜயக்கொடிநாட்டி நின்றார்கள். இந்தச்சண்டை மற்ற எல்லாச் சண்டைகளிலும் மிக உக்கிரமானதாயிருந்தது. ஏனெனில் ஜெர்மானியர் இந்தியர்களால் தோற்கடிக்கப்பட்டதை நினைத்து உக்கிராவேசத்தோடு அவர்களை ஹதம் செய்துவிட எண்ணிவந்தார்கள். முடிவில் இந்தியர்களால் தானே ஹதம்செய்யப் பெற்றார்கள். ஜெர்மானியர்கள் இந்தியர்களைப்போலவே வீரதீரம் காட்டி சண்டை செய்தார்களானாலும் அவர்களைப்போல் கஷ்டங்களைப்பொறுக்கும் சக்தி அவர்களுக்கில்லை. இவர்களோடு ப்ரெஞ்சு துருப்புகளும் பெல்ஜியம் துருப்புகளும்சேர்

ந்து வெகு வீரதீரத்தோடு சண்டைசெய்து வருகிறார்கள். மொத்தம் 260-மைல் தூரமுள்ள சண்டைமுகத்தில் 12-ல் ஒருபாகம் மட்டும்தான் பிரிடிஷ் சைனியங்களாலும் இந்திய துருப்புகளாலும் காக்கப்பட்டு வருகின்றது. மற்றப் பாகங்களெல்லாம் ப்ரெஞ்சு துருப்புகளால் காக்கப்பட்டு வருகின்றன. பெல்ஜியம் துருப்புகளும் சளைக்காமல் சண்டை செய்து வருகிறார்கள்.



GRAND DUKE NICHOLAS, GENERALISSIMO OF THE RUSSIAN ARMIES:

ருஷிய சைனியங்களுக்கெல்லாம் தலைவரான கிராண்ட் டியூக் நிகோலாஸ்

## THE EASTERN THEATRE OF WAR.
## கீழண்டைப் போர்க்களம்.

மேலண்டைப் போர்க்களத்தில் இருதரத்தாரும் அனேகமாய் சரிசமமாக எதிர்த்து நிற்கிறார்கள். கூட்டாளிகள் சைனியம் அவர்கள் சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டிச் சண்டை போட்டாலும் அதிகமாக ஒன்றும் செய்யக் கூடவில்லை. ஒருவாரத்தில் 300-கஜதூரம் எல்லையைத் தள்ளிக்கொண்டு நெருக்கியடித்தால் அதுவே விசேஷமாக நினைக்கப்படுகிறது. இப்படி எத்தனை காலத்துக்கு நிற்பார்களோ சொல்லத்திறமில்லை. ஆனால் கீழண்டைப் போர்க்களத்தில் ருஷியர்கள் ஜெர்மானியர்களை யெதிர்த்துத் தோற்கடித்தால் அப்பொழுது மேலண்டைப் போர்க்களத்திலுள்ள முடக்கு நீங்கலாம் போலும்.

கீழண்டைப் போர்க்களத்தின் படமொன்று தயாரித்து *இங்கே அதை அச்சிட்டிருக்கிறோம். அதிலே கருப்பு அடையாளமிட்ட பாகம் எல்லாம் ஜெர்மானியர் கைவசத்திலிருக்கிறது. 'விஸ்துலா' நதிக் கரையில் வார்ஸா முதல் தெற்கே பர்ஸமிஸல் வரையில் சண்டை நடந்துவருகிறது. முதல் தடவை ஜெர்மன் சைனியம் தோல்வியடைந்தும் மறுபடியும் திரும்பிச் சண்டைக்குப் போயிருக்கிறார்கள். 'விஸ்துலா,' 'பிலிகா' நதிகளுக் கிடையேயுள்ள பாகத்தில் அவ்விருநதிகளும் சங்கமுகம் ஆகிற இடம்வரையில் முன்நோக்கிச்சென்றிருக்கிறார்கள். இப்பொழுது இவான்கராட் (Ivangorod), லூப்லின் (Lublin), இவ்விடங்களைச் சுற்றிச் சண்டை நடந்துவருகிறது. வார்ஸாவைச் சுற்றியும் சண்டை நடந்துவருகிறது. ஜெர்மானியர் விஸ்துலா நதியைத் தாண்டிச் செல்ல ருஷியர்களால் தோற்கடிக்கப்பெற்றுத் துரத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முற்றிலும் தோற்கடிக்கப்பெற்றால் கூண்டிலகப்பட்டது போல் பிலிகா நதிக்கும் விஸ்துலா நதிக்கும் இடையிலே அகப்பட்டுக்கொண்டு நசுக்கிவிடப் பெறுவார்கள். கீழண்டைப் போர்க்களத்தில் ருஷியர்கை ..லத்திருக்கிறதாகத் தெரியவருகிறது. ஜெர்மானியர் இங்கே கை சளைத்தால் மேலண்டைப் போர்க்களத்திலிருந்து சைனியங்களைக் கொண்டுவரவேண்டி நேரிடும். அப்பொழுது கூட்டாளிகள் சைனியம் ஜெர்மானியரை யெதிர்த்து பெல்ஜியத்தை விட்டுத் துரத்தப்பார்க்கலாம். அதுவரையில் இருசைனியங்களும் மறியல் போட்டுக்கொண்டு நிற்க வேண்டியதுதான்போல் தோன்றுகிறது.

---

## THE DAILY COST OF THE GREAT WAR.
## இப்பார'த யுத்தத்தின் தினப்படிச் செலவு.

இப்பொழுது நடந்துவரும் பார'தயுத்தம் மஹாபாரதயுத்தத்திலும் பெரிதானதென்று சொல்லலாம். இது பூமிபாரம் தீர்க்கவந்ததுபோல் கலியுகத்துக்கே ஒரு விசேஷமான யுத்தமாயிருக்கிறது. ஏனெனில் இந்த யுத்தத்தில், நிலத்தின் கீழ் சுரங்கம் வெட்டி அங்கிருந்து சண்டைசெய்கிறார்கள். தண்ணீரின் கீழ்மூழ்கியோடும் படகுகளைக்கொண்டு பெரிய சண்டைக் கப்பல்களையெல்லாம் தகர்த்து விடுகிறார்கள். அமெரிக்காவில் பேர்போன மிஸ்டர்எடிஸன் என்பவர் தண்ணீரில் மூழ்கிச் சண்டை செய்யும் படகுகள் ஒரு மாசம் தண்ணீருக்குள் தானேயிருக்கவும் அது வரையில் படகிலுள்ளவர்கள் மூச்சு விடுவதற்கான நல்ல காற்றை மீன்களைப்போல் கடலிலிருந்தே யுண்டு பண்ணக்கூடிய யந்திரம் ஒன்று புதிதாய் நிர்மித்திருக்கிறாராம். இது இன்னும் சண்டையில் உபயோகத்துக்கு வரவில்லை. ஆகாயரதத்திலேறி அந்தரிக்ஷத்தில் சண்டை செய்கிறார்கள். கடலில் சுரங்கமிட்டு கப்பல்கள் தாராளமாகப் போவது அபாயகரமாகச் செய்து வருகிறார்கள். இந்த யுத்தத்தில் நேரும் ஜீவ நஷ்டத்தைச் சொல்லி முடியாது. பணச்செலவைக்கணக்கிட்டதில் ஒரு நாளைக்கு சண்டைக்காரர்கள் செலவெல்லாம் 90-லக்ஷம் பவுன் ஆகிறதாம். பிரிடிஷார் தினச்செலவு மட்டும் 10-லக்ஷம் பவுன். இப்படியே ஒவ்வொருவர் தினச்செலவையும் கணக்கிட்டு 90-லக்ஷம் செலவாகிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். டிஸெம்பர் முடிவு வரையில் சண்டையிலும் சண்டை முஸ்தீபுகளிலும் 300-கோடி பவுன் செலவாயிருக்கிறதாகத் தெரியவருகிறது.



* முன்பக்கம் பார்க்க.

*The Eastern Theatre of War.

The darkened portion is in German possession.




கீழண்டைப் போர்க்களம். கறுப்புப்புள்ளியிட்டபாகம் ஜெர்மனிவசப்பட்டிருக்கிறது.

## THE WAR CHESTS OF THE COMBATANTS.
## சண்டைக்காரர்கள் கைரொக்கம்.

இந்தச் சண்டை யெத்தனை காலம் நடக்குமென்று பலரும் கேட்கிறார்கள். மூன்று மாசம் முதல் மூன்று வருஷம் வரையில் நடக்கலாமென்று பலர் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். சண்டை ஆரம்பமாகி இப்பொழுது நான்கு மாசகாலமாகியும் தோற்பு கெலிப்பு ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆகையினால் சண்டைக்காரர்கள் சண்டை துவக்கின காலத்தில் கைரொக்கமாக வைத்திருந்த பணம் எவ்வளவென்று தெரிந்தால் அதிலிருந்து சுமாராக அவர்கள் கை சளைக்காமல் சண்டை செய்யகூடிய காலம் தெரியலாம். அதற்குமேல் சந்தர்ப்பம் எப்படியோ அப்படி பார்த்துக்கொள்வார்கள். சண்டை போடுவதற்காக கைரொக்கமாக வைத்திருந்த பணத்தைமட்

டும் சொல்கிறோம். இதற்குமேல் அவர்களுக்கு பணம் கிடைக்காது என்று சொல்வதற்கில்லை யாயினும் கைரொக்கம் இவ்வளவென்று தெரிந்தால் அதைக்கொண்டு அவர்கள் எத்தனை காலத்துக்குச் சண்டையிலிழுத்துக்கொண்டு நிற்க முடியுமென்று ஒரு உத்தேசம் கண்டு பிடிக்கலாம். இதில் கடன் வாங்கக்கூடிய தொகைகளும் சமயம் நெருக்கடியாகவிருந்தால் ஜனங்கள் மிகுத்துவைத்த ஸேவிங்ஸ் பாங்கி டெபொஸிட்டுகளையுங்கூட எடுத்து உபயோகிக்கலாம். ஆனல் அதையெல்லாம் இங்கு சேர்க்கவில்லை. சண்டைத் தேதியில்,

ஜெர்மனியின் கையிருப்பு ரொக்கம்:

1870-ம் வருஷத்துச் சண்டைக்குப் பிறகு சண்டைகாகக்வென்று முதல் சேர்த்து வைத்திருந்த பணம் 60-லக்ஷம் பவுன்.

சென்ற வருஷம் அவசரச் செலவுக்கென்று வெள்ளி நாணயமச்சிட்டதில் 60-லக்ஷம்.

டிரெஷரீ நோட்டுகளுக்கு பதிலாக பொன் நாணயம் வாங்கிச்சேகரித்ததொகை 60லக்ஷம்.

ஆக மொத்தம் 180-லக்ஷம் பவுன்.

இதைத்தவிர பாங்கிகள் நோட்டு மூலமாகச் சேரக்கூடிய பணம் 7-கோடி பவுன். வெள்ளியில் ஷை வகையில் 1-கோடியே 70-லக்ஷம் பவுன்.

கையிருப்பு நாணயங்களையும் சேர்த்தால் $10\frac{1}{2}$-க்கோடி பவுன் அகப்படும்.

கைரொக்கம் பாங்கியில் கிடைக்கக்கூடியது எல்லாவற்றையும் சேர்த்தால் மொத்தம் 12 கோடியே சொச்சம் பவுன் ஆகிறது.

ஜெர்மனியின் சண்டைச் செலவு மாசம் ஒன்றுக்கு—4-கோடி பவுன். அதாவது தினம் ஒன்றுக்கு 13 லக்ஷத்து 33 ஆயிரத்து 333 பவுன் ஆகிறது. பிரிடிஷ் தபால் செலவு தினம் ஒன்றுக்கு சுமார் 10 லக்ஷம் பவுன் ஆகிறதென்று முதல் மந்திரி தெரிவித்தார். ஆகவே கையிருப்புத் தொகையெல்லாம் 3-மாசத்துக்குத்தான் போதுமானதாயிருக்கும். ஆனல் பெல்ஜியத்தில் ஏராளமான தொகை கொள்ளையிலும் யுத்த நஷ்டத்துக்கென்று வசூல் செய்த காலத்திலுமாகக் கிடைத்திருக்கிறது. அதைக்கணக்கில் சேர்க்கவில்லை.

சண்டை யாரம்பத்தில்
பிரான்ஸின் கையிருப்பு ரொக்கம்

இதைவிட இன்னும் அதிகமாயிருக்குமென்று சொல்லப்படுகிறது. கடன்வாங்க அனுகூலங்கள் அதிகம் என்று சொல்லப்படுகிறது.

பொன்நாணயக் கையிருப்புத் தொகை

| | |
|---|---|
| ரொக்கம் | 16 கோடி |
| வெள்ளி நாணயம் | 3 கோடி |

ஆக மொத்தம் 19-கோடி பவுன்.

சண்டை யாரம்பத்தில்
பெல்ஜியத்தின் கையிருப்பு ரொக்கம்

நாணயமாகவும்தங்கப்பாளங்களாகவும் உள்ளவைசேர்ந்து 1-கோடியே 30-லக்ஷம் பவுன்.

பிரிடிஷார் இப்பொழுது கடன் கொடுத்திருக்கும் தொகை 1-கோடி.

ஆக மொத்தம் 2 கோடியே 30 லக்ஷம் பவுன்.

சண்டை யாரம்பத்தில்
ஆஸ்திரியா-ஹங்கேரியின் கையிருப்பு ரொக்கம்

பொன் நாணயமாக 5-கோடியே 20-லக்ஷம் பவுன்.

வெள்ளி நாணயம்-கோடியே 20-லக்ஷம்.

ஆக மொத்தம் 6 கோடியே 40 லக்ஷம் பவுன்.

இது 9-மாசத்துக்கு சண்டைசெய்யப் போதுமானதாயிருக்கு மென்று கணக்கிட்டுப் பார்த்துக் குறிக்கப்பட்டிருக்கிறது.

சண்டை யாரம்ப காலத்தில்
ருஷியாவின் கையிருப்பு ரொக்கம்.

ருஷிய அரசிறை மந்திரி தெரிவித்தபடி பாங்கியில் தங்கநாணய ரொக்கம் 17-கோடி பவுன்.

சண்டைதொடுக்கக் கையிருப்பில் 5-கோடி பவுன்.

வரிவகையிலிருந்துபயோகிக்கக்கூடிய தொகை $2\frac{1}{2}$ கோடி பவுன்.

ஆக மொத்தம் $24\frac{1}{2}$-கோடி பவுன்.

பிரிடிஷ் கவர்ன்மெண்டார் கையிருப்பு.

நாணயரொக்கம் 3-கோடியே 30-லக்ஷம் பவுன்.
8-மீ சண்டைச்செலவுக்காக=30-கோடிபவுன்.

இதைத்தவிர பாங்கியிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான தொகையிருக்கிறது. பணத்துக்கு குறைவில்லை. இவையெல்லாம் லண்டன் சேர ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. வர்த்தகவியாபார நாணய வியவகாரம் நடந்துகொண்டிருக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.



## THE GROWTH OF WEALTH AMONG NATIONS DURING THE LAST 100 YEARS.

சென்ற நூறு வருஷங்களில்
தேசங்களின் ஐசுவரியவிருத்தி
விவரம்.

| தேசம். | 1814. | 1914. |
|---|---|---|
| | கோடிபொன் | கோடிபொன் |
| யூனைடெட் கிங்டம் ... | 250 | 1700. |
| ஷை ஜனங்கள் வருமான | | |
| மொத்தம் ... | 30 | 240. |
| (ஜனவிருத்தி 100-க்கு 130 அதிகம்) | | |
| ப்ரான்ஸ் தேசம் | 200 | 1000 |
| (ஜனவிருத்தி 100-க்கு 33 அதிகம்) | | |

நூறு வருஷங்களுக்கு முன் ஜெர்மனி இல்லவேயில்லை. சில்லரை ராஜ்யங்கள் பல ஏழைமையில் மூழ்கியிருந்தன, அவைகளின் செல்வமெல்லாம் சேர்ந்து ப்ரான்ஸுக்கு ஈடாகச் சொல்லும்படியாகவில்லை. மிகவும் குறைந்திருந்தது.

தற்காலம் ஜெர்மனியின் மொத்த ஐசுவரியம் 1,600 கோடி பவுன். ஜனங்களின் வருஷ வருமானம் ... 200 கோடி.

ஜெர்மனியின் ஜனத்தொகை சென்ற நூறு வருஷகாலத்தில் 2-கோடியே 40-லக்ஷத்திலிருந்து 6 கோடியே 70-லக்ஷமாயிருக்கிறது. அதாவது 100-க்கு 180 விகிதம் அதிகமாய் விருத்தியாயிருக்கிறது.

Annual Savings-வருஷாந்தரலாப மிகுதி.

க்ரேட்ப்ரிடன் வருஷம் 40-கோடி லாபம் மிகுத்துவைக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| ப்ரான்ஸ் | 20-கோடி | ” | ” |
| ஜர்மனி | 30-கோடி | ” | ” |

## ADVICE TO STUDENTS.

ஹிதோபதேசம்.

(மிஸ்டர் பூபேந்திரநாத் வாஸுவின் புத்திமதி.)

N. I. A, AT “No 21 CROMWELL ROAD”

லண்டன் பட்டணத்திலே ‘க்ராம்வெல் ரோட்’ 21-வது நெ. கட்டடத்தில் “நாஷனல் இந்தியன் அஸ்ஸோஸியேஷன்” சங்கத்தின் பிரதமஸ்தானமிருக்கிறது. இந்தசங்கம் மிஸ் மேரி கார்பென்டர் என்னும் பரோபகாரியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள சம்பந்தத்தை பலப்படுத்தி இருதேசத்தாருக்குமுள்ள நேசத்தை விர்த்திசெய்ய வேண்டும். நேசமில்லாத விடத்து நேசத்தையுண்டுபண்ண வேண்டும் என்பதே, மிஸ் மேரி கார்பென்டருக்குப்பின் மிஸ் இ. ஏ. மானிங் துரைசானி இச்சங்கத்துக்கு கௌரவ காரியதரிசியாக விருந்து இதன் நடபடிக்கைகளை மேம்பட நடத்திவந்தார். அவருடைய நேசமும் ஸ்வயநயம் பாராட்டாத பரோபகார சிந்தையும் இச்சங்கத்துக்கு ஓர் பெரிய ஆஸ்தியாக விருந்ததுமன்றி இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் கூட்டுறவுண்டாகச் செய்வதில் பெரும் சாதகம் விளைப்பதாக விருந்தது. அவருடைய அனுதாப சிந்தையாலும் அனுகூல முயற்சியாலுமே நாம் இங்கே வித்யா விஷயமாகவும் கிராமசுகாதார விஷயமாகவும் சிரத்தை யெடுத்துக்கொண்டுழைத்தது சீமையில் நம் விக்டோரியா மஹாராணியின்ஜேஷ்டபுத்திரராயிருந்த மஹாமேன்மை தங்கிய எட்வர்ட் இளவரசருக்குத் தெரியவரலாயிற்று. அவர் இப்பத்திராசிரியர் முயற்சியை மதித்து அவருடைய ஹிருதய பூர்வமான வந்தனத்தைத் தெரிவிக்கும்படி யெழுதுவித்த கடிதம் அவரால் இன்னமும் விசேஷமாக நன்கு மதிக்கப்பட்டு வருகிறது. நல்லவர்களுடைய அங்கீகாரமும் அனுதாபமும் நற்சிந்தையும் இலகுவில் சித்திப்பதில்லை. ஏனெனில் நல்லவர்க்கு நல்லவனை விருப்பதும் நல்லாரால் நன்குமதி

க்கப்பெறுவதும் சுளுவாகமாட்டாது ஏனெனில் பாசாங்கு பொய்வேஷமும் மேலாட்டபாட்டமும் அவர்களிடம் செல்லாவாகையால் என்க.

மாணவர்க்கு உதவி செய்வதற்கான கமிட்டி.

இப்பொழுது இந்த சங்கம் இந்தியமாணவர்களுக்கு அனுகூலமாக ஏற்பட்ட கவர்ன்மெண்டு கமிட்டியின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இங்கே இந்தியாவிலிருந்து சென்ற மாணவர்களெல்லாம் கூடியிருந்த சபை முன் கல்கத்தாவிலிருந்து சீமைக்குச் சென்ற கனம் மிஸ்டர் பூபேந்திரநாத் வாஸு அவர்கள் இந்தியாவுக்குத் திரும்புமுன் அவரை ஊருக்கனுப்ப வென்று கூடிய சபையில் அங்குகூடிய இந்தியமாணவர்களுக்குப் பெற்றோர் மொழியாகச் சில அரிய உபதேச வார்த்தைகளைச் செப்பியர். அவை சுருங்கச்சொல்லில் பின்வருமாறு:—

"ஹிதோபதேசம்:"இந்தியாவின் தூதர்கள்."

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போகும் வாலிபர்களெல்லாம் இந்தியாவின் தூதர்களாகத் தங்களை மதித்து அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்கள் நடத்தைப் பிசகெல்லாம் இந்தியாவிலுள்ள ஜனங்களுக்குப் பிரதிகூலமாக முடியும்.

தேஹமனோசுத்தி.

மாணவர்கள் எல்லாரும் எப்போதும் தேஹசுத்தம் மனோசுத்தம் உள்ளவர்களாகவிருக்க வேண்டும். இதற்குத்தான் பிரஹ்மசாரிய விரதம் என்று சொல்லுகிறது. இந்த சுத்தம் அந்நிய தேசத்தில் மதுகுடிமலிந்து ஸ்திரீ சங்கமும் விசேஷமாய் லபிக்கக்கூடிய ஒரு பெரிய தலைநகரிலிருக்கும் வாலிபர்களால் பெறப்படுவது கஷ்டமென்று சொல்லக் கேட்டிருக்கிறோர். ஆனால் அது அவ்வளவு கஷ்டமில்லை. ஏகாக்ரசித்தமும் நல்ல சித்தவிருத்தியும் உயர் லக்ஷியமும் உள்ளவர்களுக்கு தேஹமனோசுத்தம் லபிப்பது ஒருக்காலும் கஷ்டமாகாது. குழந்தைகளைத் தாலாட்டிப் பாடும் காலம் முதல் "பாணைசுசி, சட்டிசுசி, பாங்கான தேஹம் சுசி" யென்று "சுசி" (சுத்தம்) எல்லாவற்றிலும் மேலானதாகவும் ஹிருதயசுத்தியின்றி பகவானுடைய கிருபை கிடைக்காதென்றும் நம்பியுள்ள நம்மவர்கள் ஒழுக்க வழக்கங்களில் பழகிய சிறுவர்களுக்கு சுத்தம் தவறுவது கஷ்டமேயின்றி சுத்தமாயிருப்பது கஷ்டமாக விருக்கக்கூடாதென்று வற்புறுத்திக் கூறினர்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப்பற்றியும் அவர் மாணவர்களுக்கு ஹிதோபதேசம் செய்தார். அது மாணவர்கள் துரைத்தன விஷயங்களிலும் இராஜரீக காரியங்களிலும் தம் அபிப்பிராயத்தை வெளியிடுவதாகக்கூட்டங்கூடிப்பேசும் வழக்கத்தைப் பொறுத்ததாயிருந்தது.

துரைத்தனகாரியம் "கிள்ளுக்கீரையில்லை."

துரைத்தன காரியங்களும் இராஜரீக விஷயங்களும் "கிள்ளுக்கீரை" யில்லை. அதாவது அற்பமான விஷயங்கள் அல்ல. அவற்றை யுணர்வதற்கும், உணர்ந்தபின் பரியாலோசனைசெய்து தேசப்பொது க்ஷேமத்துக்கு அனுகூலமானவை பிரதிகூலமானவையிது என்று விவேகஞானத்துடன் பகுத்தறிந்து பிறர் மனதிற்பதிய அவற்றை யெடுத்துரைக்கவும் எவ்வளவோ உலகானுபவமும் முதிர்ந்த உலகஞானமும் வேண்டும். இவ்விரண்டும் மாணவர்களுக்கு அவர்களுடைய வயதில் கிடைப்பதரிது. ஆகையால் அவர்கள் தங்கள் புத்திவிர்த்திக்கு அவசியமான விஷயங்களில் மனதைச்செலுத்த வேண்டுமேயன்றி அவர் புத்திக்கெட்டாத விஷயங்களில் புகுந்து படாடோபம் செய்வது சரியல்லவென்று சொன்னார். இது மிகவும் சரியான வார்த்தையே.

யுத்தகாரணம்.

பிறகு இப்பொழுது நடக்கும் யுத்தத்தைக் குறிப்பிட்டு, உலகத்தில் மமதை காரணமாக ஸ்வயநயமும், அதுமூலமாக உண்டாகும் அஹம் பாவச்செறுக்கும் அதிகரித்தால் அது முதிர்ந்தபோது அதை யொழிப்பதற்கான வழி





வகைகள் தானே யேற்படுமென்று நமது பூர்வ கிரந்தங்களும் இருஷிகளும் பெரியோர்களும் சொல்லியிருக்கிறார்கள். தேவர்கள்கூட கர்வமடைந்தபோது அவர்கள் கர்வத்தையடக்க பகவான் திரிபுரஸம்ஹாரம் செய்யவில்லையா! மஹாவலி சக்ரவர்த்தியின் கர்வத்தை யடக்க பகவான் வாமனாவதாரம் எடுக்கவில்லையா! அநாதியாயுள்ள இந்த ஸநாதநஸம்பிரதாயம் இப்பொழுது மெய்யாகப் பலித்ததன்றி இதில் வேறொன்று மில்லையென்றும், இச்சண்டை திடீரென்று நிர்நிமித்தியமாக உண்டானதல்லவென்றும் சொன்னார்.

தர்மஸ்தாபன முறை.

அதர்மம் தலையெடுத்து தர்மத்துக்கு நஷ்டம் வந்தால் அதர்மத்தை யடக்குவதற்கான மார்க்கம் ஈசுவர கிருபையால் தானே யேற்படுமென்பது பூர்வகாலந்தொட்டு நமது முன்னோர்கள் போதித்து வந்த உண்மையேயன்றி வேறல்ல. இந்தியர்கள் இதை யுணர்ந்தேயிருக்கிறார்கள். அன்றியும் இராஜ்யத்துக்குக் கேடுவந்தபோது இராஜ்யபாதுகாப்பின் பொருட்டும் ஜனக்ஷேமத்தின் பொருட்டும் துணிந்து சண்டைபோட வேண்டியது முக்கியமான க்ஷத்திரியதர்மம். இந்த க்ஷத்திரிய தர்மம் இந்தியாவில் அற்றுப்போகவில்லை. இந்த பாரதமஹாயுத்தம் நேர்ந்ததினால் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சிந்தை குலையக்காரணமில்லை. ஏனெனில் பூர்வந்தொட்டுள்ள "தர்மமே ஜயம்" என்னும் உண்மையை ஸ்தாபிக்க இந்தச் சண்டை நேர்ந்திருக்கிறதே யன்றி வேறொன்று மில்லை. 2000-வருஷங்களுக்கு முன் ஏசுகிறிஸ்து எதற்காகத் தன்னுயிரைக் கொடுத்தாரோ, அதேகாரணம் தான் இப்பொழுது இச்சண்டையை உண்டுபண்ணியிருக்கிறது. குருக்ஷேத்திரத்தில் நடந்த யுத்தம் முதல், இப்படிப்பட்ட சண்டை யுண்டாவது சகஜம் என்று நம்மவர்களுக்குத் தெரியும்: ஆகையால் புண்ய பூமியாகிய நம் தாய்தேசத்தின் தர்மம் நிலைக்க நம்மவர்கள யுத்தம் செய்யப் பின்வாங்கார்கள்."

## THE COMMERCE-RAIDER EMDEN AND ITS EXPLOITS, WITH ILLUSTRATIONS.

## எம்டன் கப்பலும் அது செய்த லூட்டியும்—(படங்களுடன் கூடியது.)

Map showing the field of operations of the Emden. The Cocos Is. Is also shown.




எம்டன் கப்பல் செய்த லூட்டிகளைக் காட்டும் படம். அது நாசமான இடமாக்கிய கோகோஸ் தீவும் காட்டப்பட்டிருக்கிறது.

* (கீலிங்) கோகோஸ் தீவு.

எம்டன் என்னும் ஜெர்மனி கப்பல் 3,600 டன் உடையது. அது முதலில் கியோ-சௌ (Kiao-Chau) என்னு சீனதேசத்திலுள்ள * ஜெர்மனி ஸ்தானத்தில் இருந்தது. (படம் பார்க்க,) ஜப்பான் கியோ-சௌவைப் பிடித்துக் கொள்ளவென்று ஜெர்மனியோடு

துவக்கியதும் இந்த எம்டன் கப்பல் அவ்விடத்தைவிட்டு மெல்ல நழுவிவிட்டது. சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலுள்ள 'மஞ்சட் கடல்' என்று பொருள்படும் 'யெல்லோ-ஸீ'யை விட்டுத் தென்புறமாய் நழுவிச் சென்று போர்மோஸா (Formosa) தீவு வழியாக தென் சீனக்கடலைத் தாண்டி சிங்கப்பூருக்கு வந்து, அங்கேயிருந்து திருட்டுத்தனமாகவே பெங்காளக் குடாக்கடலில் நுழைந்து அங்கே ஸெப்டெம்பர் 10-முதல் 15-உக்குள் 6-பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களை மூழ்கடித்துவிட்டு, ஸெப்டெம்பர் 22உ சென்னைத் துறைமுகந்தாண்டிச் சென்று சென்னையின்மேல் குண்டு வெடிகள் தீர்த்து துவம்ஸம் செய்து, புதுச்சேரி மார்க்கமாய் இலங்கைத் தீவைச் சுற்றிக்கொண்டு மங்களூருக்கு எதிரில் லக்ஷத்தீவுகளுக் கருகில் ஸெப்டம்பர் 23-29 தேதிக்குள் 4-கப்பல்களை மூழ்கடித்து ஒன்றைத் துணைக்கு வைத்துக்கொண்டது. (படம் பார்க்க.) பிறகு மினிகாய் தீவுகளண்டை அக்டோபர் 15-19உகளுக்குள் 5-கப்பல்களை மூழ்கடித்து ஒன்றை வைத்துக்கொண்டது. அக்டோபர் 16உ எம்டன் கப்பலின் துணைக்கப்பல்களில் இரண்டு யார்மத் கப்பலால் பிடிக்கப்பட்டது. இப்படியாக சண்டை யாரம்பமான மூன்று மாச காலத்தில் இந்த எம்டன் கப்பல் 21-பிரிடிஷ் வியாபாரக் கப்பல்களைப் பிடித்து அவற்றில் 17-கப்பல்களை மூழ்கடித்திருக்கிறது. மற்றக் கப்பல்களில் அது தனக்குத் துணையாக வைத்துக்கொண்ட இரண்டு கப்பல்களைத் தவிர மற்றவைகளை விட்டுவிட்டது. ஏனெனில் மூழ்கடித்த கப்பல்களின் ஆள்களை கைதியாகப் பிடித்து வைத்துக் கொள்ள முடியாமையால் அவர்கள் தப்பும்படி அந்தக் கப்பல்களில் வைத்து அவர்களை யனுப்பிவிட்டது. இக்கப்பல் போனவழியைக் காட்டியுள்ள படமொன்று இங்கே சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதிலே இது கிறது. கடைசியில் 'கோகோஸ்' தீவண்டை (படத்தின் தென்கோடி வரியண்டை பார்க்க) ஸிட்னி யென்னு ஆஸ்திரேலியன் கப்பலால் பிடித்துத் தகர்த்து தீப்பற்றி நாசமாய்விட்டது.



The Commerce-Raider Emden 3,600 Tons, destroyed November 9th.

நவம்பர்மீ 9உ கோகோஸ் தீவண்டை நாசம் செய்யப்பட்ட எம்டன் கப்பல் (மூழ்கும் தருவாய்).

இந்தக் கப்பலின் தலைவர் காப்டன் வான் முல்லர் என்பவர். இவருடைய தாயாரும் மனைவியும் இங்கிலீஷ் ஜாதியைச் சேர்ந்தவர்கள். இவருடைய தகப்பனார் மட்டும் ஜர்மன் ஜாதியர். இவர் மஹாவீரதீர சாமர்த்திய முடையவர். வீணாக உயிர்வதை செய்யத் துணியாத காருண்யர். யுத்த ஒழுங்குப்படி நடந்துகொண்டவர். ஆகையால் இவர் கப்பல் பிடிபட்டபொழுது இவருக்கு யாதொரு தீங்கும் விளையாதிருக்கவேண்டுமென்று இங்கிலாந்தில் எல்லாரும் வேண்டிக்கொண்டார்கள். இவர் நாசம் செய்த கப்பல்கள் சரக்குகளின் விலை மதிப்பு 20-லக்ஷம் பவுனிருக்கும். ஆனால் வீணாக ஒரு உயிருக்காவது தீங்குசெய்தவரில்லை. இவருடைய கப்பல் நவம்பர்மீ 9உ கோகோஸ் தீவண்டை நாசம் செய்யப்பட்





CAPTAIN VON MULLER OF THE EMDEN.

எம்டன் தலைவர் காப்டன் வான் முல்லர்.

அக்கப்பல் மூழுகவிருக்கும் சமயத்தில் எடுத்த அதன் படமொன்றைக் மேலே காட்டியிருக்கிறோம். அஃதோடு காப்டன் வான் முல்லருடைய படத்தையும் பிரசுரிக்கிறோம். இவரோடு பிடிபட்டவர்களில் ஜெர்மன் கெய்ஸருடையமருமகனாகிய லெப்டினெண்ட் ப்ரின்ஸ் ஜோஸெப் என்பவர் ஒருவர். இவர் ஹோஹன் ஸாலர்ன் வம்சத்தைச் சேர்ந்தவர். இவரையும் காப்டன் முல்லரையும் அங்கிலேய கப்பற்படை யதிகாரிகள் வெகு கௌரவமாக நடத்த வேண்டுமென்று உத்தரவு செய்தார்கள். இவர்கள் யுத்த கைதிகளானாலும் யுத்த ஒழுங்குப்படி கௌரவமாய் நடந்துகொண்டவர்களாதலால் அவர்களுடைய கத்திகளைத் தரித்திருக்கும்படியான கௌரவம் அளிக்கப்பட்டது. இவர் கொட்டம் அடங்கினதில் எல்லாருக்கும் சந்தோஷம்தானானாலும் இவரிடத்தில் யாருக்கும் பகையில்லை. ஏனெனில் ஒழுங்குப்படி நடந்துகொண்ட உத்தமர் ஆதலால் என்க.

## MR. CHURCH'S REPLY TO GERMAN "APPEAL TO THE CIVLIZED WORLD."

"AMERICAN VERDICT ON THE WAR."

## இப்பாரதயுத்தம் விளைந்ததற்காக உலகாபவாதம் யாரைச் சேரும்?

சென்ற சஞ்சிகையில் யுத்த காரணத்தைப்பற்றி விவரமாய் எழுதியிருந்தோம். ஜெர்மனியார் இந்தப்பாரத யுத்தம் நேர்ந்ததற்குக் காரணம் இங்கிலாந்து தானென்று பிரிடிஷ் கவர்ன்மெண்டார் தலையில் பழிசுமத்தப் பார்க்கிறார்கள். கெய்ஸரும் அவருடைய சான்ஸலரும் இவ்விதம் சொல்வதன்றி ஜெர்மனியிலுள்ள வித்யாரத்னங்களான பிரபல வித்வான்கள் 93-பேர்கள் சேர்ந்து அமெரிகாவிலுள்ள எல்லாருக்கும் ஒரு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அதன் உண்மையை மறுத்து பிட்ஸ்பர்கிலுள்ள கார்னகி இன்ஸ்டிட்யூட் தலைவரான மிஸ்டர் சர்ச் அவர்கள் பெர்லினிலுள்ள டாக்டர் ப்ரிட்ஸ் ஷேபர் அவர்களுக்கு வெகு தீரமான பதில் எழுதியிருக்கிறார். அவருடைய கடிதம் லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் நவம்பர்மீ 30உ வெளியாயிற்று அதன் அச்சிட்ட பிரதியொன்று விவேகசிந்தாமணியில் பிரசுரம் செய்யவென்று நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை அப்படியே இங்கிலீஷில் பிரசுரம் செய்கிறோம். யுத்த காரணம் உள்ளபடி யின்னதென்று தீரத் தெளிய பார்லிமெண்டரி பேபரிலிருந்து எடுத்துச் சொல்லி இந்தச் சண்டையில் பிரிடிஷார் புகநேர்ந்த தெப்படி யென்பதை இந்த யுத்தகாண்டத்தில் ஏற்கனவே விளக்கின பின் அவருடைய பதிலை மறுபடியும் தமிழ்ப்படுத்த நிமித்தமில்லை. அந்தந்த கவர்ன்மெண்டார் பிரசுரித்துள்ள அபிஷியல் தஸ்தாவேஜுகளிலிருந்து உண்மையை எடுத்தோதி பெல்ஜியத்தின் மீது படையெடுத்துச் சென்றது பிசகென்று ஜெர்மன் சான்ஸலரே ஒப்புக்கொண்டிருக்கிறதையே வற்புறுத்திக் கூறி ஆஸ்திரியா ஸெர்பியாவை வீணாக சண்டைக்கிழுத்ததையும், அதற்கு ஜெர்மனி உடந்தையாயிருந்ததன்றி வேறு யாராவது ஸெர்பியாவுக்குப் பரிந்துகொண்டு வந்தால் சண்டை தொடுப்பேனென்று ஜெர்மனி யுத்த ஸந்நத்தமாய் நின்றதையும் சொல்லி ஜெர்மனி ஆபத்திலிருந்ததாகச் சொல்வதை மறுத்து இந்தப் பாழும் யுத்தத்துக்குக் காரணம் உண்மையில் ஜெர்மனியிலுள்ள சண்டைக்காரர்களே யன்றி வேறில்லை யென்றும் அவர்களுக்கெல்லாம் தலைவர் 2-வது வில்லியம் சக்ரவர்த்தியே யென்றும் அவர் தம்முடைய குழந்தைகளையெல்லாம் சண்டைக்குத் தயாராகவே பழக்கி வந்தாரென்றும், அவருடைய ஏகபுத்திரியையு அமெரிகாவிலுள்ள நாங்கள் கர்னல் உடைதரி துள்ள அவள் படத்திலேயே அறிவோமன்றி ம றப்படி அறிய மாட்டோமென்று வற்புறுத்திக் கூ கிறார். உலகத்தார் இந்தப் பாரத யுத்தம் விளைந் தற்காக ஜெர்மனியை நோவார்களே யன்றி வே ஒருவர்பேரிலும் பழிபோடார் என்று ஸ்பஷ்டமாய் விளங்க எழுதியிருக்கிறார்.

## "THE SHOCKING STORY OF PROUD WILLIAM."

(*From Punch's Annual for* 1915)

### உவில்-லி-யம் என்னும் அஹம்பாவ புருஷன கதை.

(குழந்தைகளுக்கான விதூஷகன் கதை.)

1. குழந்தைகளேயொரு கதைசொல்லு' றேன்கேட்க வாருங்கோள்!
பழங்கதையொன் றுளத்அஹம்பாவத் தாலேயழிந்தான் கதையது!
பழங்கதைபோ லிந்தப்புதுக்கதை யஹம்பாவப் புருஷன்கதை:
முழங்கவேவிகட வித்தையிற்றேறிய விதூஷகன் பார'தப் போர்க்கதைகேள்:—

2. "உவில்-லி-யம் என்றொரு மானவன் இருந்தான்:
நிலத்திலும் நீரிலும் போர்செய்வல் வீரனவன்!
'கீல்'-என்னும் கால்வாயில் ஓடுகப்பலெழிற் படையுடையான்,
'வேல்'-ஒடு நால்வகைச் சேனையுமாகாச ரதமுமுண்டு.

3. எதையுமற் றெவரினுநன்றாகச் செய்வன்மையுண்டெனும் பேருமுண்டு
கவசம்பூண் கைக்குத்தால் எதையும்தகர்ப்ப னென்'கர்வமுண்டு
பறவையிற்கொடிய பருந்தொன்றும் பழக்கித்தன் கொடியிலுள்ளான்!
நறுக்குமீசையன் கிறுக்குச்சடாரவன் முறுக்குமீசையைப் பார்த்தால் பயம்!

4. அன்னவ னுக்கிரு நேயரு ளாரம்மா!—
அவர்களி லொருவர்தன் நேயம் போலி!—
ஆயினும் அற்புத உவில்-லி-யம் எப்போதும்
நயனங்கள் மூடாதே சொப்பனம் காண்தகையான்.

5. அன்னவ னொருநாள் அற்புத சொப்பனம்
கண்டவன் களித்தக்கனவில் மட்டற்ற மோகங்கொண்டான்!
பூவுலகாளும் சக்ராபதியாகப் பூபதியிருக்கக் கனவுகண்டு,
அலெக்ஸாண்டர்நெபோ-லி-யன்ஸீஸரெல்லாரும் அவனுக்குப்பின்னடைந் திருக்கக்
[கண்டான்.

6. சொப்பனங் கண்டவன் சிக்கனமாகவே யிருக்கப்பார்த்தான்
சொப்பனம் பலித்தாற் போலவேயவனும் நடந்துகொண்டான்
சொப்பனபுருஷனும் கந்தர்ப்பநகரும் ஜாக்ரத்தில்நாசமா மென்றறியான்
எப்படியுமவன் சொப்பனமழியக் காடியொருபக்கம் சேவலொருபக்கம்—

7. ஆகவேயிருந்து கொண்டவையிரண்டும் சிங்கமொன்றோடுற வாடிக்கொண்டு
கனவேநனவாகக் கந்தர்ப்பநகர்கட்டி வாழ்வானைத் தொந்தரை செய்தனபார்!
கந்தர்ப்பநகரம் பொடிபடச்செய்த குக்குடங்காடிசிங்கங்க ளையவனடக்கப்பார்த்
பார்த்தவன் தீர்ப்பாகச் செய்காரியம் சொல்லுறேன் கேளிரெம்பிள்ளைகளா! [தான்!

8. அவனுக்கிருந்த அற்புதநேயர்கள் இருவரிலொருவரை யழைத்துச்சொன்னான்—
மற்றொருநேயர் நான்வ'ல்லையுனக்கொரு கும்பிடுபோடு'றேன் போய்வாவென்றார்.—
"சற்றுநான் சொல்வதை யுற்றுக்கேள் நண்பரேசண்டை
கற்றுளகாடியு மங்கேயிருக்கதைப் 'பற்றிநீர்மீதேறிக் கொள்ளு"மென்றான்!

9. "என்னுடையற்புதப் பருந்துமேயந்தக் குக்குடமாம்ப்ரான்ஸின் கொட்டம்தீர்க்கும்:
பொன்னுடையென்கைக் குரடாவாலேயந்த இழிவுள்ளசிங்கத்தின் கொட்டத்தை
[யடக்கு'றேன்பார்!
என்றவன்தானும் வீரம்பேசிமெத்த அஹம்பாவக்கிறுக்கும் தலைக்கேறியே
சிங்கத்தையடக்கிநான் 'ஸர்க்கஸ்'வித்தையாடச் சிநேகிதரோநீரும் பார்க்கலாமென்
[றான்.



10. லேசாய் நினைத்தவோர் குக்குடம்சண்டைசெய் சேவலாமாறியே பருந்தைவதைத்
அற்பமாய்நினைத்த சிங்கமுமவன்கைக் குரடாவுக்டங்கிப் படிவதாயில்லை! [தது:
கனவிலேசாத்திய மானதைநனவிலே சாதிப்பதெளிதில்லை யென்றுணர்ந்தான்:
உணர்ந்தவனுண்மையிலொன்றுமில்லையப்பாஊருக்குப்போய்வாரேன்வே டிக்கைபோதுமென்றான்.

11. வேடிக்கையாகவே நாங்களுமுன்கூட வீட்டுக்குவந்தங்கே விருந்துண்டுபோவோமென்
றாடினசிங்கமும் அற்புதக்குக்குடம்தானும் அவன்வீட்டுவாசலில் முன்சென்றுநிற்க
தேடிவந்தப்பெருங்காடி யவன்நேசர் மீதேறிக் கொண்டு'வில்யம் [வும்
ஓடிவரவெதிர் பார்த்திருக்கக் கண்டானச்சோ, அச்சோவே!"

12. இப்படி யாகவேநல் லெழில்புருஷன் உவில்-லி-யம்தன்
சொப்படி வித்தையாடிச் சொப்பனத்தை நம்பிக்கெட்ட
தப்படியாம் வித்தையைப்பார்-ஹாதப்போராய் நடத்திவைத்த
மெய்ப்படியாள் குஹன்வாழி! எப்படியுமிக்கதையை வாசித்தார்கேட்டார்வாழி!

---

## AMERICAN VERDICT ON THE WAR.

### A REPLY TO THE GERMAN PROFESSORS.

#### SPIRITED INDICTMENT.

The following has been sent to us for publication and we gladly make room for the same:—

Ninety-three of the most prominent men of Germany, distinguished in various branches of science, art, education, and literature, have recently circulated broadcast throughout America a letter, entitled "An Appeal to the Civilized Word," in which they attempt to change public opinion in the United States on the subject of the war. Mr. Church, president of the Carnegie Institute, at Pittsburgh, and author of "The Life of Oliver Cromwell," has made reply to the German appeal, which is addresssed to Dr. Fritz Schaper, of Berlin. He says:—

It gives me a feeling of pity to note the importunity with which the people of Germany are seeking the good opinion of America in this strife. It is greatly to their credit that they wish to stand right in the judgment of this nation. But Germany need have no fear that American public opinion will be perverted by the lies and calumnies of her enemies. We are all going deeper than the surface in our search for the truth. Your letter speaks of Germany as being in a struggle "which has been forced upon her." That is the whole question; all others are subsidiary. If this struggle was forced upon Germany, then, indeed, she stands in a position of mighty dignity and honour, and the whole world should acclaim her and succour her, to the utter confusion and punishment of the foes who have attacked her. But if this outrageous war was not forced upon her, would it not follow in the course of reason that her position is without dignity and honour and that it is her foes who should be acclaimed and supported to the extreme limit of human sympathy?

I believe, dear Dr. Schaper, that the judgment on this paramount question has been formed. That judgment is not based upon the lies and calumnies of the enemies of Germany, nor upon the careless publications contained in the newspapers, but upon a profound study of the official correspondence in the case. What do the official documents prove?

After reviewing the evidence Mr. Church concludes:—

Who began it? Was it England? Scarcely so, for England, in so far as her army is concerned, had yielded to the popular plea for arbitration; she was not ready for war and will not be ready for another six months. Was it France? Was it Russia? Not one of the 93 distinguished men who have sent me this letter, if they will read the evidence, will say so. It was Austria, who, by her unreasonable and inexorable attack on Serbia, began the war, supported at every step by Germany, who, in her turn, gave notice to the Powers of Europe that any interference with Austria would be resented by Germany to the full limit of war.

#### THE CRIME AGAINST BELGIUM.

Mr. Church proceeds:—

The next point in your letter reads thus:— "It is not true that we trespassed in neutral

Belgium." Have these 93 men studied well the letter they have signed? Could intellects so superbly trained deliberately certify to such an unwarrented declaration? Has any one of my 93 honoured correspondents read the appeal to the American people by Imperial Chancellor von Bethman-Hollweg, published in the American newspapers on August 15? I fear not, fo in that statement the Chancellor said:—" We were compelled to override the just protests of the Luxemburg and Belgian Governments. The wrong—I speak frankly—that we are committing we will endeavour to make good as soon as our military goal has been reached."

What will the good concience of the German people say when, in spite of its passion in the rage of war, it grasps the awful significance of the confession of its Imperial Chancellor? "The wrong that we are committing." The wreck and ruin of a country that has done you no injury the slaughter of her sons, the expulsion of her King and government, the blackmail of her substance, the destruction of her cities, with their happy homes, their beautiful monuments of historic times, and the priceless works of human genius! "The wrong that we are commiting." Worst of all, when the desperate and maddened populace, seeing their sons slain and their homes in flames, fired from their windows in the last instinct of nature, your troops, with barbaric ferocity, put them to the sword without distinction of age or sex! The wrong! Oh, Doctor Schaper, if these conditions should ever be reversed and these foreign soldiers should march through the streets of Berlin, would not you, would not all of my 93 correspondents if they saw their homes battered in ruins and their sons dead in the streets, would they, too, not fire from their windows upon the merciless invaders? I am sure I would do so!

## GERMAN MILITARISM.

Your reference to German militarism brings up in my mind the conviction that this war began potentially 25 years ago, when Emperor William II. ascended the throne, declared himself Superme War Lord, and proceeded to prepare his nation for war. His own children were raised from their babyhood to consider themselves soldires, and to look forward to a destiny of slaughter: and here in America we know even his daugeter only by her photograph in a colonel's uniform. And as with his own children, so all the youth of his empire were brought up.

Going far away from your great philosopher, Kant, who, in his Categorial Imperative, has taught us all a new golden rule, the national spirit of Germany has been fed on the sensual materialism of Nietzsche, on the undisguised bloodthirst of General von Bernhardi, on the wicked war dreams of Treitschke, and on the weak morality of von Bulow; and we behold in every scrap of evidence that we can gather from your Emperor, his children, his soldiers, his statesmen and his professors, that Germany held herself a nation apart from the rest of the world and superior to it, and predestined to maintain that superiority by war. In contrast to this narrrow and destructive spirit of nationalism, we in America have learned the value of humanity above the race, so that we cherish all mankind in the bosom of our country. Therefore we can do nothing but execrate the conduct of your Emperor, who has driven his troops to slaughter their brethern and be slaughtered by them in this bloody and unspeakable conflict.

And so, at last, my dear Dr. Schaper, we find ourselves shocked, ashamed, and outraged that a Christian nation should be guilty of this criminal war. There was no justification for it. Armed and defended as you were, the whole world could never have broken into your borders. And while German culture still has something to gain from her neighbours, yet the intellectual progress which Germany was making seemed to be lifting up her own people to better things for themselves and to an altruistic service to mankind. Your great nation floated its ships in every ocean, sold its wares in the uttermost parts of the earth, and enjoyed the good favour of humanity, because it was trusted as a humane State. But now all this achivement has vanished, all this good opinion has been destroyed. You cannot in half a century regain the spiritual and material benefits which you have lost. Oh, that we might have again a Germany that we could respect, a Germany of true peace, of true progress, of true culture, modest and not boastful, for ever rid of her war lords nnd her armed hosts, and turning once more to the uplifting influence of such leaders as Luther, Goethe, Beethoven, and Kant! But Germany, whether you win or lose in this war, has fallen, and the once glorious nation must continue to pursue its course in darkness and murder until conscience at last bids it withdraw its armies back to its own boundaries, there to hope for the world's pardon upon this inexpiable damnation.

"THE HOME AS THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION."

*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*

*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End."*

ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**

"HITCH YOUR WAGON TO A STAR." "TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன்: அறிவேசக்தி: ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*

"New Series" ஸத்தியமே ஜெயம்—**SATYAMEYA JAYATE.** "Approved"

புத்தகம். 22.] ஆனந்தஹ மாசிமீ, 1915ஹ பிப்ரவரிமீ [சஞ்சிகை 11

## "THE HOME AS THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION."

### PROFESSOR JOHN PERRY'S PRESIDENTIAL ADDRESS

### To the Educational Section of the British Association.

As a wholesome corrective to some current educational superstitions we may call attention, says the *Indian Social Reformer*, to Professor John Perry's presidential address to the Educational Section of the British Association this year (*in October last*). A more thorough going indictment of an educational system and its products, we have seldom come across...... He says,—

"The reforms in pedagogy which, with Dr. Armstrong, I have been clamouring for during the last thirty years, would cause the best known pedagogues to scrap all their machinery, and so to lose nearly the whole of their invested capital. Even when they are not influenced by the idea of losing money, these men cannot be made to believe in the necessity of reform any more than the Central African worshippers of hideous idols can be converted, for with just as much intensity do they worship

And what of these products? The Professor says:—

"Every clever man who has gone to a public School and to Oxford or Cambridge worships the system which has taken from him his spiritual birth-right, his individuality, his initiative, his originality, his commonsense, his power to think for himself—yes, I may say his belief in himself. He has become too much like a sheep ready to follow the bell wether; he is a man who has greatly lost his soul."

Of the English Public School as an educational institution Professor Perry says:—"English people know the worthlessness of the public school system in the mental training of the average boy. This worthless system continues because in some occult way it seems to have a connection with something of real importance, *public school form*. There is really no connection. It is in itself a splendid thing. The public school boy is trained in self-possession, modesty, cleanliness, truthfulness and courage. At school his health in

is exceedingly ignorant; he neither reads nor writes, and he has little reasoning power except what his sports have developed. This form is essentially aristocratic. It is based on superiority of position, birth or caste,........ ...By prig, I mean a man who cannot get outside convention and so cannot exercise his own commonsense,............Its strength lies in convention and habit and the belief that poor people are not men but a lower kind of animal who may be pitied as we pity a suffering dog. Such pity can never raise the people or reform abuses."

Refering to the boarding School and the hostel as panacea for educational ills, the Professor remarks:—"It is one of the great advantages of poverty that children go to day-schools and they keep in touch with home life."

The *Indian Social Reformer* calls pointed attention to the prevailing tendency in India and says: "Indian educationists will do well to consider any such schemes in the light of the observations of the President of the Educational Section of the British Association quoted above.

### THE HOME IS THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION.

The home, indeed is the goal and centre of Professor Perry's educational scheme, "The time is coming", he said, "when a child's own father and mother will have much more knowledge and wisdom than they have now, and they will refuse to give up to others the doing of their highest duties. It is at present not sufficiently reognised that the most important duty of the parents is the education of their children." He protests against the use of the word "character" for public school *form*, because "*character* comes from home life, not from school life, which indeed, is rather antagonistic to character." He attaches great importance to the early formation of the habit of reading. "Any boy whatever will become fond of reading if the people about him are fond of reading. I state this as a fact which I have investigated. A boy who is fond of reading gets later on to know the value of books and the use of books, and he will go on educating himself until he dies."

## "A PICTURE OF HOME-LIFE."

("HOME:—THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION.")

*Father, Mother, Child and Teacher.*

**The Beginning of Home-Education.**

"தந்தைதாய் முதலாதியர் தாங்கள் பார்த்
திந்தவிஸ்வ ரூபங்கண்ட திசயித்

தந்தமாகிய நாமகரணஞ் செய
வந்தனர் காற்கேய முனிவரே."—பாகவதம்.

"With the Naming of the child begins that true Education in Home-life from which comes *Character*."—




"It comes from contact with fathers and mothers, brothers and sisters, relations and riends." cf. 'குலத்தளவே யாகுமாம் குணம்.'

புஸ்தகம்-22.] [சஞ்சிகை-11

"The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide."

ஆனந்தஹு மாசிமீ } விவேகசிந்தாமணி { February -March 1915.

ESTABLISHED 1892

"பெற்றோர்கள் தாழவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேஞ் சேயிகழ்ந்த
யாச்சரிய மோதா னவர்க்கு."

## THE HOME AS THE GOAL AND CENTRE OF TRUE EDUCATION.

*From Professor John Perry's Presidential Address to the Educational Section of the British Association.*

### வித்தியாவிலாஸ ஸாதனஸங்கம்.

" இல்லறமல்லது நல்லறமன்று."

பாலபோத ஸமஷ்டிசேவை ஸாதனம்.

சென்னையில் பாலபோத ஸமஷ்டிசேவை ஸாதநாசங்கம் ஏற்பட்டு ஊருக்குழைப்பதை "ஸமஷ்டிசேவை" தீக்ஷையாக அனுசரிக்கச் சிறுவர் பழகவேண்டுமென்று உழைத்துவருகிறது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இந்த ஏற்பாடு ஊர்ஜிதத்துக்கு வந்தது இந்தியா கவர்ன்மெண்டார் வித்தியா விஷயமாகச்செய்த தீர்மானத்தாலும், நமது அரசர் பிரதிநிதியவர்கள் அதையொட்டிச் சட்ட நிரூபணசபையில் பேசியதில் சிறுவர்களின் மனப்பழக்கமும் அதனால்வரும் குணவிசேஷமும் பெரிதேயன்றி வெறும் ஏட்டுப்படிப்பினால் பிரயோசனமில்லையென்று வித்தியா லக்ஷணத்தை உண்மையாக வெடுத்தோதியதாலும் கனம்பொருந்திய ஹார்டிஞ்ச் பெருமாட்டியவர்கள் "ஹார்டிஞ்ச் ஜயந்தி" யென்கிற பாலர் திருவிழாவை யேற்படுத்தியதாலும் ஸ்திரப்பட்டு உறம்பெறலாயிற்று.

குழந்தைகள் குடும்பத்திற் பிறந்து வளர்ந்து பள்ளியிற் பழகித்தேறி உலகில் உழைக்கப் பாத்திரராகிறார்கள். இதற்கு வித்தியா விலாஸ ஸாதன ஸங்கமாயிருப்பது இல்லமே.

"இல்லறமல்லது நல்லறமன்று."

இப்படியாக, குழந்தைகளுடைய மனோவிர்த்தி, அறிவுவிர்த்திக்குக் காரணபூதமாயுள்ள ஸ்தாபனங்கள் மூன்றுள. அவை:—

வித்தியாவிலாஸ ஸாதனங்கள்.

(1) குடும்பம்; (2) பள்ளிப்பழக்கம்; (3) ஜனசமூகம் அல்லது உலகம். இவைமூன்றும் திரிகுணாத்மகமானதாயிருப்பினும் உண்மையில் ஒருதன்மையனவாயிருக்கும். எப்படியெனில் எடுத்துச்சொல்கிறேன் கேளுங்கள்:—

(1) குடும்பம்: ஒரு வித்தியாவிலாஸ ஸாதனம்.

முதலாவது குடும்பம் என்பது தந்தை தாய் உடன்பிறப்புச் சுற்றம் என நால்வகை லக்ஷணங்களோடு கூடியதாயிருக்கிறது. இந்த நான்கு லக்ஷணங்களில் ஒன்று குறைந்தாலும் அது குடும்பலக்ஷணத்துக்குப் பங்கம் விளைப்பதாகும்.

தந்தையில்லாத குடும்பம் தலையில்லாத முண்டத்துக்குச் சமானமாகும்.

தாயில்லாத குடும்பம் மழையில்லாது வரண்ட பூமிக்குச் சமானமாய் செழிப்புக்குன்றி வரட்டுத்தரைபோல் காய்ந்து உலர்ந்து வெறிச்சென்று கரடு தட்டிப்போகும்,

உடன் பிறப்பில்லாத குடும்பம் "ஒற்றை மரம் தோப்பாமா?" என்றதுபோல் குடும்ப லக்ஷணம் பொருந்தியதாக

சுற்றமில்லாத குடும்பம் மாங்கல்யமிழந்த மங்கைபோல் நலமிழந்து சீலங்குன்றிச் சிதைந்துபோம்.

ஆகையால் இந்த நாலு அங்கமும் நல்ல குடும்பத்துக்கு இன்றியமையாத லக்ஷணங்களாம். இந்த லக்ஷணங்கள் பூரணமாகப் பொருந்தி யிருந்தால்தான் குடும்ப லக்ஷியம் (The Family Ideal) நிறைவெய்தலாகும். இல்லாவிடில் லக்ஷ்யம் குன்றிப்போம்.

(2) பள்ளிப்பழக்கம்: ஒரு வித்தியா விலாஸ ஸாதனம்.

இரண்டாவதான பள்ளிப்பழக்கம் என்பதும் இப்படியே தந்தை, தாய், உடன்பிறப்புச், சுற்றம் என நாலு அங்கங்களோடு கூடியதாயிருக்கவேண்டும்.

(1) ஆசான் (போதகாசிரியர்) உயிர்கொடுக்கும் தந்தையைப்போல விவேகஞானம் உதிக்கச்செய்யும் சக்தி வாய்ந்தவராயிருக்கவேண்டும். ஆகையால் இவர் தந்தை ஸ்தானத்துக் குரியவராவர். பள்ளிப் பிள்ளைகளையெல்லாம் ஸமபாவமாய் நடத்துவதோடு ஒவ்வொரு குழந்தையின் குணதோஷங்களையும் மனோபாவங்களையும் தந்தையைப்போலிருந்து அறிந்து அவரவர்கள் பக்குவமறிந்து போதிக்கவேண்டும்.

(2) பள்ளிக்கூடம் (வித்தியாசாலை) பால் கொடுத்துப் பரிபாலிக்கும் தாயைப்போல் பிள்ளைகளுக்கு ஞானப்பால் ஊட்ட வேண்டிய வசதிகள் வாய்ந்ததாயிருக்கவேண்டும். மூலைப் பாலில்லாத தாயார் பிள்ளைவளர்ப்பது முடியாத காரியம்போல் வித்தியா சாதனங்கள் அமைந்திராத பள்ளிக்கூடம் பிள்ளைகள் மனதைச் சரிவரப் பழக்குதல் முடியாத காரியமாகும்.

(3) உடன்பிறப்பு என்பது ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள் சகோதரபாவம் பாராட்டி ஒருவருக்கொருவர் நேசமாயிருந்து உடனுதவி செய்வதுபோல் "பள்ளிப்பிள்ளைகள்" தாமெல்லாம் ஒருபள்ளியிற் பழகினவர்கள் என்கிற ஏகீபாவத்தினால் (*Esprit de Corps*) ஸமஷ்டி பாவம் சித்திக்கப்பெற்று உடன்பிறப்பு முறையில் அறிவுதிக்கப் பெற்றவராதல் சகோதர பாவம் கொண்டாடலாகிய மனப்பழக்கத்துக் குரிய தர்மமாம்.

(4) சுற்றம் என்பது (Environment) என்று சொல்லும் பள்ளிப்பழக்க வாசனைக்குப் பொருந்தும். பள்ளிப்பிள்ளைக்கு ஊரெல்லாம் சுற்றமாகும். ஏனெனில் எதையும் "குற்றம் நாடிக் குணம் நாடி மிகைநாடி மிக்கக்கொளல்" என்கிற ஆன்றோர் வாக்குப்படி இயற்கைப் பிரகிருதி, செயற்கைப் பிரகிருதியென்கிற பிரகிருதி தர்மஸம்பந்தமானவை யெல்லாவற்றையும் அன்போடு ஆராய்ந்து அவற்றின் குணதோஷங்களையறிந்து குணத்தைக் கிரகித்துக் குற்றத்தைநீக்கி எல்லாவற்றையும் தம்முடைய மனப்பழக்கத்துக்கு அனுகூலமான "சுற்றம்" போன்ற உறவுமுறையால் கிரகித்து அறிவு விசாலிக்கப்பெறுவது பள்ளிப் பிள்ளைகளுக்குரிய தர்மமாகும். ஆதலால் ஊரெல்லாம் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சுற்றம் ஆகும். இந்தப் பாடத்தைத்தான் முதிர்ந்தபடியில் (Civics) ஊர்லக்ஷணம் என்கிற தலைப்பின் கீழ் சற்றுணர வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

(3) ஜனசமூகம் அல்லது, உலகம் ஒரு வித்யா விலாஸ ஸாதனம்.

இப்படியே ஜனசமூகம் என்கிற மூன்றாவது வித்தியாசாதனமும் சதுரங்கலக்ஷணம் பொருந்தியதாகும்.

இதற்கு அரசு தந்தைஸ்தானம்; குடி படையரண் நாடு என்கிற சதுரங்கங்களோடுகூடிய அரசாங்கம் செல்லும் தேசம் தாய்ஸ்தானம். அரசியல் என்பது உடன்பிறப்பு ஸ்தானம். உலகியல் என்கிற உலகதர்ம-கர்மசாதனங்கள் சுற்றம்.

விருத்தி ஞானக்கிரமம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"—திருக்குறள்.

இப்படியாக படிப்படியே "குழந்தைமனம்" குடும்பத்தில் பிறந்துவளர்ந்து, பள்ளிப் பழக்கத்தினால் விரிந்துகுவிந்து உள்ளம்மலர உணர்வுண்டாகித்தேறி, ஜனசமூகத்தில் அரசியல் தர்மம், உலகியல் தர்மம் இரண்டையும் பூரணமாயறியப்பெற்று "உலகஞானம்" என்கிற சித்தவிருத்தி ஞானம் பூரணமாய்ப் பெற்றபின் இஃதெல்லாவற்றிலும் நிலையான சாசுவதானந்தம் இல்லாமைகண்டு தன் மனதையடக்கியாளுதலே ஸாம்பராஜ்யம் அளிக்குமென்று உணர்ந்து "சித்தவிருத்தி நிரோதனம்" என்கிற சிக்ஷாதீக்ஷைக்கிரம சம்பந்தமான மனப்பழக்கத்தால், கடவுளுடைய திருவடியைத்தேடிப் பணியப் பெறுதலே கல்வியின் முடிவானபயன். இது ஜீவன் உற்பத்தியானது முதல் "ஜீவன் முக்தி" யென்கிற ஜீவபந்தமாகிய தளை அறுபடுகிற வரையிலுள்ள மனப்பழக்கத்தைக் குறிக்கும். இதற்கு "பார்ப்பாத்தியம்மா மாடுவந்தது!" என்று சொல்கிற பழமொழிக் கதை பாவனையாக ஏதோ வாங்குகிற சம்பளத்துக்குப் பிள்ளைகளை மந்தையில் மாடுமறியல் போடுவதுபோல், பள்ளியில் மறியல் போட்டுவைத்து சாயங்காலம் வீட்டுக்கனுப்பி வருஷாந்தத்தில் ஏதோ பரீக்ஷையில் தேறினான் என்கிறவியாஜம் ஏற்பட்டால்போதும் என்கிற பாவனையோடு செய்கிற போதனாமுறை பிரதிகூல சாதனமின்றி அனுகூல சாதனமாகாது.

கிளிப்பிள்ளை, அணிற்பிள்ளைப் படிப்பு.

(Memorising and Habitual Instinct.)

கிளிப்பிள்ளை, அணிற்பிள்ளைகள் பழகுவதுபோல், சப்தமாத்திரத்தினால் (சப்தார்த்தத்தைக் கிரகிக்கும் சக்தியின்றி) நெட்டுருவென்கிற மனப்பாடம்போட்டுக் கற்கும்படியும், ஸ்வபுத்தி விர்த்தியின்றி, கேவலம் மிருகபாவமான இயற்கைவிர்த்திப் பழக்கத்தினாலே அணில்கள் மனோபாவத்தைத் தெரிவிப்பதுபோல், பிள்ளைகள் வாசனைப் பழக்கத்தாலே ஒன்றைச் செய்யக்கற்றலும் கல்வியாகமாட்டாது. ஏனெனில் "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்று சொல்லியுள்ளார் ஔவையார்.

மனப்பழக்கம் சித்விலாஸத்தையளிக்கும்.

வாசனைப்பழக்கத்தால் (Instinct) செய்யும் காரியங்கள் இந்திரியப் பழக்கத்தைமட்டுமளிக்குமன்றி மனப்பழக்கத்தை யளிக்காது. மனம் என்பது இந்திரியங்களுக்கெல்லாம் ராஜாவாயிருப்பது. அது தன்னையடக்கியாளப் பழகாவிட்டால், அதன் பிரஜைகளான இந்திரியங்களை அடக்கியாள முடியாது. இந்திரியப்பழக்கம் அவசியமேயாயினும் மனப்பழக்கம் இல்லாத இந்திரியப்பழக்கம் கல்வியோடு சேர்ந்ததாக மாட்டாது. 'ஸர்க்கஸ்' ஆட்டத்தில் எத்தனையோ மிருகங்கள் அபூர்வமான வித்தைகள் செய்கின்றன. இவையெல்லாம் ஆட்டுவிப்பான் ஆட்ட, அவை இந்திரியப் பழக்கத்தால் செய்கின்றனவேயன்றி, மனப் பழக்கத்தால் செய் வித்தையல்ல. மனம் தன்னை யறிந்தால்தான் அதன் சேஷ்டையடங்கி அலையோய்ந்த சமுத்திரம்போல் சாந்தஸ்வரூபத்தையடைந்து அறிவாகிய சித்ஸ்வரூபம் தன்னில் பிரதிபிம்பிக்கக் காட்டி நிற்கும். தன்னையறியாதவரையில் மூட அரசன் ஸ்வபுத்தியின்றி தன்னையடுத்தார் சொற்கேட்டு நடந்து கெடுவதுபோல், மனம் இந்திரிய வழிப்பட்டு விஷயசுகத்திற் சிக்கி விவேகஞான மூதிக்காமற்றானே கெட்டுப்போம். ஆதலால் மனப்பழக்கம் அவசியம் வேண்டும். இதைச் "சித்திவிருத்தி நிரோதம்" என்று சொல்லுவர் மனப்பழக்கத்தில் தேர்ந்த மூதறிஞர். இத்தகைய மனப்பழக்கம் தான் இகபரசாதகங்கள் எல்லாவற்றையும் அளிக்கும். இதற்குப் பதஞ்சலி, வியாக்ரபாதமுனிவர்கள் "சிதம்பர தரிசன" மளிக்கப்பெற்றகதைநல் லுதாரணமாகும்.

"குடும்பமோடு மாக்ஷிமைபோம்."

"தந்தையொடு வித்தைபோம், தாயோடு ஊட்டம்போம்" என்பது நம்முள் வழங்கும் ஓர் உண்மையான பழமொழி, "குலத்தளவே யாகுமாம் குணம்" என்றுசொல்லியிருக்கிறார் ஆதலால் நற்குடியிற் பிறவாதார் மாட்சி பெற்றுய்தல் கஷ்டம். ஆகையால் நாம் "குடும்பமொடு மாக்ஷிமைபோம்" என்று சொல்லலாம்.

ஆகலால் வித்தியாவிர்த்திக்கு மூலகாரணமாயும் மூலபலமாயுமிருப்பது குடும்பம். அந்தக் குடும்பத்துக்கு ஆதாரபூதமாயுள்ளார் தாய் தந்தை.

"பெற்றோர் கடன்."

பெற்றோர்கடன் பிள்ளைப் பேற்றோடு முடியாமல் அப்பொழுதுதான் துவங்குவதாகச் சொல்லலாம். தேஹபோஷணைக்குத் தாய்தந்தை எப்படி அவசியமோ அப்படியே அறிவுவிர்த்தியாகிய மனபோஷணைக்கும் தந்தை தாய் இருவரும் அவசியமே. தந்தை-அறிவு; தாய்-மனம். அனுகூலதாம்பத்தியத்தாலே சற்புத்திர சந்தானமுண்டாவதுபோல, அறிவும் மனமும் அனுகூலதாம்பத்திய முறைபற்றி ஒத்துவாழ்ந்தாலன்றி சித்த விருத்திஞானமும், அதன் முதிர்வில் சித்தவிருத்திநிரோத சக்தியும் உண்டாகாது. இது வேதபூமியாகிய இந்தியாவின் பூர்வீகமான வித்தியா லக்ஷியம்: இலக்ஷியம் கண்டதற்கு இலக்ஷணம் உரைப்பவர்தானே வித்துவான் (புலவனர்) என்னும் பட்டத்துக்குரியவராவர்.

**The Moral Value of Education,**

"கல்வியைக் கல்: கற்றபடி நில்."

சக்தி, சக்திமான் என்பது போல, வித்தை, வித்துவான் என்பதும். வித்தையை வசப்படுத்தி யாளத்தகுந்தவனுக்கு வித்துவான் என்றுபெயர். கல்வியென்றாலும் வித்தையென்றாலும் ஒன்றே. கல்வியைக்கல் : கற்றபடிநில்"என்றார் மேலோர். நடத்தையில் பிரதிபலித்துக் காட்டாத 'கல்வி' கல்வியல்ல. அது ஒரு வேஷம் போலாம். அதுவும் ஆடத்தெரியாதவன் தரித்த வேஷத்துக்கு ஒப்பாகும்.

"Professor John Perry's Presidential Address".

இந்த உண்மைகளை ஆங்கிலேயவித்துவான்கள் கிரகித்து வருகிறதைப் பார்க்க நமக்கு உள்ளக் கிளர்ச்சியுண்டாகிறது.

"பிரிடிஷ் அஸ்ஸோஸியேஷன்" சங்கத்து வித்தியா சம்பந்தமான பிரிவின்தலைவர் ப்ரொபெஸ்ஸர் ஜான் பெர்ரி என்பவர். இவர் சென்ற வருஷம் கூடிய வருஷாந்த சபையில் ப்ரெஸிடெண்ட் (தலைவர்) முறையில் செய்த பிரசங்கம் மிகவும் சிலாக்கியமானதாயிருக்கிறது. இப்பொழுது சம்பிரதாயத்திலிருந்து வரும் எட்டுப் படிப்பு, சோற்றுப்படிப்பு முறைகளைக் கண்டித்து பிள்ளைகள் முன்னுக்குவர பெற்றவர்களே உடனிருந்துழைக்கவேண்டுமென்றும் இந்தக் கடமையை அவர்கள் செலுத்த அநருகராய், மந்தையில் மாடுமறிப்பதுபோல், கூலிக்கு வேலை செய்யும் அந்நியர்வசம் ஒப்புவிப்பது அநர்த்தம் விளைப்பதாயிருக்கிறதென்றும் நன்றாக விளங்க வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அஃதோடு வித்தியா விலாஸத்தின் உண்மையான லக்ஷணத்தையும் அவர் எடுத்துரைத்திருக்கிறார். அவருடைய வித்தியா விலாஸலக்ஷண விசேஷத்தை அப்படியே ஆங்கிலத்தில் எடுத்து இதன்முகட்டில் அச்சிட்டு அதன் கருத்தையும் தமிழில் தெரிவித்திருக்கிறோம்.

The "Doing of Their Highest Duties by Parents."

"தாயும் தந்தையும் குருவும் தெய்வமும்"

பெற்றோர்கள் தம்பிள்ளைகளுக்குரிய பெருங்கடனைத் தாங்களே செலுத்தாமல் அந்நியர்வசம் ஒப்புவிக்கும் தற்கால ஏற்பாடு மாறி, பெற்றோர்கள் தாமே தம் பிள்ளைகளுக்கு தாயும் தந்தையும் குருவும் தெய்வமுமாகவிருக்கும் காலம் வரும். உதரபோஷணைக்குத் தாயும், வித்தியா போதனைக்குத் தந்தையும், ஸத்தியஞான அறிவு (விவேகம்) உதிப்பதற்கு அஞ்ஞான இருளைப்போக்குகிறவரான குருவும், இஷ்டசித்திகளை யனுபவித்துக் கிருதகிருத்தியர்களாவதற்கு உபாஸனா தேவதைகள் சித்தியும் அவசிய மாவதுபோல், பிள்ளைகள் இகபரசாதனங்களைப் பெறுவதற்கு அனுகூல ஆஸ்பதமாயிருப்பதால் தெய்வமுமாகப் பெற்றோர்கள் தாமே விளங்கும் காலம்வரும். "இல்லறமல்லது நல்லறமன்று" என்றபடி, இல்லமே இந்த வித்தைக்கெல்லாம் இசைந்த



ஸ்தானமாகும். "குலத்தளவேயாகுமாம்" என்பதற்கிசைய குடும்பப் பழக்கத்தினாலேயே குணமும் மணமும் குழந்தைகளுக்கு அமையப் பெறும்.

"இளமையிற்கல்"

என்றபடி இளவயதிலேயே படிக்கக் கற்றுக்கொள்ளல் வேண்டும். இதற்கு சத்சங்கவாசனை அத்யாவசியம். "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்றார்போல, படிக்கப் படிக்கப் படிப்புவாசனையேறும். படிப்புவாசனை யுண்டானால் எந்தக் குழந்தையும் தொட்டிலிட்டுத் தாலாட்டுக் கேட்கும் பருவமுதல் கட்டிலைவிட்டுச் சுடுகாடு சேரும் காலம் வரையில் வித்தியா விலாஸம் குன்றாது மேன்மேலும் அறிவு விசாலிக்கப் பழகிவரும் என்பது நிச்சயம் என்கிறார். இது வாஸ்தவம் தானே. பெற்றோர்கள் இதை வாசிக்கலாம் அதை வாசிக்கக் கூடாதென்று பிள்ளைகளை மௌட்டியத்தில் மூழ்கவைக்கிறார்கள். "மனக்காப்புக் காப்பேயன்றி மதில் காப்புக் காப்பல்ல" என்று ஒரு பழமொழியுண்டு.

"ஸத்ஸங்கவாசனை" விசேஷம்.

பெற்றோர்கள் குழந்தைகள் மனதை நல்வழியில் பழக்கிக் காப்பாற்றி வந்தார்களானால் எந்தப் புஸ்தகத்தை வாசித்தாலென்ன, படிப்புவாசனை அமைவதுஒன்றே முக்கியம். கரும்பு, மதுரரஸத்தையும், 'வேம்பு' கைப்புரஸத்தையும் கிரகித்துக் கொள்வதுபோல், நல்வழியில் பழகிய மனம் நல்லொழுக்கத்தையே கிரகிக்கவல்லதாகும். தீப்பழக்கம் பெற்றமனது தீயவொழுக்கத்தை கிரகிக்கும். பிள்ளையினுடைய பள்ளிப்பழக்கம் 16-வயதுடன் சரியாக முடிந்துபோகவேண்டுமென்கிறார். அப்புறம் அவன் ஜீவனார்த்தமான வித்தை கற்று உலகில் பழகி வித்தைபயில வேண்டும் என்கிறார். ஏட்டுப் படிப்புப் படித்து உதட்டி லொன்றும் உள்ளேயொன்றுமாய், வீட்டில் ஒருவிதம் வெளியில் ஒருவிதமாய் நடந்துகொள்ளும் நடத்தையுடைய படிப்பாளிகள் படிப்பு உபயோகமற்ற படிப்பு என்கிறார். உண்மை.

## LULLABIES AS FIRST AID TO CHILD-EDUCATION.

GLEANINGS FROM THE ANCIENT INDIAN METHODS OF KINDERGARTEN

பாலபோத சிக்ஷாசாதனம்

சிறுகுழந்தைகளுக்குச் சொல்லும் தாலாட்டுப் பாட்டுகள்.

இந்நாட்டில் குழந்தைகளைத் தொட்டிலில் போட்டு தூங்கச்செய்யும்பொழுது அவர்களை சீக்கிரமாய் தூங்கப் பண்ணும்பொருட்டும் அல்லது அழுதுகொண்டிருந்தால் அந்த அழுகையை நிறுத்தும்பொருட்டும் தாய்மார்களும் செவிலித்தாய்களும் அத்தை, பாட்டி முதலிய மற்றோர்களும் "தாலாட்டல்" என்ற பாட்டுக்களையெடுத்து "நீலாம்பரி" என்கிற இராகத்தில் பாடுவது வழக்கம். இந்தப் பாட்டுகள் வெகு அருத்தத்தோடு கூடினவாயும் கடவுள் பெருமை முதலியவைகளை எடுத்துக்காட்டுகிறவைகளாயும் இருக்கும். முந்திய அக்டோபர் மாதத்து ஸஞ்சிகையில் ஆண் குழந்தைகளுக்குப் பாடும் தாலாட்டுப் பாட்டுகள் சிலவற்றை யெடுத்தெழுதி அவற்றின் அருத்தத்தை விளக்கினோம். இந்த சஞ்சிகையில் பெண்குழந்தைகளுக்குப் பாடும் சிலவற்றையெடுத்து விளங்கவைப்போம்.

1. ஆராரோ ஆராரோ
அரிவையரே ஆராரோ
சீராரும் தெள்ளமுதே
தெரிவையரே ஆராரோ.

இதன் கருத்து:—ஆர் ஆரோ! பூர்வஜன்மங்களில் நீயாரோ நான் ஆரோ! இந்த ஜன்மத்தில் தாயும் மகளுமாக வந்துதித்திருக்கிறோம். சிறப்புத்தங்கிய தெளிவான அமிர்தத்தைப் போல் தெய்வகளை பிரகாசிக்கப் பெற்று யாவருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கிற அன்புரஸமாகிற இனிமையைக் கொடுக்கிற பெண்ணே! நீயாரோ, நான் ஆரோ!—என்றபடி.

2. வண்ணமட மயிலே
மாமரத்தில் வாழ்குயிலே
பெண்ணரசே பஞ்சணைமேல்
பிரியமுடன் நித்திரைசெய்.

இதன் கருத்து:—அச்சம், பயிர்ப்பு, நாணம், மடம், என்கிற நான்கு மேலான ஸ்ரீலக்ஷணங்களில் கடைசி லக்ஷணமாகிய "அறிந்தறியாமை" யென்கிற மடமைக்குணம் பொருந்திய மயிலுக்குச் சமானமான அழகு, சாயல் கூடிய பெண்ணே! (இளந்தளிர் மிகுந்த மாமரத்தை வசந்தகாலத்தில் தனக்கிருப்பிடமாகக் கொண்டு ஆனந்தமாய்ப்பாடும்) குயிலின் குரலுடையவளும் பெண்களுக்கெல்லாம் அரசாயிருக்கும் தலைமைஸ்தானம் வாய்க்கப்பெற்றவளுமான குழந்தாய்! நீ பஞ்சுமெத்தையில் சந்தோஷமாய் உறங்குவாய். "மடம்" என்றால் மௌட்டியம் என்று அர்த்தமில்லை. எல்லாவற்றையும் அறிந்தும் அறிந்த அறிவுதனை யறியாமை. இதற்கு "ஆனந்தம்,அஜ்ஞானம்" என்று மேலோர் கூறுவர். எல்லாம் அன்பு மயமாயிருக்க அந்த அன்பை யுணர்ந்து அதை அறிந்த அறிவைமட்டும் அறியாமையாகிய உள்ளறிவு குழந்தைகளிடத்தில் விசேஷமாய் இருப்பதால் தான் அவர்களை தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

3. கண்ணிற்கு மைதீட்டி
காலிற் டணிபூட்டி
பெண்ணரசி யாய்வளரும்
பேதையே கண்வளராய்.

இதன்கருத்து:—இதன் அர்த்தம் சுலபம். "பேதையே" யென்றதனால் "முட்டாளே" யென்று அருத்தம் செய்யக்கூடாது. "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்று சொல்லி யிருக்கிறாராதலால், பெண்கள் மௌட்டியக்குழியில் வீழ்ந்துகிடப்பதே அவர்களுக்கு அழகும் ஆபரணமுமாகும் என்று உண்மையுணரார் பலரும் தப்பர்த்தம் செய்வதுண்டு. இந்தமாதிரியாக ஒரு ஸ்கூல் இன்ஸ்பெக்டரும் அருத்தம் செய்திருக்கப் பார்த்துளோம். ஆனால் அது அதன்சரியான அர்த்தமில்லை. "கற்றோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றாராதலால் கல்வியெல்லாம் மனதைப் பழக்குவதால்வரும் ஓர் மனோபக்குவம். இந்த மனோபக்குவம் பெண்களுக்குப் பதிவிருதாதர்ம விசேஷத்தினால் சுபாவத்தில்தானே பிறவிக்குணமாக அமைந்திருப்பதால், அதையடையும் வழியென்னவென்கிற விசார ஞானமில்லாமல் சந்தனத்துக்கு மணமும் சங்குக்கு வெண்மையும் இயல்பா யமைந்துள்ளதுபோல், உள்ளமறிந்த உணர்விருந்தும் அதை அறிந்த அறிவுதனை யுணராத "ஆனந்தம்" அல்லது "அஞ்ஞானம்" என்கிற உயர்தத்துவம் அமையப் பெற்றிருப்பதையுணர்த்த அதைத்தமிழில் "பேதைமை" யென்றார். பிரகிருதி வித்தை கைவந்தவருக்கும் ப்ரஹ்மவித்தை லபிப்பது கஷ்டமாதலால் இது குறையைச்சொல்லி நிறைவை யுணர்த்தினதாகும். புருஷனையடைந்தும்புருஷசுகம் உணர மாட்டாத அபக்குவப் பெண்ணைப்போல் பதியை ஆச்ரயித்தும் சதிபதி ஐக்கிய தர்மத்தையுணராத பக்குவக்குறைவைச் சுட்டிக்காட்டினபடி என்க.

4. வண்ணமலர் சூட்டி
மன்னும் பணிபூட்டி
திண்ணமுடனே வளரும்
செங்கரும்பே கண்வளராய்.

இதன்கருத்து:—அழகிய பலவர்ணங்களுள்ள புஷ்பங்கள் சூட்டி (பூர்வ சுபவாசனை நிறைந்து) அங்கத்துக் கேற்றதாய்ப்பொருந்தும் ஆபரணங்கள்பூட்டி (குழந்தை லக்ஷணங்களெல்லாம் அமையப்பெற்று) உறுதியாய் வளரும் கரும்பினத்தில் உயர்ந்ததும் அதிமதுரமானதுமாகி செங்கரும்பு ஒத்த "நல்ல மனம்" அல்லது "இனியமனம்" அமையப் பெற்றுள்ள குழந்தாய்! துயில்கொள்வாய்!—என்றபடி.

5. பட்டுத்துகில் விரித்து
பாவாடை மேல்தரித்து
பொட்டிட்டுத் தான் வளரும்
பூவையே கண்வளராய்.

இதன்கருத்து:—அரையில் பாவாடைகட்டி அதன்மேல் பட்டுப் பீதாம்பரதாவணி விரியத்



தரித்து நெற்றிக்கண் உள்ள இடத்தில் அதற்கு ஆபரணமும் மறைவுமாகவிருக்க சாந்துப் பொட்டு முதலானது தரித்து தன்மயமாய் (ஆத்ம ஸ்வரூபமாயிருந்து) வளரும் பூர்வசுப வாஸனைநிறைந்த புஷ்பகந்தமே நீ துயில்கொள்வாய்!—என்றபடி.

6. அத்தைமகனார்வந்தார்
ஆயிரம் பொன் சேலைதந்தார்
சித்தமகிழ் வாய் நீ
திறமுடனே நித்திரைசெய்.

இதன்கருத்து:—தந்தை, தாய், உடன்பிறப்பு, சுற்றம் என்கிற நான்கு லக்ஷணங்களில் முதன் மூன்று பாக்கியங்கள் மட்டுமன்றி நாலாவதாகிய சுற்றமும் நன்றாக அமையப் பெற்றுள்ளாய். உன் பாக்கியத்துக்கு என்ன குறைவு! ஆகையால் உளமகிழ்ந்து மனம் உறுதிப்பட ஆனந்த நித்திரை செய்!—என்றபடி.

அத்தைமகனார்:—தகப்பன்வழிச்சுற்றம். அடுத்த பாட்டில் தாய்வழிச்சுற்றத்தை யெடுத்துச் சொல்கிறார்.

7. மாமன் மணிமாலை
மாசிலாப் பொற்சேலை
பூமாலையோடளித்தார்
பொற்கிளியே கண்வளராய்!

இதன்கருத்து:—தகப்பன்வழிச்சுற்றம் மட்டுமல்ல; தாய்வழிச்சுற்றமாகிய என் உடன்பிறப்பாகிய உன் அம்மானும் உனக்கு நவரத்னமாலையும் குற்றமில்லாத அழகிய விலையுயர்ந்த சேலையும் பூமாலையும் கொண்டுவந்து கொடுத்தார். உன் பாக்கியத்துக்கு என்ன குறைவு! ஆகையால் அழகிய கிளி போன்ற மொழியையுடைய பெண்ணே நீ நித்திரை செய்.

"பொற்கிளி:"—அம்மன் அபயஸ்தம் கொடுக்கும் திருக்கைப் பக்கத்தில் பரைவாக்குக்கு அடையாளமாகப் பூண்டிருக்கும் உயர்தத்துவமாகிய "கிளி." Compare "பொன்னம்பலம்," "பொற்சபை"

8. அத்தைமேற் கோபமோ
அவளில் மனஸ்தாபமோ
கொத்தாரும் பூங்குழலே
கோமகளே நித்திரை செய்

இதன்கருத்து:—இப்படி யெல்லாபாக்கியமும் பொருந்தியிருக்க உனக்கென்ன குறை! என் நாத்தியாகிய உன் அத்தை உன்னை யேதாவது கடிந்து பேசினாளோ! அதனால் கோபமாயிருக்கலாமா! அல்லது அவளிடத்தில் மனஸ்தாபம் ஏதாவதுண்டோ! கொத்துக் கொத்தாய்ப் பூமுடித்த கூந்தலுடைய பெண்ணே, அரசன் மகளுக்கொப்பான செல்வியே, நீ துயில் கொள்வாய்!—என்றபடி.

9. வாடியழுத கண்ணீர்
மஞ்சட் குளித்த கண்ணீர்
ஓடிப் பெருங் கடலாய்
ஒழிந்ததம்மா நித்திரைசெய்!

இதன்கருத்து:—முகம் வாடியழுதகண்ணீரும் மஞ்சள் நீராடும்பொழுது மஞ்சள் கண்ணிற் படுவதால் கரித்து அதனால் வடித்த கண்ணீரும் சேர்ந்து பெரிய கடல்போல் பெருகி யாயிற்று! கண்ணீர்விட்டது போதும்! நித்திரை செய்! "அடுத்தது காட்டும் பளிங்கேபோ லகம், கடுத்தது காட்டும் முகம்" என்றார் பெரியோரும். ஆதலால் "வாடி" யென்பது "அகம்வாடி, முகம்வாடி" சோர்ந்து அழுத கண்ணீர் என்று பொருள்படும்.

10. பல்லாங்குழி யாடி
பந்தடித்து நொந்துவந்த
கள்ளத்தை நானறிவேன்
கண்மணியே நித்திரை செய்!

இதன்கருத்து:—குழந்தைகள் விளையாடச் சென்றால், விளையாட்டில் எல்லாவற்றையும் மறந்து அதே சிந்தனையாய் இருந்துவிடும் என்பது சகஜம். ஆனால் விளையாடி முடிந்து வீட்டுக்கு வரும்பொழுது "நாழியாகிவிட்டது; காலந்தவறிவிட்டோம். அம்மாள் கோபிப்பாள், நாம் அபராதியானோம்" என்கிற எண்ணம் தோன்றுமற்றொன்றி அவர்களுள்ளமுணரப்பாதிக்கும். அப்பொழு

அம்மாள் கோபம் மாறவிட்டு அவளைப்பார்ப்போம்" என்கிற ஒருவித லஜ்ஜையுண்டாகும். இந்த லஜ்ஜை க்ஷணிகமாத்திரமானதே. ஏனெனில் குழந்தைகள் மனதில் எதுவும் நிலைத்து நிற்காது. எல்லாம் க்ஷணிக மாத்திரமாய்த் தோன்றி மறைந்துகொண்டிருக்கும். இது குழந்தைமனத்தின் ஸ்வபாவம். இந்த ஸ்வபாவத்தை "தாய்க்கொளித்த சூலில்லை" யென்றபடி தாயார் தன் குழந்தையின் திருட்டுத்தனத்தையறிந்திருக்கிறதாகச்சொல்லி மெய்ச்சி "கண்மணியே நித்திரை செய்!" என்கிறாள். "பல்லாங்குழி" என்பது பன்னான்கு (பதிநான்கு) குழிகள் இருவரிசையாகவுள்ள ஒரு மரத்தட்டில் விதைகளைக்கொண்டு ஆடும் ஒரு விளையாட்டு. இது மனக்கணக்கு விர்த்திக்குச் சாதனமான ஒரு நல்ல விளையாட்டு. இக்காலத்தில் சிறு குழந்தைகள் ஒன்று, இரண்டு கற்றுக்கொண்டு கூட்டல் முதலான கணிதபாடங்கள் கற்றுக்கொள்ள கம்பிகளில் மணிகள்கோர்த்த சட்டத்தை உபயோகிக்கிறார்கள். இதற்குமுன் காலத்தில், குருப்பை காட்டாமணக்குவித்தை முதலிய சல்லிசில் அகப்படக்கூடிய விதைகளைக்கொண்டு இரண்டுகால் வண்டியென்றும் மூன்றுகால் வண்டியென்றும், நாலுகால் சப்பரம், ஐந்துகால் ஆறுகால் தேர் என்று இப்படி பலவிதமான சப்பரங்கள்கட்டி விளையாடுவார்கள். இதனால் கிராமநத்தங்களில் பயிராகும் பயிர்பூண்டுகளின் பரிச்சயம் உண்டாவதோடு, கோரை, ஈர்க்குக்குச்சி, மூங்கிற்பளாச்சு இவைபோன்ற தளவாடங்கள் சேகரிப்பதில் தேஹப்பயிர்ச்சியும் கைகால் முதலிய இந்திரியங்களுக்கு ஒரு சுறுசுறுப்பும், தேர், திருநாட்களில் பார்த்த சப்பரங்களைக் கவனித்து அந்தப்படி சப்பரம் முதலானவைகள் செய்யக் கற்றுக்கொள்வதால் மனப்பயிர்ச்சியும், எல்லாம் விளையாட்டு வேடிக்கையாக நடப்பதால் மன உற்சாகமும்சேர்ந்து குழந்தைகளுக்கு விளையாட்டில் வித்தையும் வித்தையில் விளையாட்டுமாக, இப்ருள்பாடம்" என்றும் குழந்தைகளுக்கு மனதிலேறாத வார்த்தைகளைக்கொண்டு அனேகம் கெடுபிடி கட்டுப்பாடுகளோடு போதிப்பதெல்லாம், குழந்தைகள் வீட்டில் விளையாட்டில் ஸ்வபாவமாகக் கற்றுவந்தனர். "பல்லாங்குழி" யைப்போல் "அம்மானை" "கழச்சிக்காய்" முதலான இன்னும் பலவிளையாட்டுகள் மனப்பயிர்ச்சியோடு இந்திரியங்களின் பயிர்ச்சியையும் தேஹப்பயிர்ச்சியையும் உண்டு பண்ணுவதாயிருந்தன. இப்பொழுது அவைகளைப் பார்ப்பது அபூர்வமாய்விட்டது. சென்னையில் ஸ்கூல் இன்ஸ்பெக்ட்ரெஸாயிருந்த மிஸ்ஸஸ் ப்ராண்டர் "கிண்டர்கார்டனை" ப்பற்றி மாக்மிலன் கம்பெனியாருக்கு ஒருபுஸ்தகம் எழுதினபோது வெகு பரிசிரமப்பட்டு இந்த விளையாட்டுகளை அவருக்குக் காட்டிவைத்தோம். அவரும் அவைகளில் சிலவற்றை அங்கீகரித்து எழுதினர். "எந்தச் சரக்காயினும் சீமைச் சரக்கானால்தான் கிராக்கி யேற்படும்" என்பது நமக்குள் இப்பொழுது ஏற்பட்டு வழங்கி வரும் பழமொழி. மாக்ஸ்மிலன் கம்பெனியார் ஏஜண்டு நம்மைத்தேடி வந்தாராயினும், நாம் செய்யக்கூடிய உதவியைமட்டும் செய்தோமன்றி மேலே பிரவேசிக்க மனமில்லை. இப்பொழுது நமது குழந்தைகள் வாசிக்கும் அக்ஷராப்பியாச பாடபாடங்கள் முதற்கொண்டு ஆங்கிலேய கம்பெனியார் அல்லது இன்ஸ்பெக்டருடைய பூரணதயவு பெற்றவர்களால் போட்டால்தான்விலையாகிறது. இதில்நடக்கும் போட்டியில் "அகரமுதலவெழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே யுலகு" என்பதைமட்டும் மனப்பாடம் போட்டுவிட்டு சண்டப் பிரசண்டமாய்ப்பேசிப் "பண்டித" பட்டமும் பெற்றுவிட்டவர்கள் பிந்துவைநீக்கி 'அ' என்கிற எழுத்தை விகாரப்படுத்தி† யெழுதிப் போதிக்கிறார்கள். 'ஆ' என்பதையும் அப்படியே பின்னப்படுத்திக் காலொடியக் கையொடியக் காட்டிப் போதிக்கிறார்கள். இஃதெல்லாம் கலியின் மஹாத்துவம்தான். பணத்தின் பெருமையே பெருமை.



[அடுத்தபாட்டும் இதையே இன்னும் வளர்த்திக் குறிக்கிறது.]

11. சிறுவீடு கட்டித்
தெருவில் விளையாடி
வருமுன் னிளைப்பாறப்
பேதையே கண்ணுறங்காய்!

இந்த விளையாட்டுகளை இக்காலத்தில் "Clay Modelling" என்றுசொல்லி அபூர்வமாய்ப் போதித்து வருகிறார்கள். முன்காலத்தில் ஏழை தனவான் எல்லார் குழந்தைகளும் ஈரமான சன்னமணலைக்கொண்டு, கிளிக்கூண்டு, சிறுவீடு, அடுக்களை முதலான இன்னும் எத்தனையோ விதம்விதமான வேடிக்கைக் கட்டடங்கட்டி விளையாடிவருவது சகஜம். அதனால் அவர்களுக்கு தேஹபலம் மனோபலம் புத்திபலம் விசேஷமாய் அதிகரித்திருந்தது.

இனித்தாயார் தன்குழந்தையின் அருமை பெருமைகளைக்கூறிப் பாலனைத் தூங்கவைக்கிற விவரம் பின்வரும் நான்கு பாட்டுகளினால் வெளியாகிறது.

12. களங்கமிலா வெண்மதியே
கண்டெடுத்த பொன்நிதியே
உளங்களிக்க யான்பயந்த
ஒண்டொடியே கண்துயிலாய்!

இதன்கருத்து:—பால்போல் நிலவெறிக்கும் சந்திரனுக்குக் களங்கமுண்டு; பால்வடியும் ஜோதிமயமான உன்முகத்துக்கு அந்தக் களங்கமுமில்லை; ஆதலால் நீ களங்கமில்லாத வெள்மதிக்கொப்பானாய். உன்னைப் பெற்ற பாக்கியம் தரித்திரனுக்குப் புதையலகப்பட்டதுபோல் என் அகத்திலுள்ள அன்புக்குறைவாகிய வறுமையெல்லாம் நீங்கி திடீரென்று "கற்றுபோல்" அன்பு நிறைந்து பூரிதமாயிற்று. ஆதலால் கண்டெடுத்த பொன்நிதிக்கொப்பானாய்! உன்னைப்பெற்ற யான் உளமகிழ்வு கொண்டதற்கு அளவில்லை. இப்படியெல்லாம் நான் அருமை பெருமையாய்க் கொண்டாடு மின்னற்கொடிபோன்ற என் மனத்தைக்கவரும் குழந்தையே கண்மூடி நித்திரை செய்வாய்.

13. மாற்றுயர்ந்த செம்பொன்னே
வானகத்தில் வாழ்மின்னே
சாற்றுமென் வாய்ச்சொற்கேட்டு
தாழ்குழலே நீ துயிலாய்

இந்தப்பாட்டில் தன் குழந்தை நல்ல குலம் கோத்திரத்தில் பிறந்து அது அங்கபங்கம் அழகுக்குறைவு முதலிய தாழ்ந்தகுணமில்லாமல், உயர்ந்த மதிப்புப் பெற்றதாயிருப்பதாயுன்னி "பத்தரைமாற்றுப் பழுதில்லாத்தங்கமே" யென்றாற்போல் மாற்றுயர்ந்த செம்பொன்னே யென்றும், நிஷ்கள நிர்மல சித்தத்தோடு அக்குழந்தையைப் பார்த்தவர்கள் உள்ளத்தைக்கவர்ந்து மின்னல்போல் வந்தவிடம் போனவிடம் தெரியாமல் மறைவதால் வானகத்தில் வாழ்மின்னே யென்றும் வர்ணித்து இன்னிசையோடு என் வாயிலிருந்து பிறக்கும் இந்த இனிய வார்த்தைகளைக் கேட்டு நீண்ட கூந்தலையுடைய என் குழந்தாய் நீ தூங்குவாயாக.—என்றபடி.

14. ஒளியார் நவமணியே
ஓங்கும் தவமணியே
களிதாங்க வென்னுள்ளம்
கண்மணியே நீ துயிலாய்.

இதன்கருத்து:—இந்த தேஹத்தை நவரத்ன த்வீபமாக பாவோபநிஷத் வர்ணித்துக் கூறியிருக்கிறது. பிரகாசம் நிறைந்த நவமணிக்கொப்பான தேஹகாந்தியும் அமைப்புமுடையகுழந்தாய், மேன்மேலும் விர்த்தியாய் வளரும் பெரியதவப்பயனால்சித்திக்கும் சிந்தாமணி யொத்து "பிள்ளை மிடிதீர" வென்று நான் செய்த தவத்தால் அத்தவத்தினது பயனாகப்பிறந்த தவமணியே ஆனந்தநித்திரை செய்யும் உன்மதிமுகம் கண்டு என் உள்ளம் உவகை பூரிக்க, கண்மணியே! நீ துயில் கொள்வாயாக.—என்றபடி.

15. பாலூட்டி மைதீட்டி
பாங்காகத் தொட்டிலிட்டு
தாலாட்ட நீ கேட்டு
தங்கமே கண்வளராய்.

இதன்கருத்து:—பசிதீரப் பால் கொடுத்தேன் உண்டு களிக்காய் [redacted]

கியமாக முகம் விளக்கி மையும் இட்டுவிட்டேன். இதோ உன் குழந்தைமனம் களிக்கத் தாலாட்டும் பாடுகிறேன். தூக்கம் வரத் தொட்டிலையும் தாலாட்டுப் பாடிக்கொண்டே ஆட்டிக்கொண்டு நிற்கிறேன். இந்த என் தாலாட்டைக் கேட்டு, தங்கமே! கண் வளராய்.

## POST-PUBERTY MARRIAGE BILL.

## ருதுமதி விவாஹ மசோதா.

இந்த மசோதா கனம் வி. ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்களால் சென்னை சட்ட நிரூபண சபை முன் ஆலோசனைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதைப்பற்றிச் சென்னையிற் கூடிய ஜனசாரசீர்திருத்த மஹாசபையார் ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். அதில் இந்த மசோதாவை அவர்கள் ஆதரிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதன் நிபந்தனையெல்லாம் கூடி பிராமணப்பெண்களும் அவர்கள் ஆசாரத்தை யநுசரிக்கிற மற்ற ஜாதிப் பெண்களும் ருதுவான பிறகு விவாகம் நடந்தால், அது காரணத்தால் அந்த விவாகம் செல்லாமற்போகாது என்று விதிக்கிறது. இந்த விதி அனாவசியம். ஏனெனில் இது செல்லாது என்று யாரும் சொல்லவில்லை. சாஸ்திரங்களும் இந்த விவாகத்தைச் செல்லாதென்று தள்ளவில்லை. கன்னிகாதான பலனை யெடுத்துச்சொல்லும்போது அதை மற்றெல்லாவற்றிற்கும் மேலாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 'வரசொல்கம்' வாங்கும் இக்காலத்தில் நடக்கும் விவாகங்களைக் கன்னிகாதானம் என்று சொல்வது பரிகாசக்கூத்தேயன்றி, "பேர் கங்காபவானி,குடிக்க நீரில்லை" யென்று சொல்கிற பழமொழியின் கதையாக விருக்கிறது. விவாகம் ஸம்ஸ்காரமாகச் செய்தால் இன்ன விதம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. கோமுட்டி, வாணியன், செட்டி முதலான துவஜர்கள் பூணூல் போட்டுக்கொள்ளாமல் விவாகம் செய்து கொள்ளக்கூடாதென்கிற வழக்கமுண்டு. அதற்காக அவர்கள் விவாகம் செய்துக்கொள்ளவேண்டிய காலத்தில் பிள்ளைக்கு 20, 30, 40 வயதானாலும் சரி குருவினிடம் வந்து பூணூல் மாட்டிக்கொண்டு போகிறதுண்டு; அந்த மாதிரியாகத் தாலிக்கட்டு ஆதியில் உத்தேசித்தபடி பெண்களுக்கு ஸம்ஸ்கார தீக்ஷையாகவின்றி புருஷப்பிராப்திக்கு இன்றியமையாத ஒரு ஆடம்பரச் சடங்காக நடந்துவரும்பொழுது அது எப்படி நடந்தால் என்ன? எத்தனை வயசில் நடந்தாலும் ஒன்றுதான். புருஷப்ராப்தி எப்பொழுது உண்டாகிறதோ அப்பொழுது தாலிக்கட்டும் ஏற்படுகிறது. இதையே விவாகம் என்று கொண்டாடுவார்க்கு இந்த மசோதா சட்டமானாலும் ஆகாவிட்டாலும் ஒன்றே. ஏனெனில் அவர்கள் இந்த வழியில் துணிந்திறங்க தைரியம் ஒன்றுமட்டுமிருந்தால் அவர்களைத் தடுப்பார் யாருமில்லை. இல்லாவிடினும், இப்படியொருச்சட்டம் இருக்கவேண்டியதவசிய மென்று ருதுமதி விவாக சித்தாந்த கக்ஷியார் கட்சிகட்டிப் பேசுகிறார்கள். [அதைப் பெரும்பாலார் ஒப்புக்கொள்ளவில்லை. அப்படி ஒப்புக்கொள்ளாதவர்கள் சொல்லும் எதிர்க்கட்சியை "தாய்மார் அபிப்பிராயம்" என்கிற தலைப்பின் கீழ் விவரமாய் ஒருவர் எழுதியபடியே அச்சிட்டிருக்கிறோம். அதற்கு எதிர்க்கட்சியையெடுத்துப்பேச விரும்புகிற தாய்மார்கள் சுருக்கமாக அவர்கள் அபிப்பிராயத்தை யெழுதியனுப்பினால் அவை நிந்தனைமுதலான தோஷங்களில்லாதிருந்தால் பிரசுரிக்கப்படும்.]

ருதுமதிவிவாகம் இப்பொழுது எத்தனையோ நடந்துவருவதைக் காண்கிறோம். அது எல்லாருக்கும் தெரிந்துமிருக்கிறது. ஆனால் ருதுவான பின்தான் விவாகம்செய்கிறது என்று பிருது கட்டிக்கொண்டு அப்படியே தண்டோராப்போட்டுத் தெரிவித்துப் பண்ணுவார் யாருமில்லை யென்கிறார்கள். அப்படிச்செய்ய இஷ்டமுள்ளவர்கள் செய்யலாம். அதற்குத் தடையென்னவென்றால்,ஜனங்கள் அபவாதம் நேரிடுமென்கிறார்கள். ஜனாபவாதத்துக்கு பயப்படுகிறவர்கள் ஜனங்களுடைய மனதை விசாலிக்கச் செய்யவேண்டும். அல்லது, சொல்கிறவர்கள் சொல்லட்டும் என் மனச்சாக்ஷிக்கு ஒப்ப



நான் நடந்துகொள்கிறேன். என்று துணிந்து போகவேண்டும். அல்லது, "ஊருடன் கூடி வாழ்" என்கிறபடி எப்படியோ அவர்கள் மௌட்டியத்துக்குத் தக்கபடி சமாதானம் சொல்லி ஒத்துவாழவேண்டும். ஸ்ரீராமர் வண்ணான் அபவாத வாக்கைக்கேட்டுச் சீதையைக் காட்டுக்கனுப்பினார். அவருக்கு வண்ணானை நாக்கறுத்துக் கழுவிலேற்ற வேண்டுமென்று தோன்றவில்லை. தர்மம் ஒன்று: கர்மம் பலபடியாகவுள்ளது. ஸநாதநமான தர்மத்தையுணர்ந்தவர்கள் கர்மத்தை விட்டொழிக்கலாமானாலும். சிஷ்டாசாரம் காரணமாக கர்மத்தை யனுசரித்தே வருகிறவர்களாயிருக்கிறார்கள். எனக்கு சொப்பு விளையாட்டிலும் பொம்மையிலும் பிரியமில்லை யென்றால் என் குழந்தைக்கும் அது அனாவசியமாருமா? கர்ம-தர்ம முணர்ந்து காரியமியற்றவேண்டும். சட்டத்தைக்கொண்டு (நிர்ப்பந்தத்தால்) ஜனங்கள் மனதைத் திருத்திவிடலாமென்று நினைப்பது உசிதமான யோசனையாகத் தோன்றவில்லை. மேலும் ஹிந்துக்களுக்குள் விவாஹம் என்பது "ஆத்மவிவஹாய"; அப்படி யென்றால் விவாஹ லக்ஷியம் ஆத்மலக்ஷியத்தைப் பொறுத்ததாக விருக்கிறது. அதைக்கேவலம் "ஸ்திரீ புருஷ ஸம்போக ஒப்பந்தமாக" மாற்றுவது அனேகருக்கு அருவெருப்பைத் தருவதாயிருக்கிறது. எக்காலத்திலும் எத்தேசத்திலும் உண்மை லக்ஷ்யத்தையுணர்ந்து அவை அனுபவசித்தாந்தமாகக் கைப்பெற முயலுபவர்கள் வெகு சிலரேயாவர். அதுபற்றி லக்ஷியத்தை மாற்றி விடுகிறதென்றால் அது உசிதமானயோசனையாகவில்லை. உயர் லக்ஷியத்தைத் தாழ்படிக்குக் கொண்டுவருவது நுனிமரத்திலிருந்து அடிமரத்தை வெட்டுவதற்குச் சமானமாகும்.

## HEIGHT, WEIGHT, AND BODY MEASUREMENTS.

## மனிதன் உயரத்துக்குத் தக்க பருமன் ஆகிருதி அளவு விவரம்.

பின்வரும் கட்டத்தில் சாதாரணமாக உயரத்துக்குத்தக்க பருமனும் ஆகிருதியும் இவ்வளவு என்று காட்டியிருக்கிறது. இது எல்லார் விஷயத்திலும் அப்படியே யிருக்கவேண்டுமென்பதில்லை. ஆனால் கௌமார பருவத்தில் 20 முதல் 30 வரையிலுள்ள வயதில் இந்த ஆகிருதி உயரம் அளவைகள் ஏறத்தாழ ஒத்திருக்குமென்பது அனுபவ சித்தாந்தம். 5-அடி உயரம் முதல் 6-அடி உயரம் வரையில் உள்ள உயரத்துக்குத்தக்க ஆகிருதி அளவை விவரம் கீழே குறிக்கப் பட்டிருக்கிறது.

| உயரம். | | நிறை | | மாரளவு (பூரகம்) | மாரளவு (கும்பகம்) | இடை | முழங்கை மேல் | முழங்கை கீழ் | துடை | ஆட்டுச் சதை | கழுத்து |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புருஷர். | | | | | | | | | | | |
| அடி. | அங் | ஸ்டோன்* | பவுண் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் | அங் |
| 5 | 0 | 8 | 4 | 31 | 34 | 25¼ | 11¾ | 11 | 18 | 12 | 12½ |
| 5 | 1 | 8 | 8 | 31½ | 35 | 25¾ | 12 | 11¼ | 18½ | 12¼ | 12¾ |
| 5 | 2 | 9 | 0 | 32 | 36 | 26½ | 12¼ | 11½ | 19 | 12½ | 13 |
| 5 | 3 | 9 | 7 | 33 | 37 | 27¼ | 12½ | 11¾ | 19½ | 12¾ | 13¼ |
| 5 | 4 | 9 | 10 | 34 | 38 | 28 | 12¾ | 12 | 20 | 13 | 13½ |
| 5 | 5 | 10 | 2 | 34½ | 38 | 28¾ | 13 | 12 | 20½ | 13¼ | 13¾ |
| 5 | 6 | 10 | 3 | 35 | 39 | 29¼ | 13¼ | 12¼ | 21 | 13½ | 14 |
| 5 | 7 | 10 | 6 | 35½ | 39½ | 30¼ | 13½ | 12¼ | 21½ | 13¾ | 14¼ |
| 5 | 8 | 11 | 1 | 36 | 40 | 30¾ | 13¾ | 12½ | 22 | 14 | 14½ |
| 5 | 9 | 11 | 7 | 36½ | 40½ | 31½ | 14 | 12¾ | 22½ | 14¼ | 15 |
| 5 | 10 | 12 | 1 | 37 | 41 | 32¼ | 14¼ | 12¾ | 23 | 14½ | 15¼ |
| 5 | 11 | 12 | 6 | 37½ | 41½ | 32¾ | 14½ | 13 | 23½ | 14¾ | 15¼ |
| 6 | 0 | 12 | 10 | 38 | 42 | 33¼ | 14¾ | 13 | 24 | 15 | 15½ |
| ஸ்திரீ | | | | | | | | | | | ஸ்திரீ |
| 5 | 4 | 4 | 0 | 34 | 37 | 24 | 13 | 12 | 24 | 14 | 13½ |

* ஒரு ஸ்டோன் என்பது 14 பவுண்டு நிறையுள்ளது.

## THE POTENTIAL AND REMOTE ORIGIN OF THE WAR.

"Your referance to German militarism brings up in my mind the conviction that this war began potentially 25 years ago, when Emperor William II ascended the throne, declared himself Supreme War Lord, and proceeded to prepare his nation for war. His own children were raised from their boyhood to consider themselves soldiers, and to look forward to a destiny of Slaughter: and here in America we know even his daughter only by her photograph in a colonel's uniform. And as with his own children, so all the youth of his empire were brought up."—Extract from Mr. Church's Reply. *Vide* "Vivekachintamani War Number" (January issue): "American Verdict on the War."

The photographs represent the Kaiser's only daughter as a Death's Hussar in her colonel's Uniform, and his daughter-in-law (The German Crown Princess) as a Dragoon in Colonel's Uniform.



## இச்சண்டையின் ஆதிகாரணம்.

"இல்லப்பழக்கம்போல் எல்லாப்பழக்கமும்."

இந்தச் சண்டையின் ஆதிகாரணத்தை ஆராய்ந்துபார்த்தால் இது 25-வருஷங்களுக்கு முன் இப்பொழுதுள்ள கெய்ஸர் இரண்டாவது உவில்லியம் என்னும் பட்டத்தோடு ஸிம்மாஸன மேறிய காலந்தொட்டு என்று சொல்லலாம் என்கிறார் மிஸ்டர் சர்ச்சில். அப்பொழுது அவர் தாம் ஜெர்மனி ராஜ்யங்களுக்கெல்லாம் மேலான யுத்தத் தலைவரா யிருப்பதாகச் சொல்லிக்கொண்டார். அவருடைய குழந்தைகளையெல்லாம் யுத்தத்துக்கு தர்பீது செய்து வந்தார். ஆண் பிள்ளைகளன்றி அவருடைய ஏகபுத்திரியையும் யுத்தத்திற் பழகப் பழகப்பழக்கி அவர் பெரியவரான [redacted]'' (Death's Head Hussars) என்கிற படை வகுப்பில் ஒரு பட்டாளத்துக்குத் தலைவராக (கர்னலாக) நியமித்தார். அந்த உடையில் அவருடைய படம் மேலே காட்டப்பட்டிருக்கிறது. அமெரிக்கா தேசத்தார் அவருடைய புத்திரியை இந்த உடையில் எடுத்த படத்தினால் தான் அறிவார்களாம். மற்றப்படி அறியமாட்டார்கள். அவருடைய மருமகளாகிய ஜெர்மனி இளவரசியையும் அப்படியே "ட்ராகூன்ஸ்" என்கிற படை வகுப்பில் ஒரு பட்டாளத்துக்குத் தலைவராய் (கர்னலாய்) நியமித்திருக்கிறார். இவர்கள் இருவரும் இராணுவத்தில் கமிஷன் பெற்ற ஆபீஸர்கள் அந்தஸ்திலிருக்கிறார்கள். இல்லப்பழக்கம் எப்படியோ அப்படித்தான் அமையும் எல்லாப் பழக்கமும் என்பது வாஸ்தவ மாயிற்று.



## AN ETHNOLOGICAL MAP OF AUSTRIA-HUNGARY.

### THE "RAMSHAKLE EMPIRE" THE RUSSIANS ARE "TEARING LIMB FROM LIMB."

"Russians have shed their blood for Servian independence many a time. Servia is a member of her family, and she cannot see Servia maltreated. Austria knew that. Germany knew that, and Germany turned to Russia and said: "Here I insist that you shall stand by with your arms folded whilst Austria is strangling to death your little brother."

The Russian Slav gave the only answer that becomes a man. He turned to Austria and said:—

"You lay hands on that little fellow and I will tear your ramashackle Empire limb from limb."—*Extract from The Great War Speech of Mr. Lloyd George, the Chancellor of the Exchequer, at Queen's Hall.*




## ஆஸ்திரியா-ஹங்கேரி: பலபட்டடை ராஜ்யம்.

ஆஸ்திரியா-ஹங்கேரி யென்பது ஓர் பலபட்டடை ராஜ்யம். அதில் எத்தனையோ ஜாதியார்கள் ஐக்கிய பத்தியமின்றி பல பட்டடையாகக் கூடியிருக்கிறார்கள். இந்தப் படத்தைப் பாருங்கள். நடுவிலே ஹங்கேரி ராஜ்யம். அங்கே 'மாஜியர்ஸ்' ஜாதியார் குடியேறியிருக்கிறார்கள். அதன் வடகிழக்கேயுள்ள 'பொஹிமியா' மாஹாணத்தில் "ஸெக்ஸ்" என்கிற ஜாதியார் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெற்கே ஆஸ்திரியாவில் ஜர்மன் ஜாதியார் மிகுந்திருக்கிறார்கள். வியன்னாவில் இவர்களுக்குச் செல்வாக்கு ஜாஸ்தியானதினால் தான் இந்தப் பெரிய யுத்தம் விளையலாயிற்று. அவர்களைச் சுற்றி தெற்கே யுள்ளவர்கள் 'ஸ்லொவனீஸ்' 'க்ரோட்ஸ்,' 'ஸெர்ப்ஸ், 'ஸ்லாவ்ஸ்' இவர்களிருக்கிறார்கள். இவர்களெல்லாரும் அடுத்துள்ள ஸெர்பியா தேசத்தாருடைய ரத்த பந்துக்கள். மேலண்டைப் புறத்திலுள்ள 'ரூமேனியன்ஸ்', நடுவிலுள்ள 'மாஜியர்ஸ்', கிழக்கேயுள்ள ஆஸ்திரியாவின் ஜெர்மன்ஸ் இம் மூன்று ஜாதியார்கள் மட்டும் ஜெர்மனி ஜாதியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்களெல்லாம் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவர்கள். ருஷியர்களும் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவர்களே. மொத்தம் 4½ க் கோடி ஜனத்தொகையில் 2-கோடியே 40-லக்ஷம் ஜர்மனி வகையைச் சேர்ந்தவர்கள். பாக்கி 2-கோடி 10-லக்ஷம் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் உட்பிரிவு விவரமும் ஜனத்தொகையும் படத்தின் வலது பக்கத்து மூலையில் காட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது நேர்ந்திருக்கும் இச்சண்டை முதல்முதல் ஆஸ்திரியாவுக்கும் ஸெர்பியாவுக்கும் நேர்ந்த மனஸ்தாபம் காரணமாகவுண்டான போரிலிருந்து தொத்திக்கொண்டு பரவியதென்று எல்லாருக்கும் தெரியும். இதை ஆங்கில அரசிறை மந்திரியாகிய மிஸ்டர் லாய்ட்ஜியார்ஜ் அவர்கள் வெகு நேர்த்தியாகச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார். அது எப்படி யென்றால்:—

“ருஷியா தேசத்தார் ஸ்லாவ் ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஸெர்பியாவின் ஸ்வதந்தரத்தைக் காப்பாற்றவென்று அவர்கள் தங்கள் உதிரம் சிந்த எத்தனையோ தரம் சண்டைசெய்து தங்கள் மனோபீஷ்டத்தைச் சாதித்திருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுது ஆஸ்திரியா அவர்களை ‘உடல் சிறியார்’ என்று அவமதித்துப் போர்க்கிழுத்தால் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள். இது ஆஸ்திரியாவுக்கு நன்றாகத் தெரியும். ஜெர்மனிக்கும் தெரியும்; தெரிந்தும் கெய்ஸர் படாடோபம் செய்துகொண்டு, “ஆஸ்திரியா ஸெர்பியாவின் குரவளையில் கைபோட்டு நெறிப்பதை ருஷியா கைகட்டிப் பார்த்திருக்க வேண்டியது: நானும் சண்டைக்குப் போகவில்லை, நீங்களும் சண்டைக்கு வரக்கூடாது” என்று சொன்னார். அதற்கு ருஷ்யர் “நாங்கள் ஆண் பிள்ளை யென்பதுண்மையானால், ஸெர்ப் தேசத்தின்மேல் ஆஸ்திரியா கைபோட்டால், அந்தப் பலபட்டடை ராஜ்யத்தை உறுப்பு உறுப்பாகச் சிதைத்து உருவழியச் செய்வோம்” என்று சபதம் கூறினார்கள். அப்படியே செய்தும் வருகிறார்கள்.

ஆஸ்திரியாவில் பாதி நாடு போல்ஸ், ஸெர்ப்ஸ் முதலான ஸ்லாவ் ஜாதியாரால் குடியேறப்பெற்றுள்ளது. இவர்களெல்லாரும் தம்மினத்தாராகிய ருஷியா தேசத்து ஸ்லாவ்ஸோடு எதிர்த்துச் சண்டை செய்ய மனமில்லாமல் அவர்களைச் சேர்ந்து வருகிறார்கள். அல்லது வேண்டா வெறுப்பாய் எதிர்த்து நின்று சமயம் நேர்ந்தவுடன் கைதிகளாகப் பிடிபட்டுப் போகிறார்கள். கிட்டி வாயில் அகப்பட்டாற்போல் ஜெர்மனி வகைராக்காரர்கள் தம் சொந்த தேசத்திலே வடக்கிலும் ஸ்லாவ்ஸ், தெற்கிலும் ஸ்லாவ்ஸ், அவர்கள் இடையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கிறார்கள். இதைக் காட்டவே இந்தப் படம் சித்தரித்தெழுதப்பட்டது. இதை யெழுதினவர் ‘மாமெல்’ என்பவர். ரிவியூ ஆவ் ரிவியூவுக்காக எழுதியதை அப்பத்திராசிரியர் தயவை முந்திச் சிறிதாக வெழுதிச் சித்தரித்து வெளியிடலானோம்.

## THE SRIMOOLAM POPULAR ASSEMBLY.

## திருவாங்கூர் சமஸ்தானத்து ஸ்ரீமூலம் ஜனப்பிரதிநிதி சபை.

மேன்மைதங்கிய திருவாங்கூர் மஹாராஜா அவர்களின் ஜன்ம நக்ஷத்திரமாகிய மூலநாளில் அந்த ராஜாங்கத்து ஜனப்பிரதிநிதி சபையொன்று சென்ற 11-வருஷங்களாகக் கூடிவருகின்றது. அந்த சபையின் 11-வது வருஷாந்தகூட்டம் இந்த பிப்ரவரி மீ 15உ யன்று கூடியது. அப்பொழுது திவான் ம-ள-ள-ஸ்ரீ எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் துரைத்தன காரியங்களைப்பற்றி அச்சபையார்முன் செய்த பிரசங்கம் நம்முன் இருக்கிறது. திவான்ஜி அவர்களுடைய தயவால் அந்த பிரசங்கம் நமக்கு உடனே சேரும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டதால் அதைப்பற்றி இந்த மாசத்தில் தானே குறிப்பிட்டெழுதுவது சாத்தியமாயிற்று.

திவான்பஹதூர் ப. இராஜகோபாலாசாரியார் அவர்கள் ஸி. ஐ. இ. சென்றவருஷம் மேமீ 11உ திவான்வேலையைவிட்டு நீங்கினார். அந்தத் தேதியிலிருந்து ம-ள-ள-ஸ்ரீ எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் திவானாக நியமிக்கப்பெற்று வேலைபார்த்து வருகிறார். திவான்பஹதூர் இராஜகோபாலாசாரியாரவர் 7-வருஷகாலம் அந்த சமஸ்தான காரியங்களை திவானாகவிருந்து பார்த்து வந்தார். அக்காலத்தில் அவர்கள் செய்த துரைத்தன சீர்திருத்தங்கள் பல. அவையெல்லாம் நன்றாக வேலை செய்து வருகின்றன. சென்ற அக்டோபர் மீ கனம் தங்கிய நமது கவர்னர் அவர்களும் அவர் பெருமாட்டியும் மேன்மைதங்கிய மஹாராஜா அவர்களுடைய கோரிக்கைக் கிணங்கி அந்த சமஸ்தானத்துக்கு விஜயமாய்ச் சென்றனர்.

ஐரோப்பாவில் நடந்துவரும் பாரதப்போரில் பிரிடிஷ்ராஜ்யம் ஈடுபட்டிருப்பது மற்றெல்லாதேசங்களிலும் போல் திருவாங்கூரிலும் அதிகமாய் ஜனங்களுடைய உற்சாகத்தைக் கிளப்பிவிட்டது. திருவாங்கூர் மஹாராஜா அவர்கள் தமது இராஜ்யத்தின் ஐசுவரியத்தையெல்லாம் சக்ரவர்த்தியவர்களுக் குரியதாக அவருடைய இஷ்டம்போல் இந்த யுத்தத்தை நடத்துவதில் உபயோகிக்கலா மென்று தெரிவித்தார். அத்தேசத்துப் பிரஜைகள் 90-ஆயிரம் ரூபாய் யுத்த ஸகாயநிதிக்காகப் பொருளுதவி செய்திருக்கிறார்கள்.

சென்றவருஷம் சமஸ்தானத்தின் வரவு மொத்தம் ஒரு கோடியே 54-லக்ஷத்து 74-ஆயிரத்து 665-ரூபாய்; செலவு மொத்தம் ஒரு கோடியே 57-லக்ஷத்து 12-ஆயிரத்து 790-ரூபாய். இப்படியாக 2-லக்ஷத்து 38-ஆயிரத்து 125-ரூபாய் அதிகச் செலவு நேர்ந்து சர்க்கார் கைரொக்கத் தொகை 77-லக்ஷத்து 91-ஆயிரத்து 725-ரூபாயிலிருந்து 75-லக்ஷத்து 53-ஆயிரத்து 600-ரூபாவாகக்குறையலாயிற்று. இப்படி நஷ்டம் நேர்ந்ததாகத் தோன்றுவது கொடையாற்று வேலை, குயிலான் - திருவனந்தபுரம் ரயில்வே ஆகிய இவ்விரண்டு வேலைகளுக்கும் வேண்டிய செலவை வருஷ வருமானத் தொகையிலிருந்தெடுத்து உபயோகித்ததனால் அன்றி வேறல்ல. இவைகளின் செலவை நீக்கிப் பார்த்தால் 6-லக்ஷத்து 7-ஆயிரத்து 377-ரூபாய் லாபம் காட்டுவதாயிருக்கிறது. யுத்தத்தினால் கடற்சுங்கம் முதலான வரிகள் குறைந்து விட்டன. வியாபாரம் குறைந்து போனதால் அதனால் வரும் வரிகளும் கம்மிதான்.

இந்த வருஷத்தில் திருவாங்கூர் சட்டநிரூபணசபையார் நாலுசாதாரண மீட்டிங்கும் ஒரு விசேஷ மீட்டிங்கும் கூடினார்கள். அவர்கள் செய்த சட்டங்களில் “கோ ஆபரேடிவ் ஸொஸைடீஸ் ரெகுலேஷன் X of 1089” என்பது முக்கியமானது. இதனால் ஐக்கியபத்திய சங்கங்கள் விர்த்தியாக வேண்டிய முயற்சி யெடுத்துக்கொண்டு அதற்காக ஒரு ரிஜிஸ்திராரும் நியமிக்கலாயிருக்கிறார். கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் புதிதாய் ஏற்பாடுசெய்யச் சட்டம் செய்திருக்கிறார்கள். அவைகள் ஏற்பட்டால் ஸிவில் கோர்ட்டுகளிலுள்ள வழக்கு மிகுதி கொஞ்சம் குறையலாம். பிரதம வித்தையை நிர்ப்பந்தமாக எல்லாப்பிள்ளைகளுக்கும் போதிப்பதற்கான மசோதா தள்ளுபடியாக நேரிட்டது. அதிக வரியின்றி நிர்ப்பந்த வித்தியாபோதனை ஏற்பாடு முடியாதகாரியம் என்று திவான் சொல்லுகிறார். ஸர்க்கார் பெற்றோர்களுக்கு உதவியாக உழைத்தால் மட்டும் இது கடைத் தேறுமேயன்றி, பெற்றோர்களுக்கு விரோதமாக ஸர்க்கார் செய்யும் முயற்சி யெதுவும் அவ்வளவாகப் பயன்படாதென்று நினைக்கிறோம். ம-ள-ள-ஸ்ரீ திவான்ஜியவர்களும் சட்டநிரூபண சபை மெம்பர்களும் ப்ரொபெஸ்ஸர் ஜான்பெர்ரியவர்களுடைய அபிப்பிராயத்தைக் கவனித்துப் பார்த்தால் நலமாயிருக்குமென்றெண்ணுகிறோம்.

எல்லா தேசங்களிலும்போல் இந்த சமஸ்தானத்திலும் வழக்கு வளர்ந்துகொண்டேதானிருக்கிறது. அசல் வழக்குகள் பாக்கி 17-ஆயிரத்து 618-லிருந்து 19-ஆயிரத்து 408-வரையில் அதிகமாயிற்று. ஒரு வருஷம், இரண்டு வருஷம் மூன்று வருஷம் பாக்கியுள்ள கேஸ்கள் அதிகமாய்க் கொண்டு வருகின்றன. சென்னை ஸிவில் கோர்ட்டில் ஒரு வியாஜ்யம் தொடுத்தால் அது விசாரணைக்கு வரக்குறைந்தது இரண்டு வருஷம் செல்லுகிறது. அதற்குள் 10-தரம் விசாரணை போட்டுப் படிகட்டு

வதில் கக்ஷிக்காரன் தாலியறுந்துபோய்விடுகிறது. கேஸ் விசாரணைக் கெடுத்துக்கொண்டால் அரைமணி நேரத்தில் எப்படியோ முடித்துவிடப் பார்க்கிறார்கள். வியாஜ்யம் வழக்குகளில் மாட்டிக் கொள்வதைப்போல் பிராணஹானி வேறில்லை. ஆயினும் ஏழை ஜனங்களுக்கு இதுதெரிகிறதில்லை. ஒரு தரம் கோர்ட்டேறி அனுபவப்பட்டால் ஆள் மிஞ்சுவது அபூர்வமாய் விடுகிறது. இது எல்லாதேசங்களிலும் ஒரேபடியாக நடந்துவருகிறது.

வித்தியா விஷயம் திருவாங்கூரில் சென்ற வருஷம் வழக்கம் போல் விர்த்தியாய்க் கொண்டு வந்தது. சர்க்கார் அனுமதி பெற்ற பள்ளிக்கூடங்கள் 1,763-லிருந்து 1,777 வரையில் அதிகப்பட்டது. அவைகளில் படிக்கும் பிள்ளைகளின் தொகை 2-லக்ஷத்து 4-ஆயிரத்து 971-லிருந்து 2-லக்ஷத்து 25-ஆயிரத்து 341 வரையில் அதிகப்பட்டது. வித்தியா இலாகா தலைவருக்கு பெர்ஸனல் அஸிஸ்டெண்ட் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஒருவரும் 6-அஸிஸ்டெண்ட் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களும் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மஹாராஜா காலேஜி ஆங்கிலத்திலும், சரித்திர பாடத்திலும் "பி. ஏ. ஹானர்ஸ்" வரையில் படிப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஸ்வபாஷா கமிட்டியார் செய்த ரிபோர்ட்டையனுசரித்து பிரதம வித்தியா பாடசாலைகளில் போதித்துவரும் பாடங்களை விர்த்திசெய்யவும், ஸ்வபாஷையில் உயர்தரபரீக்ஷை யொன்று நடத்தவும் தீர்மானித்தார்கள். இந்தப்பரீக்ஷை ஸர்க்கார் அனுமதிபெற்ற பாடசாலைகளிலிருப்பவர்களுக்கு மட்டும் உரியதாகச் செய்திருக்கிறார்கள். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும் "ஸ்கூல் லீவிங் ஸெர்டிபிகேட்டில்" பப்ளிக் ஸெவிர்ஸுக்கு யோக்கியமானவன் என்று எழுதி வந்த அமுலை அனாவசியமென்று எடுத்துவிட்டார்கள். ஸம்ஸ்கிருத பாடசாலை காலேஜாக உயர்த்தப்பட்டது. ஸ்கூல் உபாத்தியாயர்களுக்கு "ப்ரொவிடெண்ட் பண்டு" என்கிற ஸகாயநிதி யேற்படுத்த முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னை ராஜதானியிலுள்ளவர்கள் இது விஷயத்தில் இன்னும் மனுச்செய்து கொண்டேதானிருக்கிறார்கள்: கதிமோக்ஷம் பிறக்கவில்லை. வித்தியா இலாகா செலவு 12-லக்ஷத்து 84-ஆயிரத்து 450-ரூபாயிலிருந்து 15-லக்ஷத்து 89-ஆயிரத்து 80-ரூபாயாக அதிகரித்திருக்கிறது. இந்த வருஷத்துச் செலவு 18-லக்ஷரூபாய்க்குக் கணக்குப் போட்டும் இன்னும் 50-ஆயிரரூபாய் சிப்பந்திச் செலவுக்காக அதிகப்படிச்செலவுஸாங்க்ஷன்செய்யவேண்டியதாயிருந்ததென்கிறார். மொத்தத்தில் வித்தியா இலாகா அபிவிர்த்தி திருப்திகரமாயிருந்தது. தர்மச்செலவு அகவிலை யேற்றத்தினால் திருவனந்தபுரத்தில் 3-லக்ஷத்து 59-ஆயிரத்து 296-ரூபாயிலிருந்து 3-லக்ஷத்து 62-ஆயிரத்து 117-ரூபாயாகியிருக்கிறது. ஆனால் வெளிநாட்டு ஊட்டுப்புரைச் செலவு 100-க்கு 12-கம்மிதான். ஜனப்பிரதிநிதிசபை 15௳ கூடி 24௳ கலைந்தது.

THE "VIVEKACHINTAMANI" WAR NUMBER.—With the last issue to hand "the Vivekachintamani War number 'being' A Houshold Narrative of Contending Folks in the Great War of 1914" issued in three monthly parts during November, December and January comes to a close. The current edition having been exhausted we are promised a re-issue of the three parts in one, which can be had by those who register their names for Rupee one annas two by V. P. P. There are a number of apt illustrations with three maps, the one showing the Western Theatre of War in France and Belgium, the other showing the Eastern Theatre of War around Warsaw and the third showing the exploits of the illfated 'Emden' that was destroyed on the 9th November.—*The Hindu*, 16-2-15.

"The style and matter contained in the Magzine would be useful to the teachers in Board's Schools both to improve their language as well as general knowledge".—Recommendation of the Sub-Assistant Inspector of Schools.



## "THE PRIDE OF SELF."
## "நானென்ற ஆணவம்."

இராகம்-வேகடை; தாளம்-ரூபகச்சாப்பு

பல்லவி.

நானென்ற ஆணவம் நீ கொண்டதால்-பயன்
யாதுண்டு பாழ் நெஞ்சமே!

அனுபல்லவி.

தானந்தமாதி யிலாளிந் தப்பார் முதல்
வானந்தமாளக் கண்டானந்தமாகியும்— (நானென்ற)

சரணங்கள்.

1

பல்லாயிரங் கோடியண்டங்களோட்டவும்
பரிதிமுதலிய தீபங்கள் காட்ட வும்
எல்லாவுயிரும் படைத்துண வூட்டவும்
ஈசனுண்டிங்கி தெல்லாங்கண்டு கேட்டபின்,
—(நானென்ற)

2

கேடு நினைத்தவர் கேடு கெடுக்கவும்
கேதமுடையவர்க் கீடுகொடுக்கவும்
தேடுமடியவர் துன்பந்தடுக்கவும்
தெய்வமுண்டென்ற சொல்காது மடுக்கவும்,—
—(நானென்ற)

3

ஏழை எளியவர்க்கின்பம் பெருக்கவும்
ஈரமில்லா நெஞ்சைச் சூடிட்டுருக்கவும்
தாழாதவரைக் குனிய நெருக்கவும்
சுவாமியுண்டிங்கி தெல்லாங்கண்டிருக்கவும்,—
—(நானென்ற)

4

செல்வம் வளரச் சிகரங்கிளர்த்தனை
செல்வத் திலே மறந்தாயொருகர்த்தனை
வல்லமை செல்லின்மதத்துத் தகர்த்தனை
வண்ணமோய்ந்தால் களிமண்ணை நிகர்த்தனை—
—(நானென்ற)

5

ஓடிமறைகின்ற மின்னலைப் போலவும்
ஆடியொடுங்கிடும் பாவையைப் போலவும்
சாடிற்கறங்கிடும் பம்பரம் போலவுந்
தானிருந்தீதறி யாதவர் போலவும், —(நானென்ற)

6

கண்டுமறைந்த கனவினைப் போலவும்
கார்ருற்றபோதற்ற வில்லினைப் போலவும்
உண்டில்லையென்னும் குமிழியைப் போலவும்
உற்றதுவாழ்வென்ப தற்றறியாய் போலும்,
—(நானென்ற)

## THE JOY OF LIFE.
## ஆனந்தக்களிப்பு.

இராகம்-நாதநாமக்கிரியை; தாளம்-ரூபகச்சாப்பு.

பல்லவி.

துறவறமேதுக்கு மனமே—இல்
லறநல்லறமென்பது பெரியோர்வசனமே.

சரணங்கள்.

1

பெண்டு பிள்ளைகளுக்காதாரம்-இந்தப்
பெருமுலகுக்கு நாம் அருமுபகாரம்
பண்டுநாம் அமைத்தசாரம்-அந்தப்
பாரமெடுப்பதோ விடுவதோ வீரம்! —(துறவற)

2

தந்தைதாய் தமருக்கு நேத்ரம்-இந்தத்
தாரணி தன்னிலோர் நாடகசூத்ரம்-ந
டந்திட நாமொருபாத்ரம்-அதை
நடத்தாமலோடிட எனிந்த ஆத்திரம்! —(துறவற)

3

முந்தியபாத்ரத்திலொன்று-அந்த
முற்றுந்துறந்த துறவியும் நின்று
ஒன்றும் நிலையில்லையென்று-நமக்
குணர்த்துவரன்றி வனம் நமக்கன்று! —(துறவற)

4

நிகழ்வதெல்லாம் ஈசன் செயலே-இதை
நினையாமல் நம்மதென்பது சுத்த மயலே
புகழ்வதெல்லாம் ஈசனியலே-கர்ம
புண்யபாவமும் நமக்குண்மையில் அயலே!—(துறவற)

5

தலைவனருளை நித்யம்தேடு-தர்ம
சாதனைசெய்வதற்குப் போதுமே நாடு
அலைவதேன் நீ வெறுங்காடு-அதை
யடையாதவருக்குக் கிடையாதோவீடு! —(துறவற)

## A NEEDLESS ALARM IN SOCIAL LEGISLATION.

### THE POST-PUBERTY MARRIAGE BILL.

### THE INDIAN MOTHERS' VIEW OF IT.

*The Indian Social Reformer* of 20th December, referring to the statement that in all post-puberty marriages which have taken place in the Madras Presidency, the fact of their being so was concealed, says, that the statement "is hardly correct," and continues as follows:—"The statistics which we gave in our leading article in the last issue, are conclusive on the point. Even where there has been concealment, it has been one in which all the parties concerned have acquiesced, showing that the moral sense of the community sees no objection to such a marriage. It has been a "concealment' which concealed nothing. Any one who is at all acquainted with the habits of the ordinary Hindu household, will understand this."

Referring to Sir T. Muthuswamy Iyer's Judgment which the Hon'ble Mr. Sastriar has quoted, the *Reformer* quotes an extended extract from the same Judgment taken from an article from the pen of Mr. K. S. Ramaswamy Shastri, B.A., B.L., and says:—"After reading this extract, one cannot but say that quoting the high authority of Sir T. Muthuswamy Iyer in the way in which Mr. Srinivasa Shastriar has done, is hardly fair. Mr. V. Krishnaswami Iyer whom Mr. Shastriar himself quotes said: "It is certain that no court of law can now declare invalid any marriage which takes place after the puberty of the bride in the highest Hindu caste." Sir Sankaran Nair's authority is also doubted.

After quoting such an authority, we think we can let the views of the Indian Mother who spoke freely after reading and discussing Mr. Shastriar's own article in Tamil at a mothers' meeting, go forth to the public in its unmutilated form. We ask for the indulgence of the Hon'ble Mr. Shastriar and the Hon'ble Judges of the High Court whose names have been dragged in the controversy, for the humorous directness and plain speaking which characterise the Indian Mothers' views which we have been at some pains to collect and reproduce in the original from in which they were given expression to.

[Since the above was written a High Court Judge has given proof of his conviction of the legality of post puberty marriages by actually allowing his son to marry the bride of his choice puberty.]



YOUNG INDIAN—THE FRUIT IS NICE. WE OUGHT TO GO IN FOR IT. OLD INDIAN—[illegible] I KNOW IT IS SOUR.

"எங்கள் அப்பா குதிருக்குள் இல்லை."

"ருதுமதி விவாஹ மசோதா"

பெண்களைப் பெற்றவர்கள் அபிப்பிராயம்.

"ஸ்ரீமதி" வாக்கு

சென்னைச் சட்டநிரூபண சபை மெம்பராகிய கனம். வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் சென்ற நவம்பர் மாதம் நடந்த சென்னை சட்ட நிரூபண சபையில் "ருதுமதி விவாஹ மசோதா" என்று ஒரு மசோதா ஆலோசனைக்குக்கொண்டுவர அனுமதி பெற்றிருக்கிறார். அந்த மசோதாவை கவர்ன்மெண்டார் அச்சிட்டுப் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.



சாஸ்திரியார் உத்தேசம் என்னவென்றால், பிராமணர்களுக்குள்ளும் அவர்களை யனுசரித்து வரும் வேறு சில ஹிந்து வகுப்பினர்களுக்குள்ளும் பெண்களை ருதுவான பிறகு விவாஹம் செய்து கொடுத்தாலும், அந்த விவாஹம் சட்டப்பிரகாரம் செல்லவேண்டும்; அப்படி செல்லுவது சந்தேகமா யிருப்பதாகத் தோன்றுவதால் அது சொல்லத்தக்கதுதான் என்ற சட்டம் ஒன்று உண்டுபண்ணவேண்டுமென்பதாகத் தெரிகிறது.

இதற்கு வேண்டிய ஆதார நியாயங்களை நமது சாஸ்திரியார் அவர்கள் வெகு சாமர்த்தியமாக வெடுத்துச் சோதித்திருக்கிறார்.

இப்பொழுது ஹிந்துக்கள் கவனிக்கவேண்டியதெல்லாம் என்னவெனில்:—கனம் சாஸ்திரியாரவர்களும் இன்னும் சில கௌரவஸ்தர்களும் ருதுவான பிறகு செய்யும் விவாகம் செல்லுமோ செல்லாதோவென்று சந்தேகமிருப்பதால் அச்சந்தேகம் தீர "ருதுமதி விவாகம் செல்லத்தக்கது" என்று ஒரு சட்டமுண்டு பண்ணவேண்டியது அவசியம் என்கிறார்கள். ஆனால் அவர்களே அந்த சட்டத்தை ஜனங்கள் மதிக்கமாட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஜனங்கள் மதிக்காவிட்டாலும் கோர்ட்டார் மதிப்பார்கள்: ஆதலால் சட்டம் செய்ய நியாயமுண்டு என்கிறார்கள். இது சரிதானா? என்று பார்க்கவேண்டும்.

கோர்ட்டார் சட்டப்படி நியாயம் செலுத்துகிறவர்கள். ஹிந்துக்கள் விவாஹ விஷயத்தில் சட்டமின்றி மிலேச்சர்களாக வாழ்ந்து வந்தவர்களில்லை. சாஸ்திரியார் அவர்களே "பம்பாய், பஞ்சாப் முதலிய இடங்களில் அனேகர் துணிந்து பெண்களை வயதான பிறகு மணஞ்செய்து கொடுக்கிறார்கள்: சட்டத்திற்கு ஏற்றதா என்கிற பயமே அவ்விடத்தில் தோன்றவில்லை போலும்" என்கிறார். அவர்களுக்குத் தோன்றாத பயம் இவர்களுக்குத் தோன்றுவானேன்? இந்தக் கேள்விக்குத் தான் சரியான பதில் சொல்ல வேண்டுமென்று இரண்டு பெண்களைப்பெற்ற "ஸ்ரீமதி" கேட்கிறார். அந்தக் கேள்வி நியாயமான கேள்வியே. ஆனால் சாஸ்திரியாரை நேரப் போய்க் கேட்க அவருக்குத் துணிவு பிறக்கவில்லை. அவருக்காக வேறு யாராவது போய்க்கேட்கலாம் என்றாலும், சாஸ்திரியார் "ஸெர்வன்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைடி"க்குச் சென்னையில் தலைவராயிருக்கப்பட்டவர். அவருக்குச் சிஷ்ய வர்க்கம் மிகவுண்டு. பல ஜோலிக்காரர். வந்தவர்களையெல்லாம் பார்க்கவும், பார்த்து அவர்கள் கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லவும் அவருக்கு அவகாசம் இருக்கமாட்டாது. அப்படியே இருந்தாலும் அவரைச் சேர்ந்தவர்களுடைய சிபார்சு வேண்டும். அது இல்லாமல் ஒன்றும் நடவாது போலும். ஆனால் அவர் ஒரு உபகாரம் செய்திருக்கிறார். அவர் கையெழுத்துப்போட்டு ஒரு வியாஸம் எழுதியிருக்கிறார். அதை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்ப அவருக்கு அவகாசம் இல்லாவிட்டாலும் ஒரு பத்திரிகையில் அது வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திராதிபர் பாக்கியசாலி தான். அவருடைய அனுமதியின்றி நாம் அதைப் பிரசுரிப்பது ஒழுங்குத் தவறு ஆதலாலும், சாஸ்திரியாருடைய 'பேட்டி' கிடைப்பது இலகுவில்லையானதாலும், அதில் சாஸ்திரியார் அவர்கள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களைக் கொண்டு "ஸ்ரீமதி" கேட்ட கேள்விக்கு என்ன பதில் சொல்லலாமோ அதை ஊக்கமாய் எடுத்துக் காட்டுவது நம் கடமையாயிருக்கிறது.

சாஸ்திரியார் சொல்கிறபடி, "நம்முடைய ராஜதானியில் மட்டும் இந்தப் புது ஆசாரம் ஏற்பட வேண்டுமென்று வெகுகாலமாய் பிரயத்தனம் செய்தும், இது வரை ஆந்தர நாட்டில் மட்டுந்தான் ஏதோ இரண்டு மூன்று விவாஹங்கள் நடந்திருக்கின்றன."

இதனால் "புது ஆசாரம்" ஏற்பட வேண்டுமென்று "வெகு காலமாய் பிரயத்தனம் செய்தவர்கள்" யாவராயினும், அவர்களுடைய பகீரதப் பிரயத்தனங்கள் பலிக்கவில்லை

யென்று ஏற்படுகிறதல்லவா ! ஆம். ஆனால் உண்மையில் இவ்வித விவாகங்கள் தமிழ் நாட்டிலும் வருஷந்தோறும் நடந்து வருகின்றன வென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆயினும் இதைப்பற்றி பத்திரிகைகளில் பேர்விளங்க தண்டோராப் போட்டுக் கொண்டு கிளம்பவேண்டியநிமித்தமாவது அவசியமாவது அவர்களுக்குப்படவில்லை. ஆதலால் "ஊருடன் கூடிவாழ்" என்கிற மூதுரையை யொட்டி அவர்கள் ஊருக்கு விரோதமாக நடந்து கொள்ளும் பெருமையையும் பிரக்கியாதியையும் விரும்பாமல் நாடொக்க நடந்துகொண்டுபோயிருக்கிறார்கள். இது சாஸ்திரியாருக்கும் தெரிந்த விஷயம் தான் என்று தோன்றுகிறது. ஆனால் அவர் இதை எப்படிப்பார்க்கிறார் என்றால், அதை அவர் வாக்கு மூலமாகவே வெளியிடுவோம். அவர் இதை எப்படித்தெரிவிக்கிறார் என்றால்,—

" தமிழ் நாட்டிலோ வருஷந்தோறும் சில பெண்களுக்கு இந்த எல்லை தாண்டியே விவாஹம் நடக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அதை வெளியில் ஒப்புக்கொள்ளாமல் உண்மையை மறைத்து கார்யம் நடைபெறுகிறது. இப்படி பயந்து பொய்சொல்லி ஆசாரவழுவுதல் செய்யாமல், பஹிரங்கமாய் பெரிதான பெண்ணென்றே கல்யாணம் செய்தால் என்ன?" என்று கேட்கிறார். (கட்டையெழுத்துப் போட்டது நம்முடையகாரியம்.) "ஸ்ரீமதி" யம்மாளும் இக்கேள்வியைத்தானே திருப்பிக் கேட்டு, "இவரையார் பயந்து பொய்சொல்லி ஆசாரவழுவுதல் செய்யச் சொன்னார்கள் ? பஹிரங்கமாய் பெரிதான பெண்ணென்றே தம் பட்டம் அடித்துக்கொண்டு கல்யாணம் செய்வதை யார்தடுத்தார்கள் ?" என்று கேட்கிறார். இந்தக் கேள்விகளை சாஸ்திரியார் முன் "ஸ்ரீமதி" தேவி நேரிற் கேட்டால் அவர் என்ன பதில் சொல்வாரோ தெரியாது. ஆனால் அவர் " எங்கப்பா குதிருக்குள் இல்லை " யென்றவன் கதையாக ஊராரைத் தூஷித்துவிட்டு அதற்குள்ள காரணத்தையும் தானேவெளியிடுகிறார். அவருடைய வாக்குமூலம் இது:—" இதை ஜாதியார் ஒப்பமாட்டார்கள் ; தகுந்த மாப்பிள்ளை கிடைக்க மாட்டான் ; கிடைத்தாலும் சுற்றத்தார் கலியாணம் செய்து கொடுப்பவர்களையும் செய்பவர்களையும் தள்ளிவைப்பார்கள்."—" ஜாதிக்கட்டு, சுற்றத்தார்விரோதம் முதலிய கேடுகளை மாற்ற ஒருவராலும் முடியாது."

அப்படியானால் "ஒருவராலும் மாற்றமுடியாத" விரோதத்தை மேலெடுத்துப் போட்டுக் கொள்ளவில்லை யென்று பிறரைத்தூஷிப்பானேன் ? இவர்தாமே மேலெடுத்துப் போட்டுக் கொண்டு வீரதீரத்தோடு முஷ்டிக்கு நிற்பதை யார் தடுத்தார்கள் ? ஒருவரும் தடுக்கவில்லை. ஜனசம்மதம் பெற்று ஆசாரத்தை மாற்றவோ முடியவில்லை. ஆனாலும், ஆசாரமோ மாறிவருகிறது வாஸ்தவம். "எல்லோருக்கும் தெரிந்த" நடக்கும் விஷயம் எப்படித் திருட்டுவிவாஹமாகும் ? மாறிக்கொண்டு வருகிற ஆசாரத்தை ஏன் மாறவிடக்கூடாது? அறையிலாடுவோரை யேன் அம்பலத்தாட இழுக்கவேண்டும் ? " ஸ்ரீமதி " கேட்கும் இக்கேள்விகளுக்கும் இவைபோன்ற இதர கேள்விகளுக்கும் திருப்திகரமான விடையளிக்க நம்மால் முடியவில்லை. "புது ஆசாரத்தை நிலை நாட்டவேண்டுமென்று உத்ஸாகம் கொண்டவர்கள்" அம்பலத்தாடி அதனால் வரும் புகழோ இகழோ, அதைக் கட்டிக்கொள்வதை யார் வேண்டாமென்று தடுத்தார்கள் ? நாம் அறிந்த வரையில் ஒருவருமில்லை. "கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை" யென்கிற பழமொழியொன்றுண்டு. அந்த மாதிரி புது ஆசாரத்தை நிலைநாட்டிவிட்டதாகப் பேரும் பட்டமும் பெறவும் வேண்டும் : அதனால் வரும் கஷ்டத்தைப் பொறுக்கவும் திறமையில்லை ! ஜன அபிப்பிராயத்தை மாற்றவோ சக்தியில்லை. ஜனக்கட்டுப்பாட்டை யெதிர்க்கவோ, உபத்திரவம் பொறுக்கமுடியாததாயிருக்கிறது. ஆகையால் கட்டுப்பாடு செய்கிற ஜனங்களைக் கோர்ட்டுக்கிழுத்தால் அவர்கள் அடங்கி



விடுவார்கள். இப்பொழுது கோர்ட்டுக்குப் போனால் பிரதிவாதிகள் "எங்கள் ஜாதி வழக்கம் இது : வாதி ஜாதிவழக்கத்தை மீறிநடந்தான் : ஆகையால் ஜாதிப் பிரஷ்டனென்று தள்ளிவைத்தோம்" என்பார்கள். புதிதாய் ஒரு சட்டம் செய்து ருதுமதி விவாகம் சட்டசம்மதமானது என்று ஏற்படுத்திவிட்டால், "சட்டசம்மதமான காரியத்தைச் செய்தேன் ; இவன் என்னை ஜாதிப் பிரஷ்டன் என்றான்" என்று சொல்லி நஷ்டப்பிராது செய்யலாம். இதற்காகத்தான் இந்த மசோதா உபயோகப்படுமேயன்றி மற்றப்படி வேறு பிரயோசனமொன்றையும் காணோமென்கிறார் "ஸ்ரீமதி" தேவி.

இதற்கு நாம் என்ன பதில் சொல்லியும் அவர் அவைகளை ஒப்புக்கொள்வதாயில்லை. "உங்கப்பா குதிருக்குள் இல்லை தான் : ஆனாலும் குதிர்வாயைத்திறந்து பார்த்து விட்டுப் போவோம்." என்று பதில் சொல்கிறார்.

ஸர் திருவாரூர் முத்துசாமி ஐயர் அவர்கள் தீர்ப்பையும் தற்காலம் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருக்கிறவர்கள் நால்வருடைய அபிப்பிராயத்தையும் கூட எடுத்துச் சொன்னோம். "இந்த ஜட்ஜிகளுடைய மனைவி மக்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும் கேட்கிறேன்" என்று சொல்கிறார். ஜட்ஜிகள் அபிப்பிராயம் கோர்ட்டேறுகிறவர்களுக்கு முக்கியம். விவாஹம் செய்வது கோர்ட்டேறுவதற்காகவில்லை. சாஸ்திரத்தில் ருதுமதி விவாஹம் செல்லாதென்று எங்கும் சொல்லப்படவில்லை. பெற்றோர்கள் தம் கடமையைச் செலுத்தாவிட்டால் பெண் ருதுவான பின் 3-ருதுகாலம் பொறுத்திருந்து அதற்குப் பின் தானே ஸ்வயம்வரம்செய்து கொள்ளலாமென்றிருக்கிறது ; அப்படியே நடந்தும் வந்திருக்கிறது. ஆகையால் இதுவெல்லாம் "வேகாப் பருப்பு" என்று பதில் சொல்லிவிட்டார்.

பின்னும் அந்த அம்மாளோடு நாம் "ருதுமதி விவாஹ மசோதா" வுக்குப்பரிந்து பேசியதில் அவர் தாம் கொண்ட அபிப்பிராயமே பலப்படுகிறதாகச் சொன்னாரேயன்றி நம்முடைய நியாய வாதங்களில் சிறிதும் "காரஸாரம்" இருப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை. "நேதி, நேதி" யென்று எல்லாவற்றையும் தள்ளிவிட்டார். பின்னும் அவர் சொன்னவற்றில் ஒன்று சமயோசிதமாகவும் சந்தர்ப்பானுஸாரமாகவு மிருந்ததாகப்பட்டது. அது வேடிக்கையாகச் சொன்னதாயினும் வேடிக்கையிலும் உண்மை யிருக்கிறதுண்டே !

"இப்பொழுது வழக்கும் வியாஜ்யமும் மேலிட்டு எல்லாரும் எடுத்ததற்கெல்லாம் கோர்ட்டேறி ஜயித்தாலும் தோற்றாலும் ஓட்டாண்டியாகிவருகிறார்கள். இப்பொழுதுள்ள விவகாரங்களைத் தீர்க்கவே வருஷத்துக்கு இரண்டு ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் புதிதாக நியமித்துவர வேண்டியிருக்கிறது. இன்னமும் விவாஹ வியாஜ்யங்களும் ஏற்பட்டால் வருஷத்துக்கு மூன்று ஜட்ஜிகள் நியமிக்கலாம். "நாடெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை" யென்பது முன்னோர் சொன்ன பழமொழி. நாடு வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும் வியவஹாரம் வழக்குகள் விர்த்தியாய்க்கொண்டே யிருக்கும், ஜட்ஜிகளும் அதிகரித்துக்கொண்டே யிருப்பார்கள் : இந்திய ஜட்ஜிகள் தொகை இன்னும் அதிகரிக்கும். அது நமக்கு லாபம் தானே ! பசுவைக்கொன்று செருப்புதானம் செய்தாலும் அவன் தானம் வாங்கினவனுக்கு எப்படியும் "தாத்தா"="கொடையாளி" யென்பதற்குச் சந்தேகமில்லை" யென்று சொன்னார்.

[இதற்கு பதில் எழுதுகிறவர்கள் தூஷணையின்றியும் சுருக்கமாயும் பதில் எழுதினால் அவைகளைப்பார்த்துப் பிரசுரிக்க விவேகசிந்தாமணி யிடங்கொடுக்குமென்று எண்ணுகிறோம்.]

## THE MADRAS SOCIETY FOR THE PROTECTION OF CHILDREN.

As we go to press, we are favoured with an exceedingly touching letter addressed to the Honorary Secretary of the Social Service Branch of the Ananda Mission by the Honorary Secretary of the Madras Society for the Protection of Children.

He has kindly sent us three copies of the last annual report of the Society appealing to all interested in the potential wealth of child-life to help the Society in their highly important work of saving innocent children from degradation and shame. Children are the greatest of all national assets and every case of child-life saved from degradation is full of possibilities to national life which no one can calculate. Let those who choose become "more and more calculating" as men and less and less efficient in the discharge of their onerous responsibilities as parents, citizens and trustees of the future. The real workers and labourers in the 'Vineyard' are always few: but they labour well and what they sow with the sweat of their brow, the nation will reap in abundance. "I work, because my Father works" is the saying and justification of the work of the greatest saviour of the world and that is and ought to be the motto of all who are engaged in Social Service in spirit and in truth which is one of "*Samashti Sevai*"—the worship of the All in the service of humanity. "I should consider myself and the Society fortunate if I can enlist your co-operation in our work." We commend this appeal to the young souls that are engaged or are preparing themselves to engage in Social Service in the spirit of *Samashti-Sevai*.

## சென்னை பால ரக்ஷண்ய சபையார்.

இச்சபையின் கௌரவ காரியதரிசியவர்கள் "பாலபோத ஸமஷ்டிசேவைஸாதன சங்கத்தின்" கௌரவ காரியதரிசிக்கெழுதிய கடிதமொன்றை நமது பார்வைக் கனுப்பியதற்காக வந்தனங்கூறி அதிற்கண்டுள்ள விஷயம் பால சிக்ஷார்த்தமானதாக விருப்பதால் அவருடைய உள்ளக்கருத்தை வெளியிட்டெழுதுகிறோம். ஒரு தேசத்தின் உண்மைச் செல்வம் அதிலுள்ள பொன் வெள்ளி சுரங்கங்களில் இருப்பதாக நினைக்கக்கூடாது. ரத்னங்களிலெல்லாம் "ஜீவரத்னம்" மதிப்பேறப்பெற்றது. அந்த ஜீவரத்னத்துக்கு ஆதிமூலமாயுள்ளது பாலப் பருவம். இப்பருவத்தில் ஜீவன் தப்பு வழியிலிறங்கி கெட்டுப் போகாமல் காப்பது தேசத்தின் யோகக்ஷேமத்துக்கு இன்றியமையாத கடமையாயிருக்கிறது. "அப்ராப்த ப்ராபணம் யோக:" என்றபடி, பெறற்கரியபேறைப் பெருமுயற்சியாற் பெறுதலே யோக ஸாம்ராஜ்யம். அப்படிப்பெற்றதைக் காப்பாற்றுதல் க்ஷேமம். இதையே "க்ஷேமௌ லப்தஸ்ய பாலனம்" என்றார். ஆகையால் பாலப் பருவத்தில் குழந்தைகளைக் காத்துரக்ஷிப்பது லோகதர்மத்தில் தேசவளப்பத்துக்கு இன்றியமையாத கடமையாகும். இதைச் செய்து வருவார் எல்லாரும் ஸமஷ்டிசேவை தர்மத்தை யனுசரித்து ஊருக்குழைத்து வருகிறவர்களாவார்கள். மேற்படி பாலரக்ஷண்ய சபையின் காரியதரிசியவர்கள் அச்சபையின் தர்ம காரியத்தை நடத்த அர்த்தசகாயமின்றிக் குறைப்படுகிறார் என்று கேட்ட நாம் அவருடைய உயர்கடனைச் செலுத்த சகாயமாக நம்மாலான உதவியை யளித்து இது அங்கீகாரமாயிருக்குமானால் அவர் சொற்படி நடந்துகொள்வதாக வெழுத, அவர் மனிதர்கள் துட்டுப் பிடிப்புள்ளவர்களாய் லாபத்தின் மேலே கண்ணாயிருக்கிற இக்காலத்தில் அவர் முயற்சி எம்மட்டும் பலிக்குமோ பார்ப்போமென்று எழுதியிருக்கிறார். உபகாரக்ஷகர்களாய் அழியாக் கீர்த்திபெற்றவர்களெல்லாம் காசைத்தூசாய் நினைத்து அதன் பெருமையையும் சிறுமையையும் அறிந்து விலக்கினவர்களேயன்றி பணத்தைக் கொண்டுதான் காரியமாகவேண்டுமென்று நினைத்தவர்களல்ல. பணமோ ஜடவஸ்து. மனிதனோ சின்மயனுகத்தக்கவன். அறிவு அறியாமைக்கு அடிமைப்பட்டிருக்குமோ? லோகோபகாரமான காரியங்கள் நடக்கவேண்டியிருந்தால் அதைச் செய்விப்பவன் லோககர்த்தாவாகியஈசுவரன். அவன் கர்த்தா, நாம் கருவி. "வல்லவனுக்குப் புல்லாயுதம்" என்றபடி கர்த்தன் ஸர்வவல்லமையுள்ளவனானால் அவனுக்கு காரியத்துக்குத்தக்க கருவி தேடியுபயோகிப்பதோ கஷ்டமாகும்? இல்லை! இல்லை! ஆதலால் ஸமஷ்டிசேவை ஸாதனஸங்கத்தவர்கள் பால ரக்ஷண்ய வேலையில் அவர்கள் ஊக்கத்தைச் செலுத்துவார்களென்று நம்பி இதை யெழுதலானோம்.



## THE PRICES ENQUIRY COMMISSION.

### அகவிலை யேற்றத்தைப்பற்றி விசாரிக்க ஏற்பட்ட கமிஷன்.

1910-ம் வருஷம் மார்ச்சு மாஸம் அகவிலை யேற்றத்தின் காரணங்களைப்பற்றி விசாரித்து ரிபோர்ட்டு செய்யவென்று இந்தியா கவர்ன்மெண்டார் மிஸ்டர் தத்தா அவர்களைத் தலைவராகக்கொண்ட கமிஷன் ஒன்று நியமித்தார்கள். அவருக்கு உதவியாக டக்கா காலேஜில் செல்வநூல் அல்லது அர்த்த சாஸ்திரத்தில் விற்பன்னராகிய மிஸ்டர் ஜி. பிண்ட்லே ஷிர்ராஸ் அவர்களையும், அரசிறை இலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் எஸ். டி. குப்தா அவர்களையும் கூட நியமித்தார்கள். மேற்கண்ட இருவர்களும் 1910ஆ மே௴ அவர்கள் புதிய வேலையை ஒப்புக்கொண்டார்கள்.

மிஸ்டர் தத்தா (Mr. K. L. Datta) அவர்கள் இப்பொழுது சென்னையில் அக்கௌன்டென்ட் ஜெனரலாகவிருக்கிறார். இவரை விசாரித்து ரிபோர்ட்டு செய்யக் கேட்டுக்கொண்டதின் விவரம் பின்வருமாறு:—

(1) சென்ற 15-வருஷ காலத்தில் இந்தியாவில் விலையேற்றம் உண்மையாக எவ்வளவு அதிகம்? இது எல்லா சாமான்களின் விலையையும் பாதிக்கிறதா, ஆகாரத்துக்கு வேண்டிய தானியங்களை மட்டும் பாதிக்கிறதா? இடங்களுக்குத் தக்கபடி விலையேற்றத்தில் மாறுதல் உண்டா?

(2) உலகரீதியான காரணங்களாலுண்டான விலையேற்றம் எவ்வளவு? ஸ்தலவிசேஷத்தாலுண்டான விலையேற்றம் எவ்வளவு?

(3) விலையேற்றம் நிரந்தரமானதா? அல்லது காலபேத விசேஷமானதா?

(4) அது நிரந்தரமானதாயிருந்தால் அதனால் தேசத்தின் செட்டு-மட்டுஜீவனம் பொதுவாய் எப்படி பாதிக்கப்படுகிறது? பலசமூகத்தார்களையும் அது எப்படி பாதிக்கிறது?

மிஸ்டர் டட்டா அவர்கள் விசாரணையை முடித்து ரிபோர்ட்டு செய்திருக்கிறார்.

விலையேற்றம்:—1897-ம் வருஷத்தில் அகவிலை யேற்றம் 12?, 1896-ல் 106.

1900-ல் 122 ... 1899-ல் 104.
1904-ல் 106 ... 1908-ல் 143.
1910-ல் 132 ... 1912-ல் 141.

பஞ்சம் முதலான காலபேதவிசேஷங்களால் உண்டாகும் ஏற்றத்தை நீக்கிப் பார்த்தால், அகவிலையேற்றம் 1890-94-ல் 100-ஆக விருந்தது 1908-12-ல் 137-ஆக அதிகரித்தது. இது ஸ்திரமான விலையேற்றம். 1905-லிருந்து விலையேற்றம் விசேஷமாகத் தெரிகிறது. 1905-09-ல் 100-க்கு 31 அதிகம்; 1910-12-ல் 100-க்கு 36-அதிகம்.

சரக்குகள்:—தோல்வகைகள், ஆகாரதானியங்கள், துவரைவர்க்கம், தானியவர்க்கம், கட்டட சாமான்கள், எண்ணெய் வித்துகள், இவை 100-க்கு 40-க்கு மேல் விலையேற்றம்.

ஸ்தலவிஸ்தீரணம்:—பஞ்சம், கருப்பு இவைகளால் பாதிக்கப்பட்ட இடங்களில் விலையேற்றம் அதிகம். இவையில்லாத இடங்களில் முக்கியமாய் அஸ்ஸாமில் விலையேற்றம் குறைவு.

காரணங்கள்:—விலையேற்றத்தின் காரணங்கள் உலகரீதியானவை. தங்கநாணயம் உண்டானபிறகு இந்தியா உலகத்திலுள்ள தேசங்களோடு நெருங்கி சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. இதரதேசங்களின் அகவிலை இந்தியாவையும் பாதிக்கிறது. காலமழை சரியாகப் பெய்யாமையால் விலை மாறுபடுகிறதுமுண்டு. இதனால் மகசூல் குறைய அது விலையேற்றத்தையுண்டுபண்ணுகிறது. இந்தக் காரணம் அதிகமாக விலையை பாதித்திருக்கிறது.

இன்னொரு காரணம்:—ஜனத்தொகையின் அதிகரிப்புக்குத் தக்கபடி ஆகாரத்துக்குதவும் தானியங்களின் விளைவு அதிகரிக்காமல் குறைந்து வந்திருக்கிறது. இதனால் தானியவிலை மேன்மேலும் அதிகரித்து வந்திருக்கிறது.

இந்தியாவில் விளையும் சரக்குகளுக்கு இதர தேசங்களில் தேவையதிகம். ரயில் சார்ஜ், கப்பல் சார்ஜ் சகாயத்தால் சரக்குகள் இலகுவாக ஏற்றுமதியாகி வந்திருக்கின்றன. இந்தி

யாவிலேயே ஐசுவரியவிர்த்தியினாலும் உளனுடை சுகவிர்த்தியாலும் சரக்குகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது.

போக்குவரத்து சாதனங்கள் :—போக்குவரத்து சாதனங்கள் மலிந்து இதனாலும் சரக்குகளுக்கு தேவையதிகமாகி விலை கிராக்கியேற்பட்டிருக்கிறது. 1891-ல் 17,000 மைல் இருப்புப்பாதை 1901-ல் 24,000 மைல் ஆகவும், 1912-ல் 32,000 மைல் ஆகவும் விர்த்தியாகியிருக்கிறது. ரோட்டுகளும் இப்படியே விர்த்தியாகி யிருக்கின்றன. தந்தியனுப்பும் சாதகமும் அப்படியே; ரயில் சார்ஜ் கப்பல் சார்ஜ் மலிவு.

கப்பல், ரெயில் சாதகங்களால், சரக்குகளுக்கு ஐரோப்பா மேற்குப்பக்கத்து தேசங்களிலுள்ள விலை துறைமுகங்களிலும், துறைமுகப் பட்டணங்களின் விலை உள்நாடுகளிலுமாகப் பரவி கிராக்கியை உண்டு பண்ணியிருக்கிறது. கொடுக்கல்வாங்கல் நாணயசாதனங்கள் அதிகமாக அதனாலும் வியாபாரம் விர்த்தியாகி சரக்குகளுக்கு விலை கிராக்கி யேற்பட்டிருக்கிறது. நாணயமதிப்பு, பாங்கி சாதனங்கள், பொன் விளைவுமிகுதி முதலான காரணங்களால் நிரந்தரமான விலைகிராக்கி யேற்பட்டிருக்கிறது. நாசகாரணமான யுத்தங்களாலும், சைனிய தளவாடங்கள் முஸ்தீபுகளில் அதிகப் பணம் செலவுசெய்து வந்திருப்பதாலும் சரக்குகளுக்கு விலைகிராக்கி யேற்பட்டிருக்கிறது. இங்கிலாந்தில் மாத்திரம் யுத்ததளவாடங்கள் செலவு 1895-ல் 3 கோடியே 54-லக்ஷத்து 45-ஆயிரம் பவுனாயிருந்தது 1911-ல் 6-கோடியே 83-லக்ஷத்து 66-ஆயிரம் பவுனாக அதிகரித்திருக்கிறது.

இந்தியாவில் விலையேற்றம் இன்னம் கொஞ்சகாலத்துக்கு அதிகரித்து வரலாம். விலையேற்றத்தின் காரணங்களை யூகித்து ஆராய்ந்து பார்த்தால், பஞ்சம், கருப்பு முதலான காலபேத சம்பந்தமான காரணங்களை நீக்கிப்பார்க்கி இப்பொழுதுள்ள விலை கிராக்கி யின்னும் அதிகரிக்காவிட்டாலும் இதைவிடக் குறையாது என்று சொல்லும்படியாக விருக்கிறது.

விலையேற்றத்தின் பலன்:—இந்தவிலையேற்றத்தின் பலன் இந்தியாமுழுமைக்கும் மொத்தமாகப் பார்க்கில் அனுகூலமாகவே யிருக்கிறது. இதரதேசங்களில் செலவாகும் தொகையைச்செலுத்த விலை கிராக்கியினால் விளைபொருள்களின் ஏற்றுமதி முன்னிலுமிப்போது குறைந்திருந்தால் போதுமானது. நிலசுவான்களுக்கு குத்தகையதிகம் கிடைக்கிறது. வியவசாயிகளுக்கும் வேலையாட்களுக்கும் அதிக லாபம், அதிககூலி கிடைக்கிறது. நிரந்தரமான மாதசம்பளம் வாங்கி ஜீவனம் செய்கிறவர்களும், கவர்ன்மெண்டு பத்திரம் போன்றவற்றில் முதலிட்டு ஜீவிப்பவர்களும், ஸ்திரமாக ஏற்பட்ட (கட்டணம்) வாங்கிப் பிழைப்பவர்களும் தான் விலை கிராக்கிக்கேற்ற லாபமின்றி நஷ்டப்பட்டு வருகிறார்கள். ஜனசமூகத்தார் லாப நஷ்டங்களும் விலையேற்றத்துக்குத் தக்கபடியே யேற்பட்டிருக்கிறது.

---

## SHORT STORY.

"Judgment: Temporary and Eternal."

### "அரசன் அன்று கொல்லுவான். தெய்வம் நின்று கொல்லும்."

சுந்தரம என்பவர் ஒரு பங்களாவில் வசித்தார். அவர் வயது சென்றவர். சர்க்கார் உத்தியோகத்தில் ரூ. 50,000 வரையில் சம்பாதித்து விட்டார். இப்பொழுது ரூ. 150 உபகார சம்பளம் வேறு மாதாமாதம் பெற்றுக்கொண்டு வருகிறார். ஆதலினால் ஜீவனத்தைப் பற்றி அவருக்குக் கொஞ்சமும் கவலை கிடையாது. நான் சுந்தரத்திற்கு மிகவும் வேண்டியவனாதலால், ஞாயிற்றுக்கிழமை யன்று சுந்தரத்தைப் பார்க்கப்போயிருந்தேன். என் பெயர் "ரத்தினம்." சென்னையில் விளங்கும் தினசரிப்பத்திரிகைகள் ஒன்றில் உபபத்திராசிரியன். நான் போன சமயத்தில் சுந்தாம் கண்ணை மூடிக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துக்



கொண்டிருந்தார். தட்டி எழுப்பினேன். "தெரியாது, முடியாது, என்கிற வார்த்தைகள் அகராதியிலிருக்கின்றனவே ஒழிய புத்திசாலிக்கு இல்லை": கொஞ்சமாவது புத்தியிருந்தால் "சன்னதித்தெரு கொலை"யைப் பற்றி முன்னமேயே கண்டுபிடித்திருக்க மாட்டார்களா?—என்றார்.

சென்ற சில மாதங்களாக கொலைகளும் களவுகளும் மிகவும் ஜாஸ்தியாய் நடந்துவந்தன. இவைகளின் பைத்தியம் சுந்தரத்தைப் பிடித்திருக்கிறதென்று தெரியுமாதலால், நான் சுந்தரம் சொன்னதினால் ஆச்சரியப்படவில்லை. அருகிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு என்ன சொல்லப்போகிறாரென்று காத்துக்கொண்டிருந்தேன். யோகக்ஷேமம் கூட விசாரிக்கவில்லை. சுந்தரத்தை இச்சமயங்களில் அவர் சொல்வதைவிட்டு வேறு ஏதாவது கேட்டால் கோபித்துக்கொள்ளுவார். அதனால் நான் "மௌனம் கலகம் நாஸ்தி" என்று உட்கார்ந்துக்கொண்டிருந்தேன்.

சுந்தரம் என்னைப் பார்த்துச் சொல்லுகிறார்:—

"There is no such thing as mystery in it provided Intelligence is brought to bear upon it.

"எங்கு உனது புத்தியை உபயோகப்படுத்துகிறாயோ அங்கு உன் அறிவுக்கெட்டாதது ஒன்றுமில்லை." நமது போலீஸ் உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் இதை ஞாபகத்தில் வைத்து வேலை செய்தார்களானால், ஜனங்கள் தைரியமாய் அவர்களை நம்பியிருக்கலாம். நாம் என்ன செய்யலாம்! முட்டாள்கள்! முதலில் ஆரம்பிக்கும்பொழுதே தவறுகிறார்கள்!—என்றார்.

அதற்கு நான் "சன்னதித்தெரு கொலை"யில் கூடவா போலீஸார் பேரில் குற்றம் கூறுகிறீர்கள்? அதைப்போல் தலைகால் தெரியாத விஷயம் இதுவரையிலும் நான் கண்டதில்லையே! என்றேன். அதற்கு சுந்தரம் "அதைப்போல் சுலபமானது ஒன்றும் கிடையாது" என்றார். நான்! "அப்படியானால் தாங்கள் துப்பறியும் இலாகாவில் சேருகிறதுதானே! நன்றாகப் பணம் சம்பாதிக்கலாமே!" என்றேன்.

அதற்கு அவர் ; வேலையில்லை ! இதை நான் அந்த புத்தியில்லாதவர்களிடம், கூறினால் (Misguided though well-meaning police) என்னை பரிகஸிப்பதோடு கூட, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பினாலும் அனுப்புவார்கள். அதுவுமல்லாமல், நான் "அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்" என்பதிலும் "தான் செய்யும் காரியத்தின் பலனை மனிதன் அனுபவியாமற் போகான்"(The Law of Karma) என்பதிலும் நம்பிக்கையுள்ளவன். அத்தெரு கொலையின் விசாரணை நடந்து மிக நாளாய் விட்டதால் நான் அவைகளை உனக்கு மறுபடியும் முதலிலிருந்து சொல்லி வருகிறேன். கேட்டுவா!" என்று, ஜனங்கள் என்றும் மறக்கமுடியாத அப்பயங்கரமான கொலையின் விவரங்களை ஆதியோடந்தமாக விவரித்துச் சொன்னார். அதாவது:—

"டிஸம்பர் மாதம் 10-ந்தேதி மாலை மூன்று மணிக்கு 'ஷோக்லால்' என்னும் மார்வாடி மங்கவேலு என்பவன் வீட்டிலிருந்து தனக்கு வரவேண்டிய பாக்கியாகிய 500 ரூபாயை வசூல் செய்யப்போனான். மங்கவேலு ஆவேசம் வந்தவன்போல இங்குமங்கும் கூத்தாடிக்கொண்டிருந்தான். அவனது மனைவி அழுதுக்கொண்டிருந்தாள். மங்கவேலு மார்வாடியைக் கண்டு ஏய், நீ எனக்கு இப்பொழுது ரூ50 கொடுத்தாயானால் உனக்கு மிகவும் லாபம் வைத்து ரூபா 1000 தருகிறேன். எனக்குக் குறைந்தது ரூ 10,000 வரும், என்றான். மார்வாடி ரூபாய் வரும் வழியைச் சொன்னாலொழிய கேட்ட ரூபாயைக் கொடுப்பவனாகத் தோன்றாததால் அப்படியே சொன்னான்.

"நான் 30 வருஷங்களுக்குமுன் ஜனரல் ஆஸ்பத்திரியில் வைத்தியப்பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தேன். என்கூட நாராயணசாமி, குப்புசாமி என்று இருவர்கள் படித்துக்கொண்

டிருந்தார்கள். எங்கள் மூவருக்கும் ஒரே அறைதான். ஒருநாள் சாயங்காலம் குப்புசாமி நிறைய பணம் கொண்டுவந்தான். மறுநாள் அறையில் கொல்லப்பட்டுக் கிடந்தான். நான் அன்றிரவு முழுவதும் ஆஸ்பத்திரியில் வேலையாயிருந்தேன். நாராயணசாமி மாத்திரம்தான் அகப்படவில்லை. அவன்தான் குற்றம் செய்தவனென்று போலீஸார் நினைத்தார்கள் ஆனால் நாராயணசாமி போன இடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் தென்னாபிரிக்காவுக்கு ஓடிப்போய்விட்டான். அங்கிருந்து என்னைக் கொஞ்சம் பணஉதவி செய்யும்படி கேட்டான். நான் ரூபா 150 தபால் மூலமாக அனுப்பிவைத்தேன். அவன் அதைக் கொண்டு தோட்டவியாபாரம் செய்து பணக்காரனாய்விட்டான். எனக்கு கொஞ்ச நாட்களுக்குமுன் ரூ500 அனுப்பிவைத்தான். நான் கொஞ்சநாட்களுக்குமுன் ரூ. 10,000 அனுப்பாவிட்டால் போலீஸாரிடம் அவன் குப்புசாமியைக் கொன்றவன் என்று கூறிவிடுவேனென்று எழுதினேன். அதற்கு அவன்தான் கொஞ்சநாட்களுக்குள் இந்தியாவிற்கு வரப்போவதாயும் அப்பொழுது என்னை நேரில் பார்ப்பதாகவும் எழுதியிருந்தான். இவைகள்தான் அவை என்றான். அவைகளில் எழுதியிருந்ததாவது பின்வருமாறு :—[நாராயணசாமி தனபாக்கியன் என்று பேர் வைத்துக் கொண்டிருந்தான். அவனை ஜனங்கள் தென்னாபிரிக்கா கோடீசுவரன் என்று அறிவார்கள்.]

அவன் எழுதியது:

முதல் கடிதம்.

ஐயா,

நீர் மிகவும் அநியாயம் பண்ணுகிறீர். நான் ஏழைஸ்திதியில் இருந்தபொழுது உதவி புரிந்ததற்காக நான் உமக்கு எவ்வளவோ பதிலுதவிகள் செய்திருக்கிறேன். நான் சில நாட்களில் "நீலாயதாக்ஷி" கப்பலில் பம்பாய் துறைமுகம் வந்திறங்குவேன். சென்னை மாநகருக்கும் வருவேன். அப்பொழுது நீர் என்னைநேரில் பார்த்தால் உமக்கு எவ்வளவு உதவி செய்யலாமோ அவ்வளவையும் செய்வேன். இதற்கு முன் ஒரு தடவை நாம் நண்பர்களாய் இருந்ததற்காகவே யன்றி நீ பயமுறுத்துவதற்காகவல்ல என்று அறியவும்.

இப்படிக்கு,
தனபாக்கியன்.

இரண்டாம் கடிதம்.

ஐயா,

நான் இன்று நீலாயதாக்ஷி கப்பலிலிருந்து வந்திறங்கினேன். 10-ந்தேதி யன்று மாலை 6-15 மணிக்கு என்னை ஸ்டேஷனில் பார்க்கலாம். கறுப்பு சொக்காயும் தலைப்பாகையும் தரித்திருப்பேன்.

பம்பாய் துறைமுகம்,
டிஸெம்பர்மீ 8உ

இப்படிக்கு,
தனபாக்கியன்.

இக்கடிதத்தைக் கொண்டுதான் மங்கவேலு கூத்தாடிக்கொண்டிருந்தான், சிறு வயதிலேயே கொலைபுரிந்தவன் தனது கணவனை என்ன தான் செய்மாட்டான் என்று அஞ்சி அவனது மனைவி பயந்தாள்.

இக்கடிதங்களைப் பார்த்த பிற்பாடு மார்வாடி ரூபாய் 50 கடன் கொடுத்தான். அப்பணத்திற்கு புது உடுப்புகள் வாங்கிக் கொண்டு மங்கவேலு தனபாக்கியனைப்பார்க்கச் சென்றான். அன்று முழுவதும் அவன் வீட்டிற்கு வரவில்லை. அவனது மனைவி பயந்து போலீஸாருக்குத் தெரிவித்தாள். 31-ந்தேதி சாயங்காலம் சென்னை துறைமுகத்தில் வாராவதியின்கீழ் பலவருஷங்களாக உபயோகப்படுத்தப்படாத ஒரு படகில் ஒரு பிணம் கிடந்தது. மிகவும் அழுகிநாற்ற மெடுத்து உருத்தெரியாமலிருந்தது. ஆனால் அதன் பேரிலிருந்த கடியாரசங்கிலி, மோதிரம் முதலியவைகளால் மங்கவேலுவின் சரீரம் என்று அவன் மனைவியால் சொல்லப்பட்டு ருஜுசெய்யப்பட்டது.

## A Millionaire in the Dock.

### கோடீசுவரன் குற்றவாளியாக்கப்பட்டது.

மங்கவேலுவின் மனைவி கோடீசுவரன் தான் கொலை செய்திருக்க வேண்டுமென்றாள். போலீஸாரும் அப்படியே எண்ணினார்கள். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. மணி தன் கொலை செய்யப்பட்ட இடத்தை நான் போய்ப் பார்த்தேன். அந்த மாலையில் ஒரு பிராணிகூட இருக்கமாட்டாது. கூக்குரல் கொஞ்சமும் கேட்காது. ஒரு பயங்காளி கொலை செய்வதற்கு சரியான இடம் அதுவே. எப்பொழுதும் குற்றத்திற்குக் காரணமிருக்க வேண்டும். போலீஸார் கோடீசுவரன் தான் குப்புசாமியைக் கொன்றவனென்று மங்கவேலு சொல்லி விடுவானென்று பயந்து கொன்றதாக நினைத்தார்கள். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை.

தென்னாபிரிக்காவில் தனியாகப்போய் 150 ரூபாயைக்கொண்டு கோடீசுவரனாகும்படியான திடகாத்திரனும் தைரியசாலியுமாயிருக்கும் ஒரு ஆண்மகன் மங்கவேலுவைப்போன்றவனுக்கு எப்பொழுதும் பயப்படான். மங்கவேலுவோ குடித்துக் கெட்டவன். கோடீசுவரன் கொலைசெய்ததற்கு தக்க ஆதாரங்கள் அவனிடம் கிடையாது. ஆங்கில நீதி ஸ்தலத்தில் 30 வருஷத்திற்கு முன் கொலை செய்தானென்று ஒரு குடியன் பேச்சைக்கேட்டு கோடீசுவரனை தண்டிக்கமாட்டார்கள். கோடீசுவரன் நீதிஸ்தலத்தில் கைதிக்கூண்டில் நின்றபொழுது அவனைப்பார்த்தாயா! முழுவதும் க்ஷவரம் பண்ணியிருந்தான். விசாரணையானது நடந்துக் கொண்டிருக்கும் பொழுது, தனக்கு அதில் ஒரு ஸம்பந்தமுமில்லாதவன்போல் நடந்துக்கொண்டான். மங்கவேலுவின் மனைவியும் ஷோக்லாலும் முதல் சாக்ஷிகளாக விசாரிக்கப்பட்டார்கள். மங்கவேலுவின் மனைவி தனது கணவனைக்கொன்ற கொலைபாதகனை கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேனென்று விட்டாள். அவளும் ஷோக்லாலும் தாங்கள் முன்சொன்ன கதையைத்திருப்பிச் சொன்னார்கள்.

பிறகு 1218-ம் நம்பர் போலிஸ் சேவகன் சாக்ஷியாகக் கூப்பிடப்பட்டான். அவன் தான் சில நாட்களுக்குமுன் கோடீஸ்வரனை அவனது இருப்பிடமாகியபூந்தோட்டத்தில் கைது செய்ததை பற்றி வாக்குமூலம் கொடுத்தான். தான் அவனைக் கைதுசெய்வதற்காகக் கொண்டுவந்த உத்தரவைக் காண்பித்ததும் அவன் மிகவும் ஆச்சரியப்பட்டானென்றும், பிறகு தன்னால் ஒன்றும் செய்ய முடியாதென்று அறிந்து அவன் பின்னோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததாகவும் கூறினான்.

பிறகு ஸ்டேஷன் கூலியாள் 'முத்தன்' விசாரிக்கப்பட்டான். அவன், டிஸம்பர்மாதம் 10-ந்தேதியன்று பம்பாய்வண்டியானது 6-15-மணிக்கு வந்தபொழுது தான் இருந்ததாகவும், மேற்படி வண்டியிலிருந்திறங்கிய கறுப்புச் சொக்காயும் தலைப்பாகையும் தரிந்திருந்த ஒரு கனவான் அவனைக் கூப்பிட்டு சாமான்களை ஒரு வண்டியில்வைக்கும்படிச் சொன்னதாகவும், தான் அப்படியே ஒரு 'கோச்' வண்டியில் வைத்ததாகவும் சொன்னான். 35-வது நம்பர் கோச்வண்டி ஆள் 'மாரிமுத்து' சொன்னது:—

"நான் பத்தாந்தேதியன்று என் வண்டியுடன், சவாரிக்காகக் காத்துக்கொண்டிருந்து 6-15 மணி வண்டிவந்ததும் முத்தன் என்னைக் கூப்பிட்டு, வண்டியில் சிலசாமான்களை வைத்தான். அப்பொழுது அக்கனவான் இன்னொருவனோடு பேசிக்கொண்டு வந்தார். அவர் "கொஞ்சநேரம் இரு" நான் இதோ வருகிறேன் என்று சொல்லி கூடவந்தவனோடு பேசிக்கொண்டேபோனார். இப்புகைப்படத்தினால் கூட இருந்தவன் மங்கவேலு என்று அறிகிறேன்." 6-15-மணிக்கு மங்கவேலுவோடு போன கோடீசுவரன் தனியாக 8-45-மணிக்குத் தான் திரும்பி வந்தார். நான் அவரை பூந்தோட்டத்தில் விட்டபொழுது 9-15-மணி.

பிறகு பூந்தோட்டத்து வேலைக்காரர்கள் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் கோடீசுவரன் 10ந்-தேதி இராத்திரி 9-15-மணிக்கு மூட்டை முடிச்சுக்களோடு ஒரு கோச்வண்டியில் வந்திறங்கினதைப்பற்றிச் சொன்னார்கள். ஜனங்களெல்லாம் கோடீசுவரன் தூக்கிடப் படுவான் என்று நினைத்தார்கள். பிராசி

கியூஷன் தரப்பு வக்கீலின் முகம் மலர்ந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் சாமர்த்தியத்தைப்பற்றி தானே மகிழ்ந்துக் கொண்டு கனைத்தார்.

6-15-மணிக்கு மங்கவேலுவோடு போன கோடீசுவரன் 8-45-மணிக்குத்தான் திரும்பினான். அப்பொழுது அவன் தனியாகத்தான் வந்தான். கோடீசுவரனைப் பூந்தோட்டத்திலிறக்கின பொழுது 9-15-மணி. பிராசிகியூஷன் தரப்பு வக்கில் எழுந்துப் பேசலானார்.

ஜட்ஜிதுரையவர்களே! 10-ந்தேதி யன்று மாலை 6-15-மணிக்கு கைதியானவன் மங்கவேலுவைப் பார்த்திருக்கின்றான். அவன் கூட 6-15-மணிக்குப் போனவன் 8-45-மணிக்குத் திரும்பியிருக்கின்றான். கைதியோ பட்டணத்திற்குப் புதிது. போய்ப்பார்ப்பதற்கு சிநேகிதர்கள் யாருமில்லை. கைதி மங்கவேலுவை 6-15-மணியிலிருந்து 8-45-மணிக்குள் கொன்றானென்பதில் சந்தேகமில்லை—யென்று சண்டப்பிரசண்டமாய்ப் பேசி முடித்தார்.

எல்லா ஜனங்களும் கோடீசுவரன் தூக்கில் தொங்கலாடுவதுபோல நடுப்பகலிலேயேஸ்வப்னம் கண்டார்கள்.

ஆனால் கைதியோ அப்பொழுதுதான் தூக்கத்தைவிட்டுக் கண்விழித்து தனது வக்கீலுடன் பேசினான். கோடீசுவரன் வக்கில் பேசலானார். "தர்மதுரையவர்களே! எனது கக்ஷிக்காரன் நிரபராதி. 10-ந்தேதி யன்று கொல்லப்பட்டதாகக் கூறப்படும் மங்கவேலுவை 16-ந்தேதி உயிரோடுபார்த்த இருசாக்ஷிகளைக் கூப்பிடுகிறேன்" என்றார்.

காபிகிளப் முத்துவேலுமுதலியாரும் அவரது ஆளும் கூப்பிடப்பட்டார்கள்.

முத்துவேலு முதலியார் சொன்னது:—நான் பட்டணத்தில் ஒரு மிலிட்டேரி ஓட்டல் வைத்திருக்கிறேன். 10-ந்தேதியன்று மத்தியானம் ஒரு ஆசாமி வந்து டீ (தேத்தண்ணீர்) சாப்பிட்டார். போகும்பொழுது ஒரு குடையை வைத்துவிட்டுப் போய் விட்டார். ஹோட்டல் வழக்கப்படி அக்குடையை எடுத்து வைத்திருந்தோம். பிறகு 16-ந்தேதி மத்தியானம் அவர் மறுபடியும் வந்து 'டீ' சாப்பிட்டு விட்டு தான் வைத்துவிட்டுப்போன குடையை எடுத்துக் கொண்டுபோய் விட்டார். போனதும் அவர் மேஜையின் கீழ் ஒரு பாக்கெட் புஸ்தகம் கிடந்தது. அது அவர் போட்டுவிட்ட புஸ்தகம் என்று நினைக்கிறேன். இப்புகைப்படத்தினால் அவர் மங்கவேலு வென்று அறிகிறேன். மங்கவேலுவின் மனைவியும் ஷோக்லாலும் அப்பாக்கெட் புஸ்தகம் மங்கவேலுவினது தான் என்றார்கள்.

பிறகு குற்றவாளியின் வாக்குமூலம் படிக்கப்பட்டது. அதில் சொல்லியிருந்ததாவது:—நான் என்னுடைய சொந்த முயற்சியினால் தன் வந்தனானேன். நான் ஜெனரல் ஆஸ்பத்திரியில் படித்ததே கிடையாது. என்னை எப்பொழுதும் யாரும் நாராயணசுவாமி என்கிற பெயரிட்டுக் கூப்பிட்டதில்லை. நான் 10-ந்தேதியன்று சென்னை வந்தது வாஸ்தவம். எனக்கு மங்கவேலுவைத் தெரியாது. நான் ஸ்டேஷனில் உலாத்திக்கொண்டிருக்கும் பொழுது ஒரு ஏழை "ஐயா, நான் மிகவும் ஏழை. சாப்பாட்டுக்கு ஒன்றும் கிடையாது எனது மனைவி ஜ்வரமாயிருக்கிறாள்; குழந்தைகள் பட்டினி கிடக்கின்றன. வைத்தியத்துக்குப்பணமில்லை; அதன் கொடுமையால் எனது மனைவி சாகிறாள்—என்றான்.

நான் மனதிரங்கி "எங்கே! வா, நானும் வருகிறேன் நீ சொல்லுவது உண்மையானால் நான் என்னாலியன்றமட்டும் உதவி செய்கின்றேன்" என்று சொன்னேன்.

அவன் முன்போக நான் பின் போனேன். பலசந்துகள் பொந்துகள் வழியாக அழைத்துக்கொண்டுபோனான். பனியானது பொழிந்துக்கொண்டிருந்தது. நான் சிந்தனையிலாழ்ந்திருந்தேன். என் கூடவந்தவன் சாகக்கிடக்கும் மனைவியையும் பட்டினி கிடக்கும் குழந்தைகளையும் பாராமல் நான் ஒன்றும் கொடுக்க மாட்டேனென்று அறிந்து என்னை ஏதோ ஒரு



சந்தில் விட்டுவிட்டுப் போய்விட்டான். நான் புதிதாகையால் வழி தெரியாமல் திண்டாடி அலைந்து கடைசியில் ஸ்டேஷன் வந்து சேர்ந்தேன். எனக்கு திரும்பி வர 2½ மணி நேரம் பிடித்தது ஆச்சரியமில்லை. 8-45 மணிக்குள் திரும்பி வந்ததே ஆச்சரியம்.

நீதிபதி இதைக்கேட்டு ஆச்சரியமடைந்தார்.

பிறகு, "நீ கடிதங்கள் எழுதி யிருக்கிறாயே மங்கவேலுவை உனக்குத் தெரியாவிட்டால், நீ எப்படி அவனுக்கு கடிதம் எழுதினாய்" என்று கேட்டார்.

கோடீசுவரன் தான் கடிதமே எழுதவில்லை என்றான்.

நீதிபதிக்கு கோபம் வந்தது.

"என்ன! நிரம்பப் புளுகுகிறாய்? உன் கடிதங்கள் என் கையிலிருக்கும்பொழுது நீ எப்படி இல்லையென்று சொல்லலாம்?" என்று கேட்டார்.

கோடீசுவரன் அவைகள் தன் கையெழுத்துகளல்லவென்று சொல்லி, கோர்ட்டார் முன் எழுதிக்கொடுத்தான். நீதிபதி ஆச்சரியமடைந்தார். "அப்படியானால் நீ இந்தத் தேதியில் வருவாயென்று எப்படி மங்கவேலுக்குத் தெரியும்?" என்றார்.

"அதை நான் அறியேன் என்றான்" கோடீசுவரன்.

கோடீசுவரன் பேரில் குற்றத்தை ஏற்படுத்த சரியான சாக்ஷியங்களில்லாமையால் விடுவிக்கப்பட்டான். இது வரையிலும் குற்றவாளி அகப்படவில்லை.

## The Hitch.

### சிக்கலின் சூக்ஷமம்.

இக்கேஸிலிருக்கும் சூக்ஷமத்தை போலீஸார் அறியவில்லை. தன் சொந்த முயற்சியினால் கோடீசுவரனானவன் மனோதிட முடையவனாயிருக்க வேண்டுமென்றும், அவனுக்கு மங்கவேலுவைக் கொலைசெய்ய ஒரு காரணமுமில்லையென்றும் நினைக்கவில்லை, எந்த நீதியதிபதியும் மங்கவேலுவின் சந்தேக சாக்ஷியத்தைக்கொண்டு முப்பது வருஷத்திற்கு முன் நடந்த ஒரு கொலைக்காக ஒரு கோடீசுவரனை தண்டிக்கமாட்டான். அவர்களுக்கு மங்கவேலு கொலை செய்யப்பட்டானென்றும் அதற்காக கோடீசுவரன் கைது செய்யப்பட்டிருக்கிறானென்றும் கோர்ட்டில் விசாரிக்கப்படுவதற்கு முன்னால் தெரியாதே. கோடீசுவரன் இவ்வூருக்குப் புதிதாயிற்றே! அப்படியிருக்க முத்துவேலு முதலியார் ஹோட்டலுக்கு மங்கவேலு 10-ந்தேதியிலும் பின்னர் 16-ந்தேதியிலும் போனானென்று என்னமாக கோடீசுவரனுக்குத் தெரியும்? முத்துவேலு முதலியாருக்குத்தான் 16-ந்தேதி பாக்கெட் புஸ்தகத்தை வைத்துவிட்டுப் போனவரை 10-ந்தேதி கொன்றதாக ஒருவன் குற்றம் சாற்றப்பட்டிருக்கிறானென்று என்னமாய்த் தெரியும்? அப்படி யாராவது சொல்லியிருந்தாலும் நம்மிடம் வராமல் கோடீசுவரனிடம் போவானேன். தென்னாபிரிக்காவிலிருந்து வந்தகடிதத்தைத்தான் எழுதவில்லை யென்கிறானே. அவன் கையெழுத்தை மங்கவேலுவின் கையெழுத்தோடு ஒன்றிப் பார்ப்போம். தென்னாபிரிகாவில் எழுதின கடிதங்களின் மாதிரியை வரவழைத்துப்பார்ப்போம். இவன் நிஜமான தனபாக்கியனென்னும் கோடீசுவரன் தானாவென்று பார்ப்போம்! ஒருவேளை கொலை செய்யபபட்டது நிஜமான கோடீசுவரனும், கோடீசுவரனென்று நடிக்கிறவன் மங்கவேலுவு மாயிருக்கக் கூடாதா? என்னும் இவைகளெல்லாம் அவர்களுக்குத் தோன்றவேயில்லை.

## The Real Victim.

### நிஜமாய்க் கொலைசெய்யப்பட்டவன்.

நிஜமாய் கொலை செய்யப்பட்டவன் தனபாக்கியன் என்னும் கோடீசுவரன். இந்தத் தேதியில் கோடீசுவரன் வருவானென்று மங்கவேலுவுக்கு தெரிந்திருந்ததால், அவனுக்கு வந்த கடிதங்கள் கோடீசுவரனால் தான் எழு

தப்பட்டிருக்கவேண்டும். கோர்ட்டில் கைதி எழுதிய கடிதங்களல்லவென்று ருஜூப்படுத்தப்பட்டதே ஒழிய தனபாக்கியனென்னும் கோடீசுவரன் எழுதிய கடிதங்களில்லை யென்றும் ருஜூபடுத்தப்படவில்லை. மங்கவேலுவைப்போன்ற பயங்காளிகள் கொலைசெய்வதற்குத் தகுந்த இடம் துறைமுகத்து வாராவதியின் கீழிருந்த படகே. கோடீசுவரன் இவ்விடத்திற்குப் புதிது. அவனுக்கு அவ்விடம் கொலை செய்யத்தகுந்த இடமென்று எப்படித் தெரியும்? மங்கவேலு கொலை செய்யப்படவில்லை. கோடீசுவரனாகிய தனபாக்கியன் தான் கொலை செய்யப்பட்டவன். சந்தேகமில்லாமல் நம்பிக்கை வைக்கும் அன்னியனை கொலை செய்வதற்கு அவ்விடம் தான் சரியான இடம். போலீஸார்கள் ஏமாந்தார்கள். ஏன்! அவர்கள் தனபாக்கிய னென்னும் கோடீசுவரனைக் கொன்றவனைக்கண்டு பிடிக்க யத்தனிக்காமல் மங்கவேலுவைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க யத்தனித்ததால் தான் முற்றும் மோசம் போனார்கள்.

### The Real Murderer.

### நிஜமான கொலையாளி.

நிஜமான கொலையாளி மங்கவேலு. ஒரு அன்னியனை அவ்விடத்தில் கொலை செய்து அவன் பையிலிருப்பவைகளை தான் எடுத்துக்கொண்டு தன. பையிலிருப்பவைகளை அவன் பையில் வைப்பது அக்குடிகாரப்போக்கிரியாகிய மங்கவேலுவுக்குக் கஷ்டமில்லை. அவன் புருவ முதல் க்ஷவரம் செய்துக்கொண்டு கோடீசுவரன் வேடம் போட்டு நடித்ததால் அவன் மனைவி அவனைத் தெரிந்துகொள்ளாதது அதிசயமில்லை. அதுவுமல்லாமல் மங்கவேலுவின் மனைவியும் ஷோக்லாலும் தாங்கள் மங்கவேலுவைகொன்ற கொலைபாதகனைப்பாரேனென்று அவனை ஏறெடுத்துப் பார்க்கவேயில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 16-ந்தேதி ஹோட்டலுக்குப் போய் பாக்கெட் புத்தகத்தை வேணுமென்று போட்டு விட்டுப்போனவன் மங்கவேலுவே. க்ஷவரம் பண்ணிக்கொண்ட பிற்பாடு தான் முன்னிருந்ததுபோல பொய்தாடி மீசைகளை வைத்துக்கொண்டுபோய் விட்டு வந்திருக்கிறான். 16-ந்தேதி முத்துவேலு ஹோட்டலில் மங்கவேலு டீ சாப்பிட்டுவிட்டு, பாக்கெட் புஸ்தகத்தைப் போட்டு விட்டுப்போனபொழுது கோடீசுவரன் என்னபண்ணினுன் என்று போலீஸார் விசாரித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

"அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்."

ரத்தினம், நீ மேற்படி பழமொழியைக்கேட்டிருக்கிறாயல்லவா? அது மங்கவேலு என்னும் அந்தப்பாதகனிடம் உண்மையாக முடிந்தது. அப்பாதகன் எவ்வளவோ பொய்கள் சொல்லி கொலை புரிந்து சம்பாதித்த அப்பணத்தை அநுபவிக்கவில்லை. இக்கேஸ் முடிந்த ஆறும் மாதம் அவன் பயங்கரமான மரணத்தை அடைந்தான். இவன் ரயில்வேஸ்டேஷன் மேடையில் உலாவிக்கொண்டிருக்கும் பொழுது தவறி ரயில்வே பாதையில் விழுந்து எழுந்துக்கொள்ளுவதற்குமுன் அப்பொழுது வேகமாய் வந்துக்கொண்டிருந்த தூத்துக்குடி மெயில் வண்டியின் கீழ் அகப்பட்டு நண்டபிண்டலாய் நசுங்கிப் போய் விட்டான். மானிடன் தான் விதைத்த விதையின் பலனைக் அறுக்காமலிருக்க மாட்டான். வினைப்பயன் யாரை விட்டது!

---

### கனம் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலே யவர்கள் தேஹ வியோகம்.

அரசர் பிரதிநிதி சட்ட நிரூபண சபையில் பிரக்கியாதி பெற்ற ஒரு அங்கத்தினரும் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் சபையில் அரசர் தம்மால் நியமிக்கப்பட்ட மெம்பர்களில் ஒருவரும், "ஸெர்வன்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைடி" ஸ்தாபகரும் அதற்குத் தலைவருமான கனம் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலேயவர்கள் பிப்ரவரிமீ 19உ வெள்ளிக்கிழமை யன்று இராத்திரி பூனாவில் காலஞ்சென்ற செய்தியைக் கேட்டு விசனிக்கிறோம். இவர் பூனா பெர்குஸன் காலேஜில் 75-ரூபாய் சம்பளத்தில் ப்ரொபெஸ்ஸராக விருந்து 25-வருஷகாலம் உழைத்த பின் 30-ரூபாய் பென்ஷன் பெற்றுக்கொண்டு துரைத்தன காரியங்களில் சிரத்தை யெடுத்துக்கொள்ளலானார். இவர் தம்முடைய பொது நலப் பிரியத்தாலும் ஸ்வயநயம் பாராட்டாத பரோபகார சீலத்தாலும் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் தென்னாப்பிரிக்காவிலும் இவருடைய பேரும் குணமும் விளங்கப் பெருமுயற்சி செய்து பிரபலமான பேரும் புகழும் பெற்றவர். இவருடைய மரணம் இந்தியாவுக்கே ஒரு பெரு நஷ்டமாயிற்று. இவருடைய ஞாபகார்த்தம் சென்னையில் பொது ஜனக்கூட்டம் கூடவேண்டுமென்று கவர்ன்மெண்டு மெம்பர்கள் உள்பட பலர் சேர்ந்து ஷெரிபுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். மார்ச்சுமீ 4உ மீட்டிங்கு கூடும்,

"The Encouragement of the Moral & Intellectual Development of the People."
*"Give me not O God, that blind, fool faith in my friend that sees no evil where evil is, but give me, O God, that sublime belief that seeing evil I yet have faith."*
*"Seek Truth wherever you can find it," But, "Make your choice and stick to it till you reach the End.'*
ஸத்தியம் வத—**SPEAK THE TRUTH.**
" HITCH YOUR WAGON TO A STAR." " TO THINE OWN SELF BE TRUE."




அன்பேயவன் : அறிவேசக்தி : ஓம் தத்ஸத்.] [God is Love: Knowledge is Power: *Aum*
**"New Series"** ஸத்தியமே ஜெயம்—**SATYAMEVA JAYATE.** **"Approved"**
புத்தகம். **22.**] ஆனந்தஸு பங்குனிமீ, **1915**ஸு மார்ச்சுமீ [சஞ்சிகை **12**

## "A Household Narrative of Contending Folks in the Great War of 1914."

## INTRODUCTION.

[*By H. O. D. Harding, Esq., I. C. S.*]

Some twenty years ago I came across the "Viveka Chintamani" and its author, Mr. C. V. Swaminatha Iyer and I was then much struck with the excellence of the magazine and its power for spreading knowledge and awakening interest in things outside the ordinary routine among the Tamil people. Most people have intelligence but too many do not let it work outside the common places of daily life—which is why progress is so slow. The Diffusion of Knowledge Agency had and still has ample scope for work, and now that twenty years are passed I find the "Viveka Chintamani" still going strong; and while my son is grown up and gone to take his part in the War, I find my old friend's son working with his father and in these special War-numbers spreading knowledge of the war, its causes and rights and wrongs and of the peoples engaged, among all who can read Tamil. There is much room for such a book, for millions in the country have never even heard of the nations engaged, and either by accident or intention the wildest rumours have gone about the country. Some people who have not understood the personal character revealed by German "frightfulness" as it is called, have even hoped for a German Government to replace the British in India because they believe that the Germans would levy no taxes, but distribute *inams* all round and that as Germans know Sanskrit, no one need learn English any more but Sanskrit may become the language of India from Himalays to Cape Commorin. These ideas show the extraordinary folly that exists where knowledge is not diffused. Even the most pious king of ancient India could not give an *inam* to the most pious Brahmin of the day unless he first collected taxes from other people. And although a few German and also English Professors have studied Sanskrit it is not exactly the language of Germany any more than of England, or for that matter India either.

This volume sets forth in simple language the origin of the War, an account of how things are going, interesting description of the different nations involved and of their wealth and capacity to go on bearing its enormous cost and what is more is sprinkled with those thoughts of duty and self-sacrifice without which no one can succeed in the Battle of Life either individually or among the nations.

That is why Germany is failing. Her war is opposed to the root principles which underlie all human good conduct and well-being. It is a war to sacrifice others, a war to destroy others and seize their goods, and it is a war for no other purpose. And this is wholly and entirely wicked. We know now from Bernahrde's books that the Germans have been taught to believe that a wise Government will seek strength in order to fight its neighbours; it will conduct foreign affairs in such a way as to declare war when it pleases on any body, simply to acquire more power and dominion; we know now that Germany's intentions have been for years to reduce England either to an ally or a vassal—in either case deprived of all power. We know now that the murdered Austrian Duke and the Kaiser planned this war months before it started and the German merchant-vessels were given sealed orders six months before the War, not to be opened till they got a wireless message and when opened the instructions were found to be that Germany was at War with England, France and Russia and the vessels should therefore seek refuge where they could. So, Germany knew six months before-hand what was coming and yet to-day has the impertinence to blame England for the war.

"Do as you would be done by" is the law of men and nations. Germany's excuse for attacking other people is that her civilization is better than theirs and they will be gainers therefore if she conquers them. We know what she has done in Belgium: that is presumably what she thinks ought to be done and how she would be done by. Let us take her at her word and do by her as she has done—not in all its frightfulness, for we cannot, but in such measure as is necessary to drive this moral law into her temporarily demented head.

War is always a tragedy, even when two honest, well-intentioned nations differ on some point so vital to them both that neither will give way without an appeal to arms. It is doubly a tragedy when it springs from no quarrel whatever but from shere greed, from the robber's hunger to seize by violence the goods of weaker persons. Fortunately in this case the robber misjudged his own strength and his victims' and the victims are out—every man of them if necessary—to down the robber till he can strike no more for ever. "From great desire comes great loss" says the Tamil proverb, and this, Germany is already realizing.

War is trebly a tragedy when we have good reason to believe that it is inspired by madness. The Kaiser is the centre and source of it, and the more one reads of him the more clear does it become that he is not and never has been entirely sane and that the megalomania which has always afflicted him has intensified in him and spread to the megalogermania of his unlucky people.

It is easy to sit alone miles from any body in a peaceful Indian travellers' bungalow and think of distant wars but when one really thinks of life and death in the trenches, of Louvain, of any French village shelled and then occupied by the Germans—of the misery felt to-day by millions and millions of people in England, France, Belgium, Russia—and Germany too, and then that all this is for no cause, is totally unnecessary, is all due to the mad ambitions of a single man and a few of his own caste, one longs to be at the front oneself and help in the annihilation of these mad murderers, and feels that at the end, if the Kaiser survives, he should end—not in honoured seclusion somewhere, but where lesser murderers end—on a hangman's rope, since the madness of megalomania is largely self-induced and is not such as to make him incapable of knowing the nature and consequences of his acts.

H. O. D. HARDING.

புஸ்தகம்-22.] [சஞ்சிகை-12
"The Children's Favourite, The Teachers' Help, And the Parents' Guide."
ஆனந்தவரு பங்குனிமீ
விவேகசிந்தாமணி
March-April 1915.
ESTABLISHED 1892



[library stamp]

"பெற்றோர்கள் தாழுவப்பர் பிள்ளைகளி லாசையுள்ளோர்
கற்றே மெனவுகந்து கற்பர் பின்னும்—மற்றோர்கள்
மாச்சரியத் தாலிகழில் வந்ததென்னேச் சேயிகழ்கை
யாச்சரிய மோதா னவர்க்கு."

## "THE MEANING OF UNIVERSITY LIFE."

(*Farewell Address by H. E. the Viceroy.*)

"As this is the last occasion upon which I shall have the honour of presiding as your Chanceller at Convocation I would like to address a few words to the students of the University. I have myself been a student at the *University of Cambride* for a spell of $3\frac{1}{2}$ years, and, although I can recall periods of what seemed to me then hard work and unwelcome drudgery, I now look back upon that time with grateful enthusiasm as some of the happiest years of my life. I am aware that my tutor was a little disappointed with me and the results of my examination; still it is not by the results of examination that one is truly able to gauge whether a young man has profited or not by his residence in the University. Nor can it be said that the standard of education of a student and his utility in after-life depend upon his knowledge in some special subject that he is able to assimilate in his brain for the time being. Still what I learn't and what I veritably believe to be even more valuable for practical life in this world was *the power of concentration and assimilation*, and these are qualities that each and every student should assiduously cultivate for himself and that *no tutor, however gifted, can teach.* I feel that I have here made a personal digression but what I wish to say a few words about to you to-day is *the meaning of University life* and the part that you students should play in it. In the modern State one of the chief objects of those who are responsible for its good Government should be *the encouragement of the moral and intellectual development of the people.* The natural channel through which such progress should be safely obtained is through its educational establishments such as universities and schools. The primary schools are the lowest of such institutions and are intended to educate and raise the people of the soil, while the secondary schools, to which a comparatively limited number proceed are utilised for the development of education and examination of knowledge amongst a class of people who, as useful members of the common-wealth, are in a position to exercise a beneficial influence on their surroundings and of those who have not had the privilege of enjoying similar advantages. But it is from the Universities that we hope and expect to find those pioneers of higher intellectual thought and reason who not only contribute to the knowledge of the world but *also impress upon the State the individuality of their views* and *the refining influence of their higher aspirations.* In this sense the University plays a very important part in the State, since it is indisputable that with but a few exception those who rise to the highest positions in the public and intellectual life of the nation are those who have passed through the portals of the University and have thereby acquired not merely academic knowledge but a wider outlook upon life together with *a more penetrating insight into the ways and character of men.* It is the higher and more intelligent life of the Universtty that should be the training ground of the nation's most distinguished sons, whether in public life or in the highest intellectual pursuits.

Thus it is in accordance with the duty of the State, and an act of patriotism in all those concerned, to maintain the Universities at the highest possible level of intellectual efficiency, and in so doing they may rest assured that with the course of time men of the highest talent and intellect will emerge and that their efforts will not have been in vain."—*H. E. Lord Hardinge at the Convocation of the Calcutta University.*

## "THE MEANING OF UNIVERSITY LIFE."

### FAREWELL ADDRESS BY H. E. THE VICEROY, CHANCELLOR OF THE CALCUTTA UNIVERSITY.

## ஸர்வகலாசாலைப் படிப்பு—அதன் கருத்தும் பயனும்.

நமது அரசர்பிரதிநிதி கனம்பொருந்திய லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் பாலரிடத்தில் அன்பும் ஆதரவும் கொண்டவர் என்றும் பாலபோத ஸமஷ்டிசேவை ஸாதனானுகூலர் என்றும் விவேகசிந்தாமணியை வாசிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவர் வித்தையின் லக்ஷியலக்ஷணங்களை நன்றாக வுணர்ந்தவரென்று மார்ச்சுமீ 6௳ கல்கத்தா யூனிவர்ஸிடி கான்வோகேஷன் சபையில் அவர் சான்ஸலராக (தலைவராக) விருந்துசெய்த பிரசங்கத்தால் விளங்க வைத்திருக்கிறார். அவர் இந்தியாவுக்குவருமுன்னமேயே "இந்தியா முன்னுக்கு வர வேண்டுமானால் அது அத்தேசத்துக் குழந்தைகளை நன்றாகப் பாலசிக்ஷையிற் போதித்து வித்தியா லக்ஷணங்கள் அமையப்பெற்ற வித்தியா போதனையால்தான் ஆகவேண்டு" மென்று உறுதியாய் நம்பியுள்ளார் என்று (Harrow) ஹாரோவில் படித்துத்தேறிய தன்னுடைய சகபாடிகள் அவருக்கு அளித்த விருந்துபசார காலத்தில் செய்த பிரசங்கத்தில் வெளியிட்டிருக்கிறார். இதைப்பற்றி விவேகசிந்தாமணியில் முன்னமே யெழுதியிருக்கிறோம். இப்பொழுது அவர் கல்கத்தா யூனிவர்ஸிடித் தலைவராக விருக்கிறமுறையில் அந்த ஸர்வகலாசாலையின் வருஷாந்தக் கூட்டத்தில் அக்கிராசனம்வகித்து வித்தியா விஷயமாக அவருடைய உள்ளக்கருத்துகளை வெளியிட்டுப் பேசினார்.

அவர் மாணவர்களிடத்தில் பிரீதி வைத்தவரென்றும் அவ்வுள்ளன்பு காரணமாக அவர்தாமே தமது அந்தஸ்தை மறைத்துக்கொண்டு கல்கத்தாவில் அங்கங்கே மாணாக்கர்கள் வஸிக்கும் 'ஹாஸ்டல்'களுக்குத் திடீரென்று விஜயமாகச்சென்று அவர்களோடு நேரில் பேசிப்பழகி அவருடைய மனோபாவத்தையும் குணவிசேஷத்தையும் நேரில் அறிந்துகொள்ளப் பிரயத்தனப் பட்டாரென்றும் அது மூலமாக அவர்களுக்கு இந்தியா மாணவர்களுடைய யோகக்ஷேமத்தில் விசேஷ சிரத்தையுண்டாகலாயிற்றென்றும் சொன்னார்.

பிறகு கவர்ன்மெண்டார் அவர் அரசர்பிரதிநிதியாக வந்தபிறகு வித்தியாபிவிர்த்தி விஷயமாக வெடுத்துக்கொண்ட முயற்சிகளையும், செய்த உதவிகளையும் சாங்கோபாங்கமாக எடுத்துக்கூறி, அவர் இந்தியாவி லிருக்கவேண்டிய ஐந்து வருஷகாலம் நெருங்கிவிட்டபடியாலும் அடுத்தவருஷம் கல்கத்தா யூனிவர்ஸிடி கான்வோகேஷன் காலத்தில் அவர் தலைவராயிருந்து அக்கிராசனம் வகிப்பது சாத்தியமில்லையாதலாலும் அவருடைய உள்ளக்கருத்தை வெளியிட்டு மாணவர்களுக்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச் சொல்ல விரும்புவதாகச் சொன்னார். வித்தையென்பது வித் என்னும் தாதுவிலிருந்து பிறந்த வார்த்தை. வித்=அறிதல்; வித்தை=அறிவால் அறியப்பெற்றது. கல்வியென்றாலும் அதே பொருள்படும். "கல்வியைக்கல். கற்றபடி நில்" என்றார் பெரியோரும். "கற்றதோர் கல்வியும் மனப்பழக்கம்" என்றார் ஔவையார். ஆதலால் மனப்பழக்கத்தால் அறிவு விசாலிக்கப்பெற்று அறிவான், அறி-பொருள், அறிவு என்னும் திரிபுடிஞானம் சித்திக்கப்பெற்று இம்மூன்றையும் அறிந்த அறிவு (இதற்கு "மேலறிவு" என்று சொல்வதுமுண்டு) தானாகி அந்த அறிவின் வழிப்பட்டு நின்று அனுபவஞானம் சித்திக்கப்பெறுதலே கல்வியின் பயன். இதையே "கல்வியைக் கல்: கற்றபடிநில்" என்று சுருக்கமாக சூத்திர முறைபற்றிச் சொல்லியுள்ளார்.

கல்வியை=கற்கவேண்டியனவெல்லாம், கல்=கசடறக்கற்றுத் தேறுவாயாக. இப்படிக் கற்பன கற்றபின், கற்றபடி—உள்ளமுணர்ந்தோதியபடி (வஞ்சகமின்றி), நில்=நடத்தையில் ஒழுகிநின்று "ஒழுக்கவழக்கம்" † என்கிற அப்பியாசயோக விசேஷத்தால் குணசீலனாகி, குணசீலத்தால் வித்தியாலக்ஷியமாகிய பேரறிவு தன்னைப்பெற்று அப்பேரறிவுதானாகப் பெருவாழ்வெய்தி "தாழாமற் றாழ்ந்து" ("Simple living and high thinking") என்கிற "வாழாமல் வாழவைக்கும்" வாலறிவன் நற்றாள் தொழுதுய்மின்!—என்பது அம்மூதுரையின் உள்ளக்கருத்து. இதையே லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் காலதேச வர்த்தமானங்களுக்கிசைய கல்கத்தா ஸர்வகலாசாலை மாணாக்கர்களுக்கு உபதேசம் செய்கிற முறையில் இந்தியாவிலுள்ள மாணாக்கர்களெல்லோருக்கும் அம்மாணாக்கர்கள் யோகக்ஷேமத்துக்கு பாத்தியப்பட்டவர்களான பெற்றோர்கள் கற்றோர்கள் எல்லோருக்கும் எடுத்துரைக்கலானார். "கற்றோர்கள்" என்று சொன்ன வார்த்தை கல்வியைப் புகட்டுவோராகிய போதகாசிரியர்களையும், பிரமுகர்களான ஜன சமூகத் தலைவர்களையும்கூடக் குறிக்கும்.

### ஸர்வகலாசாலைப்படிப்பின் கருத்தும் பயனும்.

லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் ஸர்வ கலாசாலைப்படிப்பின் கருத்தையும் பயனையும் பற்றிச் சொல்லுமுன் அவர் "கேம்ப்ரிட்ஜ் யூனிவர்ஸிடியில்" மூன்றரை வருஷகாலம் படித்ததின் பயனையும் அவர் அனுபவத்தையும் பற்றிச் சொல்லலானார். படிக்கும்பொழுது அவருக்குப் படிப்புக் கஷ்டமான வேலையாகவே தோன்றியது. உழைப்பும் ரஸமற்றதாகத் தோற்றியது. ஆனால் இப்பொழுது அக்காலத்தைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது அந்த மூன்றரை வருஷகாலமே அவருடைய வாழ்நாளில் மிகவும் சந்தோஷமான காலம் என்று நினைக்கிறார். ஏன்? அந்தக் காலத்தில் அவர் பரீக்ஷையில் விசேஷப் பேரும் பிரக்கியாதியும் பெற்றிலராயினும் "the power of concentration and assimilation" என்று அவர் குறிப்பிட்டுச் சொன்ன மனோசக்திகள் பெற்றது அவர் காலேஜில் படித்தகாலத்திலேயே. 'மனப்பழக்கம்" ஆகிய "கல்வி"யைக் குதிரையைப்பழக்கிச் சவாரி செய்வதற்குச் சமானமாக ஒப்பிட்டு உவமை கூறியுள்ளார் திருமூலர் என்னும் மஹாசித்தர்.

"ஆரியன், அல்லன், குதிரை யிரண்டுள" என்று சொல்லியிருக்கிறார். "ஆரியன்" என்னும் குதிரை நன்றாகப் பழக்கப்பெற்று பழக்க ஒழுக்க விசேஷத்தால் குணசீலன் ஆனது. ஆரியன் என்றால் "குணசீலன்" என்றே அருத்தம். "அல்லன்" என்னும் குதிரை அத்தப்பழக்கம் பெறாது காட்டுமிராண்டியாகத் திரிந்து கொண்டிருக்கும் தன்மையது. இந்த இரண்டு குதிரையையும் வித்தை, அவித்தையென்றும் சொல்லுவர். வித்தை கைவந்தவர்க்கு அது ஸ்ரீவித்தையாகும். கைவரப்பெறாதவருக்கு அவித்தியா வாசனை நீங்காது ஆகாயத்தில காணப்படும் "நீலம்" போல் "மாயாவி" என்கிற ஜாலவித்தையாகும். ஜாலவித்தை பொய்; ஸ்ரீ வித்தை மெய். ஆகாயத்தில் தோன்றும் நீலநிறம் உண்மையாக அங்கேயில்லை. ஆனால் தூரதிருஷ்டி லக்ஷண விசேஷத்தால் ஜோதிமயமானது நீர்ஜோதியாகத் தோன்றுகிறது. நீல நிறம் இருளின் ஆரம்பம். இருள் முற்றில் அது கறுப்பாகும். நீலம் என்பது ஜோதிவர்ணங்களில் ஒன்று. கறுப்பு ஜோதிவர்ணங்கள் ஒன்றுமில்லாதது. கண்ணுக்குப்புலப்படும் ஜோதிவர்ணங்கள் பிரதமத்தில் மூன்றுள. அவை:—சிவப்பு (red), மஞ்சள் (yellow), நீலம் (blue). இவைதானே சூரியரஸ்மியின் இந்திரவில் (rainbow) என்கிற வானவில் நிறங்கள் ஏழுமாகப் பரிணமித்துக்காட்டும். அந்த ஸப்தவர்ணங்களை சூரியபகவான் இரதத்தையிழுக்கும் ஏழுகுதிரைகளாகச் சொல்லுவர். அந்த வர்ணங்கள் ஆகாசத்தில் தோன்றுகிற முறையை வெளிப்பிரகாரத்திலிருந்து உள்நோக்கில், Red=சிவப்பு; Orange=காஷாயம்; Yellow=மஞ்சள்; Green பச்சை; Blue=நீலம்; Indigo=கருநீலம்;

† பழக்கம் என்பது 'வழக்கம்' என்று வந்தது.

Violet=ஊதா. இதற்கப்பாலுள்ள ஜோதிவர்ணம் கண்ணுக்குப் புலப்படாதாயினும் புகைப்படமெடுப் பதில் (Photograph) உபயோகப்படுகிற "Chemical rays" என்று சொல்லும் அதிரிசிய சூரியரஸ்மியினால் ஜோதியின் விலாஸம் கண்ணுக்கெட்டாத தூரம் செல்லுகிறதென்றுதெரிந்துகொள்ளலாம். சிவப்பு உஷ்ணதிக்கத்தினால் "White heat" என்கிற வெண்ணிறம் பெற்றுமாறும். இப்படியாக புலனறிவுக்கெட்டாத மனோசக்தியினாலே அறியக்கூடிய விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. மனம் என்பது ஜடவஸ்துவாதலால், மனோசக்திக்கு ஆதாரபூதமாயுள்ள அறிவு அதன் மூலமாகப் பிரவிருத்தித்து புலன்பொறி யறிவுதானாகும். அந்த "அறிவு" தானே அறிவானுக்குக் கருவி. அதைக்கொண்டு அறிபொருள் தன்னை 'அறிவான்' அறிகிறான். "அறிவான்" என்றாலும் "ஆத்மன்" என்றாலும் ஒன்றே.

மனம்படியப்பெற்றால் அது "ஆரியன்" என்கிற தெய்வப்புரவியாகி, தேசிங்கு ராஜனுக்குக் கிடைத்த "பாராசாரிக்" குதிரைபோல் அவனை எங்கும் கொண்டுபோகும். மனாகாசத்தில் சஞ்சரிப்பவனுக்கு ஆகாயரதமேன்? அவனுக்குத்தான் "தீர்க்கதரிசி"="பூர்ணப் பார்வையுள்ளவன்" என்றுபேர். அந்தக் குதிரைசவாரி செய்ய அதை "வாரிப்பிடிக்கும் வகையறிந்து" அதன் மேலேறவேண்டும். வகையறியாது ஏறுவோரை அது துள்ளிக் கீழே தள்ளிவிடும். வகையறிந்து வாரிப்பிடித்து சவாரி செய்வோரை அது தெய்வலோகத்தில் கடவுள் முன்தானே போகவேண்டுமானாலும் அங்கே கொண்டுபோய் விடும். ஔவையார் இந்தப் பரியேறியே சோழனுக்குமுன் இந்திரலோகம் சென்றார்.

"ஆரியன் அல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறிவாரில்லை:
சூரியநாதன் குருவினருள் பெற்றால்
வாரிப்பிடிக்க வசப்படுந்தானே.

"ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே."

அரசர் பிரதிநிதியவர்கள் "the power of concentration" என்று சொன்னது குதிரையை வசப்படுத்தி ஒருவழிப்பட்டு நடக்கச் செய்தலுக்கொப்பாகும். இதற்கு "வாசிவசம்" என்று பேர். வாசியென்றால் குதிரை; பிராணனுக்கும் அதுவே பேர் பொருந்தும். சவாரி செய்வான் ஒருவழி யிழுக்க, குதிரை ஒருவழி யிழுத்தால் சவாரி நடப்பது எப்படி? அப்படிப்போல, அறிவான் ஒன்றைநினைக்க, மனம் அதை நழுவவிட்டு குரங்கு கிளைபற்றிக் கிளை தாவுவது போல் "மற்றொன்று மற்றொன்றை" நினைத்து ஓடிக்கொண்டிருந்தால் அறிவான் அதைக்கொண்டு தான் நினைத்ததொன்றை நீள நினைந்தறிந்து "நினைத்தது முடிக்கும் ஆற்றல்" என்னும் சங்கல்பசித்தி பெறுவது எப்படி? குதிரைசவாரி இனிது நடக்கவேண்டுமாயின் சவாரிசெய்வோன் இஷ்டமும் குதிரையின் இஷ்டமும் ஒன்றுபட்டு "பாலோடு பால் கலந்தாற்போல" பேதமறக்கலத்தல் வேண்டும். இதைத் தான் அரசர்பிரதிநிதியவர்கள் "the power of assimilation" என்று சொன்னார். இந்த இரண்டு சக்திகளும் சித்தித்துவிட்டால், நல்ல குதிரையும் அதை வசப்படுத்தி நடத்தும் சக்தியும் வாய்ந்தவன் எப்படி நினைத்தவிட மெல்லாம் சவாரி போகலாமோ அப்படிப்போல் "ஏகாக்ரசித்தமும்" அதுதவாரா சித்திக்கும் "யோகஸம்யமம்" என்கிற "நினைத்தது முடிக்கும் ஆற்றலும்" வாய்ந்தவன் உலகில் எதையும்செய்ய வல்லவனாகிறான். இந்த இருசக்திகளைப் பெறுதல் தானே வித்தியா ஸாதனம். இந்த ஸாதனங்கொண்டு ஸர்வகலைகளையும் கற்றுவிடலாமாதலால், இச்சாதனாதாரமா யிருக்கும் யூனிவர்ஸிடிக்கு "ஸர்வகலாசாலை" என்று உபசாரவழக்கில் பேர் வழங்கலாயிற்று. ஸர்வகலாசாலையில் படிக்கும் மாணாக்கர் ஸர்வகலையும் கற்றவர்களில்லை



யென்பது ஸ்பஷ்டம். ஆனால் ஸர்வகலைகளையும் கற்பதற்குச் சாதனமா யமைந்துள்ள "the power concentration and assimilation" என்கிற மனோசக்திகள் உண்டாகப் போதிக்கும் க்ஷேத்திரமா யிருத்தலாலும் அந்த சாதனங்கொண்டு ஸர்வகலைகளையும் கற்றுணர்வது சாத்தியமாதலாலும் "க்ஷேத்திர க்ஷேத்திரஜ்ஞ" விசேஷத்தாலே யூனிவர்ஸிடிக்கு ஸர்வகலாசாலை யென்று பேர்வழங்கப் பெற்றது. போதகாசிரியர் இல்லாத கலாசாலை நாதனற்ற மங்கை யழகுபோல் பயனற்றதாகும். இந்தியாவிலுள்ள ஸர்வ கலாசாலைகளெல்லாம் போதகாசிரியரின்றி பரீக்ஷைகள்மட்டும் நடத்திவந்தன. அது சரியல்லவென்று "யூனிவர்ஸிடி" போதகாசிரியரோடு கூடினனதாக விருக்கவேண்டுமென்று புதிய ஏற்பாடு உண்டுபண்ணி அதற்காகப் பொருளுதவியும் செய்து வருகிறார்கள்.

பிரதம பாடசாலைகளில் பிள்ளைகளெல்லாரும் எண்ணெழுத்துக்கணக்குப் பயின்று அக்ஷரவாசனை யுள்ளவர்களாகிறார்கள். அதாவது, எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகிறார்கள். அதற்கு மேலுள்ள உயர்தர பாடசாலைகளில் இரண்டாம்படியான "வித்தியாப்பியாஸம்" நடந்துவருகிறது. அதாவது, வித்தியா ஸம்பன்னனாவதற்குவேண்டிய மனப்பழக்கம் போதிக்கப்பட்டு வரவேண்டும். இது காரியத்தில் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் "Secondary education" என்று சொல்லும் வித்தியாப்பியாஸத்தின் இரண்டாம்படி, "மனப்பழக்கம்" என்கிற சாதகம் பெறலையாம். இந்த சாதகம் பெற்றவர்கள் மூன்றாம் படியாக ஸர்வகலாசாலையில் பிரவேசித்து அங்கே போதிக்கப்படும் "Specialised Studies" பிரத்தியேகமான விசேஷ பாடங்களைப் பூரணமாய்க் கற்பதற்கான சாதனங்களால் "ஏகாக்கிர சித்தமும் நினைத்தது முடிக்கும் ஆற்றலென்கிற யோகஸம்யமும்" பெற்று ஸர்வகலைகளையும் கற்க வல்லவர்களாகிறார்கள். இதுதான் ஸர்வகலாசாலைப் படிப்பின் நோக்கமும் அர்த்தமும் ஆகும். "கல்விகரையில" என்றதனால் எல்லையற்றுக் கிடக்கும் சமுத்திரம்போலுள்ள வித்தியா ஸாஹரத்தைக் கடந்துபோதல் எவருக்கும் சாத்தியமில்லை. ஆனால் மனதை ஒருவழிப்படுத்தி (ஏகாக்கிரப்படுத்தி) சிக்ஷை தீக்ஷைகளால் (Means of discipline & realisation) "சித்தவிருத்தி நிரோதம் செய்து"—அதாவது மனதையடக்கி யாளக்கற்று, குதிரை சவாரி செய்வோன் குதிரையை வசப்படுத்தி யாள்வதுபோல் மனதை வசப்படுத்தி இஷ்டம்போல் நடக்கப்பழக்கி யாண்டுவந்தால் வித்தியாஸாஹரம் என்கிற கரையிலாக் கல்வியென்னும் பெருநிதியத்தில் எதை வேண்டுமானாலும், எல்லாவற்றையும்வேண்டுமானாலும் பெற்றனுபவிக்கலாம். "மனமாயை மாயை" என்றார்; ஆதலால் மனதினுடைய மாயா ஜாலத்தையறிந்து அந்த மாயையை வென்றவர்களுக்கு உலகில் கிடைத்தற் கரிதொன்றுமில்லை. ஆதலால் இப்படிப்பட்டவர்கள் "ஜகத்பிரஸித்தர்களாய்" தம்முடைய எண்ணங்களையும் உயர்பாவங்களையும் கொண்டு உலகத்தையே மாற்ற வல்லவர்களாவார்கள். இவர்கள்தான் கல்வியின்பயனைப் பூரணமாய்ப்பெற்ற உண்மை "அடியார்கள்." அவர்கள் அடிமை பூண்டொழுகுவது ஸர்வ தயாபரனாகிய கடவுளுக்கேயாதலாலும், அவர்களுக்குச் சொந்தமாக ஆகவேண்டிய தொன்றின்றி எல்லாவற்றையும் கடவுளுக்கே யர்ப்பணம் செய்துவிட்டு அவருடைய வரப்பிரஸதமொன்றே யெல்லாமளிக்கும் சிந்தாமணியென்று அதைப் பெற்றுள்ள சித்தர்களாக விருப்பதாலும் "சித்தன் போக்கு சிவன்போக்கு" என்கிற மேலோர் வசனம் பழமொழியாக வழங்குவதாயிற்று. சித்தன் சிவன் வழிப்பட்டால், அத்தன் போகும் வழியென்ன? என்று கேட்கலாமே! அதற்கு மறுமொழியாக 'அத்தன்போக்கு

அதேபோக்கு" என்று செப்பினர். இதன் உண்மையை இப்பொழுது நடக்கும் பாரதப் போரில் பார்க்கக்காணலாம். இதை நன்றாக விளக்கி நமது ஆப்தநேசர் மிஸ்டர் எச். ஓ. டி. ஹார்டிங் அவர்கள் விவேகசிந்தாமணி யுத்தகாண்டத்துக்கு இங்கிலீஷில் முன்னுரை யொன்றெழுதி யிருக்கிறதை அப்படியே பிரசுரித்திருக்கிறோம். அதை ஏகாக்கிர சித்தத்தோடு படித்து அதனுண்மையையுள்ளபடி கிரகித்து அவருடைய வாக்கு விசேஷத்தின் பொருளை "விவேகசிந்தாமணி யுத்தகாண்டத்தில்" தானே அதை உள்ளுணர்வோடு வாசித்துச் சிந்தித்து சிரவணமநந நிதித்தியாஸன முறையால் அதன் உட்பொருளை யுணர்வார்க்கு உள்ளபடி "அத்தன்போக்கு அதே போக்கு" என்பதின் உண்மை தன்னாலே விளங்கும். ஜெர்மன் கெய்ஸர் நினைத்ததென்ன? அவர்செய்த சூழ்ச்சியென்ன? அவையெல்லாம் காரியத்தில் தடுமாறி நடந்ததென்ன?- இவையெல்லாம் ஆர்ந்தமர்ந்து பரியாலோசனைசெய்து உண்மையை உணர விரும்புவோருக்கு பகவான் பலதுறையிலும் குரு-மூர்த்தமாய் அவதரித்து அகத்திலும் புறத்திலுமிருந்து உண்மையுணரப் போதிப்பார்: ஆதலால்தான் அவருக்கு "நடராஜர்" என்றுபேர் வந்தது. அவரது திருவம்பலக் கூத்தைத் தரிசித்தவர் ஒருவர்,—

"நன்றிது ஆட்டம் நன்றிதுகூத்து, நன்று
நன்றிது நடனம்!
அங்குமிங்கும் எங்கும் கண்டிலேன் இதுவொரு
அதிர்சயம் காண்மினோ!
ஒன்றினின்றன் றுணர்வழிந் துள்ளொளி
யானபின்
அங்குமிங்குமெங்கு மிதுவலால் வேறொரு
அதிர்சயம் காண்கிலேனே!"

—என்று நன்றாகப் பாடியிருக்கிறார்.

## "THE GOAL OF LEARNING," AND "THE NEED OF INDIA."
### "At the Calcutta University Convocation."
### "வித்தியாலக்ஷியமும்" "இந்தியாவின் தேவையும்."

"The path is hard and stony and it is only by incessant toil and strenuous efforts that the goal of learning can be reached. It is not in the backwaters of the University life but in the full stream of mental activity and intellectual competition produced by contact with greater minds that the cultivation of the intellect can be perfected. There are opportunities which present themselves during your University career. To reap the full benefit of your residence at the University you must strive for concentration in your ideas and assiduity in your studies. At the same time there is plenty of room for enjoyment and toil brings with it its own reward, its own pleasures and happiness. Those who aim at reaching the highest plane must live accordingly and must look for their pleasures and enjoyment in the lighter side of intellectual research.

Do not forget that the night cometh when no man can work. So also with character, without which learning is of no avail to secure success in life. *The precepts and principles of character can only be inculcated from earliest childhood and cannot be taught, though they May be inspired by noble examples.* As was said recently by a great English statesman, you cannot have a class of character or a class of morals, but you can imbue individuals with the tone and atmosphere of your Universities and your Professors. *It is character in combination with learning that makes a man the man of whom the State needs so many, and for whom the demand is unfortunately far greater than the supply.* Man is as he made himself; man will be as he makes himself. It is true that external circumstances may influence the development of a man. Nevertheless his ultimate formation depends largely upon himself and in his daily life his determining his own future and what sort of man he shall be. The highest code of ethics and chivalry



embracing honour, loyalty, uprightness and devotion to duty for duty's sake are qualities that must be cultivated from infancy and a noble character creates by noble deeds a source of inspiration and provides an example for future *emulation*. These are the men who succeed in the world's rivalry, and it is such men that I would wish to see trained and developed. In this great University. India has need of every one of such men and the need grows greater every day."—*H. E. Lord Hardinge at the Calcutta University Convocation.*

---

## "வித்யா லக்ஷியமும்" "இந்தியாவின் தேவையும்."

*கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅ ரெனின்.—திருக்குறள்.*

இந்தக் குறளடியில் திருவள்ளுவநாயனார் கல்வியின் பயனையும் வித்யாலக்ஷியத்தையும் ஒருங்கே தெரிவித்துள்ளார். இதையே நமது அரசர்பிரதிநிதியவர்கள் கல்கத்தா ஸர்வகலாசாலை மாணவர் கூட்டத்தில் அந்த யூனிவர்ஸிடி கான்வொகேஷன் காலத்தில் அவர்கள் மனதிற்பதிய வற்புறுத்திக்கூறினர். காலஞ்சென்ற கனம் மிஸ்டர் கோபால கிருஷ்ண கோகலேயவர்கள் ஞாபகார்த்தம் கூடப்பட்ட ஷெரிப் மீட்டிங்கில் பேசிய கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமிஐயர் அவர்களும், ஸர் எஸ். சுப்ரமணியஐயர் அவர்களும், கனம் ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்களும் இக்கருத்து ஒன்றையே அவரவர் மனோபாவப்படி வற்புறுத்திக்கூறினர். உதாரணமாக கனம் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமிஐயர் அவர்கள் மிஸ்டர் கோகலேயவர்களுடைய குணவிசேஷங்களையும் அவர் செய்த பல வேலைகளையும் எடுத்துச் சொன்னபொழுது இந்தியாவுக்குழைக்கவென்று அவர் ஏற்படுத்திய "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடி"யைக்குறிப்பிட்டு அதையே மிகவும் மேலானதாக மதித்துப் பேசினர். அவர் சொன்னதின் கருத்து என்னவென்றால்:—

"மிஸ்டர் கோகலே இந்தியாவின் தற்கால ஸ்திதியை உன்னி இத்தேசத்தில் ஆத்மரக்ஷணார்த்தம் ஜீவன்முக்திசித்திபெறவென்று பாடுபட்டுழைக்கும் உழைப்பும் அது சம்பந்தமான சிக்ஷாதீக்ஷைகளும் தேச க்ஷேமத்துக்கு உழைப்பதில் உபயோகப்படுத்தப் பெறவேண்டுமென்று நினைத்தார். நினைத்தது முடிக்கும் ஆற்றலுள்ள அவர் தாம் எண்ணினதை நிறைவேற்றவென்று "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடியை ஸ்தாபித்தார்." அவருடைய சொந்தவாக்கு இது:—

"He (MR. GOKHALE) felt that the circumstances of the country required a diversion of the religious zeal which too often spends itself on seeking the salvation of the individual soul into channels of social and economic endeavour and uplifting of the people in the moral, material and political planes of life."

இந்த ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடியில் சேருகிறவர்கள் யோக்யதையை மிஸ்டர் கோகலேயவர்கள் தானே அந்த ஸொஸைடியின் விதிகளில் சொல்லியிருக்கிறபடி பார்த்தால் ஜீவன்முக்தர்களன்றி மற்றவர்களுக்கு அந்த யோக்கியதை பூரணமாய் வித்திப்பது ஸாத்தியமில்லையென்று நன்றாகச் சொல்லலாம். அவர் சொல்லியிருக்கும் யோக்கியதாம்சங்களைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். முதலாவது தேவை என்னவெனில்,-

(1) "A fervant patriotisin which rejoices at every opportunity of sacrifice for the motherland."

"க்ஷேத்ரமாதாவாகிய தேசத்துக்குழைப்பதில் தன்னைக்கொடுக்க நேரிடும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் சந்தோஷமாய் உடல் பொருளாவியையும் கொடுத்துழைக்க உள்ளமுவந்து பொங்கும் தேசாபிமானம் வேண்டும்." இது தான் பிரதமத்தில் வேண்டும். இந்த யோக்கியதையில்லாதவர்கள் அந்த ஸொஸைடியில் சேர அதிகாரிகள் ஆகமாட்டார்கள்.

இதிலே "Motherland" என்று சொல்லியிருக்கிறதிலிருந்து பகவான் உபதேசித்துள்ள

க்ஷேத்ரக்ஷேத்ரகஜ்ஞ விபாகயோகம் கைவந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு "Mother land" "க்ஷேத்ரமாதா" என்கிற பதார்த்தத்தின் லக்ஷியார்த்தம் இன்னதென்று தெரியவரமாட்டாது. இந்தியாவின் "Collective life" "சமஷ்டி பாவம்" உள்ளபடி ஸித்திக்கப்பழகுவது உண்மையான யோகசிக்ஷைபாலன்றி மற்றபடி சித்திக்காது. இது முக்கியமாய் கவனிக்க வேண்டிய முதல் அம்சம்.

இரண்டாவது "தன்னைக் கொடுப்பதில்"—"Opportunity of Sacrifice"—உவகையும் உற்சாகமும் கொள்ளும் மனோபக்குவம் அஹந்தையறிந்து அஹங்காரத்தை வென்றவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு சித்திக்காது. "தேசாபிமானம்" என்று சொல்வது இரண்டுவிதம்: "என்தேசம்" என்று அஹங்கரித்து துரியோதனுதியரைப்போல் எல்லாம் என்னுடைய பேரும் கீர்த்தியும் விளங்கவே ஏற்பட்டுள்ளது என்று நினைக்கும் பாவனம் ஒன்று. இதனால் அனர்த்தம் விளையுமேயன்றி வேறொன்றும் சாசுவதமான பயனில்லை. துரியோதனனைப் போல் ராவணன் பத்மாசுரன் முதலாக அழிந்தவர்களெல்லாம் அஹங்காரத்தையடக்கியாள முடியாமையாலேயன்றி வேறொன்றினுமில்லை. 'மனமாயை உள்ளமட்டும்' அஹங்காரக்கூத்து ஓயாது. மானமாயையை வெல்வது தான் மஹாகஷ்டம். மனமாயையை வென்றுவிட்டால் லோகமாயை தானே நீங்கிவிடும். சமஷ்டி வியஷ்டிபாவங்கள் அப்பியாச பேதத்தை யுணர்த்துமேயன்றி அந்தரங்க பேதம் அவற்றில் ஒன்றுமில்லை. அண்ட பிண்டங்களின் வேற்றுமை உருவமட்டிலன்றி தத்துவத்தில் வேற்றுமை யொன்றுமில்லை.

மற்றொரு "தேசாபிமானம்" உண்மையில் "அபிமானம்" அல்ல—அதாவது ஆசாபாசப் பற்றுதலோடி கூடியதல்ல. ஆனால், ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்தருளியுள்ளதுபோல்,—

"தந்ததுன்தன்னைக் கொண்டதென்தன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்!"—என்று அபேதபாவனுசித்தியால் தன்னைக் கொடுத்து தேசமெல்லாம் தானுகியுள்ள நிரஹங்கார நிர்மோக இச்சை. இதுதான் உண்மையான அன்பு. உண்மைத்தேசாபிமானம் தன்னைக் கொடுத்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு சித்திக்காது. தன்னைக்கொடுத்தவர்களுக்கு ஈசுவரனுகிய க்ஷேத்ரஜ்ஞன் தன்னையே கொடுக்கிறனுகையால் அவர்களுக்கு க்ஷேத்திரவாஞ்சையுண்டாவது உயிருக்கு உடலினிடத்துள்ள வாஞ்சை போல் சகஜமாய் உண்டாகும். ஈசுவரன் அஹங்காரம் நீங்கப்பெற்றவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் "தூராதிதூரனு"யிருக்கிறன். தன்னைக் கொடுத்தவர்களுக்கோ அவன் "அந்தமொன்றில்லா ஆனந்தம்" அளிக்கிறன். இந்த ஆனந்தஸாஹரத்தில் விஷயசுகம் எல்லாம் மழைத்துளிபோல் மறைந்துவிடுகிறது. ஆகையால் அவர்கள் தனக்கென்று ஒன்று வேண்டிச்செய்ய நிமித்தமில்லை. எல்லாம் பரோபகாரமாகவே செய்து உள்ளம் பொங்கியெழுந்த உவகையில் துன்பங்களையெல்லாம் இன்பங்களாகமாற்றியனுபவிப்பார்கள். காலஞ்சென்ற மிஸ்டர் டப்ளியூ. டி. ஸ்டெட் (W. T. Stead) அவர்கள் "Only Christs can save the World" என்றுசொல்லி உலகுக்குழைக்கிறவர்கள் உண்மையில் உழைக்கக்கற்றவர்களாகவிருக்கவேண்டுமென்று ஆத்மரக்ஷணமே லோகரக்ஷணத்துக்கு இன்றியமையாத யோக்கியதையென்று வற்புறுத்திக்கூறி அந்த வழியில் தானே அவரும் உழைத்து வந்தார்.

ஒருவன் தான் நீஞ்சக் கற்றுக்கொள்வதில் எடுத்துக்கொள்ளுகிற பிரயாஸையை ஆற்றோடு போகிறவர்களைக் காப்பாற்றுவதிலுபயோகிக்க வேண்டுமென்று சொன்னல் அதில் எவ்வளவு அர்த்தமிருக்கிறதோ அவ்வளவுதான் ஸ்வாத்மரக்ஷணுஸித்தி பெறுதவர்கள் லோகரக்ஷணர்த்தம் உழைக்கவேண்டுமென்று சொல்லும் வசனத்திலுண்டு. "கஞ்சி வரதப்பா!" என்றால் "எங்குவரதப்பா?" என்று கேட்கிறவன் உலகரக்ஷணர்த்தம் உழைப்பதெப்படி? இது நிற்க,



மிஸ்டர் கோகலே ஏற்படுத்திய ஸொஸைடியில் சேருகிற அதிகாரிகளின் இரண்டாவது யோக்கியதை யென்னவென்று சற்று விசாரிப்போம். அவர்களிடத்திலிருக்க வேண்டிய இரண்டாவது குணம்,—

(2) "A dauntless heart which refuses to be turned back from its objects by difficulty or danger."

"கஷ்ட நிஷ்டூரங்களையும் ஆபத்துகளையுங் கண்டு லக்ஷியத்தை விட்டுத் திரும்பாத தீரமுள்ள ஹிருதயமுடையவர்களாயிருக்கவேண்டும்."

இது அஹங்காரத்தை வென்று ஹிருதயசுத்தி லபிக்கப்பெற்ற தஹரோபாசனுஸித்தர்களுக்கன்றி மற்றவர்களுக்குப் பூரணமாய் ஸித்திப்பதே துர்லபம். இந்த இரண்டாவது அம்சத்திலும் ஸ்வாத்ம ரக்ஷகஸித்தி பெறுதவர்கள் அந்த ஸித்திபெற்றவர்களுக்கேயுரிய குணம் அமையப்பெறுவது எப்படியென்று தெரியவில்லை.

"அலையு மனத்தையடக்கின் அவனே ஞானி அதிசூரன்; அலையுமனத்தையடக்கும் அவனே யோகி அதிவீரன்"—என்று சொல்லியுள்ளார் பெரியோரும். "My mind to me a Kingdom is."—என்று ஆங்கிலேய பழமொழியும் இருக்கிறது. மனோராச்சியத்தை யடக்கியாளத் தெரியாதவன் தன்னைப்போல்மனமுடைத்தாய் மனோராச்சியமும் செய்யவல்லவர்களாயுள்ள லக்ஷம் கோடிக்கணக்கான ஜனங்களின் சமஷ்டி ஜீவனின் ஸ்வபாவத்தை யறிந்து அதன் யோக க்ஷேமத்துக்காக உழைப்பது எப்படி?

பணஉதவியைக்கொண்டு "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியாஸொஸைடியை" ஆதரவுசெய்து முன்னுக்குக் கொண்டுவர முஸ்தீபு செய்கிறவர்கள் இந்த உண்மையான மனோதத்துவங்களைச் சற்று ஆரத்தீர அமர்ந்து ஆலோசிக்க வேண்டியது அவசியமென்று தோன்றுகிறது.

மிஸ்டர் கோகலே யேற்படுத்தியுள்ள ஸொஸைடியில் சேர அதிகாரிகளானோர் அமையப்பெற்றிருக்க வேண்டிய மூன்றாவது குணம் இது:—

(3) "A deep faith in the purpose of Providence that nothing can shake."

இதை "ஈசுவரபக்தியில் திடம் பெற்றிருக்க வேண்டு"மென்று தமிழ்ப்படுத்தலாம்.

இந்த மூன்றும் இந்தியாவுக்கு உழைக்க வேண்டியவர்களுக்கு இன்றியமையாதிருக்க வேண்டிய "சாதனத்திரியம்" என்று சொல்லலாம். இது சங்கரபகவானுடைய "சாதன சதுஷ்டய"த்தில் 'மோக்ஷத்தில் ஆசை' யென்கிற ஒன்றைத்தள்ளி மற்றவற்றின் சித்தியை யுணர்த்துவதாயிருக்கிறது. இது அனுபவசித்தர்கள் செய் தந்திரமன்றி வேறொன்றுமில்லை.

திருவள்ளுவநாயனுர் தர்மார்த்தகாமமோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்கிற நாலு புருஷார்த்தங்களில் முதல் மூன்றையும் அவரது திருக்குறளில் பூரணமாய்ச் சொல்லிவிட்டு நாலாவதாகிய மோக்ஷம் அல்லது வீடு என்பதைப்பற்றித் தனியே ஒன்றும் சொல்லாது விட்டுவிட்டார். ஏன்? அவர் சொல்லியபடி அறம், பொருள், இன்பம் மூன்றையும் உணர்ந்தவர்கள் ஜீவன்முக்தர்களேயாவதால் அனுவசியம் என்று விடுத்தனர். அதே மாதிரியாக மிஸ்டர் கோகலேயவர்களுடைய "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடி" உண்மையில்ஆராயில் ஜீவன்முக்தர்கள் சங்கமாயிருக்க வேண்டியதாயிருக்க, ஜீவன்முக்தியையிகழ்ந்து "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடி" யைப்புகழ்ந்து அந்த சபை மெம்பர்கள் இந்தியாவின் சமஷ்டிஜீவனைக் கரையேற்றப்போகிறர்களென்பது "அசம்பாவித தோஷம்" என்கிற குற்றத்துக்கிலக்காகிறது.

கனம் மிஸ்டர் கோகலேயினுடைய எண்ணத்தை கனம் பொருந்திய அரசர்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் கல்கத்தா யூனி

வர்ஸிடி கான்வோகேஷனில் மாணவர்க்குச் சொன்ன புத்திமதிகளில் ஒன்றாகச் சேர்த்துக் கூறியிருக்கிறார். அதை "வித்யாலக்ஷியம்" என்கிற தலைப்பெயரிட்டு "இந்தியாவின் தேவையும்" அவர் சொல்லியபடி வித்யாலக்ஷியம் பெற்ற "ஜீவன்முக்தர்கள்" ஆகவேயிருத்தலால் அவர் வாக்குப்பொருள் பிரகாசதபடி விளங்க அதை அப்படியே ஆங்கிலத்தில் எடுத்து இதன் முகட்டில் அச்சிட்டிருக்கிறோம். "குழந்தை மனம்" உள்ளவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு முமுக்ஷுத்துவமும் அது துவாரா குருவருளால் ஜீவன்முக்திஸித்தியும் கிடைக்காதாதலால், பணமூட்டையைக்கொண்டு "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடியை" ஆதரிக்கக் கங்கணம் கட்டியிருக்கிறவர்கள் அவர்கள் பொதிபொதியாய்ப் பணம் சேகரித்து மலையாகக் குவித்தாலும் ஜீவன்முக்தி சாதனத்தை விட்டு இந்தியாவுக்குச் "சமஷ்டி சேவகம்" செய்யத் தக்கவர்கள் ஒருவர்கூட அகப்படமாட்டார்கள் என்று நிச்சயமாய் நம்பலாம். அகப்பட்டாலும் இகத்திலும் பரத்திலும் லக்ஷியம் வைத்துழைப்பவர்களின் லக்ஷியம் இரண்டுபட்டுப் போவதால் அவர்கள் யேசுநாதர் ஆதிசிஷ்யர்களில் உலகப் பிரசித்திபெற்ற ஒருவனைப் போல் உண்மைலக்ஷியம் தப்பி உலகுக்குபகாரம் செய்யப்போய் பழிபாவத்துக்கு ஆளாவார்கள். ஆகையால் வித்தியாலக்ஷியம் தவறாத படிப்புத் (மனப்பழக்கம்) தானே இகபரசாதனங்கள் இரண்டையும் பெற்றுய்ய நல்ல உபாயமாகும். பரத்தை நீக்கில் இகமும், இகத்தை நீக்கில் பரமும் இல்லை. இவ்விரண்டின் உறவையுள்ளபடியுணர்ந்தொழுகுவதே வித்யாலக்ஷியம். இந்த வித்யாலக்ஷியம் தவறாது படித்துத்தேறினவர்களே அரசர்பிரதிநிதி சொல்லியபடி "இந்தியாவின் தேவை"யாயிருக்கிறார்கள்.

## THE LATE Mr. GOKHALE.

"I do hope that with his death his influence has not departed. You will erect statues for him in the cities of India; you will found scholarships in his name and create endowments to his memory; but the best monument to his career will be that every young countryman of his should take to himself for his standard and his ideal the conduct and the character of the friend and the statesman whose loss we mourn to-day, *of him whose high endeavours were of inward light that made the path before him always bright.*" (The italics are ours).—Sir Harold Stuart at the Sheriff's meeting held in Madras on the 4th March 1915.

## THE LATE Mr. GOKHALE.

### காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே.

அரசப்பிரதிநிதி சட்டநிரூபண சபையில் ஒரு மெம்பரும், "ராயல் பப்ளிக்ஸெர்விஸ் கமிஷன்" சபையில் ஒரு மெம்பரும், ஸெர்வண்ட்ஸ் ஆவ் இந்தியாஸொஸைடித் தலைவருமாகிய கனம் மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோகலேயவர்கள் காலஞ்சென்றதைப்பற்றி யுண்டான பொது ஜன வருத்தத்தைத் தெரிவித்து அவருடைய ஞாபக சின்னம் ஏற்படுத்தவேண்டிச் சென்னையிலுள்ள பிரமுகர்கள் ஐரோப்பியர், இந்தியர், உத்தியோகஸ்தர்கள் மற்றவர்கள் எல்லாரும் சேர்ந்து கைபொப்பமிட்ட கோரிக்கைக்கிணங்கி சென்னை 'ஷெரிப்' அவர்கள் நாளது மார்ச்சு 4உ விக்டோரியா பப்ளிக் ஹாலில் ஒரு பொதுஜனக் கூட்டம் கூட்டினார். அச்சபைக்கு வந்திருந்தவர்கள் தொகைமிகுதிபற்றி ஹாலில் கூட்டம் கூடுவது சாத்தியமாகவின்றி அதற்கு வடபுறத்திலுள்ள மைதானவெளியில் கூட்டம் கூடினார்கள். கனம் பொருந்திய கவர்னர் அக்கிராசனாதிபதியாக விருக்க இசைந்தவர் சுற்றுப்பிரயாணத்திலிருந்ததால் வரக்கூடவில்லையென்று தெரிவித்துச் சமாசாரம் அனுப்பியிருந்தார். அவருக்கு அடுத்தபடியில் முதல் கௌன்ஸில்மெம்பராகவிருக்கும் கனம்



மிஸ்டர் பி.எஸ். சிவஸ்வாமிஐயரவர்கள் அக்கிராசனத்தை வகித்து மிஸ்டர் கோகலேயினுடைய குணாதிசயங்களைப்பற்றி விசேஷமாய் நன்குமதித்துப்பேசினார். அவர் "ஸெர்வன்ட்ஸ் ஆவ் இந்தியா ஸொஸைடி"யைப்பற்றிச் சொல்லியதைக் குறிப்பிட்டு "வித்தியாலக்ஷியமும் இந்தியாவின் தேவையும்" என்கிற தலைப்பின் கீழ் பிரஸ்தாபித்திருக்கிறோம். அவர் கனம் மிஸ்டர்கோகலேயினுடைய ஜீவியசரித்திரத்திலிருந்து நகரமாக்கள் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டிய படிப்பினையைப்பற்றிச் சொன்னது ரஸமாயிருக்கிறபடியால் அதைக் கீழே யெடுத்துரைக்கிறோம்.

முதலாவது, மிஸ்டர் கோகலே எந்த விஷயத்தைப்பற்றிப் பேசுவதானாலும் அதைமுற்றமுணர்ந்து முழுவதும் ஆராய்ந்துகற்ற பின்னரே அதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பார். அரைகுறைப் பேச்சு என்பதே அவரிடம் கிடையாது. எதைப்பற்றிப் பேசினாலும் ஆணித்தரமான வார்த்தைகளையே யெடுத்தாண்டு பேசுவார்.

இரண்டாவது, அவர் மதிவளர்வித்தையில் நிரம்பப்பழகினவர். ஆதலால் விசாலமான புத்தியும் எதையும் பாராதூரயோசனையோடுபேசும் பழக்கமும் பெற்றுள்ளார்.

மூன்றாவது, நிதானபுத்தி ஜாஸ்தி. எதையும் எண்ணித்துணியும் ஸ்வபாவமுள்ளவராதலால், துணிந்தபின் அவர் எதிலும் பின்வாங்குபவரில்லை.

நான்காவது, நிதானபுத்தியோடு நியாயம் தவறாமல் பேசும் பழக்கமும் அவருக்குண்டு. அது அவருடன் பேசுவது யாருக்கும் இனிமையாக விருக்கச்செய்தது. அவருக்கு விரோதமான அபிப்பிராய முடையவர்களிடத்தும் அவர்களுடைய மனோபாவத்தை யறிந்து பேசும் சக்தியும் அனுதாபசிந்தையுமுடையவராதலால் மனமறிந்துபேசும்சக்தி அவரிடம் விசேஷமாயுண்டு. இஃதோடெவ்விஷயத்தைப் பற்றிப்பேசினும்பேசுவோரை நேரில் மல்லுக்கிழுக்கும் ஸ்வபாவம் அவரிடம் கிடையவே கிடையாது. அவருக்கு விஷயமும் விஷயஞானமுமே பிரதானம். ஆளைக்குறித்துப் பேசும் வழக்கமே யவரிடம் கிடையாது.

ஐந்தாவது, எதையும் விதண்டாவாதம் செய்து தான் பிடித்ததேபிடியென்று வீண்சாதனை செய்யாமல் எதிரிக்கு விட்டுக்கொடுத்து "விட்டுப் பிடித்தல்" என்னும் வகையில் காரிய சாதனை செய்வதில் சமர்த்தர்.

ஆறாவது, ஸ்வயநயம்பாராட்டாது தன்னைக் கொடுத்துழைக்கும் குணவிசேஷம் அவரிடத்தில் உண்டு.

ஏழாவது, வாதத்தில் பிடிவாத சித்தமற்றவராயினும் ஆரத்தீர அமர்ந்து யோசித்து முடிவுக்கு வந்தபின் அவர் எண்ணித்துணிந்ததை ஒருக்காலும் மாற்றமாட்டார். இஃதோடு நினைத்தது முடிக்கும் ஆற்றலும் அவருக்குண்டு. இந்த குணங்களையெல்லாம் விசேஷித்துப் பேசிய பின் இவைகளைப்பார்த்து நடக்கப்பயிலவேண்டும் என்று சொன்னார்.

இந்த குணங்களெல்லாம்மேலானவைதான். ஆனால் "Worthy of the highest imitation" என்று சொன்ன இலக்கணம் அவைக்குப் பொருந்தாதென்பதை மட்டும் இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஏனெனில் குருவாக்குப்படி இந்த மேலான குணங்கள் ஹிருதயசுத்தியிலிருந்துண்டாகவேண்டும். "கேட்டுக் குலைக்கும் நாய்" ஒருபோதும் "கண்டுகுலைக்கும் நாய்க்கு" ஈடாகாது. "இன்னான் திருடவருகிறான்: இன்னான் யோக்கியன்"—என்று தெரிந்து கொள்ளும் சக்தி நல்லஜாதி நாய்களுக்குண்டு. இது பிறவிக்குணம். 'குலத்தளவேயாகுமாம் குணம்' என்றபடி ஒரு நல்லஜாதிநாயின் குணம், நாய்குலைப்பதைக் கேட்டுத் தானும் கூடக்குலைக்கும் (imitation) சுபாவமுள்ள எச்சில் பொறுக்கி நாய்க்கு வருமா? வராது! அஃதேபோல ஹிருதயசுத்தி மூலமாகப் பெறத்தக்க குணங்களை அந்த ஹிருதயசுத்தி லபிக்கப் பெறாதவர்கள் நடிக்கக் கற்றதனால் அவர்க

ளுக்கு அந்தக்குணம் அமைந்துவிடாது. அவருடைய நடத்தையைப் பார்த்து நாமும் அவ்விதம் ஒழுகப்பயிலவேண்டுமென்று உண்மையில் அவாக்கொண்டு அதற்கு வேண்டிய சாதகசாதனங்களைத் தேடுகிறவர்களுக்கு குருகடாக்ஷம் எப்படியும் கிடைக்கும். குருவென்றால்(அறியாமையாகிற) இருட்டைப்போக்குகிறவர். அதாவது, மனவிருளைப் போக்கி மனத்தெளிவையுண்டுபண்ணுகிறவர். பகவான் ஸர்வாந்தரியாமியாயிருத்தலால் எவற்றாலும் எல்லா விதத்தாலும் அவர் குருகடாக்ஷம் சாதிக்கவல்லவர்.

ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் மிஸ்டர் கோகலே காலஞ்சென்றதைப்பற்றி இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் இராஜ்யத்துக்கு முண்டான பெரு நஷ்டத்தைப் பற்றிப் பேசியதில் "சமஷ்டி-வியஷ்டிபாவம்" பற்றி கனம் மிஸ்டர் கோகலே வியஷ்டி பாவத்தில் அடைந்த சாதனை இந்தியா சமஷ்டி பாவத்தில் அடையப்பெற வேண்டுமென்று பேசினார்.

கனம் மிஸ்டர் கோகலே தூயசித்தமுடையவர். நல்ல வித்துவான். கற்றுத்தேர்ந்தவர். ஸ்வயராயம் பாராட்டாதவர், பொதுவிஷயங்களில் தூயஹிருதயத் தோடுழைத்தவர். அவர் குணசீலத்தால் பேரும் பிரக்கியாதியும் பெற்றவர். இதையெல்லாம் உணர்ந்து அவரிடம் நாம் பெருமதிப்பு வைத்துள்ளோம். ஆனால் இந்தியாவுக்கு லக்ஷியம் அவர்தான் என்று சொல்வது முற்றும் ஒப்பத் தக்கதாகவில்லை. இந்தியாவின் சமஷ்டி லக்ஷியம் ரிஷிகளால் அநுபவரீதியாகவும் சகஜாநுபவமாகவும்உணர்ந்தோதிச் சாதிக்கப்பட்டிருக்கிறது. உபநிஷத்துக்களெல்லாம் அந்த சமஷ்டி லக்ஷியத்தை யெடுத்தோதி முறையிடுகிறது. அதன் பெருமை தெரியாதவர்கள் "பால் ஆறாகவோடினாலும் நாய்க்கு நக்கித்தான் குடிக்கவேண்டு" மென்கிற பழமொழிப் பிரகாரம் அவர்களுடைய ஜீவ்யபாவ மொழியாது உயர்லக்ஷியத்தைக் குறைத்துப் பின்னப்படுத்திக் கூறினால் அது இந்தியாவின் "சமஷ்டி லக்ஷியம்" என்று மேலோரால் ஒப்பத்தக்கதாகாது.

அரசர்பிரதிநிதியவர்கள் "வித்தியா லக்ஷியத்தை"ப்பற்றி கல்கத்தா யூனிவர்ஸிடி மாணவர்களுக்குச் சொல்லிய ஹிதோபதேசத்தில் "இந்தியாவின் தேவை"யென்னவென்றும் "வித்தியாலக்ஷியம்"என்னவென்றும் காலதேச வர்த்தமானங்களுக்கிசைய நன்றாக வெடுத்துச் சொல்லியிருக்கிறார். "Character" என்று சொல்லும் "குணசம்பத்து" "Imitation" என்று சொல்லும் "நடித்தல்" சாதனையால் பெறத்தக்கதல்ல. அது தஹரோபாசனையால் ஹிருதயத்தை யுழுது பண்படுத்தி வித்துப் போட்டுப் பயிராகப் பயிர்ச்சிசெய்துவர வேண்டிய அம்சமாயிருக்கிறது. மிஸ்டர் கோகலேயவர்களுடைய குருவாகிய மிஸ்டர் ரானடேயவர்கள்தாமும் "குணசம்பத்து" "பார்த்து நடித்தலால்" பெறத்தக்க தென்று ஒப்பார். "கேட்டுக் குலைக்கிற" எச்சில் பொறுக்கி நாய் "மோப்ப மறிந்து" குலைக்கிற வேட்டைநாய் ஆகுமானால், பார்த்து நடித்தலால் குணசம்பத்துப் பெறலாமென்று சொல்வது ஒக்கும்.

ஸர் ஹாரல்ட் ஸ்டுவர்ட் அவர்கள் கனம் மிஸ்டர் கோகலேயவர்களைப்பற்றி அவருடைய குணவிசேஷங்களை யெடுத்துக் கூறிப் பேசியது மிகவும் ஒப்பத்தக்கதா யிருந்தது. அவர் காலஞ் சென்றதற்காக நாம் படும் துயர் உண்மையாயின் அவருடைய ஞாபகத்தை மனதில் வைத்து அவர் சென்ற வழிபற்றி சமஷ்டி "சேவைசாதனம்" கைப்பற்றி ஊருக்குழைத்து ஹிருதய சுத்திபெற்று பரோபகார சாதனம்பற்றி அதற்கு வேண்டிய சாதகசித்தர்களாய் சாதனைசெய்து வாழவேண்டும். இது தான் அவருக்கு நாம் ஏற்படுத்தக்கூடிய உண்மையான ஞாபக சின்னம். அவருடைய உருச்செய்தமைத்தல் அவர் பேரால் 'ஸ்காலர்ஷிப்புகள்' என்கிற வித்தியாசாதக நிதியமைத்தல் இவையெல்லாம் இந்த ஒரு ஞாபக சின்னத்துக்கு உபசாதனங்களே யன்றி உண்மையான ஞாபகசின்னமாகா.



## THE FALL OF PRZEMYSL.

## ப்ர்ஸ்மிஸல் கோட்டை பிடிபட்டது.

ப்ர்ஸ்மிஸல் (Przemysl) என்பது ஆஸ்திரியாவைச்சேர்ந்த (Galicia) மாகாணத்தில் ஒரு மிகவும் முக்கியமான அரண் செய்யப்பட்ட ஸ்தானம். இது அநேக ரயில்பாதைகள் கூடும் 'ஜங்ஷன்' ஸ்தானமாயிருக்கிறது. இந்தக் கோட்டையை ருஷியர்கள் யுத்த ஆரம்ப காலத்தில் காலிஷியாவின்மீது படையெடுத்துச் சென்றபோது முற்றிகை போட்டார்கள். இத்தனை காலமாக அது பிடிபடாமலிருந்து இப்பொழுது முற்றிகை போடப்பட்ட சைனியம் 130,000 ஊணின்றி வருந்தநேரிட்டதால் பிடிபட்டதாகத் தெரிகிறது. இந்த யுத்தத்தில் எத்தனையோ நவநவமான யுத்த ஏற்பாடுகளெல்லாம் வெளிக்கு வந்திருக்கிறது. கோட்டை கொத்தளங்கள் அரண்சாதனமென்பது வெகு காலமாகக் கொண்டுள்ள அபிப்பிராயம். ஜெர்மானியர் முற்றிகை போடுவதற்கென்று ஏற்படுத்திய புதிய பீரங்கிகள் கோட்டைகொத்தளங்களையெல்லாம் ஒரு நொடியில் நாசம்செய்யும் வல்லமை வாய்ந்ததாக விருக்கின்றனவென்பது வெளியாயிற்று. லீஜ்(Leige) கோட்டையின் முற்றிகை இந்தப் பெரிய முற்றிகை பீரங்கிகள் அவ்விடம் கொண்டுவரப்படும் வரையில்தான் தாங்கியது. அந்த பீரங்கிகள் வந்ததும் ஒருநொடியில் கோட்டைகளெல்லாம் தவிடுபொடியாகத் தகர்க்கப்பட்டுப் போயின. நாமூர் (Namur) கோட்டை அதிலும் சீக்கிரத்தில் பிடிபட்டது. ஆன்ட்வெர்ப் சிறிது காலம் எதிர்த்து நின்றும் கடைசியில் இந்த பீரங்கிகளுக்கு எதிர்த்து நிற்கமுடியாமற் போயிற்று. கோட்டை கொத்தளங்கள் யுத்தசாதனங்கள் என்று எண்ணியிருந்த எண்ணம் இந்தயுத்த நடபடிக்கையில் பாழாகப்போயிற்று. கோட்டைகளை நாலுபக்கமும் மதிள் சூழக்கட்டும் வழக்கம் பிரயோஜனமற்றதாக, பாரிஸ் அரண்முறையைப் போல் சுற்றியுள்ள வட்டாகாரமான வெளியில் இடை இடையே இடம் விட்டு கட்டப்பெற்ற கோட்டைகளும் அதற்கு வெளியில் "டிரெஞ்சுகளும்" — "அகழ்களும்" வெட்டி பெரிய பீரங்கிகளை மறைவிடமாக வைத்து ஓரிடமிருந்து ஓரிடம்போக லேசான ரயில்பாதைகள் அமைத்து, எதிரிகள் பீரங்கியை அண்டவிடாம லடிப்பதால் முற்றிகை தாங்கும் சாதனம் பயன் படுவதாகச் செய்யப் பெறலாம் என்பது ஸ்பஷ்டமாக வெளியாயிற்று.




ப்ர்ஸ்மிஸல் என்கிறபட்டணம் விஸ்துலாவின் உபநதியாகிய (San) ஸான் நதிதீரத்தின் கரையில் இருக்கிறது. அதேநதியின் கரையிலுள்ள ஜரோஸ்லா (Jaroslaw) வுக்குச் சிறிதுதென் கிழக்கே யிருக்கிறது. காலிஷியாவின் முக்கிய பட்டணங்களில் ஒன்று. அது இருக்குமிடத்தை மேலே காட்டியிருக்கும் படத்தில் காணலாம். இந்த யுத்தத்தில் நீடித்த காலம் முற்றிகைதாங்கிய பட்டணம் இது.

ருஷியர் இதைக் கடைசியாகப் பிடித்துக் கொண்டது. 'காலிஷியா'வில் அவர்கள் பிடித்துக்கொண்ட இடங்களை ஸ்திரமாக வசதி செய்துகொண்டிருக்க அனுகூலமாகும். அன்றி இந்தக் கோட்டையை முற்றிகை போட்டிருந்த ருஷியசைன்யம் வேறு இடங்களில் உபயோகிக்கச் சாதகமாகும். இங்கிருந்து ருஷியர் க்ராகோ (Cracow) பட்டணத்தைப் பிடிக்க யத்தனிப்பார்களென்று தோன்றுகிறது. ஆஸ்திரியா சைன்யம் பலபட்டடை ஜாதியார் சேர்ந்ததாக விருப்பதால் இந்த யுத்தத்தில் அவர்கள்பேர் விளங்கவில்லை. ஆனால் ப்ர்ஸ்மிஸல் முற்றிகையைத் தாங்கின சைன்யத்தின் வீரதீரம் இந்தயுத்த சரித்திரத்தில் பிரக்கியாதிபெற்று விளங்குமென்பதிற் சந்தேகமில்லை.

---

### "THE ORIGIN AND ISSUE OF THE WAR."
### "இந்த யுத்தத்தின் மூலமும் முடிவும்."

லண்டன், மார்ச்சு௴ 22உ.—ஆங்கிலேய அந்நியதேச மந்திரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே அவர்கள், "இந்த யுத்தத்தின் மூலமும் முடிவும்" என்னும் விஷயமாய்ச் செய்த பிரசங்கமொன்றில், பிரிடிஷார் பிரேரேபித்தபடி ஆஸ்திரியாவுக்கும் ஸெர்பியாவுக்குமுள்ள மனஸ்தாப வித்தியாஸங்களைத் தீர்க்கவென்று ஐரோப்பிய தேசாதிகாரிகள் சேர்ந்த 'கான்பரென்ஸ்' ஒன்று கூட, ஜெர்மனி சம்மதித்திருந்தால் இந்த யுத்தத்தினால் நேர்ந்துவரும் அபாரமான உயிர்நஷ்டம் பொருள் நஷ்டமெல்லாம் நேரக் காரணமிருந்திருக்காது: ஜெர்மனியர் பிரிடிஷார் தங்களிடம் அனுகூலசித்தமுடையவர்களாயிருப்பதையுணர்ந்தும் உணராதார்போல் சண்டைக்குக் கிளம்பினார்கள். இப்பொழுதுள்ளார் ஞாபகத்துக் கெட்டினமட்டும் ஜெர்மனியால் நேர்ந்த ஐரோப்பிய யுத்தங்களில் இது நான்காவதாகும். இனி இம்மாதிரி யுத்தம்செய்யும் சக்தியின்றி ஜெர்மனி யொடுங்கப் பெறும் வரையில் இந்தச் சண்டையைத் தொடர் பிடியாகப்பிடித்து நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். ஜெர்மனியின் கொட்டம் இத்தோடு அடங்கிவிட வேண்டுமென்பது முடிவான தீர்மானம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியே சாதிப்போம்" என்றார். கூட்டாளிகள் எல்லாரும் மனம் ஒத்துப் போர்செய்வதைப் பற்றிப் புகழ்ந்துபேசினர்.

---

### "VISCOUNT BRYCE ON INDIA."
### இந்தியாவைப்பற்றிப் ப்ரைஸ் பிரபு பேசியது.

லண்டன், மார்ச்சு௴ 19உ.—இந்தியாவிலிருந்து சென்ற சைன்யங்களின் விஷயமாய் லெப்டினென்ட் கர்னல் யேட் (Lt.-Col. Yate) அவர்கள்செய்த உபந்நியாச காலத்தில் விஸ்கௌண்ட ப்ரைஸ் (Viscount Bryce) அவர்கள் அக்கிராசனம் வகித்துப்பேசியதில் இந்தியாவின் ஜனங்களும் அரசர்களும் இந்த ஆபத்துக்காலத்தில் உடனிருந்துதவ இசைந்து இந்திய துருப்புகள் வெகு வீரதீரத்தோடு சண்டை செய்துவருவது ஓர் அற்புத சம்பவமென்றும் இனி இந்தியாவும் இங்கிலாந்தும் சமயோக்கியதைபெற்று அந்நியோந்நியமாக வாழ்ந்துவர ஆஸ்பதமுண்டாகுமென்றும் இதனால் பிரிடிஷ் ராஜ்யத்தில் இந்தியா முக்கிய ஸ்தானம்வகிக்க ஹேதுவுண்டாகலாமென்று எண்ண இடமிருக்கிறது என்றும் சொல்லிப்பேசினர்.

---



### THE POST-PUBERTY MARRIAGE BILL.

We have received the following note from the Honorable Mr. V. S. Srinivasa Sastriar, the Member in charge of the Post-Puberty Marriage Bill in the Madras Legislative Council. We repeat we shall be glad to publish the opinions of Indian Mothers who are in favour of the Bill and who wish to convince their sisters who are opposed to it.

"Triplicane, 9-3-15. Dear Sir, I am grateful for a copy of the *Vivcka Chintamani* for February containing articles on the Post-Puberty Marriage Bill now before the Madras Legislative Council.

Yours sincerely,

V. S. SRINIVASAN.

*To the Editor, Vivcka Chintamani, Lalitalaya,*
19, *Adam Street, Madras, S.*"

---

### ருதுமதிவிவாக மசோதா.
### சட்டநிரூபணசபையில் பிரஸ்தாபம்.

இதைப்பற்றிச் சென்ற பிப்ரவரி மாசத்துச் சஞ்சிகையில் எழுதியிருந்த விஷயங்களடங்கிய சஞ்சிகையொன்றை கனம் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்களுக்கு அனுப்ப அவர் அதைப்பெற்றுக் கொண்டு எழுதிய கடிதத்தை மேலே பிரசுரித்திருக்கிறோம். சென்ற பிப்ரவரி௴ 2-உ கூடிய சட்டநிரூபண சபை மீட்டிங்கில் கனம். மிஸ்டர் ஆர். வி. நரஸிம்ம ஐயரவர்கள் கேட்ட பல கேள்விகளில் ஒன்று பின்வருமாறு:—

"6-வது கேள்வி.—(a) கனம். மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்களுடைய ருதுமதி விவாகமசோதா சம்பந்தமாக கவர்ன்மெண்டாருக்கு பிரத்தியேகநபர்களிடமிருந்தாவது பொதுஜனசபைகளிடமிருந்தாவது அவ்விஷயமாய்க் கூடிய பொதுஜனக் கூட்டங்களிடமிருந்தாவது அவர்கள் அபிப்பிராயங்களைத்தெரிவித்து மனுக்கள் வந்துள்ளனவா?

(b) அப்படியானால், யார் யாரிடமிருந்து?

(c) எத்தனை மனுக்கள் யார் யார் அனுப்பியவை அதற்கு ஆதார அனுகூலமாக விருக்கின்றன? எத்தனை மனுக்கள் யார் யார் அனுப்பியவை அதற்குப் பிரதிகூலமாகவிருக்கின்றன?"

"6. விடை.—(A) 1915-ம் ௵ ஜனவரி௴ 26உ வரையில் பின் வருபவர்களிடமிருந்து அவர்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் மனுக்கள் வந்திருக்கின்றன.

(1) 1914 ௵ டிஸம்பர்௴ கோபிசெட்டிபாளையத்தில் கூடிய பொதுக்கூட்டத்தின் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ பி. சீதாராம அய்யர் அவர்கள்.

(2) சித்தூர்ஜில்லா சிறுத்தானூர் ஸ்ரீமான் மாத்வசித்தாந்த ஒன்னுஹினி சபையின் கௌரவகாரியதரிசி.

(3) குண்டூர் ஜில்லா கொள்ளூரில் 1915 ௵ ஜனவரி௴ 10உ கூடிய பொதுக்கூட்டத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ ஜெ. லக்ஷ்மி நாராயண சாஸ்திரிகள்.

(4) திருவல்லிக்கேணியில் 1915 ௵ ஜனவரி௴ 10உ கூடிய பொதுக்கூட்டத்தின் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ டி. ஆர். இராமச்சந்திர அய்யர் அவர்கள்.

(5) சிதம்பரம் தாலூக்கா தச்சக்காடு கிராமத்து ம-ா-ா-ஸ்ரீ பண்டிதர் ஆர். நடேச சாஸ்திரிகள் வகையரா.

(6) மலையாளம் ஜில்லா பாலக்காடு தாலூகா ஆதித்தியபுரம் கிராமத்தில்கூடிய பொதுக்கூட்டத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ எ. ஆர். நாராயண அய்யர் அவர்கள்.

(7) விசாகபட்டணம் உத்கால் சமாஜத்துத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ விக்கிரமதேவ் வர்மா அவர்கள்.

(8) நந்தியாலில் 1915 ௵ ஜனவரி௴ 1[illegible], 14-ந்தேதிகளில் கூடிய பொதுக்கூட்டத்த[illegible]வர் ம-ா-ா-ஸ்ரீ B. இராமா சாஸ்திரிகாரு.

(9) கஞ்சம் ஜில்லா உரியசமாஜத்துக் காரியதரிசி.

(10) 1915ஆம் ஜனவரி 1௦உ கும்பகோணத்தில்கூடிய பொதுக்கூட்டத் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.

இவைகளில் (6) இலக்க மிட்ட மனு அந்த மசோதாவுக்கு ஆதார அனுகூலமாக விருக்கிறது. மற்றவையெல்லாம் பிரதிகூலமாகவே யிருக்கின்றன. (7), (9) மனுக்கள் உரியா ஜாதியாருக்கு அந்த மசோதா நிபந்தனைகள் கூடாதென்று ஆக்ஷேபிக்கின்றன.

இம்மசோதா விஷயமாக ஹிந்துக்களில் பெண்களைப் பெற்ற தாய்மார்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். இதற்கு அனுகூலமான அபிப்பிராயம் கொண்டவர்கள் பிரதிகூலமாயிருப்பவர்கள் மனதைத் திருப்பி அவர்கள் வழிக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டால் அவர்கள் செய்முயற்சிக்கு அனுகூலமாக அவர்கள் எழுதுவதைப் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோமென்று மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்ற பிப்ரவரி வெளிவந்த அபிப்பிராயம் இந்தியமாதர் கோரிக்கைக்கிணங்க, கனம் மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்களுக்கும் சட்ட நிரூபணசபை மெம்பர்கள் தெரிந்து கொள்ளவேண்டியதன் பொருட்டு சட்ட நிரூபண சபை காரியதரிசி யவர்களுக்கும், *ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதாக அறிகிறோம்.

## "SOCIAL SERVICE COLUMN."

## "சமஷ்டிசேவை ஸாதனம்."

### THE MADRAS SOCIAL SERVICE LEAGUE.

*By the Boy-Secretary of "The Children's Day" Movement.*

சென்னை சமஷ்டிசேவை ஸாதன சங்கம்.

"We are all babies of the world in this sort of work though we may be young or old in age."—*Mrs. Whitehead, President of the Madras Social Service League.*

OUR MOTTO:—LIVE IN "HOPE," WORK IN "FAITH" & REALISE IN "LOVE."

"This is my prayer to Thee, My Lord,—
"Strike, strike at the root of penury in my heart.
"Give me the strength lightly to bear my joys and sorrows.
"Give me the strength to make my love fruitful in service.
"Give me the strength never to disown the poor or bend my knees before insolent might.
"Give me the strength to raise my mind high above daily trifles.
"And Give me the strength to surrender my strength to Thy Will with Love."—*Gitanjali.*

—*From the V. C. Children's Record Number.*

ஒரு தேசமானது முன்னுக்கு வரவேண்டுமென்றால் அது அதனுடைய சிறுவர்களை நன்றாகத் தேறப்பழக்குவதால் முடியுமேயன்றி வேறு எவ்வகையாலும் முடியாது. பாலர்கள் குழந்தை மனமுடையவர்கள்: அப்படியென்றால் கள்ளங் கபடற்றவர்கள். எப்படி ஒரு செடியானது அதனுடைய இளமைப் பருவத்தில் சரியாக நிமிர்த்தப்பட்டால் பிறகு கோணலா யில்லாமல் நேராக மரமாய் வளருமோ, அதுபோல, பாலர்களை இளமைப் பருவத்திலேயே சரியாகப் போதனைபண்ணி நல்வழியிற் பழக்கினால் அவர்கள் பெரியவர்களானதும் அதன்படியே நடப்பார்கள். அதனாலேயே "இளமையிற்கல், கற்றபடிநில்" என்று ஔவையாரும் சொல்லியிருக்கிறார். இளமையிலே கற்றால் தான் பெரியவனானதும் அதன்படி நடக்க முடியும். "கல்" என்றால் பள்ளிக்கூடத்தில் வாசித்துப் பரீக்ஷை தேறுவது மட்டுமல்ல,

* As we go to press, we find the following has been placed at our disposal:—The Secretary to Government of Madras in the Legislative Department, has written to the Honorary Secretary to the Social Service Branch of the Ananda Mission, acknowledging receipt of his letter forwarding the February issue of the "Viveka Chintamani," containing articles on the Post-Puberty Marriage Bill, with the intimation that it "will receive due attention."



உண்மைத் தாயாகிய ஜன்மபூமிக்கும் நம் சகோதரர்களாகிய இதரர்களுக்கும் தான் செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்ய அறிந்து செய்வதே கல்வியினழகு.

அக்கடமைகளைச் சரியாகச் செலுத்த அறிவு பிரதானம். அதற்கு அஸ்திவாரமாக இருக்க வேண்டுமென்றே துரைத்தனத்தார் மிக்க பணம் செலவழித்து பள்ளிக்கூடங்களைப் பல இடங்களிலும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால் அவைகளின் அஸ்திவாரம் "சரியாக இல்லை" என்பது பெரியோர்களின் அபிப்பிராயம். ஆயினும் பல பள்ளிக்கூடங்களிலுள்ள சில உபாத்தியாயர்களின் குணவிசேஷத்தினால் துரைத்தனத்தார்களின் எண்ணம் ஒருவாறு நிறைவேறிவருகிறது. போதனைமாத்திரத்தில் நிறைவேறிவரினும் அதை உணர உணர்ந்து அப்பியசியாமல் வீணாக்கிவிடும் மாணவர் பலர். ஆகவே பாலர்களில் சரியாக சிக்ஷைபெற்றுத் தேறுகிறவர்கள் சிலரே. அப்படி சிக்ஷை பெற்றுத் தேறினவர்களில் காலஞ்சென்ற ஸ்ரீமான் கோகலே அவர்கள் ஒருவர். ஆயிரக் கணக்கான பள்ளிக்கூடங்களில் படிக்கிறவர்களில் சரியாக சிக்ஷை பெற்றுத்தேறுகிறவர்கள் வெகு சிலர் என்றே நினைக்கிறோம்.

பள்ளிக்கூடங்களில் படிக்கும் இதரர்கள் அதை சோற்றுப்படிப்பாக பாவித்து வயிறு பிழைக்கிறவழியென்னவென்று அதையே பிரதானமாகப் பார்த்துக்கொண்டு போகிறார்கள். அதுகூடப் படியாமல் போகிறவர்கள் அநேகர். அவர்கள் தற்காலப்பள்ளிக்கூடச் செலவை உத்தேசிக்கில் ஏழைகள். பள்ளியிற் படிப்பதற்குப் பிடிக்கும் செலவு வரவர மிகவும் ஜாஸ்தியாய் வருகிறது.

வருஷாந்திரம் ஒரு பையனுக்கு ரூபா. 100 ஆகிறது. இம்மாதிரியாக அவன் 10, 15 வருஷங்கள் படிக்கவேண்டியிருக்கிறது. அப்படி செலவழித்துப் படித்தாலும் சிலர் தான் பலனடைகிறார்கள். ஆகையால் ஏழைகள் தகுந்த மனோசிக்ஷையில்லாமல் அவதிப்படுகிறார்கள். இந்தியா ஒரு வியவசாய தேசம். அதனுடைய பாக்கியமெல்லாம் வியவசாயமே. வியவசாயிகள் படிப்புமுதலிய சிக்ஷையில்லாததனால் தாங்களு சுகப்பட்டு இதரர்களையும் சுகிக்கச் செய்ய வழியிருந்தும் அதை அறிவில்லாமையினால் அறியாமல் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு சரியான வித்யாசிக்ஷை இனமாகக் கொடுத்து ஒழிவு நேரங்களில் பள்ளிப் போதனை செய்வதும், இந்தியாவின் சுபிக்ஷத்துக்குக் காரணமாகிய அதனுடைய சிறுவர்களை சரியாக சமஷ்டி சேவையில் பழக்குவதுமே சென்னை சமஷ்டிசேவை சங்கத்தின் கருத்து. மேற்படி சங்கத்தினுடைய வருஷாந்திரக்கூட்டமானது இந்த மார்ச்சு மாதம் 27-ந் தேதியன்று மாலை சென்னை பிஷப் அவர்களின் தோட்டத்தில் கூடிற்று. சங்கத்தினுடைய பிரஸிடெண்டாகிய மிஸ்ஸஸ் வொயிட்ஹெட் அவர்கள் அக்கிராசனம் வகித்தார். மேற்படி சங்கத்தின் வருஷாந்திர ரிபோர்ட்டானது படிக்கப்பட்டு இவ்வருஷத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிந்து நியமிக்கப்பட்ட பிறகு மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் சங்கம் செய்திருக்கும் வேலையைப்பற்றிப் பின்வருமாறு பிரசங்கித்தார்.

சென்னையில் பலசங்கங்கள் இருந்தபோதிலும் அவைகளில் சரியாக உழைக்கும் சங்கங்கள் சிலவே. அவைகளில் இது ஒன்று. இம்மாதிரி சங்கமொன்று இருப்பதே சிலருக்குத் தெரியாவிட்டாலும் இதை அறிந்தவர்களெல்லாம் இதை அங்கீகரித்து இதனுடன் உத்ஸாகத்தோடு உழைத்திருக்கிறார்கள்.

இச்சங்கத்தின் வேலையானது பின்வருமாறு பிரிக்கப்பட்டுச் செய்யப்பெற்று வருகிறது. அவைகளில்:—

1. ஆஸ்பத்திரிகளில் வியாதியால் பிடிக்கப்பட்டிருக்கும் வியாதியஸ்தர்களுக்கு படிக்கப் புஸ்தகங்கள், பத்திரிகைகள் முதலியவைகள் கொடுத்து இதர உதவி செய்கிறது ஒன்று. இராப்பள்ளிக்கூடங்கள் வைத்து ஏழைச் சிறுவர்களுக்கும் கூலிவேலை செய்பவர்களுக்கும் இனாமாகப் படிப்புச்சொல்லிக் கொடுக்கிறது மற்றொன்று. தாழ்ந்தாரைச் சீர்திருத்தி வாழவைக்கிறது. (Elevation of Depressed Classes). அவர்களுக்காக ஐக்கிய நாணய உபகாரசங்கங்கள் ஆரம்பித்து கடன் உடன்பட்டார்க்கு அதைத்தீர்க்க ஒத்தாசை செய்கிறது. இன்னும் இவை போல்வன. கடைசியில் சொன்ன கடனுதவிவேலை சில நாட்களுக்கு முன்தான் ஆரம்பிக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட கடன்களெல்லாம் சீக்கிரத்தில் திருப்பிக் கொடுக்கப்பட்டன. இது வரையிலும் அவைகள் சரியாக நடந்து வந்திருக்கின்றன. இவைகளோடுகூட, இவ்வருஷம் அனாதக் குழந்தைகளுக்கு ஒரு ரக்ஷகசாலை ஆரம்பிக்கப்படு மென்றும் சொன்னார். அவர், அங்கத்தினர்கள் உத்சாகத்தோடு உழைக்க வேண்டுமென்றும், அவர்கள் சங்கத்தைச் சேரும்பொழுது சில வாக்கு சபதங்கள்செய்ய வேண்டியிருக்கிறதென்றும், அவர் தானும் அப்படியே வாக்குசபதம் செய்திருப்பினும் அதன்படி நடந்ததில்லையென்றும், அவர்கள் அப்படியிராமல் அதன்படி நடக்க வேண்டுமென்றும், சங்கத்தின் வேலை நடப்பதற்கு அவர்களுக்கு ஒரு கட்டட மிருக்கவேண்டு மென்றும் சொல்லி சபையார் அவர் சொன்னதைக் கொண்டாடிக் கரகோஷம் செய்யப் பேசிமுடிக்கலானார்.

பிறகு கனம் மிஸ்டர் எம். ராமச்சந்திரராவ் அவர்கள் எழுந்து பேசினர். அவர் பேசியதின் சுருக்கம் இது:—

பம்பாயிலும் இம்மாதிரி சங்கமொன்று இருக்கிறது. அது பலதுறைகளிலும் இறங்கி உழைத்து வருகின்றது. இச்சென்னைச் சங்கமானது தான் செய்யப்போகும் வேலைகளைக் குறுக்கி, அவைகளைப் பூரணமாய்ச் செய்ய வேண்டும். இச்சங்கமானது குடியை நிறுத்த முயற்சி செய்யவேண்டும். சென்னையில் பல மதுக்கடைகளிருக்கின்றன. வருஷாவருஷம் குடியும் அதிலிருந்து சர்க்காருக்கு வரும்படியும் ஜாஸ்தியாய்க்கொண்டே வருகின்றது. சிலர் 'ஏழைகளுக்குச்செல்வமதிகமாய்விட்டது அதனால் குடியுமதிகமாய் விட்டது' என்று சொல்லுகிறார்கள். 1913-ம் வருஷம் வெளியான ரிபோர்ட்டில் ஹிந்துக்களில் 100-க்கு 25 பேர்கள் தான் குடிக்கின்றதில்லை: இதர 75 பேர்களும் குடிக்கிறார்களென்று சொல்லப்பட்டிருந்தது. குடியே கீழ்ஜாதிகளுக்கு கழுத்தறுக்கும் கத்தியாயிருக்கின்றது. ஆகையினால் இச்சங்கமானது குடிவிலக்கைப் பற்றி (Temperance Movement) உழைத்தால் நன்றாயிருக்கும்.

இரண்டாவது, இங்கு சிசுக்கள் மரணம் ஜாஸ்தியாயிருக்கிறது. மரண ரிபோர்ட்டுப்படி ஆயிரத்தில் 45-பேர் ஒரு வருஷம் கூட ஆகாத சிறு குழந்தைகள். இச்சிசு மரணங்களில் முக்கால்வாசிப்பேர் பின்வரும் காரணங்களாலிறந்தார்களென்று சொல்லப்படுகிறது.

அவைகள்:—

1. தாய்மார்களின் அறிவில்லாமை.
2. சீதோஷ்ண குளிர்காற்றுப்பட்டு நோவு கொள்ளல்.
3. கலப்புப்பால் முதலியன.

இதற்காக முனிஸிபாலிடியார் சுத்தமான பாலைக் குறைந்தவிலைக்கு விற்க 10 ஆயிரம் செலவிட்டு ஒரு 'டிபோ' ஏற்படுத்தினார்கள். ஆனால் அது சரியாக நடைபெறவில்லை. ஆகையினால் இச்சங்கமானது இவ்விஷயத்தையும் கவனிக்கவேண்டும். அவர்கள் தாய்மார்களுக்குப் போதிக்கவேண்டும்.



3. துரைத்தனத்தார் கீழ்ஜாதிகளுக்கு சுகாதாரத்தைப் பற்றிப் போதிக்க ஜாலவிளக்குப் படங்களெடுத்துக் காட்டச்சொல்லியிருக்கிறார்கள். நீங்களும் அப்படியே செய்ய வேண்டும்.

பிறகு மிஸ்ஸஸ் வொயிட்ஹெட் அவர்கள் எழுந்து பேசியதின் சுருக்கம்:—

நாம் வயதில் பெரியோர்களா யிருப்பினும் வாலிபர்களாயிருப்பினும் உலகத்தில் சமஷ்டி சேவை செய்யும் இவ்விஷயத்தில் சிறு குழந்தைகளே. நாம் பின் வருகிறதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

1. நாம் கல்வியைப் பெற்றிருக்கிறோம்.
2. இவ்வுலகத்தில் ஒரு பதவியை அடைந்திருக்கிறோம்.

இவ்விரண்டுமில்லாமல் கீழ் ஜாதிகளும் இதரர்களும் இருக்கிறார்கள். அவர்களின் உபயோகத்திற்காக நாம் நமது கல்வியையும், கனதனத்தையும், பதவியையும் உபயோகிக்க வேண்டும். இருக்கிறவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மேட்டிலிருக்கும் ஜலம் ஜலமில்லாமலிருக்கும் பள்ளத்திற்குப் போவது போலவும் பயிருக்குப் பாய்ச்சும் ஜலம் புல்லுக்கும் பாய்வது போலவும் நமக்கிருப்பதை இல்லாதவர்களுக்காக உபயோகிக்கவேண்டும். துரைத்தனத்தார் இதைச் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களால் ஒரு சமஷ்டியாகச் செய்ய முடியுமே யன்றி தனித்தனியாகச் செய்யமுடியாது. நாமே அதைச் செய்யவேண்டும். நாம் இவ்வருஷம் சுகாதார உத்தியோகஸ்தரான "ஹெல்த் ஆபீஸர்" கேட்டுக்கொண்டபடிக்கும் மிஸ்டர் ராமசந்திரராவ் அவர்கள் புத்திமதிப்படிக்கும் குடிவிலக்கு வேலையை எடுத்துக் கொள்ளுவோம். நாம் நமது கருத்தை நிறைவேற்றும் முறை இது:—

ஒரு தெருவையாவது ஒருகிராமத்தையாவது எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் நாம் பூரணமாக ஆராய்கிறோம். இங்கு மங்குமாய் எங்கும் ஒரு கருத்து மில்லாமல் உபந்நியாசம் செய்கிறதில்லை. அங்கத்தினர்கள் ஞாபகத்தில் முக்கியமாய் வைத்துக் கொள்ள வேண்டியது, தாங்கள் இவ்விஷயத்தில் சிறுவர்கள் என்றும் தாங்கள் ஒருவருடன் ஒருவர் கலந்து பேசி தங்களை ஊருக்குழைக்கப் பழக்கிக்கொண்டு இதரர்களையும் பழக்க வேண்டும் என்பதே.

பிறகு ம-ா-ா-ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் எழுந்து பேசிய விவரம் இது:— சிறுவர்கள் சரியாக நல்வழியிற் பழகுவதற்கு இதைப்போல் வேறு சாதனம் கிடையாது. சிறுவர்களுக்கு இருக்கும் உதவி சாதனங்கள் தங்களுக்கில்லை யென்று பெரியோர்களுக்கு வருத்தம். சிறுவர்கள் இம்மாதிரியே நல்வழியிலுழைக்கப் பழகல்வேண்டும். முதல் ஆரம்பகாலத்தில் ஸ்வாரஸ்ய மில்லாததாய்த் தோன்றினும் கடைசியில் மிகவு முபகார ஸாரமுள்ளதாயிருக்கும் பிறகு கூட்டம் கலைந்தது.

நாம் சிறுவர்கள். பெரியோர்கள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் உதவியைச் செய்வதற்கு வேண்டிய உண்மைப்பயிர்ச்சியை அடைய நாம் எத்தாலும் முயற்சிக்க வேண்டும். அப்படியே நம் சிறுவர்கள் முயற்சிப்பார்களென்று நம்புகிறோம்.

**The Vivekachintamani War Number.**

**A HOUSEHOLD NARRATIVE OF CONTENDING FOLKS**

IN THE GREAT WAR OF 1914

WITH AN INTRODUCTION BY

H. O. D. HARDING, Esq., I.C.S.,

Re-issued on behalf of the Social Service Branch of the Ananda Mission.

**Price Re. 1-2 by V. P. P.**

APPLY TO— **THE MANAGERS,**

*"Vivekachintamani"*

*19, Adam Street, Mylapore.*

## CHILDREN'S PAGE. சிறுவர்க்கான பக்கம்.

### பாலபோத சிக்ஷாசாதனம்.

ON SOCIAL INTERCOURSE.

நால்வர் முன்னிலையில் பேசவேண்டியவிதம்.

#### கேள்வியின் பெருமை.

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை"—

என்று கேள்விச் செல்வத்தின் பெருமையைக் கூறிய திருவள்ளுவர், அதே அதிகாரத்தில் அதன் பெருமையைக் கூறியிருக்கிறார்.

"எனைத் தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருக்குறள்.

கேள்வியில் பேசுதலும் அடங்குமாதலால் நமது சிறுவர்கள் நால்வர் முன்னிலையில் எவ்விதம் பேசவேண்டு மென்பதை இவ்விடம் விசாரிப்போம். நால்வர் என்றால் நான்கே பெயர்கள் என்பதல்ல; பலபேர் முன்னிலையிலாவது தன்னைச் சேர்ந்த பாடசாலைத் தோழர்கள் பலரின் நடுவேயாவது பொதுக் கூட்டங்களிலும் சபைகளிலுமாவது என்று பொருள்படும்.

பேசுவதற்கு ஆரம்பம் செய்யும் முன்னரே தன்னைச் சூழ்ந்துள்ள மனிதர்கள் நற்குணங்களும் அந்தஸ்தும் பொருந்தியவர்களா? எனத்தெரிந்து கொள்ளல்வேண்டும். இவைகளை யறியத்திறமையில்லையாயின் மௌனமாயிருப்பதே நலமாகும். நாம் அவைகளைத் தெரிந்து கொண்டபிறகு இன்ன விஷயம் பேசவேண்டுமென்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு வரவேண்டும். பின்பு பேசத்தொடங்கல் வேண்டும்.

படிப்பிலும் வயதிலும் அந்தஸ்திலும் பெரியவர்கள் நம்மைக்குறித்துக் கேட்டாலொழிய ''தில் சொல்வதாவது நமது அபிப்பிராயத்தை வெளியிடுவதாவது முறையல்ல. நாம் சொல்லும் ஒவ்வொருபதமும் பொருளுடையதாயும் அவசியமானதாயும் ஸத்தியமாயும் பிழையின்றியும் இருத்தல் வேண்டும். நாம் சொல்லும் ஒவ்வொருசொல்லும் இனிமையாயும் ரஸவத்தாயுமிருப்பதுடன் கடூரமின்றியுமிருத்தல் வேண்டும்.

#### பிறரை நட்புக்கொள்ளும் விதம்.

"செயற்கரிய யாவுள நட்பினது போல்
வினைக்கரிய யாவுள காப்பு."

மேற் கூறியுள்ள குறளால் ஆசிரியர் பொய்யா மொழிப் புலவர் "நட்பினைப் போன்ற காப்பு" பிரி தொன்றில்லை யென்பதைச் சொல்லியிருக்கிறாராதலாலும் நமக்குத்தெரிந்தவரையில் பெரும்பான்மையும் உறவினர்களைவிட நண்பர்களே இடுக்கணில் உதவி புரிபவர்களாக இருக்கின்றமையாலும் நட்பின் பெருமையைப்பற்றி அதிகம் கூறுவது மிகையாகும்.

உத்தமர்களின் நட்பே கொள்ளத்தக்கதாதலாலும் உத்தமர்கள் யாவர் என அறிவது அவர்களின் குணங்களைக் கொண்டே கூடுமானதாலும் உத்தம, மத்தியம, அதமர்களின் குணாகுணங்களை இங்கு அறியப் புகுவது முக்கியமாகும். உத்தமர்களின் நட்பு சிலையிற் செதுக்கிய வெழுத்துப்போல் அழிவற்றது. மத்தியமர்களின் நட்பு மணலில் எழுதிய வெழுத்துப்போல் அழிக்கவிருப்ப முள்ளவனால் அழிக்கத்தக்கது. அதமர்களின் நட்போ நீரிலெழுதிய வெழுத்துப் போல் உண்டான பொழுதே அழிந்து விடுகின்றது. துவேஷம் உத்தமரிடம் ஜலரேகைபோலவும் மத்தியமரிடம் மணலில் எழுதிய வெழுத்துப் போலவும் அதமரிடம் சிலையிற் செதுக்கியவெழுத்துப் போலவுமிருக்கும்.

"சொல்லாமலே பெரியவர் சொல்லிச்சிறியர் செய்வர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலைவேற் கண்ணாய்! கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்".



என்றபடி உத்தமர்கள் புஷ்பிக்காது பலன் கொடுக்கும் பலா முதலிய விருக்ஷம் போல் கொடுக்கிறேனெனக் கூறாது கொடுப்பர். மத்தியமர்கள் புஷ்பித்தபின்பே பலனைக் கொடுக்கும் மாவிருக்ஷம் போல் கொடுக்கின்றேனெனக் கூறியே கொடுப்பர். அதமர்கள், புஷ்பித்த பின்பும் பலனைத்தராத பாதிரிவிருக்ஷம்போல், கொடுக்கின்றேனெனக் கூறியும் கொடார். ஒரே மனிதனுக்கு அந்தந்த சேர்க்கையால் சுபாவம் நானாவிதமாய் மாறுகின்றது. நீர் ஒன்றே கடல் நடுவிலிருக்கும் முத்துச் சிப்பியினிடையிலிருப்பின் முத்தாகின்றது. அஃதே தாமரை யிலையினிடையிலிருப்பின் முத்துப்போல் பிரகாசிக்கின்றது. அது கொதிக்கு மிரும்பில் விழுந்தால் ஸ்வரூபமற்றதாகின்றது. ஆனதால் உத்தமர்களின் நட்பே சிறந்ததென்றறிக.

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை பெஞ்ஞான்
குருத்திற் கரும்பு தின்றற்றே—குருத்திற் [றும்
கெதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ வென்றும்
மதுர மிலாளர் தொடர்பு."—என்றபடி.

கரும்பைக் குருத்திலிருந்து தின்றால் வர வர இனிமை யதிகமாவதுபோல் கற்றோர் கேண்மையும் நாளுக்கு நாளினிப்பாகும். அதற்கு எதிர்செலத் தின்றால் வரவர இனிமை குறைவதுபோல கல்லார் நட்பு நாளுக்கு நாள் நலங்குறைந்து வெறுக்கப்படும்.

நல்லார் நட்பு நடுப்பகல் நீங்கி நாழிகையேற ஏற நிழல் நீளுவதுபோல நாளுக்கு நாள் நலங்கொண்டு வளரும். தீயார் நட்போ, காலையிற்றோன்று நிழல் முதல் நீண்டு அப்பால் வர வரக்குறைவதுபோல், துவக்கத்தில் மிகுதியாகத் தோன்றி பிறகு நாள் செல்லச் செல்ல குறைந்துவரும். இதனாலன்றோ அறிவுடையோர் கேண்மையை பிறைச்சந்திரனுக்கும் கயவர் கேண்மையைப் பூர்ணச்சந்திரனுக்கும் அறிவாளர் ஒப்பிட்டிருக்கின்றனர்.

"நிலத்தியல்பால்நீர் திரிந்தற்றாகு மாந்தர்க்
கினத்தியல் பதாகு மறிவு." என்றபடி,

நீரானது சேர்ந்த நிலத்தின் குணத்தைப் பெறுதல் போல் மனிதர்க் கறிவானது சேர்ந்த வினத்தின் குணத்தைப் பெறும்.

"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித்தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்
போலவே ஒட்டி உறுவார் உறவு."— என்றபடி,

தான் மேனிலையடைந்து தன் தோழன் கீழ்நிலையிலிருப்பினும் அவனை மறத்தலொண்ணாது இருப்பதே நட்பின் இலக்ஷணமாகும். இவ்வளவு முக்கியமான நட்பைப்பற்றி சிறுவர்கள் அதிகமாய்க் கவனிப்பது அபூர்வம்.

இவ்வுலகத்தில் சிலர் தனது காரியம் முடியும் வரை நண்பன் போல் நடித்துப் பின்னர் தன்னை நம்பினவர்களை நட்டாற்றில் விட்டுப் போவாருமுளர். அவர்களை உண்மை நண்பனாகக் கைகொண்டால் பின்பு பல துன்பத்திற்காளாவோம்.

நேசத்தில் ஒரு விதமான தெய்வீக சக்தி இருக்கின்றது. அந்த சக்தியை கெடுக்கவாவது தடுக்கவாவது எவருக்கும் ஆற்றலில்லை. பதினாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு தோழன் நினைக்கும் காரியத்தை இந்த சக்தியின் பிரபாவத்தால் இருந்த இடத்திலிருந்தே அவனுடைய நண்பன் தெரிந்து கொள்ளுகிறான். இத்தன்மையான நண்பர்களோ வெனில், இந்த ஒரு ஜன்மத்தால் மட்டும் நண்பர்களல்ல வென்பதும் பல பிறவிகளிலும் தோழர்களாக இருந்திருக்கிறார்க ளென்பதும் பெறப்படுகின்றது. ஏனெனில், இப்பூவுலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் இருக்க இப்பேர்ப்பட்ட நட்பு குறித்த சிலருள் மட்டும் விளங்குவதால் தான். 'இவ்வளவு கடினமான விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கும் வல்லமை சிறுவர்களான எங்களுக்கு இல்லை'யென நீங்

கள் கூற வருவீர்களாயின் நட்பு நாமாகச் செய்து கொள்ளுகிற விஷயமன்று.

"அழிதருநெறியிற் செலவினை விலக்கி
யாம்வழி செலுத்தி யூழ்வினையால்,
அழிவுவர் தடுப்பினதற்குட னல்லாந்
தாக்கை வேறன்றி யாருயிர்கள்,
ஒழி வகையின்றி யுணர்ச்சியொத்
தருநூலுணர் தொறு முறுநயம் போலக்
கழிமகிழ் நாளும் பயில்தொறும்
வளரக் கலப்பதே நட்பெனப் படுமால்."—என

விநாயக புராணம் கூறுவதும் இங்கு நன்கு உணரத்தக்கது. ஒருவனை நட்புச் செய்து கொள்ளுவதாயின் அவனது குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும், சுற்றத்தையுமறிந்து அவனோடு சினேகஞ் செய்யவேண்டும். இது பற்றியே பொய்யாமொழிப் புலவர்,—

"குணனுங் குடிமையுங் குற்றமுங்குன்றா
வினனு மறிந்தியாக்கநட்பு."—

எனக்கூறினர். மூர்க்கரோடு எஞ்ஞான்றும் சினேகித்தல் கூடாது. ஏனெனில்,—

நூறாண்டு பழகினு மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே."-

எனப்பெரியோர் கூறி யிருக்கின்றனர்.

"சந்தன விருட்சத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ்வாசனை தரும்
தங்கமகமேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல் பொன்மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால் போனிறங் கொடுக்கும்
படிக மணிகட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங் கொடுக்கும்
அந்தமிகு மரகதக்கல்லைத் தரித்திடி
னடுத்ததும் பசுமையாகும்
ஆனபெரியோர்களோடு சகவாசமதுசெயின்
அவர்கள் குணம் வருமென்பது காண்."—

எனப்பெரியோர்கூறியிருக்கின்றமையால், நல்லோரை நட்புக் கொள்ளுதல் சாலச்சிறப்புடைத்து. ஆகையால் சிறுவர்களாகிய நீங்கள் தீய நடத்தையுடைய பையன்களுடையவும் மற்றவர்களுடையவும் சேர்க்கையை நீக்கவேண்டும். ஒருவன் உங்களிடம் வலுவில் வந்து தான் மகா சத்திய சந்தனென்றும் பராக்கிரமசாலியென்றும் கல்விமானென்றும் சொல்லி இவைகளைப் பற்றிப் பிரமாணமும் செய்வானாயின் அவன் உங்களை வஞ்சிக்கிறான் என்பதை நீங்கள் அறியவேண்டும். அவன் சொன்னவை உண்மையா யிருக்கவேண்டுமாயின் அவன் பிரமாணம் செய்யவேண்டிய அவசியமில்லை. ஆனதால் அவன் சொல்வது முழுவதும் பொய். உங்களுடைய குடும்ப இரகசியத்தையும் ஆத்மரகசியத்தையும் வெளியிடாதீர்கள். இவை உங்களுடைய கடமை. மனிதனுடையமுக்கிய கடமைகளில் இவை முதன்மை பற்றியவை. இவ்விளவயது முதலேநீங்கள்இந்த நட்பை சற்று கவனித்து வருவீர்களாயின், பெரியவர்களான பின்பு நல்ல நண்பனை அடைவதோடு இந்த நட்புச் சக்தியைக்கொண்டே இறைவனையும் கண்டு கொள்வீர்கள். சுபம்.

எம். நாராயணஸ்வாமி ஐயர்.

## "அரும்பொருட் றிரட்டு"

இப்பெயர்கொண்ட அரிய புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்து பல நாளாகிறது. அதைப் பார்வையிட்டு விஸ்தாரமாயெழுதவும் அதன் பெருமையைக்கூறவும் அவகாசமின்றித் தாமதிக்கலானதற்காக வியசனிக்கிறோம். சுருங்கச்சொல்லில் அப்புஸ்தகம் தமிழ் மொழிப்பயிற்சிக்கு இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. ஆங்கிலத்தில் கண்ட உயர் பாவங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் கஷ்டமென்பது பொருந்தாத வசனம். தமிழ் என்றாலே இனிய மொழியென்று அர்த்தம். அதைக் கொடுமைப்படுத்தி பொருள் விளங்காது ஆங்கில பாஷையின் இலக்கணங்களை யமைத்து இலக்கியம் பொருந்தாது பின்னப்படுத்துகிறவர்கள் தங்கள் அறியாமையை அவர்கள் தாய் பாஷையின் தலையிலேற்றி "பெற்ற தாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகளாய்" விளங்குகிறார்களென்பது இதை நன்றாக ஆராய்ந்து பார்ப்பாருக்குத் தானே விளங்கும். இதை இயற்றியவர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணய்யர். அவருக்குத் தமிழுணரும் மாணவரெல்லாம் கடமைப் பட்டிருக்கிறார்கள்.